


ஆசிரியர்: தே. ச. சொக்கலிங்கம்.

மாலை 2] 1933 ஆகஸ்ட் 20உ [மலர் 1

அட்டவணை

சீமையில் தடியடி



சீமையில் சர்ச்சில், லாயடின் ஆர்பாட்டங்களைக் கண்டு பயந்துபோய்
சாப்ரு, ஐயங்கார் இந்தியாவிற்கு ஓடிவந்து விட்டார்கள்,

248

சாஸ்திரியாரும், சாப்ரூவும்

சாஸ்திரியார் மகாகனம் சாஸ்திரியார். சாப்ரூ, சர் பட்டம்பெற்ற சாப்ரூ. சர்க்காரின் பிரதிநிதியாக சாஸ்திரியார் போகாத வெளிநாடு கிடையாது. 1921-ல் இந்தியாவில் ஆரம்பமான ஒத்துழையாமை இயக்கத்தை கண்டித்து சர்க்கார் சார்பாக அமெரிக்காவில் பிரசாரம் செய்ய கனம் சாஸ்திரியார் சென்றிருந்தார். பிரிட்டிஷ் ஆட்சியின் பெருமைகளைப்பற்றி அரும் பெரும் பிரசங்கங்கள் செய்தார். அதேசமயத்தில் இந்திய சர்க்காரில் சட்டமந்திரி யாயிருந்தது யார் தெரியுமா? நமது சர். சாப்ரூதான் சட்டமந்திரி. ஒத்துழையாமையை அடக்க 144-வது பிரிவை துஷ்பிரயோகஞ்செய்ய முதலில் வழி காட்டியவர். இந்த இரண்டு பேர் வழிகளும் ஒருவருக்கொருவர்—சர்க்காரோடு ஒத்துழைப்பதில் இளைத்தவர்களல்ல. இருவரும் சர்க்காரில் பெரிய பதவிகள் வகித்தவர்கள். சர்க்கார் நடைமுறைகளையும் வெள்ளை ராஜதந்திரிகளின் மனோபாவங்களையும் நன்றாய் அறிந்தவர்கள்.

இவர்கள் இதுவரை என்ன சொல்லி வந்தார்கள் தெரியுமா? சட்டத்திற்குட்பட்ட கிளர்ச்சிகளாலும், சர்க்காருடன் ஒத்துழைப்பதாலும் சுயராஜ்யம் அடைந்துவிடலாமென்று சொல்லி வந்தார்கள். காங்கிரசையும் மகாத்மாவையும் எதிர்த்துப் பேசினார்கள். லண்டன் கூட்டங்களில் போய் வாதஞ்செய்து சுயராஜ்யம் கொண்டுவரப்போவதாக கர்ஜித்தார்கள். பாவம், இவர்களின் தற்கால நிலைமையை பார்க்கும்போது நமக்கு இரக்கம் இரக்கமாய் வருகிறது.

இந்தப் பேர்வழிகள் தாங்கள் சொல்லிவந்தபடி இதுவரை—தங்கள் ஆயுளில் பெரும் பாகத்தை—ஒத்துழைப்பதிலேயே கழித்தாய்விட்டது. காங்கிரஸ்காரர் ஜெயிலில் இருக்கும்போதுகூட இவர்கள் சீமைக்குப்போய் ஒத்துழைத்தார்கள். எல்லா ஆட்டங்களும் முடிந்துவிட்டன. சுயராஜ்யம் வந்துவிட்டதா? அல்லது சமீபத்தில்தான் வரப்போகிறதா? இதைப் பற்றி இந்த ஒத்துழைப்பு வீரர்கள் சொல்லுவதை கவனியுங்கள். கனம் சீனிவாச சாஸ்திரி சொல்லுகிறார்:—


"மூன்று வருஷங்களுக்கு முன்னால் அடிவானத்திற்கு மேலே குடியேற்ற ஆட்சி சூரியன் நன்றாய் தெரிந்துகொண்டிருந்தது. இப்பொழுது அதை காணமுடியவில்லை. லார்ட் இர்வின் கொடுத்த குடியேற்ற ஆட்சி வாக்குறுதியை நிறைவேற்ற கட்டுப்பட்டிருக்க வில்லை யென்று லார்ட் சாலிஸ்பரி சொல்லுகிறார். குடியேற்ற ஆட்சி என்பதை எவ்வளவு தூரம் அர்த்தமில்லாமல் செய்யமுடியுமோ அவ்வளவு தூரம் செய்ய பலர் முயன்று வருகிறார்கள். ஆகவே, சமீபகாலத்தில் குடியேற்ற ஆட்சியை பார்க்கமுடியாது. பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் மகா கெட்டிக்காரர்கள். கூட்டுக்கமிட்டியில் நமது நண்பர்களின் நிலைமை யென்ன? திக்கற்ற, கையாலாகாத நிலைமை. கன்சர்வேடிவ் சர்க்கார் இருக்கிறவரை குடியேற்ற ஆட்சி கிடைக்கப்போவதில்லை."

இனி மற்றொரு ஒத்துழைப்புவீரரான அலகாபாத் சர். சாப்ரூ சொல்லுவதை கவனியுங்கள் :—

"வெள்ளைக் கடுதாசியில் கண்ட திட்டங்களுக்கு மேல் ஏதாவது கிடைக்குமோ என்று யாரும் நினைக்கவேண்டியதே யில்லை. வெள்ளைக் கடுதாசியில் கண்டவற்றைக்கூட உருப்படியாகாமல் செய்ய சர்ச்சில் கோஷ்டி முயன்று வருகிறது."

இந்த இரண்டு வீரர்களும் சொல்லுவதிலிருந்து, குடியேற்ற ஆட்சி என்ற பேச்சே சமீபகாலத்தில் கிடையாது என்பது நிச்சயமாய்விட்டது. இதுவே, ஆயுள் பூராவாக ஒத்துழைப்பதில் கழித்து, இவர்கள் அடைந்த அநுபவம். எத்தனை தரம் சீமைக்கு கப்பலேறினாலும், எத்தனை கமிட்டிகளில் சேர்ந்து வேலை செய்தாலும், எவ்வளவு நீளமாக அறிக்கைகள் தயார் செய்தாலும், முடிவில் இந்த முறைகளால் சுயராஜ்யம் கிடைக்கப்போவதில்லை யென்பது நிச்சயமாய் விட்டது. இனி இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? அதைப் பற்றி இந்த வீரர்கள் ஒன்றும் சொல்லவில்லை, ஆனால் இந்த சூரர்களால் எதுவும் செய்ய முடியாதென்பதுமட்டும் நிச்சயம். நெருக்கடியான நிலைமையில் இவர்களிடமிருந்து அழுகையும், புலம்பலுமே கேட்கும். அதற்குமேல் ஒன்றும் நடக்காது. ஒத்துழைப்பால் எதுவும் கிடைக்கப்போவதில்லை என்பதை தேசீயவாதிகள் 1920-ம் வருஷத்திலேயே அறிந்து கொண்டார்கள். அந்த உண்மையை இந்த மிதிவாதிகள் அறிவதற்கு 13-வருஷங்கள் ஆயின. மிதிவாதிகளின் மந்த புத்தியால் 13-வருஷங்கள் வீணாயின. அதுமட்டுமா? 13-வருஷங்களில் இந்த தேசம் அநுபவித்த கஷ்ட நஷ்டம் கொஞ்சமா? மிதவாத சிகாமணிகளுக்கு முன்பே புத்தி வருந்திருந்தால் இந்நாட்டார் இவ்வளவு கஷ்டங்களை அநுபவிக்கவேண்டி யிருந்திருக்காது.

சாஸ்திரியார் புலம்பல்



சாஸ்திரி கோஷ்டி:—(1930—31ல்) குடியேற்ற ஆட்சி அதோ வந்துவிட்டது- ஹை, ஹை, ஹே.

சாஸ்திரியார்:—(1932—33 ல்) ஐயையோ, குடியேற்ற ஆட்சி சூரியனை காணவில்லையே!

சரி, 3-வருஷங்களுக்கு முன்னால் அடிவானத்தில் குடியேற்ற ஆட்சி தோன்றியதாய் சாஸ்திரியார் சொல்லுகிறாரே, அந்த குடியேற்ற ஆட்சி எதனால் இப்பொழுது மறைந்துபோயிற்று ?

சைமன் கமிஷன் நியமனமானவுடன், அதிலே இந்தியர்களைச் சேர்க்கவில்லையென்பதற்காக மிதவாதிகள் அதை பகிஷ்காரம் செய்தார்கள். காங்கிரசும் பகிஷ்காரம் செய்தபடியால், இந்தியாவில் சைமன்கமிஷன் பகிஷ்காரம் பூரணமாயிருந்தது. சர்க்கார் எவ்வளவோ வித்தைசெய்து பார்த்தார்கள். பலிக்கவில்லை. கடைசியாக லார்ட் இர்வின் சீமைக்குப்போய் மந்திரிகளிடம் கலந்து பேசி, இந்தியாவிற்கு குடியேற்ற ஆட்சிகொடுக்கப்போவதாகவும் அதற்காக லண்டனில் வட்டமேஜை மகாநாடு கூட்டப்போவதாகவும் சொன்னார். இர்வின் வார்த்தையை காங்கிரஸ் நம்பவில்லை. ஆனால் மிதவாதிகள் நம்பி லண்டனுக்குப்போனார்கள். மிதவாதிகள் பகிஷ்காரத்தை விட்டவுடனே சர்க்காருக்கு தைரியம் வந்துவிட்டது. இருந்தாலும் காங்கிரசை அலட்சியஞ் செய்யமுடியாது என்று கண்டவுடன் காந்தி—இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தமே குடியேற்ற ஆட்சியை பிரிட்டிஷ் சர்க்கார்,எழுத்தில் ஒப்புக்கொள்ளும்படி செய்த சிறந்த யாதாஸ்து. 1932-ல் காங்கிரஸ்காரருடன் சர்க்காருக்கு மறுபடியும் சண்டை ஏற்பட்டது. இந்தச்சமயத்தில் மிதவாதிகள் புத்திசாலித்தனமாய் நடந்திருந்தால், குடியேற்ற ஆட்சி அடிவானத்திலிருந்து இன்று மறைந்துபோயிருக்காது. இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டிலேயே சர்க்காரின் மனோபாவம் வெளியாயிற்று. காங்கிரஸ்காரரும் வந்து, குடியேற்ற ஆட்சி கொடுப்பதாகவும் வாக்களித்தாலொழிய, மூன்றாவது வட்டமேஜை மகாநாட்டிற்கு வர முடியாதென்று இந்த மிதவாதிகள் அப்பொழுதே சொல்லியிருக்கவேண்டும். ஆனால் என்ன செய்தார்கள் ?

மகாத்மாவை கைதுசெய்ததை கண்டித்தார்கள். ஆனால் மூன்றாவது வட்டமேஜை மகாநாட்டிற்கு கூப்பிடுமுன்பு ஓடினார்கள். அது மட்டுமா ? மூன்றாவது மகாநாட்டில் குட்டுப்பட்ட பின்பும் கூட்டுக்கமிட்டிக்கு ஓடினார்கள். இம்மாதிரி கூப்பிடுமுன்பு ஓடுகிற பேர்வழிகளைக் கண்டு பிரிட்டிஷ் சர்க்கார் எதற்காக பயப்படப்போகிறார்கள ? "காங்கிரஸ்காரர்களையோ ஜெயிலில் போட்டாய்விட்டது. இந்த மிதவாதிகள் அதற்காக வட்டமேஜையை பகிஷ்கரிக்கவில்லை. ஆகவே குடியேற்ற ஆட்சி இல்லையென்றால் அதற்காக இவர்களால் என்ன செய்துவிட முடியும்?" என்று சர்க்கார் நினைத்தார்கள். அதன் பலனே இன்றுள்ள நிலைமை.

"மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்" என்ற நீதியை 2 ஆயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே ஒரு கிழவி சொன்னாள். பெரிய ராஜ தந்திரிகள் என்று ஆடம்பரஞ் செய்யும் இந்த சாப்ரூ, ஜெயக்கார், சாஸ்திரிக்கு இந்த நீதி தெரியாமல் போய்விட்டது! என்ன மானக்கேடு! சீமைக்குப்போன ,பின்பு அங்கே சர்ச்சில், லாயட் கோஷ்டியாரிடம் அவமானப்பட்டார்கள். கடைசியாக இந்தியாவிற்கு திரும்பிவந்து முக்காடு போட்டுக்கொண்டு அழுகிறார்கள். அடிவானத்தில் காணப்பட்ட குடியேற்ற ஆட்சி மறைந்து போயிற்றே என்று புலம்புகிறார்கள். சைமன்கமிஷன் நியமன சமயத்தில் இந்த மிதவாதிகள் கொஞ்சம் புத்திசாலித்தனமாய் நடந்து கொண்டதால் ஏற்பட்ட பலனைக் கண்டார்கள். கண்டபின்பு மறுபடியும் புத்திகெட்டுப்போய் விட்டதால் கண்ணுக்குத் தெரிந்த பலன் கூட காணாமல் மறைந்துபோயிற்று. இதற்கு அழுவதாலோ அடிப்பதாலோ பயனுண்டா? ஒற்றுமை யில்லாத வாழ்வும், தேசத்தாரை காட்டிக்கொடுத்து ஒத்துழைக்கப்போவதால் ஏற்படும் பலன்களும் எவ்விதமாயிருக்குமென்பதை மிதவாதிகள் இப்பொழுது உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். இனியாவது இவர்களுக்கு புத்திவரப்போகிறதா? அதுதான் கிடையாது. இவ்வளவு புலம்புகிறார்களல்லவா? நாளை மற்றொரு கமிட்டி முன்பு சாட்சிசொல்ல வாருங்கள் என்று சர்க்கார் ஒரு வார்த்தைசொன்னால் போதும். உடனே எல்லாரும் ஒரே ஓட்டமாய் ஓடுவார்கள். அது அவர்கள் சுபாவம். அதை பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் நன்றாய் அறிவார்கள். இதுதான் இந்தியாவின் துரதிர்ஷ்டம்.

மிதிவாதிகளை இன்னம் 2, 3 வருஷங்களுக்கு சர்க்கார் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. அவர்களைக்கொண்டு செய்ய வேண்டிய வேலைகளை யெல்லாம் சர்க்கார் செய்து முடித்துக்கொண்டார்கள். சார்பிழிந்த சக்கையைப்போல அவர்களை உதறித்தள்ளி விட்டார்கள். புதிய சீர்திருத்தம் இந்நாட்டில் ஏற்படுகிரவரையில் மிதவாதிகள் தயவு சர்க்காருக்கு தேவை யில்லை. அதுவரை இந்த மிதவாதிகள் இம்மாதிரி புலம்பிக்கொண்டே யிருப்பார்கள்.



படார்சாமி கடிதங்கள்

[படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் படார் படார் என்று பகிரங்கமாகவே எழுதுவார்.]

ஸர். தேஜ்பகதூர் சாப்ரு
அலகாபாத்

அன்புள்ள ஐயா,

பம்பாயில் வந்திறங்கியவுடன் "ஓ"வென்று நீர் அழுத குரலை ரேடியோ மூலம் அதே க்ஷணத்தில் கேட்டறிந்து கொண்டேன். உமது ராஜீய வாழ்க்கையே அழுகையும், புலப்பலுமாக நிறைந்துபோயிருக்கிறது. திரும்பத் திரும்ப அவமானத்தை பொருட்படுத்தாமல், வலிய ஒத்துழைப்பதன் மூலமாக என்ன பலன் ஏற்படுமென்பதை நீர் இந்தியாவிற்கு நிரூபித்து விட்டீர். இனி ராஜீய வாழ்வில் சேராமல் நீர் ஒதுங்கிவிடப் போவதாக ஒரு குருவி சொல்லுகிறது. அது உண்மையானால், இப்பொழுதாவது உமக்கு நல்லறிவு தோன்றியதற்காக நான் பாராட்டுகிறேன். உமது "ரிட்டயர்ட்" வாழ்க்கையில் உமக்கு ஆத்ம சாந்தி ஏற்படும்படி அந்த பரம்பொருளைப் பிரார்த்திக்கிறேன்.



—படார்சாமி.

லார்ட் வில்லிங்டன்
சிம்லா

பிரபுவே,

சர். சாப்ரு உம்மிடம் பேசியபோது, கூட்டுக் கமிட்டி விஷயங்களைப் பற்றித்தான் பேசியதாகவும், தற்கால இந்திய ராஜீய நிலைமையைப்பற்றி பேசவில்லையென்றும் சொல்லுகிறார். தற்கால நிலைமையைப்பற்றி பேசக்கூடாதென்பது சாப்ருயின உத்தேசமாயிருக்காது. அவரை பேசவிடாமல் செய்யவேண்டுமென்பது உமது உத்தேசமாகவே இருக்கலாம். இந்த விஷயத்தில் நீர் நல்லமாதிரியாக நடந்துகொண்டீர். இடைவிடாமல் இந்த மிதவாதிகளுக்கு, அவர்களுடைய உண்மை அந்தஸ்தைப் பற்றி நினைப்பூட்டிவர நீர் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். கனம் சாஸ்திரியாரை மூலையில் தள்ளிய பெருமை உமக்கல்லவா உரிது? இந்த நாட்டாரின் மடத்தனத்தைப் போக்க உமது தீமான இரும்புக்கை ஆட்சியைப்போல சிறந்த மருந்து வேறு கிடையாது. இந்தியாவிற்கு சுயராஜ்யம் கிடைக்க வேண்டுமானல் ஒவ்வொரு கிராமத்திலும் உமது உருவச்சிலையை நிலைநாட்ட வேண்டுமென்பது என்னுடைய பலமான அபிப்பிராயம்.



—படார்சாமி.

ஸ்ரீ ஹென்றிபோர்ட்
டியர்பார்ன், (அமெரிக்கா)

ஓ மோட்டார் ராஜாவே,

அமெரிக்காவின் வர்த்தக மந்தத்தை எப்படி தொலைப்பது என்று அல்லும், பகலும் நீர சிந்தனை செய்வதாக தகுந்த ஆதாரமுள்ள இடத்திலிருந்து நான் அறிகிறேன். அந்தக் கவலையை கொஞ்சம் போக்கவே நான் இக் கடிதம் எழுதுகிறேன். எங்கள் நாட்டிலே $7\frac{1}{2}$ லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு

கிராமத்திலும் ஒரு வில்லிங்டன் சிலையை பிரதிஷ்டை செய்ய யோசனை செய்துகொண்டிருக்கிறோம். பெரிய பட்டணங்களில் விஸ்தீரணத்திற்குத் தக்கபடி ஒன்றுக்கு மேற்பட்ட சிலைகளை பிரதிஷ்டை செய்ய வேண்டி யிருக்கும். ஆகவே கேவல மாய்ப் போனாலும் 8 லட்சம் சிலைகளுக்கு குறையாமல் வேண் டியிருககும் இவ்வளவு அதிக மாக தயார் செய்யக்கூடிய திற மையும், சாதனங்களும் உம்மி டமே யுண்டு. நாளொன்றுக்கு பதினாயிரக் கணக்காக மோட் டார்களை உற்பத்தி செய்யக் கூடிய உமக்கு, இந்த 8 லட்சம் சிலைகள் உறபத்தி செய்வது என்ன பிரமாதம்? ஆகவே எவ்வளவு நயமாகவும், சீக்கிர மாகவும் உற்பத்தி செய்து




கொடுக்க முடியும் என்ற விவரத்துக்கு அடுத்த ஆகாயத் தபாலி லேயே உமது பதிலை எதிர் பார்க்கிறேன்.

—படார்சாமி.

ஸ்ரீ. ஏ. ரங்கசாமி ஐயங்கார் சென்னை

ஐயங்கார் பெருமானே,

நீர் க்ஷேமமாக இந்தியா வந்து சேர்ந்ததற்காக பரம் பொருளை பாராட்டுகிறேன். உமது மாஜி தோழர்கள் ஜெயி லில் இருக்கும்போது, கூட்டுக் கமிட்டியில் சேர்ந்துகொள்ள சீமைக்கு ஓடினீர். அங்கே என்ன சாதித்து விட்டீர்? வெறும் 000 தான். சீமையில் இருக்கும்போது ஒரு "கப்சா" விட்டீர். "இந்தியாவில் நிலைமை நெருக்கடியாயிருக்கிறது. இந்தச் சமயத்தில் நான் அங்கிருக்க வேண்டியது அவசியம்.



ஆகவே நான் இந்தியா போகிறேன்" என்றீர். சரி, இப்பொழுது இந்நாட்டிற்கு வந்துவிட்டீர். இங்குள்ள நெருக்கடியை தீர்க்க என்ன செய்துவிட்டீர்? நீர் இந்நாட்டில் இல்லையே என்பதற்காக யாராவது வருத்தப்பட்டதுண்டா? பாவம் உமக்காக இரங்குகிறேன். —படார்சாமி.

ராஜா சர். அண்ணாமலை செட்டியார்
சிதம்பரம்

ராஜா சாஹேப்,

இலங்கையிலிருந்து நீர் இறக்குமதி செய்த சுவாமி விபுலானந்தர் உமது சர்வகலாசாலை "தமிழ் அதிபர்" ஸ்தானத்தை ராஜீநாமா செய்துவிட்டு போய்விட்டார். அந்தப் பதவியை தமிழ் அறிஞர் ஸ்ரீ. எஸ். சோமசுந்தர பாரதியாருக்கு அளிக்க தாங்கள் விரும்புவதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இது உண்மையானல், உம்மை பாராட்டுகிறேன். பாரதியாரைவிடச் சிறந்தவரை நீர் தேர்ந்தெடுக்க முடியாது. தமிழ்நாட்டில், தமிழரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சர்வ கலாசாலைக்கு, வேறு எந்த நாட்டிலிருந்தாவது ஒரு தமிழ் அறிஞரை வரவழைக்க வேண்டுமென்ற யோசனை உமக்கு மறுபடியும் தோன்றாம லிருப்பதற்காக சந்தோஷ மடைகிறேன். —படார்சாமி.

போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்
திருமங்கலம்

ஐயா,

சென்ற 8௳ திருமங்கலத்தில் ஸ்ரீ. விஸ்வநாததாஸ் நடிப்பதா யிருந்த கோவலன் நாடகத்தை நீர் நிறுத்திவிட்ட பெருமையைப்பற்றி கேள்விப்படுகிறேன். பாரதியார் பாட்டுக்களையும், ஹரிஜன பாட்டுக்களையும் பாடக்கூடா தென்பது உமது "ஆர்டர்" என்று அறிகிறேன். இந்த பாட்டுக்களை எந்த சட்டப்படி பாடக்கூடாதென்று நீர் தடுத்தீரென்பது எனக்குத் தெரியவில்லை. பாரதியார் பாட்டுக்களை நீர் படித்திருக்கிறீரா என்பதும் சந்தேகந்தான். எப்படி யிருந்தாலும் சரி. எழுத்து மூலமாக உத்தரவு போடாமல் வெறும் மிரட்டலால் கண்டிராக்டர்களை பயமுறுத்தி, நாடகத்தை நிறுத்திவிட்ட உம்முடைய சாமர்த்தியத்தை பாராட்டுகிறேன். இங்கிலாந்தில் இம்மாதிரி நீர் நடந்திருந்தால் இதற்குள் உம்மை வீட்டுக்கு அனுப்பி யிருப்பார்கள். ஆனல் இந்தியாவில் தானே நீர் இருக்கிறீர். உம்மை ஒரு கண் பார்த்துக் கொள்ளும்படி, போலீஸ் மந்திரி சர். ஊர்மான் சாகிப் பகதூருக்கு சிபார்சு செய்கிறேன். —படார்சாமி.

(13-ம் பக்கம் பார்க்க.)

ஹிட்லர் ஸ்ரீதனம்

ஹிட்லர்! இந்த முரட்டு ஹிட்லர் ஸ்ரீதனம் கொடுக்கிறாரா? என்ன என்று உங்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆம், ஹிட்லர்—அந்த கல் மன ஹிட்லர்—ஸ்ரீதனம் கொடுக்கிறார். ஒன்றிரண்டு பேருக்கல்ல; $1\frac{1}{2}$ லட்சம் பெண்களுக்கு ஸ்ரீதனம் கொடுக்க தயாரா யிருப்பதாய்ச் சொல்லுகிறார். விவாகம் செய்துகொள்ளுகிற ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக அறிவிக்கிறார்.

ஜெர்மனியிலுள்ள வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு ஹிட்லர் கையாளும் முறைகளில் இதுவும் ஒன்று. மேல் நாடுகளில், ஆண்களைப்போல பெண்களும் காரியாலயங்களில் வேலை செய்வதுண்டு. விவாகஞ் செய்துகொள்ள பணமில்லாததால், ஜீவனத்திற்காகவே வேலை செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. இம்மாதிரி பெண்களை விவாகஞ் செய்து கொடுத்து விட்டால், அவர்கள் பார்க்கிற வேலை ஆண்களுக்கு கிடைக்கும்; ஆகவே விவாகத்திற்கு பணவுதவி செய்தால் இவர்கள் விவாகஞ் செய்து கொள்ளுவார்கள் என்று ஹிட்லர் நினைக்கிறார். இப்படி பணவுதவி பெறும் பெண்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.



விவாகத்திற்கு முன்னால் இந்தப்பெண்கள் எங்காவது 6 மாதம் வேலை பார்த்திருக்க வேண்டும். விவாகஞ் செய்துகொண்ட பின்பு தனது கணவன் மாதம் நூறு ரூபாய்க்கு குறைவில்லாமல் சம்பாத்தியஞ் செய்கிற வரையில், உதவி பெற்ற பெண் வேறு வேலை பார்க்கவே போகக்கூடாது. ஹிட்லர் சர்க்கார் கொடுக்கும் ஆயிரம் ரூபாயை ரொக்கமாக பெற முடியாது. அந்தப் பணத்திற்குரிய வீட்டு சாமான்களையோ, உடைகளையோ வாங்கிக் கொள்ளலாம். கடைக்காரர்கள் சர்க்கார் கஜானாவில் பணம் பெற்றுக் கொள்ளுவார்கள். வாங்கிய பணத்தை மாதம் நூற்றுக்கு ஒன்று வீதம் திருப்பிக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் 100க்கு

25 வீதம் இந்த கடன் தொகையில் தள்ளிக் கொடுக்கப்படும் என்ன அருமையான ஏற்பாடு! இதைப் படிக்கும்போதே பல ருக்கு நாக்கில் ஜலம் ஊறுகிறது. இந்தியாவுக்கு ஒரு ஹிட்லர் வரக்கூடாதா என நீங்கள் நினைப்பதாய் தெரிகிறது.

இந்த திட்டந்தால் ஏற்படும் செலவிற்கு ஹிட்லர் என்ன ஏற் பாடு செய்திருக்கிறார் தெரியுமா? விவாகமாகாத பிரமச்சாரிகளுக் கும் கன்னிகைகளுக்கும் வரி விதிக்கிறார். முதல்தரமான ஏற் பாடு! ஆனால் இந்த வரியை ஹிட்லர்தான் முதலில் கொடுக்க நேரிடும். ஏனெனில் அவர் ஒரு பிரம்மச்சாரி!

இந்தியாவில் 18 வயதுக்கு மேற்பட்ட பிரம்மச்சாரிகளுக்கு வருஷம் ஆயிரம் ரூபாய் வரி போட்டால், வரதட்சிணை கேட்கும் அநியாயம் தலைநீட்ட முடியுமா?

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

சர். டி. விஜயராகவாச்சாரியார் அவர்கள்
சிம்லா

அன்புள்ள ஐயா,

உமது பெயர் மகா நீளமானது. இதற்காக சில வெள்ளைப் பத்திரிகைகள் அறியாமையால் ஸ்ரீ. அவர்கள் என்று உம்மைப் பற்றி எழுதியதுமுண்டு. உமது பெயர் எவ்வளவு நீளமோ அதைப்போல, நீர் தலையிட்ட துறைகளின் ஜாபிதாவும் வெகு நீளமானது. சர்க்கார் இலாகாக்களில் நீர் நுழையாத இலாக்கா கிடையாது. கடைசியாக விவசாய ஆராய்ச்சி இலாகாவில் உபத் தலைவராக இருக்கிறீர். இதற்கு உமக்குள்ள அநுபவம் என்ன என்பதைப்பற்றி இப்பொழுது நான் பேச வரவில்லை. சர். சாப்ரூ வந்த கப்பலிலேயே நீரும் சீமையிலிருந்து பம்பாய் வந் திறங்கினீர். சர். சாப்ரூ இந்தியாவிற்கு வெள்ளைக் கடுதாசியில் கண்ட சீர்திருத்தம்கூட கிடைக்காதென்று அழுகிறார். சீமையில் சுயராஜ்யம் கொடுப்பதை எதிர்க்கும் கட்சி பலமாய் இருப்பதா கச் சொல்லுகிறார். ஆனால் நீரோ? இந்தியாவுடன் சமரசம் செய்துகொள்ள பிரிட்டிஷார் ஆவலாய் இருப்பதாகவும், இந்தி யாவிலுள்ள மாறுதலுக்குத் தக்கபடி நடந்துகொள்ள அதிகாரிகள் விரும்புவதாகவும் சொல்லுகிறீர். இதில் எது உண்மை? பரம பக்தராகிய சாப்ரூவே அழும்போது, நீர் தைரியம் சொல்ல வேண்டுமென்று இப்படிச் சொல்லுகிறீரா, அல்லது அறியாமை யால் இப்படிச் சொல்லுகிறீரா என்று கேட்கிறேன். என்னிடம் கேட்டால் ஒன்று சொல்லுவேன். மற்ற துறைகளோடு நீர் நின்றுகொண்டு, ராஜீயத்தில் தலையிடாமல் இருப்பதுதான் உத் தமமான வழி.

—பட்டாசாமி.

நமது தபால்

2 ? !

“காந்தி” வாரம் மும்முறை பதிப்பு, ராஜீய காரணங்களுக்காக தற்காலீகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை நண்பர்கள் அறிவார்கள். ஆகவே மாதம் ஒரு முறையாக வந்துகொண்டிருந்த “காந்தி” மலரை மாதம் இரு முறையாக மாற்றி யிருக்கிறோம். ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும், 5உ யன்றும் 20உ யன்றும் வெளிவரும்.

“காந்தி”க்கு கட்டுரைகள் எழுதும் அறிஞர் கூட்டத்தில் ஸ்ரீ கே. சீனிவாசன் பி. ஏ. (ஹானர்ஸ்) சேர்ந்திருப்பதை நண்பர்களுக்கு சந்தோஷத்தோடு அறிவித்துக்கொள்ளுகிறோம். நண்பர் சீனிவாசன் பம்பாய் “பிரீபிரஸ் ஜர்னல்” என்ற ஆங்கில தினசரிக்கு ஆசிரியராயிருந்து, 1931-ல் அப்பத்திரிகைக்கு இந்தியா வெங்கும் புகழ்தேடிக்கொடுத்த அறிஞர். அச்சமயம் அவர் எழுதிய தலையங்கங்களை எடுத்து மறுபடியும் பிரசுரியாத பத்திரிகைகளே இந்தியாவில் இல்லையென்று சொல்லிவிடலாம். அழகாக கதைகள் சொல்லி, ராஜீயநுட்பங்களை, எளிதில், பாமரரும் அறியும்படி எழுவதில்சமர்த்தர். சைமன்கமிஷன் லண்டனில் அறிக்கை தயார்செய்யும்போது இவரும் லண்டனிலேயே ஒரு வருஷத்திற்கு மேல் தங்கியிருந் து சிறந்த ராஜீய அநுபவம் பெற்றவர்.

நண்பர் வ. ரா. தமது ஆராய்ச்சி பேனு முனையினுல் ராமசாமிப் பெரியாரை எழுத்தால் படம் பிடித்திருக்கிறார். வ. ரா. வின் “காமரா” எக்கட்சியையும் சேராத நடு நிலைமை “காமரா”. ஆகவே ஒருவரின் கொள்கைக்காக அவரின் குணச்சிறப்புகளை அறியாமல் இருப்பது எவ்வளவு தவறு என்பதை வ. ரா. வின் எழுத்துப் படம் தமிழ் நாட்டாருக்கு நன்ருய் விளங்குகிறது. வ. ரா. வின் ஆராய்ச்சித் திறமையும் இதன் மூலம் வெளியாகிறது. அடுத்த “காந்தி” மலரில் டாக்டர். பி. வரதராஜுலு நாயுடுவின் குணச்சிறப்புகளைப்பற்றி வ. ரா. எழுதுவார்.

“காந்தி” வாரம் மும்முறையை நிறுத்தி வைத்திருப்பதற்காக பல நண்பர்கள் வருத்தப்பட்டு கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது வந்தனங்கள். ராஜீயப் பத்திரிகைகளின் வாழ்வு எப்பொழுதும் அந்தரத்தில் நிற்கிறதென்பதை நண்பர்கள் அறிந்தே யிருக்கிறார்கள். எந்தெந்தச் சமயத்தில் எப்படி யெப்படி பத்திரிகைகளின் மூலம் தொண்டுசெய்வது உசிதமோ அப்படி யப்படி செய்யவேண்டுமென்பதே “காந்தி”யின் அடிப்படையான நோக்கம். இந்தியாவின் ராஜீய வாழ்வில் மிகவும் மந்தமான நிலைமை ஒன்று உண்டென்ருல், அது தற்காலமே என்று சொல்ல வேண்டும். தீவிரமான காரியங்கள் எதுவும் இப்பொழுது நடைபெறவில்லை யாகையால், “காந்தி” வாரம் மும்முறைக்கு தற்சமயம்

அவசியமில்லையென்பது நமது அபிப்பிராயம். ஆகவே வாரம் மும்முறையைமறுபடியும் ஆரம்பிக்கபுனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்கிற நண்பர்களின் விருப்பத்தை பூர்த்திசெய்ய முடியாததற்காக நம்மை மன்னிப்பார்களாக. ஆனால் வாரம் மும்முறைக்கு எந்த வினாடி அவசியம் தோன்றுகிறதோ அதே வினாடியில் "காந்தி" வாரம் மும்முறை மீண்டும் தோன்றும் என்று நண்பர்களுக்கு உறுதி கூறுகிறோம்.

"காந்தி" வாரம் மும்முறையை ஒழுங்காய் வாசித்துவந்த நண்பர்கள், மாதம் இருமுறை "காந்தி"யை படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். "காந்தி" கூடார்த்தப் படங்களுக்கு உலகப் பிரசித்திபெற்றது என்பதுதான் உங்களுக்கே தெரியுமே! இந்தப் பத்திரிகையில் சில கூடார்த்தப் படங்கள் பிரசுரித்திருக்கிறோம். அடுத்த மலரிலிருந்து அதிகமாக கூடார்த்தப படங்களை பிரசுரித்து வருவோம். ராஜீயக்குறிப்புகளும் அடுத்த மலர் முதல் அதிகமாய் காணப்படும். சுருக்கமாய் சொல்லுகிறோம்; ஒவ்வொரு மலரிலும் நூதன அபிவிருத்திகள் காணப்படும்.

மாதம் இருமுறை போதாதென்றும், வாரப்பத்திரிகையாகவாவது, அல்லது மாதம் மும்முறையாகவாவது "காந்தி" மலர் வெளிவரவேண்டுமென்று சில நண்பர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம். சீக்கிரமாக முடிவு தெரிவிக்கிறோம்.

"வாழ்க்கை விநோதம்"

ரூ.—15—பரிசு.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் எத்தனையோ விநோத சம்பவங்கள் நேரிட்டிருக்கலாம். அவற்றில் எது அதிக விநோதமாய் காணப்படுகிறதோ, அதை எழுதி யனுப்புங்கள். நமக்கு கிடைக்கிறவைகளில் சிறந்ததாக நா கருதும் கட்டுரைக்கு ரூ. 15 பரிசளிக்கப்படும். மற்றபடி சிறந்தவைகளாயுள்ளவற்றில் ஆசிரியர் எதை பிரசுரிக்கிறாரோ அதற்கு, ஆசிரியர் இஷ்டப்படி சன்மானம் கொடுக்கப்படும். கட்டுரை "காந்தி"யில் 4 பக்கங்களுக்கு மேல் போகக்கூடாது. பரிசு பெற்ற கட்டுரை செப்டம்பர் 20௳ "காந்தி" மலரில் பிரசுரமாகும். செப்டம்பர் 10௳ க்குள் நமக்கு கட்டுரைகள் கிடைத்து விடவேண்டும்.

"விநோத சம்பவம்"
c/o "காந்தி" ஆபீஸ், சென்னை.

காலச் சக்கரம்

ஆகஸ்ட் 1:—இன்று காலையில் மகாத்மா காந்தி, கஸ்தூரி தேவி, மகாதேவதேசாய் மற்றும் 33 பேர்களையும் ஆமதாபாத்திலுள்ள சேத் ரஞ்சோத்லால் பங்களாவில் கைது செய்தார்கள். இரவு மகாத்மாவையும், தேசாயையும் எரவாடா ஜெயிலுக்கு கொண்டுபோயினர்.

ஆகஸ்ட் 4:—இன்று காலை 11-மணிக்கு எரவாடா எல்லையை விட்டுப் போகும்படி மகாத்மாவுக்கும், தேசாயுக்கும் உத்தரவிட்டு விடுதலை செய்தார்கள். அவர்கள் உத்தரவுப்படி நடக்க மறுக்கவே அவர்களுக்கு 1வரு வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 3:—சுமார் 4½-வருஷங்காலமாய் நடந்து வந்த மீரத் சதியாலோசனை வழக்கு அப்பீலில் இன்று தீர்ப்புக் கூறப்பட்டது. அப்பீலில் 27 பேர்களில் 9 பேரை விடுதலைசெய்து பாக்கியுள்ளவர்கள் தண்டனையையும் வெகுதூரம் குறைந்து விட்டார்கள். உயர்ந்த தண்டனை 3 வருஷந்தான்.

ஆகஸ்ட் 7:—ஸ்ரீ தேவதாஸ் காந்தி டெல்லியில் கைதியானர். ஸ்ரீராஜகோபாலச்சாரியாரும் அவருடன்16பேரும் திருச்செங்கோட்டிலிருந்து சேலத்திற்கு புறப்படும்போது கைதியாயினர். எல்லாருக்கும் 6 மாதம் தண்டனை. தாதாபாய் நௌரோஜியின் பேத்திக்கும் மற்றும் 7 பேருக்கும் பம்பாயில் 3 மாதம் தண்டனை. மீரத் காந்தி ஆசிரமத்தைச்சேர்ந்த ஸ்ரீ கிர்தாரி கிருபாலினிக்கு பூனவில் 1 வருஷம் தண்டனை.

ஆகஸ்ட் 8:—மதுரையில் ஸ்ரீமதிகள் அகிலாண்டம்மாள், லக்ஷ்மி அம்மாள், ஜானகிபாய், ஜெயலக்ஷ்மி, மீனம்பாள் ஆகியவர்களுக்கு 2 மாதம் தண்டனை.

ஸ்ரீமதி கஸ்தூரிதேவிக்கும் மற்றும் 15 பெண்களுக்கும் ஆமதாபாத்தில் 6 மாதம் தண்டனை.

ஆகஸ்ட் 9:—ஆமதாபாத் சத்தியாக்கிரக ஆசிரமத்திலிருந்து புறப்படும்போது கைதியான 16 பேருக்கும் 6 மாதம் தண்டனை.

ஆகஸ்ட் 10:—ஸ்ரீதேவதாஸ் காந்திக்கு டெல்லியில் 6 மாதம் தண்டனை.

ஆகஸ்ட் 11:—ஸ்ரீ ஜெயராம்தாஸ் தௌலத்ராமுக்கு காராச்சியில் ஒரு வருஷம் வெறுங்காவல்.

ஆகஸ்ட் 13:—காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ஆனேயும் அவருடன் 13 பேர்களும் சட்டத்தை மீறியதற்காக அகோலாவில் கைதியாயினர். 6 மாதம் தண்டனை.

ஆகஸ்ட் 16:—முன்னல் ஜெயிலிலிருக்கும்போது ஹரிஜன சேவைக்காக கொடுத்த சௌகரியங்களை இச்சமயம் சர்க்கார் கொடுக்க மறுக்கவே, மகாத்மா பட்டினியிருக்க ஆரம்பித் திருக்கிறார்.

ஸ்ரீ. ஈ. வெ. ராமஸ்வாமி நாயக்கர்

(வ. ரா.)

ராமஸ்வாமி நாயக்கரா—அப்பா! இம்மாதிரி சொல்லிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு வருகிறார்கள் தமிழர்கள். இந்த "மூச்சுப் பயிற்சி" சென்ற பதினைந்து பன்னிரண்டு வருஷ காலமாக, விடாமல், தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்தப் பெருமூச்சிலே, ஆனந்தமும் ஆத்திரமும் கலந்து களிக்கின்றன. இத்தகைய முரணகொண்ட உணர்ச்சிகளை தமிழர்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரியச் செய்யும் ராமஸ்வாமி நாயக்கர் ஒரு அபூர்வமான பிறவியாகும். பிற்போக்காளர்கள் சபிக்கவும் தாராள நோக்குள்ளவர்கள் வாழ்த்தவும், ஆங்கில தேசத்தில் வாழ்ந்தும் வளர்ந்தும் வீழ்ந்தும் விடாமல் முண்டிக்கொண்டிருக்கிற மாஜி முதல் மந்திரி லாயிட் ஜியார்ஜ் அவர்களைப்போல, ஸ்ரீமான் நாயக்கர் தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகிறார். ஒரு சாரார் கூசாமல் திட்டவும், மற்றொரு சாரார் "வானுற" ஏத்தி வாழ்த்தவும் செய்யும்படியாக, என்ன சூட்சும சக்தி நாயக்கரிடம் இருக்கிறது? அந்த சூட்சுமத்தைத் தெரிந்துகொண்டால், நாயக்கரின் விசித்திர வாழ்விற்கு—விபரீத வாழ்வு என்று ஒப்பாரி வைப்பவர்களுமுண்டு—திறவுகோலைக் கண்டதுபோலாகும். இந்த அதிசய மனிதன் எவ்வாறு தோன்றினார்? காலம் என்று கண்ணீர் விடுகிறார் ஒரு கிழவர். காலம் என்று களித்துக் கும்மியடித்துக் குதிக்கிறான் ஒரு இளைஞன். கிழவனும் குமாரனும் மன ஒற்றுமையுடன் வாழ முடியாது என்கிறார் கவி. சபாஷ்! இயமனுடைய நாள் என்று உளறும் கிழவனும் என்னுடைய நாள் என்று கூத்தடிக்கும் குமாரனும் எவ்வாறு மனச்சந்திப்புடன் வாழ முடியும்? சந்தித்தால, சண்டையைத் தவிர வேறு எவ்வித விளைவும் தோன்றாது. நாயக்கரைப் பற்றிய அன்புக்கும் அவதூறுக்கும் மேற்கூறியதைக் காரணமாகச் சொல்லலாம்.

பள்ளிக் கணக்கு புள்ளிக்கு ஒவ்வாது என்பார்கள். பள்ளிப் படிப்பு "பங்கா பியூனுக்கு"க்கூட, இப்பொழுது உபயோகப்படுவதில்லை. நாயக்கர் "டிமிக்கி" அடிக்காமல், பள்ளிக்கூடத்துக்குச் சரிவர பால்யத்தில் போயிருந்தாரானல், அவர் "பத்தோடு பதினொன்று, அத்தோடு அதுவொன்று" என்ற சங்கதியில் முடிந்திருப்பார். நீளமும், அகலமும்; ஆழமுமுள்ள பட்டங்களை வரிசைக் கிரமமாக பெயரின் முன்னும் பின்னும் ஒட்டிக்கொண்டும்

அச்சடித்தும் வைத்துக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை யாருக்குத் தெரியும்? "நேற்று இருந்தார், சற்று முன் கூட இருந்தாரே" என்று மட்டும் வர்ணிக்கப்படும் பெருங் கூட்டத்தைச் சேராத பாக்கியம், இந்த உலகில் சிலருக்குத்தானுண்டு. குரு போதிக்கும் வித்தை, முழக்கோலால் அளக்கக்கூடிய "ஸர்டிபிகேட் (நற்சாட்சிப் பத்திரம்) உடன் முற்றிற்று, அதற்காகச் செலவழிந்த பணத்துக்காகக் கடன்காரன் வீட்டு வாயிற்படியில் வந்து நிற்காத வரையில். நாய்க்கருக்குப் பெயரைக் கொடுத்தது, பெயரை ஸ்தாபித்தது, குருவில்லாத வித்தையாகும். படிப்பு, இயற்கையைப் பழிக்கிற நடிப்பு என்பது என்னுடைய, ஒரு மாதிரியான கருத்து. அவ்வப்போது, படிக்காத மேதாவிகளை



ஸ்ரீ ராமசாமி நாயக்கரும், ஸ்ரீ ராமநாதனும்.

இயற்கை தோற்றுவித்து, மார்பைக்கூடக் கோணலாகப் பார்க்கும் படிப்பாளிப் பட்டதாரிகளைப் பழிக்கும் காட்சியை, அற்புதம் என்று சொல்லுவதா அல்லது அவசியம் என்று சொல்லுவதா? பள்ளிப் படிப்புக்கும் நாய்க்கரின் "மேதை"க்கும் துளிக்கூட சம்பந்தம் கிடையாது. (ஞானப்ராப்தி என்று வைதிகப் போக்கில் விட்லாமா என்று எண்ணினேன். நாய்க்கரின் நினைவு வந்ததும், அதை எழுத, பேனா "மக்கர்" செய்துவிட்டது.)

நாய்க்கரின் தகப்பனுர் ஏழையல்ல; ஆனுல் முன் யோசனைக்காரர். சம்பாதிக்கத் தெரியாத அல்லது மனமில்லாத பிள்ளைகளிடம் அவருக்கு அவநம்பிக்கை என்று சொல்லவும் வேண்டுமா? எனவே, சொத்தை தர்ம சொத்தாக ஆக்கிவிட்டார். ஆனுல் ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்தான் முடிவு. எனவே, தகப்பனுரின் கோணல் புத்திக்கு, நாய்க்கரின் நாட்டுச் சுற்றுப் பிரயாணம் (கையில் காசில்லாமல், அதுவும் பால்யத்தில்) ஆணித்தரமான பதிலாகும். இந்த தகப்பனுக்கு அடங்காப் பிள்ளை, "தண்ணீர் தெளித்து" விடப்பட்ட பிள்ளை, யாருக்கு அடங்கும்? எதிரேயிருக்கிற உனக்கு "பேப்பே" என்று சொல்ல முடியுமானுல், எதிரே யில்லாத உன் தகப்பனுருக்கும் "பேப்பே" சொல்லுவதில் எவ்வாறு சங்கடமுண்டாகும்? தண்ணீர் பட்ட பாடாகச் சொல்லலாம். பயமறியாத இளங்கன்று "காளை"யாக வளர்வதில் வியப்பு ஒன்றுமேயில்லை. பேசுபவன், பேச்சோடு சரி; ஆனுல் மௌனமா யிருப்பவன் என்ன செய்வான், எவ்வாறு செய்வான் என்று சொல்லவே முடியாது. இயற்கையும், ருசியும், யோசனையும் எங்கெல்லாம், எவ்வாறெல்லாம் தள்ளுமோ, அப்படியெல்லாம் "ஆடிப்பாடி" ஆகவேண்டியது தான். நாய்க்கர் இந்த சூத்திரத்துக்கு விலக்கல்ல.

புலிக்குப் பயப்பட்டவர்கள் என்மேல் படுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லும் தைரியசாலிகளைப்போல, பலவேறு கூட்டத்தார்கள் தமிழ்நாட்டில் வந்து குடியேறிய பின்னர், தமிழ்நாட்டின் பெருமை குன்றிப்போய் விட்டது எனலாம். மேலும், நீண்ட காலமாக எதிரிகளை எதிர்த்து மாய்த்து, வெற்றியை அடையும் வெறியும் சூழ்ச்சியும், தமிழர்களின் உள்ளத்தினின்று மாயமாய்ப் பறந்தோடிவிட்டன. "பயபக்தியுடனிரு, பழக்கத்தை விடாதே, பெரியோர் சொல் கேள்." இவைகள் நல்ல பத்திமதி தான். ஆனுல், இவைகள் தமிழர்களை எந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டன என்பதை, மனம் பதைக்காமல் எழுத்தில் எழுத முடியாது. தமிழர்கள் அனைவரும் ஒருகாலத்தில் "இடித்த புளிகளாக" விளங்கினுர்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அநீதியை எதிர்க்கத் திறமையும் தைரியமும் அற்ற 'ஏழைகள்'! ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை "அடிதெரியும்படி" கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம் நாய்க்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும்.

நாய்க்கர் பரம பக்தர். அவருக்கு, ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுகாருவிடமும், சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரிடமும் இருந்த பக்தியை அளவிட்டுச் சொல்ல முடியாது. நாய்க்கருக்கு

அரசியல் உலகைக் காண்பித்தவர் டாக்டர் வரதராஜுலு நாயுடு; எனவே முதல் குரு. பின்னர், ஆச்சாரியாரின் மோக வலையில் அகப்பட்டுக்கொண்டு, அவர் கீறிய கோட்டைச் சிறிது காலம் கடந்ததேயில்லை. விநோத சம்பவம் ஒன்று சொல்லுகிறேன். சென்னையில் ஒரு சமயம் மாகாண காங்கிரஸ் கமிட்டி கூடிற்று. ஸ்ரீமான் எஸ். சீனிவாஸய்யங்காரைச் சேர்ந்தவர்கள் ஆச்சாரியரின் யோசனைத் திட்டத்தை எதிர்த்தார்கள். வெற்றியைப்பற்றி ஆச்சாரியாருக்கு சந்தேகம். அந்தக் கூட்டத்தில் நாய்க்கர் பேசவே விரும்பவில்லை. நாய்க்கர் பேசினால்தான் நல்லது என்று ஆச்சாரியாருக்குத் தோன்றிற்று. "ஒரு சங்கதி, நாய்க்கர்வாள்; நீங்கள் பேசவேண்டும்" என்று ஆச்சாரியர் சொன்னார். ஏன் என்றார் நாய்க்கர். பிறகு சொல்லுகிறேன் என்றார் ஆச்சாரியார். நாய்க்கர் பேசின பேச்சு எதிர்க்கட்சியை முறியடித்துவிட்டது. குரு சிஷ்ய விசுவாசம் வைஷ்ணவர்களுக்கே உரியது என்று அக்காலத்தில் ஆச்சாரியார்—நாய்க்கர் நட்பைப்பற்றிக் கேலிசெய்வது வழக்கம். நல்லார்கண் நட்பை விருத்தி செய்திருக்கும். பொல்லாதார் பார்வை "திருஷ்டி தோஷத்தை" உண்டாக்கியது போலும்! ஆச்சாரியார்—நாய்க்கர் பிரிவு நாட்டுக்கு நஷ்டம்.

நாய்க்கர் பொதுஜன சேவைவானத்தில் திடீரென்று தோன்றினார் எனலாம். டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் வெங்கலாத "ஸங்கீத"ப் பிரசங்கம் நாய்க்கரின் மனப்போக்கையும் வாழ்க்கையின் போக்கையும் ஒருவாறு மாற்றிவிட்டது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் நாய்க்கரின் உள்ளத்தில் தியாகத்தையும் தைரியத்தையும் தூண்டி, அவைகளை மணக்கச் செய்தவர் ஆச்சாரியர் என்பது அடியேனது அபிப்பிராயம். நாய்க்கரின் பெருமைக்காக, டாக்டரும், ஆச்சாரியரும் பரிசுகேட்க மாட்டார்கள்; எனினும், இடைச் செருகலாகவேனும் அதைக் குறிப்பிடாம லிருக்கலாமா? ஒத்துழையாமைக்கு முன்பே, பெஸண்டு அம்மையாரை அரசியல் தலைமைப் பதவியினின்றும் நீக்க நடைபெற்ற முயற்சியில் நாய்க்கர் அவர்களும் சிறிது கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது. காந்தியும் வந்தார்; நாட்டிலே கண்விழிப்பும் ஏற்பட்டது. இந்த சமயத்தில் நாய்க்கர், தமது இயல்பான துடிதுடிப்புடனும் ஆர்வத்துடனும் ஒத்துழையாமையில் கலந்து கொண்டார். இந்தக் கலப்பே, அவருடைய சக்தியின் தாக்குதலுக்கு, கதவு திறப்பு என்று சொல்லலாம்.

அப்பா! நாய்க்கரின் அழகு பிரசங்கத்தை, ஆணித்தரமான சொற்களை, அணியணியாய் அலங்காரம் செய்யும் உபமானங்களை,

உபகதைகளை, அவரது "கொச்சை" வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிதுடிப்பை, பார்க்கவும் கேட்கவும் எவ்வளவு தூரத்திலிருந்து ஜனங்கள், வண்டுகள் மொய்ப்பது போல, வந்து மொய்ப்பார்கள். ஈரோட்டில் அற்ப ஆயுளில் இறந்த தங்கப்பெருமாளை, நாய்க்கர் அவர்கள் தேங்கப்பெருமாள் என்று சாதாரணக் குடியானவனைப்போல் பிடிவாதமாய் உச்சரிக்கும் அழகையும் கவலையின்மையையும், நான் பார்த்துப் பார்த்து மகிழ்ந்துபோவேன். "தேங்கப்பெருமாள்" உச்சரிப்பில், நாய்க்கரின் பகுதிப்பலம் பதுங்கிக் கிடக்கின்றது. இலக்கணம், சந்தி, கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலியன நாய்க்கர் அவர்களைக் கண்டு நடுங்கவேண்டுமே யொழிய, அவைகளை இலட்சியம் செய்பவர் நாய்க்கர் அல்ல. அவர் இயற்கையின் புதல்வன், மண்ணை மணந்த மணாளன். மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாய்க்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை.

பொதுவான ஒருமனது எல்லார் உள்ளங்களிலும் சரடுபோல ஓடுகின்றது என்றார் எமாஸன் என்ற மேதாவி. இந்த "சரடு" தமிழ் மக்களின் உள்ளத்தில் உண்மையாகவே ஓடுமானால், ஒற்றுமைக்குறை ஏன், எவ்வாறு இருக்கமுடியும் என்று ஒருவன் நினைப்பது சகஜந்தானே? இலட்சியத்தில ஒற்றுமையிருந்து வழ்க்கைமுறையில் வித்தியாசமும் இல்லையானால், தமிழர்களின் சமுதாயவல்லமைஒருக்காலும் சிந்திச்சிதறிப்போகமுடியாது. நமது சமுதாயசக்தி ஒழுகிப்போகும் ஓட்டைகளை, நாய்க்கர் அவர்கள் ஆவலுடன் தேடினார். ஜாதிக்கொடுமை, மூடபக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரை வருத்தும் அசட்டுத்தனமான பரம்பரை அவலட்சணம், மனசாட்சியை ரப்பரைப்போல அமைத்துக்கொள்ளும் சாமர்த்தியம், எதற்கும் சமாதானமசொல்லும் விசித்திர ஜாலவித்தை, பெண்களின் முன்னேயும் படுதா, பின்னேயும், பக்கத்திலும் படுதா, கிளிப்பிள்ளை வேதாந்தம, திண்ணை தத்துவம், போலி மதம், பிடுங்கல் புரோகிதம்—இவையும் இவைபோன்றவை யாவும் ஓட்டைகள என்று கண்டார் நாய்க்கர். ஸர்க்கார்பேரில இருந்த கோபம், இவைகளின்பேரில் பாய்ந்தது. யோசித்து யோசித்துக் கோழையாகும் கூட்டத்தை, நாய்க்கர் அவர்கள் சேர்ந்தவரேயல்லர். செய்யவேண்டும என்று தோன்றியதை, தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம காணப்படுவதுபோல, தமிழ்நாட்டில் வேறு எவரிடமும காணப்படுவதில்லை. இலாப நஷ்டக்கணக்குப் பார்க்கும் தன்மைக்கும் தேசத்தொண்டுக்கும சம்பந்தமேயில்லை என்பது அவரது கொள்கை போலும! இது ஒருவகையில் உண்மை என்பதை எவரும் மறுக்கமுடியாது.

மேலே குறிப்பிட்ட ஓட்டைகளை அடைக்கும் வேலையிலேதான் நாய்க்கர் அவர்கள், பலரால் பதர் என்றும் மற்றும் பலரால் பெரியார் என்றும் பட்டம்பெற்று மதிக்கப்பட்டுவருகின்றார்.

எதற்கெடுத்தாலும், "எங்கள் தகப்பனார், எங்கள் பாட்டனார், எங்கள் மூதாதை" என்று அசட்டுநாடகப் பாத்திரத்தைப்போல ஊளிக்கொண்டிருந்தால், தமிழர்கள் "இக்கரைகடந்து, அக்கரை" சேர்வது எக்காலம்? தனக்குத்தானே யோசிக்கும்பொறுப்பையும் திறமையையும் தமிழர்களின் உள்ளத்தில் ஓரளவு (அதைப் பெரிய அளவு என்று கூடச்சொல்லலாம்) தூண்டிய ராமஸ்வாமி நாய்க்கரைப் பெரியார் என்று அழைப்பதில் என்னபிழை இருக்கிறது என்று எனக்குத்தெரியவில்லை. "மருநூல் பார்வையைக் கொடுத்துவிட்டது; நன்னூல் பாஷையைக்கெடுத்துவிட்டது" என்று ஒரு நண்பர் சொன்னார். இவை யிரண்டுடன், சலிக்காமல் யுத்தம்செய்யும் நாய்க்கரை, அந்திமாலைப்பார்வை கொண்டவர்கள் துவேஷிக்கலாம், திட்டலாம். ஆனால் நிகழ்காலமும் வருங்காலமும் நாய்கருக்குத்தான் பக்கத்துணைகள் என்பதில் ஆட்சேபம் சிறிதுமில்லை.

நாய்க்கர் மகா ஸரஸி; பரமரஸிகர்; ஆனால் சண்டியும் கூட. பிறரிடம் அவர் பேசும்பொழுதும் நடந்துக்கொள்ளும்பொழுதும் அவர் காண்பிக்கும் வினயம் படத்தில் பிடிக்கவேண்டிய அரிய பொருளாகும். உறக்கத்தில் இருப்பதுபோல பாவனைசெய்யும் அவரது முகம், உயிர்ச்சத்து பொருந்திய பிரசினைவரும்பொழுது, பொலிவும் வலிவும் அடையும்வகையைக் காண்பது, பார்ப்பவருக்கு ஆனந்தமுண்டாக்கும். கட்சிப் பிரதிகட்சி பேசுகையில், போலி உபமானங்களையும் மாயச்சமாதானங்களையும் உபயோகித்து திகைக்கச்செய்யும் சட்ட நிபுணர்களுக்குக்கூட நாய்க்கர் அவர்கள் சிறிதும் பின்வாங்கமாட்டார். இது பழக்கத்தால் ஏற்பட்ட பயிற்சி அல்ல. இது எதிரிக்குவணங்காத இயல்பின் காட்டாற்று வெள்ளப் பெருக்கின் வேகமாகும். இளமைப்பருவத்தில் குஸ்திப் பழக்கம் அவருக்கு உண்டோ, என்னவோ, அது எனக்குத்தெரியாது. ஆனால் பண்டிதர்கள் நிறைந்த சபையில் வாய் குஸ்தி போடுவதில், அவர் மட்டமான ரகத்தைச் சேர்ந்தவரல்ல.

"தேர் இல்லை, திருவிழா இல்லை, தெய்வம் இல்லை, திங்கள் இல்லை என்கிறார் நாய்க்கர், சுவாமியைக் குப்புறப்போட்டு வேட்டி துவைக்கலாம் என்கிறார். இவரைக் காட்டிலும் பழுத்த நாஸ்திகன் வேறு எவருமே இருக்கமுடியாது; பாதகன்" என்று சிலர் உருமுகிறார்கள். வீட்டைக்கட்டி வைக்கோலைத் திணிப்பதைக்

காட்டிலும், வீடு கட்டாமலே, வைக்கோலைப் போராய்ப்போட லாம் என்ற சிக்கனயோசனை சொல்லுவது தவறா? அழுகி அழு கிப்போய், புழு குநெளியும் உடலுடனிருப்பதைக்காட்டிலும் உயிர் விடுவது உத்தமம் என்று அபிப்பிராயம் கொடுத்தால், அவனை "சாகச்சொல்லுகிறான், பாவி" என்று திட்டுகிறதா? கண்டவர்க் கெல்லாம் குனிந்து சலாம்செய்து, மண்ணோடு மண்ணாய் ஒட்டிக் கொண்டு, மார்பால் ஊர்ந்து செல்லவேண்டாம் என்று சுயமரி யாதை உணர்ச்சியை ஊட்டினால், "பாவி, நமஸ்காரத்தைக் கண்டிக் கிறான்" என்று அபத்தம் பேசுகிறதா? பரமபக்தனான, மனச்சாட் சிக்கும் தொண்டுக்கும் பக்தனான நாய்க்கரை, நாஸ்திகன் என்று அழைக்கும் அன்பர்கள், நாஸ்திகம் யாது என்று தெரிந்துகொள்ள வில்லையென்றே நான் சொல்லுவேன். தெய்வத்தைநம்பின ஆஸ் திகன் தனது வாழ்விற்காண்பிக்கவேண்டிய இலட்சணங்கள்யாவை? தயை, தைரியம், ஸத்தியம், நியாயபுத்தி, ஆனந்தம், அபரிமித மான நகைச்சுவை, நீசார்வின்மை, கொடுங்கோன்மைக்கு அஞ் சாமை முதலியன ஆஸ்திகனது இலட்சணங்களாகும். இத்த கைய குண விசேஷங்கள் அமையப்பெறாத யாவரும் நாஸ்திகக் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் என்று "வாசமகோசரமாய்ச்"சொல்லி விடலாம். ஒருவனை நாஸ்திகன், நாஸ்திகன் என்று அழைத்து, வெறுங்கூச்சல்போடுவதில் என்னபயன்? "ஆஸ்திக" இறுமாப்புக் கொண்ட ஜாதி ஹிந்துக்கள், ஆண்டுதோறும், ஹிந்து சமாஜத்தின் தொகையைக் குறைத்துக்கொண்டுவருகிறார்கள் என்பதை உணர வில்லையே? கட்டுப்பாடின்றி எந்த ஸமாஜமும் நிலைபெற்று இயங்க முடியாது என்பது உண்மை. ஆனால் அடிவலுவற்ற கட்டுப்பாடு, தன்னையும் கெடுத்துக்கொண்டு, அது கட்டுப்படுத்தும் ஸமாஜத் தையும் சீர் குலைத்துக் கெடுத்துவிடும். இதை நாய்க்கர் தமக்கு இயல்பாயுள்ள வலிமை கொண்ட, முரட்டுவார்த்தைகளில் ஏன் சொல்லக்கூடாது? புனர் ஜன்மத்தை நம்பி, தெய்வத்தைத் துதித்து, சாவுக்கு அஞ்சாத தமிழன்தான், நாய்க்கரை நாஸ்திகன் என்று ஒருவாறு சொல்லலாம். மற்றவர்கள் கூறுவது, மான நஷ்டத்தைக்கொணரும் சொல் நஷ்டமாகும்.

தமிழ்நாட்டின் வருங்காலப்பெருமைக்கு நாய்க்கர் அவர்கள் "முன்னோடும் பிள்ளை", தூதுவன். வருங்கால வாழ்வின் அமைப்பு அவர் கண்ணில் அறைகுறையாகப்பட்டிருக்கலாம். (எவர் கண்ணி லேனும் அது முழுமையாகப் பட்டிருக்கிறதாக, யார் உறுதியாகச் சொல்லமுடியும்?) ஆனால் மலைகளையும் மரங்களையும் வேரோடு பிடுங்கி யுத்தம்செய்த மாருதியைப்போல, அவர், தமிழ்நாட்டின் தேக்கமுற்ற வாழ்வோடு, போர்புரியும் வகையைக் கண்டு, நாம் வியப்படையாமலிருக்கமுடியாது.

கசப்பு மருந்தைத் தீட்டுவாருண்டா? வியாதியை வரவழைத்துக்கொண்டு, கசப்புக்கும் பத்தியத்துக்கும் பயப்பட்டால், நோய் எவ்வாறு குணமாகும்? உலகத்தின் மதிப்பு, பொதுவாக தமிழர்களுக்கு உண்டாகும்வரையில், தமிழர் வாழ்வு வலிமையற்ற, நோயுற்ற வாழ்வு என்றுதான் சொல்லவேண்டும். அடிமைப் பெருவியாதி பிடித்திருக்கும் தமிழர்களுக்கு மத சம்பந்தப்பட்ட வரையிலும் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டுவித்தால்மட்டும் போதாது. பெருநெறியான விடுதலைப்போரைப் புறக்கணித்து, வைதிக கோட்டையைமட்டும் முற்றுகைபோடும் நாய்க்கரின் அளவுக்கண், சிறிது மங்கியிருக்கிறதென்றே சொல்லவேண்டும். உடலையும் உயிரையும் வாடச்செய்யும் அரசியல் அடிமைத்தனத்தைப் போக்கும் வேலைக்குச்சாதகமாக, சமூகச் சீர்திருத்தத்தை அமைத்துக்கொண்டால், பெரும்பயன் விளையும். நாய்க்கரின் ஆற்றலோ மிகப் பெரிது. அவரது தற்போதைய இலட்சியம் சிறிது.

(அடுத்த "காந்தி" மலரில் டாக்டர் P. வரதராஜுலு நாயுடுவைப் பற்றி நண்பர் வ. ரா. எழுதுவார்.)



"நீ என்னை விவாகம் செய்கிறாயா அல்லது இந்த கிணற்றில் விழுந்துவிடட்டுமா?"

(டென்மார்க் பத்திரிகை



பைத்தியக்காரர் பேச்சு

ஜார்ஜ் பெர்னார்ட்ஷா என்று ஒரு நாடகாசிரியர் இங்கிலாந்தில் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் பேசுவதெல்லாம் வெட்டொன்று துண்டு இரண்டாக இருக்கும். வழவழா விளக்கெண்ணெய் பேச்சே அவருக்கு பிடிக்காது. அவர் பேசும் பேச்சு வெறும் பேச்சாகவும் இருக்காது. பகுத்தறிவு நிறைந்ததா யிருக்கும். பொருளாதாரம் என்றும், பண பிரச்சினை யென்றும், நாணயமாற்ற மென்றும் என்னென்னவோ சொல்லி வருகிறார்களல்லவா? இவற்றில் பெரிய நிபுணர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்கே, தற்காலம் உலகில் ஏற்பட்டுள்ள வர்த்தக மந்தத்திற்கு காரணம் தெரியவில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணம் சொல்லுகிறார்கள். இந்த வேடிக்கையைப் பற்றி ஸ்ரீ. ஷா அமெரிக்காவில் பேசியது கவனிக்கத்தக்கது அதை கீழே வெளியிடுகிறோம்:—

யுத்தத்திற்குப் பின்னால் லேவாதேவி நிபுணர்கள் கூறிய ராஜீய யோசனைகள் எல்லாம் பெருந் தவறாய் முடிந்ததை நீங்கள் அறிவீர்கள். லேவாதேவி உலகத்தில் மிகப் பெரிய புத்திசாலியாக சகலராலும் கருதப்படுகிறவர் மாண்டேகு நார்மன் என்பவர். அவர் இங்கிலாந்து பாங்கியின் கவர்னர். பணப் பிரச்னையைப் பற்றி அவர் ஒரே வரியில் உண்மையை சொல்லிவிட்டார். அவர் என்ன சொன்னார்? "எனக்கு அது விளங்கவில்லை" என்றார். இதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஏனெனில் பணப் பிரச்சினை என்றொரு பிரச்சினையே கிடையாது. பணம் எப்பொழுதும் பணமாகவே இருந்தது. இனியும் பணமாகவே இருக்கும்.

நாணய சம்பந்தமான கட்டுரைகளை பத்திரிகைகளில் நீங்கள் படித்தால் ஒரு விஷயத்தை கவனிக்கலாம். ஒரு தேசத்தின் செழிப்பை, அத்தேசம் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெறும் பணத்தால் மதிப்பிடுகிறார்கள். இறக்குமதியை விட ஏற்றுமதி அதிகமா யிருக்கவேண்டுமென்று எல்லா நாணய நிபுணர்களும் ஆசை கொள்ளுகிறார்கள். பணத்தைக் கொண்டு பார்க்கிறவர்களுக்கு இது சரியானதென்று தோன்றுகிறது. ஆனால்

சரக்குகளை கொடுத்து சரக்குகளை வாங்குகிறதென்ற பண்டமாற்றலைக் கொண்டு பார்த்தால் இது அடிமுட்டாள்தனமென்று தெரியும். வெளிநாட்டு வர்த்தகம் என்பது என்ன? பண உதவியோடு நடத்தும் சரக்கு பண்ட மாற்றுதலைத் தவிர வேறெதுவும் இல்லை. அதிக சரக்குகளைக் கொடுத்து எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக சரக்குகளை வாங்குகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நாடு செழிக்கும் என்று சொல்லுகிறவருக்கு சரியான இடம் பைத்தியக்கார ஆஸ்பத்திரிதான். ஆனால் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இப்படிச் சொல்லுகிறவர்களுக்குத் தான் மந்திரிவேலை கிடைக்கிறது. நாணய நிபுணருக்கு நினைவெல்லாம் பணம்தான்.

சாதாரண குடியானவன் வீட்டிற்குள்ளோ, ஒரு தொழிற்சாலைக்குள்ளோ, சுரங்கத்திற்குள்ளோ அவர் நுழைந்து பார்த்தது கிடையாது. ஆகவே ரொட்டியைப் பற்றியோ வெண்ணையைப் பற்றியோ அவர் யோசிப்பதே யில்லை. எந்த தேசம் இறக்குமதிக்கு அதிகமாக ஏற்றுமதி செய்கிறதோ, அதுவே அவருக்கு தெய்வம். அதிகமாக ஏற்றுமதி செய்த பொருள்களுக்குக் கடன் பத்திரங்களைத் தவிர வேறெதுவும் கிடைக்கப்போவதில்லை. அமெரிக்காராகிய நீங்கள் இந்தப் பத்திரங்களை ஏராளமாக வைத்துக்கொண் டிருக்கிறீர்கள்.

தன்னுடைய நாட்டிற்குள் பணத்தைகொண்டு வந்து குவிப்பதிலேயே லேவாதேவிக்காரர் குறியா யிருக்கிறார்கள். இதற்காக முதலில் வெளிநாடுகளுக்கு கடன் கொடுக்கிறார்கள். இந்தப் பணத்திற்காக ஏற்றுமதிப் பொருள்கள் அதிகமாகின்றன. ஏற்றுமதியை அதிகரிக்கவே இவர்கள் இந்த முயற்சியை செய்தபோதிலும், முடிவில் ஏற்றுமதியை கொலை செய்வதிலேயே இந்த ஏற்பாடு வந்து முடிகிறது. வெளிநாட்டில் கொடுத்த கடன்களுக்கு வட்டியாக அந் நாட்டுச் சரக்குகளை வாங்கிக்கொள்ளும்படி ஏற்படுகிறது. முடிவில் ஏற்றுமதியே இல்லாமல் இறக்குமதியே செய்யும்படி நேரிடுகிறது. லேவாதேவிக்காரர் இந்த சூழ்ச்சியால் தன் தலையில் தானே மண்ணைவாரி போட்டுக் கொள்ளுகிறார். அவரோடு உங்களுக்கும் அதே கதி ஏற்படுகிறது. அவர் ஏற்றுமதி, ஏற்றுமதி என்று குதிக்கிறார். அதற்காக வெளிநாடுகளுக்கு கடன் கொடுக்கிறார். அதனால் இறக்குமதி, அதிக இறக்குமதியே நேரிடுகிறது. அவர் பெரிய நிபுணர் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அவர் ஒரு சூதாட்டக்காரரைத் தவிர வேறெதுமில்லை. அவர் வலது கையால் செய்வதை அவருடைய இடது கை கூடியவரை அழித்துக்கொண்டே வருகிறது. இப்படிமட்டும் இல்லாமல் போனால், இந்த நிபுணர்கள் உங்களை மண்ணோடு மண்ணாக்கி; வெகுகாலமாய்ப் போயிருக்கும்.

மிதவாதிகளின் மித வைராக்கியம்

(கே. சீனிவாசன் பி. ஏ. ஹானர்ஸ்.)

நைஷதத்தை எழுதி முடித்தார் அதிவீரராம பாண்டியர். எழுதி தமது அண்ணனிடம்காட்டி அபிப்பிராயம்கேட்டார். அண்ணு நூலைப் படித்தார். "நூல் எப்படி இருக்கிறது" என்று தம்பி கேட்டார். "வேட்டை நாயைப்போல் இருக்கிறது" என்று பதில் சொன்னார் படித்தவர். புகழுரையை எதிர்பார்த்திருந்த அதிவீரராம பாண்டியருக்கு இந்தப் "பிதிர்" விளங்கவில்லை. "பொருள் என்ன?" என்று வினவினர். "முற்பகுதி உற்சாகமும் உறுமலும்; பிற்பகுதி ஒடுக்கமும் ஊளையும்" என்று விடை தந்தார் அண்ணு. வேட்டையில் அநுபவம் அது தான். காலையில் ஓடிப் பாய்ந்து சென்ற நாய், மாலையில் ஆடி ஓய்ந்து திரும்பும். ஊக்கத்துடன் வாலைத் தூக்கிக்கொண்டு உறுமி உறுமி எழும்பிப் பாய்ந்த நாய், களைப்புடன் வெறுப்புடன் வாலைக் குழைத்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி வீடு வரும். பொய் ஊக்கத்திற்கும், உண்மைச் சோர்விற்கும் அதன் மதியீனமேகாரணம்.

கூட்டுக் கமிட்டிக்குப் போன மிதவாதிகளின் அநுபவம் வேட்டைக்குச் சென்ற நாயின் அநுபவத்தை ஒட்டியே யிருக்கிறது. கட்டவிழ்த்து விடுவதற்குமுன் நாய்கள் துடிப்பதுபோல் கூட்டுக் கமிட்டி அழைப்பு வருமுன் துடித்தார்கள். கட்டவிழ்த்ததுதான் தாமதம். தூக்கிய வாலும் தொங்குகிற நாக்குமாக ஒரே நாற்கால் பாய்ச்சல். பாய்ச்சல் மாறி ஓய்ச்சல் வந்துவிட்டது. என்? சர் டேஜ்பஹதூர் சாப்ருவைக் கேளுங்கள். ஸ்ரீமான் அ. ரங்கஸாமி அய்யங்கார் அவர்களைக் கேளுங்கள். இன்னும் யாரை வேண்டுமானுலும் கேளுங்கள்.

"போரில் முனைந்திருக்கும் நாட்டைப் புறக்கணித்து விட்டு ஏன் இந்த ஓட்டம்?" என்று எவரேனும் கேட்டால் கேட்டவருக்குப் பதில் சொல்ல அவர்களுக்கு நேரமில்லை; அவ்வளவு அவசரமாக ஓடினார்கள். அவசரக்கோலம் அள்ளித் தெளித்தது என்பதுபோல கப்பலேறுவதற்கு முன் ஒரு பேட்டி, இறங்கின பின் ஒரு பேட்டி, இடையில் ஒன்றிரண்டு. இப்படியாக ஏதேதோ சமாதானங்கள் சொன்னார்கள்.

தாங்கள் செய்ய இருக்கும், செய்யப் போகிறோம் என்று மனோராஜ்யம் பண்ணிக்கொண்ட—செயல்களைப் பற்றி விதவிதமாக விவரித்தார்கள். இவர்கள் மனோரதம் கவிதைக்கு மிகவும் ஏற்றது. கூட்டுக்கமிட்டி ஒரு மத்தகஜம் போலாம். அதற்கு இவர்

கள் அங்குசமாம். சர்ச்சிலும் லாயிடும் விஷப் பாம்புகளாம். அவைக்கு இவர்கள் கிரிகளாம். பாதுகாப்புகள் என்பவை எலிகளாம். அவைக்கு இவர்கள் பூனைகளாம். இந்திய சுதந்தரம் என்பது ஒரு ஆட்டு மந்தையாம். அதற்கு இவர்கள் காவல் செய்யும் பட்டி நாய்களாம். இத்தகைய பொருள் படும்படி இவர்கள் ஏதோதோ பெருமை பேசிப் பசப்பினர்.

கூட்டுக் கமிட்டி கூடிற்று. சாக்ஷிகள் வந்தார்கள். சாக்ஷியங்கள் எடுக்கப்பட்டன. நமது நிதானவாதிகளுக்கு நிதானம் தவறிப்போயிற்று. திகைப்பு வந்தது. மனம் தத்தளித்தது. உடல் வியர்த்தது. உள்ளம் ஒடுங்கிற்று. மனக்கோட்டை இடிந்து மண்ணாயிற்று. ஒருவர் இருவர் ஓட்டமும் எடுக்கலானார்கள்.

கமிட்டியின் முன்னர் கவர்னர்களும், சேனாதிபதிகளும், வெள்ளை வணிகர்களும், அதிகாரிகள் பலரும் யோஜனைகள் கூறினர். யோஜனைகளின் நோக்கம் ஒன்றே. ஆங்கில ஆதிக்கத்தில் அணுவளவேனும் குறைதல் கூடாது. காங்கிரசின் பயமுறுத்தலுக்கு பாதுகாப்புகள் இரட்டைப் பங்கு என்பது தெளிவாயிற்று. பொறுப்பற்ற அதிகாரத்தை அழித்து ஜன சுதந்திரத்தை வளர்க்க வந்த இந்திய நிதானவாதிகளுக்குப் பிழைப்பு போய்விட்டது. இந்த யோஜனைப்போரில்—களப்போரன்று, கைப்போரன்று,—ஆங்கிலேயாகளை நமது நிதானவாதிகள் எதிர்த்தது புலியைப் பூனை எதிர்த்ததுபோலும், வீரனைப் பேடி எதிர்த்தது போலுமாக முடிந்தது.

இவ்வளவுக்கும் வாய்ப்பேச்சுத்தான். இந்நாட்டில் நடக்கும் போரைப்போன்றதன்று. வாய்ப்பூட்டு இல்லை. அவசரச்சட்டமில்லை. தடியடி இல்லை. துப்பாக்கிப் பிரயோகம் இல்லை. அடிக்கப் போலீஸ் இல்லை. மிரட்ட மாஜிஸ்ட்ரேட் இல்லை. வேளை தவறாமல் உண்டி; வியர்வை வராமல் விசிறி; உடல்நோகாத ஆஸனம். வாட்டமாக இருந்து சட்டதிட்டமாகக் கேள்விகேட்கலாம். சாட்சிகள் மட்டுமரியாதைகளுடன் பதில் சொல்லவேண்டும். கொஞ்சம் மூச்சு செலவு. கொஞ்சம் மூளைவேண்டும். மூச்சும் மூளையும் நிதானவாதிகளுக்கு குறைவில்லை. பின் ஏன் மிரண்டு பின்வாங்கினர்? நடைமுறை விசாரணைகளுக்கு பேச்சும் மூளையும் போதும். அரசியல் பிரச்னைகளுக்கு பேச்சும் மூளையும்மட்டும் போதாது. நெஞ்சில் உரம்வேண்டும். நடையில் நேர்மைவேண்டும். நிதானவாதிகளிடத்தில் நெஞ்சிய உரமில்லை; நடையில் நேர்மை யில்லை. இவர்கள் நட்பில் மதிப்பில்லை. இவர்கள் பகையில் பயமில்லை. திண்மையும் பிடிவாதமுமே உருவெடுத்துவந்தனவென எண்ணும்படியான கிழ அதிகாரப் புலிகளைக்கண்டதும் இவர்களைக் கிலி அடித்துவிட்டது.

அவஸாசத்தில் திரும்பி ஓடிவந்த ஸாப்ரூ இடும் மு[illegible] யையோ இங்நாட்டிலேயே இருந்து புழுங்கி துயரப்பட்டு ஸ்ரீ சாஸ் திரியார் விடும் ஜலத்தையோ பார்க்கையில் ஜனங்களின் மன[illegible] திகைக்கும். திகைக்க காரணம் இல்லை. ஒரோரு சமயங்களி[illegible] தெளிந்தபுத்தி வந்ததும் இவர்கள் இவ்வாறு கூறுவது உண்டு ஆனால் இந்தத்தெளிவு நீடித்தும் இருப்பதில்லை. பரவியும் இருப் தில்லை.

ஒருவருக்கு நல்ல புத்திவந்தால் ஒன்பதுபேர்கள் கூடி கெடுத்து விடுவார்கள்.

> "நல்லவை செய்யத் தொடங்கினும் நோனுமே
> அல்லன அல்லவற்றில் கொண்டு உய்க்கும்
> எல்லிவியநெறிச் செல்வாரை ஆறலைதுண்பர்
> செலவு பிழைத்து உப்போல்"

நல்லதைச் செய்யத்தொடங்கினும் அல்லன இடையூருய் வந்து வழிமறிக்கும். இருட்டில் திருடனை வழி கேட்டால் பொய் வழி யைக்காட்டி வழிபறிக்கவும் வந்து நிற்பான். இதுபோல் ஸாப்ரூ வெறுப்படைந்து வெளியேற நினைத்ததும் அவரைத் தடுத்தனராம் அவரது அருமை நண்பர்கள். அமிருத பஜார் பத்திரிகைக்கு ஒரு தனி நிருபர் எழுதியதிலிருந்து ஸ்ரீ ஜெயகரும் தடுத்தார் என்றும் தெரிகிறது. வேறு ஒரு விஷயமும் வெளியாகிறது. லண்டனி லிருந்து ஒரு மிதவாதப்பிரமுகர் பூனுவில் ஒரு தலைவரை யோசனை கேட்டாராம். அந்த பூனு தலைவர் காங்கரஸ்பற்று உள்ளவராம். அவர் சொன்னபுத்திமதி என்ன.?

லண்டனிலிருந்து கேட்டவர் கூட்டுக்கமிட்டியை விட்டு வெளி யேறலாயா என்று கேட்டார். பதில் சொன்னவர் "கூடவே கூடாது" என்று தபாலில் வந்த கேள்விக்கு, தந்தியில் கூச்சல் போட்டார். அத்தோடு மட்டுமல்ல. "உன் கடிதத்தை மகாத்மா காந்தியிடம் காட்டினேன். இச்சமயம் ஒத்துழைக்காமல் கூட்டுக் கமிட்டியிலிருந்து இந்தியர்கள் வெளியேறுவது நாட்டிற்கு அழ கல்ல. பயனுமில்லை என்று அவரும் சொன்னார்" என்று ஒரு ஆணி அறைந்திருக்கிறார். கூட்டுக்கமிட்டி ஒத்துழைப்புக்கு காந்தி சப்பைக்கட்டு. இந்த நிதானவாதிகளின் நோக்கும் போக் கும் அலாதி.

நிதானவாதிகளுக்கு அரசியல் ஞானம் எற்படுவதோ, ஒத்து ழையாமை வைராக்கியம் உதிப்பதோ நீடித்து இருப்பவை அன்று. நிதான வாதியின் துணிவு சான்றோர் சினத்தைப் போன்ற ஒரு அரிய சரக்கு. இரண்டும் நீர் கிழிய எய்த வடுப்போல மாறிவிடும்.

நண்பர்கள் சிரிப்பு

பாட்டி:—குழந்தாய்! 'படேலை'ப்பற்றி உனக்குத்தெரியுமா? சொல்; பார்ப்போம்.

மணியன்:—பாட்டி! இதோ காப்பி குடிக்கிறேன். பொறு அவசரப் படேல்.

—வி. சீனிவாசன்.

சிறுபையன் :—(டார்வின் ஆராய்ச்சியை நினைத்துக்கொண்டு) 'ஏனம்மா' நாமெல்லாம் குரங்கின் சந்ததி யாரென்று வாத்தியார் கூறுகின்றாரே உண்மையாகவா?"

தாயார் :—"என்னமோ அப்பா, நான் உன் தகப்பனாரின் மூத்தோர்கள் ஒருவரையும் பார்த்ததில்லையே?"

—பி. ஆர். எஸ். கோபால்.

ஓர் ஆற்றங்கரையில் ஓர் புலவர் கட்டமுதை, அவிழ்த்து சாப்பிட உட்கார்ந்தார்.

அங்குவந்து அவர் அருகில் உட்கார்ந்த வேறொரு புலவர்,

"தன்னைப்போல் பிறனையும் நேசிப்பாயாக, என்ற வாக்கியத்தை நினைத்துக்கொள்ளு" மென்றார்.

சாப்பிட ஆரம்பித்த புலவர், 'பிறர்பொருளை இச்சியாதிருப்பாயாக, என்ற வாக்கியத்தை நீர் நினைத்துக்கொள்ளு' மென்றார்.

—வைத்தியர், எம். கணபதி பிள்ளை.

மகன்:—என்னப்பா, "கண்ணாடி ஜாக்கிரதை"யென்றிருக்கின்றது.

தந்தை : பெட்டிக்குள் கண்ணாடி இருக்கின்றது. ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்பதர்த்தம்.

மகன்—:ஓ ஹோ ரயில்வே ஜங்ஷன் காப்பிகிளப்பில் "திருடர்கள் ஜாக்கிரதை" என்றிருந்தது. சரிதான்! அந்த கூண்டுக்குள் திருடர்கள் இருக்கிறார்கள். நாமினி அங்கு போகவே கூடாதப்பா!

* எம். என். எம். பாவலர்.

---

* இரண்டு ரூபாய் பரிசுபெற்றவர். விலாசம் :—திருப்பாடலியூர்.

:: இடையின சனியன் ::

(கந்தர்வன்)

"இதென்னய்யா தமிழ்? யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல இனிதாவ தெங்கும் காணோம்" என்று பாரதியார் சொல்லுகிறார். "பரம் பொருளைப்போல சீரிளமையோடு" தமிழ் மொழி இருப்பதாக "மனோன்மணியம்" சுந்தரம் பிள்ளை சொல்லுகிறார். "தமிழ்மொழி தனித்திலங்கும் மொழி" யென்று புலவர்கள் கூச்சல் போடுகிறார்கள். எல்லாரும் சேர்ந்து சதிபாலோசனை செய்து இம்மாதிரி சொல்லுகிறார்களா, என்ன? என்று சொல்லிக்கொண்டே சுப்பிரமணியம் தனது மேல் துண்டால் திண்ணை தூசியைத் தட்டிவிட்டு உட்கார்ந்தார். அன்று திண்ணைக் கச்சேரியில் முதல் விவாதத்தை அவரே ஆரம்பித்தார். பண்டிதர் திரிமூர்த்தி கவிராயருக்கு அவர் சொன்னது பொறுக்கவில்லை. தொண்டையைக் கனைத்துக்கொண்டு "ஏனய்யா சுப்பிரமணியனாரே, நீவிர் சொல்வ தின்ன தென்பதை அறிந்து மொழிகிறீரா?" என்று அழுத்தந் திருத்தமாய்க் கேட்டார். தமிழ் பண்டிதர்கள் என்றாலே சுப்பிரமணியருக்கு கோபம் மூக்கு முனைக்கு வந்துவிடும். அதிலும் இம்மாதிரி கவிராயர் பேசியவுடனே அவருக்கு கோபம் வந்த அளவை கேட்கவேண்டுமா? கவிராயரைப் பார்த்து "உமது கேள்வியை நோக்குழி, நீவிர் அறியாமைப் படுகுழியில் உழலா நிற்கின்றீர் என்பது தெற்றெனப் புலனாகின்றது" என்று அவரைவிட அதிகக் கடுமையான தமிழில் பேசினார்.

நான் பார்த்தேன். இத்தோரணையில் பேச்சைவளரவிட்டால் வீண் சண்டையில் வந்து முடியுமென்று தோன்றவே, திண்ணைக் கச்சேரியின் தலைவர் என்ற முறையில் வாதத்தை அத்துடன் விட்டுவிடும்படி தீர்ப்புக் கூறினேன்.

சுப்பிரமணியர்:—சரி, உமது தீர்ப்பை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல இனிதாவ தெங்கும் காணோம்" என்று பாரதியார் சொல்லுகிறார். இதை நான் ஆட்சேபிக்கிறேன். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல இடையின மொழியை வேறெங்கும் காணோம்" என்று நான் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறேன்.

கவிராயர்:—அதை நான் ஆட்சேபிக்கிறேன். அதென்ன இடையின மொழி? அர்த்தமில்லாத பேச்சு!

சுப்பிரமணியர்:—தள்ளவேண்டாம் கவிராயரே.

கவிராயர்:—இடையின மொழி என்றால் என்ன அர்த்தம்?

சுப்பிரமணியர்:—அப்படி வாரும். தமிழ் எழுத்துக்களிலே வல்லினம், இடையினம், மெல்லினம் என்று பிரிக்கிறீர்களே அதற்கு ஏதாவது பொருளுண்டா? இந்த சனியனால் எவ்வளவு தவறுகள் நேரிடுகின்றன தெரியுமா? வேறு எந்த பாஷையிலாவது இந்த தகராறு உண்டென்று நிரூபிக்கமுடியுமா?

கவியாயர்:—முடியும்.

சுப்பிரமணியர்:—வேறு பாஷை உமக்கு தெரிந்தாலல்லவா நிரூபிக்கமுடியும்?

கவிராயருக்கு கொஞ்சம் கோபந்தான். சிறிதுநேரம் பதிலே பேசவில்லை.

நான்:—சரி, இப்பொழுது உமக்குவேண்டியதென்ன?

சுப்பிரமணியர்:—எனக்குவேண்டியது இதுதான். "ற"வை வல்லினமென்றும், "ர" வை இடையினமென்றும் சொல்லக் காரணமென்ன?

இதுவரை மௌனமாயிருந்த வெங்கட்டராமன், "நான் சொல்லுகிறேன், கேளும்" என்று சொல்லிவிட்டு மேலே பேசியதாவது:—

மனிதனுக்காகத்தான் பாஷை. மனிதன் வாழ்வை யொட்டியே பாஷையும் அமையவேண்டும். மனித வாழ்க்கையில் முக்கியமான சம்பவங்கள் மூன்றுதான். பிறக்கிறான், இருக்கிறான், இறக்கிறான். பிறப்பதும் இறப்பதும் மிக முக்கியமானவை. மத்தியில் நேரிடுவது இருப்பது. இந்த "இருப்ப"தற்காக அவன் இருக்கிறான். ஆகவே இருப்பதும், இரப்பதும், பிறப்பதற்கும், இறப்பதற்கும் இடையில் நடைபெறுகின்றன. இடையில் நடைபெறுகிறபடியால் இந்த வார்த்தைகளில் வரும் "ர" காரத்திற்கு இடையினம் என்று சொன்னார்கள். பிறப்பதும், இறப்பதும் ஆரம்பமும், முடிவுமான மிக முக்கியமான சம்பவங்களாகையால் அந்த "ற"காரத்திற்கு வல்லினம் என்று பெயரிட்டார்கள். இது தான் வல்லின இடையினரகசியம்.

இதைக்கேட்டதும் கவிராயருக்கு துக்கம் பொறுக்கமுடியவில்லை. கையிலிருந்த பேனாவை வீசி எறிந்துவிட்டு திண்ணையிலிருந்து குதித்து "கொலை, கொலை, தமிழ்க்கொலை" என்று கூச்சலிட்டுக்கொண்டு ஓடியே போய்விட்டார். நல்ல வேளையாக அவர் கையில் பேனா இருந்தது. எழுத்தாணி இருந்திருந்தால், சீத்தலை சாத்தனாரைப்போல தன் தலையிலேயே குத்திக்கொண்டு, தற்கொலை குற்றத்திற்காக ஜெயிலுக்குள் அடைபட்டிருப்பார்.

சபர்மதி

("தேவிதாசன்" எழுதுகிறார்.)

சபர்மதி! இந்த வார்த்தையை கேட்காதவர்கள் இந்தியாவில் இல்லை. சபர்மதி என்று சொன்னதும் உடனே மகாத்மா ஞாபகம் வருகிறது. கங்கையை நினைக்கும்போது எப்படி பகிரதன் நினைப்பு வருகிறதோ, அம்மாதிரியே சபர்மதியை நினைக்கும்போது மகாத்மா நினைவு வருகிறது. பகீரதனைப்போல மகாத்மா சபர்மதி நதியை கொண்டு வரவில்லை. ஆனால் சபர்மதி என்ற பெயர் உலகம் முழுவதிலும் அடிபடும்படி செய்தது—சபர்மதி என்ற நாமத்தைக் கேட்கும்போதும், நினைக்கும் போதும் ஒருவித பக்தியை உண்டு பண்ணும்படி செய்தது—மகாத்மா காந்தியே!

ஆமதாபாத்தில் ஒரு பக்கத்தில் சபர்மதி என்ற நதி ஓடிக்கொண்டிருக்கிறது. நகரின் அப்பகுதிக்கும் சபர்மதி என்றுதான் பெயர். அந்த நதிக்கரையில் மகாத்மா காந்தி 1915ல் தமது ஆசிரமத்தை ஸ்தாபித்தார். அதற்கு சத்தியாக்கிரக ஆசிரமம் என்று பெயரிட்டார். அந்த ஆசிரமத்தின் கதை பெரிய கதை. மகாத்மா சொல்லுகிறபடி "ஆசிரமத்திலுள்ள ஒவ்வொரு செங்கல்லுக்கும் ஒவ்வொரு மரத்திற்கும் ஒரு புனிதமான கதையுண்டு." தமது உடமைகளை யெல்லாம் மகாத்மா ஆசிரமத்திற்கு தத்தஞ் செய்தார். இருந்தாலும் ஆசிரமத்தின் பணத்தாகத்தை திருப்தி செய்வது கஷ்டமாயிருந்தது. ஒரு சமயம் கையில் ஒரு தம்பிடி கூட இல்லை. என்ன செய்வதென்று எல்லாரும் யோசித்துக் கொண்டிருந்தார்கள். மறு மாத ஆசிரம செலவிற்கு பணம்வேண்டும். என்ன நடந்தது தெரியுமா? திடீரென்று ஒருவர் மோட்டாரில் வந்து இறங்கினர். உடனே 13 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை மகாத்மா கையில் கொடுத்து "உங்கள் ஆசிரமத்துக்கு வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு மறு வார்த்தை பேசாமல் போய் விட்டார். இம்மாதிரி சம்பவங்களும், அதிசயங்களும் இந்த ஆசிரமத்தின் சரித்திரத்தில் எவ்வளவோ உண்டு. மகாத்மா தமது உயிரினும் மேலாக அதைப் பாவித்து, கண்ணுள்ளிருக்கும் கருமணிபோல பேணி வளர்த்து வந்தார். இந்தியாவிலுள்ள வாலிப தேசபக்தர்களுக்கு இந்த ஆசிரமம் ஒரு புண்ணிய க்ஷேத்

திரம் போலவும் குருகுலம் போலவும் விளங்கியது. வாலிப மனக்கோட்டைகளில் "சத்தியாக்கிரக ஆசிரமத்தில் வாசஞ்செய்ய வேண்டும்" என்பது பிரதானமாயிருந்து வந்தது. இந்த நினைப்பு 100க்கு 99 காங்கிரஸ்காரர்களுக்கு இருக்குமென்று நான் சத்தியஞ் செய்வேன்.

மகாத்மா காங்கிரசில் சேர்ந்து தீவிரமாய் வேலைசெய்யுமுன்பே சத்தியாக்கிரக ஆசிரமம் இந்தியாவில் பிரபலமடைந்திருந்தது. நான் சொல்லப்போகும் கதை 1917ல் நடைபெற்றது. அச்சமயம் எனக்கு வயது 18. மற்ற வாலிபர்களைப்போல தேச சேவை செய்ய நானும் எத்தனையோ மனக் கோட்டைகள் கட்டினேன். சத்தியாக்கிரக ஆசிரமத்தில் சேர்ந்து வேலைசெய்வது என்று முடிவு செய்தேன். உடனே ஆசிரம மானேஜருக்கு எனது விருப்பத்தை தெரிவித்தேன். அச்சமயம் மகாத்மாவின் ஒன்றுவிட்ட சகோதரரான ஸ்ரீ. மகன்லால் காந்தி ஆசிரம மானேஜராயிருந்தார். அவர் என்ன பதில் எழுதினர் தெரியுமா? "வா" என்று எழுதவில்லை. வாலிப மனக் கோட்டைகளுக்கு ஏற்படும் முட்டுகட்டைகளும் ஏமாற்றங்களும் எவ்வளவு என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கும். ஆசிரம விதிகளை அனுப்பி அத்துடன் எழுதிய கடிதத்தில் "தற்சமயம் ஆசிரமத்தில் இடமில்லை" என்று முடித்துவிட்டார். இதைப் பார்த்து எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டபோதிலும், முதலில் செய்த தீர்மானத்தை விடவில்லை. "ஆசிரமத்திற்கு போய்ச் சேர்ந்துவிட்டால், அவ்வளவு தூரம் போன பின்பு வீட்டுக்குப் போ என்று சொல்லவாபோகிறர்கள்" என்றுநினைத்து புறப்படத் தயாரானேன். 2 ஆயிரம் மைலுக்கு அப்பால், கண்ணுக் கெட்டாத சீமையில், அன்னிய பாஷை பேசும் ஊரில் போய் இருப்பதென்றால் பெற்றோர் சம்மதிப்பார்களா? ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார்கள். ஆகவே ரகசியமாக புறப்பட்டேன். எங்கள் ஜின்னிங் பாக்டரி நடந்துகொண்டிருந்த ஊருக்கு போய் வருவதாகச் சொல்லி புறப்பட்டு, நேராக சென்னைக்கு வந்தேன். அங்கிருந்து ஆமதாபாத் போவதாக கடிதம் எழுதிவிட்டு ஆமதாபாத் புறப்பட்டுவிட்டேன். இந்தக் கடிதம் எழுதினது என்னுடைய நோக்கத்திற்கே ஆபத்தாகவந்து சேர்ந்தது. நான் போயிருக்கிற இடம் தெரிந்துபோகவே, என்னுடைய தாயாரும் மைத்துனரும் ஆமதாபாத்துக்கு வந்து மகாத்மாவிடம் சொல்லி என்னை திருப்பி அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். சென்னை வாசிகள் பலர் வந்தும், ஸ்திரமாக தங்க முடியாமல் திரும்பிவிட்டதாகவும், நானவது இருப்பேனென்று நம்பி யிருந்ததாகவும் மகாத்மா கூறினர்.

இந்த வாக்கியம் முக்கியமாய் கவனிக்க வேண்டியது. சென்னை வாசிகள் அங்கே தங்கமுடியாமல் திரும்பியகாரணமென்ன? பாழாய்ப்

போகும் புளியும் மிளகாயுந்தான். தமிழ் நாட்டார் ஆகாரத்தில் சேர்க்கும் புளியில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட வடநாட்டார் சேர்ப்பதில்லை. மிளகாயை தொடுவதுமில்லை. கோதுமை மாவை ரொட்டியாகச் செய்து கொஞ்சம் பருப்பும் இருந்தால் வடநாட்டாருக்குப் போதும். எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இந்த ஆகாரத்தால் காலந்தள்ளி விடுவார்கள். யுத்த களத்திற்கு போக நேரிட்டாலும், வடநாட்டாருக்கு ஆகாரப் பொருள்கள் கொண்டு போவதும், தயார் செய்வதும் மிகவும் சுலபம். ஆனால் தமிழ் நாட்டாருக்கு? புளிவேண்டும். மிளகாய் வேண்டும். அரிசியில் பச்சரிசிவேறு, புழுங்கல் அரிசி வேறு வேண்டும். மஞ்சள், தேங்காய் வேண்டும். கடுகு, உளுத்தம்பருப்பு, மல்லி, மிளகு, சீரகம் வேண்டும். இவ்வளவையும் மணக்கச்செய்ய கருவேப்பிலையும் வேண்டும். எத்தனை பொருள்கள் பார்த்தீர்களா? இந்த நாஸுக்கான ஆகாரம் வேறு எந்த நாட்டாருக்கும்—உலகத்திலேயே—கிடையாதாம். இந்த சங்கடத்தால்தான் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் சென்னை வாசிகள் முன்பு நீடித்து தங்க முடியாமல் போயிற்று.

சத்தியாக்கிரக ஆசிரமத்தின் முக்கியமான விதி "நாக்கை அடிமையாக்குதல்". நாவு ருசிக்காக எதுவும் சாப்பிடக்கூடாது. அப்படி சாப்பிட்டால் அது திருடுவதற்கொப்பாகும். இந்த கடுமையான விதி, சாம்பார், ரசம், மோர்க் குழம்பு, பச்சடி சகிதம் சாப்பிடும் தமிழ் நாட்டாருக்கு மகா கஷ்டமாயிருக்கு மென்பதை சொல்லவும் வேண்டுமா? நான் ஆசிரமத்துக்கு போய்ச் சேர்ந்தவுடன் மகன்லால் காந்தி "எங்கள் அநுமதி யில்லாமல் என் வந்தாய்?" என்று கேட்டார். நான் வேறொன்றும் சொல்லவில்லை. 'வரக்கூடாதுதான். ஆனால் வந்து விட்டேன்" என்றேன். பேசாமல் ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டார். அங்குள்ள சாப்பாடு எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. இருந்தாலும் பல்லை கடித்துக் கொண்டு காலந்தள்ளினேன். நான் போன சமயத்தில் மகாத்மா அங்கில்லை. சாம்பரான் அவுரித் தோட்ட விசாரணைக்கு போயிருந்தார். ஒரு வாரங் கழித்து வந்தார். ஆசிரமத்தைவிட்டு ஊருக்குள்ளே போக வேண்டுமானால் அநுமதி வாங்கிக்கொண்டுதான் போகவேண்டும். ஒருநாள் அநுமதி வாங்கிக்கொண்டு ஊருக்குள்ளே போனேன். கடைகளில் வைக்கப்பட்டிருந்த மிட்டாய்களைப் பார்த்ததும் ஆசிரம விதிகள் பறந்து விட்டன. வயிறு கொண்ட மட்டும் சாப்பிட்டேன். இதனால் ஜுரம் வந்தது. மகாத்மாதான் பெரிய வைத்தியராயிற்றே! கையைப்பிடித்துப் பார்த்தார். நாக்கை நீட்டச் சொல்லி பார்த்தார். பால் மட்டும் எனக்கு கொடுக்கும்படி சொன்னார். அப்புறம் ஜுரம் போய் விட்டது.

மதராஸிகளுக்கு மிளகாயும், புளியும் வேண்டுமென்று மேலே சொன்னேனல்லவா? ஜுரத்துக்குப் பின்னால் பருப்பு குழம்பில் மிளகாய் போட்டு எனக்கு கொடுக்கும்படி உத்தரவிட்டார். பாஞ்சாலத்தில் பிரசித்தி பெற்ற தலைவரான சுவாமி சத்திய தேவ் அச்சமயம் ஆசிரமத்தில் ஹிந்தி கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். அவருக்கும் மிளகாய் சேர்த்துக்கொள்ள அநுமதியுண்டு. ஆசிரமத்திலேயே நாங்கள் இருவர்தான் மிளகாய் சேர்த்துக் கொண்டு வந்தோம்.

காலையில் 4-மணிக்கெல்லாம் எழுந்து ஸ்நானத்தை முடித்துக் கொள்ளவேண்டும். 6-மணிக்கு பிரார்த்தனை. பிரார்த்தனையில் தமிழ் பாட்டுகளும் உண்டு. 7-மணிக்கு ரொட்டியும் தயிரும். 10-மணிக்கு சாப்பாடு. சமையலறையில் மகாத்மா காந்தி, கஸ்தூரி தேவி, மகன்லால் காந்தி, அவர் மனைவி முதலியவர்கள் நிற்பார்கள். தங்கள் தட்டுகளைக்கொண்டு மேஜையில் வைத்தவுடன், போதுமென்று சொல்லுகிறவரை அவர்கள் சாப்பாடு வைப்பார்கள். தங்களுக்கு இஷ்டமான இடத்தில் கொண்டு வைத்து சாப்பிடலாம். பின்னால் எல்லாரும் சேர்ந்து சமையல் பாத்திரங்களை துலக்கி வைக்கவேண்டும். 12 மணிவரை ஓய்வு. அப்புறம் அவரவர் வேலையைப் பார்க்கப்போக வேண்டும். மாலையில் 4 மணிக்கு மறுபடியும் சாப்பாடு. அப்புறம் பிரார்த்தனை. 8 மணிக்கெல்லாம் எல்லாரும் படுத்துக்கொள்ளுவார்கள். ஆசிரமத்தில் வேலைக்காரர் என்ற பேச்சே கிடையாது. ஒவ்வொரு இலாகாவையும் அதாவது சமையல், தோட்ட வேலை, சுத்தம் செய்தல், முதலியவைகளை ஆசிரம வாசிகளே முறை போட்டு செய்து வருவார்கள். தோட்டி வேலையைக்கூட ஆசிரமவாசிகளே செய்கிறார்கள். சிறுவர் சிறுமியருக்கு பள்ளிக்கூடம் உண்டு. கதர் வேலை ஏராளமாய் நடைபெற்று வந்தது. நான் சென்றிருந்த காலத்தில் ஆசிரமம் மற்றொருவர் கட்டிடத்தில் நடைபெற்று வந்தது. இப்பொழுது ஆசிரமத்துக்கு $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் பெறுமான ஸ்தாவர சொத்துக்களும், 3 லட்சம் ரூபாய் பெறுமான ஜங்கம சொத்துக்களும் இருக்கின்றன. இந்த ஆசிரமத்தைத்தான் ஒருவரியில் மகாத்மா கலைத்துவிட்டார். தேசத்தார் எத்தனையோபேர் எவ்வளவோ தியாகங்கள் செய்திருக்கும் போது, ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள்மட்டும் சும்மா யிருப்பதா என்று அவர் கேட்கிறார்.

சபர்மதி மகரிஷி இன்று ஜெயிலில் இருக்கிறார். அவருடைய அருமையான சத்தியாக்கிரக ஆசிரமம் இன்று ஒருவருமில்லாமல் சும்மா கிடக்கிறது. சந்திரனுக்கு சூரியன்தான் ஒளி கொடுக்க வேண்டும். சூரியன் ஜெயிலுக்குள் மறைந்திருக்கும்போது சந்தி

ரன் ஒளி யிழந்திருப்பதில் அதிசய மில்லை. ஆனல் எப்பொழுதும் சூரியன் மறைந்திருக்க முடியுமா? மகாத்மா ஜெயிலிலிருந்து வெளி வரப்போவது நிச்சயம். வந்த பின்பு மறுபடியும் சத்தியாக்கிரக ஆசிரமம் பழைய ஜோதியோடு விளங்கப்போவது நிச்சயம். மகாத்மாவை 1-ந்தேதி காலை 2 மணிக்கு கைதுசெய்து கொண்டுபோகும் போது, சபர்மதி ஆசிரமத்தின் வாசலில் மோட்டாரை நிறுத்தி துக்கத்தோடு பார்த்தாராம். அந்த மகாத்மா மறுபடியும் சந்தோஷக் கண்களோடு சபர்மதி ஆசிரமத்தை நோக்கும் திருநாளை ஆவலோடு நாமெல்லாரும் எதிர்பார்க்கிறோம்.



இது நெப்போலியன் சமாதி. இதிலே நெப்போலியனை கண்டு பிடியுங்கள்.

கிராமபோன் மனைவி

(பி. எஸ். ராமய்யா)

"ஈஸ்வரா! இந்தப் பெண்ணைப் பெற்று விட்டு நான் படும்பாடு போதும் போதும். ஏழேழு ஜன்மங்களுக்கும் போதும்" என்று முணு முணுத்துக்கொண்டே உமாமகேஸ்வர பாகவதர் ரயிலை விட்டு இறங்கி நடந்தார்.

மாயவரத்தில், வெங்கட்டராமய்யருடைய பிள்ளையை "வரன் பார்க்கும்" நோக்கத்துடன் அவர் திருச்சிறுப்பள்ளியிலிருந்து புறப்பட்டு வந்தார். அவருடைய மூன்று பெண்களில் முதலிருவருக்கும் கலியாணம் ஆவது அவருக்கு அவ்வளவாக சிரமமாக விருக்கவில்லை. ஏதோ "கூடக்குறையச் செய்து" மாப்பிள்ளைகளை திருப்திசெய்து, அவர்களைக் கன்னிகாதானம் செய்து கொடுத்து விட்டார்.

ஆனால், அவருடைய மூன்றாவது பெண்ணான வேம்புவின் கலியாண முயற்சிதான் அவரது உடலையும் உள்ளத்தையும் உருக்கி, அவரை அரையாளாகக் கரைத்துவிட்டது. ஊர் ஊராக அலைந்து, அந்த வரன் கிட்டி விடாதா? இந்தப் பிள்ளையாவது சரிப்பட்டு வந்து விடாதா? வென்று அவர் அல்லும் பகலும் அதே கவலையாகவும், வேலையாகவும் திரிந்து திரிந்து அவருக்கு "போதுமையா இந்த ஜன்மம்" என்றாகிவிட்டது.

உமாமகேஸ்வர பாகவதருக்குப் பூர்வீகமாகக் கொஞ்சம் ஆஸ்தியிருந்தது. அதுவும் தவிர, அவர் ஹரி கதா காலக்ஷேபம் செய்வதில் தென்னாடெங்கும் புகழ் பெற்றிருந்தார். அவருடைய காலக்ஷேபத்திற்கு நல்ல கிராக்கியுமிருந்தது. ஆகையால், அவருக்கு சுமாரான வரும்படி கிடைத்துக் கொண்டுதானிருந்தது. ஆனாலும், உமாமகேஸ்வர பாகவதர் என்ற ஹோதாவில் பார்க்காமல், மூன்று பெண்களின் தந்தையான ஒரு தென்னிந்தியப் பிராமணன் என்ற ஹோதாவில் பார்த்தால் அவர் ஒரு ஏழைதான்.

மூத்த பெண்களிருவருடைய கலியாணங்களுக்கே அவர் சுமார் எட்டாயிரம் ரூபாய் வரை செலவு செய்தாய் விட்டது. மூன்றுவது பெண் ஒருவளுடைய கலியாணத்திற்குக் குறைந்த பக்ஷம் ஐந்தாயிரம் ரூபாய்களாவது அவசியம் வேண்டியிருக்கும். அவருடைய சொத்தின் நிகழ்கால மதிப்பும் அவ்வளவுதான். அதுவும் போனல் போகிறது என்று செலவழிக்கத் தயாரா யிருந்தாலுங் கூட, வரன் குதிர்வதுதான் அசாத்தியமாக விருந்தது.

ரயிலை விட்டு இறங்கிய பாகவதர் நேராகத் தமது நண்பர் வேதராமய்யருடைய வீட்டிற்குச் சென்றார்.

அன்று மாலையிலேயே இருவரும், வெங்கட்டராமய்யருடைய அகத்திற்குச் சென்றனர். வேதராமய்யர், பாகவதரை, வெங்கட்டராமய்யருக்கு அறிமுகம் செய்து வைத்தார். சிறிது நேரம்வரை மூவரும் லோகாபிராமமாகப் பேசிக்கொண்டிருந்தனர். பின்னர், பாகவதர் வெங்கட்டராமய்யருடைய புதல்வனது ஜாதகம் வேண்டுமென்று கோரினர்.

உடனே அங்கு கலியாணத்தைப் பற்றிய சம்பாஷணை ஆரம்பமாயிற்று. இடையிடையே பாகவதர் தமது நிலைமையைப்பற்றியும், பெண்ணுக்குத் தாம் அளிக்கக்கூடிய சீர், ஸ்ரீதனங்களைப்பற்றியும் வார்த்தைகளை நுழைத்தார். வெங்கட்டராமய்யரும், தமது புதல்வன் 'மெட்ரிக்குலேஷனி'ல் படிப்பதைப் பற்றியும், அவன் பீ.ஏ. பாஸ் செய்து விட்டுச் சீமைக்குச் சென்று ஐ. ஸி. எஸ். படிப்பதற்கு அவனுடைய ஜாதகத்தில் அறிகுறிகள் காணப்படுவதைப் பற்றியும் வார்த்தைகளை நுழைத்தார்.

கடைசியாக வெங்கட்டராமய்யர், எதிரிலிருந்த ஒரு அலமாரியைத் திறந்து அதிலிருந்த ஒரு கத்தைக் காகிதங்களை வெளியிலெடுத்தார். அந்தக் கத்தையிலிருந்து ஒரு ஜாதகக் குறிப்பை பிரித்து எடுத்து, அதற்கு ஒரு நகல் தயார் செய்யத் தொடங்கினர். அதைக் குறித்துக் கொண்டே "பெண் வாசித்திருக்கிறாளா?" வென்று வினவினர்.

பாகவதர் நிரம்பவும் வினயத்துடன் "வாசிக்காவிட்டால் தானென்ன? எங்கள் குடும்பமே பழமையானது. என்னுடைய சம்சாரங் கூடப் படிக்காதவள்தான். அதனல் என்னுடைய குடும்ப வாழ்க்கை இனிமையில்லாததாகப் போய்விட்டதா? என்னைக்கேட்டால், படித்த பெண்களைவிட, படிக்காத பட்டிக்காட்டுக் கட்டுப்பெட்டிகளே, அதிக அடக்கத்துடனும் பாங்காகவும் குடும்பம் நடத்துவார்கள் என்று சொல்லுவேன். புருஷன் மனங் கோணமலும், அவனை யெதிர்த்துப் பேசாமலும், சவரணையாகவும்

அவர்கள் குடும்பம் நடத்துவதை நாம் அனுபவத்திலும் கண்டு வருகிறோம்" என்றார்.

அதைக்கேட்டவுடன் வெங்கட்டராமய்யருக்கு அந்தப்பதிலில் ஏதோ பெருங்காய வாசனை யடிப்பதாகத் தோன்றியது. ஆனால் அவர் தம்முடைய சந்தேகத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல், "பாட்டுச்சொல்லிக் கொடுத்திருக்கிறீர்களா?" வென்று கேட்டார்.

"சொல்லிக் கொடுத்தால்தானா? எங்கள் வீட்டிலேயே, சதா காலமும் பாட்டும் முழக்கமுமாகவே யிருக்கிறது" என்றார் பாகவதர்.

"என்னடா இவர்? உப்புந்தியாவென்றால் பப்புந்தி என்கிறார்! இதில் ஏதோ விஷயமிருக்கிறது." என்று தோன்றியது வெங்கட்டராமய்யருக்கு. ஆனாலும் அவருடைய அசட்டுப் பிள்ளைக்கு சுமார் ஐயாயிரம் ரூபாய் பெறுமான வரதக்ஷிணை சீர் செனத்தியுடன் பெண் கிடைக்குமென்று அவரால் நம்பமுடியவில்லை. "ஜாதகம் தானே கேட்கிறார். தானே வரப்போகிறார். அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்" என்று தீர்மானித்துக் கொண்டு, தாம் குறித்த நகலை பாகவதரிடம் கொடுத்து விட்டார்.

மேலும் ஒருமாதம் கழிந்துவிட்டது. இடைக் காலத்தில் உமாமகேஸ்வர பாகவதர் தமது பெண்ணின் ஜாதகத்துடன் மாயவரத்துப் பையனின் ஜாதகத்தை வைத்துக்கொண்டு பொருத்தங்கள் பார்த்தார். என்ன ஆச்சரியம்! அவருடைய பெண் வேம்புவும், மாயவரம் வெங்கட்டராமய்யருடைய புதல்வன் சிரஞ்சீவி ஆத்மாநாதனும் ஒருவருக்காக மற்றவர் பிறந்திருந்தார்களோ வென்று நினைக்கும்படி ஜாதகங்கள் பொருந்தி யிருந்தன!

பாகவதருக்கு அந்த வரனைக் கை நழுவவிட இஷ்டமில்லை. எப்படியாவது, கூட ஒன்றிரண்டு ஆயிரம் ரூபாய்கள் கடன்வாங்கியாவது இந்த வருஷத்திலேயே அந்த வரனுக்கே தமது பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று உறுதி செய்துகொண்டார். ஆனால், பெண் படித்தவளல்ல வென்று தெரிந்தால் வெங்கட்டராமய்யர் தமது புதல்வனுக்கு சௌ. வேம்புவைப் பாணிக்கிரகணம் செய்துகொள்ள மறுத்துவிடுவாரோ வென்ற கவலை ஒரு பெருஞ் சுமைபோல வந்து அவரது மனத்தை யழுத்தத் தொடங்கியது.

ஆய்விட்டது. வைகாசி இருபத்தைந்து தேதியுமாகிவிட்டது. இன்னும் ஏறக்குறைய முப்பத்தைந்து தினங்களுக்குள் முகூர்த்தம் நடந்தால்தான் உண்டு. ஆனியும் முடிந்துவிட்டால், மறுபடி அடுத்த கலியாண சீஸன் வரும்வரை காத்திருக்கவேண்டும்.

அதே கவலையாக, அவர் ஒருநாள் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். மனம் பத்திரிகையில் செல்லவேயில்லை. திடீரென்று மின்வெட்டுவதுபோல அவருடைய மனதில் ஒரு யோசனை தோன்றியது. அப்படியே எழுந்து குதித்தார். ஆடினார். பாடினார். தாயுமானேஸ்வரனே தமக்குச் சமயத்தில் அந்த யோசனையை அளித்தாரென்று அவரைத் தொழுதார்.

அன்றிரவே அவர் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் நாலைந்து நாட்கள் தங்கியிருந்து விட்டுத் திருச்சிக்குத் திரும்பினார்.

ஊருக்கு வந்த மறுநாளே, அவர் குழந்தை சௌ. வேம்புவையும் அழைத்துக் கொண்டு மாயவரத்திற்குப் பிரயாணமானார்.

பெண்ணைத் தமது நண்பருடைய அகத்தில் விட்டுவிட்டு அவர் மாத்திரம் வெங்கட்டராமய்யர் வீட்டிற்குச் சென்றார். வெங்கட்டராமய்யரிடம் ஜாதகங்கள் இரண்டும் கொஞ்சம்கூடச் சந்து விழாமல் பொருந்தியிருந்த விஷயத்தை முதலில் தெரிவித்துவிட்டு "ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாய் வாதக்ஷிணை கொடுக்கிறேன். அதுபோக ஆயிரம் ரூபாய் வரையில் சீர் செய்கிறேன். கலியாணத்தில் சகல செலவும் என்னுடையதாகவே யிருக்கட்டும். நீங்கள், அப்படியே குடும்பத்துடன் வந்து பையன் தாலியைக் கட்டவேண்டியது. அதற்காகும் போக்குவரத்துச் செலவுதான் உங்களுக்குப் பிடிக்கும். குழந்தையையும் கூடவே கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். நம்முடைய வேதராமய்யரகத்தில் தானிருக்கிறாள். நீங்கள் நாளைக்கே குடும்பத்துடன் வந்து குழந்தையைப் பாருங்கள். ஆனி பன்னிரண்டாந் தேதி முகூர்த்தமிருக்கிறது. அன்றைக்கே நடத்தி விடலாம்" என்றார்.

வெங்கட்டராமய்யரிடம் பாகவதர் ஏற்கனவே தமது புதல்வியின் ஜாதக நகலொன்றையும் கொடுத்துவிட்டுப் போயிருந்தார். அவர் அத்துடன் தமது புதல்வனது ஜாதகத்தையும் வைத்து அவை யிரண்டும் பொருந்தியிருந்த விஷயத்தை அறிந்தே யிருந்தார். பாகவதர் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளும் அவருக்குத் திருப்தி யளிப்பனவாகவே யிருந்தன. ஆகையால் அவர், பாகவதர் கோரியபடியே மறுநாள் "காலையில் ராகு காலம் கழித்து ஆத்தில் பெண்டுகளையும் அழைத்துக்கொண்டு" பெண்ணைப் பார்க்க வருவதாக வாக்களித்தார்.

மறுநாள் காலையில் வெங்கட்டராமய்யர், தமது மனைவியையும், பையனையும் அழைத்துக்கொண்டு வேதராமய்யர் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அவர்களைப் பாகவதர் மரியாதைகளுடன் வரவேற்று உபசரித்தார்.

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு பெண்ணைப்பார்க்க விரும்புவதாகவெங்கட்டராமய்யர் தெரிவித்தார். அவருடையமனைவி வேதராமய்யர் வீட்டுப் பெண்களின் கூட்டத்தில் சென்று கலந்து கொண்டாள். ஆனாலும் அவளும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் பெண்ணைக் காண்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. ஆகையால் அந்த அம்மாளும் ஆவலுடன் கூடத்தில் வந்து நின்று கொண்டாள்.

வேதராமய்யரின் மனைவி, சௌ. வேம்புவுக்கு வேண்டிய அலங்காரங்கள் செய்து, தன்னால் கூடியவரை முயன்று, அவளை மணக்கப்போகும், அவளது உத்தேசக் கணவன் வந்திருப்ப தாகவும், ஆகையால் குழந்தை அதற்குத் தகுந்தபடி சப்தங்க ளொன்றும் செய்யாமல் நாணிக்குனிந்து நடந்து கொள்ளவேண்டு மென்றும், தெரிவித்து வைத்திருந்தாள்.

சௌ. வேம்பு அதையப்படியே அறிந்து கொண்டவளாய் நாணிக்குனிந்து, உடம்பில் சாத்தியமான இடங்களிலெல்லாம் புது மாதிரிக் கோணல்களை வரவழைத்துக்கொண்டு, கூடத்தில் தோன்றினாள்.

அவள் அவர்களுக்குமுன் வந்தவுடன், பாகவதர் கம்பீரமாக "அம்மா! உன் மாமனாருக்கு நமஸ்காரம் செய். அந்த அம்மாள் தான் உன் மாமியார்" என்று வாயினால் சொல்லிக் கொண்டே கையினால் அவ்விருவரையும் சுட்டிக்காட்டினார். குழந்தையும் அவ் விருவருக்கு முன்னாலும் முறையாகச் சென்று நமஸ்கரித்துவிட்டுக் கடைசியாய் தனது தந்தை காட்டிய சி. ஆத்மநாதனை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சமையலறைக்குத் திரும்பிச் சென்று விட்டாள்.

வெங்கட்டராமய்யரும் அவருடைய மனைவியும், உன்—அபிப் பிராயமென்ன?—எனக்குத் — திருப்திதான் — என்ற அர்த்தத் துடன் பார்த்துக் கொண்டனர். அந்தப் பார்வையின் அர்த்தத் தைப் பாகவதர் சரியாக அறிந்து கொண்டார். "இன்னும் ஒரேயொரு கண்டம் தானிருக்கிறது. அதையும் தாண்டி விட்டால் நான் ஜயித்து விட்டேன்" என்று எண்ணிக்கொண்டு அபாரமான ஆவலுடன் காத்திருந்தார்.

முதலில் வெங்கட்டராமய்யரே பேச ஆரம்பித்தார். "பெண் ணைப் பற்றிய வரையில் எங்களுக்குத் திருப்திதான். ஆனால் படிப் பில்லை; பாடக்கூடக் கற்றுக் கொடுக்க வில்லை யென்று சொல்லும் பொழுதுதான் யோசிக்க வேண்டியிருக்கிறது" என்றார்.

உடனே பாகவதர் நிரம்பவும் வினயத்துடன் புன்னகைசெய்து கொண்டே "அவளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கக்கூடா

தென்ற எண்ணமில்லை யெனக்கு. நான் ஊரூராய் போய்ப் பாடிக் காலக்ஷேபங்கள் செய்யும்பொழுது, அந்தக் குழந்தைக்கு இரண்டு பாட்டுச் சொல்லிக் கொடுப்பதுதான் எனக்கு சிரமமா? ஆனல் பகவானே அவளுக்கு அதெல்லாம் வேண்டியதில்லை யென்று தீர்மானம் செய்துவிட்டபிறகு நாம் என்ன செய்யமுடியும்?'' என்றார்.

வெங்கட்டராமய்யர் கலவரத்துடன் “நீங்கள் சொல்வது எனக்கு விளங்க வில்லையே'' என்றார்.

அவருடைய பத்தினி கொஞ்சம் சமீபமாக நெருங்கி வந்து நின்று கொண்டாள். சி. ஆத்மநாதனும் ஆவலுடன் எழுந்து அப்பா அருகில் மண்டி போட்டு உட்கார்ந்து கொண்டான்.

உமாமகேஸ்வர பாகவதர் ஒருதரம் மெதுவாகக் கனைத்துவிட்டு “அதைத்தான் சொல்லுகிறேன். பகவானுடைய அனுக்ரஹம் அப்படியிருக்கிறது. என் குழந்தைக்கு என்னல் ஆனதையெல்லாம் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். அவள் குழந்தை பருவம் முதல் இதுவரை வாய்திறந்து பேசவேயில்லை. ஊரிலுள்ளவர்கள் அவளை ஊமைச்சி என்கிறார்கள். ஆனல் ஜாதகத்தில் அவள் பதினைந்தாவது வயது முதல் பேச ஆரம்பித்துவிடுவாளென்பது தெளிவாக விருக்கிறது'' என்றார்.

வெங்கட்டராமய்யரும் அவருடைய மனைவியும் ஒருவரையொருவர், நிரம்பவும் அவசரம் அவசரமாகப் பார்த்துக்கொண்டனர். இருவருடைய முகங்களிலும், யாரோ “ஏமாற்றம்'' என்று கொட்டையெழுத்தில் எழுதியது போலிருந்தது.

அவர்கள் இன்னெரு முறையும் அவ்வாறு பார்வைத் தபால் மூலம் ஒருவருக்கொருவர் அபிப்பிராயங்களை அனுப்பிக்கொள்ளச் சந்தர்ப்பம் கொடுத்துவிடாமலிருப்பதற்காக பாகவதர் சட்டென்று எழுந்து நின்றுகொண்டு “அதனல் உங்கள் பையனுடைய வாழ்க்கையின் இயற்கை ருசி குறைந்துவிடுமோ வென்று நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை. நான் சென்ற பதினைந்து வருஷங்களாக ஹரிகதா காலக்ஷேபங்கள் செய்துகொண்டு வருகிறேன். திருப்பதிக்குத் தெற்கே என்னுடைய காலக்ஷேபத் திறமையைப்பற்றி எம்மாதிரியான அபிப்பிராயம் இருந்து வருகிறதென்பது உங்களுக்கே தெரிந்திருக்கும். இவ்வளவு சாமர்த்தியமும் புத்தியுமிருந்து நான் இந்த விஷயத்தில்—நம்முடைய குழந்தைகளின் இல்லற வாழ்க்கையில்—இன்பக் குறைவு ஏற்படும்படி விட்டுவிடுவே னென்று நினைத்தீர்கள் ? சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு கிராமபோன் கம்பெனியில், என்னுடைய பாட்டுகளைப் பதிவு (ரிக்கார்டு) செய்திருக்கிறார்களென்பது உங்களுக்கு தெரிந்திருக்குமென்றே நம்புகிறேன். நான் போனவாரம் சென்னைக்குச் சென்று

ஒரு ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கிறேன். எனக்காக அவர்கள் தனியாக சில ரிக்கார்டுகள் பிடிக்கவேண்டு மென்றும், அவற்றை வேறு யாருக்கும் விற்கக்கூடாதென்றும் அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டனர். உடனே பிளேட்டு ஒன்றுக்கு நூறு ரூபாய்கள் விதம் ஆயிரத்து முன்னூறு ரூபாய் செலவில் பதின்மூன்று பிளேட்டுகள் பிடித்துத் தயாராகிவிட்டன. இப்பொழுது அவைகளையும் இங்கேயே கொண்டுவந்து வைத்திருக்கிறேன். ரிக்கார்டுகளெல்லாம் நானே பாடியும், பேசியும் பிடிக்கப்பட்



டிருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையான விஷயம் அடங்கியிருக்கிறது. அவை கையிலிருக்கும் வரையில் பையனுக்குப் பெண் ஊமையாயிற்றே என்ற கவலையே ஏற்படாது. குடும்பத்தில் சம்சாரம் செய்யும் ஒரு பெண் தனது புருஷனிடம் கொஞ்சுவதுமுதல், உப்பில்லை, புளி யில்லை யென்று குறை சொல்லுவது, சண்டை பிடிப்பது வரை எல்லா விஷயங்களுக்கும் ரிக்கார்டுகள் தயாராயிருக்கின்றன. வேண்டுமென்றால் இப்பொழுதே கிராமபோன் வைக்கிறேன். கேட்டுப்பாருங்கள். அவ்வளவுதா னென்றில்லை. அவ்வப்பொழுது, பையனுக்குப் பெண் ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றிப் பேச வில்லையென்று மனக்குறை யேற்பட்டால், உடனே எனக்குத் தெரிவித்தால் போதும். அடுத்த நாளே புதிதாக அதற்காக ரிக்கார்டு பிடித்துக்

கொண்டுவந்து விடுகிறேன். பணமா பெரிசு? குழந்தைகளினுடைய சந்தோஷந்தானே முக்கியம் நமக்கு? அதற்காக நான் சரியான நஷ்டஈடு செய்துவிட்டேன். ஆகையால் நீங்கள் யோசனை செய்யாமல் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று அபிநயங்களுடன் பேசி முடித்தார்.

வெங்கட்டராமய்யருடைய மனைவி, ஆச்சரியத்தினால் முக வாய்க்கட்டையில் கையை வைத்துக்கொண்டு நின்றாள்.

அப்பா! அவளைத்தான் நான் கலியாணம் பண்ணிக்குவேன் என்றான் சிரஞ்சீவி ஆத்மநாதன்.

அதிகம் வளர்ப்பானேன்! நிகழும்............வருஷம் ஆனி மாதம் பன்னிரண்டாந்தேதி சோமவாரம், துதியை பரணி நக்ஷத்திரமும் அமிர்தயோகமும் கன்யா லக்கினமும் கூடிய சுப யோக சுப தினத்தில், காலை ஆறேகால் நாழிகைக்குமேல் பதினொன்றரை நாழிகைக்குள் சேர்ந்த சுபமுகூர்த்தத்தில், பிர்மஸ்ரீ உமாமகேஸ்வர பாகவதர், கிராமபோன் ரிக்கார்டுகள் சமேத சௌபாக்கியவதி வேம்புவல்லியை சிரஞ்சீவி ஆத்மநாதனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

தாலி கட்டினால் :: :: ::
:: :: கல்யாண மாச்சா?

(தி. சதாசிவம்)

(முன்கதை: லக்ஷ்மி தகப்பனை இழந்த 12 வயது ஏழைப் பெண். அவள் தாயார் செல்லம்மாள் அட்வகேட் அருணாசலமய்யர் வீட்டில் சமையல் வேலை செய்து லக்ஷ்மியை வளர்த்து வந்தாள். ஆனால் படிக்க வைக்க பணமில்லை. விவாகஞ்செய்து கொடுக்கவும் பணமில்லை. செல்லம்மாளின் சகோதரர் பெயர் இராமசாமி அய்யர். அவருக்கு சகோதரியை ஆதரிப்பதில் ஆசையுண்டு. ஆனால் அவர் மனைவி விசாலத்தம்மாளுக்கு பயந்து நடப்பவர். அவர்கள் குமாரன் பெயர் கிட்டு. அவன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் மாகாணத்திலேயே முதன்மையாக தேறியபடியால், அவனுக்கு பெண் கொடுப்பதாக பலர் முன் வந்திருக்கிறார்கள். லக்ஷ்மியை கிட்டுவுக்கு விவாகஞ் செய்யலாம் என்ற நினைப்பே அவர்களுக்கு கனவிலும் தோன்றவில்லை. கிட்டு பரீட்சையில் தேறியதைக் கேட்டவுடன் லக்ஷ்மி கிட்டுவின் கையைப் பிடித்து கண்களில் ஒத்திக் கொண்டாள். தனக்குப் படிப்பு சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று லக்ஷ்மி கிட்டுவை கேட்க, கிட்டு சந்தோஷமாக ஒப்புக்கொண்டு சொல்லிக்கொடுத்து வருகிறான். லக்ஷ்மிக்கு விவாகமாகவில்லையே யென்று செல்லம்மாள் கவலைகொள்ளுகிறாள். இனி கதையை மேலே வாசிக்கவும்.)

அத்தியாயம் 2.

செல்லம்மாளின் கவலை நாளுக்குநாள் அதிகரித்தது. மிகவும் ஏக்கமுற்றாள். யாரிடம் கூறுவாள்? பெரிய தெரு பிள்ளையாரிடமும், ஒவ்வொரு சமயம் தன் மகளிடமுந்தான்.

“அம்மா லக்ஷ்மி! இப்படி அனாதையாக விட்டு விட்டுப் போய்விட்டாளேடி! உனக்கொரு தாலிகட்டிப் பார்த்துட்டாவது உங்கப்பா போயிருக்கலாகாதா? ‘லக்ஷ்மி! லக்ஷ்மி,’ என்று சதாகாலம் உன்னை மடியில் வைத்து கொஞ்சிண்டிருப்பாளே! நமக்கு யாரடி! இருக்கா! என் கண்ணே!

நீ பிறந்த மேனிக்கு இருக்காயே! எதோ 'கெமிகல் தங்கம்,' 'கெமிகல் தங்கம்' னு எல்லாரும் சொல்ரா. தங்கத்தைப் போலவே இருக்காம். இந்தக் காலத்திலே ரொம்ப பெரிய மனுஷாள்கூட அதைத்தான் வாங்கராளாம்! பவுன் விலே ஏறியிருக்கோன்னோ? இருக்கிற தங்கத்தை வித்தா நறைய பணம் கிடைக்கிரது. கெமிகல் தங்கத்துக்கு பணமே ஆகாது. ஒரு ஜோடி வளே ரூ. நாலாம். அதற்குமேல் வழியில்லையே நமச்கு! உனக்குப் புதிசாக ஒரு சீட்டிப் பாவாடைகூட வாங்கிக் கட்டி என் கண்ணுல் பார்க்கல்லயே! உன்னே எப்படி தாலி கட்டி கொடுக்கப்போரேன்? உனக்கு வயசு 11, 11 என்று நான் என்ன சொன்னுலும் ஊர் வாயை மூட முடியாதம்மா?" என்பதாக ஒருநாள் செல்லம்மாள் தன் மகளிடம் கூறிக் கத்தினுள்.

லக்ஷ்மியும் தன் கதியை எண்ணிக் கலங்கினுள். கண்ணில் நீர் ததும் பிற்று. சட்டெனக் கிட்டுவின் நினைவு வந்தது. தைரியமடைந்தாள்: "அம்மா! நீயும் நானும் கவலைப்பட்டு முடியுமோ? பகவான் இருக்கிருர். கைவிட மாட்டார்," என அன்னையைத் தேற்றினுள்.

அருணுசலமய்யர் வீட்டில் அவாது மனைவி, செல்லம்மாளிடம் அடிக் கடி சொலவதுண்டு. "ஏண்டீ செல்லம்! உன் பெண்ணுக்கு வயசாகவில் லேயா? இப்படி ஆத்தோடே வச்சிண்டிருக்கலாமோ? எங்கேயாவது பார்த்துத் தள்ரதானே. கண்ணுக்கோ நன்னுரிக்கா, காரியமுஞ் செய்யரா. எவனுக்காவது இளேயாளாகத்தான் கொடுக்கணும். இந்தக் காலத்திலே பரிசாரகன்கூட பரிசம் கேக்கரான்," என்றிவ்வாரெல்லாம்.

பெரிய தெரு பிள்ளேயார் கோவிலுக்குப் போனுலோ, நூறு ஸ்திரீ கள், முக்கியமாக விதவைகள், செல்லம்மாளேப் பிடுங்கித் தின்ன ஆரம் பித்து விடுவார்கள்.

சகோதரன் வீட்டிற்குப் போனுலோ அங்கு விசாலத்தம்மாள்.

அடுத்த வீட்டிலோ ரங்கம்.

எதிர் வீட்டிலோ ராதை.

தன் வீட்டிலோ இரண்டு ராயர் பாட்டி, நாலு தெலுங்கு பாட்டி, ஒரு அய்யங்கார் பாட்டி, வயசான நாட்டு வைத்தியரின் மனைவி ஒருவள். இந் தம்மாளுக்கு காசநோய்; சதா 'கர், புர்' என்று இழுத்தவண்ணம் இருக்கும். 'வயசான பொண்ணெ இப்படி ஆத்திலே வச்சிண்டிருக்கலாமோடீ?' அப்போது மட்டும் இழுப்பு நிற்கும்.

தரித்திரத்தின் கொடுமையா வலிது?

ஊராரின் வாய்க்கொடுமையா வலிது?

தன் எஜமானியின் ஏளனக் கொடுமையா வலிது?

தன் உடன்பிறந்தான் மனைவி இடித்துரைக்கும் கொடுமையா வலிது?

தன் அருமைப் புதல்விமேல் தான் வைத்திருக்கும் 'பயனற்ற' அள விலா அன்பின் கொடுமையா வலிது?

செல்லம்மாள் துயரக்கடலில் ஆழ்ந்தாள்.

* * *

வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு தந்தையு மகனுமாகப் பிள்ளையார் கோவிலிலிருந்து வீட்டிற்கு வந்தார்கள். இருவருக்கும் இலைபோட்டு விசாலத்தம்மாள் பரிமாறினுள்.

ரஸத்திற்கு அன்னங்கொண்டு வருமுன் விசாலத்தம்மாள் சற்று தொண்டையைக் கனைத்துக்கொண்டு சொன்னுள். "கிட்டு! உனக்கோ வயது பதினெட்டு. இந்த வருஷம் எப்—ஏ க்கு பணம் கட்டணும். நீ இப்படி தினம் ராத்திரி உங்க அத்தை வீட்டில் லக்ஷ்மிக்கு பாடம் சொல்லிக் கொடுக்கப்போரது எனக்குப் பிடிக்கவே யில்லை. அந்தப் பெண்ணுக்கோ வயசாரது. என்ன நம்ம பந்து ஆனுலும் காலுபேர் என்ன நினைப்பா? 'சமயல்காரி பெண்; 14 பிராயம்; அவளோடு தினம் இந்த பிள்ளை பேசிண்டும் படிச்சிண்டும் இருக்கான். தாயார் தகப்பனுருந்தான் இதை எப்படி பார்த்திண்டிருக்சாளோ?' என்று ஊரெல்லாம் பேச்சு. உனக்கோ பெரிய பெரிய இடத்திலேருந்தெல்லாம்................" கிட்டுவிற்கு தாங்க முடியவில்லை.

இராமசாமி அய்யருக்குந்தானுகட்டும்—ரத்தம் பெரிதல்லவா—'சமயல்காரி பெண்' என்றது 'சுரீர்' எனப் பாய்ந்தது.

பாதி சாப்பிட்டுக்கொண்டிருந்த கிட்டு சட்டென எழுந்தான் கண்களில் நீர் ததும்பிற்று. நெஞ்சு பட பட வென அடித்தது. உள்ளத்தில் கோபமும் துயரும் ஒருங்கே எழுந்தன.

இராமசாமி அய்யர்—அதுவே அவர் குடும்ப வாழ்க்கையில் முதல் சம்பவம்—தன் எச்சில் இலையை அப்படியே சுருட்டி மனைவியின் முகத்தில் வீசி எறிந்து "சீ! நாயே, நாயே! உன் நாக்கை அறு!" என்று எழுந்தார்.

விசாலத்தம்மாள் கலங்கிவிட்டாள்.

புருஷனின் கோபத்திற் கஞ்சினவளல்ல.

புத்திரனின் முகக்குறிமுன் பீதிகொண்டாள்.

"என் கண்ணே! கிட்டு! சாயங்காலம் பிள்ளையார் கோவிலில் அடுத்தாத்து சுப்புலக்ஷிமியும், வேம்புவும், இன்னம் பத்து கம்மனுட்டிகளும் சொன்னதைக் கேட்டு மனசில் தாங்க முடியாமல் ஏதோ சொன்னேன். என் கண்மணீ! நீ எங்கிட்ட சோபிக்கலாமோ? என்னப்பா! நீதானே இந்த வீட்டிலே விளக்கு வைக்கணும்! நீதானே என் வயத்திலே பாலை வார்க்கணும்!..........." என்பதாகவெல்லாம் கதறிப் பிள்ளையைக் கட்டித் தழுவினுள்.

அன்னையின் அன்பிற்கு முன் எது நிற்கும்? கிட்டுவின் கோபம் பறந்தோடிற்று. அவன் மனம் இளகிற்று. "அம்மா! அது போகட்டும். இனி இப்படியெல்லாம் உளருதே. ஊரார் பேச்சைக் காதில் வாங்காதே," எனக் கூறி "சாதம் போட்டு ரஸம் போடு" என்று உட்கார்ந்தான் பழய இலையின்கீழ். தந்தையையும் உட்காரச் சொன்னுன்.

இராமசாமி அய்யருக்கு அவர் மனைவி புதிய நுனி இலை போட்டு ஆரம்பத்திலிருந்தே பரிமாரினுள்.

கிட்டு தன் தந்தையிடம், "அப்பா! நம்ம தேசத்தில் படிப்பு மிகவும் குறைவு. 33 கோடி ஜனங்களில் 31 கோடிக்கு மேல் எழுத்து வாசனையே கிடையாது! தேசத்தில் கல்வி பரவினுல் செல்வம் பரவும். தரித்திரம் தொலையும். ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களுக்கும் படிப்பு வேண்டும். ஏன், பெண்களுக்குத்தான அதிக அவசியம். ஒரு வீட்டில் தாயார் படித்தவளாய் இருந்தால் அந்த வீடே ஒரு குருகுலமாக விளங்கும்! ஆஹா! நம்ம பாரத தேசத்திலே, பழைய காலத்திலே, என்ன கல்வி! என்ன செல்வம்! என்ன நாகரிகம்! இன்ஞே? நினைக்கவு முடியவில்லை! அப்பா! (வாய் நிறைய குழம்புஞ சோற்றுடன் இராமசாமி அய்யர் கிட்டுவைப் பார்த்தார்) தேசத்தில் கல்வி பரவவேண்டும். படித்த ஒவ்வொருவனும் படிக்காத ஒருவனுக்காவது கல்வி புகட்டவேண்டும். இதுவே கற்றவரின் கடமை. நான் சிறிதேனும் எனது கடமையைச் செய்கிறேன். எனக்கு ஒழிந்த ஒரு மணி நேரத்தை நான் லக்ஷ்மியின் படிப்பிற்காக செலவழிக்கின்றேன். லக்ஷ்மியும் எனது அத்தை மகள். சொல்லிக்கொடுக்கு முன் கிரகிக்கும் பெண். நல்ல குணம். நல்ல நடத்தை. மகா புத்திசாலி" என, ஒரு சிறிய பிரசங்கம் பொழிந்தான். அவனுக்கே வியப்பாய் விட்டது. என்னவோ 'அப்பா' என்று ஆரம்பித்தான், 'லக்ஷ்மி மகா புத்திசாலி' என்று முடித்தான்.

விசாலத்தம்மாளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பூகோள சாஸ்திரம் படிக்காமலே பூமி சுற்றுவதை அப்போது அவள் கண்டுகொண்டாள். பிள்ளையின் புத்தி கெடாமல், அவனுக்கு நல்ல இடத்தில் ஒரு கலியாணமூமானுல், பிள்ளையாருக்கு 108 தேங்காய் உடைப்பதாகவும், ஆஞ்சநேயருக்கு வடை மாலை சாத்துவதாகவும் வேண்டிக்கொண்டாள்.

இராமசாமி அய்யரும் கிட்டுவின் பிரசங்கத்தை அவன் எதிர்பார்த்த அளவிற்கு அநுபவிக்கவில்லை. மொத்தத்தில் பையன் சொன்னதில் ஒன்றுந் தப்பில்லை என்று எண்ணிக்கொண்டார். "இதுக்கென்ன தெரியும் கிட்டு! படிப்பா மண்ணுங்கட்டியா? ஏதோ அவ பூர்வ ஜன்ம பாக்யம் என் பூஜாபலன், நீ அவ வயத்திலே வந்து பிறந்தே- டீ! குழந்தைக்கு சாதம் போட்டு பால் ஊத்து" என்றார்.

கிட்டு சாப்பிட்டுவிட்டு வழக்கம்போல அத்தை வீட்டிற்குப் போனான். அன்றிலிருந்து லக்ஷ்மிக்கு அதிக ஊக்கத்துடன் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினுன். அநேக மாத சஞ்சிகைகளும், கதைப் புத்தகங்களும் கொணர்ந்து கொடுத்தான். 'காந்தி' மலரைத் தவருது வாங்கி வந்தான்.

லக்ஷ்மி மிக்க ஊக்கத்துடன் வாசித்து வந்தாள். தமிழ், கணக்கு, சரித்திரம், பூகோளம், ஆங்கிலம் கற்று வந்தாள். லக்ஷ்மிக்கு புத்தகங்களை விட கிட்டுவின் சம்பாஷணைகளே உண்மையான கல்வி புகட்டுவது.

* * *

கிட்டு எப். ஏ. பரீக்ஷையிலும் மாகாணத்திற்கே முதல் பையனுகத் தேறினுன். அவன் தாய் தந்தையரின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

'கிட்டு ஹைகோர்ட் ஜட்ஜ்' பதவியிலிருப்பதாக, விசாலத்தம்மாள் அன்றிரவு கனவு கண்டாள்.

'மைசூர் திவான்' பதவியை ஒப்புக்கொண்டதாக இராமசாமி அய்யர் கனவு கண்டார்.

கிட்டுவும் ஒரு கனவு கண்டான்! புதுப்பாளையம் காந்தி ஆசிரமத்தில் 36" அகலத்தில் ஒரு ஜமக்காளம் நெய்வதாக!

லக்ஷிமி அன்று உறங்கவே இல்லை. அவள் இன்பக்கடலில் ஆழ்ந்திருந்தாள்; இன்பக் கனவுகளை கண் கொட்டாமலே கண்டுகொண்டிருந்தாள்.

கிட்டுவின் தாய் தந்தையர் எதிர்பார்த்தபடியே அவனை மருமகனாக அடையப் பல இடங்களிலிருந்தும் பெரும் பணக்காரர்களும், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களும் வந்து விழுந்தனர். பெரும் பெரும் தொகைப் பரிசப்பணமாக கொடுப்பதாக வாக்களித்தனர்.

"கோயமுத்தூர் பெரிய இஞ்சினியர் பிரணதார்த்திஹர அய்யரின் சம்பந்தந்தான் வேண்டும்" என்று விசாலத்தம்மாளும் இராமசாமி அய்யரும் நிச்சயித்தார்கள்.

கிட்டு 'இஞ்சினீரிங்' படிப்பிற்காக காசி 'ஹிந்து சர்வகலாசாலை'க்குப் போவதென தீர்மானித்திருந்தான். அவன் தாய் தந்தையரும் ஒப்புக்கொண்டனர். ஆனால் அதற்கோ சுமார் ரூ. 4000 வரை இழுக்கும். ஐந்து வருஷப் படிபபு.

ஸ்ரீமான் பிரணதார்த்திஹரய்யர் கிட்டுவின் காசிச் செலவையும் தாம் ஒப்புக்கொள்வதுடன், அன்றுவரை அவனது படிப்பிற்காக ஆயுள்ள செலவையும் கொடுத்துவிடுவதாகவும், மேற்கொண்டு ரொக்கமாக ரூ. 5000 கையில் தருவதுடன், பிள்ளைக்குக் காதில் ரூ. 1000-த்தில் ஒரு ஜோடி வைரக் கடுக்கன், வலது கை விரலுக்கு ரூ. 600-ல் ஆறு கல்லில் வைர மோதிரமொன்று, ஒரு விரலில் பச்சை, கைக்கு 'பி. ஆர் அன்ட் ஸன்ஸி' லிருந்து ஒரு தங்கக் கடியாரம் ரூ. 350-ல். தங்கக் குத்துவிளக்கு, தங்கத் தாளம், தங்க பஞ்சபாத்திர உத்தரணீ, வெள்ளி அண்டா, வெள்ளிக் குடம், வெள்ளி பக்கட், வெள்ளி பூச்சட்டி,............இத்யாதி, இத்யாதி, ஆஹா! விசாலத்தம்மாளின் கால் தரையில் இல்லை; அவள் தலை கழுத்தில் இல்லை. இராமசாமி அய்யர்—என்ன இருந்தாலும் ஆண்பிள்ளை யல்லவா—தன் மகிழ்ச்சியைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டார்.

போட்டானையா கிட்டு கல்லைத் தூக்கி தலையிலே! "என் படிப்பு முடிந்து நானாக நாலுபணம் சம்பாதிக்கிற வரையில் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்" என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான். தாய் தந்தையர் என்ன சொல்லியும் அவன் பிடித்த பிடிவாதத்தை விடவில்லை.

"கண்ணே கிட்டு! பிரணதார்த்திஹர அய்யருக்கு ஒரே பெண். அவர் சொத்து அத்தனையும், வீடுவாசல், நகை நாணயம்,—வைரத்தைக் கொட்டி அளக்கலாமாம்—சகலமும் உன்னைத்தான் சேரும். அவருக்கோ வயசாரது. இனிமேல் பிள்ளை பிறக்காது. அந்தப் பெண்ணோ தங்கப் பொம்மையாம்! குரல் குயிலாம்! பிடில் வாசிக்கிறதாம்! இங்கிலிஷெல்லாம் பேசுரதாம்! என்னப்பா! பிடிவாதம் பண்ணாதே! அப்பா, அம்மா வார்த்தையை தட்டாதே கிட்டு. வலுவிலே வர லக்ஷ்மியை வேண்டாமெனத் தள்ளாதே! 'லக்ஷ்மியை வேண்டாமென யார் தள்ளியது' என்று கிட்டு மனசில் எண்

ணிக்கொண்டான்) நான் சொல்ரதைக் காதில் வாங்கு............'' என்றிவ்வாறு பாடினுள் விசாலத்தம்மாள். பிறகு இராமசாமி அய்யர் ஒரு ஆவர்த்தனை.

பலிக்கவில்லை.

* * *

கிட்டுவிற்கு யாரோ மருந்து வைத்து விட்டதாக விசாலத்தம்மாள் எண்ணினுள். அவளது கட்டளையைத் தாங்கி அடுத்த வீதியில் செல்லம்மாள் வீட்டிலிருந்த நாட்டு வைத்திய ஜோஷியரை, இராமசாமி அய்யர் அழைத்து வந்தார்.

ஜோஷியரைக் கண்டவுடன் விசாலத்தம்மாளின் பரபரப்பு அதிகமாயிற்று. கிட்டுவின் விஷயங்களைச் சொல்லி 'என் குழந்தைக்கு ஒன்றும் கெடுதல் இல்லையே?' என்று கேட்டாள்.

கிட்டு தினம் வந்து லக்ஷ்மிக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது, அவர்களிருவரும் ஒருமணி நேரம் சிரித்து விளையாடுவது, படித்துப் பேசுவது, கிட்டுவிற்கு வந்த பெரிய வரன்கள், அவன் விவாகம் வேண்டாம் என்றது, சகலமும் நம்ம ஜோஷியருக்குத் தெரியும். இன்னம் செல்லம்மாளிடம், விசாலத்தம்மாளுக்கு ஒரு வெறுப்பு உண்டு என்பதையும் ஊகித்திருந்தார்.



ஜோஸ்யர் கிழக்கு முகமாக உட்கார்ந்தார். கண்ணை மூடினுர். கண விழிகளை பாதிக்குமேல் மறையும்படித் தூக்கினுர். மறுபடியும் கண்ணை

மூடினார். பேசவில்லை. அந்த ஐந்து நிமிஷமும் விசாலத்தம்மாளுக்கு ஐந்து யுகமாக இருந்தது.

ஜோஸ்யர் கண்ணைத் திறவாமலே, "ஒரு புஷ்பத்தின் பேர்" என்றார்.

"ரோஜாப்பூ" என்றான்.

"ஒரு காயின் பேர்."

"வாழைக்காய்."

"ஒரு மரத்தின் பேர்"

"ஊங், மாமா, ஆலமரம்."

"ஒரு பக்ஷியின் பேர்"

அப்போது 'சிவ்'வென ஒரு குருவி பறந்து வந்து ஜோஸியரின் முன்னிருந்த ஒரு அரிசிமணியைக் கொத்திச் சென்றது.

"குருவி" என்றாள் விசாலத்தம்மாள்.

"ஒரு மிருகத்தின் பேர்"

பக்கத்திலிருந்த தனது கணவனைப் பார்த்தாள். பிறகு "பசுமாடு" என்றாள்.

மறுபடியும் 10 நிமிஷத்திற்கு நிசப்தம்.

ஜோஸியர் தனது சிவப்பு பட்டுப் பையைத் திறந்தார். ஒரு கறுப்புக் கண்ணாடியை எடுத்தார். அதை இரண்டு நிமிஷங்கள் உற்றுப் பார்த்தார். பேசவில்லை. அவரது உதடுமட்டும் அசங்கிற்று. விசாலத்தம்மாளின் உயிர் அசங்கிற்று.

"ஒரு எண்," என்றார்.

"பதினாறு" என்றாள்.

கண்ணாடியைப் பையில் வைத்தார். ஒரு உத்தரணி ஜலத்தில் தனது கண்களைத் துடைத்துக்கொண்டு "நாராயணா" என்றார்.

தூக்கி வாரிப்போட்டது, விசாலத்தம்மாளை அந்த பகவன் நாமம்.

இராமசாமி அய்யரின் கண்கள் இருண்டன.

"என் குழந்தைக்கு ஒன்றும் கெடுதல் இல்லையே?" என்று கவலையுடன் கேட்டாள்.

"ஒன்றும் பயப்பட வேண்டாமம்மா- இந்தமாதிரி கேஸ் நான் எத்தனையோ பார்த்திருக்கிறேன்" என்றார் ஜோஸியர்.

"உடனே சொல்லுங்களேன்" என்றார் கிட்டுவின் தாயார்.

"அம்மா ! உங்கள் பை...ய...னு...க்கு..."

"ஜோஸியரே ! தெய்வமே! சொல்லுமே! சீக்கிரமே!"

"யாரோ விரோதி..."

"ஊங்"

"மருந்து வைத்திருப்பதாகத் தெரிகிறது."

"நான் நினைச்சதையே சொன்னேளே! அது எந்த மகாபாவி?" என்ருள்.

"அம்மா! நீங்கள் புஷ்பத்தின் பேரைச் சொன்னபோது மருந்தின் நாற்றம் என் மூக்கில் தட்டிற்று..."

"ஊங்"

"காயின் பேரிலிருந்து 'பந்து' என்று அறிந்துகொண்டேன்."

"ஊங்" (உறத்து)

"மரத்திலிருந்து 'நெருக்கம்' என்று தெரிந்தது."

"ஊங், ஊங்" (பரபரப்புடன்)

"பக்ஷி 'சமீபத்'தைக் குறித்தது."

"ஊங்—ஊங்—ஊங்"

"பசுமா●"

"சொல்லுமே"

"பெண்பாலைக் குறித்தது."

"நான் நினைச்சுதே தான்"

"பொறுங்கள். இவையாவும் எனது இந்த ஞானக்கண்ணில்—(கறுப்புக் கண்ணுடிப் பையைத் தொட்டுக்காட்டி)—பிரதிபலித்தன. 'பதினுறு' இவைகளை ஊர்ஜிதப்படுத்திற்று...."

தாங்கவில்லை விசாலத்தம்மாளுக்கு. "நேக்கு அப்பவே தெரியுமே. அந்த நாசமாப்போரவள்! அவள் குஞ்சு குழந்தைகள் மண்ணுப்போக! அவள் என் குழந்தையைக் கொல்லுவாள் என்று நான் எண்ணினேனே.—(கணவன் மூகத்தில் கையால் இடித்து)—'சமயல்காரி' என்றபோது அப்பாவுக்கும் பிள்ளைக்கும் ரோஸம் பொத்திண்டதே! பார்த்தேளா இப்போ? அந்தப் பழியாப் போரவள் பொண்ணுக்கும் படிப்பாம்! இவன் சொல்லி வைக்காளும்! நான் சொன்னபோது லெச்சர் அடிச்சான்! ஐடோ! அன்னிக்கே இந்த மஹாநுபாவரை—(ஜோஸ்யரை சுட்டிக் காட்டி)—கூப்பிட்டுக் கேட்டிருக்கலாசாதா?" (ஜோஸியரைப் பார்த்து) "ஸ்வாமி! இதுக்கு என்ன பரிகாரம்?" என்று கேட்டாள்.

"ஒன்றும் செலவில்லை. சனிக்கிழமை சனிக்கிழமை விஷ்ணுகோயிலுக்கு நல்ல எண்ணெய் தீபம், சனீச்வர பகவானுக்கு ஒரு அர்ச்சனை, அத்தனைதான். எல்லாத்திற்கும் மைலாப்பூர் கிருஷ்ண தீக்ஷதரிடம் ஒரு ரக்ஷையும் வாங்கி (ஜோஸியர் தீக்ஷதரின் ஏஜண்டுகளில் ஒருவர். நூற்றுக்கு

இருபத்தைந்து கமிஷன்) பிள்ளையாண்டானுக்கு கட்டிவிட்டால் ஒரு கவலையும் வேண்டாம். ஐந்து ரூபாய்தான் ஆகும்'' என்றார்.

விசாலத்தம்மாள் ஜோஸியரை நமஸ்கரித்தாள். அதைப் பார்த்து இராமசாமி அய்யரும் அப்படியே செய்தார்.

ஜோஸியர் வெற்றிலைப்பாக்கு பழம் தேங்காயும் ஒரு முழு ரூபாயும் வாங்கி—ரூபாய் நல்லதா என்று பார்க்கவேண்டித் தவறிப் போடுவதுபோலத் தரையில்போட்டு இடுப்பில் சொருகினார்—விடைபெற்றுச் சென்றார். போகும்போதே அன்றிரவு சமையல் 'தேங்காய்த் துவயலும் அப்பளாமும்' எனத் தீர்மானித்துக்கொண்டார். (தொடரும்)

உங்களுக்குத் தெரியுமா?

ராஜ்யமில்லாத ராஜாக்கள்.

இச் சமயம் ராஜ்யத்தை இழந்து வெறும் ஆசாமிகளாக வசிக்கும் ராஜாக்கள் யார் என்பது தெரியுமா? ஜெர்மன் கெய்சர், கிரிஸ் ஜார்ஜ், பல்கேரியா பெர்டிநாந்து, மெக்கா ஹுசேன், எகிப்து அப்பாஸ் ஹெல்மி, ஆப்கன் அமானுல்லா, ஸ்பெயின் அல்பான்சோ, ஹங்கேரி சார்லஸ், துருக்கி சுல்தான்.

நேப்பாளம்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்படாமல் சுயேச்சையாக ஒரு நாடு இருக்கிறது தெரியுமா? அது இமயமலையில் இருக்கிறது. அதன் பெயர் நேப்பாளம். அங்குள்ள ஜனங்கள் இந்துக்கள். பட்டாளங்களில் கூர்க்க சிப்பாய்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? வீரம் பொருந்திய அந்த கூர்க்கர்தான் நேப்பாள நாட்டின் ஜனங்கள். இந்த நாட்டை பிரிட்டிஷாரால் அந்தக் காலத்தில் ஜெயிக்க முடியவில்லை. ஆகவே இன்றும் அது சுயேச்சை பெற்ற நாடாய் விளங்குகிறது. இந்து மன்னர்களில் பூர்ண சுயேச்சையுடையவர் நேப்பாள மன்னர் ஒருவரே. இந்த நாட்டின் தலை நகருக்கு பெயர் காட்மண்டு. தலை நகரோடு டெலிபோனில் பேசலாம். ஆனால் ரயிலில் போக முடியாது. ரயில் பாதை கிடையாது. அந்த சர்க்கார் அநுமதியில்லாமல் யாரும் அங்கே போக முடியாது. இந்த நாட்டில் ஒரு விசேஷம். சிம்மாசன உரிமை எப்படி ராஜ பரம்பரையைச் சேர்ந்ததோ அம்மாதிரியே பிரதம மந்திரி பதவியும் பரம்பரையாக ஒரே குடும்பத்திற்கே உரிமையுள்ளது. பிரதம மந்திரிக்கே சகல அதிகாரங்களும் உண்டு. இந்த நாடு 56-ஆயிரம் சதுரமைல் உள்ளது. ஜனத்தொகை 56-லட்சம்.

அதிசயமான இயந்திரம்

எத்தனையோ அதிசயமான இயந்திரங்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை கண்டு பிடித்தவற்றையும், இனி கண்டு பிடிக்கப் போகிறவைகளையும்விட அதிசயமான இயந்திரம் ஒன்றிருக்கிறது. அதற்கு நிகராக மனிதன் கண்டு பிடிக்க முடியாது. அது மகா அதிசயமான இயந்திரம். மிக நுட்பமான வேலைப்பாடுகள் உடையது. யாருக்கும் அந்த இயந்திரம் அடிமையாயிருக்கிறது. ஆனால் அதை பூர்ணமாய் உபயோகிக்கத் தெரிந்தவர்கள் மிகவும் சொற்பம்.

அதன் வல்லமையை அறிந்து உபயோகிப்பவர்களுக்கு அது கற்பக விருக்ஷமாயிருக்கிறது. அதை உபயோகிக்கத் தெரியாதவர்களுக்கு அது ஒரு பெரிய பாரமாய் விளங்குகிறது. அது எதுவென்று தெரியுமா? அந்த அதிசயமான இயந்திரத்தைப் பற்றி நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?

அதுவே மனித இயந்திரம்!

மனித இயந்திரம் அற்புதமானது. ஆனால் அதை அடக்கி ஆண்டவர்கள் மிகமிகக் குறைவு.

மகாத்மா காந்தி வெளியிலிருக்கும்போது எவ்வளவு வேலை செய்வார் என்பது உங்களுக்குத்தெரியுமா? என்ன நேரிட்டாலும் கொஞ்சமும் மாறுதலின்றி குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வேலையை அவர் செய்து வருவதை நீங்கள் அறிவீர்களா? ஒரு நாளைக்கு 2 மணிக்குமேல் தூங்காமல் இரவும் பகலும் எடிசன் ஆராய்ச்சிசெய்துவந்தாரே, அது அதிசயமல்லவா? போர்ட் பெரிய வர்த்தக மன்னராய் விளங்குகிறாரே, அதற்கு என்ன காரணம்? நெப்போலியன் கொஞ்சமும் சளைக்காமல் குதிரை சவாரி செய்து, உண்பதையும், உறங்குவதையுங்கூட அதிலேயே முடித்தாரே, அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

இவர்கள் எல்லாரும் மனிதர்கள்தான். இருந்தாலும் மற்றமனிதர்களைவிட சிறந்தவர்களாய் விளங்குகிறார்கள். இதற்கு என்ன காரணம்? மனித இயந்திரத்தின் சக்தியை இவர்கள் பூர்ணமாய் அறிந்தவர்கள். எம்மாதிரி அதை உபயோகிக்க முடியும் என்ற மர்மத்தை உணர்ந்தவர்கள். அதனால், மற்றவர்கள் ஆச்சரியப்படும்படியான காரியங்களை அவர்கள் செய்ய முடிந்தது.

இந்த மர்மத்தை நீங்கள் அறிந்து நடக்க ஆரம்பித்தால், புது மனிதர்களாவீர்கள். உங்களுக்கு புதிய சக்தி ஏற்படும். இந்த அதிசயமான "மனித இயந்திரத்தை" எப்படி அடக்கி ஆளுவது? அதை அறிய நீங்கள் விரும்பினால், ஒவ்வொரு "காந்தி" மலரிலும் இப்பக்கத்தில் வெளியாகும் விஷயத்தை படித்து வாசியுங்கள்.

:: மூட நம்பிக்கைக்கு

(கீ. பி. சே.)

எந்தத் தொழிலின் அபிவிருத்திக்கும் மூடநம்பிக்கையும் அறிவினமும் பெருந் தடைகளாக இருந்திருக்கின்றன. அவைகளிரண்டும் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டைகளாகும். அக்காரணத்தால் உலகத்தில் எத்தனையோ மரணங்கள் சம்பவித்திருக்கின்றன. மத அபிவிருத்தியிலும், ராஜீய முற்போக்கிலும், கவிதா அபிவிருத்தியிலும், சாஸ்திராபிவிருத்தியிலும் எண்ணிறந்த மரணங்கள் நேரிட்டிருக்கின்றன. எந்தவிதமான சாஸ்திரமும் சிறந்தோங்கி வளரவேண்டுமானால் சாந்தமும் அமைதியும் இன்றியமையாப் பொருள்களாம். வாழ்க்கைக்கும் அதிகாரத்திற்கும் பொது ஜனங்கள் உழைத்தும் பெருஞ் சச்சரவிட்டும் வருகையில் சாஸ்திரக்ஞர்கள் தங்களைச் சுற்றியுள்ள பிரபஞ்ச அதிசயங்களால் மனம் இழுக்கப்பட்டுத் தனியான மூலைகளில் அமர்ந்து தங்களுக்குத் தெரிந்த வழிகளிலெல்லாம் அவைகளைப் பரிசோதனை செய்து பார்க்க முயலுகின்றார்கள். சாதாரண மனிதன் அத்தகைய சாஸ்திரக்ஞர்களைக் காணின் பைத்தியக்காரர்களோ அல்லது அண்டப்புரட்டர்களோ என்று எண்ணிக்கொள்ளுவான்.

மதாபிவிருத்திக்காகப் பாடுபட்டு இரையானவர்களைக் காட்டிலும் அதிகமாக சாஸ்திரத்திற்காக உழைத்தவர்கள் இரையாகியிருக்கின்றார்கள். ஆதிகால சரித்திரத்தில அதற்குப் போதிய சான்றுகள் பல வரையப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் வயது முதிர்ந்த பெரியோர்கள்கூட தங்களுக்குச் சொல்லப்படுபவைகளையெல்லாம் சிறு குழந்தைகளைப்போல அப்படியே உண்மையென்று முழுமனதாக நம்பி வருவார்கள். விஷயங்களை அவர்கள் ஆய்ந்தோய்ந்து பார்ப்பதும் கிடையாது. அவைகளின் காரண காரியங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமே என்ற சிரத்தையும் அவர்களுக்கிருந்ததாகத் தெரியவில்லை. கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளச் சிறிதும் சிரமப்பட மாட்டார்கள். ஒரு விஷயம் அவர்கள் மனதில் பதிந்து விடுமேயானால் அது பசுமரத்தில் அறையப்பட்ட ஆணிபோலப் பதிந்துவிடும். அதை மாற்றவோ அல்லது ஒழிக்கவோ பிரயத்தனப்படுவது மிக்க அறிவீனமாகும். அவ்விதம் ஒருவன் செய்வானேயானால், அவனைப் பிரஜைகள் நிந்தித்தும், எளனம் செய்தும் பெரும்பாடு படுத்தி விடுவார்கள். இம்மாதிரியாகப் பழைய கொள்கையே குரங்கு பிடியாக எங்கு

பலியானவர்கள் ::

பரிணமித்து பிரஜ்யாதிகாரம் வகித்திருந்தது. அதை மறுக்க எவ்வளவோ பிரயத்தனங்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட போதிலும், அவைகள் யாவும் விழலுக்கிறைத்த நீராயின. அக்காலத்தில் அறிவு ஒரு சிலரிடத்திலமட்டுமே பாதுகாக்கப்பட்டு வந்தது. அது ஒரு சிலருக்கே வரப்பிரசாதமாயிருந்தது. அந்தச் சிறுபான்மையோரும் பரம ரகசியத்தில் மறைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பெற்றிருந்த அறிவு எப்போதும் ஜாலம் மந்திரம் இவைகளுடன் சம்பந்தப்பட்டதாகவே இருந்தது. அந்த அறிவும் அவர்களுக்காகக் கடவுளால் நேரில் அளிக்கப்பட்டதென்றும் கருதப்பட்டது. ஆகவே அறிஞர்களுக்கும் அறிவிலிகளுக்கும் இடையில் மலைக்கும் மடுவிற்குமுள்ள பெரிய பிளவு ஏற்பட்டிருந்தது. காலம் செலலச் செல்ல இப்பிளவு பொருமையையும் சந்தேகத்தையும் கிளப்பிவிட்டது. அறிவீனமுள்ள பொதுமக்கள், அறிஞர்கள் எனறு சொல்லப்படுவோர்கள் ஏதோ துர்தேவதைகளை வசியம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சந்தேகங்கொண்டு, அவர்கள் எல்லோரையும் தங்களால் இயன்ற வரையில் சிரச்சேதம் செய்து கொன்று போட்டார்கள். துர்தேவதையின் வசியம் இருக்கும் என்று கொஞ்சம் சந்தேகப்பட்டாலும் போதும்; மனிதர்கள் சித்திரவதை செய்து கொல்லப்படுவார்கள் என்றால், அக்காலத்தில் எவ்வளவு பிரபலமாக அறிவீனமும் மூட நம்பிக்கையும் பரவியிருந்தது என்பது ஒருவாறு யூகித்துணரற்பாலது.



பதின்மூன்றாம் நூற்றாண்டில் பேரறிவாளியும் தத்துவ சிகாமணியுமான ரோஜா பேகன் (Roger Bacon) என்பவா சிறையிடப்பட்டுச் சித்திரவதையும் செய்யப்பட்டார. அதற்குக் காரணம் அவா எல்லா விஷயங்களிலும் பெரிதும் ஞானம் பெற்றிருந்தமைதான் என்று கருதப்படுகிறது. ரோப

தேசத்தை யாண்ட சக்கரவர்த்திகளி லொருவர் செய்ததுதான் மிகவும் விந்தையானது. ஒரு சமயத்தில் ஒருவன் பளிங்கியினால் ஒரு கிண்ணியைச் செய்து அதை ஒரு பெரிய சபையின் முன்னே யாவரும் அறிய, தான் "அக் கிண்ணியைக் கீழே எறிந்தாலும் அது உடையாது. அத்தகைய அரிய சக்தியைப் பெற்றது" என்று சாதித்து அதன்படியே செய்தும் காட்டினான். அதைக்கண்ட அச் சக்கரவர்த்தி அவன் இப் பிரபஞ்சத்திலேயே இருக்கக்கூடாத அவ்வளவு பெரிய அறிவாளி என்றுரைத்து அவனுடைய சிரசை உடனே கொய்துவிட ஆக்ஞாபித்தான். அறிவிலும் ஆற்றலிலும் மிகுந்திருப்பதுகூட பேராபத்துபோலும், அக்காலத்தில்.


சர்வ சாதாரணமான ஒரு நாடோடி, இக்காலத்தில் பெற்றிருக்கும் சாமானிய ஞானத்தைக்கூட ஞானோதயம் ஆரம்பித்த அப் பழைய காலத்தவர்கள் சந்தேகத்துடனும் வெறுப்புடனும் இகழ்வார்கள். பொதுவாக, அறிவுக குரித்தானவர்கள் அக்காலத்தில் கோயில் சம்பந்தப் பட்டவர்கள்தாம். அவர்களே பிரஜைகளின் அச்சத்திற்கும் மரியாதைக்கும் அருகர்களாக விருந்தார்கள். ஆகவே, கோயில் குருக்கள்மார் கூறும் ஒவ்வொரு மொழியும் வேதவாக்கென்றும், கடவுள்மொழி யென்றும் பிரஜைகள் ஒருமுகமாக எண்ணிக் கொள்வாராயினர்.

கி. பி. 1543-ல் கோபர்னிகஸ் (Copernicus) ஒரு பெரிய கிரந்தத்தை வெளியிட்டார். அதில் கலகத்தையும் கலக்கத்தையும் உண்டாக்கும் விஷயங்கள் அடங்கியிருந்தன. அக்காலம்வரையில் பூமி உலகத்தின் நடுவில் இருந்ததாகவும் மற்ற கிரகங்கள் எல்லாம் அதைச் சுற்றிக்கொண்டு வந்ததாகவும் நம்பிக்கை வேரூன்றியிருந்தது. இந்த சித்தாந்தம் உலகத்தில் மனிதனுக்கு ஒரு தனியான பதவியைக் கொடுத்தது. கோயிலதிகாரிகள் இக் கொள்கைக்குளிதில் அங்கீகாரம்கொடுத்துவிட்டார்கள். அவர்கள் அங்கீகாரம் கொடுத்ததற்குப் போதுமான காரணங்களையும் எடுத்துக் கூறினார்கள். 'மனிதனது



வீழ்ச்சியும் மீட்சியும்' என்னும் பெரியதோர் நாடகம் நடிந்தலுக்கு பிரபஞ்சத்தின் மையமே ஏற்ற ஸ்தலம் என்று மத குருக்கள் அபிப்பிராயப்பட்டு அக்கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் கோபர்னிகஸ் பூமி பிரபஞ்சத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கவில்லையென்றும் மற்ற கிரகங்களைப்போலவே பூமியும் சூரியனைச்சுற்றி வருகின்றது என்றும் தமது கருத்தை வெளியிட்டார். இந்தப்புதிய கருத்து அம் மனிதனைக் கீழே தள்ளி விட்டது. பெரும் பதவியிலிருந்து கீழ் இறக்கியதே தவிர அவனை ஒழித்து விடவில்லை. மத குருக்களின் கடுங் கோபத்தினின்றும் கோபர்னிகஸ் இரண்டு வழிகளில் தப்பித்துக்கொண்டார். முதலாவதாக, அவரும் ஒரு மதகுரு; அதனால் போப் ஜகத்குருவால் நன்கு மதிக்கப்பட்டவர். இரண்டாவதாக, அவர் எழுதிவைத்த கிரந்தம் மிகப் பெரிதானபடியால் அதன் உட்கருத்தை உள்ளபடி அறிந்து தெரிந்துகொள்ள முடியாது. இத்தியாதி காரணங்களால் கோபர்னிகஸ் மரணத்தினின்றும் தப்பித்துக்கொண்டார். ஒரு கோயிலதிகாரி ஒரு மனிதனுக்கு எத்தகைய சித்திரவதைகளை அளிக்கலாமோ, அத்தனை அவஸ்தைகளையும் காலிலீயோவும் மற்றவர்களும் அடைந்தார்கள்.


காலிலீயோ தன்னுடைய நுட்பமான டெலஸ்கோப்பினால் கோபர்னிகஸ் அவர்களின் கொள்கையை ருசுப்படுத்தத் தலைப்பட்டார். ஜூபிடர் கிரகத்தைத் தமது டெலஸ்கோப்பினால் பார்த்தார். அதில் சூரிய மண்டல கதியின் பிம்பத்தைக் கண்ணுற்றார்.



பாடுவா புலவர்கள் யாவரையும் வரவழைத்து தன் டெலஸ்கோப்பின் மூலம் பார்க்கச் சொன்னார். ஒரு புலவராவது அவரது அழைப்பிற்கு இணங்கிச் செல்லவில்லை. அவர் தான் நம்பியதையே வற்புறுத்தினார். அதன் காரணமாக மதகுருக்கள் யாவரும் சினமூண்டு கோபாக்கினியை காலிலீயோ மீது வீசினர். மதகுரு சங்கம் அவரைத் தன் கொள்கையை விட்டுவிடும்படி கட்டளையிட்டது. காலிலீயோ அவர்களது கட்டளையைப் புறக்கணித்துத் தமது கொள்கையை நிலைநிறுத்தினர். உடனே அவர்கள் காலிலீயோவிற்கு ஆயுள் பரியந்தம் சிறைத்தண்டனை அளித்தார்

கள். காலிலியோ மதகுரு சங்கத்தை உதாஸீனம் செய்யப் பயந்தார். ஏனென்றால் கொஞ்ச நாளைக்கு முன்புதான் கயார்டானு பரூனே (Giordana Bruno) என்பவர் அதே குற்றத்திற்காக உயிரோடு தகிக்கப்பட ஆக்ஞாபிக்கப்பட்டு, எந்தெந்த விதங்களில் ரத்தம் வெளிப்படாமல கொல்ல முடியுமோ அந்த விதங்களிலெல்லாம் கொல்லும்படி கட்டளையிடப்பட்டார். இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு காலிலீயோ மதகுரு சபையில் "நான் தங்கள் கைக்குள் அடங்கினவன். தாங்கள் என்னென்ன வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவைகளையெல்லாம் அப்படியே சொல்கின்றேன்" என்று சரணாகதி யடைந்தார்.

காலிலீயோ ஓர் அருமையான தேர்ந்த அறிவாளி. பாரம்பரியமாக வழங்கப்பட்டு வந்ததை அப்படியே நம்பிவிடமாட்டார். அரிஸ்டாடில் (Aristotle) மேதாவி "ஒரு ராத்தல் குண்டும் பத்து ராத்தல் குண்டும் ஏககாலத்தில் உயரத்திலிருந்து வீசி பூமியை நோக்கி எறியப்படுமேயாகில், எந்த குண்டு மிகக் கனமானதோ அது பத்துமடங்கு காலம் சீக்கிரத்தில் பூமியை அடையும். லேசான குண்டு பூமியை அடைய பத்துமடங்கு காலம் அதிகரிக்கும்" என்று கற்றுக் கொடுத்திருந்தார். இதை காலிலீயோ ஒரு சிறிதும் நம்பவில்லை. அவர் சாய்வான கோபுரத் (Leaning Tower) தின்மீது ஏறிக்கொண்டு அங்கிருந்து பளுவான பொருளையும்லேசான பொருளையும்ஏககாலத்தில் கீழே எறிந்தார். என்னே ஆச்சரியம்! அவைகளிரண்டும் ஏககாலத்தில் பூமியை அடைந்தன. இந்தப் பரிசோதனையை ஆயிரக்கணக்கான மகாஜனங்கள் நேரில்—கண் பார்வையில்—வெற்றிபெற நடத்தியபோதிலும் அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. காலிலீயோ யாவராலும் இகழப்பட்டார்.



சார்லெஸ் டார்வின் மனிதன் உற்பத்தியைக் குறித்து வெளியிட்டதால் நாஸ்திகன் என்று திரஸ்கரிக்கப்பட்டார். குரங்கினின்றும் மனிதன் தோன்றினான் என்பது பலராலும் எதிர்க்கப்பட்டது.

நூதனமாகக் கண்டுபிடிப்பவர்களுக்கு எல்லா யுகங்களும் இருண்ட யுகங்களாகவே இருந்திருக்கின்றன. நூதன கைத் தறியைக் கண்டு பிடித்த வில்லியம் லீ என்பவர் தனது தறிக்கு ஆதரவளிக்கும்படி எலிஜபெத் ராணியாரிடம் விண்ணப்பம் செய்துகொண்டார். ராணியார் ஆதரவு அளிக்க மறுத்துவிட்டார். அவரது அபிப்பிராயம் அத்தறி ஏழைகட்குப் பெரிய சத்துருவாகும் என்பது. ஏழைப் பிரஜைகளின் வாயில் மண்ணைப் போடுவதற்குத் தன் மனம் இடங்கொடுக்கவில்லை என்றாள் அவ்வரசப் பெருமாட்டி. அவனது தறியை ஏழைத் தொழிலாளிகள் ஒரு பிசாசென்றே மதித்தார்கள். அந்த நூதன தறிக்கு ஆதரவு கொடுத்துவிட்டால் தாங்களெல்லோரும் கூண்டோடு மாளவேண்டியதைத் தவிர, வேறு வழி கிடையாதென்பதை விளக்கமாக உணர்ந்தார்கள். ஆகவே அவர்களனைவரும் தங்கள் வாழ்க்கையை அவலமாக்கும் புதிய தறியை கோபத்தோடு வீசி எறிந்து சுக்கல் சுக்கலாக உடைத்தார்கள்.

பாவோட்டும் தறியைக் கண்டு பிடித்த ஜான் கேய் (John Kay) என்பவரும் இம்மாதிரியே துன்பத்திற் குள்ளானார்.




தொழிலாளிகள் யாவரும் அவருக்கு எதிரிடையாகக் கிளம்பி அவர் தம்முடைய யந்திர சாலையை சாத்தி அடைக்கும்படி செய்துவிட்டார்கள். அதோடும் திருப்தி யடையாமல் அவ்வேழை மக்கள் அவருடைய வீட்டினுள்ளேயும் பலாத்காரமாய் புகுந்து வீட்டிலுள்ள சகலமான தட்டு முட்டு சாமான்களையும் சூறையாடிச் சென்றார்கள். பின்னும் அவரைத் தேடிப் பிடித்துக் கொல்லவும் முயன்றார்கள். ஆனால் தெய்வகதியாய் அவர் தப்பிச் சென்று விட்டார்.

இம்மாதிரியான சம்பவங்களை ஒன்றின்பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போகலாம். பழைய காலத்தில் சாஸ்திர அபிவிருத்திக்காக எத்தகைய இடையூறுகள் நேர்ந்திருக்கின்றன என்பது மேற்கூறியவற்றால் தெளிவாக விளங்கும். பழைய காலத்தைப் போல் இக்காலத்தில் புதிய விஷயங்களைக் கண்டு பிடித்து இரையானவர்கள் கிடையாது.

கள். காலிலீயோ மதகுரு சங்கத்தை உதாஸீனம் செய்யப் பயந்தார். ஏனென்றால் கொஞ்ச நாளைக்கு முன்புதான் கயார் டாணு பரூனே (Giordana Bruno) என்பவர் அதே குற்றத்திற்காக உயிரோடு தகிக்கப்பட ஆக்ஞாபிக்கப்பட்டு, எந்தெந்த விதங்களில் ரத்தம் வெளிப்படாமல கொல்ல முடியுமோ அந்த விதங்களிலெல்லாம் கொல்லும்படி கட்டளையிடப்பட்டார். இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு காலிலீயோ மதகுரு சபையில் "நான் தங்கள் கைக்குள் அடங்கினவன். தாங்கள் என்னென்ன வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவைகளையெல்லாம் அப்படியே சொல்கின்றேன்" என்று சரணாகதி யடைந்தார்.

காலிலீயோ ஓர் அருமையான தேர்ந்த அறிவாளி. பாரம்பரியமாக வழங்கப்பட்டு வந்ததை அப்படியே நம்பிவிடமாட்டார். அரிஸ்டாடில் (Aristotle) மேதாவி "ஒரு ராத்தல் குண்டும் பத்து ராத்தல் குண்டும் ஏககாலத்தில் உயரத்திலிருந்து வீசி பூமியை நோக்கி எறியப்படுமேயாகில், எந்த குண்டு மிகக் கனமானதோ அது பத்துமடங்கு காலம் சீக்கிரத்தில் பூமியை அடையும். லேசான குண்டு பூமியை அடைய பத்துமடங்கு காலம் அதிகரிக்கும்" என்று கற்றுக் கொடுத்திருந்தார். இதை காலிலீயோ ஒரு சிறிதும் நம்பவில்லை. அவர் சாய்வான கோபுரத் (Leaning Tower) தின்மீது ஏறிக்கொண்டு அங்கிருந்து பளுவான பொருளையும் லேசான பொருளையும் ஏககாலத்தில் கீழே எறிந்தார். என்னே ஆச்சரியம்! அவைகளிரண்டும் ஏககாலத்தில் பூமியை அடைந்தன. இந்தப் பரிசோதனையை ஆயிரக்கணக்கான மகாஜனங்கள் நேரில்—கண் பார்வையில்—வெற்றிபெற நடத்தியபோதிலும் அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. காலிலீயோ யாவராலும் இகழப்பட்டார்.



சார்லெஸ் டார்வின் மனிதன் உற்பத்தியைக் குறித்து வெளியிட்டதால் நாஸ்திகன் என்று திரஸ்கரிக்கப்பட்டார். குரங்கினின்றும் மனிதன் தோன்றினன் என்பது பலராலும் எதிர்க்கப்பட்டது.

நூதனமாகக் கண்டுபிடிப்பவர்களுக்கு எல்லா யுகங்களும் இருண்ட யுகங்களாகவே இருந்திருக்கின்றன. நூதன கைத் தறியைக் கண்டு பிடித்த வில்லியம் லீ என்பவர் தனது தறிக்கு ஆதரவளிக்கும்படி எலிஜபெத் ராணியாரிடம் விண்ணப்பம் செய்துகொண்டார். ராணியார் ஆதரவு அளிக்க மறுத்துவிட்டார். அவரது அபிப்பிராயம் அத்தறி ஏழைகட்குப் பெரிய சத்துருவாகும் என்பது. ஏழைப் பிரஜைகளின் வாயில் மண்ணைப் போடுவதற்குத் தன் மனம் இடங்கொடுக்கவில்லை என்றாள் அவ்வரசப் பெருமாட்டி. அவனது தறியை ஏழைத் தொழிலாளிகள் ஒரு பிசாசென்றே மதித்தார்கள். அந்த நூதன தறிக்கு ஆதரவு கொடுத்துவிட்டால் தாங்களெல்லோரும் கூண்டோடு மாளவேண்டியதைத் தவிர, வேறு வழி கிடையாதென்பதை விளக்கமாக உணர்ந்தார்கள். ஆகவே அவர்களனைவரும் தங்கள் வாழ்க்கையை அவலமாக்கும் புதிய தறியை கோபத்தோடு வீசி எறிந்து சுக்கல் சுக்கலாக உடைத்தார்கள்.

பாவோட்டும் தறியைக் கண்டு பிடித்த ஜான் கேய் (John Kay) என்பவரும் இம்மாதிரியே துன்பத்திற் குள்ளானார். தொழிலாளிகள் யாவரும் அவருக்கு எதிரிடையாகக் கிளம்பி அவர் தம்முடைய யந்திர சாலையை சாத்தி அடைக்கும்படி செய்து விட்டார்கள். அதோடும் திருப்தி யடையாமல் அவ் வேழை மக்கள் அவருடைய வீட்டினுள்ளேயும் பலாத்காரமாய் புகுந்து வீட்டிலுள்ள சகலமான தட்டு முட்டு சாமான்களையும் சூறையாடிச் சென்றார்கள். பின்னும் அவரைத் தேடிப் பிடித்துக் கொல்லவும் முயன்றார்கள். ஆனால் தெய்வகதியாய் அவர் தப்பிச் சென்று விட்டார்.



இம்மாதிரியான சம்பவங்களை ஒன்றின்பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போகலாம். பழைய காலத்தில் சாஸ்திராபி விருத்திக்காக எத்தகைய இடையூறுகள் நேர்ந்திருக்கின்றன என்பது மேற்கூறியவற்றால் தெளிவாக விளங்கும். பழைய காலத்தைப் போல் இக்காலத்தில் புதிய விஷயங்களைக் கண்டு பிடித்து இரையானவர்கள் கிடையாது.

:: சிறுவர் பக்கம் ::

யானைத் தாண்டவராய சாஸ்திரி

(பண்டித ஆர். அத்தியப்பன்)

தாண்டவராய சாஸ்திரி என்றால், சாஸ்திரங்களை அப்படியே கரைத்து குடித்துவிட்டு பெரு வயிற்றோடு இருக்கும் சாஸ்திரிகளுக்கும், சோறில்லாமல் வயிறு ஒட்டி வாடித் திரியும் சிறுவர்களுக்கும் நன்கு தெரியும்.

தாண்டவராயர், யானைத் தாண்டவராயர் ஆனதும், ஆண்டவரம் யானைத் தாண்டவபுர மானதும் வெகு வேடிக்கையே!

தாண்டவராயர் சிறுவயதாக இருக்கும் பொழுதே சாஸ்திரம் படிப்பதில் நிரம்ப பிரியர். சாஸ்திரங்களை அப்படியே கரைத்து 'குடமுனிபோல்' குடித்திருந்தார். அதனால் சிறுவயதிலேயே அவருக்கு வயிறு, சிறிது பெரிதாகவே விருக்கும். எந்த சாஸ்திரிகளுக்காவது சாஸ்திர ஸ்லோகம் ஞாபகமில்லாவிட்டால், நமது சாஸ்திரி யாரிடந்தான் வந்து கேட்கவேண்டும். நமது சாஸ்திரியாரும், பெருமித மடைந்து அடிவயிற்றைத் தடவிக்கொண்டே கட, கட வென்று ஸ்லோகத்தைக் கூறுவார். இப்பொழுது கிராமபோன் எப்படி பாடுமோ அப்படியே சாஸ்திரியாரும் ஒரு கிராமபோனாக அவ்வூரில் விளங்கினர்.

சரி, சாஸ்திரியாருக்கு வயது 26 ஆயிற்று. அப்பொழுது திருமணமும் செய்யப்பட்டது. மனைவி 5 வயதாக விருந்தபடியால் மனைக்கு சாஸ்திரியார் உணவு போடவேண்டிய தொல்லை இல்லாதொழிந்தது.

ஆண்டு பல செல்ல, மனைவி ஒரு கால் விலங்காகவும், மக்கள் ஒரு கை விலங்காகவும் முளைத்து விட்டார்கள். அதிகப் பணம் தேடவேண்டிய சிரமம் ஏற்பட்டது சாஸ்திரியாருக்கு.

சாஸ்திரியார் பணம் சம்பாதிக்க மனைவி, மக்களுடன் சாஸ்திர மூட்டை, பஞ்சாங்கம், தர்ப்பைப்புல் மூட்டை இவைகளுடன் ஒரு கிராமத்திற்குச் சென்றார். அந்த கிராமம் அதிக தூரத்திலிருந்தது. நடு வழியில் சாஸ்திரியாருக்கு தண்ணீர் தாகம் வந்துவிட்டது. குடிப்பதற்கு அங்கு தண்ணீர் சிறிதும் கிடைக்கவில்லை. சமீபத்தில் பிராமணாள வீடுமில்லை. ஆதிதிராவிடர்கள் வீடுகள் மாத்திர மிருக்கின்றன. அங்கு கிணறு மில்லை. சாஸ்திரியாருக்கு தண்ணீர் தாகம் உயிர் போய்விடும்போ லிருக்கின்றது. ஆபத்திற்குப் பாபமில்லையல்லவா? ஆதி திராவிடன் வீட்டில் குடித்தால் தான் என்ன? ஆபத்திற்குச் சாஸ்திரமுந்தான் இடங் கொடுக்கின்றதே என்று நினைத்தா. தண்ணீர் குடிக்கவும் துணிந்துவிட்டார். ஆனால் மனைவி மக்கள் கூடவே இருக்கின்றார்கள். தந்திரமாக விட்டு அவர் போகலாமென்று பாரத்தாலும், மனைவி, மக்கள் கால் விலங்காகவும், கை விலங்காகவுமன்றோ இருக்கின்றார்கள்?

அப்படி இருந்தாலும் அவர் தண்ணீர் குடித்துவிடுவார். பறையன் வீட்டில தண்ணீர் குடித்தால் தன மனைவி கோபித்துகொண்டு போய்விட்டாலும், வேறு விவாகம் செய்துகொள்ளலா மென்றும் துணிவு கொண்டார். கோபிததுக்கொண்டு போன மனைவி நம் குலத்தாரிடம் கூறிவிட்டால் நம் பாடு திண்டாட்ட மாகவன்றோ முடியும் என்றும யோசித்தார். ஆதாரமாக சாஸ்திரத்தைக் காட்டி ஜெயித்துவிடலாமென்றாலும் இத்துணைத் துன்பத்தையும் எப்படி சமாளிப்பது என்று ஏங்கினார். நம் மனைவி கோபித்து கொண்டு போய்விட்டால் மறுபடியும் திருமணம் செயதுகொள்ள 3000 ரூபாயல்லவோ வேண்டும் என்று சாஸ்திரியார் ஏங்கினார்.

சிறிது தூரம் தாகத்தோடு சாஸ்திரியார் சென்றார். ஒரு உரைக்கிணறு இருந்தது. அதை சாஸ்திரியார் எட்டிப் பார்த்தார். பாதாளத்தில தணணீர் கண்டது. தண்ணீரைக் கண்டதும சாஸ்திரியாருக்கு சிறிது தாகந் தீர்ந்ததுபோலிருந்தது. குடித்தாலன்றோ தாகந் தீரும். கிணற்றில் இறங்கவோ முடியாது. சாஸ்திரியாருக்கு ஒரு யுக்தி தோன்றியது. மனைவியின் சேலையில் சிறிது கிழித்தும, தன் வேஷ்டியைக் கிழித்தும் முடிந்து தான் வைத்திருந்த செம்பில் கட்டி கிணற்றில் விட்டார். அந்த துணிக் கயிறு நீளம் பற்றவில்லை. பின் சாஸ்திரியார் என்ன செய்வார்? பூணூலை எடுத்து முடிந்து கிணற்றுக்குள்ளே விட்டார். செம்பில் தண்ணீர் நிரம்பிக் கொண்டது. செம்பை இழுத்தார். பூணூல் அறுந்து செம்பு கிணற்றில் விழுந்துவிட்டது. உடனே சாஸ்திரியார் வயிற்றில் பகிரென்று தீப்பற்றியதுபோ லிருந்தது. தாகமெடுத்து வரண்ட வயிற்றில் தீ விழுந்தால் எப்படி இருக்கும்?

இப்பொழுது சாஸ்திரியாருக்கு தண்ணீர் குடிக்கவேண்டு மென்ற எண்ணம் ஒழிந்து செம்பை எடுக்கவேண்டு மென்றாகி விட்டது.

என்ன செய்வார் சாஸ்திரியார்? செம்பை விட்டுப்போக மனம் வரவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார், யாரும் கண்ணில்படவில்லை. ஆனால் ஒணுங்கொடி மாத்திரம் அவர் கண்ணில்பட்டது. பட்டதுதான தாமதம, உடனே ஒரு யுக்தி தோனறியது. போய் கொடிகளைப் பிடுங்கிவந்து கயிறாக முறுக்கி பக்கத்திலுள்ள மரமொன்றில் கட்டி, அதைப் பிடித்துக்கொண்டே சாஸ்திரியார் கிணற்றில் இறங்கினார். அப்பா! பாதாளத்தைப் பார்த்து சாஸ்திரியார் பிரமித்துவிட்டார்.

செம்பை எடுத்துக்கொண்டார். எப்படி அதை கையில் வைத்துக்கொண்டு மேலே ஏறுவது என்பது அவருக்குப் புலப்படவில்லை. கொடியைப் பிடித்துக்கொண்டு ஏறவும் தைரியமில்லை. பாவம்! தவித்தார். தரைமீதிருக்கும் மனைவியைக் கூப்பிட்டு தன்னிலைமையைக் கூறி, மெதுவாகக் கொடியை மேலே இழுக்கும்படி வேண்டினார். அவர் மனைவியும், 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்று மதித்து கொடியை இழுத்தாள். இழுக்க, இழுக்க கொடி பாறையில் மோதி அறுந்துவிட்டது. சாஸ்திரிகள் திடீரென்று மறுபடியும் கிணற்றிற்குள்ளே விழுந்துவிட்டார். மனைவியும் தரைமீது பலமாக சாய்ந்துவிட்டாள்.

என்ன செய்வார் சாஸ்திரியார்? 'துன்பம் வந்தால் தொடர்ந்தா வரவேண்டும்' ஐயோ! தெய்வமே!! என வருந்தினார். ஆதிதிராவிடன் வீட்டில் தண்ணீர் குடித்திருந்தால் இவ்வளவு துன்பங்கூட வந்திருக்காதே என யோசித்தார். என்ன யோசித்தும் என் செய்வது? வெளியே வர முடியவில்லை.

சிறிதுநேரம் சென்றது. அங்கே ஒரு ஆதிதிராவிடன் தண்ணீர் இறைக்க வந்தான். வடம், சால், மாடு இவைகளுடனும் மற்றொருவனுடனும் வந்தான். கரையில் ஒரு பிராமண மாது இருப்பதையும், கிணற்றில் கூச்சல் கேட்பதையும் கண்டு திடுக்கிட்டான். பிராமணாளாச்சே என்ற பயத்தால் சமீபத்தில் நெருங்கவும் பயந்தான்.

சாஸ்திரியார் மனைவி நடந்ததை எல்லாம் அவனிடம் கூறி, புருஷனை எப்படியாவது மேலே கொண்டுவந்து விட்டால் நீ சுகமாக இருப்பாய் என ஆசீர்வதித்தாள்.

அவனும் சாஸ்திரியார் மனைவி ஆசிர்வாதத்தை தலைமீது தாங்கி, வடம் சால் இவற்றை இணைத்து கிணற்றுக்குள் விட்டு சாஸ்திரியாரை சாலில் உட்காரும்படி சொன்னான். சாஸ்திரியாரும் அப்படியே செய்தார். அவன் சாஸ்திரியாரை சாலிலிருந்து மூச்சைப் பிடித்துக்கொண்டு தரையில் தூக்கிவிட்டான்.


சாஸ்திரியார் அதிக சந்தோஷங்கொண்டு நீதான் ஆபத்தில் உதவின தெய்வம்! எனக் கொண்டாடினார். "தீண்டாமையின் துன்பத்தாலல்லவா நான் இத்துணை துன்பமடைந்தேன். தீண்டாமையை ஒழித்த பின்னன்றோ நான் பிழைக்க நேரிட்டது. ஆ! தீண்டாமையின் கொடுமை தான் என்னே! கொடிது! கொடிது!!"



எனக் கூறி, தீண்டாமையைத் தொலைப்பதற்கு அப்பொழுதிருந்தே கங்கணங் கட்டிக்கொண்டார்.

சாஸ்திரியார் தனக்கு உயிர்பிச்சைக் கொடுத்த ஆதிதிராவிடன் கிராமத்திலேயே தங்கி திராவிட சிறுவர்களுக்கு கல்வி போதித்து வருகின்றார். ஆண்டவபுர மென்றிருந்த அவ்வூர் யானைத் தாண்டவபுர மென்று வழங்குகின்றது. அவர் யானை போன்று நடப்பதாலேயே யானைத்தாண்டவர் என்ற பெயரும் பெற்றார்.

ஜெர்மன் முதல் மந்திரி ஹிட்லருடைய கட்சிக்கு அடையாளம் "ஸ்வஸ்திகா" அந்த "ஸ்வஸ்திகா" சுழலுவதால் என்ன நடக்கிறது என்பதை மேலே பார்க்கலாம்.



பிராவ்டா] [மாஸ்கோ

துப்பு இங்கே!

(டாக்டர் டி. வி. எஸ். சாஸ்திரி எல். எம். எஸ்.)

துப்பு இங்கே! என்ற உத்திரவு விளங்கும் விளம்பரப் பலகைகளை, கவனியாத தென் இந்தியா ரயில் பிரயாணிகள் இருக்க மாட்டார்கள் என நம்புகிறேன். அதிகாரிகளின் உத்திரவுகள் அனைத்தையும் கண்டஞ்சும் பல பயந்த புள்ளிகள், அந்த இடத்தில் துப்பாமல் சென்ருல், குற்றத்திற்குள்ளாவோமோ என்று பயந்துங்கூட துப்பிவிட்டே போவதும் உண்டென நினைக்கிறேன். இவ்வளவு கண்டிப்பாய் போட்டிருக்கும் உத்திரவைப் பார்த்தபின், அதை கவனியாது செல்வதற்கு, ஆஞ்ஞைகட்கு உட்பட்டே நடக்கும் நம் நாட்டில் எவ்வளவு பேருக்குத் துணியும்?

நீண்ட நாளாய் போலீஸ் உத்தியோகத்தில் இருந்துவந்த என்னைப்பற்றி, எங்கள் இலாகா அதிகாரிகளுக்கு நல்ல அபிப்பிராயம். புலன் அகப்படாத அனேக பெரிய குற்றங்களைக் கண்டுபிடிக்க என்னையே அனுப்புவது வழக்கம். அதனுலேயே சேலம் ஜில்லாவிலிருந்த கண்ணனூர் ஜமீந்தார் வீட்டில் நகைகள் களவு போன போதும், என்னை நியமித்திருந்தார்கள். களவாடினதாக சந்தேகிக்கப்பட்ட பேர்வழி, பம்பாய்க்கு போனதாகவும் வதந்தி. விசாரணைக்காக நான் சென்னையிலிருந்து, ஈரோடுக்கு புறப்பட்டு வந்துகொண்டிருந்தேன்.

ஜமீந்தார் அவர்கள், ஒருமுறை டில்லிக்கு போய், ராஜப்பிரதிநிதியை பேட்டிகாணப் போனபோது, வைஸிராயின் மெய்க்காவலரான 'பதான்' ஜாதிக்காரர்களின் கம்பீரமான உருவத்தைக் கண்டது முதல், தனக்கும் மெய்க்காவலுக்கு ஒரு காபுலியே வேண்டுமென தீர்மானித்து விட்டார். வெகு சிரமப்பட்டு, ஆதியில் தமிழ்நாட்டரசர் சிலர், யவனர்களை மெய்க்காவலர்களாய் கொணர்ந்து வைத்ததுபோல், தானும் அதி உயரமான ஒரு 'பதானை' வரவழைத்து வைத்துக்கொண்டார். கொஞ்சநாட்கள் சேவகத்திலிருந்தபின், மூன்று மாதம் ரஜா எடுத்துக்கொண்டு தனது தேசத்திற்கு போய் வருவதாக மெய்க்காவலன் சென்ற

உடனேயே தான், அகஸ்மாத்தாய் இரும்புப்பெட்டியைத் திறந்து பார்க்கும்போது நகைகள் முதலியன காணுமற்போன விவரம் விளங்கிற்று. உடனே தந்திகள் பறந்தன. நானும் புறப்பட்டேன்.

சேலம் ஸ்டேஷனுக்கு வந்ததும் சற்று காலாற்றலாமென கீழே இறங்கினேன். உடனே தலைப்பில் இருக்கும் "துப்பு இங்கே" எனும் உத்திரவைக் கண்டேன். என்னை அறியாமலே எனக்கு துப்பவேண்டுமெனும் எண்ணம் உதித்தது. ஆனால் வாயிலோ எச்சில் ஊறவில்லை. கனைத்தும், காரியும், கொஞ்சம் சிரமப்பட்டுப் பார்த்தும் பயன்படாததினால் என் வீண் அவஸ்தையைக் கண்டு பரிதபித்து, வாழ்நாளெல்லாம் மேலதிகாரிகளின் உத்திரவுகளுக்கு கீழ்ப்படிந்தே நடந்து வந்ததின் தோஷமல்லவா, இப்படி அனுவசியமான உத்திரவுகளுக்கும் கீழ்ப்படிய வேண்டுமெனும் மனப்பாங்கை உண்டுபண்ணி விட்டது! என்று என்னைக்கண்டு நானே புன்னகை பூத்தேன். "நம்மாலேயே முடியவில்லை, மற்றவர்கள் என்ன செய்திருக்கின்றனர்? நாட்டிலோ உத்திரவுகளுக்கு பஞ்சமில்லை—அவஸரச் சட்டங்கள் தடபுடலாய் வழங்கப்படும் நாட்கள். நாட்டிலுள்ள ஜனங்களில் பெரும்பான்மையோரோ எதற்கும் கீழ்ப்படிந்து நடக்கும் இயல்பு வாய்ந்த வாயில்லாப் பூச்சிகள்!" என்று சிந்தித்துக்கொண்டே, எச்சரிக்கைப் பலகைக் கடியிலுள்ள தொட்டியை உற்றுப் பார்த்தேன். புகையிலைக் காம்புகளில் அனேக தினுசுகள், ஜாடி, கொடி, இரட்டை ஜாடி, சிங்கம், யானைச் சிங்கம், பலூன், ஆகாயக் கப்பல் முதலிய பல ரகங்களான பீடித் துண்டுகள், ஸிகரெட் துண்டுகளிலும் பலவகைகள், சுருட்டுக் கட்டைகளில் வெள்ளி தங்கத்தால் ஒட்டியாணங்கள் அணிந்த உயர்தரச் சரக்குகளிலிருந்து, தம்மம்பட்டி தாழ்ந்த 'பாய்காளு' பிராண்டு வரையுள்ள துண்டுகள், இன்னும் எவ்வளவோ சரககுகள் காணப்பட்டன.

'ரயில்வே கம்பெனியாரின் கட்டளைக் கிணங்கி இவ்வளவு பேர்கள் தங்கள் கடமைகளை செலுத்தி யிருக்கு மிடத்தில், நமது கைங்கரியத்திற்கு இடமில்லையே' என, என்னை நானே நொந்து கொண்டு, "ஒரு வெற்றிலை பாக்காவது போடுவோமா" என்று யோசித்துக்கொண்டிருக்கையில், திடீரென ஒரு எண்ணம் எனக்கு உதித்தது. சகுனங்கள் முதலியவற்றில் எனக்கு நம்பிக்கை இல்லாவிடினும், அகஸ்மாத்தாய் ஏதாவது புதுமைகள் என் கண்முன் பட்டால் அச்சமயங்களில் சில வேளைகளில் அவற்றுள் ஏதாவது உட்கருத்திருக்கலாமோ வென நான் ஸந்தேகிப்பதுண்டு. இந்தப் பலகை என் முகத்தில் அடிப்பதுபோல் என் பார்வையில் அகப்படுவானேன்? நான் அதை கவனித்து அதைப்

பற்றி சிந்திப்பானேன்? என்றெல்லாம் விசாரிக்கலானபோது, 'துப்பு இங்கே' என்ற பெரிய எழுத்து வாக்கியத்தை ஒரு கண்டிப்பான ஆணையாய் எடுத்துக்கொள்ளாமல், வேறு விதமாய் அதன் காரியத்தை அறிய முயன்றேன். "நீ வந்த காரியமோ திருட்டின் துப்புக் கண்டுபிடிக்க வந்திருக்கிறாய். அந்த துப்பு இங்கே'யே கிடைக்கும் என்பதை சுருக்கிச் சொல்லி, தந்தி பாஷையில் சுட்டிக் காட்டுவதுபோல் தோன்றிற்று. இந்த எண்ணம் உதிக்கவே தொட்டியை இன்னும் உற்றுப் பார்த்தேன். கையிலிருந்த குச்சியால் அதை மெதுவாய் கிளறினேன். பீடித் துண்டுகள் நடுவே நீட்டமாய் வைக்கோல்போல் ஒரு துண்டு கிடந்தது. அது ஒரு 'ரோக்' துண்டென கண்டு கொண்டேன்.

'ரோக்' என்பதைப் பற்றி நண்பர்கள் கேட்டிருப்பார்கள். அராபிக் கதைகளில் யானையை அலட்சியமாய் காலால் தூக்கிச் செல்லும் ரோக் என்னும் பெருந்தீனிப் பட்சியை நான் குறிக்கவில்லை. சிங்கப்பூர் பக்கத்திலிருந்து வரும் மரக்காய வியாபாரிகள், தங்கப் பித்தான்களணிந்த கோட்டும், பைகள் வைத்த பச்சை பெல்டும், இடுப்பில் கைலியும், தலையில் தொப்பியும், கையில் குடையுமாய் வரும்போது, வாயில் பீடிக்கு பதிலாய் பிடித்து வரும் 'ரோக்'கைப்பற்றி நான் பிரஸ்தாபிக்கிறேன். ரோக் துண்டைக் கண்டவுடன், சிங்கப்பூரிலிருந்து வந்த ஆள் யாரோ இங்கு வந்திருக்க வேண்டும். ஒரு வேளை நாம் தேடிவந்த பேர்வழி யாராவது வியாபாரியை வரவழைத்திருக்கலாமோ என சந்தேகித்தேன். மீண்டும் துப்புக் கிடைத்த தொட்டியை கைக்குச்சியால் கிளறினேன். அதனடியில் நடுவே சிறு தங்க ஆணி போட்ட பல் ஒன்று கிடந்தது. இதுமாதிரி பல் யார் வாயில் பார்த்தோம் என ஞாபகப்படுத்திக் கொண்டேன். 'முத்துப்போன்ற' பற்கள் என கவிகள் வர்ணிப்பது எவ்வளவோ உலகப் பிரசித்தியாயிருப்பினும், தங்கப் பற்களும், தங்கம் செம்பு ஆணிகள் போட்ட பற்களும, சில இஸ்லாம் ஸ்திரீகள் கறுப்புப் பற்களும் ஏன் வைத்துக் கொள்ளுகிறார்களோ தெரியவில்லை.

கடைசியாய் இந்த ஸ்டேஷனிலேயே இறங்கி விசாரிக்கலாமா என தயங்கினேன். அச்சமயமும் ஒரு முறை 'துப்பு இங்கே!' என்ற வாக்கியம் என் கண் எதிர்ப்பட்டு எச்சரிக்கை கொடுத்தது. அவசர அவசரமாய் சாமான்களை கீழே இறக்கி வைத்துவிட்டு, நான் தேடிவந்த 'பதான்' எப்போதாவது சிங்கப்பூரிலிருந்த துண்டா என தந்தி கேட்டேன். பிற்பகலில் அவன் சிங்கப்பூரில் நகைகள், ரத்தினங்கள் வியாபாரம் செய்துகொண்டிருந்த ஒரு மரக்காயரிடம் வேலைபார்த்து வந்ததாக பதில் தந்தி கிடைத்தது.

அப்போதே எனக்கும் தங்க ஆணிப் பல்லால் அலங்கரித்துக் கொண்டிருந்தவருள் ஒருவர் ஞாபகமும் வந்தது. அதுவே ஜமீந்தாரவர்களின் மாமியார்.

அந்த அம்மாள் பாலிய விருத்தை. சரீரம் வயதுக்குட்பட்ட போதினும் மனம் யௌவனமாகவே இருந்தது. இளமையில் புருஷனை இழந்தும் தனக்கு பிறந்த பெண்ணுக்கு தக்க கணவன் கிடைக்கவேணுமென்ற அவாவினால், தன் பெயருக்கு ஒரு களங்கம் ஏற்படக் கூடாதென்றே நீண்டநாளாய் ஒழுங்கான முறையில் காலங்கழித்துவந்தாள். பெண்ணுக்கு விவாகமான பிறகு தானும் கொஞ்சம் அலங்கரித்துக் கொள்ளத் துடங்கினாள். அரண்மனையிலுள்ள நகைகள் பண்டைய காலத்தவையா யிருக்கின்றனவென்றும், அவைகளை புதுப்பிக்க வேண்டுமென்றும் பன்முறை சொல்லி வந்ததும் உண்டு.

இனி இது விஷயமாய் விசாரணை செய்வது எனக்கு எளிதாயிருந்தது. இறுதியில் விஷயங்களை கண்டு பிடித்தபின், சாதாரண பாமர ஜனங்கள் கேவலமாக ஏளனம் செய்யாதிருக்கும்படி ஏதாவது உபாயம் தேடும்படி என்னை ஜமீந்தார் அவர்களை வேண்டிக்கொள்ள நேர்ந்தது.

ஜமீந்தார்களின் வேண்டுகோள்களென்ற அவற்றை, அற்ப மனிதர்கள் மறுக்காத விதமாய் அவர்கள் ஸ்வர்ண புஷ்பம் சமர்ப்பிப்பதும் வழக்கமென்று சொல்லவும் தேவையா ?

ஆறு அடிக்குமேல் உயரமுள்ள 'பதான்', வயது முதிர்ந்தும் வாலிபம் கொண்டாடும் ஸ்திரீ, சிங்கப்பூரிலிருந்து வந்ததாக களக்கமற விளங்கும் மரக்காய வியாபாரி, மூவரும் ஒருங்கே சேர்ந்து சென்றதை விசாரிக்குமளவில், அவர்கள் சேலத்திலிருந்து மோடார் பஸ் மூலியமாக பங்களூர் போனதாகத் தெரிந்தது. நாகூரிலிருந்து ரயிலில் வந்த மரக்காயரையும் அழைத்துச் செல்வதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து, பிறகு மூவருமாய் பங்களூருக்கு 'பஸ்' ஏறினதாகத் தெரிய வந்தது. அதனபின் அவர்களை தொடருவது இலகுவா யிருப்பினும், அவர்களைக் காணுவதற்கு பம்பாய் வரையில் போக நேர்ந்தது. அங்கேயே எனக்கு ஜமீந்தார் அவர்களின் கடிதமும் கிட்டிற்று.

ஆங்கில அகஸிய ஆசிரியர்களின் பேனாமுனைகளில் சிக்கி அவஸ்தைப்படும் 'மாமியார்கள்' நம் தேசத்தில அபூர்வம். அவர்கள் பெண்களைப் பெற்ற கூத்துக் கிழத்திகள். நம் நாட்டு கவி

ஞர்களாலும், நூலாசிரியர்களாலும், தூற்றப்படும் 'மாமி'மார்கள், கொடூர நெஞ்சத்தினர் எனப் பெயர்படைத்த பிள்ளைகளைப் பெற்றெடுத்த பாவிகள். ஆங்கில வாழ்க்கையிலிருந்து பல நூதனங்களை அங்கிகரித்து நடைமுறையில் கொண்டுவந்துள்ள நவீன நாகரிக ஜமீந்தார், ஒரு மேனாட்டு மாமியாரையும் ஸ்வீகரித்தனர்போலும்! அந்த அம்மாள் நாற்பது வயதிற்குமேல் பாலியம் கொண்டாட எத்தனித்தார்! இம்மாதிரி உங்கள் அனுபோகத்திலும் சில அபூர்வ பிறவிகளை கண்டிருப்பீர்கள்—ஆ! அவர்கள் பெயர்களை குறிப்பிட வேண்டாம்!

ஆனால் ஜமீந்தார் அவர்களுக்கு மற்றொரு ஆங்கில உணர்ச்சியும் உடனிருந்தது. எப்படியாவது தன் மாமியாரை இழந்துவிட வேண்டுமெனும் ஆவல்!

கடைசியாய் வெளிப்படையாய் விவகாரம் ஏற்படாமல், பழைய நகைகளை புதுப்பிக்கும் பொருட்டு ஜமீந்தாரிணியே நகைகளை தாயாரிடம் அனுப்பியதாகவும், துணைக்கு கூட 'பதான்' மெய்க்காவலனை அனுப்பியதாகவும், ஆனால் ஜமீந்தார் அவர்களுக்கு இது விஷயம் தெரியாததால் இவ்வளவு புகாருக்கு இடமுண்டாயிற்றெனவும், இதனாலேயே தன் மாமியார் இனி அரண்மனைக்குள் நுழையக்கூடாதென ஆஞ்ஞாபித்திருப்பதாகவும் பிரசுரித்து, ஜமீந்தார் அவர்களின் மனதை திருப்திசெய்தேன். நகைகளின் பெரும்பாகத்தையும் மீட்டுக்கொண்டு வந்துவிட்டேன். எனக்கான இனாமும் கைப்பற்றினேன்.

தென் இந்திய ரயில்வேக்காரர்களின் விளம்பரப் பலகையால் மெத்த லாபமானதால், கம்பெனிக்காரர்கள் போட்டிருக்கும் 'துப்பு இங்கே' எனும பலகையை இப்போது எங்கு கண்டாலும், அதற்கு கௌரவம்கொடுத்து துப்பாது நான் அடியெடுத்து வைப்பதில்லை.

ஜமீந்தார் அவர்களுக்கும் இரட்டை சந்தோஷம். நகைகள் மீண்டும் கைக்கு வந்தன. இரண்டாவது,மாமியார் ஹிம்ஸை நீங்க, அவள் தொலைந்து போனாள்.



நாடக மேடையில் "கழுதை"

(கோ. பாண்டியன்.)

நாடகமேடை சீர்திருத்தத்தைப்பற்றி எத்தனையோ பேர் கட்டுரைகள் எழுதிவருகிறார்கள். ஆனால் நாடகமேடை சீர்திருந்தி விட்டதா என்று கேட்கிறீர்களா? இதற்கு பதில் என்னால் சொல்ல முடியவில்லை. விருதுநகரில் ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு நாடகத்தை பார்க்க நேரிட்டது. அதில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். அப்புறம் நாடகமேடை சீர் திருந்திற்றா, இல்லையா என்பதைப்பற்றி பேசிக்கொள்ளுவோம்.

விருதுநகர் பாலகிருஷ்ண தியேட்டரில் ஆட்டம். நாடகம் "ஸ்ரீ. வள்ளி" தமிழ் தெய்வங்களாய் மதிக்கப்படும் சுப்பிரமணியர்—வள்ளி விவாகத்தைப் பற்றிய நாடகம். தினைப்புனக்காட்சி. வள்ளிக்கும் சுப்பிரமணியருக்கும் தர்க்கம் நடந்தது. ஒரு விஷயத்தை மறந்துவிட்டேன். வள்ளியாகவேடம் புனைந்தது யார்; சுப்பிரமணியராக வந்தது யார் என்பது தெரியவேண்டாமா? அதல்லவா முக்கியம்! "தார்வேந்த திக்குவிஜய சங்கீத சண்டமாருதம்" என்ற பட்டங்களை சூட்டிக்கொண்ட, எம். கே. தியாகராஜ பாகவதர் கதாநாயகர். "நாடகராணி" என்ற பட்டம் சூட்டிக்கொண்ட ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி கதாநாயகி. இவர்கள் தரித்துக் கொண்டிருக்கும் பட்டங்களை மறந்துவிடவேண்டாம். தர்க்கம் ஆரம்பமாயிற்று. தர்க்கத்தின் இடையே நான்கேட்ட ரசமான பாகங்களை உங்களுக்கு சொல்லப்போகிறேன். நான் காதால் கேட்டதால், என் காதுகளில் நாராசம் பாய்ந்ததுபோலிருந்தது. நல்லவேளை. உங்களுக்கு அந்தக் கஷ்டம் இல்லை. வள்ளியாக வேடம் போட்டவள் பேசினாள்:—"என்ன வேடா, சாய்ந்தமாடு கம்பில் விழுவதுபோல உன் சமாச்சாரம் இருக்கிறதே!"

இதற்குப் பதிலாக வேடன் வேடம் புனைந்த ஸ்ரீ தியாகராஜ பாகவதர் பேசியதாவது:—உன் மேல் விழுந்தவர்கள் யார் தான் மேன்மையடைந்தார்கள்?


இதோடு இந்தப் பேச்சு நின்று போயிருந்தால் கௌரவமாயிருந்திருக்கும். பின்னால் பாகவதர் பாடிய ஒரு விருத்தத்தை "உன்" மனம் கல்லோ இரும்போ என்று சொல்லி "குட்டிச்சுவரோ" என்று முடித்தார். இதைக்கேட்டதும் வள்ளியான ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி அம்மாள் "குட்டிச்சுவர் என்றீரே, அந்தக்குட்டிச் சுவரை தேடி வருவது எது?" என்று கேட்டாள். ஜனங்கள் இதைக்கேட்டு நீண்டநேரம் கைகொட்டி ஆரவாரஞ் செய்தார்கள்.

பாகவதர்:—சகல பிறவிகளிலும் உயர்வாகக் கருதப்படும் மனிதப் பிறவி எடுத்த என்னை கழுதை என்று சொல்லுகிறாய். அப்படியானால் நான் ஆண் கழுதை, நீ பெண் கழுதை.

இப்படிச்சொன்னவுடன் ஜனங்களுக்கு கோபம் வந்துவிட்டது. "இம்மாதிரி கழுதை என்று பேசக்கூடாது" என்ற சப்தம் பலமாயிற்று. "நாடகமேடையில் இப்படியா பேசுவது?" என்று பலர் கேட்டனர். எங்கும் ஒரே குழப்பமும், கூச்சலுமாயிருந்தன. ஜனங்களை சமாதானப்படுத்தி மறுபடியும் நாடகம் ஆரம்பிப்பதற்கு பல நிமிஷங்கள் ஆயின.

தற்காலமேடையில் என்னெல்லாம் நடைபெறுகின்றன என்பதற்கு இந்த உதாரணம் போதுமென்று நினைக்கிறேன். இந்த ஆபாசங்களையெல்லாம் தடுக்க முடியாதா என்று நண்பர்கள் கேட்கலாம். ஜனங்கள் நினைத்தால் ஒரே நாளில் தடுத்துவிடமுடியும். ஆகவே நாடகமேடையை சீர்திருத்துவதென்பது வெறும்பேச்சால் மட்டும் நடக்கமுடியாது. பல கட்டுக் கதைகளை வெளியிட்டு, அந்த விஷயத்தில் ஜனங்களுக்கு வழிகாட்டியாய் நிற்க "காந்தி" பத்திரிகை முன்வர வேண்டிக்கொள்ளுகிறேன்.

ஜினிவா ஒப்பந்தங்களின் கதி.



டெயிலி எக்ஸ்பிரஸ்] [லண்டன்

வானக் காட்சி

(தோழர் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்.)

சென்ற ஆடிமாத முழுமையும் மப்பும் மந்தாரமாய் இருந்து வந்தபடியால், நட்சத்திர கூட்டங்களைப்பார்த்து நமது வாசகர்களுக்கு குறிக்கமுடியவில்லை முன் கட்டுரையில், ஸப்த-ஏழு-ரிஷிகளின் இடத்தையும், அந்தக்கூட்டத்தின் தூரத்தையும் சுருக்கமாகக் குறிப்பிட்டோம். ஆனி மாதத்தில், நன்றாக அந்த கூட்டங்கள் விளங்கிற்று. அவை ஆடி மாதத்தில், பூமிக்கும், ஆகாயத்திற்கும் ஓரத்தில் மேற்கில் காணப்படும். ஆனால், மழை முடியும் மந்தாரமாதங்களில் பார்ப்பது கஷ்டம். இந்த நட்சத்திரங்களில் மிக அழகினதும், வானநூலில் பிரக்யாதி பெற்றதுமான ஓறைடான் (orion) என்ற நட்சத்திர கூட்டத்தை வானத்தில் குறித்துகாட்டி, அதன்பிரபாவத்தை எடுத்துரைக்க இந்தமாதம் முடியவில்லை. ஏனெனில், அந்த கூட்டம் மறைவுற்றது. வடமூனை நட்சத்திரத்தைக் குறிக்கலாமென்றால் ஆகாயம் மப்பும்மந்தாரமாய் இருந்துவருகிறது. நட்சத்திர கூடடங்களில், இவ்விரண்டு கூட்டங்களும் பிரபல்யம் பெற்றவை. வான ஞானத்தின் ஆநந்தத்தை அடையவேண்டுமானல், நமது முன்னோர்களுக்கு தெரிந்துவந்த நட்சத்திர கூட்டங்களை, நாமும் நேரில் கண்டு, அவையாவை என்று அறிவது அவசியமாகும்.

மனிதன் அடைந்துவரும் ஞானத்தில், வான ஞானம் முதன்மைபெறுவ தென்போம். எட்டாதூரத்திலுள்ள பொருள்களைப்பற்றி நாம் பார்ப்பதிலும், இன்னவையென்று தெரிந்துகொள்வதிலும் என்னபலன் என்று சிலர் எண்ணக்கூடும். இந்த மனப்பான்மை, அறியாத குழந்தைகளுக்குரியது. அல்லது, மூட மக்களுக்குரியது. அல்லது, மிருகாதிகளுக்குரியது. மிருகாதிகளுக்கும், குழந்தைகளுக்கும் வயிறை நிரப்புவதிலேயே காலங்கழிகின்றது. மூடமக்கள், அவர்களுடைய தற்கால ஜீவனத்திற்கு வேண்டியவைபின் பேரில்தான் நோக்கம் வைக்கின்றார்கள். நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளுக்கு முதலிலும், கடையிலும் தங்கள் வயிற்றை நிரப்புவதிலேயே தினத்தைபோக்குகின்றார்கள். ஆனல், அறிவு வளர வளர, விவேகம் உண்டாக

உண்டாக, கல்வி கேள்வி பெருக, பெருக, மனிதன் தனது வயிற்றை நிரப்புவதில் சிறுபான்மை காலத்தைத்தான் உபயோகப்படுத்துகின்றான். இதனைக் குறித்தே ஒரு பொழுது உண்பவன் யோகி, இரண்டுபொழுது உண்பன் போகி மூன்றுபொழுது உண்பவன் ரோகி நான்குபொழுதுண்பவன் இறந்துபோவர்களுக்கு சமானமென்று,நமது அறிஞர்களில் சிலர் சொல்லி வந்திருக்கின்றனர். விவேகம் முதிர்ந்த மெஞ்ஞானிகளுக்கு காலப்போக்கு தெரிவதே யில்லையாம். எல்லா நேரத்தையும, தங்களுடைய ஆராய்ச்சியிலேயே கழித்துவருகின்றனர். இந்த பிரசனை சம்பந்தமாக, ஒரு கற்பனைக் கதையை எடுத்துக்காட்டுவோம். ஒரு குன்று ஓரமாக ஓர் ஆடுமந்தை மேய்ந்துகொண்டிருந்ததாக வைததுக்கொள்வோம. அந்த மந்தையை காவல் காப்பதற்கு ஒரு நாய் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தது. மந்தையை மேய்ப்பவனொருவன், கையில் ஓர் தடியை ஏந்தி, தோளின்மேல் கம்பளிப்போர்வையுடன், மேயும் மந்தையைப் பார்த்துக்கொண்டிருந்தான். சிகரத்தின்மேல் ஒரு தத்துவஞானி, இவ்விருத்தாந்தங்களை யெல்லாம் ஒரு குன்றின்மேலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார். ஆடு மந்தைக்கு, பில்லைத்தின்னும் நோக்கத்தைத் தவிர வேறு நோக்கம் கிடையாது. இதனைக்காக்கும் நாய்க்கு, தனது உணவின்பேரில் பசி எடுத்தபோது நினைவைத்திருந்தாலும் அங்குமிங்கும் ஓடி கலையும் ஆடுகளை மந்தையில் சேர்க்கவும், ஓநாய், புலி வருவதைக்கண்டால் குரைத்து இடையனுக்கு எச்சரிக்கை செய்யவும், இந்த அவசரத்தில் தனது பசியைகூட நோக்காது மந்தையை சுற்றி சுற்றி ஓடிவந்து காக்கும் நடத்தையிலேயே இருந்து கொண்டுவந்தது. இடையன் நிழலில்போய் தங்குவான், நாயையும் பார்ப்பான். எந்தவித இறைச்சல்போடுகிறதென்பதையும் கவனிப்பான். பயத்தைக்குறிக்க குரைக்கின்றதா, அல்லது மந்தையில் ஆடுகளை ஒன்ருய் சேர்க்க குரைக்கின்றதா, அல்லது விளையாட்டிறகாக (ஆடுகளுடன் நாய் விளையாட்டுவது சகஜம்) குரைக்கின்றதா, என்ற இத்யாதி நடத்தைகளை கவனித்து வருவான். இதனேடு, மப்புமந்தாரமாயிருக்கின்றதா? அப்படி இருந்தால் ஆடுகளை வீட்டிறகு ஓட்டலாமா என்பதையும் சிந்திப்பான். இடையன் இவ்விதமாக தனது மந்தைகளைப்பற்றி கவனித்துவா, அருகாமையிலுள்ள குன்றின்மேலிருந்த,தததுவஞானி எதனை கவனிக்கிருனென்பதை பார்ப்போம். ஆடுகளை நோககி, இந்த மந்தையின உருவத்தை நோக்குவான். புல் இருக்கும் இடத்தில் மேய்க்கப்படுகின்றதா? என்பதை கவனிப்பான. இந்த மந்தையின் பொருளாதார விலையென்ன இருக்குமென்று யோசிப்பான். எவ்வளவு பேருக்கு இந்த ஆட்டு மந்தை உணவாகும். இதனது தோல் எவ்வளவுபேருக்கு குளிர் கால கம்பளிக்கும், கால் செருப்புக்கும், உபயோகப்படு

மென்பதையும் விசாரிப்பான். இந்த ஆடு வகை எந்த ரிவாசி களுடன் சம்பந்தப்பட்டுள்ளது என்று விசாரிப்பான். நாயை நோக்கி, இவ்வளவு அறிவுள்ள நாய் வளர்ந்து வந்துள்ள விதத்தை சிந்திப்பான். இன்னமும் அதிக உபயோகப்படுத்த இந்த நாயை எம்மாதிரியாக பழக்கவேண்டுமென்றும் எண்ணுவான். மந்தையை மேய்க்கின்ற இடையனைப் பார்த்து, இவன் ஜீவனத்திற்கு என்ன கொடுக்கப்படுகின்றது? இவன் வருமானத்தால் எத்தனைபேர் ஜீவிக்கவேண்டும்? இவர்களை யெல்லாம் ஜீவிக்கச்செய்ய, ஒருவனுடைய சம்பாதனைபோதுமா என்று கணக்கிட்டுப் பார்ப்பான். இத்யாதி நோக்கங்களைக்கொண்ட ஜீவர்களில் யாரை உயர்ந்த ஜீவனென்று அழைப்பது? இதைப்போலவே வான ஆராய்ச்சி செய்யும் நோக்கை சிந்திப்போரும் மனிதர் அடையவேண்டிய பதவிகளில், முதன்மையான பதவியை அடைந்தவர்களென்பதற்கு என்ன தடை?


வான ஞானத்தால், வரும் ஆனந்தம் ஒருபக்க மிருக்க, விவகார விஷயத்தில் வானஞானம் விசேடப்பட்டதென்று அறிய வேண்டும். திரைகடலோடியும் திரவியம் தேடு, என்ற முதுமொழிக்கு இந்த வானஞானமே ஆதாரமாய் இருந்துவருகின்றது. போகக்கூடாமையாயுள்ள, பிரதேசங்களைப் பார்ப்பதற்கும், அனுகூலமாய் இருந்துவருவது வானஞானமே. கடலின்மேல் போய் வருவதற்கு முக்கிய ஆதாரமாய் இருந்தது இந்த வானஞானம். வானஞானம், உலக நாகரிகத்திற்கும், அடிப்படையாக இருந்து வருகின்றது.

இதன்றியும், வானஞானத்தால், மனிதருக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தம் விளக்கமுற்று வருகின்றது. மனிதனை சுற்றி இருக்கும் பல்லாயிரங்கோடி சூரிய சந்திர வானப் பொருள்களுக்கும் உள்ள சம்பந்தத்தை தெரிவிப்பது வானஞானமென அறிக. மூடபக்தியையும் மூட நம்பிக்கைகளையும் ஒழிக்க ஏற்பட்டது வானஞானம்.

வான ஆராய்ச்சியால் பௌதிக நூல்களுக்கு தெரியாத விஷயங்களும் விளக்கமுற்றன. பௌதிக அணுக்களை பிரிக்க சக்தி யற்றிருந்த பௌதிக மெஞ்ஞானிகளுடைய, கண்களை திறந்துவைத்தது வானஞானமே. சூரியனிடத்து புதிய மூலதாதுப்பொருள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அந்த தாதுப்பொருளுக்கு கேலியம் என்று பெயர் கொடுத்தார்கள். சூரியனிடத்து கண்டுபிடித்த பிறகே அந்த தாதுப்பொருளை பூமியிலும் கண்டுபிடிக்க நேர்ந்தது. அணுக்கள், பரமாணுக்களின் சையோகத்தால் ஏற்பட்டபொருள்

என்ற தற்காலஞானம் முதலில் வானஞானத்தின்மூலமாக தெரிய வந்தது.

கடைசியாக, மனிதனுடைய வருங்கால கதியையும் வான நூல் மூலமாகத்தான் அறியவேண்டி இருக்கின்றது. மாட மாளிகை, கூடகோபுரங்கள் யாவும் ஒரு காலத்தில் அதனைகட்டிய மனிதனுடன் சாம்பலாகிவிடும் என்றமுடிவை அறிவிக்கும் ஞானம் வானஞானமே. பிரபஞ்சத்தை நோக்க, மனிதனுடைய ஆணவமும், அகங்காரமும், கீர்த்தியும், நிந்தையும், உறவும், பகையும், கேடும், செல்வமும், யாவும் ஒரு க்ஷணப்பொழுது நில்லா என்ற பெரியோர் வாக்கியத்தை வற்புறுத்துவதும் வானஞானமே. மனிதனுடைய ஆணவத்தை அடக்கி, மமதையைப் போக்கி, தற்புகழ்ச்சியை ஓட்டி, மனிதனுக்கு மனிதன், உதவிபுரிந்து, நடக்கும்படி தூண்டப்போவதும் வானஞானமே. உலகில் மனிதன் மனிதனாக அவதரித்து வந்தகாலம் இன்றுவரை, மூன்றுலக்ஷம் வருஷமாம். ஆனால் இன்னும் உலகம் நீடித்துவாழ 200 கோடி வருஷம் உளவாம். இனிவரும் 200 கோடி வருஷத்தில் மனிதன் எல்லாபாக்கியத்தையும் பெற்று வாழ்வான் என்ற கோரிக்கையை வளர்த்து, அதற்குவேண்டிய உற்சாகத்தை அளிக்கப்போவதும் வானஞானமென அறிக. இதனை அலட்சியம் செய்வாரும் உளரோ?



ரூஸ்வெல்ட் அமெரிக்காவின் செல்வ நிலைமையை விருத்தி செய்ய இந்த வேலை செய்கிறார்.

டிரான்ஸ்கிரிப்ட்]
பாஸ்டன்]

மகாத்மாவின் தமிழ்

மகாத்மா தமிழ் பேசுவாரென்பது உங்களுக்குத் தெரியுமா? தென்னாப்பிரிக்காவில் அவர் இருந்தாரல்லவா? அங்கே குடியேறியவர்களில் பெரும்பாலோர் தமிழர். ஆகவே மகாத்மா ஆரம்பித்த சத்தியாக்கிரகத்திற்கு அதிக ஆதரவு கொடுத்தவர்களும் தமிழரே. தமிழருடன் சேர்ந்து பழகும் சந்தர்ப்பங்கள் மகாத்மாவுக்கு அதிகமாய் கிடைத்தன. இதனால் அவர் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் பேசவும் கற்றுக்கொண்டார். போப் என்பவர் எழுதிய தமிழ் பால பாடமும் அவர் படித்திருக்கிறார். அவர் படித்ததோடு நின்றுவிட்டாரா? அதுதான் வேடிக்கை.



தென்னாப்பிரிக்காவில் "டால்ஸ்டாய் பண்ணை" ஏற்படுத்தினார். அங்கே வசித்துவந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு மகாத்மாவும் அவர் நண்பர்களும் பள்ளிக்கூடம் வைத்து சொல்லிக்கொடுத்தார்கள். அப்படி சொல்லிக் கொடுப்பதில், தமிழ்ச் சிறுவர்களுக்கு தமிழ் எழுத்துக்களையும், தமிழ் இலக்கணத்தையும் சொல்லிக் கொடுக்கவேண்டிய பொறுப்பு நமது மகாத்மாவுக்கே வந்து சேர்ந்தது. மகாத்மா பயப்படவில்லை. தமிழ் கற்றுக்கொடுத்து வந்தார். இதில் ஒரு வேடிக்கை. தென்னாப்பிரிக்காவில் பிறந்துவளர்ந்த தமிழ்ச் சிறுவர்களுக்கு ஆங்கிலம் நன்றாய் பேசவரும். மகாத்மாவால் தமிழ் சொல்லிக் கொடுக்க முடிந்ததே யொழிய, தாராளமாய் தமிழில் பேச முடியவில்லை. மகாத்மாவைப் பார்க்க ஆங்கிலந் தெரியாத தமிழர்கள் வந்தால், இந்தச் சிறுவர்களே இருவருக்கும் மத்தியில் மொழிபெயர்ப்பாளர்களாக நின்று உதவி செய்வார்கள். இதைப்பற்றி மகாத்மா மிகவும் பெருமையோடு தமது சுய சரிதத்தில் கூறுகின்றார்.

சமீபத்தில் தீண்டாமை ஒழித்தலுக்காக தமிழருக்கு அனுப்பிய வேண்டுகோளில் மகாத்மா தமது பெயரை தமிழில் எழுதியிருந்தார். அதை பலர் பார்த்திருக்கலாம்.

:: ராஸ்புட்டீன் ::

(“தேவிதாசன்” எழுதுகிறார்.)

அத்தியாயம் 12.

[ராஸ்புட்டீன் சரித்திரம் தொடர்ச்சியாக “காந்தி” வாரம் மும்முறையில் பிரசுரமாய் வந்தது. ராஜீய காரணங்களை முன்னிட்டு “காந்தி” வாரம் மும்முறை பதிப்பை ஆகஸ்டு 4உ முதல் நிறுத்தி வைக்க நேரிட்டதால், கடைசி அத்தியாயத்தைப் பிரசுரிக்க முடியாதுபோயிற்று. ஆகவே கடைசி அத்தியாயத்தை கீழே பிரசுரிக்கிறோம்.]

யூசெளபாவ் தன்னுடைய நண்பனை ராஸ்புட்டீனுக்கு அறிமுகஞ் செய்துவைத்து “நான் குறிப்பிட்ட பெண்மணி இன்னும் வந்து சேரவில்லை. நான் வாசலில் போய் பார்த்து வருகிறேன்” என்று சொல்லிவிட்டு இருவரையும் வைத்துவிட்டு போய்விட்டார். பால் ஸ்டீபானுப் என்ற நண்பரும் தாடி வைத்திருந்தார். பாரமார்த்திக விஷயங்களில் ஈடுபட்டவர்போல காட்டிக்கொண்டார். ஆகவே யூசெளபாவ் போனவுடன் இருவரும் பாரமார்த்திக தர்க்கத்தில் இறங்கினார்கள். பேசிக்கொண்டிருக்கும்போது ராஸ்புட்டீன் மற்றொரு பக்கமிருந்த படத்தைப் பார்த்தான். உடனே விஷம்கலந்த ஒயினை ஸ்டீபானுப் விட்டுக்கொடுத்தார். இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் உபசார வார்த்தைகள் பேசிக்கொண்டு டம்ளரை காலி செய்தார்கள். கொஞ்சநேரமாயிற்று. ராஸ்புட்டீனை விஷம் கொன்றுவிடுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஸ்டீபானுப் ஏமாந்தார்! “என்ன, உடம்பு ஒரு மாதிரியாயிருக்கிறதே?” என்று சொல்லிவிட்டு எழுந்து கொஞ்சம் உலாவினான். சிறிதுநேரஞ் சென்றதும் “சரியாயவிட்டது” என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தான். அவன் சாப்பிட்ட ஒயின் கலந்த விஷம் அதைத் தவிர வேறொன்றும் செய்துவிடவில்லை. ராஸ்புட்டீன் செத்துப்போவானென்று மெத்தைமீது காத்துக்கொண்டிருந்தவர்கள் இவர்கள் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். ராஸ்புஸ்டீன் ஏற்கனவே போதுமான ஒயின் குடித்து வந்திருந்தபடியால், ஸ்டீபனுப் கொடுத்த ஒயினை கொஞ்சம் மாதிரி பார்த்தானே யொழிய மற்றவைகளை அவனுக்குத் தெரியாமல் ஒரு புஷ்பத்தொட்டிக்குள் ஊற்றிவிட்டான. ராஸ்புட்டீன் சாகாமல் உயிருடன் இருப்பதைப் பார்க்கப் பார்க்க ஸ்டீபனுவுக்கு ஆத்திரம் அதிகரித்துக்கொண்டு வந்தது. அவன் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த சிலுவையை எடுத்து பார்த்துக்கொண்டிருந்த சமயத்தில், தன்னுடைய கை துப்பாக்கியை எடுத்து ராஸ்புட்டீனை சுட்டான். ராஸ்புட்டீன் கீழே விழுந்தான். ஸ்டீபனுவுக்கு சந்தோ

ஷம் பொங்கிவிட்டது. "ராஸ்புட்டீன் செத்தான்" என்று கத்திக் கொண்டு மெத்தைக்கு ஓடினன். மெத்தையிலுள்ளவர்கள் துப்பாக்கி சப்தத்தையும், ஸ்டீபனுப் சந்தோஷக் கூச்சலையும் கேட்டவுடன் ஆனந்தமடைந்தார்கள். திடீரென்று ஒருசப்தம் கேட்கவே மெத்தையிலுள்ளவர்கள் வெளியேவந்துபார்க்க, ராஸ்புட்டீன், ரத்தஞ்சொட்ட, வெளியே போக முயற்சிப்பதைக் கண்டார்கள். எல்லாரும் திடுக்கிட்டுப் போனுர்கள். ராஸ்புட்டீன் உண்மையிலேயே தெய்வ அருள் பெற்றவனே என்று சந்தேகங்கொண்டார்கள். விஷமும் கொல்லமுடியவில்லை, துப்பாக்கியும் கொல்ல முடியவில்லை என்ருல், அவனைப்பற்றி என்னென்று நினைப்பது? இத்தடவை ராஸ்புட்டீன் சாகாததற்குக் காரணம், துப்பாக்கி குண்டு காயப்படுத்திற்றே தவிர உடம்பில் ஊடுருவிப்பாயவில்லை. இம்மாதிரி சந்தேகங்களால் குழம்பிக்கொண்டிருக்கும்போது, ராஸ்புட்டீன் அவர்களைப்பார்த்து "என்னைக்கொல்ல முயன்றீர்கள். உங்களால் முடியவில்லை. கடவுள் உங்களுக்கு கூலி கொடுப்பார்" என்று சொல்லிவிட்டு வெளியேபோக கதவைத்திறக்க முயன்ருன். அவன் வெளியே போய்விட்டால் எல்லாம் கெடடுப்போய்விடும். ரஷியாவுக்கு விமோசனமில்லை. ஆனுல் அவனை வெளியே போகாமல் தடுக்க ஒருவருக்கும் தைரியமில்லை. ஸ்டீபனுவுக்கு மட்டும் தைரியம் வந்தது. உடனே கைத்துப்பாக்கியுடன் கீழே ஓடினன். கதவைத் திறக்க முயன்று கொண்டிருந்த ராஸ்புட்டீன் தலையை நோக்கி "பட் பட்" என்று தன் கைத்துப்பாக்கியிலுள்ளவற்றை காலிசெய்தான். பின்னுல் ஒரு மோட்டாரில் அவனைப்போட்டு பனிக்கட்டி நிறைந்த நதியில் கொண்டுபோய் போட்டார்கள்.

சில நாட்கள்வரையில் ராஸ்புட்டீனைப்பற்றி ஊரில் பல பொய் வதந்திகள் பரவின. ராணிக்கு துக்கம்பொறுக்கமுடியவில்லை. சக்கரவர்த்தி போர்முனையிலிருந்தபடியால் தந்திமேல்தந்தியாகக் கொடுத்துக்கொண்டிருந்தார். பலர் கைது செய்யப்பட்டார்கள். சேனுதிபதிகூட பந்தோபஸ்தில் வைக்கப்பட்டார். ராஸ்புட்டீனைப்பற்றி ஒரு வார்த்தைகூட எழுதக்கூடாதென்று பத்திரிகைகளுக்கு உத்தரவிடப்பட்டது. ஆனுல் ரஷியாவெங்கும் ராஸ்புட்டீனைப் பற்றியே பேசிக்கொண் டிருந்தார்கள். கடைசியாக ராஸ்புட்டீன் பிரேதம் அகப்பட்டு அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டது. ராணி தனிமையாக பிரேதத்தின் பக்கத்தில் இருந்து அரை மணிக்குமேல் அழுது புலம்பினுள். "பரிசுத்தபிதா இறந்து போனுல் ராஜ குடும்பமும் அழிந்துபோகும்" என்று ராணி முதலில் ராஸ்புட்டீன் இறந்தைக்கேட்டவுடன் சொன்னுள். அது உண்மையாயிற்று. எனெனில் ராஸ்புட்டீன் இறந்து சில வாரங்களுக்குள்ளாக ரஷிய ராஜகுடும்பமும் புரட்சிக்காரரால் பரலோகம் அனுப்பப்பட்டது.

:: ஆசிரியர் பதில் ::

(நண்பர்கள் அறிய விரும்பும் விஷயங்களைப் பற்றி எழுதி யனுப்பினல், இப் பக்கத்தில் பதில் அளிக்கப்படும். ப-ர்.)


பி. தி. நிரவி :— இந்தியாவிலுள்ள சங்கராச் சாரியார்களின் மடங்களை எண்ணி முடியாது. சென்சஸ் கணக்கில் அவற்றை குறிப்பிடவில்லை. எண்ணிக்கை தெரியவேண்டுமானல் தனிசென்சஸ் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிரிட்டிஷ் மன்னருக்கு சட்டப்படி சகல அதிகாரங்களும் இருக்கின்றன. ஆனல் வழக்கத்தில்எந்த அதிகாரத்தையும்அவர் உபயோகிப்ப தில்லை. மந்திரி சபை செய்கிறபடி விடவேண்டியதுதான். வேறுஎதுவும்செய்து விட முடியாது. இத்தாலி மன்னரின் கதியும் இதுவேதான். முசோலினியை மிஞ்சி அவர் எதுவும் செய்வதில்லை.

இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையிலுள்ள பாகத்திற்கு "ஆரியாவர்த்தம்" என்றுபெயர். அனல் தற்சமயம் இந்தியா முழுவதற்குமே இந்தப் பெயர் வழங்கிவருகிறது. பண்டித ஜவார்லாலுக்கு இந்திராநேரு என்றஒரே புத்திரிதா னுண்டு. இன்னம் விவாக மாகவில்லை. ரஷியாவில் மதங்களின்கதி அதோகதியாய்த் தான் இருக்கிறது.

ராம. சாமி. ரங்கூன் :—ஸ்ரீ. சென்குப்தாவுக்கு இரு புத்திரரும் ஒரு புத்திரியும் உண்டு. இறக்கும்போது 48 வயது. ஸ்ரீ. சுபாஷ் போஸ் பிறந்த வருஷம் 1897. ஜெயக்கர் பம்பாய் மாகாணத்தையும்,சாப்ரூ ஐக்கிய மாகாணத்தையும் சேர்ந்தவர்கள்.

மு. ஈ. நிரவி :—பிரிட்டனில் பார்லிமென்டைப் பொறுத்த வரையில் மூன்று கட்சிகள் உண்டு. கன்சர்வேடிவ், லிபரல், லேபர். 5, 6 சுயேச்சை வாதிகளும் பார்லிமென்டில் இருக்கிறார்கள். 1932-ல் தமிழ்நாட்டில் உற்பத்தியான கதரின் பெறுமானம் ரூபா 13,94,199. இந்தியா முழுவதிலும் உற்பத்தியான கணக்கு கிடைக்கவில்லை. சென்னை மாகாணத்தில் 1931-ம் வருஷ சென்சஸ் கணக்குப்படி "தாழ்த்தப் பட்டவர்கள்" ஜனத் தொகை 72,68,157. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அடங்கிய நாடுகள்: இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து, இந்தியா, இலங்கை, மலாய் நாடுகள், கானடா, நியூபவுண்லன்ட், ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, தென் ஆப்பிரிக்கா, கிழாப்பிரிக்கா, மத்திய ஆப்பிரிக்கா, மோரிஸ், ஜிப்ரால்டர், மால்டா, செப்பிரஸ், தென் அமெரிக்காவில் சில இடங்கள். வேறு சில தீவுகள். எம். கே. ஆச்சாரி, காசி கிருஷ்ணமாச்சாரி, ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரி மூவரும் வெவ்வேறு ஆசாமிகள்



(ரேடியோ, கிராமவாசியை "முன்னேற்றும்" காட்சி!)

"பிராட்காஸ்டிங்" மோகம்

(சி. எல்.)

"காப்பி" அடிக்கிறது என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியும். வெள்ளைக்காரர் இந்த நாட்டிற்கு வந்தார்களோ இல்லையோ, உடனே இந்த "காப்பி" அடிக்கும் குணம் பல இந்தியரைப் பிடித்துக்கொண்டது. ஆளும் ஜாதியாரை அடிமை ஜாதியார் "காப்பி" அடிப்பது வெறும் பிரமை. வெள்ளைக்காரர் செய்வது சரியா இல்லையா என்பதை கொஞ்சமும் யோசிப்பது கிடையாது. அவர்களைப்போல "சூட்" போட வேண்டும்; தொப்பி வைக்க வேண்டும்; சிகரெட் பிடிக்க வேண்டும்; மோட்டாரில் போக வேண்டும்; பிராந்தி குடிக்க வேண்டும். வெள்ளையர் நாடுகளில் புதிது புதிதாக என்னெல்லாம் தோன்றுகின்றனவோ, அவற்றையெல்லாம் தாங்களும் செய்யவேண்டும். வெள்ளையர் செய்வதெல்லாம் நாகரிகம்! வேறு பேச்சே கிடையாது. வெள்ளையர் குணங்களிலும் செய்கைகளிலும் நல்லவை எவ்வளவோ இருக்கின்றன. உதாரணமாக இந்த உலகத்தில் ஒரு வெள்ளைநாடு கூட அடிமை நாடாக இல்லை. ஒரு வெள்ளையன்கூட அடிமையாக வாழ இஷ்டப்பட மாட்டான். இந்தியாவில் 35 கோடி இந்தியர் அடிமைகளாய் வாழுகிறார்கள். இந்த விஷயத்தில் வெள்ளையனை "காப்பி" அடிக்க இந்தியருக்கு புத்திவரக் கூடாதா? வெள்ளையரின் தீரத்தையோ வர்த்தகத் திறமையையோ "காப்பி" அடிக்கக் கூடாதா? அந்த புத்தி கிடையாது. கையில் "ரிஸ்ட்வாட்ச்"ம், கழுத்தில் "டை"யும் கட்டத்தான், இந்த பாழாய்ப்போகிற நாட்டாருக்கு "காப்பி" அடிக்கத் தோன்றுகிறது!

இந்த "காப்பி" அடிக்கும் செய்கை யிருக்கிறதே, இதற்கு ஆங்கிலத்தில் "எப்பிங்" அல்லது "குரங்குச் செய்கை" என்று சொல்லுவார்கள். மனிதனைப் போல நடிக்க, குரங்கு, முயற்சி செய்யுமாம். இந்த "குரங்குச் செய்கை"களுக்கு முடிவே கிடையாது. புதிது புதிதாக வளர்ந்துகொண்டே போகும். இந்தச் செய்கைகளில் புதிதாக ஒன்று வந்து சேர்ந்திருக்கிறது. இதற்குப் பெயர் "பிராட்காஸ்டிங்". பிராட்காஸ்டிங் என்றால் ஆகாசத் தந்தி மூலம் ஒலியைப் பரப்புவது. இந்த வசதி கூடாதென்றோ, இதை பகிஷ்கரிக்க வேண்டுமென்றோ நான் சொல்லவில்லை. கொஞ்சம் பொறுங்கள்.

ஆகாசத்திலுள்ள மின்சாரத்தின் மூலமாக ஒலியை பரப்பும் வழியை கண்டு பிடித்திருக்கிறார்கள். இதை உபயோகிப்பதற்கு இரண்டு சாதனங்கள் வேண்டும். ஒன்று ஒலியை பரப்புவது. இதற்குப் பெயர் "பிராட்காஸ்டிங்" இயந்திரம். மற்றொன்று அப்படி பரப்பிய ஒலிகளை கிரகிப்பது. இதற்குப் பெயர் "ரிசீவிங்" செட். பிராட்காஸ்டிங் இயந்திரத்தின் சக்தியைப் பொறுத்தே எத்தனை மைல்களுக்கு அது ஒலியை பரப்பமுடியும் என்பது இருக்கிறது. அதேமாதிரி "ரிசீவிங்" இயந்திரத்தின் சக்தியைப் பொறுத்து, எத்தனை மைல்களுக்கு அப்புறமிருந்து பரப்பும் ஒலியை கிரகிக்கலாம் என்பது இருக்கிறது. இந்த விஷயத்தை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

சென்னை கார்ப்பரேஷனில் பிராட்காஸ்டிங் இயந்திரம் இருக்கிறது. 10 மைல் சுற்றளவுக்கே அது ஒலியை பரப்ப முடியும். ஆகவே சென்னை நகரிலுள்ளவர்களே அதன் செய்திகளையோ, பேச்சுக்களையோ, பாட்டுக்களையோ கேட்க முடியும். சென்னை மாகாணத்திலுள்ள மற்றவர்களுக்கு "இந்த பாக்கியம்" கிடைக்கவில்லையாம். அதை ஒரு பெரிய புகாராக சிலர் நினைத்து கஷ்டப்பட்டு, இம்மாதம் 2உ சென்னை சட்டசபையில் கண்ணீர் வடித்தார்கள். "நாகரிகம் வேண்டாமா? நாமும் மற்ற நாடுகளோடு முன்னேற வேண்டாமா? கேவலம் இலங்கையில் நடத்தும்போது இந்த மாகாணத்தில் மட்டும் ஏன் நடத்தக்கூடாது?" என்று சில அங்கத்தினர்கள் பிரலாபப் பட்டார்கள். ஆனால் ஒரு அங்கத்தினர் தைரியமாக எழுந்து ஆட்சேபித்ததைக் கண்டு நான் சந்தோஷமடைகிறேன். அவர் பாளையங்கோட்டை ஸ்ரீ. எம். தேவதாசன். அவர் பேச்சு ஏற்கவில்லை. நியாயம் சுலபமாய் ஏற்கப்படுமா? சர்க்கார் அங்கத்தினர் பதில் சொல்லும்போது, ஸ்ரீ. தேவதாசன் தவறுதலாய் நினைத்து பேசிவிட்டதாகச் சொன்னார். "ஹிந்து" பத்திரிகை யிருக்கிறதே உங்களுக்குத் தெரியுமல்லவா? அதற்குக்

கூட ஸ்ரீ. தேவதாசனின் வாதங்கள் பிடிக்கவில்லை. அவர் பேச்சை மற்றவர்கள் ஏற்காமல் போனதற்காக சந்தோஷப்படுகிறது! பிராட்காஸ்டிங் அவசியம் வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்கிறது. சரி, இனி இந்த விஷயத்தை அலசிப் பார்ப்போம். இப்பொழுது கவனிக்க வேண்டிய விஷயங்கள் நான்கு:

1. "பிராட் காஸ்டிங்" ஏற்படுத்துவதால் நன்மையா, தின்மையா ?

2. இலங்கைக்கும், சென்னைக்கும் பொருத்தமுண்டா ?

3. இந்த ஏற்பாட்டிற்கு எவ்வளவு பணம் செலவாகும் ?

4. தற்கால நிலைமையில் இந்தச் செலவிற்குத் தக்க நன்மை கிடைக்குமா ?

இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்லுகிறேன்.

1. துப்பாக்கியால் தற்காப்பு செய்யவும் முடியும். மற்றொருவனை கொலை செய்யவும் முடியும். அடிமை நாட்டிற்கு இந்த பிராட்காஸ்டிங், வெள்ளையரின் பெருமையைக் காட்டவும், சர்க்காரின்பிடிப்பை தளரவிடாமல்செய்யவும் மட்டுமே உபயோகமாயிருக்கும். சுயராஜ்யம் கிடைத்தால்தான் இதன் நற்பலனை ஜனங்கள் அநுபவிக்கலாம்.



2. இலங்கையின் விஸ்தீரணம் 25480-சதுர மைல். சென்னை மாகாணத்தின் விஸ்தீரணம் 142000-சதுர மைல். இலங்கையின் ஜனத்தொகை 45-லட்சம். சென்னை மாகாண ஜனத்தொகை $4\frac{1}{2}$-கோடி. இலங்கையில் பெரும்பாலோர் பேசுவது சிங்களபாஷை. சென்னையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய பல பாஷைகள் இருக்கின்றன. பிராட்காஸ்டிங் ஸ்டேஷன் ஏற்படுத்தினுல் இத்தனை பாஷைகளிலும் சொல்லியாகவேண்டும். ஆகவே இலங்கையை சென்னை மாகாணத்தோடு ஒப்பிட்டு பேசுவது பொருந்தாது.

3. சென்னையில் மாகாணமெங்கும் ஒலி பரப்பக்கூடிய இயந்திரம் ஏற்படுத்தவேண்டுமானுல் 5-லட்சம் ரூபாயாவது குறைந்தது

வேண்டும். அப்புறம் நடத்துகிற செலவு வேறு இருக்கிறது. இனி ஒவ்வொரு கிராமத்திலும் ரிசீவிங்செட் வேண்டும். ஒன்றின் விலை சுமார் ரூ. 500-இதற்கு வருஷாந்தரச்செலவு ரூ. 70-ஆகும். தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக்கொள்ளுவோம். அங்கே சுமார் 1500 கிராமங்கள் இருக்கின்றன. இவைகளுக்கு ரிசீவிங் செட்டுகள் வாங்கவேண்டுமானால், முதலில் 7½-லட்சம் ரூபாய் வேண்டும். அப்புறம் வருஷா வருஷம் லட்சம் ரூபாய் செலவழிக்கவேண்டும். ஒரு ஜில்லாவிற்கு இவ்வளவென்றால், மாகாணத்திற்கு எவ்வளவு வேண்டுமென்று பாருங்கள்.

4 இவ்வளவு பணம் செலவழிப்பதால் ஏற்படும் பலன் என்ன? அதைத்தெரியாமல் தான் சட்டசபையில் சில அங்கத்தினர்களும், "ஹிந்து" பத்திரிகையும் "பிராட்காஸ்டிங், பிராட்காஸ்டிங்" என்று கோஷஞ் செய்கிறார்கள். செலவுக்குத்தக்க பலன் கிடையாது.

பிராட்காஸ்டிங் ஏற்பாட்டால் மாலையில் கிராமவாசிகள் ஆனந்தமாய் சங்கீதம் கேட்கலாம் என்பது உண்மையே. ஆனால் வயிற்றிற்கே தாளம் போடும்போது சங்கீதம் வேறு வேண்டியிருக்கிறதா? முதலில் 500-ரூபாயும், பின்னால் வருஷா வருஷம் 70 ரூபாயும் கொடுக்கக்கூடிய நிலைமையில் கிராமங்கள் இருக்கின்றனவா? அல்லது சர்க்காரிடம் தான் பணம் இருக்கிறதா? இதை சுட்டிக்காட்டி ஸ்ரீ. தேவதாசன் சட்டசபையில் பேசினார். அதாவது:—"கிராம ஜனங்கள் தரித்திரத்தால் படும் துன்பம் கொஞ்சமல்ல. அவர்களுக்கு கல்வி யளிக்க போதிய வசதிகள் இல்லை. பணமில்லையென்று பல பள்ளிக்கூடங்களை ஸ்தல ஸ்தாபனங்களோ, சர்க்காரோ மூடிவிட்டார்கள். இனி வரிபோட்டால் ஜனங்கள் தாங்கமாட்டார்களென்று சர்க்காரே சொல்லுகிறார்கள். அவசியமான செலவிற்கே பணத்தைக்காணவில்லை. ஆரம்பக்கல்விக்குவேண்டிய பணமில்லை. இப்பொழுது உடனே அவசியமானது ஆரம்பக் கல்வியே யொழிய, பிராட்காஸ்டிங் அல்ல."

இந்தப்பேச்சைக் கேட்டபின்புகூட சென்னை சட்டசபை அங்கத்தினர்களில் பலர், பிராட்காஸ்டிங் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பது ஆச்சரியமே. கிராமங்களில் பிராட்காஸ்டிங் பரவவேண்டுமென்று சொல்லுவது வெறும் டம்பத்தைத் தவிர வேறில்லை. குடிக்க கூழில்லாதவன், கொப்பளிக்க பன்னீர் கேட்பதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? வெள்ளையரை "காப்பி" யடிக்கும் பாழாய்ப்போகிற அந்த "நாகரிக மோகத்தைத்" தவிர இந்த பிராட்காஸ்டிங் பேச்சில் வேறு ஏதாவது பொருளுண்டா?

"காந்தி" பரிசுகள்

முதல் பரிசு.

சரியான விடை:— 1. பிரசங்கி, 2. சாம்பார், 3. கசகசா. 4. சந்திரன், 5. மகாத்மா, 6. கயிலாயம், 7. கலிங்கம், 8. கற்பகம், 9. தாமரை, 10. தம்புரு, 11. தலைவிதி, 12. தாடகை, 13. சிற்பான், 14. சம்பங்கி, 15. பணியார், 16. சர்ப்பம்.

பரிசு பெற்றவர்கள்:— இதற்கு சரியான விடை ஒருவர்கூட அனுப்பவில்லை. ஒரு தவறுள்ள விடைகளாக 52 பேர் அனுப்பி யிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் பரிசு அனுப்பப்பட்டிருக்கிறது.

இரண்டாவது பரிசு.

சரியான விடை:— 1. நாமகள், 2. கோமான், 3. மகபதி. 4. மகரம், 5. லட்சுமி, 6. லவணம், 7. லாமிச்சை, 8. நீலகண்டன். 9. நாவலர், 10. வசந்தம், 11. வங்காளம், 12. வச்சிரம், 13. கடம்பன், 14. கிரீடம், 15. கோடங்கி, 16. தடாகம்.

பரிசு பெற்றவர்கள்:— இதற்கு விடை அனுப்பியவர்களே மொத்தம் 80 பேர் தான். இந்த விடைகளிலும் ஒன்றுகூட சரியா யில்லை. ஆகவே இவர்கள் எல்லோருக்கும், ஒவ்வொருவரும் பிர வேசக் கட்டணமாக அனுப்பிய 2-அணா ஸ்டாம்புக்கு 4-அணா பெறும்படியான ஆகஸ்ட் 20ந் தேதி "காந்தி" மலரையும், செப் டம்பர் 5ந் தேதி "காந்தி" மலரையும் அனுப்பிவைக்கிறோம்.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதிய வர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக் கப்படும்.

Printed at the "Tamil Nadu" Press, 41-42, Mukkar Nallamuthu St., Madras. Published by T.S. Chockalingam (Editor & Proprietor) "Gandhi" Office, 29, Sembudoss St., Madras.




காந்தி

ஆசிரியர்: தெ. ச. சொக்கலிங்கம்

மாலை 2. | 1933 செப்டம்பர் 5௳ 29 செம்புதாஸ் தெரு, சென்னை. | மலர் 2.

அட்டவணை.

அடக்குமுறை கொள்கை



சர்க்காருக்குள்ள பொய் கௌரவம் நீங்கினாலொழிய இதன் ஓட்டத்திற்கு முடிவு கிடையாது.

அடக்குமுறை தர்பார்

அடக்குமுறை என்பது ஒரு ஆபத்தான நெருப்பு. அதை உபயோகிக்கிறதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். சர்க்கார் தங்களிடமுள்ள பலத்தை உபயோகிக்க, அவசியமில்லாமல் நிர்வாகத்தை நடத்திக்கொண்டு போகிறவரையில்தான், அந்த சர்க்காரிடம் ஜனங்களுக்கு மதிப்பிருக்கும். என்று அடக்குமுறையில் இறங்கினர்களோ அன்றே அவர்களுக்கு ஜனங்களிடம் பிரியமில்லை யென்று ஏற்படுகிறது. எப்பொழுது ஜனங்களிடம் பிரியமோ நம்பிக்கையோ, இல்லையோ உடனே ஜனங்களுக்கும் சர்க்காரிடமுள்ள பிரியமும் மதிப்பும் குறைகின்றன. இந்த மதிப்பு குறையக் குறைய, சர்க்கார் தங்கள் காரியங்களை தங்கள் சொந்த பலத்தைக் கொண்டுதான் நடத்தும்படியாகிறது. உண்மையான கௌரவம் போய் அந்த இடத்தில் பொய் கௌரவம் வருகிறது. ஜனங்களுக்காக சர்க்கார் என்ற நினைப்பு மாறி, சர்க்காருக்காக ஜனங்கள் என்ற நினைப்பு ஏற்படுகிறது. இந்த நினைப்பு அதிசமாக ஆக அடக்கு முறையும் அதிகமாகிறது. ஆகவே, அடக்குமுறையால் உற்பத்தியான பொய் கௌரவம், அடக்குமுறையை அதிகரிக்க தூண்டுகோலாய் நிற்கிறது. இரண்டும் ஒன்றையொன்று தூண்டுவதால், இந்த தகராறுக்கு முடிவென்பதே இல்லாமல் வளருகிறது. (படத்தை பார்க்கவும்)

இந்தியாவின் தற்கால நிலைமை இதுதான். 1930—31-ல் ஒரு வருஷகாலம் அவசரச்சட்ட ராஜ்யம் நடைபெற்றது. சென்ற வருஷம் ஆரம்பமான அவசரச்சட்ட ராஜ்யம் 20 மாதங்களாக நடந்துவருகிறது. அவசரச்சட்டங்களை நிரந்தரச் சட்டமாக்கி விட்டபடியால், இந்தியா நிரந்தரமாக அடக்கு முறைகளால் ஆளப்பட்டு வருகிறது என்றே சொல்லவேண்டும். சென்ற 20 மாதங்களாக அடக்குமுறை ராஜ்யம் நடக்கிறதே, இதனல் ஏதாவது பலன் ஏற்பட்டிருக்கிறதா? தேசத்தில் அமைதி ஏற்பட்டிருக்கிறதா? சாக்ரிடம் ஜனங்களுக்கு நல்லெண்ணம் அதிகமாயிருக்கிறதா?

காங்கிரஸ் வேலைகள் முன்போல தீவிரமாக நடைபெற முடியாமல் அவசரச்சட்டங்கள் செய்திருக்கின்றன என்பது உண்மையே. ஆனல் சர்க்கார் எதிர்பார்த்தபடி ஜனங்களின் தேசிய உணர்ச்சியை நசுக்கிவிட முடியவில்லை. சர். சி. பி. ராமசாமி ஐயர், இந்திய சர்க்காரில் தற்காலீக சட்டமந்திரியா யிருந்தார். அச்சமயம் அவர் பேசியபோது "எந்த அடக்கு முறைகளாலும் தேசிய உணர்ச்சியை அடக்கிவிட முடியா"தென்று ஒப்புக்கொண்டார். சரி, தேசிய உணர்ச்சியை அடக்கத்தான் முடியவில்லை, நாட்டில் அமைதியாவது ஏற்பட்டிருக்கிறதா? அதுவுமில்லை. அவசரச்

சட்ட ஆட்சியையும், லண்டன் மகாநாட்டு யோக்கியதையையும் பார்த்து ஜனங்கள் அதிகமாய் அதிருப்தி யடைந்திருக்கிறார்கள். சரி, சர்க்காரிடம் மதிப்பாவது அதிகமாயிருக்கிறதா? அதுவுமில்லை. ஏதோ மின்னல்போல அடக்குமுறைகள் தோன்றி மறையுமானால், அடக்குமுறையால் கொஞ்சம் பலன் ஏற்படலாம். வருஷத்தில் 365 நாட்களிலும் அடக்குமுறை யென்றால், யாருக்குத்தான் பயமிருக்கும்? அடக்குமுறை ஆட்சி, ஜனங்களுக்கு தினசரி படித்தரங்களில் ஒன்றாய் அமைந்துவிட்டது. முங்கக் குளித்தவனுக்கு குளிர் ஏது? என்று ஒரு பழமொழி யுண்டு. அம்மாதிரி அடக்குமுறை ஆட்சி, ஜனங்களுக்கு பயங்கொடுத்து வந்தது நின்றுபோயிற்று.

ஜார் சக்கரவர்த்தியிடம் பொக்கிஷ மந்திரியாயிருந்த கவுன்ட் விட்டி என்பவர் அடக்கு முறையைப் பற்றி சொல்லியதாவது:—

"சர்க்கார் செல்வாக்கையும் அந்தஸ்தையும் குறைப்பவை எவை? அடிக்கடி மிக விரிவாக உபயோகிக்கும் அடக்குமுறைகளே. இவற்றை விட சர்க்கார் அதிகாரத்திற்கு உலை வைக்கக்கூடியவை வேறு கிடையா. அடக்குமுறைகள் எப்பொழுதும் ஆபத்தானவை. அவற்றை விடாமல் உபயோகித்துக்கொண்டுபோனால், அவை பயங்கரமான விபத்துக்களை உண்டாக்கி விடும்".

இந்தியாவில் 20 மாதங்களாக அடக்குமுறை ஆட்சி செய்தாய் விட்டது. இதனால் இதுவரை ஏற்பட்ட பலனும் எதுவுமில்லை. ஆகவே சர்க்கார் இதைப்பற்றி யோசிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. 20 மாதங்களாக அடக்குமுறை நடத்தியும் பலன் கொடுக்கவில்லையென்றால், இனி பலன் கொடுக்குமென்று எதிர்பார்ப்பது வீண் கனவு. அடக்குமுறைகள் பலனளித்திருக்கின்றன என்றால், 20 மாதங்களாக அவை அமுலிலிருந்ததே அதிகமாகையால், இனி இருக்க கொஞ்சமும் நியாயம் கிடையாது. இந்நாட்டில் நிரந்தரமான சமாதானம் ஏற்பட வேண்டுமானால், அதற்கு முதலில் செய்யவேண்டிய வேலை இந்த அடக்குமுறைச் சட்டங்களை தொலைப்பதாகும். அப்படிச்செய்ய முடியாமல் சர்க்காரின் பொய் கௌரவம் குறுக்கிடுகிறதென்பதை நாம் அறிவோம்.

சென்ற ஜுலைமாதம் மகாத்மா காந்தி வைசிராயை பேட்டி காண விரும்பியபோது, வைசிராய் சம்மதித்திருந்தால் இந்நாட்டில் இதற்குள்ளாக சமாதானம் ஒரு வகையாக நிலவியிருக்கும். பேட்டிகொடுக்க இடையூறாய் வந்து நின்றது சர்க்காரின் பொய் கௌரவமே. பின்னால் மகாத்மா ஜெயிலுக்குச் சென்றார். அங்கு ஹரிஜன பிரசாரத்திற்கு பழைய சௌகரியங்களை கொடுக்க மறுத்ததற்கும் பொய் கௌரவமே காரணம். மகாத்மா இதற்காக பட்டினி இருந்தார். பட்டினி ஆரம்பித்த சமயத்தில் இந்த சர்க்கார் என்ன சொன்னார்கள் தெரியுமா? "நாங்கள் ஜெயிலுக்குள் இவ்

வளவு சௌகரியங்கள்தான் கொடுக்கமுடியும். இதற்குமேல் கொடுக்கவே முடியாது. அதிக சௌகரியங்கள் வேண்டுமானால், இனி சட்டமறுப்பில் சேருவதில்லையென்று ஸ்ரீ. காந்தி வாக்குறுதி கொடுத்தால், அவரை விடுதலைசெய்து விடுகிறோம்." என்று சொன்னார். அதே சர்க்கார், அப்புறம் யாதொரு நிபந்தனையுமில்லாமல் மகாத்மாவை விடுவித்து விட்டார்கள். இவையெல்லாவற்றையும் கவனித்தால், இந்த சர்க்காரிடமுள்ள வீண் பிடிவாதம் கொஞ்சங்கூடக் குறைந்ததாகத் தெரியவில்லை.

காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள். கண் பார்வை ஒழுங்காயிருந்தால் பார்க்கிறவைகளின் உண்மையான நிறம் தெரியும். காமாலை வந்தவனிடம் வெள்ளை நிறமென்று என்னதான் சொன்னாலும் அவன் ஒப்புக்கொள்ளுவானா? அதைப்போல சர்க்காரின் பார்வையே மாறியிருக்கிறது. இர்வின் வைசிராயாக இருந்தபோது இந்நாட்டு நிலைமை வேறு விதமாக அவருக்கு தோன்றியது. நிலைமையை சீர்ப்படுத்துவதற்காக காந்தி—இர்வின் ஒப்பந்தம் செய்தார். அதன் பின்பு இந்நாட்டில் சமரசம் நிலவி விட்டதாக திருப்தி யடைந்தார். அப்பொழுதிருந்த பிரிட்டிஷ் சர்க்காரும் அதேமாதிரி அபிப்பிராயப் பட்டார்கள். ஆனால் அதே நிலைமை லார்ட் வில்லிங்டனுக்கு எப்படி தோன்றுகிறது தெரியுமா? சென்ற மாதம் 28வ சிம்லாவில் அவர் பேசியபோது, "நான் இந்நாட்டிற்கு வந்த சமயத்தில் எங்கும் அதிருப்தியை கண்டேன். இப்பொழுது தேசமெங்கும் சட்டமும், சமாதானமும் நிலை நிறுத்தப்பட்டு விட்டன" என்று சொன்னார். ஆகவே காந்தி—இர்வின் ஒப்பந்தத்தால் நாட்டில் ஏற்பட்டிருந்த திருப்தி, இவருக்கு அதிருப்தியாக தோன்றியதாய் ஏற்படுகிறது. அதிருப்தி என்று இவர் குறிப்பிடுவது, சர்க்கார் அதிகாரிகளை குறிப்பிடுவதாயிருக்கலாம். மொத்தத்தில் லார்ட் இர்வின் பார்வைக்கும், இவர் பார்வைக்கும், கர்னல் வெட்ஜ்வுட் பென் பார்வைக்கும், சர். சாமுவேல் ஹோர் பார்வைக்கும் நேர் வித்தியாசம் இருக்கிறது தெளிவாகிறது. இந்த நிலைமையில் காந்தி—இர்வின் உடன்படிக்கை வில்லிங்டன் ஆட்சியில் உடைந்துபோனதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் இப்பொழுதுள்ள நிலைமையை இப்படியே விட்டு வைத்துக்கொண்டிருக்கப் போகிறார்களா? இந்நாட்டில் சமாதானம் ஏற்பட்டுவிட்டதென்று உண்மையாகவே லார்ட் வில்லிங்டன் நினைக்கிறாரா? அப்படி நினைப்பாரானால் அவருக்கு யோசனை சக்தி குறைந்துவிட்டதென்றே தோன்றுகிறது. லார்ட் வில்லிங்டன் என்னதான் மனப்பால் குடித்தாலும், அடக்குமுறை ஆட்சி தொலைந்து, மகாத்மாவோடு சமரசம் செய்து கொண்டாலொழிய இந்நாட்டில் அமைதி ஏற்படவே முடியாது.

காந்தி வாமனவதாரம்

(கே. சீனிவாசன் பி. ஏ.)

மகாவிஷ்ணுவின் அவதார விசேஷங்களில் வாமனவதாரம் ஒன்று. கதை பலரும் அறிந்த பழங் கதை. திரிலோகத்தையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வந்து ஆட்சி புரிந்து வந்தான் பிரஹலாதனின் பேரனான பலிச்சக்கிரவர்த்தி. பலி மஹாபலியாக விளங்கினான். "நானே என்று கர்வித்து" நாட்டாண்மை செலுத்திவந்த பலிச்சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தையும் ஆணவத்தையும் குறைக்கவேண்டியது ஸாது ரக்ஷகனான விஷ்ணுவைச் சார்ந்தது. வாமன ரூபமாகவந்து யாகசாலை வாசலில்நின்றுகொண்டு மூன்றடி மண் கேட்டார். கேட்டமண்ணை பலிச்சக்கிரவர்த்தி தானமாகக் கொடுத்தார். தானம்பெற்ற வாமனன் திருவிக்ரமனாக மாறினான். திரிபுவனமும் திருமாலின் ஈரடி அளவிற்கு வரவில்லை. மூன்றாவது அடிக்கு மஹாபலி முடியைக் கொடுத்தார். கர்வம் பங்கம் அடைந்தது. மமதை அழிந்துபோயிற்று. இது எந்த யுகத்தில் நடந்ததோ தெரியாது. பாகவதத்தைப் புரட்டிப் பார்த்தால் ஒருவேளை தெரியலாம்.

விஷ்ணுவின் வாமனவதாரம் மெய்யோ பொய்யோ, காந்தியின் வாமனவதாரத்தை இன்று கண்டுவிட்டோம். ஆம், இன்று, இந்த கலியுகத்தில் கண்டுவிட்டோம். நடந்து பத்து நாட்களாகவில்லை. ஒன்று இரண்டு சிறிய அம்சங்களில் வேறுபாடுகள் காணலாம். ஆயினும் நிகழ்ச்சிகளின் பெரும்போக்கு இரண்டிலும் ஒற்றுமைப்பட்டது. சிறைப்பட்ட காந்தி வாமன ரூபம் தாங்கி ஹரிஜன சேவைக்கு வசதிகள் வேண்டும் என்று வரங்கேட்டார். தந்தோமென்று அலட்சியமாக பதில் உரைத்தார்கள் அதிகாரிகள். வாமன ரூபத்தை நீக்கி திருவிக்கிரம உருக்கொண்டார் காந்தி. சர்க்கார் கொடுத்த வசதிகள் ஈரடிக்கே காணவில்லை. "மூன்றாவது அடிக்கு இடம் எங்கே?" என்று காந்தி கேட்டார். மஹாபலியைப்போல நேர்மையுடன் முடியைக் கொடுக்காமல் சர்க்கார் தகராறு செய்தார்கள். காந்தி தவம் தொடங்கினார். எரவாடா சிறையில் அவரை வைத்திருக்க இயலாது போயிற்று. சட்டங்களால் பிணித்தபடியே அவரை வெளியே கொண்டு வந்தார்கள். காந்தியின் தவ வளர்ச்சியைத் தடுக்க வழி அறியாதவர்களாக ஸர்க்கார்

தளர்ச்சி உற்றனர். முடிவாக காந்தியைப் பிணித்திருந்த பாசங்கள் நைந்து விழுந்தன. கொந்தளித்துக்கொண்டிருந்த உலகமாந்தர் மனத்திற்கு அமைதி வந்தது.

ஹரிஜன சேவை மூலமாக வளர்ந்த காந்தியைக் கட்டிப் பிடித்து சிறையில் வைப்பது என்பது முடியாத காரியமாய் முடிந்தது. இச் சேவை காரணமாக காந்தி பெற்றிருக்கும் புகழ் உடலுக்கு பூவுலகுதான் எல்லை. இவ்வுடலைப் பிணிக்கத் தளையில்லை. இதை வைக்கச் சிறையில்லை. எரவாடாவும் கொள்ளாது. இந்த ஏகாதிபத்தியமும் போதாது.

சாந்தோக்ய உபநிஷதத்தில் நாரத முனிவர் ஸநத்குமார ரிஷியை அணுகி "ஐயா, நூல்கள் பலவாகப் படித்திருக்கிறேன். வித்தைகள் வெகுவாகக் கற்றிருக்கிறேன். ஆயினும் என்னை துக்கம் விட்டபாடில்லை. இந்தத் துயர வெள்ளத்திற்கு கரை உண்டா இல்லையா, அதை எனக்கு காட்டமாட்டீர்களா?" என்று கேட்கிறார். ஸநத்குமார மகரிஷி நாரதரின் மனத்தை பக்குவப் படுத்த பலவாறு உபதேசங்கள் செய்கிறார். ஆத்மதத்துவத்தை விளக்கிக் காட்டும் வழியில் இதைவிட இது உயர்ந்தது, இதைவிட இது உயர்ந்தது என்று ஏணிப்படி முறையாகப் பல மனோ நிலைகளை எடுத்துக் காட்டுகிறார். ஒரு இடத்தில் அறிவைக் காட்டிவிட்டு அறிவினும் உயர்ந்தது திடம் என்கிறார். திடமுள்ள ஒரு மனிதன் அறிவாளிகள் நூறு பேரைக் கலங்கவைப்பான் என்று உபமித்துக் கூறுகிறார். திட மனம் படைத்த காந்தி ஒருவர் நுண்ணறிவுபடைத்த சர்க்கார் அதிகாரிகள் நூறு பேரைக் கலங்கவைத்து விட்டதைக் கண்ணெதிரே காண்கிறோம். திடம், பலம் என்றால் உடல்வலிவு, புஜபராக்கிரமம் என்பதுமட்டுமல்ல. உடலைத்தாண்டி புஜத்தைத் தவிர்த்து, உள்ளத்தில் உரம் வேண்டும். சலியாத மனமும், உடையாத உள்ளமும் பலம். இலட்சியத்தில் ஒன்றுபட்டால்தான் மனம் சலியாது. உள்ளம் உடையாது. உயர்ந்த இலட்சியத்தில் ஈடுபட்டு சீலத்தோடு ஒழுகிவரும் புருஷரை எதிர்க்க எவராலும் முடியாது. அவர் எதிர்ப்பையும் தாங்க முடியாது.

"ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்"

என்பது வள்ளுவனார் வாக்கு. "காத்தற்கு அருமையான உயர்ந்த விரதங்களை யுடையவர் வெகுள்வாராயின், அவர் ஆற்றலால் இந்திரனும் தன் பதம் இழந்து கெடும்" என்பது பரிமேலழகரின் உரை

குறிப்புகள்

மகாத்மாவின் செல்வாக்கு

“சென்ற செப்டம்பர் மாதம் மகாத்மா பட்டினி ஆரம்பித்த போது ஜனங்கள் மிகுந்த பரபரப்போடு இருந்தார்கள். காந்தியைக் காப்பாற்ற எதுவும் செய்யத்தயாரா யிருந்தார்கள். புனா ஒப்பந்தம் இந்த சமயத்திலேயே ஏற்பட்டது.” என்று சர். ஹெயிக் இந்தியா சட்ட சபையில் சொன்னார். மகாத்மாவைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆவல் ஜனங்களுக்கிருந்ததே யொழிய புனா ஒப்பந்தம் சரியா, சரியில்லையா என்று யோசிக்க அவர்களுக்கு தோன்றவில்லை யென்பது ஹெயிக்கின் வாதம். இதில் எதுவும் தவறு இருப்பதாய் நமக்குத் தெரியவில்லை. பொது விஷயங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தனிநபரும் யோசிக்கவோ தலையிடவோ முடியாது. தலைவரை பின்பற்ற வேண்டியதே ஜனங்களின் கடமை. மகாத்மா உயிரைக் காப்பாற்ற ஜனங்களுக்கு அவ்வளவு ஆவல் இருக்கிறதென்றால், மகாத்மாவுக்கு ஜனங்களிடம் செல்வாக்கு எவ்வளவு இருக்கிறதென்பதையே அது காட்டுகிறது. அந்த செல்வாக்கு எப்படி ஏற்பட்டது? ஜனங்களின் கஷ்ட நஷ்டங்களை தம்முடையதாக அவர் பாவிப்பதாலேயே ஏற்பட்டது. ஆகவே ஜனங்களுக்கு எது நன்மை எது தீமை என்று முடிவுசெய்வதில் மகாத்மாவை விட வேறு யாருக்கு இந்த நாட்டில் உரிமையுண்டு? ஹெயிக் இந்த மோசமான வாதஞ்செய்ய எழுந்திருக்காமல் மௌனமாய் இருந்திருந்தால் எவ்வளவோ நன்றா யிருந்திருக்கும்.

மெயிலுக்கு பந்தயம்.

இந்தியரின் சுயராஜ்ய திறமையில் திடீரென்று சென்னை “மெயில்” பத்திரிகைக்கு அநுதாபம் கிளம்பி யிருக்கிறது. மகாத்மா பட்டினியால் பயமுறுத்தி சர்க்கரை பணிய வைத்துவிட்டதாகவும், இம்மாதிரி இனியும் நடப்பதென்றால் நிர்வாகமே கெட்டுப்போகுமென்றும் சொல்லுகிறது. மகாத்மா ஜெயிலுக்குள் போன சமயமெல்லாம் இப்படி பயமுறுத்துவதானால், இதை இப்படியே விட்டு விடுவதா என்று கேட்கிறது. அதன் நோக்கம் என்ன தெரியுமா? “மகாத்மா ஜெயிலுக்குள் இனி பட்டினி ஆரம்பித்தால் பலவந்தமாய் உணவூட்டவேண்டும். அப்படிச் செய்தால் பொது ஜன கோதிப்பு அதிகமாய்விடும். ஆகவே சர்க்கார் அம்மாதிரி செய்ய ஜனங்கள் தைரியங் கொடுக்கவேண்டும்.” இதை நேரடியாகக் கேட்க அதற்கு தைரியமில்லை. ஆகவே சுற்றி வளைத்துக்கொண்டு போகிறது. சுய

ராஜ்யம் பெற்றபின்பு இம்மாதிரி பிரச்னைகளை தீர்க்க இந்தியருக்கு சக்தி யிருக்கிறதென்பதை காட்ட வேண்டுமாம். மிகவும் சரி. ஜனங்களின் ஆதரவு வேண்டுமென்று சென்னை மெயில் கேட்பது சரி. ஜனங்களின் அபிப்பிராயப்படி இந்த சர்க்கார் நடக்கும்படி செய்வதாக மெயில் வாக்குறுதி கொடுக்க முடியுமா? வாக்குறுதி கொடுக்குமானல், அதனிடம் ஒரு பந்தயம் போடுகிறோம். ஜனங்கள் அபிப்பிராயப்படி சர்க்கார் நடக்கவேண்டியிருப்பதாக மெயில் சொல்லுகிறது. மிகவும் சரி. நாளையே ஒரு ஓட் எடுத்தல் நடத்துவோம். அந்தத் தேர்தலில், ஜனங்களுக்கு வில்லிங்டன் அடக்குமுறை ஆட்சி பிடித்தமா என்பதைப்பற்றி ஓட் எடுப்போம். ஜனங்கள் அதில் எம்மாதிரி முடிவு கூறுகிறார்களோ அம்மாதிரி சர்க்கார் நடக்கத் தயாராயிருக்கிறதா?

தீபாவளியும் கதரும்

தீபாவளி என்றால் உடனே கதர் ஞாபகந்தான் வருகிறது. சென்ற வருஷம் கதர் விற்பனை ரொம்பக் குறைவு. அவசரச் சட்டங்களுக்கும் கதருக்கும் விரோதமென்று பலர் நினைத்துக்கொண்டார்கள் போலிருக்கிறது. அம்மாதிரி ஒன்றுமில்லை. தைரியமாக எல்லாரும் கதர் கட்டலாம். கதர் சட்ட விரோதமான துணியென்று சர்க்கார் விளம்பரப் படுத்தவுமில்லை; அல்லது காங்கிரஸ் இயக்கத்திற்கு உதவி செய்வதாக கதரை, கிரிமினல் திருத்தச் சட்டம் 17-வது பிரிவுப்படி ஜெயிலுக்குள் போடவுமில்லை. ஆகவே இந்த தீபாவளிக்காவது எல்லாரும் கதர் கட்டும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சிம்லா சல்லாபம்

இம்மாதம் இந்தியா, பிரிட்டன், ஜப்பான் மூன்று நாட்டு துணி நெய்பவர்கள் மகாநாடு பம்பாயில் நடக்கப்போகிறது. சர்க்கார் பிரதிநிதிகள் கூட்டம் சிம்லாவில் நடைபெறும். இந்த மகாநாடு எதற்காக தெரியுமா? பச்சையாகச் சொன்னல், இந்தியாவின் துணி வர்த்தகத்தை எப்படி பங்குபோடுவது என்பதற்காகவே இந்த மகாநாடு. ஒவ்வொரு நாடும் தன் வர்த்தகத்தை எப்படி அபிவிருத்தி செய்யலாமென்று மகாநாடு கூட்டுகிறது. ஆனல் இந்த நாட்டிலோ, இந்தியாவின் வர்த்தகத்தை பிற நாட்டார் எப்படி பங்கு போடலாம் என்பதற்காக மகாநாடு கூடுகிறது! என்ன அதிசயம்! பிரிட்டன் இந்நாட்டில் வெகு காலமாய் துணி வர்த்தகம் செய்கிறதாம். அதற்காக இனியும் பங்கு வேண்டுமாம். ஜப்பான் இந்நாட்டு பருத்தியை வாங்குகிறதனல் அதற்கும் பங்கு வேண்டுமாம். என்ன அருமையான வாதம்! இதைப்போல வேறு எந்த நாட்டிலாவது கேட்க முடியுமா?



படார்சாமி கடிதங்கள்

(படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் படார் படாரென்று பகிரங்க மாகவே எழுதுவார்.)

லார்ட் வில்லிங்டன்,
சிம்லா

பிரபுவே,

சிம்லாவில் கூடிய பாஞ்சால பைபிள் சங்கத்தின் வருஷாந்தரக் கூட்டத்தில், நீர் தலைமை வகித்துப் பேசியது அருமையான பொன் மொழிகள். "மதத்தை அடிப்படையாகக் கொண்டால்தான் எந்த நாடும் செழிப்படைய முடியுமென்பதை நாம் எல்லோரும் மனதில் கொள்வோமானால், இந்த உலகத்திற்கு வெகு சீக்கிரமாக செல்வமும், செழிப்பும், நல்லெண்ணமும் திரும்பி வருமென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்" என்று நீர் பேசினீர். என்ன அருமையான உபதேசம்! இதைத்தான் மகாத்மா சொல்லியும் செய்தும் வருகிறார், நீர் மட்டும் இந்த உபதேசத்தை பிறருக்கு செய்வதோடு நிற்காமல், உமது ராஜீய நிர்வாகத்திலும் கையாள ஆரம்பித்தால், இந்தியாவின் நிலைமை இப்படியா இருக்கும்? அடுத்த தடவை மகாத்மாவோடு பேச உமக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில், இந்த உபதேசத்தை மறந்துவிட மாட்டீரென்று நம்புகிறேன்.

—படார்சாமி

சர். ஹாரி ஹேய்க்,
சிம்லா

அன்புள்ளஐயா,

மகாத்மாவின் மனப்போக்கை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லையென்று நீர் இந்தியா சட்ட சபையில் ஒப்புக்கொண்டதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். சிவில் சர்விஸ் கோஷ்டியின் பெரு

மைக்கு இது அடுத்ததல்ல. சென்ற மாதம் 22வ சட்டசபையில் நீர் பதில் சொல்லிய போது, "நூறு வருஷங்களுக்கு சட்ட மறுப்பை விடும்படி கேட்கவில்லை. தற்சமயம் விட்டுவிடுவதாய் சொன்னால் போதும்" என்று கூறினீர். இதுவும் சிவில் சர்விஸ் பெருமைக்கு அடுத்ததல்ல. மகாத்மா காந்திக்கு ஜெயிலுக்குள் ஹரிஜன பிரசாரத்திற்காக கொடுத்த சௌகரியங்கள், அவருடைய பதவியை உத்தேசித்து கொடுக்கப்பட்டவை என்று சொன்னீர். இதுவும் —மகாத்மாவின் செல்வாக்கை ஒப்புக்கொள்வது— சிவில் சர்விஸ் பெருமைக்கு விரோதமானது. மகாத்மா காந்தி வெறும் ஆண்டி. தங்க இடமோ உண்ண வரும்படியோ இல்லாதவர். அவருக்கு ஏ வகுப்பு கொடுத்தது நியாயமா என்ற கேள்விக்கு உம்மால் பதில் சொல்ல முடியவில்லை. இது எல்லாவற்றையும் விட மோசமானது. இம்மாதிரி நீர் நடந்துகொண்டு போனால், இந்நாட்டில் "பிரிட்டிஷ் மதிப்பை" எப்படி நிலைநாட்ட முடியும்? போனது போகட்டும். இனியாவது உமது சிவில் சர்விஸ் பரம்பரை மதிப்பை நிலைநாட்ட பின் வாங்கமாட்டீரென்று நம்புகிறேன்.

—படார்சாமி

சௌக்கார் அப்துல் ஹக்கீம் சாகிப் பகதூர்

சென்னை,

அன்புள்ள ஐயா,

திருநெல்வேலியில் "காம்பலாபாத்" வாசிகள் ஒரு மசூதி கட்ட பணம் வேண்டுமென்று உம்மிடம் கேட்டபோது, நீர் சொல்லிய பதில் போற்றத் தக்கது. "மசூதியை கீத்துக் கொட்டகையில் கூட வைத்துக் கொள்ளலாம். மசூதிக்காக கட்டிடம் கட்டுவதை விட குழந்தைகளுக்கு படிப்புச்சொல்லிக் கொடுக்கவேண்டியதே வெகு முக்கியமானது என்பதை நீங்கள் அறியவேண்டும்" என்று நீர் சொல்லிய மொழிகள் பொன் மொழிகளாகும். இச்சமயம் பாரதியார் பாட்டை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

—படார்சாமி

ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி,

சென்னை

அன்புள்ள ஐயா,

உமக்கு அதிகாரமிருந்தால், பள்ளிக்கூட புத்தகங்களை யெல்லாம் சுக்கல் சுக்கலாய் கிழித்தெறியும்படி உத்தரவு போட்டுவிடுவீரென்று சைதாப்பேட்டையில் நீர் பேசினீர். மிகவும்சரி. நீர் பள்ளிக்கூடத்திற்கு போகுமுன்பே இந்தக் காரியத்தை யாராவது

செய்திருந்தால், இந்த நாட்டிற்கு எவ்வளவோ நன்மையாயிருந்திருக்கும் "செய்யாமலே போவதை விட, காலந் தாழ்ந்தாவது செய்வது மேல்" என்ற பழமொழிப்படி, இனி வருகிற சந்ததிகளாவது உருப்படவேண்டுமானல் நீர் சொல்லியபடிதான் செய்ய வேண்டும்.

—படார்சாமி

ஹெர் ஹிட்லர்,
பெர்லின் (ஜெர்மனி)

அன்புள்ள ஐயா,

உமக்கும் நமக்கும் அதிகப் பழக்கமில்லை. இருந்தாலும் உம்முடைய உத்தரவு ஒன்றை பத்திரிகையில் படித்தவுடன் உமக்கு கடிதம் எழுத முடிவுசெய்துவிட்டேன். வைத்தியப் பரிட்சைக்கானாலும், வேறு எதற்கானாலும், மிருகங்களை வதைசெய்யக் கூடாதென்றும், செய்பவர்களுக்கு கடுமையான தண்டனையென்றும் நீர் உத்தரவு போட்டிருக்கிறீர். பலே பேஷ். இந்த உத்தரவை "ஆயிரத்தில் ஒன்று" என்று அருமையாய்ச் சொல்ல வேண்டும். உம்முடைய ஜீவகாருண்யத்தை உலகிற்கு பகிரங்கப் படுத்திவிட்டீர். அஹிம்சையில் மகாத்மா கூட உம்மோடு போட்டிபோட முடியாது: ஒரே சந்தேகம். இந்த யூதர்கள் இருக்கிறார்களே, அவர்கள் தங்களை மிருக இனத்தோடு சேர்த்துக்கொண்டு, இந்த புதிய உத்திரவின் கீழ் பாதுகாப்பு தேடிக்கொள்ள விரும்பினால், நீர் என்னசெய்வீர்?

—படார்சாமி

ஸ்ரீ. ஜி. ஏ. நடேசன்,
சென்னை

அன்புள்ள ஐயா,

உங்கள் ஷஷ்டியப்த பூர்த்திவிழா சென்னையில் தடபுடலாய் நடந்ததாக பத்திரிகைகளில் படித்தேன். திருவிழாக்காலங்களில் மூட்டைகட்டி தூக்கிக்கொண்டு போய் தெருவில் பரப்பி விற்பதே பழையகாலத்து புத்தக வியாபார முறை. ஆகவே புத்தக வியாபாரிகளுக்கு மதிப்பும் கிடையாது. இந்த புததக வியாபாரம் இழிவல்ல என்பதையும், இதனல் பொருள் சம்பாதிக்கலாம் என்பதையும், ராஜாங்க சபையில் கூட அங்கத்தினராகலாம் என்பதையும் இந்தியருக்கு வழிகாட்டி, இத்தொழிலுக்கு மதிப்புத்தேடிய உம்மை பாராட்டுகிறேன். உமது சதாபிஷேகத்திற்குள் பத்திரிகை

களில் பிரசுரமான ஆயிரக்கணக்கான தேசியத்தலைவர்களின் பிர சங்கங்களை 2 அணு புத்தக ரூபமாய் கொண்டு வருவீரென்று எதிர் பார்க்கிறேன்.

—படார்சாமி

சர். ஆர்ச்சிபால்ட் காம்பல்
ரேவினியூ மந்திரி, சென்னை

அன்புள்ள ஐயா,

கடைத்தேங்காயை எடுத்து ஒருவன் வழிப் பிள்ளையாருக்கு உடைத்தானும். சும்மா கிடக்கிற நிலத்தை வீடிழந்த திருநெல் வேலி முஸ்லிம்களுக்கு சர்க்கார் கொடுக்கவேண்டியது கடமை அதற்காக உமது பெயரை அக்கிராமத்திற்கு கொடுக்கவேண்டிய காரணம் என்னவென்றுதான் எனக்குத்தெரியவில்லை. இப்படியே பெயரிட்டுக்கொண்டுபோனுல், கொஞ்சக்காலம் கழித்து, இந் நாட்டு பூர்வீகக்குடிகள் இந்தியரா அல்லது வெள்ளையரா என்ற சந்தேகங்கூட வந்துவிடும்.

—படார்சாமி

ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரல்
சென்னை

அன்புள்ள ஐயா,

முட்டில் பசியுள்ளவனுக்கு வயிற்றுப்பசி எப்படியிருக்குமென் பது தெரியாது. சென்னை மாகாண வாசிகளுக்கு மோர் எவ்வளவு அவசியம் என்பதை நீர் அறியமுடியுமென்று நான் எதிர்பார்க்க வில்லை. மோர்கொடுக்க முடியாது என்று நீர் சொல்லிவிட்டால் கேள்வியே கிடையாது. ஆனல் மோர் சப்ளை செய்வது கஷ்ட மென்று நீர் சொல்லுவதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. வைசி ராய் புறப்படுகிறார் என்றால், ரயில்பாதை முழுவதிலும் 10-அடிக்கு ஒருவரை நிறுத்தி காவல்காக்கச் செய்யும் இந்த சர்க்கா ருக்கு, மோர் சப்ளை செய்வது ஒரு பெரிய கஷ்டமென்றால், என்ன ஆச்சரியம்!


—படார்சாமி



காலச்சக்கரம்




ஆகஸ்ட் 16:— மகாத்மா பட்டினி ஆரம்பம்.



ஆகஸ்ட் 18:— ஆண்டுரூஸ் பேட்டி.



ஆகஸ்ட் 20:—சாசூன் ஆஸ்பத்திரிக்கு மகாத்மா.



ஆகஸ்ட் 20:—கஸ்தூரிதேவி விடுதலை.



ஆகஸ்ட் 22— மீராபென் விடுதலை.



ஆகஸ்ட் 23:— மகாத்மா விடுதலை.



ஆகஸ்ட் 27 :—மகாத்மா பால், பழங்கள் சாப்பிடுகிறார்.



ஆகஸ்ட் 30:— பண்டித ஜவார்லால் விடுதலை.

இம்மாதிரி ஒவ்வொரு மலரிலும் "செய்திப் படங்கள்" வெளிவரும்.



ஆகஸ்ட் 31:—மகாத்மா பழைய பலம் பெற்று உலாவுகிறார்.




மனிதர் யோசனைக்கு அடைபடாத விஷயமாக இந்த மகாத்மாவின் போக்கு இருக்கிறது. ஆகஸ்ட் முதல் தேதி கைதியானார். யாரும் எதிர்பாராத விதமாக 23வ யன்று விடுதலையானார். கிரகங்களின் நிலைமை உலகப் போக்கை மாற்றுகிறதாகச் சொல்லுகிறார்கள். அது பொய்யோ மெய்யோ. மகாத்மா காந்தியின் செய்கைகளால் இந்தியாவின் நடைமுறைகள் மாறியே ஆகவேண்டியிருக்கிறது. ஜனங்களின் ஒவ்வொரு செய்கையும், சர்க்காரின் ஒவ்வொரு செய்கையும் மகாத்மாவின் போக்கைப் பொறுத்தே அமைகின்றன. இந்த அதிசயத்தை வேறு எங்கும் காண முடியாது. சென்ற மலரில், காலணா பதிப்பை வெளியிடுவதற்கு புனராலோசனை செய்ய அவசியமில்லையென்று எழுதியிருந்தோம். எழுதி ஒருவாரம் ஆகு முன்பாக, அதாவது சென்ற மாதம் 27வ யன்றே காலணா பதிப்பு வெளியிட வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது. எல்லாம் இந்த மகாத்மா செய்த வேலைதான்.

ஆகாசத் தந்தியைப்பற்றி நமக்குக் கிடைத்துள்ள கட்டுரைகளில் ஸ்ரீ. டி. என். ராமசாமி எழுதியதுதான் கூடியவரை சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருக்கிறது. ஆகவே ஆகாசத் தந்திரிசுத் தொகையாகிய ரூ. 10 அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சிறுகதைப் போட்டிக்கு ஆகஸ்ட் மாதம் கடைசி வரையில் வாய்தா வைத்திருந்தபடியால் இந்த மலரில் பரிசுபெற்ற கதையை பிரசுரிக்க முடியவில்லை. 20வ மலரில் பிரசுரமாகும். "வாழ்க்கை விநோதம்" போட்டி கட்டுரை அனுப்பவேண்டிய வாய்தா செப்டம்பர் 10வ யோடு முடிவாகிறது. அதற்குள்ளாக அனுப்ப வேண்டுகிறோம்.

அடுத்த பரிசு இயற்கை வர்ணனைக்கு வைத்திருக்கிறோம். மலரில் 5 பக்கங்களுக்கு மேல் போகக்கூடாது. எது சிறந்ததாயிருக்கிறதோ அதை எழுதினவருக்கு 10 ரூபாய் பரிசு. செப்டம்பர் 20வக்குள் கட்டுரைகள் நமக்கு வரவேண்டும்.



:: ஆகாயத் தந்தி ::

(நாகை டி. என். இராமசாமி)

விஞ்ஞான சாஸ்திரத்தி னுதவியால் மேல்நாட்டார் கண்டு பிடித்த அரும்பெரும் சாதனங்களுள் அல்லது கருவிகளுள் "ஆகாயத் தந்தியும்" ஒன்றாகும். இதை ஆங்கிலத்தில் "ஒயர்லெஸ்" (Wireless) என்று சொல்லுவார்கள். ஆகாயத் தந்தி என்று சொல்லுவதைப் பார்க்கிலும், இதை "கம்பியில்லாத் தந்தி" என்று சொல்லுவதே மிகவும பொருத்தமுடையதாகும். என்றாலும், "கம்பியில்லாத் தந்தி" யென்றால என்ன? அது எப்படி வேலே செய்கின்றது?—என்று ஆராய்வது முற்றிலும் அவசியமானதே யாகும்.

ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செய்திகள் அனுப்ப வேண்டுமானால், ஒரு சிலர் ஆடகள் மூலமாக அனுப்புகின்றனர்; மற்றுஞ் சிலர் கடித மூலமாக செய்தியை அனுப்புகின்றனர்; சிலர் "டெலிகிராப்," "டெலிகிராம்" (Telegraph, Telegram) என்று சொல்லப்படும் "தந்தி" மூலமாக சமாசாரத்தை அனுப்புகின்றனர்; "டெலிபோன்" (Telephone) என்னும் கருவியின் மூலமாக இடையில் எவ்வளவு தூர மிருப்பினும் தாம் இருந்த இடத்திலிருந்தே ஒருவர் சொல்லும் விஷயத்தை—செய்தியை மற்றொருவர் சில நிமிஷ நேரங்களில் கேட்கின்றார்கள்; அவ்வாறு கேட்கவும் இயலுகின்றது. இதற்குக் காரணம் என்னவென்றால், "டெலிகிராப்," "டெலிபோன்" என்னும் கருவிகளின் மூலமாக செய்திகள் ஒலி ரூபமாக அனுப்பப்படுவதே யாகும். அதாவது உலோகத்தினால் செய்யப்பட்ட மெல்லிய கம்பிகளின் உதவியைக் கொண்டு செய்திகள் அனுப்பப்படுகின்றன என்பதை நாம் தெரிந்து கொள்ளுகின்றோம். அதே விதமாக, "கம்பியில்லாத் தந்தி" என்பதும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செய்திகளை அனுப்பும் அல்லது அனுப்ப முடிகின்ற ஒரு நூதன சாதனம் அல்லது ஒரு நூதன கருவி என்று நிச்சயமாக லக்ஷணம் (Definition) சொல்லலாம்.

ஆனால், இதை ஏன் கம்பியில்லாத் தந்தி என்று அழைக்க வேண்டும்?—என்று கேட்பது நியாயமேயாகும்.

இதற்கு நாம் சொல்லும் பதில் என்னவென்றால், "மற்ற தந்திகளைப்போல் அல்லாமல், கம்பி முதலியவற்றின் உதவியை நாடாமல் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செய்திகள் அனுப்பப்படுகின்ற காரணத்தினால்தான், இது கம்பியில்லாத் தந்தியென்று சொல்லப்படுகின்றது." என்பதேயாகும். தவிர, ஆகாயத் தந்தியென்று சொல்லுவதும் பொருந்தும்; ஆகாயத்தின் மூலமாகவே செய்திகள் அனுப்பப்படுகின்றன—என்பதே இதன் அர்த்தமாகும்.

ஆகாயத் தந்தி எப்படி வேலை செய்கின்றது என்று தெரிந்து கொள்வதற்கு சற்று முன்பாக (Telegraph) "டெலிகிராப்" என்று சொல்லப்படும் தந்தி சாதனங்கள் எப்படி வேலை செய்கின்றன என்பதை சற்று ஆராய்வோம். உதாரணமாக, பம்பாயிலுள்ள தந்தி ஆபீஸில் ஒரு செய்தியைக் கொடுத்து அதை மதராஸுக்கு அனுப்பும்படியாக ஒருவர் கேட்டுக்கொள்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். இப்பொழுது பம்பாயிலுள்ள தந்தி நிலையமானது மதராஸிலுள்ள தந்தி நிலையத்தோடு கம்பிகளால் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே பம்பாயிலிருந்து அனுப்பப்படும் (ஒலிச்) செய்தியானது மின்சார சக்தியின் ஓட்டத்தினால் நெடுகவுள்ள கம்பிகள் வழியாக பிரயாணம் செய்து மதராஸ் தந்தி நிலையத்தை வந்து அடைகின்றது. இவ்வாறு வந்து சேருகின்ற ஒலிச்செய்திகளின் குறிகளுக்கேற்ற அடையாளத்தைக் கொண்டு செய்திகள் அறிவிக்கப்படுகின்றன.

நிற்க, இதைப் போலவே, கம்பியில்லாத் தந்திச் செய்திகளை அனுப்புவதற்கும், செய்திகளை கிரகிப்பதற்கும் ஏற்ற நிலயங்கள் ஒவ்வொரு தேசத்திலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு ஆங்கிலத்தில் "ஒயாலெஸ் ஸ்டேஷன்" (Wireless Station) என்று பெயர். உதாரணமாக, லண்டனிலிருந்து பம்பாயிக்கு கம்பியில்லாத் தந்தி மூலமாக செய்திகளை அனுப்ப வேண்டுமென்று வைத்துக்கொள்ளுவோம். இப்பொழுது லண்டனிலுள்ள "ஒயர்லெஸ் ஸ்டேஷனிலிருந்து" அனுப்பவேண்டிய செய்திகளை மின்சார சக்தியின் உதவியைக்கொண்டு அனுப்புவார்கள். அந்தச் செய்தியானது பம்பாயிலுள்ள "ஒயர்லெஸ் ஸ்டேஷனை" வந்தடைந்தவுடன் பம்பாயிலுள்ள உத்தியோகஸ்தர்கள் அந்த செய்தியை அதற்கேற்ற அறிகுறிகளைக்கொண்டு கிரஹித்துக் கொள்ளுகின்றார்கள். இவவிதமாகத் தான் கம்பியில்லாத் தந்தி

மூலமாகவும் சமாச்சாரங்கள் அனுப்பப்படுகின்றன. ஆனால், லண்டனிலிருந்து அனுப்பப்பட்ட செய்தியானது கம்பியின் மூலமாக பம்பாயிக்கு வந்து சேரவில்லை. பின்பு எவ்விதமாக அது வந்து சேருகின்றது என்றால், அது ஆகாயத்தின் மூலமாகவே வந்து சேருகின்றது. இது உண்மையில் பெரிதும் ஆச்சரியப் படத்தக்க விஷயமேயாகும். கம்பியில்லாத் தந்தியின் ரகசியமும் ஆகாயத்தில்தான் அடங்கியிருக்கின்றது. அதை விளக்குவோம்.

மேல்நாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் நாம் வசிக்கும் இப்பூ உலகத்தைச் சுற்றிலும் இப்பிரபஞ்ச முழுவதிலும் எப்பொழுதும் "ஈதர்" (Ether) என்னும் ஒருவித நூதன சக்தியானது வியாபித்திருப்பதாக கண்டுபிடித்திருக்கின்றார்கள். இதை தமிழில் "மாய அணுக்கள்" என்று சொல்லலாம். மாய அணுக்கள் என்றால் இவைகள் மனிதரது கண்களுக்குப் புலப்படமாட்டா. சுருக்கமாகச் சொல்லுமிடத்து, "ஈதர்" என்னும் இந்த "மாய அணுக்கள்" இல்லாத இடமே இப்பிரபஞ்சத்தில் ஒன்றும் இல்லை.

"டெலிகிராப்" என்னும் கருவியிலிருந்து அனுப்பப்படும் செய்தியானது கம்பிகளின் வழியாகவே பிரயாணம் செய்கின்றது என்பதை நாம் சற்று முன்பு அறிந்தோம். அதைப்போலவே, கம்பியில்லாத் தந்தி மூலமாக அனுப்பப்படும் செய்திகளும் இந்த "மாய அணுக்கள்" மூலமாகவே பிரயாணம் செய்கின்றன. இது எப்படி பிரயாணம் செய்கின்றது என்பதை ஒரு உதாரணத்தின் மூலமாக விளக்குவோம். அதாவது, ஒரு குட்டையின் ஜலமானது அமைதியாக இருக்கும் பொழுது, ஒரு கல்லை எடுத்து அக்குட்டையில் எறிந்தால், உடனே கல் விழுந்த இடத்தில ஒரு சிறிய வட்டம் உண்டாகின்றது. இந்த வட்டமானது மற்றொரு வட்டத்தை தாக்கவும், அது அதேவிதமாக மற்றொன்றைத் தாக்கவும், இவ்வாறாக, அக்குட்டையிலுள்ள ஜலத்தின் மேல் பாகத்தில் எண்ணிக்கையற்ற வட்டங்கள் உண்டாகி அவைகள் கரையை அடைகின்றன. ஆனால் ஜலமானது கல் விழுந்த இடத்திலிருந்து கரைக்குச் செல்லவில்லை; அது இருந்த இடத்தில் தான் இருக்கின்றது. என்றாலும், ஜலத்தின் மேல் பாகத்தில் அலைகளும், வட்டங்களும் உண்டாகி, அவையாவும் ஒன்றன்பின் ஒன்றாக வியாபித்து இறுதியில் கரையை அடைகின்றன. இக்காட்சியை யாவரும் அனுபவித்திருக்கலாம்.

இதைப்போலவே, "மாய அணுக்கள்" எங்கும் வியாபித்திருக்கின்றன. ஆகவே, இப்பவும், லண்டன் ஸ்டேஷனிலிருந்து மின்சார சக்தியின் உதவிகொண்டு ஒலி ரூபமாக சமாச்சாரங்கள் அனுப்பப்பட்டு, அவையாவும் மின்சார சக்தியுடனேயே, எங்கும்

வியாபித்திருக்கும் "ஈதரில்" கலக்கும்படி செய்யப்படுகின்றன. தவிர, தூரத்திற்குத் தகுந்தபடி, மின்சார சக்தியின் அளவும் அதிகரிக்கும். இவ்விதம் அனுப்பப்பட்ட செய்திகள் எண்ணிக்கையற்ற "மாய அணுக்களினால்" ஒன்றோடொன்று இயக்கப்பட்டு, பிரயோகிக்கப்பட்ட மின்சார சக்தியின் அளவிற்குத் தகுந்த பிரகாரம் வெகுதூரம் பிரயாணம் செய்கின்றன.

இவ்வாறு மாய அணுக்களின் மூலம் பிரயாணம் செய்யும் செய்தியானது பம்பாய் "ஒயர்லெஸ் ஸ்டேஷனி"லுள்ள நுண்ணிய கருவிகளால் கிரஹிக்கப்படுகின்றன. (i. e. Messages travel through the medium of Ether) இவ்விதமாகவே, கம்பியில்லாத் தந்தியானது வேலை செய்கின்றது. இது இந்த 20-வது நூற்றாண்டில் உலக ஆச்சரியங்களில் ஒன்றாகவும் நன்கு மதிக்கப்படுகின்றது. இத்தகைய ரகசியங்களை நம் நாட்டுமக்களும், முக்கியமாக "காந்தி மலர்" வாசகர்களும், இன்னும் ஏனைய அன்பர்களும் அறிய வேண்டாமா?



மற்றொரு முகத்தை கண்டுபிடி

—என். எஸ். வெங்கட்டராமன், புதுவை.

சேர்மன் குண்டுணி குப்புராவ்

(டி. எஸ். ராமனாதன், பி. ஏ.)

கொஞ்ச காலமாக சவடால்புரத்தில் பெரிய அமளி ஏற்பட்டிருந்தது. பத்திரிகைகள் கொசுக்கள் குடியேற்றத்தைப்பற்றி ஓலமிட்டன. நகரவாசிகள், மூட்டைப்பூச்சி படையெடுப்பைத் தடுக்க முனிசிபாலிட்டி முயற்சி எடுக்கவில்லை என்று புகார் செய்தனர். சேர்மன் குண்டுணி குப்புராவ் பாடிகார்டு இல்லாமல் நகர்வலம் செல்ல முடியவில்லை. கௌன்சிலர்கள் கவலை கொண்ட வண்ணமாய் உதட்டைக் கடித்துக் கொண்டனர். கலெக்டெர் காமகோடி நாயக்கர் ரிஸர்வ் போலீஸ் இல்லாமல், ஸினிமா, டிராமா போக பயப்பட்டார். இரவு 8 மணிக்குள் நகரத்தில் விளக்குகள் அணைக்கப்பட்டன.

நானும் என் தம்பி கோபுவும் சென்ற வாரம் சவடால்புரத்திலுள்ள ஒரு நண்பர் வீட்டு கல்யாணத்திற்கு விருந்தினராகப் போனோம். ரயிலைவிட்டு இறங்கினதுதான் தாமதம். நாலைந்து கான்ஸ்டேபில்கள் துப்பாக்கிச் சகிதமாய் எங்களை சூழ்ந்து கொண்டனர். எனக்கு அஸ்தியில் ஜுரம் கண்டு விட்டது. "உங்கள் மூட்டைகளை காட்டுங்கள். சோதிக்க வேண்டும்," என்று உறுமினான் போலீஸ் ஜார்ஜெண்ட். "என்ன ஓய்! மரியாதை இல்லாமல் பேசுகிறீர். முடுச்சு மாறி என்று நினைத்து விட்டீரோ! மான நஷ்டத்திற்கு பிராது செய்வேன் தெரியுமா," என்று தைர்யத்தை கையில் பிடித்துக்கொண்டு கேட்டேன். "கப்சிப்! வாயை மூடு. சொன்னபடி செய்யும்," என்று சொல்லி மறு விநாடி ஸார்ஜெண்ட் துப்பாக்கி என் மூக்குக்கு நேராக நீட்டப்பட்டது. எங்கள்பாடு விலவிலத்து விட்டது. பேசாமல் அப்படியே ஸ்தம்பம் மாதிரி நின்றோம். ஸார்ஜெண்ட் என்னுடைய ஷர்ட்டு, கோட்டு, டிரங்கு எல்லாவற்றையும் நன்கு சோதித்தான். பிறகு என் தம்பியின் முறை




வந்தது. அவன் பெட்டிகளை சோதித்துக்கொண்டு இருக்கையில் ஸார்ஜெண்டு துள்ளிக் குதித்தான். "டே! 670! கொண்டா சட்டியை. ஓடுகிறதடா. விடாதே. பிடி. அமுக்கு," என்று கூக்குரல் இட்டான். என்னமோ, ஏதோ, என்று நான் உற்றுப் பார்த்தேன். என் தம்பியின் கோட்பாக்கெட்டில் இருந்து ஒரு மூட்டைப்பூச்சி மெல்ல நகர்ந்தது. இரண்டு ஜவான்கள் அதை முற்றுகை போட்டு துப்பாக்கி முனையினால் அமுக்கி சிறை செய்தனர். என் தம்பி "சந்தேகிக்கப்பட்ட பேர்வழி" என்று கைது செய்யப்பட்டான். நானோ மாத்திரம் போலீஸார் கண்ணோக்கத்தில் நகரத்தில் இருந்துவிட்டு இரண்டு நாளில் வெளியேறிவிட வேண்டுமென்று உத்திரவு இடப்பட்டது.

நான் என் நண்பன் வீட்டை நோக்கிச் சென்றேன். எங்கு பார்த்தாலும் நோட்டீஸுகளும் பத்திரிகைகளும் பிரபலமாய் இருந்தன. ஒரு சுவற்றில் பின்வருமாறு விளம்பரம் ஒட்டப்பட்டிருந்தது. "சவடால்புரத்தில் மஹாயுத்தம். நகர அதிகாரிகள் இதுவரையில் 2400 கொசுக்களை சிறை செய்திருக்கின்றனர். மூட்டைப்பூச்சி தொல்லையை ஒழிக்க கமிட்டிகள் கூட்டப்பட்டிருக்கின்றன". "இவ்வூரார் என்னடா பெரிய மேதாவிகளாய் இருக்கிறார்கள். மூட்டைப்பூச்சிக்கு இவ்வளவு ஆர்ப்பாட்டமா" என்று எண்ணமிட்டுக் கொண்டே சென்றேன். ஒரு பையன் "பொடலங்காய் விகடன்" விலை அரையணு என்று கூவிக்கொண்டே வந்தான். ஒரு பத்திரிகை வாங்கி தலைகீழாய் பிடித்துப் படிக்கத் தொடங்கினேன். என்ன ஆச்சர்யம்! பின்வருமாறு கொட்டை கொட்டையாய் பிரசுரிக்கப்பட்டிருந்தது. "மூட்டைப் பூச்சிகள் மேல் 144 பிரயோகம். 24 மணி நேரத்திற்குள் நகர எல்லையை விட்டு ஓடாவிட்டால் தடியடிப் பிரயோகம் செய்யப்படும். நெருக்கடி அதிகமானால் சட்டியும் கையாளப்படும்.!—கலெக்டர் காமகோடி நாயக்கர்" இதைப் படித்ததும் எனக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை. இதற்குள் என் நண்பன்வீடு வந்து சேர்ந்தேன்.

போஜனம் ஆயிற்று. சற்று தூங்கலாம் என்று நினைத்தேன். என் நண்பன் சலவை செய்த ஒரு வேஷ்டியை கீழே விரித்தான். "இதை என் அழுக்காக்கவேண்டும், ஒரு பாய் அல்லது கட்டில் இருந்தால் கொண்டுவா," என்றேன். "அப்பப்பா! அந்த பேச்சையே எடுக்காதே. பாய் கட்டில் என்று சொன்னாலே நீ சிறை செய்யப்படுவாய்," என்று பயத்துடன் கூறினான் நண்பன். இதென்ன வேடிக்கை!" "அதைக் கேட்பானேன். இப்பொழுது குண்டுணி குப்புராவ் ஆட்சி. மூட்டைப் பூச்சி தொல்லைக்காக நகரத்தில் ஒருவரும் பாய் கட்டில் உபயோகிக்கக்கூடாது என்று உத்தரவு பிறந்திருக்கிறது." இதுவும் கலிகாலத்தின் கோலம்.

கருப்புக்கோழி சிவப்பு முட்டை இடும் காலம் என்று எண்ணிக் கொண்டே தூங்கிப்போனேன்.

சாயங்காலம் மூன்று மணிக்கு நகர்வலம் செய்யப் புறப்பட்டேன். முனிசிபல் ஆபீசண்டை பெரிய கூட்டமாய் இருந்தது.




பக்கத்தில் இருப்பவன் காலை மிதித்துக் கொண்டு, என் முகத்தை மற்றொருவன் முதுகில் தட்டையாக்கிக் கொண்டு, எட்டிப் பார்த்தேன. சிவப்புக் கடுதாசியில் பெரிய விளம்பரம் காணப்பட்டது. 'பரிசு. பரிசு. பதினைந்துரூபாய் பரிசு. இரண்டாயிரத்து எழுபது கொசுக்கள் அல்லது 5000 மூட்டைப் பூச்சிகளை சிவது செய்பவருக்கு 15 ரூபா இனம்.'

குறிப்பு:—"கொசு என்பது சிறகுள்ள பறக்கும் மிருகம். மூட்டைப்பூச்சி குதிரையைப்போல் வேகமாய் ஓடும் பிராணி." இதைப் பார்த்ததும் எனக்கு ஒரு எண்ணம் தோனறிற்று. எஸ். ஐ. ஆர். கம்பனியாருக்கு 5000 மூட்டைப்பூச்சி பார்ஸல செய்து அனுப்பும்படி ஆர்டர் கொடுப்போமா என்று நினைத்தேன். பார்ஸலை தபாலாபீஸில் காங்கிரஸ் சமாசாரம் என்று உடைத்துப் பார்த்து விடக்கூடும் என்ற பயத்தினல் அவ்வெண்ணத்தைக் கை விட்டேன்.

சேர்மன் பங்களாவண்டை ஒரே கூட்டமாய் இருந்தது. எள்ளுபோட்டால் கொள்ளு விழாதபடி கூட்டம் விழி பிதுங்கிற்று. என்ன சமாச்சாரம் என்று விசாரித்தேன். ஒருவர், "கொசு மூட்டைப்பூச்சி கொண்டு வருபவர்களுக்கு சேர்மன் பரிசு கொடுக்கிறார்" என்றார். கூட்டத்தில் நானும் முண்டி யடித்துக்கொண்டு முன் சென்றேன். ஒரு பிராமணன் 207 கோழிகளுடன் சேர்மன் முன் நின்றான். "என்ன ஓய்! சாஸ்திரிகளே! கோழிகள் எதற்கு?" என்று திகைப்புடன் உசாவினர் சேர்மன்: "பரிசு பெறுவதற்கு" என்று கம்பீரத்துடன் சாஸ்திரிகள் கூறினர். "கோழிக்கா பரிசு!" என்று நகைத்தார் சேர்மன். "ஆமாம்

கொசுக்கள் என்றால் சிறகுள்ள பறக்கும் பிராணியல்லவா." என்று நிதானமாக மொழிந்தார் சாஸ்திரி. "நீர் மகா மேதாவிதான். கோழி பறக்குமா. அதற்கு சிறகு உண்டா. டே! பில் கலக்டர். இந்த ஆளைப் பிடரியைப் பிடித்துத்தள்ளு" என்று உத்திரவு இட்டார் குப்புராவ. இச்சமயம் ஒரு ஒட்டன் தடபுடலாய் ஓடி வந்தான். "யஜமான்! குதிரை ஓட்டத்தைவிட அதிகமா ஓடுதங்க. ரொம்ப கஷ்டப்பட்டு மூட்டுப்பூசசி புடுச்சாந்தேன்." "எங்கே அவைகளை கொண்டு வா பார்ப்போம்" மறு நிமஷம் ஒட்டன் 5000 பன்றிகளை ஓட்டிக்கொண்டு வந்தான். "அட மடையா! மூட்டைப்பூச்சி வேண்டுமென்றால், பன்றிகளை கொண்டு வருகிறாயா." "இல்லீங்கசாமி! நம்ப பன்னி ரொம்ப வேகமா ஓடுங்க" ஒரு ஜவான் கொடுத்த கல்தாவால் ஒட்டன் பங்களாவிற்கு வெளியே தள்ளப்பட்டான்.

இதற்குள் நகரத்தின் எல்லையில் துப்பாக்கிப் பிரயோகம் நடக்கப் போகிறது என்ற செய்தி கிளம்பிற்று. கூட்டத்தோடு கூட்டமாய் நானும் போனேன். நகர சாக்கடைகளெல்லாம் விழுவதற்கு வெட்டப்பட்டிருந்த ஒரு குளத்தை நெருங்கினேம். "இதற்குமேல் போனல் விரோதிகளால் அபாயம் நேரிடும்" என்று ஒருவர் சொல்லவே நாங்கள் குளத்திமகு ஒரு பர்லாங்கு தூரததில் நின்றுவிட்டோம். அப்பொழுது இரும்புக் கம்பி போட்டு மூடின இருபது மோட்டாரில் 500 ஸோல்ஜர்கள் துப்பாக்கி பீரங்கிகளுடன் குளத்தை முற்றுகை யிட்டனர். எனக்கு தலைகால் புரியவில்லை. விரோதிகள் ஒருவரும் வரக்காணேமே என்று என் நண்பரை விசாரித்தேன். அவா, "சற்று பொறும், ஈசல் மாதிரி கிளம்புவார்கள் பாரும்" என்றார். திடீரென்று



குளத்திலிருந்து புஸ் என்று சப்தம் உண்டாயிற்று. மோட்டார்களிலிருந்து வெடிகள் படீர் படீர் என்று சுடப்பட்டன. "நம் கக்ஷி தோற்றுப் போய்விடும்போல் இருக்கிறது" என்று ஒரு கூக்குரல் கிளம்பிற்று. நாங்களெல்லோரும் கச்சையை யிறுக்கிக் கட்டிக்கொண்டு ஓட்டம் பிடித்தோம். கடைத்தெரு வந்த பிறகுதான் பின்புறம் திரும்பிப் பார்த்தோம். "யுத்தம் ரொம்ப பலமாய் நடக்கிறதுபோல்

இருக்கிறது" என்று விசாரித்தார் ஒரு கடைக்காரர். "என்ன சண்டை! யாருடன் யுத்தம்" என்று அவரை வினவினேன். "நீர் இந்த ஊருக்குப் புதியவரா என்ன. சென்ற ஒரு வருஷ காலமாக முனிசிபாலிட்டிக்கும் கொசுக்களுக்கும் போர் நடக்கிறதே" என்று அந்த ஆள் ஆச்சரியப்பட்டார். என் சிரிப்பை அடக்க முடியாமல் பக்கத்தில் இருந்த கடைக்குப் போய் ஒரு சோடா பாட்டிலை வாயில் கவ்வினேன்.

மறுநாள் நகரம் முழுவதும் அல்லோகலப்பட்டது. மணிக்கொரு ரயிலில் ஸோல்ஜர்கள் வந்துகொண்டிருந்தனர். நகரத்தின் கேட்டுகள் பூட்டித் தாளிடப்பட்டன. சேர்மன் குண்டுணி குப்புராவ் கவலைக் குறியுடன் காணப்பட்டார். முனிசிபல் மெம்பர்களுக்கு குளிர் ஜுரம் ஏற்பட்டது. கலெக்டர் காமகோடி நாயக்கர் வேலையை ராஜிநாமாச் செய்துவிடலாமா என்று யோசனை செய்தார். ஸர்வதேச சங்கத்திற்குத் தந்திகள் பறந்தன. பத்திரிகைகளில், "கொசுக்கள் வெற்றி. முனிசிபாலிட்டி முறியடிக்கப்பட்டது. நெருக்கடியான நிலைமை" என்ற சமாசாரம் தென்பட்டது. இந்த கலாட்டாவில் நாம் ஏன் கலந்துகொள்ள வேணடும்? ஒரு தாயிக்கு ஒரே பிள்ளை யென்ற எண்ணத்தினால், நான் என் நண்பரிடம் விடைபெற்று, முனிசிபல் சேர்மனிடம் என் வேஷ்டி சொக்காய்களை அவிழ்த்துக் காட்டிவிட்டு திருச்சிக்குத் திரும்பினேன்.

திங்கட்கிழமை பேப்பரில் பின்வரும் செய்தி வெளியாயிற்று. "சவடால்புர மஹாயுத்தம் முடிவு. ஸர்வதேச சங்க மத்தியஸ்தம். முனிஸிபல் எல்லை மஸ்கிடோ ராஜ்யத்திலிருந்து வரையறுக்கப்பட்டது."

குறிப்பு :—இக் கட்டுரையில் காணப்பட்ட சம்பவங்கள் எந்த முனிசிபாலிட்டியில் நடந்தவை என்ற சந்தேகம் நேயர்களுக்கு ஏற்பட்டால், கட்டுரையாளர் விலாசத்திற்கு முக்கால் அணா ஸ்டாம்பு அனுப்பித் தீர்த்துக் கொள்ளவும்.

திருக்குறள் அவதானம்

("தேவிதாசன்" எழுதுகிறார்)

திருக்குறளின் மகத்துவத்தைப் பற்றி புதிதாக ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. உலகிலுள்ள சகல பாஷைகளிலும் அது மொழிபெயர்க்கப்பட்டிருப்பது ஒன்றே அதன் மகத்துவத்தைக் காட்டப் போதுமானது. வேறு பல நூல்கள் இதைப்போல சகல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் எந்த சங்கத்திலிருந்தும் பண உதவியோ இதர தூண்டுதல்களோ இல்லாமல், ஒவ்வொரு நாட்டாரும் இதன் சிறப்பை அறிந்து தாங்களாக மொழிபெயர்க்க முன்வந்த சிறப்புப் பெற்ற நூல் இது ஒன்றே. இந்த சிறப்புக்கு மற்றொரு காரணமுமுண்டு. திருக்குறள் உபதேசத்தில் எந்த மதத்தையும் பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. கடவுள் ஒன்று என்று சொல்லுகிறாரே யொழிய, அவருக்கு மதப்பெயர் ஒன்றும் கொடுக்கவில்லை. எம்மதத்தாருக்கும் பொதுவான நீதிகளே திருக்குறள். ஆகவே நீதி நூல்களில் அது தலைசிறந்து விளங்குகிறது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பதில் இந்த அருமையான நூலை எதுவும் மிஞ்ச முடியாது. ஔவையார் இதைப்பற்றிச் சொல்லும்போது,

> கடுகைத் துளைத்து எழுகடலைப் புகுத்தி
> குறுகத் தரித்த குறள்.

என்று சொல்லுகிறார். இதன் சிறப்பைப் பற்றி கபிலர்,

> தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
> பனையளவு காட்டும் படித்தான்—

என்று சொல்லுகிறார். அதாவது தினையளவுகூட இல்லாத சிறிய புல்லின் நுனியிலுள்ள பனித்துளி, ஒரு பெரிய பனையின் சாயையைக் காட்டுவதுபோல, திருக்குறள் காட்டுகிறதாம்.

தமிழர் எவ்வளவு அறிவும், நாகரிகமும்பெற்ற வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என்பதைக் காட்ட திருக்குறள் ஒரு பெரிய சாசனமாய் விளங்குகிறது. "வள்ளுவன் தன்னை உலகினுக் கீந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதி சொல்லுகிறார். இப்பேர்ப்பட்ட குறளை படித்தறியாத தமிழர்களும் இருக்கிறார்கள். அதற்காக தமிழ்நாடு தலைகுனிய வேண்டியதுதான்.

"நாலும், இரண்டும் சொல்லுக்குறுதி" என்று ஒரு பழமொழியுண்டு. அதாவது விஷயஞானம் தெரிந்து பேசுவதற்கு திருக்

குறள் படிக்கவேண்டியது அவசியம். தமிழர் இவ்விஷயத்தில் போதிய சிரத்தை கொள்ளாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு



சவுக்கடி கொடுப்பதைப் போல 13-வயதுச் சிறுவன் கிளம்பியிருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். ராமதாஸ் என்ற பையனுக்கு 13-வயதே ஆகிறது. ஆனால் 13-வயதிற்குள் திருக்குறளை அப்படியே கரைத்துக் குடித்திருக்கிறான். தினையளவு பனித்துளி எப்படி பனை யளவு உருவத்தைக் காட்டுகின்றதோ, அம்மாதிரியே இந்த 13-வயதுச் சிறுவன் 1330 குறள் அடிகளையும் பந்து விளையாடுவதைப்போல அஷ்டாவதானம் செய்கிறான்.

அஷ்டாவதானமாவது:— 1. எந்த அதிகாரத்தி னுடையவும் பெயரைச்சொல்லி அதன் நம்பரைக் கேட்பது. 2. நம்பரைச் சொல்லி அதிகாரத்தின் பெயரைக் கேட்பது. 3. அதிகாரத்தின் பெயரைச்சொல்லி அதில் இத்தனாவது குறள் என்னவென்று கேட்பது. 4. அதிகாரத்தின் நம்பரைச்சொல்லி ஷை கேள்வி கேட்பது. 5. அதிகாரத்தின் பெயரையோ நம்பரையோ சொல்லி 1-முதல் 10-வரை குறள் அடிகளை சொல்லும்படி கேட்பது. 6. ஷை முறையில் 10-வது அடியிலிருந்து மேலே தலைகீழாகச் சொல்லும்படி கேட்பது. 7. மொத்த 1330 நம்பர் வரிசையில் ஒரு நம்பரைச்சொல்லி, அந்தக்குறளை சொல்லும்படி கேட்பது. 8. எந்தக்குறளையாவது சொல்லி, அதற்கு பதவுரை, பொழிப்புரை கேட்பது.

இந்த 8 விதங்களிலும் கொஞ்சம்கூட சோர்வோ தயக்கமோ இல்லாமல் ராமதாஸ் திருக்குறள் அஷ்டாவதானம் செய்வது ஒரு அதிசயமாகும். தமிழர் ஒவ்வொருவரும் நேரில் கண்டு களிக்க வேண்டிய ஒரு சிறந்த காட்சி என்று நான் கூசாமல் சொல்லுவேன், இந்நாட்டில் இவ்வளவு சொற்ப வயதில் இம்மாதிரி ஞாபக சக்தி திறமையைக் காட்டும் வேறு யாரும் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை. சென்னையில் பல பள்ளிகளிலும், கூட்டங்களிலும் ராமதாஸ் தன்னுடைய அற்புத திறமையை காட்டி வருகிறான். பார்த்தவர்கள் அனைவரும் ஆச்சரியமடைகிறார்கள்.

"ராமதாசின் இந்த அதிசயமான திறமைக்குக் காரணம் எவ்விதமான தெய்வீக சக்தியுமல்ல; பயிற்சியே காரணம்" என்று அவனுடைய தந்தை ஸ்ரீ. சுப்பிரமணிய தாஸ் பகிரங்கமாய் கூட்டங்களில் சொல்லுகிறார். இதை எல்லாரும் மனதில் வைக்கவேண்டும். ஸ்ரீ சுப்பிரமணிய தாஸை நான் பல வருஷங்களாக அறிவேன். தமிழ் வேதமாகிய திருக்குறளில் அஷ்டாவதானம் செய்ய வேண்டுமென்று உறுதிகொண்டு அவர் வெற்றி பெற்றார். அவர் திறமையை திருநெல்வேலி ஜில்லா வாசிகள் நன்றாய் அறிவார்கள். தான் செய்வது பெரிதல்ல; தனது பையன் 13 வயதாகும் முன்பு இம்மாதிரி பயிற்சிபெறவேண்டும்; என்று அவர் உறுதிகொண்டார். அதன் பலனே ராமதாசின் பயிற்சியாகும்.

ராயப்பேட்டையில் ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் தலைமையில், ஸ்ரீ. திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் ஆதரவில் ராமதாஸ் அஷ்டாவதானம் செய்து காட்டினான். அச்சமயம் ஸ்ரீ. சிதம்பரநாத முதலியாரவர்கள் ராமதாசின் ஞாபக சக்தியை வியந்து பாராட்டினார்கள். அங்கு வந்து கனப்படுத்திய டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்களும், ராமதாசின் ஞாபக சக்தியை பெரிதும் பாராட்டிப் பேசினார். இம்மாதிரி ஞாபகசக்தி தனக்கு மட்டும் இருந்தால் எவ்வளவு சந்தோஷமா யிருப்பேன் என்று பேசினார். அவர் கையால் ராமதாசுக்கு ஒரு தங்கப் பதக்கமும் அளித்தார்.

மனிதனுக்கு முக்கியமாய் வேண்டியது அறிவு. அந்த அறிவைப்பெற வேண்டுமானால், பல விஷயங்களை படிக்கவும், கேட்கவும் வேண்டும். அறிவதோடு நின்றுவிட்டால் போதாது. அறிந்ததை எப்பொழுதும் ஞாபகத்தில் நிற்கும்படி செய்யவேண்டும். இதற்குப் பெயரே ஞாபக சக்தி. இந்த சக்தியை எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவே அறிவு வளர்ச்சியும் ஏற்படும். ஆகவே அறிவிற்கு அஸ்திவாரமாயுள்ளது ஞாபக சக்தி. ஞாபக சக்தியை அதிகரிப்பதும் குறைப்பதும் நமது கையிலேயே இருக்கிறது. சரியான பயிற்சி இருந்தால் ஞாபக சக்தியை எவ்வளவு வேண்டுமானாலும் வளர்க்கலாம். எவ்வளவு தூரம் மனிதன் வளர்க்கமுடியும் என்ற விஷயத்தைக் காட்ட ராமதாஸ் ஒரு சிறந்த உதாரணமாயிருக்கிறான்.

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடமும், ராமதாசின் திறமையை மாணவர்கள் பார்க்கும்படி ஏற்பாடுசெய்ய வேண்டியது அவசியமாகும். ராமதாஸ் காட்டும் அபாரமான ஞாபகசக்தி திறமைக்காக அவனை நான் மனமார வாழ்த்துகிறேன்.

புலவர் ஓட்டம்

(கந்தர்வன்)

எங்கள் திண்ணைக்கூட்டம் கூடுமுன்பாக திக்கிமுக்கிப் புலவர் தனியாக என்னிடம் வந்து ரகசியமாக ஒரு வேண்டுகோள் செய்தார். ஒருதடவை எங்கள் சபையில் அவர் பிரசங்கம் செய்ய வேண்டுமென்பதுதான் அவருடைய வேண்டுகோள். நான் ஒரு நிபந்தனை போட்டேன். "புலவர்வாள், உங்களுக்கு பேச அனுமதி கொடுப்பதில் எனக்கு துக்கமும் கிடையாது, சந்தோஷமும் கிடையாது. ஆனால் நீங்கள் ஒரு நிபந்தனையை ஒப்புக்கொண்டால், ஏதோ ஒருதடவை அநுமதி கொடுத்துப் பார்க்கிறேன். என்ன சொல்லுகிறீர்?" என்றேன்.

புலவர் மிகவும் ஆவலோடு இருந்தபடியால், காய்ந்தமாடு கம்பில் விழுந்தாற்போல "அதற்கென்ன, ஒன்றல்ல, எத்தனை நிபந்தனைகள் வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள்" என்றார்.

நான் :— ஒன்றை ஒப்புக்கொண்டால் போதும். ஆனால் நிபந்தனையை நீர் நிறைவேற்றிவைக்காவிட்டால், அப்புறம் இந்தப் பக்கமே—

புலவர்:—தெரியும், தெரியும். அவ்வளவு இங்கிதம் எனக்குத் தெரியாதா?

நான் :— அப்படியானால் சரி. கம்பர் பாட்டுகளுக்கு பொருள் சொல்லுவதாய் கூறுகிறீர். பொருள் சொல்லுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவேண்டும். அதுவும் "சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்" மாதிரியில் இருக்கவேண்டும். பொருள்சொல்லும்போது, சம்பந்தமில்லாத விஷயங்களைப்பற்றி பேசக்கூடாது. முக்கியமாக இலக்கண வியாக்கியானம் தேவையில்லை. கவிகட்டுகிறவர்கள் இலக்கணம் படித்துக்கொள்ளுவார்கள். அதைப்பற்றி எங்களுக்கு கவலையில்லை. எங்களுக்கு வேண்டியது கவிகளில் உள்ள நயமும் பொருளுமே யாகும். உமக்கு விளங்கிற்று?

சபை கூடியது. புலவர் எல்லோருக்கும் முன்பாகவே வந்து விட்டார். இந்தக்காலத்து பிரசங்கிகளைப் போலவே ஜனங்களை காக்கவைத்து அப்புறம் வருகிற கெட்டவழக்கம் அவரிடம் கிடை

பாது. கூட்டத்திற்கு பல முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவராய் வந்தார்கள். இவர்களைப் பார்க்கப் பார்க்க புலவருக்கு சந்தோஷம் கிளம்பிக்கொண்டே போயிற்று. "நமது ஆயுளில் இத்தகைய கூட்டத்தில் பிரசங்கம்செய்யக்கூடிய சந்தர்ப்பம்கிடைத்ததே பெரிய பாக்கியமல்லவா?" என்று எண்ணி மகிழ்ந்தார். எல்லாரும் வந்த பின்பு, புலவரை பிரசங்கம் ஆரம்பிக்கும்படி கேட்டேன். கேட்கும் போதே, பழைய வாக்குறுதியை ஞாபகமூட்டுவதைப் போல ஒரு பார்வையும் பார்த்தேன். ஆனால், புலவர் இருக்கிற குஷியில இந்தப் பார்வையெல்லாம் பலிக்கவில்லை.

ஆரம்பித்தாரய்யா புலவர். ஒரு கவியை எடுத்துச் சொல்லி பொருள் சொன்னார். சொல்லும்போதே அதிலிருந்து இலக்கணத்திற்குப் பாய்ந்தார். நன்னூலிலிருந்து வாக்கியங்களை எடுத்துச் சொல்லி வியாக்யானஞ் செய்ய முனைந்தார். தம்முடைய பாண்டித்தியம் எவவளவு எனபதை அந்தக் கூட்டத்திற்கு காட்டிவிட வேண்டு மென்று துணிந்து விட்டார். பிள்ளையார பிடிக்க குரங்காய் முடிந்ததே என்று எல்லாரும் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தோம். எவ்வளவு நேரந்தான் கேட்டுக்கொண்டிருப்பது? ஒவ்வொருவராய் நழுவினர். கடைசியாக நான்தான் அவருக்கு அகப்பட்டேன். என்னிடமும் அரைமணி நேரம பிரசங்கம செய்தார். பொறுக்க முடியவில்லை. "சரிதான். புலவரே, இரவு 9 மணியாய் விட்டது. இவ்வளவு போதும்" என்றுசொல்லி கட்டாயப்படுத்தி நிறுத்தினேன். ஒரு மட்டும் அவர் தொலைந்தார். அன்றைய கூட்டததைப்போல மோசமான கூட்டம் எப்பொழுதும் நடைபெற்றதில்லை. அன்று வந்த கோபத்தைப் போல எனக்கு எப்பொழுதும் கோபம் வந்ததுமில்லை. இந்தப் புலவர் இனி வரட்டும் சொல்லுகிறேன் என்று சபதம் செய்துகொண்டேன்.

மறுநாள் மாலை 4 மணிக்கு புலவர் மெதுவாக என் வீட்டிற்குள் தலையை நீட்டினர். "வாருமையா புலவரே. நல்ல ஆசாமி நீர். ஒட்டகத்திற்கு இடங் கொடுத்ததுபோல உமது நேற்றைய சமாச்சாரம் முடிந்தது." என்றேன்,

புலவர்:—சுவாமிகளே, எளியேன்மீது கோபித்துக்கொள்ளக் கூடாது. நீங்கள்கூட இப்படிச்சொன்னால் என்கதி யென்னவது?" என்று பல்லைக்காட்டி கெஞ்சுவதுபோலபேசினர். போனசனியனைப் பற்றிபேசுவானேன் என்று அதை விட்டுவிட்டு, "சரி இப்பொழுது எங்கே வந்தீர்?" என்றேன். உடனே ஒரு காகிதத்தை நீட்டினர். அது ஸ்ரீமான்— அவருக்கு எழுதிக்கொடுத்த நற்சாட்சிப்பத்தி

ரம். அவருடைய தமிழ் புலமையை அதில் எடுத்துக் காட்டி யிருந்தார். அதை மடித்து கையில் வைத்துக்கொண்டு "இதற் கென்ன செய்யவேண்டும் ?" என்று கேட்டேன.

புலவர் :— நீங்களும் அந்தமாதிரி ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டும்.

நான்,— நீர்வாக்குறுதியை மீறி நடந்து கொண்டதாக எழுதவா ?

புலவர்:— கோபிக்கக்கூடாது. தயவுசெய்யவேண்டும்.

நான்:— தயவுசெய்வதிருக்கட்டும். நான் யார் தெரியுமா ?

புலவர்:— ஹைக்கோர்ட் வக்கீல்.

நான்:— கோர்ட்டுகளில் நான் என்ன சொல்லுவேன் தெரியுமா ?

புலவர்:— தெரியாது.

நான்:— சொல்லுகிறேன் கேளும். கீழ்கோர்ட்டு தீர்ப்புகள் முற்றிலும் தவறு என்று சொல்லுவதுதான் ஹைக்கோர்ட் வக்கில்களின் வழக்கம். தெரிகிறதா ?

புலவர்:— அதற்கும் இதற்கும் என்ன—

நான்:— என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர். நீர் இப்பொழுது கையில் வைத்துக்கொண்டிருக்கும் நற்சாட்சிப்பத்திரம் "கீழ் கோட் தீர்ப்பு" அதன் கீழே "இதுமுற்றிலும் தவறு" என்று எழுதப் போகிறேன்.



இதைக் கேட்டதுதான் தாமதம். என் கையிலிருந்தகாகிதத்தை பிடுங்கிக்கொண்டு புலவர் ஒரே ஓட்டமாக ஓடிப் போய்விட்டார்.

மனித இயந்திரம்

கெடுவு தவருதே!

மனித இயந்திரத்தை அடக்கியாள வேண்டுமானல் முதலில் செய்ய வேண்டியது ஒன்றுண்டு. குறித்த கெடுவு தவருமல் நடக்க முயற்சிக்க வேண்டும். 8-மணிக்கு ஒரு இடத்திற்கு வருவதாகச் சொல்லி யிருந்தால், $8\frac{1}{2}$ மணிக்கு போகக்கூடாது. 8 மணிக்கே சரியாக அங்கே போய்விடவேண்டும். அவ்வளவு ஒழுங்காய் நடக்கவேண்டுமானல் அதற்கு எவ்வளவோ சாதனங்கள் வேண்டும் என்று சிலர் சமாதானம் கூற வரலாம். இம்மாதிரி சமாதானம் கூறிக்கொண்டிருக்கிற வரை, மனித இயந்திரத்தை உங்களால் அடக்கி யாள முடியாது.



இன்னின்ன வேளையில் இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டு மென்று திட்டம் போட்டுக்கொண்டு, அந்தப்படிசெய்யப் பழக வேண்டும். அதில் நிச்சயம் ஏற்பட்டு விட்டால் முதல் படி தாண்டியதாக ஏற்படும். குறித்த காலத்தில் குறித்த காரியங்களைச் செய்யாததால் ஏற்பட்ட தோல்விகளுக்கு கணக்கில்லை. 1857ம் வருஷத்தில் இந் நாட்டில் நடந்த புரட்சி, குறித்த காலத்தில் நடக்காததால் தான் தோல்வி யுற்றதென்று சரித்திரக்காரர்கள் சொல்லுகிருர்கள்.

கெடுவு தவருமல் செய்பவர்களே உலகத்தில் வெற்றி பெறுவார்கள். இதைக் கைக்கொள்ளுவதில் முதலில் உங்களுக்கு கஷ்டமாய் தோன்றலாம். அப்படித் தோன்றும்போது கொஞ்சம் உட்கார்ந்து யோசனை செய்யுங்கள். 4 மணிக்கு வருவதாக ஒருவரிடம் சொல்லிவிட்டு, அந்த நேரத்திற்கு போகாமலிருந்தால், அவருக்கு ஏமாற்றம் கொடுத்ததாக முடியுமல்லவா? அப்படிச் செய்தால அதனல் உங்களைப்பற்றி அவர் இழிவாக நினைக்கிருரல்லவா? உங்கள் சுயமதிப்பை காப்பாற்ற வேண்டுமானல் இந்த இரண்டையும் நீக்க வேண்டாமா? இதற்கு உங்களுக்கு வேண்டியதெல்லாம் மன உறுதி ஒன்றே. நினைப்பே செய்கைக்கு வித்தாய் இருக்கிறது. இந்தக் காரியத்தை இன்ன நேரத்தில் செய்து முடிப்பேன் என்று நீங்கள் உறுதிகொண்டால், அதை அசைக்க இந்த உலகத்தில் வேறு யாரால் முடியும்? அம்மாதிரி உறுதியும், அதனல் ஏற்படும் பழக்கமும் வந்துவிட்டால் மனித இயந்திரம் உங்களுக்கு அடிமையாக வேண்டியதைத் தவிர வேறு அதற்கு கதி என்ன?

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு

(வ. ரா.)

வங்காளத்தில் பிறந்த "வந்தேமாதரம்" கரை மார்க்கமாய்த் தமிழ் நாட்டுக்கு வந்ததோ அல்லது கடல் மார்க்கமாய் வந்ததோ என்பது சந்தேகம். கடல் மார்க்கமாய்த்தான் வந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் தூத்துக்குடியில் மட்டும் இவ்வளவு வந்தேமாதரக் கூக்குரல் ஏன்? ஸ்ரீமான்கள் சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவமும் சிறைக்குச் சென்றார்கள். சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரிக்குப் போய்விட்டார். சுதேசமித்திரன் ஆசிரியர் சுப்பிரமணிய அய்யர் ஸர்க்காரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். திருநெல்வேலி சதிக் கூட்டத்தார், சிறைக்குள் தள்ளப்பட்டனர். இத்தனை "வைபவங்களுக்கிடையே" தமிழர்களின் நாடி எப்படி அடித்துக்கொண்டிருக்கும்? சொல்லுங்கள், பார்ப்போம்.

சூரத்து காங்கிரஸ் 1907ல் உடைந்துபோய், மிதவாதிகள் அனைவரும் ஸர்க்காரோடு ஒத்துழைக்கக் கங்கணம் கட்டிக்கொண்ட பின்னர், ஸர்க்கார் உள்ளம் குளிர்ந்தது. அவர்கள் முகம் "பிரசன்னவதன"மாயிற்று. உற்சாகத்தை அளவிட முடியாது. அந்தக் காலத்துக்குச் சிறிது பின்னர், சென்னையிலே, பெண்ட்லண்டு பிரபு என்று ஒரு கவர்னர் இருந்தார். நமது நாட்டுக்கு வந்த கவர்னர்களில் அவர் "ரொம்ப மோசமானவர்." தனக்கென்று யோசிக்கும் உரிமையைக்கூட வைத்துக் கொள்ளாத உத்தம தியாக புருஷன்! அவர், "நாள், நட்சத்திர, இலக்கினம்" பார்த்து, மலைபுச்சியின் குளிர்ச்சி வாடையினிடையே ஊட்டியில் (உதகமண்டலத்தில்) திருவாய் மலர்ந்தருளினர்.

"தொண்டு செய்யும் அடிமை, உனக்கு சுதந்திர நினைவோடா பண்டு கண்டதுண்டோ, அதற்குப் பாத்திரமாவாயோ" என்ற கருத்தை, வசனத்தில் வெளியே விட்டார். சுயராஜ்ய நினைப்புக் கொண்டவர்களுக்குக் காயமான இருப்பிடம் சிறை என கர்ஜித்தார் பிரபு. அதிகார வர்க்கத்தினர் கொக்கரித்தனர். தமிழர்களோ வாடின கீரைத் தண்டைப்போலத் துவண்டுபோய் விட்டனர். ஜனத்தொகைக் கணக்கிலே சுமார் இரண்டு கோடி தமிழர்கள்! ஆனால் கவர்னர் துரை அவர்களுக்கு, தலை நிமிர்ந்து ஜவாப்பு சொல்ல—ஒரே ஒரு வரதராஜுலு நாயுடு. இத்தகைய பொறுப்

பம் பாக்கியமும் நிறைந்த பதவி, ஸ்ரீமான் நாயுடு அவர்களுக்கு திடீரென்று ஏற்பட்டதற்குக் காரணம் அவரது சொந்த சக்தியா அல்லது சந்தர்ப்பமா? இரண்டும் என்பேன் நான்.

அரண்மனைக்கு எதிர்மனை இருக்க முடியுமா என்று உறுமிய பெண்ட்லண்டு பிரபுவுக்கு, முடியும் என்று அனுயாஸமாய், பதில் சொன்ன நாயுடு அவர்கள் நொடிப்பொழுதில், தமிழர்களின் உள்ளத்தில் வேரூன்றிப் போனுர். எதிர்பாராத எழுச்சியால், தமிழர்களை குதூகலத்துடன் திடுக்கிடச் செய்யவும், அதிகார வர்க்கத்தினரை வேறுவகையில் திடுக்கிடச் செய்யவும், கூடிய சக்தி நாயுடு அவர்களுக்கு எங்கிருந்து வந்தது? பரம்பரைச் செல்வாக்கா? இல்லை. பள்ளிக்கூடப் பயிற்சியா? பள்ளிகளில் தேசாபிமானப் பயிற்சி கூடவா? இல்லை. அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டுமென்று தமிழர்களுக்குப் பொதுவாக இருந்த ஆவலா? இல்லை. சுயராஜ்ய நினைப்பே, உடம்புக்கும் வாழ்வுக்கும் ஒத்துக் கொள்ளாது என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாகவே முடிவு செய்து, முடிப்புக்கட்டிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு, ஆவலைப்பற்றிப் பேசவேண்டாம் என்கிறீர்கள். சரி, எதிர்வாதம் செய்யாமல் ஒப்புக்கொண்டேன். பின்னே, நாயுடுவின் "சிறுபிள்ளை"த் துணிவுக்குப் பக்கத்துணை யாது? நாயுடுவின் துணிவுக்கு நாயுடு தான் துணை.

"சிதம்பரம் போகாமல் இருப்பேனே, இந்த ஜன்மத்தை வீணுகக் கழிப்பேனே," என்று அன்று நந்தனர் கூறியதாகச் சொல்லுவதுண்டு. அது மெய்யோ, பொய்யோ, எனக்குத் தெரியாது. ஆனல் நாயுடு அவர்கள் பிரசங்க மேடைக்கு பெருமையும் பலமும் அளிக்கத் துவக்கின காலத்தை என்னவென்று சொல்லுவது? ஒரு சமயம் வீட்டில் படித்துக்கொண் டிருந்தேன். ஒரு நண்பர் திடீரென்று தோன்றினர். வந்ததும் வராததுமாக, நாயுடு பிரசங்கம் நீர் கேட்டிருக்கிறீரா என்ருர். தமிழ்நாட்டில் ஒரே ஒரு நாயுடு மட்டும் இருப்பதாக அவர் பேசியது எனக்கு விசித்திரமா யிருந்தது. சிரிப்பை அடக்கிக்கொண்டு, இல்லை என்றேன். தமது இரண்டு கைகளையும் ஏககாலத்தில் பலவித ரகங்களாகச் சொடுக்கிக்கொண்டு, "ச்சூச்சூ" என்று நாயைக் கூப்பிடுவதுபோல், உதடுகளினல் மிகுதியும் சுவைத்துக்கொண்டு, சத்தம் செய்தார். தேள் கொட்டிவிட்டதா என்று சொல்லிச் சிரித்தேன். உம்முடைய ஜன்மம் வீண் என்ருர். அந்த நண்பர் காண்பித்த மனேபாவம் தான், பொதுவாக தமிழ்நாட்டில் அக்காலத்தில் இருந்து வந்தது.

நாயுடு அவர்களின் பிரசங்க விளம்பரம்! நண்பர் என்னை



டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு

விடவில்லை. நானும் கூட்டத்துக்குப் போனேன், (சுமார் பதினேழு வருஷங்களுக்கு முன்னால்). அரண்மனைக்கு எதிர்மனையை வெகு அழகுடனும் துணிவுடனும் நாடெங்கும் கட்டிக்கொண்டு வரும் ஆசாமியை, நான் அதற்கு முன் பார்த்ததேயில்லை. பார்க்க ரொம்ப ஆசை; ஆனால் ஆளைக் காணவில்லை. ஸிலோன் போட் மெயிலுக்கு ஆத்திரத்துடன், ஒரு மணி நேரம் சலிக்காமல் காத்துக்கொண்டிருக்கும் கிராமவாசி இனத்தைச் சேர்ந்த எனது நண்பர், வெற்றி முகத்துடன், என்னை நோக்கிக்கொண்டேயிருந்தார். திடீரென்று, புளியம்பழம் உடைக்கிற மாதிரி, கலகலவென்று ஓரே காலத்தில் கூட்டத்தில் கைகளின் சத்தம் கேட்டது. நாயுடு அவர்களின் பிரவேசத்துக்கு அடையாளம்! நிமிர்ந்து பார்த்தேன். சிறிய உருவம்! எனது நண்பரை கேலி செய்வது போல, தொண்டையைக் கனைத்துக்கொண்டேன். பதட்டம் வேண்டாம் என்று சொல்லுவதைப்போல, அவர் என்னைப் பார்த்தார். ஆனால், அவருடைய பிராணனெல்லாம், மேடையின்பேரில் வீற்றிருந்த வரதராஜுலு நாயுடு அவர்களின்பேரில். அன்றைய தலைவரின் முகவுரைக்குப் பின்னர், நாயுடு அவர்கள் எழுந்து நின்று பேசத்துவக்கினார். குரலைக் கேட்டேன். எனது நரம்புகள் கட கட வென்று ஆட ஆரம்பித்து விட்டன. "ஒரு கோடிக்கு ஒரு கோடி" பரவியிருந்த கூட்டம், ஊசி விழுந்தால் கேட்கும்படியான அமைதியுடனிருந்தது. நாயுடு அவர்கள் தமது குரலை உயர்த்த வேண்டிய தேவையே ஏற்படவில்லை. அவருடைய இனிமையான குரலில், எவருமே, ஈடுபடாமலிருக்க முடியவில்லை. "மூர்த்தி சிறிதாயினும், கீர்த்தி பெரிது".

வெடுக்கு வெடுக்கு என்று பேசும் குழந்தையினிடம் யாருக்குத்தான் அபிமானம் இராது? பெரிய பெரிய மனிதர்களையும் உத்தியோகஸ்தர்களையும், நாஸூக்காகவும் நாகரிகமாகவும் தைரியத்துடனும் மண்டகப்படி" செய்யும் பிரசங்கியை, அதுவரையிலும், தமிழ்நாடு பார்த்ததில்லை. தங்களுடைய உள்ளங்களில் பொங்கிக் கொண்டு கிடந்த உணர்ச்சியை, உருவப்படுத்தி நயமான சொற்களில், இங்கிதமான ஜாடையுடன், சங்கீதக்குரலில் சொல்லும் ஆற்றலுடைய நாயுடு அவர்களை, தமிழர்கள் ஆரவாரத்துடன் வரவேற்றதில், வியப்பு ஒன்றுமேயில்லை. காலத்துக்கேற்ற மனிதன் என்று கொண்டாடினார்கள். இது நியாயம்.

தமிழ்ப் பண்டிதர்கள் தமிழ் பாஷையை ஒரு குழூஉக்குறியாகச் செய்துவிட்டார்கள். அதாவது நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர்களுக்கு விளங்காத பாஷையில் பேசியும் எழுதியும்,

தமிழை "குட்டிச்சுவராய்" அடித்துவிட்டார்கள். பண்டிதர்களால் தமிழுக்கு நேர்ந்த அவமதிப்பு ஒருபுறமிருக்க, ஆங்கிலம் படித்த தமிழர்கள், தமிழைப் பேசாமலே, அதை அவமதிக்கத் தலைப்பட்டனர். இந்த இரண்டு, அவலக் கூட்டத்தினிடையே அகப்பட்டுக்கொண்டு, தமிழ் தவித்துக்கொண்டிருந்தது. பண்டிதர்கள் கூடினால், விளங்காத தமிழ்! இங்கிலீஷ் படித்த தமிழர்கள் கூடினால், விளங்காத இங்கிலீஷ்! இந்த கட்டுப்பாடான குழம்புத்தனத்தைத் "தவிடுபொடி" யாக்கிய, ஏகபோக பாக்கியமும் பாத்தியமும் ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு அவர்களுக்கே உரித்தானதாகும். பாமரத் தமிழுக்குப் பெருமையும் பொலிவும் பலமும் உண்டு என்பதை நிலை நாட்டிய புண்ணியத்தை எவரும் நாயுடு அவர்களுடன் பங்கு போட்டுக்கொள்ள முடியாது.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த பிறகு, அது என்ன பிரமாத வித்தை என்று பலர் பேசினார்கள். ஆனால் கொலம்பஸுக்கு முன், அமெரிக்காவை யாரும் காணவில்லை என்பதொன்றே, அவர்களுடைய வாயை அடைக்கப் போதுமான ஆதாரமாகும். எல்லோரும் அறியக்கூடிய எளிய தமிழில், பெரிய விஷயங்களை, சிக்கலான சங்கதிகளை, பலவிதமாகப் பேச முடியும் என்பதை நாயுடு அவர்கள் விளக்கமாகக் காண்பித்துக் கொடுத்தார். (நாயுடு அவர்களின் தாய் பாஷை தெலுங்கு என்பது உங்கள் நினைவில் இருக்கட்டும்.) நாயுடு அவர்களின் இந்த ஒப்பற்ற தொண்டே, அவர் ஜன்மம் எடுத்ததற்குப் போதுமானது.

அனேகமாய்ச் சம வயதுள்ள மூன்று ராஜீயவாதிகள், மூன்று வகைகளில், தங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொண்டு வருகிறார்கள். மூன்று பேர்களும் பழுத்த ராஜ தந்திரிகள். ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு (2) ஸ்ரீ. ஜியார்ஜ் ஜோஸப் (3) ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார். மூன்று பேர்களும் மூன்று "திரிகடுகங்கள்"! செட்டியார் அவர்கள் வெற்றிக்கு, சுகத்துக்கு, தாற்காலிகப் பெருமைக்குத் தாஸனாக, தம்மை அமைத்துக் கொண்டு விட்டார். பாரிஸ்டர் ஜோஸப், மனச்சாட்சிக்கும் மனச் சஞ்சலத்துக்கும் மதத்திற்கும் தாஸனாக, தம்மை ஆட்படுத்திக் கொண்டு, "ஆற்றில கரையறியாமல்" அலைகின்றார். ஸ்ரீமான் நாயுடு அவர்களோ, தாயதேசாபிமானம் ஒரு புறம் பிடித்திழுக்க, சாமர்த்திய ராஜதந்திரம் மற்றொரு பக்கம் பிடித்திழுக்க, இரண்டுக்கும் இடையே, மன அமைதியின்றி, ஊசலாடுகின்றார். உலகமே ஒரு நடன அரங்கம், நாடகமேடை என்கிறார் ஷேக்ஸ்பியர். உண்மை. இதிலே, தன்னை மறந்து, "ஆக்ட" செய்யும் உத்தமனுக்கு முதல் பரிசு என்பதும் பொய்யா!

நாயுடு அவர்களுக்கு, எதிலும் சந்தேகம் ஏற்படுவதில்லை. அதாவது சந்தேகத்தைக் கொடுக்கக்கூடிய கருத்தோ, கற்பனையோ, கர்மமோ, அவருடைய அறிவிலே தோன்றுவதேயில்லை. அவருக்குத் தெரிந்த சங்கதிகள் ஆணித்தரமானவை; தெரியாத விஷயங்கள், அவருக்குத் தேவையில்லை. இதுவே, அவரது வாழ்வின் தத்துவத்தின் சாரம் என்பது எனது கருத்து. ஒரு எல்லைவரையிலும், அவர் காண்பிக்கும் துணிவையும் அபிமானத்தையும் போல, வேறு எவராலும் காண்பிக்க முடியாது. இதுவே, அவருடைய பலத்துக்கும் பலவீனத்துக்கும் அஸ்திவாரமாகும். அடிமை நாடு, கண்விழித்து விடுதலை பெறும் காலையில், தியாகம் நிறைந்தும் தந்திரம் குறைந்தும் இருக்கவேண்டும் என்பது காந்தியின் உபதேசம். இதை நாயுடு அவர்கள், முற்றிலும் ஏற்பதில்லை; முற்றிலும் தள்ளிவிடுவதுமில்லை.

தன் வழி போவதில், நாயுடு அவர்களுக்கு எவரும் ஈடாக மாட்டார்கள். இந்த நெஞ்சழுத்தத்தைக் கொடுத்தது, அவருக்கு, எளிதிலே, விரைவிலே கிடைத்த வெற்றியாகும். மேலும், இதற்கு வேறு காரணமும் உண்டு. பண்டைக் காலத்தில், புலவர் பொறாமை என்பது பெயர் போன சங்கதியாகும். இந்தக் காலத்தில் தலைவர் பொறாமை தலைதூக்கி ஆடுவதைப் போல, வேறு எந்த அவலட்சணமும் என் கண்களில் பெரிதாகப்படவில்லை. நாயுடு அவர்களிடம் சிலருக்கு ஏற்பட்ட பொறாமையினாலே, நாயுடு அவர்கள் அநியாயமாய், அனாவசியமாய், தனிவழி கோலிக்கொண்டு, தத்தளித்து வருகின்றார். ஆனால் நாட்டுக்கு நெருக்கடி வருங்காலங்களிலே, நாயுடு அவர்கள் விட்டுக்கொடுப்பதேயில்லை.

நமது தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்குள் நாயுடு அவர்கள் வயதிற் சிறியார். எனவே, நாட்டுப்பணி சம்பந்தப்பட்டவரையிலும், அவர் செய்ததுபோக, இன்னும் அதிகமாகச் செய்வதற்குத் தேவையான ஆயுள் அவருக்கு உண்டு. அடிமைத் தனத்தை வெகுண்டு, அதிகாரவர்க்கத்தினருக்குச் சிறிதும் அஞ்சாமல், 'விர்' என்று அரசியல் உலகில் தோன்றிய நாயுடு அவர்களுக்குத் தமிழ் நாடு என்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறது. அடிமைகளுக்கும், அதிகார வர்க்கத்தினருக்கும் இடையே நின்று பஞ்சாயத்து வேலை பார்த்து வரும் நாயுடு அவர்கள், தமது இயற்கையான வல்லமையையும் வேகத்தையும் மறந்து போனார் போலும்! விடுதலைக் காக, தமிழர்களைத் தட்டியெழுப்பிய வீரன், தமது இயல்பை மறந்து விடுவாரா? நாம் தான் அவசரப்படுகிறோமோ, என்னமோ?

கீர்த்தி வாய்ந்த தலைவர்களுக்கு, பொது ஜனங்கள் செல்லப் பெயர் கொடுப்பதுண்டு. இந்த செல்லப் பெயர்தான், பொது ஜனங்களுக்கு ஒரு தலைவரிடம் இருக்கும் அன்புக்கும் பக்திக்கும் ஒரு அடையாளமாகும். ஆங்கில நாட்டில் ஜோஸப் சேம்பர்லேன் என்ற அரிய தலைவரை, ஜனங்கள் "ஜோ" என்று அருமையாக அழைப்பார்கள். ராம்ஸே மாக்டொனல்ட் அவர்கள் "மாக்". அது போலவே, நாயுடு அவர்களுக்கும் ஒரு செல்லப்பெயர். அவருக்கு துப்பாக்கி நாயுடு என்று பெயர். நாயுடு அவர்கள் தமது ஆள் காட்டி விரலை மட்டும் நீட்டிப் பிரசங்கம் செய்யும் வழக்கமே, இந்தப் பட்டப் பெயருக்குக் காரணமாகும். பெரிய பெரிய கூட்டங்களினிடையே, அவரது சிறிய ஆட்காட்டி விரல் அதிகாரம் செய்வதை, நேரில் கண்டவர்கள் தான் அனுபவிக்க முடியும்.

நாயுடு அவர்கள் வாய்ச் சொல் ஒத்துழையாதாருமல்ல, வைதிக ஒத்துழையாதாருமல்ல; அவர் அனுபவ ஒத்துழையாதார். பர்டோலித் தீர்மானத்துக்குப் பின்னர்,காந்தி சிறைசென்ற சமயத்தில், மகாத்மா விடுதலையாகும் வரையில் எவ்வித வரியும் சர்க்காருக்குக் கொடுப்பதில்லை என்று நாயுடு அவர்கள் தீர்மானம் செய்து கொண்டார். மோட்டார் கார் ஏலத்திலே போய்விட்டது. போதாத தொகைக்கு, வீட்டிலே ஜப்திக்கு வந்து, வேண்டிய ரொக்கத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டு போனது சரித்திரமாகும். இத்தகைய தீவிர ஒத்துழையாரைச் சிறப்பாகக் குறிப்பிடாமல், என்னால் இருக்கமுடியாது.

ஸ்ரீமான் நாயுடு அவர்கள், தமது மத்தியஸ்த நிலைமையை விட்டு விட்டு, தமக்குப் பல ஆண்டுகளாகக் கிடைத்திருக்கும் அனுபவத்தையொட்டி, கட்சிப் பிரதி கட்சியில்லாமல், தமிழர்களிற் பெரும்பாலரை ஒன்று படுத்தி, தமிழர்களுக்கு விடுதலை வெற்றியைக் கொண்டுவர முடியும் என்பது எனது நம்பிக்கை. இந்த வேலையில், அவருக்கு இணையாக யாரையுமே சொல்லமுடியாது. ஆனால், இதை அவருக்கு நினைவூட்ட வேண்டுமென்ற பொறுப்பு, அவரது ஆதிகால நண்பனை என்னைச் சேர்ந்ததென்று முடிக்கிறேன்.

(அடுத்த மலரில் ஸ்ரீ. சி. ராஜகோபாலாச்சாரியாரைப் பற்றி நண்பர் வ. ரா. எழுதுவார்.)

மகாத்மா வாழ்க்கை

கஸ்தூரி தேவி வெற்றி

1919ம் வருஷத்தில் ரௌலட் சட்டத்தை ரத்துச்செய்வதற்காக மகாத்மா சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்தார். அதை ஆரம்பிக்கு முன்பு அதாவது 1918-ல் மகாத்மாவின் தேக நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. யுத்தம் நடக்கும்போது மகாத்மா யுத்தத்திற்கு ஆட்கள் திரட்டிக் கொடுத்தார். அதற்காக பல இடங்களுக்கு அவர்போய் சுற்றித் திரிந்தபடியால் அவருக்கு வயிற்றுக்கடுப்பு கண்டது. அந்த வியாதியில் அவர் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. அவர் பிழைக்க மாட்டார் என்று கூட நினைக்கும்படியாயிருந்தது. நல்ல வேளையாக பிழைத்துக்கொண்டார். அவரால் இந்தியாவிற்கு எவ்வளவோ காரியங்கள் ஆகவேண்டி யிருக்கும்போது அவர் எப்படி இவ்வுலகை நீத்துவிடமுடியும்?

வயிற்றுக்கடுப்பால் அவர் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது யுத்தம் முடிந்துவிட்டது. அச்சமயத்தில் தான் ரௌலட் சட்டம் கிளம்பிற்று. இச்சட்டம் நிறைவேறாமல் செய்ய மகாத்மா பலமான முயற்சி செய்தார். இந்தப் பிரசாரத்தில் தீவிரமாய் கலந்து கொள்ளுவதற்கு அவருடைய பல வீனமான உடல் நிலைமை முதலில் இடங்கொடுக்கவில்லை. சிக்கிரமாக பலமடைய மகாத்மா மிகவும் ஆவல் கொண்டார். ஆனால் டாக்டர் சொல்லுவதை அவர் கேட்கவில்லை.


மகாத்மா பலமடைய வேண்டுமானால் அவர் பால் சாப்பிட வேண்டுமென்றும், இஞ்செக்ஷன் செய்துகொள்ள வேண்டுமென்றும் டாக்டர்கள் சொன்னார்கள். இஞ்செக்ஷன் செய்துகொள்ள மகாத்மா சம்மதித்தார். பால் அருந்த முடியாதென்று மறுத்து விட்டார். ஆனால் சிக்கிரமாக பலம் வேண்டுமென்று சொல்லுகிறார். இந்த தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வது? டாக்டர் கொஞ்சநேரம் யோசித்தார். "நீங்கள் எதற்காக பால் சாப்பிட மறுக்கிறீர்கள்?" என்று டாக்டர் கேட்டார். மகாத்மா:—"பசுக்களையும், எருமைகளையும் இடையர்கள் நடத்துகிற விதத்தைப் பார்த்ததிலிருந்து, இனி பசுவின் பாலோ எருமைப் பாலோ சாப்பிடுவதில்லையென்று விரதங் கொண்டிருக்கிறேன்."

விரதங் கொண்டிருந்தால் அதை எப்படி மாற்றுவது? டாக்டர் விழித்தார். பக்கத்தில் நின்ற கஸ்தூரி தேவிக்கு திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே மகாத்மாவைப் பார்த்து "பசுவின் பாலும், எருமைப் பாலும் தானே சாப்பிடுவதில்லை என்று விரதம் செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

மகாத்மா:—ஆம்.

கஸ்தூரி தேவி:—அப்படியானால் ஆட்டுப் பால் சாப்பிட உங்களுக்கு ஆட்சேபனை யில்லையே?

மகாத்மா அகப்பட்டுக் கொண்டார். ஆட்டுப் பால் அவர் விரதத்தில் சேராததால் அதை அவர் சாப்பட மறுக்க முடியவில்லை. டாக்டருக்கும், கஸ்தூரி தேவிக்கும் அச்சமயம் வந்த சந்தோஷத்திற்கு அளவுண்டோ? கஸ்தூரி தேவி வெற்றி பெற்றார். மகாத்மா பலம் பெற்றார்.



லார்ட் சாலிஸ்பரி தமது நணபர்களுடன் பேசிக்கொண் டிருக்கும்போது திடீரென்று அவர் முகம் துக்ககரமாய் மாறிற்று. பக்கத்தி லிருந்த நண்பர் 'என்ன சமாச்சாரம்?' என்று கேட்டார்.

சாலிஸ்பரி:—வந்துவிட்டது. எதிர்பார்த்தது வந்துவிட்டது.

நண்பர்:—என்ன வந்துவிட்டது?

சாலிஸ்பரி:—டாக்டர் சொன்னது உண்மையாயிற்று.

நண்பர்:—என்ன சமாச்சாரமய்யா? சொல்லுங்களேன்.

சாலிஸ்பரி:—எனக்கு வாதநோய் வருமென்று டாக்டர் சொன்னார். 5 நிமிஷங்களாக எனது தொடையை கிள்ளிப் பார்க்கிறேன். கொஞ்சங்கூட உணர்ச்சியில்லை. ஆகவே எனக்கு வாதம் வந்துவிட்டது உண்மை.

பக்கத்திலிருந்து மற்றொரு நண்பர்:—5 நிமிஷமாக என்னுடைய தொடையை யல்லவா நீங்கள் கிள்ளிக் கொண்டிருக்கிறீர்கள்!

கண்டதும் காதல்

('தேவிதாசன்' எழுதுகிருர்)

இது என்ன கனவா நனவா என்று எனக்கு பலத்த சந்தேகம் வந்தது. கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன். தொடையை கிள்ளிப் பார்த்தேன். கனவல்ல; உண்மையே. பசுவும், புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடிக்குமா என்று கேட்கிருர்கள். ராமர் ராஜ்யத்தில் குடித்ததாகச் சொல்லுகிருர்கள். எனக்குத் தெரியாது. ஆனல் அன்று நான் கண்ட காட்சி, சில சமயங்களில் பசுவும் புலியும் ஒரே துறையில் தண்ணீர் குடிப்பதும் அதிசயமல்ல என்று நினைக்கும்படியா யிருந்தது. இவ்வளவு அதிசயங்களுக்கும் குழப்பங்களுக்கும் மூலகாரணம் நண்பர் ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியார் என்பதை முதலில் உங்களுக்கு சொல்லி விடுகிறேன். ஹிந்துமத தர்ம ஸ்தாபன போர்டில் கமிஷனரா யிருக்கும் ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியார் ஒரு பெரிய தமிழ் அறிஞர். அவர்மீது எனக்கு பிரியம் ஏற்படுவதற்கு 5 காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், கொடுந்தமிழைக் கண்டித்து எளிய தமிழ் நடையை அவர் ஆதரிப்பது. இரண்டாவது, தமிழ்ப் பண்டிதர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், பெரிய பெரிய தமிழ் அறிஞர்கள் கூடியுள்ள இடங்களில், எளிய தமிழ் நடையை ஆதரித்துப் பேசுதல். உதாரணமாக "காந்தி" பத்திரிகையின் தமிழ் நடையை எடுத்துக் காட்டி பேசுவார். மூன்ருவது, தமிழ் கவிதைகளை முழுதும் அநுபவித்து அறியும் அவருக்குள்ள அபாரமான ஆற்றல். நான்காவது, இந்தக் கவர்ச்சிகளால், மற்ற விஷயங்களில் அபிப்பிராயபேதமுள்ளவர்களையும், தமிழ் கவிதைகளை கேட்கும் பொருட்டு, ஒரே அறையில் கூடியிருக்கும்படி செய்வது. ஐந்தாவது காரணத்தைச் சொல்ல வேண்டியதே யில்லை. இருந்தாலும் சொல்லுகிறேன். "அவருக்கு எங்கள் ஊர்."

* * *

வாரத்திற் கொருநாள் ஸ்ரீ. சிதம்பரநாத முதலியார் அவர்களின் தமிழ்ப் பிரசங்கம் நடக்கும். பிரசங்கம் என்ருல் பெரிய கூட்டத்தில் பேசுவதல்ல. கூடினுல் 1 டஜன் பேருக்கு மேல் அங்கே கிடையாது. நெருங்கிய நண்பர்களை மட்டும் அக் கூட்டத்திற்கு அழைப்பார்கள். கம்பன் என்ருல் முதலியார் அவர்களுக்குஉயிர். கம்பன் கவிதைகளை எடுத்துச் சொல்லி வியாக்கியானஞ் செய்யும்போது கேட்பதற்கும், பார்ப்பதற்கும் அழகாயிருக்கும். முதலியாரவர்கள் கம்பன் கவிதையில் அப்படியே சொக்கிப் போவார். கம்பன் கற்

பனை மனதை பூர்ணமாய் அறிந்த சிலரில் முதலியார் அவர்களும் ஒருவர் என்பதை எவரும் மறுக்க முடியாது. இடையிடையே பொருத்தமான கதைகளையும், ஆங்கிலக் கவிதைகளையும் எடுத்துக்காட்டி அவர் வியாக்கியானஞ் செய்வதைக் கேட்டால் அவரை ஒரு கவிஞர் என்றே சொல்லுவார்கள்.

தமிழில் எவ்வளவு நயம் ஸ்ரீ. முதலியாருக்கு தெரிந்திருக்கிறதென்பதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். ஒரு நாள் கம்ப ராமாயணத்தில் சூளாமணி படலத்தில் பாட்டுகளுக்கு வியாக்கியானஞ் செய்துகொண்டிருக்கும்போது சில பாட்டுகளை விட்டு விட்டார். எல்லாருக்கும் திகைப்பு ஏற்படவே, ஸ்ரீ முதலியார் "இந்தக் கவிகளை கம்பர் பாடியதாகத் தெரியவில்லை" என்றார். உடனே அங்கிருந்த ஸ்ரீ. வையாபுரிப் பிள்ளை அப் பாட்டுகளுக்கு மூலப்பிரதிகள் இருக்கின்றனவா என்று ஒரு புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தார். பார்த்த பின்பு "மூலப் பிரதிகள் இல்லை" என்று அவர் சொன்னதும் எல்லாருக்கும் வெகு ஆச்சரியமாய் போய்விட்டது!

இம்மாதிரியான கூட்டங்கள் நடைபெறுவதற்கு இடமும், சிற்றுண்டியும் அளிக்கும் பெருமை அட்வோகேட் ஸ்ரீ. அப்புசாமி ஐயருக்கு உரியது. அவருக்கு தமிழ் அபிவிருத்தியில் எவ்வளவு ஆர்வம் உண்டென்பதற்கு ஒரு உதாரணம்சொல்லுகிறேன். ஒரு நாள் இந்தக் கூட்டத்திலிருந்து திரும்பி கடற்கரையோரமாக நண்பர்களுடன் வரும்போது, அட்வோகேட் ஸ்ரீ எஸ். ராமசாமி ஐயரை சந்தித்தேன். "எங்கே மைலாப்பூரிலிருந்து வருகிறாப்போலிருக்கிறதே. என்ன விசேஷம்?" என்று கேட்டார். "தமிழ் அன்பர் மகாநாடு சம்பந்தமாக ஒரு கூட்டத்திற்கு போய்விட்டு வருகிறேன்" என்று பதில் சொன்னேன். உடனே அவர் "எங்கே அப்புசாமி ஐயர் வீட்டிலா?" என்று கேட்டார். மைலாப்பூரில் தமிழ் அபிவிருத்தி கூட்டம் என்றால், அப்புசாமி ஐயர் இல்லாத கூட்டம் இருக்கமுடியாது என்று பிறர் நினைப்பதா யிருந்தால், அதிலிருந்தே அப்புசாமி ஐயரின் அபிமானத்தை நீங்கள் அறிந்துகொள்ளலாம். ஸ்ரீ. அப்புசாமி ஐயர் காலஞ்சென்ற ஸ்ரீ. அ. மாதவய்யாவின் சகோதரர் குமாரர். அவர் தமிழுக்காக செய்திருக்கிற—செய்து வருகிற வேலைகள் ஒரு பெரிய கதை. அதைப்பற்றி பின்னால் ஒரு சமயம் சொல்லுகிறேன்.

* * *

நான் முதலில் சொன்னேனே, ஒரு பொய அதிசயம், அதைப் பற்றிச் சொல்லாமல் கதையை நீட்டிவிட்டதாக நீங்கள் கோபிக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். பூர்வ பீடிகை இல்லாமல் எதுதான் ரஸிக்கும்? அன்றையக் கூட்டத்திற்கு நானும் நண்பர்கள் கே. சீனிவாசனும்,

வ. ரா. வும் போயிருந்தோம். அங்கே போய் உட்கார்ந்தபின்பு தான் அந்த அதிசயத்தைக் கண்டேன். ஒரு பக்கம் ஜெயிலுக்குப் போனவர்களாகிய நாங்கள். மற்றொரு பக்கம் ஒரு பெரிய சர்க்கார் அதிகாரி. அவர் பெயரை இங்கே குறிப்பிட வேண்டாம். வேறொரு பக்கம் "ஹரிஜன" பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீ. ஆர். வி. சாஸ்திரி. அவருககு எதிரே யார் தெரியுமா? ஹரிஜன இயக்கத்திற்கு விரோதமாக வைதிகக் கொடி பிடிக்கும் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. வி. வி. சீனிவாச ஐயங்கார்! இன்னொரு பக்கம் தமிழ் அகராதி கமிட்டித் தலைவர் ஸ்ரீ. வையாபுரிப் பிள்ளை. இந்தக் கூட்டத்தின் மத்தியில் ஸ்ரீ. சிதம்பரநாத முதலியார். இக்கூட்டத்தைப் பார்த்தால் யாருக்குத்தான் ஆச்சரியமாயிருக்காது என்று கேட்கிறேன். இந்த அதிசயமான கூட்டத்திற்குக் காரணம் ஸ்ரீ. முதலியார் அவர்களின் கவிதாஞானமல்லவா? ஸ்ரீ. முதலியார் பாட்டுகளை வாசித்து வியாக்கியானஞ் செய்தார். இடையிடையே பல ரஸமான வாதங்கள் நடைபெற்றன. அவற்றில் ஒன்றை இங்கேகுறிப்பிட விரும்புகிறேன். சூர்ப்பனகை ராமனைக் கண்டதும் காதல் கொண்டாள் என்றபாகம் வந்தது. "கண்டதும் காதல் என்றவிஷயம்நடக்கக்கூடியதா?" என்று அந்த சர்க்கார் அதிகாரி கேட்டார். கவிஞர்கள் எல்லாரும், உலகம் முழுவதிலும் அம் மாதிரியே சொல்லியிருப்பதாக ஒருவர் சொன்னார்.

அதிகாரி:—கவிஞர் சொல்லுகிறார்களா இல்லையா என்று நான் கேட்கவில்லை. நமது வாழ்க்கையில் அம்மாதிரியுண்டா?

வி. வி. சீ. ஐயங்கார்:—நமக்கு ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையின ஒவ்வொரு பகுதிதான் தெரியும். கவிஞர்கள், வாழ்க்கையின் சகல அம்சங்களையும் உணர்ந்தவர்கள். நம்மைவிட அதிகம் அறிந்தவர்கள் சொல்லுவதை ஆட்சேபிக்கமுடியாது.

அதிகாரி:—இப்படி சொல்லக்கூடாது. இங்கேயிருக்கிறவர்களில் யாருக்காவது அந்த அநுபவம் இருந்தால் தயவு செய்து சொல்லுங்கள்.

இந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் எல்லாரும் சிரித்தார்கள். வ. ரா. வும் சிரித்தார். சிரிப்போடு சிரிப்பாய் "ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இந்த அநுபவம் ஒரு தடவை நேரிடுவதுண்டு" என்று சொன்னார்.


அதிகாரி:—அது எப்படி முடியும்? முன்பின் ஒருவரை யொருவர் அறியாமல் எப்படி காதல் கொள்ள முடியும்?

* * *

ஆகவே காதல் என்றால் ஒருவரை யொருவர் நன்றாய் அறிந்த பின்பே ஏற்படுமென்று அவர் சாதித்தார். திடீரென்று ஏற்படக்கூடிய உணர்ச்சிகளோ,

எழுச்சிகளோ மனிதருக்கு கிடையாதென்று இதனால் ஏற்படுகிறது. இதை அங்கிருந்தவர்கள் யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. சட்டென்று வ. ரா. ஒரு வார்த்தைசொன்னார். "உணர்ச்சியில்லாமல், லாப நஷ்ட கணக்கு பார்க்கிறவர்களுக்கு கண்டதும் காதல் ஏற்படாதுதான்" என்று சொன்னார். இதைக் கேட்டதும் எல்லாரும் சிரித்துவிட்டார்கள். ஸ்ரீ. முதலியார் கடைசியாக, "கண்டதும் காதல் என்பது வெறும் கவிஞர்களின் மனோ கற்பனையல்ல. உண்மைதான. அதற்கான அநேக உதாரணங்களை காட்டமுடியும். அந்த விஷயம் பெரிய விஷயமாகையால், அதைப்பற்றி மற்றொரு நாள் பேசலாம்" என்றார். அதோடு அவ்விஷயம் முடிவு பெற்றது. அம்மாதிரி அவர் மற்றொரு நாள் சொல்லுவாரானால், அவர் சொல்லுவதை உங்களுக்கு தெரிவிக்கிறேன். அதுவரை நீங்கள் யோசிப்பதற்காக உங்களுக்கு ஒரு கேள்வி போடுகிறேன். கேள்வி பழைய கேள்விதான். அதாவது "கண்டதும் காதல் கொள்ளுவது உண்மையாக நடக்கிற சம்பவமா?" உங்கள் மனதிலுள்ளதை வெளியில் சொல்ல உங்களுக்கு ஒருவேளை கூச்சமாயிருக்கலாம். இருந்தாலும்—நீங்களாக— தனிமையாக— இதைப்பற்றி யோசியுங்கள். இதில் உங்களுக்கு கூச்சமிருக்காதல்லவா?

அகஸ்தியர் காமரா



மேலே காணப்படும் படம் பிடிக்கும் "காமரா" இது வரை செய்யப்பட்டவைகளி லெல்லாம் மிகச் சிறிது. அதன் நிறை 5-தோலா. 8-படங்கள் எடுக்கவேண்டிய "பில்மை" அதிலே வைத்துக்கொள்ளலாம்.



கறுப்பன்:—"இந்தக் காலத்தில் உண்மையைக் கூறினதற்கு ஜயிலுக்குப் போகவேண்டி யிருக்கிறது!"

வெள்ளையன்:—"என்ன? உண்மையைக் கூறினதற்கு ஜயில் தண்டனையா?"

கறுப்பன்:—"ஆம்! போனவருஷம் என்னுடைய கேஸில் ஜட்ஜ் 'நீ இவர் வீட்டில் திருடியதுண்டா? என்று கேட்டார். நான் "ஆம்" என்று ஒப்புக்கொண்டதற்கு ஒரு வருஷ தண்டனை யடைந்தேன்!"

—பி. ஆர். எஸ். கோபால், பொள்ளாச்சி.

வழிப்போக்கர்:—அர்ஜ்ஜெண்ட் சார், சுடச்சுட ஏதாவதிருக்குமா?

ஹோட்டல்காரர்:—தோசைக் கல்லிருக்கிறது.

—எஸ். ஆர். அத்தியப்பர், சென்னை.

ராமன்:—"அம்மா நான் பிறந்த சமயத்தில் நீ எங்கே யிருந்தாய்?"

தாய்:—"நான் என் தாய் வீட்டிலிருந்தேன்."

ராமன்:—"நான் பிறந்த சமாச்சாரம் தெரிந்ததும் ரொம்ப சந்தோஷமாய் பார்க்க வந்திருப்பாயே"

தாய்:—"ஆம்"

— ராம. லெ. ராமசாமி, கோட்டையூர்.

அவன்:—உன் பெயரென்ன?

இவன்:—எனக்குத் தெரியாது.

அவன்:—என்ன! உன் பெயர் உனக்குத் தெரியாதா?

இவன்:—ஆம், நான் இரண்டு மூன்று மாதக் குழந்தையாயிருக்கும் போதே எனக்குப் பெயர் வைத்துவிட்டார்கள். இப்பொழுது எப்படித் தெரியும்?

—சண்முகநாதபுரம்.

கார்கோட சுந்தரம் பிள்ளையைக் காட்டிலும் நீளமாகப் பேசுகிறவர். 5-மணிக்கு 'வேத' காலத்தில் ஆரம்பித்தவர், 8-மணிக்கு 'மகஸ்தினிஸ்' க்கு வந்தார். இன்னம் பழைய சரித்திரம் பாக்கி இருக்கு. இந்தியா இங்கிலீஷ்காரரிடம் சிக்கினது, ஔரங்கசீப் நவாப் முன் அவன் மகள், டக்காமஸ்லின் உடுத்தி நிர்வாணமாக நின்றது, கட்டை விரலை வெட்டிய கதை, பிறகு கிலாபத் பஞ்சாப் படுகொலை, ஒத்துழையா திட்டம், காந்தி இர்வின் ஒப்பந்தம், மறுபடியும் சண்டை (அஹிம்சா சண்டை) புனு ஒப்பந்தம், காந்தி 21-நாள் விரதம். பஞ்சாப் மெயில் வேகத்தில் $10\frac{1}{4}$-மணிக்கு உபதேசத்தை இனிது முடித்தார் பிரசங்கி. தேவதாஸ் காந்தி, லக்ஷ்மி விவாஹத்தையுங் கூறி பிரசங்கத்தை மங்களகரமாக முடிக்க ஆசை. ஆனல், நேரமாய் விட்டதென உணர்ந்தார். "சகோதர, சகோதரிகளே! வெகுநேரம் எடுத்துக்கொண்டு விட்டேன். கையில் கடியாரமில்லாத தோஷம். இந்த 'ஹாலி' லும் கடியாரமில்லை" என்ருர்.

சபையிலொருவருக்கு கோபம் பொங்கிற்று "நல்ல வேளையாக உமக்குப் பின்னல் ஒரு 'காலண்டர்' தொங்குகிறது" என்ருர்.

—தி. சதாசிவம்.

பையில்வான் ஒரு எலுமிச்சம்பழத்தை நன்ருய்ப் பிழிந்து விட்டு "சபையோர்களே! இதிலிருந்து இனி ஒரு சொட்டு ரஸம் யாராவது பிழிந்தால் பத்து ருபாய் பந்தயம்." என்ருன்.

கிழிந்து கோட்டணிந்து மெல்லிய உடலுடன் ஒருவர் முன் வந்து நாலு சொட்டுப் பிழிந்தார். யாவரும் ஆச்சரியமடைந்தனர். பயில்வான் அவரை, 'நீங்கள் யார் ஸார்,என்ன வேலை' என்ருன். "இன்கம் டாக்ஸ் ஆபீசில் வேலை" என பதிலளித்தான்.

—தி. சதாசிவம்.

பிரசங்கிடார்:—சகோதரர்களே! நாம் இவ்வித பிற்போக்கான—அதாவது பகுத்தறிவிற் கொவ்வாத—சாஸ்திரங்களையும், மதக்கோட்பாடுகளையும் கண்ணை மூடிக்கொண்டு நம்பி விடுகிரோம். இனிமேல்...........

ஒருவர்:—போங்க சார்! யார் சொன்னது? கண்ணைத்திறந்து கொண்டேதான் நம்பி விடுகிரோம்.

—வி. சீனிவாசன், பழனி.

வாத்தியார்:—ஆறில் பாதி என்ன ?

பையன்:—அந்த கணக்கு எனக்கு தெரியவில்லை சார்.

வாத்தியார்:—இரண்டு மனிதர் ஆறு ரூபாயைத் திருடினர்கள் என்று வைத்துக்கொள். ஒவ்வொருவருக்கு எவ்வளவு கிடைக்கும்.

பையன்:—(அவனுடைய தகப்பன் மாஜிஸ்டிரேட்) ஒவ்வொருவருக்கும் 15-நாள் கடுங்காவல் தண்டனை கிடைக்கும் சார்.

— எஸ். திருமலை, போரையாறு.

அப்பாசாமி சாஸ்திரிகளும் குப்பாசாமி சாஸ்திரிகளும் சந்தித்த பொழுது பின்வரும் சம்பாஷணை நிகழ்ந்தது. அப்பாசாமி சாஸ்திரி :—

என்னாங்காணும், எங்காத்துக் கொல்லையிலே இருக்கிற தென்னைமரத்திலே தேங்காய் அடிக்கடி களவு போகிறது. எந்தச் சண்டாளனே திருடிக்கொண்டு போகிருன். அந்தச் சண்டாளனை எப்படி பிடிப்பது?

குப்பாசாமி சாஸ்திரி :—

இதற்கென்ன பிரமாத யோஜனை வேண்டியிருக்கு. கொஞ்சம் மூளை யிருந்தால் வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடலாம். ஏங்காணும், உம்முடைய ஸோமனை தென்னமரத்தினடியில் கட்டி விடும். அச்சாண்டாளப் பயல் வந்தால் ஸோமனைத் தொடாமல் எப்படி மரத்தில் ஏறமுடியும்? என்ன செய்வது என்று தயங்குவான். அப்பொழுது பிடித்துவிடலாம்.

அப்பாசாமி சாஸ்திரியும் அவ்வண்ணமே அன்று செய்தார். மறுநாட் காலையில் ஸோமனும் தேங்காயும் காணேம்.

— எஸ். கிருஷ்ணய்யர்.

தாயார்:—என்னடா சாப்பிடம்போது சாதத்தின்மேல் துணியை போட்டு மூடிக்கொண்டு சாப்பிடுகிருய்.

மகன்:—இன்றைக்கு பள்ளிக்கூடத்தில் வாத்தியார். "காடிக்கஞ்சியானாலும் மூடிக்குடி" என்று சொன்னதால்தான் இப்படிச்செய்கிறேன்.

—* டி. எஸ். எஸ். காசீம், மானமதுரை.


உபாத்தியாயர்:—"தைடலை யார் தலையில் வைத்துக்கொண்டிருப்பவர்?

ஒரு மாணவன்:—"ஆலமரம் சார்! பூராவும் தையலை.-(தையல் இலை)


—எம். குமாரசாமி, பாண்டமங்கலம்.

* 2-ரூபாய் பரிசு பெற்றவர்,

ஸ்ரீமான் வர்த்தகரின் மெலிவு.



உலக வர்த்தகம் என்ற ஸ்ரீமான் இருக்கிறாரே, அவர், எப்படி நாளொரு மெலிவும், பொழுதொரு தேய்வுமாக கரைந்து கொண்டு வருகிறார் என்பதை இப்படம் காட்டுகிறது. 1929ல் 5362 பத்து லட்சம் டாலர் (160860 லட்சம் ரூபாய்) பெறுமான வர்த்தகம் நடைபெற்றது. அது கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து, 1933 ஜனவரியில் 1765 பத்து லட்சம் டாலர் (52950 லட்சம் ரூபாய்) வர்த்தகத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது. இந்தக் கணக்கு உலகப் பொருளாதார மகாநாட்டு காரியாலயத்தால் தயார் செய்யப்பட்டது.



வால்நாதர் ஓட்டம்

('தேவிதாசன்' எழுதுகிறார்)

அன்றையத் தினம் பரபரப்பான தந்திச் செய்திகள் எதுவுமில்லை. வெளியூர் நிருபர்கள் கடிதங்களிலும் "கொலையோ, கொள்ளையோ, கொடுமையோ, சிறைபிடித்தலோ" இல்லை. ஆசிரியர் திருகத் திருக விழித்தார். எது வெறும் "டல்"லாயிருக்கிறது? 'யூஸ்லெஸ்' என்று அவர் முணுமுணுத்துக்கொண்டு என்னை வெறிக்கப் பார்த்தார். உடனே ஜோபியிலிருந்த நோட்புக்கை இடது கையில் பிடித்து வலது கையால் பென்சிலைத் தாங்கி அவர் சொல்லுவதைக் குறிக்கத் தயாராய் நின்றேன். "உள்ளூரில் கூட ஒன்றும் விசேஷம் இல்லையா?" என்றார்.

நான்:—இல்லை.

ஆசிரியர்:—"ஒரு காசுக்கும் உதவமாட்டீர்கள். தினசரிப் பத்திரிகைக்கு உயிர் பரபரப்பான செய்திகள். ஊரில் பரபரப்பு இல்லையென்றால் நீங்கள் உண்டுபண்ண வேண்டும். நெப்போலியன் 'சந்தர்ப்பங்களை' எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை. அவன் யுத்தத்திற்குத் தயாராயிருந்தால் சந்தர்ப்பங்களை அவனே உண்டு பண்ணுவான். தெரிகிறதா?" என்று சொல்லி ஒரு கனைப்பு கனைத்தார். நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை தலை குனிந்து நின்றேன். "ஊரில் செய்திகள் இல்லையென்றால் இதற்கு நான் என்ன இழவு செய்ய முடியும்?" என்று மனதிற்குள் திட்டிக் கொண்டேன். இரண்டொரு விநாடிகள் ஆசிரியர் சும்மா இருந்

தார். 'சரி, ராவ்சாகிப்—வந்து விட்டாரா? திவான்பகதூர்—ஊரில் இருக்கிறாரா? கான்பகதூர்—எப்பொழுது வருவார்,' என்று பல கேள்விகள் கேட்டார். துரதிர்ஷ்டம் எப்பொழுதும் தனியாக வருவதில்லை. அவர் கேட்ட பேர்வழிகள் ஒருவரும் ஊரில் இல்லை. 'யார் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எனக்கு ஒரு பேட்டி வேண்டும். முதல்தரம்—பரபரப்பு—இரண்டு பத்திகளுக்கு மேல் போகக்கூடாது. தெரிகிறதா?' என்று ஆசிரியர் அதட்டினர். 'உத்தரவு' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

* * *

தெருவில் வந்ததும் ஒரு டிராம்கார் போய்க்கொண்டிருந்தது. அது எங்கே போகிறது என்பதைக் கூடக் கவனிக்கவில்லை. எந்த டிராமிலும் போகக்கூடிய 'பாஸ்' என்னிடம் இருந்தபடியால் அதில் ஏறி உட்கார்ந்தேன். இச்சமயம் நான் சென்னையில் டிராம்கள் மாதிரி திரிவதாக என் காதலி சொல்லிய மொழி என் நினைவிற்கு வந்தது. கண்ணை மூடிக்கொண்டு ஆழ்ந்த யோசனை செய்தேன். 'எந்தச் சனியனிடம் போய்ப் பேட்டி காண்பது?' என்ற யோசனையை மூளையில் அலசி அலசிப் பார்த்தேன். ஒரு முடிவும் ஏற்படவில்லை. டிராம் வண்டி எழும்பூர் ஸ்டேஷன் பக்கத்தில் நின்றது. மற்றப் பிரயாணிகள் இறங்கிவிட்டார்கள். கண்டக்டர் டிராம் வண்டியைத் திருப்பி ஓட்டக் கம்பிகளை மாற்றிக்கொண்டிருந்தான். கண்ணை மூடிக்கொண்டு யோசனையில் இருந்தபடியால் இவையெல்லாம் எனக்குத் தெரியவில்லை. 'ஏனய்யா டிராமை விட்டு இறங்குவதாய் யோசனை இல்லையா?' என்று கேட்டான். அப்புறம்தான் எழும்பூர் வந்து சேர்ந்ததை அறிந்தேன். கீழே இறங்கி மறுபடியும் எங்கு போவதென்று தெரியாமல் நடந்துகொண்டிருந்தேன். எப்படியோ 'செத்த காலேஜ்' முன்பு போய் நின்றேன். பட்டணத்தில் எத்தனையோ காலேஜ்கள் இருக்கின்றன. அவற்றைப்பற்றி அதிகமாய் வெளியூர் ஜனங்களுக்குத் தெரியாது. சென்னையைப் பார்த்து வந்தவர்களைக் கேட்டால் அங்கே மூவகை காலேஜ்கள் இருப்பதாகச் சொல்லக் கேட்கலாம். ஒன்று உயிர் காலேஜ்—மிருகக் காட்சி சாலை. மற்றொன்று மீன் காலேஜ்—மீன் காட்சி சாலை. வேறொன்று செத்த காலேஜ்—பொருட் காட்சி சாலை. இந்த விநோதப் பெயர்களை யார் கொடுத்தார்களோ எனக்குத் தெரியாது. எந்த செழிப்பான மூளையில் இந்தப் பெயர்கள் உண்டாயிருந்தாலுஞ் சரி. தற்காலத்திலும் கூட இந்த விசித்திரப் பெயர்கள் மறையவில்லை. பொருட் காட்சி சாலை—அல்லது மியூசியம்—அல்லது செத்த காலேஜ் முன்பு சென்று நின்றேன். உயிருள்ளவர்களிடம் போய்ப் பேட்டி கண்டாலாவது எதையாவது உளறி வைப்பார்கள்? செத்த காலே

ஜுக்குப் போய் என்ன செய்ய? தூணிடமும் சுவரிடமும் பேட்டி காண்பதா? நல்ல வேடிக்கை! என் நிலைமையைப் பற்றி எனக்கே சிரிப்பு வந்தது. ராவ்சாகிப், திவான்பகதூர், கான்பகதூர், தேசபக்த சிங்கங்கள் முதலியவர்கள் ஊரில் இல்லாமல் போனால், அதற்கு செத்த காலேஜா பொறுப்பு? என்று நினைத்தேன். இதுசமயம் எனது ஆசிரியர் நெப்போலியனைப் பற்றிச் சொல்லிய கதை ஞாபகத்திற்கு வந்தது. 'ஓ, நெப்போலியனும் மனிதன் தானே? நான் ஏன் அவனைப்போல் செய்ய முடியாது?' என்ற சுயமதிப்புத் தோன்றியது. முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்ற பிரதிக்ஞையைக் கடைப் பிடித்தேன். செத்த காலேஜுக்குள் கம்பீரமாய் நுழைந்தேன். யாரைப் பிடித்துப் பேட்டி காணலாம் என்ற நினைப்புடன் அங்குள்ளவைகளை நோக்கினேன். பழைய காலத்துத் தெய்வங்கள் வரிசையாய் நின்றன. விநாயகரைப் பார்த்ததும் சென்னைக் காப்பி ஓட்டல் நினைவு வந்தது. தற்காலம் அவர் சென்னை ஓட்டலில் நுழைந்தால் அவருடைய வயிறு பாதி நிரம்ப வேண்டுமானாலும் குறைந்தது ஐந்து ரூபாய் ஆகும். அவர் பார்வை என்னைக் கூப்பிடுவதுபோல இருந்தது. ஆனால் நான் விரும்பவில்லை. அவரிடம் நெருங்கினால் பழைய கொழுக்கட்டைகளைப் பற்றியே அவர் பேசுவார். அந்தப் பேட்டி எனக்குத் தேவையில்லை. அப்புறம் சுப்பிரமணியர் இருந்தார். சங்கீதத்தில் கிறுக்குள்ள அவருக்குத் தகுந்த இடம் ரேடியோ சங்கீதம் நடக்கும் திருவல்லிக்கேணிக் கடற்கரையே என்று நினைத்தேன். கடற்கரை ஆண்டி என்ற பெயரும் அவருக்கு உண்டு. அவரும் என்னிடம் பேச விரும்புவதுபோலத் தெரிந்தது. அவரிடம் பேசினால் ரேடியோவைப் பற்றித்தான் முக்கியமாய்க் கேட்பார். அதைப் பற்றியோ எனக்கு ஒன்றும் தெரியாது. இந்த சங்கடத்தில் அகப்படுவதை விடப் பேசாமல் போய்விடுவது உத்தமமென்று போய்விட்டேன்.

செத்த காலேஜ் உள்ளே நுழைந்தேன். ஒவ்வொரு பொருளும் என்னை நோக்குவதாய்த் தோன்றியது. 'பணமென்றால் பிணமும் வாய் பிளக்கும்' என்று ஒரு பெரியார் சொன்னார். அதைவிட வல்லமையுள்ளது ஒன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் தோன்றும் என்பதை அவர் அறியவில்லை. அந்த ஆசை—மாயை—பணத்தைவிட வல்லமையானது. பணத்தைப் பார்த்துப் பிணம்தான் வாய் பிளக்கும். ஆனால் விளம்பரத்தைப் பார்த்து எலும்பும் பல் இளிக்கும்! விளம்பரம் அவ்வளவு கவர்ச்சி யுள்ளது. விளம்பரத்திற்காக எவ்வளவு பணத்தையும் மனிதர் இழக்கத் தயாராயிருக்கிறார்கள். தங்கள் பெயர் பத்திரிகையில் வரவேண்டும். தங்கள் பிரசங்கம் பத்திரிகையில் வெளி

யாக வேண்டும். அதற்கு இரண்டு பத்தி தலைப்புகள் வேண்டும். ஆசிரியர் குறிப்பு வேண்டும். இவ்வளவையும் பார்த்துவிட்டால் அக் காட்சியே அவர்களுக்கு பூலோக கைலாசம். தலைவர்கள், நிருபர்களையும் ஆசிரியர்களையும் நண்பர்களாக்கிக் கொள்வதன் ரகசியம் தெரிகிறதா? இந்த விளம்பர ஆசை செத்த காலேஜில் மட்டும் இல்லாமல் போய்விடுமா? ஒவ்வொரு பொருளும் தன்னுடன் பேட்டி காணவேண்டுமென்று ஆசை கொள்ளுவதைப்போல எனக்குத் தோன்றிற்று. எனக்குக் கிராக்கி யிருந்தால் கர்வம் வராதா? நான் அலட்சியமாய் நிமிர்ந்த பார்வையுடன் பொருள்களைப் பார்த்துக்கொண்டு சென்றேன். அநேகமாய் எல்லாப் பொருள்களையும் பார்த்து விட்டேன். எதனுடன் பேட்டி காண்பதென்று அதுவரை நான் ஒரு முடிவுக்கு வரவில்லை. அங்கு நட்டமாய் நின்றுகொண்டிருந்த ஒரு வாள் என்னைப் பார்த்து வணங்கியதைப் போலத் தோன்றிற்று. கூர்மையாய்க் கவனித்தேன். ஆம், அது எனக்கு சலாம் செய்வதுபோலத் தலையை ஆட்டியது. அதன் பக்கத்தில் சென்று 'உன்



பெயர் என்ன?' என்று கேட்டேன். அது கம்பீரமாய் நிமிர்ந்த பார்வையோடு, 'என் பெயர் வாள்நாதர்' என்று சொல்லிற்று. 'வாள் நாதர், வாள்களுக் கெல்லாம் தலைவர்! அப்படித்தானா?' என்றேன். அது 'ஆம்' என்றது. 'மிகவும் சந்தோஷம். நீ எங்கு வாழ்ந்தாய்?' என்றேன். 'சிவாஜீ மகாராஜாவின் இடுப்பில் வாழ்ந்தேன். அவர் வலது திருக்கரத்தில் சேவை செய்தேன்' என்றது. இதைக் கேட்டதும் எனக்கு வந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. 'பேஷ்! நீயே சரியான ஆசாமி. நான் 'தினசரிப் புளுகன்' நிருபர். எனது ஆசிரியர் ஒரு மூதல்தரமான—பரபரப்புடன்-பேட்டி வேண்டும் என்று சொல்லுகிறார். நீ பேட்டி கொடுப்பாயென்று நினைக்கிறேன்' என்று சொல்லி அதன் முகத்தை உற்றுப் பார்த்தேன். களி துலங்கிய முகத்தோடு 'ஆஹா' என்றது. உடனே நோட் புக்கையும் பென்சிலையும் கையில் எடுத்தேன்.

வாள்நாதர்:—உமக்கு இஷ்டமான கேள்விகளை நீர் கேட்கி றீரா அல்லது நானே சொல்லி வரட்டுமா?

நான் கேள்வி கேட்டு எனது சரித்திர அறியாமையை விளக்கிக் காட்டுவதைவிட அதன் வாயாலேயே கேட்பதுதான் சிலாக்கியமென்று எனக்குத் தோன்றியது.

நான்:—உம்மைக் கேள்வி கேட்டு உமது ஒழுங்கான கதைப் போக்கைக் கெடுக்க விரும்பவில்லை. நீரே உமது மனோ தர்மப்படி சொல்லி வந்தால நான் எழுதிக் கொள்ளுகிறேன்.

வாள்நாதர்:—"கேளும் ஐயா நிருபரே, எனது சரித்திரம் மிகவும் பழமையானது. எனது வாழ்வோ புனிதமானது. எனது தலைவனைப் பற்றியோ என்றால் எது அழிந்தாலும் என் தலைவன் பெயர் இந்த நாட்டில் ஒரு நாளும் அழியாது. வீராதி வீரர். சூராதி சூரர். மன்னர்கள் எல்லாம் கிடுகிடுவென்று அவர் பெயரைக் கேட்டவுடன் நடுங்குவார்கள். பெரிய சூரனாகிய அவுரங்கசீப் கைவரிசை கூட எனது தலைவர் சிவாஜியிடம் பலிக்கவில்லை. அப்பேர்ப்பட்ட வீரரிடம் நான் வாழ்ந்து வந்தேன். எனக்கு மற்றொரு பெயர் பவானி. அவருடன் நான் போகும் யுத்தங்கள் எதிலும் அவர் தோல்வியுற்றதில்லை. ராயக்கோட்டை, கலியாணக் கோட்டை, புரந்தரக்கோட்டை யுத்தங்களில் நானே சிவாஜி மகாராஜாவின் வலது கரத்தில் துள்ளி விளையாடினேன். ஷேஸ்தகான் பெரிய சேனையோடு பூனா பக்கத்தில் தங்கி யிருக்கும்போது, சிவாஜி மகாராஜா அவன் துருப்புகளைத் தாண்டி அவன் கூடாரத்திற்குள் நுழைந்து யுத்தஞ் செய்தார். அந்த ஷேஸ்தகான் கூடாரத்தை கிழித்ததும் அவனுடன் யுத்தஞ் செய்ததும் நானே. அவற்றையெல்லாம் எப்பொழுது நினைத்தாலும் நான் பெருமை கொள்ளுகிறேன். என் ரத்தம் வேகமாய் ஓடுகிறது. ஆனால் இன்றோ! இன்று என் நிலைமை என்ன? நான் ஜெயிலில் இருக்கிறேன். மீள முடியாத சிறைவாசத்தில் தவிக்கிறேன். ஐயோ, ஐயோ, இது தானா என் பராக்கிரமத்திற்குப் பலன்?"

அது சிறைவாசம் செய்கிறது என்று சொல்லியது எனக்கு விளங்கவில்லை. வாளுக்குக் கூடவா ஜெயில்? அது எப்படி சாத்தியம்? மேலும் என் கண் எதிராக அது சுதந்திரமாய் இருக்கிறது. இதென்ன ஆச்சரியம் என்று யோசித்து "வாள்நாதரே, நீர் சொல்லுவது எனக்கு புரியவில்லை. நீர் ஜெயில் வாசம் செய்வதாக எப்படிச் சொல்ல முடியும்?" என்று கேட்டேன்.

அது:—ஓஹோ, உமது சந்தேகத்தை அறிந்துகொண்டேன். நான் இப்பொழுது இங்கு சுதந்திரமாய் இருக்கிறேன் என்று நினைக்கிறீர் போலிருக்கிறது. அப்படித்தானே?

நான்:—ஆம்.

அவர்:—உமது அறிவீனத்தை என்னென்று சொல்லுவது? ஜெயில் என்றால் ஒரு அறைக்குள் போட்டுப் பூட்டி வைப்பது என்பது உமது வியாக்கியானம் போலும். அவனவனுக்கு உரிய வேலைகளைச் செய்ய முடியாமல் தடுத்து வைப்பதற்குத்தான் ஜெயில்வாசம் என்று பெயர். இதைத் தவிர உண்மையாகவே ஒரு அறையில் போட்டு அடைத்து வைக்கும் ஜெயில் வாசத்தையும் நான் அநுபவித்து வருகிறேன். இன்று சுத்தம் செய்யும் நாள். என்னை உறையிலிருந்து வெளியே எடுத்திருக்கிறார்கள். இன்று மாலை என்னை உறைக்குள் போட்டால் மறுபடியும் மூன்று மாதங்கள் கழித்துத்தான் வெளிச்சத்தையும் காற்றையும் அனுபவிக்க முடியும். ஆகவே இரண்டு விதங்களிலும் நான் சிறைவாசம் அனுபவிக்கிறேன்.

நான்:—நீர் காட்சி சாலையில் இருப்பதால் உம்மை உறையை விட்டு வெளியே எடுக்கவேண்டிய அவசியமில்லை.

அது:—என்னைத் தள்ளிவிடும். என் இனத்தாரில் எத்தனை பேர் சுதந்திர வாழ்வு நடத்தி வருகிறார்கள் என்று நீர் நிரூபிக்க முடியும்?

நான்:—எல்லாரும் உம்மைப்போல காட்சிசாலைகளில் இருக்கவில்லையே! இன்றும் ஒவ்வொரு ராணுவ அதிகாரியும் இடுப்பில் வாள்மாட்டியிருக்கிறார். நிர்வாக சபை அங்கத்தினர்கள், கவர்னர்கள், கவர்னர் ஜெனரல்கள், மன்னர்கள் கூட உமது இனத்தவரை அணிந்துகொண்டு தானே வருகிறார்கள்.



அவர்:—ஆம், உண்மைதான். அவர் இடுப்பில் வாழ்வதைவிட இந்தக் காட்சி சாலையில் வாழ்வது மேல். எனது இனத்தாருக்கு நேரிட்டிருக்கும் அவமானத்தை நினைக்கும்போதுதான் என் மனம் வெடித்தும் போகும் போல் இருக்கிறது.

நான்:—நீர் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை.

அவர்:—விளங்க வில்லையா? வாழ்ந்தால் வீரவாழ்வு, இல்லையேல் சாவது மேல்.

நான்:—மன்னர்களும், அதிகாரிகளும் உம் இனத்தாரை அணியும்போது உமக்கு என்ன அவமானம் வந்து விட்டது.?

அவர்:—எதற்காக அவர்கள் அணிகிறார்கள்?

நான் யோசித்துப் பார்த்தேன் இந்தக் கேள்வி கேட்ட பின்புதான் எனக்குக் கூட சந்தேகம் தோன்றியது. "ஆம், எதற்காக அணிகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை" என்று ஒப்புக்கொண்டேன்.

அவர்:—அந்தக் காலத்தில் எங்களை உபயோகிக்க அறிந்த தீரர்களே எங்களை அணிவார்கள். பேடிகள் எங்களைத் தொடக்கூட அஞ்சுவார்கள். இக் காலத்தில் வீரர்கள் எங்களைப் புறக்கணித்து விட்டார்கள். பாழாய்ப்போகும் கைத் துப்பாக்கி வந்த பின்பு, எங்களை வீரர்கள் தீண்டுவதில்லை. எங்களை உபயோகித்துத் தங்கள் வீர தீரத்தைக் காட்டும் காலம் போய்விட்டது. புஜபல யுத்தம்போய், அதற்குப் பதில் அரண்வெட்டி துப்பாக்கியால் சுடும் யுத்தம் வந்திருக்கிறது. மன்னர்களும், சேனாதிபதிகளும் தங்கள் கரங்களில் வாள் பிடித்து யுத்தஞ்செய்த காலம் பொய்யாய்ப் பழங்கதையாய், கனவாய்ப் போய்விட்டது. மன்னர்கள் அரண்மனைகளை விட்டு வெளியேறுவதில்லை. சேனாதிபதிகள் கூடாரங்களை விட்டு வெளிக்கிளம்புவதில்லை. பின்னால் எங்களை எதற்காக அவர்கள் அணியவேண்டும்? எங்களை உபயோகிக்க முடியாதவர்கள் எதற்காக எங்களைப் பிடித்து வைத்திருக்கவேண்டும்?

நான்:—கைத்துப்பாக்கி முன்பு உமது வீரம் என்ன செய்ய முடியும்?

அவர்:—முடிகிறதோ முடியாதோ, அது வேறு விஷயம். எப்போது நம்பிக்கையில்லையோ அப்புறம் எதற்காக எங்களை மறுபடியும் இழுத்துக்கொண்டு அலைகிறார்கள்? எதற்காகத் தெரியுமா? அழகிற்காக! அழகு, அழகு, பாழாய் போகும் அழகிற்காக எங்களை அணிகிறார்கள். புல் தடுக்கி குட்டிக்காரணம்போடும் வீரர்களும், உறையிலிருந்து வெளியே எடுத்துத் தங்கள் ஆயுளில் ஒரு முறை கூடப் பார்த்திராத மன்னர்களும், தங்கள் உடை அலங்காரத்திற்காக எங்களை அணிகிறார்கள். நவீன நாகரிகத்தில் சிலருக்கு மூக்குக் கண்ணாடி எப்படி உடை அலங்காரங்களில் நன்


ருய் விளங்குகிறதோ, அதே மாதிரி ராஜாங்கத்தில் உள்ளவர்களுக்கு எங்கள் இனத்தாரும் உடை அலங்காரமாய் உபயோகப் படுகிருர்கள். இந்த அவமானத்தை என்னுல் சகிக்க முடியவில்லை. ஒரு நாளும் சகிக்க முடியாது.

வாள்நாதர் சொல்லிய ஆட்சேபனைகள் இப்பொழுது தான் எனக்கு நன்ருய் விளங்கியன. தலையை ஆட்டினேன்.

நான்:—நீர் சொல்லுவது புரிந்தது, இப்பொழுதுள்ள நிலைமைக்குப் பரிகார மென்ன ?

அவர்:—நான் சொல்லுகிறேன் கேளும். நல்ல சமயத்தில் நீர் வந்து சேர்ந்தீர். உமது பத்திரிகை மூலம் என் கருத்தை உலகம் முழுமைக்கும் விளம்பரம் செய்யும். மானிடருக்கு நன்றி கிடையாது. ஏணிமேல் ஏறுகிறவன் எப்படி கீழ்ப்படிகளைக் கவனிப்பதில்லையோ, அதைப்போலத் தங்கள் முன்னேற்றத்திற்குக் காரணமானவைகளை அடுத்த விஞடியில் மறந்து விடுவது

"ரேடியோ ஆர்டர்"



ஜெர்மனி ரயில் ஓட்டும் டிரைவர்களுக்கு "ரேடியோ" (ஆகாச டெலிபோன்) மூலம் உத்தரவு கொடுத்து வருகிருர்கள். மூடு பனியால் கை காட்டிகளோ சமிக்ஞைகளோ தெரிய முடியாது. ஆகவே "ரேடியோ" மூலம் வழி காட்டுவது மிகவும் சௌகரியமாயிருக்கிறது. ரயில்வண்டி வெகு வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் போதுகூட ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளலாம்.

இந்த மானிடர் சுபாவம். அந்த நன்றிகெட்ட மானிடர் நாங்கள் செய்த உதவிகளை மறந்து விட்டார்கள். பாரத யுத்தத்திலும் ராம ராவண யுத்தத்திலும் உபயோகமான வில் அம்புகளைக் கூட அவர்கள் மறந்து விட்டார்கள் என்றால் வேறு என்ன சொல்லவேண்டியிருக்கிறது? அர்ச்சுனன் காண்டீபத்திற்கு முன்னால் ஜெர்மனியின பதினெட்டு அங்குல பீரங்கிதான் நிற்கமுடியுமோ? அப்புறம் எங்களையும் மறந்தார்கள். இப்படி மறந்துகொண்டு போவது அவர்கள் பிறவிக்குண மாகையால் அதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. ஆனால் மேலும் மேலும் எங்களை அவமானப் படுத்த முயற்சிப்பதைத் தான் என்னால் பொறுக்க முடியவில்லை. வில் அம்புகளை உபயோகிப்பதை நிறுத்தினார்கள். அவற்றை அலங்காரத்திற்காகத் தோளில் மாட்டிக்கொண்டு அலைகிறார்களா? இல்லை. அதைப்போல எங்களை உபயோகிப்பதை நிறுத்தியவுடன் எங்களை அணிவதையும் விட்டுவிடவேண்டு மல்லவா? உபயோகிக்க சக்தியற்ற அந்த நன்றி கெட்ட மானிடர் எதற்காக எங்களை அணியவேண்டும்? பேடி ஒருவன் விவாகம் செய்வதால் இன்பமுண்டா? இந்த மானிடர் எங்களை அணிவதால் என்ன பயன்? கடைசிமுறையாகச் சொல்லுகிறேன். மானிடருக்குத் தினையளவாவது சுயமதிப்பு இருக்குமானால் வேஷம் போடுவதை நிறுத்தட்டும். ஒன்று முன்போலத் தங்கள் புஜபல பராக்கிரமத்தால் எங்களை ஆளட்டும். அதற்கு சக்தி யில்லாவிட்டால் எங்களைக் காட்சி சாலையில் கொண்டுவந்து வைத்து விடட்டும். அழகுக்காகவும் ஆடம்பரத்திற்காகவும் எங்களை அணிந்துகொண்டு போவது பெரிய அயோக்கியத்தனம் என்பதைப் பலமாய்க் கண்டித்து அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லுகிறேன். தெரிகிறதா?

நான்:—தெரிகிறது.

அவர்:—நீரும் ஒரு மானிடர்தானே. ஆகவே நான் சொல்லுவதை நீர் வெளியிடுவீரா என்பது சந்தேகமாயிருக்கிறது.

நான்:—எனது ஆசிரியருக்கு "ருசிகரமான" விஷயம் வேண்டும். அவ்வளவுதான். பாரபட்சம் கிடையாது. கட்டாயம் வெளியிடுவார்.

வாள்நாதரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டேன். "ஆம், உண்மைதான். பேடிகளுக்கு வாள் எதற்காக?" என்ற கேள்வி என் மனதில் தோன்றி யிருக்கிறது. உங்கள் அபிப்பிராயம் என்ன?

நோபல்பரிசு, ஹோ! ஹோ!

எஸ். ஆர். எஸ்.

நோபல் என்ற மகானுபாவரைக் குறித்து நீங்கள் அவசியம் கேள்விப்பட்டிருப்பீர்கள். "தோன்றிற் பித்தாகத்தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்று நான் ஜென்மாந்திரத்தில் சொன்ன மகாவாக்கியத்திற்கிணங்க, இதுகாறும் உலகில் அவதரித்துள்ள மகா புருஷர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களில் ஆல்பிரட் நோபலும் ஒருவர். அவர் உலக சமாதானத்தை நிலை நிறுத்துவதில் புகழ்ச்சிக்குரிய முயற்சி யெடுத்துக்கொள்வோருக்கு வருஷந்தோறும் அளிக்கப்படுமாறு ஒரு பரிசு ஏற்படுத்தி யிருக்கிறார். இந்த சமாதானப்பிரியர்தான் டைனமைட் என்ற வெடிமருந்தைக் கண்டுபிடித்தவர் என்பதை அறிய நீங்கள் ஆச்சரியப்பட மாட்டீர்களென்றே நினைக்கிறேன்.

நோபல் என்பவர் வெடி மருந்தைக் கண்டுபிடித்தார் என்று நான் சொன்னதிலிருந்தே, அவருக்கு சாஸ்திர ஆராய்ச்சியில் விசேஷ ஆர்வம் இருந்திருககவேண்டுமென்று, உங்களில் துப்பறியும் நாவல்களைக் கரைத்துக் குடித்துள்ளவர்கள் நீங்கலாக, இதரர்கள் எளிதில் ஊகித்திருக்கலாம். உண்மையில் அவருக்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் அதிகப்பிரேமை உண்டு. அதனால் வருஷந்தோறும சிறந்த ஆராய்ச்சிக்காரருக்கு ஒருபரிசு அளிக்கப்படுமாறு தனது உயிலில் ஏற்பாடு செய்திருக்கிறார். ஆனால் இந்த விஷயத்தில் அவர் ஒரு பெருந்தவறு மட்டும் செய்துவிட்டார். அதாவது பரிசளிக்கும் போர்டில் என்னையும் அங்கத்தினனாகச் சேர்க்கவில்லை.

இது பெரிய தப்பிதமாகுமா என்று நீங்கள் சந்தேகப்படுவது நியாயம்தான். ஆனால் ஆண்டுதோறும் அப்பரிசு அளிக்கப்பட்டு வந்திருக்கும் முறையைக் கூர்ந்து கவனித்தீர்களானால், நோபல் செய்த பிழை மகத்தானதென்று உங்களுக்குப் புலப்படும். அவ்வாறு தோனறாவிடில் உங்களுக்குக் கூர்ந்து நோக்குந்திறன் குறைவென்றுதான் ஏற்படுமே யொழிய, நான் கூறிய குற்றச்சாட்டு அநியாயமாகிவிடாது. ஆனால் ஒரே ஒரு காரணத்தை முன்னிட்டு நாம் நோபலை மன்னித்துவிடலாம். அவர் மூட்டை முடிச்சுகளைக் கட்டி வாரிக்கொண்டு ஸம்யமினீ பட்டணத்திற்கு பிரயாணமான

பொழுது அடியேன் மாதாவின் கர்ப்பத்தில் வாசம்செய்துகொண் டிருந்தேனென்பதே அக்காரணம்.

நோபல் மனித சமூகத்தினிடம் அபார அன்புகொண்டிருந்தா ரென்பதை நான்சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை. அவர் வெடிமருந்தைக் கண்டுபிடித்ததே நான் கூறுவதற்குப் போதிய அத்தாக்ஷியாகும். ஆகவே அவர் ஏற்படுத்தியுள்ள பரீக்ஷை மனித வர்க்கத்தின் சௌகரியத்தை அபிவிருத்திசெய்வதில் அக்கறையுள்ள விஞ்ஞான சாஸ்திரிகளுக்கு அளிப்பதே நியாயம். அதைவிட்டு பரிசுக்கமிட்டியாரோ சென்ற சில வருடங்களாக யார் யாருக்கெல்லாமோ கருணை சாதித்து வருகிறார்கள். இது உண்மையில் எனக்கு ஆத்திரமூட்டியிருக்கிறது. உதாரணமாக சென்ற வருடம் சர். ராமனுக்குக் கொடுத்தார்கள். உடனே பத்திரிகைகளிலெல்லாம்'ராமன் எபக்ட்' என்ற விஷயமாகக் கட்டுரைகள் மகா வெள்ளக் கணக்கில் வெளிவந்தன. நாமெல்லாம்தேன் குடித்தநரிபோல் ஆனந்தக் கூத்தாடினோம். ஆனால்'ராமன் எபக்ட்' என்றால் இன்னதென்று நமக்கு விளங்கவுமில்லை. அதனால் நமது வாழ்க்கையில் எவ்வித சௌகரியமு மேற்பட்டு விடவில்லை. இந்த 'எபக்டைக்' கண்டுபிடிக்கச் செலவழித்த நேரத்தை சர். ராமன் ஒழுகாத பவுண்டன் பேனா ஒன்றை உண்டாக்குவதில் செலவழித்திருந்தால் நமக்கெல்லாம் எவ்வளவோ உபயோகமாக இருந்திருக்கும்!

நான் மட்டும் பரிசுக் கமிட்டித் தலைவனாயிருப்பேனாகில் இந்த ராம லக்ஷ்மணாதிகளெல்லாம் நோபல் பரிசைப் பற்றிக் கனவு கூடக் காணமுடியாதபடி செய்துவிடுவேன். உண்மையில் நமக்கு உபயோகமான முறையில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்பவர்களுக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

இந்த வருஷம் பரிசுக்கமிட்டியார் கிருபாகடாக்ஷம் யார்மீது விழப்போகிறதோ நான் அறியேன். ரூபாய்க்கு ஐந்து கேள்வி ஜோஸ்யர்களை யெல்லாம் கேட்டுவிட்டேன். ஒருவர் நீங்கலாக மற்றெல்லோரும் கையை விரித்துவிட்டார்கள். அந்த ஒருவர் மட்டுமே எனக்குத்தான கிடைக்குமென்று கூறியிருக்கிறார். ஆனால் என் இஷ்டப்படி நடப்பதாயிருந்தால் இவ்வருடத்திய நோபல் விஞ்ஞானப் பரிசைப் பின்வரும் பிராக்ஞர்களுக்குள் சமமாகப் பகிர்ந்துவிடுவேன்.

இத்தாலிய சங்கீத விற்பன்னரான ஸினர் எமிலியோ கொளும்பிற்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏன், விரலின்மீது மூக்கை வைக்கிறீர்கள்? சங்கீதத்திற்கும் சயன்ஸிற்கும் என்ன சம்பந்தமிருக்கக் கூடுமென்று யோசிக்கிறீர்களாகும். சர். ராமனும்தான் மிருதங்க ஆராய்ச்சி செய்திருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதனால் இதுவரை என்ன சௌகரியம் ஏற்பட்டது? இன்னும் பழையகோட்டை வடக்கனு மூர்த்திபிள்ளை கச்சேரியென்றால் முன்னெச்சரிக்கையாகவே ஒரு அமிருதாஞ்சன் பாட்டிலைக்கொண்டு போகவேண்டியிருக்கிறது. ஆனால எமிலியோ கொளும்புவோ ஒரு புதுமாதிரியான பிடில் கண்டுபிடித்திருக்கிறார். அதை வாசிக்கும்பொழுது சப்தமே கேட்பதில்லையாம். இப்பொழுது சொல்லுங்கள். இவருக்குப் பரிசளிக்கவேண்டியது நியாயம்தானே? இன்னுமொரு விஷயம், இது எனக்கும் எமிலியோவிற்குமுள்ள சொந்த விஷயம். இதுவரை அடுத்தவீட்டு நண்பர் பெயரளவில் தர்மராஜனுயிருந்தாரேயொழிய, எச்சில் கையால் காக்கைகூட ஓட்டியதில்லை. எமிலியோவின் ஆராய்ச்சியைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்ததும் அவருக்குக்கூட தர்மச்சிந்தனை உண்டாகிவிட்டது. உடனேயே ஒரு எமிலியோ பிடிலிற்கு ஆர்டர் செய்துவிட்டார். அதை எனது பெண சரஸுக்கு வெகுமதியளிக்கப்போகிறாராம். சரஸு சங்கீதம் கற்றுக்கொள்ள ஆரம்பித்து இன்னும் இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. அதற்குள் தர்மராஜன் போன்ற கஞ்சரிடமிருந்து கூடப் பரிசு பெறும்படி அவ்வளவு தேர்ச்சி பெற்றுவிட்டாள்.

இனி அடுத்தபடியாக நமது கவனத்தைக்கோரும் விஞ்ஞான சாஸ்திரி நார்வே தேசத்தைச் சேர்ந்தவர். இரு காரணங்களை முன்னிட்டு அவர் பெயரை நான் வெளியிடவில்லை. முதலாவதாக நீங்கள் உங்கள் பற்களை இன்ஷியூர்செய்துகொள்ளவில்லையென்று எனக்குத்தெரியும். இரண்டாவது அவர்பெயர் எனக்கும் ஞாபகமில்லை. குறிப்பிட்ட முறையில் பாடுவதாலும், சங்கீதக் கருவிகளின் உதவியாலும் சீக்கிரத்தில் கெட்டுவிடக்கூடிய மாம்ஸாதி ஆகாரங்களைக் கெடாமல் வெகுகாலம் வைத்திருக்கக்கூடும் என்று அவர் நிரூபித்திருக்கிறார். பதினெட்டாம்பெருக்கு, ஆவணி அவிட்டம் முதலிய விசேஷ தினங்களில், பஞ்சாங்கம் கணிப்பவர்களை வாழ்த்திக்கொண்டு, சித்திரான்னங்களைப் புசிக்கிறோம். ஆனால் பாழாய்ப்போன வயிறுமட்டும் இருநாளைக்குமேலென்றால் ஏற்க மறுக்கிறது. ஆகவே மறுநாள் நாக்கு ஊறும்பொழுது ஆசையை வெளிக்காட்ட முடியாமல் தவிக்கிறோம். "நித்தியம் இதுதானு ஜோலி" என்று பதில் வந்துவிட்டால் என்னசெய்வது? இந்த சமயங்களில் எமிலியோவின் சங்கீத வாத்தியம் நமது வசமிருந்தால் அடுத்த வீட்டார் நியூசன்ஸ் சட்டப்பிரகாரம் வழக்குத்தொடருவார்களோவென்ற பயமில்லாமல், பொங்கல் புளியோதரை முதலியவற்றை


வாரக்கணக்கில் ஊசிப்போகாமல் வைத்திருந்து அருந்தி ஆனந்திக்கலாமல்லவா? மேலும் கொஞ்சம் முன்யோசனையிருந்தால் அடிக்கடி சுயம்பாகம் செய்யவேண்டி வருவதையும் தடுத்துக்கொள்ளலா மல்லவா?

கடைசியாக நமது நன்றிக்குப் பாத்திரமானவர் மார்ட்டின் சிம் சிஞேவிசி என்ற ருமானியர். அவர் கண்டு பிடித்திருக்கும் நூதன இயந்திரத்தினுதவியால் நாம் உயரக்கிளம்பி ஆகாயவெளியில் நடமாடக்கூடும். ஆனால் ஒரு விஷயம்மட்டும் அவர் எச்சரித்துவிடுகிறார். அவரது இயந்திரத்தினால் பூமிக்குப் பத்திரமாகத்திரும்பி வருவதற்கு எவ்வித சூழ்ச்சியும் ஏற்படுத்தப்படவில்லை. என்னைக்கேட்டால் இதுதான் முக்கியமான அம்சமென்றும், இதற்காகவே பரிசளிக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக்கூறுவேன். இது நம்மில் கிரஹஸ்தாசிரமம் நடத்துபவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்குமல்லவா? கோபத்தில் கூருமல் சன்னியாசங்கொண்டாலும், எல்லாம் 'ஏமாயினே' என்ற கதையாகத்தான் முடியுமென்று நமது மனைவிமார்களுக்கு நன்குதெரியும். சிம்ஸிஞேவிசியின் இயந்திரம்மட்டும் நம் கைவசமிருந்தால் அவர்கள் நாம் ஆட்டும் கூத்திற்கெல்லாம் ஆளாகாமலிருப்பார்களா?

நான் இதுவரை சொல்லியதெல்லாம் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அதற்காகப் பல்லைக்கடிக்க வேண்டாம். சிம்ஸிஞேவிசியின் விமானத்தில் நீங்கள் புறப்பட்டுச்செல்லுங்கள். நான் பின்தொடரப்போவதில்லை யென்று உறுதிகூறுகிறேன். வந்தனம். போய்ச்சேர்ந்ததும் ஞாபகமாய் கடிதம் போடுங்கள்

விகடத் துணுக்குகள்

நண்பர்கள் தங்களுக்குத் தோன்றும் விகடத் துணுக்குகளை எழுதி யனுப்ப வேண்டுகிறோம். பெயருடன் பிரசுரமாகும். பிற பத்திரிகைகளில் பிரசுரமாகாதவையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மலரிலும் பிரசுரமாகிறவைகளில் சிறந்ததற்கு ரூ. 2. பரிசளிக்கப்படும்.



பாட்டியும், பேத்தியும்

(போன்னிகுமார் எழுதியது)

ஒட்டுக் கேட்பது இழிவு என்று சொல்லுகிறார்கள். ஒட்டுக் கேட்பதன் ரஸம், அதை அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். திருடுவது பிசகுதான்; ஆனால் வெண்ணெய் திருடிய கண்ணனது "கொழுக்கட்டை"க் கன்னத்தில் முத்தமிடத் தவிக்காதவர்களும் இருப்பார்களா? பட்டவர்த்தன உண்மை, "சப்பட்டை"; சித்திரப்பாடுடன் அமைந்த வாய், அப்பா, ஆளை எங்கெல்லாமோ, இழுக்குமே! ஆனால் "பட்டவர்த்தனம்" தான் கடைசிவரைக்கும் பலன் அளிக்கிற சாமான். பகிரங்கமாய் உண்மையைப் பேச தைரியமும், திறமையும் இல்லாத காலத்தில், ஒட்டுக் கேட்டால்தான் உண்மை தெரியும். எனவே, நீங்களோ, நானோ ஒட்டுக் கேட்டால், அதிலே தவறு ஒன்றுமேயில்லையே? நான் ஒட்டுக் கேட்டேன். விட்டது பீடிகைச் சங்கடம் என்று பெருமூச்சு விடுகிறீர்கள்! வணக்கம்.

கடற்கரை, சாயங்கால நேரம், ஏகபோகமாய்க் காற்று வீசிக் கொண்டிருக்கிறது. இந்த விடத்தில் ஏகபோகமாய், என்ற பதப் பிரயோகம் சரித்தானே? சந்திரன் "சிரோதயம்" செய்யமாட்டாமல் தவித்துக்கொண்டிருக்கிறான். உல்லாசமாக ஒரு சிறு கூட்டம் மணலை அளைந்துகொண்டு—அணைந்துகொண்டு அல்ல—பெருஞ் சத்தம் போட்டுப் பேசிக்கொண்டிருக்கிறது. "வெள் அலைக்கைகளைக் கொட்டி முழங்கும்" சத்தம்கூட, அமுங்கிப் போய்விடும்படி, இந்தக் கூட்டம் வானை முட்டும் கூச்சல் போடுகின்றது. கூச்சலில்,

விஷயத்தை நேரே தெரிந்துகொள்ளும் சக்தி, தற்பெருமைக் களஞ்சியமாகிய இந்திய மந்திரி ஹோர் அவர்களுக்குக் கூடத் தெரியாது என்றால், வேறு யாரையுமே, பிரமாணமாகக் காண்பிக்கத் தேவையில்லை. ஒருக்கால், சட்ட சபைகளில் அதிகப் பழக்கமுள்ளவர்களுக்குத் தெரியலாம். (இதுவரையிலும் வர்ணனை ஒழுங்குதானே?)

கூட்டத்திலே எத்தனைபேர்கள்? வயது சென்ற அம்மாள் (வயது சென்றுவிட்ட அம்மாள் எப்படி உயிருடனிருக்க முடியும் என்று இலக்கண விகடம் செய்து என்னை அவமானப்படுத்தாதீர்கள்) 'உத்தேசம் பதினாறு வயதுள்ளமாது, (அவள் உடம்பெல்லாம் புனுகு ஜவ்வாது வீசுதோ என்னமோ, அது எனக்குத் தெரியாது) பக்குவமாய்ப் பார்சல் செய்த முட்டையைப் போல, உடல் அமைப்புடன் திகழ்ந்த பதின்மூன்று வயதுப் பையன், இரண்டொரு "நன்னி பின்னிகள்"; மன்னிக்கவும் செல்வச் சிறுகுழந்தைகள் என்று சொல்லி யிருக்கவேண்டும். "பொடிசு"களுக்கு, எழு வ்யதிலிருந்து, பத்து வயதுக்குள்ளிருக்கும். (சந்தேகம் இருப்பின் ஜனனக்கணக்கு அனுப்பப் பெறும்.)



"உன் வாய்த்துடுக்கு உன்னை ஒரு நாளும் விடாது," "வாய்த்துடுக்கு இருந்தால், அது யாரையுமே, எப்பொழுதுமே விடாது." "பலே, சபாஷ்; அக்கா, அப்படி, பாட்டி வாயை மூடு"........இப்படியெல்லாம் என் காதில் விழுந்தது. கலி முற்றிவிட்டது என்று அடுத்தாற்போல், காதில் விழும் என்று நினைத்தேன். நினைத்தது தான் தாமதம். "கலி முத்திப் போனால், அதற்கு யார் என்ன செய்கிறது? இனிமேல் கிழத்துக்கெல்லாம் மரியாதையா இருக்கப் போகிறது" என்று கிழவி சொன்னது, அரம் ராவின சத்தத்தைப் போல காதில் விழுந்தது. இதற்குள் சிரிப்பும் கொக்கரிப்பும், பக்கத்திலே, உட்கார்ந்து கொண்டால்கூட, என்னைக் கவனிக்காத மனோநிலைமை, அவர்களுக்கு உண்டாகிவிட்டது என்பதைத் தெரிந்து, காற்று வ்ாடைத் திசையில், சற்று (கிட்ட) எட்ட உட்கார்ந்தேன்.

"கோபித்துக் கொள்ளாதே, பாட்டி, மதுர அக்கா, உன்னை என்ன சொல்லிவிட்டாள்? நம்ம தாத்தா பேர் என்ன என்று உன்னைக் கேட்டாள். அவ்வளவுதானே? நம்ம தாத்தா பேர் விஷமா? கோபித்துக்காதே, பாட்டி" என்றான் பையன்.

"உப்பையும், ஊசியையும் இரவில் சொல்லாதே; உன் புருஷன் பெயரை ஒருக்காலும் சொல்லாதே; இது சாஸ்திரங்கடா, அப்பா. பாட்டி சாதுவானதால், சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கிறாள்" என்று சிரித்துக்கொண்டு சொன்னாள் யுவதி.

"உனக்கு, ஆளுவார் அடக்குவார் இல்லை. கால் கட்டையும், கழுத்துச் சங்கிலியும் இல்லாமற் போனால், பேச்சு சிங்காரமாய் வருவதற்கு ஆட்சேபனை என்ன? உன் வயதிலே, எனக்கு உங்க அப்பா, சாம்பு பிறந்துவிட்டான். உன்னையோ........" என்று பாட்டி முடிப்பதற்குள், 'ஏன் பாட்டி ஒட்ட மெடுக்கிறாய்? எங்களாலே, உன்னைத் துரத்திப் பிடிக்க முடியாது- தாத்தா பெயரைச் சொல்லமாட்டேன் என்கிறாய். யாராவது கேட்டால், எங்களுக்கு தாத்தா இல்லை யென்று சொல்லுகிறதா" என்று பையன் உற்சாகத்துடன் கேட்டுவிட்டு, தாளம் போட்டு, சிட்டி யடித்தான். பாட்டிக்கு அடங்காத கோபம். அக்கா மதுரம், கண்சிமிட்டிக்கொண்டு, தொண்டை கிழிந்துவிடும்போல, சிரிப்பை அடக்கிக்கொண் டிருந்தாள்.

நன்னி பின்னிகளும் ஆர்ப்பாட்டம் செய்தன. "நான் நாளைக்குப் பூ வைத்துக்கொண்டு, பள்ளிக்கூடம் போகப் போகிறேன்" என்றது ஒன்று. நானும்தான் என்றது மற்றொன்று. "மொட்டைத் தலையில், பாட்டி எப்படி பூ வைச்சுக்க முடியும்? அவளை பள்ளிக்கூடத்திலே சேக்கமாட்டாளே" என்றது வேறொன்று. வீட்டுக்குப் போகலாம் என்றாள் மதுர அக்காள். இலேசாக இருட்டிவிட்டதால், பாட்டியின் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதியவர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக்கப்படும்.

தாலி கட்டினால்:: :: ::
:: ::கல்யாண மாச்சா?

(தி. சதாசிவம்)

அத்தியாயம் 3.

கோவை ஜில்லா பெரிய இஞ்சினியர் பிரணதார்த்தி ஹரய்யரின் பேர் பிரபலம். இஞ்சினியர் ஆசாரசீலர். அதிகாலையில் சிவபூஜை. பின் பசும்பால் காபி. பிறகுதான் ஆபீசுவேலை. மாலையில் ஆபீஸிலிருந்து வீடு திரும்பியதும் பிராமண சமயல்காரி அம்மாவின் கையினால் போடப்பட்ட வெந்நீரில் ஸ்நானம். உடனே லலிதா ஸஹஸ்ரநாமம்.

அய்யர்வாளுக்கு— ஊரில் பெரிய மனிதர்கள் அவரை அப்படித்தான் அழைப்பது; மற்றவர்கள் 'இஞ்சினீர் எஜமான்' என்பார்கள்—இரவில் சாப்பாடு கிடையாது. 4 ஆரஞ்ஜ், 2 ஆப்பிள், 1 சேர் திராக்ஷை, ½ தட்டு மாம்பழத் துண்டு அல்லது யாதுலே மூத்து. படுக்குமுன் ஒருகை பாதம் பருப்பை நன்ருய் அரைமணி நேரம் அரைத்துத் தின்று— அரைக்காமல் ஒன்றும் ரண்டுமாக விழுங்குவது ஜீரணக்கேடு என்பது பிரபல டாக்டர்களின் கூற்று—சுண்டக் காய்ச்சின பசும்பாலில் ½ படியை ஒரு ஒரு வாயாகக் குடிபபார்.

அய்யர்வாளின் குடும்பநிர்வாகம் அம்மையாரின் கையில். சின்ன இஞ்சினியர்களோ, ஓவர்ஸியர்களோ, இஞ்சினியரிடம் வருவது கிடையாது. அவர் மனைவியார் முன்போய் நிற்பார்கள். அந்த அம்மையும் கையை நீட்டிக் காசாக, பணமாக—சூ! பேசக்கூடாது—பவுன்களோ,பவுன் மாலைகளோ வைரங்களோ, அவரவர்கள் சக்தியானுசாரம், அந்த பராசக்தி ஸ்ரீ லலிதாம்பிகை—மாலை ஸஹஸ்ரநாமத்தின் போது அந்தச்சிறிய தங்க விக்கிரஹத்தின் முன் தான் அய்யர்வாள் உட்காருவது வழக்கம்— ஸந்நிதானத்தில் வைத்துவிட்டு அவரவர்கள் விடைபெற்றுப் போகவேண்டியது. அன்னையின் அருளால் அவரவர்களது மனோபீஷ்டம் நிறைவேறும்.

கோகிலம் பிரணதார்த்தி ஹரய்யருக்கும் அவரது மனைவிக்குமாகப் பிறந்த ஒரே பெண். செல்வக் குழந்தையெனச் சொல்லவும் வேண்டுமோ? ரோஜா புஷ்பத்திலேயே வளர்க்கப்பட்டாள். வைரங்களிலேயே அலங்கரிக்கப்பட்டாள். மணிக்கொரு பட்டாடை மணிக்கொரு மணிமாலை. பெற்றோர்களின் கண்ணின் பாவையென கோகிலம் இருந்து வந்தாள்.

கோகிலத்திற்கு வயது ஒன்பதே. தங்கள் குலதர்மத்திற்கேற்ப அவளது பெற்றோர்கள் தங்கள் பெண்ணின் விவாகத்தைப்பற்றி அப்போதே யோசிக்கலாயினர்.

அய்யர்வாளுக்குக் குழந்தையை ஒரு நல்ல படித்த பையனுக்குக் கொடுக்கவேண்டும் என்பது. ஏழையானாலும் பாதகமில்லை என்று எண்ணினார். ஏழைப் பையனே உத்தமம் என்றும் தீர்மானித்தார். பெரிய வீட்டு சம்பந்தமானால் பெண்ணை வயது வந்ததும் அழைத்துப் போய்விடுவார்கள். தங்களது ஒரு புதல்வியை விட்டுப் பிரிந்து—பல வருஷங்கள் தவங்கிடந்து

பெற்ற குழந்தை— தங்கள் வயது காலத்தை எப்படிக் கழிப்பது என மனைவியிடம் கூறினார். அம்மாளுக்கு கணவன் சொல்வது சரி எனப் பட்டது. ஏழைப் பையனானால் அவனைத் தங்களுடனேயே இருத்திக்கொண்டு அவனது பெற்றோர்களுக்குத் தாங்களே மாதம் ஒரு பென்ஷன் கொடுத்து விடலாம் என்று உரைத்தார்.

கிட்டுவின் ஜாதகத்தை வாங்கினவர்களில் அய்யர்வாளும் ஒருவர். நேரில் பையனைப் பட்டணத்திற்குப்போய்ப் பார்த்து வந்திருந்தார். பையனும் மனதிற்குப் பிடித்தம்; ஜாதகப்பொருத்தமும்திவ்யம். ஏலத்துகையைப் போட்டிக்கு இடமில்லாமல்— மைசூர் செடகலப்பா அதிகாரி ஏலத்தில் அப்படித்தான் செய்வது வழக்கம்—ஒரே யடியாக உயர்த்திவிட்டார். இராமசாமி அய்யர் பெண்ணைத் தான் நேரில் வந்து பார்த்துவிட்டு முடிவுசொல்வதாகச் சொல்லியனுப்பினார்.

சம்பந்தியின் வருகையை அய்யர்வாளும் அம்மையாரும் எதிர்பார்த்த வண்ணம் இருந்தனர். இராமசாமி அய்யர் கடிதமும் வந்தது. ரயிலடிக்கு மோட்டாரை யனுப்பிப் பங்களாவின் வாசலிலேயே அய்யரை வரவேற்று ஆசார உபசாரம் செய்தார்.

இராமசாமி அய்யர் அவர் ஜன்மத்திலேயே அந்தமாதிரி காபி சாப்பிட்டது கிடையாது. ‘ஓடோ தில் பஹார்’ சென்ட் கலந்த வெந்நீரில் கமகம என்று ஸ்நானம், சாப்பாடோ, ஆஹா அந்தத் தேவர்களும் அசுரர்களும் தேவாமிருதத்திற்கு அப்படிச் சிரமப்பட்டிருக்கவேண்டாம்; ஆனால் அந்த யுகத்தில் அந்த அம்மாள் ஜீவித்திருக்கவில்லை போலும். எத்தனை வகைக் கறி! எத்தனை வகைக் கூட்டு! பச்சடிகள், துவயல்கள், ஊறுகாய்கள், என்ன என்ன வகைப் பக்ஷணம், பழவகையை எண்ணிமுடியாது, ‘ஐயோ! அந்தப் பாழும் பகவான் ஒரே வயிறைத்தானே கொடுத்தான்’ என்று சபிக்க எண்ணிய இராமசாமி அய்யருக்குத் தான் அடுத்தவாரம் திருவல்லிக்கேணி ரங்கநாத முதலித் தெரு நெ. 242 வீட்டில் ‘விசாலத்தம்மாள் சமைக்கத்தான் உண்ண’ என்பதாக நினைவுவர ‘இப்படி நமது ஜன்மத்தில் ஒரு நாளைக்காவது கொடுத்தானே’ எனப் பகவானை வாழ்த்தினார்.



சந்தனத்தாம்பூலம் தங்கக் கிண்ணத்திலிருந்தும் தங்கத்தட்டிலிருந்தும் நடக்கிறது. கோகிலம் தேவலோகக் கன்னிகையென திவ்யாலங்கிருதஸ்வரூபிணியாய் மெல்ல எண்ணி அடிவைத்து இராமசாமி அய்யர் முன்வந்து நமஸ்கரித்துத் தனது தந்தையையும் நமஸ்கரித்துத் தனது தாயின் பக்கத்தில் மிருதுவாக ஒதுங்குகிறாள்.

கலியாணப் பேச்சு ஆரம்பமாயிற்று. இராமசாமி அய்யர் என்ன சொல்லுவார்? மனதில் தனது மகனை ஒருதரம் சபித்தார். பிறகு மெல்லத் தன் புத்திரனின் அபிப்பிராயத்தைச் சொல்ல முடியாமற் சொல்லி, ஐந்து வருஷத்தில் அவன் காசிப்படிப்பு (நாசமாகப்போக என மனதில் எண்ணி) முடிந்துவிடுமென்றும், கோகிலத்திற்கும் வயது ஒன்பதுதான் ஆகிறபடியால் அதுவரை கலியாணத்தை ஒத்திப்போடவேண்டுமென்றும், அதற்குள்ளேயே ஒரு சமயம் தனது புத்திரன் மனது மாறினால் உடனே விவாகத்தை முடித்து விடலாமென்றும் கூறினார். பிறகு அவர் சொல்ல இவர் சொல்ல அம்மாவும் நடுவில் ஒன்றிரண்டு சொல்ல அய்யர்வாளும் சரியென ஒப்புக் கொண்டார். இராமசாமி அய்யரும் தன் மகனுக்குத் தான் வேறிடத்தில் சம்பந்தம் செய்வதில்லை என ஸ்ரீலலிதாம்பிகையின் பேரில் ஆணையிட்டு சத்தியம் செய்து கொடுத்தார்.

பிரணதார்த்தி ஹரய்யர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தார். தனது படிப்பினாலும் உழைப்பினாலும், தன் மனைவியின் சாமர்த்தியத்தினாலும் இன்று இந்த உன்னதப் பதவியிலிருக்கிறார். இருந்தபோதிலும், பணத்தின் சிரமத்தை பிரணதார்த்தி ஹரய்யர் உணர்ந்தவர். தெய்வத்திடம் நம்பிக்கையுள்ளவர்- 'நீர்மேற்குமிழி இக் காயம்' என்று சட்டென எண்ணினார். இராமசாமி அய்யரின் சத்தியத்தை மட்டும் நம்பி கிட்டுவின் காசிப் படிப்பிற்குத் தான் முன்கூட்டியே பணம் கொடுப்பது சாத்தியமில்லை யென்றும், அவனது மனம் அதற்குள் எப்படி மாறுமோ எனறும், முகூர்த்தமும் நிச்சயமாகி, கோகிலத்தின் கழுத்தில் கிட்டு தாலியைக்கட்டும போது, தான் பட்டணத்தில் கூறியபடிக்கு— ஒரு ஆயிரம் ரூபாய் அதிகமாய் வேண்டுமானாலும்— பூராத் தொகைக்கும் 'இம்பீரியல் பாங்க் செக்' கொடுப்பதாகச் சொல்லிப்போட்டார்.

கணவனின் புத்தி சாதுர்யத்தைக் கண்டு அந்தம்மா தன் மூக்கில் விரலை வைத்தாள்.

இராமசாமி அய்யர் என் செய்வார்? 'வந்தது வந்தோம்' இன்னம் இரண்டுநாள் இருந்து சாப்பிட்டுவிட்டுப் போவோம்' என்று எண்ணி நாலாவதுநாள் அங்கிருந்து கரூர் போனார்.

கரூரில் தன் வீட்டைப் பார்வையிட்டார். தோப்பின் குத்தகையையும் மாற்றினார். அந்தசமயத்தில், கரூரில் தொண்டர்கள்—அந்தக் காங்கிரஸ் கலாட்டாவைச் சேர்ந்த பையன்கள்—சிறைக்குப்போனபின் 'அப்காரி' ஏலம் முந்தின வருஷத்தைக்காட்டிலும் சர்க்காருக்கு அதிக வருமானத்தைக் கொடுத்தது. மரங்களுக்கும் ஒரு கிராக்கி ஏற்பட்டது. தேங்காய்க்கு கிராக்கி குறைந்துவிட்டது. இராமசாமி அய்யர்செய்த காரியம் சரிதானே?

கரூரில் தன்வீடு தோப்பின்பேரில் பெரிய தொகை கடன் கொடுப்பார் யாருமில்லை யெனக்கண்டு, சென்னை திரும்பி, மனைவியிடம் சகல விவரங்களையும் சொல்லி, இராமசாமி அய்யரும் விசாலத்தம்மாளுமாக ஒரு முறை அழுது ஆறுதலடைந்தனர்.

'பூக்கடைப் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பூதலிங்கமய்யர்' என்றால் அழுத பிள்ளை வாயை மூடும். திருச்சினாப்பள்ளியில் சத்தியாக்கிரகிகள் வாலை ஒட்ட அறுத்து அநேக ராஜ விசுவாசக் கூட்டங்களை நடத்திவைத்த

வர் நம்ம பூதலிங்கமய்யர். திருச்சி சிறையில் இறந்தபிறகு விடுதலை செய்யப்பட்ட ஒரு ராஜீயக்கைதியின் 'பிணதின்' பின்னால் போவதற்கும் அந்தப் பெரிய ஊரில்,—தென்னிந்தியா கேம்பிரிட்ஜ்—('கேம்' என்ற கலெக்டரால் திறந்து வைக்கப்பட்ட 'ப்ரிட்ஜ்' பாலம், என்று எண்ணவேண்டாம். 'கேம்ப்ரிட்ஜ்' என்பது சீமையில் ஒரு பெரிய சர்வ கலாசாலை) நாலுபேர் இல்லை என்றால் பூதலிங்கமய்யரின் பெருமையைக் கேட்பானேன்?

இந்தப்புலி இப்போது பட்டணத்துப் பூக்கடையில் (பூக்கடை என்பது சென்னையில் ஒருபாகம். 'பூ' விற்கிற கடையல்ல) பிரமோஷனுடன் புகுந்திருக்கு.

பூதலிங்கமய்யரின் பூர்வீகம் சரூர். பிதுரார்ஜிதமாக அவருக்குக் கிடைத்தது மூவாயிரம் ரூபாய் கடன். விவாகமாகாத வயதான ஒரு சகோதரியும்—இந்தமமாளுக்கு பத்துவயதிலிருந்து சித்தப்பிரமை—விவாகமாகி விதவையான ஒரு வாலிப சகோதரியும். உத்தியோகம் ஒப்புக்கொண்ட பத்து வருஷத்தில் கடனையுந் தீர்த்துப் பதினாயிரம் ரூபாய் ரொக்கமும் சம்பாதித்தார். பெண்களுக்கும் மனைவிக்கும் ரூ 6000 வரை நகை போட்டுளார். மைத்துனன் மூலமாக லேவாதேவி, குளித்தலை, கொடிமுடி பக்கங்களில்.

பூதலிங்கமய்யர் நமது இராமசாமி அய்யரின் தாயாரின் ஒன்றுவிட்ட சகோதரர்; முக்கால் மாமாவிற்கு சமானம்.

ஒருநாள் மாலை இராமசாமி அய்யர் தனது மாமாவைக் காணச் சென்றார். யோகக்ஷேமங்களை யெல்லாம் விசாரித்தார். பிறகு மெதுவாக வந்த காரியத்தைச் சொன்னார். கிட்டுவின் காசிப் படிப்பிற்காக தனது சரூர் வீடு தோப்பின் பேரில் 4000 கடன்கேட்டார்.

'பயல் சரியானபடி மாட்டிண்டான்' என்று எண்ணி பூதலிங்கமய்யர் ஒரே நிபந்தனையின்பேரில், அதுவும் தன் பந்து ஆதலால், ரூ 4000 ஒரு வட்டியில் கடனாகக் கொடுப்பதாகச்சொன்னார். கிட்டுவின் மூன்றும் வருஷ படிப்புத் தீர்ந்ததும் தனது மூத்த மகள் ராஜத்தை-அப்போது வயது 10-அவன் விவாகம் செய்து கொள்ளவேண்டும்; பரிசப்பணம் காலணாக்கூடக் கேட்கக்கூடாது; கிட்டுவும் பந்தகப் பத்திரத்தில் ஒப்பம் போடவேண்டும்.

இராமசாமி அய்யர் ஒரு நிமிஷம் திடுக்கிட்டார்; 'ஒரு பொய்சொன்னால் என்ன தலை முழுகிப் போகும்'' என்று அவர் மனம் சொல்லியது; 'மூன்று வருஷம் தீர்ந்தபிறகு பேசிப்போம்' என்று எண்ணிக்கொண்டார்; கடன் கொடுப்பாரோ வேறு யாருமில்லை, காரியமோ ஆகவேண்டும், இப்போது சொல்லும் பொய், சத்தியத்திற்கு சமானம், என்று ஒரு தைரியம் அடைந்தார்.

'லிங்கம்' (அடியைவிட்டு நுனியைப் பிடித்தாரையா!) நம்ம கிட்டுவின் சுபாவம் உனக்குத் தெரியாததல்ல. அப்பா அம்மாவிற்கு அடங்கின பையன். உன் சம்பந்தமே எனக்கு எவ்வளவோ பெருமை. ராஜத்தை அடைய கிட்டு கொடுத்துவைக்கவேணும். நீ சொல்வதுபோலவே முடித்துவிடலாம். ஆனால் இப்போதே இது ஒன்றும் கிட்டுவிற்குச் சொல்லவேண்டாம். மூன்று வருஷமானதும் 'வா' என்றால் வருகிறான்; 'தாலிகட்டு' என்றால் கட்டுகிறான். எனக்கும் மூன்று பெண் உண்டு. 'பரிசப் பணம் வாங்குவது பாவம். மகாபாவம்' என்பது எனதுகொள்கை. ஒரு சல்லி


கூட எனக்கு வேண்டாம். உன் சம்பந்தமே எனக்கு போதும். ஆனால் 'அந்த வட்டியைமட்டும் முக்காலாக'... என்பதற்குள் 'எழுத்திலே என்ன போட்டால் தானென்ன? மாப்பிள்ளையிடம் வட்டியா வாங்கப்போறேன். பத்திரங்களைக் கொண்டுவா. வில்லிங்க சர்டிபிகேட்டை மறக்காதே. உடனே ரிஜிஸ்டர் பண்ணிவிடுவோம்' என்றார் பூதலிங்கமய்யர்.

"ஒரு வில்லங்கமும் கிடையாது. அநாவசியமாக..." 'கதை வளர்ப்பானேன். வில்லங்கமே இல்லை. சர்டிபிகேட் கிமிஷத்திலே வாங்கலாம். நீ இங்கேயே சாப்பிட்டுப்போ. செல்லம், குழந்தைகளெல்லோரும் சௌக்கியந்தானே" என்று முடித்துவிட்டார் மன்னன் பூதலிங்கம்.

* * *

கிட்டு இரவு கல்கத்தா மெயிலில் காசிக்குப் புறப்படப் போகிறான். அன்றுவரை பிள்ளையை விட்டுப் பிரிந்தறியா அவனது தாய் தந்தையர் மனங்குழைந்து, கண்கலங்கி, அவனைக் கட்டித்தழுவி, புத்திமதிகள் கூறி, தைரியமும் சொல்லி, அவனை மனமாற வாழ்த்தினார்கள்.

லக்ஷ்மி கிட்டுவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். செல்லம்மாளும் சீக்கிரமே வீடு திரும்பினாள். கிட்டு வருகிறான். 'ஹோ' என்று கதறி முகத்தைக் கைகளில் புதைத்துகொண்டு லக்ஷ்மி விம்முகிறாள். கிட்டுவின் மனமும் கலங்குகிறது. பிறகு தன் அருமை லக்ஷ்மியைத் தைரியப்படுத்துகிறான். "லக்ஷ்மி! எனக்கல்லவோ நீ தைரியம் சொல்லவேண்டும். 5 வருஷமும் 5 நாளாகப் பறந்துபோகும். நீ தைரியமாயிரு. படிப்பை, விடாதே—(2 பத்துருபாய் நோட்டுகளை அவள்கையில் சொருகி) புதிய நல்ல புத்தகங்கள் வாங்கிப்படி. அடிக்கடி எனக்கு எழுது. நானும் எழுதுகிறேன்" என்கிறான். செல்லம்மாள் கொண்டுவந்த காபியில்தான் பாதி சாப்பிட்டு பாதியை லக்ஷ்மிக்குக் கொடுக்கிறான். (பாத்திரத்தை செல்லம்மாள் கழுவுவதற்கு எழுந்து செல்கிறாள்)—கிட்டு லக்ஷ்மிக்குக் கை கொடுக்கிறான்.



கிட்டுவின் கையை லக்ஷ்மி தன் கண்களில் ஒத்திக்கொண்டாள். லக்ஷ்மியின் கையைக்கிட்டு முத்தமிட்டான்.

* * *

கோகிலத்துக்குப் பனிரண்டாம் வயது நிம்பியது. ராஜத்துக்கு பதின்மூன்று; லக்ஷ்மிக்குப்பதினாறு.

பிரணநாதர்சதி ஹரய்யரிடமிருந்து கிட்டுவின படிப்பையும க்ஷேமத்தையும் விசாரித்து, அவனது மனம் கோகிலத்திடம் திரும்பியதா என்பதையுங் கேட்டு இராமசாமி அய்யருக்கு ஒரு கடிதம வந்தது.

பூதலிங்கமய்யரிடமிருந்தும்—அவர் திருப்பூரில் காங்கிரஸ் கொட்டத்தை யடக்க அங்கு மாற்றப்பட்டுள்ளார்—கிட்டு எந்தறைக்கு வருகிறான் என்று கேட்டும், அவனது மூன்றாவது வருஷப்படிப்புத் தீர்ந்துவிட்டதால்

வைகாசி மாதத்திலேயே மூகூர்த்தத்தை வைக்கவேண்டுமென்றும், இராமசாமி அய்யருக்கு ஒரு கடிதம் வந்தது.

அன்று மாலை, கிட்டுவின் விவாஹ விஷயமாகத் தன் சகோதரனின் மனதை அறியவேண்டி, செல்லமமாள் இராமசாமி அய்யரிடம் வந்து "அண்ணா உன் மருமகளுக்கு வயசும் பதினாறு. நானோ அனாதை. ஊர்வாயை மூட முடியவில்லை. உன்னைத்தான் நம்பியிருக்கேன்'' என்று சொன்னாள்.

கோயமுத்தூர் அய்யர்வாளுக்குகிட்டு சுகமென்றும், அவன் மனம்மாறவில்லையென்றும், இன்னம் இரண்டே வருஷம் பொறுத்தருள வேண்டுமென்றும் எழுதிப்போட்டார்.

போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு மிக்க மரியாதையாகத் தன் மகன் அடுத்த வருஷம் விவாஹம் செய்துகொள்ள விரும்புவதாகவும், அதனால் தயைபுரிந்து ஒரு வருஷம்-பத்தே மாதம் பொறுக்கவேண்டுவதாகவும் பதில் வரைந்தார்.

பிரணதார்த்திஹரய்யர் திருப்தியடைந்தார்.

பூதலிங்கமய்யர் சமாதானம் செய்துகொண்டார்.

செல்லம்மாள் தைரியமடைந்தாள்,

அண்ணாவின் வார்த்தையில் அர்த்தமிருப்பதாக.

* * *

கிட்டு நாலாவது வருஷப்படிப்பிலும் முதல் பையனை தேறிய செய்தியை விசாலத்தம்மாள் தனது எட்டாவது பிரசவத்தின்மூலமாக உலகிற்கு அறிவிக்க முயன்றாள்.—(சென்ற வருஷம் அந்தம்மாளின் இல்லறக் கணக்கில் ஒரு அபார்ஷன் வரவு வைக்கப்பட்டது)—. குழவி-(அது குழந்தையாகவில்லை)- ரணசிகித்சைக்குப் பிறகு சத்தமில்லாமல் வெளியே வந்தது; சத்தமில்லாமல் கொல்லையில் புதைக்கப்பட்டது.

விசாலத்தம்மாளின் உடல்நிலைமை கவலைக்கு இடந்தந்தது. இராமசாமி அய்யர் கிட்டுவிற்குத் தந்தி கொடுத்தார். தாயைக் காண புதல்வன ஓடி வந்தான். புதல்வனின் முகத்தைக் கண்டதுமே விசாலத்தம்மாள் பாதி குணமடைந்தாள். கால்பங்கு வைத்தியர்கள் குணமாக்கினார்கள். பாக்கி நாலிலொரு பாகம் பெரியதெருப் பிள்ளையாரின் வேலை.

தாயின் உடல் நிலை சரியாகவே, கிட்டு தனது கடைசி வருஷப்படிப்பிற்காக காசிக்கு புறப்பட இருந்தான். அன்று காலையில் அவன் லக்ஷ்மியைக் காணச் சென்றபோது இராமசாமி அய்யருக்கு இரண்டு கடிதங்கள் வந்தன. ஒன்று கோயமுத்தூரிலிருந்து. மற்றொன்று திருப்பூர்.

அய்யர்வாள் வழக்கம்போல கிட்டுவை விசாரித்து எழுதியிருந்தார். இராமசாமி அய்யர் வழக்கம்போல் யதோக்தமாக பதில் எழுதினார்.

பூதலிங்கமய்யரின் கடிதம் இராமசாமி அய்யரின் அடிவயிற்றைக் கலக்கிற்று. அதில், கோயமுத்தூர் இஞ்சினியரது பெண்ணைக் கிட்டுவிற்கு சம்பந்தம் செய்துகொள்வதாக இராமசாமி அய்யர் பிரணதார்த்திஹர அய்யருக்கு வாக்களித்திருப்பதாக ஒரு வதந்தி கிளம்பியிருப்பதாகவும், ஆனால் அதைத்தான் நம்பவில்லையென்றும், போனவருஷமே கிட்டுவுக்கும் ராஜத்

திற்கும் கலியாணம் நடந்திருக்க வேண்டுமென்றும், அந்தவருஷம் ஆனிமீ 15வுக்குள் நடந்தே தீரவேண்டுமென்றும், 'சாரதா ஆக்ட்' படிக்கு தன் பெண்ணிற்கு வயதாகி விட்டபடியால்தான் இனி பொறுக்கமுடியாதென்றும் அந்தக்கடிதத்தைத் தந்தியாகபாவித்து உடனேபதில் போடவேண்டியதென்றும் கண்டிப்பாகக் கண்டிருந்தார்.

இராமசாமி அய்யர், தனது மனைவியின் உடம்பு தடபுடலாக இருந்ததையும், கிட்டு வந்து தாயைக் கண்டு அன்று புறப்படுவதையும், இன்னம் விசாலத்தம்மாளைப்பற்றி பயப்படாமலிருப்பதற்கு இடமில்லை யென்பதையும், மேலும், தனது குமாரனும் அவனது படிப்புத் தீர்ந்ததும் ராஜத்தை விவாகம் செய்துகொள்ள என்ன அளவில்லா ஆனந்தம் அடைவான் என்பதையும் வெகு விஸ்தரித்து, 'லிங்கம்! பொறுத்தது பொறுத்தாய், இன்னம் ஒரே வருஷம், எப்படியாவது, எனக்காகவாவது, கிட்டுவிற்காகவாவது நிர்கட்டாயம் பொறுக்கவேண்டும்,' என்று அசடுதட்ட ஒரு ராமாயணம் எழுதினார்.

தபாலில் கடிதத்தைப் போட்டதும், பூதலிங்கமய்யர் குறிப்பிட்டிருந்த வதந்தியைப் 'பொய்' என்று தன் பதிலில் எழுத மறந்துவிட்டது இராமசாமி அய்யருக்கு நினைவு வந்தது. 'ஸ்வாமி யிருக்கிறார். பார்த்துக்கொள்வோம்' எனத் தானாகவே தைரியமடைந்தார்.

இராமசாமி அய்யர் தனக்கு வந்த இரண்டு கடிதங்களையும் தன் மனைவியிடம்மட்டும் வாசித்துக் காட்டிவிட்டு, கிட்டு லக்ஷிமியின் வீட்டிலிருந்து வருமுன், அவைகளையும் அடுப்பில் போட்டுவிட்டு தன் பதில்களையும் தபால் பெட்டியில் போட்டுவிட்டார். 'ரிபப்ளிக் இந்தியா'வைச் சேர்ந்த வீரர்கள் தபால் பெட்டியில் அன்றுமட்டும் 'பாஸ்பரஸை'ப் போடாமல் இருக்கவேண்டும் என்று கடவுளை வேண்டிக்கொண்டார்.

'பெண்ணிற்கோ வயது பதினேழாய்யிட்டது. வெறும் பகற் கனவு கண்டு கொண்டிருக்கக்கூடாது. நிச்சயமாக தெரிந்துகொண்டு விடுவதே நல்லது. திருவெல்லிக்கேணி பூராவும் ஒரே வம்பாயிருக்கு' என்பதாக அன்று செல்லம்மாள் எண்ணினாள். தன் மகளிடம் 'லக்ஷிமி கிட்டு உன்னோடே பேசிண்டிருந்தபோதாவது எழுதினபோதாவது, எப்பவாவது, ஜாடையாகவாவது உன்னைத் தான் கலியாணம் செய்துகொள்வதாகத் தெரிவித்ததுண்டோ?,' என்று கேட்டாள். லக்ஷிமி தன் உள்ளங்கையைச் சற்றே பார்த்துக்கொண்டாள். ஆறு வருஷம் முன்பு பூழாய் அடி ஞாபகம் வந்தது. "அம்மா அந்தமாதிரி ஒன்றுமில்லை. இருந்தாலும், என்னைக் கைவிடமாட்டான் என்று நினைக்கிறேன்" என்றாள்.

செல்லம்மாள் கிட்டுவை மாலை போஜனத்திற்கு அழைத்திருந்தாள். இரவு மெயிலில்தான் அவனது பயணம். தனது பெண்ணைக் குளித்துவரச் சொன்னாள். அவளது தலையை வாரிப் பின்னினாள். காலணாவிற்கு கதம்பம் வாங்கி அவள் கூந்தலில் சூட்டினாள். லக்ஷிமி நெற்றியில் குங்குமம் அணிந்து கிட்டுவின் வரவை எதிர்பார்த்தவளா யிருந்தாள்.



லக்ஷ்மி மிக்க கம்பீரமாகக் காணப்பட்டாள்; அவள் முகத்தில் ஒரு அலாதி அழகு; அவள் விழியில் ஒரு தெய்வீக ஒளி. அவள் தனது வலது கையில் தனது வலது கன்னத்தைத் தாங்கி, சற்றே தலையைச் சாய்த்து யாதொரு நினைவுமே இல்லாதவளென, கீழ்நோக்கி ஒரு சாந்தப் பார்வையுடன் தனது கையைத் தரையில் தாங்கி, இரண்டு கால்களையும் பின் மடக்கி மஹான் காந்தி யடிகளைப்போன்று வீற்றிருந்தாள். செல்லம்மாள் லக்ஷ்மியைப் பார்த்தாள். கலகலென கண்ணீர்விட்டாள். "ஆஹா! என்ன கொடுமை. ஏழ்மை மஹா பாபம்! இன்னம் அரைமணியில் கிட்டு வருவான். இன்றைக்காவது நம்ம குழந்தைக்கு ஒரு நல்ல புடவை கட்டி அவன் முன்பு நிறுத்துவதற்கில்லையே! குழந்தை பிறந்த மேனிக்கு இருக்கிறாள். கையில் கண்ணாடி வளைகூட இல்லை! கழுத்து மொண்ணை! காதிலே ஒரு ஜோடு கிராம்பு! ஆ தெய்வமே! இந்த மாணிக்கம் என் வயிற்றிலா பிறந்திருக்க வேண்டும்?' எனப் பலவாறு எண்ணி வருந்தினாள்.

கிட்டுவும் வந்தான். பெரிய நுனி இலைபோட்டு அன்னையும் பெண்ணுமாகப் பரிமாறினார்கள். லக்ஷ்மியின் கையால் சமைக்கப்பட்ட பதார்த்தங்களையெல்லாம் செல்லம்மாள் சுட்டிச் சுட்டிக் காட்டி "இது லக்ஷ்மி பண்ணினது. இதுவும் அவள்தான் அந்த அவியல் அமைஞ்சதைப்பார். அது லக்ஷ்மியின் கையோன்னோ?' மைசூர் ரஸம்னா எங்க கிட்டுக்கு உசிரு, என்று சொல்லிப் பண்ணி யிருக்கா. இதை வாங்கி சாப்பிட்டுப்பாரு ஒருகை," என்பதாக வெல்லாம் சொன்னாள். "திவ்யம், திவ்யம், தேவாமிருதம்," என்பதாகச் சாப்பிட்டான் கிட்டு. வனிப்பாலில் கோதுமையை வேகவைத்து அதில் பிறகு தேங்காய்ப் பாலையும் பிழிந்து, சீனி கல்கண்டை அள்ளிப் போட்டு செய்யப்பட்ட பாயஸம். செல்லம்மாள் 'இதுவும் குழந்தை பண்ணினது' என்று கூறி பரிமாறுகிறாள். கிட்டு தனது ஆவியிலிருந்து ஆன்மாவரை லக்ஷ்மியையும் நாவிலிருந்து நாபிவரை அந்த லக்ஷ்மி கையால் செய்த பாயசத்தையும் இருத்தினவனாய், மனதில் லக்ஷ்மியையும் லக்ஷ்மிபண்ணின பாயசத்தின் ருசியையும் எண்ணியவனாய், செல்லம்மாள் கண்ஜாடை கண்டு பாத்திரம் கழுவப்போவதுபோல கதவு மூலையில் மறைவதையும், லக்ஷ்மி தன் இலையின்முன் குந்திட்டு உட்காருவதையுங்கூட கவனிக்காதவனாயிருக்கிறான். செல்லம்மாள் 'கிட்டு!' என அழைக்கிறதும் அத்தையை நிமிர்ந்துபார்த்து ஒரு புன்னகை பூக்கின்றான்.

அத்தை சொல்லுகிறாள். "என்னப்பா! உன்னை ஒரு வார்த்தை கேக்கணுமுனு இருக்கேன். ரொம்ப நாளாய் எம்மனசிலே இருக்கு. ஸ்வாமிதான் உன்னை இங்கே வரவழச்சார். கிட்டு! எங்கஷ்டமெல்லாம் உனக்குத் தெரியும். குழந்தை லக்ஷ்மிக்கு பிராயம் பதினேழு நடக்கறது. ஊரெல்லாம் வம்பாயிருக்கு. அவளோ கிட்டே, கிட்டே; கிட்டே. கிட்டு என்றிருக்காள். 60 நாழியும் உன் நினைவுதான். அவளுக்கு படிப்பு சொல்லிக் கொடுத்தது

நீ. அவளுக்கு புத்தி சொல்லிக்கொடுத்தது நீ. அவளை முன்னுக்குக் கொண்டுவந்தது நீ. உன் வார்த்தை அவளுக்கு தெய்வ வார்த்தை. உன் எழுத்து அவளுக்கு வேதம். நீயே அவளுக்கு உசிரு. கிட்டு! என்னப்பா! நீ அவளைக் கைவிட்டிடுவாயா? உன்வாயிலேந்து ஒரு வார்த்தை வரணும்."


"அத்தே! என் படிப்பு முடிய பத்து மாஸந்தானிருக்கு அது முடிஞ்சதும் நான் செய்யவேண்டியதைச் செய்வேன் கவலையே வேண்டாம்" என்கிறான் கிட்டு.


செல்லம்மாள் 'இதற்கு மேலே வார்த்தை என்ன சொல்லுவன்? லக்ஷ்மியைக் கைவிடமாட்டான். இது நிச்சயம்' என்று எண்ணுகிறாள்.

"நீ மஹாராஜனா இருக்கணும். ஸீதாக்கு கூட 14 வயசாகிறது. ஒரு கஷ்டம் தீரட்டுமுனு இருக்கேன். உன்னே தீர்க்காயுசா வச்சிருக்கணும்" என்று வாழ்த்துகிறேன்.

சாப்பாடு முடிந்தது. லக்ஷ்மி கிட்டுவிற்குத் தன் கையினாலேயே வெற்றிலையை மடித்து மடித்துக் கொடுத்தாள். இருவரும் சற்றுநேரம் சந்தோஷமாகப் பேசினர். புறப்படும் சமயமாகவே, கிட்டு எழுந்திருந்தான். அவன் மனதில் அவனறியாது ஒரு கலக்கம் உண்டாயிற்று. அவனது கண்கள் இருண்டன. லக்ஷ்மியை விட்டுத்தான் நாலு வருஷகாலம் பிரிந்திருந்தது பொய்யெனத் தோன்றியது. அன்று அவளை விட்டுப்பிரிவது உண்மையெனத் தோன்றியது. அவன் தலை மயக்கம் கொண்டது. நாற்காலியில் சாய்ந்தான். லக்ஷ்மி அவனது முகவாய்க்கட்டையை தனது கையால் தடவி "கிட்டு, என் அருமைக் கிட்டு!" என்றாள். இருவர் கண்களினின்றும் தாரை தாரையாக நீர் பெருகிற்று. கை கடியாரத்தை ஒருதடவை பார்த்தான். நேரமாய்விட்டது. நெஞ்சம் அடைபட்டுப் போயிற்று. இருவருக்குமே நா எழவில்லை. கிட்டு லக்ஷ்மிக்குக் கை கொடுத்தான்.

கிட்டுவின் கையை லக்ஷ்மி தன் கண்களில் ஒத்திக்கொண்டாள். லக்ஷ்மியின் கையை கிட்டு முத்தமிட்டான்.





ஆசிரியர் பதில்

(நண்பர்கள் தங்களுக்கு தெரிய வேண்டிய முக்கியமான விஷயங்களை எழுதி யனுப்பினால் இங்கே பதிலளிக்கப்படும்.)

எம். என். எம். கூடலூர்:—மகாத்மா தமது ஆசிரமத்தை ஏன கலைத்தார் என்பதை அவர் வெளியிட்ட அறிக்கையிலிருந்து அறிந்துகொள்ளலாம். கதர் வேலை காங்கிரசால் ஆரம்பிக்கப் பட்டபோதிலும், கதர் ஸ்தாபனத்தை தனியாகச்செய்து விட்டார்கள். அது முற்றிலும் பொருளாதார சம்பந்தமான வேலையைச்செய்வதால், ராஜீயத்திற்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது. காங்கிரஸ் சபைகளை முனபே சர்க்கார் கலைத்து விட்டார்கள். ரகசிய வேலை கூடாது என்பதற்காகவே மகாத்மா காங்கிரஸ் கமிட்டிகளை இப்பொழுது கலைத்திருக்கிறார். கமிட்டிகள் போயினவேயொழிய காங்கிரஸ் போகவில்லை. கமிட்டிகளை கலைத்துவிட்டதால் கதர் விற்பனை குறையுமென்றால், அவ்வளவு தேசாபிமான மல்லாத ஜனங்களுக்கு சுயராஜ்யம் எதற்கு?

எஸ். எம். ஆர். ஒலவக்கோடு:—எந்தப்பத்திரிகை ஆபீசில் யாருக்கு என்ன சம்பளம் என்பது ஒரு கேள்வி யல்ல. இதை அறிந்து நடக்கவேண்டியதும் எதுவுமில்லை. அதைப் போலவே பம்பாயில் எத்தனை கோடீஸ்வரர்கள் இருந்தால் நமக்கென்ன? அறிவை வளர்க்கக்கூடியதாயும், பொது ஜன நன்மைக்கு அவசியமானதாயுமுள்ள கேள்விகளை அனுப்புங்கள்.

எந்தவிதமான தீர்ப்பு என்று குறிப்பிட்டால், சர்க்கார் தலையிட முடியுமா முடியாதா என்று தெரிவிக்கிறோம். யமுனாலால் பஜாஜும், பிர்லாவும் பெரிய கோடீஸ்வரர்கள். ஜெர்மன் கம்பெனிகள் இந்தியாவில் எத்தனையோ இருக்கின்றன. எந்தத் தொழில் நடத்தும் கம்பெனிகளின் விலாசம் உங்களுக்குத் தேவை? விந்திய மலை வட இந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் மத்தியில் இருக்கிறது. இமயமலை இந்தியாவின் வடக்கு எல்லையில் இருக்கிறது.

எஸ். ஆர். அ. சென்னை:—திருச்சியில் கூடிய தமிழ் பண்டிதர்கள் மகாநாட்டில், பண்டிதர்களுக்கு பி. ஒ. எல். (Bachelor of Literature) என்ற ஆங்கில

எழுத்துப் பட்டம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதை நீங்கள் ஆட்சேபிப்பது மிகவும் நியாயமானது. தமிழ் மொழியிலேயே பட்டம் கொடுக்கவேண்டுமென்று நீங்கள் சொல்லுவதை முற்றிலும் ஆதரிக்கிறோம். ஆங்கிலப் பட்டங்களில் தமிழ் பண்டிதர்களுக்கு எவ்வளவு மோகமிருக்கிறது என்பதை இந்தத் தீர்மானம் காட்டுகிறது. இதற்குக் காரணம் தன்னம்பிக்கைக் குறைவேயாகும்.

க. ப. சிங்கப்பூர்:—ஜெர்மனியில் மட்டுமல்ல. பிரிட்டனில் கூட ஜப்பான்வர்த்தகப்போட்டி செய்கிறது. இதன் ரகசியத்தை அறிய விரும்பினல், ஆகஸ்ட் 31உ "காந்தியில்" வெளியாயிருக்கும் "பிரிட்டனை விழுங்கும் ஜப்பான்" என்ற கட்டுரையைப் படிக்கவும்.

தி. சு. திருநெல்வேலி:—மன்னர்கள் ஆளும் நாடுகளாவன:—ஆப்கானிஸ்தானம், அல்பேனியா, அபிசினியா, பெல்ஜியம், புட்டான், பல்கேரியா, டென்மார்க், எகிப்து, பிரிட்டன், ஹெட்ஜாஸ், இராக், இத்தாலி, ஜப்பான், மொராக்கோ, நெப்பால், நெதர்லந்து, நார்வே, பாரசிகம், ருமேனியா, சயாம், ஸ்வீடன், டிரான்ஸ்ஜோர்டன், யுகோஸ்லேவியா.

ப. ச. க. ரங்கூன்:—புதிய சீர்திருத்தம் உருவான பின்டலலவா, எப்பொழுது வரும் என்ற விஷயத்தை யோசிக்க முடியும்? இப்பொழுதுள்ள நிலைமையில் எப்பொழுது சீர்திருத்தம் வருமென்பது யாருக்கும் தெரியாது. அதிகார வர்க்கத்தின் அந்தரங்கத் தோழரான சர். சி. பி. ராமசாமி ஐயர், 1935-ல் வரலாமென்று சொல்லுகிறார்.

வி. சி. பழனி:—நீங்கள் "காந்தி" பத்திரிகையைப்பற்றி எழுதிய அழகான கட்டுரை கிடைத்தது. அதை பிரசுரித்தால் தற்புகழ்ச்சியாக இருக்குமென்று பிரசுரிக்கவில்லை. சென்ற மாதம் 27உ முதல் நீங்கள் ஆவலுடன் கேட்டிருந்த "காந்தி" காலணு பத்திரிகை மீண்டும் வெளிவருவதை அறிவீர்கள். உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்குமென்று நம்புகிறோம்.

க. ச. பி. விருதுநகர்:—மகாத்மா காந்தி தென்னுப்பிரிக்காவில் செய்த சத்தியாக்கிரகத்தைப்பற்றி அறியவேண்டுமானல், அவர் எழுதிய "தென்னுப்பிரிக்கா சத்தியாக்கிரகம்" என்ற புத்தகத்தை படியுங்கள். நமது ஆபீசில் பிரசுரமாயிருக்கிறது. விலை ரூ. ஒன்று.

என். ஆர். சாமி, மதுரை:—தங்கள் கார்டு கிடைத்தது. வந்தனம். சென்ற மலரை திருஷ்டிப்பரிகாரம் என்று நினைத்துக் கொள்ளுங்கள். இனி கூடிய வரையில் நன்ருக அச்சிட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

சுப்ரமணிய பாரதியார்.

(பழனத்தான்)

பொழுது போகாமற் போனால், என்ன செய்கிறது? கையி லகப்பட்டால், "பொழுதை" தண்டிக்கலாம். அகப்படாத குற்றவாளியின் தலையின்பேரில், "ரூபாய் பரிசு" வைத்துப் பார்த் தாலும், பலகாலும் பயன்படுவதில்லை. பொழுதை, அதன் போக்கிலேயே விட்டு விடுவதுதான் உத்தமமாகும். இல்லாவிட் டால், கண்டதைப் பேசிக் காலத்தைக்கழிக்கலாம். இந்த அருமை யான வேலையைச்செய்யும் கூட்டத்திலே சேர்ந்தவர்கள் நானும் எனது நண்பர் கேசவனும்.

சிறு குழந்தைகள், அழகாய் ஆனந்தத்துடன் சொல்லிக் கொள்ளும் "கன்னாப்பின்னா, மன்னார்கோயில்" தோரணையில், எங்கள் பேச்சுப் போய்க்கொண்டிருந்தது. சட்ட மறுப்பிலே சுடச்சுட ஆரம்பித்து, தென்னிந்திய ரயில்வேக் கம்பெனியின் பேராசைப் படுகுழியில் விழுந்து எழுந்திருந்து பாதாம் ஹல் வாவை ருசிபார்த்து, பெண்களின் பதட்டத்தையும் விடுதலையை யும் பற்றி அலசி அலசிப்பேசி, இன்னும் என்ன வெல்லாமோ, முடிவு இல்லாமல், முடிவு காணாமல், கூச்சல் போட்டுவிட்டு, கவி ராயர் என்ற சொல்லைத் தொத்திப்பிடித்துக்கொண்டு, எங்கள் பேச்சு போய்க்கொண்டிருந்தது.

சமயம் பார்த்து, எனது நண்பரின் அருமைப் புதல்வன், ஆறு வயதுச்சிறுவன், தங்கமணி (இது செல்லப் பெயர்) தோன்றி னான். கடைசி வார்த்தை, கவிராயர் அவன் காதில் விழுந்தது தான் தாமதம், "அப்பா! கவிராயர், நம்ம ஊர் சினிவாஸ ராய ருக்கு உறவா" என்று தெரியாத ஒன்றைக் கண்டு பிடித்தவனைப் போல, முகத்தையும் குரலையும் வைத்துக்கொண்டு கேட்டான். என் நண்பர் கலகலவென்று சிரித்தார்; ஆனால் அவனுக்கு ஒரு சிறு முத்தம் கொடுக்காமலிருக்க வில்லை. தங்கமணி முகம் வாடி விட்டது. தீனக்குரலில், "சொல்லு, அப்பா" என்றான், "கவி ராயர் என்றால் ராயர் அல்ல, பாட்டு எழுதுகிறவர்" என்றார் என் நண்பர். "நம்ம பாரதியாரைப் போலவா?" என்று எனக்குத் திடுக்கிடும்படியாகக் கேட்டான். சிறிது நேரம் என் நினைவு, என்னிடமே யில்லை. தங்கமணி வீட்டுக்குப் போய்விட் டான். ஆனால், அவன் "வெடுக்கு" என்று சொன்ன, "நம்ம பாரதியாரைப் போலவா" என்பது, என் மனதை விட்டு அக லவேயில்லை.

எனது நண்பர் கேசவன், சுப்ரமணிய பாரதியாரின் பரம பக்தன். ஒரு காதலி, தான் பார்க்கும்பொருள்கள் யாவற்றிலும் தனது காதலனையேதான் பார்ப்பாள் என்று கவிகள் வர்ணிப்பதுண்டு. அது உண்மை என்றே எனக்குத் தோன்றுகிறது. எனது நண்பருக்கு, எப்பொழுதும் பாரதி நாம ஸ்மரணைதான். அவருடைய வீட்டுக்குப் போனால், ஒரு விநோதத்தைக் காணலாம். "பாரதி வாழ்க", "பாரதி புகழ் ஓங்குக", "பாரதி... பாரதி........" என்று "பாரதியில்" ஆரம்பித்து, விசித்திர விசித்திரமாய் முடித்திருக்கும் சூத்திரங்களை சுவர்களில், புஸ்தகங்களில், காகிதங்களில், பாத்திரங்களில் கூட, பார்க்கலாம். பாரதிப் பித்து தலைக்கேறிய இன்னொருவரை பார்ப்பது அருமை; முடியாது என்று நான் சொல்லவில்லை.

தங்கமணி வீட்டுக்குப் போனதும், நண்பர் என்னைத் துளைக்க ஆரம்பித்துவிட்டார். "உங்களைப்போல, 'மோசம்' நான் பார்த்ததே யில்லை. ஒரு சங்கதியை ஒத்திப்போட்டு, ஒத்திப்போட்டு, வாய்தா வாங்குவதில், எந்தப் பிரபல வக்கீலும் உங்களுக்கு ஈடாக மாட்டார். பாரதியாரை உங்களுக்கு நன்ருய்த்தெரியும்; அவரைப் பற்றிய வரலாறைச் சொல்லக்கூடாதா? பாரதியாரிடம் உங்களுக்கிருக்கிற அபிமானத்தை, எவ்வளவு காலந்தான் மறைத்துவைத்துக்கொண்டிருக்கமுடியும்? தினம் தினம், கொஞ்சம் கொஞ்சம், எனக்குச் சொல்லுங்கள். எனக்கு ரொம்ப ஆவலாயிருக்கிறது" என்று, ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டார்.

தப்பித்துக்கொள்ள வழியில்லை. தப்பித்துக்கொள்ள மனமுமில்லை. "உம்முடைய ஆவல் சரிதான். உம்முடைய முகத்திலே, குரலிலே, பேச்சிலே, பாரதி மயமாய்த்தானிருக்கிறது. இந்த ஆவலைத் தடுக்க, என்னால் ஆகாது. ஆனால் உமது அதிசயிக்கத்தக்க ஆவலைப்பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றல் என்னிடம் இருக்கிறதோ என்பது என் சந்தேகம். என்ன சொல்லுகிறீர்" என்றேன். நண்பரின் கண்களில் கோபம் பொறிபறந்தது. "இந்த நாட்டைப் பிடித்த சனியன் என்றைக்குத் தொலையுமோ? போலி அடக்கமும், பாவனை மரியாதையும் தொலைவது எக்காலம்? இருக்கட்டும். தனக்குத் தெரிந்ததைப் பிறருக்குச் சொல்லிக்கொடுக்காமல் இறந்துபோகும் வித்வான், மறு பிறப்பில் "வேதாளமாய்"ப் பிறந்து, மரக்கிளையில், தலை கிழாய்த்தொங்கி, சதாகாலம் பசி பசி என்று பறக்கவேண்டும். அது உமக்குத் தெரியுமா" என்ருர் நண்பர். வேதாள மறு பிறப்பிற் கஞ்சி, "கவிராயர்" சுப்ரமணிய பாரதியாரைப்பற்றி, நண்பருக்குத் தொடர்ந்து சொல்லுவதாக ஒப்புக்கொண்டேன். நான் செய்தது சரிதானே?



உங்களுக்குத் தெரியுமா?

நெப்போலியன் தவறு

18 வது நூற்றுண்டில் பல்டன் என்ற அமெரிக்கன் நீராவி யால் ஓடக்கூடிய கப்பல் கண்டு பிடித்தான். ஆனுல் அவனை ஆத ரிப்பார் யாருமில்லை. நெப்போலியனிடம் வந்து "பெரியாரே, என்னை ஆதரித்தால், உலகத்திலேயே உமது கடற்படை மிகவும் பலமுள்ளதாய் இருக்கும்படி செய்வேன்" என்று கூறினுன். நெப் போலியனின் மந்திரிகளுக்கு நம்பிக்கை யில்லை. நீராவியாவது, கப்பலை ஓட்டுவதாவது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே நெப்போலியன் ஆதரவளிக்கவில்லை. அப்பொழுது நெப்போலி யன் ஆதரவளித்து ஒரு பலமான கடற்படையை கட்டி யிருந்தால், நெப்போலியன் சரித்திரமே வேறு விதமாயிருக்கும்.

பார்லிமெண்ட் அங்கத்தினர் ராஜீநாமா செய்ய முடியுமா ?


பார்லிமென்டிலுள்ள காமன்ஸ் சபைக்கு அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அவர் அப்பதவியை ராஜீநாமாச் செய்யமுடியாது. இந்தியாவில் எந்த சட்டசபை அங்கத்தின ரேனும நினைத்தவுடன் ராஜீநாமாச் செய்துவிடலாம். சீமையில் அப்படி முடியாது. ஒன்று பார்லிமென்ட் சபையை கலைத்தால் தான் பதவியை துறக்கமுடியும். அல்லது அங்கத்தினர் இறக்க வேண்டும். ராஜீநாமாச் செய்ய வேறு ஏதாவது வழியுண்டா? சர்க் கார் வேலையை ஒப்புக்கொண்டால் ராஜீநாமாச்செய்யலாம். சொந்த வேலையாக போகவிரும்பி அங்கத்தினர் ராஜீநாமா செய்ய நேர்ந் தால், சர்க்கார் வேலையை எப்படி பார்க்க முடியும்? சர்க்கார் வேலை யும் நினைத்தவுடன் கிடைத்து விடுமா? இதற்காக ஒரு அனுமத்து சர்க்கார் பதவி ஒன்றிருக்கிறது. சார்ல்டன் ஹண்டிரட்ஸ் காரி யஸ்தர் என்பது அப்பதவிக்கு பெயர். இது எக்காலத்திலேயோ இருந்தது. இப்பொழுது அந்தப் பதவிக்கு அவசியமோ சம் பளமோ கிடையாது. இருந்தாலும் ராஜீநாமாச் செய்ய விரும்பும் அங்கத்தினர்களுக்கு இது உபயோகப்படுகிறது. ராஜீநாமாச்

செய்ய விரும்புகிறவர்கள் இப்பதவிக்கு மனுப்போடுவார்கள். உடனே நியமித்து விட்டதாக கடிதம் வரும். அதன் பின்பு, சர்க்கார் வேலையை ஒப்புக்கொண்டதால் ராஜீநாமாச் செய்ததாக எழுதி விடுவார்கள்.

இரவில் அதிக சப்தம் கேட்பானேன்?


பகலில் பற்பல சப்தங்கள் ஏற்படுகிறபடியால், பகலை விட இரவில் எந்த சப்தமும் அதிக தூரத்திலும், தெளிவாகவும் கேட்கிறது. மற்றொரு விசேஷமுமுண்டு. நாம் தூங்கப்போகிற சமயத்திலும், விழித்தவுடனேயும் நமது காதுகள் மிகவும் கூர்மையாயிருக்கின்றன. இந்தச் சமயங்களில் இதனால் சிறிய சப்தமும் தெளிவாய் கேட்கிறது. பகலில் கூட தூங்கப்போகிற சமயத்தில் இதை அறியலாம். ஒருவருக்கு குளோரபாரம் கொடுத்தால், மயக்கம் வரப்போகிற சமயத்தில் அவர் செவிகள் கூர்மையடைவதை கவனிக்கலாம்.

ராக்பெல்லர் யார்?




இந்தப் படத்தில் காணப்படும் ஜான் டி ராக்பெல்லருக்கு இப்பொழுது 95 வயதாகிறது. இந்த வயதில்கூட பந்தாடுவதையும், மோட்டார் சவாரி செய்வதையும் அவர் விடவில்லை. 100 வயது வரை தாம் ஜீவிக்கப் போவதாகவும், அதற் கப்புறம் தான் உண்மையான ஜீவிதம் ஆரம்பிக்கப் போவதாகவும் அவர் சொல்லுகிறார். உலகில் பெரிய பணக்காரர்களில் இவர் ஒருவர். 16-வது வயது வரை 50 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா வேலை பார்த்து வந்தார். அப்புறம் மண்ணெண்ணெய் தொழிலில் பிரவேசித்தார். ஸ்டான்டர்ட் ஆயில் கம்பெனி இவர் ஏற்படுத்திய கம்பெனிதான். இதுவரை 150 கோடி ரூபாய்க்குமேல் தர்மங்களுக்கு கொடுத்திருக்கிறார்.


கடற்படை பலம்



அமெரிக்கா



பிரிட்டன்



ஜப்பான்




பிரான்ஸ்




இத்தாலி

லண்டன் கடற்படை ஒப்பந்தப்படி யுத்தக் கப்பல்களை அமைப்பதா யிருந்தால் ஐந்து வல்லரசுகளின் கடற்படை பலம் மேலே கண்டவாறு இருக்கும்.

நிழல் படங்கள்



கை விரல்களை பலவிதங்களாக மடக்கி நிழல் காட்டுவதால், மிருகங்கள், பட்சிகள் போன்ற சாயல்களை உண்டுபண்ணலாம். படத்தை பார்க்கவும்.




ஆசிரியர்: தே. ச. சோக்கலிங்கம்

மாலை 2. { 1933 செப்டம்பர் 20௳ 29 செம்புதாஸ் தெரு, சென்னை. } மலர் 3.

அட்டவணை.

சுயராஜ்யத்தின் விலை.



வெள்ளையறிக்கையில் உள்ள சுயராஜ்யத் திட்டம் வேண்டுமானல் இந்தியாவின் செலாவணியை தமக்கு அடமானம் வைக்க வேண்டுமென்று பிரிட்டிஷார் கூறுகிருர்கள். அதற்காக மிதவாதிகள் ரிசர்வ் பாங்கு திட்டத்தை நிறைவேற்றப் போகிருர்கள்.

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினல்,

கைகொட்டிச் சிரியாரோ? —பாரதி.

ரிசர்வ் பாங்க் சூழ்ச்சி

(நா. சிவராமன்)

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுல்

கைகொட்டிச் சிரியாரோ" —பாரதி.

"ரிசர்வ் பாங்க்" என்பது பண வரவு செலவு விஷயமான ஒரு ஸ்தாபனம். "இதற்கும் கவிதைக்கும் என்ன சம்பந்தம்?" என்று நீங்கள் கேட்பீர்கள். அய்யா மன்னிக்க வேண்டும். உங்கள் கவி தன் பாட்டில் "விற்று" "வாங்கினுல்" என்ற இரண்டு வார்த்தையைப் போடா விட்டால் அந்தப் பாட்டை இங்கு பிரஸ்தாபித்திருக்கவே மாட்டேன். "யார் என்ன சொன்னுலும் சரி, வெள்ளைக்காரன் கெட்டிக்காரன்-தான்!" என்று என் அண்டை வீட்டுக்காரர் சொல்கிருரே, அதைச் சொல்லி இந்த வியாசத்தை ஆரம்பித் திருப்பேன்.



"வெள்ளைக்காரன்" என்ருல் நாம் சம்மந்தப்பட்ட மட்டிலும் பிரிட்டிஷார் தான். அவர்களுடைய ராஜ தந்திரத்தைப் பற்றி உங்களுக்கு நான் சொல்லாமலே தெரியும். இந்த ராஜ தந்திரம் இருக்கிறதே—சூழ்ச்சி, சூது என்று சொன்னுலும் இதே கருத்துத்தான் — அதில் ஒரு முக்கியமான ரகசியம் இருக்கிறது. அதாவது எதிரியை தர்ம சங்கடத்தில் கொண்டு புகுத்துவது. இந்த ரகசியத்தை நன்ருக அறிந்தவர்கள் பிரிட்டிஷார். ஆகையால் தலையில் வெண்ணையை வைத்துக் கொக்கைப்பிடிக்க எண்ணுவது போல், பிரிட்டிஷாரை ராஜதந்திரத்தால் மயக்க யத்தனிக்கும் மிதவாதிகள் ஏமாந்துபோய் வெறும் வாயும் மண்ணுமாகத் திரும்புவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

விடுதலையை நோக்கமாகக்கொண்டு தேச சஞ்சாரம் செய்துகொண்டு போனானும் ஒரு பேர்வழி. கையில் சாராய சீசாவையும் காலடியில் ஒரு குழந்தையையும் போட்டுக் கொண்டு ஒரு அரக்கி அவன் முன் தோன்றினாள். அவள் தன் கையிலிருந்த ஒரு வாளைக்காட்டி "இந்தக் கத்தியால்



குழந்தையை வெட்டு; இல்லையேல் இந்தச் சாராயத்தைக் குடி; இரண்டில் ஒன்றை நீ ஏற்றுக்கொள்ளாவிடில் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று கூறினாள். நமது யோகீசுவர ருக்கு உயிரிலும் ஆசை; கொலை செய்யவும் இஷ்ட மில்லை. மதுபானமும் செய்யக்கூடாது. என்ன செய்வார் பாவம்! இதுதான் தர்ம சங்கடம். கடைசியாக ஒரு தினுசாக மனதை சமாதானம் செய்துகொண்டு சாராயத்தை வாங்கிக் குடித்தா ரென்றும், மற்ற வேலைகளை யெல்லாம் அந்தச் சாராயமே செய்து முடித்ததென்றும் கதை. கதைதான்; உண்மையாக நடந்ததோ என்னமோ எனக்குத் தெரியாது.

இந்த யோகீசுவரரின் நிலைமை இன்று மிதவாதிகளுக்கு ஏற் பட்டிருக்கிறது.

தேச விடுதலைக்கான தியாகத்தை செய்ய மிதவாதிகளுக்குத் துணிவு கிடையாது. மந்திரத்தினால் மாங்காய் விழுமானால் எடுத்

துத் தின்ன மிதவாதிகளுக்கு ஆசைதான். சுயராஜ்யம் வந்துவிட்டால் வேண்டாமென்று அவர்கள் தள்ளிவிடமாட்டார்கள். இது தான் அவர்களது மனப்பான்மை. இவர்களை ஏமாற்றுவதற்கு பிரிட்டிஷாருக்குத் தெரியாதா ?

இரண்டு மூன்றுதடவை இந்த மிதவாதிகளை சீமைக்கு அழைத்து வட்டமேஜை மகாநாடு என்ற பெரிய நாடகத்தை நடத்தினுர்கள். கடைசியாக வெள்ளையறிக்கை யென்று ஒரு போலி சுயராஜ்யத் திட்டமும் அறிவிக்கப்பட்டது. ஆனுல் இந்த வெள்ளை யறிக்கைத்திட்டம் வேண்டுமானுல் அதற்கு என்ன விலை தரவேண்டுமென்பதையும் குறிப்பிட்டார்கள். அதாவது சில நிபந்தனைகள் பூர்த்தியாகவேண்டும் என்று அதில் குறிப்பிட்டார்கள்.

இந்தியாவில் "ரிசர்வ் பாங்க்" ஒன்று ஏற்பட்டு, அது ராஜீய வாதிகள் எனப்படும் துஷ்டர்கள் ஆதிக்கத்தில் போகாமல் திறமையாக நடந்து வரவேண்டும். அதற்குப் பிறகுதான் மத்திய சர்க்காரில் மாறுதல் ஏற்படுத்த முடியும் என்று கூறி யிருக்கிறுர்கள்.

"ரிசர்வ் பாங்கு" ஏற்படுத்துவதற்கு ஒரு மசோதாவும் தயாரித்திருக்கிறுர்கள். அது சட்டசபை முன் ஆஜர் செய்யப்பட்டிருக்கிறது. மேலே கூறிய கதையில் இந்த ரிசர்வ்பாங்குச் சட்டத்தை சாராயப் புட்டியாகவும், வெள்ளை யறிக்கையை குழந்தையாகவும் வைத்துக்கொள்ளலாம். உவமையை அதோடு நிறுத்திக்கொள்ளலாம்.

வெள்ளையறிக்கை சுயராஜ்யத்தை ஒரு குழந்தையுடன் ஒப்பிடுவதைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் என்னை மன்னிக்க வேண்டும். இப்பொழுது பேசியது மிதவாதிகளைப்பற்றியேயாகும். வெள்ளை யறிக்கை அவலக்ஷணமா யிருக்கிறது என்று நினைக்கிறுர்களே யன்றி அது வெறும் உயிரற்ற பொம்மை யென்று அவர்கள் கருதுவதாய்த் தெரியவில்லை. உவமையை அதிகமாக விஸ்தரிக்கக் கூடாது. பூரணமாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

* * *

"ரிசர்வ் பாங்க்" என்பது சாராயத்தைப் போல் அவ்வளவு கெட்ட வஸ்து என்று ஒருவரும் நினைக்கவேண்டாம் எல்லா நாடுகளிலும் ரிசர்வ் பாங்கு அல்லது மத்திய பாங்கு என்ற பெயருடன் ஒருபாங்கு இருக்கும். சர்க்காரின் வரிப் பணத்தை அந்த பாங்கிலேயே போட்டு வைத்து தேவைப்படும்போது எடுத்துக்

கொள்வார்கள். அவ்வப்போது வர்த்தகம் கைத்தொழில் இவற்றின் தேவைக்குத் தக்கவாறு நாணயத்தின் அளவைப் பெருக்குவது சுருக்குவது முதலிய வேலைகளைச் செய்வது, வட்டி விகிதத்தை நிர்ணயிப்பது முதலியன இந்த பாங்கின் வேலைகள். நோட்டுகள் அச்சிடும் உரிமையும் பொறுப்பும் இந்த பாங்குகளின் வேலை. தனி நபர்களுக்கும் வர்த்தகர்களுக்கும பாங்குகள் என்ன காரியங்கள் செய்கின்றனவோ அதே வசதிகள் சர்க்காருக்கும் மற்ற பாங்குகளுக்கும் ஏற்படுத்திக் கொடுப்பது இந்த மத்திய பாங்கின் வேலையாகும். இதுபோன்ற ஒரு மத்திய பாங்கு இங்கும் ஏற்பட வேண்டியது அவசியமே.

"அப்படியானல் ஏன் ரிசர்வ் பாங்கு மசோதாவைச் சாராயத்துக்கு ஒப்பிடுகிறீர்; மசோதாவில் பிரமாதமான தவறு இருக்கிறதா?" என்று கேட்கிறீர்களோ? வேறு பல நாடுகளில் ஏற்பட்டுள்ள பாங்குகளுக்கும் இந்தப் புதிய திட்டத்துக்கும் சில விஷயங்களில் தான் வித்தியாசம். வெளிநாட்டார்; இந்த மசோதாவையும் அதற்கு சர் ஜார்ஜ் ஷுஸ்டர் கூறும் சமாதானங்களையும் பார்த்தால் மசோதாவைப் பற்றி ஒரு குற்றமும் சொல்லமாட்டார்கள். இந்தியாவுக்கு உண்மையான சுயராஜ்யம் இருந்தால் இந்த மசோதாவை ஒருவாறு ஏற்றுக்கொள்ளலாம்.

ரிசர்வ் பாங்கு மசோதாவைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லுகிறேன். இந்த பாங்குக்கு மூலதனம் 5 கோடி ரூபாய். பங்கு ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் பலரிடமிருந்து மூலதனம் வாங்கப்படும். பாங்கின் நிர்வாகத்தை கவனிக்க ஒரு போர்டு இருக்கும். அதில் பங்குக்காரர்களின் பிரதிநிதியாக 8 டைரக்டர்கள்; வைசிராயால் நியமிக்கப்பட்ட டைரெக்டர்கள் 4; வைசிராயால் நியமிக்கப்பட்ட ஒரு கவர்னா; இந்த நபர்களுக்கும் வோட்டு பாத்தியதை உண்டு. ஒன்று அல்லது இரண்டு உதவி கவர்னரும், ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரும் அந்த போர்டில் இருப்பார்கள். பாங்கின் நிர்வாகத்தைப்பற்றி வைசிராய்க்குச் சில விசேஷ அதிகாரங்களும் உண்டு.

ரிசர்வ் பாங்கு பங்காளிகளின் பாங்காக இருக்க வேண்டுமா அல்லது சர்க்காரின் மூலதனத்தைக் கொண்டு நடக்கவேண்டுமா என்பதைப்பற்றி அபிப்பிராய பேதம் உண்டு. தேசத்தின் நன்மையை மிகவும் பாதிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனத்தைத் தனி மனிதர்களின் கையில் விடுவது நல்லதல்ல என்பது ஒருகட்சி. சர்க்கார் பாங்காக ஏற்படுத்தினல் பாங்கின் நிர்வாகம் சட்டசபையின் அதிகாரத்தில் இருக்கும். சட்டசபையில் அதிகாரத்திலிருக்கும் ராஜீயக்-

கட்சிகள் மாறும்போதெல்லாம் அவர்கள் தம் கட்சியின் நன்மைக்குத் தக்கவாறு மாறுதல்கள் செய்யக்கூடும்; ஒரு முக்கிய வர்த்தக ஸ்தாபனத்தை ராஜீயக் கட்சிகளின் அடிபிடிக்கு இரையாக்கக் கூடாது; என்பது ஒரு கட்சி.

எப்படி இருந்தாலும் சரியே, மத்திய பாங்கின் நிர்வாகத்தில் சர்க்காருக்குப் போதிய உரிமையிருக்கவேண்டியது மிகவும் முக்யமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இப்பொழுது வந்திருக்கும் மசோதாவை கவனித்தால் ஜனப்பிரதிநிதிகளுக்கு பாங்கு விஷயத்தில் ஒரு உரிமையும் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக சட்டசபை அங்கத்தினர் ஒருவரும் பாங்கின் டைரெக்டர்களாக இருக்கக்கூடாதென்று விதி செய்திருக்கிறார்கள்.

ராஜீய வாதங்களிலிருந்து பாங்கின் நிர்வாகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று சர்க்கார் கூறுகிறார்கள். ஆனால் டைரெக்டர்கள் நியமிக்கும் உரிமையும் பாங்கின் கவர்னரை நியமிக்கும் உரிமையும் வைசிராயிடம் விடப்பட்டிருக்கிறது. அதாவது இந்திய அரசியல் வாதிகளுக்கு பாங்கில் ஒரு உரிமையும் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வைசிராய் யார்? வைசிராய் ஓர் தனி மனிதனல்ல; தனக்கு எது உசிதமோ அதைச் செய்யக்கூடிய உரிமையுள்ள ஒரு சுதந்தரமான அதிகாரியல்ல. வைசிராய் பிரிட்டிஷ் மந்திரி சபையிலுள்ள இந்தியா மந்திரியின் உத்தரவுக்கு அடங்கி நடக்கவேண்டியவர். இந்தியா மந்திரி இவ்விஷயங்களில் யாருடைய யோசனையை ஏற்றுக் கொள்வார்? பிரிட்டிஷாரின் நன்மையை உத்தேசித்து பிரிட்டனிலுள்ள மத்திய பாங்காகிய "பாங்க் ஆப் இங்கிலாந்து" என்ன சொல்லுகிறதோ அந்த யோசனைப்படிதான் அவர் உத்தரவு போடுவார். ஆகவே இந்தியாவின் மத்திய பாங்கை இந்தியாவிலுள்ள அரசியல் வாதிகள் என்ற "துஷ்டப் பிசாசு" களிடமிருந்து காப்பாற்றுவதாகக்கூறி, பிரிட்டிஷ் பாங்கர்களின் அடிமையாக ஆக்குவதே இந்த மசோதாவின் நோக்கம். பிரிட்டி



ஷார் உண்மையிலேயே நேர்மையுடன் நடக்க விரும்பினால், பாங்கின் சில டைரெக்டர்களையும் கவர்னரையும் நியமிக்கும் உரிமையை வைசிராய் மந்திரி சபையிலுள்ள பொக்கிஷ மந்திரியின் சிபார்சை அனுசரித்து உபயோகிக்கும்படி விதி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாததுதான் இந்த மசோதாவிலுள்ள முக்கியமான குறைகளில் ஒன்று.

இந்திய பாங்குகளையும் செலாவணியையும் இவ்வாறு பிரிட்டனின் அடிமையாக ஆக்குவதற்கு சட்டசபை இணங்காவிடில் வெள்ளையறிக்கைத் திட்டம் அமுலில் வராது; அதாவது இந்தியாவின் நாணயத்தை பிரிட்டனுக்கு அடமானம் செய்யாவிடில் (சாராயத்தை ஏற்றுக்கொள்ளாவிடில்) வெள்ளையறிக்கையை புதைத்து விட (குழந்தையைக் கொல்ல) மிதவாதிகள் தயாராக வேண்டுமாம். இதுதான் ராஜீயவாழ்வை இழக்க விரும்பாத மிதவாதிகளுக்கு ஏற்பட்டுள்ள தர்ம சங்கடம். வெள்ளையறிக்கையில் இந்த நிபந்தனை ஏற்படுத்தியதின் ரகசியம் இதுதான். அவசரச் சட்டங்களை நிரந்தரச் சட்டமாக்க இணங்கிய இந்தச் சட்ட சபை இம் மசோதாவை நிராகரித்து விடாது என்ற தைரியமும் சர்க்காருக்கு இருக்கிறது. அதனால் தான் புதிய சட்டசபைக்குத் தேர்தல் நடக்கு முன் இவ்விஷயத்தை முடித்துவிட வேண்டுமென்று சர்க்கார் அவசரப்படுகிறார்கள்.




நாணய சுதந்திரத்தை இழந்து இந்த வெள்ளையறிக்கைத் திட்டத்துக்கு ஆசைப்படும் மிதவாதிகளைப்பற்றி மேலே கூறிய பாரதி பாடல் பொருத்தமானதா இல்லையா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

பாங்கின் நிர்வாக சம்மந்தமான விசேஷ அதிகாரங்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொக்கிஷ மந்திரியிடம்தான் இருக்க வேண்டுமே யல்லாது, ஷோர் சந்ததியில் வரும் இந்தியா மந்திரிகளின் குமாஸ்தாவான வைசிராயிடம் இருக்கக்கூடாதென்பதையே இதுவரை வற்புறுத்தினோம். இது தவிர வேறு பல மாறுதல்களும் செய்யவேண்டும். அவற்றைச் சுருக்கமாகக் கூறிவிடலாம்.

(1) பாங்கின் நிர்வாகம் பொதுஜன க்ஷேமத்தை கவனித்து நடக்காமல் பங்காளிகளின் லாபத்தையே முக்கியமாக கவனிப்பதாகச் சட்ட சபைக்குத் தோன்றினால், எந்த சமயத்திலும் சர்க்கார் அந்த பாங்கை விலைக்கு வாங்கிவிட இடமிருக்கவேண்டும்.

(2) மூலதனத்தில் ஒரு பாகமாவது சர்க்காருக்கு சொந்தமாக இருக்கவேண்டும். (3) அன்னிய நாட்டில்-அது பிரிட்டனானாலும் சரியே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடானாலும் சரியே-ரெஜிஸ்டரான கம்பெனிகளுக்கு இந்த பாங்கில் பங்குகொள்ள உரிமை இருக்கக் கூடாது. (4) இந்தியாவிலும் ரெஜிஸ்டர் செய்துகொள்ளும் பிற நாட்டுக் கம்பெனிகளுக்கு இத்தனை பங்குகள்தான் என்று வரையறுக்கவேண்டும். (5) பாங்கின் டைரக்டர்கள் எல்லோரும் இந்தியர்களாகவே இருக்கவேண்டும். (6) பாங்கு கவர்னரும் டெப்டி கவனர்களும் இந்தியர்களாகவே இருக்கவேண்டும். (7) இந்தியர்களுக்கும் அல்லது இந்தியர்கள் பங்காளிகளாக இருக்கும் கம்பெனிகளுக்கும் தான் கடன் கொடுக்கலாம். அதாவது ஒவ்வொரு பில், செக், நோட்டு, அல்லது உண்டியலிலும் ஒரு கையெழுத்தாவது இந்தியரின் கையெழுத்தாக இருக்கவேண்டும்.

வேறு பல திருத்தங்களும் செய்யவேண்டியிருக்கும். மொத்தத்தில் இந்த ரிசர்வ் பாங்கு மசோதாவைப்பற்றி அபிப்ராயம் கூறுவது எளிது. ஒரு மலையாளியிடம் ஒருவன் தனது கத்தியைக் காண்பித்து "இது நல்ல கத்திதானா?" என்று கேட்டானாம் "கத்தி நல்ல கத்திதான். அலகும பிடியும்மட்டும் மாற்றவேண்டும்" என்று மலையாளி பதிலளித்தானாம்.



படார்சாமி கடிதங்கள்

(படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் படார்படாரென்று பகிரங்க மாகவே எழுதுவார்.)

சென்னை சர்க்கார்

சென்னை

ஐயன்மீர்,

இக்கடிதத்தை யாருக்கு எழுதுவதென்று எனக்கு தெரியவில்லை. நான் கொடுக்கப்போகும் கௌரவத்தை, தகுதியற்றவர்களுக்கு கொடுத்து, தகுதியுள்ளவர்களை ஏமாற்றத்தில்விட எனக்கு இஷ்டமில்லை. ஆகவே பொதுவாக எல்லாருக்கும் சேரும்படி இக்கடிதம் எழுதுகிறேன். தகுதியுள்ளவர்கள் எடுத்துக் கொள்க. இனி விஷயத்தைச் சொல்லுகிறேன். சென்னையில் ஒருமாத காலமாக ஜவுளிக்கடை மறியல் நடந்து வருகிறது. இவ்விஷயத்தில் போலீசார் தலையிடாமல் ஒதுங்கியிருப்பது பாராட்டத்தக்கது. இதற்கு மூலகாரணம் யார் என்பது எனக்குத் தெரியவில்லை. யாராயிருந்தாலும் சரி, இந்த நற்புத்திக்காக அவரையோ அவர்களையோ நான் பாராட்டுகிறேன். காந்தி—இர்வின் உடன்படிக்கைப்படி மறியல் செய்வது குற்றமல்ல. அந்த உடன்படிக்கைக்கு விரோதமாக வில்லிங்டன் சர்க்கார் மறியல் சட்டம் செய்தபோதிலும், உடன்படிக்கையை ரத்துச் செய்ததாக இதுவரை சர்க்கார் சொல்லவில்லை. தேசத்தில் அமைதி ஏற்பட வேண்டுமானால் காந்தி—இர்வின் உடன்படிக்கை அமுலுக்கு வர வேண்டும் என்ற உண்மையை கண்டுபிடித்த சென்னை சர்க்காரை பாராட்டுகிறேன். சென்னை நகரில் மட்டும் இந்தக் கொள்கையை அமுலுக்கு கொண்டு வந்தால் போதாது. மாகாண மெங்கும், மறியல் செய்வது குற்றமல்ல வென்று சர்க்கார் அறிவிக்க வேண்டும். தீபாவளி வரையிலாவது காந்தி—இர்வின் உடன்படிக்கையை நீங்கள் அமுலில் வைத்திருப்பீராக வென்று எதிர்பார்க்கிறேன்.

—படார்சாமி

ஸ்ரீலஸ்ரீ மகா கணபதியார்
"உலை" விலாஸ், கைலாசம்

மூலப்பொருளே,

பூவுலகைத்தான் சனியன் பிடித்திருக்கிறதென்றால், கைலாசத்திலுள்ள உம்மையுமா பிடிக்கவேண்டும்? அவனின்றி அணுவும் அசையாது; உமது நண்பன் பெருச்சாளியில்லாமல் ஒரு அடிகூட நீர் நகர முடியாது. இப்பேர்ப்பட்ட அருந்துணைவனாய்



விளங்கும் பெருச்சாளியாரை சென்னை கார்ப்பரேஷன் வேட்டையாட புறப்பட்டிருப்பதைக் கேட்டு நான் அளவற்ற துக்கமடைகிறேன். ஒரு அணா காசுக்காக உமது நண்பரை நூற்றுக் கணக்காக ஜனங்கள் கொன்று வருவதைக் கேட்டு ஒருநாள் ஒரு துளி கண்ணீர் வடித்தேன். வேறு என்னால் என்ன செய்ய முடியும்? வீட்டுப் பொருள்களை நாசமாக்குவதற்காக கொல்ல வேண்டுமென்று பெருச்சாளி மீது குற்றஞ் சொல்லுகிறார்கள். பெருச்சாளியாவது சாமன்களை நாசமாக்குகிறது. சாமானகள் நாசமானால் அதிக சாமான்களுக்கு கிராக்கி ஏற்பட்டு உலகத்தில் வர்த்தக மந்தம் தீரலாம். இது பொருளாதார நிபுணர்களின் கொள்கை. ஆனால் பணங்களை அப்படியப்படியே விழுங்கிவிட்டால் தேசத்தில் பணக் கஷ்டம் அதிகமாய் விடும். இதுவும் பொருளாதார சாஸ்திரம். சர்க்கார் இலாகாக்களில் எத்தனையோ பணம விழுங்கும் பெருச்சாளிகள் இருக்கின்றன. அவற்றை தடுக்க கேள்வி முறையில்லையா? இந்த அநீதியை தடுக்க உமது தந்தையார் பரமசிவத்தின் கோர்ட்டில ஒரு இன்சங்ஷன ஆர்டர் வாங்கும்படி யோசனை கூறுகிறேன்.

—பட்டார்சாமி

ஸ்ரீ. ஏ. ரங்கசாமி ஐயங்கார்
சென்னை

அன்புள்ள ஐயா,

நீர் அடிக்கடி காங்கிரசுக்கும், மகாத்மாவுக்கும் புத்திமதி கூற முன்வருகிறீர். ஒரே ஒரு கேள்வி. காங்கிரஸ்காரர் என்ற போர்

வையை போர்த்திக்கொண்டு வருகிறீரா, அல்லது மிதவாதி, தேசியவாதி, நடுநிலைமை கட்சிவாதி போன்ற லேபில்களை போட்டுக்கொண்டு வருகிறீரா? காங்கிரஸ்வாதி என்று நீர் சொன்னால் உமக்கும் காங்கிரசுக்கும் உள்ள சம்பந்தம், நீருக்கும் எண்ணெய்க்குமுள்ள சம்பந்தந்தான். எந்த தேசியப் போரில் நீர் கலந்துகொண்டீர்? தேசியப் போர்களில் புறமுதுகு காட்டி ஓடும் உமக்கு, காங்கிரசுக்கு புத்திமதி சொல்ல வெட்கமாயில்லையா? மற்ற கட்சிகளில் நீர் சேர்ந்துவிட்டதாகச் சொன்னால், நமக்கு உம்மிடம் பேச்சேயில்லை. இந்தியாவில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக சொல்லிக்கொண்டு சீமையிலிருந்து ஓடிவந்தீரே, இங்கே வந்து என்ன செய்துவிட்டீர்?

—பட்டார்சாமி

ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதி
கைலாசம்

தேசியக் கவியே,

நீர் உயிரோடு இருக்கும்போது உம்மை தமிழர் கவனிக்காமல் முட்டாள்தனமாய் இருந்துவிட்டாலும், இப்பொழுதாவது உமது பெருமையை உணர்ந்துகொண்டுவருவதைக்கண்டு நீர் சந்தோஷப்படுவீரென்று நம்புகிறேன். உமது திருநாள் கூட்டம் சென்னை கடற்கரையில் நடந்தபோது, சென்னை வீரர் சத்தியமூர்த்தி, "உம்மை தமிழ்நாட்டிற்கு கொடுத்ததற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று கூறினார். கடவுளே தமிழன் கையில் நன்றிக்கோ கண்டனத்திற்கோ எதிர் பார்க்க வேண்டிய நிலைமையில் இருப்பதாக தமிழன் நினைக்கும்போது, உமமை கவனிக்காமல் போனது ஆச்சரியமா?



தகப்பனுக்கு உபதேசித்து தகப்பன் சாமி என்ற பெயரெடுத்த குமாரக் கடவுள், தமிழ்நாட்டில் வாழ்ந்த தமிழன் தெய்வமல்லவா?

—பட்டார்சாமி

ஸ்ரீ. கிளான்சி
ராஜீய காரியதரிசி,
சிம்லா

ராஜீய நிபுணரே,

குல்ரா சமஸ்தான சம்பந்தமாக ஸ்ரீ தாவூதி சட்ட சபையில் ஒரு கேள்வி கேட்க, சட்ட சபை தலைவர், குல்ரா இந்திய சமஸ்தானந்தானா என்று உம்மைக் கேட்க, நீர் அதைப்பற்றி நிச்சயமாகத் தெரியாதென்று பதில் கூறினீர். நன்று, நன்று. சமஸ்தானங்களின் நிர்வாக இலாகாவிற்கு காரியதரிசியாக இருக்கும் உமக்கு, ஒரு சமஸ்தானம் இருக்கிறதா இல்லையா என்பது கூட தெரியாமல் போனது வெட்கக்கேடு. பூமி அசையாப் பொருள் தானே, இந்தியாவிலுள்ள சமஸ்தானங்கள் எங்கே பறந்து விட முடியும என்ற தைரியத்தால் சமஸ்தான பெயர்களை நீர் மறந்து போயிருக்கலாம். ஸ்ரீ. தாவூதியின் ஒரு சிறு கேள்வியால், ராஜீய இலாகாவின் நிர்வாகத் திறமை, பலூனைப்போல படீரென்று வெடித்து பகிரங்கமாய் விட்டது. தெரியாத விஷயங்களை மழுப்ப "நோட்டீஸ்" என்ற பதம் இருக்கிறதே, அதை உபயோகப்படுத்தி தப்பித்துக் கொள்ளக் கூடாதா? பாவம். —படார்சாமி

ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி
காங்கிரஸ் உபதலைவர்,
சென்னை

உபதலைவரே,

தலைவர் ராஜகோபாலாச்சாரி ஜெயிலில் இருப்பதால், நீர் காங்கிரஸ் மாளிகையை ஒடப்புக் கொண்டதாய் கூறுகிறீர். ஸ்ரீ. ஆச்சாரியார் வெளியிலிருந்தால் ஒப்புக் கொண்டிருப்பாரா என்பது முக்கியமான விஷயம. சர்க்காருக்கும் காங்கிரசுக்கும் சமரசம் ஏற்படாத வரையில், காங்கிரஸ் மாளிகையில் தேசியக் கொடியை உயர்த்த முடியுமா, அல்லது காங்கிரஸ் திட்டத்தை பின் பற்றி நடக்கும் தொண்டர்களை மாளிகையில் தங்கும்படி செய்ய முடியுமா என்று "இந்தியன் எக்ஸ்பிரஸ்" கேட்பது சரியான கேள்வி, இந்த இரண்டையும் காங்கிரஸ் மாளிகையில் செய்ய முடியாத வரையில், மாளிகையை ஒப்புக் கொண்டது காங்கிரஸ் கௌரவத்திற்கு பங்கம் விளைவிப்பதாகும். இவ்விஷயத்தில் உமது பதிலை எதிர்பார்க்கிறேன். மற்றொரு விஷயம். காங்கிரஸ் மாளிகையில் சுதேசி கண் காட்சி நடத்தப் போவதாகச் சொல்லுகிறீர். 1931-ம் வருஷக் கடைசியில் நடத்திய கண் காட்சியில் கிடைத்த லர்பம் எவ்வளவு? அப்பணம் எங்கே? அதன் சம்மந்தமான கணக்குகளை 2 வருஷங்

களாக வெளிப் படுத்தாத காரணம் என்ன? அந்தக் கணக்கை வெளியிட்ட பின்பே அடுத்த கண் காட்சியைப் பற்றி யோசிப்பது யோக்கியமாகும்.

—படார்சாமி

சர். ஜார்ஜ் ஷஸ்டர்
பொக்கிஷ மந்திரி
சிம்லா

மந்திரியே,

"மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்" என்பது பழமொழி. இந்திய சர்க்கார் ராஜீய இலாகாவிலுள்ள ரகசிய எழுத்து உள் இலாகாவில், இந்தியரை ஏன நியமிக்கவில்லை என்று சட்ட சபையில் கேள்வி வந்தபோது, பிரிட்டிஷ் பிரஜைகளை மட்டுந்தான் அதில் நியமிக்க வேண்டுமென்று சட்ட மிருப்பதாகக் கூறினீர். இந்தியர் பிரிட்டிஷ் பிரஜைகளாக இருந்ததில்லையா, இருக்கவில்லையா, அல்லது இருக்கமாட்டார்களா? மூன்றில் உமது "வரும் பொருள் உரைத்தல்" எது?

—படார்சாமி

ஸ்ரீ. எச். பி. மோடி
மில் சங்கத் தலைவர்
பம்பாய்

முதலாளி அவதாரமே,

உமது அவதாரத்தின் உண்மை சொரூபம் கதர் பாதுகாப்பு மசோதா சட்ட சபையில் வந்தபோது வெட்ட வெளியாயிற்று.



பலே மோடி! எத்தனை நாளைக்குத்தான் பசுத் தோலை ஃபார்த்தி ஒரு புலி இருக்க முடியும்? மில் துணிகள் செலவாகிற வரையில் தேச பக்தி! மோசடி கதரை மில்களின் உதவியால் உற்பத்தி செய்யக்கூடாதென்றால் உடனே சீற்றம்! முதலாளி எப்பொழுதும் முதலாளி தான். "ஊசியின் காதுவழியாக ஒரு ஒட்டகையை கொண்டு வருவது சாத்தியமா யிருந்தாலும், முதலாளி மோட்சம் பெறுவது சாத்தியமே யில்லை" யென்று இயேசு கிறிஸ்து மகான் தெரியாமலா சொன்னார்?

—படார்சாமி.

ஆகாயக் குண்டு

யுத்த காலத்தில் ஜெர்மன் ஆகாயக் கப்பல்கள், நேச தேசங்களின் மீது பறந்து குண்டுகள் போட்டபோது, பெண்களும் குழந்தைகளும் அலறி விழுந்து ஓடினர். படத்தைப் பார்க்கவும். இம்மாதிரி, தற்காப்பு செய்து கொள்ள முடியாத ஜனங்கள் மீது ஆகாயக் குண்டுகள் போடுவது மிருகத்தனம் என்று பிரிட்டிஷ், பிரஞ்சுப் பத்திரிகைகள் ஆர்ப்பாட்டம் செய்தன. ஆகாயக் கப்பலிலிருந்து குண்டுகள் போடுவது வெறும் மிருகத்தனம் என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். இதை அடியோடு ஒழிக்கவேண்டுமென்று ஆயுதப் பரிஹாரண மகாநாட்டில் வந்திருக்கும் தீர்மானத்தை நாம் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறோம். ஆனால்—? ஜெர்மன் ஆகாயக் கப்பல் குண்டுகளை எந்த பிரிட்டன் கண்டித்ததோ, அதே பிரிட்டன் அந்த தீர்மானத்தை எதிர்க்கிறது. இது பெரிய ஆச்சரியமல்லவா? யுத்த காலத்தில் ஆகாயக்குண்டுகள் போடக்கூடாதென்பதை பிரிட்டன் ஒப்புக்கொள்ளுகிறதாம். ஆனல் எல்லைப்புறத்தில் சமாதான காலத்திலோ யுத்தகாலத்திலோ எப்பொழுது வேண்டுமானாலும் ஆகா



யக் குண்டுகள் போட தனக்கு உரிமை வேண்டுமென்று கேட்கிறது. எல்லேப்புறத்தில் இந்தப்படி சமீபத்தில் குண்டுகளேயும் போட்டது. இது நியாயமா?

எல்லேப்புற ஜனங்களே முன்னதாக எச்சரிக்கை செய்துவிட்டு அப்புறமே குண்டுகள் போடுவதாகவும், குண்டுகளால் களிமண் வீடுகளுக்கு நாசமே யொழிய வேறு எதுவுமில்லே யென்றும் சர்க்கார் சமாதானம் கூறுகிருர்கள். எச்சரிக்கை செய்துவிட்டு ஜெர்மனி குண்டு போட்டிருந்தால், அதை பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டிருப்பார்களா என்று டப்ளியூ. எஸ். ரவுண்ட்ரீ என்ற பிரிட்டிஷ்காரர் கேட்கிருர். இந்திய சட்டசபையில் எல்லேப்புறத்தில் குண்டு போட்டதை கண்டிக்க ஒருஅவரசத் தீர்மானம் வந்தது. பிரிட்டிஷ் பிரஜைகள் அல்லாதவர்களே பிடித்துக் கொடுக்கும்படி கேட்டு அதற்காக குண்டு போட சர்க்காருக்கு என்ன உரிமை இருக்கிறது என்று ஸ்ரீ. பூரி கேட்டார். எல்லேப்புற நாட்டார் வெள்ளேயர்களா யிருந்தால் இம்மாதிரி குண்டு போடுவார்களா என்று ஸ்ரீ. மூர்த்துஜா சாகிப் கேட்டார். எல்லேப்புற நாட்டார்மீது யுத்தம் தொடங்கிருப்பதாக அறிவிக்காமல் ஆகாயக் குண்டு போடுவது யுத்த தர்மமா என்று ஸ்ரீ. உப்பி சாகிப் கேட்டார். ஜாலியன்வாலாபாக்கில் ஜெனரல் டயர் செய்த அட்டூழியத்திற்கும்,இதற்கும் என்ன வித்தியாசம் என்று ஷபி தாவூதி கேட்டார். ஒரு கேள்விக்கும் சரியான பதிலில்லே. சர்க்கார் எல்லாருக்கும் ஒரே "பேபே" பாட்டு பாடிஞர்கள். நடந்தது நடந்துபோனலும், இனியாவது குண்டு போடாமலிருக்க சர்க்கார் வாக்குறுதி கொடுக்கவில்லே. ஆயுதப்பரிகரண மகாநாட்டில் யார்என்னபேசினுலும், தாங்கள் செய்வது சரியென்றும், இனி செய்வதையும் விடப்போவதில்லே யென்றும் கூறிவிட்டார்கள்.

இந்த மலரில் எதிர்பாராமல் சில புதிய விஷயங்கள் பிரசுரிக்க நேர்ந்துவிட்ட படியால் "செய்திப் படங்கள்" பிரசுரிக்க முடியவில்லே. அடுத்த மலரில் "செய்திப் படங்களும்" திருக்குறள் படங்களும் வெளிவரும்.



உங்களுக்குத் தெரியுமா ?

ஒரு ரூபாயில் எவ்வளவு வெள்ளி ?

ஒரு ரூபாய் 180 குண்டுமணி நிறையுள்ளது. இதில் 165 குண்டுமணி தான் உண்மையான வெள்ளி. 15 குண்டுமணி கலப்படம். ஒரு ரூபாய் நிறையுள்ள கலப்படமில்லாத சுத்தமான வெள்ளியின் விலை, தீர்வையுள்பட 9 அணா. சாக்கார் நாணயமாகையால் 9 அணா வெள்ளி ஒரு ரூபாயாக நடமாடுகிறது.

பூதக் கண்ணாடி என்றால் என்ன ?

தூரத்திலுள்ளவைகளை பார்க்கிற கண்ணாடிக்கு பெயர் தூர திருஷ்டி கண்ணாடி (டெல்லஸ்கோப்). முன்னால் இருந்தும் தெளிவாய் பார்க்க முடியாதவைகளை மிகப் பெரிதாக விளக்கிக் காட்டும் கண்ணாடியே பூதக் கண்ணாடி (மைக்கிராஸ்கோப்). மிகச் சிறிய ஒரு அணுவின் மீது ஒரு சொட்டு ஜலத்தை வையுங்கள். சொட்டு ஜலம் உருண்டையாய் நிறபதால் உள்ளே யிருக்கும் அணு மிகப்பெரிதாய் காணப்படும். இதுவே பூதக் கண்ணாடியின் அமைப்பு. இந்த பூதக் கண்ணாடியை பல ஆயிர வருஷங்களுக்கு முன்பே கண்டு பிடித்திருந்தாலும், பூர்ணமாய் அமையவில்லை. 17 வது நூற்றாண்டில் லூவன் ஃஹாக் என்ற டச்சுக்காரர் தான் இந்தத் துறையில் பெரிய அபிவிருத்தி செய்தார். கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை இந்த பூதக் கண்ணாடியால் தான் பார்க்கலாம்.

கடற்படைக்கு இந்தியாவின் பங்கு ?


பிரிட்டிஷ் கடற்படை இருக்கிறதே, அது ஏகாதிபத்தியத்தையெல்லாம் காப்பதாக சொல்லுகிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குள் அடங்கியிருக்கும் நாடுகளுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று கூறுகிறார்கள். ஆனால் ஆதாயமில்லாமலா செட்டி

யார் ஆற்ருேடு போகிருர்? கடற்படை செலவுக்கு எல்லா நாடுகளிடமிருந்தும் பணம் வாங்கிக் கொள்ளுகிருர்கள். இந்தியா, கானடா, ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, தென்ஆப்பிரிக்கா, நியூபவுண்ட்லந்து இவ்வளவு நாடுகளும் சேர்ந்து பிரிட்டிஷ் கடற்படைக்கு வருஷம் 415, 800 பவுன் கொடுக்கின்றன. இந்தியாவினுல் தான் பிரிட்டனுக்கு அதிக வரும்படி. அப்படியிருந்தும் இந்த கடற்படை வரிக்கு இந்தியா தான் அதிகமாய் கொடுக்கிறது. இந்தியாவைப்போல 2 மடங்கு விஸ்தீரணமுள்ள கானடா வருஷம் 10800 பவுன் தான் கொடுக்கிறது. இந்தியாவைப் போல 1½ மடங்குக்கு மேல் விஸ்தீரணமுள்ள ஆஸ்திரேலியா வருஷம் 49 ஆயிரம் பவுன் தான் கொடுக்கிறது. ஆனல் இந்தியாவோ? வருஷம் 167400 பவுன் கொடுக்கிறது. மற்ற குடியேற்ற நாடுகள் எல்லாம் சேர்ந்து 248400 பவுன் கொடுக்க, இந்தியா மட்டும் 167400 பவுன் கொடுக்க வேண்டுமோம்! இது என்ன நீதியோ தெரியவில்லை!

சிறந்த பொக்கிஷம் எது ?

ரோமாபுரியில் ஒரு காலத்தில் திடீரென்று பெரிய இரைச்சல் உண்டாயிற்று. கொஞ்சநேரத்தில் பூமி வெடித்து பெரிய பள்ளம் தோன்றியது. கோவில் பூசாரியிடம் சென்று, கடவுள் இம்மாதிரி கோபங் கொண்டதற்கு பரிகாரம் என்ன வென்று கேட்டார்கள். பூசாரிக்கு ஆவேசம் வந்து, "ரோமாபுரியிலுள்ள சிறந்த பொக்கிஷத்தை பள்ளத்தில் போட்டால், தேவர்கள் கோபம் நீங்கி வெடிப்பு சேர்ந்துவிடும்" என்று சொன்னுன். ஜனங்கள் நவரத்தினங்களையும் கொட்டிப் பார்த்தார்கள். வெடிப்பு மூடவில்லை. எல்லாரும் கலங்கினுர்கள். மார்க்கஸ் கர்ட்டியஸ் ரோமாபுரியில் சிறந்த வீரன். அவன் யோசனை செய்தான். அவனுக்கு ஒரு வழி தோன்றிற்று. "வெறும் தங்கமும், ரத்தினங்களும் பொக்கிஷமல்ல. தேசத்திற்காக எவன் உயிரை விடத் தயாராயிருக்கிருனே அவனே தேசத்தின் சிறந்த பொக்கிஷம்" என்று தீர்மானித்தான். என்ன செய்தான்? இதை பிறரிடம் உபதேசம் செய்து பூமி வெடிப்பில் போய் விழும்படி கேட்கவில்லை. யுத்த ஆடைகள் அணிந்து கம்பீரமாய் தனது குதிரை மீது ஏறினுன். ஒருவரிடமும் சொல்லவோ கேட்கவோ இல்லை. பூமி வெடிப்பின் பக்கத்தில் வந்தவுடன் ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஆச்சரியத்தோடு பார்க்க தன் குதிரையை தட்டி விட்டான். அடுத்த வினடியில் வீரன் கர்ட்டியசும் அவன் குதிரையும் பூமி வெடிப்பு பாதாளத்தில் குதித்தார்கள். அதற்கடுத்த வினடியில் அந்தப் பிளவு சேர்ந்து விட்டது. அந்த இடத்தில் தோன்றிய குளத்திற்கு கர்ட்டியஸ் குளம் என்று பெயரிட்டார்கள்.

மந்திரவாதியின் தந்திரம்



மேடையில் ஒரு பெரிய பெட்டி யிருக்கிறது. எல்லாரும் பார்க்கும்படி அதற்குள் ஒரு பெண் இறங்கி ஒரு பக்கம் தலையையும், மற்றொரு பக்கம் காலையும் நீட்டி படுக்கிறாள். பின்னால் மந்திரவாதி பெட்டியின மத்தியில் ஒரு ரம்பத்தால் அறுக்கச் சொல்லுகிறான். பெட்டியை இரண்டாக அறுத்து விடுகிறார்கள். பெண்ணையும் சேர்த்து அறுத்ததாகத் தெரிகிறது. ஆனால் பெண் பிழைத்துக் கொள்ளுகிறாள். இது எப்படி நடக்கிறது?

பெட்டிக்குள் ஏற்கனவே ஒரு பெண் இருக்கிறாள். ஜனங்கள் அறியும்படி ஒரு பெண் இறங்குகிறாள். இரண்டு பேரில் ஒருத்தி காலைமட்டும் வெளியே நீட்டி, பாதிப் பெட்டிக்குள் உடலை வளைத்துக் கொள்ளுகிறாள். மற்றொரு பெண் தலையைமட்டும் வெளியே நீட்டுகிறாள். ஆகவே அறுக்கிற இடத்தில் சரீரத்தின் எந்தப் பாகமும இல்லை. இதுவே இந்த மந்திரத்தின் தந்திரம்.

அடுத்த "காந்தி" மலரில் மற்றொரு தந்திரம் வெளியிடப்படும்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

(வ. ரா.)

1916-ம் வருஷம் ஐரோப்பாவின் போர்க்களங்களிலே, மண்டைகள் அற்ற முண்டங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. ஜர்மன் "ஹாவிட்ஸர்" பீரங்கிகள், பிரஞ்சு அரண்களைப் பொடியாக்கிக் கொண்டிருக்கின்றன. நேசக் கட்சியார் (பெல்ஜிய, பிரஞ்சு, ஆங்கிலேயர்கள்) மனமொடிந்து நிற்கிற சமயம். "ஒரு குதிரை, ஒரு குதிரை, ஒரு குதிரைக்காக ராஜ்யம் (கொடுப்பேன்)" என்று மூன்றுவது ரிச்சார்டு அரசன் பரதபித்தது போல, ஒரு ஆள், சேனைக்கு ஒரு ஆள் என்று நேசக்கட்சியார் தவித்துக் கொண்டிருக்கிற ஆண்டு. காஞ்சிபுரத்திலே, தமிழ் மாகாண மகாநாடு கூடிற்று.

மகாநாட்டுக்குத் தலைவி, கவியரசி ஸ்ரீமதி சரோஜினி நாயுடு. அவருக்கு உப பலம் பெஸண்டு அம்மையார். சேனைக்கு ஆள் சேர்த்துக் கொடுப்பதா இல்லையா என்பது யோசனை. ஆள் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்பது பெஸண்டு அம்மையார் கொண்டு வந்த தீர்மானம். தீர்மானம் நிறைவேறுமா அல்லது தோற்குமா என்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடிய நிலையில், மகாநாட்டின் உள்ளம் இருக்கவில்லை. ஒரே குழப்பம்! பெஸண்டு அம்மையாரும் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களும் தங்கள் பிரசங்கத்திறமை முழுமையும் காட்டி விட்டார்கள். தீர்மானத்தை எதிர்த்தார் ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி. அவருக்குப் பின்னல், 'ஆபாச'த் தமிழில், ஆனல் ஆற்றல் நிறைந்த அடக்கத்துடன்—சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் சத்தியமூர்த்திக்குச் சாதகமாக, தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். பேச்சு "பட்டை வாங்காத வைரம்" என்று ஒருவர் சொன்னது என் காதில் பட்டது. உண்மை. கன்னடப் பிராந்தியத்தை ஒட்டிய ஹெரஸ்ஸூர் தமிழ். ஆச்சாரியாரின் தற்போதைய சுத்தத் தமிழ் ஆளை வெருட்டுகிறது! இது வேறு சங்கதி.

தீர்மானத்துக்கு சாதகமாக 124 வோட்டுகள்; பாதகமாக 124 வோட்டுகள். சரோஜினிதேவி, மகாநாட்டுத் தலைவி என்ற முறையில், தமது இரண்டாவது வோட்டை பெஸண்டு அம்மையாருக்குச் சாதகமாகக் கொடுத்தார். தீர்மானம் காகிதத்தில் நிறைவேறியது, ஆனல்—? புத்தன் பிறந்தவுடனே, இந்திரன் கொடி அற்று விழுந்தது என்பது பரம்பரைக் கூற்று. ஆச்சாரியார் தோன்றியதும், பெஸண்டு அம்மையாரின் சென்னை மாகாணச் செல்வாக்கு சீர்குலைந்து போய்விட்டது. அதே சமயத்தில் சர்க்காருக்கும்

எச்சரிக்கை நோட்டீஸ் கொடுக்கப்பட்டதாகவும் தமிழர்கள் மனதில் பட்டது.

ஆச்சாரியாரின் தேசபக்தி பிறந்து வளர்ந்த கதை மிகவும் விநோதமானதாகும். 1897-ம் ஆண்டில் ஆச்சாரியார் சென்னை சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். அந்த ஆண்டில், லோகமான்ய திலகர் காராக்கிரகப் பிரவேசம் செய்ய நேர்ந்தது. திலகரைப் பிடித்து சர்க்கார் சிறையில் தள்ளினது ரொம்ப நியாய மானதாகும் என்பது ஆச்சாரியாரின் அப்போதைய மனோபாவ மாகும். சட்டத்தை மீறி, பொதுஜன அமைதியைக் குலைப்பவன் தேசத்துரோகியே யொழிய தேச பக்தனல்ல வென்பது ஆச்சாரி யாரின் அப்போதைய முடிவு. அதிகாரவர்க்கத்தினரைப் போல, எதையும் நோக்கிவந்த ஆச்சாரியார் அரிய தேசபக்தராய் மலர்ந்தது, சர்க்காரின் கீர்த்திக் கணக்கில் அழுத்தமாக எழுதப்பட வேண்டிய சங்கதியாகும்.

பின்னர் பெஸண்டு அம்மையார், அருண்டேல், வாடியா, மூவர்களும் அரசாங்கத்தாரின் தளைக்குள் சிறிது காலம் தங்கி யிருந்து, விடுதலை பெற்றதும், சேலம் மார்க்கமாய்ச் சென்னைக்கு சென்றார்கள். ஆச்சாரியார் அவர்களைப் பார்க்க, சேலம் ஸ்டேஷனுக்குச் சென்றார். பிளாட்பாரத்தில் பிரவேசிக்க அனுமதி கிடையாது என்றார் போலீசாரின் கையில் அகப்பட்டுத் தவித்த ஸ்டேஷன் மாஸ்டர். ஒரே உதை! இரும்புக்கிராதிகள் படபட வென்று முறிந்தன. ஆச்சாரியாரும் ஒரு பெரும் கூட்டமும் பிளாட்பாரத்துக்குப் போய் விட்டார்கள். போனதும், ஆச்சாரி யார், "வாடியா அவர்களே! தங்களுடைய விடுதலையைப் பற்றி ரொம்ப சந்தோஷம்" என்று சொல்லி, அவரை மட்டும் கை குலுக்கிவிட்டுத் திரும்பி வந்து விட்டார். வாடியா மட்டும் இந்தி யர். மற்றைய இருவர்களும் வெள்ளைத் தோலை உடம்பில் போர்த்துக் கொண்டிருந்த குற்றம் ஆச்சாரியாரின் கண்களில் மிகவும் கொடுமையாகப்பட்டது. அப்பொழுது அப்படி! இப்பொழுது, உலக சகோதரத்வம் பேசுகிறார் ஆச்சாரியார்.

காலத்தோடு, ஆச்சாரியார் வளர்ந்தாரே யொழிய, காலத்தை காந்தி எதிர்த்துப் போராடி முறியடித்ததைப் போல, ஆச்சாரி யாரால் அவ்வளவாக முடியாது. அவ்வளவு தன்னம்பிக்கை, ஆச்சாரியாருக்கு இயற்கையாகக் கிடையாது. அதற்கு ஒரு தூண்டு கோல் வேண்டும். ஒரு சமயம் ஆச்சாரியாருக்கு கடுஞ் சுரம். இது அரசியல் துறையில், அவர் பிரவேசிக்கு முன் நேர்ந்தது. காய்ச்சல் முற்றி ஜன்னி; சொந்த நினைவு வருவதும் மறைவதுமாயிருக்

கிற சந்தர்ப்பம். கிழச்சிங்கமான விஜயராகவாச்சாரியார் ஆச்சாரியாரின் ஜீதக நிலையைப் பற்றி வருத்தத்துடன் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க வந்தார். ஆச்சாரியார் படுத்த படுக்கையாகக் கிடந்தார். "ராஜகோபாலாச்சாரி" என்றார் கிழவர். ஆச்சாரியார் கண் விழித்துப்பார்த்தார். "இது என்ன முட்டாள்தனம்! ஜன்னி வந்து சாவதாகு, யாருக்கும் புத்தியும் தைரியமும் வேண்டியதில்லை. பிழைத்திருக்கத்தான் தைரியமும் திடசங்கல்பமும் வேண்டும். சந்தர்ப்பத்தை கைவிட்டு விடாதேயும்; சங்கற்பம் செய்து கொள்ளும்; உடம்பு நிச்சயமாய் சரிப்பட்டுப் போய்விடும்" என்றார் கிழவர். சரியான மருந்து! சரியான நோயாளி! சரியான வைத்தியர். ஆச்சரியார் ஜன்னியை உதறித் தள்ளி விட்டார். கொஞ்சம் தூண்டுதல் போதும். தன் சக்தியை அறியாத ஹனுமானுக்கு ஜாம்பவான் உபதேசம் செய்யவில்லையா?

ஆச்சாரியார் உள்ளன்பு ஊற்று ஒட்டமில்லாத ஒரு இயந்திரம் என்று சிலர் பொய்ச் சூத்திரம் புனைந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. "தொட்டால் சுருங்கி" என்ற பச்சிலையைப் பார்த்திருக்கிறீர்களா? அது கொடி கொடியாக ஓடியிருக்கும். அதைத் தொட்டால், இரண்டு பக்கங்களிலுமிருக்கிற இலைகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளும்; அவ்வளவு நயமான உயிர், "தொட்டால் சுருங்கி". சங்கப் பலகைக்கு நீளுகிற, சுருங்குகிற சக்தி உண்டு. ஆனால், பெரும்பான்மைப் புலவர்களின் "அண்டிமாண்டுக்கு" சங்கப்பலகை ஜவாப்புச் சொல்லுவதில்லை. குற்றம் யாருடையது? ஆச்சாரியார் பால்யத்திலிருந்தே "தொட்டால் சுருங்கி". பழக்கமும் சுபாவமாய் மாறிவிட்டது போலும்! ஆனால் அவருடைய இயற்கை அதுவல்ல.

விசேஷ நாட்களில், ஆடம்பரமின்றி விழாக் கொண்டாடுவது சிலருக்குப் பிடித்தஏற்பாடு. சாமான்யர்களைப்போல விழாவில், தாங்களும் கலந்து கொள்ளுவதா? முடியாத காரியம். ஆனால் கணப்புச் சட்டியைப்போல, கணகண வென்று தீ கனிந்து கொண்டிருக்கும் உள்ளமுடையவர் ஆச்சாரியார். "ருசு?" என்பீர்கள். ருசு இல்லாமல் இந்தக்காலத்தில், எதுவும் ஏற்கபடாதல்லவா? வரதராஜுலு நாயுடு அவர்களின் ராஜநிந்தனை கேஸ் மதுரையில் நடந்து கொண்டிருந்தது. ஆச்சாரியார் நாயுடுகாருக்கு வக்கீல். இரவில் நாயுடுகாரு, கவலையற்று, உறங்கிவிடுவார். பாரிஸ்டர் ஜோஸப்பும் ஆச்சாரியாரும் நடுநிசி வரையிலும் அதற்குப் பின்னும், வழக்கைப் பற்றியே கவலையாயிருப்பார்கள். முடிவில், வழக்கை விசாரித்த நீதிபதி நற்குணம் அவர்கள், நாயுடு அவர்களுக்கு பதினைந்து மாதம் காவல் தண்டனை கொடுத்தார். தினந்தோறும் வழக்கமாக



எங்களுடன் கோர்ட்டுக்கு வந்து கொண்டிருந்த நாயுடுகாரு அவர்கள் எங்களை விட்டுப்பிரிய நேர்ந்தது. வீட்டுக்குத் திரும்பினோம். "எத்தனை பேர் போனோம்; எத்தனை பேர் திரும்பி வருகிறோம்" என்று, இரண்டு மூன்று பெரிய நீர்த்துளிகளை கண்களினின்றும் ஆச்சாரியார் உகுத்தார். திடீரென்று இதை பலவீனம் போல நினைத்து, "நாயுடு காரு பாக்கியசாலி" என்று பேச்சை மாற்றினார் ஆச்சாரியார். "சரித்தான், நடவுங்கள்" என்றார் ஜோஸப்.

தியாக மில்லாமல் தேசத்தொண்டு செய்ய முடியாது என்பதை தமது வாழ்வின் மூலமாய், ஆச்சாரியார் விளக்கிக் காண்பித்து விட்டார். ஆச்சாரியாரின் நாட்களுக்கு முன், தேசத்துக்காக தியாகம் செய்வது என்பது இல்லையெனவே சொல்லலாம. ரௌலட் சட்டம் இந்தியா சட்ட சபையில் நிறைவேற்று. அதைக் கண்டித்து, நாடெங்கும் கிளர்ச்சி. இந்தக் கிளர்ச்சியில் ஆச்சாரியார் தலை கால் தெரியாமல் புகுந்து கொண்டார். அப்பொழுது அவர் சென்னைக்கு குடியும் குடித்தனமுமாக வந்து விட்டார். ஆனால் கோர்ட்டு சம்பந்தமாகக் கட்சிக்காரர்கள் ஆச்சாரியாரை விட்ட பாடில்லை. வக்கீல் தொழில் இனி வேண்டாம் என்று ஆச்சாரியார் யோசித்துக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் காலையில் ஒரு கட்சிக்காரர் மூன்று நாள் ஆஜராவதற்கு மூவாயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார். "முடியாது; ஆஜராக முடியாது. இனி நான் தொழில் நடத்தப் போவதில்லை" என்று உறுதியாகச் சொல்லி விட்டார் ஆச்சாரியார். தேசத்துக்காக, பணத்தியாகத்தை நான் முதன் முதலாகப் பார்த்தது அதுதான்.

1919-ம் வருஷம் ரௌலட் சட்ட சம்பந்தமாக, சத்தியாக்கிரக இயக்கத்தின் பொருட்டு, காந்தி சென்னை மாகாணத்துக்கு விஜயம் செய்தார். ஆச்சாரியாரின் இருப்பிடத்தில் மகாத்மாவுக்கு ஜாகை. சத்தியாக்கிரகத்துக்கு ரகஸியம் கிடையாது என்றார் காந்தி. எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். முடிவில், கூட்டம் கலையுமுன், "எல்லாவற்றையும் பிரசுரம் செய்ய வேண்டாம். சத்தியாகிரகத்துக்கும் காலத்துக் கேற்ற உபாய முண்டு" என்று காந்தி பத்திரிகை நிருபர்களிடம் சொன்னார். "சத்தியாக்கிரகத்திலும் ராஜ தந்திரம் இருக்கிறதாமே" என்று ஆச்சாரியார் புன்னகை பூத்தார். ஆச்சாரியாரின் ராஜ தந்திர மனப்போக்குக்கு,

காந்தியின் திருக்குறள் சூத்திரம், வாடிய பயிருக்கு மழை போல விருந்த தென்றே சொல்ல வேண்டும்.

காந்தி சகாப்தக் காலத்தில், நான்கு பேர்கள் தங்களது சிறந்த ராஜதந்திரத்தைக் காண்பித்தார்கள். (1) பண்டித மோதிலால் நேரு (2) விட்டல்பாய் படேல் (3) ராஜகோபாலாச்சாரியார் (4) பனகால் ராஜா. பண்டித நேரு, இந்தியா சட்ட சபையை அங்குமிங்கும் அப்படியுமிப்படியும் ஆட்டி வைத்து விட்டார். சட்ட சபைத் தலைவர் என்ற முறையில் விட்டல்பாய், அதிகாரவர்க்கத்தினருக்கு, அரை நிமிஷம் கூட ஓய்வு கொடுக்கவில்லை. சுவாசகாச நோயால் இரவில் தூக்கமின்றி வருந்திய ஆச்சாரியார், சுயராஜ்யக் கட்சியாரைப் படுத்தினபாடு சொல்ல முடியாது. சென்னை சட்ட சபையை பனகால் ராஜா ஆண்டு வந்தது போல, இனி யாராலும் ஆள முடியாது என்றே தோன்றுகிறது. இந்த நான்கு பேர்களும் ஒருவருக் கொருவர் சளைத்தவரல்ல.

அயர்லாந்து தேசத்திலே, சார்லஸ் ஸ்டீவர்ட் பார்னல் என்ற தலைவர் ஒருவர் இருந்தார். ஆங்கில பார்லிமெண்டு மகா சபையில் அவர் ஒரு மெம்பர். அவர், மகா சாதுர்ய புத்தியை உடையவர். பார்லிமெண்டு மகா சபையில் எந்த வேலையும் நடைபெறாமல், முட்டுக்கட்டை போடும் உபாயத்தில் அவர் கைதேர்ந்தவர்; இணையற்றவர். கொடிய மௌனத்தை கைக்கொண்டவர். ஆங்கிலேயர்களுக்கு பயத்தையும் அயர்லாந்துக்கு தைரியத்தையும் பலவகைகளிலும் உண்டாக்கியவர் பார்னல். ஆச்சாரியாரை பார்னலுக்கு ஒருவாறு ஒப்பிடலாம். தெளிந்த அறிவிலும் தர்க்க வாதத்திலும் முட்டுக்கட்டை உபாயத்திலும், நமது தமிழ் நாட்டில்—இந்தியாவிலே கூட—யாரையும், ஆச்சாரியாருக்கு இணையாகச் சொல்ல முடியாது.

ஆச்சாரியாரின் வேதாரண்ய உப்பு ஸத்தியாக்கிரக யாத்திரை புராணம் போல ஆகிவிட்டது. பொய்யாய், பழையதாய்ப் போய் விட்டது என்று அர்த்தமில்லை. தஞ்சை ஜில்லா கலெக்டர் தார்ன் அவர்களின் அடாத, அர்த்தமில்லாத உத்தரவுக்கு ஆச்சாரியாரின் யாத்திரை தக்க பதிலாகும். கலெக்டரின் உத்தரவினால் ஏற்பட்ட கேவலமான, வெறுக்கத்தக்க அச்சத்தை, ஆச்சாரியார் ஜனங்களிடமிருந்து ஓட்டியதை ஜாலவித்தை என்று தான் சொல்லவேண்டும். என்ன அமரிக்கை! என்ன தைரியம்! என்ன சாதுர்யம்! எத்தகைய அழகான கிராமியப் பேச்சு! என்ன நகைச்சுவை! எத்தகைய உருக்கம்! என்ன ரம்மியமான உபமானங்கள், உபகதைகள்! இவை யாவையும், ஆச்சாரியாரின் உப்பு சத்தியாக்கிரக யாத்திரைப்

பிரசங்கங்களில் கண்டு வியந்தவர்களைக் கேட்டால் தான், மற்றவர்களுக்குத் தெரியும்.

தமிழர்களின் மானத்தை ஓரளவு காப்பாற்றியவர் ஆச்சாரியார். வட இந்தியாவிலே, யாருக்கேனும் அறிவிலே அஜீரணம் ஏற்பட்டால், அவர்கள் உடனே தலைவர்களாய் மலர்ந்து விடுவார்கள். தங்கள் மலர்ச்சியைச் சோதிக்கும் பொருட்டு, தென்னாட்டுக்கு, சிறப்பாகத் தமிழ் நாட்டுக்கு, உபதேசம் செய்ய, யாத்திரை புறப்பட்டு விடுவார்கள். தமிழர்கள் என்ன பாபம் செய்தார்களோ இந்த நிரந்தர தண்டனையை அனுபவிக்க! வட நாட்டார் பிரசங்கம் செய்வதும் தமிழர்கள் பிரசங்கம் கேட்பதும் பாகபத்திர மாமூல் ஷரத்தாக, வெகு காலமாக, ஆட்சேபனையின்றி, நடைபெற்று வந்தது. அந்த ஷரத்தை அடியோடு ரத்துச்செய்தவர் ஆச்சாரியார். வட இந்தியாவிற்கு ஆச்சாரியார் போய், மூலை முடுக்குகளிலெல்லாம் பிரசங்க மழை பொழிந்த பின்னர் தான் எனக்கும் என்னையொத்தவர்களுக்கும் மன அமைதி ஏற்பட்டது எனலாம்.

ஆச்சாரியாரை சின்ன காந்தி என்கிறார்கள். இதைப்போல அநியாயம் வேறு எதுவுமே இல்லை. காந்தி மகா மேதாவி; ஆச்சாரியார் மகா புத்திசாலி. காந்தியின் மூளை வேறு ரகம்; ஆச்சாரியாரின் மூளை வேறுவகை. மேதை வேறு; புத்தி வேறு. காந்திக்கு தமது சொந்த சக்தியில் "மலையை நகரச்செய்யும்" நம்பிக்கை உண்டு; பிறர் சக்தியிலும் காந்திக்கு அளவற்ற நம்பிக்கை. ஆச்சாரியாருக்கோ, தம்மிடத்திலும் சந்தேகம்; பிறரிடத்திலும் எல்லையற்ற சந்தேகம். காந்தி, தம்மையே தாம் மூன்று தரம் சுற்றிவந்து, தெய்வயானையை இந்திரனிடமிருந்து அதிகாரத்துடன் கேட்ட கணபதியையொத்த மேதாவி; ஆச்சாரியாரோ, வியர்க்க வியர்க்க வாகனத்தில் ஏறி, ஓடிக்களைத்து, அலுத்து, தெய்வயானையைப் பெறாத தேவதையைப்போல. காந்தி சாஸ்திரம், ஆச்சாரியார் சாஸ்திரி. சாஸ்திரம் காலத்துக்குக் கட்டுப்பட்டதல்ல; சாஸ்திரம் வளரும்; சாஸ்திரியோ சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டவர். சாஸ்திரிக்கு— சாஸ்திரம் தான் பிரதானம். காந்தி உலகத்தின் மனச் சாட்சி; ஆச்சாரியார் மனச்சாட்சியின் மெய்க்காப்பாளர்.

(அடுத்த மலரில் ஸ்ரீ. திரு. வி. கலியாணசுந்தர முதலியாரைப் பற்றி நண்பர் வ. ரா. எழுதுவார்.)

ரஷியாவின் அதிர்ஷ்டம்

உலகப் பொருளாதார மகாநாடு உருப்படாமல் போய் விட்டது. லட்சக் கணக்காக கப்பல் கூலிக்கும், ஹோட்டல் செலவுக்கும் செலவழிந்ததுதான் மீதம். ஹோட்டல் வரும்படியால் பிரிட்டனுக்கு கொஞ்சம் லாபம் கிடைத்திருக்கலாம். மற்றப்படி ஒரே ஒரு நாட்டைத் தவிர வேறு எதுவும் பலனடைய வில்லை. அந்த நாடு எது? அது தான் சோவியத் ரஷியா. சோவியத் சர்க்கார் பிரதிநிதியாக லிட்வினுப் என்பவர் லண்டனில் கூடிய பொருளாதார மகா நாட்டிற்கு வந்தார். அவர் மகா சாமர்த்தியசாலி, பெரிய ராஜ தந்திரி. சில பிரிட்டிஷ்காரர் ரஷியாவிற்கு விரோதமாக சதியாலோசனை செய்ததாக ரஷியாவில் தண்டிக்கப்பட்டதை நண்பர்கள் அறிவார்கள். அதற்காக ரஷியாவிலிருந்து சரக்குகள் ஒன்றும் இறக்குமதியாகக் கூடாது என்று பிரிட்டிஷார் தடை போட்டார்கள். லிட்வினுப் லண்டனுக்கு வந்திருந்த போது இதைப்பற்றி பிரிட்டிஷ் அன்னிய நாட்டு மந்திரி சா. ஜான்சைமன் சமரசப் பேச்சு நடத்தினார். முடிவில், ஜெயில் தண்டனையை ரத்துச் செய்து, 5 வருஷங்களுக்கு ரஷியாவுக்குள் நுழையக் கூடாது என்ற தடை உத்தரவோடு பிரிட்டிஷ் கைதிகளை ரஷிய சர்க்கார் விடுவித்தார்கள். ரஷிய சரக்குகள் மீது போட்டிருந்த தடை வரியை பிரிட்டிஷார் நீக்கினார்கள். ரஷியாவிற்கு இது ஒரு பெரிய வெற்றி. அமெரிக்கா 100-க்கு 75 விதம் கடனுக்கு பஞ்சு கொடுப்பதாக ஒப்புக் கொண்டது இரண்டாவது வெற்றி. ஸ்பெயின், போலந்து, ருமேனியா, பாரசீகம், துருக்கி முதலிய நாடுகளோடு ரஷியா சிநேக உடன்படிக்கை செய்து கொண்டது மற்றொரு பெரிய வெற்றி.



—"ஸ்டார்", மான்ட்ரீல்.

சுத்தசிவப்பழச் சாமியார்

(என். பி. மூர்த்தி, பி. ஏ.)

அரசமரத்து மேடையில் மூணுவீசம் சோம்பேறிமுதல் முழுச் சோம்பேறி வரையில் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் சப்பிக்கொண்டிருந்த மாங்கொட்டையை எறிய மனமில்லாமல் மும்மரமாக அதனுடன் சல்லாபம் செய்துகொண்டிருந்தபடியால், சுத்த சிவப்பழச் சாமியார் மேடையில் ஏறியதைக் கவனிக்கவில்லை. "வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்" என்று பெரியார் பாடிய சப்தத்தைக் கேட்டு வெறுப்பினால் மாங்கொட்டையை எறிந்துவிட்டுத திரும்பிப் பார்த்தார்கள்.



கண்ணில் பட்டது சுத்த சிவப்பழச் சாமியாரும், அவருடைய நீண்ட அங்கியும், வெளிர் தாடியும் நீல மூக்குக் கண்ணாடியும் தான். பெரியவரல்லவா? மரியாதையாக ஆளுக்கொரு கும்பிடு போட்டார்கள்.

சாமியார் தலையை ஆட்டிவிட்டு "சகோதரர்களே! நேற்றையத் தினம் போய்விட்டது. ஐயோ! போனது வருமா, சொல்லுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டார்.

இப்பேச்சைக் கேட்டு "என்ன சமாச்சாரம், சுவாமிகளே" என்று சோம்பேறிகள் நெருங்கிப்போய் கேட்டார்கள்.

சாமியார் "வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்" என்றும் "நேற்றையத்தினம் போய்விட்டது. போனது வருமா?" என்றும் திருப்பத் திரும்பச் சொன்னார்.

அதற்குள் அங்கு வேறு சிலர் வந்து கூடி விட்டார்கள்.

உடனே சாமியார் "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தீர்" என்று வேதாந்தம் ஆரம்பித்தார்.

கூட்டம் இன்னும் வலுத்தது. கூட்டம் வலுக்கவே சாமியார் ஆதி பல்லவியை ஆறு தரம் உருக்கமாகப் பாடினார். பாடும் பொழுதெல்லாம் அவர் குரல் நடுங்கிற்று

கூடியிருந்த ஜனங்களுக்கு விஷயம் இன்னதென்று புரியவில்லை. ஆனால் ஏதோ பரம சோகத்தில் சுவாமிகள் அடிபட்டு, கோர்வையாய் பேசும் சக்தியைக் கூட இழந்து விட்டாரோ என்னவோ என்று பச்சாதாப மிகுதியால் ஆளுக்கொரு விதமாய்க் கேட்டார்கள்.

ஒருவர்: என் சுவாமிகளே! பணம், காசு, பாத்திரம் கித்திரம் ஏதாவது கொள்ளைபோய் விட்டதா?

சாமியார்: நேற்று போய்விட்டதே. தொலைந்தது திரும்ப வருமா?

மற்றொருவர்: இல்லை யென்றால், பூர்வாச்சரமத்து நெருங்கிய உறவினர்களில் யாராவது காலமாகி விட்டார்களா?

சாமியார்: ஐயோ! பேசிப் பயனென்ன? வாழ்வாவது மாயம். போனது வருமா?

சாமியார் பைத்யமோ என்னவோ வென்ற சந்தேகம் கூட்டத்தில் வலுக்கவே, சாமியார் சொன்னார் "மஹா ஜனங்களே! நேற்று போய்விட்டது. இதோ இன்றையத்தினமும் போய்விட்டது. போய்க்கொண்டிருக்கிறது. கண் முன்னமேயே களவு போகிறது, அறிந்தே திருட்டு நடக்கிறது. அதற்கென்ன செய்யலாம்? என்ன செய்திருக்கிறீர்கள்?"

"கண் முன்னமேயே களவு" என்றதைக் கேட்டதும் கூட்டத்தில் ஒரு புதுப் பரபரப்பு ஏற்பட்டது.

எல்லோரும் சாமியாரைக் கூர்ந்து நோக்கினார்கள். சுற்று முற்றும் பார்த்தார்கள். அரசமரத்து கிளைகளைப் பார்த்தார்கள். பக்கத்திலுள்ளவர்களை வெறித்துப் பார்த்தார்கள். அவரவர்களுடைய பணப்பையை ஜேப்பியில் ஆஜர்பார்த்து மனதைத் திடப்படுத்திக்கொண்டார்கள்.

யாதொரு களவும் போனதாக மஹா ஜனங்களுக்குத் தெரியாததால் கூட்டத்தில் பீதியும் அதிகமாயிற்று. ஒருவருக்காவது அப்புறம் இப்புறம் போகத் தோன்றவில்லை. ஒரு கணம் கூட்டத்

தில் பயங்கரமான நிசப்தம். பிறகு ஒரு குரல்: "சாமியாரே! அஞ்ஞானிகளுக்கு விஷயம் விளங்கும்படிச் சொல்லுங்கள்" என்று.

அதன்பேரில் பெரியார் தொண்டையை கனைத்துச் சீர் செய்து கொண்டு,

"நல்லது. நேற்றுப் போய்விட்டது. இன்று போய்க்கொண்டிருக்கிறது. நண்பர்களே! நாளை போகப் போகிறது. அதைத் தடுக்க என்ன செய்திருக்கிறீர்கள்? வேண்டாம். அதைப் பற்றி சிந்தனையாவது செய்தீர்களா? காலம் என்பது கண்ணில்லாக் குருவியாச்சுதே. அது நிச்சயமாய், நிர்தாக்ஷண்யமாய் ஏமாற்றிவிடுமே. நாமும் ஏமாந்துவிடுவாமே. எதிர் காலத்தை நோக்கி என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்? இல்லையெனில் பகுத்தறிவு உள்ளதின் பயன் என்ன?" என்று இரண்டொரு கண்ணீர் துளிகள் விட்டார்.

இதைக் கேட்ட ஜனங்களுக்குள் அலை புரளுவதைப்போன்ற குழப்பமுண்டாயிற்று. ஒருவரையொருவர் திகிலினால் இடித்துத் தள்ளினார்கள். கால் விரல்களைச் சட்டினி செய்துகொண்டார்கள். ஒனான்போல் கழுத்தை நீட்டினார்கள்.

"இந்தத் துன்பத்திற்குப் பரிகாரம் நீர்தான் சொல்லுமே" கலவரமடைந்த குரல்கள் பல கிளம்பின.

அப்பொழுது கூட்டத்தில் சுமார் இருநூறு பேராவது என்று இருக்கும்.

"அப்படி வாருங்கள் வழிக்கு" என்று சுத்த சிவப்பழச் சாமியார் முதலில் நீல மூக்குக் கண்ணாடியைக் கழற்றினார். அடுத்தபடி தாடியைப் பிடுங்கி எறிந்தார். மேலங்கியைக் களைந்தெறிந்தார். மிஞ்சி நின்றது சுத்தக் கதருடை உடுத்த ஒரு இளைஞரின் உருவம்.

மஹா ஜனங்கள் இந்த 'படார் காட்சியை'ப் பார்த்து வியப்படைந்து மூக்கின்பேரில் விரலை வைத்தார்கள். அடுத்தபடி என்ன 'ஸீனோ' என்று வாயைப் பிளந்தார்கள்.

இளைஞர் ஆரம்பித்தார்.

"நண்பர்களே! நேற்றுப் போய்விட்டது. இன்று போய்க்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கணமும் நம்மை எம கிங்கரர்கள் நெருங்குகிறார்கள். நமது மார்பினுள் கேட்கும் சப்தம் காலனுடைய காலடி ஓசையல்லவா? திடீரென்று ஏதாவது ஆகிவிடலாம்.

நமது கதை முற்றுப் பெற்றுவிடலாம். அப்பொழுது அனுதையான நமது பெண்டு பிள்ளைகள், குழந்தை குட்டிகளின் கதியென்ன? அவர்களை யார் காப்பாற்றுவார்கள்? ஆகையால் சகோதரர்களே! நாம் சாசுவதமாய் நமது குடும்பத்தைக் காப்பாற்றப் போகிறோம் என்ற எண்ணத்தை விடுங்கள். காப்பாற்றும் வேலையை அகில பாரத இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியாரிடம் இப்பொழுதே ஒப்புவியுங்கள். ஏழைகளுக்காக ஏற்பட்டது இது ஒன்று தான். இது மற்றைய கம்பெனிகளைப்போல், போலி கம்பெனியல்ல. அதை ரூபிப்பதற்காகவே எங்கள் கம்பெனியில் சேருவோருக்கு நான் அணிந்திருக்கும் கதர் ஆடையைப்போன்றது இனமாக இவ்விடத்திலேயே கொடுக்கப்படும். இந்தாருங்கள் கம்பெனியின் ரூல் புஸ்த்தகம். எங்கே சேர இஷ்டமுள்ளவர்கள் முன்னுக்கு வாருங்கள், பார்க்கலாம்"

இதைக்கேட்டதும் சில ஜனங்கள் மெதுவாகக் கம்பி நீட்டத் தொடங்கினார்கள். யார் இனம் வாங்கினார்களோ நான் அறியேன்.


ராஜாவை,
ராஜாத்தி தேடுகிருள்.
ராஜா எங்கே?
கண்டு பிடியுங்கள்.



ஒரு வாய் சாதம்

(அம்பி)

நாம் உணவு கொள்வது சக்தி (Energy) உண்டாக்குவதற்காக. ஹிருதயம், சுவாசாசயம் (மூச்சுப்பை) முதலியன இடைவிடாமல் செய்து கொண்டிருக்கும் வேலைகட்கும், இன்னும் நடப்பது, ஓடுவது போன்ற காரியங்கள் செய்வதற்கும் சக்தி வேண்டியிருக்கிறது. அதோடு, வளரும் குழந்தைகளுக்கு, வளர்ச்சிக்காகவும், நமது உடல் எப்பொழுதும் உஷ்ணமாய் இருப்பதற்காகவும் (To keep the body temperature) உணவு அவசியமாயிருக்கிறது. உடலில் இருந்த சக்தி குறைந்து போனதற்கும், மேலும் சக்தி உண்டாக்குவதற்காக ஏதாவது வயற்றில் போட்டாக வேண்டுமென்பதற்கும். பசி அறிகுறியாகும். ஆகையால், நாம் உண்பது பசியை தணிப்பதற்காக என்று நினைத்துக் கொண்டிருந்தாலும், அது சக்தி உண்டாக்குவதற்காகத்தான் உண்மையில் உபயோகப்படுகிறது.



சாதாரணமாய் வேலை செய்பவன் ஒருவனுக்கு தினம் 3,000 பெரிய காலோரி (Big Calorie) சக்தி வேண்டும். ஒரு வேலையும் செய்யாமல், படுத்துக்கொண்டேயிருப்பவனுக்குக்கூட 1,800 காலோரி, ஹிருதயத்தின் வேலை, சுவாசாசயத்தின் வேலைகளை

நடத்துவதில் செலவாகும். மிகவும் கடும்வேலை செய்பவனுக்கு 4,000, அல்லது 5,000 காலோரி வேண்டும்.

நாம் சாப்பிடும் பதார்த்தங்கள் மூன்று விதம்; அதில் நெய், எண்ணெய்போன்ற கொழுப்பு (Fat) பதார்த்தம்; சாதம், கோதுமைபோன்ற (Carbo-hydrate) பதார்த்தம்; காய்கறி போன்ற (Protein) பதார்த்தங்கள் முக்யம். அவற்றில் கொழுப்பு (Fat) க்குத்தான் சக்தி அதிகம் உண்டாக்கும் தன்மை யிருக்கிறது.


1 கிராம் (Gram)		கொழுப்பு	=	9·3 காலோரிகள்
1 ,,	,,	சாதம் (Carbo-hydrate)	=	4·1 ,,
1 ,,	,,	காய்கறி (Protein)	=	4·1 ,,

ஆனால் இவைகளை மாத்திரம் சாப்பிட்டால் நாம் உயிர் வாழ முடியாது. நீர், உப்பு (Salts) பதார்த்தங்கள், விட்டமின் (Vitamins) என்ற சத்துப் பதார்த்தங்களும் அவசியம்.

நாம் சாப்பிடுவதெல்லாம், கரியமல வாயுவாகவும், நீராகவும் மாற்றப்படுகின்றன. இவ்வாறு அவைகள் மாற்றப் படும்போது தான் சக்தியும் (Energy) உஷ்ணமும் உண்டாகின்றன.

உதாரணமாக, ஒருவாய் சாதம் எடுத்துக் கொள்வோம். உமிழ்நீரால், சாதம் (Carbo-hydrate) சர்க்கரை பதார்த்தமாக (Glucose) மாற்றப்படுகிறது. சரியாய்ச் சவைத்துச் சாப்பிடாவிட்டால், மிகவும் கொஞ்சம் பாகம்தான் உமிழ் நீரால் சர்க்கரைப் பதார்த்தமாக மாற்றப்படும். பின், சிறிய குடலில் அது வந்தவுடன், பாங்க்ரியாஸ் ரஸம் (Pancreatic Juice) எல்லா சாதத்தையும் அவ்வாறே சர்க்கரையாக மாற்றுகிறது.

அவ்வாறு மாற்றப்பட்ட சாதம் குடலிலிருந்து போர்டல் வெயின் (Portal Vein) என்னும் ரத்தக் குழாய் வழியாக, கல்லீரலுக்குப் போய், அங்கு சேமிக்கப்படுகிறது. அங்கிருந்து, எப்பொழுதெல்லாம் சக்திவேண்டி யிருக்கிறதோ, அப்பொழுதெல்லாம் இரத்தக் குழாய்களுக்குள் செலுத்தப்பட்டு ஏற்கனவே கூறியபடி கரியமல வாயுவாகவும், நீராகவும் மாற்றப்பட்டு, சக்தியை உண்டாக்குகிறது. அவ்வாறு உண்டான சக்தி நாம் நடப்பதில், படிப்பதில், எழுதுவதில், பேசுவதில், நினைப்பதில் செலவழிந்து விடுகிறது. நமக்கும், சக்தி செலவானதற்கு அறிகுறியாய் பசிக்க ஆரம்பிக்கிறது. நாமும் "சமையல் ஆகிவிட்டதா?" என்று நம் தங்கையைக் கேட்கிறோம்.



பொன்னம்மாள் போட்ட போடு.

(பொன்னிகுமார் எழுதியது.)

காமுப் பாட்டிக்கு பொன்னம்மாள் பேரில் ரொம்ப ஆசை. பொன்னம்மாள் தன் பேத்தி என்பது முதல் காரணம்; ஒரே பேத்தி என்பது இரண்டாவது காரணம். பேரனே இல்லை என்பது மூன்றாவது காரணம். தன்னுடைய ஏக புத்திரனுடைய ஏக புத்திரி என்பது முடிவான, கடைசிக் காரணம். காமுப்பாட்டியின் "சமுத்திர" வாஞ்சையில்—வாஞ்சை உப்புக்கரிக்காது—வளர்ந்த பொன்னம்மாளுக்குக் கலியாணம் ஆகவேண்டும். அதற்கு முன்னால் நடந்தது—சொல்லுகிறேன். ஏன் அவசரம்?

பொன்னம்மாள் வீட்டாருக்கு பணக்குறை யெதுவுமில்லை. ஆண் சந்ததி இல்லை என்ற மனக்குறை யொன்றுதான். இந்தக் குறையை ஒரு சமயம், காமுப்பாட்டி பொன்னம்மாளுக்கு எதிரே, அசட்டுத்தனமாய்த் தெரிவித்துவிட்டாள். பொன்னம்மாளுக்கு அப்பொழுது பத்துவயதிருக்கும். "இந்த அவலட்சண வீட்டில், நான் ஏன் பிறக்கணும்? இருக்கிறவர்களை இகழ்வதும் இல்லாதவர்களுக்காக அழுவதும் இந்த வீட்டுவேலையோ" என்று முறித்தாற்போல, பொன்னம்மாள் சொல்லிவிட்டாள். காமுப் பாட்டிக்கு, இதைப்போல, கர்வபங்கம் நேர்ந்ததே யில்லை. வாஞ்சை "சமுத்திரத்திலே", கர்வம் ஆழங் காண முடியுமா?

தன் பள்ளிக்கூடத்துத் தோழிகளை, வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவந்து, அவர்களுக்கு விருந்து செய்வதில் பொன்னம்மாளுக்கு அளவுகடந்த ஆவல். இந்த ஆவலை, வீட்டார், ஒருபொழு

தும் ஆட்சேபிக்கவே யில்லை. விளக்கெண்ணெய்க்குப் பயந்த பொன்னம்மாளிடம் காமுப்பாட்டி பயப்படவேண்டிய நிலைமை வந்துவிட்டது. வாஞ்சையின் கோளாறு! காமுப் பாட்டியின் பயத்துக்காக, பொன்னம்மாளின் வயது, இருந்த இடத்திலேயே இருக்குமா? ஜனனமரணக்கணக்கு, பள்ளிக்கூட தஸ்தாவேஜி, திருமணப்பத்திரிகை முதலியவைகளுக்கு வேலை வேண்டாமா?

ஒரு சமயம் பொன்னம்மாள் வீட்டில் தோழிகள் கூட்டம். அட பாபமே! என்ன சந்தர்ப்பம் என்று ஞாபகம் வரவில்லையே! சரி, ஞாபகப்படுத்திக்கொள்ள, சாத்தியப்படாது. இருங்கள், இருங்கள். ஞாபகம் வருகிறாப் போலிருக்கிறது அதோ—! நெஞ்சிலே இருக்கிறது; நாக்கிலே வரவில்லை! கூட்டம். நாலைந்து பெண்களுக்கு அதிகமா யிருக்கலாம். உற்சாகமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறார்கள. காமுப்பாட்டி, பயந்துகொண்டே, கூட்டத்தில் கலந்து கொண்டாள். பயமும் பிடிப்பும்—ஒரே சக்தியின் இரண்டு முகங்கள்!

"எங்கள் நாளிலே, இந்த மாதிரி விளையாட்டுக் கிடையாது" என்றாள் பாட்டி. "உங்கள் நாளிலே, விளையாட்டு உண்டோ, பாட்டி" என்றாள் ஒரு தோழி. எல்லோரும் சிரித்தார்கள். ஆனால், பாட்டி மட்டும் அசட்டுச்—சிரிப்புச் சிரித்தாள்.

"ஏன் பாட்டி, உங்க நாளையிலே, பச்சைக் குழந்தைக்கு, பாவாடைக் கட்டிக்கிறதற்கு முந்தியே, கலியாணம் ஆகிவிடுமாமே! குழந்தைக்கு ஆம்படையான் பாவாடை கட்டி விடுவானே" என்று கோணல் பார்வை பார்த்துக்கொண்டு, இன்னொரு தோழி, பாட்டியைக் கேட்டாள்.

"இருக்கட்டும், பாட்டி, உங்க நாளையிலே பெண்ணுக்குப் பணமோ, பிள்ளைக்குப் பணமோ" என்றாள் வேறொரு தோழி.

"பெண் பிறந்தது என்ற செய்தி கேட்டதும், முகத்திலே பிரஸவ வேதனைப்படும் அப்பாவும் அம்மாவும் பாட்டியுமிருந்த அந்தக்காலத்திலே, என்னதான் நடந்திராது" என்றாள் பொன்னம்மாள்.

மெஜாரிடியோ சிறு பெண்கள். பாட்டி என்ன செய்ய முடியும்? "எப்படியோ, எங்க காலம் ஆகிவிட்டது" என்றாள் பாட்டி. "எங்கள் காலம் வேகமாய் வந்துகொண்டிருக்கிறது" என்று துடித்தாற்போல, ஒரு தோழி சொன்னாள். பாட்டி, பதில் பேசாமல் வெளியே போய்விட்டாள்.

பொன்னம்மாள் வீட்டிலே கலியாணப் பேச்சு. பாட்டியின் பிடிவாதம் சின்ன சங்கதியா அல்லது சக்தியா? பாட்டியின் மூச்சு

மலே ஏறுவதற்குள், பேத்தியின் கழுத்தில் தாலி ஏற வேண்டாமா? "அறுப்பதற்கும் அழுவதற்கும் தாலி வேண்டும். இது சாஸ்திரம் கலந்த சம்பிரதாயம்" என்று பொன்னம்மாளின் தோழிகள் சொல்லிச் சிரிப்பது, பாட்டிக்குத் தெரியாது.

பாழூர் அம்பி என்ற சங்கரன் பொன்னம்மாளுக்கு ஏற்ற வரன் என்பது காமுப் பாட்டியின் திடமான அபிப்பிராயம். "அவன், குலம் கோத்திரத்திலே, "அப்பு அழுக்கு"க் கிடையாது. எலுமிச்சம் பழச் சிவப்பு! பீ. ஏ க்குப் படிக்கிறான். துரை வாத்தியார்களின் அபிமானத்தினால், சங்கரன் தன் இஷ்டமில்லாமல், "கிராப்பு" வைத்துக்கொண் டிருக்கிறான். போதாக்குறைக்கு சீமைக்கு, ஜில்லா கலெக்டர் பரீட்சைக்குப் படிக்கப்போகிறான். ரொம்ப புத்திசாலி". இது பாட்டியின் அட்டவணை.

பெண்ணைப்பார்த்து கலியாணம் செய்துக்கொள்ளவேண்டும் என்ற நவ நாகரிக கோஷ்டியைச் சேர்ந்தவன் சங்கரன். நல்ல நாள் பார்த்து, பொன்னம்மாள் வீட்டுக்கு, சங்கரன் ஒரு நண்பனுடன் வந்து சேர்ந்தான். கழுகுக்கு மூக்கிலே வியர்க்கும் என்பார்கள். பொன்னம்மாளும் இரண்டொரு தோழிகளை வரவழைத்துக் கொண்டாள். பக்கபலம் இருப்பது எதற்கும் நல்லதல்லவா?

சங்கரன் வந்ததில் காமுப் பாட்டிக்கு பேரானந்தம். "பெண்ணோடு பேசலாமோ" என்று சங்கரன் கேட்டதற்கு, "ஆகா! ஆட்சேபனை என்ன, குழந்தை" என்றாள் பாட்டி.

பாட்டியை அழைத்துக்கொண்டு, சங்கரன்—நண்பன், இருவரும், பொன்னம்மாள் இருப்பிடம் சென்றார்கள். "வாருங்கள்" என்றாள் பொன்னம்மாள்.

சங்கரன்—நண்பன், இந்த வரவேற்பைப் பார்த்து, திகைத்துப் போனார்கள். "கூச்சப்படாதே, அப்பா" என்றாள் பாட்டி.


"சீமைக்குப்போய், ஜில்லா கலெக்டர் பரீட்சைக்குப் படிக்கப் போகிறவாள், இவ்வளவு கூச்சப்படலாமோ" என்றாள் பொன்னம்மாள்.

"சீமைக்குப்போய்விட்டு, திரும்பி வருகிறேன். பிறகு பார்த்துக்கொள்ளலாம், பேசிக் கொள்ளலாம" என்று தட்டித்தடவி சங்கரன் சொன்னான்.


"அதுவரையிலும் நான் பொறுமையாகக் காத்துக்கொண்டிருக்கிறேன். அவசரமே யில்லை" என்றாள் பொன்னம்மாள். எல்லோரும் சிரித்தார்கள். சங்கரன்—நண்பன்—ஊருக்குப் போய் விட்டார்கள். சங்கரன் சீமைக்குப்போனானோ, என்பது தெரியாது

குருக்களை கடித்த நாய்

ஒரு நாய் குருக்களை கடித்துவிட்டது. பெரியாரை கடித்ததால் அது சொர்க்கத்துக்குப் போகிறதா அல்லது நரகத்துக்குப் போகிறதா என்பது இவ்வுலகத்திற்கு புறம்பான விஷயம். இவ் வுலகத்தைப் பொறுத்த வரையில், நாய்க்கடியால் உண்டான அவஸ்தைகளை குருக்கள் அநுபவித்துத் தான் தீரவேண்டும். சர்வதேச சங்கத்தை விட்டு ஜப்பான் விலகி விட்டது. "பள்ளியிலிருந்து விலகிய சிறுவன் துள்ளி விளையாடிக்கொண்டு ஓடுவான். ஆனால் பிற்காலத்தில் தான் படிக்காமல் போன தவறை நினைத்து வருந்துவான். அதைப் போலவேஜப்பான் நிலைமை இருக்கிறது" என்று கிளாஸ்கோ "புல்லட்டின்" பத்திரிகை



எழுதி, இப்படத்தையும் பிரசுரித் திருக்கிறது. பின்னால் வருத்தப் படுவது என்பது குருக்களைக் கடித்த நாய் கதையைப் போலவே இருக்கிறது. இன்று ஜப்பான் சர்வதேச சங்கத்தை விட்டு விலகியதால் லாபத்திலோ அந்தஸ்திலோ குறைவேற்பட்டு விடவில்லை. மஞ்சூரியா நாடு கைமேல் கிடைத்தது. உலகப் பொருளாதார மகாநாட்டில் அதை பகிஷ்கரித்துவிடவில்லை. இன்று இந்திய சர்க்கார் அதன் பிரதிநிதிகளோடு சிம்லாவில் பேசுகிறார்கள்!



ஓர் தமிழறிஞர் தபாலாபீசுக்குச்சென்றார். அங்கோர் புறம்பே தொங்கவிடப்பட்டிருந்த விளம்பரமொன்று அவரின் முழுக்கவனத்தையும் இழுத்தது. உற்று நோக்கினார். "ஓகோ! ஓகோ!" எனத் தனக்குள்ளே சிரித்தார். அண்டையிலுள்ள ஜன்னலுக்குச் சென்று ஏதோ பதிவு செய்துகொண்டிருந்த குமாஸ்தாவின் மீது தனது வாயில் சேர்த்துவைத்திருந்த திவ்யாமிருதமான புகையிலைச் சாற்றை "புப்" பென உமிழ்ந்தார்.

உடனே அங்கிருந்த யாவரும், நமதறிஞரைப் பிடித்துப், போலீசுக்கு அனுப்பத் தலைப்பட்டனர்.

அறிஞரோவெனின்—இதோ பாருங்கள் நீங்கள். "துப்பப் படாது" அதாவது துப்பினால் படாது என்று விளம்பரச் செய்திருக்கிறீர்களே—என்றார்.

—கி. முத்தன், கொழும்பு.

* * *

மகன்:—நம்ப தேச பாஷைக்கு, தாய்பாஷை என்று ஏன் சொல்லுகிறார்கள்? தகப்பன் பாஷை என்று ஏன் சொல்லக் கூடாது?

தகப்பன்:—ஏனெனில், வீட்டிலே உங்கம்மா பேச்சுத்தானே ஏற்கிறது? அதனால்தான்.

—வி. வேங்கடாசலம், அ. புதூர்

* * *

கமலா:—அம்மா! காந்தி வந்திருக்கிறார்.

தாய்:—எங்கேடி, நம் வீட்டுக்கா? (மிக துரிதமாக வருகிறாள்)

கமலா:—இதோ அம்மா ("காந்தி" புத்தகத்தை காட்டுகிறாள்)

தாய்:—இதாடி காந்தி?

கமலா:—பின்ன என்னம்மா? இந்த புஸ்தகம் வந்தாலென்ன அல்லது காந்தி வந்தாலென்ன? எல்லாம் ஒண்ணுதானே.

—ஆ. வே. பார்வதி அம்மாள், புதுச்சேரி.

ஒரு செட்டியார் புதிதாக தமது காருக்கு ஒரு 'பம்பு' வாங்கிக்கொண்டு வந்தார். வரும் வழியில் ஒரு பஸ் டிரைவர் காற்று இல்லாமல் செட்டியாரின் டிரைவரிடம் பம்பு வாங்கி தனது கார் சக்கரத்துக்குக் காற்று அடித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது செட்டியார் தனது டிரைவரைப் பார்த்து,

"எண்டா இப்பொழுதுதானே பனிரெண்டு ரூபா கொடுத்து புதிதாக காற்று வாங்கிக்கொண்டு வந்தோம். பஸ்காரன் பாதிக் காற்றை ஊத்திக்கொண்டானே" என்று டிரைவரை கடினமாகக் கோபித்துக் கொண்டார்.

—சா. அண்ணுமலை செட்டியார், கல்லுபட்டி.

* * *

பனி மிகுதியும் பெய்ததால் குளிர் அதிகமாயிருந்த ஒரு நாள் உபாத்தியாயர் பையன்களைப் பார்த்து, "இன்னும் என்ன பாடம் நடத்தலாம்" என்றார்.

ஒரு பையன்:—சஹாரா பாலைவனத்தைப் பற்றி சொல்லுங்க சார்!

—க. கார்மேகம், தோடனேரி.

* * *

இரண்டு பிரபுக்கள் நாடகம் பார்த்துக்கொண்டிருந்தனர்.

ஒருவர்:—என்ன சார், இன்னும் சாவித்திரி வரக்காணுமே?

மற்றவர்:—இன்று இராமாயண மல்லவா?

முதல்வர்:—ஓகோ அப்படியா! நான் "கோவல"னுக்கு மென்று கேட்டேன்.

—க. கார்மேகம், தோடனேரி.

* * *

வேலை கிடைக்காதவன்:—ஏனய்யா! உங்க ஆபீசில் இடம் காலியா இருக்குதா?

வேலை கிடைத்தவன்:—இல்யே, நேத்துதான் எங்க மானேஜரு, மூணு மூட்டை நெல் வாங்கினரு.

—எஸ். ஜி. ஜெயபாலன், திருவாரூர்.

* * *

காது வியாதியஸ்தர் (பட்டிக்காட்டான்):—கம்பவுண்டரய்யா! மருந்து போட்டாச்சா, தலையை நிமிர்த்துக்கட்டுமா?

கம்பவுண்டர்:—இருமைய்யா பஞ்சடைக்க வேண்டியதுதான் பாக்கி.

பட்டிக்காட்டான்:—என்னய்யா மருந்து போட்டுக்க வந்தா பஞ்சடைக்கணுங்கிறியே? பசியிணுலேதானய்யா பஞ்சடைக்கும். எனக்கென்ன சோத்துக்கில்லேனு நினைச்சீங்களா? அந்தமாதிரி இன்னெருதரம் சொல்லாதீங்க.

—சி. சு. சே. திருவல்லிக்கேணி.

*　　　*　　　*

தமிழ்ப் பண்டிதர்:—(இலக்கண வகுப்பில்) அடே! குப்பா, இரட்டைக் கிளவிக்கு உதாரணம் கூறு.

குப்பன்:—எங்காத்துச் சீதாப் பாட்டியும், அடுத்தாத்து எலிக் குஞ்சுப் பாட்டியும் சேர்ந்தால் இரட்டைக்கிளவி ஸார்.

—என். வானமாமலே, நாங்குநேரி.

யாத்திரிகர்:—அடா டா டா! மஹாதிவ்ய க்ஷேத்திரம்! இங்கே யாராவது பெரியார் பிறந்ததுண்டோ?

நகரவாசி:—அப்படி ஒன்றுமில்லே, எனக்குத் தெரிந்தவரை இவ்வூரில் குழந்தைகளே பிறக்கின்றன.

ஜி. ஜேயராமன், கும்பகோணம்.

*　　　*　　　*

உபாத்தியாயர்:—ராமு, உன்னுடைய கடைசி கணக்கு தப்பிதமாயிருக்கிறது. ஆகையால், நீ இன்று 6 மணி வரையில் இங்கிருக்கவேண்டும். தெரியுமா?

ராமு:—(கடியாரத்தைப் பார்த்துவிட்டு) "அந்தக் கணக்கில் எவ்வளவு வித்தியாசம் காண்கிறது, சார்"

உபாத்தியாயர்:—"காலணு"

ராமு:—(தன் சட்டைப் பையிலிருந்து காலணுவை எடுத்து) "சார், எனக்கு இன்று ஓர் அவசரமான கார்யமொன்றுயிருக்கிறது. நான் போகவேணடும். தாங்கள் தயவு செய்து இந்த காலணுவை வாங்கிக்கொண்டால்...........!"

*—ஏ. எஸ். சிவராம், புதுச்சேரி.

*　　　*　　　*

வீட்டம்மாள்:—திருட்டுத்தனம் மட்டும் இந்த இடத்தில் உதவாது. முன்னிருந்தவன் ஒரு வெள்ளிக் கிண்ணத்தை திருடிக் கொண்டு போய்விட்டான்.

---

* இரண்டு ரூபாய் பரிசு பெற்றவர்.

புது வேலைக்காரி:—அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். நான் நேற்றுத்தான் ஒரு வருஷ காலத்துக்கு நன்னடக்கை ஜாமீன் கொடுத்து வெளிவந்தேன்.

—டி. எஸ். ராமலிங்கம், திருவாரூர்.

* * *

ஆபீஸ் மானேஜர்:—வேலையை விட்டுவிட்டு என்ன அவ்வளவு அவசரமாய் பார்க்கிறீர்? என்ன அது?

கிளார்க்கு:—இதுவா...காந்தி மலர். இதில் வ. ரா. அவர்களும், கே. சீனிவாசன் பி. ஏ. (ஹானர்ஸ்) அவர்களும் என்ன எழுதி இருக்கிறார்கள் என்று பார்க்கிறேன்.

—எம். ஏ. சத்தார், வலங்கிமான்.

* * *

பையன்:—அம்மா, கருப்புக்கோழியே, வெள்ளைக்கோழியை விட மேலானது.

தாயார்:—என்னடா, உளறுகிறாய்; எப்படிச் சொல், பார்ப்போம்.

பையன்:—அம்மா, கருப்புக் கோழி வெள்ளை முட்டை யிடும். வெள்ளைக்கோழி, கருப்பு முட்டை யிடுமா? அதனால்தான் சொன்னேன்.

—வி. எம். சுந்தரம் செட்டியார், கரூர்.

* * *

ஜெயிலதிகாரி:—அடே கைதி இன்று உன் அறைக்கு கலெக்டர் வரப்போகிறார்.

கைதி:—அவர் எங்கே திருடினார்?

—அ, லெ அ. கருப்பையா, செய்கோன்.

சிறுவன்:—அம்மா! இன்றேது இவ்வளவு பலகார பட்சணங்கள்.

தாயார்:—மூன்றாவது வீட்டில் இன்று எட்டாந்துக்கம் (எட்டாவது துக்கதினம) அவர்கள் இதை கொடுத்தனுப்பினார்கள்.

சிறுவன்:—(சந்தோஷமாய்) நம் வீட்டில் என்றைக்கு எட்டாந் துக்கம்?

—எம். என். எம். பாவலர்.

* * *

ஆசிரியர்:—நீ! கிராமப்போனைப் பார்த்திருக்கின்றாயா?

பையன்:—நான் இன்னும் கிராமத்திற்கே போனதில்லை. கிராமப் போனை எப்படி பார்த்திருப்பேன்?

—எஸ். ஆர். அத்தியப்பர், சென்னை.

மனித இயந்திரம்

கவலை ஒழி

கவலை என்பது மனித இயந்திரத்தை நாசமாக்கும் ஒரு பெரிய ராக்ஷசன். எவ்வளவு பெரிய மரத்தையும், சிறிய கறையான் அரித்து நாசமாக்கி விடும். அதைப்போல, இந்த கவலை மனிதரின் உள்ளத்தையும் உடலையும் பிழிந்து விடும்.

எதற்காக கவலைப்படவேண்டும்? கடமையை ஒழுங்காய் நிறைவேற்றுகிறவன் எதற்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை. இவன் கவலைப்படுவதால் நடக்கப்போகிறது எதுவுமில்லை. கவலைக்கும் ஒரு எல்லை வேண்டும். எடுத்ததற்கெல்லாம் கவலைப்படுவது அறியாமையாகும். இரும்பை காந்தம் இழுப்பது போல, கவலையை மனம் இழுக்கிறது. அதை சேரவிடாமல் விரட்டி யடிக்கவேண்டும். இந்தப் பழக்கம் ஒவ்வொருவருக்கும் அவசியமானது.

ஏதாவது மனதிற்குப் பிடிக்காத விஷயமிருந்தால், அது உள்ளத்திலேயே அமிழ்ந்து கிடக்கும். சிற்சில சமயங்களில் அந்த நினைப்பு தலைதூக்கும் போது நமக்கு கவலைவருகிறது. கவலையினால் கோபம் வந்தால் மடமடவென்று பேசுகிறோம். இம்மாதிரி கோபம் வருகிற சமயத்தில் உட்கார்ந்து நிதானமாய் யோசித்துப் பாருங்கள், எப்பொழுதோ ஒரு சமயம் நடந்த காரியம் நினைப்பில் வந்ததாலே கோபம் வந்தது என்பதை அறியலாம். எப்பவோ நடந்த காரியத்திற்கு இப்பொழுது கோபப்படுவதால் பயனுண்டா? அதற்காக மூஞ்சியை தூக்கிக் கொண்டு நடப்பதால் என்ன லாபம்? ஒன்றுமில்லை.

மனதில் பதிந்து கிடக்கும் பிடிக்காத விஷயங்களை வேருடன் களையவேண்டும். அவற்றை பிறருடன் பேசுவதால் மனப்பாரம் குறையும். அதன் நினைப்புக்கு பழைய சக்தி இல்லாமல் போகும். மனம் நிம்மதியாயிருக்கும்.

எந்தக் காரணத்தினாலும் கவலை கொள்ளவே கூடாது. "தாமரை இலை தண்ணீரைப் போல வாழவேண்டும்"; "கர்மம் செய்வதே நமது கடமை, பலனை எதிர்பார்ப்பது நமது வேலையல்ல" இந்த வாக்கியங்களெல்லாம் மணிகளாகும். கருதிக்கருதி கவலைப்படுவதை தொலைத்தால், அன்றே நீங்கள் விடுதலை பெறுவீர்கள். அன்றே மனித இயந்திரம் எத்தகைய பெரிய காரியங்களையும் செய்யத் தயாராயிருக்கும்.

:: கண்டதும் காதல் ::

"கண்டதும் காதல்" என்ற விஷயத்தைப் பற்றி சென்ற "காந்தி" மலரில் "தேவிதாசன்" எழுதியதை நண்பர்கள் படித்திருக்கலாம். வாழ்வில் நடக்கும் நிகழ்ச்சிகளில் "காதல்" மாபெரிய நிகழ்ச்சியாகையால், இவ்விஷயத்தை விரிவாக ஆராய்ச்சி பூர்வமாக தமிழர்கள் அறியவேண்டியது அவசியம். நண்பர் கே. சீனிவாசன் தமது உணர்ச்சி நிறைந்த நடையில் இதைப்பற்றி எழுதியதை கீழே பிரசுரித்திருக்கிறோம். நண்பர்கள் கவனமாய்ப் படிப்பார்களாக. அடுத்த மலரில் இதைப் பற்றி நண்பர் வ. ரா. எழுதுவார். (ப—ர்.)

"கண்டதும் காதல்"— இதைக் கேட்டதும் பலருக்கு வியப்பு வரலாம் சிலருக்கு வெறுப்பும் வரலாம். வியப்பும் வெறுப்பும் அறியாமை காரணமாகப் பிறப்பவை. அறியாமைக்கு ஒரே மருந்துதான் உண்டு. அறியாமைக்கு மருந்து அறிவுடன் பொருந்திய ஆராய்ச்சிதான்.

அன்று வாதத்தைக் கிளப்பின ஸர்க்கார் அதிகாரி "கண்டதுமாவது காதலாவது? இதெல்லாம் கவியின் புனேச்சுருட்டு. ஜோடிப்பு வியவகாரம். நடைமுறையில் அவ்வாறு ஒருநாளும் நடக்காது." என்று எளிதாகச் சொன்னர். இரண்டொரு நண்பர்கள் அவரைத் தட்டிப் பேசவே அவர் தன்னை மிகவும் சமத்காரமாக நினைத்துக் கொண்டு "அதெல்லாம் இருக்கட்டும். உங்கள் அனுபவத்தில் உண்டானல் சொல்லுங்கள் பார்ப்போம். கண்டதும் காதல் என்பது உண்மையென்பதும் பொய் என்பதும் அப்பொழுது வெளியாய்விடும்' என்று வாதத்தை மடக்கினர். இவரது அநுபவத்தில் கண்டதும் காதல் என்ற உணர்ச்சி உதித்திருக்குமேயாகில் இவரைப்பற்றி ஒரு சிறு ராமாயணமோ, இலியடோ, சிலப்பதிகாரமோ, சில்லரைப் பாட்டுகள் வேறெவையோ எழுதி யிருந்திருக்க வேண்டும் என்பது இவருக்கு விளங்காமல் போய்விட்டது. கண்டதும் காதல் கொள்ளத்தக்க மேன்மை படைத்தவர்கள்தான் கதாநாயகர்களாக விளங்குகிறர்கள். அவர்கள்தான் பாடல் பெறும் பாக்கியசாலிகள். "உழைக்கும் மட்டும் சம்பளம், ஓய்ந்த பின் பென்ஷன், ஒழிந்த பிறகு ஒன்றுமில்லை" என்கிற நடைமுறைவாதிகளுக்குக் காதல் என்ற சொல்லுக்குப் பொருள் இல்லை. இவர்களுக்குக் காதலின் சிறப்பை எடுத்து ஓதுதல் குருடனுக்கு விளக்குக் காட்டிய மடமையை ஒக்கும்.

காதல் என்பது பருவத்தில் தோன்றி வாழ்வை ஆட்டிவைக்

கும் ஒரு பேருணர்ச்சி. சிறு உணர்ச்சி என்றால் குறித்த பொருளைப் பொறுத்த மட்டில் நல்லது கெட்டது என்று சொல்ல இயலும். பேருணர்ச்சிகளையும், பெரிய நிகழ்ச்சிகளையும் நல்லது பொல்லாதது என்று வகுக்க இயலாது. பாற்கடலை கடைந்த தினத்தில் ஆலஹால மும் தோன்றிற்று. அமிர்தமும் பின் பிறந்தது. காதல் உணர்ச்சியின் தீய விளைவுகளைக் கண்டு அஞ்சிய மாந்தர் அதற்கு அணைகோலினர். சீலமென்றும், ஆசாரமென்றும், தர்மமென்றும், சாஸ்திரமென்றும் தடைகள் உண்டாக்கினார்கள். வெள்ளத்தைத் தடுக்க அன்று போட்ட அணை சில இடங்களில் ஊற்றுக்கண்களையே தூர்த்துவிட்டது. அவ்வாறு ஊற்றுக் கண் தூர்ந்து போன இடங்களில் ஒன்று இந்நாளைய ஹிந்து சமூகம். இல்லாவிட்டால் கண்டதும் காதல் என்பது மெய்யா பொய்யா என்ற வாதமே கிளம்பி யிராது.

கண்டதும் காதல் என்பது கட்டுக்கதை; இது கவிகளின் பித்தலாட்டம் என்று உரைப்பவர்களின் கூற்று என்ன ? இவர்கள் சொல்லுகிறார்கள். "வாழ்வைப் பாருங்கள். முன் பின் அறியாத குழந்தைகளுக்கு மணம் முடித்துவைக்கப் படுகிறது. இவர்கள் செவ்வனே இல்லறம் நடத்தி தமது கடன்களைக் கழிக்கின்றனர். இவர்களுக்கு ஏற்பட்ட தாம்பத்திய நட்பு காதலின் விளைவு அல்லவே! வேறு முறையிலும் கவனியுங்கள். காதல் என்ற உணர்ச்சிதோன்றி கட்டுக்களை மீறுகிற இடங்களிலும், அது நாளடைவில் வளர்ந்ததாகத் தெரிகிறதே யன்றி கணத்தில் பிறந்து விபரீதங்கள் விளைவிப்பதாகத் தெரியவில்லை. கண்டு, கேட்டு, கொண்டு கொடுத்து, உண்டு, உயிர்த்து, வளருவது இந்தக் காதல் என்னும் உணர்ச்சி. இது பையப் பைய வளருவதே யன்றி படீரென்று தோன்றி இயங்குவது அன்று. மேலும் கவனியுங்கள். காதல் காட்சி மட்டில் என்று ஊர்ஜிதமாய் விட்டால், காணும் வீண்; தடங் காவும் வீண்: பால்மதியம வீண்; பஞ்சரத்து கிளியும் வீண்; தமிழ்த்தென்றலும் வீண்; தையலாள் நினைவும் வீண் என்று முடியும்." இவ்வளவு தான் இவர்கள் கோடிக்கக்கூடியது.

காதல் என்பது பேருணர்ச்சி என்று சொன்னேன். அது ஒரு தெய்வீக உணர்ச்சி. அமானுஷ்யமான ஒரு சக்தி. அதனின் ஒரு பகுதிதான் ஜீவ உடலில் தோன்றி இயங்குவது. மூல சக்திகளின் இயல்பை அறிந்தவர்கள்தான் இந்த காந்தத்தின், இந்த வசிகரத்தின், இந்த உணர்ச்சி வெள்ளத்தின் போக்கை அறிய வல்லவர்கள். மூல சக்திகளை அறிந்தவர்கள் கவிகளும், ரிஷிகளுமே. மூல சக்தியின் நவரஸங்களைக்கவிகள் உண்டு, அறிந்தவர்கள். மூல சக்தியின் அடிப்படை சாந்தத்தை தேர்ந்து தெளிந்தவர்

கள் ரிஷிகள். நவரஸங்களை உணரவோ, உண்ணவோ, கவிகளையே வழிகாட்டிகளாகக் கொள்ளவேண்டும்.

எந்நாட்டுக் கவியை வேண்டுமானாலும் எடுங்கள். எக்காலத்துக் காவியத்தை வேண்டுமானாலும் எடுங்கள். மூண்டு எழுந்து சுடரும் காதற்கனவே என்னுட்டுப்பாட்டுக்கும் ஒளி. பாரிஸைக் கண்ட ஹெலன், நாள் நக்ஷத்திரம் பார்த்து அவனுக்கு இணங்கவில்லை. வேறுநாட்டு இலக்கியமேன்? கம்பனையே எடுத்துக் காட்டுவோம். வீதியில் செல்லும் அரசிளங் குமரன் ராமனின்கண்களும், மாடத்தில்உலாவிவரும் அரசிளங்குமரி சீதையின் கண்களும் சந்தித்தன. நிகழ்ந்ததென்ன?

எண்ணரு நலத்தினாள்
இனைய நின்றுழி
கண்ணொடு கண்ணினை
கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது
உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்.

இதை வசனத்தில்சொன்னால் பழத்தில் சாறைப் பிழிந்துவிட்டு சக்கையை ஊட்டியது போல் இருக்கும். பொருள் எளிதில் விளங்கவென்றே பதங்களைப் பிரித்திருக்கிறேன். கண்கள் காணவேண்டும் என்பது இல்லை. பெயரையோ, வடிவ வர்ணனையையோ கேட்டதும்காதல் எழக்கூடும். அன்னம் சொன்ன அணங்கின் அழகில் தோய்ந்து அவளிடம் அன்னத்தையே தூது அனுப்பினான் நளன். தமயந்தியைக் காணும் முன்னரே தன் மனத்தை இழந்துவிட்டான். "வழி மேல்விழிவைத்து நன்னுதலாள் நாமமொழிமேல் மனம்வைத்து" வாடி ஏங்கினாள் என்று புகழேந்தி வர்ணிக்கிறார். வர்ணனை பொய்யல்ல. இராவணனுக்கு நிகழ்ந்ததுவும் இதுவே. சூர்ப்பநகை தனக்கு நேர்ந்த அவமானத்தை விரித்து முடிக்கையில் இராவணன் மனநிலை எவ்வாறு இருந்தது? எடுப்பில் துக்கம் கோபம். முடிவில் துக்கம் கோபம். மறைந்து காமம்,

கரனையும் மறந்தான் தன்
தங்கை மூக்கைக் கடிந்தான்
உரனையும் மறந்தான் உற்ற
பழியையும் மறந்தான்வெற்றி
அரனையும் கொண்ட காம
னம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான் கேட்ட
மங்கையை மறந்திலாதான்.

முடிவில் எல்லாவற்றையும் மறந்துவிட்டு சீதையைமட்டும் நினைத்துப் புழுங்கினான். அவன் கண்ட சீதையை அசோகவனத்தில்சிறையிட்டான். காணுவதற்கு முன்னமேயே சீதையை தன் மனமென்னும் சிறையில் அடைத்துவிட்டான். சீதையென்னும் நாமமும் சிந்தையும் ஒன்றாய்

அவதிப்பட்டான். இப்படி எல்லாம் நமக்கு நேர்ந்திருக்கிறதா என்று ஸர்க்கார் அதிகாரி கேட்கிறார். இப்படிப்பட்ட அனுபவத்தைத் தாங்கக்கூடிய மனவலியையோ, மன நுட்பத்தையோ நாம் படைத்திருந்தால் நம் வாழ்வும் ஒரு ராமாயணமாகவோ, நளன் கதைபாகவோ முடிந்திருக்கும். புராணம் வரையில்கூட போகவேண்டாம். ராஜகுமாரி ஸம்யுக்தை என்ன செய்தாள்? பிருதிவிராஜனைக் காணு முன்னரே அவன் சௌந்தரியத்திலும் சௌரியத்திலும் ஈடுபட்டுப் போகவில்லையா? விளைவை நினையாது பெருக்கு எடுத்து ஓடும் காதல் வெள்ளம் நினைத்து நினைத்து உண்டாவதல்ல. காணடதும் போதும், கேட்டதும் போதும். "கண்டதும் காதல்" என்ற வழக்கு எப்படிப் பிறந்தது என்றால் "ஸர்வேந்திரியாணாம் நயனம பிரதானம்" என்பதாலும், காதலுக்கும் கண்ணுக்கும் தொன்றுதொடடு இருந்து வரும் உறவினாலும்தான் என்று சொல்லவேண்டும். "கண்வழிப் புகுந்த காமநோய்" என்று கம்பர் கூறுவதும், "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில" என்ற வள்ளுவர் மொழியும் இவ்வழக்கை ஒட்டியே பிறந்தவை. நடைமுறையில் தோன்றும் சிறு காதலிலும் கண்கள் செய்யும் கைங்கரியத்தை நோக்கினால் பெருங் காதலில் கண்கள் என்ன செய்யக்கூடியவை என்பது ஒருவாறு விளங்கும். இது சர்க்கார் அதிகாரியும் அறிந்த விஷயமா யிருக்கலாம்.

கக்ஷியில் கடைசிப் பாகம் மனக் குழப்பத்தால் ஏற்பட்டது. காதல் உள்ளத்திலெழும் உணர்ச்சி. கானும், தடங்காவும், பொய்கையும், பூம்பொழிலும், பால்மதியும் பஞ்சரத்துக் கிளியும் காதல் உணர்ச்சிகளல்ல. பொறி வேறு. அதைப் பெருக்கி ஜ்வாலையாக்கும் திரி வேறு. திரியின் தர்மத்தைத் தீயின் மேல் ஏற்றுவது பொருத்தமாகாது.

அன்று வாதத்தில் நண்பர் வ. ரா. சொன்ன இரண்டு விஷயங்களில் ஒன்றுதான் ஏற்கத்தக்கது. லாபநஷ்டம் பார்க்கிறவர்களுக்கு கண்டதும் காதல் ஏற்படாது என்று சொன்னார். இது உண்மை. லாபநஷ்டம் பார்க்கும் வரட்டுப் புள்ளிகளுக்குக் கண்டதும் காதல் என்ற உணர்ச்சி மட்டுமன்று, காதல் என்ற உணர்ச்சியே ஒருநாளும் தோன்றாது. கணக்குப் பார்த்தால் காதல் அவ்வளவும் நஷ்டம். அந்தக் கணக்கில் அவ்வளவும் பற்றுத்தான். முதல் அத்தனையையும் முதலிலேயே கொட்டிக் கொடுத்துவிட வேண்டும். லாபநஷ்டம் பார்ப்பவர்களா முதலைக் கொட்டிக் கொடுக்கும் தீரர்கள்?

வ. ரா. வேறொன்று சொன்னார். "ஒவ்வொருவருக்கும் ஒரு காலத்தில் நிகழக்கூடிய

அநுபவம் இது" என்று சொன்னார். இதை நான் ஏற்கவில்லை. "ஒரு காலத்தில் நிகழக்கூடிய" என்றால் அடுத்த காலத்தில் மறைந்துவிடும் என்று பொருள் படுகிறது. வாழ்வில் உயர்ந்த லட்சியம் என்று கவிகள் எடுத்துக் காட்டி வரும் காதல், தோன்றி மறையும் வஸ்து அல்ல என்பது எனது கருத்து. காதலுக்கு அவஸரங்கள் வகுத்தவர்கள் உடலுக்கு அழிவு காட்டி யிருக்கிறார்களே அல்லாமல் அந்த ஆசைக்கு அழிவுகாட்டவில்லை. விப்ரயோகம், சுப்ரயோகம், மோகம், சோகம், மரணம் என்று படிகள் வகுத்தஇடத்தில், இடைவிடாது சிந்தித்தல், இடைவிடாது வாய்விட்டுச்சொல்லல், எப்பொருளையும், காதலன், காதலி மயமாகக் காணுதல், செயல் இழந்து அவம் ஆதல், உயிர் இழந்து சவம் ஆதல் இவைகளையே சாஸ்திரங்கள் காட்டுகின்றன. ஜெயம் பெற்ற விடத்தில் இன்பமும் இடுக்கண் பட்ட இடத்தில் மரணமுமே லட்சியக் காதலுக்கு முடிவு. அதற்குத் தேய்வு இல்லை. ரோமியோ ஜூலியட்டும், ஷரீன் பர்ஹாதும், லைலா மஜ்னூவும், ஸீதா ராவணனும் இவ்வுண்மைக்கு இலக்கணங்கள். முன் எடுத்துக்காட்டிய கம்பர்பாட்டுக்கேற்ப எதையும் மறந்து தானும் காதலின் உருவமுமாய் நிற்கும் மனோ நிலையே காதல் நிலை.

அவ்வாறானால் தோன்றிமறையும் நிலை என்ன? இதற்கும் நடைமுறையில் காதல் என்று தான் பெயரிட்டு அழைக்கிறார்கள். பெண் கண்ட இடத்தில் புணர்ச்சி விழையும் பேயுணர்ச்சியிலிருந்து உடற்பசி நோக்கி பெண்ணுறவு வேண்டும், வேண்டாவிருப்பம் வரையில் எல்லா உணர்ச்சிகளுக்கும் நடை முறையில் "காதல்" என்ற பொதுப் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. அன்று வாதத்தில் அந்த சர்க்கார் அதிகாரி வேறொன்று சொன்னார் "சம்பாப் பயிரும் சக்கிலிப் பெண்ணும் பருவத்தில் நன்றாகத்தா னிருக்கும்" தேளுக்குக் கொடுக்கில் விஷம் இருப்பதைப் போல் இந்தப் பழமொழியின் கொடுக்கில் கயமை இருக்கிறது. நான் மேல் கூறிய பேயுணர்ச்சியை இப் பழமொழி விளக்குகிறது. இதைக் "கண்டதும் காதல்" என்னும் சூத்திரத்தில் சேர்க்க எனக்கு மனமில்லை. தர்க்க முறையில் சேர்க்கலாம். சொல்லில் ஒவ்வும்; பொருளில் ஒவ்வாது.

கண்டதும் காதல் என்பது உண்டு. லட்சிய முறையில் உண்டு. வீர வாழ்வில் உண்டு. இன்பக் கவியில்உண்டு. எழுதும் சித்திரத்தில் உண்டு. உள்ளக் கடலில் உண்டு. சித்திரக்குளச் சந்தியில் இல்லை. கொத்தவால் சாவடியில் இல்லை. பொம்மலாட்ட மணக்கோலத்தில் இல்லை. பொய் ஒழுக்க இல்லறத்தில் இல்லை.

மகாத்மா வாழ்க்கை

வக்கீல் தொழிலில் உண்மை

மகாத்மா காந்தி ஒரு பாரிஸ்டர் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? வக்கீல் தொழில் நடத்துவதற்காகவே அவர் தென்னுப்பிரிக்கா சென்ருர். அந்தக் காலத்தில் ஆசாமி வெகு முறுக்கு! எப்பொழுதும் "புல் சூட்"தான். முழத்துண்டு பக்கிரியாக இப்பொழுது இருக்கிருரே, அந்தமாதிரி அச்சமயம் இல்லை.



அவர் அக்காலத்தில் எப்படியிருந்தார் என்பதை இந்தப் படத்திலிருந்து அறிந்துகொள்ளுங்கள். உடையில் அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் மாறுதல் இருந்தபோதிலும, ஒரு விஷயத்தில் மட்டும், அவர் பால்யத்திலிருந்து எவ்வித மாறுதலுமில்லாமல் ஒரே மாதிரியாயிருக்கிருர். அது என்ன தெரியுமா? அதுதான் சத்தியம்! அவமானப்பட நேர்ந்தாலும், தாங்க முடியாத நஷ்ட மேற்பட்டாலும், தலையே போக நேர்ந்தாலும், அவர் உண்மை பேசுவதைவிட்டு விலகுவதே யில்லை!

வக்கீல் தொழிலில் உண்மை பேசுவது, முயற்கொம்பு மாதிரி வக்கீல்களுக்கும், கோர்ட்டு அநுபவம் பெற்றவர்களுக்கும் தோன்றலாம். ஆனல் மகாத்மா காந்தி வக்கில்தொழில் நடத்தியபோது, தனக்கு உண்மையென்று தோன்றிய வழக்குகளைமட்டுமே எடுதது வந்தார். அவர் கட்சிக்காரர் பொய் சொல்லுகிருர் என்று தெரிந்தால் வழக்கை ஒப்புக்கொள்ள மாட்டார். அவரிடம் பொய் சொல்ல கட்சிக்காரர்கள் நடுங்குவார்கள். வழக்கு பாதி நடந்து கொண்டிருக்கும்போது, தமது கட்சிக்காரர் வழக்கு பொய் வழக்கு என்று தெரிந்துகொண்டால், உடனே கோர்ட்டாரிடம் அப்படியே சொல்லிவிடுவார்.

ஜோஹன்ஸ்பர்க் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஒரு வழக்கில் இவர் ஆஜரானுர். பாதி வழக்கில் தமது கட்சிக்காரன் தன்னிடம் பொய் சொல்லிவிட்டதாக அறிந்தார். உடனே மாஜிஸ்திரேட்

டைப் பார்த்து, தமது வழக்கு பொய்வழக்கென்றும், வழக்கை தள்ளிவிடும்படியும் கூறினர். மாஜிஸ்திரேட் ஆச்சரியமடைந்தார். மற்ற வக்கீல்கள் பிரமிப்படைந்தனர். மகாத்மா காந்தி கருப்பு மனிதரா யிருந்தாலும், இவருடைய சத்தியத்தைக் கண்டு வெள்ளை வக்கீல்களும் மாஜிஸ்திரேட்டுகளும் இவரிடம் அதிக மரியாதை கொண்டார்கள்.

பார்சி ரஸ்டம்ஜி என்பவர் தென்னாப்பிரிக்காவில் மகாத்மாவின் சிறந்த நண்பர்களில் ஒருவர். குடும்ப விஷயங்கள் உள்பட சகல விஷயங்களையும் ஒளிவு மறைவில்லாமல் மகாத்மாவிடம் கூறி வருவார். ஆனால் ஒன்றைமட்டும் ஒளித்து வந்தார். அதில் அகப்பட்டுக்கொள்ளவே, மகாத்மாவிடம் வந்து கண்ணீர் விட்டார். ரஸ்டம்ஜி பெரிய வர்த்தகர். சுங்க அதிகாரிகள் எல்லாரும் அவருக்கு நண்பர்கள். ஆகவே அவர் சொல்லுவதை நம்பி அவர் இறக்குமதி சரக்குகளை சோதிக்காமல், அவர் காட்டிய பட்டியல்படி வரி விரித்து வந்தார்கள். ஆனால் பல பட்டியல்களை காட்டாமல் ஏராளமாக திருட்டுத்தனமாய் வரி யில்லாமல் இறக்குமதி செய்வது வழக்கம். இது மகாத்மாவுக்கு தெரியாது. இந்த வேலையில் ஒருதடவை அகப்பட்டுக்கொண்டார். வழக்கு கோர்ட்டுக்கு போனால் ஜெயில் தண்டனை கிடைப்பது உறுதி. வர்த்தக உலகத்தில் பெயரும் கெட்டுப்போகும். இந்த ஆபத்திலிருந்து தப்புவிக்கும்படி மகாத்மாவிடம் கண்ணீர் விட்டார். மகாத்மா முறைதான் தெரிந்ததாயிற்றே. "என்னிடம் உண்மையை ஒப்புக்கொண்டால் மட்டும் போதாது. சர்க்காரிடமும் உண்மையை ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படியானால் இதில் தலையிடுகிறேன்" என்று மகாத்மா சொன்னர். ரஸ்டம்ஜி முதலில் தயங்கினாலும், மகாத்மா மீதுள்ள நம்பிகையால், முடிவில் ஒப்புக்கொண்டார்.

மகாத்மா சுங்க அதிகாரிகளையும், அட்டர்னி ஜெனரலையும் கண்டு பேசி உண்மையைக் கூறினர். "எந்த உண்மையைக் கேட்டாலும் ஆம் என்ற பதிலைத் தவிர இல்லை என்ற பதிலே உங்களிடம் கிடையாது போலிருக்கிறதே" என்று அட்டர்னி ஜெனரல் வியப்புடன் கேட்டார். எல்லா விஷயங்களையும் ஒளிமறை வில்லாமல் மகாத்மா கூறியதால் அதிகாரிகள் திருப்தியடைந்து வெறும் அபராதத்தோடு ரஸ்டம்ஜியை விட்டு விட்டார்கள்.

உண்மை பேசியதால் இவ்வளவோடு தப்பித்துக்கொண்டோமென்று ரஸ்டம்ஜி திருப்தி யடைந்தார். இந்த வழக்கு சம்பந்தமான விவரங்களை எழுதி கண்ணாடிபோட்டு தமது கடையில் மாட்டினர்.

வக்கீல் தொழிலில் உண்மை ஒன்றே பேசுவது என்ற கொள்கையை கடைப்பிடித்தவர் மகாத்மா காந்தி ஒருவரே.

*"எனது மாஜி கணவர்"

(பி. எஸ். ராமய்யா)

ஸ்ரீமதி சாரதா சொல்லுகிறாள் :—

எங்கள் பாட்டி வரையில், நமது சமூகத்தில் புது சீர்திருத்தங்கள் வருவதைப்பற்றி ஆக்ஷேபனையே யில்லை. ஆனால் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறவர்கள் திடீரென்று எதிர்பாராதிருக்கும்பொழுது அந்த விஷயத்திற்குப் பிராபல்யம் கொடுப்பதையும், எங்கள் பாட்டியினிடம் கேட்காமல் அதற்காகச் சட்டங்கள் செய்வதையுமே, அவள் ஆக்ஷேபிக்கிறாள். ஆனால் தற்சமயம் அவளே ஒரு விஷயத்தில் சீர்திருத்தம் ஆரம்பிக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டதுதான் வியப்பு.

மூன்று வருஷங்களுக்கு முன் சாரதாச் சட்டம் அமுலுக்கு வந்ததல்லவா? அந்தச்சமயம் எங்கள் பாட்டி அதைக் கேள்விப்பட்டவுடன், அடைந்த கோபத்திற்கு அளவே யில்லை. கடைசியாய் அவள் கோபம் முழுவதும் என் அப்பா மேல பாய்ந்தது. "என்னடா கிட்டு! என்னமோ சட்டமாமே! பொண் கொழந்தைகளுக்கெல்லாம் பதினாலு வயசாகாமே, கலியாணம் செய்யப்படாதாமே! இதென்னடா கிருஸ்துவன் ராஜாங்கத்துலே நாம்பகூட கிருஸ்துவனாட்டம் ஆயிடணு மிங்கறானா? நம்பளுக்கு அந்தத் தொல்லை யெல்லாம் எண்டப்பா? நம்ம சாரதாவுக்கு இந்த வருஷமே நல்ல வரனாப்பாத்து ஒரு தாலியைக் கட்டரத்துக்கு ஏற்பாடு பண்ணுடு. நம்ப கொலமென்ன கோத்திரமென்ன பொண் பெரிசானப்பரம் கலியணம் பண்றதாவது? உடனே வரனைப்பாரு ஆயிரம் ஐந்நூறு கூடப் போனாலும் பரவாயில்லே. இந்த மாசத்துக்குள்ளேயே வரன் பாத்தாகணும்" என்று அவள் கடைசியாய் உத்திரவிட்டு, அப்பாவை வரன் வேட்டைக்குத் தயார் செய்தாள்.

அப்பொழுதுதான் எனக்கு வயது பதினொன்று நிறைந்து பன்னிரண்டாவது ஆரம்பம். அப்பா தம்மை ஒரு சீர்திருத்த வாதி என்று சொல்லிக் கொள்ளாவிட்டாலும், சீர்திருத்தக்காரர்களின் வாதங்களிலுள்ள நியாய அநியாயத்தை அறிந்துகொண்டு, அவர்களுக்கு அடிக்கடி கக்ஷி பேசுவார். ஆனாலும் பாட்டி சொல்லி விட்டால், அப்புறம் 'பிரிவி கவுன்ஸில்' வரை அப்பீல் கிடையாது. ஆகையால், அப்பா அடுத்த வாரமே எனக்குப் புருஷன் தேடப் புறப்பட்டுவிட்டார்.

---

* பரிசு பெற்ற சிறு கதை.

அவர் திரும்பி வர இரண்டு வாரங்களாயின. திரும்பி வந்தவர் சட்டையைக்கூடக் கழற்ருமல் "அம்மா! மைலாப்பூரில் ஒருவான் பார்த்திருக்கிறேன். பையனுடைய தகப்பனுருக்குப் போலீஸில் ஜில்லா சூப்பிரண்டண்டு உத்தியோகம். ஒரே பையன். பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டு சீமைக்குப்போய் படிக்க உத்தேசமாம். பூர்விக சொத்து கொஞ்ச மிருக்கிறதாம். எனக்கு இடம் ரொம்பப் பிடித்திருக்கிறது. அவர்கள் அடுத்த புதன்கிழமை இங்கே வருகிருர்கள். வந்து பெண்ணைப் பார்த்துவிட்டு நிச்சயம் செய்துகொண்டு போவதாகச் சொல்லி யிருக்கிருர்கள்" என்று பாட்டியினிடம் சொன்னுர்.

சொன்னபடிக்கே, பிள்ளை வீட்டார் வந்து சேர்ந்தார்கள் அன்று எங்கள் வீட்டில் பெரிய விருந்து ஒன்று நடந்தது. அன்று பகல் மூன்றுமணி|வரை நானுக முயற்சித்தது பாதியாகவும், எங்கள் பாட்டி செய்தது பாதியாகவும் நான் அவர்கள் கண்ணில் படாமலே யிருந்துவிட்டேன்.

பகல் மூன்று மணிக்கு எனக்குப் பரீக்ஷை நடந்தது. என்னுடைய அங்க அவயவ அமைப்பு லக்ஷணங்களையும் என்னுடைய சங்கீத ஞானம் படிப்பு ஞானம் முதலியவற்றையும் பரீக்ஷித்தார்கள். எனக்கு மாமனுராக வரவிருந்த போலீஸ் அதிகாரி ஒரு பெரிய வம்புக்கார மனிதர் என்று தோன்றியது. "கொஞ்சம நட, அம்மா, பார்க்கலாம்." என்று என்னை நடக்கச் சொல்லியும் பார்த்தார்.

அவர்கள் திருப்தியடைந்து, அடியாளை அவர்களுடைய குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளச் சம்மதிப்பதாகவும் தெரிவித்தாகள். வரதக்ஷிணை ரொக்கமாக ஆருயிரம் ரூபாய் கொடுப்பதென்றும், வேறு வகைகளாக நாலாயிரம சீர் செய்வதென்றும் அப்பா ஒப்புக்கொண்டார்.

கலியாணம் நடந்து ஊருக்குச்சென்ற என் கணவன் இதுவரை இந்தப் பக்கம் வரவேயில்லை. ஆனுல் அவர் எனக்காக லோப் முதலிய சாமான்களை யனுப்புவதும், கடிதங்கள் எழுதுவதுமாக, மனுபோட்டுக் கொண்டிருந்தார்

சிறிது காலத்துக்குப் பின், பாட்டியும் அவள் தொந்திரவால் அப்பாவும், என்னுடைய சாந்தி கலியாணத்தைப்பற்றி ரொம்பவும் கவலையடைந்தனர். பிள்ளை வீட்டாருக்கு அதைப்பற்றி எழுதினதில், "பையன் இந்த வருஷம் பரீக்ஷைக்குப்போய் வரும்வரை சாந்திக் கலியாணத்தை நடத்துவது அனுசிதமென்று நாங்கள் நினைக்கிருேம். ஆகையால் அதைத் தற்போதைக்கு நிறுத்திவைக்க வேண்டியதுதான்" என்று என் மாமனுர் பதில் எழுதிவிட்டார்.

"அவர்" எனக்கு எழுதிய கடிதத்தில் "இப்பொழுது அதை நடத்துவதால் என் பரீக்ஷைக்கு இடைஞ்சல் வரக் கூடுமென்று எல்லாரும் பயப்படுகிறார்கள். எனக்கும் கொஞ்சம் யோசனையாகத் தானிருக்கிறது. பரீக்ஷை முடிந்தவுடன நடத்திக்கொள்வதென்றும், அடுத்த வருஷம் உன்னையும் என்னுடன் சீமைக்கு அழைத்துக்கொண்டு போவதென்றும் நான் தீர்மானித்திருக்கிறேன். ஆகையால் இந்த இடைக்காலத்தில் நீ கூடியவரை உன்னுடைய இங்கிலீஷ் பாஷா ஞானத்தை விருத்திசெய்து கொள்ளவும், மேல்நாட்டு யாத்திரைக்குத் தயார்செய்து கொள்ளவும் முயலுவாயென்று நம்புகிறேன்" என்று எழுதியிருந்தார்.

அந்தக்கடிதம் வந்த மூன்றும் மாதம் அப்பாவுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் 'அவர்' இரண்டு வாரமாக நிரம்பவும் அசௌக்கியமாகப் படுத்திருப்பதாகவும், அப்பா உடனே புறப்பட்டு வர வேண்டுமென்றும் எழுதி யிருந்தது. அதைப் படிக்கக் கேட்டவுடன் பாட்டி ஏகமாகப் பயந்துபோய் விட்டாள். அவளுக்குச் சமாதானம் செல்லும் மாதிரியாக, அப்பா எனக்கும் தைரியம் சொல்லிவிட்டு, அன்றைக்கே புறப்பட்டுச் சென்னைக்குச் சென்றார்.

அதன் பிறகு அப்பாவிட மிருந்து இரண்டு மூன்று கடிதங்கள் வந்தன. அவற்றிலெல்லாம் மாப்பிள்ளை கொஞ்சம் சௌக்கியமடைந்திருப்பதாகவும் கவலைப்படக்கூடாதென்றும், "நீ உடம்பை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளவும்" என்றும் எழுதப் பட்டிருந்தன. கடைசியாக வந்த கடிதம்தான் என் மனத்தைக் குழப்பிவிட்டது.

சென்னை, 17-2-33.

சௌபாக்கியவதி சாரதாவுக்கு, அநேக ஆசிர்வாதம்; க்ஷேமம்:

நான் உனக்கு இதற்குமுன் எழுதிய கடிதங்களில் விஷயத்தை மறைத்தே, எழுதிக்கொண்டு வந்தேன். அதற்குக் காரணமும் உண்மையை என்னால் நம்ப முடியாமலிருந்தது தான். ஆனால் தற் சமயம் காரியம் மனித சக்திக்கு மீறியதாகப் போய்விட்டது. ஆகையால் உனக்கு விவரமாக உண்மையைத் தெரிவிக்கத் தீர்மானித்துவிட்டேன்.

மாப்பிள்ளை சுமார் ஒரு மாதத்திற்கு முன் உடம்பெல்லாம் வலியாக விருக்கிறதென்று சொல்லிப் படுத்துக்கொண்டாராம். உடனே டாக்டரை வரவழைத்து பார்க்கச் சொன்னார்கள். அவர் உடம்பைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு மருந்து கொடுத்தார். ஆனால் உடம்பில் வலி குறைவதற்குப் பதிலாக தினந்தினம் அதிகரி

த்துக்கொண்டே போயிற்றும். கடைசியாய் டாக்டருக்கே அது என்ன வியாதியென்று கண்டுகொள்ள முடியாததால, மாப்பிள்ளையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகத் தீர்மானிக்கப்பட்டது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவரை வைத்து, எக்ஸ்ரே மூலம், பரீக்ஷை செய்து எலெக்ட்ரிக் சிகிச்சைகள் செய்து வந்தார்கள்.

அவருடைய உடம்பு முழுவதுமிருந்த வலி, சென்ற ஒரு வாரமாகக் குறிப்பிட்ட சில பாகஙகளில் மாத்திரம் இருப்பாகச் சொல்லி வந்தார். அதைக் கேட்ட டாக்டர்கள் நோவு முழுவதையும் போக்கிவிட முடியுமென்ற நம்பிக்கையுடன் சிகிச்சை செய்து வந்தனர். ஆனுல் என்ன ஆச்சரியம்! சென்ற மூன்று தினங்களுக்குள்ளாக, மாப்பிள்ளையின் உடம்பில் பல ஆச்சரியகரமான மாறுதல்கள் தோன்றி யிருக்கின்றன. அவருடைய உடம்பில் பெண்மைக் குறிகள் தோன்றி யிருப்பதாகவும், அவர் 'பால்' மாறிவிட்டதாகவும் டாக்டர்கள் சொல்லுகிறுர்கள்.

முதலில் இந்தக் கடிதத்தை எழுத நான் ரொம்பவும் கூச்சமும் வெட்கமும் பட்டேன். ஆனுல் நேரில் சொல்வது இதைக்காட்டிலும் சிரமமானதாக விருக்குமாகையாலும், எப்படியும் உனக்கு இந்த விஷயம் தெரிவிக்கப் படவேண்டியதாகையாலும், இதை எழுதுகிறேன். நான் கூடிய சிக்கிரம் வந்து சேருகிறேன். நீ தைரியமாய் இருப்பாயென்று எனக்கு நம்பிக்கை யிருக்கிறது.

இப்படிக்கு

'அப்பா'

இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் என் மூளையில் ஒரு இடி இடித்தது போல விருந்தது.

"ஊரிலிருந்து கடிதம் வந்ததா" வென்று கேட்டுக்கொண்டே பாட்டி வந்து சேர்ந்தாள். எப்படியோ தட்டுத் தடுமாறிக்கொண்டு அதை அவளுக்குப் படித்துக் காட்டினேன். அதை முழுவதும் கேட்டவுடன், பாட்டி "இதென்னடி கலிகாலம் அம்மா! அதிசயமாயிருக்கு" என்று சொல்லிக்கொண்டே வந்தவள், முடிவைக் கேட்டவுடன் அப்படியே கற்சிலை போலாய்விட்டாள்.

எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல விருந்தது.

அப்பா ஊருக்குவந்தது முதல் என்னை நேரில் பார்க்க விரும்பாமல் ஒதுங்கி நடந்துகொள்ளுகிறுர். பாட்டியின் மூளை அந்த அதிர்ச்சியால் வேலை மறுப்புச் செய்திருக்கிறது.

ஸ்ரீ வில்லிபுத்தூருக்கருகில் வத்திராயிருப்பு என்று ஒரு கிராமம். அந்த ஊராருக்குக் குல தெய்வமாக விளங்கும் சாஸ்தா (அய்யனர்)வின் கோவில் ஒன்று அங்கிருக்கிறது. கோவிலிலுள்ள மூல விக்கிரகம், மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு நிரம்பவும் ஆச்சரியத்துடன் எதைப்பற்றியோ யோசித்துக்கொண்டிருக்கும் பாவனையாக அமைந்திருக்கிறது.

ஒரு சமயம் அந்த ஊருக்கு ஒரு சம்ஸ்கிருத வித்வான் வந்திருந்தார். அவரை வரவேற்று உபசரித்த அவ்வூரார், தங்கள் ஊருக்கு பிரத்தியக்ஷ தெய்வமாக விளங்கும், சாஸ்தாவின் மீது ஒரு ஸ்தோதரக் கவி செய்யவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள். உடனே அந்தக் கவி ரொம்பவும் அர்த்த புஷ்டியுள்ள ஒரு ஸ்லோகத்தை அவிழ்த்து விட்டுவிட்டு போய்விட்டார்.



மகாவிஷ்ணு மோஹினி அவதாரம் எடுத்த காலத்தில், ஸ்ரீ பரமேஸ்வரன் அவளைக்கண்டு மோஹித்த அவசரத்தில் தோன்

றியவர் ஸ்ரீ சாஸ்தா. ஒருவனுடைய தந்தைக்கு இரண்டு மனைவிகளிருந்தால், ஒருவளது மக்கள் மற்றவளையும் அம்மா வென்றே அழைத்து உறவுகொண்டாடுவது சகஜம். ஸ்ரீ பரமேஸ்வரனின் மற்றொரு மனைவியாளான பார்வதிதேவியை ஸ்ரீ சாஸ்தா அம்மா வென்றே அழைத்து உறவுகொண்டாடலாம். ஆனால் அவரது மோஹினித் தாயின் மற்றொரு ரூபமான மகாவிஷ்ணுவிற்கு ஒரு மனைவி யிருக்கிறாளே அந்த ஸ்ரீ தேவியாரை என்ன முறை கொண்டாடி அழைப்பது என்று அறியாது, ஆச்சரியத்தினால் ஸ்ரீ சாஸ்தா மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு நிற்பதாக அந்த ஸ்லோகத்திற்கு அர்த்தம்.

அதுபோலவே? இப்பொழுது நான் மூக்கின்மேல் விரலை வைத்து யோசனை செய்துகொண்டே யிருக்கிறேன்!

கடைசியாக உலகம் தோன்றியமுதல் இதுவரை பெரிய அறிவாளிகளையும் நிபுணர்களையும் மூளை கலங்கித் திகைக்கச் செய்து வரும் "பால்" விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்ய எனது மாஜி கணவர் உதவுவாரென்று நினைக்கிறேன். "ஆண்களும் தங்களுடன் என் "பிரசவம் செய்யும்" கடமையைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது?" என்று கேட்கும் ஸ்திரீ தலைவிகள் இதை கவனிப்பார்களென்றும் நம்புகிறேன்.

அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இப்பொழுது எனக்கு மறுபடி விவாகம் செய்யலாமா என்ற பெரும் பிரச்னை, எங்களப்பாவின் மனத்தை பழுத்தும் மிகப் பெரிய பாரமாகிவிட்டது. எங்கள் பாட்டி, இதன்சம்பந்தமாகத் தேவையானால் சீர்திருத்தக்காரர்களின் உதவியைப் பெறும்படி அப்பாவுக்கு யோசனை சொல்லுகிறாள். இதைப்பற்றி சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றனவோ? 'ஹிந்து லா'படி, ஒருதாம் விவாகமான பின்பு புருஷன் இருக்கும்போது மறு விவாகம் செய்ய முடியாது. என்னை விவாகம் செய்தவர் இருக்கிறார். அவர் தற்சமயம் புருஷரா பெண்ணா என்பது வேறு விஷயம். நான் மறு விவாகம் செய்து கொள்ளலாமா?

சுப்ரமணிய பாரதியார்

(பழனத்தான்)

"என்ன அநியாயம்" பார்த்தீர்களா என்றார் நண்பர் கேசவன். திடீரென்று கேள்வி கேட்டால், யாருக்குத்தான் திகைப்பு உண்டாகாது?

"போலிக் கவிகளைத் தண்டிப்பதற்கு, பிள்ளைப் பாண்டியன், வில்லிபுத்தூரார், ஒட்டக்கூத்தா முதலியவர்கள் இல்லாமையால், எவரும் "தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே" என்ற பாட்டு, உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? ஒரு பாரதியார் தோன்றி மறைய, பல பாரதியார்கள் முழக்கத்துடன் வெளிவந்துள்ளார்கள்" என்று நண்பர் மிகுந்த ஆவேசத்துடன் பிரசங்கம் செய்தார்.

பட்டத்திலேனும் பாரதியாரைப் பலர் பின்பற்றுவது பாரதியாருக்கு ஒப்பற்ற பெருமையல்லவா என்றேன். தனிக்காதல் கொண்ட உத்தமி ஒருவள் தன் கணவன் பெயரை, வேறு ஒருவள் ருசியுடன் சொன்னால் பொறுப்பாளா? நண்பர் கேசவனுக்கு பாரதியாரின் பெயர், அதைப் போலவே.

ஞாபகமிருக்கிறதா அல்லது நினைவூட்ட வேண்டுமா என்றார் நண்பர். "நல்ல மாட்டுக்கு ஒரு சூடும், நல்ல பெண்சாதிக்கு ஒரு வார்த்தையும் போதாதா" என்றேன். "நல்லது; நீங்கள் பாரதியாரை முதன் முதலாகச் சந்தித்த வரலாற்றை விவரமாகச் சொல்லுங்கள்" என்றார்.

கதைக்கு அடி எடுத்துக் கொடுத்த புண்ணியத்தை பூராவும் அவருக்கே கொடுத்து விட்டதாக உறுதி கூறினேன். "வீணாகக் காலங் கடத்துகிறீர்களே? கதையைச் சொல்லுங்கள்" என்றார் நண்பர்.

சொல்லுகிறேன், கேளும் என்றேன்.

1910-ம் வருஷம் மார்ச்சு, ஏப்ரல் மாதத்திய தினசரிப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தால், ஒரு வேடிக்கையைப் பார்க்கலாம். "எங்கு போனார், எப்படிப் போனார், ஸ்விட்ஸர்லாந்து தேசத்திலே, ஜெனிவா நகரில் இருக்கிறார்" என்ற தலைப்புகளுள்ள தந்திகள் பறந்தன. யாரைப்பற்றி?

பாரதியாரைப் பற்றியா என்றார் நண்பர்.

"ஏமாந்து போனீர்கள். பாரதியாரைப் பற்றி யல்ல. பாபு அரவிந்த கோஷ் அவர்களைப்பற்றி. கடைசியாக, புதுச்சேரிக்கு,

இரகஸியமாய்ப் போய்ச் சேர்ந்து விட்டதாக, செய்தியும் தோன் றிற்று.'

காலஞ்சென்ற கனம் கொடியாலம் வா. ரெங்கஸாமி அய்யங் கார் அவர்கள் மாசற்ற தேசபக்தர், உண்மையான பிரபு. அவ ருக்கு அரவிந்தரிடம் மகத்தான பக்தி. புதுச்சேரிக்கு அரவிந்தர் வந்துவிட்டதாகச் சொல்லப்படும் செய்தி உண்மையாக விருக்குமா என்று அய்யங்கார் அவர்கள் என்னைக் கேட்டார். "குறி சொல் லத் தெரியாது; ஆரூடமும் பழக்கமில்லை" என்றேன். "அப்படி யானால், புதுச்சேரிக்குப் போக, உம்மைச் சபித்திருக்கிறேன்" என்றார் அய்யங்கார். "ரிஷி சாபத்துக்குப் பின்பலம தவம்; உங்கள் சாபத்துக்குப் பின் பலம் பணம்" என்றேன். தந்தேன் என்றார். புறப்பட்டேன் புதுச்சேரிக்கு.

புறப்படுவதற்கு முன், இரண்டொரு வார்த்தைகள்.

சுப்பிரமணிய பாரதியார் அவர்கள், சுதேசமித்திரன் ஆபீஸில் இருந்தார் என்பது எனக்கு, 1910-இல், தெரியாது. "இந்தியா" பத்திரிகையில் இருந்தது தெரியும். பாரதியார் சென்னையில் இருந்த காலத்தில், அவருடைய வயதுக்கு மிகுதியும் மீறிய இரண்டு நண்பர்கள் அவருக்கு இருந்தார்கள். அவர்களிருவருக் கும் பாரதியாரிடமிருந்த மோகத்தை, அளவிட்டுச் சொல்லவே முடியாது. அவர்களுடைய பெயர்களைச் சொன்னால் நீங்கள் திடுக் கிட்டுப் போகவும் கூடும்.

ஒருவர், ஹைகோர்ட்டு ஜட்ஜியாயும் கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினராயுமிருந்து, உயிர் நீத்த கனம் வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள். மற்றவர், போலீஸ் டெபுடி கமிஷனர் வேலை பார்த்து விலகிய ஏ. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள். இந்த இரண்டு கி—சாமி அய்யர் அவர்களும் இணைபிரியாத் தோழர்கள். இவர்களுடைய தூண்டுதலினால் தான், பாரதியார் புதுச்சேரிக்குச் சென்றது என்று பின்னர் எனக்குத் தெரியவந்தது.

கனம் வி. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் தமிழ் நாட்டுக்குச் செய்த ஒரே ஒரு, ஒப்பற்ற தொண்டை மட்டும, நான் குறிப் பிடாமலிருக்க முடியாது. தமிழர்கள் அதிகார வர்த்தகத்தினரின் கொடுமைக்கு அஞ்சி, அநாகரிக பயத்துக்கு ஆட்பட்டுக்கிடந்த அந்தகாலத்தில, கனம் அய்யர் அவர்கள், பாரதியாரின் சுதேச கீதங்களை இரண்டு பகுதிகளாக, அச்சுப்போட்டுப் பிரசுரம் செய்தார்.

அந்த கீதங்களைப் படித்துப்படித்துப் பரவசமானவர்களில் நானும் ஒருவன். இது 1910-ம் ஆண்டுக்கு முன்னர்.

நண்பர் ரங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களின் "புதுச்சேரி"ச் சாபம் எனக்கு இரட்டிப்பு மடங்கில் ஆனந்தம் உண்டாக்கிற்று. அந்தக்காலத்தில், பிரஞ்சு இந்தியாவின் தலைநகரான புதுச்சேரிக்குப் போகும் பேர்வழிகளை பேலீசார் "கண்" பரிசோதனை செய்வது வழக்கம். ராஜப்பார்வை பொல்லாது என்று பாட்டிகள் சொல்லுவார்கள். அந்த அனுபவம் எனக்குக் கிடையாது. ஆனல் சூரியனைக்காட்டிலும் மணல் சுடும் என்பதை அழ அழ, நான் அனுபவித்திருக்கிறேன். போலீஸ் "கண்ணுக்கு" தப்பிப் போய் வரவேண்டுமே என்று என்பேரில் இரக்கங்கொண்டு, நண்பர் அய்யங்கார் மனம் ஏங்கினர்.

என்னைப்பற்றி என்ன சொல்லட்டும்? எனக்கு உண்டான ஆனந்தத்தில், நான் இந்த மண் உலகத்தில் தானு இருக்கிறேன் என்ற சந்தேக மேற்பட்டது.

புதுச்சேரிக்கு ரயில்வண்டி காலமே சுமார் ஐந்தரை மணிக்குப் போய்ச்சேர்நதது. வழி நெடுக, யார் என்னை "கண்" வீசினர், கண் வீசவில்லை என்ற கவலையே எனக்குக் கிடையாது. மலரிலிருக்கும் தேனைக் குடித்துவிட்டு, மதிமயங்கி, மதோன் மஸ்தாய், ரீங்காரம்செய்துகொண்டு, ஆகாயத்தில் விசையுடன் "விர்" என்று பறக்கும் வண்டைப்போல நான் இருந்தேன் என்ருல் அது கற்பனையே அல்ல. இத்தகைய உணர்ச்சி, ஒவ்வொருவர் வாழ்விலும் ஒருதரமாகிலும் ஏற்பட்டிருக்கும்.

அந்தக்காலத்தில், என் கால் வண்டி யேறியே பழக்கமில்லை. கால் படைக்கப்பட்டது நடப்பதற்கேயன்றி, வண்டி முதலிய வாகனங்களில் ஏறுவதற்கல்ல என்பது எனது, அந்நாள் கர்நாடகக் கொள்கை. இது, காசில்லாத் தத்துவம் என்று சிரிக்கிறீர்கள். நல்லது, சிரியுங்கள். சிரித்தால், ஜீரணமாகும் என்கிருர்கள்.

புதுச்சேரி "புஷ்" வண்டி எனக்குப் புதிது. பெரிய இடத்துக்குப் போகிறபொழுது, "பதவிசாக"ப் போகவேண்டுமானலும், கௌரவத்தையும் இழக்கக்கூடாது என்று திடீரென்று எனக்குத் தோன்றிற்று. "புஷ்" வண்டியைக் கூப்பிட்டேன். ஆள் வந்தான்; வண்டி வரவில்லை.

பாரதியார் வீடு தெரியுமா என்றேன். "பட்டணத்து எஜமான், பாட்டுப்பாடுகிற எஜமான், மீசை வச்சிருக்காங்களே, அவுங்கதானே, அவுங்க இருக்கிற வீடு, நல்லாத் தெரியுமே" என்ருன்.

அவன் சொன்ன முன்னடையாளங்கள் எல்லாம் உண்மை தான். ஆனால், மீசை சங்கதி எனக்கு எப்படித் தெரியும்? நான் தான், அதுவரையிலும் பாரதியாரைப் பார்த்ததில்லையே!

ஈசுரன் தர்மராஜா கோவில் வீதியின் ஒரு கோடியிலிருந்த ஒரு வீட்டின் எதிரே, "புஷ்" வண்டியை நிறுத்தினான். அது வரையிலும், ஆனந்தம் அலைமோதிக்கொண்டிருந்த என் உள்ளத்தில், என்ன மாயவித்தையினாலோ, பயம்வந்து புகுந்துகொண்டது. மார்பு "படபட"வென்று அடித்தது. எனது கேவலமான நிலைமையை வெளியே காண்பித்துக்கொள்ள மனமில்லாமல், வாய் பேசாமல், கொஞ்சம் அதிகமாகவே வாடகை கொடுத்து, "புஷ்" காரனை அனுப்பிவிட்டேன்.

இடது கையை மார்பில் அணைத்துக்கொண்டு, மெல்ல, படியேறினேன். "மூட்டை, முடிச்சு" கிடையாது. ஆள் பாரம், உடை பாரம், சில ரூபாய்கள் பாரம்,—இவ்வளவுதான். இரவில் தூக்கமில்லாமையின் பெருஞ்சுமை, சிறிதளவு கண்ணிமையிலே தொங்கிக்கொண்டிருந்தது. அதையும் ஒப்புக் கொள்கிறேன்.

"ஸார்" என்றேன் ஒருதரம். இரண்டாந்தரம், மூன்றாவது தரமும் கூப்பிட்டேன். பயில்வானைப்போல இள வயது பையன் ஒருவன் வந்து "யார்" என்றான். யார் என்றால் நான்தானென்றேன். என்னை ஏற இறங்கப் பார்த்தான். நானும் அவனை அப்படியே செய்தேன். ராஜிக்கு வந்தான். யார் வேண்டுமென்றான். சுப்ரமணிய பாரதியார் என்றேன். சரி, மேலே வாரும் என்றான். இருவரும் மேலே மாடிக்குப் போனோம்.

"மீசை வச்சிருக்காங்களே அவுங்களைக்" கண்டேன். சட்டை அங்கவஸ்திரம் முதலியன இருப்பதாகவே நினைவில்லை. சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தேன். புலி பாய்வதைப்போல பாய்ந்து, என்னைத் தூக்கி நிறுத்தி, "நமஸ்காரம் வேண்டாம். நீர்யார்? வந்தக் காரியத்தைச் சொல்லும்" என்றார்.

சிறிது நேரம் பேசாமல் நின்றுகொண்டிருந்தேன். அவரது பொலிவு நிறைந்த முகத்தை அப்படியே கண்ணால் விழுங்கிக் கொண்டிருந்தேன். "நல்லது, பல் விளக்கி யாகி விட்டதா? ஏதாவது சாப்பிட்ட பிறகு, பேசிக்கொள்ளலாம். பானு! பல்பொடியும் தண்ணீரும் கொண்டுவா" என்றார்.

என்னை வாயிற்படியண்டை எதிர்த்து நின்ற பயில்வானுக்கு பானு என்று பெயர் என்று தெரிந்துகொண்டேன்.

பல் தேய்த்துக்கொண்டிருக்கிற சமயத்தில், ஒரு கிழவர் வந்தார். "வாரும் விளக்கெண்ணெய்ச் செட்டியாரே" என்றார் பாரதியார். எவ்வளவு வரவேற்பு அளித்தாலும், செட்டியாரின் உடம்பு பட்டபாட்டை நான் எவ்வாறு வர்ணிப்பது? செட்டியார் யார் தெரியுமா? பாரதியார் குடியிருந்தவீட்டுக்கு உடையவர். அவர் வாடகைப் பணம் கேட்க வந்திருக்கிறார். நான்குமாத வாடகைப் பணம் பாக்கி. என்றாலும் கேட்பதற்கு நடுக்கம்! விளக்கெண்ணெய் செட்டியார் என்பது பாரதியார் கொடுத்த செல்வப் பெயர்!

"செட்டியாரே! என்ன அவசரம்! நல்ல பதவிக்காக, ஜன்மம் ஜன்மமாய்ப் பிறக்கலாம் என்ற ஹிந்து பரம்பரையிலே பிறந்து வளர்ந்த உமக்கு ஏன் வாடகைக்கு அவசரம்! இன்னும் பத்து வருஷத்துக்குள் சுயராஜ்யம் வரயபோகிறது. அந்த ராஜாங்க கஜானாவுக்கு ஒரு "செக்" கொடுக்கிறேன், வாங்கிக் கொள்ளுமே" என்று சொல்லிவிட்டுக் கலகலவென்று வெங்கலத்தை இடைவிடாமல் தட்டியதுபோல சிரித்தார். தரித்திரத்தை நிந்தனை செய்யும் நகைப்பு!

செட்டியார் என்னசெய்வார் என்று ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். "மகான்! உங்கள் உண்டியல் ஏன் செல்லாது? கூசாமல் கொடுங்கள், வாங்கிக்கொள்கிறேன்" என்று செட்டியார் முணுமுணுத்தார். "செட்டியாரே உமக்கு நூறு வயது. போம். பணம் வந்தவுடனே ஒரு விநாடிகூடத் தாமதிக்காமல், அனுப்பி வைக்கிறேன்" என்றார். செட்டியார் வணக்கத்துடன் மறைந்தார்.

ஏதோ சாப்பிட்டோம். வந்த சங்கதியை மெல்ல மெல்லச் சொன்னேன். "அரவிந்தபாபு இங்கே இருக்கிறார் என்று உமக்கு எப்படித் தெரியும்? அது எனக்கே தெரியாதே. அதிருக்கட்டும் தமிழ்ப்பாட்டிலே உமக்கு அபிமானம் உண்டா" என்றார். சிரித்தேன்.

"சிரித்ததற்கு அபராதமாக ஒரு பாட்டுக்கேளும்" என்றார்.

இந்தமாதிரி பாரதியார் எனக்கு அபராதம் விதிப்பதில், எனக்கு ஆட்சேபனை இருக்கும் என்று நீர் நினைக்கிறீரா, கேசவா?

"உம்முடைய பாக்கியத்திலே எனக்குப் பொறாமை" என்றார் கேசவன்.

நண்பர் கேசவன், பாரதியாரை நேரே பார்த்ததேயில்லை.

"தாசில்" குப்பண்ணு

(ஸ்ரீ. வத்ஸன் எழுதியது)

நான் அலுத்துப் போய் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அலுப்பு வராதவர் யார்? அலுப்புக்குக் காரணம் மட்டும் கேட்கக்கூடாது. கேட்டால், "கங்காதரா மாண்டாயோ" கதையைப்போல, காலில்லாத காரணம், ஆகாயத்தில் வெடிக்கும். இந்தக் காலத்திலே, "வெடி"ச் சத்தமே கூடாதல்லவா? பெரிய இடத்துப் பொல்லாப்பு, நமக்கு எதற்காக? நல்ல நாளிலேயே நாழிப்பால் கறக்கிற மாடு. கன்றும் செத்தால், பல்லை உடைத்து விடாதா? ஏதோ, அலுப்பு. காரணம் கேட்க வேண்டாம். சொல்லத் தெரியும்; ஆனால் தைரியம் கிடையாது. அலுத்துப்போய் உட்கார்ந்திருக்கிற சமயத்தில், சிப்பாய் கலகத்துக்கு முன் (1857-ஆம் ஆண்டு) பிறந்து, அத்துடன் வளர்ந்து, அதைப் பின்னே வெகு தூரம் தள்ளிவிட்டு, நிம்மதியுடன் வாழ்ந்துவரும் எனது அருமைத் தாத்தாவின் (தாயின் தகப்பனார்) காலடிச் சத்தம் கேட்டது. அவர் தோன்றினால், அலுப்பெல்லாம் பறந்து போய்விடும்.

பையன்களெல்லாரும், கிழப் பருவத்தைப்பற்றி, கற்பனையும் கவலையும் சிறிது மில்லாமல், பல் உதிர்ந்து, தோல் உலர்ந்து போயிருக்கும் வாயை, மணிபாக்ஸ் (பணப்பை) என்கிறார்களே, அந்த இலட்சண முழுமையும் அமையப்பெற்றவர் எனது தாத்தா. தாத்தாவின் உதடுகளிரண்டிற்கும் அலுப்பே கிடையாது. அரைக்கிறது போலும், குத்துகிறது போலும், புடைக்கிறது போலும், சதா ஏதேனும் வேலை செய்து கொண்டிருக்கும். இதைப் பார்த்தாலே, எனக்கு மனச் சோர்வு தீர்ந்து போய்விடும். மேலும், தாத்தாவின் பாஷை தனிப் பாஷையாகும். அதை உருப்படுத்தவும், உரை எழுதவும், நான் நீண்டகாலமாக பழக்கிக் கொண்டிருக்கிறேன். சிலர் தபால் எழுதினால், தபால் போகிற இடத்துக்குத் தாங்களும் போய் படித்துக் காண்பித்தாலொழிய, புரியாத கஷ்டத்துக்கு தாத்தா உள்ளாகவில்லை. உரு ஆசிரியரும் உரையாசிரியருமாகிய நான் இருக்கும்பொழுது, அவருக்கு என்ன கவலை?

தாத்தாவின் எடுப்பே அற்புதம். சங்கீத வித்வான் புஷ்பவனம் எடுப்புக்கூட, இதன் பக்கத்திலிருந்து பெயர் சொல்ல முடியாது. "எங்க நாளிலே' என்று கம்பீரமாய் எடுப்பு எடுப்பார். "என்ன தாத்தா, நீங்கள் உயிரோடிருக்கையில் 'எங்க நாளிலே' என்ற எடுப்பு அவ்வளவு உசிதமாயிராது" என்றால், "லாபாயிண்டு" என்று சிரிப்பார்; ஆனால் ஆளை விடமாட்டார். மங்குமாரி துரை

(மாண்ட் காமரி என்ற ஆங்கிலப் பெயர்) நாளிலே, பொங்குமாரி பெய்யும் என்று அவர் பிராஸமாய்ப் பேசி, அதை அவர் அநுபவிக்கும் விதரணையை, நீங்கள் அவரது முகவிலாசததிலே தான், காணவேண்டும். அதை எழுத்தில் எழுதினால், சித்திரம் கெட்டுப் போகும். தேவையிருந்தால், தாத்தாவை நேரே அனுப்பி வைக்கிறேன். என்னை விடுதலை செய்துவிடுங்கள்.

கலம் (நெல்) கால் ரூபாய் விற்ற காலத்தையும், ஒரு சிமிடா (மூக்கு) பொடிக்காக தஞ்சாவூர்மகாராஜா ஒருவர் ஒருவனுக்கு பத்து ஏகர் நிலம் தானம் செய்த "அதிருஷ்டத்தையும்", ஜில்லாகலெக்டர், கிஸ்திக்காக மிராசுதாரகளை கிட்டிகட்டின கடுமையையும், நேரே கேட்கும் பாக்கியம் உங்களுக்கு "கொடுத்து வைக்காமல்" போயிற்றே என்று நான் மிகுதியும் வருந்துகிறேன். கொம்பு தம்பட்ட சங்கீதத்தினடுவே, பரிஜனங்கள் கூடவர, பல்லக்கினுள் அமர்ந்து, "எட்டுக்கண்விட்டு அடிக்கும்படியாக, சுக்கிரீவ வாக்கினை" செய்த தாசில வேங்கடசாமி நாய்க்கரை தாத்தா, வர்ணிக்கையில், இறந்த நாய்க்கர் திரும்பிவந்து விடுவாரோ என்று நீங்கள் பயப்படும்படியாக விருக்கும். இவ்வளவு வர்ணனைக்கு நிகரற்ற இலக்காய் விளங்கும் தாத்தா என்னை நெருங்கினார்.

குழந்தை என்றார். மறுபடியும் "எங்க நாளிலே" முதல் வரிசைக் கிரமமாக, எல்லாம் வந்து முடிந்தன. பின்னர் "அற்பனிடம் ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கிப் பிழைப்பதைக் காட்டிலும், அரண்மனையிலே அரை ரூபா உத்தியோகம் ரொம்ப உயர்ந்தது" என்று அவர் முடிப்பதற்குள், இந்தப் பழைய குப்பை யெல்லாம் எனக்கு வேண்டாம் என்றேன். "பழைய குப்பையைக் கிண்டிக் கிளறிப் பார்த்தால்தான், நவரத்தினங்கள் கிடைக்கும். பழையபேச்சு பேசினாலொழிய, உனக்கு ராயஸம் குப்பண்ணாவை எப்படித் தெரியப் போகிறது" என்றார். ராயஸமாவது பாயஸமாவது என்று முணுமுணுத்தேன். "ராயஸமென்பது கர்நாடக வார்த்தை. ராயசம் என்றால் எழுத்து. ராயசம் குப்பண்ணா என்றால் குமாஸ்தா குப்பண்ணா என்று அர்த்தம். குப்பண்ணா கோடீசுரனான கதையைக்கேள். அதிருஷ்டம் என்பது பொய் என்று உளறும் உனக்குக் கூட புத்திவரும்" என்றார் தாத்தா. கதையைக்கேள் சொல்லுகிறேன். "கெஞ்சாமல் கொடுப்பதும் கேட்காமல் சொல்லுவதும்தான் உயர்ந்தது. நீ கேட்காவிட்டாலென்ன" என்று தமது கம்பளி மூட்டையை அவிழ்க்கத் தொடங்கினார். அவருடைய பிடிவாதம் உண்மையாயும் எனது இளமை பொய்யாயும் போய்விட்டன. தாத்தா சொல்கிறார் :—

குப்பண்ணா பிறக்கிற காலத்தில், அவர்கள் வீட்டிலே, "சந்திர சூரியாள்" வாசம் செய்துகொண்டிருந்தார்கள். தமயந்தியின்

சேலையைப் பாதியாகக் கிழித்து நளன் கட்டிக்கொண்டதுபோல, குப்பண்ணுவின் அப்பா, ஒருநாள் காலையில், பாதிப் புடவையில் ஊராருக்கு தரிசனம் கொடுத்தார். அவர் வெட்கப்பட்டார் என்று நினைக்கிறாயோ? வெட்கப்பட்டால், பிறந்த மேனிக்குப் போகவேண்டியதுதான். மானமாம்! தரித்திரத்துக்கும் மானத்துக்கும் என்ன சம்பந்தம்? ஒய்யார நடை அம்பலவாண தேசிகருக்கு இருக்கலாம். அடப்பக்காரனுக்கு இருக்கலாமோ? குப்பண்ணுவின் அப்பாவுக்கு குசேல விருத்திதான்.

"அது என்ன, தாத்தா. நீங்கள் பேசுகிறது, புரியவுமில்லை. தெரியவுமில்லை" என்றேன்.

"பைத்தியக்காரா! அவருக்குப் பிச்சை யெடுக்கிற தொழில்."

எமன் கண்டால், பொல்லாதவன், விடமாட்டான்
சாம்பசிவ பக்தனென்றால் தொடமாட்டான்.

இந்த இரண்டு அடிகள் மட்டும் அவருக்குத்தெரியும். மார்க்கண்ட நாடகத்தில், எருமைக்கடாவிலேறி, பாசக்கயிறு வீசிய எமனைப் போலவே, அவருடைய உருவம் இருக்கும். இவர் எமகாதகன். இந்த ஒரு பாட்டுத்தான், அவர் போட்ட முதல்; தினம் ஒன்றுக்கு குறுணி அரிசிக்குமேலே, போட்ட முதலுக்கு, வட்டி வந்துவிடும். இந்த ஊர் தண்டுகிற வழக்கப் பரம்பரையில் பிறந்து வளர்ந்தவன் குப்பண்ணு. ஆகவே, அவனுக்கு விருந்துச் சாப்பாடு ஜரிக்குமே யல்லாமல், வீட்டுச்சாப்பாடு அஜீரணத்தை உண்டாக்கும்."

'மானக்கேடு' என்று முணு முணுத்தேன். தாத்தாவினுடைய பருவத்துக்கு, நான், முணுமுணுத்தாலும் சுவையுடன்கேட்டாலும் ஒன்றுதான். அஞ்சாமல் தனிவழியே போகவேண்டிய நிலைமை அவருக்கு நெருங்கிவிட்டதல்லவா? அவர் கதையைத் தொடங்கினர் மீண்டும்.

பால்யத்திலே, குப்பண்ணுவின் விஷமத்தை ஊரால் சகிக்கவே முடியவில்லை. காய் மரத்திலே காய் இருக்காது; பழ மரத்தில், குலை இருக்காது. ஆள் வந்தால், ஓட்டம். அகப்பட்டுக்கொண்டால், அழுகை ஆர்ப்பாட்டந்தான். அவன் அப்பொழுது கெஞ்சுகிறதைப் பார்க்கவேண்டுமே! வாலியிடம் இராவணன், அகப்பட்டுக்கொண்டு, கெஞ்சினது மாதிரிதான். விட்டால், பின்னல் நின்றுகொண்டு, பழிப்புக் காண்பிப்பான். தின்கிறது, தூங்குகிறது, திருடுகிறது, திட்டுகிறது; தக்கபடி உடம்பு முழுவதும் வாங்கிக்கொள்ளுகிறது! இதிலே, ஒன்று குறைந்தாலும், குப்பண்ணுவுக்கு, பொழுது விடிந்து, பொழுது போகாது; நளாயினி, வேறு விதம் சபித்தால் கூட பலிக்காது.

இப்படி வளர்ந்த குப்பண்ணுவுக்கு வயது பதினாறு; பதினாறு, வயதிலே மார்க்கண்டேயருக்கு சிரஞ்சீவித்துவம் கிடைத்தது. அதே பிராயத்தில், குப்பண்ணுவுக்கு அதிருஷ்டகலைச் சந்திரோதய தரிசனம் தோன்றிற்று. பரமசிவன் ரிஷபாரூடராகவும் மகாவிஷ்ணு கருடாரூடராகவும் பக்தர்களுக்கு, ஏற்ற காலத்தில் காட்சி கொடுப்பார்கள் என்று கதைகள் சொல்லுகின்றன. குப்பண்ணுவுக்கு வரம்கொடுத்த தெய்வம் அசுவாரூடராய் (குதிரையுடன்) காட்சி கொடுத்தது. அதிருஷ்டம் வரும்பொழுது, சொல்லிக்கொண்டு வருவதுமில்லை; கலி நீங்கும்பொழுது, சொல்லிக்கொண்டு போவதுமில்லை.

கோணல் சாலையில் நின்றுகொண்டிருந்தான் குப்பண்ணு. வாயு வேகம, மனோ வேகமாய் ஓடிக்கொண்டு வந்த குதிரையைப் பார்த்தான். அந்தக் குதிரையின்பேரில், ஒரு ஆளைப்பார்த்தான். குப்பண்ணுவுக்கு, திடீரென்று ஒரு யுக்தி, தோன்றிற்று. “குதிரைக்கு மனிதன் எப்படி சளைத்தவன்” என்று தர்க்கம் செய்து பார்த்தான். சளைத்தவனல்ல என்று திடமான தீர்மானத்துக்கு வந்துவிட்டான். பக்கத்திலே வந்த குதிரையோடு பந்தயம் போட்டான்.



குதிரையின் பேரிலிருந்த ஆஸாமி அரிசிச்சோறு ஆள் அல்ல. அவர் நிஜதுரை. விஷம புத்தியுடன், குப்பண்ணு குதிரையோடு ஓடி வருகிறான் என்று நினைத்து, துரை சவுக்குப் பிரயோகம்

செய்தார். அடியைத் துடைத்துக் கொண்டான் குப்பண்ணு. இன்னும் கொஞ்சம் அதிகமாக, "தம்" பிடித்தான். குதிரைக்குச் சளைக்கவில்லை. துரை பரமானந்த மடைந்தார். ஐந்தாவது மைல் கல் வந்தது. துரை கீழே இறங்கினார். குதிரையையும் குப்பண்ணுவையும் ஒரேகாலத்தில் தட்டிக்கொடுத்தார். குதிரை நுரை கக்கிற்றே|யொழிய, குப்பண்ணுவுக்கு ஒன்றும் நேரவில்லை. பலே என்றார் துரை. பல்லைக் காண்பித்தான் குப்பண்ணு. அன்றைக்குப் பிடித்துக்கொண்ட அதிர்ஷ்டம் குப்பண்ணுவை, ஆயுள் முழுவதும் ஆட்டிவைத்தது. முதலிலே மூச்சி, (டபேதார் மாதிரி); பிறகு ராயஸம்; பின்பு படிப்படியாக எல்லாம். கலிகால வரதர்களான துரைகள் மனது வைத்தால், குப்பை உயர்வதும், கோபுரம் தாழ்வதும் பிரமாதமா? அவர்கள் மனதிலே புகுவதுதான் கஷ்டம். குப்பண்ணுவும் நானும் ஒரே வயதுதான். என்ன வித்யாஸம், பார். குப்பண்ணுவின் கதையை நான் சொல்லும்படி இருக்கிறது.

"நான் கேட்கும்படிக்கும் நேர்ந்ததே தாத்தா" என்றேன்.

"போடா, போ. குப்பண்ணு தாசில்வேலை பார்த்து இலட்சம் இலட்சமாய்ச் சேர்த்துவிட்டான. நானே, ஆயிரம் ஆயிரமாய் நிலத்தை விற்று, பிள்ளைகளைப் படிக்க வைத்து, பெரிய இடத்தில் சம்பந்தம் செய்து, பையன்கள் கேலி செய்கிறப்போல, உளறிக்கொண்டு, காலம் கழித்து வருகிறேன். எமனுக்கும் இரக்கமில்லை; எனக்கும் வழி இல்லை."

"என்ன தாத்தா, வித்தை பண்ணுகிறீரே! உங்கள் குப்பண்ணு மட்டும் அதிசயம் என்று எண்ணவேண்டாம். இப்பேர்ப்பட்ட அதிசய வஸ்துக்கள், இந்த தேசத்தில் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். இதைப்போல, வேண்டுமானால், ஆயிரம் கதைகளை, நான் சொல்லுவேனே? நீட்டி முழக்கிக்கொண்டு, இந்தக் கதையைச் சொல்லவந்தீரே" என்றேன்.

தாத்தாவுக்கு வருத்தம். "இந்தக்காலத்துப் பிள்ளைகளுக்கே, நாணல் வளைந்து கொடுக்கிறது மாதிரி, வளைந்துகொடுக்கத் தெரிவதில்லை. வருகிற இலட்சுமியைக் காலால் உதைப்பதும் கண் தெரிந்தே குட்டிச்சுவரில் முட்டிக்கொண்டு வெள்ளெழுத்து இல்லை என்று சொல்லுவதும், கலிகாலம் என்றால் புலிவேஷம் என்பதும், டாம் என்றால் டோம் என்பதும்—இவைகள் தான் தெரியும்" என்றார்.

சவுக்கடியை வாங்கிக்கொண்டு, குதிரைக்குச் சளைக்காமல் ஓடி, தாசில்வேலை பெறுவதற்கு, இந்த காலத்துப் பிள்ளைகளுக்குத் தெரியாது என்றேன்.

சிறுவர் பக்கம்

எலியின் சுயம்வரம்

[வெகுகாலத்துக்கு முன் பாரசீக தேசத்தில் ஒரு அரசன் இருந்தான். இந்தியாவிலுள்ள பெரிய மலைகளின்மீது ஒரு மூலிகை இருப்பதாகவும், அதிலிருந்து செய்யப்படும் மருந்து மனிதனை மரணத்திலிருந்து காப்பாற்றுவதாகவும் ஒருபுத்தகத்தில்படித்தான். உடனே சமஸ்தான வைத்தியரை அழைத்து இந்தியாவிற்குப் போய் அந்த மூலிகையைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். வைத்தியர் புறப்பட்டார். மூலிகை எப்படி யிருக்கும், எங்கு இருக்கும் என்பது அவருக்குத் தெரியவில்லை. பல அறிஞர்களை அணுகி விசாரித்தான். ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

கடைசியாக ஒரு பெரிய ஞானியிடம் சென்று கேட்டான். "அய்யா, உம்முடைய அரசன், படித்த விஷயத்தின் உள் கருத்தை அறியவில்லை. இந்தியாவிலுள்ள பெரிய மலைகள் என்பது அந்த தேசத்து அறிஞர்களைக் குறிக்கிறது. அவர்கள் மனதிலிருந்து வளரும் அறிவே உமது புத்தகத்தில் குறிப்பிட்ட மரமாகும். அவ்வறிஞர் எழுதி வைத்திருக்கும் கிரந்தங்களே அந்த சஞ்சீவி மருந்து" என்று கூறி புத்தமதக் கதைகள் நிறைந்த ஓர் புத்தகத்தைக் கொடுத்தாராம்.

இதிலுள்ள கதைகள் யாவும் புத்த பகவானாலும் அவரது மதத்தைப் பின்பற்றி பிரசாரம் செய்துவந்த புத்த சன்னியாசிகளாலும் எழுதப் பட்டவை. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு பெரிய உண்மையை மிகவும் எளிதாக விளக்கக் கூடியதாகும்.]

அதில் ஒரு கதை பின்வருமாறு:—

ஒருநாள் மாலையில் ஒரு மந்திரவாதி கங்கைக்கரை யோரமாக உலாவிக் கொண்டிருந்தான். அப்பொழுது அருகாமையில்

அங்கிருந்த ஓர் மரத்தில் ஒரு கருடபட்சி உட்கார்ந்திருந்தது. அதன் காலில் ஒரு சுண்டெலியைப் பிடித்துக் கொண்டிருந்தது. உடனே மந்திரவாதி கருடனை நோக்கி ஒரு கல்லை எறிந்தான். கருடன் பயந்துபோய் எலியைக் கீழே போட்டுவிட்டது.

அந்த எலியை மந்திரவாதி தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றான். அதன் மீதிருந்த புண்களை யெல்லாம் குணப்படுத்தினான். இரண்டு மூன்று நாள் அதை வைத்துக் காப்பாற்றினான். அந்த எலியினிடத்தில் அவனுக்கு அளவுகடந்த அன்பும் வாத்ஸல்யமும் ஏற்பட்டன. ஆனால் எலியினிடம் தனது அன்பைக் காட்டுவதற்கு என்ன இடம் இருக்கிறது. அதனிடம் பேச முடியுமா? கொஞ்ச முடியுமா? அதன் தேவைகள் இன்னதென்று அறிய முடியுமா? அதனுடன் உறவாட முடியுமா? ஒன்றும் முடியாது. ஆகவே அந்த எலியை தன் பக்ஷத்திற்கு உரிய ஓர் பாத்திரமாக மாற்ற விரும்பினான். அந்த எலியை ஓர் அழகிய பெண்ணாக மாற்றி தன் மகளாக பாவித்து போஷித்து வந்தான். சிலகாலம் சென்றது.

தன் மகளுக்கு விவாகம் நடத்தவேண்டுமென்று நினைத்தான். "என், அருமைக் குழந்தாய்! உனக்கு மனதுக்குகந்த ஓர் கணவனைத் தேடி கலியாணம் செய்துவைக்க வேணுமென்று எனக்கு ஆசை. நீ யாரை விரும்புகிறாயோ அவனை உனக்கு கலியாணம் செய்துவைக்க எனக்கு சக்தி உண்டு. நீ என்ன விரும்பினாலும் என்னால் செய்ய முடியும். ஆகையால் உன் விருப்பத்தை எனக்குச் சொல்லு" என்று தன் மகளிடம் கூறினான்.

அந்தக் குழந்தைக்கு சந்தோஷமும் வெட்கமும் உடனே வந்துவிட்டது. உடனே நாணத்துடன் தன் ஸ்வீகாரத் தகப்பனைப் பார்த்து "இவ்வுலகத்தில் எல்லாவற்றையும்விட பிரதாபமும் பலமும் மிகுந்தது எதோ, அதையே நான் கலியாணம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்று சொன்னாள்.

மந்திரவாதி ஆலோசனை செய்தான். "எல்லாவற்றையும் விட வலிமை மிகுந்தது சூரியன்தான். உலகத்திலுள்ள ஜீவராசிகள் யாவும் சூரிய வெளிச்சத்தினால்தான் வளருகின்றன. சூரிய வெளிச்சம் புகமுடியாத இடத்தில் புல் பூண்டுகள்கூட முளைப்பதில்லை. ஆகையால் என் மகளை சூரியனுக்குத்தான் மாலையிடும்படி செய்ய வேண்டும்" என்று எண்ணினான். உடனே சூரியனிடம் தனது விருப்பத்தைக் கூறினான்.

"நான் தான் மிகவும் பராக்கிரமசாலி, என்று நீ நினைப்பது சரியல்ல. இதோ பார் இந்த மேகம் நினைத்தால் என் ஒளி பூமியில்

விழாமல் என்னை மறைத்துவிட முடியும். இந்த மேகம் என்னை விட வலிமை பொருந்தியது'' என்று சூரியன் கூறினான்.

மந்திரவாதி மேகத்தினிடம் போய் "நீ என் மகளை மணந்து கொள்ள வேண்டும்'' என்று கட்டளையிட்டான். "என்னைவிட பலசாலி ஒருவன் இருக்கிறான். அதுதான் வாயுபகவான். அவன் அடித்து துரத்துமிடமெல்லாம் ஓடுவதுதான் என்னுடைய தலையெழுத்தாக இருக்கிறது. ஆகையால் உன் மகள் ஓர் பலசாலியை மணக்க விரும்பினால் நீ வாயுவினிடம்தான் போகவேண்டும்'' என்று மேகம் கூறியது.

ஆனால் காற்றை உண்மையில் அதிக வலிமையுள்ளதாகக் கருதலாமா? எவ்வளவு பெரிய புயல் காற்றாக இருந்தாலும் ஒரு பெரிய மலை அதைத் தடுத்து நிற்க முடிகிறது. அந்த மலையைத் தாண்டிப்போக அதற்கு சக்தியில்லை. ஆகையால் மலையினிடம்தான் கேட்கவேண்டும என்று நினைத்து மலையினிடம் சென்றான்.

"அய்யா மலையரசனே! என் மகள் மனதுக்கேற்ற பெருமையும் உயர்வும் பிரதாபமும் வாய்ந்த ஒரு கணவனைத் தேடி அலைந்தேன். பல இடங்களைப் பார்த்தேன். உண்மையிலேயே உன்னை விடப் பெரியவன் இவ்வுலகத்தில் இல்லை. ஆகையால் நீ என் மகளை மணந்துகொள்ள வேண்டும்'' என்று புகழ் பாடினான்.

"நீ இதுவரை பார்த்த வரன்கள் எல்லோரையும்விட நான் பலசாலி என்பது ஒருக்கால் உண்மையாக இருக்கலாம். ஆனால் என்னைவிட பலசாலியான பிராணி ஒன்று இருப்பது எனக்குத் தெரியும். அதோ பார். ஒரு எலி என் விலாப் புறத்தைக் குடைந்து வளை தோண்டிக் கொண்டிருக்கிறது. என் சம்மதத்தைக் கேட்காமலே அது என்னுடலைத் தன் வீடாக ஆக்கிக் கொண்டு வாசம் செய்கிறது. என்னுடைய முழு



சக்தியை உபயோகித்தாலும் அதை ஓட்ட என்னால் முடியாது. என்னைப்பற்றி அதற்குச் சிறிதளவுகூட பயமில்லை........'' என்றிவ்வாறு மலை தனது குறைபாடுகளைச் சொல்ல ஆரம்பித்தது.

வான் தேடுவதில் தான் பட்ட சிரமமெல்லாம் ஒரு பயனும் இல்லாமல் போவதைக் கண்ட மந்திரவாதி, மனம் கலங்கி பரதவித்தான். தன்னுடைய மகள் ஒரு சிறு எலியை மணந்துகொள்ள விரும்புவாள் என்று அவன் எப்படி நினைக்க முடியும்? மனம் சோர்ந்து தன் அருமை மகளின் முகத்தை நோக்கினான். மகளின் முகத்தில் கர்வத்துடன் கூடின மகிழ்ச்சி பிரகாசித்தது.

உலகத்தில் சூரியனைவிட, மேகத்தைவிட, காற்றையும்விட, அதை எதிர்த்து நிற்கவல்ல மலையையும்விட—எலிதான் வலிமை மிக்கது என்று கேட்டதும் அவள் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்வது இயற்கையே அன்றோ.



உடனே மந்திரவாதி தன் மகளை மறுபடியும் ஓர் எலியாகமாற்றினான். மலையைக் குடைந்து கொண்டிருந்த எலிக்கும், கழுகின் காலில் பட்ட எலிக்கும் கலியாணம் நடந்தது.

* * *

இது மகாக்கிரந்தம் ஒன்றில் காணப்படும் கதையாதலால், வெறு போப் போக்குக்காக எழுதப்பட்டதல்ல என்பது நிச்சயம். இந்தக் கதையிலிருந்து விளங்கும் தத்துவம் யாது என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டும். இதைப் படிக்கும் 'வானரர்கள்' இந்தக் கதையிலுள்ள தத்துவத்தைப்பற்றி எழுதியனுப்பினால் நன்றாக இருப்பதை காந்தி மலரில் பிரசுரிக்கப்படும். ஒவ்வொருவரும் 40 வார்த்தைக்குமேல் எழுதக்கூடாது.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதியவர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக்கப்படும்.

:: பெண் கல்வி ::

(லோகம்மாள் — வயது 13)

பெண்கள் அவசியம் படிக்கவேண்டும். கடவுள் மற்ற எல்லாப் பிராணிகளுக்கும் இல்லாத ஆத்ம ஞானத்தை மானிடருக்குப் படைத்தார். பெண்களைவிட ஆண்களை உயர்வாகவும், பெண்களை தாழ்வாகவும் படைக்கவில்லை. எல்லோருக்கும் ஒரே மூளையையே கொடுத்திருக்கிறார். கடவுள் பக்ஷபாத மற்றவர். மூளையை விருத்திசெய்வது கல்வி. ஆகையால் மண்ணில் பிறந்த மானிடர் யாவருக்கும் கல்வி அவசியம்.

"கற்றோர்க்கு கல்வி நலனே கலநல்லால்
மற்றோர் அணிகலமும் வேண்டாவாம்"

என குமரகுருபர சுவாமிகள் பாடியுள்ளார். முற்காலத்தில் பெண்கள் நன்றாய் படித்துத் தேர்ச்சி அடைந்திருந்தார்கள். ஆனால் இடைக் காலத்தில் பெண்கல்வி மறைந்து வந்தது. திரும்பவும் பெண்கல்வி விருத்தியாகிறது. ஆனால், அறிவீனமும் சுய நலமும் கருதும் சில அறிவிலிகள் பெண் கல்வியை தடுக்கிறார்கள். அவர்களின் அறிவாகிய வெளிச்சத்தை அஞ்ஞானமாகிய இருட்டில் மறைக்கிறார்கள். ஐயோ! இந்தியாவிலுள்ள பெண்களின் நிலமையை உற்றுணருபவர்கள் எவ்வளவு கன் நெஞ்சராயினும் கண்ணீர் விடாமல் போகார். அந்தப் பெண்கள் கண்ணிருந்தும் காணாமலும் காதிருந்தும் கேளாமலும் இருப்பவர்களைப் போல் இருக்கிறார்கள். படியாதபெண்கள் மற்றப்பெண்களை படுத்துகிற பாட்டையும் அவர்கள் படுந்துன்பங்களையும் கேட்க முடியவில்லை. அவர்கள் நன்மை தீமைகளை உள்ளூர உணர மார்க்கமில்லை. அவர்கள் மரண பரியந்தம் உரலோடும், உலக்கையோடும், அம்மியோடும் மல்லுக்கு நிற்கிறார்கள்.

இதனால் பெண்கள் வீட்டு வேலைகளை செய்யக்கூடாது என்றும், பெரியோருக்கு கீழ் படிந்து நடக்கக்கூடாது என்றும் சொல்லவில்லை. ஆனால் வேலையைத் தவிர படிப்பும் படித்தால் கட்டாயம் கீழ் படிவார்கள். படித்தால் கெட்டவர்களும் நல்லவர்களாவார்களேயன்றி கெட்டவர்களாக மாட்டார்கள்,

"தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை"
"தாயை தண்ணீர்த்துறையில் கண்டால் பிள்ளையை வீட்டில்

போய்க் காண வேண்டுமா?" என்னும் பழமொழிக்கேற்ப, பிள்ளைகளுமிருப்பார்கள். இதன் உட்கருத்து என்னவென்றால், பிள்ளையின் சிறு வயதில் தகப்பன் அடிக்கடி வெளியே போய் விடுவான். அப்பொழுது பிள்ளைகள் தாயின் பராமரிப்பிலேயே யிருக்கிறார்கள். அதனால் தாயின் குணம் பிள்ளைக்கும் படிந்துவிடும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்றபடி அந்த குணமாக இருப்பார்கள். தாய் படித்து புத்திசாலியாய் இருப்பாளாயின், பிள்ளையும் புத்தியிலும் படிப்பிலும் சாமர்த்தியமாய் விளங்கும் தாய் அசட்டுத்தனமாக இருப்பாளாயின் அவள் செய்யும் காரியங்களும் மாறாக இருக்கும். அதைப் பார்த்து பிள்ளைகளும் கெட்டுப்போவார்கள்.

படித்தால் மற்றவர்கள் கையை எதிர்பார்த்துச் சாப்பிடவேண்டாம்; திட்டு, வசை, கேட்கவேண்டாம். கேவல ஸ்திக்கு வரவேண்டாம். படித்தால் சௌகரியமும், பெருமையும் வாய்ந்த காலக்ஷேபம் செய்யலாம். சுகாதாரம் படித்திருந்தால் அனாவசியமாக பேயோட்டிகளுக்கும், வைத்தியருக்கும் பணத்தைக் கொட்ட வேண்டாம். தையல் தெரிந்தால் தங்கள் துணிகளை அலங்கரிக்கலாம். தையல் தெரியாதவர்களுக்கு தைத்துக்கொடுத்து அவர்கள் அன்பை பெறலாம். தனியே இருக்கும் நேரங்களில் வம்பர் மகாசபையில் சேராமல், புஸ்தகங்களைப் படித்து பெண் திலகங்களையும் அவர்கள் வீரத்தையும், படிப்பினால் அவர்கள் அடைந்திருக்கும் நன்மைகளையும், வாசித்து படிப்பு இன்னும் முன்னேற்றமடைய முயற்சி செய்யலாம்.

சிலர் பெண்களை வீரமற்ற பேதைகள் என்று எண்ணுகிறார்கள். ஜான்ஸி ராணி லட்சுமிபாய், சம்யுக்தை முதலியவர்களுடைய யுக்தியையும், வீரத்தையும் நினைத்துப் பார்ப்பீர்களாக. இன்னும் பெண்களின் பெருமையை எடுத்துக் கூறுவதென்றால் எவ்வளவோ சொல்லலாம். பெண் கல்வியினாலேயே மேனாடு சிறப்புற்று விளங்குகிறது. நம் தாய் நாடு பெண் கல்வி யின்றி தாழ்ந்து இருக்கிறது.

2 வருஷங்களுக்கு முன் நடந்த காந்தி—இர்வின் ஒப்பந்தத்திற்கு அதிகமாக உதவி செய்தவர்கள் பெண்களே என்று தலைவர் காந்திஜி சொல்லுகிறார். நம் பாரத மாதாவையும் அரும் பெருந்தலைவர் மகாத்மாவையும் சந்தோஷப்படுத்துவதற்கு பெண்கள் தலைப்படவேண்டும். பெண்களே! எழுங்கள். உலகிற்கு வழி காட்டுங்கள். பெண்ணாய் பிறப்பதைவிட மண்ணாய் பிறப்பதே மேல் என்று எண்ணும் எண்ணங்கள் தொலைக! பெண்களை அடக்கும் முயற்சி ஒழிக!! பெண் கல்வி ஓங்குக!!!

தாலி கட்டினால்:: :: ::
:: ::கல்யாண மாச்சா?

(தி. சதாசிவம்)

(முன் கதை:—லக்ஷ்மி ஏழைப்பெண். 16 வயதாயிற்று. அவள் தாயாருக்கு அட்வொகேட் அருணாசலமய்யர் வீட்டில்சமையல் வேலை. விவாகஞ்செய்ய பணமில்லாததால் தவிக்கிறாள். லக்ஷ்மியின தாய் மாமன் மகன் பெயர் கிட்டு. அவன் காசியில் படிக்கிறான். அவனும் லக்ஷ்மியும் காதல் கொள்ளுகிறார்கள். ஆனால் அவன் தாய் தந்தையருக்கு லக்ஷ்மியை விவாகஞ் செய்ய இஷ்டமில்லை. கோயம்புத்தூர் ஜில்லா இஞ்சினியர் பிரணதார்த்தி ஹரய்யரின் மகள் கோகிலத்தை விவாகஞ் செய்வதாய் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். சப்இன்ஸ் பெக்டர் பூதலிங்கமய்யரிடம் கிட்டுவின் தகப்பனார் ராமசாமி ஐயர் 4 ஆயிரம் ரூபாய் கடன் கேட்கிறார். தமது மகள் ராஜத்தை கிட்டுவுக்கு விவாகஞ் செய்துகொள்ளுவதாக ராமசாமி ஐயரிடம் வாக்குறுதி வாங்கிக்கொண்டு அவர் கடன் கொடுக்கிறார். பிரணதார்த்தி ஹரய்யரிடம் தான் கொடுத்த வாக்குறுதியை ராமசாமி ஐயர் பூதலிங்கமய்யருக்கு சொல்லவில்லை. இதை பின்னால் அறிந்ததும் அவர் கோபமடைகிறார். ராமசாமி அய்யரின் வாக்குறுதி லக்ஷ்மிக்கும் தெரியாது. இனி கதையை மேலே வாசிக்கவும்)

அத்தியாயம் 4.

"இருவரைத்தாண்டினால் இரகசியமில்லை; உன்னையும் உனது எண்ணத்தையும்." என்றுரைத்துளார் ஒரு பெரியார்.

கிட்டுவின் ரயில் சென்னையை விட்டு நகர்ந்தது. 'கிட்டு கோகிலக் க்லியாணச்செய்தி' கோயமுத்தூரை விட்டு நகர்ந்தது. அடுத்த நாளே ஊரெல்லாம் பரவிற்று. திருவல்லிகேணி முழுதும் அதே பேச்சு. அன்று மாலை பெரியதெரு பிள்ளையார்கோவில் விதவா மகாநாட்டின் நேரத்தை இந்த ஒரு விஷயமே பூராவும் எடுத்துக் கொண்டுவிட்டது.

மறுநாள் காலை 7-மணியிலிருந்து இரவு 9-மணி வரை ஒரு நூறு ஸ்திரீகள் விசாலத்தம்மாள் வீட்டுக்கு வந்து அவளைப் பாராட்டினார்கள். இராமசாமி அய்யரையும் விடவில்லை. இத்தனை ஜனங்கள் வந்துப் பாடிப் புகழும்போது எங்ஙனம் விஷயத்தை மூடுவது? தவிர, ஏன் மூடவேண்டும்? அவர்கள் யாவரும் வந்து இப்படிக் கேட்பது அப்போதே கிட்டுவிற்கும் கோகிலத்திற்கும் கலியாணம் நடப்பதுபோல இருந்தது. இராமசாமி அய்யரும் விசாலத்தம்மாளும் ஆநந்தக்கடலில் மூழ்கினார்கள். "ஏதோ, உங்கள் ஆசிர்வாதம்; கடவுள் அநுக்கிரகம்; நடக்கவேண்டும்," என்றனர்.



இந்தக் கோலத்திற்கு லக்ஷிமி அங்கு சாக்ஷியாக நின்றாள். யாவற்றையும் தனது இரண்டு கண்களாற் கண்டாள். யாவற்றையும் தனது இ. ண்டு காதுகளாற் கேட்டாள். தான் பார்ப்பதும் கேட்பதும் கனவோ, மனப்பிரமையோ என ஐயுற்றாள். 'நருக்' கெனத் தன் விலாவைக் கிள்ளிக்கொண்டாள். 'சுரீர்' என்றது. கனவில்லை எனத் தெளிந்தாள்.

லக்ஷிமி விரைந்து வீடு வந்தாள். செல்லம்மாள் காதிலும் விஷயம் விழுந்துவிட்டது. மகளைக் கண்டதுமே, 'லக்ஷிமி!' என்றாள். 'அம்மா!' என்றலறி லக்ஷிமி தாயின் மடியில் வீழ்ந்தாள்.

"அடி என் கண்ணே! அந்த மகாபாவி மோசம் பண்ணினது நிஜம்தானோ? அந்தத் துரோகியை நம்பியிருந்தேனே! நாக்கில்

தேன் சொட்டப் பேசினுனே! அவன் நாக்கு அழுகாதோ! அவன் குடும்பம் நசிக்காதோ! கூசாமல் பொய் பேசினுனே! அட தெய்வமே!.........."எனப்பலவாறு ஒரு அத்தியாயம் செல்லம்மாளிடமிருந்து புறப்பட்டது.

"அம்மா! அவரைத் திட்டாதே. (அவள் அறியாமலே ஏக வசனம் மாறிவிட்டது.) அது என் தலை விதி! அவர் என் செய்வார்? அவர் பேரில் தப்பில்லை. தன் தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவர். என் மனம் நோகக்கூடாது என்றெண்ணி அவர் என்னிடம் விஷயத்தைக் கூறவில்லை. உன்னிடமுந்தான் என்ன சொன்னுர்? நீயும்தான் என்ன கேட்டாய்? என்னை விவாகம் செய்துகொள்வாரா என நீ உடைத்துக் கேட்டாயா? இல்லை. உனது கஷ்டத்தையும் ஊரார் வாயை மூட முடியவில்லை யென்றும் சொன்னுய். என்னைக் கைவிடுவாரோ என்றும் கேட்டாய். அவர் பதில் சொன்னது என்ன? என்னைக் கலியாணம் செய்துகொள்வதாகச் சொன்னுரா? இல்லை. தன் படிபபு பத்து மாதத்தில் முடிந்ததும், தான் செய்யவேண்டியதைச் செய்வதாகவும், கவலை வேண்டாமென்றும் சொன்னுர். "பரீக்ஷையில் எப்படியும் முதலாவதாகத் தேறுவோம்; நிச்சயம் வேலை கிடைக்கும். பெரிய சம்பளம் வரும். அத்தைக்கு உபகாரம் செய்யவேண்டும்" என்று உண்மையுடனேயே அந்த வார்த்தையைச் சொல்லி யிருக்க வேண்டும்- வீணுக அவரைத் திட்டாதே. அவர் மனம் பத்தரைமாத்து தங்கம். அவர் சுகமாக இருக்கட்டும். அவருக்கு ஒரு சமயம் எனது இந்த உடலை இந்த ஜன்மத்தில் சமர்ப்பிக்க முடியாமல் போகலாம். ஆனுல் எனது மனம், எனது ஆவி, எனது அன்பு, யாவையும் அவருக்கு அன்றே சமர்ப்பித்து விட்டேன். அம்மா! அவரை ஒரு வார்த்தைகூடச் சொல்லாதே. அவர் கண்ணீர் விட்டால் என் மனம் இரத்தம் விடும். கடவுள் அவரைக் காக்கவேணும்," என்ருள் லக்ஷ்மி. வீட்டில் ஒரு கொடிய சாந்தி பரவிற்று. செல்லம்மாள் வாயைத்திறக்கவில்லை.

போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பூதலிங்கமய்யர், இராமசாமி அய்யரின் பதிலை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்தார். பதிலும் வந்தது. அது அவரது சந்தேகத்தை அதிகப்படுத்தியது. தான் தன் கடிதத்தில் குறிப்பிட்டெழுதிய வதந்தியை மறுத்து ஒரு வார்த்தைகூட இராமசாமி அய்யர் எழுதாதது அவருக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

சுப்பிரமணியக் கௌண்டர் பலே பேர்வழி. திருப்பூரிலும் சுற்றுவட்டாரத்திலுமிருந்த போக்கிரிகள், கில்லாடிகள், யாருக்குமே, மீசைக்கௌண்டர் தான் குரு. சுப்பிரமணியக் கௌண்ட

ருக்கு 'மீசைக்கௌண்டர்' என்று ஊரில் பேர். அவரது மீசை நீண்டு, அடர்ந்து, பரவி வளர்ந்த மீசை. அந்த மீசை ஆடுவதிலிருந்து அவர் எதிரிலும், அக்கம் பக்கத்திலும் வருகிற ஜனங்களுக்கு 'இன்ன திசையிலிருந்து காற்று வீசுகிறது' என்று தெரியும்.

மீசைக்கௌண்டரின் உதவியை நாடினவர்கள் அந்த வட்டாரத்து போக்கிரிகளும், கில்லாடிகளும் மட்டுமல்ல; அநேக பெரிய மனிதருக்குங்கூட அவர் தயவு ரொம்ப வேண்டியிருந்தது. தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, மாகாண சட்டசபை, இந்தியா சட்டசபைத் தேர்தல்களுக்கு 'மீசைக் கௌண்டர்' உதவியை நாடாதவன் தோல்வியடைந்தான் என்பது முன் கூட்டியே யாவருக்கும் தெரிந்த விஷயம். இதுமட்டுமல்ல, போலீஸ் கேஸ்களுக்கு சாக்ஷிகள் வேண்டும்போதெல்லாம் சப்ளை நம்ப கௌண்டரைத்தான் சேர்ந்தது.

இந்த மீசை கௌண்டர் தன் ஆசைநாயகியின் வீட்டிலிருந்து அதிகாலையிலேயே திருப்பூருக்கு அடுத்த தன் கிராமத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தார் ஒரு நாள்.

சுப்பிரமணியக் கௌண்டரின் அண்டை வீட்டுக்காரர் கருப்ப கௌண்டர். இவர் அன்று காலையில் தன் வீட்டுக் கொல்லையில் மாடுகளைப் பார்க்கச்சென்றபோது ஒரு மாட்டைக் காணவில்லை. தனது கொல்லைக்கும் மீசைக்கௌண்டர் கொல்லைக்கும் நடுவிலிருந்த முள்வேலி ஒடிந்து விழுந்திருந்தது. உடனே அந்த கொல்லைக்குள் வந்தார்.

கருப்பக்கௌண்டர் அங்கு வந்தபோது மீசைக்கௌண்டரின் மனைவி கொல்லையில் கத்தரிச்செடி பிஞ்சுவிட்டதா என்று பார்க்கப் போயிருந்தாள். அவளைக் கண்டதும் கருப்பக்கௌண்டர் தன் மாடு ஒன்றைக் காணவில்லையென்றும், வேலி முறிந்து கிடந்ததால் அங்கு மாடு வந்ததா என்று பார்ப்பதற்கு வந்ததாகவும் சொன்னார்.

இதற்குள் மீசைக் கௌண்டர் வீட்டிற்கு வந்தார். ஒரு சொம்பு உடைத்துத் தாகசாந்தி செய்துகொண்டு மனைவியைக் கூப்பிட்டார். பதில் இல்லை. கொல்லைப்புறத்தில் பேச்சுக்குரல் கேட்டது. சட்டென ஓடினார், கொல்லையை நோக்கி. இவரைக் கண்டதும் பயந்து படபடப்புடன் இவர் மனைவி முன்வந்தாள். கருப்பக் கௌண்டர் மாட்டின் அடிச்சுவடு கூடக் காணாது அப்போதுதான் தன் கொல்லைக்குத் திரும்பிச் சென்றார். மீசைக் கௌண்ட

ருக்கு சந்தேகம் உண்டாய்விட்டது. திரும்பி வீட்டிற்குள் வந்தார். அரிவாளை எடுத்தார். மனைவியின் கழுத்தில் ஒரு வெட்டு. ஓடிப்போய் கருப்பக் கெளண்டர் கழுத்தில் ஒரு போடு.



கோயமுத்தூர் ஜில்லா கொலை கேஸ்களெல்லாம் இந்தமாதிரிதான். மீசைக் கெளண்டரின் கேஸ் கோயமுத்தூர் 'ஸெஷன்ஸ் கோர்ட்டுக்கு 'கமிட்' செய்யப்பட்டிருந்தது.

* * *

இராமசாமி அய்யரின் பதிலைக் கண்டதுமே பூதலிங்க மய்யருக்கு அடுத்த ரயிலில் கோயமுத்தூர் சென்று பிரணதார்த்தி ஹரய்யரைக்கண்டு பேசவேண்டும் என்ற ஆத்திரம். அடுத்த நாளில் 'மீசைக்கௌண்டா கொலை கேஸ் ஈரங்கி' கோயமுத்தூர் 'ஸெஷன்சில்' இருப்பதாலும், அதற்குப் பூதலிங்கய்யர் ஆஜராக வேண்டியிருந்ததாலும், சர்க்கார் செலவிலேயே பிரணதார்த்தி ஹரய்யரைக் கண்டு வரலாமென அவர் மனைவி சொன்னாள். குடித்தனப்பாங்கு தெரிந்த அம்மை.

* * *

பூதலிங்கமய்யர், கன்ட்ராக்டர் கோவிந்தசாமி நாயுடுவை அழைத்துக்கொண்டு பிரணதார்த்தி ஹரய்யரைப் பார்க்கப் போனார். நாயுடுகாரு இருவருக்கும் நண்பர். இன்ஸ்பெக்டரை இஞ்சினியருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அய்யர்வாளும் அய்யரும் பேசலாயினர். பேச்சுவாக்கில், தான் சென்னை இராமஸ்வாமி அய்யரின் இன்ன பந்துவென்றும் அவரது மகனுக்கு அய்யர்வாளின் பெண் நிச்சயமாயிருப்பதாக இராமசாமி அய்யரே தன்னிடம சொன்னதாகவும், அதைக் கேட்டுத்தான் அடைந்த சந்தோஷத்தை வாயாற் சொல்ல முடியாதென்றும்...அப்படி நைஸ்ஸா வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றினர் பூதலிங்கமய்யர்.

சம்பந்தியின் மாமா என்று கேட்டதுமே இஞ்சினியர் நிமிர்ந்து உட்கார்ந்தார். "கோகு! அம்மாவை காப்பியும் டிபனும்

கொண்டுவரச் சொல்லு" என்று கூறினர். பிறகு தான் சென்னை சென்றது, கிட்டுவைக் கண்டது, இராமசாமி அய்யர் வந்தது, அவரது சத்தியம், யாவற்றையும் சாங்கோபாங்கமாக உரைத்துக் கடைசியாக, இராமசாமி அய்யரிடமிருந்து தனக்கு வந்த கடிதத்தையும் வாசித்துக் காட்டினர். சம்பந்தியின் மாமாவை ஆசாரோபசாரம் செய்தார்.

பூதலிங்கமய்யருக்கு அந்த டிபனும் காபியும் விஷமாக இருந்தன. பூர்வாங்கத்திலேயே தன்னை இராமசாமி அய்யர் மோசம் பண்ணினதை இஞ்சினியர் இடத்தில் சொல்ல முடியாது, வாயைப் பூட்டிக்கொண்டு தவித்தார். அவருக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. மெல்ல விடைபெற்றுக்கொண்டு திருப்பூருக்கு ஓடி வந்து வீடுசேர்ந்தார். (மெயில்வண்டியில் வந்தார்) மனைவியிடமும், விதவா சகோதரியிடமும் விஷயத்தைச் சொல்லிக் கத்தினர். கடிதம் எழுத பேனாவை எடுத்தார். சிவப்பு மசியாக இருந்தது. கோபத்திற் கறிகுறி சிவப்பே. சுடச்சுட எழுதினர். 'நாயே, பேயே' என்று திட்டினர். தந்தைக்கும் பிள்ளைக்கும் படிகட்டி சிவில் ஜெயிலில் அவர்களை வந்து பார்ப்பதாக சத்தியம் செய்தார். ராத்திரியே தபால் ஆபீசில் கடிதத்தைத் தன் கையினாலேயே கொண்டுபோய் போட்டார்.

அடுத்த நாள் மெயிலில் "இராமசாமி அய்யர் எங்கே? இராமசாமி அய்யர் எங்கே?" என்று அக் கடிதம் சென்னையை நோக்கி விரைந்து சென்றது.

* * *

பூதலிங்கமய்யரின் கடிதத்தை இராமசாமி அய்யர் கண்டார். அன்றிலிருந்து அவரது வயிறு 'நித்திய பேதி'யைக் கண்டது.

மனைவியின் பேரில் கடன் கொடுத்திருந்ததால் பூதலிங்கமய்யருக்கு உடனே இராமசாமி அய்யர் பேரில் வழக்குத் தொடர்வது கஷ்டமாய் இருந்தது. "சப் இன்ஸ்பெக்டர் சம்சாரம் கேஸ் கொடுத்துள்ளாள்" என்பது என்னஇருந்தாலும் ஒரு மாதிரிதான் என எண்ணினர். வாரமொருமுறை இராமசாமி அய்யரை மிரட்டி மிரட்டி எழுதி வந்தார். பதிலே கிடையாது.

இராமசாமி அய்யர் நாளை எண்ணி வந்தார். சில மாதங்கள் ஆய்விட்டன. "அடியே! இன்னம் மூணு மாஸந்தானிருக்கு கிட்டு பரிக்ஷைக்கு! எப்படியாவது இந்த மூணு மாசமுந் தொலைஞ்சா, நமக்கு நல்ல காலம். கோர்ட்டும் மூடிவிடும். கிட்டுவும் வந்திடுவன், கோயமுத்தூர் கலியாணம். அந்த பூதலிங்கத்தின் பணத்தை

அவன் மூஞ்சியிலே வீசி எறியலாம்'' என்று மனைவியிடம் ஒரு நாள் கூறினர். கிட்டுவிற்கு பூதலிங்கமய்யரின் கடிதங்களைப் பற்றி எழுதவே யில்லை.

* * *

தைபாதப் பிறப்பு. அருணசலமய்யர் வீட்டிற்கு ஒரு பெரியவர் வந்தார். இருவருமாக வெகுநேரம் பேசிக்கொண் டிருந்தனர். மணி பனிரண்டு அடித்தது. இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர். செல்லம்மள் பரிமாறினுள்.

“செல்லம்மா! இவர் மாயவரத்திலிருந்து வந்திருக்கிருர். அங்கே சப்ஜட்ஜ் ஜெயராமய்யா வீட்டுக்காரியஸ்தர். ஸ்ரீமான் ஜெயராமய்யருக்கு வயது நாற்பதிருக்கலாம். நல்ல வைதீகம். சதா புராணமும் கையுமாக இருப்பார். போன வருஷம் அவரது மனைவி காலமானுள். அவள் இறந்த ஒரு மாதத்திற்கெல்லாம் அவரது ஒரே பையன்—பதினெட்டு பிராயம்—தவறிவிட்டான். அந்த மனே வியாகூலத்தினுல் மூன்று வருஷம் ரஜா எடுத்துக் கொண்டு ஜயராமய்யர் மாயவரத்திலேயே காவேரிக்கரையில் ஒரு பெரிய வீட்டில் தன் தாயாருடன் இருந்து வருகிருர். அந்தம்மாளுக்கு வயசு எழுபதிருக்கும். பிள்ளைக்கு மறு கலியாணம் செய்தால் அந்த மனோ வியாகூலம் பிள்ளையைவிட்டு நீங்கும் என்று நம்புகிருள். அப்படியே பலரும் எண்ணுகிருர்கள். போன மாதம் விஷயம் என் காதிலே விழுந்தது. இந்தமாதிரி உங்களுக்கொரு பெண் இருப்பதாகவும், அழகிலும் காரியத்திலும் லக்ஷ்மிக்கு ஈடு சொல்ல முடியாதென்றும் கேள்விப்பட்டார்களாம். உங்கள் சமாச்சாரம் சகலமும் நானேசொல்லிவிட்டேன். கலியாணச்செலவு அவர்களது. கலியாணத்தின் போது லக்ஷ்மிக்கு சுமார் பத்தாயிரம் ரூபாய் பெறுமான நகை போடுகிருர்கள். எல்லாம் ஜெயராமய்யர் மூத்தாள் போட்டுக்கொண்டிருந்தவை தான். இது போதாதென்றும், உங்களுக்கு இன்னொரு பெண்ணும் விவாகத்திற்கு இருப்பதால் ரூ. 2000 ரொக்கமாக உங்கள் கையில் கொடுக்கவேண்டும என்றும் நான் சென்னேன். அதற்கும் ஒப்புக் கொள்ளுகிருர்கள். கலியாணமான கையோடு பெண்ணையும் அழைத்துப் போய் விடுவார்கள். ஒரேநாள் கலியாணம்; உங்களுக்கு சம்மதமானல் ஒரு வார்த்தை சொல்லுங்கள். இங்கேயே நம்ம வீட்டிலேயே நடத்தி விடலாம்,'' என்று ஒரு “பாயின்ட்'' விடாமல் அட்வகேட் அருணசலமய்யர் கூறினர்.

செல்லம்மாளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவள் சந்தோஷப்படவில்லை. ஆனுல் ஒரு கவலை நீங்கினவளாகக் காணப்பட்டாள். மறுநாள் பதில் சொல்வதாகக் கூறினுள்.

அட்வகேட்டும், காரியஸ்தரும் தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தபோது லக்ஷிமி வந்தாள். அவளை ஜெயராமய்யர் காரியஸ்தர் சரியாகப் பார்க்கவேண்டி அருணாசலமய்யர், 'என்னம்மா லக்ஷ்மி! எங்கேபோனே, வந்தே என்பதாக அர்த்தமில்லாத நாலு வார்த்தைகள் கேட்டார். அவள் உள்ளே சென்றதும், காரியஸ்தர், "அவள்பேர்கூட லக்ஷிமியா? இல்லே, அப்படி அழைக்கிறீர்களா?" எனக்கேட்டார். லக்ஷிமி சென்ற பக்கமே தன் தலையைச் சாய்த்துப்பார்த்த வண்ணம் இருந்தார்.

செல்லம்மாள் எஜமானியிடம் மறுநாள்வரை ரஜா வாங்கிக்கொண்டாள். லக்ஷிமியுடன் விரைந்து வீடு வந்தாள். தாயின் பரபரப்பும் ரஜாகேட்டு வாங்கியதின் காரணமும் அவளுக்கு விளங்கவில்லை. வீட்டிற்குச் செல்லும்போதே "என்ன அம்மா விசேஷம்?" என்று ஆவலுடன் கேட்டாள். "ஆத்துக்கு வா, சொல்லேன்" என்றாள் தாய். லக்ஷிமி பயமுங் கவலையும் கொண்டாள். திடீரென அருணாசலமய்யர் பக்கத்தில் இருந்த காரியஸ்தரை எண்ணினாள். உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை ஒரு உணர்ச்சி தோன்றியது. அவள் கண்கள் இருண்டன. நெற்றியில் வியர்வைத் துளிகள் துளிர்த்தன.

செல்லம்மாள் மிக்க பரபரப்புடன் லக்ஷிமிக்கு சகல விவரங்களையும் சொன்னாள். பெண்ணின் மனம் பதை பதைத்தது. கிட்டுவை எண்ணினாள். தனது வலது உள்ளங்கையை நோக்கினவளாய் மூன்று முறை தன் தலையை முன்னும் பின்னுமாக அசைத்தாள். அவளது கண்களினின்றம் நீர் தாரை தாரையாகப் பெருகிற்று. நெஞ்சு அடைபட்டது. பேச நா எழவில்லை.

கிட்டு காசிக்குச் சென்று ஆறு மாதங்களாய்விட்டன. அவன் சென்ற மறுதினமே அவனுக்கும் கோயமுத்தூர் கோகிலத்திற்கும் கலியாணமாகப்போகிற செய்தி வந்ததையும், அது தன்னையும் தன் தாயையும் துயரக்கடலில் ஆழ்த்தியதையும், லக்ஷிமி கிட்டுவிற்கு எழுதவில்லை. தன்மேலுள்ள அன்பின் காரணத்தினால் தன் மனச் சஞ்சலத்தை அறிவித்தால், அவனது மனம் வருந்தி, அவனது படிப்பிற்கும் இடைஞ்சல் ஏற்படுமோ, என்று அஞ்சினாள். மற்றும், "கடைசிவரை பார்ப்போம்; கடவுள் காபாற்றுவார், கிட்டு கைவிடமாட்டான்." என்றதொரு பாழும் நம்பிக்கை. இவையுமன்றி அவளது இயற்கை லஜ்ஜை. கிட்டு வழக்கம்போல எழுதி வந்தான். லக்ஷிமியும் வழக்கம்போல எழுதிவந்தாள். பாவம்! அந்தத் துள்ளிக் குலாவித் திரியும் சிறு மானை யொத்த பேதை லக்ஷிமி, இப்படித் திடீரென ஒரு ஜெயராமய்யரை எதிர்பார்க்கவில்லை.

"அம்மா! எனக்கு வேண்டாம் அம்மா! என் உடல் நடுங்கு கிறது. என் மனம் பதை பதைக்கிறது. எனக்குப் பயமாக இருக்கு. என்னை விட்டுவிடு அம்மா! எனக்கு இது வேண்டாம். நான் இப்படியே என்றுமே கன்னிகையாக இருந்து என் காலத்தைக் கழிக்கிறேன். அம்மா! என்னை விட்டுவிடு!" என நடுங்கியவளாய் உரைத்தாள்.

"அப்படிச் சொல்லாதேடி லக்ஷிமி! பெண்ணாய்ப் பிறந்தால் புருஷனைத்தேடி வாழ்க்கைப்படத்தான் வேணும். இப்பவே ஊர் சிரிக்கிறது. ஒரு ஒரு நாளும், ஒரு ஒரு யுகமாக இருக்கு. என் கண்ணே! நீ பயப்படாத்துக்கு இல்லே. தைரியமாயிரு. 'சரி'னு சொல்லு லக்ஷிமி!" என்றாள் அன்னை.


"அம்மா! என்னைக்கொல்லாதேடீ, எனக்கு இது வேண்டாம்! வேண்டாம். வயசு நாற்பது என்று அவர்களே சொல்கிறார்கள். அப்போது ஐம்பதிற்குக் குறைவில்லை. 'மனோவியாகூலம்' என்றார். அதென்ன அர்த்தம்? அந்த வியாகூலத்தில் உடம்பும் சேரவில்லை என்று எப்படித் தெரியும்? அம்மா! இந்த சங்கை பொன்றும் வேண்டாம். நான் இப்படியே இருந்து என் உயிரை விடுகிறேன். நான் இப்படி உன்னிடம் இருப்பது உனக்குக் கஷ்டமா யிருந்தால் அந்த சுப்பலக்ஷிமி அம்மாள் காலில்போய் விழுந்து அவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து விடுகிறேன். இது வேண்டாம் அம்மா! பணத்திற்கு என்னையா விற்கவேண்டும்? வேண்டாம் அம்மா! என்னைக் கட்டாயப்படுத்தாதே! என் மனதில் ஒரே பயமாக இருக்கு. எனக்குக் கலியாணமே வேண்டாம்" என்று கதறினாள்.

பாவம்! புத்திரியின் பிரலாபம் செல்லம்மாளின் மனதைப் பிளந்தது. தனது உயிரினுமினிய புதல்வியைத் தன் கையினாலேயே கொல்வதாகப்பட்டது. அவள் நடுக்கமுற்றாள். ஆனால் அவளை அப்படிச் செய்யத் தூண்டுவது, வேறு ஏதோ ஒன்று என உணர்ந்தாள். 'ஏதோ' அவளது தாய்ப் பாசத்தையும் பலமின்றிச் செய்வதை உணர்ந்தாள். 'சமூகத்தின் கொடுமையே' அந்த 'ஏதோ!' அதுவே செல்லம்மாளின் உயிரைத் தினம் வாட்டி வந்தது! லக்ஷிமியின் உயிரையும் வாட்ட சூழ்ச்சி செய்கிறது.

தாய் கதற, மகள் அலற, இரவெல்லாம் இருவருமே பிரலாபித்து, அன்னையின் பாசத்தினின்றும் அறுபட முடியாத லக்ஷிமி, தன்னை நொந்து, தன் தாயை நொந்து, தனது சமூகத்தை நொந்து, தன்னைப் படைத்த கடவுளையும் நொந்து, "அடே பாபி! என் மனதைக் கொள்ளை கொண்ட கிட்டு! என் அன்பே! என்னை விடு! என்னை மற!" "என்னை விலைக்கு வாங்கும் ஜெயராம்! இந்த உடல்மட்டும் உனது. இது வெறும் உடல். இதில் உள்ளம்

இல்லை; இதில் உயிர் இல்லை; இதில் அன்பு, காதல் ஒன்றுமே இல்லை. தெரிந்து வாங்கு. இது காலி உடல். நடமாடும பிணம்" எனப் பிதற்றினாள். கோரமானதொரு நிச்சப்தம் எங்கிருந்தோ வந்து படிந்தது. தாயும் மகளும் திறந்த கண்ணும், மூடிய வாயுமாக எதிரெதிரே உட்கார்ந்திருந்தனர்.

* * *



அக்பர் சாஹிப் தெருவிலிருந்த கோழிகள் தாங்கள் இருப்பதை ஒவ்வொன்றாக உலகிற்கு அறிவிக்க ஆரம்பித்தன. லக்ஷிமி எழுந்து தன முகத்தைக் கழுவினாள். 'கும்மட்டி' அடுப்பில் தீ மூட்டினாள். சென்ற நாலரை வருஷத்தில் தனக்குக கிட்டு எழுதியுள்ள கடிதங்கள் யாவற்றையும எடுத்தாள். சுமார் இருநூறுக்கு மேலிருக்கும். ஒன்றை எடுப்பாள். கண்ணில் ஒத்திக் கொள்வாள். அதைத் தீயிலிடுவாள். இன்னொன்றை எடுபபாள். கண்களில் ஒத்துவாள், தீயிலிடுவாள். இப்படியாக ஒவவொரு கடிதத்தையும் எடுத்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டு பிறகு தீயில் இட்டாள். லக்ஷிமி, செம்பைக் கொண்டுவா அம்மா' என்று பால்காரன் கத்தினது காதில் விழுந்தது. பொழுது நன்றாய்ப் புலர்ந்ததை உணர்ந்து லக்ஷிமி எழுந்தாள். செல்லம்மாள் அருணாசலமய்யர் வீட்டிற்குச் சென்றாள்.

(தொடரும்)




ஆசிரியர்: தே. ச. சொக்கலிங்கம்

மாலை 2. | 1933 அக்டோபர் 5உ
29, செம்புதாஸ் தெரு, சென்னை. | மலர் 4.

அட்டவணை.

காந்தி ஜயந்தி



தீபாவளிக்கு கதர் அணியுங்கள்

மகாத்மாவின் ரகசியம்

அக்டோபர் 2உ யோடு மகாத்மாவுக்கு 64-வயது பூர்த்தியாகிறது. இந்த 64-வருஷங்களில் சென்ற 27-வருஷங்களாக அவர் வாழ்வு பம்பரம்போல வேகமாய் சுழன்று வந்திருக்கிறது. இந்த 27-வருஷங்களில் சென்ற 13-வருஷங்கள் ஏராளமான சம்பவங்கள் நிறைந்து நிற்கின்றன. இம்மாதிரி அதி முக்கியமான சம்பவங்கள்—35 கோடி ஜனங்களின் தலையெழுத்தை மாற்றக்கூடிய சம்பவங்கள்—நிறைந்த வாழ்வை வேறு எவரிடமும் பார்க்கமுடியாது. மகாத்மாவின் வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு சம்பவமும், தேசத்திற்கு நேரிடும் முக்கிய சம்பவமாய் மாறிவந்திருக்கிறது. புட்டுக்கு மண் சுமந்தபோது சொக்கநாதர் முதுகில் பாண்டியன் அடித்தான். அந்த அடி லோகத்திலுள்ள சகல ஜீவராசிகள் பேரிலும் விழுந்ததாம். அதைப்போல மகாத்மாவின் வாழ்வும்,இந்தியாவின் வாழ்வும் ஒன்றிப் போயிருக்கிறது. மகாத்மாவுக்கு இந்தியாவில் அழியாத, நிகரற்ற செல்வாக்கிருப்பதற்கு இதுவே காரணம்.

இந்தியா வேறு, தான் வேறு என்ற எண்ணம் கடுகளவும் இல்லாதவர் மகாத்மா. அவர் பெருமையை அம்மாதிரி உணர்ச்சியுள்ளவர்களால்தான் அறியமுடியும். வெறும் ராஜீயவாதிகளால் அறியமுடியாது. "மகாத்மா மனப்போக்கு எப்படி என்பதை எங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை" என்று சர். ஹெயிக் கூறினார். மகாத்மா செய்கிற முக்கியமான தீர்மானங்களைக் கண்டு சிலருக்கு எதிர்பாராத ஆச்சரியம் ஏற்படுகிறது. 1922-ல் பார்டோலியில் வரி மறுத்தல் இயக்கத்தை திடீரென்று நிறுத்தி, ஒத்துழையாமையை ஒத்திவைத்ததைக் கண்டு அச்சமயம் எல்லாரும் குறை கூறினார்கள். 1924-ல் அவர் ராஜீயத்திலிருந்து விலகியது பலருக்கு புரியவில்லை. அவர் செல்வாக்கு போய்விட்டதுதென்று கூறினார்கள். 1927 ல் சென்னை காங்கிரசில் நிறைவேறிய "பூர்ண சுயேச்சை" தீர்மானத்தை எதிர்த்தார். ஆனல் அவரே 1929 ல் லாகூர் காங்கிரசில் பூர்ணசுயராஜ்ய தீர்மானம் கொண்டுவந்தார். இவ்வருஷம் முதலில் விடுதலையானவுடன் வைசிராயிடம் பேட்டி கேட்டார். இரண்டாவது தடவை விடுதலையான்பின்பு பேட்டியைப் பற்றியே பேசவில்லை. ஒரு வருஷம் ராஜீயத்தில் தீவிரமாய் சேரப் போவதில்லையென்று சொல்லுகிறார். ஆனல் தன்னிடம் யோசனை

கேட்டால் தான் மறுக்கப்போவதில்லை யென்று கூறுகிறார். இவற்றையெல்லாம் பார்க்கும் ராஜீயவாதிகளுக்கு அவர் மனப்போக்கை அறிவது கஷ்டமாகவே தோன்றும். காரணமென்ன? மகாத்மா வெறும் ராஜீயவாதியல்ல. அவர் கர்மயோகி. சந்தர்ப்பங்கள் அவரை ராஜீயத்தில் கலக்கும்படி செய்கின்றன. அதைப் தைப்பற்றி அவர் ஒரு சமயம்,

“நான் ராஜீயத்தில் ஏன் சேருகிறேன்? பாம்பைப்போல ராஜீயம் நம்மைச்சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறது. நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் அந்த பாம்பின் வளைப்பிலிருந்து விலக முடியாது. ஆகவே அந்த பாம்புடன் போராட விரும்புகிறேன். ராஜீயத்தில் மதத்தை கலப்பதற்கு நான் முயற்சி செய்து வருகிறேன்.” என்று சொன்னார்.

ராஜீயத்தில் வேலைசெய்வது மகாத்மாவின் லட்சியமல்ல. அவருடைய லட்சியத்தைப் பூர்த்தி செய்ய ராஜீயம் ஒரு வழியாய் நிற்கிறது. அன்பெனும் உயரிய நிலையில் மகாத்மா நிற்கிறார். பலனை எதிர்பாராமல் கர்மம் செய்வதே அவர் நோக்கம். இதிலே சத்தியமே கடவுளாய் விளங்குகிறார். அவர் ராஜீயவழி அன்பு, கடமை, சத்தியம் மூன்றும் பின்னப்பட்டது. ஆகவே அந்த நிலைமையில் அவர் நின்று ராஜீயத்தை நோக்கும்போது, அவர் பார்வைக்கு தோன்றுவது, சாதாரண ராஜீயவாதிகளுக்கு எப்படி தெரிய முடியும்?

“வைசிராயிடம் பேட்டி கேட்டால் அவர் மறுப்பார்; அது தேசத்திற்கு அகௌரவம்” என்று ராஜீயவாதிகள் சொன்னார்கள். மகாத்மாவுக்கு அப்படித் தோன்றவில்லை. தன் கடமையைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். வைசிராயிடம் பேட்டி கேட்டார். அவர் மறுத்தார். அதனால் மகாத்மாவுக்கு அகௌரவம் ஏற்பட்டதா? இல்லை. அவர் கௌரவமும், மதிப்பும் அதிகரித்தன. சர்க்காரின் அற்பபுத்தியைக் கண்டு உலகம் சிரித்தது. ஆகவே மகாத்மாவின் போக்கை ராஜீயவாதிகள் அச்சமயம் உணர முடியாது. ஆனால் காலப்போக்கில், அவர் செய்ததே மிகவும் சரி என்பது நிரூபணமாய்விடும். இதுவே மகாத்மாவின் ரகசியம்.

தனி மனிதனாக மகாத்மா நின்று போராடும்போது, அவரை யாரும் எதிர்த்து வெற்றிபெற முடியாது. சாம்பாரான் சட்டமறுப்பு சென்ற வருஷம் புனா உபவாசம், இவ்வருஷம் உபவாசம் முதலிய விஷயங்களை யோசித்துப் பாருங்கள். அவரே வெற்றி பெற்றார்.


அவருடைய கர்ம யோகத்திற்கு முன்பு எந்த ஆயுத பலமும் ஏது வும் செய்ய முடியாது.

மகாத்மாவிற்கு செல்வாக்கு குறைந்து விட்டதாக சிலர் சொல்லுகிறார்கள். இந்தப்பேச்சை 1922ம் வருஷம் முதல் சொல்லி வருகிறார்கள். ஆனால் மகாத்மாவின் செல்வாக்கு எப்பொழுதும் இருப்பதைப் போலவே இருந்து வருகிறது. 1922ம் வருஷம் ஒத்துழையாமையை நிறுத்தியவுடன் அவர் செல்வாக்கு போய் விட்டதாகச் சொன்னார்கள். அவர் ஜெயிலிலிருந்து விடுதலையானவுடன் மறுபடியும் அவரே தலைவரானார். சுயராஜ்யக்கட்சியார் இஷ்டப்படி விட்டார். கடைசியாக 1928-ல் மகாத்மா சொல்லுகிற வழியைத் தவிர வேறு வழியில்லை யென்று சுயராஜ்யக் கட்சியார் கண்டனர். 1930-ல் டண்டி யாத்திரை புறப்படும் போது, அவரை எல்லாரும் கேலி செய்தார்கள். யாத்திரையின் முடிவு என்னவாயிற்று? காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் முடிந்தது. ஹரிஜன இயக்கம் ஆரம்பித்தவுடன், அவர் செல்வாக்கு போய் விட்டதாகச் சொன்னார்கள். அவர் விடுதலையான பின்பு செல்வாக்கு குறையவில்லை யென்பதை உலகம் கண்டது. ஒரு வருஷம் தானாக ஜெயிலுக்கு போகப் போவதில்லை யென்று இப்பொழுது மகாத்மா சொல்லுகிறார். அவர் செல்வாக்கு போய்விட்டதாக மறுபடியும் சிலர் கூச்சல் போடுகிறார்கள். இந்தக் கூச்சலுக்கு அர்த்தமே கிடையாது.

மகாத்மா செல்வாக்கு என்றும் அழியாதது. அதை யாரும் அழிக்கவும் முடியாது. மகாத்மாவுக்குத் தோல்வியே கிடையாது. அவர் கர்மவீரன். உடல், பொருள், ஆவி மூன்றையும் நாட்டிற்காகத் தத்தம் செய்த உயர்ந்த தியாகி. அவர் தோன்றி யிருக்கா விட்டால், சென்ற 13 வருஷங்களாக நாட்டில் ஏற்பட்டிருக்கிற தேசாபிமானம் தோன்றி யிருக்கமுடியுமா? இந்தியாவைச் சுற்றி உலகத்தார் அறிந்திருக்க முடியுமா? இந்தியாவிற்கு குடியேற்ற ஆட்சி கொடுக்கிறோம் என்று பிரிட்டிஷார் ஒப்புக் கொள்ளத்தான் செய்வார்களா?

மகாத்மாவே இந்தியாவிற்கு தனிப்பெருந் தலைவர். அவர் பல்லாண்டுகள் வாழ்ந்து இந்தியாவை ஈடேற்றுவாராக!


கைத்தறி துணியானாலும், கதரே வாங்குக!



இந்த கைத்தறிக்காரன், மேல்லிய மில் நூல் வாங்குவதா அல்லது கை ராட்டை நூல் வாங்குவதா என்று தெரியாமல் விழிக்கிறான். பதில் உங்கள் கையிலேயே இருக்கிறது. நீங்கள் கதர் வாங்கினால், பட்டினியால் வருந்தும் ஏழைகள் பிழைப்பார்கள். கதரையே வாங்குக!

—அகில பாரத சர்க்கா சங்கம்.

எங்கே போவது?



ஈவனிங் ஸ்டாண்டர்ட்] [லண்டன்

முதலாளித்துவத்திற்கு நெருக்கடி வந்திருக்கிறது. ரஷ்யாவில் எல்லா தொழில்களையும் பொதுவுடமையாக்கி விட்டார்கள். இத்தாலியில், தேசத்தின் நன்மைக்கான வழியில் நடக்கும்படி முதலாளிகளை முசோலினி கட்டாயப்படுத்துகிறார். அமெரிக்காவில் திடீரென்று ஆபத்து தோன்றி யிருக்கிறது. தொழிலாளர்களை இத்தனை மணி நேரத்திற்குமேல் வேலை வாங்கக்கூடாது; இவ்வளவு சம்பளத்திற்குக் குறைந்து கொடுக்கக்கூடாது; சரக்குகளை இன்ன விலைக்கு மேல் விற்கக்கூடாது என்று சட்டம் செய்து விட்டார்கள். பணத்தைக் கட்டிக்கொண்டு ஏழைகளை கொள்ளையடித்து வந்த முதலாளிகளுக்கும், லேவாதேவிக்காரர்களுக்கும் முடிவுகாலம் வந்துவிட்டது. ஒரு பாதை முடிவு பாதை. அது வழியாகப் போய் அழிந்துபோக அவர்களுக்கு இஷ்டமில்லை. மற்றொரு பாதை சாஸ்திர ஆராய்ச்சி. அவ்வழியாகப் போனால், இவர்கள் தொழில்களை சாஸ்திர ரீதியாக ஆராய்ந்து குட்டை வெளிப்படுத்தி விடுவார்கள். இவ் வழியிலும் போக இஷ்டமில்லை. நடுச் சந்தியில் நின்று தவிக்கிறார்கள்.

நத்தையின் நாலுகால் பாய்ச்சல்



கூட்டுக்கமிட்டி அடுத்த வருஷம்தான் அறிக்கை அனுப்பப் போகிறதாம். ஆகவே சட்டசபைகளை மறுபடியும் ஒரு வருஷம் நீடிக்கப் போகிறார்கள். அடுத்த வருஷத்திற்குள் சீர்திருத்தம் அமுலுக்கு வரப்போகிறது என்பதுதான் என்ன உறுதி? 1927-ம் வருஷம் ஆரம்பித்த சீர்திருத்த விசாரணை இன்னம் முடிந்தபாடில்லை. மிகுந்த வேகமாக முடிக்கப்போவதாக இந்தியா மந்திரியும், பிரதம மந்திரியும் ஆயிரம் தடவைகள் சொன்னார்கள். ஆனால் காரியத்தில் நத்தை தான். இந்த சீர்திருத்தம் இன்னம் 2-வருஷங்களுக்கிடையில் வரப்போவதில்லை. சட்ட சபையை நீடித்துக்கொண்டு போவதை விட புதுத்தேர்தல் ஏன் நடத்தக் கூடாது? அப்படிச் செய்தால், சீர்திருத்தம் சமீபத்தில் இல்லையோ என்று மிதவாதிகள் ஏக்கங் கொள்ளுவார்கள் அல்லவா? அவர்கள் கண்ணைத் துடைக்கவே இந்த சூழ்ச்சி. பாவம், ஒவ்வொரு வருஷமும் தேர்தல் பிரசாரம் செய்து, ஏமாந்து நிற்கும் பேர்வழிகளுக்கு நமது மனப்பூர்வமான அநுதாபம்.



படார்சாமி கடிதங்கள்

(படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் படார் படார் என்று பகிரங்க மாகவே எழுதுவார்.)

ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி
திருவல்லிக்கேணி

தோழரே,

காங்கிரஸ் காரியத்திற்காகவே காங்கிரஸ் மண்டபம் உபயோகிக்கப்படும் என்றும், காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாக உபயோகிக்கப் படாதென்றும் நீர் கடற்கரை பிரசங்கத்தில் உறுதி கூறி யிருப்பதைக்கண்டு சந்தோஷப் படுகிறேன். ஆனால் சுதேசி கண்காட்சி விஷயம் என்ன வாயிற்று? அதைப்பற்றி ஏன் ஒரு வார்த்தையும் பேசவில்லை? பழைய கண்காட்சி கணக்குகளை உடனே வெளியிடும்படி மீண்டும் ஒருதரம் உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன்.

—படார்சாமி

ஜில்லா கலெக்டர்
கயா

"இரும்புத்தூணே,"

கயாவில் சென்ற மாதம் 22உ 50 ஆயிரம் விவசாயிகள், தங்கள் கஷ்டங்களைப்பற்றி ஆலோசிக்க கூடினார்கள். சட்டமறுப்புச் செய்ய அவர்கள் கூடவில்லை. தங்கள் கஷ்டங்களை சர்க்காருக்குத் தெரிவித்து வரியை குறைக்கும்படி மனுக் கொடுக்கவே கூடினார்கள். ஆனால் "கலெக்டரிடமோ மற்ற அதிகாரிகளிடமோ வரி குறைக்கவோ, கஷ்டங்களை தெரிவிக்கவோ கூடும் எந்தக் கூட்டத்திலும் கலந்து கொள்ளக்கூடாது" என்று நீர் உத்தரவு போட்டீர், சர்க்காரிடம் தெரிவிக்கக் கூடாதென்று சொன்னால் வேறு யாரிடம் தெரிவிப்பது? இம்மாதிரி காங்கிரஸ்காரர் சொன்னால் ராஜத்

துவேஷம் என்று ஜெயிலில் தள்ளுகிறீர்கள். ஆனல் உம்மை ஜெயிலில் தள்ள யாருக்கு அதிகாரம் இருக்கிறது? உமது விசித்திரமான மூளையை எதற்கு ஒப்பிடுவது என்று எனக்குத் தெரியவில்லை.

—படார்சாமி

லேடி வில்லிங்டன்
சிம்லா

மே. த. சிமாட்டியே,

சிம்லா கதர் கடைக்காரர் கதர் துணிகளை உமக்குக் காட்ட வேண்டுமென்று உம்மிடம் அனுமதி கேட்டாராம். முன்னுல் 1931ல் கஸ்தூரி தேவியிடம் "கத்தரிப்பூ வர்ண கதர் துணி" வேண்டுமென்று நீர் கேட்டது உண்மையே. அந்தக் காலம் வேறு இந்தக் காலம் வேறு. இதை அறியாமலோ, அறிந்தும் அறியாமலோ உம்மிடம் கதர் துணி காட்ட இப்பொழுது அநுமதி கேட்க அவர் எப்படித் துணியலாம்? கதரை பார்ப்பதாக ஒப்புக்கொண்டால், காந்திக்கு செல்வாக்கு கொடுத்ததாக வல்லவோ ஏற்படும். ஓரே உறுதியுடன் "கதர் பார்க்க நேரமில்லை" என்று நீர் சொல்லியதைக் கேட்டு நான் சந்தோஷமடைகிறேன். ஆனல் ஒரு விஷயம். உம்முடைய பதவியென்ன, கதர் கடைக்காரர் பதவியென்ன? "நேரமில்லை" என்று சொல்லியதற்குப் பதிலாக "கண்டிப்பாக பார்க்கமுடியாது" என்று சொல்லியிருந்தால் இன்னம் விசேஷமாயிருந்திருக்கும்.

—படார்சாமி.

தென் இந்திய
ரயில்வே கம்பெனி, திருச்சி

ஐயன்மீர்,

நாகூர் கந்தூரி உற்சவத்திற்கு வரும்படி நீங்கள் அழைக்கிற விளம்பரத்தையும், மைசூர் தசராவிற்கு வரும்படி எம். எஸ். எம். கம்பெனி அழைக்கிற விளம்பரத்தையும், ஒன்றின் பக்கத்தில் ஒன்ருக ஒரு பத்திரிகையில் பார்த்தேன். உங்கள் முஸ்லிம் மத உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். ஆனல் பைசா உணர்ச்சியின் வெகு தீவிரமாய் இருப்பதை நான் அறியாமலில்லை. அழைப்பு என்ருல் கொஞ்சமாவது பலனிருக்கவேண்டும். டிபன் இல்லாவிட்டாலும், வெறும் வெற்றிலைப்பாக்காவது வேண்டாமா? எம். எஸ். எம். கம்பெனி அழைப்பில், போக வர விலைமலிவாக டிக்கட் கொடுப்பதாகச் சொல்லுகிருர்கள். உங்கள் அழைப்பிலோ? எது

வும் கிடையாது. உங்கள் வீட்டிலிருந்து அரிசி, விறகு கொண்டு வந்து, எங்கள் வீட்டில் சமைத்து சாப்பிடுங்கள் என்பதுபோ லிருக்கிறது. "கன்ஸெஷன்" என்ற விலைமலிவு டிக்கெட் கொடுப்ப தென்றால் உங்களுக்கு வேப்பங்காயாக இருக்கிறது. இந்த தரித்திர புத்தி என்றுதான் நீங்கப் போகிறதோ? உங்கள் அழைப் பில் நீங்கள் கொடுக்கப்போவதுதான் என்ன? மூட்டைப்பூச்சி களைத் தவிர வேறு எதுவும் கிடையாதா?

—படார்சாமி

மே. த. சாவாடா
ஜப்பான் தூது தலைவர், சிம்லா

மேன்மை தங்கியவரே,

கல்கத்தாவில் நீர் பேசியபோது "உலகம் பொருளாதாரக் கஷ்டத்தால் தவிக்கிறது. ஆனால் ஜப்பானும், பிரிட்டனும் இந்தி யாவின தயவினால் இந்த கஷ்டத்திலிருந்து தபப்பித்துக் கொண் டன" என்று கூறினீர். உமது வாய்க்கு சர்க்கரை போட வேண் டும். தன்னையறியாமலே சில சமயங்களில் உண்மை வெளிப்படுவ துண்டு. இதுவும் அந்த இனத்தைச் சேர்ந்ததுதான். இந்தியா ஜப்பான் துணிகளையும், மற்ற சரக்குகளையும் வாங்காவிட்டால், பிரிட்டனுக்கு தங்கமும்வெள்ளியும்கொடுக்காவிட்டால், இரண்டொரு நாடுகளும் அரோகராவா யிருக்கும். போதாக் குறைக்கு, இந்திய துணி வர்த்தகத்தை எப்படி பங்கு போடுவது என்பதை கண்டு பிடிக்க நீங்களும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் இந் நாட்டிற்கு வந்திருக் கிறீர்கள். இந்தியர் இளித்த வாயர்களாய் இருக்கிறவரையில் உங் களுக்கு என்ன குறைவு?

—படார்சாமி

ஜெனரல் சர். மாக்மன் கம்பெனி, லண்டன்

வீரர்களே,

இந்தியாவில் ராணுவ வேலைபார்த்து பென்ஷன் வாங்கி வயிறு வளர்க்கும் உங்கள் கூட்டத்தாரின் அறிக்கையைப் பார்த்தேன். 'வெளிநாட்டு,உள்நாட்டு குழப்பங்களிலிருந்து நமது ராணுவ பலத் தால் இந்தியாவை காப்பாற்ற முடியும். நமது பலத்தைக் கண்டு பயந்தே பல இந்தியர் வெள்ளைக் கடுதாசியை எதிர்க்காமல் இருக்கி றார்கள்" என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். உங்கள் வீரத்தைப் போற்றுவதா அல்லது பொங்கி வழியும் உங்கள் சரித் திர அறிவைப் போற்றுவதா என்று தெரியவில்லை. ஜனங்கள் அபி

மானமில்லாமல் ராணுவத்தால் இந்தியாவை காப்பாற்ற முடியா தென்று வெட்ஜ்வுட் பென் சொன்னது தெரியுமா? அது போகட்டும். அமெரிக்காவை ஏன் இழந்தீர்கள்? அயர்லாந்துக்கு ஏன் சுயராஜ்யம் கொடுத்தீர்கள்? இராக்கை கைகழுவிவிட்டு ஏன் ஓட்டம் பிடித்தீர்கள்? வீரர்களே, பதில் சொல்லுங்கள்.

—படார்சாமி

தொழிலாளர்கள் காங்கிரஸ்

லண்டன்

தோழர்களே,

யுத்தம் நடக்கப்போவதாகத் தெரிந்தால், அதை நிறுத்த பொது வேலை நிறுத்தம் செய்வதென்று நீங்கள் தீர்மானித்திருப்பது சரியான தீர்மானம். யுத்தத்தை நிறுத்த இதைவிட சிறந்த வழி கிடையாது. ஆயிரம் ஜினிவா மகாநாடுகள் கூடினாலும், பேராசை ராஜீயவாதிகள் ஒப்பந்தம் செய்யப்போவதில்லை. தொழிலாளர் மனது வைத்தால் தான் யுத்தம் நடைபெறாமல் தடுக்க முடியும்.

—படார்சாமி

அயல் நாட்டு காரியதரிசி,

சிம்லா

அன்பரே,

ரகசிய எழுத்து இலாகாவில் சட்டைக் காரரைக்கூட சேர்க்கலாம், ஆனால் இந்தியரை சேர்க்கக்கூடாது என்ற விதி இருக்கிறது. இதை மாற்றி இந்தியரை சேர்த்துக் கொள்ள பிரிட்டிஷ் சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து ஆரம்பித்திருப்பதாகவும், ஒரு வருஷத்திற்குள் முடிவு ஏற்பட்டு விடுமென்றும் இந்திய சட்ட சபையில் சொன்னீர். இந்த அற்ப விஷயத்தில் கடிதப் போக்குவரத்து முடிய ஒரு வருஷம் ஆகுமென்று சொல்ல வெட்கமாயில்லையா? ஆகாயத் தபாலும், தந்தியும், ஆகாசத் தந்தியும், ஆகாச டெலிபோனும் ஏற்பட்டுங்கூட சர்க்காரின் நத்தை சுபாவம் மாறவில்லையானால், இவை ஏற்பட்டு என்ன தான் பயன்? 1927 ம் வருஷம் ஆரம்பித்த சீர்திருத்தப் பேச்சு இன்னம் நத்தைபோல நகர்ந்து கொண்டிருக்கவில்லையா என்று நீர் சமாதானம் கூறலாம். அதுவும் உங்கள் சர்க்காரின் சிறப்பையே காட்டுகிறது.

—படார்சாமி



காலச்சக்கரம்

செப்டம்பர், 19—"பூர்ண சுயராஜ்யம் கிடைக்கிற வரையில் காங்கிரஸ் போராட்டம் நடந்துகொண்டே யிருக்கும். சர்க்காருடன் சமரசம் என்ற பேச்சுக்கு இடமே கிடையாது" என்று பண்டித ஜவாஹர்லால் சொன்னார்.

பிரிட்டிஷ் பருத்தி ஆலைக்காரர்களும், பம்பாய் ஆலைக்காரர்களும் நேற்று கலந்து பேசினார்கள்.

செப்டம்பர் 20—டாக்டர் அனிபெஸன்ட் இறந்தார். ஸ்ரீ. எச். டி. ராஜா ஒரு வருஷம் நல்ல நடத்தையுடன் இருப்பதற்காக 1500 ரூபாய்க்கு ஜாமீன் கட்டவேண்டுமென்று சென்னை மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கிறார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் சப் ஜெயிலும், போலீஸ் ஸ்டேஷனும் இருக்கிற கட்டிடத்தில் இன்று ஒரு வெடிக் குண்டு விழுந்தது. கட்டிடத்திற்கு சிறிது சேதம். அங்கிருந்த சிலருக்கு காயம். விருதுநகர் சப் ஜெயில் மீதும், போலீஸ் ஸ்டேஷன் மீதும் இரண்டு வெடிக் குண்டுகள் எறியப்பட்டன.

செப்டம்பர், 21—மகாத்மா இன்று ஆமதாபாத் விஜயம். 32 லட்சம் ரூபாய் தர்மங்களுக்காக செலவிட்ட சர். சின்னுபாயின் உருவச் சிலையை திறந்து வைத்தார். கூட்டம் ஏராளமா யிருந்தது.

சத்தியாக்கிரக ஆசிரமத்தின் லைப்ரேரியை மகாத்மா ஆமதாபாத் முனிசிபாலிட்டிக்குக் கொடுத்துவிட்டார். அதற்காக கட்டிடம் கட்ட பம்பாய் வியாபாரியான சேத் மானக்லால் பணம் கொடுத்தார். அந்தக் கட்டிடத்தின் அஸ்திவாரக் கல்லை இன்று காலை மகாத்மா நாட்டினார். இன்று இரவு பம்பாய்க்குப் புறப்பட்டார்.

செப்டம்பர், 23—இன்று காலை மகாத்மா வார்தா ஆசிரமம் வந்து சேர்ந்தார்.

இந்தியா—ஜப்பான் பருத்தி மகாநாடு இன்று சிம்லாவில் ஆரம்பம்.

செப்டம்பர், 24—ஜினிவாவிலுள்ள ஸ்ரீ. வி. ஜே. பட்டேல் தேக நிலைமை கவலைக்கிடமானதா யிருப்பதாக செய்தி கிடைத்திருக்கிறது.

காங்கிரசு லட்சியத்தின் விரிவு

(கே. சீனிவாசன். பி. ஏ. ஆனர்ஸ்.)

துருவன் சிறுவன். குழந்தை, துருவனுடைய மனம் சிறுவன் மனம் அல்ல, குழந்தை மனம் அல்ல; ஒரு தீர புருஷனின் மனம். ஆசை தோற்றக் காலத்தில் அகம் வாடாது முயல்வது தீரனுடைய லக்ஷணம்.

அப்பாவின் மடியில் உட்கார ஓடி வந்தான் குழந்தை துருவன். சுருசியாகிய மாற்றாந் தாயால் தடுக்கப்பட்டு அவமானப் படுத்தப்பட்டான். அவன் உள்ளத்தில் சுருசியின் சொற்கள் தீயைப்போல் சுட்டன. தாங்கமாட்டாமல் ஓடினான். தாய் சொன்ன தேறுதல் அவன் புண்ணை ஆற்றவில்லை. அவள் காட்டிய வழி பிடித்தது. "உலகத்தில் உயர்வு எல்லாம் நாராயணன் அருளாலே தான் கிடைக்கும்" என்று சொன்னாள் சுநீதி.

ஒரு சொல் போதுமாயிற்று. துருவனின் தீர மனம் தவத்தில் ஆழ்ந்தது. நாராயணனைப் பிணித்தது. நேரே வந்த விஷ்ணுவை தரிசித்து வரப்பிரசாதம் பெற்றான் துருவன். உத்தான பாதன் மடி, அன்று; உலகத்துக்கே மேல் நின்று அளக்கும் பதவியை துருவன் அடைந்தான். அப்பா மடியில் உட்காரவேண்டும் என்ற ஆசை அடி பட்டவுடன், துருவன் உள்ளம் உடைந்திருப்பானேல் இன்று கதை இருந்திருக்காது. இடுக்கண்களுக்கு சளைக்காது நின்று தொழில் புரிபவர், நினைத்ததிலும் பெரிதான வெற்றியை அடைவர்.

இன்று தடுக்கப்பட்டு, அவமானப் படுத்தப்பட்ட துருவன் நிலையில் நிற்கிறது காங்கிரசு. நாட்டு அரசில் பங்கு வேண்டும் என்று கேட்டது. அப்பா மடியில் நானும் உட்காரவேண்டும் என்று கேட்டது. சுருசி தடுத்துவிட்டாள். நெஞ்சில் தீப்பட்ட காங்கிரசுக்கு லட்சியம் விரிந்துவிட்டது. சிறையிலிருந்து சென்ற மாதம் வெளிவந்த ஜவாஹர்லாலுக்கும், காந்திக்கும் நடந்திருக்கும் கடிதப் போக்குவரத்தில் இந்த லட்சிய விரிவைக் காணலாம். அரசியலில் பங்கு போதாது; சமுதாயத்தை மாற்றி அமைக்க உரிமைவேண்டும்; திறமை வேண்டும். அவாப் பிறந்துவிட்டது. ஊக்கம் உண்டாகிவிட்டது. பாரதி கண்டு பாடிக் களித்த கனவு இன்று உரு எடுத்து வருகிறது. காங்கிரசின் உள்ளத்தில் கனிந்து வருகிறது.

* * * *

ஜன ஸமுதாயத்தில் புதிய துறைகள் வகுக்கவேண்டும், புதிய முறைகள் ஏற்படுத்த வேண்டும், என்ற அவா உலகமெங்கும் வளர்

ந்து வருகிறது. இயக்கங்கள் ஆங்காங்கு தோன்றி வளர்ந்து வருகின்றன. இவைகளுக்குக் காங்கிரசு துணை நிற்கவேண்டும் என்கிறார் பண்டித ஜவாஹர்லால். காந்தியும் இந்த லட்சியத்தை ஏற்றுக் கொள்ளுகிறார். இவ்வாறு லட்சியம் விரிந்தால்தான் இளைஞர் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் காங்கிரசு வேலையில் ஈடுபடமுடியும்.

புது லட்சியத்தின் நோக்கம் பொருளையும் வாழ்வையும் பொது உடமை ஆக்கவேண்டும் என்பதே. பொது உடமை ஆக்கியது என்றால் தனி பாத்யதைகள் இல்லை என்பது பொருள். வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள், ஜமீன்தார்கள், இவர்களாலான ஸ்தாபனங்கள், இவை எல்லாம் இன்று தனிப்பட்ட உரிமைகள் கொண்டாடி விசேஷ சம்பத்துகளை ஆண்டு வருகின்றன. சர்வகட்சி மகா நாட்டுக்குப்போன காந்தி "இந்த சாஸனங்களையெல்லாம் இன்னும் ஒருமுறை நன்றாய்ப் படித்துவிட வேண்டும்" என்று கூறினார். தனி பாத்யதைக்காரரெல்லாம் "கோ" வென்று கூச்சலிட்டனர். அந்த லட்சியந்தான் இன்று விரிந்து வலுத்து வருகிறது.

* * * *

முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுஉடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கு ஒரு புதுமை. (வாழ்க)

:: கதர் நோட்டு ::

சென்னை தீபாவளி கதர் பிரசார கமிட்டியார் கதர் நோட்டுகள் வெளியிட்டிருக்கிறார்கள். கதர் பிரசாரம் செய்கிற இடங்களில் கதர் விற்பனையை அதிகரிக்க இது மிகுந்த உதவியாயிருக்கும். ஒரு ரூபாய், 5 ரூபாய், 10 ரூபாய் ஆகிய மூன்று தினுசு நோட்டுகள் வெளியாயிருக்கின்றன. ஒரு ரூபாய் நோட்டின் விலை ஒரு ரூபாய்தான். 5 ரூபாய் நோட்டின் விலை ரூ 4-14-0. 10 ரூபாய் நோட்டின் விலை ரூ 9-12-0 இந்த நோட்டுகளை வாங்கியவர்கள், அவற்றின் மறு பக்கத்தில் அச்சிடப்பட்ட கதர் கடைகளுக்குச் சென்று, இவற்றிற்குப் பதில் கதர் வாங்கிக் கொள்ளலாம். இந்த நோட்டு சென்னை நகரில் மட்டுமே கிடைக்கும். சென்னை எஸ்பிளனேட் காதிவஸ்திராலயம் ஆந்திரா காதிநிலையம், திருவல்லிக்கேணி காதிபந்தர், மாம்பலம் சுதேசி ஸ்டோர்ஸ், மைலாப்பூர் காதிவஸ்திராலயம் ஆகிய இடங்களில்இந்தநோட்டு செலாவணியாகும். காந்தி ஜயந்தி வாரத்திலும், தீபாவளி பண்டிகையிலும் கதர் விற்பனையை அதிகரிக்க இந்த ஏற்பாடு நல்ல பலனளிக்குமென்றுநம்புகிறோம்

நமது தபால்



இம்மாதம் 2உ மகாத்மா காந்தி ஜயந்தி. அதற்காக "ஜயந்தி வாரம்" ஏற்பட்டு, எல்லாரும் கதர் வாங்கவேண்டுமென்று தீவிர பிரசாரம் நடந்துவருவதை நீங்கள் அறிவீர்கள். இம்மாதம் 18உ தீபாவளிப் பண்டிகை வருவதும் உங்களுக்குத் தெரியும். ஆகவே மகாத்மாவைப் பற்றியும், அவருக்குப் பிரியமான கதரைப் பற்றியுமே அதிகமாக கட்டுரைகளும், படங்களும் இந்த மலரில் பிரசுரித்திருக்கிறோம். தீபாவளி பண்டிகைக்குள் ஏராளமாக கதர் விற்பனையாக ஒவ்வொருவரும் முயற்சிசெய்யவேண்டும்.

திருக்குறள் காமத்துப் பாலில், படங்களால் விளக்கக்கூடிய குறளின் அடிகளை இந்த மலரிலிருந்து படத்துடன் பிரசுரித்து வருவோம். உணர்ச்சியைப் பற்றியதாகவே காமத்துப்பால் அடிகள் இருப்பதால், படங்களில் காட்டுவது சுலபமல்ல. இருந்தாலும் சித்திரம் வரைவதில் நிபுணரான ஸ்ரீ. கே. ஆர். சர்மா இந்த பெரிய காரியத்தில் இறங்கி யிருப்பது பாராட்டத்தக்கது. சகல உணர்ச்சிகளையும் படத்தில் காட்டவல்ல நிபுணர்களுக்கு எ.துதான் பெரிய காரியம்?

குறளுக்கு, போப் அவர்களும், வ. வெ. சு. அய்யரவர்களும் ஆங்கிலத்தில் உரை உழுதியிருக்கிறார்கள். ஆனால் குறளைப்போல இரண்டடிகளில் இதுவரை ஆங்கிலத்தில் யாரும் எழுதவில்லை. "மணிக்கொடி" ஆசிரியர் நண்பர் கே. சீனிவாசன் நாசிக் சிறையிலிருக்கும்போது, இரண்டடிகளில் ஆங்கிலக் குறளை எழுதி முடித்தார். அவர் எழுதிய ஆங்கிலக் குறளும் திருக்குறளோடு ஒவ்வொரு மலரிலும் வெளி வரும்.

"தாலி கட்டினால் கல்யாண மாச்சா?" என்ற கதை இந்த மலரில் முடிவு பெறுகிறது. உண்மைக் காதலுக்கு இடையூறாக நமது சமூக பழக்க வழக்கங்கள் எவ்வளவு கொடுமையாயிருக்கின்றன என்பதை ஸ்ரீ. தி. சதாசிவம் தெளிவுபட இக் கதையில் விளக்கி விட்டார். அவர் எழுதிய மற்றொரு கதை அடுத்த மலரில் ஆரம்பமாகும்.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

(வ. ரா.)

பாலுக்கு நிகரான கதர் உடையைத் தரித்துக்கொண்டு, இடது கை ஆட்காட்டி விரலால், எச்சரிக்கை பாணப் பிரயோகம் செய்வது போல, உச்சிக் குடுமி சகிதமாய், நெற்றியில் அழகான சந்தனப்பொட்டுத் துலங்க, அதோ, தேன் மொழிப் பிரசங்கம் செய்கிறாரே, அவரை உங்களுக்குத் தெரியுமா? அவர்தான், குழைந்து குழைந்து கொஞ்சுவதைப் போலப் பேசும் கலியாண சுந்தர முதலியார். வாய்தான் வலிக்காதா? வார்த்தைக்கேனும் தடை கிடையாதா? ராமஸ்வாமி நாய்க்கரின் பிரசங்கம் கூடுவாய் மூலை மழை; அது கடகடவென்று கொட்டித் தீர்த்துவிடும். வியர்க்கும் உடலை குளிரக் குளிர இன்புறச் செய்யும் தென்றல் காற்றைப் போன்றது முதலியாரின் சொற்பொழிவு.



முதலியார் சாது; அவருடைய அச்சுக்கூடத்துக்கும், சாது அச்சுக்கூடம் என்று பெயர். முதலியாரின் முகத்தைக் கண்டவர்களுக்கு, அவரோடு சண்டைபோடவேண்டும் என்றே தோன்றாது. மழலையைப் பேசும் குழந்தைகளுடனே, எவரேனும் சண்டை போடத் துணிவார்களா? அன்னையையும் பிதாவையும் முன்னறி தெய்வங்களாக கருதிக் கொண்டாடும் குழந்தையைப் பார்த்தால், யாருக்குத்தான் இரக்கம் உண்டாகாது? சூதுக் கலப்பில்லாத குழந்தையின் முகவிலாஸ பாக்கியம் படைத்தவர் முதலியார். இந்த பாக்கியம் அவரது பெற்றோர்களின் குண விசேஷங்களின் பயனோ, அல்லது முதலியாரின் உள்ளத்தின் பயிற்சிப்பயனோ, அது எது வென்று, என்னால் விளக்கி, விவரமாய்ச் சொல்லமுடியவில்லை.

சேலம் விஜயராகவாச்சாரியாருக்குப் பெஸண்டு அம்மையாரிடம் எவ்வளவு ஆத்திரமோ, அவ்வளவு ஆர்வம் கலந்த அன்பும் மதிப்பும், முதலியாருக்கு, அம்மையாரின் பேரில். இதற்கு நியாய

மூண்டு. முதலியார் அவர்கள், அரசியல் உலகில் அடி வைத்த தற்கு, பெஸண்டு அம்மையார்தான் காரணம். சென்னை வெஸ்லி காலேஜில் தமிழ் பண்டிதரா யிருந்த முதலியாருக்கு, அரசியல் வானத்தின் அழகுக் கவர்ச்சி கண்ணில் பட காரணமில்லை. "டாணு" என்று பரம்பரைப் பட்டப்பெயர் வாங்கிய,வாத்திமார்கள்—கனம் சீனிவாச சாஸ்திரியாரைத் தவிர—அரசியலில், நமது தேசத்தில் கலந்து கொண்டு, பெயர் வாங்கினதே யில்லை. கலியாண சுந்தர முதலியார் அவர்களைப் பார்த்த பின்னர், "கற்பனையில்லாத தமிழ்ப்பண்டிதர்" என்று புலவர்களைக் கடியும் வழக்கத்தை விடத் தான் வேண்டும். என்ன செய்வது? கற்பனை நிறைந்த ஸ்ரீ உ. வே. சாமிநாதய்யரும் இருக்கிறாரே? சரி!

பெஸண்டு அம்மையாரின் ஹோம் ரூல் இயக்கக் காலத்தி லேயே, வெளிவரவேண்டும் என்ற ஆவல் முதலியாருக்கு ஏற்பட்டு விட்டது. நல்ல காரியம் செய்வதில் பலபேர்களுக்கு, ஆவலும் ஆர்வமும் இருக்கலாம். ஆனால் சமையலறை அடுப்பில், பூனை படுத்துறங்கக் கூடிய வறுமைக்கு ஆட்பட்டவர்கள், குடித்த னத்தைக் கவனிப்பார்களா, அல்லது கொடுங்கோலனை எதிர்ப்பார் களா? எப்பொழுதுமே, வயிற்றுக்கும் இலட்சியத்துக்கும், ஓயாத போராட்டம். வயிறு தற்காப்பு யோசனை சொல்லும்; இலட் சியமோ, காதற் கன்னிகையைப்போல, கடைக்கண்ணால், ஜாடை செய்து, சமிக்கினை காட்டி, ஆளை உருக்கிவிடும்.

வயிற்றை ஜயித்தவன் வீரன். வயிற்றுக்குப் பணிந்தவன்— "வயிரன்" (வயிறன்). வயிறு, "குழந்தை குட்டிகளை"க் காட்டி, குடித்தனச் சுமையை கடமையாக அலங்காரம் செய்து, தன் தற் காப்புக்கட்சிக்கு, கோட்டை அரண் செய்துகொள்ளுகிறது. இலட்சியமோ, மனிதனுக்குக் கற்பனை, தியாகம் முதலிய இறக்கை களைக் கொடுத்து, வயிற்றுக் கோட்டைக்கு வெளியே பறக்கத் தூண்டுகிறது. இவை இரண்டுக்கும் நடுவே, அகப்பட்டுக்கொண்டு, சதா தர்ம சங்கட மந்திரம் ஜபித்துக்கொண்டிருப்பவர் முதலியார். சாதாரண மனிதனுக்கு எளிதாகத் தோன்றும் காரியங்கள் யாவும், முதலியார் அவர்களின் கண்களில் வகுத்துப் பிரிக்கமுடியாத தர்ம சங்கடங்களாகத் தோன்றும். இது கற்பனை மிகுதியும் கலந்த இரக்கத்தின் கோளாறுகும்.

தம்மிடம் பெண் தன்மை நிறைந்திருக்கிறது என்று முதலி யார் சிறிதளவு பெருமையாகவும் பெரிதும் கேலியாகவும் சொல்லிக் கொள்ளுவதுண்டு. பெண் தன்மை இல்லாத ஆணுக்கு வசீகர

சக்தி கிடையாது என்று முதலியார் நண்பர்களிடம் பலகாலும் சம்பாஷணை பிரசங்கம் செய்வார். அவர், இதை, தம்மைப் பற்றித்தானே சொல்லிக்கொள்ளுகிறார் என்கிற சந்தேகம், கேட்பவர்களின் மனதில், நிச்சயமாய்த் தோன்றும். மனக்கொடுமையினால் எவனும் வீரனாவதில்லை. துணிவுக்கும் இரக்கத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. (தொடர்பு என்று சொல்லவேண்டும் என, முதலியார் அவர்கள் என்னைக் கடிந்து பார்க்கிறாப்போலத் தோன்றுகிறது.) அறிவுக்கும் கோழைத்தனத்துக்கும் சம்பந்தம் உண்டு. எனவே, எதிரிடைகளைப்போலப் பார்வைக்குப்படும், ''ஆணில் பெண்தன்மை'' உண்டு, ''பெண்ணில் ஆண்தன்மை'' உண்டு. இந்த இயற்கை விநோதத்தை சில மலர்களிலே காணலாம். முதலியாரின் ஆண்தன்மை, ''வீட்டை விட்டு வெளியே போய், வீரவாழ்வு வாழ்வாயாக'' என்று அவரை அதட்டுகின்றது. ''வெளியே போனால் வீடு பாழாய்ப்போகும். வீட்டுப் பொறுப்பை மறக்காதே'' என்று அவருடைய பெண் தன்மை அவருக்கு இங்கிதக்குரலில் இதோபதேசம் செய்கின்றது. என்ன தர்மசங்கடமான ''ஆண் பெண்'' தன்மை! வீட்டுக்கும் நாட்டுக்கும் இடையே நசுக்குண்டு, கரைந்து கரைந்து உருகுகின்றார் முதலியார் அவர்கள்.

தனித்து இயங்கும் தனிமொழி என்று பண்டிதர்கள் பலர் கூச்சலிடும் கூச்சலை பேருண்மை என்று முதலியார் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை. தமிழ் பாஷை வளரவேண்டும் என்ற ஆசை, முதலியாரின் உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால் வரையில், காலியிடம் துளிக்கூட இல்லாமல், அவர் தேகமுழுதும் நிறைந்து நிற்கின்றது. திசைச்சொற்களும் வழக்கச்சொற்களும் கிராமியப் பேச்சும், தமிழ்மொழியில் கலந்துகொண்டாலொழிய, தமிழுக்கு நவநாகரிகச்சிறப்பும் மதிப்பும் வன்மையும் வளர்ச்சியும் ஏற்படமாட்டா என்பது முதலியாரின் திடநம்பிக்கை. இதிலும் அவரது இயல்பான தருமசங்கட உள்ளம் அவரைப் பெரிதும் வேதனை செய்கின்றது.

தமிழ்நாட்டு அரசியல் உலகில், தலைமைப் பதவி சம்பந்தமாக ஸ்ரீமான்ராஜகோபாலாச்சாரியாருக்கும் ஸ்ரீமான்சீனிவாஸய்யங்காருக்கும் இடையே சிறிது ''ஊடல்''. (எனக்கும் சிறிது சிறிதாக, முதலியாரின் பதப்பிரயோகம் வருகிறது!) ''சீனிவாஸய்யங்கார் நல்லவர்; ஆச்சாரியார் பெரியவர். யாரைத் தள்ளி, யாரைக் கொள்ளுகிறது'' என்ற தர்மசங்கடம் முதலியாருக்கு முன்னே ஒருகாலம் பிரமாதமாய் உரு எடுத்து நின்று அட்டஹாஸம் செய்தது. தர்ம

சங்கடத்தை, இவர் சம்பந்தப்பட்டவரையில் அவருடைய பிறவிக் கூச்சம் பெரிதும் வளர்த்தது என்றே சொல்லவேண்டும்.

தூய தமிழின் இன்னிசை ஒலியைக்கேட்டு அனுபவிக்க உளங் கொண்டவர்கள், முதலியார் நடத்திவந்த "தேசபக்தன்" என்ற பத்திரிகையின் பழைய பிரதிகளைக் கண்டெடுத்துப் படிப்பார்களா னல், மனப்பூரிப்பு அடைவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தமிழிலும் ஒலியழகு, நடையழகு, பொருளழகு, வர்ணனை அழகு உண்டோ என்று சந்தேகப்படும் ஆத்மாக்கள், முதலியாரின் "முருகன்" என்ற சிறு நூலைப்படித்து மனம் தேறலாம். முதலியார் கொஞ்சி நடையழகு பயிலும் நிகண்டு. அழகுபட ஒலிக்கும் அகராதி. முதலியார் பொருள் செறிவுடன் பேசும் புலவர். பழைய தமிழ் நாகரிகத்துக்கும், புதிதாய்த் தோன்றியிருக்கும் நவநாகரிகத் துக்கும் இடையே நின்று ஊசலாடுபவர் முதலியார். இதிலும் தர்மசங்கடம் தான்.

முதலியார் தொழிலாளர்களின் சகோதரன்; முதலாளிகளின் தோழன். இளைஞர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் இங்கித நண்பன். சலிக்காமல் பேசும் கிழவர்களுக்கு, அலுப்பின்றிக் காது கொடுத்து கேட்கும் பக்தன். பண்டிதர்களுக்குப் பிரதிநிதி. பெண் களுக்கு நல்லுபதேசம் செய்யும் சாது. அறப்போர் நிகழ்த்தும் காந்தியடிகளின் சத்தியாக்கிரக சாஸ்திரத்தின் நுட்பத்தை அறிந்த வர் முதலியார்.

முதலியாருக்கு நோயைப் பற்றிப் பேசுவதில் என்ன ஆசை! வாகட சாஸ்திரத்தை, இதற்கென படித்திருக்கிறாரோ, என்னவோ? என்ன சொல்லி என்ன? பழைய படிப்பிலும் பிடிப்பிலும் வளர்ந்த முதலியார், தேசீய இயக்கத்திலும் சாதுக்களின் சங்கத் தாலும், மணம் கமழும் மலர் என விரிந்திருக்கிறார். அவருடன் சம்பாஷணை செய்வது நல்விருந்தாகும். அவருடைய பிரசங்கத் தைக் கேட்டால், உள்ளம் குளிரும். "செவிக் குணவு இல்லாத பொழுது, சிறிது வயிற்றிற்கு ஈயப்படும்" என்ற திருக் குறளுக்கு, இலக்கியமாய் வாழ்ந்து, விளங்குகின்றார் முதலியார். சமரச சன் மார்க்கக் கழனியில், அவர் நீண்ட காலம் உழைப்பாராக!

(அடுத்த "காந்தி" மலரில், ஸ்ரீ. ஜார்ஜ் ஜோசபைப் பற்றி நண்பர் வ. ரா. எழுதுவார்.)

காளிங்க நர்த்தனம்



காளிங்கன் ஐந்து தலை நாகம். பெரிய பாம்பு. பலே ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தது. பால கிருஷ்ணன் சிறுகுழந்தை. என்றாலும் சத்தியத்தின் அவதாரம். அநாதை ரக்ஷகன். ஆபத்பாந்தவன். ஆகவே காளிங்கன் உருவத்தில் பெரியதா யிருந்தாலும் அதை அடக்கி அதன தலைமேல் நின்று நடனஞ்செய்யும் சக்தி கிருஷ்ணனுக்கு இருந்தது.

கதருக்கு விரோதமாக தோன்றியிருக்கும் எதிர்ப்புகள் ஒன்றிரண்டல்ல. மில்காரர் சூழ்ச்சி ஒருபக்கம். ஜப்பான் போட்டி மற்றொரு பக்கம். பிரிட்டிஷ் சலுகை வேறொரு பக்கம். போலிக் கதரை சுத்தக் கதர் என்று வியாபாரிகள் செய்யும் மோசடி இன்னொரு பக்கம். சுயநலத்திற்காக எதிர்ப்பவர்கள் ஒரு பக்கம். இவ்வளவு எதிர்ப்புகளையும் தாங்கிக்கொண்டு கதர் வளரவேண்டும். இந்தத் தடைகளை நீக்கமுடியுமா? முடியும். அது ஒருவரால் தான் முடியும். அவர் யார்? அவரே சாக்ஷாத் "கதர் அபிமானி." கதரைத் தவிர, சுத்த கதரைத் தவிர வேறு எதையும் எடுப்பதில்லை யென்று ஜனங்கள் தீர்மானம் செய்து கதர் அபிமானிகளாய் விட்டால், இந்த பஞ்ச எதிரிகளால் என்ன செய்துவிட முடியும்? காளிங்கன் அடங்கிய மாதிரி இவர்களும் அடங்கியே தீரவேண்டும். ஆகவே கதரை காக்கும் சக்தி உங்களிடமே இருக்கிறது.

தோழர்களே,



நில்லுங்கள். உங்களிடம் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இந்த வாரம் காந்தி ஜயந்தி வாரமல்லவா? தீபாவளி இம்மாதம் வருகிறதல்லவா? நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? தயவு செய்து எதிர்ப்பக்கத்திலுள்ள விஷயத்தைப் படியுங்கள்.

உங்கள் அன்புள்ள

ஜவஹர்லால்.

பண்டித ஜவஹர்லால் அறிக்கை

அக்டோபர் 2-ந் தேதியிலிருந்து தேசத்தில் "காந்தி ஜயந்தி" இரண்டு வாரங்களுக்குக் கொண்டாடப்படும். (தீபாவளியும் இம் மாதம் வருகிறது.) இந்த நாட்களில் கதர் ஒன்றே நாம் எல்லோரும் உடுக்கவேண்டும். கதர் ஒன்றே நமக்கு உடை என்பதை எல்லோரும் கொள்ள வேண்டும் என்பது எனது ஆசை.

மூன்று வருஷங்களாக காங்கிரசு சில பருத்தி ஆலைகளோடு ஒரு விதமான ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. ஏற்பாட்டின்படி இந்த ஆலைகள் தேசிய இயக்கத்திற்கு துணை நிற்கவும் இன்னும் பல நிபந்தனைகளுக்கும் ஒத்துக் கொண்டன. இதன் மேல் இந்த ஆலைகளுக்கு அத்தாட்சிப் பத்திரங்கள் கொடுக்கப் பட்டன. இதனால் கதர் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. தேசிய இயக்கத்திற்கு வலுத் தேடி, அயல் நாட்டுத் துணியை ஊரைவிட்டு ஒழிப்பது என்பதே இந்த ஏற்பாட்டின் நோக்கம்.

விஷயம் எப்படி முடிந்திருக்கிறது என்றால், இப்படி நிபந்தனைகளை ஏற்றுகொண்ட ஆலைகள் மறந்தோ, வேண்டுமென்றோ தாங்கள் கொடுத்த உறுதி மொழியை மீறி நடக்கத் தொடங்கி விட்டன.

இதுமட்டு மன்று; இந்த ஆலைக்காரர்கள் அயல் நாட்டு பருத்தி வியாபாரிகளோடு தனி ஏற்பாடுகளும் செய்து கொள்ளலாம். அந்நியநாட்டு முதலாளிகளும், உள்நாட்டு முதலாளிகளுமாக இந்திய மார்க்கெட்டில் கொள்ளை லாபம் கொள்ளலாம். துணி உடுத்துபவனை உறிஞ்சலாம்.

இந்த நிலைமையில் இந்த ஆலைகளை தேசிய அபிவிர்த்தியில் ஈடுபட்டவை என்று சொல்லுவது பொருந்தாது. அரசியல் துறையிலும், பொருளாதார துறையிலும் தேசத்தின் முன்னேற்றத்தை விரும்புபவர்கள் கதரையே வாங்க வேண்டும்.

இந்த மாதத்தில் கதர் விற்பனை விசேஷமாகப் பெருகும் என்று நம்புகிறேன்.

கதர் அபிவிருத்தி

1921-ல் கதர் பிறந்தது. அது எப்படி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்திருக்கிறதென்பதை பார்ப்போம். இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டால், அதிகமாக கதர் உற்பத்திசெய்யும் மாகாணம் தமிழ் நாடே. தமிழ் நாட்டில் இதுவரை உற்பத்தியான, விற்பனையான கதர் கணக்கை கீழே வெளியிடுகிறோம்.

வருஷம்.	உற்பத்தி.	விற்பனை ரூ.
1923—24	4,72,364	
1924—25	7,05,788	7,37,355
1925—26	8,83,220	8,77,626
1926—27	10,97,027	10,73,021
1927—28	9,97,465	10,01,840
1928—29	11,37,561	9,47,309
1929—30	16,16,524	11,98,545
1930—31 (15 மாதங்கள்)	30,55,597	28,00,906
1932	13,94,199	15,35,252

1930, 1931, 1932 ம் வருஷங்களில் ஏராளமாக கதர் விற்றிருக்கிறது. காந்தி—இர்வின் சமரச காலமாகிய 1931 ல் கதர் விற்பனை மிகவும் அதிகம். 1932 ல் விற்பனை கொஞ்சம் குறைந்தது. இவ்வருஷம் மிகவும் குறைந்துவிட்டது. இந்தியா முழுவதிலும் உற்பத்தி, விற்பனை, கணக்கை கீழ வெளியிடுகிறோம்.

வருஷம்.	உற்பத்தி.	விற்பனை.
1926—27	24,06,370	32,88,794
1927—28	24,16,382	33,08,634
1928—29	31,55,487	39,43,077
1929—30	54,91,610	66,19,869
1930—31 (15 மாதங்கள்)	72,15,502	90,91,932
1932	44,65,060	57,84,225

1926 முதல் 1932 வரையில் சுமார் 3¼ கோடி ரூபாய் பெறுமான கதர் விற்பனையா யிருக்கிறது. சராசரி அரைக்கோடி ரூபாய் பெறுமான கதர் வருஷாவருஷம் செலவாகிறதென்றே வைத்துக் கொள்ளுவோம். வருஷத்திற்கு 60 கோடி ரூபாய் பெறுமான அயல் நாட்டு துணிகளை வாங்கி வந்த இந்தியாவிற்கு, இந்த அரைக்கோடி எந்த மூலை? வெளிநாட்டுத்துணிகள் மட்டுமல்ல, உள்நாட்டு மில் துணிகள் ஸ்தானத்தையும் கதர் கைப்பற்றவேண்டும். அப்பொழுது தான் இந்நாட்டில் ஏழைகளுக்கு கஞ்சி கிடைக்கும். கதர் முரடாயிருக்கிறதென்ற காரணத்தை இப்பொழுது சொல்ல முடியாது. வரவர மெல்லியதாக கதர் மாறிவிட்டது. விலை அதிகம் என்று சொல்லுவதற்குமில்லை. 10 வருஷங்களில் ஒன்றுக்குப் பாதியாக விலை குறைந்துவிட்டது. 54 அங்குல அகலமுள்ள கதர் துணி, 1922ம் வருஷத்திலிருந்து எம்மாதிரி விலையில் குறைந்து வந்திருக்கிறதென்பதை கீழே காட்டுகிறோம்.

1922ல் கெஜம் 1 க்கு	ரூ.	1	0	0
1923..		0	15	0
1924..		0	14	0
1925..		0	12	9
1928..		0	11	9
1932..		0	9	0
1933..		0	8	6

ஆகவே கதர் வாங்க இனி போலிக்காரணங்கள் சொல்ல முடியாது. இம்மாதம் புனிதமான மாதம். மகாத்மா பிறந்த திருமாதம். இந்துக்களின் முக்கிய பண்டிகையாகிய தீபாவளி வரும் மாதம். இதுவரை கதர் கட்டாதவர்கள் இன்றே கதர் கட்ட ஆரம்பியுங்கள். அரைகுறையாக வாங்கிக்கொண்டிருந்தவர்கள் பூர்ணமாக கதர் பக்தர்களாய் மாறுங்கள். இதுவே நீங்கள் இந்தியாவிற்குச் செய்யும் சிறந்த தொண்டு.

குறள் விளக்கம்

அணங்குகோ லாய்மயில் கோல்லோ கனங்குழை
மாதர்கோல் மாலுமென் னெஞ்சு

—குறள் (1081)

Bewildered I stood : What was it I saw,
A maid of the earth or an angel from above!

—ஆங்கில குறள் : கே. சீனிவாசன், பி. ஏ. (ஆனர்ஸ்)

கன்னிகை தன் தோழிகளோடு பூஞ்சோலையில் விளையாடிக் கொண்டிருக்கிருள். தனியாக விளையாடும் பொருட்டு தோழிகளை விட்டுப்பிரிகிருள். இச் சமயம் அங்கே தற்செயலாய் வந்த வாலிபன் அவளைப் பார்க்கிருன். பார்த்ததும் பிரமித்துப் போனுன். "இந்தப் பூஞ்சோலையில் விளையாடுகிற இவள் யார்? தெய்வப் பெண்ணு? அல்லது மயில் ரத்னமா? அன்றி மானிடப் பெண்தானு? எனக்கும் ஒன்றும் தோன்றவில்லையே!" என்று கூறுகிருன்.

இம்மாதிரி தொடர்ச்சியாக "காந்தி" மலரில் குறள் விளக்கப் படங்கள் வெளிவரும். இவற்றை ஒழுங்காய் நீங்கள் பார்த்துக்கொண்டு போனுல், இல்லற இன்பத்தைப் பற்றி திருவள்ளுவரின் அபிப்பிராயம் என்ன என்பதை, உள்ளங்கை நெல்லிக்கனி போல அறிந்துகொள்ளலாம். குறள் விளங்கவில்லையே யென்ற கவலையோ, அல்லது பரிமேலழகர் உரை பரம கஷ்டமாய் இருக்கிறதே என்ற ஆயாசமோ உங்களுக்கு வேண்டியதில்லை.


K.R. SARMA



உங்களுக்குத் தெரியுமா ?

முதலில் போட்டோ எடுத்தது யார் ?

போட்டோ எடுக்கலாம் என்ற விஷயம் பல நூற்றாண்டுகளாக தெரிந்திருந்தபோதிலும், நீப்ஸ் என்பவர்தான் அதை வெற்றிகரமாகச் செய்தவர். அவர்தான் முதல் போட்டோவை எடுத்தவர். “சென்சிட்டிவ் பிளேட்”டை கண்டு பிடித்தவரும் அவரே. ஜான் நைஸ்ஸோர் நீப்ஸ் 1765-ல் பிறந்தார். 1833-ல் மாண்டார். அவர் இறந்த நூறாவது வருஷம் சென்ற மாதம் கொண்டாடப்பட்டது.

அகராதி கதவு தெரியுமா ?

ஜப்பானில் ஒரு வீட்டைப் பற்றிய சகல விஷயங்களையும், அந்த வீட்டுக் கதவைப் பார்த்தவுடன் அறிந்து கொள்ளலாம். போலீஸ் சட்டப்படி வீட்டின் பெயரும், இலக்கமும் ஒரு பக்கத்தில் இருக்கும். மற்றொரு பக்கத்தில் அந்த வீட்டில் பொறுப்பானவர் பெயர் இருக்கும். அதன் கீழே வீட்டிலுள்ள மற்றவர்களின் பெயர்களும் காணப்படும். டெலிபோன் இருந்தால், டெலிபோன் நம்பரும் வீட்டுக் கதவில் எழுதப்பட்டிருக்கும். அந்த வீடு இன்சூர் செய்யப்பட்டிருந்தால், இன்சூர் கம்பெனிக்காரர் தங்கள் கம்பெனி தகரபில்லையை அக்கதவில் அடித்து விடுவார்கள். வருஷத்திற் கொருதடவை வீடு சுத்தமானது, சுகாதார நிலைமை, முதலியவற்றை சோதித்து போலீசார் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளை ஒட்டுவார்கள். வீட்டிற்குள் கிணறு இருந்தால் அதற்காக கதவில் ஒரு அடையாளம் போடவேண்டும். ஆகவே ஒரு வீட்டைப் பற்றிய சகல விஷயங்களையும் யாரிடமும் கேட்காமலே கதவைப் பார்த்து அறிந்துகொள்ளலாம்.

ஏடன் தெரியுமா?


இங்கிலாந்திற்கு போகிற வழியில் அராபியன் சமுத்திரத்திலிருந்து செங்கடலுக்குள் நுழையும் இடத்தில், அராபிய தேசத்தின் தென் கோடி முனையில் ஏடன் என்ற பட்டினம் இருக்கிறது.

சமுத்திரத்திற்குள் நீண்டு 5 மைல் நீளமும், 3 மைல் அகலமும் இருக்கிறது. இங்கிலாந்திற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் போகிற வழியில் ஏடன் வாசற்படியைப் போன்றது. அதே மாதிரி மேற்குக் கடைசியில் ஜிப்ரால்டர் வாசற்படியாக விளங்குகிறது. இந்த இரண்டு வாசற்படிகளையும் மூடிவிட்டால், ஐரோப்பா செல்லவேண்டியவர்கள், தென் ஆப்பிரிக்கா முனையைச் சுற்றித் தான் செல்லவேண்டும். இந்த ஏடன் பம்பாய் சர்க்காரின் நிர்வாகத்திலிருக்கிறது. இதை சண்டையில் ஜெயித்து பிடிப்பதற்கும், இதுவரை நிர்வகிப்பதற்கும் இந்தியாவே பணங்கொடுத்து வந்திருக்கிறது. இந்த நிர்வாகத்தை பிரிட்டிஷ் சர்க்கார் அபகரிக்கப் பார்க்கிறார்கள். ஏடன் முக்கியமான ராணுவ முனையாயிருப்பதால், சுயராஜ்யம் பெற்றபின்பு இந்தியா கையில் அது இருக்கக்கூடாதென்பது அவர்கள் நினைப்பு. இதைப்பற்றி சமீபத்தில் இந்தியா சட்டசபையில் விவாதம் வந்தது. இந்தியாவிடமே அதன் நிர்வாகம் இருக்கவேண்டுமென்று சட்டசபை தீர்மானித்தது. இந்த ஏடன் ஒரு காலத்தில் எரிமலையாயிருந்தது. மகாத்மா இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டிற்கு சீமை செல்லும்போது, ஏடனிலுள்ள சகல ஜாதியாரும் அவருக்கு வரவேற்பளித்தார்கள். ஏடன் துறைமுகத்திலிருந்து சமுத்திரத்திற்கு கப்பலைக் கொண்டுவரும்போது, மகாத்மாவே கப்பலை ஓட்டிவந்தது பலருக்கு ஞாபகமிருக்கலாம்.

அடிவானம் எத்தனை மைல் தூரம்?

ஒரு மைதானத்திலோ கடற்கரையிலோ நின்று பார்த்தால், வானம் கவிந்து பூமியோடோ, சமுத்திரத்தோடோ முட்டுகிறமாதிரி தோன்றுகிறது. இந்த முட்டுகிற இடமாகிய அடிவானம் எவ்வளவு தூரத்திலிருக்கிறது? உண்மையாக வானம் வந்து பூமியோடு முட்டுமானால், எத்தனை மைல் தூரமென்று சொல்லிவிடலாம். ஆனால் வானம் முட்டுவதில்லை. பூமி உருண்டையாயிருக்கிறது. அந்த உருண்டை பூமியைச் சுற்றிலுமுள்ள வானமும் உருண்டையாயிருக்கிறது. ஆகவே நாம் பார்க்கும்போது வானவளைவு நம் கண்களுக்கு முட்டுவதுபோல தெரிகிறது. இந்த அடிவானத்தின் தூரம், நாம் நிற்கிற உயரத்திற்கு தக்கபடி இருக்கும். ஒரு அடி உயரத்தில் நின்று பார்த்தால் $1\frac{1}{4}$ மைல் தூரத்தில் அடிவானம் தோன்றும். 10 அடி உயரத்தில் பார்த்தால் $4\frac{1}{4}$ மைலுக்கு தோன்றும். 100 அடி உயரத்திற்கு $13\frac{1}{4}$ மைலும், 500 அடி உயரத்திற்கு $29\frac{1}{2}$ மைலும் தோன்றும். இது ஒன்றே பூமி தட்டையாயில்லை, உருண்டையாயிருக்கிறது என்பதைக் காட்டப்போதுமானது.

மந்திரவாதியின் தந்திரம்



ஒரு வெறும் மேஜை. மேலே துணி போடப்பட்டிருக்கிறது. அந்தத் துணியை எடுத்ததும், மேஜை மீது ஒரு பெரிய "கெட்டில்" காணப்படுகிறது. அதிலிருந்து மந்திரவாதி கோப்பைகளில் காபி விடுகிறார். ஒன்றிரண்டு கோப்பையல்ல. சபையிலுள்ள நூறு பேருக்கும் நூறு கோப்பை காபி கொடுக்கிறார். இது எப்படி நடக்கிறது? வெறும் மேஜை மீது கெட்டில் எப்படி வந்தது? கெட்டிலில் நூறு கோப்பை காப்பி எப்படி கொள்ளமுடியும்? இதன் தந்திரமென்ன?

இரண்டாவது படத்தைப் பாருங்கள். மேஜை பலகைக்குள் சுருங்கக்கூடிய கெட்டில் இருக்கிறது. மேலே மூடியிருக்கிற துணியை மந்திரவாதி இழுக்கும்போது, கெட்டிலையும் சேர்த்து இழுப்பதால், கெட்டில் மேஜை மீது வந்துவிடுகிறது. கெட்டிலிலிருந்து ஒரு ரப்பர் குழாய் மேஜைக் கால் வழியாக கீழேயுள்ள அறைக்கு போகிறது. அறையில் ஒருவன் காபியை "பம்ப்" செய்கிறான். இது சபையோருக்கு தெரியாது. ஆகவே கெட்டில் வழியாக எத்தனை கோப்பைகள் காபி வேண்டுமானாலும் கொடுக்கலாம். இதுவே மந்திரவாதியின் தந்திரம்.

அடுத்த "காந்தி" மலரில் மற்றொரு தந்திரம் வெளியிடப்படும்.

மணிக்கொடி

ஞாயிறு செய்திப் பத்திரிகையான "மணிக்கொடி" செப்டம்பர் 17உ முதல் வெளி வருகிறது. இதன் ஆசிரியர் நண்பர் கே. சீனிவாசன் பி. ஏ. (ஆனர்ஸ்). பம்பாய் பிரீபிரஸ் ஜர்னல் என்ற ஆங்கில தினசரியின் ஆசிரியராயிருந்து திறம்பட நடத்தி இந்தியாவெங்கும் பெயர் பெற்றவர். தமிழ் நாட்டிற்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, வட இந்தியாவில் பல பிரபல பத்திரிகைகள் தங்கள் பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருக்கவேண்டுமென்று அழைத்தும், அந்தப் பதவியையும், உயர்ந்த சம்பளத்தையும் மறுத்து "மணிக்கொடி"யை ஆரம்பித்திருக்கிறார். முதல் பத்திரிகையை மட்டும் பார்த்தவர்களுக்குக் கூட "மணிக்கொடி"யின் சிறப்பு விளங்கிவிடும். "மணிக்கொடி"யின் முதல் இதழில் பின்கண்ட அறிக்கை வெளியாயிருக்கிறது:—

பாரதி பாடியது மணிக்கொடி. காந்தி ஏந்தியது மணிக்கொடி. காங்கிரஸ் உயர்த்தினது மணிக்கொடி. சுதந்திரப் போராட்டத்தில், பல்லாயிரம் வீரர்களை ஈடுபடச் செய்து அவர்களுக்கு உற்சாகம் ஊட்டியது மணிக்கொடி. மணிக்கொடி பாரத மக்களின் மனத்திடை ஓங்கி வளரும் அரசியல் லட்சியத்தின் நுனி, முனை, கொழுந்து.

மணிக்கொடியின் பெயரைச் சூட்டி இன்று இந்த "மணிக்கொடி"யைத் தொடங்குகிறோம். "மணிக்கொடி"யைப் பற்றிப் பிறர் பேசவேண்டும்: பேசுவார்கள். இதைப் பகைவர்கள் தாக்குவார்கள். பந்துக்கள் தாங்குவார்கள். நித்தம் நித்தம் காலன் கணக்கு எழுதி வருவான்.

"மணிக்கொடி" ஒரு முயற்சி. முடிவு சரித்திரம் காட்டும். "மணிக்கொடி" ஒரு பிறவி. இதன் வாழ்வும் வளர்ச்சியும் எங்கள் லட்சியத்திலே, உங்கள் அன்பிலே, இறைவன் அருளிலே!

மணிக்கொடி ஊழியர்கள்,
கு. ஸ்ரீநிவாஸன்.
வ. ராமஸ்வாமி.
தே. ச. சொக்கலிங்கம்.

விஷயங்கள்

மணிக்கொடியின் பொதுத் தலைப்புகள், பத்திரிகைகளை எந்த எந்த முறையில் படிப்பவர்களுக்குச் சுவை உள்ளதாகச் செய்ய

முடியுமோ அந்த அந்த முறைகளுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டு இருக்கின்றன.

அன்று வரும் உள் நாட்டு அயல் நாட்டுத் தந்திகள் அன்றையச் செய்திகளை விளக்கும். ஞாயிற்றுக்கிழமைச் செய்திகளை அறிய இனி அடுத்தநாள் வரையில் காத்திருக்க வேண்டாம்.

சுறுக்கு மலையில் சுருக்கமானவையும், சுறுக்கு என்று தைப்பவையும் ஆன வியாக்கியானங்கள் வரும்.

ஆசார மணியில் பொது ஜனங்கள் குறைகளை வெளியிடலாம்.

கலைக்கூடத்தில் கலாவிமர்சனம் நடைபெறும். நாடகம், சங்கீதம், சிற்பம், ஓவியம் இவைகளைப்பற்றி கட்டுரைகள் இந்த தலைப்பின்கீழ் காணலாம்.

டமாரக் கடிதங்களில் வெளிப்படையாகச் சொல்லப்படவேண்டிய விஷயங்கள் ஒளி மறைவில்லாமல் சொல்லப்படும்.

இலக்கியச் சோலையில் இலக்கியத்தைப் பற்றிய கட்டுரைகளும், விமர்சனங்களும் வெளி வரும். தமிழ் இலக்கியம் மட்டும் அன்று. அயல் நாட்டு இலக்கியங்களைப் பற்றிய வியாஸங்களும் காணலாம்.

ஸ்வதந்திரப் பண்ணையில் ஸ்வதந்திரப் பயிர் விளைப்பதற்கான ஸாதனங்கள் எடுத்துக் காட்டப்படும். வீரச் சொல்லும் வீரச் செயலும் வழக்கமாக வரும். ஜன ஸ்வதந்திரம் எப்படித் தோன்றிற்று, எப்படி வளர்ந்தது இவைகளை விளக்கும் கட்டுரைகளும் சரித்திர நிகழ்ச்சிகளும் பிரசுரிக்கப்படும்.

பழங்கணக்கில் நமது நாட்டின் சரித்திரத்தில் ஏடுகள் பொறுக்கி வெளியிடப்படும்.

ஜன நடையில் பொது நிகழ்ச்சிகளின் அடிப்படைகளைக் காணலாம். பெரும்பாலும் ஹாஸ்ய முறையில் நடைப் பிசகுகளை எடுத்துக் காட்டப்படும்.


புதுத்தராசு புதிய ஆவசியங்களைக் காட்டும். புழைய தராசு சாரமற்ற பொருள்களை மேலுக்குத் தூக்கியும் கனத்த பொருள்களைக் கீழுக்கு இறக்கியும் காட்டி வந்தது. புதுத்தராசு உள்ளதை உள்ளவாறு காட்டும்.

சதுர்முகத்தில் நாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றி சுருக்கமான குறிப்புகள் காணப்படும்.

சந்தா

"மணிக்கொடி"க்கு வருட சந்தா உள் நாட்டுக்கு ரூ 3—8—0. வெளி நாட்டுக்கு ரூ 5—0—0. தமிழர்கள் "மணிக் கொடி"யை ஆதரிக்கும்படி வேண்டுகிறோம். விலாசம்: மணிக்கொடி ஆபீஸ், 35, செம்புதாஸ் தெரு, சென்னை.

பூதகியே ஜாக்கிரதை!



துஷ்ட் நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்ய கிருஷ்ணன் அவதரித்தார். நல்லவர்கள் கிருஷ்ணனை போற்றினர்கள். துஷ்டர்கள் கிருஷ்ணனை கொலல சூழ்ச்சி செய்தார்கள். இதற்காக எத்தனையோ முறைகளை கையாண்டனர். இவற்றில் ஒன்று பூதகி சூழ்ச்சி. பூதகி என்ற ராக்ஷசி, தன் ஸ்தனங்களிலுள்ள பாலை விஷமாக்கி, அதை கிருஷ்ணனுக்குக் கொடுத்து கொல்ல வந்தாள். குழந்தை கிருஷ்ணன் யசோதை மடியில் விளையாடிக் கொண்டிருந்தான். கிருஷ்ணனிடம் மிகுந்த பிரியங்கொண்டவள் போல பாசாங்கு காட்டி பூதகி அழைத்தாள். யசோதைக்கு இந்த சூது தெரியாது. குழந்தை கண்ணன் பூதகியிடம் போவதை அவள் தடுக்கவில்லை. பூதகி கண்ணனை மடியில் எடுத்து வைத்து கொஞ்சினள். குலாவினள். க்டைசியாக பால் கொடுத்தாள். கிருஷ்ணன் மடிந்து போவானென்று நினைத்தாள். ஆனல் என்ன நடந்தது ? மாயவனை ஏமாற்ற முடியுமா? துர் நினைப்பும், கல் நெஞ்சும் கொண்ட அந்த பூதகியின் பாலை குடிக்கும் போது, அவள் உயிரை

யும் சேர்த்துக் குடித்தான். பூதகி மாண்டாள். இது பாகவதத்தி லுள்ள ஒரு கதை.

இந்த கதையிலுள்ள பாத்திரங்களை மட்டும் மாற்றுவோம். கிருஷ்ணன் இடத்தில் கதர் என்பதை வையுங்கள். பூதகிக்குப் பதில் மில் துணியை வையுங்கள். இப்பொழுது கதையை மறுபடியும் சிந்தனை செய்யுங்கள். கதர் பாலபருவத்தில் இருக்கிறது. ஏழைகளை கொள்ளை யடித்து வந்தவர்கள் வாயில் கதர் மண்ணடிக்கப் போவது நிச்சயம். ஆகவே பாலகிருஷ்ணனை கொல்லுவதற்கு நடந்த சூழ்ச்சிகளைப் போல, கதரை கொல்லுவதற்கும் சூழ்ச்சிகள் நடக்கின்றன. பூதகி அவதாரம் நமது மில்காரர். கதரை மிகவும் ஆதரிப்பதைப் போல மில்காரர் 1930-31 ல் பாசாங்கு செய்தனர். இந்திய மாதாவுக்கு இவர்களின் சூழ்ச்சி தெரியவில்லை. மில்காரர் பாசம் உண்மையான பாசமென்று மகிழ்ச்சி கொண்டாள். ஆனால் உண்மை யென்ன? போலிக் கதர் உற்பத்தி செய்ய முரட்டு நூல்களை உற்பத்தி செய்கிறார்கள். முரட்டு நூல்களால் போலிக் கதர் உற்பத்தி செய்து, உண்மையான கதர் என்று ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். காங்கிரசுடன் முன்னால் செய்து கொண்ட ஒப்பந்தங்களை புறக்கணித்து விட்டார்கள். இந்தியா சட்ட சபையில் வந்திருக்கும் கதர் மசோதாவைக்கூட எதிர்க்கத் துணிந்தார்கள். கதரை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்பதே மில்காரர்களின் அந்தரங்க நோக்கம். இதை மனதில் வைத்துக் கொண்டு, கதரை அபிமானிக்கிறது போல பாசாங்கு செய்கிறார்கள். இந்த மில்காரர்களுக்கு இப்பொழுதே எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். பூதகி கதையை மறந்து விடவேண்டாம். கதரின் சக்தியையும் மறந்து விடவேண்டாம். கதரை கொல்ல யாராலும் முடியாது. கொல்ல முயன்றால் என்ன நேருமென்பது எல்லாருக்கும் தெரியும். ஜாக்கிரதை! பூதகியே, உயிர் மீது ஆசையிருந்தால் கண்ணன் கிட்டத்தில் கூட நெருங்காதே. ஓடிப்போ!

தேசாபிமானிகளே, கதர் வாங்குவதும், இந்திய மில் துணி வாங்குவதும் ஒன்றுதான் என்று உங்களில் சிலர் நினைத்துக்கொண்டிருப்பதாய் தெரிகிறது. அது தவறு. இந்திய தேசிய உடை கதர், கதர், கதர் ஒன்றே. வேறு எதுவும் தேசிய உடையல்ல. இந்தியரின் பொருளாதார நிலைமையை உயர்த்தவல்லது கதரே. மில் துணியல்ல. இன்று முதல் நீங்கள் கதரைத் தவிர வேறு எதையும் எடுப்பதில்லை யென்று உறுதிகொள்ளுங்கள்

சிதறுண்ட எண்ணங்கள்

(ஹேமமாலினி)

எனக்கு வியாசமோ, கதையோ அதிகம் எழுதிப் பழக்கமில்லை. ஏதாவது எழுதவேண்டுமென்று வெகு நாளாக நிரம்ப ஆசை. ஆனால், எண்ணங்கள் கோர்வையாக வருவது கிடையாது. ஆகையால்தான், "சிதறுண்ட எண்ணங்கள்" என்று பெயரிட்டு எழுதினால் நீங்களும் அதிகம் எதிர்பார்க்காமல் படிக்க ஆரம்பிப்பீர்கள் என நினைத்தேன்.

எழுதுபவர்கள் எப்பொழுதும் வாசிப்பவர்களுக்காக எழுதுவது கிடையாது, என்பது என் அபிப்ராயம். தன் பெயர் நாலு பேருக்குத் தெரியவேண்டுமென்றால் தைரியமாய் இங்கியில் பேனாவைத் தோய்த்துவிடலாம். ஆனால் அதில் ஒரு தனி "குஷி" இருக்கத்தான் இருக்கிறது. நாம் எழுதினது நன்றாய் இருக்கின்றதோ, இல்லையோ, நமக்குள் அதைப்பற்றிக் கொஞ்சம் அதிகமாகவே எண்ணம்; நமது நண்பர்களும் முகதாக்ஷிண்யத்துக்காகவாவது, அது நன்றாயிருப்பதாகத்தான் சொல்வார்கள். அவர்கள் அப்படிச் சொல்லும்போது, நாமும் கூடுமானவரையில், அழகாக எழுதுவது நமது பிறவிக்குணம்போலவும், அதைப்பற்றி நாம் அதிகம் நினைக்காதது மாதிரியும் முகத்தை வைத்துக்கொள்ளக் கற்றுக்கொண்டிருக்கிறோம். "ஏன் இந்த வேஷம் போடவேண்டும்?" என்று பல முறை நான் எண்ணியதுண்டு. காரணம், பணிவும் அடக்கமும் மிகவும் போற்றப்படவேண்டிய குணங்கள் என்று இருக்கிற ஒரு தப்பு எண்ணம்தான்.

* * *

நிரம்ப படிக்கிறவர்களைக் கண்டால் எனக்கு ஒருவித வெறுப்பு—அவர்களைப்பற்றிக் கொஞ்சம் தாழ்ந்த அபிப்ராயம் கூட. நான் காரணம் சொல்வதற்குள் "ஏன்?" என்று கேட்கக்கூடாது. நான் சொல்லுவேனோ, மாட்டேனோ—அதற்குள்ளேயும் என்ன தலை கொண்டு போகிற அவசரம்?

நிறைய படிப்பவர்கள் கதி இரண்டு புல் கட்டுகளுக்கு நடுவில் நிற்கும் பசு மாதிரி (கழுதை மாதிரி, என்றுதான் பழமொழி—இருந்தாலும்). அவர்களுக்கு எதை அனுஷ்டானத்தில் கொண்டு வருவதென்று லேசில் தோன்றாது. இதில் கொஞ்சம், அதில் கொஞ்சம் என்று, கடைசியில் மலையாள அவியல் மாதிரிதான் இருக்கும் அவர்கள் எண்ணங்களும் செயல்களும்.

இந்தக் காலங்களில் பொய் சொல்லாமல் ஒரு நாள் கூட இருக்க முடிவதில்லை. நாம் நல்லவர்கள் தான். ஆனால் பிறர்தான் நம்மைப் பொய் சொல்லும்படி செய்துவிடுகிறார்கள். உதாரணமாய், உங்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்கள் வீட்டுக்கு வருகிறார் என்று வைத்துக்கொள்வோம். உங்களுடன் வெகு நேரம் பேசிக்கொண்டிருக்கிறார். "என்றைக்கும் இவர் நம்மிடம் இவ்வளவு பிரியமாயும் ஆதரவாயும் பேசினதில்லையே" என்று உங்களுக்குச் சந்தேகம் தட்ட ஆரம்பிக்கிறது. கடைசியாக, எழுந்து போகு முன், திடீரென்று ஞாபகம் வந்ததுபோல அவர் "ஒரு அஞ்சு ரூபா இருக்குமா?" என்று கேட்கிறார். உங்கள் பையில் இருபத்து எழு ரூபாய், இரண்டரையணா இருக்கிறது. ஆனால் இந்த மனுஷனிடம் கொடுத்தால் திரும்பி வராது என்று உங்களுக்குத் தெரியும். தைரியம் போதுமான அளவு இருந்தால் நீங்கள், "அஞ்சு ரூபாயும் இருக்கு, அதற்கு மேலே கூட இருக்கு—ஆனால், உங்களுக்குக் கொடுக்க இஷ்டமில்லை," என்று சொல்லவேண்டும்.

ஆனால் சிறுவயதிலிருந்தே லாபகரமான பொய் சொல்வது தவறு இல்லை என அறிந்துகொண்டிருக்கின்றீர்கள். "உடையது விளம்பேல்" என்ற ஔவையின் புத்திமதியும் ஞாபகம் வருகிறது. உடனே, வருத்தமும், அவமானமும் மிகுந்த எண்ணங்களை வரவழைத்துக்கொண்டு, அவைகளைச் சாதுர்யமாய் முகத்தில் பிரதிபலிக்கச்செய்து, "அடடா, காலையில்தானே சாம்பசிவம் இருபது ரூபா வாங்கிக்கொண்டு போனான்" என்று சொல்கிறீர்கள். வந்தவருக்கு, நீங்கள் பையில் பணம் வைத்துக்கொண்டே பெரிய புளுகு சொன்னது தெரியும்—அவர் உங்கள் பையில் பண ஓசை கேட்டுத்தான் கடன் கேட்டார். ஆனால், அவரும் மிக அலக்ஷியமாக, "போனால் போரது,—ஆதிசேஷனிடம் கேட்டுப் பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு மெல்ல நகர்கிறார். அவர் தலை மறைந்தவுடன், பையை ஒருதரம் தொட்டுப்பார்த்து, முதலில் போட்டிருந்த பணம் சரியாய் இருக்கிறதா என்று எண்ணிவிட்டு, பெட்டியில் வைத்துப் பூட்டி, சாவியை சரஸ்வதி படத்துக்குப் பின்னால் வைக்கிறீர்கள். பொய் சொல்லிவிட்டோமே என்று வருத்தம்தான்—ஆனால் பணம் அவருக்குக் கொடுத்திருந்தால் இதைவிட இன்னும் அதிகமாய் வருத்தப்பட நேரிடும் என்று தெரிந்துகொண்டு ஆறுதல் அடைகிறீர்கள். தினம் இதேமாதிரி பொய், காலை ஆரம்பித்து சாயந்திரம் கூட முடிவதில்லை. பொய் வழக்கமாய்ப் போய்விடுகிறது—பொய்க்கு மனம் மறுத்தல் போய் விடுகிறது—இல்லாவிட்டால் நம் வாழ்க்கை ஏன் இவ்வளவு பொய்மை நிரம்பியதாக இருக்கவேண்டும்?

கால விபரீதம்

(க. ச.)

1910

(ஐக்கிய மாகாணம்; ஜமீன்தார் சோமநாத் சிங், 22 வயது. பத்தினி சகுந்தலாதேவி, 18 வயது. சொத்து லக்ஷம் ஏகரா. வருமானம் வருஷத்திற்கு 10 லக்ஷம் ரூபாய்.)

சகு: அந்த ஏழைக் குடியானவனை வருத்துவதில் பிரயோசனமென்ன? மாசூல் முழுதும் விற்று வரிகட்டி விட்டான். காலத்தில் மழை பெய்யாமல் போனதற்கு அவன் என்ன செய்வான்? அவன் பெண்சாதி குழந்தைகள் வாசலில் வந்து அழுதுகொண்டு நிற்கிறார்கள். எனக்கு சகிக்க முடியவில்லை.

சோம: உன் முகத்திற்கு இச்சொல் அழகாகத்தான் இருக்கிறது. ஆனால், இப்படி விட்டுவிட்டால் நம் கதி என்ன வாசம்? நாம் கிஸ்தி எப்படிக் கட்டுவது? யானைக்கு யார் தீனிபோடுவார்கள்? வைரங்களின் பில்களுக்கு லக்ஷம் ரூபாய் ஒருவாரத்தில் கொடுக்க வேண்டும். அடுத்த மாதம் கவர்னர் வேட்டையாட வந்து நம் வீட்டில் தங்குவார். பணத்திற்கு நான் எங்கே போவேன்?

சகு: அதெல்லாம் என்னிடம் சொல்லவேண்டாம். ஏழைகள் கண்ணும் கண்ணீருமாக நம் வாசற்படியில் அழுதால் நம் குலத்திற்கு நல்லதல்ல. மன்னித்து விடுங்கள்.

சோம: ஒருவனை மன்னித்து விடலாம். இருபதினாயிரம் குடியானவர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் அப்படியே பஞ்சப் பாட்டுப் பாட வாரம்பிப்பார்கள். நாம் திவாலாகப் போகவேண்டியதுதான்.

சகு: உங்களோடு வாதாட நான் விரும்பவில்லை. எனக்காக அவர்களை விட்டு விடுங்கள்.

சோம: சரி உன்னிஷ்டம்போல் நடக்கட்டும். ஆனால்,இப்படி அடிக்கடி ஒவ்வொரு குடியானவனுக்கும் பரிந்து வரக்கூடாது.

சகு: அதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். (சந்தோஷத்துடன் போய் திவானிடம் ஜப்தி செய்த மாடுகளைத் திருப்பிக் கொடுக்கும்படி சொல்லுகிறாள். உடனே வாசலில் மகா

ராஜ சோமநாத் சிங்குக்கு ஜே! மகாராணி சகுந்தலா தேவிக்கு ஜே என்ற ஆரவாரம்)

II

1930

(அதே இடம், பாத்திரங்கள்)

சகு: ஏன் இவ்வளவு கவலே? வீணுக விசாரப்பட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம்.

சோம: உண்மை தெரிந்தால் இப்படிப் பேசமாட்டாய். அந்தக் காங்கிரஸ்காரர்கள் ஜெயித்து விட்டார்கள். நாம் தோற்று விட்டோம்.

சகு: அதெப்படி? அவர்களே எல்லாம் சர்க்கார் சிறையில் அடைத்து விடவில்லையா? காங்கிரஸ் இருந்தவிடமே தெரியவில்லேயே? நீங்கள் கூறுவது ஆச்சரியமாக விருக்கின்றதே?

சோம: சர்க்கார் ஜெயித்தார்கள். ஆனுல், நாம் தோற்று விட்டோம். காங்கிரஸ்காரர்கள் கேட்ட வஜாவை சர்க்கார் கொடுத்து வரிகொடா இயக்கத்தை அடக்கி விட்டார்கள். கடைத் தேங்காயை உடைத்தால் வழிப்பிள்ளேயார் திருப்தி யடையலாம். அதனுல் கடைக்காரனுக்கு நஷ்டம் நஷ்டந்தானே. வரிகொடா இயக்கம் அடங்கி விட்டது. ஆனுல், ஜமீன்தார்கள் ஆண்டியாகி விட்டார்கள்.

சகு: அப்படியானுல் இவ்வருஷம் நமக்கு எவ்வளவு வரும்படி வரும்?

சோம: மூன்று லக்ஷம் தான்!

சகு: ஐயோ! அவ்வளவு குறைந்து விட்டால் நாம் என்ன செய்வது? விமலாவின் கல்யாணத்திற்குக்கூட அது போதாதே? பாரிஸில் இருக்கும் ஜகதீசனுக்கு எப்படிப் பணம் அனுப்புவது? சர்க்கார் ஆதரவு இதுதானு?

சோம: எல்லோரும் முதலில் தம் பாட்டைத்தானே பார்த்துக் கொள்ளுவார்கள். சர்க்கார் நம்மை ஸ்தோத்திரம் செய்து கொண்டுதான் இருப்பார்கள். ஆனுல், ஜனங்கள் ஒன்று கூடி எதிர்க்கும்பொழுது, நம்மைக் கைவிட்டு விடுவார்கள்.

சகு: பின் ஏன் நாம் எப்பொழுதும் உத்தியோகஸ்தர்களுக்கு சலாம் போட்டுக்கொண்டிருக்க வேண்டும்? அவர்களின்

வேட்டைக்கும் விருந்துக்கும் எதற்காக ஆயிரக்கணக்காகச் செலவு செய்யவேண்டும்! நம்முடைய குடியானவர்களோடு நாமே என் புதிய ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடாது?

சோம : சொல்வது சுலபம். நான் மற்ற ஜமீன்தார்களின் சம்மதமின்றி புதிய வழக்கம் செய்தால் மத்தளத்தின் கதிதான் எனக்கும். குடியானவர்களோடு எப்படி புதிய ஒப்பந்தம் செய்து கொள்வது? அவர்களுடைய ஆசைக்கு அளவில்லை!

சகு : ஏதாவதொன்று செய்யவேண்டாமா?

சோம : ஜமீன்தார்க ளெல்லோரும் சேர்ந்து லண்டனுக்கு ஒரு கோஷ்டி யனுப்பி பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் முறையிட்டு, புதிய அரசியல் திட்டத்தில் பாதுகாப்பு விதிகளைச் சேர்க்கவேண்டு மென்று வற்புறுத்தப் போகிறோம். நமது புத்திரன் ஜகதீசனையும் அந்த கோஷ்டியில் சேர்ந்து கொள்ளும்படித் தந்தியடித்திருக் கிறேன்.

சகு : எனக்கு இதில் நம்பிக்கையில்லை. இனிமேல் வீட்டுச் செலவுகளைக் குறைத்து பாங்கிகளில் கொஞ்சம் பணம் போட்டு வைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

1950

(அதே இடம், பாத்திரம்)

சோம : இனி இவ்வூரில் இருக்க முடியாது. குடியானவர்கள் வந்து எதிரில் பயமில்லாமல் நாற்காலியில் உட்காருகிறார்கள். தவறி ஒருவார்த்தை சொல்லிவிட்டால் சங்கம் மூலமாக நோட்டீஸ் கொடுத்துவிடுகிறார்கள்.

சகு : நானும் இந்த வீட்டிற்கு வந்து நாற்பது வருஷம் ஆகி விட்டது. இனி இங்கிருந்தால் மரியாதை கெட்டுவிடும். சமையல் காரி கோபித்து இன்று வேலையைவிட்டுப் போய்விட்டாள்.

சோம : ஜமீன்தார்கள் கூட்டத்தில் இதைப்பற்றி யோசித்து, ஒரு பெரிய முடிவுக்கு வந்துவிட்டோம். நம்முடைய பிள்ளைகள் எல்லோரும் பாரிசிலும், லண்டனிலும் உல்லாசமாக வசித்துக் கொண்டு நம்மை இந்த ஆபத்தில் விட்டு விட்டுபோனதைப் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் என்மனம் புண்ணாகின்றது.

சகு : அவர்கள் என்ன செய்வார்கள்? குழந்தைப் பருவ முதல் வேறு நாடுகளில் வளர்த்துவந்த குற்றம் நமதல்லவா? சமா சாரத்தைச் சொல்லுங்கள். முடிவு என்ன?

சோம: சர்க்கார் நம் நிலங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு நம் குடும்பங்களுக்கு பென்ஷன் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம்.

சகு: பென்ஷன் எப்படி?

சோம: முதல் பத்து வருஷங்களுக்கு லக்ஷ ருபாய் வீதமும், அடுத்த பத்து வருஷங்களுக்கு அதில் பாதியும். அப்படியே படிப்படியாகக் குறைந்துவரும்.

சகு: இது கால விபரீதம்? நாம் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நம் காலமாகிவிட்டதென்று சந்தோஷப்படுவோம். ருஷியாவைப்போல் புரட்சி வந்திருந்தால் நாம் என்ன செய்திருக்க முடியும்? நாளையே அலகாபாத் போய்ச் சேருவோம்.

(மகாத்மா காந்திகி ஜே, பண்டித ஜவர்லால்கி ஜே என்ற கூச்சலுடன், வெளியில் பெரிய ஆரவாரம்.)

பல் பலே!

இளமையாயிருக்கும்போது விவாகஞ்செய், அல்லது அதனால் ஏற்படும் பலனை அநுபவிக்க நேரிடும் என்று ஒரு மாஜிஸ்திரேட் கூறினர்.

இரண்டையும் ஏககாலத்தில் பலர் அநுபவித்து வருகிறார்கள்.

* * * *

"சீமையை பார்த்து வரப்போகிறேன். என் னசாமான்கள் அவசியம் எடுத்துப் போகவேண்டியிருக்கும்" என்று ஒரு நண்பர் எழுதுகிறார்.

பாங்கி உண்டியல் ஒன்று தான் அவசியம். அவர் இருந்தால் சீமையில் குஷிக்கு என்ன குறைவு?

* * * *

மனித வாழ்கைக்கு இன்றியமையாதவை, உணவு, உடை, தங்கஇடம், பாத்திரம், ஆசனம், போக்கு வரவு சாதனம், விளக்கு, புஸ்தகம் முதலியவை.

—ஒரு மாதம் மும்முறை

இவற்றில் ஆசனத்தை சேர்த்த ஆசிரியர் ஒரு வேளை சீமை பேர்வழியாய் இருக்கலாம்.

பேயோ ! பிசாசோ !!

(கே. எஸ். ரகுநாதன். பி. ஏ.)

அஸ்தமனமாகி இரண்டு அல்லது மூன்று நாழிகைகளிருக்கலாம். ஐந்தாம் பிறைச் சந்திரனுனதால் அதிக இருட்டு இல்லாமல் மங்கின வெளிச்சமாக இருந்தது.

சொந்த அலுவலே முன்னிட்டு பக்கத்தூருக்குப் போன நான், எனது சொந்த கிராமத்திற்குத் தனிமையாக வந்து கொண்டிருந்தேன். கண்ணுக்கு எட்டிய மட்டில் மனித சஞ்சாரமே காணும். எங்களூர் ரஸ்தா, தாலுக்கா போர்டாரால் 3-ம் கிளாஸ் ரோடாக பாவிக்கப்பட்டு 10, 15 வருஷங்களுக்கு முன்னுல் ஒரு தரமாவது சீர்திருத்தம் அடைந்திருக்கு மென்பதில் கொஞ்சமும் ஐயமில்லே. இந்தப் பரிதாபகரமான நிலேமை, மெம்பர்கள் தங்களது எலக்ஷன் ஸத்தியத்தை உபயோகப் படுத்தின முறையேயாகும்.

என் வீட்டை அடைய இன்னும் ஒரு மைல் நடக்க வேண்டும். ரோட்டின் இருபுறமும் உள்ள ஆகாயத்தை அளாவிய புளிய விருக்ஷங்களால் மங்கின நிலாவும் இருட்டாகவே தென்பட்டது. பாலங்களற்றதாயும் போக்கு வரத்துக்குச் சாதனங்களற்றதாயும் உள்ள இரண்டு ஓடைகளேத் தாண்டவேண்டும். பல யோசனைகளுடன் நடந்து கொண்டே சென்றேன். தங்களது கோடை காலத்தை ஸிம்லா, நீலகிரி, கோடைக்கானல் முதலிய இடங்களில் கழிக்க சம்மதமில்லாமல், கடல் தாண்டி ஐயாயிரம் மைலுக்கப்பாலுள்ள சீமைக்குச் சென்ற பிரதிநிதிகள், தாங்கள் வந்த காரியம் தான் ஆகவில்லே, குளிர்காலத்திற்கு முன் ஊர் திரும்புவோம் என்று திரும்பி விட்டார்களோ என்ற சந்தேகமும் எனது பல எண்ணங்களிலொன்று. இவ்வாறு யோஜனை செய்து கொண்டே ரோட்டோரத்திலுள்ள ஒரு பாழுங்கிணற்றை நோக்கினேன். ஒரு நிமிஷம் தயங்கி அப்படியே ஸ்தம்பித்து நின்றேன். திடீரென்று ஒரு பீதி மனதில் தோன்றிற்று.

எனது கிராமத்தார்கள் அந்த வழியே தனியாக வர அஞ்சுவார்கள். அதிலும் இருளில வர யாருமே சம்மதியான். ஏனெனில், சில வருஷங்களுக்கு முன்னுல் ஒரு குடும்ப ஸ்திரீ அக்கிணற்றில விழுந்து தற்கொலே புரிந்து கொண்டதால் பிசாசு ரூபமாக மாறி அங்கேயே திரிந்து கொண்டிருக்கிருளாம். நான் இது போன்ற கதைகளே நம்பினதில்லே. அனேக தடவைகள் அதுபற்றித்

தர்க்கம் செய்து பிசாசு பேய் கிடையாதென்று தெருத்திண்ணை அரட்டை கான்பொன்ஸ்களில் ஸ்தாபனம் செய்த எனக்கும் அதைரியம் உண்டாயிற்று. அப்பொழுதே கானன்டாயில், ஆலிவர் லாட்ஜ் முதலானோர் (ஸ்பிரிட்) ப்ராணன் சம்மந்தமாக எழுதின நாவல்களும் வியாசங்களும் எவ்வளவு உண்மை என்பது மனதில் பட்டன. எனது சிறு வயதில் பாட்டிமார்கள் எனக்குச் சொன்ன கொள்ளிவாய் பிசாசுக் கதைகளும் ஞாபகத்திற்கு வந்தன. நடு நடுங்கினேன். மயிர் சிலிர்த்தது.

சீக்கிரம் வீடுபோய்ச் சேரவேண்டுமென்று நடக்க ஆரம்பித்தேன். ஐயோ! என்ன வென்று சொல்வது! ஏதோ சப்தம் ஜில்! ஜில்லென்று என்னைத் தொடர ஆரம்பித்தது. கொஞ்சம் மனதை தைரியப்படுத்திக் கொண்டு நின்று திரும்பிப் பார்த்தேன். சப்தமும் இல்லை. யாதொரு உருவத்தையும் காணோம். மறுபடியும் நடந்தேன். சப்தமும் தொடர ஆரம்பித்தது. நின்றேன். சப்தமும் நின்றது. விரைவாக நடந்தேன். சப்தமும் வெகு விசையுடன் ஜில் ஜில்லென்று விரைவாக என் கூடவே தொடர்ந்தது. எனக்குப் பயத்தால் வியர்த்தது. குடல் நடுங்கிற்று. நான் தொலைந்தேன், இந்தப் பிசாசு என்னை விழுங்கி விடுமென்று நிச்சயப் படுத்திக் கொண்டேன். இருந்தாலும் உயிரல்லவா? தப்புவதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. இந்தப் பிசாசுக்குச் சிக்காமல் ஒரே ஓட்டமாக தப்பிக்க வேண்டும். அது என்னால் சாத்தியம் என்ற மனோ தைரியம் உண்டு. ஏனென்றால் ஜில்லா, ராஜதானி, அகில இந்தியா ஓட்டப் பந்தயங்களில் மெடல்களும், பரிசுகளும் பெற்று இருக்கிறேன். இரண்டு பர்லாங்குகள் போய் விட்டால் தப்பிக்க முடியும். இல்லாவிட்டால்,

நான் என்றைக்கும் ஓடாத வேகம் அன்று ஓடினேன். கணக்கு மாத்திரம் எடுத்திருந்தால் உலக ரிகார்டாககூட இருக்கலாம். அந்தப் பிசாசும் சாமானியமில்லை. ஜில், ஜில் என்ற சப்தத்துடன் நான் எவ்வளவு வேகம் ஓடினேனோ அவ்வளவு வேகம் ஓடிவந்தது. என்னால் ஒரு பர்லாங்கு தூரம் தான் அவ்வளவு வேகமாக ஓட முடிந்தது. அதற்குள் எனது இடுப்பில கட்டியிருந்த வேஷ்டி அவிழ்ந்தது. அதை வரிந்து கட்டிக்கொண்டு இந்தப் பிசாசை நேராகத் தாக்கவேண்டு மென்ற கடைசி நோக்கத்துடன், பாதி அவிழ்ந்த வேஷ்டியை அவிழ்த்தேன். 'சொத்' என்று கீழே விழுந்தது. என்னவென்று உற்று நோக்கினேன். ஆஹா! என்ன வென்று சொல்வது? அது என் கொத்துச் சாவியே. இதுவே என்னை இப்படி பயப்படுத்தியது.

மனித இயந்திரம்

மனமும், காயமும்

பயத்தினுல் ஓடுகிறேமா, அல்லது ஓடுகிறதினுல் பயப்படுகிறேமா? அழுகிறதனுல் துக்கப்படுகிறேமா, அல்லது துக்கப் படுவதால் அழுகிறேமா?

இந்தக் கேள்விகளே ஆழ்ந்து சிந்தனைசெய்யுங்கள். உணர்ச்சியும் செய்கையும் ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன. ஆனுல் முதலில் வருவது எது? உணர்ச்சியா, செய்கையா?

பல சந்தர்ப்பங்களில் செய்கையே முதலில் வருவதாக மனேதத்துவ சாஸ்திரிகள் சொல்லுகிறுர்கள். இதை சுலபமாக நிரூபிக்கலாம். தரையில் ஆசனம் போட்டு நிமிர்ந்து உட்காருங்கள். கைகூப்பி நமஸ்கார பாவனேயில் அமர்ந்து கண்களே மூடுங்கள். உங்களே அறியாமலே பாரமார்த்தீக நினேப்புகள் தோன்றும். உங்கள் செய்கையானது அதற்குற்ற உணர்ச்சியை தூண்டி விடுகிறது. ஆகவே செய்கை உணர்ச்சியையும், உணர்ச்சி செய்கையையும் தூண்டிவிட வல்லது என்பது நிச்சயமாகிறது.

உங்கள் மனதில் எப்பொழுதாவது சோர்வு ஏற்பட்டால், என்னசெய்யவேண்டும்? முட்டிக்காலே கட்டிக்கொண்டு மூஞ்சியை தொங்கவிடக்கூடாது. தாடியில் கை வைத்து முகத்தை சுளித்துக் கொண்டிருக்கக் கூடாது. இம்மாதிரி செய்கைகளேப் போல மனச்சோர்வை அதிகரிக்கக் கூடிய வேறு செய்கைகளே பார்க்க முடியாது.

மனச்சோர்வு ஏற்பட்டால், உடனே சந்தோஷ மூட்டக்கூடிய செய்கைகளேச் செய்யவேண்டும். நினேப்பை மாற்றக்கூடிய வேலேகள் எதையாவது செய்யவேண்டும். உங்களுக்குப் பாடத்தெரியுமானுல் பாடுங்கள். சிட்டியடிக்கத் தெரியுமானுல் அடியுங்கள். உங்கள் மனப்போக்கு மாறும். செய்கைக்குத் தக்கபடி உணர்ச்சி மாறுதலடையத் தொடங்கும். மனச்சோர்வை இம்மாதிரி வெல்லலாம்.

உடம்பினுல் மனப்போக்கை ஆளமுடியுமென்பதையும், மனதினுல் உடம்பை ஆளமுடியுமென்பதையும் இப்பொழுது அறிந்து கொண்டீர்கள். இனி இந்த வழியில் வேலேசெய்யுங்கள்! மனம் அடிமையைப் போல உங்களுக்கு அடங்கி நடக்கும்.

உங்கள் மனம் சோர்வடையும் போது, அதை சந்தோஷமாயிருக்க உத்தரவிடும்படி உடம்பிற்கு சொல்லுங்கள். மனம் அப்படியே அடங்கி நடக்கும்.

:: கண்டதும் காதல் ::

“அளவில் வித்தியாசம் இருந்தபோதிலும், சகல உணர்ச்சிகளும் சகல மனிதரிடமும் உண்டு; ஆகவே “கண்டதும் காதல்” என்பது ஒருவருக்கு சாத்தியமானல் மற்ற மனிதருக்கும் சாத்தியமே” என்ற அடிப்படையைக் கொண்டு நண்பர் வ. ரா. எழுதிய அழகிய கட்டுரையை கீழே பிரசுரித்திருக்கிறோம். ஆழ்ந்து படிந்து நண்பர்கள் பயனடைவார்களாக. “கண்டதும் காதலை”ப் பற்றி சுருக்கமாகவும், தெளிவாகவும் நண்பர்கள் தங்கள் அபிப்பிராயங்களை எழுதி யனுப்பினல் பிரசுரிக்கிறோம்.

ப—ர்.

ஸ்ரீமான் அப்புஸாமிஅய்யர் அவர்களின் வீட்டு “குட்டிப்பேச்சு,” பெரும் தென்றலாய் வீசும் என்ற முன் யோசனையில்லாமல், நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்லப் போக, தேவிதாஸன், அதை மிகவும் பெரிதாக்கி விட்டார். தொழுக்கட்டையில் அகப்பட்டுக் கொண்டால், அம்மா வென்றாலும் விடமாட்டார்கள்; ஐயா என்றாலும் விடமாட்டார்கள். தேவிதாஸன், அகப்பட்டுக்கொண்ட பேர்வழிகளை எளிதில் விட்டுவிடும்தயாளுவல்ல! என்ன செய்கிறது?

நண்பர் சீனிவாஸனே, “வழியில் கள்ளனுமுண்டு; ஆனல் பயமுமில்லை” என்றது போல, மிகவும் அழகாகவும் சாதுர்யமாயும்எழுதியிருக்கிறார். “சாயபுவின் குதிரையா, அய்யரின் குதிரையா” என்று கேட்டதற்கு, முன்னல் பார்த்தால் அய்யர் குதிரை, பின்னல் பார்த்தால் சாயபு குதிரை” என்று மத்தியஸ்தமாய்ச் சாட்சிசொன்ன தந்திரசாலியைப்போல, நண்பர் சீனிவாசன் சித்திரச் சொல்லழகுடன் எழுதி விட்டார்.

“கண்டதும் காதல்.” இதைப் பற்றி யாருடனும் கட்சி வாதம் செய்ய, எனக்கு மனமில்லை. என்? உண்மை ஒன்றாயின், உலகத்திலே பல வேறு மதங்கள் ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை. அந்த உண்மையை எழுத்திலும் கருத்திலும் தெரிவிக்க, பல வேறு வகையான தத்துவங்களும் பாஷைகளும் தோன்றியிருக்கமாட்டா.

யானையைக்கண்ட எழு குருடர்கள்—கண்ட என்ற சொல், இங்கு மரியாதைப்பிரயோகம்—யானை முறத்தைப் போலிருக்கிறது, உலக்கையைப்போலிருக்கிறது, தூணைப்போலிருக்கிறது


என்று பலவாருக வர்ணிக்கத் துவக்கின கதையை நண்பர்கள் படித்திருப்பார்கள்; கேட்டு மிருப்பார்கள். "கண்டதும் காதல்" விஷயத்திலும், குருடர்கள் யானையைப் பார்த்த கதைதான். எனவே, நான் கண்ட "யானையை" கொஞ்சம்சொல்லுகிறேன். நண்பர் சீனிவாஸனைப்போல, அழகுபட வர்ணிக்க, என்னுல் முடியாது. சொல்லுகிறேன், கேளுங்கள், இஷ்டமில்லாவிட்டால், காதை கெட்டியாக மூடிக்கொள்ளுங்கள். எனக்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை. ஆனல், "தேவிதாஸன்" மட்டும உங்களைக் கொஞ்சம் கோபித்துக் கொள்ளுகிருர்போல காண்பித்துக் கொள்ளுவார்.

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு." இதை இது வரையிலும் எவரும் ஆட்சேபித்ததில்லை. "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" இதையும் ஆட்சேபித்ததாகவும் தெரியவில்லை. தமிழிலே எல்லா ஒலிகளையும முப்பது எழுத்துக்களில் அடக்கியிருக்கிருர்கள். இந்த எழுத்துக்களை மீறிய சத்தமே, உலகத்தில் சிருஷ்டியில் கிடையாதா? பெரியதொரு பாகுபாடும், விதியும், சட்டமும் செய்தால், அவைகளில் சில்லரைப் பாகுபாடுகளும், சட்டங்களும், விதிகளும் அடங்கிப்போய் விடுகின்றன என்பது மரபு. சட்ட புஸ்தகங்களில் ஆண் என்ருல் பெண் என்றும் அர்த்தம் என்றுவியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிற வேடிக்கையை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தியா என்ருல் காந்தி இருக்கிற இந்தியாவா என்று கேட்பார்களே யொழிய, வ. ரா இருக்கிற தேசமா என்று ஒருவரும் கேட்கமாட்டார்கள். பொது விதியில் அடங்கிப்போகும், சில்லரைப் பிரிவுகள்.

மனிதனுக்கு உணர்ச்சி தான் பிரதானம. அதிலிருந்து தான், அறிவு, ஞானம், ஆனந்தம், செயல் முதலியன தோன்றுகின்றன. உணர்ச்சிக்குப் படீர் படீர் என்று வெளித்தோன்றும் சக்தி தான் உண்டு. யோசித்து வெளித் தோன்றுவதற்கு உணர்ச்சி என்று பெயரே இல்லை. அதற்கு இங்கிதம், நோக்கம், சுகஜீவனம், இலாப நஷ்டக் கணக்கு முதலிய பல பெயர்கள் கொடுத்து அழைக்கலாம். சூரியனைக்கண்ட பனிபோல, வள்ளலைக்கண்ட வறுமையைப்போல், தென்றலைக்கண்ட மலரைப் போல, கயமையைக்கண்ட ரோஷத்தைப்போல, அநியாயத்தைக்கண்ட சுத்த வீரனைப் போல, ஒளியைக்கண்ட இருளைப்போல,— இவ்வாறெல்லாம் மனிதர்கள் சொல்லுவதைக் கேட்டிருப்பீர்கள். இவைகள் யாவும் இமைகொட்டு முன் நிகழும் சம்பவங்கள். இதிலே, தாமதம், யோசனை, என்பதற்கே இடம் கிடையாது. குதிரையின் லாடம் ரஸ்தாவில் படீ

றென்று பட்டால், தீப்பொறி, ஆறஅமர, வெளித்தோன்றுவ தில்லை. இனம் இனத்தோடு சேர்வதும், இளைத்தவன் எதிரி கையில் கணப்பொழுதில் சிக்கிக் கொள்ளுவதும் இயற்கை. இதை இயற்கை விதி என்று ஒப்புக கொண்டால், கண்டதும் காதல் என்பதைப்பற்றி மேலே விவாதமே தேவையில்லை-

இந்த இயற்கை விதியோடு, சாதாரண மனிதனுடைய இயற்கை ஒட்டிக்கொள்ள முடியுமா, அது முடியாது போலத் தோன்றுகிறதே என்று கேட்கலாம். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும், தெய்வஒளிச் சாயல் ஒரு சமயம் திடீரென்று வீசு கின்றது. பிரஞ்சு நாட்டுப் பாட்டான "லா மார் ஸேலஸ்" என்ற அருமையான கீதத்தை பாடிய பிரஞ்சு இளைஞன், அதற்கு முன்னும் பாடினதில்லை; பின்னும் பாடினதில்லை. திடீரென்று கவிதை ஆவேசம் தோன்றி மறைந்தது. அதைப் போலவே காதலும் தோன்றும் என்பது என் வாதம். இது எல்லாருடைய வாழ்க்கையிலும் தோன்றக்கூடிய சம்பவம். தெய்வ அருள் படைத்தவர்கள் கூட, சிற்சில சமயங்களில் மருள் வாய்பட்டு அவஸ்தைப்படுவதையும் பட்டிருப்பதையும் நாம் பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். காதல் என்பது ஒன்று இருக்குமாகில், அது கண்டதும் காதல் தான்; கேட்டதும் காதல்தான். அது சிறுச்சிறுக வட்டியும் முதலும் சேர்க்கும் லோபித்தன்மை படைத்ததல்ல. முன்பின் யோசிக்காமல், தீயில் குதித்து அக்கினிக்கு இரையாக விருக்கும் குழந்தையைக் காப்பாற்றத் துணியும் வீர உணர்ச்சி ஜாதியைச் சேர்ந்ததாகும் காதல். நாள், நட்சத்திரம், கோள் முதலியவைகளை எதிர்பார்த்து வருவதல்ல; சீதனத்துக்கு அடங்கியதல்ல; சீற்றத்துக்கும் ஒடுங்குவதல்ல. மலையருவியின் வீழ்ச்சியின் வேகத்தைக்கொண்டது காதல். எனவே கண்டதும் காதல் தான் உண்மை.





எவன் சாவுக்கு பயப்படுகிறுனே அவன் உயிருடன் இருக்க லாயக்கில்லாதவன் என்று ஒரு பெரியவர் சொல்லியிருக் கிருர். ஜுரம் வயிற்றுவலி எதாவது வந்தால் மருந்து சாப்பிடு கிறேம். ஏன்? சாவுக்கு பயந்து தான். அப்படியானுல் நாம் உயிருடன் இருக்க லாயக்கில்லே யென்று அர்த்தமா? இல்லவே இல்லே.

நாம் உயிருடன் இருப்பதை விட இறந்துபோனுல் நம் தேசத் துக்கு அதாவது பலருக்கு நன்மை ஏற்படும் என்றிருந்தால் அந்த சமயத்தில் அந்த உயிரை விடத் தயாராக விருக்கவேண்டும். இந்த மாதிரி எல்லோரும் செய்யத் தயாராயிருக்க மாட்டார்கள். ஆனுல் இப்பேர்ப்பட்டவர்கள் சிலராவது இல்லாத நாடு ஒருநாளும் முன் னுக்கு வரமுடியாது. தன் நாட்டைக் காப்பாற்றுவதற்காக தன்னே பலிகொடுத்த ஒரு ரோமாபுரி வீரனேப்பற்றி முந்தின காந்தி மலரில் படித்திருப்பீர்கள். இங்கே ஒரு பிரிட்டிஷ் வீரரின் கதையைச் சொல்லுகிறேன். சுமார் 70 வருஷத்துக்கு முன் நடந்த விஷயம். ரஷியாவுக்கும் இங்கிலாந்துக்கும் யுத்தம் நடந்துகொண் டிருந்தது.

ரஷிய சைனியம் சரமாரியாக குண்டுகளே எறிந்துகொண்டிருந் தது. பிரிட்டிஷ் சைனியம் பீரங்கிகளே வைத்து யுத்தம் செய்து கொண்டிருந்தது. பாதியுத்தம் நடக்கும்போது பீரங்கிக்கு வெடி மருந்து காலியாய்விட்டது. வெடிமருந்துப் பெட்டிகள் எல்லாம் சற்று தூரத்துக்கப்பால் இருந்தன. அதை எடுத்துக்கொண்டு வந்தால் தான் யுத்தத்தை நடத்தமுடியும். என்ன செய்வது? உடனே காப்டன் பீல் என்ற சேனேத்தலேவன் சில ஆட்களேக் கூட் டிக்கொண்டு வெடிமருந்துப் பெட்டியிருந்த இடத்துக்குப் போனுன். ரஷிய குண்டுகள் பறந்துகொண்டிருந்த போதிலும் அதைப்போ

ருள் படுத்தாமல் ஓடி வெடிமருந்துப் பெட்டிகளைக் கொண்டுவந்தார்கள். பீரங்கிகள் இருந்த இடத்துக்கு வந்தாய்விட்டது. பெட்டியை உடைத்து மருந்தை எடுத்துக்கொண்டிருக்கிற சமயம்.

அப்பொழுது அந்த இடத்தில் ஒரு குண்டுவந்து விழுந்தது. சிறிது நேரம் சென்றால் அந்த குண்டு வெடித்துவிடும். வெடித்தால் மருந்துப்பெட்டிகள் முழுவதும் தீப்பற்றி வெடித்துப் போய் விடும். எல்லோரும் இறந்து சாம்பலாய் விடுவார்கள்.


அங்கிருந்த போர்வீரர்கள் எல்லோரும் இந்த குண்டைப் பார்த்தார்கள். அப்படியே பிரமித்துப் போய் மூளைக்கு ஓட்டமில்லாமல் கல்தூண் போல் நின்றுவிட்டார்கள்.

காப்டன் பீல் அந்த குண்டைப் பார்த்தான். உயிரை விடுவதைப் பற்றி அவனுக்கு பயமில்லை. அந்த வீரம் மட்டும் இருந்தால்போதுமா? தன் மூளையைக் கலங்க விட்டுவிட்டால் வீரத்தால் என்ன பயன்? அரை நிமிஷம் கூட திகைத்து நிற்கவில்லை. எல்லோரையும் இடித்துத் தள்ளிக் கொண்டு அந்த குண்டின் சமீபத்தில் போனன். குண்டின் திரி எரிந்துகொண்டிருக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் குண்டிலுள்ள மருந்தில் தீ பட்டுவிடும். அந்த குண்டைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே ஓடினன்.



அப்பொழுது தான் மற்றவர்களுக்கு பிரக்ஞை வந்தது. "அய்யோ, திரி எரிகிறதே! இப்பொழுது வெடித்துவிடப் போகிறதே. காப்டன் சாகப்போகிறனே!" என்று அலறினர்கள். ஆனல் காப்டன் பதறவில்லை. சற்றுதூரத்திற் கப்பாலிருந்த வேலிவரை ஓடிப்போய் அந்த குண்டைத்தூக்கி தூரே எறிந்தான்.

அடுத்த நிமிஷமே அந்த குண்டு வெடித்தது. இன்னும் சிறிது தாமதம் ஏற்பட்டிருந்தால் காப்டன் இறந்துபோயிருப்பான். ஆனல் அவனுடைய வீரமும், மன அமைதியும் அவனையும் மற்றவர்களையும் காப்பாற்றியது.



காட்டன் பீல்ட் தொழிற்சாலைகளின் தற்கால நிலைமை.

காட்டன் பீல்ட்

(நா. சிவராமன்.)

இந்தியர்கள் உடுக்க உடையில்லாமல் திண்டாடக்கூடாது என்பதற்காக இங்கிலாந்தில் ஏராளமான ஜவுளிகள் உற்பத்தி செய்து அனுப்புகிறார்கள். லங்காஷயர் என்ற ஜில்லாவில்தான் இந்தத் தொழில் பெரும்பாலும் நடைபெறுகிறது. இந்த ஜில்லாவின் வளர்ச்சியைப் பற்றின கதையை நாம் இங்கு விவரிக்கத் தேவையில்லை. இதன் வளர்ச்சி இந்திய நெசவுத் தொழிலின் வீழ்ச்சியாக இருந்தது என்று மட்டும் கூறினால் போதுமானது.


இந்த ஜில்லாவில் தர்காலம் பல மில்கள் வேலை செய்யாமல் உறங்குகின்றன. இதறகுக் காரணம் உலகத்திலுள்ள வர்த்தக மந்தமே என்பார் சிலர். ஜப்பான் போட்டி என்பார் சிலர். ஆனால் அந்த ஜில்லா வாசிகளுடன்பழகி அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி விசாரிப்பதே தொழிலாகவுள்ள ஒருவர் "ரெவ்யூ ஆப் ரெவ்யூஸ்" என்ற பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார்.

"காட்டன் பீல்ட்" என்ற ஒரு பட்டணத்தின் நிலைமையை வர்ணிக்கிறார். காட்டன் பீல்ட் என்றால் பருத்தித் தோட்டம் என்று பொருள். இங்கிலாந்தில் பருத்தி விளையும் என்றும் ஒருவரும் பிரமித்துவிட வேண்டாம். அதன் தற்கால நிலைமையைப் பற்றி அந்த வியாசத்தில் எழுதியிருப்பதின் சாராம்சத்தைக் கீழே தருகிறோம்.

"காட்டன் பீல்ட்" நெசவுத்தொழிலைக் கொண்டு ஜீவனம் செய்யும் ஒரு பட்டணம். இந்திய வர்த்தகத்தைக் கொண்டே இப்பட்டணம் உண்டா யிருக்கிறது. பகிஷ்காரம் ஆரம்பிப்பதற்கு முன் இந்தியாவுக்குத் தேவையான ஜவுளிகளில் பெரும்பாகம் இந்த பட்டணத்தில் தயாரிக்கப்பட்டது. மாதா மாதம் கப்பல் கப்பலாக தோத்திகளும் பீஸ்களும் அனுப்பப்பட்டன. சுமார் 20 மில்கள் இவ் வேலையில் ஈடுபட்டிருந்தன. பல வருடங்கள் இப்படியே நடந்து வந்தது. அங்குள்ளவர்கள் எல்லோரும் பணக்காரர்களாயிருந்தார்கள். தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் சொந்த வீடுகள் வைத்துக்கொண்டிருந்தார்கள். உண்டியல் கடைக்காரர்களும் சில்லரை வர்த்தகர்களும் இங்கு வந்து கூடிக் கொண்டே இருந்தார்கள்.

1921-ம் வருஷத்துக்குப் பின் லங்காஷயரில் பல பட்டணங்கள் படுக்க ஆரம்பித்தன. ஆனால் இந்த வர்த்தக மந்தம் "பருத்தித் தோட்டத்தை" பாதிக்கவில்லை.

ஆனல் அந்தோ! இங்கிலாந்தில் செய்த ஜவுளியை பஹிஷ்கரிப்பதென்று ஒருநாள் இந்திய தேசீய காங்கிரஸ் தீர்மானித்தது;



பம்பாயில் காங்கிரஸ் ஆவேசம் கொண்டவர்கள் நடு ரஸ்தாவில் புழுதியில் குறுக்கே படுத்துக் கொண்டு பிரிட்டிஷ் துணியை ஏற்றிச் செல்லும் வண்டிகள் எங்கள்மீது ஏறித்தான் போகவேண்டும் என்று ஹடம் செய்தார்கள். சட்ட மறுப்பு ஆரம்பமாயிற்று. "காட்டன் பீல்" டின் கதி அதோ கதி யாயிற்று. அன்று ஆரம்பித்தது காட்டன் பீல்டின் நாசகாலம்; ஒன்றன்பின் ஒன்ருக மில்களெல்லாம் மூடப்பட்டன; வர்த்தகக் கம்பெனிகள் பாப்பராயின; வீதிகளிலும் சந்திகளிலும் வேலையில்லாத் தொழிலாளரின் கூட்டம்.

"காட்டன் பீட்டில்" வேறு ஒரு தொழிலும் கிடையாது. வேறு வெளிநாடுகளுக்குப் போகலாம் என்ருலோ பிரிட்டிஷ்

ஏகாதிபத்தியத்திலுள்ள இதர நாடுகள் யாருக்கும் இடம்கொடுப்பதில்லை. வேலையில்லாதாருக்கு சர்க்காரிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுத்து வந்ததால் சற்று சவுகரியமாக இருந்தது. 1931-ல் வேலையில்லாதார் உதவி விஷயமாக சர்க்கார் புது விதிகள் ஏற்படுத்தினார்கள். அதன் பிறகு சங்கடம் பதின்மடங்கு அதிகமாயிற்று.

தொழிலாளர் கிளர்ச்சியும் பொதுவுடமைப் பிரசாரமும் இங்குதான் அதிகமாகப் பரவியது. காட்டன் பீல்டுக்கு சிறிய மாஸ்கோ என்ற பெயர் வழங்கலாயிற்று. (மாஸ்கோ என்பது போல்ஷிவிக் ரஷியாவின் தலைநகரம்.)

20 மில்கள் வேலை செய்த இடத்தில் 7 மில்கள்கூட சரியாய் வேலை செய்யவில்லை. மில்களில் பலர் பங்கு போட்டிருந்தார்கள். 100-க்கு 35, 40 என்று லாபம் கிடைத்த காலத்தில் 100 ரூபாய் பங்கு 400 ரூபாயாக விற்றது. அந்த நிலைமை மாறி, 400 ரூபாய் பங்குக்கு இரண்டணாக்கூட கிடைக்காது என்ற காலம் வந்தது. பல குடும்பங்கள் நாசமாயின.




காட்டன் பீல்டும் இது போன்ற மற்ற லங்காஷயர் பட்டணங்களும் இருந்த இடம் தெரியாமலே போய்விடுமென்று சொல்லலாம். ஒரு காலத்தில் இந்தப்பட்டணம் ஏற்படாமல் புல்லும் முள்ளும் முளைத்துக்கொண்டிருந்தது. மறுபடியும் காட்டன் பீல்ட் தெருக்களில் ஆளில்லாமல் புல் முளைக்கத்தான் போகிறது.

பள்ளிக்கூடங்களில் முன்னிருந்த கூட்டத்தில்பாதிகூட இல்லை இப்பொழுது. மதக்கோவிலில் ஞான ஸ்னானம் செய்விக்கும் குழந்தைகள் 192-ல் இருந்ததில் 4இல் ஒரு பங்குகூட இல்லை. ஒவ்வொரு தெருவிலும் குறைந்தது 4 வீடாவது பாழாய்க் கிடக்கிறது. விலைக்கோ வாடகைக்கோ வாங்குகிறவர்கள்கிடையாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குடும்பம் எடுபட்டுப் போகிறது. லங்காஷயருக்கு இனிமேல் எவ்வளவு நல்ல காலம் வந்தாலும் பழயசெழிப்பு இருக்கப் போவதில்லை. காட்டன் பீல்டில் 20 மில்கள் இருந்த இடத்தில் 5 மில்கள்கூட வேலை செய்யப் போவதில்லை.

நெசவு தொழில் செய்தவர்கள் வேறு எந்தத் தொழிலுக்கும் எளிதில் போய்விட மாட்டார்களென்பது பிரசித்தம். இத்தொழிலைக்கொண்டு முன்னுக்குவந்த ஒரு பட்டணம் வேறு ஏதாவது தொழிலில் இறங்கும்படி நேரிட்டால் அதைப்போல அதன் மனதை உறுத்தக்கூடிய ஆபத்து வேறு எதுவுமில்லை."

* * *



பருத்திச்செடி எப்படியிருக்குமென்று தெரியாமல் கம்பிளி உண்டாகும் செடி யென்று சொல்லிக்கொள்ளும் இங்கிலாந்தில் பருத்தித் தோட்டம் என்று ஒரு பட்டணம் ஏற்பட்டதும், அங்கிருந்து இந்தியாவுக்கே ஜவுளிகள் அனுப்புவதும் சற்று தமாஷான விஷயம் தான். ஆனல் இதில் நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுளது.

இந்தியாவில் பல மாகாணங்கள் உண்மையிலேயே பருத்தித் தோட்டங்கள். ஜனத்தொகையில் ஒரு பெரும்பாகம் நெசவுத்தொழிலையும் பருத்தி சாகுபடியையும் கொண்டு உயிர் வாழ்கிறது. இந்நாட்டுக்கு வேண்டிய ஜவுளியை வெளி நாடுகளிலிருந்து வரவழைப்பது மிகவும் கேவலமான நிலைமை. அன்னிய நாடுகளிலிருந்து ஜவுளி இறக்குமதியாவதைக் குறைக்க வேண்டுமென்று நாம் எதிர் வரிபோட்டால் உடனே ஜப்பானும் பிரிட்டனும் ஆர்ப்பாட்டம் செய்கின்றன.

எப்படியாவது தம்நாட்டு ஜவுளிகளை இங்குவந்து புகுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் ஜப்பானிய முதலாளிகளும் பிரிட்டிஷ் முதலாளிகளும் இங்கு வந்திருக்கிறார்கள்.

இந்திய மில் முதலாளிகள் தமது மூலதனத்துக்குப் போதிய வட்டி கிடைப்பதாயிருந்தால், தேசத்தின் நன்மையை விலைக்கு விற்கத் தயங்க மாட்டார்கள்.

1930—31ல் தங்கள் துணிகளுக்கு ஆதரவு வேண்டும் என்பதற்காக இந்தியாவிலுள்ள அநேக மில்காரர், காங்கிரசுடன் ஒப்பந்தம் செய்தார்கள். அவர்கள் தேசாபிமானிகளாய் இருந்தால்

ஒப்பந்தப்படி நடந்திருக்க வேண்டுமல்லவா? 1932ல் காங்கிரசை சட்ட விரோதமான சபையென்று சர்க்கார் விளம்பரப்படுத்தவே, இந்த மில்காரர் ஒப்பந்தங்களை மீறி விட்டார்கள். அது மட்டுமா? போலிக் கதர் செய்து கதரை அழிக்கவும் துணிந்தார்கள். மில் காரர்களின் இந்த நடத்தையை சமீபத்தில் பண்டித ஜவார்லால் பலமாய் கண்டித்தார்.

இது முதலாளிகளின் இயற்கை குணம். இந்தியக் கடலோர கப்பல் வர்த்தகத்தை இந்தியருக்கே ஒதுக்கி வைக்கும்படி சட்டம் இயற்றவேண்டுமென்று ஓயாமல் கூச்சலிட்டுக் கொண்டிருந்த சில இந்தியக்கப்பல் கம்பெனியார்கள், தாமாக பிரிட்டிஷ் கம்பெனிக ளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இப்பொழுது மௌனமாக இருக்கவில்லையா? ஆகையால் தமது லாபத்தை மட்டும்தான் மில் காரர்கள் கவனிப்பார்கள்.

பருத்தி விளைவிக்கும் நிலச் சுவான்களிடையே போதிய கட்டுப் பாடும் வர்த்தக முறைப் பழக்கமும் கிடையாது. ஆகையால் யாரா வது தமது பருத்தியை வாங்கிக் கொள்வதாகக் கூறினல் அதோடு திருப்தியடைந்து விடுவார்கள்.

* * *

கடைசியாக நடுத்தெருவில் ஆண்டியாய் நிற்பது யார்? கைத் தறி நெசவுக்காரர்கள். இவர்கள் கதி என்ன? காட்டன் பீல்டில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலையில்லையென்றால் சர்க்காரிலிருந்து சிறிது உதவிப்பணமாவது கிடைக்கும். அவர்களுக்குள் போதிய கல்வியும் பயிற்சியும் இருப்பதால் வேறு தொழில்களிலாவது பிர வேசிக்க முடியும். நம் நாட்டு தறிகாரர்களோ வாயில்லாப் பூச்சி கள். செங்குந்தர் மகாநாடென்றும், சாலியர் மகாநாடென்றும், சௌராஷ்டிரர் மகாநாடென்றும் ஆர்ப்பாட்டம் செய்பவர்கள், தமது பெயருக்குப் பின்னல் என்ன பட்டப்பெயர் போட்டுக் கொள்வதென்றும் ஜாதியின் பெயரால் சட்டசபைக்குப் போக வேண்டுமென்றும் பேசுகிறார்களே ஒழிய, தொழில்முறைகளில் கட்டுப்பாடும் கூட்டுறவும் ஏற்படுத்த முயற்சிசெய்வது கிடையாது. தமது வகுப்பு ஏழைகளின் வர்த்தக முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவதில்லை.

இவர்களிடையே கட்டுப்பாடு இருந்தால், சரியான ஸ்தாபனங் களை அமைத்துக்கொண்டு கிளர்ச்சி செய்து கைத்தறிகள் விறகுக் கட்டைகளாகாமல் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

மில்கள் நூல்நூற்க மட்டும் செய்யலாமென்றும் நெசவுத் தொழிலை கைத்தறிகளுக்கு ஒதுக்கிவிட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்வதுதான் இந்த தேசத்தின் நிலைமைக்குப் பொருத்தமான தாகும். அது முடியாமற் போகுமாயின் மில்கள் இனிமேல் அதிக மான தறிகள் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் நெசவைச் சுருக்கவேண்டுமென்றுமாவது ஒப்பந்தம் செய்யவேண்டும். இவ் வாறு செய்ய மில் முதலாளிகள் இணங்காவிடில், மில் துணிகளை யும் அன்னியநாட்டு ஜவுளியைப்போலவே நாம் பாளிக்கவேண்டும்.

இவ்விஷயம் நம் மாகாண வாசிகளுக்கு மிகவும் முக்கிய மானது. மில் நெசவைக்கொண்டு ஜீவனம் செய்கிறவர்களைவிட கைத்தறியைக் கொண்டு ஜீவனம் செய்பவர்கள்தான் அதிகம். 1931 ல் மில்களில் இருந்த தறிகள் சுமார் 185 ஆயிரம். சராசரி 4 தறிகளை ஒருவன் கவனித்துக்கொள்வதாக கணக்கிட்டால் மில் தறிகளைக் கொண்டு பிழைப்பவர்கள் சுமார் 50 ஆயிரம் தொழி லாளிகள். இது இந்தியா முழுவதுக்கும் உள்ள கணக்கு. ஆனல் கைத்தறியைப் பார்த்தால் நம் மாகாணத்தில் மட்டும் சுமார் 300-ஆயிரம் தறிகள் இருக்கின்றன. இந்தியாவிலுள்ள மில்கள் எல் லாம் நெசவுத்தொழிலை நிறுத்தினல் இன்று சுமார் 50 ஆயிரம் தொழிலாளிகளுக்கு வேலையில்லாமல் போகலாம். இதற்குப் பதி லாக கைத்தறிகள் சுமார் 5 லக்ஷம் பேருக்கு வேலை கொடுக்கமுடி யும். கைத்தறிகளை அடியோடு ஒழித்தால் சென்னை மாகாணத்தில் மட்டும் சுமார் 3 லக்ஷம் தறிகளை மூடவேண்டும். இதற்குப் பதி லாக மில்கள் 20 ஆயிரம் பேருக்குக்கூட வேலை கொடுக்கமுடியாது.

* * * *

பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் ஜப்பான் பிரதிநிதிகளும் மில் முத லாளிகளுமாகச் சேர்ந்து சதிசெய்து தேசத்தின் பொதுநன்மையை நாசம் செய்யப்போகிறார்கள். ஜப்பான் தனது செயற்கைப்பட்டு தினுசுகளையும் பிரிட்டன் தனது கிளாஸ்கோ மல் பீஸுகளையும் இங்கு கொண்டுவந்து தள்ளும். பருத்தி உற்பத்தி செய்யும் விவ சாயிகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு சிலர் ஜப்பானின் அதிர் வேட்டுகளுக்கு பயந்து, அவர்களுடைய ஆசை வார்த்தைகளில் மயங்கி ஜப்பானியத் தீர்வையைக் குறைக்க இணங்குவார்கள். வேறு நாடுகளை நம்பி எத்தனைநாள் காலம் தள்ளமுடியும்? செயற் கைப்பட்டிலும் நைஸ் வேஷ்டியிலும் ஜனங்களுக்கு மோகம் வந்து விட்டால் மோட்டாத்துணிக்கு தேவை குறையும். அப்பொழுது பம்பாய் மில்களும் ஜப்பானும் வேறு நாடுகளிலிருந்து பருத்தி வாங்கி "நைஸ்" துணிகள் நெய்வார்கள். விவசாயிகள் அரசனை நம்பிப் புருஷனை விட்டவர்களாய் நிற்பார்கள்.

பருத்தி நிலசுவான்கள் புத்திசாலிகளாயிருந்தால் மட்டமான பஞ்சு உற்பத்தி செய்வதைக் குறைக்கவேண்டும். நைஸ் நூல் நூற்பதற்கு லாயக்கான பருத்தியை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். எந்த வெளிநாட்டு ஜவுளியும் இங்கு வரவிடாமல் தடுக்க வேண்டும்.

சர்க்கார் தனது கடமையைச் செய்வதாயிருந்தால், இந்தியாவின் நன்மையை கவனிப்பதாயிருந்தால் வெளிநாட்டுத்துணி இங்கு வருவதை முற்றிலும் தடுக்கவேண்டும். இந்திய மில்கள் இனிமேல் தறிகளை அதிகமாக்காதபடி சட்டம் செய்யவேண்டும்.


“ஆல்” விருதியைப் போட்டு ஜாப்தாவைப் பெருக்குவானேன்? இந்தியாவுக்கு உண்மையான சுயராஜ்யம் வந்தாலொழிய இந்த “ஆல்” களை ஒழிக்கமுடியாது.



இன்ஸ்பெக்டர் வந்திருக்கும்போது உபாத்தியாயர் கேட்கிறார்:—அடே கிருஷ்ணா, மேட்டுக்கும் பள்ளத்திற்கும் ஒரு உதாரணம் கூறு.

கிருஷ்ணன்:—உங்கள் கன்னம் மேடு, இன்ஸ்பெக்டர் கன்னம் பள்ளம் ஸார்.

—என். சுப்பிரமணியம்,
கும்பகோணம்.



தகப்பனார்:—ஏண்டா குழந்தே! ஏன் இவ்வளவு கூச்சல் போட்டுகிறாய்? உனக்கென்ன நேர்ந்தது?

மகன்:—என்-என்-என் வாத்தியார் அப்பா ஆ-ஆ-ஆ (தேம்பித் தேம்பி அழுதுகொண்டு) ஒரு-ஒரு-வாரமாக அதிக வியாதியாய் இருந்தார். (அப்பால் பையனுக்குப் பேச நாவெழவில்லை, அதிகமாய் அழுகிறான்.)

தகப்பனார்:—ஏன் அப்பா உன் வாத்தியார் இறந்தா போய் விட்டார்?

மகன்:—இல்லை, அப்பா இல்லை; இன்று காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்டார்.

—எஸ். திருமலை, போரையாறு.

உபாத்தியாயர்:—"ஏண்டா மணி! இன்று இங்கிலிஷ் பரீக்ஷை எப்படி எழுதியிருக்கிறாய்?"

மணி:—"இன்னிக்கி நான் காப்பி அடிச்சேனோ, பொழச்சேனோ? இல்லாதபோனால் பரீக்ஷை ஊதவேண்டியதுதான், ஸார்."

உபாத்தியார்:—"காப்பி அடிச்சாயா? அயோக்யப் பயலே!"

மணி:—"இல்லை, ஸார். நியூ மீனாக்ஷி விலாஸ் காப்பி ஹோட்டலிலே பரீக்ஷை எழுதுவதற்கு முந்தி ஒரு முக்கால்கப் காப்பி அடிச்சேன்"

- என். கே. மூர்த்தி, கும்பகோணம்.

ஓர் பிச்சைக்காரன் தினசரி ஓர் செட்டியாரிடத்தில் காலணா வீதம் தர்மம் பெற்றுவந்தான். இதை ஒரு சிறுவன் கவனித்துக் கொண்டே வந்தான். ஒரு நாள்,

சிறுவன்:—சுவாமி! தாங்கள் செட்டியாரிடம் எந்த வேளையில் சென்றாலும், தவறாமல் காசு அடித்துக்கொண்டு வந்துவிடுகி

றீர்களே. இன்னும் எத்தனையோ கடன்காரர்கள் தன்னிடம் காத்துக்கொண்டிருக்க உங்களுக்கு மட்டும் அட்டியின்றிச் செட்டியார் கொடுத்துவிடுவதின் மர்மம் என்ன, தயவுசெய்து கூறுங்கள்.

பிச்சைக்காரன்:—தம்பி! இது என்னிடத்தில் செட்டியார் போன ஜென்மத்தில் வாங்கிய கடனாகும். அப்படியிருந்தும் அந்தப் பாவி மொத்தமாய்க் கொடுப்பதில்லை. ஆதலால் நாள்தோறும் இந்தமாதிரிக் காலணு வீதம் வசூல் செய்யவேண்டியிருக்கிறது. என் செய்வது?

—வி. சீனிவாசன், பழனி.

தந்தை:—அடே முருகா, உன் தம்பி ராமன் எப்படி சிலேட்டை உடைத்தான்?

முருகன் கையிலிருந்த சிலேட்டைக் கீழே போட, அது சுக்கல் சுக்கலாக உடைந்தது.

தந்தை:—(கோபத்துடன் முருகன் முதுகில் அறைந்து,) ஏனடா சிலேட்டைக் கீழே போட்டு உடைத்தாய்?

முருகன்:—(அழுதுகொண்டே) நீ தம்பி எப்படி சிலேட்டை உடைத்தானென்று கேட்டாய். அதைத்தான் நான் காட்டினேன்.

—எஸ். ஆர். சாமி, பாலக்காடு.

ஜெயில் விஸிட்டர்:—(வார்டரைப் பார்த்து) ஏய்! எங்கே 7 நெ. திருடன்? ஓடிவிட்டானா?

வார்டர்:—தெரியாதுங்க, போன கழுதையைப்பற்றி நீங்க கவலைப் படாதிங்க ஸார்.

—எம். ஆர். கே. திருவையாறு

நடிகர் கஜபதி பாகவதரைப் பார்த்து ஜனங்கள்:—நீங்கள் பாடும் இந்தப் பாட்டு முன்போல அவ்வளவு ரசமாகயில்லை.

பாகவதர்:—நான் இந்தப் பாட்டை நேற்றுத்தான் கிராமபோன் கம்பெனிக்கு விற்றேன்.

—எம். பி. விமலன், விருதுநகர்.

தகப்பன்:—நான் எவ்வளவு நேரமாய் கூப்பிட்டும் நீ பதிலளிக்கவில்லை.

மகன்:—பெரியோர் சொல்லுக்கு பதிலளிக்கக் கூடாதென வாத்தியார் சொன்னதால் நான் பேசாமலிருந்தேன்.

—எம். எஜட். பாஷா

பாட்டி:—பையா, நான் ஒருவள் இருக்கிறேனென்று சட்டை செய்கிறாயா ?

பையன்:—நான் உன்னை சட்டை செய்வதற்கு நீ என்ன துணியா பாட்டி ?

* —ஆர். பாலசுப்பிரமணியன், பொறையாறு.

(1) வக்கீல்:—(தன் கட்சிக்காரனைப் பார்த்து) உன் கணக்கைப் பிரதிவாதியினிடம் காட்டினையா ?

கட்சிக்காரன்:—காட்டினேன்.

வக்கீல்:—பிரதிவாதி என்ன சொன்னான்.

கட்சிக்காரன்:—குட்டிச் சுவரில் முட்டிக் கொள்ள சொன்னான்.

வக்கீல்:—என்ன செய்தாய் ?

கட்சிக்காரன்:—நான் தான் தங்களிடம் வந்திருக்கேனே.

—எஸ். திருமலை, பொறையாறு.

மானேஜர்:—ஏன் இன்று லேட் ?

குமாஸ்தா:—"இன்று வீட்டில் நான் சமையல் செய்ய வேண்டி இருந்தது."

மானேஜர்:—"ஏன். உமது மனைவி என்ன செய்து கொண்டிருந்தாள் ?"

குமாஸ்தா:—"காந்தி மலரை" வாசித்துக் கொண்டிருந்தாள்."

மானேஜர்:—"அப்படியானால், நீ இன்று லேட் இல்லை. அந்த 'காந்தி'யை நாளைக்கு கொண்டுவா, நான் பார்க்க வேண்டும்!"

—ஏ. எஸ். சிவராம் புதுச்சேரி.

---

* பரிசு பெற்றவர்.

வக்கீல் "கள்ளன்"

("கிருமி" எழுதியது)

தற்காலத்தில் வக்கீல்களுக்கு மற்ருரு தொழிலும் ஏற்பட்டிருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். அவர்களிருக்குமிடங்களில், நாடகச் சங்கங்கள் (டிரமாடிக் கிளப்புகளும், அமெட்யூர் டிராமாடிக் அஸோஸியேஷன்களும) நாக்கொடை போல் கிளம்பி விட்டன.


வக்கீல் சுந்தரேசய்யரும் கள்ளன்பார்ட்டு போடுவதில் மிகத் தேர்ந்தவர். சில நாட்களுக்கு முன் "சதாரம்' நாடகத்தில் அவருடைய ஆட்டத்தைக் கண்டு கைதட்டாதவர்கள் எவருமில்லை. அவர் அதுவரை நடத்திய கேசுகளில் கூட அவருக்கு அந்த மாதிரி "அப்ளாஸ்" (கைதட்டல்) கிடைத்ததேயில்லை. இதெல்லாம் போதாதென்று அன்று அந்நாடகத்தை ஆதரிக்க வந்த திவால் பகதூர் கோமாளிக் குரங்கநாத் அவர்களும் ஒரு தங்க மெடல் ஒன்றை அவர் கழுத்தில் மாட்டி விட்டார். நாடகம் முடிந்தபின், அய்யரும் தன் தங்க மெடலை மாட்டிக் கொண்டு வெகு கர்வத்துடன் வீட்டிற்குத் திரும்பினர்.

அக்கோலத்தைக் கண்ட அவர் மனைவி கமலாவும், அந்த மெடலைப் பார்த்து தன் பற்களை யெல்லாம் காண்பித்தாள். தன் கணவனைப் பார்த்து, "என்னை மாத்திரம் ஒரு நாள் கூட கூட்டிக் கொண்டு போகமாட்டேங்கரேள். நீங்க மாத்திரம் போய் நாடகம் ஆடிட்டுவந்துடரேள். நீங்க கள்ள பார்ட்டு ஆடரதைப் பார்க்க ரொம்ப ஆசையாயிருக்கு" என்ருள். அதற்கு சுந்தரேசய்யர், "நான் நாடகம் ஆடப்போனல் நீயும் வரணுமோ. நீங்கள் எல்லாம் நாடகத்திற்குப் போனல் அவ்வளவுதான். சீக்கிரத்தில் கெட்டுப் போய்டுவேள். புருஷாளுக்கென்ன எங்கேயானலும் போகலாம்" என்று கடிந்து பதில் சொன்னர்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, சுந்தரேசய்யர் பக்கத்து ஊரில் தங்கள் கிளப்புக்காரர்கள் ஒரு நாடகம் போடப் போவதாயும், அதற்கு தான் போக வேண்டுமென்றும் தன் மனைவியிடம் கூறினர். அதைக் கேட்ட கமலா "இந்தத் தடவையாவது என்னை கூட்டிண்டு போங்களேன், எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கு" என்று அவரை மன்ருடிக் கேட்டாள். அய்யர் அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல், "நான் தான் முன்னயே சொல்லிருக்கேனே. பொம்மநாட்டிகள் எல்லாம் டிராமாவுக்குப் போகப்படாதுன்னு" என்று மறுத்துச் சொல்லிவிட்டு புறப்பட்டார்.

ஒரு நாளாயிற்று. இரண்டு நாளுமாயிற்று. கணவனைக் காணோம். கமலாவுக்குப் பொழுதே போகவில்லை. ஒரு நாள் கழிவது ஒரு யுகம் போலிருந்தது. ஆதலால் இரண்டாவது நாள் இரவு சுமார் 7-மணிக்கே தன் ராப் போஜனத்தை முடித்துக் கொண்டு நித்திரைக்குச் சென்றாள். சில நிமிஷங்களுக் கெல்லாம் யாரோ அவள் கழுத்தில் கைபோட்டு தன் கொடியைப் பிடித்து இழுப்பது போலிருந்தது. திடீரென விழித்துக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்திருந்து பார்த்தாள். அவ்வளவு தான், அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. எதிரில் கொட்டைப் பானைக் கரிபோல் ஒரு மனிதன் தலையில் பெரிய முண்டாசுடனும், நீண்ட மீசைகளுடனும் கையில் பளபள வென்று ஒரு அரிவாளுடன் நின்றான். கமலாவுக்கு கை கால்கள் நடுக்க மெடுத்தன. வாய் குளற ஆரம்பித்தது. "ஐயோ, கள்ளன், கள்ளன்" என்று அலறிக் கொண்டு வாசற் பக்கம் ஓடினாள். கள்ளனும் அவளைத் துரத்திக் கொண்டு ஓடினான். அதற்குள், அவள் கூச்சலைக் கேட்ட அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் அங்கு கூடி திருடனைப் பிடித்தார்கள். அவனை அடிக்கவும் ஆரம்பித்தார்கள். அடிபொறுக்க முடியாமல், திருடன் "என் ஐயா என்னை அடிக்கிறீர்கள்? என்னுடைய வீட்டில் நான் திருடினால் உங்களுக் கென்ன? இவளும் என் மனைவிதானே" என்று கூறினான்.

இதைக் கேட்ட ஜனங்களுக்கு இன்னம் அதிகமாய் கோபம் வந்தது. "திருட்டுப் பயல் திருட வந்ததுமல்லாமல், வக்கீல் மனைவியையும் தன் மனைவி என்று சொல்லும்படி யாச்சா?" என்று சொல்லி பலமாய் அடித்தார்கள். அடித்த அடியில் திருடனின் முண்டாசும், பொய் மீசையும் பறந்தன. முகத்தில் பூசிய கரியும் அழிந்தது. "நான் சொல்லுவது பொய் யென்றால் என் முகத்தைப் பாருங்களேன்" என்று 'அவன்' கத்தினான். ஒருவன் முகத்திற்கு நேராக விளக்கைப் பிடித்தான். முகத்தைப் பார்த்ததும், அடித்தவர்கள் எல்லாரும்



(344-ம் பக்கம் பார்க்க)

சுப்ரமணிய பாரதியார்

(பழனத்தான்)

"கேசவா, உம்மிடத்தில் ஒரு சிறு தவறு சொல்லிவிட்டேன். பாரதியாரை நமஸ்கரித்த என்னை, அவர் தூக்கி நிறுத்தியதும், யார் என்று கேட்டார். தமிழில் பதில் சொல்லி யிருக்கலாமே! இங்கிலீஷ் படித்த கர்வம் ஆளை எளிதிலே விட்டு விடுமா? நான், இங்கிலீஷ் பொழிய ஆரம்பித்தேன்.

"அடே, பாலு! வந்தவர் உனக்கு இணையாக இங்கிலீஷ் பொழிகிறாரடா! அவரிடம் நீ பேசு, எனக்கு வேலையில்லை" என்று உரக்கக்கத்தினார். அப்பொழுது தான், அவருடைய மனவேதனை எனக்கு ஒருவாறு அர்த்தமாயிற்று.

"ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு, இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேசவேண்டும்" என்று வருத்தக் குரலுடன் என்னைக் கேட்டார். எனக்கு அழுகை வந்து விட்டது. எனக்கு நேரே பதில் சொல்ல நா எழவில்லை.

அப்பொழுது அவர் பாடிய பாட்டு, "மறவன் பாட்டு" என்று பாடியிருக்கிறாரே, அது தான். அவர் பாட்டும் குரலும் என் உள்ளத்தைக்கவர்ந்தன. என் நினைப்பு என்னிடம் இல்லை. என்மனம் என்னை விட்டு அகன்றே போயிற்று எனலாம். அன்றைக்குத்தான் யோகம் என்பது இன்னதென்று கண்டேன். என்னுடைய மயக்கம் ஒருவாறு தெளிந்தது. எனது உள்ளப்பூரிப்பை, பாரதியார் கண்டு கொண்டார். நாட்டின் விடுதலையைப் பற்றி பேசத் துவக்கினார்.

"நாட்டின் விடுதலைக்கு முன், நரம்பின் விடுதலை வேண்டும்; நாவுக்கு விடுதலை வேண்டும். பாவுக்கு விடுதலை வேண்டும். பாஷைக்கு விடுதலை வேண்டும்." இவ்வாறு அடுக்கிக் கொண்டேபோனார். வெறும் சொல்லடுக்குக்காகச் சொன்னதல்லவென்று இப்பொழுது நன்றாக எனக்குப் புலனாகின்றது. விடுதலை என்ற சொல்லை நாட்டிற்கு உபயோகப்படுத்தி, நான் முதலிலே கேட்டது பாரதியாரிடம் தான். "தமிழுக்கும் உயர்வு உண்டு; தமிழனுக்கும் பெருமை உண்டு" என்று பாதியாரைப் பார்த்த பின்னர்தான், என் மன

தில் அழுத்தமாகப் பதிந்தது. வெறும் வந்தேமாதரக் கூச்சலிட்டு வந்த சிறு பிள்ளையான எனக்கு, பாரதியாரைக் கண்ட பின்னர், அபரிமிதமான உற்சாகம் வந்தது என்றால், கற்பனையே இல்லை.

"தேமதுரத் தமிழ்" ஓசையை, அன்று தான் நேரே, கண்டு அனுபவித்தேன். நான் எந்த உலகத்தில் இருந்தேன் என்பதை என்னால் அறியக்கூடவில்லை. தமிழுக்கு உயிரும் உருவமும் வலிமையும் பொலிவும் சுவையும் மேன்மையும் உண்டென்று அன்று தான் கண்டேன்.

"பாட்டு எப்படியிருக்கிறது?" என்று சாதாரணமனிதன் கேட்பது போல, பாரதியாரும் கேட்பாரோ என்று எண்ணினேன். பாட்டு நன்றாயிருக்கிறது என்று சொல்லவும் பயந்தேன். நான் இருந்த நிலைமையைப் பாரதியார் நன்றாக உணர்ந்து கொண்டார். இன்னும் சில பாட்டுகள் பாடினார். என் பாக்கியத்தை, நான் அளவிட்டுச் சொல்ல முடியாது.

கடல் மடை திறந்து விட்டது போல, ஓயாமல் பாட்டுகள் வந்து கொண்டேயிருந்தன. நானும் பரவசமானேன். பாரதியார் பாட்டையும் நிறுத்தினார். பிறகு, ஸ்னானம், சாப்பாடு—முடிந்தன.

பிற்பகலில், சுமார் நான்கு மணி அடித்திருக்கும். "வெளியே போவோம், வாரும்" என்றார் பாரதியார். வெளியே புறப்பட்டுப் போனோம்; சிறிது தூரத்துக்கெல்லாம், ஒரு வீட்டுக்குள் நுழைந்தோம். "பாரதி, வாரும்" என்று இனிய குரலில், ஒருவர் எங்களை வரவேற்றதைக் கேட்டேன். அந்த வீடு சீனிவாஸாச்சாரியார் இருந்த வீடு.

"இந்த நண்பர் அந்த முரடனைப் பார்க்க வேண்டுமாம்" என்றார் பாரதியார். முரடன் என்று குறிப்பிட்டது அரவிந்தரை என்று தெரிந்து கொண்டேன். எவ்வளவோ கஷ்டங்களுக்கு உள்ளாகியும், புதுச்சேரிக்கு வந்து அடைக்கலம் புகுந்தும், இந்த தேசபக்தர்களின் கேலியும் நகைப்பும் ஒழிந்தபாடில்லை. "போய்க் கேட்போம்; பிறகு நடக்கிறது போல நடக்கட்டும்" என்றார் சீனிவாஸாச்சாரியார்.

அரவிந்தரின் முக்கிய குணம் முரட்டுத்தனம் என்று இவர்களுடைய பேச்சினின்றும் வெளியாயிற்று. "அவ்வளவு கஷ்டமாயிருந்தால் வேண்டாம்" என்றேன். "இந்த புத்தி உமக்கு ஊரிலே

யே வந்திருந்தால், புதுச்சேரிக்கு வந்த பணம் மீதமாயிருக்குமே" என்று சிரித்துக் கொண்டு, பாரதியார் சொன்னார். எனக்கு முன்னும் ஓடவில்லை; பின்னும் ஓடவில்லை. மௌனம் தான் எல்லாக் காரியங்களுக்கும் சாதகம் என்று எண்ணி, சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

சற்று நேரம் பொறுத்து, மூன்று பேரும் வீட்டை விட்டு வெளியேறினோம். பாரதியாரிடம் முக்கியமான குணமொன்றைக் கவனித்தேன். பேசினால் பேசிக்கொண்டிருப்பார். பேச்சு ஓய்ந்த தானால், உடனே பாட்டில் விழுந்து விடுவார். மௌனம் அபூர்வம். யார் பக்கத்திலே இருக்கிறார்கள் என்ற நினைப்பே அவரிடம் இருக்காது போலிருக்கிறது. நடக்கும் போதும் பாட்டுத்தான்.

போய்க்கொண்டிருக்கும் பொழுது, பலர், பயபக்தியுடன் நின்று கொண்டு பாரதியாரை நமஸ்கரிப்பதைக் கண்டேன். நமஸ்கரித்தவர்கள் யாவருக்கும் தமது இரண்டு கைகளையும் நன்றாய்ப் பொருத்தி இசைத்து, முகத்துக்குக் கொண்டு போய், பாரதியார் கும்பிடுவார். நடந்து கொண்டே கும்பிடுவதில்லை. நின்றுவிடுவார். சில சமயங்களில், சிலரிடம், சிறிது நேரம் பேசவும் செய்வார். ஆனால் பேசினவர்கள் யாவரும் பாரதியாருக்குக் காண்பித்த மரியாதை அளவு கடந்ததாயிருந்தது.

ஏழை பாரதியாருக்கு எங்கிருந்து இவ்வளவு மரியாதை வந்தது என்பது எனக்கு அப்பொழுது சிறிதும் விளங்கவேயில்லை. பாரதியாரின் பாட்டின் மகிமையை அவர்கள் தெரிந்து கொண்டு, கும்பிட்டார்களா என்பது சந்தேகம். ஆனால், புதுச்சேரியில், பலருக்கு பாரதியார் குருவாக விளங்கினார் என்பது உண்மை.

சீமான் சங்கர செட்டியார் வீட்டுக்குப் போனோம். என்னைத் திண்ணையில் உட்கார வைத்துவிட்டு, அவர்களிருவரும் உள்ளே போனார்கள். போய் வருவதற்கு, கொஞ்சம் நாழிகையாயிருக்கும் போலிருக்கிறது. நான் திண்ணையில் படுத்துக்கொண்டு, தூங்கிப் போனேன். அவ்வளவு ஆவலுடன் புதுச்சேரிக்குப் போன எனக்கு, அந்தச்சமயம் தூக்கம் வந்ததன் காரணம் இன்னதென்று இன்றைக்கும் எனக்குத் தெரியவில்லை. பாரதியார் என்னைத் தட்டி எழுப்பினது தான் எனக்குத் தெரியும். செட்டியாரின் வீட்டு மூன்றாவது மாடிக்குப் போனோம்.

ஒரு மூலையில், ஒதுக்குப்புறத்தில் அரவிந்தர் தன்னந் தனியே உட்கார்ந்து கொண்டிருந்தார். அரவிந்தரை நமஸ்கரித்துவிட்டு,

நாங்களும் உட்கார்ந்தோம். பேச்சை யாரும் துவக்கவில்லை. பாரதியார் சட்டென்று எனக்குத் துணைபுரிந்தார்.

"தமிழ் நாட்டு தேசபக்தன்" என்று என்னை பாரதியார் அரவிந்தருக்கு, அறிமுகம் செய்து வைத்தார். "ஸர்க்காருக்கு மனுப் பண்ணிக்கொள்ள அவருக்குத் தெரியுமல்லவா?" என்று வங்காளி இளைஞர்களில் ஒருவன் சொல்லிவிட்டு சிரித்தான். பாரதியாரைத் தவிர, மற்றெல்லாரும் சிரித்தார்கள். நான் அசட்டுச் சிரிப்பு சிரித்தேன். பாரதியாரின் முகத்தில் ஈ ஆடவில்லை. "அடிமைகளிலே, வங்காளி உயர்த்தியா, தமிழர் தாழ்த்தியா" என்று பாரதியார் படீரென்று போட்டார். தலை நிமிர்ந்து கொள்ளுவதற்கு, எனக்கு தைரியம் உண்டாயிற்று.

பாரதியார் உயரத்தில் பெரியவர்; அரவிந்தர் உருவத்தில் சிறியவர். பாரதியார் ஸங்கோசி. அரவிந்தரும் ஸங்கோசிதான். பாரதியாரின் சொற்கள் முல்லை மலரின் தாக்கும் மணங்கொண்டவை. அரவிந்தரின் சொற்கள், செந்தாமரை மலரில் பரந்து விரிந்த அழகைத் தாங்கியவை. இருவருக்கும் புதிய புதிய கருத்துக்களும் சித்திரச்சொற்களும திடீர் திடீரென்று புதை வாணங்களைப்போல வெளித்தோன்றும், பாரதியார் ஆகாயத்தில் ஓடுவதை எட்டிப் பிடித்து வந்ததாக, சொற்களைப் பொழிவார். அரவிந்தர் பூமியைத் துளைத்துத் தோண்டி, பொக்கிஷத்தைக் கொணர்ந்ததாகப் பேசுவார். இருவரின் சொற்களிலும், கவிச்சுவை நிறைந்திருக்கும். பாரதியாரைப் போலவே, அரவிந்தரும் கலகல வென்று விடாமல் சிரிப்பார்."இத்தோடு பாரதியாரை,நான் சந்தித்த கதையை நிறுத்திக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக, பாரதியாரின் வாழ்க்கை வரலாறைச் சொல்லுகிறேன். கேசவா ! என்ன சொல்லுகிறீர்" என்றேன். பூரண சம்மதம் என்றார் நண்பர்.

340-ம் பக்கத் தொடர்ச்சி

பிரமித்துப் போனார்கள். திருடன் "கமலா, கமலா என்னை உனக்குத் தெரியவில்லையா ?" என்று அழுது கூச்சல் போட்டான்.

கமலாவும் மறற ஜனங்களும் தங்கள் எதிரில் வக்கீல் சுந்தரேசய்யர் நிற்பதைக் கண்டார்கள். கமலா ஒரே ஓட்டமாய் ஓடி தன் புருஷனைக் கட்டிக் கொண்டு "நன்னாருக்கு போரும், போரும். உங்கள் கள்ள பார்ட்டுப் பார்த்தது. இன்னும் சிறிது நேரம் கள்ளன் பார்ட்டு இருந்தால் என் தாலிக்கே ஆபத்து வந்திருக்கும்" என்று சொன்னாள். அதற்கு அய்யரும் "இல்லே, நீரொம்ப நாளா என் கள்ள பார்ட்டைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டியோல்யோ ; அதுக்குத் தான் இப்படிப் பண்ணினேன்" என்றார்.

தாலி கட்டினால்:: :: ::
:: ::கல்யாண மாச்சா?

(தி. சதாசிவம்)

லக்ஷிமி கிட்டுவிற்குத் தன் வாழ்நாளின் கடைசிக் கடிதத்தை எழுதுகிருள்.

சென்னை தைமீ 2உ

எனது அருமை கிட்டு!

இதுவே யான் உனக்கு எழுதும் எனது வாழ்நாளின் கடைசிக் கடிதம்.

நீ என்னிடம் விடை பெற்றுக்கொண்டு சென்ற வைகாசிமீ 20உ காசிக்கு ரயில் ஏறின அன்று வரை உன்னை எனது வாழ்க்கைத் துணைவனுக அடையும் பாக்கியம் பெறுவேன் என்று நம்பி இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தேன். எனது அருமை அன்னையும் உன்னைத் தன் மருமகனுக அடையப் போவதாக எண்ணி தன் எண்ணிலாத் துயரங்களையு மறந்து மனமகிழ்ந்திருந்தாள்.

நீ இங்கிருந்து சென்ற மறுதினம் தான் உனக்கும், கோயமுத்தூர் இஞ்சினியர் பெண் கோகிலத்திற்கும், விவாகம் நிச்சயித்திருப்பது ஊரில் தெரியவந்தது. அதற்கடுத்த நாள் உனது பெற்ருேர்களால் அது ஊர்ஜிதப் படுத்தப்பட்டது.

உன்னை யடைய கோகிலம் தவம் செய்தவளே.

கோகிலம் இவ்வுலகில் மிகுந்த செல்வம் படைத்த பெண். ஆனல் அவளது அத்தனை செல்வமும் உனது இனிமைக்கு ஈடு ஆகுமா?

மனமே! நீ என்ன சொல்கிருய்.........ஓ! உலகில் செல்வமும் தேவை போலும்.

கிட்டு! யான் கோகிலத்திடம் அசூயை கொள்ளவில்லை.

கிட்டு! யான் சொல்வது தப்பு. யான் கோகிலத்திடம் அசூயை கொள்கிறேன்.

செல்வத்தைத் துணையாகக்கொண்ட கோகு! உன்னிடம் எனக்கு அசூயை இல்லை.

கிட்டுவைத் துணைவனாக அடையப்போகும் கோகு! உன்னிடம் எனக்கு அசூயை உண்டு.

கிட்டு! நீ ஊர் சென்ற மறுதினமே கோகிலம் உன்னை அடையப்போகிறாள் என்று அறிந்தும், "கடைசிவரை பார்ப்போம்; கடவுள் காப்பாற்றுவார்; கிட்டு கைவிடமாட்டான்" என்று என் மனதில் ஒரு நம்பிக்கை; ஒரு பாழும் நம்பிக்கை; நேற்றுவரை நம்பினேன் கிட்டு! நான் என்ன இருந்தாலும் ஒரு பெண்தானே! பேதமைப் பெண்தானே! இன்றுவரை ஏன் இதைப்பற்றி எழுதவில்லை என்று கேட்கிறாயோ? உன்னிடத்திலுள்ள எனது பாசமே. என்னிடத்து உனக்குள்ள அன்பை யான் அறிவேன். அதன் காரணத்தால் "எனது கடிதம் உன் மனதிற்கு ஒரு சஞ்சலத்தைக் கொடுக்கலாம். அது உனது கடைசி வருஷப்படிப்பிற்கு ஒரு இடைஞ்சல் செய்யலாம்" என அஞ்சியே நான் எழுதாமலிருந்தேன்.

இன்று ஏன் எழுதுகிறேன்?

இன்றுதான் என் வாழ்க்கையின் அழியாத்துயரம் தொடங்குகிறது. அழியாத் துயரமல்ல; அது அழியும், என் ஜீவன் அழியுங்கால் அதுவும் அழிந்தே தீரும்.

இன்றுதான் உணர்ந்தேன், "கிட்டுவை இழந்தேன்" என்று. ஆம், என் மனதைக் கொள்ளை கொண்ட ஏ பாபி! அட கிட்டு! என் அன்பே! உன்னை இழந்ததை இன்றே உணர்ந்தேன்.

இன்னும் மூன்று தினத்தில் எனது உடல் இன்னொருவனுக்கு விற்கப்படும்; ஆம் விற்கப்படும். ஆனால் என் மனம், என் இருதயம், எனது ஆவி, எனது ஆன்மா எல்லாம் உன்னைச்சேர்ந்தவை.

கிட்டு! எனது அன்பே! எனது ஆவியே! என் தெய்வமே! எனக்கு விடைகொடு.

பெண்ணே! நீ ஏன் பிறந்தாய்?

தாயே! என்னை ஏன் பெற்றாய்? தெய்வமே! என்னை ஏன் படைத்தாய்?

ஆஹா! என்ன கொடுமை! ஊரார் வாயைமூட என்னைப் பலியிடுகிறாள் எனது அன்னை. எனது அன்னைக்கு என்னிடம் அன்பு இல்லையா? சீ! என்னைத் தன் உயிரினுமினிதாய் நேசிக்கிறாள். பாவம்! அன்னை என் செய்வாள்? சமூகம்! சமூகம்! ஆம்.

ஏ சமூகமே! என்னைப் பலியாக ஏற்றுக்கொள். ஆனல் ஒரே வேண்டுகோள். யான் உனது கடைசிப் பலியாக இருக்கட்டும்.

என்னை யொத்த இளங் கன்னிமார்களே! உங்களையாவது கடவுள் காப்பாற்றட்டும்.

கிட்டு! விடைகொடு; ஆனல்,
ஈண்டு நானிருந்து இன்னுயிர் மாயினும்,
மீண்டு வந்து பிறந்து உன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினைத் தீர்வரம்
வேண்டினேன், தொழுதேன், உன்னையே ஐயனே!

உனது அன்பு லக்ஷிமி.

லக்ஷிமியின் கலியாணம் நிச்சயமானதைத் தன் சகோதரியின் மூலம் இராமசாமி அய்யர் அறிந்தார். பிள்ளைக்கு வயது சற்று முன்னப் பின்னே இருந்த போதிலும் பெரிய இடத்துப் பிள்ளை என்று கூறி சந்தோஷ மடைந்தார்.

'லக்ஷிமிக்குக் கலியாணமாகி, ஒரு பிள்ளையும் பிறந்து அந்த ஜயராமய்யரும் காலே வாங்கினுல்.........'என்றெண்ணி விசாலத்தம்மாள் செல்லம்மாளிடம் பொறாமை கொண்டாள்.

அன்றைய தபாலிலேயே இராமசாமி அய்யருக்கு ஒரு கலியாணப் பத்திரிக்கை வந்தது. பிரித்து வாசித்ததும் அவருக்கு சந்தோஷம் தாங்கவில்லை "டீ!" என்று மனைவியை கூப்பிட்டார். "திருப்பூர் போலீஸ் இன்ஸ்பெக்டர்.........பெண் ஸ்ரீமதி ராஜராஜேச்வரியை.........நாகப்பட்டணம் ஸால்ட் சப் இன்ஸ்பெக்டர்........குமாரன் சிரஞ்சிவி சந்தான கோபால கிருஷ்ணனுக்கு... பாணிக்ரஹணம்..........." என்று வாசித்து முடித்தார். "ஒரு சனி தொலஞ்சது!" என்றுள் விசாலத்தம்மாள்.

இராமசாமி அய்யர் கிட்டுவிற்கு அன்று ஓர் நீண்ட கடிதம் எழுதினர்.

அன்றைய தபாலில்தான் லக்ஷிமியும் கிட்டுவிற்குத் தன் கடைசிக் கடிதத்தைப் போட்டாள்.

தைமீ 5ந்தேதி. லக்ஷிமியின் கலியாணம்.

மணமகனர் ஜயராமய்யரும் அவரது காரியஸ்தரும் ஒரு சில பந்து மித்திரர்களுடன் வந்திருந்தனர்.

லக்ஷிமியின் ஸ்நேகிதிமார்களும், செல்லம்மாளுக்குத் தெரிந்த சில பெண்டிரும், இராமசாமி அய்யரும் குடும்பமும் கூடியிருந்தனர்.

அட்வகேட் அருணாசலமய்யர் வீட்டில் கலியாண மாதலால் திருவல்லிக்கேணி பெரிய மனிதர்களும் ஒரு சிலர் பிரசன்னமாயிருந்தனர்.

மணமகனது நெற்றிச் சாந்துப் பொட்டும் காதில் ஜ்வலித்த வைரக் கடுக்கனும் அவரது நரை தலையை மறைக்கவில்லை.

லக்ஷிமியின் முன் வெள்ளித்தட்டில் பட்டாடைகளையும், சுவர்ண ஹாரங்களையும், தங்க வளையல்களையும், வைர நகைகளையும் கொண்டுவந்து வைத்தனர். ரூ 2000 ரொக்கமும் இருந்தது. ஆடைகளை உடுத்தினாள். ஆபரணங்களை அணிந்தாள். பணத்தை அன்னையிடம் கொடுத்தாள்.

லக்ஷிமியின் முகத்தில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை.

மணமகன் லக்ஷிமியின் முன் வந்து நின்றார். அவரது ஐம்பது வயதிற்குள்ள வாலிபத்தைக் கண்டாள். அவரது நரைத் தலையைக் கண்டாள். அவரது வலிமையற்ற தோளினைக் கண்டாள். அவரது ஒடுங்கின மார்பைக் கண்டாள். அவரது பொலிவிலா முகத்தினைக் கண்டாள். அவரது பொறி இழந்த விழியினைக் கண்டாள்.

லக்ஷிமியின் முகத்தில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை.

அவளது அன்பிற்குரிய கிட்டுவிற்குத் தன் கடைசிக் கடிதத்தை எழுதியதும், அந்த பழைய லக்ஷிமி மாண்டாள்.

மணமகன் ஜெயராமய்யர் முன்னிற்கும் லக்ஷிமி இவள் வேறு.

குழுமியிருந்த மாதரில் பலர், லக்ஷிமியின் அதிர்ஷ்டத்தை வியந்தனர். அவளது விலை உயர்ந்த பட்டுப்புடவை, அவளது மேனியின் அழகை மறைத்த எண்ணிலா ஆபரணங்கள், இவைகளைக் கண்டு பொறாமைபடைந்தனர் சிலர்.

ஆனால் லக்ஷிமியின் முகத்தில் ஒளி இல்லை. உள்ளத்தில் உவகை இல்லை. காளிகோவிலின் முன் உயிர்ப் பலி கொடுத்து உற்சாகம் அடையும் மனிதர் நடுவில், கழுத்தில் கத்தி வீழ்வதையே எதிர்பார்த்து வாய் திறவா நிற்கும் குற்றமற்றதொரு ஆட்டினை யொத்த லக்ஷிமி அங்கு நின்றாள்.

வேதகோஷம் முழங்கிற்று. நம்ம மணமகனாரோ, அவர் காதில் எவ்வளவு உரக்க மந்திரத்தினால் வாத்தியார் அடித்தாலும்

வாயைத் திறக்கவே யில்லை. 'பெரிய வீட்டுப் பிள்ளைகள் அப்படித் தான். இவரோ சப் ஜட்ஜ்' எனச் சிலர் பேசிக்கொண்டனர். செல்லம்மாளுக்கு மட்டும் கவலையாக இருந்தது. 'மாப்பிள்ளை வந்து இறங்கினதிலிருந்து வாயைத் திறக்கவில்லை; இப்போ மந்திரம் கூடச் சொல்லவில்லை. ஊமையா யில்லாமல் இருக்கவேண்டுமே' என மனதில் கடவுளைப் பிரார்த்தித்தாள். தன் பக்கத்திலிருந்த விசாலத்தம்மாளிடம் காதோடு சொன்னாள். "என்னடி விசாலம்! மாப்பிள்ளை வாயையே திறக்கிறதில்லை. எனக்கு விசாரமாயிருக்கே" என்றாள். "அதெல்லாம் மாப்பிள்ளை முறுக்கு. அப்படித்தானிருக்கும். தாலியைக் கட்டிவிட்டால் நாக்கு வெளியே வரும்" என்று உரக்கச் சொன்னாள். யாவரும் விசாலத்தம்மாள் இருந்த திசையை நோக்கினர்.

டம்டம்! டம்டம்! டடாங்! டடாங்! டடாங்! தாலிகட்டியாச்சு. லக்ஷ்மியின் கழுத்தில் கயிறு விழுந்துவிட்டது! வெள்ளிப் பணமாகவே பூரி வழங்கப்பட்டது.

வந்த பெரியவர்கள் ஆசீர்வதித்து, மஞ்சள் அக்ஷதை போடுவதற்காக, மணமகனை வாத்தியார் எழுந்திருக்கச்சொன்னார். மணமகனை அவர் காரியஸ்தர் தூக்கி நிறுத்தினார். அதைக்கண்ட செல்லம்மாள் திகில் அடைந்தாள்.

ஆசீர்வாதத்தின் போது பிராமணர்கள் மந்திரத்தை வெகு உயர எழுப்பினார்கள். 'சட்'டென மணமகனார் முன்னால் இரண்டடி வைத்தார்; திரும்பினார்; லக்ஷ்மியை விழிகளை உருட்டி நோக்கினார். லக்ஷ்மி கலங்கிப் போனாள்.



"சாவித்ரீ!" என்று உரக்க அழைத்தார். கலியாணத்தில் இடி விழுந்தது. யாவரும் ஸ்தம்பித்தனர்.

மணமகனார் இன்னம் உரத்த தொனியில் "சாவித்ரீ! நான் எமதர்மராஜன்!" என்றார். செல்லம்மாள் தலையில் அடித்துக்கொண்டு மூர்ச்சைபாகி விழுந்தாள். லக்ஷ்மி நடுநடுங்கிப் போனாள். குழந்தைகள் வீரிட்டுக் கதறின. சிறுவரும் சிறுமியரும் ஓடத்தலைப்பட்டனர். தக்ஷிணை கிடைத்த வைதீகர்கள் எழுந்திருக்க

மலே வாசலில் வந்து விழ்ந்தனர். அருணாசலமய்யரின் நண்பர்கள் படித்த பெரியவர்கள்—கடியாரத்தைப் பார்த்த வண்ணம் வண்டியில் ஏறினார்கள். விசாலத்தம்மாள், வீட்டிற்கு ஓடிவந்தது அவளுக்கே தெரியாது. மணமகனை காரியஸ்தரும் இன்னும் இருவரும் இழுத்துச் சென்றனர். கலியாணம் குழப்பமாய் முடிந்தது. லக்ஷிமி தன் மனதில் 'நிஜ எமதருமராஜனை'யே வருமாறு வேண்டினாள்.

* * * *

இரவு வண்டிக்கு மணமகனார் மாயவரத்திற்குப் புறப்படுகிறார். செல்லம்மாள் தன் புதல்வியை அனுப்ப மறுக்கிறாள். இராமசாமி அய்யருக்கும், அப்போது தனது சகோதரியின் குழந்தையிடம் ஒரு தனி பாசம் பிறக்கிறது; லக்ஷிமியின் மூன்றாம் வயதில் அவள் தந்தை இறந்தது, அவளைத் தான் தூக்கித் தன் மடியிலும் தோளிலுமாக வைத்துக்கொண்டிருந்தது, அன்று அவள் தனது இறந்த தந்தையைப்பற்றிக் கேட்ட பல மொழிகள், யாவும் அவருக்கு நினைவு வருகின்றன. கலகலவென கண்ணீர் விடுகிறார். தன் சகோதரியுடன் சேர்ந்து கொண்டு, "நீங்கள் பண்ணினது மோசம்! பைத்தியக்காரனோடு எங்கள் பெண்ணை அனுப்ப முடியாது." எனக் கத்துகிறார். பாவம்! அருணாசலமய்யர்— அவர்தான் லக்ஷிமியை 'அபிமானப் புத்திரி' என்று பாவித்துத் தாரை வார்த்துக் கொடுத்தது—அவருக்கு உண்மையாகவே தெரியாது. ஜயராமய்யரின் 'மனோவியாகூலம்' மூளையைப் பற்றியது என்று; ஒன்றுமே தோன்றாமல் "அம்மா! இந்த பாவத்தை நான் அறியேன்" என்று தன் சமயல்காரி காலில் வீழ்கிறார்.

திடீரென ஒரு சிரிப்பு; ஒரு கொடுஞ் சிரிப்பு; பிரளயத்தின் போது ருத்திர மூர்த்தியின் சிரிப்பை யொத்தது. லக்ஷிமி சிரிக்கிறாள்!

"அம்மா! நான் போகிறேன். என் கழுத்தில் பாசக்கயிறு விழுந்துவிட்டது! இனி ஒன்றும் செய்வதற்கில்லை. ஒருவரும் பேசக்கூடாது." என்று யாவரும் நடு நடுங்கச் சொல்கிறாள்.

லக்ஷிமி தன் அன்னையை நமஸ்கரித்தாள். தன் மாமன் மாமியை, அருணாசலமய்யர் அவர் மனைவியை நமஸ்கரித்தாள். ராமனையும் ஸீதையையும் கட்டித் தழுவி முத்தமிட்டாள்.

லக்ஷிமி ஜயராமய்யர் கோஷ்டியுடன் மாயவரத்திற்கு ரயில் ஏறினாள்.

* * * *

காசியில் தைமீ 5ந் தேதி.

கிட்டுவிற்கு இரண்டு கடிதங்கள் வந்தன. மேல் விலாஸக் கையெழுத்திலிருந்தே தெரிந்துகொண்டான்.

கிட்டுவிற்குக் கடைசியில் பாயசம் சாப்பிடுவதில்தான் இஷ்டம். லக்ஷ்மியின் கடிதத்துக்கு ஒருமுத்தங்கொடுத்து ஜேபியில் போட்டுக் கொண்டான். தந்தையின் கடிதத்தைப் பிரித்தான்; வாசித்தான். அவரது கையெழுத்தைக் கீழே பார்க்குமுன் 'சீ!' எனக் கடிதத்தை எறிந்தான்; தந்தையின் கையெழுத்தின் கீழே சில வரிகளை கவனித்தான். 'லக்ஷ்மி' என்ற வார்த்தை அவனை இழுத்தது; கடிதத்தைப் பொறுக்கினான். 'குறிப்பு' என்றதின் பக்கத்தில் எழுதியிருந்ததை வாசித்தான். அடி பாபீ! என்னை மோசம் செய்தாயே! என்றலறி நாற்காலியிற் சாய்ந்தான். சில நிமிஷங்கள் கழிந்ததும் லக்ஷ்மியின் கடிதம் நினைவுக்கு வந்தது. நடுங்கிய கையினால் அதை எடுத்தான். வாசித்தான். "லக்ஷ்மி! என் அன்பே! என் உயிரே!" என மீண்டும் சாய்ந்தான்.

கிட்டு பதினைந்து நாட்கள் ரஜா எடுத்துக்கொண்டு ஏக்கம் பிடித்தவனாய் தன் அறையிலேயே நடமாடிக்கொண்டிருந்தான்.

* * *

'இந்த ஒரு வாரமாய் குழந்தை லக்ஷ்மி மாயவரத்தில் எப்படித் தவித்துக் கொண்டிருக்கிறாளோ' என்று இராமசாமி அய்யர் மனதில் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, 'தபால் ஸார்' என்ற சத்தம் கேட்டது. கடிதத்தை வாங்க வாசற்படியண்டை போய் கையை நீட்டினார். "ரிஜிஸ்டர் நோட்டீஸ் ஸார், இதில் கையெழுத்துப் போடுங்கள்" என்றான் தபால்காரன். இராமசாமி அய்யருக்கு உயிர்போய் உயிர் வந்தது. கைநடுங்கிக் கொண்டே கையெழுத்தைப் போட்டார். அவர் கண்களில் ஒரு திரை விழுந்தது. நெற்றியில் வியர்வை படிந்தது; வாய் உலர்ந்தது. பெருமூச் செறிந்தார்.

* * *

இராமசாமி அய்யர் ரிஜிஸ்டர் நோட்டீஸை வாசித்தார்; ஒரு மாதிரி வாசித்தார். அவர் தலை சுழன்றது. கடிதத்தைக் கீழே வைத்தவர் மீண்டுமதைஎடுத்தார். அனுப்பியவர் வக்கீல் ராமுண்ணி மேனன். "தனது கக்ஷிக்காரரும் தற்காலம் திருப்பூரில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வேலை பார்க்கும்..............பாரியையுமான... ....க்கு தற்காலம் சென்னையில்...........உள்ள இராமசாமி அய்யரும் அவரது குமாரர்...........யுமாக.....ஹ...மீ ...உ.... ......எழுதிக்கொடுத்த........படிக்கு ரூ. 4000 மும்........வட்டி

யும்..........வட்டிக்கு வட்டியும்......ஆக ரூ. 7200 ஒரு வாரத்தில் செலுத்தத் தவறினால்..........ஜப்தி செய்வதுடன் ஷெ இராமசாமி அய்யர் பேரிலும், தற்காலம் காசியில்........கிருஷ்ண மூர்த்தி அய்யர்பேரிலும் எமர்ஜன்ஸி (மூச்சுவிட நேரமளிப்பதில்லை என்று பொருள்) வாரன்டும்..............."

இராமசாமி அய்யர் மூர்ச்சித்து விழுந்துவிட்டார். விசாலத்தம்மாள் ஓடிவந்து கணவனைக் கொல்ல எண்ணுமலே அவர்மேலே வாரியடித்துக்கொண்டு வீழ்ந்தாள்.



எங்கிருந்தோ வந்தாள் லக்ஷ்மி. விசாலத்தம்மாளை விலக்கினாள்; இராமசாமி அய்யர் முகத்தில் தண்ணீரைத் தெளித்தாள். "லக்ஷ்மி! என் தாயே!" என்றார்.

மாமா கண்களைத் திறந்தார். லக்ஷ்மியைக் கண்டார்.

லக்ஷ்மி ஒருவாரம் மாயவரத்திலிருந்து விட்டு அன்று காலை ரயிலில் தன் பிறந்தகத்திற்குத் திரும்பியதை இராமசாமி அய்யர் அறியார்.

கீழே கிடந்த 'ரிஜிஸ்டர் நோட்டீஸை' இராமசாமி அய்யர் தன் மருமகளிடம் கொடுத்தார். லக்ஷ்மி அதை வாசித்து விஷயத்தைத் தெரிந்துகொண்டு தன் மாமாவிற்குத் தைரியம் சொன்னாள்.

* * *

அன்று பிற்பகலில் தன் ஸ்நேகிதிகளைக் கண்டு வருவதாக அன்னையிடம் கூறி லக்ஷ்மி தனது ஆபரணங்களுடன் வெளியிற் சென்றாள்.

இரவு பத்து மணியாகியும் மகள் வீடு திரும்பாதது செல்லம்மாளுக்குக் கவலையாக இருந்தது. "நகையெல்லாம் போட்டுண்டு போயிருக்காளே" என எண்ணி பயந்தாள்.

மணி பத்தரையடித்தது. லக்ஷ்மி வீடு திரும்பினாள். அவளைக் கண்டதும் செல்லம்மாள் திடுக்கிட்டாள். "எங்கேடி நகையெல்லாம்?" என்று கேட்டாள்.

"சத்தம் போடாதே யம்மா! நகையெல்லாம் என்னுது. என்னை விற்ற பணந்தானே அது. என் சொத்தை என்னிஷ்டப்படி செய்ய எனக்கு பாத்யதையுண்டு. அப்படியே என்னிஷ்டம்போல் செய்தேன். நீ அதைப்பற்றிக் கேட்கக்கூடாது; கவலைப்படக் கூடாது; பேசவும் கூடாது;" என்று அழுத்தமாய் உரைத்தாள். செல்லம்மாளுக்கு ஒன்றும் தோன்றவில்லை; வாயைத் திறக்கவில்லை.

* * *

காலையில் எழுந்ததும் பொடி மட்டையை எடுப்பதற்காக இராமசாமி அய்யர் தலையணையைத் தூக்கினுர். ஒரு காகிதப் பை



யைக் கண்டார். அதிசயத்துடன் அதை எடுத்துப் பிரித்தார். ஏழு ஆயிரம் ரூபாய் நோட்டுக்களும் இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களும் ஒரு சிறிய காகிதத் துண்டும் இருந்தன. அதில்,

"பூதலிங்கமய்யரின் கடனை அடைக்க இதோ ரூ 7,200 இது கடவுளின் ஆணை"

என்று கண்டிருந்தது,

நாலு புறமும் திரும்பிப் பார்த்தார். பணத்தை மடியில் சொருகினுர். அப்போதுதான் உடலைத் திருப்பிக் கண்ணை விழிக்கப்பார்த்த தன் பத்து வயது பெண்ணை, 'என்னடி ஏந்திருக்கரே, இன்னம் செத்தெ தூங்கு' என்று அதட்டிவிட்டு மெல்ல சமையலறைக்கு இராமசாமி அய்யர் சென்றுர். "அடியே சத்தம் போடாதே! பகவான் அநுக்ரஹம்" என்று அவள் காதோடு சொல்லிப் பணத்தையும் அக்காகிதத் துண்டையும் மனைவியிடம் காட்டினுர். அப்போது வாய்விட்டு சத்தம் போடாதது விசாலத்தம்மாளுக்கு ஒரு பெருந் தண்டனையாக இருந்தது.

* * *

புதையல் கிடைத்த அன்று இராமஸ்வாமி அய்யர் ரஜா எடுத்துக்கொண்டார். பாங்க்மூலம் பணத்தைக் கட்டி பூதலிங்கத்தின் வாயிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

முழுத்துகையையும் தொலைத்திருக்க வேண்டாம் என்றும், ஒரு ஆயிர ரூபாயையாவது இருத்திக் கொண்டிருக்க வேண்டுமென்றும் விசாலத்தம்மாள் அபிப்பிராயப்பட்டாள்.

இராமசாமி அய்யர் தன் புத்திரனுக்கு அன்றே ஒரு கடிதம் எழுதினார்: புதையல் கிடைத்த விவரத்தை அறிவித்து கடவுள் அநுக்கிரஹத்தினால் கடன் அடைந்தது எனக் கூறி லக்ஷிமியின் விவாஹக் கோலத்தைப்பற்றிப் பிரலாபித்து, அவள் அன்னையைக் காண பிறந்தகம் வந்திருப்பதாகவும் தெரிவித்து, தனது சென்ற நீண்ட கடிதத்திற்கு உடனே பதிலை எதிர் பார்ப்பதாகவும் கண்டு, தனக்குக் கிடைத்த புதையலுடனிருந்த சிறு காகிதத்துண்டையும் அதே கடிதத்தில் வைத்து கிட்டுவிற்கு அனுப்பினார்.

* * *

தந்தையின் கடிதத்தைக் கிட்டு ஆவலுடன் படித்தான். "ஐயோ லக்ஷிமி!" என்றலறினான். பிறகு அதனுடனிருந்த சிறு காகிதத்துண்டைப் பிரித்து வாசித்தான். நிமிர்ந்து உட்கார்ந்தான். மீண்டு மீண்டும் வாசித்தான். துள்ளி எழுந்தான். "லக்ஷிமி! லக்ஷிமி!" என்றான். அச்சிறு காகிதத் துண்டைப் பன்முறையும் தன் கண்களில் ஒத்திக்கொண்டான். அறையில் அங்குமிங்கும் நடந்தான். ஓரே சிந்தனையிலாழ்ந்தான்.

(முற்றிற்று.)

ஓர் அடுக்கு மொழி

ஒரே வீட்டில் வசித்துவந்த விடேல், படேல் என்பவர்களின் மனைவி களுக்குள் ஏதோ சச்சரவேற்பட்டு விடேல் மனைவியும் படேல் மனைவியும் சடசடவென்று சரமாரியாகத் திட்டிக்கொண்டு விடேல் வீட்டுப் பாத்திரங்களை படேல் மனைவி படார், படாரென்று வோட்டுடைக்க, படேல் வீட்டுப் பாத்திரங்களை விடேல் மனைவி தடார், தடாரென்று சுவற்றில் மோதியடிக்க இதைக் கேள்வியுற்ற விடேலும், படேலும் சடசட வென்று படபடப்பாய் வந்து, நடந்தவைகளை மடமட வென்றுணர்ந்து, ஒருவரை யொருவர் கடுகடுப்பாய் பார்த்து, விடவிடவென்று துடித்து விடேல் மனைவியைப் படேல் படீர் படீர் என்று அடிக்க, படேல்மனைவியை விடேல் விடேன், விடேன்று தாக்க, இருவரும் கடுகடுப்பாய் பார்த்து சிடுசிடுப்பாய் பேசி, விடவிடப்பாய் வேர்த்ததால் சட்டையை மாட்டி மடமடவென்று வெளியே சென்றதும் இருவர் மனைவிகளும் ஒப்பாரி வைத்ததைப் பார்த்த, அங்குகூடிய ஜனங்கள் படீர் படீர் என்று வயிறு வெடிக்கும்படியாக, திடீர் திடீரென்று சிரித்து மகிழ்ந்தனர். **எஸ். கே. கணேசன், திருக்களாச்சேரி.**

மகாத்மா வாழ்க்கை

உப்பில்லா பத்தியம்

மகாத்மா காந்தி ஒரு வருஷம் உப்பில்லா பத்தியம் இருந்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? தமது மனைவி கஸ்தூரி தேவிக்காக ஒரு வருஷம் உப்பையும் பருப்பையும் தொடாமல் இருந்தார். இந்தக்கதை வேடிக்கையானது. தென்னாப்பிரிக்காவில் இருந்த போது கஸ்தூரி தேவிக்கு ஒரு சமயம் உடம்பு அசௌகரியமாயிருந்தது. மகாத்மாதான் இயற்கை வைத்தியராயிற்றே. அவரே சிகிச்சை செய்தார். எவ்வளவு செய்தும் குணப்படவில்லை. உப்பையும் பருப்பு வகைகளையும் விட்டு விட்டால் வியாதி குணமாகுமென்பது அவர் நினைப்பு. ஆனால் கஸ்தூரி தேவி இவற்றை விட சம்மதிக்கவில்லை. மகாத்மா எவ்வளவோ வாதம் செய்தார். பருப்பு வகைகளில் மகாத்மாவுக்கு அதிகப்பிரியம். "உப்பையும், பருப்பையும் விட்டுவிடச் சொன்னால் நீங்கள் விடுவீர்களா? ஒரு நாளும் விடமாட்டீர்கள்" என்று கஸ்தூரி தேவி சொன்னார். இதைக்கேட்டதும் மகாத்மா மகிழ்ச்சி கொண்டார். தமது மனைவியிடம் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார் என்பதைக்காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே என்று ஆனந்தமடைந்தார். உடனே கஸ்தூரி தேவியை நோக்கி, "டாக்டர்கள் எதையாவது சேர்க்கக் கூடாது என்று என்னிடம் சொன்னால் கட்டாயம் நான் அதை விட்டு விடுவேன். அதிருக்கட்டும். இன்னம் ஒரு வருஷத்திற்கு நான் பருப்போ உப்போ சேர்க்கப்போவதில்லை" என்று கூறினார்.

இதைக் கேட்டதும் கஸ்தூரி தேவி கலங்கினார். விளையாட்டாகச் சொன்னது இப்படி விளைந்ததே என்று வருந்தினார். மகாத்மாவை நோக்கி, "தயவு செய்து என்னை மன்னியுங்கள். உங்கள் போக்கு தெரிந்திருந்தும் உங்களுக்கு கோபமூட்டிவிட்டேன். உப்பையும், பருப்பையும் இனி தொடுவதில்லை யென்று உறுதி யளிக்கிறேன். உங்கள் விரதத்தை ரத்துச்செய்து விடுங்கள். கடவுள் மேல் ஆணை. என்னை இம்மாதிரி நீங்கள் தண்டிக்கக்கூடாது." என்று கஸ்தூரி தேவி கண்ணீர் விட்டு கதறினார்.

மகாத்மா அசையவில்லை. "உப்பையும் பருப்பையும் நீக்கி விட நீ சம்மதித்ததைக்கண்டு சந்தோஷ மடைகிறேன். அதனால் உனக்கு நன்மையே ஏற்படும். ஆனால் ஒருமுறை செய்த பிரதிக்ஞையை நான் விடமுடியாது. என்னைப்பற்றி கவலைப்படாதே. இவ் விரதம் உனக்கு ஒரு ஆதரவாகவேயிருக்கும்." என்று மகாத்மா கூறினார்.

தாலுகா போர்டு நாடகம்

(கணக்கன்)

"என்னய்யா சுயராஜ்யம் சுயராஜ்யம் என்று கத்துகிறீர்களே! தாலுகா போர்டு ஜில்லா ஃபோர்ட் இவையெல்லாம் நமது ஆள்கள் கையில் தானே இருக்கின்றன. இதையே சரியாய் நடத்த முடியவில்லை; எல்லாப் பயல்களும் வோட்டு வோட்டு என்று வந்து காலைப் பிடிக்கிறான். பிறகு அவனவன் மச்சான மருமகனுக்கு வேலை கொடுப்பதும் அவனுடைய பங்காளிகளுக்கு கண்டிராக்டுகள் கொடுத்துப் பணம் அடிப்பதும் தான் நடக்கிறது." என்கிறான் கிராமாந்தரவாசி.

"இந்தியாவிலுள்ள முனிசிபாலிடி முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் லஞ்சமும் வீண் சண்டையும் பொதுப் பணத்தை துர்வினியோகம் செயவதும் சகஜமாக இருக்கிறது. இவர்கள் கையில் ராஜ்யத்தை ஒப்புவித்தால் பிரிட்டன் இந்தியாவுக்குப் பெரிய தீங்கு செய்ததாகும்" என்கிறார் லார்ட் லாயட்.

லார்ட் லாயடின் வாயை ஒடுக்குவது பெரிய காரியமில்லை. அவருடைய ஊரில் உள்ள ஊழல்களையும் மற்ற நாடுகளில் உள்ள பெரிய ஊழல்களையும் அவர் கவனித்தால் அவருக்கு வாய் திறக்க யோக்கியதை கிடையாது. பம்பாயில் அவர் கவர்னராக இருந்து நடத்தின பாக்பே திட்டம் அவர் போன பிறகும் சந்தி சந்தியாக பிணநாற்றம் நாறிக் கொண்டிருந்தது. ஆகையால் நம்மைப் பற்றிக் குறை கூறவோ அல்லது நாம் சுயராஜ்யத்துக்கு லாயக்கில்லை யென்று சொல்லவோ அவருக்கு யோக்கியதை கிடையாது.

ஆனால் நமது கிராமவாசியைத் திருப்தி செய்ய வேண்டியது மிகவும் அவசியம். பொது ஜனங்களுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்கிற பெருநோக்கம் கொண்டவர்கள் தேசிய விடுதலைக்கான பெரிய போராட்டத்திலேயே தமது பழு நேரத்தையும் செலவிட வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் இந்த ஸ்தாபனங்களை கவனிப்பதில்லை. போதிய நிர்வாகத் திறமையும் அறிவும் படைத்தவர்கள் இந்த ஸ்தாபனங்களில் நுழைவதை கவுரவக் குறைவாகவும் நினைக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் இந்த ஸ்தாபனங்களில் ஏற்பட்ட ஊழல்களையும் ஆபாசங்களையும் பார்த்து இதன் பக்கத்திலேயே வராமல் பலர் ஒதுங்கி நின்று "எக்கேடேனும் கெட்டுப்

போகட்டும்; இந்தத் தொல்லை நமக்கு வேண்டாம்" என்று ஒதுங்கி நிற்கிறார்கள். அடுத்த தேர்தலில் தமக்கு வோட்டு சம்பாதித்துக் கொடுக்க போர்டுகளும் அதன் அங்கத்தினர்களும் தமக்கு உதவியாயிருப்பார்களென்று கருதி ஸ்தல ஸ்தாபன மந்திரிகளும் இந்த போர்டுகளின் ஊழல்களைக் கண்டும் காணாதவர்கள் போல் நடக்கிறார்கள்.



ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள ஊழல்கள் ஒழியவேண்டுமாயின், பொது ஜனங்கள் விழிப்படைவதுதான் ஒரே வழி. பொது ஜன அபிப்பிராயம் வலுவடையாவிடில் எந்தச் சட்டமும் பயன்படாது.

நம் மாகாணத்தில் பத்திரிகைகளும், ஸ்தல ஸ்தாபன விஷயங்களில் தலை நகரைத் தவிர மற்ற இடங்களில் நடக்கும் விஷயங்களைப் பற்றி போதிய அளவு செய்திகள் பிரசுரிப்பதில்லை. இந்த ஸ்தாபனங்களின் நிர்வாக ஊழல்களைப் பற்றி அதிகமாகப் பிரசாரம் செய்தால் நமது சுயராஜ்யக் கோரிக்கையை எதிர்ப்பதற்கு சர்ச்சில் லாயட் கூட்டங்கள் இந்த வாதத்தை உபயோகிப்பார்களென்ற பயமும் இதற்கு ஒரு காரணம்.

இந்த மூடு மந்திரத்தை தகர்த்து எறிய வேண்டியது மிகவும் அவசியம். ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள ஊழல்களை பொது ஜனங்கள் வெகு நுட்பமாக அறியும்படி செய்தால் தான் அவர்கள் வோட்டுக் கொடுக்கும்போது ஜாக்கிரதையாக இருப்பார்கள்.


சமீபத்தில் ஒரு தாலுகா போர்டின் கூட்டத்தை நேரில் பார்த்து சில விஷயங்களைத் தெரிந்து கொள்ள எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் பெயரை இங்கு நான் கூறப்போவதில்லை. ஏனென்றால் நான் கூறும் விஷயங்கள் கிட்டத்தட்ட எல்லா தாலுகா போர்டுகளிலும் நடக்கக் கூடியதுதான். மற்ற தாலுகா போர்டுகளுடன் ஒப்பிட்டால் இந்த போர்டு பல முறைகளில் சிறந்ததென்றே சொல்லலாம். இதன் நிர்வாகிகள் திருட்டுத்தனத்திலும் எதேச்சாதிகாரத்திலும் போதிய அளவு பயிற்சி பெற்றவர்களல்ல. சற்று "சாதுக்கள்" என்றே சொல்ல வேண்டும்.

இந்த போர்டில் மொத்தம் 20 அங்கத்தினர்கள். அதில் 6 பேர் கிராம முன்சீபுகளும் கர்ணங்களும். ஒருவர் ரிடயர்ட்



தாசில்தார்; செரிஸ்தார் முதலிய உத்தியோகங்களும் வகித்தவர். நாலு பேர் "தாழ்த்தப்பட்ட" ஜாதியாரின் பிரதிநிதிகள். ஒருவர் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர். மற்றவர்கள் மிராசுதார்கள். தற்காலமுள்ள விலைவாசியில் இவர்களுக்கு வருமானத்தை விட வட்டிப் பொறுப்பு அதிகமாக இருந்தால் ஆச்சரியம் ஒன்றுமில்லை. நான் போன போது 1-45 மணி. ஒரு நீளமான மேஜையில் இருபுறத்திலுமாக சுமார் 16 பேர் இருந்தார்கள். ஒரு அம்மாளும் சில காகிதக்கட்டுக்களையும் பேனாவையும் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். மேஜையின் இரு தலைப்பிலும் இரண்டு பேர். எல்லோரும் தனித்தனியாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். சிலர் முகத்தில் ஒருவித அசட்டுத்தனமும் கவலையும் காணப்பட்டது. விஷயம் என்னவென்று மெதுவாய் விசாரித்தேன். "என்னமோ ஐயா, ஒரு நாளுமில்லாத வம்பு. பிரெசிடென்டவர்களிடம் என்னன்னவோ கேள்விகள் கேட்கப் போகிறார்களாம். அவரும் என்னமோ பதில் சொல்லியிருக்கிறார். எல்லா எளவும் அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு மேல் இன்னும் கேள்விகள் கேட்பார்களாம். பழய குப்பைகளை என்னத்துக்காக ஐயா கிளற வேணும்? நடந்தது நடந்தாய் விட்டது. சரி சரி என்று காலத்தைத் தள்ளாமல் "இன்டர் பலேஷனும், ஸப்லிமென்டரி காஸ்டினும்" என்ன சனியனோ, போம். நீர் வேடிக்கை பார்க்கத் தான் வந்திருக்கிறீர் போலிருக்கிறது." என்றார். நானும் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்து விட்டு அச்சடித்த "கேள்வி-பதில்களை"க் கையில் வாங்கிக் கொண்டேன்.

சபையின் நிர்வாக ஊழல்களை கவனிக்கவும் சர்க்கார் இதை கவனிக்கும்படி செய்யவும் நிர்வாகத்தைத் திருத்தவும் இந்த "இன்டர்பலேஷன் சனியன்" எவ்வளவு முக்கிய மென்பது நமது அங்கத்தினருக்குத் தெரியாது போலும்.



யார் தலைவர்?

இதன் மத்தியில் வெள்ளைக்காரர் போல் உடுப்புப் போட்டுக் கொண்டு ஒரு கறுப்பு மனிதர் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்

டதும் எல்லா அங்கத்தினர்களும் எழுந்துநின்ருர்கள். சிலர் கும்பிட்டார்கள். கும்பிட்டவர்களில் ஹரிஜனங்கள்தான் அதிகம். எழுந்திருக்க வேண்டுமா வேண்டாமா என்று சந்தேகப்பட்டுக் கொண்டே எழுந்தவர்களும் உண்டு. இவர் தான் தலைவராக இருக்கலாம் என்று எண்ணினேன். ஆனல் இவர் தலைவரல்ல. தலைவர் பதவிக்கு அபேக்ஷகராக நின்று தோல்வியடைந்த ஒரு சிறு வயது ஜமீன்தார் என்று பிறகு தெரியவந்தது.

சம அந்தஸ்துள்ள ஒரு அங்கத்தினர் வரும் போது ஏன் எல்லோரும் நிற்க வேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை. கிராமாந்தர மரியாதைக்கு இது பொருத்தமாயிருக்கலாம். ஏனென்ருல் ஜமீன்தார்களெல்லாம் இப்பொழுது ராஜாப் பட்டத்தையும் சம்பாதித்துக் கொள்கிருர்களல்லவா. ஆனல் இம்மாதிரி அனுவசியமாகவும் இடம் தப்பியும் செய்யப்படும் மரியாதைகள் தான், சில ஜமீன்தார்களையும் வெள்ளையர்களையும் தலை கிறுங்கும்படி செய்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனென்ருல் நான் தற்கால "அதிகப் பிரசங்கி."

இந்த போர்டின் கூட்டத்தில் கேட்கப்பட்ட சில கேள்விகளும் பதில்களும் விவாதமும் மிகவும் தமாஷாக இருக்கும். அந்த விவரங்களை அடுத்த மலரில் பார்க்கவும். இது போன்ற ஊழல்கள் உங்கள் தாலுகா போர்டிலும் இருக்கும். வோட்டுக் கொடுக்கும் போது நாம் ஜாக்கிரதையாக இருக்காவிட்டால் எவ்விதமான கெடுதிகள் ஏற்படலாம் என்பதை அதிலிருந்து அறியலாம். தாலுகா போர்டுகளில் நடக்கும் விஷயங்கள தான் சட்டசபைகளிலும் நடக்கிறது. அங்கு இந்த ஊழல்கள் 100 மடங்காக இருப்பதால் தேசத்தின் செல்வத்தையும் கவுரவத்தையும் அழிக்கக்கூடியதாக இருக்கும். அதுதான் வித்தியாசம்.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதியவர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக்கப்படும்.


காந்தி

ஆசிரியா: தே. ச. சோக்கலிங்கம்

மாலை 2. { 1933 அக்டோபர் 20உ
29 செம்புதாஸ் தெரு, சென்னை. } மலர் 5.

அட்டவணை.

தரித்திர சூரன் வதை



உயிருள்ள அசுரன்

நரகாசுரன் ஜனங்களை கொடுமைப்படுத்தினான். அவனை சம்ஹாரம் செய்து, அவன் கொடுமை தொலைந்ததை கொண்டாடுவதே தீபாவளி. இந்தியாவெங்கும் சகல இந்துக்களும் அநுஷ்டிக்கும் பெரிய பண்டிகை தீபாவளிப் பண்டிகை. மற்ற பண்டிகைகளில் மாகாணத்திற்கு மாகாணம் வித்தியாசமிருந்தாலும் இதில் வித்தியாசமே கிடையாது.

இந்தப் பண்டிகையன்று, துன்பம் ஒழிந்ததற்காக எண்ணெய் ஸ்நானம் செய்கிறோம்; சந்தோஷத்தைக் காட்ட புது உடைகள் அணிகிறோம். ஆனால் பண்டிகை எதற்காக ஏற்பட்டது என்பதை அடியோடு மறந்துவிட்டோம். எத்தனையோ காரியங்களை "வழக்கம்" என்ற காரணத்திற்காகச் செய்வதைப் போல தீபாவளி பண்டிகையையும் "வழக்கம்" என்பதற்காகச் செய்து வருகிறோம்.

நரகாசுரன் ஜனங்களை இம்சித்ததால், அவன் தொலைந்தது சந்தோஷமே. ஆனால் இன்று ஜனங்களின் நிலைமை யென்ன? ஆயிரம் நரகாசுரர்கள் சேர்ந்து ஒரு பலே அசுரன் இந்தியாவில் தாண்டவ மாடிக்கொண்டிருக்கிறான். அவனே தரித்திரம். அவன் கையில் அகப்பட்டு இந்தியர் படும் துன்பம் கொஞ்சமல்ல. கஞ்சிக்கு வழியில்லாமல், உடுக்க உடையில்லாமல் அந்த அசுரன் ஜனங்களை வதைக்கிறான். எங்கு திரும்பினாலும் பஞ்சம்; எங்கு பார்த்தாலும் பணக் கஷ்டம்; எங்கு நோக்கினாலும் வியாபார மந்தம்; அலை கடலில் அகப்பட்ட துரும்புபோல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். எந்த யுகத்திலோ இருந்த அசுரன் மாண்டதற்காக தீபாவளி வேண்டுமென்கிறோம். ஆனால் கண்ணெதிரே தாண்டவமாடும் அசுரனை தொலைப்பதற்கான நினைப்பையே ஜனங்களிடம் காணவில்லை. மாண்டுபோன அசுரனைப்பற்றி கவலை வேண்டாம். இருக்கிற அசுரனை தொலைப்பதில் கவலை வேண்டாமா? இவனை தொலைத்த பின்பல்லவா உண்மையான தீபாவளி ஏற்பட முடியும்? இவனை தொலைத்துவிட்டு "டபிள்" எண்ணெய் ஸ்நானம் செய்வதல்லவா வீரர்களுக்கு அழகு? ஒரே போட்டில் இந்த அசுரனை தொலைப்பது முடியாத காரியமல்ல. அதற்கு செளகரியமில்லாவிட்டால், கொஞ்சங் கொஞ்சமாகவாவது தொலைக்கலாமல்லவா?

தீபாவளி ஸ்நானத்தின்போது இந்த அசுரனை தொலைத்துவிட்டதாக நீங்கள் நினைக்கவேண்டும். புது ஆடை கட்டும்போது அசுரன் தொலைந்தான் என்ற சந்தோஷம் வேண்டும். இதற்காக நீங்கள்

(373-வது பக்கம் பார்க்க)



ஐரோப்பாவில்

(நா. சிவராமன்)


யுத்தம்! யுத்தம்! இன்று வருமா, நாளை வருமா?

ஐரோப்பிய பத்திரிகைகளிலெல்லாம் இதுவே பெரிய பேச்சாயிருக்கிறது. ஆயுதப் பரிகரண மகாநாடு இனி உருப்படாது போலிருக்கிறது என்று சென்ற வாரம் ஒரு செய்தி வந்தவுடன் இந்த வேகம் பலமாய்விட்டது. உலகம் முழுவதையும் "யுத்த நினைப்பு" ஒரு ஆட்டு ஆட்டி வருகிறது. யுத்தம் வந்துவிடுமா?

ஐரோப்பாவில் யுத்த ஆரம்பத்திற்கு ஜெர்மனி முன்னால் விழுகிறது. கீழ்நாட்டில் ஜப்பான் உறுமுகிறது. அதை எதிர்க்க தயாராக சோவியத் ரஷியா முஸ்தீப்பு செய்துமுடித்துவிட்டது. ரஷியாவின் மேற்கு எல்லைப் பக்கங்களிலுள்ள சகல நாடுகளுடனும் ரஷியா ஒப்பந்தம் முடித்து ஜப்பானை எதிர்நோக்குகிறது.

ஆயுதங்களில் சம உரிமை கொடுக்காவிட்டால் விடமாட்டேன் என்று ஜெர்மனி சொல்லுகிறது. ஹிட்லர் ராஜ்யத்தில் சம உரிமை ஒருநாளும் கொடுக்க முடியாதென்று பிரான்ஸ் பிடிவாதம் செய்கிறது.

யுத்தம் என்றால் உடல் நடுங்குகிறது. எவ்வளவு உயிர்ச்சேதம்! ராஜீய விவகாரமோ, வர்த்தகச் சண்டையோ இன்னதென்று தெரியாத நிரபராதிகள் மடிவார்கள். எந்தக் கட்சி அதிகமான உயிர்களை கொலை செய்கிறதோ அதற்கு கீர்த்தி; மரியாதை. ராஜீயவாதிகள் சுகமாக வீட்டிலோ ஆபீஸிலோ டெலிபோன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு "விடாதே, கொல்லு," என்று உற்சாகம் கொடுத்துக் கொண்



யுத்த மேகங்கள்

டிருப்பார்கள் இதுதான் யுத்தம். என்ன அநியாயமய்யா இது? என்று தோன்றுகிறது.

ஆனால் யுத்தத்திலும் "ரசம்" உண்டு. பத்திரிகைகள் படிப்பதற்கு ருசியாக இருக்கும். சிநேகிதர்கள் ஒருவரை யொருவர் கண்டால் பேசுவதற்கு ஒன்றும் அகப்படாமல் முகத்தில் அசடு தட்டிக்கொண்டு அசட்டுச் சிரிப்பு சிரிக்கவேண்டி யிருக்காது. வர்த்தகச் சூதாட்டம் தெரிந்தவர்கள் திடீர் திடீரென்று குபேரனாகலாம். திடீர் திடீரென்று இன்ஸால்வென்டாகலாம். பத்திரிகைகள் ஏராளமாக விற்கும். இதெல்லா வற்றையும் நினைத்தால் உற்சாகமாகத்தான் இருக்கிறது யுத்தம் வேறு எங்கே யாவது இருந்தால் "பலே ஜோராக"த்தான் இருக்கும். அந்த இழவு நம் பக்கத்திலேயே வந்து விட்டால்தான் ஆபத்து!

சகுனங்கள்.

மூன்று வாரத்துக்கு முன் ஒரு செய்தி வந்தது. ஆஸ்டிரியாவின் தலைவர் டாக்டர் டால்பஸ் என்பவர் மீது திடீரென்று ஒருவன் ரிவால்வரால் சுட்டான். மார்பிலும் கையிலும் பட்டது. ஆனால் ரவை உள்ளே நுழையவில்லை. உடம்பை தடவிக்கொண்டு போய்விட்டது. நல்ல காலம். கெட்ட காலம் சற்று ஒத்திப் போடப்பட்டிருக்கிறது போலும். 1914 ல் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் இதே ஆஸ்டிரியாவின் பட்டத்து இளவரசர் கொலை செய்யப்பட்டார். எல்லா நாடுகளும் யுத்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர். 1 மாதத்தில் யுத்தம் ஆரம்பித்தது. 5 வருஷம் யுத்தம் நடந்தது. ஆகவே டால்பஸைக் கொல்லச் செய்த முயற்சி 1914ம் வருஷத்து யுத

த்தை ஞாபகப்படுத்துகிறது.

இருள் மேகங்கள்

யுத்தம் ஏற்படுவதற்கு காரணங்கள் தேவையில்லை. சென்ற 15 வருஷங்களாக யுத்தம் நடைபெறவில்லையென்பதே போதிய காரணம். குண்டிக்கு தன்னை தயார் செய்து கொள்வதற்கு முன் எவரையும் சண்டைக்கு இழுப்பது புத்திசாலித்தனமல்ல. இதை ஒவ்வொரு நாடும் உணர்ந்திருப்பதால்தான் சற்று தாமதம் ஏற்படுவதாய்த் தெரிகிறது. உலகப்படத்தைப் பார்த்தால் கலகத்துக்கு முஸ்திப்பு செய்யாத இடமே இருக்காது. ஒவ்வொரு நாடும் சிநேகிதர்களையும் விரோதிகளையும் தேடி அலைந்து கொண்டே இருக்கிறது.

“பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில் (ஆஸ்டிரேலியா ஜப்பான், சீனா, அமெரிக்கா முதலிய பாகங்களில்) நடக்கும் காரியங்களையும், முஸ்திபுகளையும் பார்த்தால் வெகு சீக்கிரத்தில் யுத்தம் வந்துவிடும் என்றே தோன்றுகிறது” என்கிறார் நியூஜிலந்து மந்திரி.

ஜப்பான் கைக்கூலியாக வைத்திருக்கும் மஞ்சுகோவோ ரஷியாவை கலகத்துக்கு இழுத்துக் கொண்டே இருக்கிறது. ரஷியாவுடன் அமெரிக்கா வர்த்தக சம்பந்தம் ஏற்படுத்துகிறது. ஜப்பானும அமெரிக்காவுடன் உறவாடுகிறது. ஆஸ்டிரேலியாவில் காலியிடம் ஏராளமாக



டெயிலி ஹெரால்ட்] [லண்டன்
ஹிட்லரைப் பார்த்து, ‘தலைவரே, தங்கள் உத்தரவுகளை நிறைவேற்றி விட்டேன். அடுத்த உத்தரவு என்ன ?”

இருக்கிறது. ஜப்பானியர் அங்கு குடியேறத் தடக்கு இடம் தர வேண்டுமென்கிறார்கள். ஆஸ்டிரேலியாவோ மறுக்கிறது. ஜப்பான் பலாத்காரம் செய்தால் ஆஸ்டிரேலியாவைக் காப்பாற்ற வேண்டியது (தாய் நாட்டின்) பிரிட்டனின் கடமையாய்விடும். பிரிட்டிஷ் பட்டாளத்தின் மீது அதிகமாக குண்டுகள் படாமல் முன்னணியில் நின்று காப்பாற்ற இந்திய சைனியம் போக வேண்டாமா! அப்பப்பா! ஆபத்து பக்கத்திலேயே வந்துவிட்டதே!!

ஐரோப்பாவின் தான் நிலைமை ஏக குழப்பமாய் இருக்கிறது. ஜெர்மனியில நாஜிக் கட்சியார் ஆதிக்கம் ஏற்பட்ட பிறகு தான் நிலைமை நாளுக்கு நாள் நெருக்



லே மார்டின்] [பாரிஸ்
ஆஸ்டிரியா மீது ஜெர்மனிக்குள்ள அன்பு!

ஆஸ்டிரியாவின் எல்லையில் ஜெர்மனியர்கள் ரேடியோ கருவிகளைக் கொண்டு வைத்து ஆஸ்டிரியாவிலுள்ள நாஜிக் கட்சியை டாக்டர் டால்பஸுக்கு விரோதமாகக் கிளப்புகிறார்கள்.

ஆஸ்டிரியாவில் இவ்வாறு ஜர்மானியர் கலகத்தைக் கிளப்பும்போது ஆஸ்டிரியா சும்மா இருக்க முடியுமா? ஆஸ்டிரியர்களும் எதிர் பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். பிரான்சு பிரிட்டன் முதலிய நாடுகளுக்கும் புகார் செய்தார்கள். அவர்கள் ஜெர்மன் சர்க்காருக்கு எழுதினார்கள்.

கடிபுரய்க் கொண்டே வருகிறது.

வாய்ச் சண்டை

ரேடியோமூலம் இரண்டு தேசங்களும் ஒன்றோடொன்று யுத்தம் செய்ய முடியும் என்று யார் நினைத்தார்கள்? ஆனால் இரண்டு மூன்றுமாதமாக ரேடியோ மூலம் ஒரு யுத்தம் நடந்து கொண்டு வருகிறது. ஆஸ்டிரியாவில் ஜர்மன் ஜாதியைச்சேர்ந்தவர்கள் ஒரு பெருந் தொகையினர். ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும் பல நாள் ஒரே அரசின் கீழ் இருந்த நாடுகள். இரண்டும் ஒன்றாய் நின்று யுத்தம செய்த நாடுகள். இப்பொழுது ஜெர்மனியில் நாஜிக் கட்சியைக் கிளப்பிவிட்டு இரண்டையும் தன் கட்சியின் ஆதிக்கத்தில் கொண்டு வர வேண்டுமென்பது ஹிட்லருடைய அவா.

உங்கள் துருத்தியை ஊதுங்கள்

உடனே ஜெர்மனியிலிருந்து பதில் வந்தது. "உங்கள் வேலை ஏதாவதுண்டானால் பாருங்கள், என் விஷயத்தில் தலையிடவேண்டாம்" என்பது அந்த பதிலின் அர்த்தம். ஆனால் இதை இவ்வளவு முரட்டு வார்த்தைகளில் போடாமல் ராஜ தந்திர முறையில் "ஆஸ்டிரியாவுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்ட சங்கடங்களில் வெளி நாட்டார் தலையிடுவது உசிதமல்ல" என்று எழுதியது.

வேர்சேல்ஸ் வினை

ஆனால் இது சிறு விஷயமல்ல. ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும் ஐக்

கியமாகக் கூடாதென்பது வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் கருத்து. "ஆஸ்திரியாவின் பூரண சுதந்தரத்தை ஜெர்மனி மதிக்க வேண்டும்" என்பது அவ்வுடன்படிக்கையில் ஓர் ஷரத்தாகும். ஆகையால் ஆஸ்டிரியாவை ஜெர்மனி சர்க்காருடன் ஐக்கியப்படுத்துவதைப்பார்த்து ஐரோப்பா சும்மா இருக்க முடியாது.

பிரான்சின் மனக்கோதிப்பு

ஜெர்மனியின் மீது பிரான்சுக்குள்ள கோபத்துக்கு அளவு கிடையாது. ஜெர்மனியைச் சுற்றியுள்ள செக்கோஸ்லேவியா போலந்து ஜுகோஸ்லேவியா முதலிய நாடுகளை பிரான்ஸ் தன் கையில் வைத்துக் கொண்டிருக்கிறது. ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும் ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொள்வதில் தான் அதற்கு சந்தோஷம்.

ஐரோப்பாவின் மத்தியஸ்தன்

நாலைந்து வருஷத்துக்கு முன் ஐரோப்பிய பத்திரிகைகளைப் பார்த்தால் ஒரு ஆசாமியைப் பற்றி அளவு கடந்த பழிகளும் கண்டனங்களும் மலிந்து கிடக்கக் காணலாம். அதுதான் முஸோலினி. 'ஜன நாயகத்தையே ஐரோப்பாவை விட்டு ஓட்டுகிறார். அவருடைய நாட்டில் மக்களுக்கு ஒரு உரிமையும் கிடையாது, ஒருவருக்கும் அடங்காத போக்கிரிப் பயல். ஆயுத பரிகரண மகாநாட்டில் முட்டுக்கட்டை போடுகிறவர், பிரான்சின் விரோதி," என்றிவ்வாறெல்லாம் பழிக்கப்பட்டவர்.

ஆனால் இன்று ஐரோப்பாவின் சண்டைகளில் இவர் தான் மத்தியஸ்தம் செய்து வைக்கிறார்! சமீபத்தில் ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன் இவை யெல்லாம் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி ஏற்பாடு செய்த கீர்த்தி இவருக்குக் கிடைத்திருக்கிறது.



ஆம்ஸ்டர்டாமர்] [ஹாலந்து

வெளி நாட்டார்:— ஏ ஜெர்மனி, ஆஸ்டிரியாவை அதன் பாட்டுக்கு விட்டுவிடேன்.

ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் இப்பொழுது போடும் சண்டையில் இத்தாலி என்ன செய்கிறது? "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்." ஜெர்மனி பின்பற்றுவதும் பாஸிஸ்ட் முறை; ஆஸ்டிரியாவில்

டால்பஸ் பின் பற்ற எண்ணுவதும் அதுவே. ஜெர்மனிக்கு பிரான்ஸ் முக்கியமான விரோதி; இத்தாலிக்கும் அப்படியே. ஆனால் ஆஸ்டிரியா ஜெர்மனிக் குள்பட்டு விட்டால் இத்தாலியால் அந்த பலத்தை எதிர்த்து நிற்க முடியாது. இந்த நிலைமையில் மிகவும் நாசுக்காக நடந்து கொள்கிறவர் முசோலினி. ஆஸ்டிரியாவில் நாஜிப் பிரசாரம் நடத்துவது தவறு என்று ஜெர்மனியைக் கண்டிக்கிறார். வெர்சேல்ஸ் உடன் படிக்கையை மாற்றி ஜெர்மனிக்கு ஆயுத சமத்துவம் கொடுக்க வேண்டுமென்று போராடி ஜெர்மனியின் உறவை சம்பாதித்துக் கொள்கிறார். ஆஸ்டிரியாவுக்கு அபயம் கொடுக்கிறார். ஆஸ்டிரியாவில் உள்நாட்டு செல்வநிலைமையை சீர்திருத்தப் பணம் கொடுத்து உதவுவதாகவாக்களிக்கிறார். ஆஸ்டிரியா, ஹங்கேரி, இத்தாலி மூன்றும் சேர்ந்து வர்த்தக ஒப்பந்தம் ஒன்றும் ஏற்படுத்த முயற்சி நடக்கிறது. ஹங்கேரி மந்திரி ரோமாபுரிக்குப் போய் முசோலினியுடன் பேசுகிறார். ஆஸ்டிரிய சர்வாதிகாரி டால்பஸும் இத்தாலிய சர்வாதிகாரியை அவசரமாய் ஓடிப்போய் தரிசனம் செய்கிறார்.



"சமாதான தூதர்" முசோலினி

சதுரங்கக் காய்கள்.

வெர்சேல்ஸ் உடன்படிக்கைப்படி டான்ஜிக் என்ற பிரதேசம் மத்தியஸ்தமாக இருக்க வேண்டிய ஓர் குடியரசு. இது இப்பொழுது நாஜி ஆளுகையில் வந்திருக்கிறது. பிரான்சின் எல்லைப் புறத்தில் "சார்" என்ற ஒரு பிரதேசம் இருக்கிறது. இதுவும் ஒரு மத்தியஸ்த நாடு. 1936 ல் அங்குள்ள குடிகளிடம் வோட்டுக்கு விட்டு அது எந்த ராஜ்ஜியத்தில் சேருவதென்பதை தீர்மானிக்க வேண்டும். இதுதான் வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்து. சமீபத்தில் ஹிட்லர் அந்த குடிகள் முன்னிலையில் ஓர் பிரசங்கம் செய்தார். "உங்களில் ஒவ்வொருவரும் ஜெர்மனியுடன் தான் சேர விரும்புவீர்களென்பது எனக்கு தெரியும். பிரான்சுடன் சமரசமாகப்போக எனக்கு விருப்பம் தான். ஆனால் சார் பிரதேசத்தை விட்டுவிட முடியாது" என்று அவர் கூறுகிறார். பிரான்சின் கோபத்தைத் தூண்டுவதற்கு இதைவிட வேறென்ன வேண்டும்? சமீபத்தில் பிரஞ்சு மாஜி பிரதம மந்திரி எட்வேர்ட ஹெரியட் ஒரு ஆகாயப் படையுடன் ரஷியாவுக்குப் போனார். சோவி

யத் சர்க்காரின் விருந்தாளியாக இருந்தார்.

யுத்தம் வருமா?

பூர்வாங்கமான ஏற்பாடுகள் முடிவடைய வேண்டும். வெடி மருந்துச் சாலைகள் நிரம்பவேண்டும். திடீரென்று ஏதாவது ஒருவன் பீடியைச் சாப்பிட்டு ஒரு சிறு துண்டைக் கீழே எறிய வேண்டும். உடனே தீப்பற்றிக் கொள்ளும். நாஜிப் பிரசாரத் தலைவர் காஸ் என்பவர், "வெகு சீக்கிரத்தில் ஹிட்லரின் கொடி ஆஸ்டிரியா மீது பறக்கும்" என்கிறார். ஜெர்மனி யுத்த தளவாடங்கள் சேகரித்து வருகிறது என்பதில் சந்தேகமேயில்லை. ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும் ஆயுதத்தை அதிகப்படுத்தக் கூடாதென்று ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால் ஆஸ்டிரியா தனது எல்லையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சைனியத்தை சிறிது அதிகமாக்க மற்ற ஐரோப்பிய நாடுகள் அனுமதி கொடுத்தன. உடனே ஜர்மனி ஒருவரிடமும் அனுமதி கேட்காமலே ஆயுத பலத்தை அதிகரித்துக் கொள்வது இயற்கையல்லவா?


ரஷியாவின் பிரசித்தி பெற்ற அந்நிய நாட்டு மந்திரி லிட்வினுப்

பெல்ஜியம் தனது கிழக்கு எல்லையை ஒருவரும் தாக்காமல் பாதுகாத்துக் கொள்வதாகச் சொல்கிறது. பிரான்சு தனது கிழக்கு எல்லையில் உள்ள கோட்டைகளை சீர்படுத்தி ராணுவ பலத்தை அங்கு சேகரிக்கிறது. இத்தாலி தன்னுடைய ஆகாயக் கப்பல் பலத்தை உலகம் அறியட்டும் என்று நினைத்து ஒரு பெரிய ஆகாயக் கப்பல் படையை அமெரிக்கா வரை பவனி வரும்படி செய்கிறது.

ஜெர்மனியைச் சேர்ந்த ரூர் பிரதேசத் தொழிற் சாலைகளில் இப்பொழுது ஒருவரையும் உள்ளே விடுவதில்லை. ரகசியமாக என்ன வோ நடக்கிறது. ஜெர்மனியில் செம்பும் உருக்கும் (பீரங்கிகளுக்கு உபயோகமாகக் கூடியது) ஏராளமாக இறக்குமதியாய்க் கொண்டிருக்கிறது. அதற்குத் தகுந்த ஏற்றுமதி இல்லை.

ஜெர்மனி, தரைப் படை சேகரிக்கத் தான் சிறிது தாமதம் ஏற்படும். வர்த்தக ஆகாயப் படையை நினைத்த மாத்திரத்தில் யுத்த ஆகாயப் படையாக மாற்றிவிட அதற்கு சக்தி யுண்டு.

புதிய ஆயுதம்

இது வரையில் யுத்தத்தில் உபயோகித்தது வெடி மருந்து. இனிமேல் உபயோகப்படக் கூடியது விஷமும், நோயும். ஜெர்மனியை மானபங்கம் செய்வதற்காக அதன் ஆயுதத்தை ஐரோப்

பிய வல்லரசுகள் பிடுங்கிக்கொண்டார்கள். "தன்னை எதிர்க்கும் விரோதியைக் கொல்வதற்கு எந்த ஆயுதமாயிருந்தாலென்ன? கத்தியாலும் துப்பாக்கியாலும் கொல்லலாம் என்றால் ஏன் காற்றினால் கொல்லக் கூடாது" என்பது தான் ஜெர்மனியின் வேதாந்தம். ஆகவே ஜர்மனி தன் விஞ்ஞான ஆராய்ச்சியை உபயோகித்து புதிய விஷக் காற்றுக்களையும் நோய் விளைவிக்கக் கூடிய காற்றுகளையும் தயார் செய்யலாம்.



இஸ்வெஸ்டியா] [மாஸ்கோ

ஜெர்மனியின் யுத்த முழக்கம்

யுத்த அரங்கம்.

ஆஸ்டிரியா, ஜெர்மனி, இத்தாலி மூன்றும் பாஸிஸ்ட் நாடுகள். ரஷியா, பாஸிஸ்ட் இத்தாலியின் போக்குக்கு நேர் விரோதி. பிரான்சுக்கோ பாஸிஸ்ட் கொள்கையும் பிடிக்கவில்லை; பொதுவுடமையும் பிரியமில்லை. இப்படி மூன்று கட்சி.

எந்தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்பது யாருக்கும் தெரியாது. எந்தநாடு எந்த நாட்டோடு எத்தனை ஒப்பந்தங்கள் செய்திருந்தாலும் சரி. யுத்தம் செய்வதில்லை யென்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் அதை மீறி யுத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டால், மற்ற ஒப்பந்தங்கள் எந்த மூலை? வெறும் "துண்டுக்கடுதாசி" தான். ஆகவே யுத்தத்தில் எந்த நாடு எந்த நாட்டோடு சேருமென்று சொல்லமுடியாது. அச்சமயம், அந்தநாள், அந்த விநாடியிலுள்ள முக்கிய விஷயங்களே அதை தீர்மானிக்கும்.

ஜெர்மனிய சர்க்கார் தங்கள் ஜனங்களுக்கு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிடுவதாவது:—

"இனி வரும் யுத்தத்தில், யுத்தந் தொடுத்துவிட்டதாக அறிவிப்படுதென்பதே இருக்காது. திடீரென்று ஆகாயப் படைகள் தோன்றி குண்டு மழை பொழிய ஆரம்பிக்கும்."

வரப்போகும் யுத்தம் எவ்வளவு கொடுமையா யிருக்கும் என்பதை இப்பொழுது ஒருவாறு நீங்கள் யூகித்துக் கொள்ளலாம்.

எனது பிரார்த்தனை

யுத்தம் செய்வது மனிதனுக்கு அழகல்ல. தனி மனிதனைக் கொல்வது கொலையானால், அது கண்டிக்கத்தக்கதானால், யுத்தம் அதைவிடப் பன்மடங்கு கண்டிக்க வேண்டியதாகும் என்கிறார்கள் தலைவர்கள். ஐரோப்பாவில் யார் வீட்டிலோ இழவு விழுந்ததற்காக 1914-18 ல் லக்ஷக் கணக்கான இந்தியர்களுக்கு ராஜபக்தி ஏற்பட வேண்டிய அவசியமேற்பட்டது. இந்தியர்களின் வரிப்பணத்திலிருந்து கோடிக்கணக்காக செலவிட வேண்டியிருந்தது. மறுபடியும் யுத்தம் ஏற்பட்டால் என்ன ஆகும் என்று நினைத்தால் மனம் பதறுகிறது.



ஆஸ்டிரிய சர்வாதிகாரி டாக்டர். டால்பஸ்

ஒருவேளை ஐரோப்பாவில் நெருக்கடி ஏற்பட்டு பிரிட்டன் இந்தியாவுக்கு சீர்திருத்தம் கொடுப்பதாக வாக்குறுதியளித்து மற்றொரு மாண்டேகு சீர்திருத்தம் கிடைத்தாலாகாதா என்று சொற்ப ஆசை. எல்லா தேசங்களும் ஆயுதத் தொழிலபிவிர்த்தியில் ஈடுபட்டால் மற்ற வர்த்தகப் பொருள்களிலுள்ள "அதிக உற்பத்தி" (over production) சற்று குறையாதா? வர்த்தக மந்தம் நிவர்த்தியாகாதா? என்று மற்றொரு ஆசை. மேல் நாட்டிலிருந்து சரக்குகள் இறக்குமதியாவது தடைபட்டு உள்நாட்டில் சில புதிய தொழில்கள் ஏற்படாதா என்று ஒரு கனவு.

இந்தக் குழப்பத்தில் கடவுளை என்ன பிரார்த்திப்பது என்பதே எனக்கு விளங்கவில்லை.

நரி குறுக்கே போனாலும் சரி, நெடுக்கே போனாலும் சரி, என் மீது விழாமல் போனால் போதும் என்பது தான் எனது பிரார்த்தனை.

(363-வது பக்கம் தொடர்ச்சி)

என்ன செய்திருக்கிறீர்கள்? இந்தியாவிலுள்ள இந்த தரித்திர அசுரனை தொலைக்க வேண்டுமானால் அதற்கு என்ன வழி? மகாத்மா ஒரு சுலபமான வழி காட்டியிருக்கிறார். கத்தி வேண்டாம், வில் அம்புகள் வேண்டாம், துப்பாக்கி, பீரங்கிவேண்டாம். யுத்த களம் வேண்டாம. வீட்டில் இருந்தபடியே அவனைக் கொல்ல மகாத்மா வழிகாட்டி யிருக்கிறார். அது என்ன வழி? அதுவே கதர் கட்டுவது. இந்த வழி உங்களுக்கும் தெரியும். அனைவரும் கையாண்டிருந்தால் இந்த அசுரன் முன்பே மாண்டுபோ யிருப்பான். போனது போகட்டும். இந்த தீபாவளிக் காவது உங்கள் கடமையைச் செய்யுங்கள்.

> கதர், கதர், கதர். கதரைத் தவிர வேறு எதையும் தீபாவளிக்கு எடுக்காதீர்கள். அப்பொழுது தான் உங்கள் தீபாவளி உண்மை தீபாவளியாக முடியும்.

தீபாவளி பணக்காரருக்குமட்டும் சொந்தமல்ல. சகல இந்தியருக்கும் சொந்தம். சகல இந்தியரும் தீபாவளியை கொண்டாடும்படியான நிலைமையில் இருந்தால்தான் அது தீபாவளி பண்டிகையாக முடியும். கதர் வாங்காவிட்டால் நூற்பவர்களும், நெய்பவர்களும் எப்படி தீபாவளி கொண்டாட முடியும்? அவர்கள் கஞ்சிக்கு திண்டாடும்போது சிலர் தீபாவளி கொண்டாடுவது நேர்மையாகுமா? ஒருநாளு மாகாது.

எல்லாரும் கதர் வாங்கினால்தான் எல்லாருக்கும் தீபாவளி வரும். தரித்திர அசுரன் தொலைவான். எல்லாரும் இன்புற்றிருக்கலாம். இந்த பெரிய கைங்கரியத்திற்கு உங்களாலானதைச் செய்யுங்கள்.

கதர் கட்டுங்கள்.



படார்சாமி கடிதங்கள்

(படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் படார் படார் என்று பகிரங்கமாகவே எழுதுவார்.)

சர். மீர்சா இஸ்மேயில்
திவான், மைசூர்

திவான்சாகேப்,

உண்மையில் உம்முடைய பேச்சுக்கள் ஒவ்வொன்றும் மாணிக்கமாகவே இருக்கிறது. உமது பிரசங்கங்கள் படிக்கப் படிக்க இனிக்கின்றன. மைசூர் ராஜாவைப் போன்ற ஒரு ராஜாவையும், உம்மைப் போன்ற ஒரு திவானையும் அடைய மைசூர் மிகுந்த பாக்கியம் பெற்றிருக்க வேண்டும். உமது பேச்சு ஒவ்வொன்றும் உலகப் போக்கை அறிந்து நேர்மையுடன் பேசுவதாகவே இருக்கிறது. மைசூர் சட்டசபை ஆரம்பத்தில் நீர் பேசிய பேச்சையும், சர்க்கரை மசோதா தோற்றுப் போனவுடன் நீர் கூறிய மொழிகளையும் படித்துப் படித்து ஆனந்தமடைகிறேன். உம்மை மனமார வாழ்த்துகிறேன்.

—படார்சாமி.

ஸ்ரீ. யமுனாதாஸ் மேத்தா
பம்பாய்

சண்டப் பிரசண்டரே,

எரிமலையைப் போல திடீர் திடீரென்று கிளம்பி மகாத்மாவைத் தாக்கிப் பேசுவது உமது பிறவிக் குணமாய்ப் போய்விட்டது. உமக்கு பம்பாயில் எவ்வளவு மதிப்பிருக்கிற தென்பதைக் காட்ட சென்ற வாரம் நீர் பேசிய கூட்டம் குழப்பத்தில் முடிந்ததே போதுமானது. மகாத்மா ராஜீயத்திலிருந்து விலகிவிட வேண்டுமென்று நீர் ஒருநாள் உறுமினீர். மைசூர் திவான் சர். இஸ்மா

யில் சொல்லியதைப் பார்த்தீரா? அவர் சொன்னார்:—"மகாத்மா காந்தி ராஜீயத்திலிருந்து விலக வேண்டுமென்று சொல்லுகிற கூட்டத்தில் நான் சேர்ந்தவனல்ல. இந்தியாவிலுள்ள பற்பல அபிப்பிராய முள்ளவர்களையும் சேர்த்துக்கொண்டு போகக்கூடிய திறமை அவரைவிட வேறு யாரிடத்திலும் இல்லை. அவர் இந்தியாவில் தனிப்பெரும் பதவி வகிக்கிறார். சமாதான தூதர்; உண்மை தேசபக்தர்; எல்லாவற்றையும் விட அவர் மிகக் கூர்மையான ராஜதந்திரி. இச்சமயம் அவர் ராஜீயத்திலிருந்து விலகினால், வீண்பேச்சுக் காரர்கள் கையில் தேசம் அகப்பட்டு கெட்டுப் போகும்." மேத்தாவே, ஒருவேளை நீர் பத்திரிகை படிக்காமல் இருக்கலாம் என்று நினைத்தே மேலே எடுத்துக் காட்டி யிருக்கிறேன். சர். இஸ்மெயிலை விட பொறுப்போ, அறிவோ, அநுபவமோ உமக்கு இருக்கிறதென்று கிழவிகூட நம்ப மாட்டாள். வாயை மூடும்.

—படார்சாமி.

கார்ப்பரேஷன் அங்கத்தினர்கள்

சென்னை

தோழர்களே,

அடுத்த மாதம் உங்கள் சபைக்கு புதிய தலைவர் தேர்தல் வரப் போகிறது. சரியோ, தப்போ, "கன்வென்ஷன்" என்ற ஒப்பந்தம் கார்ப்பரேஷனில் இருக்கிறவரை அதன்படி அடுத்த தலைவராக ஒரு கிறிஸ்தவரையே தேர்ந்தெடுக்க வேண்டும். கிறிஸ்தவர் என்ற பெயருக்குள் வெள்ளையரும் புகுந்துகொள்ள முயற்சிக்கலாம். அது தவறு. கிறிஸ்தவரென்றால் இந்திய கிறிஸ்தவரை குறிப்பிடுமேயொழிய வெள்ளையரை குறிப்பிடாது. ஸ்ரீ. சக்கரை செட்டியாரின் பொதுஜன சேவை மாசற்ற சேவையாகும். அவரையே தலைவராக தேர்ந்தெடுத்து அதன்மூலம் கார்ப்பரேஷன் மதிப்பை உயர்த்துவீர்களாக.

—படார்சாமி.

ஸ்ரீ. ஜே. பி. டெய்லா

சிம்லா

அன்பரே,

நீர் கையெழுத்திட்டு புதிதாய் வெளியிட்டிருக்கும் 10 ரூபாய் நோட்டை பார்த்தேன். இங்குள்ள தங்கத்தையே இறக்

குப் போயிற்று; அதற்குப் பதிலாக வந்த நோட்டுகளை யாவது நல்ல காகிதத்தில் அச்சிடக் கூடாதா? பூ என்று ஊதினால் பத்து காதம் தூரம் பறந்தோடும் படியான காகிதத்தை எங்குதான் கண்டு பிடித்தீரோ? மற்ற நாடுகளில் நோட்டுகள் அச்சடிக்க உபயோகிக்கும் காகிதம் எவ்வளவு பலமானதா யிருக்கிற தென்பது உமக்குத் தெரியுமா? இந்த மலரின் கடைசிப் பக்கத்தில், அமெரிக்காவில் உபயோகிக்கும் "காகித பலப் பரீட்சை" இயந்திரப்படம் வெளியிட்டிருக்கிறோம். அதைப்பாரும். இந்த வெங்காயச் சருகு காகித நோட்டுக்களை வாபஸ் வாங்கி, நல்ல காகிதத்தில் நோட்டு போடும்.

—படார்சாமி

ராய்ட்டர் கம்பெனி
லண்டன்

நண்பர்களே,

சோவியத் சர்க்காருக்கு விரோதமாக எந்த அனுமத்து பேர் வழி சொன்னாலும், உடனே இந்தியாவிற்கு அவசரத்தந்தி அனுப்புகிறீர்கள். எவ்வளவு பெரிய மனிதரானாலும் நல்ல வார்த்தைகள் சொன்னால் அதை மட்டும் தபாலில்தான் அனுப்புகிறீர்கள். இந்த பட்ச பாதம் எதற்காக? ஸ்ரீ. ஹெரியட் பிரஞ்சு நாட்டின் மாஜி முதல் மந்திரி. அவர் ரஷியாவை சுற்றிப் பார்த்து அங்குள்ள நிர்மாண வேலைகளையும், சமாதான முயற்சிகளையும் புகழ்ந்துபேசினார். சர்ச்சில் தும்மினால்கூட தந்தி யடிக்கும் நீங்கள், இதையேன் தந்தி மூலம் அனுப்பவில்லை? முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியுமா?

—படார்சாமி

சர்ச்சில் கும்பல்
லண்டன்

வாய் வீச்சர்களே,

பர்மிங்ஹாமில் கூடிய கன்சர்வேடிவ் மகாநாட்டில் ஏன் வாய் திறக்காமல் அடங்கி ஒடுங்கிக் கிடந்தீர்கள்? இந்தியாவிற்கு விரோதமாக நீங்கள் கொண்டுவந்த தீர்மானம் அதோகதி யாயிற்று. நீங்களும் முக்காடு போட்டுக் கொண்டீர்கள், பாவம்! அடுத்த வேலை என்ன?

—படார்சாமி

டாக்டர் வெல்லிங்டன் கூ
சீனப் பிரதிநிதி, ஜினிவா

சீன நண்பரே,

"மஞ்சூரியாவை ஜப்பான் கைப்பற்றியதை சர்வதேச சங்கத்தால் தடுக்க முடியாததால், கிழ் நாடுகளில் ஒரு பெரிய யுத்தம் நடக்க ஏற்பாடாகிறது" என்று நீர் கூறினராம். சர்வதேச சங்கத்தால் ஒன்றும் செய்ய முடியாது என்பதுதான் வெட்ட வெளிச்சமாய் விட்டதே. நீர் இனியும் எதற்காக சர்வதேச சங்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர் என்று கேட்கிறேன்.

—படார்சாமி.

பிரிட்டிஷ் துணி தாதர்கள்
சிம்லா

பழைய நண்பர்களே,

உங்கள் நாட்டு துணியை நாங்கள் அதிகம் வாங்க வேண்டுமென்று கேட்பதற்காக நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். இந்தியாவில் விளையும் பஞ்சுக் கணக்கை புரட்டிப் பார்த்தேன். இந்திய மில்கள் 2500 ஆயிரம் பேல்கள் உபயோகிக்கின்றன. ஜப்பான் வருஷத்திற்கு 1200 ஆயிரம் பேல்கள் இந்தியப் பருத்தி வாங்குகிறது. நீங்களோ வருஷத்திற்கு 165 ஆயிரம் பேல்கள் தான் வாங்குகிறீர்கள். இவ்வளவு சொற்பமாக பஞ்சு வாங்கும் நீங்கள், "எங்கள் துணியை அதிகம் வாங்குங்கள்" என்று கேட்க உங்களுக்கு வெட்கமில்லையா?

—படார்சாமி

கார்ப்படரேஷன்
பம்பாய்

தோழர்களே,

நன்றி விசுவாசமின்றி இந்திய முனிசிபாலிட்டிகளைப் பற்றி பொய்யும் புளுகுமாக லார்ட் லாயட் உளறியதற்காக, அவரைக் கண்டித்து நீங்கள் தீர்மானம் செய்ததை நான் பாராட்டுகிறேன். அத்துடன் நின்று விடக் கூடாது. முன்னல் அவருக்கு அளித்த உபசாரப் பத்திரங்களை ரத்துச் செய்ய வேண்டும். அவற்றை வைத்துக் கொடுத்த வெள்ளிப் பேழைகளை திரும்ப வாங்கவேண்டும். தேசிய இயக்கத்தில் சேர்ந்ததற்காக பட்டங்களையும் சன்னதுகளையும் சர்க்கார் ரத்துச்செய்யும்போது, தேசத்துரோகமாக நடக்கும் பேர்வழிகளுக்கு, ஏன் இப்படி செய்யக்கூடாது?

—படார்சாமி.



("கந்தர்வன்")

"புதையலெடுத்த தனம்போல்" என்று உள்ளக்களிப்பைக் காட்ட அருணகிரியார் சொன்னார். அதை கொஞ்சம் மாற்றிக்கொள்ளுவோம். புதையல் எடுத்த தினம்போல என்று வைத்துக்கொள்ளுவோம். அது எவ்வளவு குதூகலமான தினமாயிருக்குமென்பதை நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். ஒரு நாள் தபால் பார்த்துக் கொண்டிருக்கும்போது, ஒரு கடிதத்தை பிரித்துப் பார்த்ததும் அவ்வளவு சந்தோஷம் எனக்கு ஏற்பட்டது. எதிர்பாராமல் திடீரென்று—10-வருஷங்களுக்கப்புறம்—ஒரு நண்பரிடமிருந்து கடிதம் வந்ததென்றால், அதனால் ஏற்பட்டிருக்கும் சந்தோஷத்தை யாரால் தான் வர்ணிக்கமுடியும்?

நண்பர் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இந்த நாடகமேடைப் பைத்தியம் கொஞ்ச நாளாக என்னைப் பிடித்திருக்கிறது. "எப்படி சீர்திருத்தலாம்?" என்ற பேச்சே பார்க்கிற நண்பர்களிடமெல்லாம் பேசும் வழக்கமாய்விட்டது. ஆகவே இச்சமயத்தில் என் நண்பரின் வரவு இரட்டைச் சந்தோஷத்தை எனக்குக் கொடுத்தது. இத்துறையில் நண்பர் அரிய ஆராய்ச்சிகள் செய்தவர். சீர்திருத்த முறையில் நாடகம் நடிக்க பலரை தயார் செய்து நடத்திக்காட்டியிருக்கிறார். திருவனந்தபுரத்தில் வருஷா வருஷம் நடைபெறும் "கலை திருவிழா" ஏற்படுவதற்கு இவரே காரணம். கதையை வளர்க்கிறேனே யொழிய, பெயரைச் சொல்லவில்லையே என்று உங்களுக்கு கோபம் வருகிறமாதிரி தோன்றுகிறது. எனது நண்பர் பெயர் ஸ்ரீ. வி. ராம சுப்பிரமணியம். பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுத அவர் வைத்துக்கொண்டிருக்கும் மாறுபெயர் "ஆண்டி". பல நாடகங்கள் எழுதியிருக்கிறார். தற்கால தமிழ் பத்திரிகை வாசகர்களில் சிலரே இவர் பெயரை அறிந்திருக்கலாம். அது அவர் குற்றமல்ல. ஆடம்பரமன்னியில் உழைக்கவேண்டுமென்ற திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் எனது நண்பர். ஆகவே அவர் பெயர் பிரபலமாகாதது ஆச்சரியமல்ல.

குறிப்பிட்ட தினத்தில் நண்பர் வந்தார். க்ஷேமவிசாரணைக்குப் பின்னால், வழக்கம்போல நாடக உலகத்திற்கு சம்பாஷணை திரும்பிற்று. அவ்வளவுதான். அப்புறம் சுமார் 2-மணிநேரம் வரையில் நான் ஸ்தூலமாக ஒரே இடத்தில் இருந்தாலும் அங்கிருப்பதாக உணரவேயில்லை. பண்டையக்கால தமிழ் இலக்கியத்திலிருந்து புறப்பட்டு பற்பல காட்சிகளுக்குக் கொண்டுபோய், அப்புறம் இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர் காலம் முதல் நாளது வரையிலுள்ள பற்பல அபிவிருத்திகளையும் காட்டி, தென்னிந்தியாவிலுள்ள வித விதமான நடனம், நாடகம், கூத்து முதலியவைகளுக்கிடையே அழைத்துச்சென்று, கடைசியாக தமிழ்நாட்டில் நாடகம் தோன்றிய நாள்முதல் இதுவரையிலுள்ள அபிவிருத்திகளையும் காட்டி, ஒரு பெரிய மனோவேக யாத்திரையைப் பூர்த்தி செய்தார். பேச்சென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்? எப்பொழுது முடியப்போகிறது என்று நினைக்காமல், முடிந்துவிட்டதே என்று நினைக்கும்படியான பேச்சல்லவா பேச்சு !

2 மணி நேரத்திற்குள் நண்பர் சொல்லிய விஷயங்கள் ஒன்றிரண்டல்ல. ஒரே "காந்தி" மலரில் எழுதிவிடவும் முடியாது. இத்தடவை எதோ கொஞ்சம் சொல்லுகிறேன். தென்னாட்டில் ஏற்பட்டிருக்கும் நாடக வளர்ச்சியைப்பற்றி நண்பர் ஆராய்ச்சி செய்து வருகிறார். சென்ற நாலு வருஷங்களாக மலையாளத்திலும் தமிழ் நாட்டிலும் எத்தனையோ ஊர்களுக்குச் சென்று இதற்கான ஆதாரங்களை சேகரித்திருக்கிறார். ஆந்திர நாட்டிற்கு இனித்தான் போகப்போகிறார். தமிழ் நாடக மேடையைப் பற்றி நான் அவரிடம் பேசியதிலிருந்து தெரிந்தவிஷயங்களைக் கீழே கொடுக்கிறேன். நான் எதோ ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்து விட்டதாக யாரும் நினைத்துக்கொள்ளவேண்டாம். நான் சொல்லப்போகும் விஷயம் முழுவதும் நண்பர் ராம சுப்பிரமணியம் சேகரித்தது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

1880-ம் வருஷத்திற்கு முன்பு தமிழ் நாட்டில் நாடகமேடை என்பதே கிடையாது. தெருக் கூத்துகள்தான் உண்டு. தஞ்சை ராஜவம்சத்தார், பம்பாயில் அச்சமயம் பிரபலமாக நடந்து கொண்டிருந்த பார்சி நாடகக் கம்பெனியைப் பார்த்து ஒரு மாராட்டிய கம்பெனி ஏற்பட்டது. இந்த பார்சி கம்பெனியை ஆரம்பித்து நடத்திவந்தவர், சீமைக்குச் சென்று கல்வி பயின்ற ஒரு பார்சி. மாராட்டிய கம்பெனியின் நாடகத்தைப் பார்த்ததும், அம்மாதிரி நடத்த வேண்டுமென்ற ஆவல் ஸ்ரீ. கோவிந்தசாமி ராவ் என்ற தஞ்சை மாராட்டியருக்கு ஏற்பட்

(381-ம் பக்கம் பார்க்க)

குழந்தையிலும் போட்டியா?

("தேவிதாஸன்" எழுதுகிறார்.)

போட்டி, போட்டி, இந்த ஜப்பான் இருக்கிறதே, எடுத்ததிலெல்லாம் போட்டி போடுகிறது. அரிசியா போட்டி. துணியா போட்டி. விளையாட்டுச் சாமான்களா போட்டி. அன்று ஒரு பழ வியாபாரி வந்து பேசிக்கொண்டிருந்தார். பழவகைகள் எந்த நாடுகளிலிருந்தெல்லாம் வருகிறதென்று பேசிக்கொண்டிருந்தோம். "பழங்களில்கூட இந்த ஜப்பான் போட்டி போடுகிற தய்யா" என்றார். "எப்படி?" என்று கேட்டோம். "ஆப்பிள் தென்னாப்பிரிக்காவிலிருந்து வருவது பெட்டி ஒன்றுக்கு ரூ 16 ஆகிறது. இந்த ஜப்பான் அதைவிட பெரிய ஆப்பிள்களை பெட்டி 1-க்கு ரூ 8 ஆக் கொடுக்கிறது. இவ்வருஷம் ஆப்பிள் மார்க்கட்டையும் ஜப்பான் பிடித்துவிடும்" என்றார். எங்களுக்கு ஆச்சரியமாய் விட்டது. உடனே ஒரு நண்பர் ஆச்சரிய மேலீட்டால் "இந்த ஜப்பான் குழந்தைகளைக்கூட ஏராளமாக உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்ய ஆரம்பிக்குமோ?" என்று கேட்டார். அன்று அவர் கேட்ட கேள்வி தமாஷ் கேள்விதான். ஆனால் இன்று அது உண்மையாய் விடுமோ என்று சந்தேகப்படும்படி சில விவரங்கள் கிடைத்திருக்கின்றன. கேட்கிறீர்களா?




சென்ற வருஷத்து ஜப்பான் ஜனக் கணக்கைப் பார்த்தேன். அப்பாடா என்று ஒரு மகாப் பெரிய பெருமூச்சு விட்டேன். இந்த விஷயத்தில் கூடவா போட்டி? இது கூடவா. அமோக உற்பத்தி? இந்த உற்பத்தியில் ஜப்பான் எல்லா நாடுகளையும் தோற்கடித்து விட்டது! ஜப்பான் ஜனத்தொகை 834 லட்சம்: சென்ற வருஷத்தில் பிறந்த குழந்தைகளின் தொகை 2,182,743, அதாவது ஒரு மணிக்கு 249 வீதம் பிறந்திருக்கின்றன. இந்த கணக்குப்படி நிமிஷத்திற்கு 4 குழந்தைகள்.

இந்தியாவின் ஜனத்தொகை 35 கோடி. 10 வருஷங்களுக்கு முன்னால் ஜனத்தொகை சுமார் 32 கோடி. சென்ற பத்து வருஷங்களில் 3 கோடியே 30 லட்சம் பேர் அதிகரித்திருக்கின்றனர். இந்தக் கணக்குப்படி சென்ற பத்து வருஷ காலத்தில் மரணமானவர்களை கழித்துப் பார்த்தால், நிமிஷத்திற்கு 6½ குழந்தைகள் விதம் இந்தியாவில் அதிகரித்து வந்திருக்கின்றன. ஜப்பானில் இந்த மரணத்தை கழித்துப் பார்த்தாலும் நிமிஷத்திற்கு 2 குழந்தைகள் வீதம் அதிகரித்திருக்கின்றன. இந்தியாவின் ஜனத்தொகையில் நாலில் ஒரு பங்குதான் ஜப்பான் ஜனத்தொகை. அந்த வீதம் பார்த்தால் இந்தியாவில் நிமிஷத்திற்கு 8 குழந்தைகள் வீதம் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் 6½ குழந்தைகள் தான் அதிகரித்திருக்கின்றன. இந்த 6½ குழந்தைகளே அதிகமென்று சென்ஸஸ் கமிஷனர் கலங்கிப் போனார். தலைவர்கள் விசாரப்படுகிறார்கள். கர்ப்பத்தடைப் பேச்சு பலமாயிருக்கிறது. ஏராளமான நீர்வளம், நிலவளம், மலை வளங்களுள்ள இந்தியா இப்படி கலங்குகிறது. வெறும் சமுத்திர வளமும், எரிமலை வளங்களுமுள்ள ஜப்பான் என்ன செய்யும்? அதிக ஜனத்தொகையை ஏற்றுமதி செய்து தானே ஆகவேண்டும்? கொரியாவுக்கு ஏற்றுமதி செய்து வந்தது. இப்பொழுது மஞ்சூரியா கிடைத்திருக்கிறது. இனி எந்த நாட்டுக்கு ஆபத்து வரப்போகிறதோ தெரியவில்லை!

(379-ம் பக்கத் தொடர்ச்சி)

டது. அவர் போலீஸ் இன்ஸ்பெக்டராய் வேலை பார்த்து வந்தார். அவரே முதலில் தமிழ்நாட்டில் நாடகக் கம்பெனியை ஆரம்பித்தவர். தமிழ் நாடக மேடைக்கு வித்தூன்றியவர் அவரே. அவர் கம்பெனி 1881-ல் ஆரம்பமாயிற்று. முதலில் மாராட்டிய பாஷையில் நடத்தினர். அப்புறம் தமிழில் நடத்த ஆரம்பித்தார். இதைப்பார்த்து, அடுத்த வருஷத்தில் கல்யாணராமய்யர் கம்பெனி ஆரம்பமாயிற்று. இதற்கு ஒட்டும் விசையாய் நின்றவர் நடேச தீக்ஷிதர். சமஸ்கிருத பண்டிதராகையால், காளிதாசன் நாடக முறையை அநுசரித்து நடத்தினாராம். ஆனால் தற்கால நாடகமேடைகளில், சம்பாஷணைகள், ஒப்பாரி, புலம்பல் எல்லாம் பாட்டுகளில் இருக்கின்றனவே, இவை இந்த இரண்டு கம்பெனிகளின் ஆரம்ப காலத்தில் கிடையாது. சங்கீதத்தையும், சின்னையும் புகுத்தி ஜனங்களின் மனதை அதிகமாய் கவர்ந்த புகழ் அப்பாவு பிள்ளை கம்பெனியைச் சேர்ந்தது. பெங்களூர் அப்பாவு பிள்ளை கம்பெனி தமிழ்நாட்டில் தோன்றிய மூன்றாவது கம்பெனி. மற்ற விஷயங்களை அடுத்த "காந்தி" மலரில் சொல்லுகிறேன்.

நீங்கள் கதர் வாங்கா விட்டால்—



ஏழைமக்கள் நூற்ற நூலையோ, பசியுள்ள தறிகாரர் செய்த துணியையோ வாங்குவாரில்லாமல்,
அவர்கள் பட்டினியால் வருந்துவார்கள்.

ஜ்யார்ஜ் ஜோஸப்

(வ. ரா.)

தனித் தமிழ் நெடுங்கணக்குக்கும் (எழுத்துக் கூட்டத்துக்கும்) தனித் தமிழ் ஒலிக்கும் கட்டுப்படாத, அந்நியநாட்டுப் பெயரைக் கொண்ட ஜ்யார்ஜ் ஜோஸப் அவர்களும் தமிழரா, தமிழ்நாட்டுத் தலைவரா என்று சிலர் உறுமிக்கொண்டு கேட்கலாம். அப்படிப் பார்த்தால், 100-க்கு தொண்ணூறு தமிழ்நாட்டுத் தலைவர்களை தேசப்பிரஷ்டம் செய்யவேண்டியதுதான். ராமஸ்வாமி நாய்க்கர் கன்னடியர். வரதராஜுலு நாயுடு தெலுங்கர். சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் ரத்தத்தில் ஆரியம் கலப்பு என்று எளிதிலே சொல்லிவிடலாம். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் என்னமோ, தப்பித்துக் கொள்ளுவார். இதிலும் அவருக்கு அதிருஷ்டம்தான். ஆனால், ஜோஸப் அவர்கள், தமிழ்நாட்டுத் தலைவர்களில் தலைசிறந்து நிற்பவர்களுள் முன்னணியில் நிற்பவர். ஜோஸப் என்ற பெயரை, சரியாக உச்சரிக்க முடியாத குறையினாலோ, அல்லது அன்பு தவழும் அருமையாலோ, மதுரை வாசிகள் ஜோஸப் அவர்களை ரோஜாப்பூ துரையாக்கி விட்டார்கள்.

ரோஜாப்பூவில், மேலே மலரும் அடியில் முள்ளும் இருக்கின்றன என்பது நான் சொல்லித் தெரியவேண்டிய சங்கதியா? மலர் தனது மணத்தாலும் வனப்பாலும் கண்டவர்களைக் காந்த சக்தியுடன் இழுக்கும். அலட்சிய புத்தியுடன் தொட்டால், ரோஜா தனது முட்களால் குத்தும், தைக்கும். ஜோஸப் அவர்களுக்கு ரோஜாவின் இரண்டு தன்மைகளும் உண்டு என்று கூசாமல் கூறலாம்.

ஜோஸப் அவர்கள் திருவாங்கூர் சமஸ்தானத்தில் செங்கனச்சேரி என்ற ஊரில், ஸிரிய கிருஸ்தவ வகுப்பில் பிறந்தவர். இப்பொழுது வயது 47. இவருடைய தகப்பனர் இன்னும் உயிருடனிருக்கிறார். சென்னை மில்லர் காலேஜ் என்று சொல்லப்படும் கிருஸ்தவக் கல்லூரியில், பி. ஏ. வரையில் படித்துவிட்டு, சீமைக்குப் போய், ஸ்காட்லந்து தேசத்தில், எடின்பர்க் நகரில், எம். ஏ. பட்டம் பெற்று, பின்னர் பாரிஸ்டர் ஆனார். சென்னை கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினராயிருந்த கர்டியூ துரை அவர்கள் ஸப் ஜட்ஜ் பதவி தூண்டிமுள்ளில், ஜோஸப்பைப் பிடிக்க எத்தனித்த

பொழுதும், அதற்குக் கட்டுப்படாமலிருந்த ஜோஸப்பை, இப்பொழுது சிலர் கோபிக்கின்றார்கள். ஜோஸப் அவர்களின் நோய், மூளைக்குறைவால் ஏற்பட்டதல்ல: ஜோஸப்பின் நோய் அபரிமிதமான மூளையாகும்; அதன் கட்டுக்கடங்காத கொதிப்பாகும்.

பெஸண்டு அம்மையாரின் ஹோம்ரூல் இயக்கக் காலத்தில், அதில் தீவிரமாய்க் கலந்துகொண்டு, இங்கிலாந்துக்குச் சென்ற தூதர்களில் ஜோஸப் ஒருவர். அப்பொழுது ஐரோப்பியப் போர் காலம். கப்பல் ஜிப்ரால்டர் வரையிலும் சென்றது. ஹோம் ரூல் தூதர்கள், சீமைக்கு வரலாகாது என்று இங்கிலீஷ் துரைத்தனத்தார், தடுத்து விட்டார்கள். "மனிதன் எப்பொழுது மிருகப்பிராயம் அடைகின்றான்" என்பது தெரியுமா என்று என்னை ஜோஸப் கேட்டு விட்டு, ஜிப்ரால்டர் நகரில் (ஸ்பெயின் தேசத்தில்) ஹோம்ரூல் தூதர்கள் யாவரும்—ஜோஸப் உள்பட—மிருகப்பிராயம் அடைந்த விநோதத்தை ஜோஸப் வர்ணிப்பதைக் கேட்டால், மயிர்க்கூச்செறியும். தோல்விக் காலத்தில் சஞ்சலமும் மிருகப் பிராயமும் மனிதனுக்குச் சாதாரணமாய் வரக்கூடியவை என்று ஜோஸப் சொல்லி முடித்தது, அட்சரம் பிசகாமல், என் நினைவில் இன்றைக்கும் இருந்து வருகிறது.

மனவருத்தத்துடன் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்த ஜோஸப், முதன் முதலாக, ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரை, சீரங்கம் (கொடியாலம்) ரங்கஸ்வாமி அய்யங்காரின் வீட்டில் ஏனைய நண்பர்களின் மத்தியில் சந்தித்தார். சந்தித்தது முதல், ஜோஸப்புக்கு "சனியன்" பிடித்தது என்றே சொல்லலாம். அதுமுதல் சுமார் பதினைந்து வருஷ காலம் வரையில், ஆச்சாரியார்—ஜோஸப் நட்பு, மூக்கின் மேல் விரல் வைத்து திகைக்க வேண்டிய சங்கதியா யிருந்தது. ஆச்சாரியாரின் "தர்க்க" மூளையும், ஜோஸப்பின் "தாக்கு" மூளையும் ஒன்று சேர்ந்து உறவாடின. இருவர் கலந்து யோசித்ததே, பெரும்பாலும், நமது ஹிந்துஸ்தானத்தின் காங்கிரஸ் வேலைத்திட்டமாய் அமையப் பெற்றது என்றும் சொல்லுவதற்கு இடமுண்டு. சீரங்கக் கூட்டத்தில், ஆச்சாரியார் சொன்னதை, மற்றவர்கள் எளிதிலே, ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் ஜோஸப்போவாக்கியத்துக்கு வாக்கியம் வாதம், சண்டை, குஸ்தி. எல்லாம் வாயால்தான். கடைசியில் சமாதானம். ஆச்சாரியாரின் தெள்ளறிவு ஜோஸப்பின் மேதையை ஒப்புக்கொண்டது. ஜோஸப்பின் கட்டுக்கடங்காத கருத்துக்கள், ஆச்சாரியாரின் தர்க்க பாதுகாப்புகளை வேண்டின. பொன் மலர் நாற்ற முடைத்து போல, இருவரும் ஒன்று சேர்ந்து, தமிழ் நாட்டில், பிரகாசத்துடன் ஜொலித்தார்கள்.

சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் இயக்கம் தோன்றிற்று. தமிழர்களை வகுப்புகளாகப் பிரிப்பது பாபம், தர்மமல்ல, ராஜ தந்திரமல்ல என்று அழுத்தமாய் ஆட்சேபித்தவர்கள் மூவர். திவான் பகதூர் கேசவபிள்ளை, வரதராஜுலு நாயுடு, ஜ்யார்ஜ் ஜோஸப். இவர்கள் மூவரிலும் ஜோஸப்பே, தமது உணர்ச்சியைத் திருத்தமாகவும் தீவிரமாகவும் காண்பித்தவர். சார்டியூ அவர்களின் தயவை எட்டத் தள்ளினர்; ஜஸ்டிஸ் கட்சியினருடன் உறவாட, ஜோஸப் சிறிதும் மனங்கொள்ளவில்லை. பாரிஸ்டர் தொழிலிலும் எதிர்பார்த்த வருமானம் வராதகாலம். தகப்பனுருக்கும், இவரது அரசியல் கொள்கைகள் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இந்தக் காலத்தில், "தேசமே பெரிது; விடுதலை தான் உண்மை; நாட்டாரை வகுப்புகளாகப் பிரித்து கட்சி சேர்ப்பது தவறு" என்று சொல்லக்கூடிய ஆற்றல் ஜோஸப்புக்கு எங்கிருந்து வந்தது? மனிதனுக்கு அவன் சொந்த வலிமை எவ்வளவு இருந்த போதிலும், நெருக்கடியில், மனம் ஒடிந்து போவான். அந்த சமயத்தில் கை கொடுப்பவர்கள் கடவுளும் கற்பரசியான மனைவியும் தான். இவர்கள் இருவருமே, ஜோஸப்புக்கு அக்காலத்தில் துணை நின்றவர்கள்.

ஜோஸப்பின் தர்ம பத்தினியாரைப் பார்க்காதவர்கள், ஜோஸப்பின் தியாகத்தின் மூலத்தை அறிய முடியாது. ஜோஸப் ஏக்கமடைந்த போதெல்லாம், ஊக்கம் கொடுத்தவர் அந்த உத்தமியே. மதுரையில், வரதராஜுலு நாயுடு வழக்குக் காலத்தில், ரோஜாப்பூ துரை பங்களாவில், வந்தவர்களுக்கெல்லாம் விருந்து. இரவிலே கண் விழித்து, வழக்கைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தவர்கள் யாவருக்கும்—இரவில் இரண்டரை மணிக்குக்கூட—தமது கையால் காபி கொடுத்து, உற்சாக மளித்த அந்த உத்தமி, நாட்டுக்கு எவ்வளவு நலம் செய்தார் என்று சொல்லுவதற்கு இது காலமல்ல. ஜோஸப்பின் தீவிரமான கொள்கைகளுக்கு—தியாக மொன்றையே வேண்டும் கொள்கைகளுக்கு—உற்ற துணையாக, சலிக்காத மந்திரியாக, அலுப்பில்லாத தோழியாக அமைந்த ஸ்ரீமதி ஜோஸப் அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நாட்டு விடுதலையில் அந்த அம்மாளுக்கு இருந்த உற்சாகமே, ஜோஸப்பின் உற்சாகம் என்று சொன்னாலும் பொருந்தும்.

ரௌலட் சட்ட இயக்கம். காந்தி சென்னைக்கு 1919ம் ஆண்டு பிப்ரவரி மீ வந்திருக்கிறார். தமிழ் நாட்டுப் பிரயாணத்திட்டம் போட்டாகிவிட்டது. மதுரையிலே, காந்தி எங்கு தங்குவது? நிச்சயமாய் ஜோஸப் பங்களாவில் தான். ரௌலட் சட்டத்தை ஆட்சேபித்து, சிறை செல்லத் தயாரா யிருப்பவர்களின் ஜாப்தா எடுக்

கப்பட்டது. ஜோஸப் அப்பொழுது கையெழுத்துப் போடவில்லை, சிறைசெல்ல. மதுரையில் காந்தி தங்கின அன்றைய தினம், ஜோஸப் புக்கு கோர்ட்டில் அலுவல். கச்சேரியிலிருந்து, பிற்பகலில் ஜோஸப் பங்களாவுக்குத் திரும்பி வந்தார். வரும் பொழுதே, ஜோஸப் காந்தியைச் சந்திக்கும்படி நேர்ந்தது. "ஜோஸப்! உமது வீட்டை வெடிகுண்டு வைத்து தகர்க்க எத்தனிக்கிறேன்" என்றார் காந்தி. ஜோஸப்புக்கு விளங்கவில்லை; விஷயம் என்ன வென்றால், சற்று முன்னர்தான், காந்தி ஸ்ரீமதி ஜோஸப்போடு, நீண்டநேரம் வாதம் செய்து, சிறைக்குச் செல்லத் தயார் என்று அந்த அம்மாவினிடமிருந்து கையெழுத்து வாங்கின சமயம். ஜோஸப்பின் மனைவி கையெழுத்துப் போட்டதை, வெடிகுண்டாக வர்ணித்துக் கேலி செய்தார் காந்தி. மறுவார்த்தை பேசவில்லை ஜோஸப். உடுப்பைக் கூட களையாமல் (என்பது வதந்தி) ஜோஸப் தாமும் சிறை செல்ல, கையெழுத்துப் போட்டார்; புருஷன் மனைவி என்றால், இப்படியல்லவா இருக்கவேண்டும்? காந்தியின் சந்திப்பு, ஜோஸப்பை அகில இந்திய மனிதனுகச் செய்து விட்டது.

ஜோஸப்பின் அன்பும் தியாகமும் எத்தன்மைத்து என்பதற்கு ஒரு சிறு கதை உண்டு. ஜோஸப்பின் தோட்டக்காரன் ஒரு ஹரிஜனப் பையன். அவனுக்குத் தாய் தந்தை கிடையாது. ஜோஸப் தம்பதிகள்தான் அவனது தாயும் தந்தையும். இவர்களிருவரும் சிறை செல்லப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், அவன் காந்தியிடம் போய், அவர் காலை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, "நானும் ஜெயிலுக்குப் போகிறேன், அம்மா, துரை இரண்டுபேரும் ஜெயிலுக்குப் போகிறது, நான் மாத்திரம் பங்களாவில் இருக்கிறதோ! முடியாது. உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று கண்ணீர் விட்டுக் கதறினன். காந்தி ஆட்சேபித்தார்; இந்த அதிசயத்தைக் கண்டு களித்தார். முடியாது என்றார். கடைசியாக, மதுரை ரயில் ஸ்டேஷன் வரையில் காந்தியைத் துரத்திக்கொண்டு போய், அவன் கையெழுத்துப் போட்டான். ஆனல் இடையே, அவன் இறந்து போனன். வேலைக்காரன் என்று எண்ணுமல், தாம் பெற்ற குழந்தையாக பாவித்த ஜோஸப் தம்பதிகளை உலகம் வாழ்த்தாம லிருக்க முடியுமா? ஜோஸப்பின் அன்பும் ஆத்திரமும் திடீரென்று பரவும் தொத்து நோயைப் போல.

பின்னர், அலகாபாத்தில் "இண்டிபெண்டன்ட்" பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்து நாட்டுக்கு ஜோஸப் தொண்டு செய்தது பழங்கதை. பெஸண்டு அம்மையார் சத்தியாக்கிரக இயக்கத்தை, வாய்கொண்ட மட்டிலும், தமது "நியூ இந்தியா" பத்திரிகையில் திட்டினர். ஒருவராவது, அதற்குப் பதில் சொல்ல தைரியமில்லாம

விருக்கிற சமயத்தில், பெஸண்டு அம்மையாரின் மாஜி பக்தரான ஜோஸப் "இன்டிபென்டண்ட்" பத்திரிகையில், சரமாரியாக பதில் கொடுத்து விட்டார். கொள்கை என்ற விடத்தில் ஆள் பெரிதல்ல என்பது ஜோஸப்பின் கட்சி "அந்தக் கிழவியை (பெஸண்டு அம்மையாரை) கவனிக்க வேண்டாம், பதில் சொல்லாமல், நாம் காரியத்தில் கண்ணு யிருப்போம்" என்று காந்தி, ஜோஸப்புக்கு எழுதினர். பிறகு, பெஸண்டு அம்மையாரைத் தாக்கி, ஒரு வார்த்தை யேனும், "இண்டிபென்டன்ட்" பத்திரிகையில் வரவில்லை. தலைவருக்குக் கீழ்ப்படியும் அருங்குணம், ஜோஸப்பினிடம் அபரிமிதமாகக் காணப்படும்.

தாம் கிருஸ்தவன் என்று சும்மா யிருக்கலாகாதா? ஏன் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு, தீண்டாமையை விலக்கப் பாடு படவேண்டும்? ஜோஸப்பின் உள்ளத்தின் துடி துடிப்பை என்ன வென்று சொல்லுவது? சதா கர்மம் செய்வதில் அவருக்கு தியானமும், திருஷ்டியும். "சோம்பல் மிகக் கொடிது பாப்பா" என்ற பாரதியாரின் திருவாக்கியத்தை, ஜோஸப் அவர்கள் முற்றும் உணர்ந்தார் போலும். அவருடைய செயல்களை விவரமாகக் கூறுவது, இந்தச் சித்திரத்தின் நோக்கமல்ல.

மகாத்மா சிறையிலிருந்த பொழுது, அவரது "யங் இந்தியா" பத்திரிகையை ஜோஸப் எவ்வளவு அழகாக நடத்தி வந்தார்! "இந்தியன் ஸோஷல் ரியார்மர்" பத்திரிகையின் ஆசிரியரான கீர்த்தி வாய்ந்த நடராஜன் அவர்கள், காந்தியைப்பற்றி மதிப்புக் குறைவாக எழுதிவிட்டு, வாதத்தில் ஜோஸப் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு மூச்சுத் திணறிப் போனது பழங்கதை. இந்த தேசத்தில், அழகாகவும், சொல் வலிமையுடனும் அர்த்த புஷ்டி குறையாமல், நவீனக் கருத்துக்கள் குலுங்கும்படியாகவும் இங்கிலீஷ் எழுதக்கூடிய ஒரு சிலரில் ஜோஸப் ஒருவர் என்று அப்பொழுது எல்லோருக்கும் விளங்கிற்று.

ஜோஸப் அடிக்கடி மாறும் தன்மை கொண்டவர் என்று சிலர் இப்பொழுது அசட்டையாகப் பேசுகிறார்கள். உலகத்தில் மைல்கல்லும் மதியீனனும் தான் மாறாமல், இருந்த விடத்திலேயே, அசையாமல் நிற்பார்கள். மனிதன் எப்பொழுதும் வளர்ந்து கொண்டே போகிறான். வளரும் பொழுது, மாறுதல் தோன்றுவது இயல்பு. ஜோஸப், அனுபவத்தோடு கூடிய மேதாவி. அவர் எவ்வாறு மாறாமல் இருக்கமுடியும்? மேதையை ஒட்டி அனுபவமும், அனுபவத்தை ஒட்டி அறிவும் மாறத்தான் செய்யும்.

உலக கத்தோலிக்கக் கிருஸ்தவர்களுக்கு குரு போப் ஆவர். அவருக்கு அடுத்தபடியாக, கார்டினல் என்ற பட்டம். சீமையிலே, கார்டினல் நியூமன் என்ற மேதாவி இருந்தார். அவரை க்ஷணப் பித்துக் கொண்டவர் என்று சிலர் தூற்றியதுண்டு. ஆனால் அவருடைய மேதையையும் உண்மை உணர்ச்சியையும், எவராலும் மறுத்துப் பேச முடியவில்லை. ஜோஸப், பார்வைக்கு, பல போர்க்களங்களிலே தோற்றவர். ஆனால் நெஞ்சம் தளராதவர். அவருடைய தேசப்பற்றுப் பித்து அவரை எளிதிலே விட்டுவிட முடியுமா? மனச் சஞ்சலமடைந்தவர்களுக்குக் கத்தோலிக் கிருஸ்தவமார்க்கம் ஒருவாறு அமைதி கொடுக்கும் என்பது எனது துணிபு. எனவே, ஜோஸப் அவர்கள் கத்தோலிக் கிருஸ்தவராக மாறினதில், எனக்கு வியப்பே இல்லை. ஜோஸப் எரிமலை. அவரால் ஓய்ந்திருக்க முடியாது. எரிமலை எப்பொழுது தன் ஜ்வாலையை வெளியே கக்கும் என்று எவரும் சொல்லவும் முடியாது. நாம் எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான். அடுத்த பெரிய விடுதலைப் போராட்டம். அதில் ஜோஸப்பை முன்னணியில் நிச்சயமாய்ப் பார்க்கலாம். அதற்கு நான் ஜாமீன். அதற்கு ஸ்ரீமதி ஜோஸப் ஜாமீன். அதற்கு ஜோஸப்பின் மறுக்கலப்பில்லாத தேசபக்தியும், மாசற்ற மனச் சாட்சியும் ஜாமீன்.

அடுத்த "காந்தி" மலரில் தேசபக்தர் வ. உ. சிதம்பரபிள்ளையைப்பற்றி நண்பர் வ. ரா. எழுதுவார்.

பல் பலே!

அமெரிக்கா டாக்டர் ஒருவர் ஒரு மருந்து கண்டுபிடித்திருக்கிறாராம். அதை சாப்பிட்டவன் பொய் சொல்ல முடியாதாம். உண்மையைக் கூறிவிடுவானாம்.

இந்தியாவில் அமைதி ஏற்பட்டு விட்டதாக சீமைக்கு தந்தி யனுப்பும் பேர்வழிகளுக்கு இதில் ஒரு டோஸ் கொடுத்துப் பார்க்க வேண்டும்.

*　　*　　*　　*

இந்தியாவில் சென்னை மாகாணத்தில்தான் பத்திரிகைகள் அதிகமென்று ஒரு வாரப் பத்திரிகை சொல்லுகிறது.

அதற்குத் தக்கபடி உணர்ச்சியோ அறிவோ வளர்ந்ததாகத் தெரியவில்லை.

*　　*　　*　　*

"திடீரென்று ஒருநாள் ஒரு பெரியவர் தோன்றி சமூக சச்சரவுகளை நீக்கி ஒற்றுமை ஏற்படுத்தப் போகிறார்" என்று மௌலானா ஷவுகத் அலி பேசினார்.

மிகப் பெரிய மனிதராகிய ஷவுகத் அலி பார்வைக்குக்கூட அவர் அகப்படாமல் போக முடியுமா?

*　　*　　*　　*

இரண்டு ஜப்பான் மத குருக்கள் மகாத்மாவைப் பார்த்து பேசியதாக ஒரு தந்தி சொல்லுகிறது.

முதலில் பாதிரி; அப்புறம் வியாபாரி; பின்னால் சிப்பாய் என்பதுதான் மேல் நாட்டு ராஜதந்திரம். மற்ற விஷயங்களில் மேல்நாட்டாரை பின்பற்றும் ஜப்பான், இவ்வழியில் ஏன் மாறுதலாக நடக்கவேண்டும்?

*　　*　　*　　*

குருடர்கள் மிகத் திறமையாக பெங்களூரில் நாடகம் நடத்திக் காட்டியதாக ஒரு செய்தி கூறுகிறது.

தமிழ்நாட்டு நாடகங்களை குருடர்கள்தான் பார்க்கவேண்டும்.

*　　*　　*　　*

அமெரிக்காவில் ஒரு ராஜா யிருந்தால், தற்சமயம் அங்கு பரவியிருக்கும், கொள்ளை, கொலைகள் குறையும் என்று ஒரு கொள்ளைக்காரர் சொல்லுகிறார்.

அமெரிக்காவில் பெண் கொண்ட இந்தூர் ராஜாவுக்கு ஏன் பட்டஞ் சூட்டக்கூடாது?

குறள் விளக்கம்

கடா அக் களிற்றின் மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில் —குறள் (1087)

Like blinkers covering the raging elephant's eyes
Is the robe that rests on her swelling breasts

—ஆங்கில குறள் : கு. சீனிவாசன்.

கன்னிகையைப் பார்த்த வாலிபன் அவள் மீது காதல் கொள்ளுகிறான். கன்னியின் கண்கள் இவனை வருத்துவதால், அவை எமனோ என்றும், மிரள மிரள ஓடுவதால் மானோ என்றும், அன்புடன் பார்ப்பதால் கண்ணோ என்றும் யோசிக்கிறான். இப்படியாக மங்கையின் அழகில் ஈடுபட்டு இன்புற்றிருக்கும் போது, மேலே கண்டபடி நினைத்ததாக வள்ளுவர் கூறுகிறார்.

மதங்கொண்ட யானைக்கு முகப்படாம் போட்டு கண்ணை மறைப்பதுண்டு. அம்மாதிரி மறைக்காவிட்டால் அது எதிர்ப்பட்டவர்களை கொன்று விடுமாம். அதைப்போல இம் மங்கையின் சாயாத கொங்கை துணியால் மூடப்படாமலிருந்தால், தன்னைக் கொன்று விடுமோ என்று ஆச்சரியப்படுகிறானாம். குலோத்துங்கன் கோவையில் இதைப்பற்றி சொல்லியிருக்கும் மற்றொரு பாடலை கீழே குறிப்பிடுகிறோம்:—

மட்டார் குழலி கலவியி னீத்தபோன் வார்திரும்பக்
கட்டா தொருகணந் தாழ்த்தன ளேற்கவி யானைசெம்பொற்
கோட்டார மன்ன குமார குலோத்துங்கன் கோழிவெற்பில்
எட்டா னையுநிலை கேட்டோடு மூதண்ட மேன்படுமே.

அடுத்த "காந்தி" மலரில் வரும் குறள் விளக்கப் படத்தை எதிர்பாருங்கள்.



மனித இயந்திரம்

கூச்சத்தை விடு

அளவு கடந்த கூச்சம் மனிதரின் முன்னேற்றத்தைத் தடுத்து விடுகிறது. சுயமதிப்பிற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு கூச்சம் இருக்கவேண்டியதுதான். ஆனால் எடுத்ததிலெல்லாம் கூச்சப்பட ஆரம்பித்தால், அதைவிட முன்னேற்றத்திற்குப் போடக்கூடிய பெரிய முட்டுக்கட்டை வேறு கிடையாது.

ஒருவரைப் பார்த்தவுடன் நிமிர்ந்து பார்க்க தைரியமில்லாமல் குனிந்து கொள்ளுகிறார்கள். முக்கியமாய் பேசவேண்டிய சமயத்தில் கூச்சங்கொண்டு வாய்மூடி மௌனிகளாய் விடுகிறார்கள். மற்றவர்களைவிட தாங்கள் கீழ்ப்பட்டவர்கள் என்று மனோராஜ்யம் செய்கிறார்கள். தெருவில் நடக்கும்போதோ, ஒரு கூட்டத்தில் இருக்கும்போதோ தன்னைப் பற்றியே எல்லாரும் நினைப்பதாகக் கூச்சமுள்ளவன் எண்ணுகிறான். இதனால் கூச்சம் அதிகமாகி தன்னிடம் பல குறைகள் இருப்பதாக எண்ணி ஒடுங்குகிறான்.

இவற்றிற்கெல்லாம் காரணமென்ன? அனாவசியமான தன்னுணர்ச்சியே யாகும். இவனைப்பற்றி நினைப்பதைவிட வேறு வேலைகள் மற்றவர்களுக்கு இருக்கின்றன. ஆகவே இவன் தன்னுணர்ச்சியால் கட்டும் மனக்கோட்டைகள் வீண் வேலை. இதனால் இவனுக்கு தைரியம் குறைகிறது. பிற விஷயங்களில் ஆராய்ச்சியில்லாமல் போகிறது. இவன் நேரமெல்லாம் தன்னைப்பற்றி நினைப்பதிலேயே வீணாகிறது.

கூச்சத்தை விடவேண்டும். கூச்சத்தை விட்டால்தான் முன்னுக்கு வரமுடியும். இதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று பல விஷயங்களில் சிரத்தை கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் தன்னைப்பற்றி நினைக்க நேரமில்லாமல் போகும். மற்றொன்று, வாழ்க்கையில் ஒரு லட்சியம் வைத்துக்கொள்ளவேண்டும். லட்சியம் வைத்து அதை அடைய உறுதியோடு வேலை செய்தால், கூச்சம் தானாகவே ஓடிப்போகும். லட்சியம் ஏற்பட்டால் அதற்கான வேலைகளைச் செய்யவே நேரம் போதாது. வீணான மனக்கோட்டைகளுக்குச் சாவகாசம் கிடைக்காது.

வாழ்க்கையில் லட்சியம் இல்லாதவனையே இந்த கூச்சம் என்றனியுன் பிடித்தாட்டும்.

"கிராமத்திற்கு திரும்பு"

("தேவிதாசன்" எழுதுகிறார்.)

தூங்குகிறவன் தொடையில் திரித்தவரையில் லாபம் என்பதுபழமொழி. ஏராளமான இயந்திரங்களைக்கொண்டு ஏராளமாக உற்பத்தி செய்துவந்த நாடுகள் இதுவரை இந்த வேலையைத் தான் செய்து வந்தன. இயந்திர சாதனங்களோ நவீன கைத்தொழில் சாஸ்திர ஞானமோ இல்லாத நாடுகளை இந்த இயந்திர நாடுகள் கொள்ளை யடித்து வந்தன. குழந்தைக்கு கொடுக்கும் பால் முதல் கிழவருக்கு வேண்டிய மருந்துகள், ஆகாரச் சத்துக்கள் வரையில் ஏராளமாக உற்பத்தி செய்து, இந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தன. பெரிய நாட்டு ஜனங்கள் கோடிக் கணக்காக சோம்பேறிகளாய் விட்டால், அவர்களுக்கு வேண்டியவைகளை சிறிய நாட்டு ஜனங்கள் உற்பத்தி செய்வது கஷ்டமல்லவா? ஆகவே அதிகமாகவும், குறைந்த சிரமத்திலும் செய்யக்கூடிய இயந்திரங்களை கண்டு பிடித்தார்கள். இந்த இயந்திரங்கள் பிசாசுகளைப் போல கணக்கில்லாமல் உற்பத்திசெய்து வந்தன. இம்மாதிரி வெகுகாலம் நடந்துவந்தது. இச் சமயம் ஐரோப்பிய மகாயுத்தம் வந்தது. இயந்திர நாடுகள், சோம்பேறி நாடுகளுக்கு முன் போல சரக்குகள் அனுப்புவது தடைப்பட்டது. உடனே என்ன ஏற்பட்டது தெரியுமா? சோம்பேறி நாடுகள் தங்களுக்கு வேண்டிய சரக்குகளைச் செய்ய நிர்ப்பந்தம் ஏற்படவே, கொஞ்சம் சுறு சுறுப்படைந்தன. இதன் பலனாக



விஞ்ஞானம் என்ற ரிஷி இயந்திர பூதம் என்ற பிசாசை உற்பத்தி செய்கிறார்.

சோம்பேறி நாடுகளிலும் இயந்திரங்கள் தோன்றின.

யுத்தம் நின்றது. பழைய விற்பனை இனியும் நடக்குமென்று இயந்திர நாடுகள் எதிர்ப்பார்த்தன. சோம்பேறி நாடுகள் முன் போல சோம்பேறிகளாய் இருக்கவில்லை. உடனே பிடித்தது சனியன். ஏராளமாக உற்பத்தியாகிற சரக்குகளுக்கு செலவில்லை. வர்த்தகம் மந்தமாயிற்று. இதனால் வேலையில்லா கஷ்டம் அதிகமாயிற்று. உலகமெங்கும் துன்பம் பெருகிற்று. இதுவே தற்கால நிலைமை. இதற்கு அடிப்படையான காரணம் எது? இயந்திரங்களே.



இயந்திர பூதம் ரிஷியின் கழுத்தை நெரிக்கிறது.

பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செய்யும்போது அவர்களை கொல்ல ஒரு பிசாசை சிருஷ்டிக்கும்படி துரியோதனன் ஒரு ரிஷியை வேண்டினான். ரிஷி தமது சன்மார்க்கத்தை விட்டு பிசாசு சிருஷ்டிக்கும் துன்மார்க்கத்தில் இறங்கினார். பிசாசை சிருஷ்டி செய்தார். "என்ன செய்யவேண்டும்?" என்று பிசாசு கேட்டது. "பஞ்சபாண்டவர்களை கொல்லு" என்று ரிஷி உத்திரவிட்டார். "அவர்களை உயிரோடு காணமுடியாவிட்டால் உன்னை கொல்லுவேன்" என்று பிசாசு கூறிவிட்டு புறப்பட்டது. பஞ்சபாண்டவர்களை பிசாசு பார்க்கும்போது, அவர்கள் நச்சுப்பொய்கையின் நீரைப் பருகி மூர்ச்சையடைந்து கிடந்தனர். பிசாசு திரும்பி வந்து, தன்னைப் படைத்த ரிஷியைக் கொன்றது. விஞ்ஞான சாஸ்திரத்தை ஜனங்களின் நன்மைக்காக உபயோகிக்காமல், சாஸ்திரிகள் இயந்திர பூதத்தை உற்பத்தி செய்தார்கள். அந்த பூதத்திற்கு வேலையில்லாமல் போகவே, உற்பத்தி செய்தவர்களை கழுத்தை நெரிக்கிறது.

TM 1921

மற்ற நாட்டாரை கொள்ளையடிப்பதற்காக ஏற்பட்ட இயந்திரங்கள், சொந்த நாட்டாரையே கழுத்தை நெரிக்கும்படி வந்து சேர்ந்தன. இயந்திர பூதத்தால் ஏற்

பட்டிருக்கும் இந்த ஆபத்தி லிருந்து மீள முடியுமா என்ற சந்தேகம் சில நாட்டாரை பிடித்தாட்டுகிறது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வழியில் இந்த ஆபத்தை தடுக்க வேலை செய்கிறது. இந்த வேலைகளில் அமெரிக்கா செய்வது தற்சமயம் உலகத்தாரின் கவனத்தைப் பெற்றிருக்கிறது. அமெரிக்க குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் நடத்தி வரும் "நீரா" இயக்கத்தைப் பற்றி நண்பர்கள் "காந்தி"யில் முன்பே படித்திருப்பார்கள். நீரா இயக்கத்திலுள்ள பல வேலைகளில் 'கிராமத்துக்குத் திரும்பு" என்பது ஒன்று.

கிராமத்துக்குத் திரும்புவானேன்? என்று நீங்கள் கேட்கலாம். பட்டணத்தில் வந்து கூடிய கதையை அறிந்துகொண்டால், கிராமத்திற்கு என் திரும்பவேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். பட்டணங்களில்தான் பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றில் வேலைசெய்து பிழைப்பதற்காக கிராமங்களிலுள்ள ஜனங்கள் ஏராளமாக பட்டணங்களில் குடியேறினார்கள். தொழிற்சாலைகள் பாடு திண்டாட்டமாய் போகவே, பட்டணங்களில் வேலை யில்லாதார் தொகை ஏராளமாய் பெருகிவிட்டது. இவர்களுக்கு என்ன கதி? தொழிற்சாலைகள் முன்போல மும்முரமாக வேலை செய்ய சமீப காலத்தில் வழி பிறக்குமென்று தெரியவில்லை. ஆகவே இவர்களை பட்டணங்களில் வைத்துக் கொண்டு என்ன செய்ய? அதனால்தான் "கிராமத்திற்குத் திரும்பு" என்ற பல்லவி புறப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் சுமார் ஒரு கோடி பேர் வேலை யில்லாமல் இருக்கிறார்கள். தொழிற்சாலைகளுக்காக கிராமங்களி லிருந்து சென்றவர்களின் தொகையும் சுமார் ஒரு கோடி யிருக்குமென்று மதிப்பிடுகிறார்கள். இவர்களில் பாதிப் பேர்களாவது கிராமங்களுக்கு திரும்பி விட்டால், கஷ்டம் குறையும். கிராமங்களில் விவசாயம் செய்தால் சாப்பாடாவது கிடைக்கும். பட்டணங்களில் கொட்டாவி விட்டுக் கொண்டிருப்பதை விட; கிராமங்களுக்குச் சென்று அரை வயிறு கஞ்சியாவது குடிப்பது மேலல்லவா? இதற்காகத்தான் "நீரா"த் திட்டத்தில் "கிராமத்திற்குத் திரும்பு" என்பது ஒன்று யிருக்கிறது. அம்மாதிரி திரும்புகிறவர்களுக்கு நிலம் கொடுக்க ஏற்பாடா யிருக்கிறது. இவர்களின் பிராயணச்செலவிற்காக $2\frac{1}{2}$ கோடி டாலர்களை அமெரிக்க சர்க்கார் ஒதுக்கிவைத்திருக்கிறார்கள்.

"கிராமத்திற்குத் திரும்பு" என்பது இந்தியருக்கு புதிதல்ல. மகாத்மா காந்தி எத்தனையோ வருஷங்களாக இதைச் சொல்லி வருகிறார். "கிராம வாழ்க்கையும், விவசாயமுமே இந்தியருக்கு பரம சுகமளிக்கக் கூடியது என்பது மகாத்மா அபிப்பிராயம்.

இயந்திரங்களை—மனிதர் உணவை பறிக்கும் இயந்திரங்களை—அவர் ஆதிமுதல் வெறுத்தே வந்தார். அக்காலத்தில் அவர் சொல்லுவதைக் கேட்டு எல்லாரும் நகைத்தார்கள். பட்டிக்காட்டுப் பேச்சு என்று ஏளனம் செய்தார்கள். இன்று எல்லாரும் மகாத்மா கொள்கைக்கே திரும்பி வந்திருக்கிறார்கள்.

மேல் நாடுகளில் ஒவ்வொரு நாட்டிலும் இயந்திரங்களைக் குறைத்து கைத்தொழில்களை அதிகமாக்க சட்டம் செய்துவருகிறார்கள். ஜெர்மனியில் சுருட்டுத் தொழில் ஒரு கைத்தொழிலாகவே நடைபெற்று வருகிறது. இதில் சுமார் ஒரு லட்சம் பேருக்கு வேலை கிடைக்கிறது. கையால் சுற்றுவதற்குப் பதிலாக இயந்திரங்களை கண்டுபிடித்திருக்கிறார்கள். கையால் ஒருவன் ஒருமணி நேரத்தில் 70 சுருட்டுகள் சுற்றலாம். இயந்திரமோ மணிக்கு ஆயிரம் சுற்றித் தள்ளுகிறது. இந்த இயந்திரங்கள் கொஞ்சங் கொஞ்சமாக அதிகரிப்பதைப் பார்த்த சர்க்கார், சென்ற ஜூலை மாதம் 15ந் தேதி ஒரு சட்டம் செய்தார்கள். புதிதாக சுருட்டுத் தொழிலுக்கு இயந்திரங்களை வைக்கக்கூடாதென்பது இச்சட்டத்தின் நிபந்தனை. இயந்திரங்களை வளரவிட்டால் இத்தொழிலில் சுமார் 80 ஆயிரம் பேருக்கு வேலையில்லாமல் போய்விடுமாகையால், இம்மாதிரி சட்டம் செய்தார்கள்.

ஹென்றி போர்ட் என்ற மோட்டார் தொழிற்சாலைக்காரரைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். வேகமான நவீன இயந்திரங்களைக் கொண்டு, சொற்ப ஆட்களின் உதவியால், தினசரி ஆயிரக்கணக்கான மோட்டார்களை உற்பத்தி செய்தால், மலிவான விலைக்கு விற்கலாம் என்ற யோசனையை கண்டுபிடித்தவரும் அமுலுக்குக் கொண்டு வந்தவரும் அவரே. அவருடன் மோட்டார் தொழிலில் போட்டி போட முடியாமல் எல்லாரும் தவித்தார்கள். இயந்திரங்களின் சக்தியில் அவருக்குள்ள நம்பிக்கையைப்போல யாருக்கும் இருந்ததில்லை. அந்த சக்தியை அவர் உபயோகித்ததைப் போல யாரும் உபயோகித்ததுமில்லை. பதினாயிரக்கணக்கான தொழிலாளிகளை



உணவுக்கு புருஷன் விவசாயம் செய்கிறான். மனைவி உடைக்கு நூற்கிறாள்.

ஒரு இடத்தில் சேர்த்துவைத்து வேலை வாங்குவதே சிறந்த வழி என்பது அவர் கொள்கையாயிருந்தது. அவர் இன்று என்ன சொல்லுகிறார் தெரியுமா? இயந்திரங்களின் மீதிருந்த நம்பிக்கையும், சேர்த்து வைத்து வேலை வாங்கும் கொள்கையும் அவருக்கு அடியோடு போய்விட்டன.

அமெரிக்காவில் தற்காலமுள்ள வேலையில்லா தொல்லையை நீக்க "கிராமத்திற்கு திரும்ப" வேண்டும் என்று அவர் சொல்லுகிறார். பெரிய பெரிய தொழிற்சாலைகளாக ஒரே இடத்தில் அமைக்கக் கூடாதென்று கூறுகிறார். அவர் சொல்லுவதாவது:—


"கைத்தொழிலும் வாழ்க்கையும் சேர்ந்தாற்போல வளர வேண்டுமானால், இரண்டு காரியங்கள் செய்யவேண்டும். ஒன்று தொழிற்சாலைகளை பல இடங்களில் பிரித்து அமைக்கவேண்டும். மற்றொன்று ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு பாகங்களை செய்யவேண்டும். தற்கால தொழிற் கொள்கைக்கு இது முற்றிலும் மாறுபட்டதுதான். என்றாலும் பெரிய தொழிற்சாலைகாரர்கள் எல்லாரும் கொள்கையை மாற்றியே ஆகவேண்டும். தொழிற்சாலைகளோடு விவசாயமும் சேரும்படி வழிசெய்ய வேண்டும். இரண்டிலிருந்தும் தொழிலாளர்களுக்கு வரும்படிகிடைத்து வந்தால், ஒன்று போனாலும் மற்றொன்றினால் லாவது பிழைத்து வரலாம். பெரிய தொழில்களை பல இடங்களில் பிரித்து வைப்பதில் கஷ்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நகரங்களைவிட கிராமத் தொழிற்சாலைகளில் வேலை செய்ய நல்ல தொழிலாளிகள் கிடைக்கிறார்கள். உற்பத்திச் செலவும் குறைவாயிருக்கிறது. ஒரு சாமானின் ஒரு பகுதியை மட்டும் செய்யக் கூடிய தொழிற்சாலை ஒரு கிராமத்திற்கு வேண்டிய வேலையைக் கொடுக்கும். பெரிய தொழிற்சாலைகளை நிர்வாகம் செய்வதைவிட, சிறிய தொழிற்சாலைகளை நிர்வாகம் செய்வது சுலபம். நிலத்தைவிட வேலையில்லாதவர்களுக்கு கஞ்சி கொடுக்கும் சிறந்த இன்ஸூரன்ஸ் வேறு கிடையாது. விவசாயம் வாழ்க்கைக்கு ஆதரவாய் நிற்கிறது. அம்மாதிரி ஆதரவு கொடுக்கும்படி செய்ய கைத்தொழில் மனிதனுக்கு உதவியளிக்கிறது. நிலமே பணம் கொடுக்கும் லக்ஷ்மி. பாங்குகள் அல்ல."

ஹென்ரி போர்ட் இந்த அபிப்பிராயம்கொண்டிருப்பது பெரிய ஆச்சரியமே. இத் துறையில் அவர் மும்முரமாய் வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறார். செல்வச் செருக்கும், இயந்திர பலமும் பெற்ற அமெரிக்காவே இப்படி சொல்லுகிறதென்றால், நமது நாட்டைப்பற்றி கேட்கவேண்டியதே இல்லை.

இந்தியாவில் இப்பொழுதுதான் தொழிற்சாலைகள் அதிகரித்து வருகின்றன. ஆகவே இப்பொழுதே ஜாக்கிரதையா

யிருக்கவேண்டியது அவசியம். ஹென்ரி போர்ட் விவசாயத்தையும், தொழிலையும் ஒன்று சேர்க்க வேண்டுமென்று இன்று சொல்லுகிருர். மகாத்மா காந்தி இதை பல வருஷங்களுக்கு முன்பே சொல்லி வருகிருர். அவர் ஆரம்பித்த கதர் சங்கம் எவ்வளவு ஆழ்ந்த யோசனையோடு ஆரம்பிக்கப்பட்டதென்பதை இப்பொழுதாவது நினைத்துப் பாருங்கள். கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு உதவியாக இருக்கவே கதர் சங்கம் தோன்றியது. அதையே செய்து வருகிறது. இம்மாதிரி எல்லா தொழில்களையும் கிராமத் தொழில்களாக மாற்றிவிட்டால், இந்தியாவில் பஞ்சமென்பதே இருக்காது. பட்டணங்களில் ஏராளமாகக் கூடி ஜன நெருக்கடி உண்டு பண்ணி, அதனுல் எண்ணற்ற வியாதிகளை உற்பத்திசெய்து, அவற்றிற்கு இரையாக வேண்டிய அவசியமும் இருக்காது.


மொத்தத்தில் பட்டணத்து மோகம் தொலையவேண்டும். கிராமத் தொழில்கள் ஏற்படவேண்டும். பட்டணங்களில் ஜன நெருக்கடி குறையவேண்டும். இந்தியா முழுவதிலும் 696831 கிராமங்கள் இருக்கின்றன. 5-ஆயிரம் ஜனத்தொகைக்கு மேற்கொண்ட நகரங்கள் 2575 இருக்கின்றன. இந்த கணக்குப்படி பார்த்தால் 280 கிராமங்களுக்கு ஒரு நகரம் வீதமே இருக்கிறது. ஆனுல், ஜனத்தொகையைப் பார்த்தால் 100-க்கு 11-பேர் வீதம் பட்டணங்களில் வசிக்கிருர்கள். இந்தியா முழுவதையும் பார்த்தால் ஒரு சதுர மைலுக்கு 195-பேர் வீதம் வசிக்கிறதாய் தெரிகிறது. சென்னை நகரை மட்டும்பார்த்தால், ஒரு சதுர மைலுக்கு 6500-பேர் வசிக்கிருர்கள். எவ்வளவுஜனநெருக்கடி!



சூரியனைக் கண்டவுடன் எப்படி வௌவால்கள் போகின்றனவோ, அம்மாதிரி சதர் போன்ற குடிசைக் கைத் தொழில்கள் தோன்றினல், தரித்திரம் பறந்தோடும்.

பட்டணங்களில் அடிமை வேலை பார்த்து கஷ்ட ஜீவனம் செய்து அற்ப ஆயுளில் சாவதைவிட, நிம்மதியான ஜீவனத்தோடு, சுதந்திரமாய் கிராமங்களில் வாழ்வது ஆயிரம் மடங்கு சிலாக்கியம். படித்தவர்களும், பணக்காரர்களும் பட்டணங்களுக்கு ஓடி விடுவதால், விவசாயம் கெட்டு, கிராமங்கள் சீர்குலைந்து போகின்றன. ஆங்கிலப் படிப்பினல் சீர்குலைந்த கிராமங்களுக்கு கணக்

இல்லை. இவர்கள் கிராமங்களிலேயே தங்கி யிருந்தால், கிராமங்களை தேவேந்திர லோகமாக்குவது பெரிய காரியமா?



கிராம வாழ்க்கையின் அபிவிருத்திக்கு கதர் ஒரு சிறந்த சாதனம் என்பதை மகாத்மா காந்தி நிரூபித்து விட்டார். மில் துணிகளால் இந்தியாவிற்கு கதிமோட்சம் கிடையாது. கதரே இந்திய ஏழைகளை காப்பாற்ற வல்லது. அந்த உண்மையை 13 வருஷங்களாக மகாத்மா போதித்து வந்தும், இந்தியர் மூளையில் இன்னம் ஏறவில்லை. 1931-ம் வருஷத்தில் இந்தியாவில் விற்பனையான கதரைவிட 1932-ல் விற்பனை குறைவு. 1933-ல் அதை விடக் குறைவு. இம்மாதிரி கதர் விற்பனை குறைந்துகொண்டு போனால், கிராமங்கள் எப்படி விருத்தி யடையும்? கதரை ஜனங்கள் வாங்காம விருப்பது இயந்திர பூதத்தை ஆதரிப்பதாகும். அந்த பூதத்தைஆதரித்ததால் மேல்நாடுகள் படும் கஷ்டத்தை நீங்கள் பார்க்கவில்லையா? பார்த்தும் மறுபடியும் அதே வேலையை செய்கிறவன் கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் விழும் மூடனே யாவன்.



கதரே கதிமோட்சம், கதரே தேசிய உடை, என்று சொல்லுவதெல்லாம் வெறும் பேச்சுக்களல்ல. ஆழ்ந்த அர்த்த புஷ்டியுள்ளவை. மேல் நாடுகளில் நடக்கிறவைகளை பார்க்கக் கண்களும், அறிய புத்தியுமுள்ள இந்தியர் ஒவ்வொருவரும் கதரைத் தவிர வேறு எதுவும் வாங்க மாட்டார்கள்.

மகாத்மா தோற்றுவித்த ராட்டினத்தால், ஏழைகள் கஞ்சி குடிக்க பணம் பெறுகிறார்கள்.

வருகிருயோ? தீபாவளியே!

(வி. சீனிவாசன்)

ஆ! தீபாவளியே! இதோ! உன் காலடியின் ஓசை மெது வாகக் காதில் விழுகின்றதே!

பண்டு, தேவேந்திரனையும், தேவர்களையும் ஹிம்சித்த நரகாசூரனை ஸ்ரீ கிருஷ்ண பகவான் தனது தேவியார் சத்யபாமாவின் உதவியால் சம்ஹாரஞ் செய்தார் என்பது புராணக் கூற்று. அதற்காக தீபாவளி ஏற்பட்டது. ஆனால் அந்த உண்மையான தீபாவளியை எங்கே? காணவில்லை. 200-வருஷங்களாய் காணவில்லை. அந்த பழைய நரகாசூரனே தீபாவளியாக புனர் ஜன்மம் எடுத்துவிட்டான். இது பொய்யா? இந்த நாட்டின் தற்கால நிலைமை என்ன? ஜனங்களுக்கு என்ன சுகம் இருக்கிறது? இந்த ஜனங்களுக்கு தீபாவளியும் வேண்டுமா? ஏ தீபாவளியே! சென்ற வருடம் விவசாயத்துக்கோ, கலியாணத்துக்கோ, சீமந்தத்துக்கோ, இழவுக்கோ, வியாதியின் சிகிச்சைக்கோ அன்றி சர்க்கார் தீர்வைக்கோ துட்டு வட்டி, அணு வட்டி, கலம் நெல் வட்டிக்கும் வாங்கிய கடன் சுமையே இன்னும் தணியாதிருக்க, உன் பொருட்டு இதற்குள் எத்தனை பேர் வட்டிக் கடைகளை நாடியுளரோ? என் செய்வது? புது மருமகனே பொல்லாத பேர்வழி. நவீன நாகரிகத்தில் வழுக்கி விழுந்தவர். அதற்கேற்ப உனது பண்டிகையில் வீட்டையோ, நிலத்தையோ, ஆபரணங்களையோ விற்றேனும் அவரையழைத்து அலங்கரித்து அறுசுவை யளிக்காவிடில் ஊரார் நகைப்பர். ஏன்? பெண்ஜாதிக்கே பதில் சொல்லி முடியாது. என்ன அலங்கோலம்! மாமிகளின் கூத்தே கூத்து! மாப்பிள்ளைகளின் தர்பாரே தர்பார்! உனது திருவிளையாடலே திருவிளையாடல்!


இம்மட்டோ! உன்னுடைய உற்சாகத்தால், லீலையால், மாயையால், எண்ணிலா மடையர்களும், கடையர்களும் வீட்டில் பெண்டு பிள்ளைகள் பரிதவிக்க, ஒரு வாய்க் கூழுக்கு ஏங்கி வீங்கி நிற்க, குசேலர் வாழ்க்கை நடத்த, அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாய் வாடி வருந்த, அவர்களைக் கண்ணெடுத்தும் பாராது கையிலுள்ள காசை மதுபானக் கடைகளில் கொண்டுபோய்த் தொலைத்துத் தன்னையும், குடும்பத்தையும், சமூகத்தையும், முடிவில் தேசத்தையுமே பாழாக்கும் அச் சண்டாள வெறியர்களின் போக்கை என்னென்றியம்புவது? நிற்க;

தீபாவளியே, இன்று நாங்கள் படுந் துயரத்தை யாரால் சகிக்கமுடியும்? எங்கும் வறுமை; திண்டாட்டம்; எங்கும் பணப் பஞ்சம். தொழிலோ சூன்யம். வர்த்தகமோ மந்தம். நாய்க் குட்டி முதல் யானைவரை வரிப் பளுவோ சொல்லி முடியாது. இவையோர் புறமிருக்க, மறுபுறம் பிறப்பினல் உயர்வு தாழ்வு, நிலவேறுபாடு, நிற வித்தியாசம். ஜாதிப் பூசல், சமயச் சண்டை, இளைத்தவன் எல்லோர்க்கு மடிமை, எங்கும் மோசடி, கூச்சல், எங்கும் பகற்கொள்ளை, எல்லாம் சுயநலம், யாவும் சூழ்ச்சி. ஐயோ! இருப்பதா? இறப்பதா? ஒன்றுந் தோன்றவில்லையே. என்செய்வோம்? இதற்கிடையில் நீயும் வேட்டையாடப் புறப்பட்டுவிட்டாய். "நடந்த மட்டிலும் நாராயணன் செயல்" என்பதே உனது நோக்கம் போலும்.



தாதி பிணியாளியை தேடுகிருள்.
பிணியாளி எங்கே ?

நாட்டைப் பாழ்படுத்தி எங்களைத் தலையெடுக்கவொட்டாது முட்டுக்கட்டை போடும் பொல்லாத ராக்ஷஸ ரூபியான தீபாவளியே! உன்னை என்னதான் செய்வது? என்றுதான் உனக்கு அந்தியகாலமோ? என்றுதான் எங்களை விட்டு நீ அகல்வாயோ? என்றுதான் உண்மையான தீபாவளி வருமோ? அந்நாளே நன்னுள். அத்தினமே புண்யதினம். அதுவே இந்திய நாட்டின் விடுதலைக் காலம். இதுவே உனக்கு எனது எச்சரிக்கையாகும். அப்புறம் உனது இஷ்டம். உன் தொல்லையிலிருந்து எங்களை விடுவிக்க ஒரு கிருஷ்ணனும், ஒருசத்யபாமாவுந்தோன்ற மாட்டார்களா?



மாமியின் நாட்டாண்மை

("ராஜீ" எழுதியது)

அருமைச் சகோதரிகளே, உங்களில் புக்கஹத்துக்குப் போகாத பலர் இருக்கலாம். புக்கஹம் என்றாலே முதலில் கொஞ்சம் உடம்பு சிலிர்ப்பது பொதுவாக சிறு பெண்களுக்கு வழக்கம். அவர்களுக்கு என்னுடைய "டயரி" கொஞ்சம் வழிகாட்டியா யிருக்குமென்று நம்புகிறேன். முதலில் புக்கஹத்துக்குப் போய் நாலு நாள் இருந்தது, அப்பொழுது நடந்தவைகளை என்னுடைய டயரியில் எழுதி வைத்திருக்கிறேன். அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். என்மீது ஏற்பட்ட சார்ஜுகள் உங்களுக்கு ருசிகரமா யிருக்கலாம்.

என் புக்கஹத்தில் ஏதோ விசேஷமென்றும், அதற்காக நான் கட்டாயம் வரவேண்டுமென்றும், என் பெற்றோர்களுக்கு எழுதி இருந்தார்கள். அதற்காக என் தாயார் வியாழக்கிழமை காலையில் கொண்டு விட்டார்கள். அங்கு நான் நான்கு தினங்களிருந்தேன். அதில் முதல் நாள் நடந்த சம்பவம். நான் சரியாக 10 மணிக்குப் போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது மாமா (மாமனார்) வீட்டிலில்லை. மாமியார் நான் போனதும் என்னைப் பார்த்து "வா" என்று கோபச்சிரிப்புடன் அழைத்தார்கள். பிறகு காபி கொடுத்தார்கள். காபி என்றால் அதுதான் காபி. காஸ்மாபாலிடன் கிளப் காபி கூட அதன் முன் நிற்க முடியாது. அந்த காபியை உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? வேண்டுமென்றால் எனக்கொன்றும் தடையில்லை. சொல்லுகிறேன். தயவு செய்து கொஞ்சம் பொறுக்க வேண்டும்.

ஒரு டீ ஸ்பூன் காபிதூளுக்கு இரண்டு ஆழாக்கு ஜலம். அதில் 1½ ஸ்பூன் சர்க்கரை இருக்கும். தனி "எசன்ஸ்"! நீங்களே யோசித்துப் பாருங்கள். எப்படி இருக்குமென்று. அதைக் கொடுத்தார்கள். புக்கஹமல்லவா ? சந்தோஷமாக அதை குடித்தேன்.

நான் வருவேன் என்று அவர்களுக்குத் தெரியுமாகையால், வீடு கூட பெருக்கவில்லை. முற்றத்தில் காபி பாத்திரங்களும், முதல் நாள் இரவு சமைத்த சாப்பாட்டு ஏனங்களும், தேய்க்கப் போட்டிருந்தார்கள். நான் வீட்டில் அதிகமாக வேலை செய்து வழக்கமில்லை. ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தேன். ஆகையால், இதைப் பார்த்ததும் மலைத்து நின்று விட்டேன். என் தாயார் ஊருக்குப் போய் விட்டார்கள். நான் வீட்டை பெருக்கிவிட்டு பாத்திரம் துலக்கப் போயிருந்தேன். அதற்குள் மாமாவும் வந்து விட்டார்கள்.

முதல் "சார்ஜ்"

மாமி நான் பெருக்கியிருந்த இடத்தைக் காலால் தேய்த்து பார்த்து, மாமாவிடம் போய், "ஏன்னு உங்களைத்தானே, கூப்படரது காதில் விழல்லியா என்ன? உங்களைத்தான்னு, இங்கேப் பாருங்கோ, உங்கள் ராஜீ பெருக்கி இருக்கும் அழகை," என்று கூறிக்கொண்டே மாமாவுக்குக் காண்பித்து "இதற்குத்தான் நீங்கள் பரிஞ்சு பேசரியள்," என்று ஒரு சிறு கதை சொல்லி முடித்தார்கள். இவ்வளவு தூரம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த மாமா, சும்மாயிரு, குழந்தை தானே என்று சமாதானம் சொன்னார். அடாடா, எவ்வளவு பெரிய குற்றம்! தளம் என்ன சலவைக் கல்லா ?

இரண்டாவது "சார்ஜ்"

இவ்வளவையும் கேட்டுக் கொண்டே துலக்கிய பாத்திரங்களை எடுத்துக் கொண்டு சமையல் அறைக்கு வந்தேன். பாத்திரங்களைக் கண்டவுடன் மாமி வந்து "அடி ராஜீ, நன்னயிருக்கு. இப்படித் தான் தேய்க்கிறதோ?" என்று முணுமுணுத்தார்கள். நான் அதை கவனியாமலே அவைகளை வைத்துவிட்டு மாமாவுக்கு இலை போட்டேன். அதற்குள் மாமாவும் சாப்பிட வந்தார். நான் பரிமாறிக் கொண்டிருந்தேன். மாமி அங்கு பக்கத்திலிருக்கும் வீட்டுக்குப் பேச போய்விட்டார்கள்.

அங்கு ஓர் வம்பர் மகாசபை கூடியது. அதற்கு என் மாமி தான் தலைமை வகித்தார்கள். பாதி சபை நடந்து கொண்டிருக்கும்

பொழுது, மாமியை சாப்பாட்டுக்கு அழைத்துவரச் சென்றேன். என்னைக் கண்டதும் மாமி, "வாடியம்மா ராஜீ! மாமா ஆபீசுக்குப் போய் விட்டாரு? இவர்கள் எல்லாரும் தான் (சபையில் கூடி இருப்பவர்களைக் காண்பித்து) நம்மாத்துக்கு ரொம்ப வேண்டிய வா. எல்லாருக்கும் நமஸ்காரம்பண்ணு" என்று உத்தரவிட்டார்கள். அதில் சுமார் பதினைந்து பேர்களுக்குக் குறையாமல் இருக்கும். 15 தெய்வங்களுக்கும் நமஸ்காரம் செய்ததில் இடுப்பு முறிந்து போயிற்று. புக்காத்து கடமைகளில் இதுவும் ஒன்று போலும். மாமி வீட்டுக்கு வந்தார்கள். சாப்பாடும் ஆயிற்று. தாம்பூலம் கொண்டு வைத்தேன். அதை எடுத்துக்கொண்டு, "ராஜீ, சீக்கிரம் சாப்பிட்டு காரியங்கள் எல்லாம் முடிந்த பிறகு, சரியாக நாலுமணிக் குக் காபி போட்டு வெச்சிரு. நான் வந்தபிறகு கலக்கலாம்," என்று சொல்லி விட்டு தலைமை வகிக்க சென்று விட்டார்கள். நான் சாப்பிட்டு காரியங்களை முடித்துக் கொண்டு படித்துக்கொண்டிருந் தேன். சரியாக மணி நான்கு அடித்ததும் காபி போட்டு மாமி யின் உத்திரவுபடி கலக்காமல் வைத்திருந்தேன். மணி ஐந்தாகியும் வரவில்லை.

மூன்றாவது "சார்ஜ்"

நான் ஒரு இங்கிலீஷ் நாவலைப் படித்துக் கொண்டிருந்தேன். மணி ஆறு அடித்தது. மாமியும் வந்தார்கள்.

வரும்போதே, "நன்னா யிருக்கு. இப்படித்தானிருப்பார்க ளோ? மாமியாரின் கீழ் இருக்கும் பெண் மாமியார் வந்திருக்கும் பயம்கூட இல்லாமல், புஸ்தகத்தை வைத்துக்கொண்டு படிச்சிண் டிருக்காயே! புக்காத்திலிருக்கும் பெண் படிக்கலாமோ? இப்போ தான் இஞ்சிப்பச்சடி வெச்சிருக்கு, அதுக்குள்ளேயே இப்படி இருக் காயே," என்று சரமாரியாக ஆசீர்வாதம் செய்தார்கள். நான் ஒரு வார்த்தை பதில் சொல்லவில்லை. பிறகு காபியைக் கொண்டு வந்து வைத்தேன். காப்பியைப் பார்த்துவிட்டு "இப்படி காபி போட்டா சம்சாரி வீட்டில் கட்டுமோ?" என்று சொல்லி அதில் ஒரு கெட்டில் ஜலம் விட்டார்கள். அதை சாப்பிட்டுவிட்டு மாமா வுக்கும் வைத்திருந்தார்கள். நான் மாமியைக் கேட்காமலே சமை யல் செய்து விட்டேன். அதில் அவருக்குக் கொஞ்சம் கோபம் தான். இருந்தாலும் காட்டிக் கொள்ளவில்லை. அன்று இரவு போ ஜனமும் ஆயிற்று. சரியாக ஒன்பது மணி. மாமாவும் அவர் சிநேகி தரும், பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று மாமா, "அடீ யாரங்கே உன்னைத்தானே," என்றார். மாமியும் அங்குபோய்

"ச்சு, ச்சு, என்னத்துக்கு கூப்பிடராயள்" என்று கேட்டார்கள். "ராஜீ தூங்கி விட்டாளா? தூங்காம லிருந்தால் கொஞ்சம் பிடில் வாசிக்கச் சொல்லேன்" என்றார். மாமி கடுகடுத்துக்கொண்டு வந்து, "அடி ராஜீ, உன் மாமனாருக்கு நீ பிடில் வாசிக்காமல் குறைச்சலா யிருக்காம், போய் வாசி," என்றார். நானும் வாசித்தேன். மணி 11 ஆகிவிட்டது.

மாமாவின் சிநேகிதர் வீட்டுக்குப் போய்விட்டார். நானும் படுத்துக் கொண்டேன். அன்று இரவு பூரா மாமாவுக்கு, "உங்களுக்கென்ன? ஒன்றும் தெரியாமல் இப்படி இருக்கேள். புருஷாளுக்கெதிரே அவளைப் பாடச் சொல்லரளே! ஆராவது பார்த்தால் பரிகாசம் செய்ய மாட்டார்களா?" என்று இவ்விதமாக டோஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மறுநாள் காலை ஐந்து மணிக்கே எழுந்து வீட்டு வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தேன்.

சாப்பாட்டுக்குமேல் வழக்கம்போல் மாமி சபைக்குப் போய் விட்டார். அன்று இரவில் மாமா என்னைப் பாடச் சொல்லவில்லை. முதல் நாள் மாமாவுக்குக் கிடைத்த 'டோஸை' நினைத்தால் அவருக்கே பயங்கரமாக இருந்ததோ என்னவோ தெரியவில்லை. இவ் விதமாக மற்ற இரண்டு தினங்களும் கழிந்தன.

திங்கள்கிழமை காலை என் தகப்பனார் வந்தார். "என்னவோ விசேஷமென்று எழுதி இருந்தீர்களே, எல்லாம் முடிந்து விட்டதா?" என்று கேட்டார். கடைசியில் விசேஷம் ஒன்றுமில்லை. என் மாமிக்கு வம்பர் மகாசபைக்குப் போக கஷ்டமாயிருந்தது. அவர்களால் வேலையையும் பார்த்துக்கொண்டு சபைக்கும் போக முடியவில்லை. அதனால் தான் எழுதி இருந்தார்கள். நான் படித்தாலென்ன? படிக்காமல் போனால் என்ன? எனக்கு விவாகமாய் விட்டதல்லவா? புக்கஹத்து வேலைகளைச் செய்யத்தானே, விவாகம் செய்தார்கள்?

இதைக் கேட்டதும் என் தந்தைக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. உடனே மாமாவையும், மாமியையும் உத்திரவு கேட்டுக் கொண்டு என்னை அழைத்துப்போனார். அவர்களிருவருக்கும் என்னை அனுப்ப இஷ்டமில்லைத்தான். ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டு தாக்ஷண்ணியத்திற்காக அனுப்பினார்கள். ஆனால் மாமிக்கு அடிக்கடி மகாசபைக்குப் போகாமலிருப்பது கஷ்டமா யிருக்கும்.

என்ன செய்வது?

இதுவே எனது நாலுநாள் "டயரி"

என்ன பதில் எழுதட்டும்?

(ஹேமநளினி)

ஜகன்நாதனை ஒரு முறை பார்த்தவர்கள் அவனை மறக்கவே முடியாது. அவன் வீங்கிய மண்டையும், ஒட்டிப்போன கன்னங்களும், சுண்டக்காய் போன்ற மூக்கும், வெஜிடபிள் வடைபோன்ற அவன் காதும் பார்க்க விளங்காது. உயரம் நாலே கால் அடி இருந்தால் ஜாஸ்தி. அவன் என் சினேகிதன்.

சமீபத்தில் நான் கன்யாகுமரி பக்கம் ஒரு ' ட்ரிப்'' போயிருந்தேன். அப்பொழுது அங்கு கண்ட காக்ஷிகளைப்பற்றி என் வயது அனுமதிப்பதற்குக் கொஞ்சம் அதிகமாவே அவனுக்கு எழுதியிருந்தேன். அதற்கு "ஏதடா அவள் பெண்ணுச்சே, கொஞ்சம் நாசூக்காக எழுதுவோம்'' என்பதில்லாமல், கீழ்க்கண்டவாறு சிறிதாவது தயை தாக்ஷண்யமின்றி ஒரே போடாய் வெளுத்திருக்கிறான்.

"என் பிரியமுள்ள ஹேமா,

உன் இரண்டாந்தேதிக் கடிதம் கிடைத்தது. அதை நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த போதிலும் என்னை அது திருப்தி செய்விக்க வில்லை. நீ எழுதி யிருந்தது ஏதோ சம்பிரதாயமாய் எழுதிய மாதிரியாகக் காணப்பட்டதே தவிர, துளியாவது உணர்ச்சி நிரம்பிய வார்த்தைகள் என்று என்னால் எண்ண முடியவில்லை. கிராமங்களுக்குச் சென்று, பரிசுத்தமான காற்றைக் குடித்து, ஆரோக்யமான வாழ்வு வாழ்ந்து, சுவச்சமான நீல ஆகாசத்தையும், பட்டுக் கம்பளம் விரித்தது போன்ற நீண்ட நீலக் காட்சிகளையும், கபடமற்ற குடியானவன் கொச்சைப் பேச்சுகளிலும், ஆடம்பரம், பேராசை அற்ற அவன் வாழ்விலும் காணும் கவிதையை உணர்ந்தவளோ, வியர்தவளோ எழுதும் மாதிரியில்லை. வாழ்வில் ஒரு புது உணர்வு, ஒரு புது இன்பம், ஒரு புது ஆசை நீ பெற்றதாக உன் கடிதம் படிப்பவர்கள் அறிந்து கொள்ள மாட்டார்கள்.

ஆனால் நீ எழுதி யிருப்பதைப் பார்த்தாலோ "அடே யப்பாடா'' என்று தோன்றுகிறது. குடியானவர்களைக் கண்டால் உன் மனம் யோசனையில் ஆழ்ந்து விடுவதாக எழுதி யிருக்கிறாய். எப்படி, என்று நான் கேட்கிறேன். அவர்களைக் கண்டவுடன் என்ன

உயர்ந்த எண்ணங்கள் உன்னைச் சூழ்ந்து கொண்டனவோ? என்னால் ஊகித்து அறிய முடியவில்லை.

புது புது எண்ணங்களும், யோசனைகளும் இல்லாமல் நமது வாழ்க்கையை சந்தோஷமாகவோ அழகாகவோ நடத்தமுடியாது. ஆனால் எவ்வளவு தூரம் ஒரு எண்ணம் மனிதனால் சாத்தியமோ, அவ்வளவு தான் அதற்கு மதிப்பு. மனக்கோட்டை கட்டுவது தவறென்று நான் சொல்லவில்லை. மனதில் எண்ணிய பின்தான் செயலில் காட்டமுடியும். ஆனால், எண்ணம் எண்ணக்குளத்திலேயே தங்கிவிட்டால், ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. அது அழுகித் தான் போகும்.

புதிதாக நாம் எதையாவது கண்டுவிட்டால், அப்பொழுது அதுதான் பெரியதாகப் படுகிறது நமது சுவபாவம். ஆகையால் உடனே "ஒகோகோய்" என்று ஆர்ப்பாட்டம் பண்ணாமல், நின்னு நிதானிச்சு பலவிதமாகவும் அதைப் பார்த்த பின் தான் ஒரு முடிவுக்கு வரவேண்டுமே தவிர, ஊசிப்பட்டாசு மாதிரி நெருப்புக்குச்சி கிழிப்பதற்கு முன் வெடிப்பது அத்தனை சுகப்படாது.

நீ யோசனை யறிவை (Reason) ப்பற்றி எழுதியிருப்பது எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் மனோ சாஸ்திரமோ (Psychology) தர்க்க சாஸ்திரமோ படித்ததில்லை என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஏதோ என்னுடைய எளிய அறிவைக்கொண்டு எத்தனை தூரம் ஒழுங்காக வாழ முடியுமோ அப்படி வாழுவது தான் என் நோக்கமே தவிர, முடியாததை எட்டிப் பிடிக்கும் சுவபர்வம் எனக்குப் போய்விட்டது. நீ பல புஸ்தகங்களையும், ஆராய்ச்சி நூல்களையும் படித்து அதில் உள்ள நேர்மையான உண்மைகளைச் சொன்னால் நான் ஏற்றுக் கொள்ளத் தயார். மற்றபடி வீண் விவாதத்திலோ, அர்த்தமற்ற பேச்சிலோ, உபயோகமற்ற எண்ணங்களிலோ புகுந்து என் சாதாரண அறிவையும் இழப்பது எனக்கு அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை. நான் என்ன செய்யட்டும்?

மிகவும் அதிகம் எழுதிவிட்டேன். நமக்குள் இருக்கும் நெடுநாளைய சினேக சுதந்திரத்தால் மனதைத் திறந்து, ஒளிவு மறைவு இல்லாமல் தோன்றியது தோன்றியபடி எழுதியிருக்கிறேன். தவறு இருந்தால் உன் பதிலில் எழுது.

எப்பொழுதும் உன்னுடைய, ஜகு"

இந்தக் கடிதத்திற்கு சுடச் சுட ஏதாவது எழுதவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. என்ன பதில் எழுதட்டும்?


யார் பெரியவன்?

("விமலன்")

ஆஹா! என்ன அதிசய சம்பவம்; உலகத்தில் 'நோபல்' பரிசு கொடுப்பதில் அதை அடைவோரின் அனுமதியின்றியே கொடுத்து விடுகின்றார்கள். எங்கள் கலாசாலையிலுங்கூட நன்னடத்தைப் பரிசு வழங்குவதிலும் பெற்றுக் கொள்வோரின் சம்மதத்தை தெரிந்து கொள்ளாமலேயே கொடுத்து வருகின்றார்கள். அவர்கள் நன்னடத்தையுள்ளவர்கள் என்பதற்கு என்ன காரணங் கூறுகிறார்கள் என்பதை முன்கூட்டியே தெரிந்து வழங்கினால், ஷடி பரிசை எதிர்காலத்தில் அடைய விரும்பும் ஏனையோருக்கும் வழிகாட்டியாயிருக்க முடியுமன்றோ!

இப்புதிய முறையில் எங்கள் 'வனமலர்ச் சோலை நவஜவான்கள்' சங்கத்தின் சார்பாக பரிசு வழங்க முடிவு செய்து, எங்கள் நகரில் வாசஞ் செய்யும் எவரொருவர் தான் பெரிய மனிதர் என்பதற்குக் காரணங்கூறுவாரோ அவருக்குப்பிரஸ்தாப பரிசை மனப்பூர்வமாய் அளிக்கப் படுமெனப் பிரகடனஞ் செய்தோம். எங்களுக்குக் கிடைத்த கடிதங்களில் ருசிகரமான சிலவற்றை மட்டும் கீழே குறிப்பிடுகிறோம்:—

ஞானமணி, தலைமை உபாத்தியாயர், ஹைஸ்கூல்:—



உபாத்தியார்.

எனது படிப்பிற்கு நிகராக வேறு எவரும் இந் நகரிலிருப்பதாய்த் தெரியவில்லை. எதிர்காலத்தில் பெர்னாட்ஷா, ஷேக்ஸ்பியர், தாமஸ் எடிசன், ராக்பெல்லர், கெய்ஸர், நெப்போலியன் போன்று வரக்கூடிய 1500 மாணவர்களுக்கு அறிவுச் செல்வத்தை அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கிறேன். கல்வியெனும் கடலைக் கடப்பதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய வெள்ளைத் தெய்வங்கள் வீற்றிருக்கும் நாடுகளுக்குச் சென்று வேண்டுவன கற்றுத்தேர்ந்து தெளிந்து வந்துள்ளேனென்பதை நீங்கள் அறிவீர்கள்.

சேர்மன் அருணாசலக் கோனார் :—

உலகமெங்கும் ஜனநாயக ஆட்சி கொண்டாடப்படுகிறது. ஜன நாயக ஆட்சி என்றால் அரசியல் நிர்வாகத்தை ஜனங்கள் அனை

வரும் சரி சமமாய் பங்கிட்டுக் கொள்வதல்ல; அரசியல் நிர்வாகத்தை எல்லோரும் பங்கிட்டுக்கொள்ள முடியாது. எவராவது



சேர்மன்.

ஒருவருக்கு விசேஷ அதிகாரங் கொடுத்துத்தான் தீரவேண்டும். அமெரிக்காவில் ரூஸ்வெல்டும், ஜெர்மனியில் ஹிட்லரும், ரஷியாவில் ஸ்டாலினும், இட்டாலியில் முசோலனியும், அயர்லாந்தில் டிவேலராவும் ஜனங்களின் பேரால் அதிகாரஞ் செலுத்தி வருவது போலவே நானும் இந்நகரில் அரச அதிகாரத்திலிருந்து வருகிறேன். அவர்களோ ஒரு தேசத்தின் தந்தை; நானோ இந் நகரத்தின் தந்தை. நான் சுயேச்சையாக இந் நகரத்தின் தந்தையாகிவிடவில்லை. நீங்களே என்னை தந்தையாக்கி யிருக்கிறீர்கள்.

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்ற பழமொழியின் கவுரவத்தை நீங்கள் காப்பாற்ற விரும்பினால், என்னைத் தவிர உங்கள் பரிசுக்கு அவ்வளவு தகுந்தவர்கள் வேறெவரும் இருக்க முடியாது.

முதலாளி முத்தைய்யா செட்டியார்:—

இந்நகரிலுள்ள 35000 ஜனங்களில் சுமார் 1000 மனிதர்களுக்கு வேலைகொடுத்துவருகிறேன். இன்னும்படித்து வேலையின்றி



முதலாளி.

சாலையோரங்களில் கண் குழி விழுந்து, மனது உடைந்து நாளைக்கு என் செய்வோம் என ஏங்கித் தவிக்கும் வாலிபர்களின் நிர்ப்பாக்கிய நிலையை நிவர்த்திக்கத்தக்க காரணங் கண்டுபிடிக்க முயன்றும் வருகிறேன். ஒரு தேசம் அல்லது நகரத்தின் முன்னேற்றமானது அதன் கைத்தொழில் அபிவிருத்தியைப் பொறுத்தே யிருக்கிறது. நான் நமது நகரின் கைத்தொழில் முன்னேற்றத்தில் இதுவரை வேலை செய்து வெற்றியுமடைந்திருக்கிறேன். எதிர்காலத்திலும் அதற்கே உழைத்து உயிர் துறக்க வேண்டுமென்பது எனது அளவுகடந்த ஆசை.

நான் ஒரு வட்டிக்குமேல் ஒரு பைசாக்கூட வாங்குவதில்லை. கடன் கொடுத்தவர்களிடம் பணம் வசூல் செய்வதற்காக எந்த சந்

தர்ப்பத்திலும் கோர்ட்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டதே கிடையாது. சமீபத்தில் வரப்போகும் சீர்திருத்தத்தில் இந்திய சட்ட சபை மெம்பராகி, நாட்டிலுள்ள கேட்டைப்போக்கிப் பசி, பட்டினி என்ற வார்த்தைகளையே அகராதியிலிருந்து நீக்கிவிட பிரயாசைப் படப்போகிறேனென்று உறுதி கூறுகிறேன்.

மைனர் ராஜப்பா :—



மைனர்.

உலகத்தில் உண்டாகும் நவீன வஸ்துக்களையும் அனுஷ்டிக்கப்படும் நாகரிக முறைகளையும் நமது நகரத்தில் முதன்மையாக வரவேற்கும் பாக்கியம் நான் பெற்றுள்ளேனென்பதைக் குறிப்பிட பேருவகை யடைகிறேன். ஒரு நகரானது சோபிதத்துடன் விளங்கவேண்டுமானால், மேல் நாட்டு நாகரிகத்தை அங்கு நர்த்தனஞ் செய்யும்படி செய்து அதன் பொற்பாத கமலங்களை நித்தம் நித்தம் பக்திப் பரவசத்துடன் வணங்கி வரவேண்டும். நமது நகர் இவ்வளவு நாகரிகத்துடன் விளங்குகிறது என நீங்கள் கர்வமடைந்தால், அத் தனிப் பெருமை என்னையே சாரும். என் புத்திக்கூர்மையையும் வாக்குச் சாதுர்யத்தையும் படித்துத் தெரிந்துகொள்ள சதா 10-பேர்பருந்தும்அதன் நிழலும் போல என்னுடனேயேயிருக்கின்றனர். நான் அயல்நாட்டுச் சாமான்களை அமோகமாக வாங்கி அனுபவித்து ஆனந்தமுறுவதாய் நீங்கள் நினைக்கலாம். அதற்குக் காரணம் நம்நாட்டுத் கைத்தொழிலை நாசமடையும்படி செய்வதற்கல்ல. அவைகளைப் போன்று நாமும் ஏன் செய்யக்கூடாது என்பதை ஆராய்ச்சி செய்வதற்கே யாகும்.

“பந்தானது கீழே விழுவது மேல் எழுவதற்கே” என்ற ஆங்கில கவியின் கூற்றை எனது செயல் ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டுகிறது.

வஸ்தாத் முஸ்தபா சாய்பு :—

உலகமெல்லாம் ஒரு காலத்தில் ஆயுதபலத்தை - ஏற்றிப் போற்றி ஆராதித்து வந்தது. ஆனால் இன்று உலகமெங்கும் அதை ஒழித்துவிட வேண்டுமென பலத்த ஆர்பாட்டம் நடந்து வருகிறது. பத்திரிகை வாசிப்போரின் மனது கூட ‘ஆயுதப்பரிகாணம்’ ‘ஆயுதப்பரிகாணம்’ என்ற வார்த்தையை அடிக்கடி தனது தோழனாகப் பெற்றிருக்கிறது. ஆனால் எந்த தேசமும், எந்த அறிவாளியும், மகாத்மாவுங் கூட எப்போதும் தேக பலத்தைப்

புறக்கணித்தது கிடையாது. எல்லா தேசங்களும் தங்களது பிரஜைகளை சிறந்த பலசாலிகளாய் மிளிரச் செய்யவேண்டுமெனப் போட்டி


வஸ்தாத்.

போட்டு வருவது பொய்யல்ல. எந்த தேசம் பல ஹீனர்களையுடையதா யிருக்கின்றதோ அந்நாட்டின் வீழ்ச்சி, பக்கத்திலேயே வீற்றிருக்கும். நான் நமது நகரிலுள்ள அனைவரையும் வீரர்களாக்குவதில் எனது காலத்தைக் கழித்து வருகிறேன். மேலும் வடநாட்டிலிருந்து தனக்கு நிகரில்லையென வந்த பயில்வான்களைப் பூச்செண்டைப்போல பீட்டடித்திருக்கிறேன். இப்போது இந்தியாவில் மட்டுமல்ல; உலகத்திலேயே என்னுடன் போட்டியிடும் வீரன் இல்லையென உறுதி கூறுகிறேன். கால நிலை சீர் பட்டால் மேல் நாட்டுக்குத் திக் விஜயம் செய்து அங்கும் எனது சிங்கக்கொடியை நாட்ட முடிவு செய்துள்ளேன்.

போக்கிரி பொன்னம்பலம்:—

எனது செல்வாக்கைப் பற்றி உங்கள் சங்கத்தாருக்குக் கட்டாயம் தெரிந்திருக்கவே செய்யும். அப்படித் தெரிந்திராவிட்டால்


போக்கிரி.

அதற்கு நான் குற்றவாளியல்ல; அதற்குக் காரணம் உங்கள் சங்கத்தை ஊருக்கு வெளியே வன மலர்ச் சோலையில் ஸ்தாபித்திருப்பதா யிருக்கலாம்.

இந்நகரில் ஜட்கா வண்டிக்காரன் முதல் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வரையும், கள்ளுக்கடைக்காரன் முதல் காப்பிக்கடைக்காரன் வரையும் எல்லோரிடமும் ஏக மதிப்பு வாய்ந்தவன் நான் ஒருவன்தான். எனக்கு ஏதாவது பணம் தேவையாயிருந்தால் முதலாளிகளென இந்நகரில் பேர் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு சீட்டெழுதி யனுப்பினால் கேட்ட தொகை பட்டு போன்று பறந்து வந்து சேரும். நமது நகரில் நடக்கும் நாடகங்களுக்கெல்லாம் முதல் வகுப்பு டிக்கட் 4 தினங்களுக்கு முன்னரே எனது வீட்டை நாடிவரும். எனது நட்பைப் பெற மைனர் ராஜப்பா மாதம் 100 ரூபாய் கொடுத்து வருகிறார். கள்ளுக்கடைக்காரர் முதல் காப்பிக் கடைக்காரர்வரை இதுவரை என்னிடம் சாப்பிட்டதற்காகப் பணம் கேட்டது கிடையாது.

முனிஸிபல் எலக்ஷன் காலத்தில் முதலாளிகள் பண முடிப்புடன் என் வீட்டைத் தேடிவந்து கைகட்டி எனது ஒரு வார்த்தைக்கு காத்து நிற்கும் காட்சியை படம் பிடித்திருந்தால் அதையுங்கூட அனுப்பியிருப்பேன். ஆனால் அந்த சந்தர்ப்பங்களில் ஞாப

கமில்லே. போலீஸ் ஜவான்கள் என்னிடத்தில் மிக்க மரியாதையாக நடந்து கொள்ளுகிருர்கள்.

கிராம முனிஸீப் ஆறுமுகத் தேவர்:—

தற்சயம் இந்நகரில் சிலர் பணத்தால் பெரிய மனிதர்களானது போல நானில்லே. நான் பரம்பரையாய் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். இதன் காரணமாகவே எங்கள்குடும்பத்தில் பரம்பரையாய் கிராம முனிஸிப் உத்தியோக மிருந்து வருகிறது. நான் பொது ஜன நன்மை ஒன்றையே குறிக்கோலாகக் கொண்டு மிகக் குறைந்த சம்பளமாகிய 7 ரூபாயை ஏற்றுப் போற்றி திருப்தியாக வேலே பார்த்து வருகிறேன். நான் நினேத்தால் ஏலக்காய் வியாபாரம் முதல் ரத்தின வியாபாரம் வரைசெய்து பணத்தை எண்ண முடியாது குவிக்க முடியும். நான் செய்வது எப்படிப் பொது ஜன சேவையாகுமென நீங்கள் கேட்கலாம். சென்ற வருஷம் (இவ்வருஷங்கூட) காங்கிரஸ்காரர்கள் சட்டங்களே மீறி பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளேவித்து வந்தார்கள். அவர்களில் பலரை சிறை தண்டனே யடையும்படிசெய்து, நகரத்தில் அமைதியையும் ஆனந்தத்தையும் நிலே பெறச்செய்தேன். இது வரை எவ்வித பட்டமும் எதிர் பாராமலே ஜனங்களின் நன்மையையே நடுநாயகமாகக் கொண்டு நடந்து வந்துள்ளேன். எதிர்காலத்திலும் அவ்விதமே நடந்து கருணே மிகுந்த கவர்ண்மெண்டுக்கு உதவி செய்வேன்.



கிராம முனிசீப்.

ஹரிஜன நாகன், விவசாயப்பண்ணே:—

உங்கள் சங்கத்தில் ஏதோ பரிசு கொடுக்கப்போவதாய் என் மகள் லக்ஷிமி நேற்று மாலே கூறிக்கொண்டிருந்தாள். நானும் எனது குடும்பத்தைச் சேர்ந்த 50 ஆட்களும் காலேமுதல் மாலேவரை எங்கள் விவசாயப்பண்ணேயில் ஆனந்தமாய் வேலேசெய்து கொண்டிருக்கிருேம். பல இராட்டினங்களின் நல்லோசை எங்கள் குடிசைகளில் நாரதன் வீணேயின் நாதமும் நாணும்படி தொனித்துக்கொண்டிருக்கின்றன. நெசவு, அச்சுவேலே முதலியவற்றையும் நானே கவனித்து வருகிறேன். சின்ன ஹிந்தி வகுப்பு ஒன்றும் ஆரம்பித்துள்ளோம். கடவுளேயே நம்பி எளிய வாழ்க்கை நடத்தி வருகிருேம். எனக்கு வயது 60 ஆகிவிட்டபோதிலும் தோட்டத்தில் தண்ணிர் இறைத்தல் முதல் களே எடுப்பு வேலே வரை



ஹரிஜன்.

நானும் பார்த்துவருகிறேன். காந்தி மகாத்மாவால் உலகத்துக்கே க்ஷேமமுண்டாகுமென நம்பி வருகிறேன். நான் இங்கிலீஷ் பள்ளியில் படித்தது கிடையாது. நாட்டுப் பள்ளியில் பயின்ற அறிவைக் கொண்டு இன்பமுடன் வாழ்க்கை நடத்திவருகிறேன். பிறரையும் அதை அனுஷ்டிக்கத் தூண்டிவருகிறேன். இதைத் தவிர வேறொரு திறமையும் என்னிடத்திலில்லை. நான் உங்கள் சங்கப் பரிசுக்கு அவ்வளவு தகுந்தவனாயிருக்க முடியாதென்றே எண்ணியிருக்கிறேன். ஆனால் சில காந்தி பக்தர்கள் என்னையும் உங்கள் சங்கப் பரிசில் கலந்துகொள்ளும்படி தூண்டியது கொண்டே இதை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

* * *

தான் பெரியவன் என்பதற்குத்தகுந்த காரணங் காட்டியுள்ள பல கடிதங்களில் மேலே குறிப்பிட்ட 8 கனவான்களின் கடிதங்கள் சர்ச்சைசெய்து பார்க்கத்தக்கதா யிருந்தன. துருவித் துருவி ஆராய்ச்சி செய்தோம்.

முதலாவது, தலைமை உபாத்தியாயர் ஞானமணி, உத்தியோகஸ்தர்கள் பணக்காரர்கள் பிள்ளைகளை ஒரு மாதிரியாகவும், ஏழைகளுடைய குழந்தைகளை வேறு மாதிரியாகவும் பார்ப்பதாலும், பிணக்கை தினே தினே வளர்த்து வருவதாலும் பரிசுத்தமான எங்கள் பரிசை யடைய தகுந்தவரல்லவென்த் தள்ளினோம்.

சேர்மன் அருணாசலக் கோனார்மீது குற்றங்கூற வழியில்லையாயினும், அவர் பெரிய உத்தியோகஸ்தர்களின் மதிப்பை பெறும் பொருட்டு அடிக்கடி டீ பார்ட்டி நடத்துவதும், அதன்மூலம் காங்கிரசை நசுக்கிவிடப் பகிரதப் பிரயத்தனம் செய்வதுமாயிருந்தாலும், இனியும் அப்படியே யிருப்பாரென எண்ணியும் அவரையும் அதற்கு அருகராக்க முடியவில்லை.

முதலாளி முத்தையா செட்டியாரை தனிப்பட்டமுறையில் எதுவும் குறை சொல்வதற்கில்லையாயினும், அவர் பல தொழிலாளர்களுக்குச் சரியான சம்பளம் கொடாது கஷ்டத்தினுள்ளாக்கியே பணக்காரரானாரென்ற ஒரு காரணத்தாலேயே அவரும் ஒதுக்கித் தள்ளப்பட்டார்.

மைனர் ராஜப்பாவுக்குப் பூர்வீக சொத்துக்களில்லாவிட்டால், அவர் ஜட்காவண்டியின் லகானைப் பிடித்து ஓட்டிவருவதற்குக்கூட லாயக்கில்லையென எண்ணி அவரையும் புறக்கணிக்க நேர்ந்தது.

வஸ்தாத் முஸ்தப்பா சாகிப் அவர்கள் பணம் சம்பாதிப்பதையே நோக்கமாய்க்கொண்டு வடநாட்டுப் பயில்வான்களுடன்


மோசமான ஒப்பந்தம் செய்து பல குஸ்திகள் செய்திருப்பதால் அவரையும் நீக்கினோம்.

போக்கிரி பொன்னம்பலம் அறிவற்றவராகவும் கடவுள் நம்பிக்கை யில்லாதவராயும் பீப்பாய்க் குடிக்காரராயு மிருப்பதால் அவரையும் அலட்சியஞ் செய்ய நேர்ந்தது.

கிராம முனிஸீப் ஆறுமுகத்தேவரிடம் பத்திரிகை ஞானமும் உலக அனுபவமும் அத்தி பூத்தது போலிருப்பதால் பரிசுபெற உரிமை யற்றவரென்று உறுதி செய்தோம்.

ஹரிஜன நாகன்; இவரைப்பற்றி நாங்கள் துருவித்துருவி சிந்தித்தோம். மேலே குறிப்பிட்ட 7 பேர்களைப் போல இவர் நிஜார் அணிந்திருக்கவில்லை யாயினும், உண்மையான மனமும் தொண்டும் இவரிடத்தில் மிளிர்வதைக்கண்டோம். பலர் ஆகாய விமானங்களை ஆசிக்கலாம்; மோட்டார் வாகனங்களை மோகிக்கலாம்; எலக்ட்ரிக் விளக்குகளை எங்கும் பரப்பலாம். ஆனால் அவைகளால் உலகத்தில் அதிருப்தியையோ பட்டினியையோ தீர்த்து விட முடியாது. மனித உடலுக்கு முதலாவது வேண்டுவது பூட்ஸும் ஆங்கிலத்தொப்பியுமல்ல. முதலாவது வேண்டுவது உணவும் உடையுமே எனத் தேர்ந்தோம். எனவே ஒரு தினம், ஆயிரக்கணக்கான மக்களை அழைத்து எங்கள் "வனமலர்ச்சோலையின்" இனிய மந்த மாருதங் கலந்த தென்றலின் நடுவே மட்டில்லா மகிழ்ச்சியுடன் ஹரிஜன நாகனுக்கு எங்கள் சங்கப்பரிசை அன்புடன் வழங்கினோம். ஹரிஜன நாகன் வாழ்க!

மந்திரவாதியின் தந்திரம்



மேடையில் நிற்கும் ஒருவன் அடிவயிற்றில் மந்திரவாதி ஒரு பெரிய ஊசியால் குத்துகிறான். இவன் குத்துவதைக் கண்டு பயப்படுவதைப்போல குத்தப்படுகிறவன் தோன்றுகிறான். கடைசியாக முன் பக்கம் குத்திய ஊசியையும் அதன் காதில் கோர்த்திருக்கும் நாடாவையும் பின் பக்கமாக இழுக்கிறான். குத்தப்படுகிறவன் சாகவில்லை.

இது எப்படி நடக்கிறது? இதன் தந்திரமென்ன? குத்தப்படுகிறவன் இடுப்பில் கட்டியிருக்கும் பட்டியினுள் ஒரு குழாய் இருக்கிறது. மந்திரவாதி உபயோகிக்கும் ஊசி வளையக்கூடியது. முன் பக்கம் குத்தியவுடன் அந்த ஊசி குழாய் வளையாக வளைந்து பின்பக்கமுள்ள வாயில் வழியாக வெளியே வருகிறது. ஆகவே உடம்பில் கொஞ்சங்கூடப் படுவதில்லை. மந்திரவாதி குததுகிற வேலையை வேகமாய்ச் செய்வதால் ஊசியோ, நாடாவோ இடுப்பைச்சுற்றி வளைந்துபோவதால் ஏற்படுகிற நீளக்குறைவு, பார்ப்பவர்களுக்குத் தோன்றுவதில்லை. இதுவே மந்திரவாதியின் ஊசி குத்தும் தந்திரம். அடுத்த "காந்தி" மலரில் மற்றொரு தந்திரம்.



குட்டி ராமுவின் ஜோஸ்யம்.

(கே. எஸ். வெங்கடகுப்ப ராவ்)

ராமு ஒரு சோம்பேறிப் பையன். இவன் பெற்றோர்கள் மிகவும் ஏழை. இவனுக்கு படிக்கவேண்டுமே என்ற அக்கரையே கிடையாது. இவனுக்கு வயது சுமார் 12 இருக்கும். இவன் பெற்றோர்கள் மிகவும் பலஹீனர்கள்.

ஒருநாள் ராமு கடைவீதி வழியாக சென்று கொண்டிருக்கையில் சிலர் தினசரி பத்திரிகையை அதிக ஆவலுடன் படிப்பதைக் கண்டான். இவன் அவ்விடம் சென்று விசாரிக்கையில், சோமராஜ புரத்தில் இருக்கும் அரசன் கீழ்கண்டவாறு விளம்பரப்படுத்தியிருந்தான். "எவனொருவன் எனக்கு திருப்தியாக அதாவது நான் போதும் என்று சொல்லுகிறவரைக்கும் ஜோஸ்யம் சொல்லி ஜயம் அடைகின்றானோ, அவனுக்கு என் ராஜ்யத்தில் பாதியையும் என் சீமந்த புத்திரியான சுகுணஜால குமாரியையும் அடைய பாத்தியதை உண்டு. இதற்கு யாதொரு தடையுமில்லை. வெற்றி அடையாவிட்டால் அவனை சிறையில் வைக்கவும், மற்றும் அவனுக்கு ஏதாவது பூஸ்திதி இருந்ததேயானால் அதைப் பிடுங்கிக்கொள்ளவும் உரிமை எனக்கு உண்டு" என்றிருந்தது.

பிறகு நூற்றுக்கணக்கான ஜோஸ்யர்கள் சென்றார்கள். இதில் ஒருவனாவது ஜயமடையவில்லை. எல்லோரும் சிறைக்குள் சென்றார்கள். ஒருவன் 7 நாள் விடாமல் ஜோஸ்யம் சொல்லிப் பார்த்தான். மற்றொருவன் 1 மாதம், இன்னொருவன 1 வருஷம்; 2 வருஷம்; 3 வருஷம் சொல்லியும் அரசனுக்கு திருப்தியுண்டாகவில்லை.

ஆக மொத்தம் 999 பேர்களை அவ்வரசன் சிறையில் அடைத்திருந்தான்.

இது நிற்க, நம்ம ராமுவைப் பார்ப்போம். இவன் கடை வீதியில் கேட்டதையும், சில ஜோஸ்யர்கள் அவ்விடம் செல்வதாக நினைத்திருந்ததையும் ஒன்று விடாமல் தன் தாய் தந்தையர்களிடம் மொழிந்தான்.

இவன் சற்றுநேரம் யோசனை செய்துகொண்டு ஒருவாறு மனத்தை திடப்படுத்திக் கொண்டு தன் தாய் தந்தையர்களிடம் சென்று, "பெற்றோர்களே! கேளுங்கள். நமக்கோ க்ஷீணதிசை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது. எனக்கோ ஒரு தொழிலும் செய்யத் தெரியாது. ஆகையால் நான் சோமராஜபுரம் சென்று அவ்வரசனை என் மனதில் தோன்றியதையெல்லாம் சொல்லி தோற்கடித்து பொருளோடும், கன்னியோடும் வருகின்றேன். இதற்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. ஆகையால் தாங்கள் உத்தரவு கொடுக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றான் ராமு.

ராமுவின் பெற்றோர்களுக்கு யாதொன்றும் இதைப்பற்றி அதிகம் தெரியாததால் அவர்கள் அவன் சொன்னதுக்கு ஆமோதித்தார்கள். "பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்." அல்லவா!

பிறகு ராமு புறப்பட்டு சோமராஜபுரம் சென்றான். அரசனால் வரவேற்கப்பட்டான். ராமு அரசனிடம் சொல்லி பொது ஜனங்கள் எல்லாரையும் வரவழைக்கச் செய்தான். எல்லா ஜனங்களும் மண்டபத்தில் வந்து உட்கார்ந்தார்கள்.

பிறகு அரசனும் குட்டிராமு ஜோஸ்யரும் மண்டபத்திற்குள் நுழைந்து தங்கள் தங்களுடைய ஆசனத்தைப் பெற்றார்கள்.

ராமுவைக் கண்டதும் ஜனங்கள் பின்வருமாறு நினைக்கலாயினர். 'என்ன ஒரு 12 வயது சிறு பையன் இவ்விடம் வந்து ஜோஸ்யம் சொல்ல துணிந்துவிட்டான். எவ்வளவோ பிரசித்தி பெற்றவர்களும், சமஸ்தான ஜோஸ்யர்களும் தோல்வியுற்று சிறையிலிருக்க இவனுக்கு என்ன தெரியும்? பார்த்தால் அ. ஆ. கூட தெரியாதவன் மாதிரி தோன்றுகிறான். பார்க்கலாம் இவன் எவ்வாறு இவ்வரசனுக்கு தகுந்தமாதிரியும் திருப்தியுண்டாகிறவரைக்கும் சொல்லுகிறான்"

ராமு:—அரசர் பெருமானே! உமக்கு எவ்விதமாக ஜோஸ்யம் சொல்லவேண்டும்?

அரசர்:—எனக்கு திருப்தி யுண்டாகிறவரைக்கும் சொல்ல வேண்டும். அதாவது நீயாக ஜோஸ்யம் சொல்வதை நிறுத்தக் கூடாது. நான் நிறுத்த சொன்னால் மாத்திரம் நிறுத்தலாம். நீ வெற்றி கொள்ளாவிட்டால் உன்னையும் சிறையிலுள்ள 999 பேர்களோடு சேர்த்து 1000 ஆக்கப்படும். இதற்கு சம்மதமாய் இருந்தால் நீ ஜோஸ்யம் சொல்ல ஆரம்பிக்கலாம்.

ராமு:—அரசரே, மற்றும் சபையிலுள்ள கனவான்களே, என் வாயில் பொய், புரட்டு பித்தலாட்டம் முதலியவைகள் வராது. உள்ளது உள்ளபடியே உரைப்பேன். கண்டது கண்ட படியே சொல்லுவேன். என்ன அரசரே சொல்லட்டுமா?

அரசர்:—ஹாம். சொல்லும்.

ராமு:—நடந்தவைகள் அதாவது இறந்த காலத்திலும், இப்போது நடக்கிறவைகள் நிகழ்காலத்திலும், இனிமேல் நடக்கப் போகிறவைகள் அதாவது எதிர்காலத்திலும் நடக்கிற எந்த விஷயங்களுக்கும் யாதொரு தடையுமில்லாமல் உடனே பதிலளிப்பேன்.

கேளுங்கள் அரசரே! மஹா ஜனங்களே! மேற்சொன்ன முக்காலங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு சிறு குறிப்பு கொடுக்கின்றேன். பிறகு ஒவ்வொரு காலத்தையும் எடுத்துக்கொண்டு அரசர் எவ்வளவு நாள் சொல்லச் சொன்னபோதிலும் நான் ஓயாமலும், விடாமலும் சொல்லுகிறேன்.

நடந்தவைகள். அரசர் நேற்று காலையில் ஏதாவது ஆகாரம் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். என்ன அரசரே! இது உண்மை தானா?

(அரசரும், மற்றவர்களும் இதைக் கேட்டவுடன் கொல்லென்று சிரித்துவிட்டு, பேஷ், ராமு உன் ஜோஸ்யம், பலே பேஷ் என்று ஆராவாரம் செய்துவிட்டு, ராமு நீ கட்டாயம் ஜயமடைவாய் என்றார்கள்.)

ராமு:—என்ன அரசரே! இதில் யாதாவது பிசகு இருந்தால் என்னை இப்போதே கொலை செய்து விடும். அதற்கு யாதொரு தடையுமில்லை.

அரசர்:—(சிரித்துக்கொண்டு) ஆம்!

ராமு:—நிகழ்காலத்தில், பாருங்கள் அரசர் சிரித்துக்கொண்டிருப்பது இப்போது நடக்கும் காரியம். (மறுபடியும் எல்லோரும்

சிரித்தல்) அதோ வேலைக்காரர்கள் வேலை செய்கிறார்கள். அரசரே இவைகளில் ஏதாவது தவறு இருக்கின்றதா?

அரசர்:—உண்மை. உண்மை.

ராமு:—எதிர்காலத்தில், ஜனங்களே! நீங்களெல்லோரும் இவ்விடத்திலேயே எப்பொழுதும் உட்கார்ந்திருப்பதில்லை. நான் கட்டாயம் சொல்லுவேன். நீங்களெல்லோரும் அவரவர் இருப்பிடத்திற்கு செல்வீர்கள்.

இன்று திங்கட்கிழமையல்லவா? நாளைக்கு வருவது செவ்வாய்க்கிழமை. இப்போது அக்டோபர் மாதமல்லவா? அடுத்த மாதம் கட்டாயம் நவம்பர் மாதம் வந்தே தீரவேண்டும். இந்த வருஷம் 1933வது அல்லவா? அடுத்த வருடம் 1934 என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஆனால் நம்ம அரசர் மாத்திரம் இந்த இடத்தை விட்டு எழுந்திருக்க மாட்டார். அவருக்கு அபஜயம் அடையவேண்டுமென்றிருந்தால் மாத்திரம் எழுந்திருப்பார். காரணம் என்னவென்றால், இவர் விளம்பரத்தில் எனக்குத் திருப்தியுண்டாகிறவரையில், அதாவது நான் நிறுத்து என்று சொலலுகிறவரையில் சொல்லவேண்டும் என்றிருக்கிறார். இப்போதாவது, அல்லது சற்று நேரம் பொறுத்தாவது அரசர் சென்றால் நான் இப்போது ஜயித்து விட்டேன்.

என்ன? செங்கோலை ஏந்திய கோமகனே! சபாநாயகரவர்களே! எப்படி நம்ம குறிப்பு ஜோஸ்யம்? இனிமேல் முதலில் இறந்த காலத்தை எடுத்துக்கொண்டு விரிவாக ஒன்று விடாமல் உரைக்கின்றேன். அரசரே, நான் இதுவரையில் சொன்னதில் யாதாவது பிசகு இருந்ததேயானால் சொல்லும்?

அரசர்:—(மனதினுள். இது என்னடா! சனியன் மாதிரி வந்து உளறுகிறானே. இவன் இம்மாதிரியே பல வருஷங்கள் கண்களில் கண்டவைகளை யெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தானேயானால் நான் என்ன செய்வேன்? சொன்னபிரகாரம் பூமியையும் பெண்ணையும் கொடுக்க வேண்டியதுதான். மற்றும் இவன் என்ன சாப்பிடக்கூட விடமாட்டான் போல தோன்றுகிறதே. கட்டாயம் நான் இவனிடம் தோற்க வேண்டியதுதான். இதற்கு வேறொரு வழியில்லையே யென்று நினைத்துக்கொண்டு) மேற்செல்லும், குட்டி ராமு ஜோஸ்யரே.

ராமு:—இனிமேல்தான் அதிக கவனத்துடன் கேட்க வேண்டும். இப்போது இறந்த காலத்தை எடுத்துக்கொள்ளுகிறேன்.

நேற்று சுவர்ணம்பாள் காலை 7-மணிக்கு பெண் குழந்தையைப் பெற்ருள்.

நேற்றைக்கு முன்னுள் சீனன் கண்ணனை பள்ளிக்கு அனுப்பினுன்.


நான்கு நாட்களுக்கு முன் வேலன் கருப்பனை அடித்ததற்காக 50-ரூபாய் அபராதம் கொடுத்தான். (இம்மாதிரி நடந்தவைகளையும் இவன் பார்த்தவைகளையும் ஒன்றன் பின் ஒன்ருக அடுக்கிக்கொண்டே சென்ருன். மணியோ 8. ராத்திரி வேளை.)

அரசன்:—ஜோஸ்யரே! சற்று பொறும். நான் ஆகாரம் எடுத்துக்கொண்டு வருகிறேன்.

ராமு:—முடியாது. நீர் முதலில் அவ்வாறு பேசவில்லை. நான் விடமாட்டேன். உட்காரும்.

அரசர்:—(பசியின் வலிமையினுல்) போதும். ராமு! நீ என்னை ஜெயித்துவிட்டாய்.

பிறகு சபை கலைந்தது. சில நாள் சென்ற பிறகு நல்ல முகூர்த்தத்தில் அரசர், ராமுவுக்கு சுகுணஜால குமாரியை பாணிக்கிரஹணம் செய்துகொடுத்து, தன் ராஜ்யத்தில் பெரும் பாகத்தையும் கொடுத்தார். ராமு சிறையிலிருந்த 999 பேர்களையும் விடுவித்து தன் தாய் தந்தையர்களையும் வரவழைத்துக்கொண்டு சுகமாக ஜீவியம் செய்துவந்தான். இப்போது கதை முடிந்தது, கழுதையும் கனைத்தது.



தாயார்:—ஏண்டா கொழும்பு பாத்திரத்தில் கடிதத்தை போடுகிறாய்?

பையன்:—போட்டால் என்ன? என்னுடைய மாமா கொழும்பில் (ஸிலோனில்) இருப்பதாக சொன்னாயே. அவருக்குத் தான் கடிதம் போட்டேன்.

—கே. மகாதேவன், ஒழுகிணசேரி.

மதுரை ரயில்வே பிளாட்பாரத்தில் அங்குமிங்கும் ஆத்திரத்துடன் அலைந்து நடக்கும் அ. ஆ. அண்ணாமலை செட்டியார் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று பரபரப்புடன் "ஐயா பத்தரை மணி வண்டி எப்போ வரும்" என்றார்.

மாஸ்டர்:—சரியாய் பத்தரை மணி வேளையில்.

— எஸ். கே. சாமி, சுசீந்திரம்.

வைத்தா:—ஏங் காணும், இந்த தீபாவளிக்கு என்ன துணி வாங்கப் போகிறீர்?

தைத்தா:—ஏதாவது மானத்தை மூட! துணி வாங்கினாப் போச்சு.

வைத்தா:—ஓய்! இந்த மானத்தை (வானத்தை) மூட அந்த லங்காஷயராலும் முடியாது. இந்த ஜப்பானாலும் முடியாதுங் காணும்.

—கே. வி. எஸ். மணி, குத்தாலம்.

முருகன்:—ராமா! கிருஷ்ணன் எங்கேயடா? காணவே காணோம்!

ராமன்:—அவனுக்கு இரண்டு தடவை அம்மை போட்டது. அதனால் இறந்து விட்டான்.

முருகன்:—ஓஹோ! அப்படியா! முதல் தடவை போட்டபோது இறந்தானு, அல்லது இரண்டாவது தடவை போட்டபோது இறந்தானு?

—வெங்கட்டு, திருப்பத்தூர்.

ராமன்:—(வேலைக்காரனைப் பார்த்து) நாற்காலிகளில் ஏன் இவ்வளவு தூசி யிருக்கிறது?

வேலைக்காரன்:—சில தினங்களாக இங்கு யாருமே வந்து உட்காரவில்லை.

—அ. லெ. அ. கருப்பையா, செய்கோன்.

பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்:—பையா, உனக்கு வயது என்ன?

பையன்:—பன்னிரண்டு, சார்.

இன்ஸ்பெக்டர்:—இரண்டு வருஷங்களுக்கு முன் கேட்டபோதும் பன்னிரண்டு என்று சொன்னுயே?

பையன்:—ஆம், இன்றைக்கொன்று நாளைக்கொன்று சொல்லுபவன் நானல்ல.

—கே. கார்மேகம், தோடாநேரி.

எஜமான்:—வேலைசெய்து கொண்டிருக்கும்போது சும்மா பொடி போடுகிருயே? அப்படிச் செய்யலாமா?

குமாஸ்தா:—நான் பொடி போடும்போது வேலை செய்வதில்லையே. வேலையை நிறுத்திவிட்டுத் தானே பொடி போட்டுக்கொண்டு இருக்கிறேன்.

—ஆ. வே. பார்வதியம்மாள், புதுச்சேரி.

ஏன்டா, அந்த டாணுக்காரன், உன் கையில் சங்கிலி மாட்டிப் பிடித்துப் போகிருன்.

இல்லை மேன், அவன் கையில் இரும்பு சங்கிலி இருந்தது. என் கையில் காந்த மிருந்தது. அது வந்து ஒட்டிக்கொண்டது.

—எஸ். ஆர். ஆத்தியப்பர், சென்னை.

பட்டினத்தான்:—ஏன் அப்பா கிராமபோனில் காபியை ஊற்றுகிருய்?

நாட்டுப்புறத்தான்:—வெகு நேரமாய் பாடுகிறதே. தொண்டை கட்டிப் போகுமல்லவா? அதற்காகத்தான்.

—லே. சோ. மெய்யப்பன், சண்முகனுதபுரம்.

கருப்பன்:—நான் இனிமேல் மாமிசம் சாப்பிட மாட்டேன். கறி காய்களைத்தான் சாப்பிடப் போகிறேன்.

கோவிந்தன்:—என்ன, காரணம்? உடம்பிற்கு ஒத்துக் கொள்ள வில்லையா?

கருப்பன்:—கசாப்பு கடைக்காரன் கடன் கொடுக்க மாட்டேன் என்கிருன்.

—ஆர். ராமசாமி, பட்டுக்கோட்டை

பிச்சைக்குச் சென்ற, ஒரு சாமியாரைப் பார்த்து, என்றும் பிச்சை யிட்டறியாத ஓர் மாது,

"ஏனையா சாமியாரே, பிச்சை, போடாதவங்களுக்கு புண்ணியங் கிடையாதுங்களா?" என்ருள்.

சாமியார்:--உண்டம்மா, உண்டு. பிச்சை போடா விட்டாலும், பிச்சைக்கு வருபவர்களை, நாயை விட்டு கடிக்க விடாதிருந்தால் பெரும் புண்ணியம் உண்டு

—வைத்தியர், எம். கணபதி, மதுரை.

கந்தன்:—ஸார்! இன்னிக்கி எங்கவீட்லே "அபளம்" பொரித் தார்கள்.

உபாத்தியாயர்:—ஏண்டா! அபளம் என்கிறே. அழுத்தி அப்பளம் என்று சொல்.

கந்தன்:—அழுத்தி சொன்ன நறுங்கிப் போகாதா சார்?

* ஆர். எம். கே. திருவையாறு.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதிய வர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக் கப்படும்.

* இரண்டு ரூபாய் பரிசு பெற்றவர்.

மகாத்மா வாழ்க்கை

சாம்பரான் சட்ட மறுப்பு

1917ம் வருஷத்தில் ஒரு முக்கியமான சம்பவம் நடந்தது. அதனால் மகாத்மாவின் கீர்த்தி இந்தியா முழுவதிலும் மின்னல்போல பாய்ந்து பரவியது.

பீஹார் மாகாணத்தில் அவுரித் தோட்டங்கள் அதிகமிருந்தன. நிலத்தில் 20 ல் 3 பங்கில் நிலச்சுவானுக்காக குடியானவன் கட்டாயம் அவுரி பயிர் செய்யவேண்டுமென்று சட்டமிருந்தது. வேறு பல அநியாயங்களு மிருந்தபடியால், விவசாயிகள் மிகுந்த கஷ்டப்பட்டார்கள். வெள்ளைக்காரர்களிடம் இந்த அவுரி வர்த்தகம் இருந்தபடியால், பரிகாரம் கிடைப்பது மிகுந்த கஷ்டமாயிருந்தது. 1916ம் வருஷத்தில், லக்ஷ்மணபுரியில் கூடிய காங்கிரஸுக்கு மகாத்மா போயிருந்தார். பீஹாரில் சாம்பரான் ஜில்லா விவசாயிகள் படும் கஷ்டங்களை அவருக்கு எடுத்துக்காட்டி, அங்கு வந்து விசாரித்து பரிகாரம் தேடவேண்டுமென்று சில பீஹாரிகள் வேண்டிக்கொண்டார்கள். எங்கு சேவை அகப்படுகிறதென்று காத்துக்கொண்டிருக்கிற மகாத்மா இச்சந்தர்ப்பத்தை விட்டு விடுவாரா?

உடனே அந்தக்காலத்து ஆடைகளுடனும், சுதேசி கூடை (பிரிப் பாக்) யுடனும் 1917 ல் பீஹார் புறப்பட்டார். சாம்பரான் போய்ச் சேர்ந்தார். தான் என்ன காரியத்திற்காக வருகிறார் என்பதை முன்னதாகவே, தோட்டக்காரர்களுக்கும், ஸ்தல அதிகாரிகளுக்கும் எழுதினார். இவரைப் பார்த்தவுடன் பீஹார் ஜனங்களும், தலைவர்களும் சந்தோஷப்பட்டார்கள். தென்னாப்ரிக்கா சர்க்காரை பணியவைத்த வீரரல்லவா? ஜனங்கள் எவ்வளவு சந்தோஷப்பட்டார்களோ, அவ்வளவு தூரம் தோட்டக்காரர்களும் சர்க்கார் அதிகாரிகளும் வெறுப்புக்கொண்டார்கள். "குடியானவர்களுக்கும் எங்களுக்குமுள்ள விவகாரத்தில் தலையிட, வெளியாராகிய நீர் யார்?" என்று தோட்டக்காரர்கள் கேட்டார்கள். "இந்த மாகாணத்தை விட்டு உடனே வெளியேறிவிடுவது தான் உத்தமம்" என்று கமிஷனர் பயமுறுத்தினார். காந்தியா அசைகிற பேர்வழி? இவர்கள் பேச்சைக் கேட்டு சிரித்தார். "குடியானவர்கள் கேட்டால், அவர்கள் குறைகளைப்பற்றி விசாரிக்க எனக்கு பூர்ண உரிமையுண்டு" என்று மகாத்மா கூறினார்.

மகாத்மா எவர் சொல்லுவதையும் கேட்காமல் மோதிஹாரி பட்டணத்திற்குப்போய், தமது வேலையை ஒழுங்காய் தொடங்கி விட்டார். ஸ்தல அதிகாரிகளுக்கும் தோட்டக்காரர்களுக்கும் கோபம் பொங்கி விட்டது. உடனே சட்டப் புத்தகத்தைப் புரட்டினார்கள். "சாம்பரானை விட்டு உடனே போய்விட வேண்டும்" என்று உத்தரவு அனுப்பினார்கள். மகாத்மா என்ன செய்தார்? "நான் வந்திருக்கிற வேலை முடிகிற வரையில் சாம்பரானை விட்டு போவதாய் உத்தேசமில்லை" என்று உத்தரவிலேயே எழுதி யனுப்பினார்.

"நமது ராஜ்யத்தில் இம்மாதிரி ஒரு காந்தி வந்து தலையிடுவதா?" என்ற உணர்ச்சி அதிகாரிகளுக்கு அதிகமாயிற்று. சர்க்கார் உத்தரவை மீற அக்காலத்தில் யாருமே துணிந்ததில்லை. காந்தியே முதலில் துணிந்தவர். அவருக்கு சரியான புத்தி புகட்ட நினைத்து, உத்தரவை மீறியதற்காக மறு நாளே அவர் மீது வழக்கு விசாரணை ஆரம்பமாயிற்று.

"என்னுடைய மனச்சாட்சி சொல்லுகிறபடி நான் நடக்கிறேன். விவசாயிகளின் கஷ்டங்களை ஆராய்ச்சி செய்யவே நான் வந்திருக்கிறேன். ஆகவே உத்தரவை மீறுவதைத் தவிர வேறு வழியில்லை. நான் எந்த தண்டனைக்கும் தயார்"

என்று மகாத்மா வாக்கு மூலம் கொடுத்தார். மகாத்மாவின் வாக்கு மூலத்தையும், விசாரணையை கவனிக்க வந்த கணக்கற்ற கூட்டத்தையும் பார்த்து அதிகாரிகள் திகைத்துப் போனார்கள். தீர்ப்புச் சொல்லுவதை மாஜிஸ்திரேட் ஒத்திவைத்தார்.

அப்புறம் என்ன நடந்தது தெரியுமா? விஷயம் வைசிராய் வரை எட்டி விட்டது. ஆசாமியோ காந்தி. எளிதில் விடுகிறவரல்ல. ஆகவே வைசிராய் கவர்னருக்கு தந்தி கொடுக்க, கவர்னர் "காந்தி விஷயத்தில் தலையிட வேண்டாம். வழக்கை வாபஸ் வாங்கவும்." என்று ஸ்தல அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

வழக்கு வாபஸ் வாங்கப்பட்டது. மகாத்மா விருப்பப்படி அவுரி பயிரிடுவோர் கஷ்டங்களைப்பற்றி விசாரிக்க மகாத்மாவையும் சேர்த்து சர்க்கார் ஒரு கமிட்டி நியமித்தார்கள். அக்கமிட்டியின் சிபார்சுப்படி சட்டமும் செய்தார்கள். ஏழைகளின் தோழனான மகாத்மா வெற்றி பெற்றார்.



காடும், மரமும், செடியும், எருமைக் கன்றும் அவளாகவே தோன்றுமாம்.

குலாப்ஜான் காதல்

("புதுமைப் பித்தன்" எழுதியது)

"காதலாவது உருளைக்கிழங்காவது"

—ஸி. சுப்பிரமணிய பாரதி.

நான் ஆராய்ச்சிப் பிரியன். அதிலும் தர்க்க ரீதியாக புத்தியை வசீகரிக்கக்கூடிய ஆராய்ச்சி என்றால், அதுதான் எனது தெய்வம். கம்பனுடைய காவியங்கள் முதல், நாணயச் செலாவணி, தீண்டாதார் ஆலயப்பிரவேசம் ஈறாக, எல்லாம் தர்க்க முறையில் அடைபட்டு ஒத்து இருந்தால்தான் எனது கொள்கை. இல்லாவிடில் அதற்கும் நமக்கும் வெகுதூரம்.

இந்தக் காதல் விஷயத்தை நன்றாக ஆழ்ந்து கவனித்ததில், சாதாரணமாக, அல்ல, அபரிமிதமாக, காவியங்கள், நாவல்கள் என்ற கற்பனைப் பிரதேசங்களில் தான் விளைகின்றன. இல்லாவிட்டால் அவை நமது பொருள் காட்சி சாலைகளைத் தப்பி இருக்கமுடியுமா? அகப்பொருள் இலக்கணக்காரர் கூறுவதைப்பார்த்தால், அசல், கலப்பில்லாத பழம் பெருந்தமிழ் மக்களுடனிருந்து, அவர்கள் தங்களுடைய ஏடுகளுடன் கடலால் கொள்ளப்பட்ட பொழுது, அவர்களுடன் சங்கமமாயிற்றென்று நினைக்க ஏது விருக்கிறது.

ஆழ்ந்து யோசிக்குந்தோறும், தர்க்க ஆராய்ச்சியை வழிபடும் எனக்கு, அதன் கூற்றுக்கள் வெகு விநோதமாகவே காணப்படுகின்றன. எனது ஆராய்ச்சியின் முடிவைச் சொல்லவா? தெரியாத விஷயத்தைப்பற்றி சொல்வது கடினந்தான். ஆனால் அதுதான் அறிவுடைமை.

இதை எல்லோருக்கும் பொதுவாக தெரியக்கூடிய விஷயத்திற்கு மாற்றிக்கொண்டால் எளிதில் விளங்கிவிடும். மாணவர்கள் கணித வகுப்பில், எல்லாவற்றையும் பைசாக் கலத்திற்கு மாற்றிக் கொண்டு லேசாக கணக்கு செய்வதுபோல், உபாத்தியாயர் "பிரம்மம் என்றால் என்ன?" என்று கேட்டபொழுது "சாப்பாடு" என்று பையன் பதில் சொன்னதாக ஓர் உபநிஷதக் கதை ஞாபகம். சாப்பாட்டின் மகிமையை எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய திறமையில், உபநிஷதக்காரருடைய மாணவனுக்கு நாம் சற்றேனும் குறைந்தவர்கள் அல்ல.

பீடிகை பெரிதாகிவிட்டது. ஆனாலும் ஆராய்ச்சிக்கு இவ்வளவும் அவசியம். இனி ஓர் உதாரணத்தில் விஷயத்தை விளக்குவோம்.


நான் திடீரென்று குலாப்ஜான் மீது காதல் கொண்டுவிட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். கண்டதும் காதல்; "கண்ணொடு கண்ணிணை" இத்தியாதி விஷயம். உடனே நான் என்ன செய்யவேண்டும் தெரியுமா? செய்யுள் எழுதத்தெரிந்தால், அகப்பொருள் இலக்கணத்திற்குச் சிறிதும் பிசகாமல், சிலேடை, யமகம், முதலிய சொல்நயங்கள் மலிந்து திகழ, சந்திரோ பாலம்பனம் உள்பட குறைந்தது 2000 கவிகளில், "குலாப்ஜான் காதல்" எழுதி முடித்து, பிறகு வள்ளல் என்ற ஒருவரை தேடியடைந்து, அரங்கேற்றி, பரிசில் பெற்று, அப்பொருளின் உதவியால் காதலித்த பொருளை யடைந்து மகிழவேண்டும்.

காதலின் போக்கு வெகு கரடு முரடு என்று கூறுவார்கள். அதன் போக்கே ஒரு தனிப்போக்கு. காதல் வயப்பட்டானுக்கு "காடும் மரமும் செடியும் அவளாகத் தோற்று"மாம். கண்களுக்கு எதிரில் வருகிற எருமைக்கன்று முதல் ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் வரை எல்லாம் ஒரே தோற்றந்தான். "ஒன்றே யதுவாய் உலகமெல்லாம் (அதன்) தோற்றமுமாய்" தெரியுமாம். இது மட்டுமா? காதல் வயப்பட்டானுக்கு காதற் பொருளைத் தவிர வேறு ஒன்றும் வேண்டாதாம்! ஸர்விஸ் கமிஷனால் கிடைக்கக்கூடிய குமாஸ்தா பதவி முதல் திவான் பகதூர் பட்டம், மந்திரிப்பதவி-ஏன்?—முஸோலினி மாதிரி ஸர்வாதிகாரி வரை கிடைத்தாலும் வேண்டாம் என்று சொல்லக்கூடிய தைரியம் வந்துவிடுமாம்.

காதலித்த பொருள் கிடைக்காவிட்டால் என்ன செய்யவேண்டும் தெரியுமா? மடல் ஏறவேண்டுமாம்; அதாவது பனை ஓலை மடல்களை அராபிக் குதிரையாக நினைத்துக்கொண்டு நான்கு ரஸ்தாக்கள் சேரும் சந்தியில், அதன்மேல் சவாரி செய்து தான் காதலித்த பொருளைப்பற்றி ஓர் பிரசங்கம் செய்யவேண்டும். செய்யுள்

எழுதத் தெரிந்தால் மடல் என்ற ஒரு விதமான கவி இயற்றி தப்பித்துக்கொள்ளலாம். இது ஆழ்வார்கள் முதலிய பெரியார்கள் கைக்கொள்ளும் வழி. கஷ்டமில்லை; செய்யுள்தான் எழுதத் தெரிய வேண்டும்.

இதில் இன்னொரு முக்கிய விஷயம் என்னவென்றால், காதல் கொண்ட பொருளும் திரும்ப நம்மைக் காதலிக்கவேண்டும். இது நமது குலாங்ஜானை பொறுத்தமட்டில் கொஞ்சம் கஷ்டந்தான். ஆனால் காட்டுக்குப் போகும் ராமனைக் கண்டு கல்லும் மரமும் மண்ணுங்கூட்டியும் அழுதால், இது என் அசம்பாவிதம்? அப்படி காதலித்தால், பிறகு தான் விசேஷம். "அதற்கு ஆழி வாய் சத்தம்" முதல் சந்திரோதயம், காரிருள் ஈறுக ஒன்றும் பிடிக்காது. முக்காலணு ஸ்டாம்பு வாங்கி கடிதம் போட வேண்டுமென்பதையும்மறந்து, வண்டு, மேகம், தேன், சவ்வாது, அன்னம், கிளி,



ஹோட்டலில் குலாப்ஜான் மீது காதல்

இவைகளைத் தூதனுப்ப ஆரம்பித்துவிடும். இரவு, கார்காலம் இவைகளெல்லாம் காதலித்த பொருளுக்கு ஆகாத காலங்கள்.

ஒரு வேளை அதிர்ஷ்ட வசத்தால் சந்திக்க நேர்ந்தாலோ? "ஓங்கி வரும் உவகை ஊற்றிலறிவோம், ஒட்டும் இரண்டுளத்தின் தட்டிலறிவோம்". அடைந்து விட்டாலோ? அதுதான் முக்தி!

"பிறிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?"

இவ்வளவு தூரம் என்னுடன் ஒத்துழைத்து இந்த ஆராய்ச்சியைப் பின் பற்றி வந்த நீங்களே சொல்லுங்கள். இந்த தர்க்கமறிந்த ஆறறிவுடைய மனிதன் ஒருவன் செய்வானு? இந்த வேடிக்கையான விஷயத்தை சார்லி சாப்ளின் நடித்தாலும், அவனுக்குப் பயித்தியம் பிடித்து விட்டதென்று சொல்ல மாட்டோமா? மளிகைக்கடை செட்டியார் முதல் கலெக்டர் கோஷ்டிவரை இதை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்களே?

காதல், காதல் என்று கும்பலுடன் "ஜே!" போட்டுக் கொண்டிருக்கும் கம்பனுக்கும் இது நன்ருகத் தெரியும். ஆனல் இதை இலக்கியம் படிப்பவரிடம் சொன்னல் மண்டை சுக்கு நூருகப் போய்விடுமென்று பயந்து கடைசியில் இரகசியமாக வைத்திருக்கிருன் பாருங்கள்.

"இத்திற மெய்திய காலையெய் துறும்
வித்தகர் சொற்களால் மெலிவு நீங்கினன்
ஒத்தனன் இராமனும் உணர்வு தோன்றிய
பித்தரின் ஒருவன் பெயர்ந்து போயினன்."

இதற்கு மேலும் சந்தேகமா? நாகரிகமாய் டை, பூட்ஸ் போட்டவர் வேண்டுமானல் ஷேக்ஸ்பியரை திருப்பிப் பாருங்கள். இனியும் சந்தேகமானல் நீங்கள் ஒரு தடவையாவது காஞ்சி புராணம் கட்டாயம் படிக்கவேண்டும்.

"காந்தி" வாழ்த்துப்பா

(ஆர். இராமநாதன், சித்தியவன்- மலாய் நா௵.)


1. வாழிய! "காந்தி" நீடூழி நீ வாழி!!
வள்ளல் காந்தி வளரும் திருநாட்டின்
ஊழியமே வாழ்வின் லட்சியமாக் கொண்டு
உழைத்திடும் பெரியோரைப் பேணி நீ வாழி!

2. மிளிருக! "காந்தி" மேதினியில் பல்லூழி!
மாசில்லா அறத்தை மாந்தருக்குரைத்து
வளருக! எண்டிசையும் புகழ் கமழ்ந்து!
ஒப்பில்லா உயர்வோடும் சுதந்திரத்துடனும் மிளிருக!

3. ஓங்குக! "காந்தி" ஒளிருக யாங்கணும்!
அன்னிய ஆட்சியின் அநீதியை விளக்கி
பங்கமுறும் சாதிச் சண்டையினை ஒழித்து
மாண்புடைய திருநாட்டில் நிதந்தோறும் ஓங்குக!

4. பெருகுக! "காந்தி" நீ பெருகுக!! எத்தினமும்!
அடிமைப்பட்டுழலும் பாரதர்க் கிரங்கி
உருகுக! உலகினில் ஏழை இந்தியர்
மாசற்ற மாண்பினை மகிழ்வுடன் பெருக்குக!

5. அருளுக! "காந்தி" நீ அருளுக!! இந்தியர்கள்
கல்வி அறிவும் அரசியல் ஞானமும்
அருளும் ஆண்மையும் குன்றி ஊக்கமும்
யாங்குடன் பெற்று வாழுதற் கருளுக!



உங்களுக்குத் தெரியுமா?

பழமையான சிலை எது?



பாக்தாத் நகருக்குப் பக்கத்திலுள்ள பிஸ்மியா ஊரிலுள்ள இடிந்து போன ஒரு கோவிலிலிருந்து இச்சிலை கண்டெடுக்கப் பட்டது. சுமார் 6 ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் இது செய்யப்பட்டது என்று மதிப்பிடுகிறார்கள். இதுவரை கண்டெடுத்த சிலைகளில் இதுவே மிகப் பழமையானதாம்.

ஒட்டாவா பலன் என்ன?

பிரிட்டிஷ் சரக்குகளுக்கு இந்தியா சலுகை காட்டவேண்டுமென்றும், இந்திய சரக்குகளுக்கு பிரிட்டன் சலுகை காட்டவேண்டுமென்றும் ஒட்டாவாவில் ஒப்பந்தம் ஏற்பட்டதல்லவா? அதனால் இந்தியாவிற்கு பலனா, பிரிட்டனுக்கு பலனா? சென்ற ஏப்ரல், மே, ஜூன் மூன்று மாத கணக்குகளை பார்ப்போம். இந்த மாதங்களில் பிரிட்டனிலிருந்து இந்தியாவிற்குள் 100க்கு 14 வீதம் இறக்குமதி அதிகரித்திருக்கிறது. அதாவது 4 கோடி ரூபாய் சரக்குகள் அதிகமாயிருக்கின்றன. இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு போன சரக்குகளில் 100க்கு 24 வீதம் குறைந்து விட்டது. அதாவது 9 கோடி ரூபாய் சரக்குகள் குறைந்து விட்டது. ஒட்டாவா ஒப்பந்தத்தால் பலனடைந்தது பிரிட்டனா, இந்தியாவா?

முதல் தமிழ் நாடகம் போட்டது யார்?


முதலில் தமிழ் நாட்டில் தமிழில் நாடகம் நடத்தியவர் ஸ்ரீ கோவிந்தசாமி ராவ் என்று ஸ்ரீ. வி. ராமசுப்பிரமணியம் சொல்லு

இவர். ஸ்ரீ. கோவிந்தசாமி ராவ் தஞ்சாவூர் வாசி. போலீஸ் உத்தியோகத்தில் இருந்தார். 1871ல் இவர் நாடகக் கம்பெனி ஒன்று ஆரம்பித்தார். முதலில் மகாராஷ்டிர பாஷையிலும், அப்புறம் தமிழிலும் நடத்தினர். இதுவே தமிழ்நாட்டில் ஏற்பட்ட முதல் நாடகக் கம்பெனி. அதற்கு முன்னால் தெருக்கூத்துகள் தான் நடைபெற்றன. அதை நாடக மேடைக்குள் கொண்டுவந்தவர் ஸ்ரீ. கோவிந்தசாமி ராவ் என்ற மாராட்டியர். அவரைப் பார்த்து கலியாண ராமய்யர் கம்பெனி ஏற்பட்டது. பின்னால் சங்கீதத்துடன் கூடிய அப்பாவு பிள்ளை கம்பெனி தோன்றியது.

தலை லாமா என்றால் யார்?

வடக்கே இமயமலைக்கு அப்புறம் திபேத் என்றொரு நாடு இருக்கிறது. அதன் உயரம் 12 ஆயிரம் அடி. பௌத்தர்களின் புண்ணிய பூமி. அதன் ராஜாவின் பெயர் தலை லாமா. அவரே மத குரு. தலைநகருக்குப் பெயர் லாஸா. அங்கே "ஜோகாங்க்" என்ற கோவிலில் ஒவ்வொரு வருஷத்திலும் முதல் பௌர்ணமியன்று பெரிய திருநாள் நடக்கும். அதற்கு சீனா, ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்து ஏராளமாக ஜனங்கள் வருவார்கள். 1904ம் வருஷம் வரையில் இந்நாட்டிற்குள் வெள்ளையரை அனுமதிப்பதில்லை. இப்பொழுதும் அவர்கள் போவது சிரமமே. தலை லாமாவின் அரண்மனை மிகவும் அழகான கட்டிடமாம். அதன் கூரை தங்கத் தகடுகளால் வேயப்பட்டிருக்கிறது.

வயதான பத்திரிகை எது?



உலகிலுள்ள பத்திரிகைகளில் அதிக வயதானது எது? சீனாவிலே, பீபிங் நகரத்தில் "சிங்—பர்" என்ற தினசரி நடைபெறுகிறது. அதன் படத்தை பக்கத்தில் பார்க்கவும். இப்பத்திரிகை ஆரம்பமாகி 1032 வருஷங்களாகின்றன. இப் பத்திரிகையில் சர்க்காருக்கு விரோதமாக எழுதியதற்காக, இதன் ஆசிரியர்களில் 890 பேர் தலையிழந்தனர். இன்னம் இப்பத்திரிகை நடக்கிறது.

செவிட்டுக் குடும்பம்


(கே. மகாதேவன்)

சுப்புவய்யர் குடும்பத்திலுள்ளவர் யாவரும் முழுச் செவிடர்கள். அவர்களுடைய பக்கத்தில் வெடி வைத்தால்கூட "இதென்ன புகை?" என்று கேட்பார்கள்.

ஒருநாள் சுப்புவய்யர் தம் வீட்டுத் திண்ணையில் இருக்கும் போது இரண்டு வழிப்போக்கர்கள் அவரிடம் சென்று "அய்யா தடிமகா தேவர் கோவிலுக்கு எந்த வழியாகப் போகவேண்டும்" என்று கேட்டார்கள். உடனே அய்யர் வீட்டிற்குள் ஓடி தமது மனைவியிடம் "அடியே நம்பாத்து எருமைக்கன்றை விலைக்கு வாங்க இரண்டு பேர் வந்திருக்கிறார்கள். உன்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்றார். இதைக்கேட்ட அவருடைய மனைவி "என்ன நான் நம்முடைய பெண் பங்கஜத்தைப் புக்காத்துக்குப் போக வேண்டாமென்று சொல்லவில்லையே. இதோ அவளைக் கூப்பிடுறேன். நீங்களே கேளுங்கள்" என்று சொல்லி பங்கஜத்தை அழைத்து "உன்னை நான் புக்காத்துக்குப் போக வேண்டாமென்று சொன்னேனா?" என்றாள். "ஓ இதென்ன அநியாயமாயிருக்கு. நான் புண்ணாக்கு வாங்கவே இல்லையே. வேண்டுமானால் மன்னியிடம் கேட்டுப் பாருங்கள்" என்று கூறி, மன்னியிடம் ஓடினாள் பங்கஜம். அப்போது மன்னி அம்மியில் தேங்காய் அரைத்துக்கொண்டிருந்தாள். ஓடி வந்த பங்கஜம் "அடியே மன்னி, நான் புண்ணாக்கு வாங்கினேனா? நீதான் சொல்லேண்டி." என்றாள். அதைக் கேட்ட மன்னி. "ஐயோ இதென்ன அநியாயம். நான் தேங்காயைத் திங்கவே இல்லையே. ஒரு நாழிகையாக அரைத்துக் கொண்டல்லவா இருக்கேன். நீ என்மேலே வீணாக பழி சுமத்துகிறாயா? இருக்கட்டும். உன்னை என்ன பாடு படுத்துகிறேன் பார்" என்று தேங்காயும் கையுமாக மச்சுக்குச் சென்று அங்கிருந்த தன் கணவனிடம் "நான் தேங்காயைத் தின்றதாக உங்களுடைய தங்கை பொய் சொல்லுகிறாள்" என்றாள்—தேங்காயைப் பார்த்தவுடன் அவள் கணவனுக்கு கோவில் ஞாபகம் வந்தது. கோவிலுக்குப் போகாததற்காக மனைவி சண்டை போடுகிறாள் என்று நினைத்து ஒரு தேங்காயை எடுத்துக்கொண்டு "புறப்பட்டுவிட்டேனே கோவிலுக்கு" என்று சொல்லி வெளியே புறப்பட்டான்.

தமக்கு வழிகாட்ட இவன் வருகிறானென்று நினைத்து அவனுடன் சென்றார்கள் வழிப்போக்கர்கள்.

மெக்டனல்ட் தவிப்பு



மார்னிங் போஸ்ட்] [லண்டன்

உலக மகாநாடுகளில் மெக்டனல்டுக்கு மிகுந்த கிறுக்கு. கடற் படை மகாநாடு, ஆயுதப் பரிகரண மகாநாடு, முதலிய எத்தனையோ மகாநாடுகளைக் கூட்டினர். கடைசியாக பொருளாதார மகாநாட்டையும் கூட்டினர். ஆனல் பல னென்ன? அதுதான் ஒன்றுமில்லை. அவருடன் சேருவார் யாருமில்லை. மறுபடியும் தனியாக நின்று தவிக்கிறர். ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநிறுத்திவிடப்போவதாக மெக்டனல்ட் இதுவரை பேசிவந்த ஜம்பப் பேச்சுகளும், அர்த்த மில்லாத அலங்காரப் பேச்சுகளும் கொஞ்சமல்ல. நெஞ்சில் அன்பில்லாமல், வெறும் வாய்ப்பேச்சினல் எவ்வளவு காலந்தான் உலகத்தை ஏமாற்ற முடியும்? மெக்டனல்டின் இத்தனை பேச்சுகளுக் சப்பால் ஐரோப்பாவின் நிலைமை என்ன? 1914-ல் ஐரோப்பா எப்படி துவேஷம் நிறைந்து, யுத்தத்திற்கு தயார் செய்துகொண்டிருந்ததோ, அதேமாதிரி தான் இப்பொழுதும் இருக்கிறது. சென்ற யுத்தத்தில், தான் சேர முடியாதென்று மெக்டனல்ட் "மனச் சாட்சி" மேல் பழியைப்போட்டார். இச்சமயம் அவர் பிரதம மந்திரியா யிருக்கும் போதே யுத்தம் ஆரம்பித்துவிடுமோ என்ற பீதி ஏற்பட்டிருக்கிறது.

சுப்பிரமணிய பாரதியார்.

(வ. ரா.)

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை."

இது பாரதியார் தமக்காகவும், பிறருக்காகவும் செய்த வேத சூத்திரமாகும். எனவே, அவரது வாழ்நாளிலே, சிறப்பாக நேர்ந்த நிகழ்ச்சிகளை, அவர் வாயினின்றும் கேட்பது மிகவும் அருமை. நான் எத்தனையோ தடவைகளில், அவருடைய அடிநாள் வரலாற்றைப் பற்றிய பேச்சை சம்பாஷணையிலே நுழைத்துப் பார்த்திருக்கிறேன். வெகு சாமர்த்தியமாக, இந்தப் பேச்சை, கொழுந்திலேயே கிள்ளிக் கிடத்திவிட்டு, வேறு ஏதேனும் ருசியுள்ள சங்கதியைப் பற்றிப் பேசத் துவக்கிவிடுவார். பாரதியாரைப்பற்றி ஆங்காங்கே கிடைக்கும் "துக்கடாக்களை" நண்பர்கள் பலர் சேர்ந்து, திரட்டினாலொழிய, அவரது வாழ்க்கை வரலாற்றை தனி ஒருவன் பூர்த்தி செய்ய முடியாது.

சுப்ரமணிய சிவம் நடத்திவந்த "ஞானபானு" என்ற பத்திரிகையில், பாரதியார் "சின்னச் சங்கரன் கதை" என்று ஒரு கதை எழுதிவந்தார். ஏழு அத்தியாயங்கள் வந்தன என்பது என் நினைவு. அது பூராவும் அச்சுக்கு வருவதற்கு முன்னமேயே, அதன் மூல கையெழுத்துப் பிரதி திருட்டுப் போய்விட்டது. பாரதியாரிடம் வேலை பார்த்து வந்த பக்தன் ஒருவன் துரோகியாகி, சின்னச் சங்கரன் கதையையும்,வேறு சில பாட்டுக்களையும தஸ்தாவேஜிகளையும் திருடி, புதுச்சேரியில் கூடாரமடித்திருந்த இரகஸிய போலீசாரிடம் கொடுத்து விட்டதாக, அந்நாள் வதந்தி. சுமார் முப்பது அத்தியாயங்கள் கொண்டது, பூர்த்தியாகவில்லை. அரசாங்கத்தாரிடம் இருந்தாலும், அதைத் திரும்பக் கொடுக்க, அவர்கள் பெரிய மனது பண்ணினால், தமிழுக்கு லாபம். சின்னச் சங்கரன் கதையை அநேகமாய், பாரதியாரின் தச்சரிதம் என்றே சொல்லலாம். வரிக்கு ஒரு தடவையேனும் விழுந்து விழுந்து சிரிக்கும்படியான எழுத்து.

பாரதியாரைப்பற்றி நல்ல விவரங்களைக் கொடுக்கக் கூடியவர்களுள் முதன்மையானவர்கள் மண்டயம் சினிவாஸாச்சாரியார். அவர் சென்னை, திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி கோயிலுக்குப் பக்கத்தில் வசித்துவருகிறார். இன்னொருவர் துரைசாமி அய்யர் அவர்கள். இவர் சென்னையில் பிரபல வக்கில். இவர் ராயப்

பேட்டையில், பழைய "பாம் குரோவ்" என்ற பங்களாவில் இருக்கிறார். பாரதியார் மைத்துனர் அப்பாத்துரை அய்யரைக் கேட்கலாம். "லோகோபகாரி" பத்திரிகையின் ஆசிரியர் பாலி. சு. செல்லையப்ப பிள்ளைக்கு, பல குறிப்புகள் தெரிந்திருக்கலாம். பாரதியாரின் மனைவி ஸ்ரீமதி செல்லம்மாள், பாரதியாரின் குடும்ப வாழ்க்கையையும் மற்றும் பல விவரங்களையும் பற்றி, உண்மையான குறிப்புகளைத் தரமுடியும். புதுச்சேரியில் வசிக்கும் "பாரதிதாஸன்" என்று புனைப்பெயருடன், பாரதியாரைப் போலவே, அருமையாகக் கவிபாடும் ஆற்றல்பெற்ற வாத்தியார், சுப்புரத்தினம் அவர்கள், பல விநோதத் துக்கடாக்கள் சொல்லக்கூடும். அரவிந்தர் ஆசிரமத்தில் வசித்துவரும் அமிருத என்ற ஆராவமுது அய்யங்கார் என்ற மகா புத்திசாலி, நகைச்சுவையில், நீரோட்ட எழுத்தில், பொருள் செறிவு கலந்து, பாரதியாரைப் பற்றி பல குறிப்புகள் தரக்கூடும். பாரதியாரின் தம்பி விசுவநாதஅய்யர் (பி.ஏ. எல்.டி.) சிலவற்றை சொல்லக்கூடும். பாரதியாரைப் படம் பிடித்தது போலவே, பாரதியாரின் பாட்டுகளைப் பாடக்கூடிய சங்கர ஐயர் (பாரதியாரின் அத்தை மகன்) சென்னையில், எங்கேயோ இருக்கிறார். அவருக்கு பாரதியாரைப்பற்றித் தெரியும். பாரதியாருக்கும் அவரிடம் ரொம்ப அன்பு உண்டு. பாரதியாரின் பக்தர்களும் அபிமானிகளும், இவர்கள் யாவரையும் கலந்து கொண்டால், பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை ஒருவாறு பூர்த்தி செய்யலாம். இதனிடையே, என்னாலான கைங்கர்யத்தைச் செய்கிறேன்.

1883-ம் வருஷம் என்று என் நினைவு. அந்த வருஷத்தில் சுப்ரமணிய பாரதியார் பிறந்தார். பிறந்த ஊர் எட்டையபுரம்; இது திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கிறது. எட்டையபுரம் ஒரு பெரிய ஜமீன். ஆனால் ஜமீன்தாருக்கு ராஜா என்று பட்டம். இந்த சமஸ்தானத்தை "கவுண்டனூர் சமஸ்தானம்" என்று பாரதியார் சின்னச் சங்கரன் கதையிலே வர்ணிக்கிறார். பாரதியார் பிறப்பிலே ஸ்மார்த்த பிராமண, கண்டர மாணிக்க பிரகசரண வகுப்பைச் சேர்ந்தவர்.

'தோடி நாராயண அய்யங்கார், பல்லவி சுப்பராமய்யன், கம்ப ராமாயணம் முத்திருளுத்தேவர்" (இவைகள் யாவும் புனைப்பெயர்கள்) முதலிய புலவர்கள் அலங்கரித்த சமஸ்தானத்திலே (எட்டையபுரத்திலே) சேவல் சண்டையால் செருக்கடைந்த அடாணு ராஸ்வாமிக் கவுண்டர் (சமஸ்தானாதிபதிக்கு பாரதியார் சின்னச் சங்கரன் கதையில் கொடுத்த கற்பனை செல்லப் பெயர்) குடையின் கீழ், பாரதியார் திருவவதாரம் செய்தார்.

பாரதியாரின் தகப்பனருக்கு சின்னசாமி அய்யர் என்று பெயர். அவருக்கும் "சமஸ்தானத்துக்கும்" இடையே, அத்துவு கடந்த நேசம். அவர் சம்பந்தப்பட்ட வரையில், அரண்மனை "நேரா" எதுவுமே கிடையாது. தாராளமாய் எந்த நேரத்திலும், அரண்மனையில் உட்புகுந்து, வெளியே வரலாம். சின்னசாமி அய்யர் கணித சாஸ்திரத்தில் ருசியும் தேர்ச்சியும் பெற்றவர். பாரம்பரையையும் பழக்கத்தையும் துணைக்கொண்டு, சின்னஸாமி அய்யர் தமது குமாரனைக் கணிதப்புலவனுகச்செய்யப் பெரிதும் முயன்முர். சின்னசாமி அய்யருக்கு இயந்திரப் பழக்கம் மிகுதியும் உண்டாம். மேனுட்டு இயந்திரங்களை, அக்காலத்திலேயே (சுமார் அறுபது வருஷங்களுக்கு முன்னமே) தாமே, எவர் உதவியில்லாமல் பிரித்து, மறுபடியும் பூட்டக்கூடிய சாமர்த்தியமும் சக்தியும் பாரதியாரின் தகப்பனருக்கு இருந்ததாம்.

கணித சாஸ்திரத்துக்கு அதிகம் கற்பனை சக்தி தேவையில்லை என்று 'கோல்ட்ஸ்மித்' என்ற ஆங்கில நாட்டு மேதாவி எழுதியிருக்கிருர். இயந்திரம் ஓட்டும் வேலைக்கும் அதிகமாக புத்தி நுட்பம் வேண்டுவதில்லை என்று சொல்லிக் கொள்ளுகிருர்கள். இவ்விரு துறைகளிலும், பையன் பாரதி தேர்ச்சியடைந்து, குவியல் குவியலாய்ப்பணம் சம்பாதிக்க வேண்டுமென்பது தகப்பனரின் கருத்து. அல்லது, ஏதோ அற்பப் படிப்புடன் இந்தியாவை விட்டு வெளியேற்றி, சீமையிலே தள்ளி, சிலகாலம் அங்கேயிருக்கச் செய்து, தமிழ் நாட்டுக்கு வரும் பொழுது, பாரதியார் ஜில்லா கலெக்டராய் "கைச்சொக்காய், கால் சராயுடன்" வரவேண்டும் என்பது தகப்பனரின் பேரவா. எனவே, பிள்ளையின் ஆரம்பப் படிப்பு விஷயத்தை தாமே கொஞ்சகாலம் நடத்தி, பிறகு ஆவலுடன் மேற்பார்வை பார்த்து வந்தார். கணக்குப்போட, பையனைத் தகப்பனர் கூப்பிட்டால், பாரதியார் மனதுக்குள்ளேயே, "சணக்கு, பிணக்கு, வணக்கு, மணக்கு, ஆமணக்கு" என்று தொடர் அடுக்கிக் கொண்டே போவாராம்.

இயந்திரத்துக்கும் நேர்ந்த கதி அவ்விதமே. இடந்திரத்துக்கும் பாரதியாரின் கற்பனையிலே, அடுக்குத்தொடர் அகப்படுவது அருமையா? தகப்பனர் மிக்க ஆவலுடனும் தெளிவுடனும், கணக்கை, பையனுக்குப் போதிக்க எத்தனித்தார். ஆனல், பிள்ளையோ, தமிழ்ச்சொற்களை சந்தத்துடன் அடுக்கிக் கொண்டே போவார். இந்த வெள்ளைத் திருட்டை, தகப்பனர் கண்டு கொண்டார். ஏதேனும் வைதால், திட்டுக்குச் சந்த அடுக்கு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் தகப்பனருக்கு உண்டு. ஏதோ, ஒரு சமயம், கணக்குப் போடாமல், பாரதியார் விழித்துக் கொண்டிருந்ததை தகப்பனர்

கண்டார். "இது என்ன விழி" என்றார். உடனே, உரக்கவே பாரதியார், "விழி, பழி, குழி, வழி, பிழி, சுழி" என்று கணக்கிலே, "சுழி" போட்டு விட்டாராம். பையனுக்கு சித்தப்பிரமையோ என்று எண்ணி, தகப்பனார் மனம் ஏங்கிப் போனார்.

சின்னசாமி அய்யருக்கு, பிள்ளையினிடத்தில் வாஞ்சை ரொம்ப ஜாஸ்தி. பிள்ளையை அடித்துத் தொந்திரவு செய்ய, அவருக்கு விருப்பமில்லை. பாரதியாருக்கு மிகவும் மெல்லிய உடல். அந்த உடலிலும் ஆவி இருக்குமோ என்பது சந்தேகம். பாரதியார் சாகும் வரையில், அவருக்குத் தேகப்பயிற்சியில், ரொம்ப உற்சாகம். குஸ்தி போடவேண்டும் என்று பலகாலும் சொல்லுவார். எவரேனும் நேர்த்தியாக, "கஸ்ரத்" செய்தால், பாரதியார் தாம் உட்கார்ந்திருக்கும் இடத்திலேயே, தம்முடைய கை, கால், உடம்பு முதலியவைகளை அங்குமிங்கும் சொந்த நினைவு இல்லாமல் ஆட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்து, அவருடைய நண்பர்கள் வாய்க்குள்ளாகவே சிரிப்பதுண்டு. பாரதியார் "தாயில்லாப் பிள்ளை" என்ற காரணத்தினால், (பாரதியாரின் குழந்தைப் பருவத்திலேயே, அவரது தாயார் இறந்துபோனார்) சின்னசாமி அய்யர், தமது பையனைத் தொட்டு அடிப்பதற்கு மனம் கொள்ளவில்லை.

தமது தாயைப்பற்றி, நல்ல ஞாபகம் பாரதியாருக்கு இருந்ததில்லை. அந்த வகையில், தமது அனுபவம் நிறைந்து, பூர்த்தியாகவிருக்கவில்லையே என்று அவர் மனம் வருந்துவார். அண்டைவீட்டுக் குழந்தைகளுக்கு இருந்த தாயின் சலுகை தமக்கு இருந்ததில்லையே என்று மனம் வாடுவார். தாயார் இந்த உலகத்தை விட்டு சீக்கிரம் அகன்றதினாலேயே, பாரதியார் சாகுமளவும், குழந்தையாக இருந்துவந்தார். நேற்றைய தினம் பிறந்த பெண் குழந்தையும் பாரதியாருக்கு அம்மா தான். வயதுக்கணக்கு அவருக்குத் தொந்தரவு கொடுத்ததேயில்லை. "அம்மா, அம்மா" வென்று அவர் தமது பாட்டுகளில் கூவி அழைத்திருப்பதை, நீங்கள் எல்லோரும் படித்திருப்பீர்கள்.

வீதியிலே, ஒரு குழந்தையை, தாயில்லாப்பிள்ளை என்று எவரேனும் சுட்டிக்காட்டிவிட்டால், பாரதியார் அந்த இடத்திலேயே, ஸ்தம்பித்து நின்றுவிடுவார். அவர் மனதில் என்ன என்ன எண்ணங்கள் தோன்றி மறையுமோ, அவைகளை நான் அறிந்ததில்லை. "என்ன், ஓய் எனக்கு அம்மா மயக்கத்திலிருந்து ஒருநாளும் விடுதலை யில்லையா" என்று பக்கத்திலிருக்கும் நண்பரை வினவி விட்டு, சிறிது நேரத்துக்கெல்லாம், "அம்மா, அம்மா" என்று இசையிலே கூவுவார். ஆகவே, கணிதத்தில் புலமை வாய்ந்த உயிருள்ள தகப்

பனர் பையனை கணித சாஸ்திரியாகச் செய்ய முடியவில்லை. மறைவி லிருந்த தாய், பாரதியாரை கவியாக வளர்த்துவிட்டாள்.

பையனாக யிருக்கையில், பாரதியாருக்கு எட்டையபுரம் அரண் மனையில் சலுகை அதிகம் உண்டு. "சமஸ்தானம்" பாரதியாரை அன்புடன் நோக்கிவந்ததால், சமஸ்தான வித்வான்களும் மற்றவர் களும், பாரதியாருக்கு அன்பும் மரியாதையும் கொடுத்துவந்தார் கள். பாரதியாருக்கு "பாரதி" என்ற பட்டம், சமஸ்தான வித் வான்களால் அளிக்கப்பட்டதாகும். தமிழ் பண்டிதர்களுக்கு, இதைப்பற்றி சந்தேகம் வேண்டாம், குழந்தையா யிருக்கும்பொழு தே, பாரதியார், கேட்போர் திகைக்கும்படி, வெடுக்கு வெடுக் கென்று பேசுவார், பதில் சொல்லுவார். "நூற்றுக்கிழவ"னுடைய அனுபவத்தை, பாரதியார் தமது இளம்பிராயத்திலேயே, காட்டி வந்தார். "சமஸ்தானத்தின்" ஸன்னிதானத்தில், புலவர்கள் நூல்களை அரங்கேற்றுகையில், சபையில் இளம் பாரதியார் ஒரு "மெம்பர்". பாரதியார் தமது அபிப்பிராயத்தைக் கூசாமல்சொல்லி விடுவாராம். "பழுதை என்று மிதிக்கவும் முடியவில்லை; பாம்பு என்று மதிக்கவும் கூடவில்லை" என்று வித்வான்கள் முணுமுணுப் பார்களாம்!

சிறு பிராயத்தில், பெரிய புலவர்களின் நட்பும், "சமஸ்தானத் தின்" தயவும் பாரதியாருக்கு அபரிமிதமாகக் கிடைத்திருந்தபடி யால், அவர் தேனை நுகரும் வண்டைப்போல, களி எய்தி, வாழ் ந்து வந்தார். இலேசாகப் படிப்பதும், எளிதிலே பரீட்சையில் தேறுவதும் அவரது வழக்கமாயிற்று. இலக்கணத்தின் கொடிய விதிகளில் சிலவற்றை உடைத்து எறிந்துவிட்டு, கவிகள் பாடத் துவக்கினர். சிங்கார ரஸம் பொங்கிய "சமஸ்தான" மானதால், பாரதியார், "மடல்களும், உலாக்களும்" முதலிலே பாடினர். நல்லவேளையாக, அவைகள் இன்றைக்கு, இருந்த இடம் தெரி யாமல், மண்ணோடு மண்ணாய்க் கலந்துகொண்டன. அவைகள் உயிருடன் இப்பொழுது இருந்திருக்குமாயின், பாரதியாரின் பெரும் புகழுக்கும் பெயருக்கும் குறுக்கே வந்து படுத்துக்கொண் டிருக்கும். நண்பர்களின் நிமித்தம், பாரதியார், தனிப்பாடல்கள் பாடுவதுண்டாம். அவைகள் காகிதத்தில் எழுதப்படாததனால், செல்லரிக்க வழியில்லை. உலகத்தின் ஒலியிலே, ஒளிந்துகொண்டு போயிருக்கலாம்.

பாரதியாருக்கு வயது வருமுன்னரே, அவருடைய தகப்பனர் மரணமடைந்தார்.

ஸ்ரீ தயானந்த அர்த்த சதாப்தம்

(எம். ஆர். ஜம்புநாதன்)

லாகூரினருகே பெரிய சபையொன்று நடைபெற்றது. துறவி யொருவர் பேசப்போகும் சமயம். உடனே சபையின் காரியதரிசி அவரை அணுகி,

"சாமி" என ஏதோ முணுமுணுத்தான். "என் முணு முணுப்பு? பேசுவதை நன்றாய்ப் பேசவும்" என்றார் துறவி.

வாயை எடுத்தான். ஆனல் நடுங்கினன். உளறிக் கொட்டி னன் "என் உளறுகிறாய்? பயப்படாதே! என்ன சொல்லவேண்டும் அஞ்சாமல் சொல்லவும்" என்றார்.

"சுவாமியே, எப்படியும் ஆபீஸர்கள் ஆபீஸர்களே! ஐரோப்பி யர்களுமாயிற்றே! நீங்கள் என் அவர்களைப்பற்றி சற்று நிதான மாய்ப் பேசக்கூடாது?" என்றான்.

"இதற்குத்தானு காலத்தை வீணுக்கிறாய்? எனக்கு கலெக்ட ரானுல் என்ன? கவர்னரையும் பற்றி எனக்கென்ன கவலை! வைசி ராய் பிரபுவாயிருந்தாலும் என்ன? பூமண்டலத்தை யாளும் சக்கிர வர்த்தியையும் பற்றி எனக்கென்ன பயம்? சத்தியத்திற்கு மாறு னல் இவர்களையும் நான் அச்சமன்னியில் எதிர்ப்பேன்.

"ஆத்மாவிற்கு ஜன்மமில்லை. சாவில்லை. நீரால் நனையாது. நெருப்பால் எரியாது. ஆயுதமும் அதை அழிக்காது. அதை அழிப்பவனை நான் இதுவரைக் கண்டதில்லை. அப்படி யொரு வனைக் காணும் வரை சத்தியத்தை நான் ஏன் விடவேண்டும்? என் னைக் கொல்ல வன்மை பெற்றவர் இங்கு எவரேனுமுண்டோ?" என நான்கு புறமும் உற்று நோக்கினர். எங்கும் நிசப்தம்.

அப்படி அச்சம் வேண்டாம் எனச்சொல்லிய தயானந்தர் பூவுலகம் நீங்கி 50 வருஷமாயிற்று. அதைக்கொண்டாட அஜ்மீரிலே தீபாவளியன்று பெரிய சபையொன்று நடைபெறும். அப்பொ ழுது சுமார் நாலு லட்சம் ஆரியர்கள் ஒன்று சேர்ந்து "நாங்களும் தீரர்களாக இன்று பிரதிக்ஞை செய்துகொள்ளுகிறோம். உங்கள் ஆத்மா இனி சாந்தமாகலா"மெனச் சொல்லப்போகிறார்கள். இளந் தமிழர்களும் அன்று தீரப் பிரதிக்ஞைசெய்து கொள்வார்கள் என் பதில் சந்தேகமில்லை.

Printed at the "Tamil Nadu" Press, Madras. Published by T. S. Chockalingam, Editor & Proprietor, "Gandhi" Office, 29, Sembudoss St., Madras.



ஆசிரியர்: தே. ச. சோக்கலிங்கம்


மாலை 2. { 1933 நவம்பர் 5உ
29 செம்புதாஸ் தெரு, சென்னை. } மலர் 6.

அட்டவணை.

விட்டல்பாய் பட்டேல்:

சர்க்காரை ஆட்டிவைத்த தீரர்

இந்திய சட்டசபையின் ஒப்பற்ற தலைவர்



"வெடிக்குண்டு" பட்டேல்

இந்த 1933ம் வருஷம் இருக்கிறதே, இந்தியாவிற்கு மகா துர்ப் பாக்கியமான வருஷமென்றே இதைச் சொல்லவேண்டும். தேசிய வீரர்களான ஹாசன் இமாம், அலி இமாம் ஆகிய இரு சகோதரர்களை இழந்தோம். வங்கமணி சென்குப்தாவை இழந் தோம். இப்பொழுது பட்டேலையும் இழந்தோம்!

சர்தார் வல்லபாய் பட்டேலும், இறந்து போன வித்தல்பாய் பட்டேலும் சகோதரர்கள். இருவரும் பாரிஸ்டர்கள். சர்தார் பட்டேல் மகாத்மாவின் வலது கையாய் விளங்குகிறவர். வித்தல் பாய் பட்டேல், மேல்நாட்டு ராஜீய போராட்ட முறைகளில் மிகுந்த நம்பிக்கையுள்ளவர். இரண்டு பேருக்கும் வழிகளில் அபிப்பிராய பேத மிருந்த போதிலும், இருவரும் மாசற்ற தேசிய வீரர்கள். அவரவர் வழியில் இணையற்று விளங்குபவர்கள்.

வித்தல்பாய் பட்டேலின் செய்கைகளும், பேச்சுக்களும் வெடிக் குண்டு போட்டதைப் போல, திடீர் திடீரென்று ஆச்சரியப்படத் தக்கனவா யிருக்கும். மேல்நாட்டு ராஜீய முறைகளில் கை தேர்ந்த நிபுணர். அவர் இந்தியா சட்ட சபைத் தலைவரா யிருக்கும்போது சர்க்காரை திணற வைத்து விட்டார். இந்திய சர்க்கார் அங்கத் தினர்கள் சகலருடைய ராஜ தந்திரம் ஒன்றாய்ச் சேர்ந்தும், தனிப் பட்ட பட்டேலின் ராஜ தந்திரத்தின் முன்னால் நிற்க முடியவில்லை. தோல்விமேல் தோல்வியடைந்து வந்தது. இந்தியா சட்டசபையின் நடவடிக்கைகளை உலகம் முழுவதும் கவனிக்கும்படியாக சுயராஜ் யக் கட்சியார் பண்டித நேருவின் தலைமையில் செய்து வந்தார்கள். தேசிய வீரர்கள் அடங்கிய அந்த சபையின் தலைவராயிருந்து அவர் தீர்ப்புகளை மற்ற பார்லிமெண்ட் தலைவர்கள் ஆவலோடு படிக் கும்படி பட்டேல் செய்து வந்தார். பார்லிமெண்டின் பேர்பெற்ற தலைவராகிய லார்ட் உல்ஸ்வாட்டர் தீர்ப்புகளைப் போல பட்டேல் தீர்ப்புகள் இருப்பதாக ஸ்ரீ. பால்டுவின் ஒரு தடவை ஒப்பிட்டுப் பேசினார்.

ஜனங்களின் உரிமைகளையும், சட்டசபையின் கௌரவத்தை யும் காப்பாற்றும் ஒரே நோக்கங் கொண்டு பட்டேல் நடந்து வந் தார். அதனால் ஜனங்கள் விருப்பத்திற்கு மாறாக நடக்கும் சர்க் காருக்கு விரோதமாக நடந்ததாக சிலர் நினைக்கலாம். ஆனால் அவர் செய்த தீர்ப்புகள் எல்லாம் மிக நேர்மையானவை என்பதை யாரும்

மறுக்க முடியாது. வெள்ளைப் பத்திரிகைகள் கூட அதை ஒப்புக் கொள்ளுகின்றன.

மீரத் வழக்கு நடக்கும் போது போல் ஷவிக் மசோதா கொண்டு வருவது கோர்ட் நடவடிக்கைக்கு பாதகம் ஏற்படும் என்று சொல்லி அவர் மசோதாவை தள்ளி விட்டது ஒரு முக்கியமான தீர்ப்பு. சட்ட சபை பாதுகாப்பை போலீஸ் இலாகா கையில் கொடுக்க முடியாது, தலைவர் கையிலேயே இருக்கவேண்டுமென்று அவர் போராடி வெற்றி பெற்றது மற்றொரு முக்கிய சம்பவம். சட்டசபை இலாகாவை சட்ட இலாகாவிலிருந்து பிரித்தார். இன்றும் அந்த இலாகா தனியாகவே நடைபெறுகிறது. பழைய ரிசர்வ்பாங்க்மசோதா வாதத்தில் இருக்கும்போது, புது மசோதாவை பிரேரிக்கக்கூடாதென்று பட்டேல் தடுத்துவிட்டது சர்க்காரை திகைக்கச்செய்தது. இவையெல்லாம் நியாயமான தீர்ப்புகளே. சேனாதிபதி, பொக்கிஷ மந்திரி, உள்நாட்டு மந்திரி முதலியவர்கள் சபையை அவமதிக்கும் விதத்தில் நடந்தபோது, அவர்களை பலமாய் கண்டித்து மன்னிப்பு வாங்கினார். உறுதியும், தீரமும் இல்லாதவர்களால் இத்தகைய காரியங்களை ஒருக்காலும் செய்யமுடியாது.

பட்டேலின் சட்டசபை வாழ்வு வீர வாழ்வு. அவர் பதவியை ஒப்புக்கொண்டது முதல் ராஜீநாமாச் செய்கிறவரையில் இடைவிடாமல் சட்டசபையின் கௌரவத்தை அதிகரிக்க வேலை செய்து வந்தார். மிகத் திறமையான நிர்வாகி என பம்பாய் கார்ப்பரேஷன் தலைவராயிருக்கும்போதே அவர் திறமை வெளியாயிற்று. அதனால் அச்சமயம் கார்ப்பரேஷன் கமிஷனராயிருந்த ஜான் கிளேட்டன் என்பவர், சட்டசபைத் தலைவர் பதவி பட்டேலுக்கு கிடைக்கும்படி மிகவும் பாடுபட்டார். பம்பாய் கார்ப்பரேஷன் தலைவராயிருக்கும்போதும் இவர் தேசபக்தியை காட்டாமல் போகவில்லை. அச்சமயம் வைசிராயாயிருந்த லார்ட் ரீடிங்கிற்கு உபசாரப் பத்திரம் படித்துக்கொடுக்க வேண்டுமென்று கார்ப்பரேஷன் தீர்மானம் செய்தது. தலைவர்தான் பத்திரம் வாசிக்கவேண்டும். அந்தவேலையை தன்னால் செய்யமுடியாதென்று பட்டேல் மறுத்து விட்டார். இதற்காக அவர்மீது கண்டனத் தீர்மானம் நிறைவேறியது. பட்டேல் தலைவர் பதவியை ராஜீநாமாச் செய்தார். ஆனால் மறுபடியும் அவரே தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். உபசாரப்பத்திரம் வாசிக்க மறுத்ததைப்பற்றி ஒரு மன்னிப்பு வார்த்தை கூடச்சொல்லாமல் மறுபடியும் தலைவராய் வரவேண்டுமானால் அவருடைய தேசபக்தியும், சாமர்த்தியமும் எவ்வளவு இருக்கவேண்டும்?

இரண்டாவது இந்தியா சட்டசபையில் அவர் அங்கத்தினரா யிருக்கும்போது, கேள்விகளாலும், பேச்சுக்களாலும் சர்க்காரை ஆட்டிவைத்துவிட்டார். சர். மால்கம் ஹெயிலி அச்சமயம் உள் நாட்டு மந்திரியாயிருந்தார். அவர் பட்டபாட்டுக்கு ஒரு உதா ரணம் சொல்லுகிறோம். பாஞ்சால கவர்னராக அவர் நியமன மானவுடன் ஒரு விருந்து நடைபெற்றது. அங்கே பேசியபோது "பட்டேல்களும், நேருக்களும் தொந்தரவு கொடுக்காத பதவிக்கு நான் போகிறதைப்பற்றி சந்தோஷப்படுகிறேன்" என்றார்.

பட்டேலுக்கும் லார்ட் இர்வினுக்கும் மிகுந்த நட்பு. ஜினிவா வில் பட்டேல் அசௌக்கியமாயிருந்தபோது, லார்ட் இர்வின் அவர் தேக சௌக்கியத்தை விசாரித்து சென்ற மாதம் கடிதம் எழுதியிருந்தார். லார்ட் இர்வினிடம் அவருக்கிருந்த செல்வக் கைக்கண்டு, இர்வின் ஆட்சிகாலத்தை "பட்டேல் ராஜ்யம்" என்று பலர் அழைத்ததுண்டு. மகாத்மா முறைகளில் பட்டேலுக்கு எப் பொழுதும் பூர்ண நம்பிக்கை கிடையாது. ஆனால் மகாத்மா ஒருவரா லேயே ஜனங்களுக்கு உணர்ச்சியுண்டாக்க முடியுமென்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே 1930-ம் வருஷம் சட்டமறுப்பு ஆரம்ப மானவுடன் ஏப்ரல் 25உ தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்தார். அதே வருஷம் ஆகஸ்ட் மாதம டெல்லியில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில் ஆஜரா யிருந்ததற்காக கைதியாகி 6 மாதம் தண்டனை யடைந்தார். அச்சமயமாவது அவர் "வெடிக் குண்டுப் பேச்சை" மறந்திருந்தாரா? இல்லை. மாஜிஸ்திரேட்டைப் பார்த்து, "இங்கிலாந்தில் பார்லிமென்ட் தலைவரா யிருந்து விலகிய வர்களுக்கு பென்ஷனும் லார்ட் பட்டமும் கொடுப்பதுண்டு. இங்கேயுள்ள சர்க்கார் கொடுக்கும் இந்த வெகுமதியை பென்ஷ னாகவும், லார்ட் பட்டமாகவும் எடுத்துக் கொள்ளுகிறேன்" என் றார். பாவம், மாஜிஸ்திரேட் என்ன செய்வார்? விழித்தார்.

ஜெயிலில் அவர் தேகநிலைமை கெட்டுப் போகவே, கோயம்புத் தூர் ஜெயிலிலிருந்து அவரை விடுதலை செய்தனர். 1931-ம் வரு ஷம் பிப்ரவரி மாதம் உடல் நலத்திற்காக ஐரோப்பா சென்றார். அதே வருஷம் டிசம்பர் மாதம் இந்தியாவிற்கு வந்தார். 1932-ம் வருஷம் ஜனவரி மாதம் 2உ மறுபடியும் சட்டமறுப்பு ஆரம்ப மாயிற்று. அவசரச் சட்டப்படி அவரை 6உ கைது செய்தார்கள். ஆனால் ஜெயிலுக்குள் அவர் நிலைமை மறுபடியும் கேவலமாகவே மார்ச்சு மாதம் 5உ அவரை சர்க்கார் விடுதலை செய்து ஐரோப்பா போக அநுமதி கொடுத்தனர். வியன்னா நகரத்திற்குச் சென்று சிகிச்சை செய்து கொண்டார். முற்றிலும் குணமாகு முன்பு அமெரிக்கா வெங்கும் சுற்றி இந்தியாவைப்பற்றி பிரசாரம் செய்

தார். இதனால் அவர் தேக நிலைமை கெட்டு சென்ற மாதம் 21உ இரவு 1½ மணிக்கு ஜீனிவாவில் காலமானார்.

வித்தல்பாய் பட்டேல் வீரசொர்க்கம் புகுந்தார். அவர் உயிர் விடும் வினாடி வரையிலும் இந்தியாவின் ஞாபகமாகவே இருந்தார். பிராணன் பிரியும் முன்பு அவர் சொல்லியதாவது:—

"என்னுடைய நாட்டாருக்கும், உலகமெங்குமுள்ள எனது நாட்டினரின் நண்பர்களுக்கும் என்னுடைய ஆசிர்வாதங்கள். இந்தியா சீக்கிரமாக விடுதலை யடைய வேண்டுமென்று உயிர் பிரியும் முன்பு நான் பிரார்த்தனை செய்கிறேன்."

வித்தல்பாய் வீர வாழ்வு வாழ்ந்தார். தேசத்திற்கு தீபஸ் தம்பம்போல வழிகாட்டியா யிருந்தார். சோர்வடைந்த சமயத்தில், உற்சாகம் கொடுக்கும் வீரப் பேச்சுக்கள் பேசி வந்தார். எதிரிகள் நடுங்கும்படி வெடிக் குண்டுகளைப்போல படீர் படீரென்று காரியங் கள் செய்தார். இன்று அவரை நாம் இழந்தோம். அவர் ஆத்மா சாந்தி யடையுமாக! அவர் எந்த விடுதலைக்காக தம்மை அர்ப்ப ணஞ் செய்தாரோ அந்த விடுதலையைப் பெற நாம் வேலைசெய்து அவர் ஆத்மாவுக்கு சாந்தி கொடுப்போமாக! நாசிக் ஜெயிலில் தனியாக வாழும் அவர் சகோதரர் சர்தார் வல்லபபாய்க்கு நமது அநுதாபத்தை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அக்டோபர் அதிர்ஷ்ட நம்பர்கள்

ரூ. 25-பரிசு நெ. 005097.

ரூ. 5-பரிசு நெம்பர்கள் 008002, 006507, 005770, 004168, 007435.

ஷை நெம்பர்கள் உள்ள அக்டோபர் 18உ காந்தி மலர் பிரதிகள் வைத்திருப்பவர்கள் நமக்கு நேரிலோ, ரிஜிஸ்தர் தபால் மூலமோ அனுப்பி உரிய பரிசுத்தொகையை பெற்றுக் கொள் ளலாம். அட்டை யுள்பட கிழியாமல் அனுப்பினால் தான் பரிசு கிடைக்கும். உள் நாட்டார் நவம்பர் 15உக் குள்ளும் வெளி நாட்டார் நவம்பர் 30உக்குள்ளும் அனுப்பவேண்டும். அப்புறம் அனுப்பினால் பரிசு கிடையாது.

"காந்தி" ஆபீஸ், சென்னை.

2 ஆயிரம் ரூபாய் பரிசு.

நடுத்தெரு நாராயணன், தமிழ் நாடு

தம்பீ,


உன்னுடைய கடிதம் கிடைத்தது. உனக்கு 2 ஆயிரம் ரூபாய் கிடைக்கப்போவதாக எழுதியிருக்கிறாய். கிடைத்தால் எனக்கும் சந்தோஷமே. இதில் என்னுடைய உதவியை எதிர் பார்ப்பதாய் கூறுகிறாய். தாராளமாய் வேண்டிய உதவிசெய்யத் தயாராயிருக்கிறேன். நீ அனுப்பியிருக்கிற சித்திர போட்டிப் பந்தயத்தைப் பார்த்தேன். அதற்கு பதில் எழுதிவிட்டால் 2 ஆயிரம் ரூபாய் கைமேல் வந்துவிடுமென்று கூறுகிறாய். ஐயோ, இத்தனை வயதாகியும் ; மனித சுபாவத்தை அறியாமல் இருக்கும் உன்னைக்கண்டு என்ன சொல்லுவதென்று எனக்கே தெரியவில்லை. அவ்வளவு சுலபமாக விடுகதை போட்டு, தாராளமாக 2 ஆயிரம் ரூபாயை தூக்கிக்கொடுப்பதென்றால், உன்னைப்போல, பரிசு போடுகிறவரும் முட்டாள் என்று நினைத்துக்கொண்டாயா ? 2 அணா கொடுத்து பத்திரிகை வாங்குகிற ஒவ்வொருவருக்கும் 2 ஆயிரம் கொடுப்பதென்றால், பணத்திற்கு எங்கேபோவதென்று நீ நினைத்தாயா ? அலாவுதீனின் அற்புத விளக்கு இருந்தால் கூட கொடுத்துவிட முடியாது. அப்படியானால் பரிசு கொடுக்கும் ரகசியம் தான் என்ன என்று நீ கேட்கலாம். அப்படி கேள். அக்டோபர் 20௳ "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகையைப் பார்த்தாயா ? அதில் இந்த போட்டி பந்தயத்தைப்பற்றி எழுதியதை கீழே குறிப்பிடுகிறேன் :—

"அதிர்ஷ்டத்தைச் சோதனை செய்து எப்படியாவது சூதாட்டத்திலோ குதிரைப்பந்தயத்திலோ பணம் சம்பாதிப்பது என்ற உணர்ச்சி சில ஜனங்களுக்கு இருக்கும். இந்த சூதாட்டப் புத்தியை தமக்கு அனுகூலமாக உபயோகித்து மாற்றெழுத்துப்போட்டி, குறுக்கெழுத்துப் பந்தயம் முதலியன போட்டு பத்திரிகைத் தொழிலே பந்தய விளையாட்டின் ஓர் அம்சமாக ஆக்குவது மிகவும் சகஜமாய் வருகிறது. சூதாட்டத்தையே முக்கியமாகக் கொண்டு சென்னையில் இப்பொழுது சில வேடிக்கை காட்சி சாலைகள் நடக்கின்றன. இவற்றிற்கு விரோதமாக பொதுஜனங்களிடையே அபிப்பிராயம் வளர்ந்துவருகிறது. இந்த சூதாட்ட வேடிக்கை

களுக்கும் பத்திரிகைகள் நடத்தும் இந்தப் புதிய போட்டிப் பந்தயங் களுக்கும் விசேஷ வித்தியாசம் கிடையாது."

இப்பொழுதாவது உனக்குப் புரிந்ததா? புரியவில்லையானால் இன்னம் சொல்லுகிறேன். தமாஷுக்காக ஏற்பட்ட குதிரைப் பந்தயம் எப்படி ஏழைகள் பணத்தை இழக்கும்படி செய்கிறது என்பது உனக்குத் தெரியும். அம்மாதிரி பத்திரிகை படிப்பவர் களுக்கு சிறிது உற்சாகத்திற்காக ஏற்பட்ட இந்த போட்டிப் பந்த யம், ஏழைகளுக்கு பணப் பைத்தியம் பிடிக்கும்படி செய்து விட் டது. ஒவ்வொருவனும் 2 ஆயிரம் ரூபாய் தனக்கு கிடைக்கப் போவதாக நினைத்துக்கொண்டு 13¼ அணு செலவிடுகிருன். பற்பல விடைகளை அனுப்பி 4, 5 ரூபாய்கள் தொலைக்கிருன். பரிசு கிடைக்கப் போவதாக நினைக்கும் தொகையை செலவிட மனோ ராஜ்யம் செய்கிறுன். கடைசியில் அவன் கதியென்ன? லாட்டரி சீட்டில் ஏமாந்தவனைப்போல ஏமாந்து நடுத்தெருவில் நிற்கிருன். பாவம், இப்படி ஏமாந்தவர்கள் தொகை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. தம்பி, நீயும் அந்த கோஷ்டியில் சேரவிரும்புகிருயா? பரிசு போடுகிறவர்கள்மீது நான் குறை சொல்ல விரும்பவில்லை. சுலபமாக எப்படி பணம் தட்டலாம் என்ற நோக்கங்கொண்ட பேராசைக்காரர்கள் இருக்கும்போது அவர்கள் என்ன செய்ய முடியும்? வருகிற பணத்தை சரியாய் எழுதியவர்களுக்கு கொடுத்து விட்டுப் போகிருர்கள். அவ்வளவுதான் அவர்கள் வேலை. பரிசு போட்டால்தான் பத்திரிகை வாங்குவேன் என்று உன் கூட்டத் தார் பிடிவாதம் செய்தால், யார் என்ன செய்வது? உங்கள் செய் கையால் தபாலாபீஸ்காரருக்கு நல்லலாபம். நிற்க, நீ அனுப்பிய சித் திர போட்டிப்பந்தயத்திற்கு பதில் சொல்லுகிறேன். படவரிசைகள் மொத்தம் ஒன்பது. ஒவ்வொரு வரிசையும் ஒவ்வொரு வார்த்தை. அது என்ன என்பதை குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும். குறிப்புகளையும் விடைகளையும் கீழே வெளியிடுகிறேன்.

குறிப்புகள்	விடைகள்
1. மகாத்மாவின் காமதேனு	ராட்டினம்
2. காதலர் நண்பன்	சந்திரன்
3. இந்தியாவின் விரோதி	சர்ச்சில்
4. ஒரு இந்துப் பண்டிகை	தீபாவளி
5. ஒரு ராகம்	காம்போதி
6. இந்தியாவின் தலைவர்	மகாத்மா
7. பணக்காரன்	பூமான்
8. விஷ்ணு	திருமால்.
9. ஒரு வாத்தியம்	தம்புரு



1
வல்லின மெய்
மெல்லின மெய்
2
மெல்லின மெய்
மெலலின மெய்
3
இடையின மெய்
வலலின மெய
4
இடையின இகரம்
5
வல்லின இகரம்
6
வல்லின மெய
7
மெல்லின மெய்
8
ரு
இடையின மெய்
9
மெல்லின மெய்
இடையின உயிர்மெய்

இவைதான் சரியான விடைகள் என்று எண்ணிக் கொள்ளாதே. ஆசிரியர் வைத்திருக்கும் விடைகளுக்கு எழுத்துக்கு எழுத்து சரியாய் இருப்பவைகளே சரியான விடைகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த விடைகள் சரியானவையாக இருந்தாலும், எழுத்துக்களில் ஆசிரியர் வைத்திருப்பவைகளுக்கு வித்தியாசம் ஏற்பட்டால் உனக்கு பரிசு கிடைக்காது. இது என்னவென்று உனக்கு விளங்கவில்லையா ? சொல்லுகிறேன் கேள். முதல் மூன்று விடைகளுக்கு வேறு விடைகள் இருக்க முடியாது. 4-வது வார்த்தையை எடுத்துக்கொள். திபாவளி என்றும் சொல்லலாம், தீபாவலி என்றும் சொல்லலாம். கடைசிப் படத்தில் இடையின இகரம் என்றிருக்கிறது. லியும், ளியும் இதற்குப் பொருந்தும். இதில் ஆசிரியர் எதை குறித்து வைத்திருக்கிறார் என்பது உனக்கு எப்படித்தெரியும்? 5வது வார்த்தையைப் பார். அதற்கு காம்போதி என்றும் சொல்லலாம். இதிலும் இரண்டுவிடைகள். 7-வது வார்த்தைக்கு பூமான், சீமான் என்ற இரண்டு விடைகளும் பொருந்தும். முதல் படத்தில் லக்ஷ்மி இருக்கிறாள். அவளை பூமகள் என்றும் சொல்லலாம். சிதேவி என்றும் சொல்லலாம். 8 வது வார்த்தையை பார்ப்போம். இதற்கும் 2 விடைகள். பெருமாள், திருமால். 9 வது வார்த்தைக்கு முதல் படத்தில் உள்ளதை துட்டு என்றோ, தம்பிடி என்றோ சொல்லலாம். ஆகவே தம்புரு, தும்புரு என்ற இரண்டு விடைகளும் அதற்குண்டு. 9 வரிசைப்படங்களில் 5 வரிசைகளுக்கு இரண்டிரண்டு வார்த்தைகள் இருக்கின்றன. ஆசிரியர் எழுதி வைத்திருப்பது என்ன என்பது நமக்குத்தெரியாது. எல்லாம் சரியாயிருந்து, ஒரு வார்த்தையில் தவறு ஏற்பட்டாலும் உன்னுடைய 2 ஆயிரம் ரூபாய போய்விடும். ஆகவே ஆசிரியர் எழுதிவைத்தபடி இருக்கவேண்டுமானால், வெவ்வேறு கூப்பன்களில் வெவ்வேறு விதமாக எழுதியனுப்பவேண்டும். அதை கீழே குறிப்பிடுகிறேன்.

1. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், திபாவளி, காம்போஜி, மகாத்மா, பூமான், பெருமாள், தும்புரு.
2. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், தீபாவலி, காம்போஜி, மகாத்மா, பூமான், பெருமாள், தும்புரு.
3. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், திபாவளி, காம்போதி, மகாத்மா, பூமான், பெருமாள், தும்புரு.
4. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், தீபாவளி, காம்போஜி, மகாத்மா, சீமான், பெருமாள், தும்புரு.
5. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், திபாவளி, காம்போஜி, மகாத்மா, பூமான், திருமால், தும்புரு.

6. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், தீபாவளி, காம்போஜி, மகாத்மா, பூமான், பெருமாள், தம்புரு.
7. ராட்டினம, சந்திரன், சர்ச்சில், தீபாவலி, காம்போதி, மகாத்மா, பூமான், பெருமாள், தம்புரு.
8. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், தீபாவலி, காம்போஜி, மகாத்மா, சீமான், பெருமாள், தம்புரு.
9. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், தீபாவலி, காம்போஜி, மகாத்மா, பூமான், திருமால், தம்புரு.
10. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், தீபாவலி, காம்போஜி, மகாத்மா, பூமான், பெருமாள், தம்புரு.
11. ராட்டினம், சந்திரன், சர்ச்சில், தீபாவளி, காம்போதி, மகாத்மா, சீமான், பெருமாள், தம்புரு.
12. ராட்டினம், சந்திரன். சர்ச்சில், திபாவளி, காம்போதி, மகாத்மா, பூமான், திருமால், தம்புரு,
13. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் திபாவளி காம்போதி மகாத்மா பூமான் பெருமாள். தம்புரு.
14. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் திபாவளி காம்போஜி மகாத்மா சீமான் திருமால் தம்புரு.
15. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவளி காம்போஜி மகாத்மா சீமான் பெருமாள் தம்புரு.
16. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் திபாவளி காம்போஜி மகாத்மா பூமான் திருமால் தம்புரு.
17. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் திபாவளி காம்போஜி மகாத்மா சீமான் திருமால் தம்புரு,
18. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் திபாவளி காம்போதி மகாத்மா பூமான் திருமால் தம்புரு.
19. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் திபாவளி காம்போதி மகாத்மா சீமான் பெருமாள் தம்புரு.
20. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் திபாவளி காம்போதி மகாத்மா சீமான் திருமால் தம்புரு.
21. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போஜி மகாத்மா பூமான் திருமால் தம்புரு.
22. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போஜி மகாத்மா சீமான் பெருமாள் தம்புரு.
23. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போஜி மகாத்மா சீமான் திருமால் தம்புரு.
24. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போதி மகாத்மா பூமான் பெருமாள் தம்புரு.

25\. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போதி மகாத்மா பூமான் திருமால் தும்புரு.

26\. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி சாம்போதி மகாம்மா சீமான் பெருமாள் தும்புரு.

27\. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் திபாவளி காம்போதி மகாத்மா சீமான் திருமால் தம்புரு.

28\. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போஜி மகாத்மா சீமான் திருமால் தம்புரு.

29\. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போதி மகாத்மா பூமான் திருமால் தம்புரு.

30\. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போதி மகாத்மா சீமான் பெருமாள் தம்புரு.

31\. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போதி மகாத்மா சீமான் திருமால் தும்புரு.

32\. ராட்டினம் சந்திரன் சர்ச்சில் தீபாவலி காம்போதி மகாத்மா சீமான் திருமால் தம்புரு.

பார்த்தாயா? 32 கூப்பன்களில் 32 விதமாக எழுதி அத்தனைக்கும் பிரவேச கட்டணமும் அனுப்பினல் ஒருவேளை உனக்கு கிடைக்கலாம். அதுவும் சந்தேகந்தான். ஆசிரியர் விடைகளில் என் மூளைக்கு படாத வேறு "நகாஸ்" வேலைகள் இருக்கலாம். அதனல்தான் ஏதோ குருட்டுப்பூனை விட்டத்தில் பாய்ந்ததைப் போல, தப்பித்தவறி அதிர்ஷ்டவசமாய் சரியாய் எழுதியவர்களுக்கு பரிசு கிடைக்கிறது.

இவ்வளவு தூரம் எழுதியதைப் பார்த்த பின்பாவது இந்த பரிசுப் பைத்தியம் உன்னை விடுமா? விடுமென்று எனக்குத் தெரியவில்லை. குதிரைப் பந்தயத்தில் எத்தனையோ பேர் ஓட்டாண்டிகள் ஆவதைப் பார்த்தாலும் மற்றவர்களுக்கு புத்தி வருகிறதா? அதைப்போல உனக்கும் புத்தி வரப்போவதில்லை. இருந்தாலும் சொல்லித் தொலைக்க வேண்டியது எனது கடமையாகையால் சொல்லி விட்டேன். அப்புறம் உன் பணத்தை காப்பாற்றுவதோ கரியாக்குவதோ உன் இஷ்டம்.

உன் அன்புள்ள சகோதரன்.


—படார்சாமி

இருமுக ஹிட்லர்



ஜெர்மனிக்கு வெளியே | ஜெர்மனிக்குள்

ஹெர் வோல்க்] [ஆம்ஸ்டர்டாம்



டியூரின் மெஷினோ] [மிலான்

காந்தியின்

"ஜெயில்" விளையாட்டு.



படார்சாமி கடிதங்கள்

(படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் படார் படார் என்று பகிரங்க மாகவே எழுதுவார்.)

ஸ்ரீ. சர்ச்சில்
லண்டன்

படாஸ் வெடியே,


பார்லிமென்ட் கமிட்டி முன்பாக நீர் சாட்சியம் கொடுத்ததை படித்தேன். "குடியேற்ற ஆட்சி இந்தியாவிற்கு கொடுக்கக்கூடாதென்று சொல்லுகிறீர். 1921 ல் இந்தியாவுக்கு குடியேற்ற ஆட்சி கொடுக்கவேண்டுமென்று சொன்னீரே" என்று லார்ட் இர்வின் உம்மைக் கேட்டார். "அப்படிக்கூறியதற்காக வருந்துகிறேன். என்னையே நான் கடிந்துகொள்ளுகிறேன்" என்று பதிலளித்தீர். இதைப்போலவே, குடியேற்ற ஆட்சி கொடுக்கக்கூடாதென்று இப்பொழுது நீர் கூச்சலிடுவதற்காக, உம்மையே நீர் கடிந்துகொள்ளும் காலமும் வரும். அதை இப்பொழுதே உமக்கு எச்சரிக்கிறேன்.

—படார்சாமி

சர். ஹோர்
லண்டன்

இந்தியா மந்திரியே,

அயர்லாந்து பின்பற்றிய வழியை இந்தியா பின்பற்ற வேண்டாமென்று நீர் கூறினீர். உமக்கு இவ்வளவாவது புத்தியில் பட்டதேயென்று நான் சந்தோஷப்படுகிறேன். ஆனல் எப்பொழுதும் அரைக்கிணறு தாண்டுவது ஆபத்து. நீர் சொல்லுவது அரைக்கிணறு தாண்டுவதாயிருக்கிறது. அயர்லாந்து வழியை பின்பற்ற வேண்டாமென்று நீர் சொல்லுவதால் பாதி உண்மையை அறிந்திருக்கிறீர் என்று தெரிகிறது. மற்றொரு பாதி உண்மை என்ன? அயர்லாந்தில் சர்க்கார் கையாண்ட முட்டாள் தனமான அடக்குமுறை. இதை நீர் அறிந்திருக்கிறீரா? அறிந்து



இந்தியாவுக்கு குடியேற்ற ஆட்சி கொடுக்க வேண்டுமென்று 1921ல் தாம் சொல்லியது தவறு என்று, சர்ச்சில், பார்லிமெண்ட் கமிட்டி முன்பு தோப்புக்கரணம் போடுகிறார்.

அம்மாதிரி இந்தியாவிலும் நடக்கவேண்டாமென்ற நற்புத்தி உமக்கு உதயமானல், அன்றே இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் நல்லகாலம் ஆரம்பமாகும்.

—படார்சாமி

காங்கிரஸ் தலைவர்கள்
மதுரை

தோழர்களே,

நிர்மாணத் திட்டத்தை தீவிரமாக நடத்திவைக்க வேண்டுமென்று நீங்கள் நிர்மானித்ததைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். சென்னையிலுள்ள சில "தலைவர்"கள் சட்டசபை மோகத்தில் வீழ்ந்திருக்கும் இச்சமயத்தில், நீங்கள் வேறுவழி காட்ட முன்வந்ததைப் பாராட்டுகிறேன். வரப்போகிற சீர்திருத்தம் எம்மாதிரியானது, தேர்தல் எப்பொழுது என்ற விவரமே தெரியாமலிருக்கும்போது, சட்டசபையைப்பற்றி பேசிக்கொண்டிருப்பது வெறும் மானக்கேடு. சட்டமறுப்பு செய்ய சௌகரியமில்லாத காங்கிரஸ்காரர்கள் சும்மாயிருப்பது கூடாது. நிர்மாண வேலைகளில் எதையாவது எடுத்துக்கொண்டு தீவிரமாக வேலைசெய்து காங்கிரஸ் பெயரை ஜனங்கள் மறந்துவிடாமல் செய்துவர வேண்டும். நாம் கேட்கும் சுயராஜ்யம் என்ன? வெள்ளைக் கடுதாசியில் கண்டிருக்கும் சீர்திருத்தம் எவ்வளவு உபயோகமற்றவை என்ற ராஜீயப் பிரசாரம் தற்சமயம் மிகவும் அவசியம். வெள்ளைக் கடுதாசியை பகிஷ்கரிக்க தமிழ்நாடெங்கும் கூட்டங்கள் கூட்டலாம். வெள்ளைக் கடுதாசி பகிஷ்கார தினம் ஒன்று ஏற்பாடு செய்து ஊர்வலங்கள் நடத்தலாம். இம்மாதிரியான ராஜீயப் பிரசாரமே தற்சமயம் அவசியமானதும், செய்யக்கூடியதுமாகையால், தமிழ்நாடெங்கும் இந்த பிரசாரம் ஓங்கும்படி நீங்கள் செய்வீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

—படார்சாமி

நிலசுவான்கள்
திருநெல்வேலி

நண்பர்களே,

இப்பொழுதாவது நீங்கள் தூக்கத்திலிருந்து எழுந்ததைக் கண்டு திருப்தியடைகிறேன். அழுத பிள்ளைதான் பால்குடிக்கும். நிலவரி அதிகமென்றால் அதை எடுத்துக்காட்டி கிளர்ச்சி செய்யாவிட்டால் உங்களுக்கு எப்படி பரிகாரம் கிடைக்கும்? அதிலும் இந்த சர்க்காரிலா? மகாநாடு முடிந்துவிட்டது என்ற திருப்தியடைந்து மறுபடியும் தூங்கிவிடாதீர்கள். இடைவிடாமல் கிளர்ச்சி செய்யுங்கள்.

—படார்சாமி.

சுப்ரமணிய பாரதியார்.

(வ. ரா.)

பாரதியாரின் தாயார் இறந்து போனபின், சின்னசாமி அய்யர் அவர்கள், மறுதாரம் விவாகம் செய்து கொண்டார். அந்த அம்மாள் மூலமாய், சின்னசாமி அய்யருக்கு ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் உண்டானார்கள். பாரதியாரோ, சமஸ்தானத்துச் சிறு கவிராயர். தம்பியும் தங்கையும் சிறு குழந்தைகள். இயந்திர முயற்சியை இந்தியாவில் ஸ்தாபிக்க வேண்டும் என்ற பிடிவாதத்தினால், சின்னசாமி அய்யர் தமது சொத்து முழுமையையும் இழந்தார்.

இந்த நிலைமையில் பாரதியாரின் சிமைப்படிப்பைப்பற்றி யோசிக்க வேண்டிய தேவையே இல்லாமல் சின்னசாமி அய்யர் இறந்து போகவே, அந்தக் குடும்பம் தவித்துத் தத்தளித்ததை விவரித்து கூறவேண்டுமா? இந்த அனுபவம் ஏகதேசம் எல்லாக் குடும்பங்களிலும் காணக் கூடியதுதான். குடும்பத்தின் மூல புருஷன் மறைந்து அவருக்குப்பின், அவரை அண்டி வாழ்ந்து வந்தவர்கள் திக்கற்றுத் தவிப்பதை, நமது தேசத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பங்களில், நாம் சாதாரணமாய்ப் பார்க்கலாம். அந்தக் காலத்தில் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளும் அதிகமாக முழங்கவில்லை. அப்படி யிருப்பினும், சின்னசாமி அய்யர், இன்ஷூரென்ஸ் கம்பெனிக்குப் பணம் கட்டுவாரோ என்பது சந்தேகம். அதற்குக் கட்டவேண்டிய பணத்தை, மெஷினைப் பழுது பார்க்கச் செலவு செய்யத்தான் அவருக்கு புத்தி போயிருக்கும் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். தாம் கொண்டிருந்த ஒரே கருத்தில் சின்னசாமி அய்யர் ரொம்பப் பிடிவாதம் காட்டுவார் என்று பாரதியார் அடிக்கடி சொல்லுவதுண்டு.

இந்த சமயத்திலேயோ, கொஞ்சம் காலம் பொறுத்தோ, (நிச்சயமாய்ச் சொல்லுவதிற்கில்லை) பாரதியாருக்குக் கலியாணமும் ஆகிவிட்டது. எனவே, புலவர் வறுமை, அவரை பால்யத்திலேயே பிடித்துக்கொண்டு விட்டது என்று சொல்லலாம். தகப்பனார் இறந்ததும், பாரதியாரின் படிப்பு விஷயம் எப்படியிருக்கும்? "நல்ல நாளிலேயே நாழிப்பால் கறக்காத பசுமாடு" சங்கதிதான்.

சிறு பிராயமுதலே, பாரதியார் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். எட்டையபுரம் ராஜா, பாரதியாரின் பேச்சில் ஈடுபட்டுப் போன,

தில், என்ன ஆச்சரிய மிருக்கிறது? ஆனல், சிருங்காரரஸப் பாட்டுக்களை மிகுதியும் வேண்டின ராஜாவோடு, பாரதியார் நீண்ட காலம் சல்லாபம் வைத்துக் கொள்ள முடியாமற் போயிற்று.

விளையும் பயிர் முளையிலே என்று சொல்லுகிறார்களே, அதைப் பிரத்தியட்சமாக, பாரதியாரின் வாழ்க்கை வரலாறிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சாதாரணமாய் பத்தாயிர ரூபாயுள்ளவனைப் பணக்காரன் என்று மதித்து, அவனுடைய உறவை நாடும் மனிதர்களையே, நாம் எல்லோரும் பார்க்கிறோம். மகா புத்திசாலிகளுங்கூட வயிற்றுப்பிழைப்பை உத்தேசித்து, அசட்டுப் பணக்காரனுடைய அவலச் சொற்களில் கூட அழகும் அர்த்தமும் இருப்பதாக வர்ணிக்கும் இந்த தேசத்தில், பாரதியார் எட்டையபுரம் "ராஜா"வின் நன்மதிப்பை, பெரிதாகக் கொள்ளவில்லை என்றால், அது தினமும் நடைபெறுகின்ற சம்பவமா?

ராஜாவின் நட்பினல், பாரதியாருக்கு நஷ்டமாக ஏற்பட்டது ஒரு கெட்ட பழக்கம். பாரதியாரின் உடம்பு ரொம்ப "பூஞ்சை" (மெல்லிய உடல்); தேகத்திலே, அதிகமாக வலுக்கிடையாது. ராஜாவுக்குப் பாரதியாரின்பேரில், ரொம்ப வாஞ்சை. "தம்பி! உடம்பை நீ இப்படி வைத்துக் கொண்டிருக்கக் கூடாது? உன்னைப் பார்த்தால், புளிச்சேப்பக்காரன் மாதிரி இருக்கிறது. நீ நன்றாகச் சாப்பிடவேண்டும் பசி "தீவனம்" ஏற்படுவதற்கு, நீ பூரணாதி லேகியம் சாப்பிட்டால், நல்லது. பூரணாதி லேகியத்தின் மகிமை உனக்குத் தெரியாது. அந்த லேகியம் சாப்பிட்டால், ஒரு அண்டாச்சோறு வயிற்றுக்குள்ளே போய்விடும். அதுமட்டுமா, அண்டாவே உள்ளே போனாலும் போய்விடும்" என்று விகடம் பேசி, தட்டிக் கொடுத்து பாரதியாரை, பூரணாதி லேகிய யோகத்தில் தலைகுப்புற இறங்கும்படியாகச் செய்துவிட்டார். இந்த சம்பவத்தை, பிற்காலத்தில், தமாஷாயிருக்கிற காலத்தில், ரொம்ப வேடிக்கையாக பாரதியார் வர்ணிப்பதுண்டு.

கங்கா பானம் செய்யவேண்டும் என்று பெரியார்கள் சொல்லுவதை வேறுவிதமாக மாற்றி, பாரதியார் சிறு பிராயமுதல் "கஞ்சா பான" முயற்சியில் மோகங்கொண்டார். பணக்காரர்களின் உறவு ஏழைகளுக்கு நல்ல பழக்கத்தை உண்டாக்காது என்று பலர் சொல்லுவதற்கு பாரதியாரே பெரிய அத்தாட்சியாக விளங்குகிறார். உடல் வலிமைக்காக, பாரதியார் பூரணாதி உட்கொண்டதும், அதே உடல் வலிமையின்பொருட்டு, காந்தி தமது சிறு பிராயத்தில், திருட்டுத்தனமாய் மாமிசபோஜனம் செய்து, இரவில் பசியில்லை என்று தமது தாயிடம் சொன்னதும் குறிப்பிடத்தக்கவை

பாரதியாருக்கு உபதேசம் செய்த ராஜாவுக்கும் கார்த்திக்கு உபதேசம் செய்தவருக்கும் கெட்ட எண்ணம் கிடையாது. பால்யத்தில், ஒன்றைக் கேட்டாலும் பார்த்தாலும் அது எவ்வாறு அழுத்தமாகப் பதிகின்றது என்பதை, இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். எனவே, சிறுபிள்ளைகள் விஷயத்தில், வயதிற் பெரியவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு, இந்த இரண்டு சம்பவங்களும் எச்சரிக்கைக் கற்களைப்போல இருக்கின்றன.

எட்டையபுரத்தில் இருக்க மனமில்லாமல், பாரதியார், காசிக்கு, தமது அத்தை வீட்டுக்குச் சென்றார். அலகாபாத்து சர்வ கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்குப் படித்தார். காசியிலேயே, தனிப் பல்கலைகழகம் (சர்வ கலாசாலை) அப்பொழுது இல்லை. அக்காலத்தில் சர்வகலாசாலையாகாத, ஸென்ட்ரல் ஹிந்து காலேஜைச் சேர்ந்த, உயர்தரப் பள்ளிக்கூடத்தில், பாரதியார் படித்தார் தாம் பள்ளிக்கூடத்துக்குப் போகிற விதரணையை பாரதியார் கேலி செய்து பேசுவதுண்டு. அந்தக் கேலியின் சாரம் கீழ்கண்டவாறு:—

“காலை மாலை நூலை ஓது என்கிறார்கள். அது தப்பு. நான் படித்தகாலத்தில், நான் நூலையே ஓதினதில்லை. பள்ளிக்கூடத்துக்கு காலையில் போனால், மாலையில் போகமாட்டேன். மாலையில் போகலாம் என்று எண்ணி, காலமே போகமாட்டேன். பிறகு ஒரு எண்ணம் தோன்றும். மாலையிலும் போகமாட்டேன். காலை மாலை உருண்டோடிப் போகும். புஸ்தகம் ஹஸ்தபூஷணம் என்பதும் தவறு. ஹஸ்தத்துக்கு பூஷணம் (கைக்கு அலங்காரம்) நல்ல ஸில்க் சட்டை, ஜோரான பச்சைக்கல் மோதிரம். நான், புஸ்தக மூட்டை தூக்கிக்கொண்டு, பள்ளிக்கூடத்துக்கும் போனதேயில்லை. சட்டை ஜோப்பியில் சில கடிதங்கள், ஒரு பென்ஸில், இவைகள் தான் இருக்கும். வாத்தியார் பாடம் சொல்லிக்கொண்டிருப்பார். அவரைப்பற்றி ஹாஸ்யக் குறிப்புகள், வசனத்திலும் பாட்டிலும் எழுதி, அடுத்த பையனிடம் நீட்டுவேன். இருவரும் சிரிப்போம். பிறகு பெஞ்சு பூராவும் பரவிவிடும். ஒரே சிரிப்பு. என்ன சத்தம் என்று வாத்தியார் கேட்குமுன்னரே, பொதுவாக வகுப்பிலிருந்து நழுவிவிடுவேன். வீட்டுக்குவந்து, மாடியிலேறி, கங்கா பிரவாகத்தைப் பார்த்துக் களிப்பேன். இதுதான், நான் படித்த கதை.”

இவ்வாறு பாரதியர் பிந்திக் கேலி செய்ததைக் கொண்டு, அவர் ஒன்றும் படிக்கவில்லை என்று எவரும் அவசரமாக, முடிவுக்கு வந்துவிட வேண்டாம். பள்ளிக்கூடத்துக்குப் பாரதியார்

இவ்வளவு "டோகர்'' கொடுத்தாலும், பிரவேசப் பரிட்சையில், முதல் வகுப்பில் தேறினர். அக்காலத்தில் காலேஜ் படிப்புக்கு முதல்படியான, எப். ஏ. வகுப்பிலும் சேர்ந்தார். குடும்பக் கவலையினுலோ, அல்லது கல்லூரிப் படிப்பில் மனமில்லாமலோ, ஒரு வருஷத்துக்குள் அந்தப் படிப்பிற்கும் சலாம் செய்து, நிறுத்திவிட்டார்.

"தத்தாரி" மனம்கொண்ட (ஒரு விஷயத்திலும் பிடிப்பில்லாத) இந்தப் பிள்ளையை, உற்றூர் உறவினர் எவ்வாறு நேசித்து, பராமரித்துப் பாதுகாக்கமுடியும்? பாரதியார் "மண்டு"வாக இருந்தாலும், அவர்கள் ஒருவாறு தங்கள் மனதைத் தேற்றிக் கொண்டிருப்பார்கள். வீட்டிலே அதிகமாகப் படிக்காமல், பரீட்சையில் முதல் வகுப்பிலே தேறின பாரதியார் ரொம்ப புத்திசாலி என்று அவர்கள் கண்டுகொண்டார்கள். அதனுலேதான், அவர்கள் தொல்லைப்பட்டார்கள்.

பரிட்சை தேறினதில் இன்னெரு விசேஷம். பிரவேச பரீட்சைக்கு இரண்டு பாஷைகள் வேண்டும். இங்கிலீஷ் ராஜாங்கத்தில், ஒரு பாஷை இங்கிலீஷ் என்று சொல்லவும் வேண்டுமா? காசியிலே, தமிழ் பாஷை கிடையாது. எனவே, பாரதியார் தமிழிலே பரிட்சை கொடுக்க முடியாது. இரண்டொரு வருஷங்களில் ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொண்டு, பரிட்சையில் முதல் வகுப்பில் பாரதியார் தேறினது, மிகவும் ஆச்சரியப்படவேண்டிய விஷயமல்லவா? பாரதியாரின் ஹிந்தி உச்சரிப்பைக் கேட்டவர்கள் அவர் வடக்கித்தி கோஸாயி பிராமணனே என்று சந்தேகப்படும்படியிருக்கும். அவ்வளவு "டாண் டாண்" என்று பேசுவார். ஹிந்திபாஷையிலே, சில சப்தங்களை, தொண்டைக்கிழிருந்தே, (நாபிக் கமலத்திலிருந்துகூட என்று சொல்லலாம்) கொண்டுவரவேண்டும். தமிழர்களுக்கு, அது ரொம்ப கஷ்டமாயிருக்கும். ஆனல் பாரதியாருக்கு, அது தண்ணீர் பட்டபாடு. ரொம்ப லேசாக வரும். பாரதியார், ஹிந்தி ரொம்ப அழகாகப் பேசுவார்; உச்சரிப்பார்.

என்ன காரணத்தினுலோ, பாரதியாருக்கு காசியும் படிப்பும் பிடிக்கவில்லை. எட்டையபுரத்துக்கு வரும்படி, ராஜா பாரதியாருக்குக் கடிதம் எழுதினர், அதுதான் சாக்கு. எட்டையபுரத்துக்கு வந்த பாரதியார், காசிக்குத் திரும்பிப்போகவில்லை. படிப்பு முற்றிற்று. அரண்மனைதயவைத் தவிர, நிலைத்த உத்தியோகம் கிடையாது. "கையில் காசு" சங்கதியை சொல்லத் தேவையில்லை.

:: நாட்டியம் ::

"கந்தர்வன்"

நாடகமேடையைப் பற்றி இந்த மலரில் பாக்கி விஷயங்களை சொல்லுவதாக சென்ற மலரில் எழுதினேன். "நாமொன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைக்கிறது" என்ற பழமொழியை பொய்க்க வைக்கலாமா? இடையில் 22 ந்தேதி நாட்டியக் கச்சேரி வந்து குறுக்கிட்டது. சென்னை கானமந்திரத்தில் சென்ற மாதம் 22 ந்தேதி, பிரசித்தி பெற்ற ஸ்ரீமதி வீணை தனத்தின் பேத்தி ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் நாட்டியம் நடைபெற்றது. இதைப் பற்றி உங்களுக்கு சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்பது



என்னுடைய ஆவல். நண்பர்களுடன் கான மந்திரத்திற்குப் போனேம். "கான மந்திரம்" வெளிப்பார்வைக்கு அழகாயிருக்கிறது. உள்ளே மின்சார விளக்குப்போட்டாலும் அழகாய்த்தானிருக்கிறது. ஆனல் ஆசன அமைப்புகளும், மேடை அமைப்பும் மகா மோசம். 8 அணு கொடுத்தாலும் சரி, ஒரு ரூபாய் கொடுத்தாலும் சரி, தரையில் தான் இருக்கவேண்டும். டிக்கட் கொடுப்பதோ, தென்னிந்திய ரயில்வே கம்பெனியில் 3-வது வகுப்புக்கு டிக்கட் கொடுக்கிற மாதிரித்தான். எத்தனை பேர் வந்தாலும் டிக்கட் கொடுத்து உள்ளே தள்ளிவிடுகிறார்கள். அவன் எங்கே யிருப்பது, எப்படி பார்ப்பது என்ற கவலை டிக்கட் வாங்குபவனைச் சேர்ந்தது. மேடை என்று ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிற இடத்தில் கானமந்திர சங்கீத சபையின் அங்கத்தினர்கள், தலைவர்கள் காரியதரிசிகளின் நண்பர்கள் முதலிய முறையில் ஏராளமானவர்கள் உட்கார்ந்துகொள்ளுகிறார்கள். தரையில் உட்கார்ந்தாலும் சரி, நாற்

காலியில் உட்கார்ந்தாலும் சரி, யார் உயரமாக கழுத்தை நீட்டமுடியுமோ அவர்கள்தான் மேடையில் நடப்பதை பார்க்கமுடியும் கான மந்திர ஆசன வசதிகளின் சிறப்பை இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

சரியாக 5½ மணிக்கு நாட்டியம் ஆரம்பமென்று அறிக்கையில் காணப்பட்டது. இந்தியர் சமாச்சாரம்தான் இருக்கிறதே! 5½ மணி யென்றால் 6½ மணிதான் என்று ஒரு நண்பர் சொன்னார். என்ன ஆச்சரியம்! 5½ மணி அடித்ததோ இல்லையோ உடனே மேடையில் ஸ்ரீமதி பால சரஸ்வதியைப் பார்த்தோம். குறிப்பிட்ட நேரத்தில் அன்று ஆரம்பமானது உண்மையாகவே எனக்கு பெரிய ஆச்சரியமாயிருந்தது.



பாட்டுகளிலுள்ள பொருள்களை அபிநயத்தில் காட்டுவதே பரதநாட்டியம் என்பதை பலர் அறியாமல் இருக்கலாம். அது அவர்கள் குற்றமல்ல. சங்கிதக் கச்சேரிகளிலோ, நாட்டியக் கச்சேரிகளிலோ பாடப்படும் பாட்டுகளில் 100 க்கு 99 தெலுங்குப் பாட்டுகள். தெலுங்கு தெரியாத தமிழர்களுக்கு பாட்டுகளின் பொருள் விளங்குவதில்லை. ராக ஆலாபனையையும், சங்கித இனிமையையும் மட்டும் அநுபவித்து தலையாட்டுவார்களே யொழிய, சாஹித்தியம் தெரியாது. பாட்டுகளின் பொருள்களையும் சங்கிதத்துடன் சேர்ந்து அநுபவிக்க முடியாது. இந்த விஷயம் தமிழருக்கு இன்னம் மண்டையில் ஏறாமலிருப்பது வருந்தத்தக்கது. தமிழ்நாட்டில் தெலுங்குப்பாட்டுகள் எதற்காக? வேறு எந்தநாட்டாராவது தங்கள் சங்கிதக் கச்சேரியில் தமிழ்ப்பாட்டுகளையே பிரதானமாக வைத்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? ஒருக்காலும்

பார்க்கமுடியாது. அவர்களுக்கு சுயமதிப்பில்லாமல் போனலல் லவா மிற பாஷை பாட்டு பிரதானமாக கொள்ளுவார்கள். சாஹித்தியத்தின் பொருளை அறியாமல் சங்கிதம் நடத்தும் கொடுமையை தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் பார்க்கமுடியாது.

நாட்டியக் கச்சேரியிலும் இதே தொல்லைதான். அங்கு பாடப்படுகிற பாட்டுகள் எல்லாம் அநேகமாய் தெலுங்குப் பாட்டுகள் தான். அவற்றிற்குத்தான் அபிநயங்கள். தெலுங்கு தெரியாதவர்கள் இதை எப்படி அநுபவிக்க முடியும்? சங்கிதத்தில் ராக இனிமையையாவது அநுபவிக்கலாம். நாட்டியத்தில் அதுவுமில்லை.

அவரவர் புத்திக்குத் தகுந்தபடி அர்த்தஞ்செய்து தலையாட்டுவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த கதிதான் எங்களுக்கும் ஏற்பட்டது. தெலுங்குப் பாட்டுகளுக்கு அபிநயம் ஆரம்பமாயிற்று. தெலுங்கோ தெரியாது. ஒன்றும் புரியவில்லை. பக்கத்திலிருந்த ஒரு தெலுங்கரிடம் அர்த்தம் கேட்டேன். "இந்த இழவு தெலுங்கு எனக்கும் புரியவில்லை" என்று சொன்ஞர். எதோ இன்னம் கொஞ்சம் பார்க்கலாம் என்று இருந்தோம். இச்சமயம் மற்ருெரு வேடிக்கையான சம்பவம் நேரிட்டது. அந்த கச்சேரிக்கு இந்திய உடையுடன் ஒரு வெள்ளையர் வந்திருந்தார். இந்திய சங்கிதத்தையும் நாட்டியத்தையும் அறிந்துகொள்ள அவர் வந்திருக்கிருராம். அவரை யூனிவர்சிட்டி லைப்ரேரியன் ஸ்ரீ. ரங்கநாதம் என்னிடம் கூட்டிவந்து "இவர் லண்டனிலிருந்து வந்திருக்கும் ஸ்ரீ. தாம்ப்சன்" என்று அறிமுகப்படுத்தி வைத்து "இந்த நண்பர் உங்களுக்கு விளக்கிச் சொல்லுவார்" என்று அவரிடம் சொல்லிவிட்டுப் போய்விட்டார்



(472-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ. வ. உ. சிதம்பரம்பிள்ளை

(வ. ரா.)

வெற்றி அதிருஷ்டம் சிலருக்குத்தான் கிட்டும். பல போர் வீரர்கள் மாண்டதன் பின்னரே, போர்க்களத்தில், ஒரு கட்சிக்கு வெற்றி கிடைக்கிறது. இறந்தவன் முட்டாள் என்றும் மிஞ்சினவர்கள் புத்திசாலிகள் என்றும் சொல்லக்கூடுமா? விடுதலைப் போராட்டப் பருவக்காலங்களில், முதன் முதலாக, விடுதலையில் தாகம் ஏற்பட்டு உழைப்பவர்கள், கடைசிக்கால வெற்றியை கண்ணிலே காணுவதில்லை. ஆனால் இறுதி வெற்றிக்கு, இவர்களுடைய முதல் முயற்சியே, அஸ்திவாரமாகும். தமிழ் நாட்டில், சுயராஜ்ய தாகம் ஏற்பட்டதற்கு, மூல காரணர்களில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஒருவர்.

சாதாரணமாய், சிதம்பரம் பிள்ளை அவர்களை தூத்துக்குடி சிதம்பரம்பிள்ளை என்பார்கள். ஆனால் அவர் சொந்த ஊர், தூத்துக்குடிக்கு அருகாமையிலுள்ள ஒட்டப்பிடாரம் என்று நினைக்கிறேன். அவருக்கு சில மாதங்களுக்கு முன்னர், அறுபது ஆண்டு பூர்த்தியாகி, விழாக்கொண்டாடப் பட்டதை பத்திரிகைகளில் நம்மில் பலர் படித்திருக்கலாம். ஆனால், தலையில், நரை சிறிதும் காணாத அதிருஷ்டசாலி.

1905-ம் ஆண்டில், அரசாங்கத்தை நிர்வாகம் செய்துவந்த கர்ஸன் பிரபு, வங்காளத்தை, கீழ் வங்காளம், மேல் வங்காளம் என்று இரண்டு கூறுகளாகப் பிரித்தார். இது மொத்தம் வங்காளிகளுக்குப் பிடிக்கவில்லை. கூறுகளின் அமைப்பைப் பார்த்தால், வங்காளிகளை ஹிந்துக்கள், முஸ்லிம்கள் என்று இரண்டு பகுதிகளாக அரசாங்கத்தார் பிரித்து, ஆளப்பார்ப்பதாக, வங்காளிகளுக்குத் தோன்றிற்று. அவர்கள் கிளர்ச்சிசெய்து ஆட்சேபித்தார்கள். வங்காளப் பிரிவினை ரத்துக் கிளர்ச்சியிலிருந்து பிறந்ததுதான் சுயராஜ்யக் கிளர்ச்சி. எனவே, சுயராஜ்யக்கிளர்ச்சிக்கு வங்காளம் தாயகம்.

இந்தக் கிளர்ச்சியின் உதயக்காலத்தில் வங்காளி பாஷையில் பல பத்திரிகைகள் தோன்றின. இங்கிலீஷில் சில பத்திரிகைகள் தோன்றின. இவைகளில் சிறந்தவை "வந்தே மாதரம்", "நியூ இந்தியா". இந்தப் பத்திரிகைகளை ஆரம்பித்தவர் காலஞ்சென்ற விபினசந்திர பாலர். இந்தப் பத்திரிகைகளின் எழுத்து நாடெங்

கும் பரவலாயிற்று. இந்தியாவின் பல பாகங்களில், இவைகளை ஆவலுடன் படித்தார்கள். வங்காளத்தின் நூதன உணர்ச்சியின் வேகம், இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் போய்த் தாக்கிற்று.

சென்னை மாகாணத்தில், சிறப்பாகத் தமிழ்நாட்டில், இந்த நூதனக் கிளர்ச்சியிலும் உணர்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட்டவர்கள் நால்வர். சுதேசமித்திரன் பத்திரிகையின் ஆசிரியர், சுப்ரமணிய அய்யர். "ஞானபானு" பத்திரிகையை நடத்திவந்த சுப்ரமணிய சிவம்; நமது தமிழ்நாட்டுக் கவி சுப்ரமணிய பாரதியார். கடைசியாக நமது சிதம்பரம்பிள்ளை அவர்கள். மூன்று சுப்ரமணியங்களும் விண்ணுலகுக்கு ஏகிவிட்டார்கள். அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் தொடர்பாக, சிதம்பரம்பிள்ளை ஒருவரே, பாக்கியாக மிஞ்சியிருக்கிறார்.

அக்காலத்தில் 'வந்தேமாதரம்' என்று உரக்க சத்தம்போட்டுச் சொல்லமுடியாது. அவ்வளவு பயம்; போலீசாரின் கிலி. வீடுகளில், கிழவர்களின் தொந்திரவு, ஜெயில் என்றால் ஆறமாதம், ஒரு வருஷமல்ல. ஐந்து வருஷங்களுக்குக் குறையாது. கடின காவல். தீபாந்திர சிட்சையும் ஏற்படும். ஜெயிலில், இப்பொழுதிருக்கிற வசதிகள்கூட, அப்பொழுது கிடையாது. ஜெயிலில், இப்பொழுது காங்கிரஸ் கைதிகள் "ஜே" சத்தம் போடுகிறார்களே, அப்பொழுது போட்முடியுமா? போட்டால், எலும்புகள் நொருங்கிப் போனாலும் போகும். சுயராஜ்யத்தின் அவசியத்தைச் சிறிதும் உணராத காலம். சுயராஜ்யம் என்னவென்று கற்பனைசெய்து கூட பார்க்க இயலாத, மனிதக்கூட்டம். இத்தனை நிர்ப்பந்தங்களுக்கிடையே, ஒருவன் சுயராஜ்யத்தைப் பற்றிப் பேசுவதாயிருந்தால், அவனுக்கு எவ்வளவு தன்னம்பிக்கையும் துணிவும் வேண்டும்?

சுயராஜ்யப் பித்துப் பிடித்திருந்தாலொழிய, அத்தகைய நம்பிக்கையும் துணிவும் உண்டாவது அருமை. சிதம்பரம் பிள்ளை அவர்கள் அக்காலத்தில் சுயராஜ்யப் பித்துக்கொண்டவர். இன்றைக்கும் அந்தப் பைத்தியம் அவரை விட்டபாடில்லை. தேசத்தின் வறுமையையும் அடிமை நிலைமையையும் பற்றி நினைத்து, இப்பொழுது உள்ளம் பதறுகிறார். சிதம்பரம்பிள்ளையின் தேச பக்தியைப் பற்றி, சிறியோனாகிய நானா பேசுவது, எழுதுவது? கலெக்டர் விஞ்சுக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் தர்க்கமாக, பாரதியார் அருமையாகப் பாடியிருக்கிறாரே, அதைக் காட்டிலும் என் எழுத்து எப்படிப் பெரிதாகும்?

வந்தேமாதரத்தையும், சுயராஜ்ய கோஷத்தையும் கடல் அலை கொண்டுவந்ததை, தூத்துக்குடியில் சிதம்பரம்பிள்ளை அவர்கள் காது கொடுத்துக் கேட்ட காலையில், அவர் வக்கீல் தொழிலில் அமர்ந்திருந்தார். அவருக்கு அப்பொழுது நல்ல வருமானம்; நல்ல செல்வாக்கு. இவையிரண்டும் அவருக்குப் பெரிதாகப் படவில்லை. பாரதத்தாயின் அழைப்பையே, உயிர்ப் பொருளாக மதித்தார். லாப நஷ்டக் கணக்குப் பார்க்கவில்லை. லாப நஷ்டக் கணக்குக்கு, அவரது இயற்கையும் இடங் கொடுக்காது. சுயராஜ்ய இயக்கத்தில், திரும்பிப் பார்க்காமல், ஒரே குதி.

தூத்துக்குடியின் பெயர் நாடெங்கும் முழங்கிற்று. சிதம்பரம் பிள்ளை அவர்களின் சிம்ம கர்ஜ்ஜனைப் பிரசங்கத்தைக் கேட்டபின், தூத்துக்குடி மகா ஜனங்களுக்கு உறக்கம் கிடையாது அதிகார வர்க்கத்தினர் நடுக்கங்கொண்டனர். தமிழ்நாட்டிலே, எங்கும் சுதேசிப் பேச்சு. "கப்பலோட்டவேண்டும் சுதேசி சாமான்களை உற்பத்திசெய்யவேண்டும். துணி, காகிதம், சோப்பு முதலியவெல்லாம் சுதேசியாகத்தானிருக்கவேண்டும்." தமிழ்நாட்டிலே, எல்லோருக்கும் இப்படிப் பைத்தியம் பிடித்தது. தூத்துக்குடியிலே சிதம்பரம்பிள்ளை அவர்கள் முடிசூடா மன்னனாய் விளங்கினர். அவர் சொன்னது சட்டம்.

தூத்துக்குடி ஆலையிலே தொழிலாளர்கள் வேலைசெய்த அக்காலத்தில், வெள்ளைக்காரர்கள் இரவில் கப்பலில் தங்கி, பொழுது விடிந்ததும், கரைக்கு வருவார்கள். இம்மாதிரி மூன்று நாட்கள் நடந்தன. வெள்ளைக்காரர்கள் இவ்வாறு அச்சப் படுவதற்குக் காரணமேயில்லை. தூத்துக்குடியிலே அப்பொழுதிருந்த சுயராஜ்ய அதிர்ச்சிக்கு அடையாளமாக, மேற்கூறிய சம்பவத்தைக் குறிப்பிட்டேன். அவ்வளவுதான்.

இன்னொரு விநோத சம்பவம் நேர்ந்தது. ஒரு வக்கீல். அவர் அய்யங்கார். அவர் பெயர் நமக்கு இப்பொழுது தேவையில்லை. அவர் சுயராஜ்யப் பிரசாரத்துக்கு விரோதமாய்ப் பேச தூத்துக்குடியிலே முயற்சி செய்தார். அவர் அப்பொழுது தூத்துக்குடியில், வக்கீல் தொழில் நடத்தி வந்தார். இவருடைய விரோதப் பிரசாரம் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் காலையில், அவர் க்ஷவரம் செய்து கொள்ள உட்கார்ந்து கொண்டார். பரிகாரி பாதி க்ஷவரம் செய்தான். பாக்கியைச் செய்ய மறுத்து விட்டான். பாக்கி க்ஷவரத்தைச் செய்து கொள்ள, வக்கீல் தூத்துக்குடியிலிருந்து, திருநெல்வேலிக்கு ஓடினர். இது அந்தக்காலத்து விநோத சம்பவம். சிதம்பரம் பிள்ளை அவர்களைப்பற்றி, அய்யங்

கார் வக்கீல், கலெக்டர் அவர்களிடம் தவறாக ஏதோ சொன்னார் என்பது மேற்சொன்ன பரிகாரியின் கருத்து என்று அக்காலத்துப் பத்திரிகைகளில் கூறப்பட்டது. இந்தக் கதை பொய்யல்ல வென்று, அந்த வக்கீல் கனவானே என்னிடம் சொல்லியிருக்கிறார். சுயராஜ்ய தாகம் தூத்துக்குடியில் எந்த வகையில், யார் மூலமாகப் பரவியது என்று இன்னும் விரித்துக்கூற வேண்டுமா?

சிதம்பரம்பிள்ளை உள்ளிட்ட பெரியார்கள் பலர் சேர்ந்து, ஸ்வதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி என்ற சுதேசிக்கப்பல் கம்பெனியொன்றை ஸ்தாபித்தார்கள். இப்பொழுது மிகக் கிழவராயிருக்கும் சேலம் விஜயராகவாச்சாரியார் அவர்கள் அந்தக் கம்பெனியில் பதினாயிரம் ரூபாய்க்கு அதிகமாக, பங்குகள் எடுத்துக் கொண்டார் என்றால், சுதேசி கப்பல் கம்பெனி தமிழ் நாட்டாரால் எவ்வாறு போற்றி வரவேற்கப்பட்டது என்பது சொல்லாமலே விளங்கும். சுதேசி கப்பல் கம்பெனியோடு, வெள்ளைக்காரக் கம்பெனி போட்டி போட முடியவில்லை. சார்ஜைக் குறைத்துப் பார்த்தார்கள். என்றாலும் ஜனங்கள் வெள்ளைக்கார கப்பல்களில் ஏறுவதாய் இல்லை.

இந்த சமயத்தில், சிதம்பரம் பிள்ளையவர்கள் ராஜ நிந்தனைக் குற்றம் சாட்டப் பெற்று, தீபாந்திர சிட்சை பெற்று, பின்னர் அப்பீலில், ஆறு வருஷக் கடின காவலாக மாறிற்று. சிறையில் பிள்ளையவர்களும் சிவமும்பட்ட அவஸ்தைகளை சொல்லிமுடியாது. சிறையிலே, "மனம்போல் வாழ்வு" என்ற நூலை, பிள்ளையவர்கள் எழுதி முடித்தார். சிறையிலிருந்து வெளிவந்த பின்னரும், பிள்ளையவர்கள் சிறிதுகாலம் வரையில் மனந்தளராமல் இருந்தார். வறுமை, குடும்பம், ஆதரிப்புக்குறைவு—முதலியவைகளுக்கு நடுவே, அஞ்சா நெஞ்சனும் எவ்வளவு காலம் கலங்காமலிருக்க முடியும்?

பிள்ளையவர்கள் திலகர் கோஷ்டியைச் சேர்ந்த தேசபக்தர், ராஜதந்திரி. காந்தியின் சாத்வீக ஒத்துழையாமையில் அவருக்கும் பற்றுகிடையாது, நம்பிக்கையுமில்லை. பிள்ளையவர்கள் உணர்ச்சிக் களஞ்சியம். ரொம்ப யோக்கியர். அற்பத்தனம் சிறிதும் இல்லாதவர். பொய் நடையையும் வஞ்சகப் பேச்சையும் அறவே ஒழித்தவர், வெறுத்தவர். அரசியல் உலகில் சாதாரணமாய்க் காணப்பெறும் உபாயங்களை, பிள்ளை அவர்கள் கைக்கொண்டு வாழ்ந்திருப்பாரானால், அவர் இன்றைக்கும் தலைவர் என்று மதிக்கப்பட்டு, பிரசங்கமுழக்கத்தில் ஈடுபட்டுக்கொண்டே வந்திருப்பார். வேஷம் போடத் தெரியாததனால், யோக்கியராய், அவர் அஞ்ஞாத வாழ்வு வாழ்ந்து வருகிறார்.



உங்களுக்குத் தெரியுமா?

அமெரிக்காவில் இந்தியர்

அமெரிக்காவில் உள்ள சில இந்தியர்களைப்பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். டாக்டர் சுதிந்திர போஸ் என்பவர் அங்கு ஓர் பெரிய கலாசாலையில் ராஜரிக சாஸ்திரத்தின் ஆசிரியராக இருக்கிறார். டாக்டர் தாரகநாத் தாஸ் என்பவரும் சில காலம் வேறொரு சர்வ கலாசாலையில் ஆசிரியராக இருந்தார். ஸ்வாமி யோகானந்தர் காலிபோர்னியாவில் பி. ஏ. பட்டம் பெற்று அங்கு ஒரு பெரிய யோக ஆசிரமம் ஸ்தாபித்து நடத்துகிறார். டாக்டர் கோகட்னூர் பெரிய விஞ்ஞான சாஸ்திர நிபுணர். இவர் அமெரிக்காவில் மிகவும் கீர்த்திபெற்று இப்பொழுது இந்தியாவிலேயே இருக்கிறார். ஆனால் இவர்களைத் தவிர சுமார் 4000 இந்தியர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள். இதில் சுமார் 500 பேர் இந்தியாவிலிருந்து படிப்பதற்காகவும், சம்பாத்தியத்திற்காகவும் சென்றவர்கள். தற்காலம் அமெரிக்காவிலுள்ள இந்தியர்களில் பெரும்பாலோர் பஞ்சாபிகளே. 1900ம் வருஷம் சீனாவில் வெள்ளையரை எதிர்த்து நடந்தேறிய பாக்ஸர் புரட்சியை ஒடுக்குவதற்கு இந்தியப் பட்டாளமும் அங்கு போயிற்று. கலகம் ஒடுங்கியபிறகு பட்டாளத்திலிருந்த பஞ்சாபிகள் பலர் அங்கிருந்து அமெரிக்கா சென்று குடியேறினார்களாகையால் அமெரிக்காவின் மேல் கரையிலுள்ள காலிபோர்னியாவில்தான் அதிகமான இந்தியர்கள் இருக்கிறார்கள். அங்கு சீதோஷ்ண ஸ்திதியும் நிலவளமும் இந்தியாவைப்போலவே இருப்பதால் பலர் அங்குள்ள பழத் தோட்டங்களில் வேலைசெய்து வருகிறார்கள். பஞ்சாபியருக்கு அடுத்தபடியாக பெருந்தொகையாக இருப்பவர் வங்காளிகள். இவர்கள் அமெரிக்கத் தொழிற்சாலைகளில் வேலைசெய்து ஜீவிக்கிறார்கள். போர்ட் மோட்டார் தொழிற்சாலையில் சுமார் 500 இந்தியர்கள் வேலை செய்கிறார்கள். அமெரிக்காவில் குடியேறிய இந்தியர்கள் ஹிந்துவானாலும், முஸ்லிம்களானாலும் கிறிஸ்தவர்களானாலும் அவர்களுக்கு "ஹிந்துக்கள்" என்றுதான் அங்கு பெயர்.

புரோகிதருக்கு மண்டிபோடும் மன்னர்

இந்தியாவில் அரசர்கள் மீது புரோகிதர்களுக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது என்பது உங்களுக்குத்தெரியும். மேனுடுகளிலும் இப்படித்தான் இருந்தது. அரசனை சிருஷ்டிக்கவும், நீக்கவும், புரோகிதர்களுக்கு அதிகாரம் இருந்தது. அரசர்கள் தமது உரிமையை புரோகிதரிடமிருந்துதான் பெறுகிறுர் என்பது அங்கு ஒரு கொள்கையாக இருந்தது. சுமார் 300 வருஷகாலம் அரசுக்கும் மடத்துக்கும் சண்டைநடந்த பிறகுதான் புரோகிதர் ஆதிக்கம் ஒழிந்தது. இதை விளக்குவதற்கு ஓர் சிறு சரித்திர சம்பவத்தை இங்கு தருகிறேம். 1076-ல் ஜெர்மன் அரசராகவும் ரோம் ஏகாதிபத்தியத்தின் சக்கிரவர்த்தியாகவும் இருந்தவர் ஹென்ரி என்பவர். அப்பொழுது கிறிஸ்தவ மதத் தலைவரான ரோமாபுரி போப் கிரிகிரியின் இஷ்டத்துக்கு மாருக இந்த அரசர் நடந்தார். உடனே போப் ஒரு ஸ்ரீமுகம் விடுத்தார். “குடிகள் ஹென்ரிக்கு கீழ்ப்படிய வேண்டியதில்லை. அவன் சிம்மாதனத்தைக் காலிசெய்ய வேண்டும்” என்று. அவ்வளவுதான் ஹென்ரி தன் முடியை கீழே இறக்கிவிட்டு பரதேசியாக அலையும்படி ஏற்பட்டது. போப்பினிடம் மன்னிப்புக்கேட்டு அவரது ஆசீர்வாதத்தைச் சம்பாதிக்காவிட்டால்சிங்காதனம் கிடைக்காது. ஆகவே அந்த பெரிய சக்கிரவர்த்தி காலில் செருப்புக்கூட இல்லாமல் ஜெர்மனியிலிருந்து ரோமாபுரிவரையில் 580 மைல் மழையிலும் பனியிலும் நடந்து போப்பின் மாளிகையை அடைந்தார். மூன்றுநாள் அந்த வாயிலில் அன்ன ஆகாரமில்லாமல் கண்ணீரும் கம்பலையுமாக நின்று அழுதார். அதன்பிறகு போப்புக்கு இரக்கம் வந்து ஹென்ரியை மன்னித்தார். பிறகு தான் ஹென்ரிக்கு ராஜ்யம் கிடைத்தது.

கூட்டிற்குள் கன்னிகள்.

“வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற விந்தை மனித”ரைப் பற்றி பாரதியார் பாடியிருக்கிறுர். கூட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கும் வழக்கமும் உலகத்தில் இருக்கிறது. ஆஸ்டிரேலியாவை அடுத்த நியூகினியாவில் கொயரி என்று ஒரு ஜாதி இருக்கிறது. அவர்களிடையே பெண்களுக்கு 6 வயதானவுடன் ஓர் கூட்டிலடைத்து மரத்தின் கிளைகளின் மத்தியில் ஒரு குடிசைகட்டி அதில் போட்டுவைப்பது வழக்கமாம். ஒரு நாளில் ஒரு தடவைதான் அவர்கள் சிறிதுநேரம் வெளியே வரலாமாம். கலியாணம் நடக்கும்வரை இந்த சிறையிலிருந்து விடுதலை கிடையாது.

திருக்குறள் விளக்கம்

உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று —குறள் (1090)

Wine gives delight only when it is drunk;
Love yields bliss at the mere sight.

—ஆங்கில குறள் : கு. சீனிவாசன்.

உள்ளக் களிப்பை கொடுக்கக்கூடியவை இரண்டு. ஒன்று மது. மற்றொன்று காதல். களிப்பை கொடுப்பவை என்ற இனத்தில் இரண்டும் சேர்ந்திருந்த போதிலும், இரண்டிற்கும் யானைக்கும் பூனைக்குமுள்ள வித்தியாசமுண்டு. மது வருந்துபவர்களின் உள்ளமும் சரீரம் கெட்டுப்போகும். ஆனால் காதலோ உள்ளத்திற்கும் உடலுக்கும் நன்மையைக் கொடுக்கிறது. மற்றொரு முக்கியமான வித்தியாசம் இரண்டிற்கும் இருக்கிறது. மதுவை அருந்தினால் தான் மகிழ்ச்சியைக் கொடுக்கும். அருந்தாத வரையில், அதனால், பார்க்கிறவர்களிடம் மகிழ்ச்சியை உண்டுபண்ண முடியாது.

காதல் அப்படியல்ல. காதலர் ஒருவரை யொருவர் பார்க்கும்போதே அவர்களுக்கு மகிழ்ச்சி தோன்றுகிறது. தன்னை மறந்து நிற்கிறார்கள். இதுவே மதுவுக்கும் காதலுக்குமுள்ள பெரிய வித்தியாசம் என்று திருவள்ளுவர் கூறுகிறார். மதுவை அருந்தினால்தான் மகிழ்ச்சி ஏற்படுகிறது. காதலோ கண்டவுடன் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்த இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை மிகத் திறமையாக நமது சித்திர நிபுணர் கே. ஆர். சர்மா விளக்கி யிருப்பதை எதிர்ப் பக்கத்தில் பாருங்கள்.

அடுத்த மலரில் மற்றொரு குறள் விளக்கப் படம்
வெளிவரும்.



(463-ம் பக்கத் தொடர்ச்சி)

தெலுங்குப் பாட்டு எனக்கே அர்த்தமாகாமலிருக்கும் போது அவருக்கு எப்படிச் சொல்லுவது?

நல்ல வேளை. இச்சமயம் கனம் சினிவாச சாஸ்திரி, ஜஸ்டிஸ் வெங்கடசுப்பாராவ் முதலியோர் வந்தனர். சாஸ்திரியாரும் தமிழர் தானே. இனி தமிழ் பாட்டுகளே நடக்கட்டும் என்று கானமந்திர தலைவர் சொல்லியனுப்பினர். பிழைத்தோம். அதுமுதல் கடைசி வரையில் எல்லாம் தமிழ்ப்பாட்டுகள். என்ன அருமை! பாட்டுகளின் பொருள் விளங்கிவிடவே எங்களுக்கு குஷி ஏற்பட்டது. அன்று தமிழ்பாட்டுகளே பிரதானமாய் விளங்கியபடியால், அன்றைய நாட்டியத்தை சபையோர் பூர்ணமாய் அநுபவித்தார்கள் என்று தைரியமாய்ச் சொல்லுவேன். இதற்கு காரணமாயிருந்த சாஸ்திரிகளை உங்கள் சார்பாக பாராட்டுகிறேன். அங்கங்கே நடைபெறும் நாட்டியக் கச்சேரிகளில் தமிழ் பாட்டுகளே வேண்டுமென்று சபையிலிருப்போர் கேட்க வேண்டும். ஒரு தடவை தமிழ் பாட்டுகளையும், அவற்றிற்கான அபிநயங்களையும் கேட்பார்களானல், அப்புறம் யாருமே தெலுங்குப் பாட்டுகளை விரும்ப மாட்டார்கள்.

ஸ்ரீமதி பால சரஸ்வதியின் நாட்டியத்தைப்பற்றி சொல்ல வேண்டியதேயில்லை. மிகத் திறமையாக அபிநயம் பிடிப்பதாக நிபுணர்களே சொல்லுகிருர்கள். அன்று அவர் நடிப்பின் திறமையைக் கண்டு சபையோர் அனைவரும்—கனம் சாஸ்திரியார் உள்படமிகுந்த சந்தோஷ மடைந்தார்கள். சென்னையில் ஸ்ரீமதி தனம் விட்டார்தான் அதிகமான தமிழ் பதங்கள் கற்றிருப்பவர்களென்றும் அதனல் ஸ்ரீமதி பால சரஸ்வதிக்கு எத்தனையோ தமிழ் பாட்டுகளும் அவற்றிற்கு அபிநயங்களும் பயிற்சியா யிருக்கு மென்றும் ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் சொன்னர். தமிழபிமானம் மிகுந்துள்ள ஸ்ரீமதி தனம் குடும்பத்தாரை பாராட்டுகிறேன். ஸ்ரீமதி பால சரஸ்வதியின் நாட்டியத்தில் சில பாவங்களை விளக்கி ஸ்ரீ. கே. ஆர். சர்மா அன்று நேரில் பார்த்து வரைந்துள்ள மூன்று படங்களை இப்பக்கங்களில் காணலாம்.

நாட்டியத்தில் சிருங்கார ரசமே அதிகமா யிருக்கிறதென்றும், வீர ரசம்தான் தற்காலம் நமது நாட்டிற்கு அவசிய மென்றும் என்து நண்பர் சொல்லுகிருர். அதுவும் யோசிக்கவேண்டிய விஷயந்தான் என்றே எனக்குத் தோன்றுகிறது.




விஷப் புகையிலிருந்து தப்பித்துக் கொள்ள பிரிட்டிஷ் பெண்களுக்கு கொடுக்கும் முகமூடி டயிர்சி.

* வரப்போகும் யுத்தம் *

ஜெர்மனி சர்வதேச சங்கத்திலிருந்தும், ஆயுதப் பரிகரண மகாநாட்டிலிருந்தும் விலகிக் கொண்டது. ஆகவே, யுத்தப் பேச்சு பலமாய் இருக்கிறது. எல்லா நாடுகளும் ஆயுதங்களையும் தளவாடங்களையும் வெகு மும்முரமாக தயாரித்துக்கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. சர்வதேச சங்கத்தின் முயற்சியோ, ஆயுதப் பரிகரண ஒப்பந்தமோ பலிக்கப் போவதில்லை. யுத்தம் ஒன்று வந்தே தீருமென்று தெரிகிறது. அப்படி யுத்தம் வந்து விடுகிறதென்று வைத்துக் கொள்ளுவோம். அது எப்படியிருக்கும்?

சென்ற 15வருஷங்களாக இத்துறையில் மிகுந்த ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. ‘‘இனியொரு யுத்தம் ஏற்பட்டால், அது நாகரிகத்தை அடியோடு நாசமாக்கிவிடும்’’ என்று பால்டுவின் சொன்னார். அது பொய்யல்ல. மனிதரை சுலபமாக ஏராளமாய் கொல்ல வழி என்ன என்ற விஷயத்தில் எத்தனையோ வழிகளை சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். சென்ற யுத்தத்தில் ஆகாயக் கப்பல்கள் உபயோகிக்கப் பட்டபோதிலும், துருப்புகளின் யுத்தமே முக்கியமாயிருந்தது. வரப்போகும் யுத்தத்தில் அரண்களில் நின்று துருப்புகள் யுத்தஞ் செய்வது குறைவாக இருக்கும். வெகு தூரத்திலிருந்து விஷ ஒளிகளை பிரயோகிப்பதால் ஆயிரக்கணக்கான பேர்களை கொல்லும் படியான ஒளிகளை கண்டு பிடித்திருக்கிறார்கள். விஷப் புகைகளில் எத்தனையோ விதங்கள் தோன்றியிருக்கின்றன. ஒவ்

வொரு நாட்டிலும் இதற்கென்று தனியாக ஒரு இலாகாவை சர்க்கார் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இங்கிலாந்தில், போர்டன், சட்டன் ஒக் என்ற இடங்களில் இதற்காக ஆராய்ச்சி சாலைகள் இருக்கின்றன. புதிதாகவும், முன்னதைவிடக் கொடுமையாக



ஆகாயக் கப்பல் குண்டுகள் போட்டால், ஜனங்கள் அலங்கோலப்படும் காட்சி.

உள்ளதுமான ஒரு விஷப்புகையைக் கண்டு பிடிப்பதும், அதை எதிர்த்து நிற்கக்கூடிய முகமூடியைக் கண்டு பிடிப்பதும், பின்னால் அதைவிட கொடுமையான விஷப்புகையை கண்டு பிடிப்பதும், இப்படியாக விஷமும் மாற்றும் கண்டு பிடிப்பதிலேயே பல சாஸ்திரிகள் தங்கள் காலத்தை கழித்து வருகிறார்கள்.

பிரான்சில் சமீபத்தில் இரண்டு சாஸ்திரிகள் ஒரு விஷப்புகையை கண்டு பிடித்திருக்கிறார்கள். எத்தகைய முகமூடியாலும் தடுக்கமுடியாத அவ்வளவு பலமான புகையாம். பிரான்சுக்கு ஆபத்து வருகிற காலத்தில்தான் அதை உபயோகிக்க சொல்லிக்கொடுப்போம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே வரப்போகும் யுத்தத்தில் விஷப்புகை முக்கியமான ஆயுதமாயிருக்கும். அடுத்தது ஆகாயக்கப்பல். ஆகாயக் கப்பல்களில் எவ்வளவோ நூதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஓட்டுவதற்கு ஆளில்லாமல், கம்பியில்லா தந்தியாகிய ரேடியோ மூலம் ஆகாயக்கப்பல்களை ஓட்டவும், நினைத்த இடத்திலிருந்து குண்டுகளை போடச்செய்யவும் திரும்பி வரச் செய்யவும் முடியும். ஆகாயக் கப்பல்களோ மோட்டார்களோ ஓடமுடியாமல் இயந்திரங்களில் கோளாறு வரும்படி ரேடியோ மூலம் செய்ய, ஜெர்மனியில் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவற்றை யெல்லாம் பார்த்தால், வரப்போகும் யுத்தம் எவ்வளவு கொடுமையாயிருக்குமென்பதை ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம். பழைய யுத்தங்களில் துருப்புகளுக்குள்தான் சண்டை நடக்கும். யுத்தத்தில் நேராக சம்பந்தப்படாத ஊர் ஜனங்கள் மீது ஆகாயக் குண்டுகள் போடுவது அபூர்வமாயிருந்தது. அப்படிச் செய்வது கொடுமை என்று கண்டித்தும் வந்தார்கள். புதிய யுத்தத்தில் துருப்புகளுக்கு எவ்வள ஆபத்தோ, அவ்வளவு தூரம் ஜனங்களுக்கும் ஆபத்து ஏற்படும். ஆகாயக் கப்பல்களும், விஷப்புகைகளும், தொத்துநோய் குண்டுகளுமே ஏராளமாய் உபயோகப்படும் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். குழந்தை, குஞ்சு, ஆண், பெண் என்ற வித்தியாசமில்லாமல், சகலரும் யுத்தக்கொடுமைகளுக்கு இரையாக நேரும்.

எந்த தொழிற் சாலையிலும் வாரம் ஒன்றுக்கு 100 டன் விஷப்புகை தயார் செய்யலாமென்று ஒரு நிபுணர் கூறுகிறார். லண்டன் பட்டணத்திலுள்ள 82 லட்சம் ஜனங்களையும் கூண்டோடு கைலாசம் சேர்ப்பதற்கு 40 டன் விஷப்புகை இருந்தால் போதுமாம். 40 டன் விஷப் புகை குண்டுகளை ஆகாயக் கப்பல்களிலிருந்து போடுவது பெரிய காரியமல்ல. ஆகவே எதிர்கால யுத்தம் நீடித்து நடக்கவேண்டிய அவசியமிருக்காது.

எவ்வளவு சுலபமாகவும், ஏராளமாகவும் மனிதரைக் கொல்லலாம் என்பதே நோக்கமாயிருந்தால், நாகரிகம் எப்படி நிலைக்க முடியும்? யார்தான் தப்பமுடியும்?



ஆகாயப் பூதம் படை யெடுப்பு.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதியவர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக்கப்படும்.

மனித இயந்திரம்

ஜெயமுண்டு பயமில்லை

"ஜெயமுண்டு பயமில்லை மனமே" என்று பாரதியார் சொன்னார். இதில் எவ்வளவோ பொருளிருக்கிறது. அவர் மனதிற்குச் சொல்ல வேண்டிய அவசியமென்ன? வெற்றிக்கும் தோல்விக்கும் மனமே காரணமாயிருக்கிறது.

"மனம்போல வாழ்வு". மனிதன் எதை நினைக்கிறானோ அதை அடைகிறான் என்பதே வேதாந்த சாரம். தோல்வியையே நினைத்துக் கொண்டிருப்பவன் ஒருக்காலும் வெற்றி யடைய முடியாது. அவனுக்குத் தோல்விதான் கதி. வெற்றி யடைய முடியும் என்ற உறுதியும், வெற்றி, வெற்றி, வெற்றி என்ற சிந்தனையு முள்ளவனே வெற்றியடைய முடியும்.


தன்னிடமே அவநம்பிக்கை யுள்ளவனுக்கு அவனுடைய முன்னேற்றத்திற்கு பெரிய கெடுதல் செய்யக் கூடியது அதைவிட வேறில்லை. தன்னம்பிக்கை யுள்ளவனுக்கு எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி. நினைப்பே செய்கைக்கு வித்து. செய்கையே பழக்க வழக்கங்களை அமைக்கிறது. ஆகவே வெற்றி நினைப்பைத் தவிர வேறெதும் நினைக்காதபடி செய்யக்கூடிய திறமை வேண்டும்.

நீங்கள் எடுத்த காரியத்தில் வெற்றி பெறாமல் போவதாய் வைத்துக் கொள்ளுவோம். அதற்கு என்ன காரணம்? வெற்றி யடைய மாட்டோம் என்ற நினைப்பே அதற்குக் காரணம். இந்த நினைப்புதான் உங்கள் வெற்றிக்கு பெரிய முட்டுக்கட்டை.

உங்கள் சக்தியைப்பற்றி குறைவாய் நினைக்கக்கூடாது. உறுதியிருந்தால், எவனும் உலகத்தில் விரும்பும் எக்காரியத்தையும் செய்ய முடியும். தன்னம்பிக்கை வேண்டும். வெற்றி, வெற்றி என்ற நினைப்பு வேண்டும். தூங்கப் போகும் முன்பும் தூங்கி எழுந்த பின்பும், சில நிமிஷங்கள் உங்கள் சக்தியில் உங்களுக்கு நம்பிக்கை யிருப்பதாக அடிக்கடி நினையுங்கள். இதை தற்பெருமை என்று சிலர் நினைக்கலாம். ஆனால் இதுவே வெற்றியின் ரகசியம் என்று மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுகிறார்கள். இம்மாதிரி வெற்றி நினைப்பு, நீங்கள் எடுத்த காரியத்தில் பாதிக்குமேல் உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும்.

"ஜெயமுண்டு பயமில்லை மனமே" என்று கூறுங்கள். "மனம் போல வாழ்வு" என்பதை மறக்காதீர்கள். வெற்றி வந்தே தீரும் என்று உறுதி கொள்ளுங்கள். "பயமென்னும் பாம்பைப் பிளந்து உயிரைக் குடிப்போம்" என்று முழங்குங்கள்.

* அன்ன விசாரம் *



சர்க்காரின் செலவு (வரிச்சுமை) பணக்காரரையும் தாக்குவதில்லை. பரம ஏழையையோ தாக்கிப் பயனில்லை. பார முழுவதும் சிறிய நிலசுவான்கள் மீது தான் விழுகிறது.

(நா. சிவராமன்)

(1)

"அன்ன விசாரம் அதுவே விசாரம்." முதலில் வயிறு நிரம்ப வேண்டும். மற்ற லக்ஷ்யங்களோ, வாதங்களோ எல்லாம் அப்புறம்தான் பேசமுடியும்.

கடவுள் படைத்த ஜீவராசிகளில் மனிதனைத் தவிர வேறெந்த பிராணியும் உண்ண உணவின்றி இறப்பதாய்த் தெரியவில்லை. மனிதனுக்குப் பணி செய்யும் அடிமையாகவோ, அல்லது அவனுக்கு உற்சாகமூட்டும் உடைமையாகவோ மாறின பிராணிகளுக்குத்தான் இந்த பசிப்பிணித் தகராறு ஏற்படுவதாய்த் தெரிகிறது. ஆகையால அடிமைத் தனத்துக்கும் பசிக்கும் நெருங்கிய சம்மந்த மிருக்கலாமோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

வயிற்றுச் சோற்றுக்குத் தகராறில்லாத நிலைமை ஏற்பட்டால் மட்டுமே மனிதன் சாதாரண ஜந்துக்களின் உரிமையைப் பெற்றவனாவான என்று சொல்ல

லாம். அதனால்தான் "தனி மனிதனுக் குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதியார் உறுமினார் போலும்.

உணவுமட்டும் கிடைத்தால் மனிதனுக்கும் மற்ற ஜந்துக்களுக்கும் விசேஷ வித்தியாசம் கிடையாது. ஊண், அதற்கான உழைப்பு, உழைப்பினால் ஏற்படும் உறக்கம் இம்மூன்றிலேயே நாள் முழுவதும் செலவிட வேண்டி வந்தால் எவனுடைய வாழ்க்கையும் பூர்ணமாகாது. ஆனால் தற்காலம் உலகத்து ஜனத்தொகையில் பெரும்பாகத்தின் நிலைமை இதுதான். இவை தவிர வேறு விதமாகவும் செலவிடுவதற்கு சிறிது ஒழிவுநேரம் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். இந்த ஒழிவு நேரத்தை சமமாக்குவதே பொதுவுடமையின் உண்மை நோக்கம் என்று பார்னார்ட் ஷா வியாக்கியானம் செய்கிறார்.

(2)

பர்னார்ட் ஷா வர்ணிக்கும் பொதுவுடமை ஏற்படப்போகிறதா ஏற்படக்கூடியதா என்பதைப்பற்றி இப்பொழுது பேசிப் பயனில்லை. தொழிலாளர்கள் அதிக உழைப்பினால் கஷ்டப்படுகிறார்களே என்று இரங்க வேண்டிய காலம் ஒன்று மேனாடுகளில் இருந்தது; இந்தியாவில் இப்பொழுதும் இருக்கிறது. ஆனால் இப்பொழுது புதிதாக அதைவிடப் பெரிய பிரச்சினையொன்று உலகத்தில் ஏற்பட்டுவிட்டது.

"இதோ என் கையிலுள்ள வலிமையைப் பார். நான் வேலை செய்யத் தயார். தண்ணீர் சுமந்து கொட்டுகிறேன். தோட்டத்தைக் கொத்திப் பயிரிடுகிறேன். வீடு கட்டித்தருகிறேன். உனக்குத் துணி நெய்து தருகிறேன். மீதி நேரமிருந்தால் உன் குழந்தையை கைவண்டியில் போட்டு இழுத்து வேடிக்கை காட்டுகிறேன்—இந்த வயிற்றிற்குச் சோறு கொடு" என்கிறான் தொழிலாளி. "நீ தேவையில்லை. என்னிடம் யந்திரம் இருக்கிறது. இப்பொழுதிருக்கும் வேலையாட்களையே நான் வெளியே துரத்தப்போகிறேன்" என்கிறான் பணக்காரன், முதலாளி, நிலச்சுவான்.

தன் பலத்தை உபயோகித்து பூமாதேவியுடன் போராடி அவளிடமிருந்து தனக்கு வேண்டிய உணவை வாங்கிக்கொள்ள தொழிலாளிக்கு சக்தியுண்டு. ஆனால் நிலம் எங்கே! ஒரு சிலர் கையில் கிடக்கிறது. அந்த நிலத்தில் பிரவேசித்தால் வந்துவிடுவான் போலீஸ்காரன். கூட்டமாகச்சென்றால், வந்துவிடும் பட்டாளம்! இதுதான் தற்காலம் சமூகத்தின் நிலைமை. ஆனால் சோற்றைத் தேடி அந்த நிலத்தில் புகுகிறவர்கள் எல்லோரையும் பட்டாளத்தில் சேர்த்துக் கொள்ள சர்க்காரால் முடியாது என்பதையும், அந்தக் கூட்டத்தில் தன் மாமன் மைத்துனனும் இருக்கிறார்கள் என்பதையும், பட்டாளத்து வீரன் உணர்ந்தா——ல......என்ன ஆகும்?

பதில் தெரியவில்லையா? 1919-ம் வருஷத்து ரஷியாவின் கதையை படியுங்கள். முதலாளி தன் நிலத்தையும் வாழும் உரிமையையும் ஒரே காலத்தில் இழப்பான்.

(3)

வேலை செய்யத் தயாராயிருப்பவனுக்கு வேலையும், வேலை செய்பவனுக்குப் போதிய உணவும் கிடைக்காது போகுமாயின் கடைசியில் அனர்த்தம்தான் ஏற்படும். இந்த நிலைமை இப்பொழுது உலகமெங்கும் ஏற்பட்டு வருகிறது. வயிறு ஒட்டினவர்கள் தொகை ஏற்கனவே மிகவும் அதிகம். இந்த "நிர்ப்பந்த உபவாச கோஷ்டியில்" இப்பொழுது இன்னும் ஒரு கூட்டத்தார் சேரும்படியான நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. இது தான் சிறு நில சுவான்களது கூட்டம்.

இந்த விவசாயிகள் இதுவரையில் ஒரு திருப்திகரமானக் காலக்ஷேபம் செய்து வந்தனர். சென்ற நான்கு வருஷங்களாக இவர்களது நிலமை மிகவும் சங்கடமாய்க்கொண்டு வருகிறது. விளைபொருள்களின் விலை 100 க்கு 50 ஆகக் குறைந்துவிட்டது. நில வரியோ குறையவில்லை. தன் குழந்தையின் பள்ளிக்கூடச் சம்பளமோ குறையவில்லை; கடன்காரனுக்குக் கொடுக்கவேண்டிய வட்டியும் குறையவில்லை; துணிமணியின் விலை, விளை பொருளின் விலைக்குத் தக்கபடி குறையவில்லை. உழுத மாட்டுக்கு வைக்கோல் கிடைக்கிறது. வருஷமெல்லாம் உழுத மனிதனுக்குப் போதிய உணவும் உடையும் உறக்கமும் கிடைப்பதில்லை.

இந்த நிலைமையை வெகு சீக்கிரத்தில் மாற்ற வேண்டியது மிகவும் அவசியம். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் தான் விவசாயிகளுக்கு கஷ்டகாலம் ஏற்பட்டிருக்கிறது. அங்கு தேசத்தின் நன்மை தீமைகளை கவனிக்கக்கூடிய அரசாங்கங்கள் இருப்பதாலும், அரசாங்கத்தினிடம் ஜனங்களுக்கு நம்பிக்கையிருப்பதாலும் அவ்வப்போது சர்க்கார் சில தீவிரமான முறைகளை கையாண்டு "நிர்ப்பந்த உபவாச சைனியத்தில்" அதிகமான கூட்டம் சேர்ந்து விடாமல் தடுக்க முயற்சிக்கிறார்கள்.

4

உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் விவசாயிகளின் கஷ்டத்தை நீக்க என்ன செய்கிறார்களென்பதை கவனிப்போம். (1) விவசாயப் பொருள்களின் விலையை அதிகமாக்குதல் (2) இதற்காக அவசியமானால் விவசாயம் செய்யும் நில விஸ்தீர்ணத்தைக் குறைத்து உற்பத்தியைக் குறைத்தல் (3) விவசாயச் செலவைக் குறைத்து விவசாயியின் லாபத்தை அதிகப்படுத்துதல் (4) விவசாயிகளின் கடன்களின் வட்டிச் சுமையைக் குறைத்தல் (5) கடனையே சட்டமூலமாகக் குறைத்து விடுதல், ஆகிய பல துறைகளில் விவசாயிகளுக்கு உதவி செய்யப்படுகிறது.


இத்தாலி

இத்தாலியில் ஒருவன் 1000 ரூபாய்க்கு நன்நிலத்தை அடமானம் செய்திருந்தால் வருஷா வருஷம் வட்டிக்கும் அசலுக்குமாக 75 ரூபாய் (100-க்கு 7½ விதம்) செலுத்தினால் போதும். 25 வருடம் 75 ரூபாய் விதம் கொடுத்து விட்டால் கடன் முழுவதும் தீர்ந்ததாக கருதவேண்டுமென்று சர்க்கார் சட்டம் செய்திருக்கிறார்கள். இந்தியாவிலே வருஷா வருஷம் 90 ரூபாய் விதம் 1000 வருஷம் கொடுத்தாலும் அடமானத்தை மீட்க முடியாது. ஆகவே கடன் வாங்கின அடுத்த நிமிஷம் முதலே விவசாயிக்கு தன் தொழிலில் அசிரத்தை ஏற்பட்டு விடுகிறது. ஏனென்றால் எந்த நிமிஷமும் நிலம் கடன் காரனுக்குச் சொந்தமாய் விடுமென்றே அவன் நினைக்க வேண்டியிருக்கிறது.

கிரீஸ்

கிரீஸ், மற்றொரு ஐரோப்பிய நாடு. தமிழ் நாட்டிலிருப்பது போலவே எல்லோரும் சிறு பட்டாதார்கள். அங்கு 1929 முதல் விவசாயமுறைகளை விருத்தி செய்ய சர்க்கார் பண உதவி செய்கிறார்கள். அதற்காக ஒரு பாங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். விவசாயிகள் தமது விலை பொருள்களை நல்ல விலை வரும் வரை தாமதித்து விற்க கடன் கொடுத்து உதவுகிறார்கள். வெளி நாட்டிலிருந்து கோதுமை மாவு, சோளம், உருளைக்கிழங்கு முதலியவை இறக்குமதியாகாமல் தடுக்க வரி போடுகிறார்கள். கடனுக்காக எந்த நிலத்தையும் ஜப்தி செய்ய முடியாமல் சட்டம் இயற்றியிருக்கிறார்கள்.

இதோடு நிற்காமல் இரண்டு வருஷ காலத்துக்கு நிலவரியை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். யூகோஸ்லேவியா என்பது அதற்குப் பக்கத்திலுள்ள ஒரு தேசம். அங்கும் நிலவரியையும் விவசாயக் கருவிகள் மீது போடும் இறக்குமதி வரியையும், விளை



வோல்ட் டெலிகிராம்] [நியூயார்க்

பொருள்களை ஓர் ஊரிலிருந்து வேறிடத்துக்கு விற்பனைக்காக அனுப்பும்போது அவற்றிற்கு ரயில் சார்ஜை செலவையும குறைத்திருக்கிறார்கள்.

ஜப்பான்


ஜப்பானில் விவசாயிகளின் கஷ்டத்தை நிவாரணம் செய்வதற்காக சர்க்காரிலிருந்து இவ வருஷம் 50 கோடி ரூபாய செல விடுகிறார்கள். 1934-3ல் 165-கோடி ரூபாய் செலவிடவேண்டு திட்டம் போட்டிருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியா

ஆஸ்டிரேலியாவில் ரெயில்பாதைகள் நஷ்டத்தில் வேலை செய்கின்றன. ஆஸ்டிரேலியா ரெயில் வேக்களில் சென்ற இரண்டு வருஷத்தில் 27 கோடி ரூபாய் நஷ்டம். அப்படியிருந்தும் விவசாய விளை பொருளகளுக்கு ரயில் சார்ஜ் குறைக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா

அமெரிக்காவில் விவசாயிகளுக்காக என்ன காரியம் செய்யப்படுகிறதென்பதைப பற்றி தனி வியாசம் தான் எழுத வேண்டும். சுருக்கமாகக் கூறுமிடத்து, மேலே கூறிய எல்லா வழிகளும் அங்கு கையாளப் படுகின்றன என்று சொல்லலாம். அமெரிக்காவில் விற்பனை யாகாமல் கோதுமை குவிந்து கிடக்கிறது. ஆகையால் உற்பத்தியைக் குறைக்கவேண்டும். உலகத்திலுள்ள மொத்த உற்பத்தியைக் குறைத்தால் தான் விலை உயரும். அதற்காக அமெரிக்க சர்க்கார் பெரும் முயற்சிசெய்து பிற நாடுகளுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டது. உள்



ஸ்டார் அண்டு டைமஸ்] [ஸென்ட் லூயி

அமெரிக்காவில், 8-வட்டி 9-வட்டி அடமானங்களையெல்லாம் சர்க்கார் 4-வட்டி 4½ வட்டியாக மட்டம் தட்டுகிறார்கள்.


நாட்டிலும் உற்பத்தியைக் குறைக்கிறார்கள். உற்பத்தியைக் குறைக்க உடம்படுகிறவர்களுக்கு உற்பத்தியில் 1 முடை கோதுமைக்கு சுமார் ஒரு ரூபாய்விதம் சர்க்காரிலிருந்து இனாம் கொடுப்பது போல் கொடுப்பார்கள். கோதுமையை மாவாக அரைப்பது, உடைப்பது, முதலிய வேலைகள் மீது தொழில் வரி போட்டு சுமார் 36 கோடி ரூபாய் வரையில் விவசாயிகளுக்கு உதவி செய்யப்படும். விவசாயிகள் கொண்ட கடனுக்கெல்லாம் 100-க்கு வருஷத்துக்கு 4½ வட்டிக்கு மேல் இல்லாமல் செய்கிறார்கள். இதை விரித்தால் பெருகும்.

இந்தியாவில் ?

அதுதான் கஷ்டமான கேள்வி. மேலே கூறியுள்ள ஒவ்வொரு முறையிலும் இங்கு விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியும். உணர்வும், அனுதாபமுமுள்ள ஒரு அரசாங்கம் இருந்தால் செய்திருக்கும். ஆனால் சர்க்காரமீது பழி கூறக்கூடாது. அவர்களுக்கு இங்கு முக்கியமான வேலை வேறு இருக்கிறது. இந்தியாவின் இயற்கை வளம், முதலியவற்றை இந்தியர்கள் அபகரித்து விடாமல் பாதுகாத்து "சட்டத்தையும் சமாதானத்தையும்" நிலை நாட்ட வேண்டியது இங்குள்ள பிரிட்டிஷ் சர்க்காரின் தலைப் பொறுப்பாக இருக்கிறது. ஜனங்களுக்கும் சர்க்காரிடம் போதிய நம்பிக்கையில்லை. ஜனப் பிரதிநிதிகளுக்கு சர்க்காரில் செல்வாக்கில்லை. இந்திய விவசாயியின் முன்னேற்றம் பிரிட்டிஷாருக்கு நன்மை தான் தீங்கில்லையென்பதை ருசுப்பண்ணுவதற்கும் போதிய முயற்சி எடுக்கப்படவில்லை. இம்மாதிரி காரியங்களில் ஐ. ஸி. எஸ். கலெக்டர்களிடமிருந்து யோசனை வந்தாலொழிய சர்க்கார் இருந்த இடம் விட்டு அசைவது வழக்கமில்லை. புதிய சீர்திருத்தத்தில் அவர்களுடைய அந்தஸ்து குறைந்து விடுமோ என்ற கவலையையும் அவர்கள் மனதில் காங்கிரஸ் கிளர்ச்சிக்காரர்கள் புகுத்தி விட்டார்கள். கதிமோக்ஷம் என்ன? அதிகமாக எழுதினால் அனர்த்தம்!



பொருளாதார நெருக்கடியைக் கண்டு விவசாயி நடுங்குகிறான். சர்க்காரோ இதைப்பற்றி சிறிதும் கவலை கொள்வதாய்த் தெரியவில்லை.



ஒரே கருத்தினர்!

"நாநா"

என்றும்போல் அன்றும் தனது பல சரக்குக் கடையைத் திறந்து வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். இந்த வீராசாமிச் செட்டியார் நல்ல ஸ்தூல சரீரி. உருண்டு திரண்டு திண்டு போன்ற மெதுவான தொந்தி; எங்கும், கொழு கொழு என்று வளர்ந்து தொங்கும் சதை. உடம்பிற் கிசைந்து தடித்து, நீண்டு உருண்ட கை கால்கள்; ஆனால் உருண்டு சிறியதான மண்டை, வட்டமான சப்பை முகம், வாயில் ஓட்டையும் தெற்றியுமான பற்கள், கழுத்தில் தங்கம் கட்டின ருத்திராக்ஷம், விரலில் பல மோதிரங்கள், வழுக்கைத் தலையிலும், நெற்றியிலும் ஏராளமான திருநீறு, இவ் வலங்காரங்களுடைய செட்டியார் அவரது வேலையாட்களை, காகம் போன்ற அவரது இனிய குரலில், அதிகாரம் செய்த வண்ணமாய் தெற்கு முகமாய் ஆசனப் பலகையில் சாய்ந்து கொண்டிருந்தார். இவரருகில் ஒரு கைப்பெட்டி, இடதுபுறம் இவரது விலாசமிட்ட பெரிய இரும்புப் பெட்டி; இவர் அந்தக் கடைவீதியிலொரு பிரபல வியாபாரி.

ஒரு குதிரை வண்டி, செட்டியார் கடைமுன் வந்து நின்றது. வண்டிக்காரன் உள்ளிருந்தவரை நோக்கி "இந்தக் கடையில் நீங்கள் விரும்பும், எல்லாப் பொருளும் கிடைக்கும். இறங்குவதானால் சரி. இல்லாவிட்டால் வேறே வேண்டுமானாலும் போகலாம்" என்றான். வண்டியிலுள்ளிருந்து மெதுவாயிறங்கி, ஆடைகளை சரியாய் அணிந்துகொண்டு, வண்டிக்காரனை அழைத்து, நாணயம் நிறைந்த தோல் பையைத் திறந்து கையை உள்ளேவிட்டு, கலகலென ஓசை

யுண்டாகுமாறு, ஒரு குலுக்குக் குலுக்கி சில்லரையை எடுத்துக் கொடுத்தார்.

வந்தவரைச் செட்டியார் உபசாரத்துடன் வரவேற்றார். அவருக்கு தனி யிருக்கை கொடுத்து வேண்டிய பொருள் யாது? என்று அன்புடன் கேட்டார். வந்தவர் "செட்டியாரவாள், எனக்கொரு கலியாணத்திற்காக சாமான்கள் வேண்டும். எல்லாம் மணிச் சரக்காயிருக்கவேண்டும். விலையைப்பற்றி அக்கரை இல்லை. இந்த லிஸ்ட்டிலுள்ள சாமான் யாவு மிருக்கின்றதா பாருங்கள்" என்று கூறி ஒரு துண்டைக் கொடுத்தார். செட்டியார் கண்ணாடியை எடுத்துத் துடைத்துப் போட்டுக்கொண்டு சிறிது நேரம் வாசித்துவிட்டு "இங்கே எண்ணெய், நெய், இரண்டொரு ஷாப்பு சாமான் இவை தானில்லை. வேண்டுமானால் அவைகளையும் வாங்கி எல்லா சாமான்களும் தருகிறேன். தயார் செய்யச் சொல்லவா?" என்று ஒரு கையில் கண்ணாடியைக் கழற்றி வைத்துக்கொண்டு கேட்டுவிட்டு பதிலை எதிர் பார்த்து, வந்தவர் முகத்தை பார்த்துக் கொண்டிருந்தார். வந்தவர் "சாமான்கள் மட்டும் ஒஸ்தியாக இருக்க வேண்டும், எடுக்கச் சொல்லுங்கள்" என்றார். பின்பு செட்டியார் கூறியபடி ஒருவன் கற்கண்டு, கிஸ்மிஸ், சர்க்கரை முதலியனவும் தாம்பூலமும் ஒரு தட்டில் கொணர்ந்து வந்தவர் முன் வைத்தான்.

வந்தவர் பார்வைக்கு, தனவந்தரும் கௌரவமானவருமாய் காணப்பட்டார். நல்ல விலையேறின கோட்டு, விலையுயர்ந்த சேலம் வேஷ்டி, ஜரிகை வேலைசெய்த நவீனப் பட்டு இவைகளுடன் காதில் வைரக் கடுக்கன், உடுப்புப் பையில் தங்கச் சங்கிலியால் பிணைந்த கடியாரம், தங்க விளிம்பு கட்டிய உயர்ந்த மூக்குக்கண்ணாடி, நெற்றியில் சாந்து இவ்வளவும் தரித்திருந்தார். தலைமயிரை நன்றாய் வளர்த்து பின்னால் முடிந்திருந்தார். முகக்ஷவரமும் செய்துகொண்டிருந்தார். செட்டியார் வந்தவுடன் வரவேற்ற காரணம் இந்த கோலங்கள் தான்.

வந்தவர் தாம்பூலம் மென்றுகொண்டே செட்டியாரிடம் "ஐயா இப்போது பவுன் விலை என்ன?" என்றார். செட்டியார் கைவசம் சில பவுனிருந்தன. உண்மையான பவுனல்ல. இப்பொழுது ஒரு புது நிலுசு நகைகள் வருகின்றனவே அந்த ரகத்தைச் சேர்ந்த தங்கம். பார்வைக்கு தங்கத்தைப்போலவே இருக்கும். பவுனெடைக்கு ரூ. 1-14-0 விலையாக வாங்கின "தங்க"க் காசுகள். வந்தவரோ பிரபு. அதிலும் தாராள குணமுடையவராய் காண்கிறது. இவரிடம் கூடுதல் விலைக்குத் தள்ளிவிட வேண்டுமென்று மனதில் பிளான் போட்டுக்கொண்டு "இன்றைய இவ்விட

விலை 20 ரூபா என்று கேள்விப்பட்டேன்" என்றார். வந்தவர் "என்னவிலை ஆனாலும் சரி. மிகவும் அவசியமானதினால் 5 பவுன் வாங்க வேண்டும். காசுக்கடை எங்கேயிருக்கிறதோ?" என்றார்.

செட்டியாரோ வயது அதிகமானவரும், வியாபாரத்தில் வெகு நாளைய பழக்கமுடையவருமாவார். ஆனால் அவர் கற்றது ஏமாற்றுத்தனமும், புளுகும், களவும்தான். அவர் தன் மனதுள் சாமான் எல்லாம் சேர்ந்து 150 ரூபா வரும். அதை 200 ஆக கூட்டியாய் விட்டது. பவுனிலும் ஐம்பது நூறு ஒட்டும். நம்முடைய இமிடேஷன் தங்கத்தை எப்படியும் இவரிடம் கொடுத்துவிட வேண்டும். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டாமா? இனிமேல் எப்போது இவனைப்போல் பேர்வழி வரப் போகிறான்." என்று எல்லாம் எண்ணி . மனதுள் களித்துக் கொண்டே "காசுக்கடை இங்கிருந்து இரண்டு மைலிருக்கும். இந்த வேகாத வெய்யிலிலே நீங்கள் அலையவேண்டாம். என் னுபயோகத்திற்கு வாங்கின தங்கக் காசு சிலது இருக்கிறது. காசுமாலை செய்வதற்காக வாங்கினதில் மிச்சம்" என்று கூறினார். உண்மையாக காசுக்கடை அருகில்தானிருக்கிறது.

வந்தவர் மனதுள் இதுதான் சரி என்றுகொண்டு "சரி கொடுப்பதானால் கொடுங்கள், ரொம்ப உபகாரம். வீணே அலைய வேண்டாம்" என்று நயமாய் கூறினார். செட்டியார் தன் இடுப்புக் கயிறிலிருந்து திறவுகோலைக் கழற்றி இரும்புப் பெட்டியைத் திறந்து ஒரு வெள்ளி கும்பாவிலிருந்து "பவுனை", எடுத்து, அதைப் பல தடவையும் எண்ணிப் பார்த்துவிட்டு, பிரபுவிடம் நீட்டினார். அவர் அலக்ஷியமாய் வாங்கி எண்ணியும்கூட பார்க்காமல் வைத்துக் கொண்டு, பவுன் விலை ஏறினது, ஹரிஜன வேலை திடீரென்று ஏற்பட்டது, டாக்கியில் இராமாயணம் பார்த்தது, மாமாங்க ஸ்நானம் செய்தது முதலிய விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டேயிருந்தார்.

செட்டியாரின் உத்தரவுப்படி ஒருவன் மணி பார்த்து வந்து 1 மணி அடிச்சாச்சு என்றான். "அருகில் காபிகிளபிருக்கிறதோ?" என்றார். செட்டியார் "இருக்கிறதே, அங்கே வேண்டுமானாலும் காபி சாப்பிட்டுவிட்டு வாருங்கள். அதற்குள்ளாக சாமான்களெல்லாம் தயார் செய்து பில் கொடுக்கிறேன்" என்றார். வந்தவர் உடன்பட்டு பவுனுடன் கால்ஜோடை மாட்டிக்கொண்டு புறப்பட்டார். வெய்யிலதிகமானதினால் சிறிது வேகமாய் நடந்து செல்வதாய் காணப்பட்டது. ஆனால் முதலாவதிருந்த போற்றி ஹோட்டலினுள்

நுழையாமல் சென்றுக்கொண்டே யிருந்தார். ஒருவேளை சாப்பாட்டுக் கிளப்புக்கு போகிறாரோ என்னமோ !

சாமான்களெல்லாம் சேர்த்துக் கட்டி, (கள்ள) பில்லும் தயார் செய்து காப்பி சாப்பிடப் போனவரை எதிர் பார்த்தார் செட்டியாரவாள். ரூபா வாங்கிவிட்டுத்தான் அன்று சாப்பிட செல்ல வேண்டுமென் றிருந்தார். 5 நிமிஷம், 15 நிமிஷம், 30 நிமிஷம், 1 மணி கூட ஆயிற்று, வந்தவர் மட்டும் வரக்காணோம். செட்டியார் முணுமுணுத்த வண்ணமாய் ஒருவனை போய் பார்த்து வரச் சொன்னார். சிறிது நேரம் சென்று அவன் வந்து அவரை அங்கெக்கும், வரவும் காணவுமில்லை என்று கூறினார்கள் என்றான்.

இந்தப் பதிலை எதிர் பாராத பேராசைக்கார செட்டியாருக்கு "அடி வயிற்றில் புளியைக் கரைத்தது போலாயிற்று". ஹோட்டலுக்குப் புறப்பட்டவர் போகும்போது தமது பர்சை கடையில் வைத்துவிட்டு "சில்லரையாக இருந்தால் ரூ. 5 கொடுங்கள்" என்று சொல்லி வாங்கிப்போயிருந்தார். மணிபர்சில் 100 ரூபாய் நோட்டுக்களாக இருக்கும் என்பது செட்டியாரது நினைப்பு. பர்சைத் திறந்து பார்த்தார்; சில பழங் கடிதாசுகளைத்தவிர வேறொன்றுமில்லை! தன் கோபமெல்லாம் வேலையாட்களிடம் காட்டி எங்கும் தேடச்சொன்னார். போலீஸுக்கு ஒருவனை வாடகை சைக்கிளில் சென்று கூறி வரச் சொன்னார். எப்பாடும் பட்டனர். வந்தவரைக் காணோம். அவர் ஒருக்கால் அவர் வீட்டில் சென்று காப்பி சாப்பிடுகிறாரோ என்னவோ. தேர் கூட்டம் திருவிழாக் கூட்டம் செட்டியார் கடைமுன். யாவரும் போனவன் திரும்பி வராமலிருக்கவும், பிடிபடாமலிருக்கவும், கடவுளை பிரார்த்தித்தனர். என்ன அன்பு செட்டியாரிடம்! வீராசாமிச் செட்டியார் வீராவேசச் செட்டியாரானார். அன்றுமுதல் மூன்றுநாளாய், உணவுமில்லை, உறக்கமுமில்லை, கதறிய வண்ணமா யிருக்கிறார்; படாத பாடு படுகிறார் பாவம். போலீஸாரிடம் அறிவித்த பிழைக்காக அவர்கள் தங்களாலான தக்ஷிணை பெற்றுக்கொண்டு போயினர். அவர் கடைக்கு யார் சென்றாலு மிக் கதையைக் கூறிப் பொருமுகிறார். "வஞ்சிக்க எண்ணுபவன் பிறரால் வஞ்சிக்கப்படுவான்" என்று கூறி பலர் அவரிடம் துக்கம் விசாரிக்கிறார்களாம்.

செட்டியார் வந்தவர் இருவரும் ஒரே மனப் பான்மை யுடையவர்கள். எடைக்கெடை விலகாதவர்கள். ஆனால் வந்தவருக்கு மட்டும் வியாழன் ஒன்பதா மடத்தில் என்பது ருசுவாயிற்று. இதனால்தான் 'பவுனை' ஆற்றிக் கொண்டு ஓடிவிட்டான்.

கண்டதும் காதல்

(திரு. வி. வா)

காதல் என்பது ஹிருதயத்தில் ஏற்படும் ஓர் உணர்ச்சி. ஹிருதயத்திற்குச் சிந்தனை செய்யும் சக்தி கிடையாது. அது மூளையின் தொழில். ஹிருதயத்தில் ஏற்படும் உணர்ச்சிகள் திடீரென்று மின்சார வேகம்போல் பறக்கும்; மின்சாரத்தைப்போலவே ஓர் வித சக்தி தேகத்திலிருந்து, அது பரவக்கூடிய மற்றொரு தேகத்தினும் பாயும். எனவே கண்டதும் காதல் ஏற்படுவது வியக்கத்தக்க சம்பவமன்று; மாறாக, மிகச் சாதாரணமாக ஏற்படக்கூடிய நிகழ்ச்சி.

காதலுக்குப் பாயும்சக்தி உண்டெனக் கூறினேன். இந்தப் பாய்ச்சல் கண்ணின் மூலமாகவேதான் உண்டாகின்றது. ஹிருதயத்தில் உற்பத்தியாகி கண்வழி பாய்கின்றது. எனவே கண்தான் காதல்வெள்ளம் பெருகியொழுகும் மடை; இம்மடை மூடினால் வெள்ளம் பாயாது; திறந்து வெள்ளம் பாய்வதற்கு வழி யேற்படில், அது ஓடிப் பரந்து செல்கின்றது. ஆகையால் காதல் ஏற்படுவதே கண்டதும் தான்.

சரித்திரங்களிலோ, புராணங்களிலோ, கற்பனைக் கதைகளிலோ, அல்லது வாழ்க்கை சம்பவங்களிலோ ஏற்பட்டிருக்கும் காதல் நிகழ்ச்சிகள் யாவும் அனேகமாய்க் கண்டதும் ஏற்பட்ட காதலே யாகும்.

மகாகவி காளிதாஸன் இயற்றியுள்ள சாகுந்தல நாடகத்தை எடுத்துக்கொள்ளுவோம். துஷ்யந்தன் வேட்டையாடக் கானகஞ் செல்லுகின்றான். அங்கே சகுந்தலையைக் காண்கிறான். சகுந்தலை துஷ்யந்தனைக் காண்கிறாள். இருவரும் ஒருவரை யொருவர் முன் சந்தித்ததில்லை. இருவர் மனமும் ஒத்து காதலுணர்ச்சி பாய்ந்து கலக்கின்றது. இரு வெள்ளமும் சங்கமமாகி, காந்தர்வ விவாகம் செய்துகொள்ளுகின்றனர். காதல் கண்டதும் ஏற்படுகின்றது என்பதற்கு இதை விட பெரும் உதாரணம் தேவை யில்லை.

மகாரிஷியான விசுவாமித்திரருக்கு மேனகையைக் கண்டதும் காதல் ஏற்படவில்லையா? எல்லாவற்றையும் துறந்து பிரம்ம ரிஷியாக வேண்டுமென்று கடுந் தபசு இயற்றிய முனிக்கு, காதல் கண்டதும் தானே தீப்பொறி கனலை மூட்டுவதுபோல் மூட்டுகின்றது.

ராமாயணத்திலும், மிதுலையை ஸ்ரீராமபிரான் அடைந்து முனியுடனும் தம்பி இலக்குமணனுடனும் தெருக்கள் வழியாகச் செல்லுகையில், அவர் கண்களும் சீதாபிராட்டியின் கண்களும் சந்தித்தனவென்று புலவர் வர்ணித்

திருப்பதை தமிழ் அறிஞர்களுக்கு நான் நினைப்பூட்டத் தேவையில்லை. அதுவும் கண்டதும் காதலுக்கு ஓர் உதாரணமாக விளங்கும். கண்டார்களென்று சொன்னாலே, அடுத்த வரியில் காதல் ஏற்பட்டது என்று சொல்லாமலே தொக்கி நிற்கின்றது. காண்பதற்கு எவ்வளவு சக்தி பாருங்கள்.

இதுபற்றியேதான் ஆங்கிலக் கவிகளும் இந்தக் கண்ணின் சக்தியை வர்ணிக்கையில் பின் வருமாறு கூறியுள்ளார்.

"Soft eyes looked love to eyes which spake again"
—Byron.

"How sweet are looks that ladies bend on whom their favours fall"
—Tennyson.

உண்மைச் சரித்திரத்திலேயே கண்டதும் காதல் நிகழ்ச்சிகள் எவ்வளவோ நிறைந்து கிடக்கின்றன. சிவாஜியைக் கண்டு ரோஷனாராவுக்கு ஏற்பட்ட உணர்ச்சி கண்டதும் ஏற்படாமல் வேறெவ்விதம்? மொகல் சக்கரவர்த்தி ஜெகாங்கிர் நூர்ஜஹான் வலையில் விழுந்ததும், கண்டதும் உண்டான காதலால்தானே.

* * *

நமது கண்முன்னரே ஏற்பட்டுள்ள இரண்டு வாழ்க்கைச் சம்பவங்களைக் குறித்துக் கூறி இங்ஙனம் கண்டதும் காதல் என்பது இயற்கையின் தத்துவம் என்று விளக்கி முடிக்கிறேன்.

ஸ்ரீ தேவிதாஸ் காந்திக்கும், ஸ்ரீமதி லக்ஷ்மிக்கும் ஏற்பட்ட காதல் அவர்கள் இருவரும் முதன் முதல் ஒருவரைக்கண்டதும் உண்டானது என்பது யாவரும் அறிந்த விஷயம்.

இரண்டாவதாக நமது வைஸிராய் பிரபு லார்ட் வில்லிங்டன் மருமகள் (மகன் மனைவி) எப். ஜி. மைல்ஸ் என்னும் ஆகாய விமானியைக் கண்டு அவன் மேல் காதல் கொண்டு, தனக்கு முதல் விவாகத்தினால் சமூகத்தில் ஏற்பட்டிருந்த அந்தஸ்தையும், செல்வத்தையும் உதறி எறிந்து, முதல் விவாகத்தை ரத்துச் செய்து, ஸ்ரீமதி மைல்ஸ் என்று இன்று வாழ்கின்றாள். இச்சம்பவங்களைப் பார்த்தபின் கண்டதும் காதல் என்பதை எவரேனும் மறுக்க முடியுமா?

காதல் வலையில் சிக்காமலிருக்கவே பாரதியும் "அச்சமில்லை அச்சமில்லை, கச்சையணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசு போதினும்" என்று பாடியுள்ளார். கண்களுக்கு அதுவும் காதற் கிளிகளாகிய மாதரின் கண்களுக்கு அவ்வளவு சக்தியாம். கண்டதும் காதல் இதனால்தான் போலும்.

எனவே எவ்வகையில் நோக்கினும் காதல் கண்டதும்தான் உண்டாவதென்பதை மறுப்போரின் வாதத்தைக் கேட்க விரும்புகிறேன்.

உருக்கு—ஸ்டாலின்

சோவியத் ரஷியாவில் எந்த கடைக்குப்போனாலும், எந்த தொழிற்சாலைக்குப் போனாலும், எந்த ஆபீஸுக்குள் நுழைந்தாலும், இரண்டு படங்களைக் காணலாம். அதில் ஒன்று லெனின் படம்; மற்றொன்று ஸ்டாலின் படம். லெனின் ரஷிய சோவியத் ஆட்சியை ஸ்தாபித்தவர். ஸ்டாலின் அதை வலுவடையச் செய்து சோவியத்துக்கு உலகில் கியாதியும் செல்வாக்கும் ஏற்படுத்துகிறவர்.



ஸ்டாலின் பேசுகிறார்

ஸ்டாலின் அதிக உயரமுமில்லை. குட்டையுமில்லை. வயது 53 ஆகிறது. அடர்ந்த தலைமயிர்; இடை யிடையே ஒன் றிரண்டு வெள்ளி மயிர். ஆளைப்பார்த்தால் நல்ல ஆரோக்கிய முள்ளவராகத்தான் தெரிகிறது. முகத்தில் மட்டும் ஓயாத உழைப்பினால் ஏற்பட்ட களைப்பு இருப்பதுபோல் தோன்றும்.

ஸ்டாலின் இன்று 150, 000, 000 மக்கள் மீது ஆட்சி செலுத்தி வருகிறார். ரஷியாவின் சர்வாதிகாரி. ஆனால் அவர் ரஷியரல்ல. அவர் பிறந்தது ஜார்ஜியா. ரஷிய பாஷை அவரது தாய் பாஷையுமல்ல. அவரது பெயர் ஜோஸப் ஜுகாஷ்விலி.

எஃகு அல்லது உருக்கு என்பதற்கு ரஷிய பாஷையில் ஸ்டாலின் என்பது வார்த்தை. இவரது மன உறுதி உருக்குக்கு சமானமென்று லெனின் கருதினார். ஆனால் அவரைப் பார்த்தால் உருக்கின் ஞாபகம் வராது. கலகல வென்று சிரிப்பார். நகைச்சுவை ததும்பப் பேசுவார்.

இவருடைய தகப்பனார் தன் மகன் "ஸாஸோ"வை (ஜார்ஜியாவில் ஜோஸப் என்ற பெயருக்கு 'ஸா ஸோ' -செல்வப் பெயராம்) செருப்புத் தெய்க்கும் செம்மானாக ஆக்க விரும்பினார். அவன்

தாயாரோ இவனுடைய மயங்கின விழிகளைப் பார்த்து இவனை மத போதகராக ஆக்க விரும்பினாள். அதற்கான பள்ளிக்கூடத்துக்கும் அனுப்பினாளாம்.

ஆனால் ஸ்டாலின் இன்று செருப்புத் தெய்க்கவும் இல்லை. மத உபதேசம் செய்யவும் இல்லை. மதத்தையே வேரோடு அறுக்கும் ஓர் சர்க்காருக்குத் தலைவனாக இருக்கிறார்.

150, 000, 000 ஜனங்களுக்கு இறைவனாக இருக்கும் ஸ்டாலினுக்கு அரசனென்றும் பெயரில்லை. சர்வாதிகாரியென்றும் பெயரில்லை. அவர் வகிக்கும் உத்தியோகம் "மத்தியக் கமிட்டியின் காரியதரிசி". லெனினுடைய தத்துவங்களையும் அவற்றை அனுஷ்டானத்தில் கொண்டுவரும் வகையையும் நன்றாய் அறிந்தவர் என்று பொதுவுடைமைக் கட்சியார் இவரைப்போற்றுகிறார்கள்.

ஸ்டாலின் பிறந்த ஜார்ஜியா, சோவியத் சர்க்காரில் ஒரு பிரதேசம். ஜார்ஜியாவில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு மாணவனிடம் "உங்கள் நாட்டின் பெரிய அரசர்கள் யார் யார்?" என்று உபாத்தியாயர் கேட்டார். பையன் இரண்டு மூன்று பேரைச் சொல்லிவிட்டு நான்காவதாக "மகான் ஸ்டாலின்" என்று கூறினானாம்.

"ஏனப்பா ஸ்டாலினை மட்டும் மகான் என்று கூறினாய்" என்றார் உபாத்தியாயர்.

"அவர்தானே முதலில் ரஷியாவை நம்முடைய ராஜ்யத்தின் ஒருபாகமாக சேர்த்தார்" என்றானாம் பையன். ஜார்ஜ்ஜியா ரஷியாவைச் சேர்ந்ததா அல்லது ரஷியா ஜார்ஜியாவைச் சேர்ந்த நாடா!

ரஷ்யாவில் ஸ்டாலின் என்ற சொல் ஓர் மந்திரம்; ஒரு புதிய மதம், புதிய நம்பிக்கை, ஒரு புதிய ஜீவன். இந்த உருக்குத் தன்மை கொண்ட உறுதி வாய்ந்த ஸ்டாலின் வீட்டில் எப்படி நடந்துகொள்கிறார், எந்த விளையாட்டில் பிரியம், என்பது யாரையும் கேட்டுத் தெரிந்துக்கொள்ள முடியாது.

ஸ்டாலினுடைய தாய் தகப்பனுக்கு ரஷிய பாஷையின்மீது அபாரமான வெறுப்பு. புரட்சியில் ஈடுபடுவதற்கு தான அந்த பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதியே அந்த பாஷையை ஸ்டாலின் கற்றுக்கொண்டார். இன்று ரஷியா என்ன செய்ய வேண்டுமென்பதை கட்டளையிடும்போது இவர் இந்த ரஷிய பாஷையிலேயே பேசுகிறார். 750 லக்ஷம் மக்கள் அவர் வாயிலிருந்து என்ன வரப்போகிறது என்று ஆவலுடன் கேட்கிறார்கள்.

முதலாளி ஆதிக்கமும் அந்த முறையும் இன்று பலமாகவே இருக்கிறது என்று அவர் அபிப்பிராயப் படுகிறார். இப்பொழுது

ஏற்பட்டுள்ள வர்த்தக மந்தத்தினுல் முதலாளி ஆதிக்கம் மங்கிவிடு மென்று அவர் கருதவில்லை.

விஷயத்தை நன்ருய் ஆராய்ச்சி செய்து பார்க்கும் திறமை அவருக்கு உண்டு. "இன்று ஐரோப்பா முழுதும் யுத்தத்துக்கு தயாராயிருக்கும் பட்டாள கூடாரம் (Camp) மாதிரியே இருக்கிறது. இப்பொழுதுள்ள வர்த்தக மந்தத்தினுல் அடிபட்டு பல தேசங்கள் பாப்பராக இருக்கின்றன. ஆனல் துப்பாக்கிக்கும் குண்டுக்கும் செலவிடும் பணம் அதிகமாய்க்கொண்டே போகிறது. எத்தனை காலம் இவ்வாறு நடக்க முடியும்? இதற்கு திடீரென்று ஏதாவது ஒரு நாள் பெரிய ஆபத்து ஏற்படத்தான் செய்யும்" என்று அவர் கூறுகிருர்.

சென்ற 1918 ஆம் யுத்தத்துக்குப் பின் ஏற்பட்ட "வெர் ஸேல்ஸ்" உடன்படிக்கை நிலைத்து நிறகப் போவதில்லை என்பதே அவரது அபிப்பிராயம்.

"நான் எதேச்சாதிகாரியல்ல. ரஷியா தன் பொருளை அநியாயமாக விலை குறைத்து உலக வர்த்தகத்தைச் சீரழித்ததாகக் கூறுவது தவறு. இன்னும் சில வருஷங்களுக்குள், உலகத்துக்கு தானியம் விளைவிக்கும் நாடுகளில் ரஷியா முதன்மையாக நிற்கும்" என்று அவர் கூறுகிருர்.


தூரத்திலிருந்து பார்த்தால் ஸ்டாலின் சிறிது கல்மனம் படைத்தவராகவே தோன்றும். பக்கத்தில் போய் பார்க்கவேண்டும். மகாத்மா காந்தியின் முகத்தில் காணும் மலர்ந்த புன்முறுவலை ஸ்டாலினின் முகத்திலும் காணலாம்.

அவருக்கு மூன்று மக்கள். மூத்த மகனுக்கு 23 வயதாகிறது. ரயில் பாதைத் தொழில் கற்றுக்கொண்டிருக்கிருன். 19 வயதில் ஒரு பையன். 7 வயதில் ஓர் பெண் குழந்தை. குழந்தைகளிடத்தில் பக்ஷமாக விளையாடுவார். எப்பொழுதும் ஏதாவது தமாஷ் பேசிக்கொண்டே இருப்பார். வேருெருவரையும் பற்றி பரிகாசம் பேச முடியாவிட்டால் தன்னைப்பற்றியாவது ஏதாவது தமாஷ் செய்து கொண்டிருப்பாராம்.



ரஷியாவில் சர்க்கார் கட்டிக் கொடுத்துள்ள தொழிலாளர் விடுதிகள்.

மந்திரவாதியின் தந்திரம்



இரண்டு வேலைக்காரர்கள் பிடித்துக் கொண்டிருக்கும் ஒரு கண்ணாடிப் பலகையில் ஒரு பெண் உட்கார்ந்திருக்கிறாள். மந்திரவாதி திடீரென்று அவர்களை மறைக்கும்படி ஒரு துணியை விரித்துப் பிடித்து சில மந்திரங்களைச் சொல்லுகிறான். துணியை மறுபடியும் சுருக்குகிறான். பெண்ணை காணவில்லை! பெண் எங்கே?

இது எப்படி நடக்கிறது? இரண்டு வேலைக்காரர்களில் ஒருவன் தான் உயிருள்ள வேலைக்காரன். மற்றொருவன் வெறும் "போல்" பொம்மை. மந்திரவாதி துணியால் மறைக்கும் போது அந்தப் பெண் பொம்மைக்குள் ஒளிந்து கொள்ளுகிறாள். இதுவே மந்திரவாதியின் தந்திரம்.

அடுத்த "காந்தி" மலரில் மற்றொரு தந்திரம் வெளிவரும்.

தாலுகா போர்டு நாடகம்

(கணக்கன்)

சென்ற மாதம் 5வ "காந்தி" மலரில் பொதுப்படையாக சில ஊழல்களைப்பற்றி பிரஸ்தாபித்தேன். போர்டுக் கூட்டத்தில் கேட்ட கேள்விகளையும் தலைவர் கொடுத்த பதில்களையும் பற்றி இங்கு சில விஷயங்கள் கூறுகிறேன். அழுவதா சிரிப்பதா என்பதை நீங்கள் யோசித்துக்கொள்ளலாம்.

புதிதாய் தலைவர் பதவிக்கு வந்தால் முதல் இரண்டு மூன்று வாரங்கள்வரை நண்பர்கள் வந்து சந்தோஷம் விசாரிப்பார்கள். தாலுகா போர்டுப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் தரிசனத்துக்கு வருவதும் போவதுமாக இருக்கும். தமது வேலையில் இதுவும் ஒரு அம்சம் என்று நினைக்காத உபாத்தியாயர்களும் சிலர் இருப்பார்கள். அவர்கள் யார் யாரென்பதையும் பிரெசிடெண்ட்டு கவனிக்காமலிருப்பதில்லை.

இப்படியே சில நாள் சென்றுவிட்டால், பிரெசிடென்டு தான் பதவிக்கு வந்தது எல்லோருக்கும் ஞாபகமிருக்கும்படி ஏதாவது சில தடபுடல்கள் நடத்துவார். இந்த சபலம் நமது பிரசிடென்டையும் தாக்கியது ஆச்சரியமில்லை.

ஒழுங்குத் தவறும் வீண் செலவும்

இந்த போர்டில் மொத்தம் சுமார் 50 பள்ளிக் கூடங்கள் இருக்கின்றனவாம். ஜூன் மீ ஆரம்பத்தில் பிரெசிடென்ட் திடீரென்று ஒரு உத்தரவு போட்டு சுமார் 20 உபாத்தியாயர்களை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு மாற்றினாராம். இதைப் பற்றிச் சில கேள்விகள் கேடகப்பட்டன. கேள்விகளையும் பதிலையும் கீழே எழுதுகிறேன்.

கேள்வி:—உபாத்தியாயர்கள் மாற்றப்படுவதில் டிப்டி இன்ஸ்பெக்டரைக் கலந்து கொள்ள வேண்டுமென்று விதி இருக்கிறதா?

பதில்:—இருக்கிறது.

கே:—அப்படியானால் சென்ற ஜூன் மாதம் நிகழ்ந்த மாறுதல்களை டிப்டி இன்ஸ்பெக்டருடன் கலந்து பிரெஸிடென்டவர்கள் செய்தார்களா ?

பதில்:—ரூல்படி செய்ததினால் கேட்கவில்லை.

இதென்ன பதில் ஐயா? "விதி இருக்கிறது; ரூல்படி செய்ததனால் கேட்கவில்லை" என்றால் என்ன அர்த்தம்? பொது ஜன நன்மையைக் கருதி சில சமயங்களில் கல்வி அதிகாரிகளைக் கேட்காமல் செய்தால் அதற்குள்ள காரணத்தை உத்தரவில் குறிப்பிட வேண்டும். அதுவும செய்யவில்லை.

விதிகளும் சட்டமும் எப்படியிருந்தாலும் நிர்வாகிகள் தமக்குத் தோன்றியபடி செய்து விடுகிறார்களென்பதற்கு இது ஓர் உதாரணமாகும். ஏககாலத்தில் 20 உபாத்தியாயர்களை மாற்றுவது சிறிய விஷயமல்ல. இந்த மாறுதலால் சுமார் 40, 50 ரூபாயா வது போர்டுக்கு ப்ரயாணச் செலவு ஏற்படும். மாதம் 17 ரூபாய்ச் சம்பளத்துக்காக தமது மூச்செல்லாம் செலவிடும் உபாத்தியாயர்களுக்கு இதைக் கொடுத்தால எவ்வளவோ உபகாரமாக இருக்கும்.

செல்வப்பிள்ளைகள்

ஒரு பள்ளிக் கூடத்திலிருந்து சில உபாத்தியாயர்களை வேறு ஊர்களுக்கு மாற்றி வேறுஇடங்களிலிருந்து சிலரை அந்தப் பள்ளிக்கூடத்தில் நியமித்தார்கள். பள்ளிக்கூட உபாத்தியாயர் பொது ஜனங்களிடையே ஓர் விளம்பரம் அச்சிட்டு வழங்கினர். "முன்னிருந்த உபாத்தியாயர்கள் மாற்றப்பட்டு வேறு உபாத்தியாயர் நியமிக்கப்பட்டு இப்பொழுது பள்ளிக்கூடம் திறமையாக நடக்கிறது" என்று அந்த நோட்டீஸில் குறிப்பிடப்பட்டிருந்தது.

முன்னிருந்த உபாத்தியாயர்கள் திறமையற்றவர்கள், இப்பொழுது வந்திருப்பவர்கள் மகா பெரிய புலிகள் என்று தான் இதன் பொருள். ஆகையால் வெளியூருக்கு மாற்றப்பட்ட உபாத்தியாயர்கள் போர்டுக்கும், கல்வி அதிகாரிகளுக்கும் புகார் அனுப்பினார்கள். இதைப்பற்றி கேள்வி கேட்கப்பட்டது. நோட்டீஸ் அனுப்பியது தமக்குத் தெரியுமென்றும், இம்மாதிரி நோட்டீஸ் போடத்தாம் உத்தரவு கொடுக்கவில்லை யென்பதையும் தலைவர் ஒப்புக்கொண்டார். ஆனால் "பாடசாலையின் அபிவிருத்தியை உத்தேசித்தே நோட்டீசு வெளியிட்டிருப்பதால் பிசகு என்று கருதப்படவில்லை" யென்று தலைவர் அச்சிட்டு வழங்கிய பதிலில் கண்டிருக்கிறது.

ஊரூராய் உபாத்தியாயர்கள் இம்மாதிரி செய்ய ஆரம்பித்தால் என்ன அனர்த்தம் விளையும் என்பதை தலைவர் அறியவில்லை போலும். "இந்த நோட்டீஸ் வெளியிட்டது ஒழுங்குத் தவறு" என்று கல்வி இலாகா அதிகாரிகள் எழுதியிருந்தும் பிரசிடெண்டு இப்படிக் கூறியிருப்பது ஆச்சரியமல்லவா? ஆகவே சாமாரியாக கேள்விகள்

கேட்கப்பட்டன. கடைசியாக தலைவர் தமது தவறை ஒப்புக்கொண்டது பாராட்டத் தக்கது. இனிமேல் ஒருவரும் தம் உத்தரவில்லாமல் நோட்டீஸ் அச்சிடக்கூடா தென்று உத்தரவு போடுவதாகவும் ரிகார்டு செய்து கொண்டார்.

மருமகனுக்குச் சலுகை

ஆங்கிலத்தில் "நெபாடிஸம்" என்று ஒரு வார்த்தை இருக்கிறது. "மருமகனுக்குச் சலுகை" யென்பது அதன் பொருள். திறமை அனுபவம் முதலியவற்றை கவனிக்காமல் உற்றார் உறவினருக்கு உத்தியோகம் கொடுக்கும் முறைக்கு இந்த வார்த்தையை உபயோகிப்பது.



பலர் தம்முடைய சொந்த யோக்கியதையைக் கொண்டு உத்தியோகங்களைப் பெற முயற்சிக்கிறார்கள். இருந்தாலும் பிரசிடென்டின் சட்டைப்பையிலிருக்கும் குள்ளனுக்குத்தான் உத்தியோகம் கிடைக்கிறது.

இந்த ஊழல் சர்வ சாதாரண மானது. இந்தியாவில் இந்த ஊழல்கள் அதிகமாக இருப்பதாக பார்லிமெண்டுக் கமிட்டியில் சாப்ரூ, ஜெயக்கர் கூட்டத்தின் முன் சில ஆங்கிலேயர்கள் கூறினார்கள். ஆனால் இந்தியா மந்திரி ஹோர் தமது காரியதரிசி ஒருவரை சமீபத்தில் பம்பாய் கவர்னராக நியமித்தது தான் "நிபாடிஸ" த்துக்கு சரியான உதாரணம் என்று சர்ச்சில் கூட்டமே கூக்குர லிட்டது. இந்த ஊழல் சர்வ சாதாரணம் தான். ஆனால் இந்நாட்டில் சர்வ சாதாரணமாக இருக்கும் காலரா, பிளேக், அம்மை, இவற்றைப் போலவே இது ஓர் கொடுமையான வியாதியாகும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த போர்டில் சுமார் 12 மாத காலமாக ஸ்ரீ க. லெ. என்பவர் ஆக்டிங் குமாஸ்தாவாக ரூ. 35 சம்பளத்தில் வேலை பார்த்து

வந்தார். இவர் அதற்கு முன்னும் வேலையில் அனுபவமுள்ளவர். இவரது வேலையில் எவ்வித புகாரும் கிடையாது. ஆனால் புதிய தலைவர் வேலைக்கு வந்ததும் இவரை அவ்வேலையினின்று நீக்கி 20 ரூ. சம்பளத்தில் ஒரு (அட்டெண்டராக) மொச்சியாக நியமித்தார். குமாஸ்தா வேலைக்கு செ. கி. என்பவரை நியமித்தார். க. லெ. என்பவரை மூன்றுமாதம் அட்டெண்டர்வேலையில் வைத்து விட்டுப் பிறகு வெளியே துரத்தி வேறொருவரை அந்த வேலைக்கும் நியமித்துவிட்டார்.

செ. கி என்பவர் ஒரு டிபார்ட்மென்டில் பிரொபேஷனராக அமர்ந்து அதிலிருந்து புரொபேஷன் முடிவதற்குள் நீக்கப்பட்டவர். இதைப்பற்றிப் பல கேள்விகள் கேட்கப்பட்டன. என்ன காரியமானாலும் சரி பிரெசிடென்டை ஆதரிக்கவேண்டுமென்று நினைப்பவர்கள் சிலர் அந்த போர்டில் இருக்கிறார்கள். "நிர்வாக உரிமை உங்களுக்குத்தானே. அதை உபயோகித்துச் செய்தீர்கள் அல்லவா?" என்று சிலர் தலைவருக்கு போதனை செய்தார்கள். ஆனால் தலைவர் அவ்வளவு இறுமாப்புக்கொண்டவரல்ல; ஆகவே தாம் ஏதோ சில சொந்த காரணங்களைக்கொண்டு (சொன்னால் வெட்கக்கேடாக இருக்கக்கூடிய காரணங்களைக்கொண்டு) தவறுதலாக நடந்துவிட்டதாகச் சில அங்கத்தினரிடம் மெதுவாயக் கூறினர்.

கேள்விகள் கேட்கும் சமயத்தில் பிரெசிடென்டு மட்டும் தான் பதில் சொல்லலாம்; அங்கத்தினர்கள் சொல்வதெல்லாம் கேள்வி ரூபமாகத்தான் இருக்கவேண்டும்; ஒருவர் பேசும்போது வேறொருவர் பேசக்கூடாது; அங்கத்தினர்கள் தமக்குள் தர்க்கம் செய்து கொள்ளக்கூடாது; எல்லோரும் தலைவரை நோக்கித்தான் பேசவேண்டும்என்பன சாதாரண விதிகள். இவற்றைஅனுஷ்டித்தால்தான் விவாதம் திறமையாக நடைபெறமுடியும். சீக்கிரமாகவும் நடக்கும். இவற்றையெல்லாம் அந்த போர்டு அங்கத்தினரில் பலர் இனிமேல் தான் படிக்கப் போகிறார்கள் போலும். தலைவரும் இந்த விஷயத்தில் அளவு கடந்த தாக்ஷண்யம் காட்டுவது தான் புத்திசாலித்தனம் என்று கருதுவதாய்த் தெரிகிறது.

படித்தவன் பாட்டைக் கெடுத்தான்

மேலே குறிப்பிட்ட நியமனத்தைப் பற்றிய சில கேள்விகளையும் அதன் பதில்களையும் படித்துவிட்டுச் சிரிக்காமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

கேள்விகள்

7. இவர் முன்பு போலீஸ் டிபார்ட்மெண்டில் வேலைபார்க்கப்பட்டு அடி வேலையிலிருந்து நீக்கப்பட்டது வாஸ்தவமா? 8 அப்படியானால் அவருடைய முன் ரிக்கார்டுகள், சர்வீஸ் புஸ்தகங்களை வரவழைத்து பார்வையிடப்பட்டு அதற்குமேல் நியமனம் செய்யப்பட்டதா? 9 அப்படிக்கெட்ட ரிக்கார்டுகள் உள்ள ஒருவரை நமது போர்டில் நியமனம் செய்வது சரியா? 10. நமது தாலுகா போர்டு அப்படிப் பட்டவர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் ஒரு அடைக்கல ஸ்தலமா? (Asylum). 11. இம்மாதிரியாயுள்ள செய்கைகளுக்கு பிரெசிடெண்டு சர்ச்சார்ஜுக்கு உள்ளாக மாட்டார்களா?

பதில்:— 7, 8, 9, 10, 11. ஆம். ஆனால் டிபார்ட்மெண்டிலிருந்து நீக்கப்படவில்லை.

இந்த 'ஆம்' என்ற பதிலை 7, 8, 9, 10, 11 ஆகிய 5 கேள்வியிலும் தனித்தனியாகச் சேர்த்துப் படித்துப் பாருங்கள். போர்டுக் கூட்டத்தில் இவற்றை ஒருவர் படித்துப் பார்த்து "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்" என்று கூறி சிரித்தார்.

சர்க்கார் வேலையிலிருந்து வெளியே துரத்தப்பட்ட ஒருவரை நியமிப்பது கூடாது என்ற காரணத்தைக் கொண்டு ஆடிட்டர் இதை ஆக்ஷேபித்திருப்பதாகவும் அதனால் போர்டு அங்கத்தினர்கள் சர்ச்சார்ஜுக்கு உள்ளாகலாம் (அதாவது தமது சொந்தப் பணப்பெட்டியிலிருந்து இந்த நியமனத்துக்குள்ள சம்பளத்தைக் கொடுக்கும்படி ஏற்படலாம்) என்றும் வதந்தி இருக்கிறது.

"மாப்பிள்ளையவர்கள் பிரெசிடெண்டாக வந்தும் நமது பையனுக்கு ஒரு அட்டெண்டர் வேலை கூட ஏற்படுத்த முடியவில்லையே என்று தலைவரைத் தமது உறவினர் ஒருவர் கேட்டதாகவும் இவ்வளவுக்கும் அது தான் காரணம்" என்றும் ஒரு குருவி சொல்லுகிறது.

குறுகிய புத்தி

ஒரு ஊரில் தாழ்ந்த வகுப்பாருக்குக் கிணறு வெட்டுவதற்காக போர்டில் 500 ரூ அனுமதிக்கப் பட்டிருக்கிறது. ஏற்கனவே தீர்மானித்த இடத்தைப் பற்றி சில புகார்கள் கூறப்பட்டன. அந்த இடத்துக்கு பக்கத்திலேயே ஒரு குளமும் கிணறும் இருப்பதாகச் சிலர் கூறினார்கள். ஆனால் கிணறு வெட்டுவதாக உத்தேசித்த இடம் அவ்வூர் பிரதிநிதியின் சாவடித் தோட்டத்துக்குப் பக்கத்தில் இருக்கிறதாம். இப்பொழுது உத்தேசித்த இடத்திலேயே வெட்டுவதா அல்லது வேறு இடத்தில் வெட்டுவதுதான் பொது ஜனங்களுக்கு நன்மையா என்று விவாதம் கிளம்பியது. உடனே அவ்வூர் பிரதிநிதிக்கு வந்த ஆவேசத்துக்கு அளவில்லை. தன்னுடைய சொந்த ஊர் விஷயத்தைப் பற்றி தான் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொள்ளாதது பற்றி அவருக்கு ஆத்திரம் வருவது இயற்கை யன்றோ! ஆனாலும் சில அங்கத்தினர்கள் அந்த இடத்

தை சுற்றிப் பார்த்து விட்டு கிணறு வெட்டும் இடத்தை நிச்சயிப்பதென்று போர்டு தீர்மானித்தது.


கிணறு விஷயமாக ஆக்ஷேபனையைக் கிளப்பிய ஒருவர் அடுத்த படியாக ஸ்ரீ சென்குப்தாவின் மரணத்தைப்பற்றி அனுதாபத் தீர்மானம் ஒன்று கொண்டுவந்தார். உடனே ஷை ஆசாமி எழுந்து அதை எதிர்ப்பதாகக் கூறினார். விஷயம் ஒத்தி வைக்கப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

இந்த அங்கத்தினருடன் எனக்குச் சிறிது பழக்கம் உண்டு. சென்குப்தா தீர்மானத்தை அவர் எதிர்த்தது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. கூட்டம் முடிந்தபின் அவரிடம் கேட்டேன். இரண்டு ஆசாமிகள் தவிர வேறு யாராவது பிரேரேபித்திருந்தால் எதிர்த்திருக்கமாட்டேன் என்று கூறினார். "நல்லது!" என்று காது செவிடுபட்டுப் போகும்படி கூறினேன்.



கிழவரை கண்டு பிடி

—ஏ. எஸ். சிவராம், புதுச்சேரி.



:: ஒரு வாலிபனை ஆஜர் செய்கிறார்கள் ::

சீர் திருத்த விவாகம்.

(திரு. வி. வாசுதேவன்)

நாடக பாத்திரங்கள் :—

துரை.
ராமு. } நண்பர்கள்.
பதஞ்சலி.

களம் I — காட்சி 1.

இடம்:—செனட் ஹவுஸுக்கு முன்

ராமு:—இன்று நமது பரீக்ஷையின் முடிவு தெரிந்துவிடும். நாமெல்லோரும் தேறி யிருப்போம் என்று நம்புகிறேன்.

துரை:—இதைப்பற்றி எனக்குக் கவலையே யில்லை யென்பது உனக்குத் தெரிந்த விஷயமே; என் தாயாரின் தொந்தரவிற்காக நான் பரீக்ஷை எழுதுவதாகச் சொல்லிவிட்டு சென்னைக்கு வந்தேனே யொழிய, நடுப்பரீக்ஷையிலேயே நான் விட்டு விட்டு வந்து விட்டேனென்ற செய்தி நீ அறிந்ததுதானே. நான் அப்பொழுதே இந்தப் படிப்பிற்கு சமுத்திர ஸ்நானம் செய்தாய்விட்டதே. இதனால் நம் நாட்டிற்கு இன்னும் அடி

மைக் கட்டுகள் ஏற்படுகின்றனவே யன்றி, நாட்டின் கதி மோட்சத்தைக் கருதுவோமானால், ஏழை மக்களுக்கு நமது நாட்டின் தற்போதய நிலைமையை எடுத்துக்காட்டி அவர் களுக்கு பாடு படுவதை விட வேறு நற்காரியம் இத்தரு ணம் நாம் செய்வதற்கில்லை. நானும் இந்துதேச சேவாசங்கத் தில் சேர்ந்தாய்விட்டது. நீங்கள் இருவரும் பரிக்ஷையில் தேறி ஆங்கிலப் படிப்பின் நற்பயன்களை அடைவீர்களாக.

ராமு:—ஆனால் இவ்விஷயத்தில் நாம் மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டுள்ளோம். என்னுடைய அருமைத் தகப்பனார் நான் ஐ. சி. எஸ். பரிக்ஷைக்குப் போகவேண்டுமென் றபிப்பிரா யப்பட்டுக் கடைசியில் சாகுந்தருவாயில்கூட அவ்வாசையை பூர்த்தியாக்கி வைக்கும்படி தனது தம்பியாகிய எனது சிறிய தகப்பனாரிடம் ஒப்புவித்தாரென்பது உனக்குத் தெரியாதிருக் கலாம். நான் ஐ. சி. எஸ். பரிக்ஷைக்குப்போய் தேறிவரா விடில் என் தந்தையின் கடைசி விருப்பத்தைப் பூர்த்திசெய் யாததுடன் என்னைத் தந்தைக்குத் தந்தையாக வளர்த்துப் படிக்கவைத்த சிறிய தகப்பனாருக்கும் துரோகஞ்செய்தவனா வேன். எனவே ஐ. சி. எஸ். பரிக்ஷைக்குப்போக லாயக் காகசெய்துகொள்ள முதல் வகுப்பில் நான் தேறவேண்டுமே என்று எனக்கு விசாரமாயிருக்கிறது.

பதஞ்சலி:—எனக்கோ என் படிப்பைக்கொண்டுதான் ஏதேனும் உத்தியோகம் சம்பாதிக்கவேண்டுமென்று கவலை. ஆகவே பரிக்ஷை தவறினால் அத்துடன் மனம் உடைந்துபோய் விடும்போ லிருக்கிறது.

ராமு:—மற்றும் இன்னொரு விஷயத்தை இப்பொழுது நான் சொல் லக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் இருவரையும் பாலி யம்முதல் கவனித்து வந்த என் தகப்பனார் உங்களில் படிப் பில் தேறி முன்னேற்ற மடைபவனுக்கே என்னருமைத் தங்கை சீதையை கலியாணம் செய்துகொடுக்கப்போவதாக ஒருகால் விரும்பிச்சென்றார். ஆகவே, அவ்விருப்பத்தையும் பூர்த்திசெய்துவைக்கும் காலம் நெருங்கிவிட்டது என்று கருதுகிறேன்.

துரை:—அப்படியானால் பதஞ்சலி அதிர்ஷ்டசாலிதான் அவன் எப்படியும் பரிக்ஷையில் தேறிவிடுவான். அவனே சீதையை யடையக் கொடுத்துவைத்திருக்கிறான்.

காட்சி - இரண்டு.

இடம்: ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டு.

நீதிபதி வி. எஸ். ராம். ஐ. சி. எஸ். :—(சர்க்கார் வக்கிலிடம்) அடுத்த வழக்கு எது ?

சர்க்கார் வக்கில்:—லால்குடி சட்டமறுப்பு வழக்கு.

நீதிபதி:—சத்தியாக்கிரகிகள் வழக்கா. அப்படியானல் எளிதில் முடித்துவிடலாமே. அவர்கள்தான் எதிர்வழக்கு ஆடுகிறது கிடையாதே.

சர்க்கார் வக்கில்:—ஆமாம். ஆனல் அதில் ஒருவர் போலீசாருடன் எதிர்த்துப் போராடியபோது போலீசார் மிகமாக தடியடிப் பிரயோகஞ் செய்ததால் இப்பொழுது ஆஸ்பத்திரியிலிருக்கிறார். அவரை ஆஜர்செய்ய கோர்ட்டார் உத்திரவு தேவை. சர்க்கார் டாக்டர் அவரைக்கொண்டு வருவதினல் ஒன்றும் மோசம் ஏற்பட்டுவிடாது என்றுதான் அபிப்பிராயப்படுகிறார்; ஆனல் எதிரி பக்கம் அவருடைய சொந்த டாக்டர் அவரை கோர்ட்டுக்குக் கொண்டுவருவதால் நிலைமை மிகவும் கேவலமாய் விடக்கூடுமென்று கூறுவதால், வாய்தா கேட்டு மனுசெய்திருக்கிறார்கள்.

நீதிபதி:—இவ்வழக்குகளை அதிக நாள் தாமதிக்கக்கூடாது என்று சர்க்கார் உத்திரவு வந்திருக்கிறது. எதிரி தரப்பு மனுவை நான் நிராகரிக்கிறேன். அவரை அழைத்துவர ஏற்பாடாகட்டும். (சிறிது நேரங் கழித்து பலதத காயங்களுடன் ஒரு வாலிபனை கூட்டினருகில் போலீசார் ஆஜர் செய்கிறார்கள்.)

நீதிபதி:—(எதிரியைப்பார்த்து விசாரணைசெய்கிறார்)

எதிரியளித்த பதில்:—என் பெயர் துரைசாமி; தகப்பனர் பெயர் நாராயணசாமி ஐயர்; ஊர் லால்குடி; குற்றப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள குற்றங்களனைத்தும் நான் செய்ததாக ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்காக ஏற்பட்ட பூர்ண தண்டனையையும் மேற்கொள்ளத் தயார். இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கும் வரையில் இக்குற்றங்களை மீண்டும் மீண்டும் செய்வதையே தர்மமென்று நான் கொண்டிருப்பதால், அங்ஙனம் செய்வதற்கு பின் வாங்கமாட்டேன்:—இத்துடன் எதிரியின் விசாரணை முடிவுபெற்றது.

நீதிபதி:—(விசாரணை ஒழுங்கு தவறுமலிருப்பதற்காக இரண்டொரு சாட்சிகளை விசாரித்த பின்) இரண்டு வருஷம் கடுங்காவல்—குற்றவாளியை "பி" வகுப்பில் வைப்பதுடன் காயங்கள் சொஸ்தமாகும் வரையில் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு அனுப்பவேண்டுமென்று உத்திரவிடுகிறேன். (இவ்வுத்திரவைப் படிக்கும்போதுமட்டும் நீதிபதியின் மூக்குக்கண்ணுடி நனைந்திருப்பதை ஒரு சிலர் மட்டும் கவனித்தார்கள்.)

மூன்ருவது - காட்சி.

இடம் : சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி.

மாணவி சீதாதேவி:—நீங்கள் இந்த ஆஸ்பத்திரியில் ஆறுமாதகாலமாய்க்கிடந்தாகிவிட்டது. இடதுகால் எலும்பு முறிந்து போனதை பெரிய சர்ஜன்முதல் X ரே (எக்ஸ் ரே) வைத்துப் பார்த்து, சிகிச்சைகள் செய்தும், சேர்க்க இயலவில்லை. இடதுகால் ஆயுள் பூராவும் முடமாகவேதானிருக்கும்.

துரைசாமி:—இந்தமட்டும் விட்டதே, என் ஆயுளை தேச விடுதலைக்காக அர்ப்பணஞ்செய்திருக்கையில், எனக்கு ஒருகால் முடமானது பெரிதல்ல. இந்த நொண்டிக்காலுடனுவது இன்னும் தேசத்திற்கு உழைத்தே தீருவேன்.

மாணவி சீதாதேவி:—நாளை உங்களை ஆஸ்பத்திரியிலிருந்து விடுவித்து கூடலூர் சிறைக்கு அனுப்புமாறு உத்திரவிட்டிருக்கிருர்கள். இந்த ஆறுமாதகாலமும் உங்களை அறிந்தபின், உங்களுடைய குணுதிசயங்களைக் கண்டு உங்கள் பால் அனுதாபமும், நட்பும் கொள்ளாமல் யாராலும் இருக்கமுடியாது.

துரைசாமி:—நீங்கள் எனக்கு செய்துவந்த சிசுருஷையையும், தங்களுடைய அன்பான சேவையையும் பாராட்டி நான் வந்தனங்கூறுவதென்ருல் சாதாரணமாய் வழக்கமாய் ஏற்பட்ட உபசாரவார்த்தைக்ளென தாங்கள் சொல்லக்கூடாது. ஆனல் இவ்வாஸ்பத்திரியைவிட்டு வெளியேறு முன் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். பாலியத்தில் கல்லூரியில் என்னுடன் படித்த ஒருவருடைய சகோதரியின் நினைவு தங்களைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஏற்படுகிறது. என்னைத் தண்டித்த மாஜிஸ்டிரேட்டைப் பார்த்தபோதும் என் பழைய நண்பன் ஞாபகம் வந்தது. அவனும் ஐ. சி. எஸ். பரிக்ஷைக்குப் போய்விட்டு சர்க்கார்வேலையில்தான் அமர்ந்தான்.

சீதாதேவி:—[இவன் ஒருவேளை "துரை" யாக விருக்குமோ]

எனக்கும் ஒரு சகோதரன் ஐ. சி. எஸ். தேறி மாஜிஸ்டிரேட்டாக விருக்கிறான். தங்களை தண்டித்தவர் யார் ?

துரைசாமி:—மிஸ்டர் வி. எஸ். ராம். ஐ. ஸி. எஸ்.

சீதாதேவி:—அவன்தான் என் தமையன். பாவி உங்களைப் போன்ற தியாகிகளைத் தண்டிக்கவேண்டிய அநியாய வேலையிலிருப்பதைவிட, வேறு ஈனத்தொழிலுமுண்டோ. இன்னும் எவ்வளவு வருஷகாலம் தாங்கள் சிறையிலிருக்கவேண்டும்?

துரைசாமி:—இன்னும் 18-மாதகால மிருக்கிறது? இது தங்களுக்குக் கல்லூரியில் எத்தனுவது வருஷம்.

சீதாதேவி:—நான்காவது வருஷம். இந்த வருஷமானவுடன், அடுத்த வருஷம் கடைசிப் பரீக்ஷை.

துரைசாமி:—என்னுடைய சிறைவாசமும், உங்கள் கல்லூரி வாசமும் ஏறக்குறைய ஒரே சமயம் முடிவாகும்போ லிருக்கிறதே.

சீதாதேவி:—ஆம். நான் பரீக்ஷை முடிந்து ஊருக்குத் திரும்புகையில் கூடலூரில் இறங்கி உங்களைப் பார்க்கலாமென்று நம்புகிறேன்.

* * * * *

18 மாதங் கழித்து கீழ்க்கண்ட விளம்பரமொன்று சென்னை தினசரிப் பத்திரிகைகளில் காணப்பட்டது. மதுரை ஜில்லா திண்டுக்கல் டிவிஷன் முதல் கிளாஸ் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் V. S. ராம் I. C. S. தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டு இந்தியதேச சேவாசங்கத்தின் காரியதரிசிப் பதவியை ஏற்றுக்கொண்டு விட்டார் என்று கேள்விப்படுகிறோம். இதற்குக் காரணம், அரசியற் கைதியாயிருந்த துரைசாமி என்பவர் அவர் வீட்டில் வந்து தங்கியதற்கும், ஆங்கு விருந்துண்டதற்கும் சர்க்கார் அவரை சமாதானங் கூறும்படி கேட்டதேயாம்.

* * * * *

மறுநாள். சீர்திருத்த விவாகம் என்ற தலைப்பின் கீழ், விதவா விவாகச் சங்கக் காரியதரிசி அறிவிப்பதாக:—

மாஜி சப்கலெக்டர் மிஸ்டர் V. S. ராம் I. C. S. அவர்களுடைய சகோதரி லேடி டாக்டர். சீதாதேவி லால்குடி சட்டமறுப்பு வழக்கில் இரண்டு வருஷம் தண்டனை யடைந்து சமீபத்தில் விடுதலை யடைந்த ஸ்ரீ துரைசாமியை இன்று காலை மணந்துகொண்டார். அனேக பிரமுகர்கள் (ஜாபிதா நீக்கப்பட்டிருக்கிறது.) விஜயஞ்செய்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர்—என்ற விஷயம் பிரசுரமாகி யிருந்தது.]



ஜட்ஜ்:—அடே திருடா, நீ திருடியதாகச் செட்டியார் கண்ணால் பார்த்ததாகச் சொல்லுகிறாரே! எதற்காக இப்படி பொய் சொல்லுகிறாய்?

திருடன்:—சாமி, செட்டியார் குறட்டைவிட்டுத் தூங்கினதை நான் கண்ணால் பார்த்தேன். செட்டியாரே இப்படிப் பொய் சொல்லலாமோ?

என். சிதம்பரம், திருப்பூர்.

மாஜிஸ்ட்ரேட் வண்டிக்காரனைப் பார்த்து:—வண்டியை வலது பக்கமாக ஓட்டியது உண்மைடா?

வண்டிக்காரன்:—வண்டியை ஓட்டியது உண்மையல்ல; குதிரையை மாத்திரம் ஓட்டினேன்.

எம். பி. குருசாமி, விருதுநகர்.

புருஷன் (மனைவியைப் பார்த்து):—என்னடி நான் வீண் செலவு செய்தேன். கொஞ்சம் சொல்லேன் பார்க்கலாம்.

மனைவி:—(வீட்டிலிருந்த நெருப்பணைக்கும் கருவியை காட்டி) ஏன் இந்த நெருப்பணைக்கும் கருவி வாங்கி இரண்டு வருஷம் ஆச்சு இன்னும் ஒரு தடவைகூட உபயோகிக்கல்லே.

அ. லெ. சு கருப்பய்யா செய்கோன்.

கிட்டு:—தாத்தா! நேற்றெல்லாம் ஒரு வேலை செய்தேன்.

தாத்தா:—அதுதான் நல்லது, என்ன வேலை?

கிட்டு:—நித்திரை செய்தேன்.

வி. கணபதி திருவையாறு.

ஒருவர்:—(நந்தவனத்தை பார்த்துக்கொண்டே) என்ன நந்தவனம். கொஞ்சம் பச்சைப்புல்கூட காணோமே!

மற்றொருவர்:—ஓகோ! தாங்கள் இங்கு மேய வந்தீர்களோ?

வெங்கிட்டு திருப்பத்தூர்.

உபாத்தியாயர்:—ராமன் புலியைக் கொன்றான் இதில், எழுவாய், பயனிலை, எது.

மாணாக்கன்:—புலி-எழுவாய், இருந்தது-பயனிலை.

உபாத்தியாயர்:—எப்படிடா?

மாணாக்கன்:—புலி இருந்திராவிடில் ராமன் புலியை கொன்றிருக்க முடியாது, ஆகையால் புலி-எழுவாய்; இருந்தது-பயனிலை.

ஜி. நாணி, வேப்பத்தூர்.

பையன்:—அம்மா, எனக்குப் பால் கொடு

தாயார்:—ராத்திரி யாகட்டும் தருகிறேன்

பையன்:—ராத்திரி என்றால் என்ன அம்மா?

தாயார்:—இருட்டாய் இருக்கும்

பையன்:—(கண்ணை மூடிக்கொண்டு) ராத்திரியாய் விட்டது, பால் கொடு அம்மா.

ஆர். பாலசுப்பிரமணியன், மைசூர்.

ரெயிலில்போகும் பிரயாணி:—கடைசி வண்டியில் என் ஜனங்கள் ஏறவில்லை.

மற்றொருவர்:—அது ரெயில்வே கார்டு இருக்கின்ற இடம்.

பிரயாணி:—போஸ்ட் கார்டு முக்காலணா வாச்சே! ரெயில்வே கார்டு என்ன விலை?

கா. மொய்தின், பொறையார்.

குரு:—சாப்பிடுவதின் ரகசியம் யாது?

சிஷ்யன்:—மலம் போகட்டுமெனக் கருதி.

பி. எஸ். வேலுசாமி, பழனி.

நீதிபதி:—"இனி நீ என்ன சொன்ன போதிலும் நம்பமாட்டேன் —இதோ இம்மூன்று சாட்சிகளும் நீ திருடும்பொழுது பார்த்ததாக சத்தியம் செய்கிறார்கள்.

குற்றவாளி:—இம்மூன்று பெயர்கள் எம்மாத்திரம். என்னைப் பார்க்கவில்லை என்று சொல்ல லக்ஷம் சாட்சிகளை நான் கொண்டுவர முடியும்!

ஏ. எஸ். சிவராம், புதுச்சேரி.

முதலாளி:—அடே சுவர் இடிந்து விழுந்ததைக் கண்டிராக்டரிடம் தெரிவித்தீர்களா.

கூலியாட்கள்:—அவரிடம் சொல்லவேண்டுமென்றே அவசர அவசரமாக வேலை செய்கிறோம், அவர் இதற்கடியில்தான் கிடக்கிறார்.

கே. மகாதேவன், ஒழிகினசேரி, நாகர்கோவில்.

மனைவி:—ஏன் இவ்வளவு நேரம்?

புருஷன்:—ஒன்றுமில்லை, அந்த கழுதைகளிடத்தில் லெக்சர் செய்து விட்டு வந்துவிட்டேன்!

மனைவி:—பின் ஏன் இடை இடையே "சகோதரர்களே" என்றீர்கள்?

வேங்கிட்டு திருப்பத்தூர் என். எ.

ஆசிரியர்:—பல நூலாராய்ந்தவர் யார்?

பையன்:—நெசவு நெய்பவர்கள் சார்.

கே. அத்தியப்பன், சென்னை.

இரண்டு நண்பர்களுக்குள் சண்டை முற்றி விட்டது. விஷயம் அரியக்குடி (ராமானுஜய்யங்கார்) பாட்டு மேலா, மஹாராஜபுரம் (விசுவநாதய்யர்) பாட்டு மேலா என்பதே.— கடைசியில்.



ஒருவர்:— இனிமேல் அரியக்குடியைக் குறைவாகப் பேசினீரோ உமது பல்லை எல்லாம் உடைத்து விடுவேன் ஜாக்கிரதை

மற்றவர்:—அதுவரையில் நான் சும்மாயிருப்பேன் என்று நினைக்கிறீரோ?

முதல் பேர்வழி:— (கையை ஓங்கிக்கொண்டு) உம்மால் என்ன செய்ய முடியும்?

மற்றவர்:—நிறுத்தும். இந்தாரும் முப்பத்திரண்டு பல்லையும் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளும். நீர் அடித்து உடைக்க முடியும் என்பது நடக்காத காரியம். (என்று தன் கட்டின பல்லை கழற்றி எதிராளி கையில் கொடுத்தார்.)

* திரு. வி. வாசுதேவன், சென்னை.

---

* இரண்டு ரூபாய் பரிசு பெற்றவர்.



* அம்மானும் மருமகனும் *

(டி. ஸி. எஸ். பார்வதி)

ஒணைப்பட்டி என்பது ஒரு கிராமம். அதில் குப்பா தீக்ஷிதர் என்றொரு பிராமணர் வசித்து வந்தார். அவருக்குத்தொழில் புரோகிதம். தீக்ஷிதர் வயிறு எங்களூர் சாம்பவேளான் பண்ணும் சாலை ஒத்திருந்தது. அநேகமாக மாதம் 30 நாளில் 29 நாள் அவர் அயலூர்களில் போஜன வேட்டையாடிக்கொண்டிருப்பார். ஒனைப்பட்டியிலிருந்து வேறு ஊர்களுக்குப் போகவேண்டுமானால் அதைச் சுற்றிலுமுள்ள பெரியதொரு காட்டைக் கடந்துதான் போகவேண்டும். ஒருநாள் குப்பா தீக்ஷிதர் தன் ஊரிலிருந்து நரிக்குடிக்குப் போஜன வேட்டையாடப் புறப்பட்டார். அக்காடு துஷ்ட மிருகங்கள் வாசம் செய்வதற்கு ஏதுவாயிருந்தது. இருந்தபோதிலும் பிராம்மணர் தைரியமாகவே (காட்டின் வழியே செல்வது அவருக்கு வழக்கமாதலால்) சென்றார். கொஞ்சதூரம் சென்றவுடன் காட்டுப்புதரிலிருந்து ஒரு புலி தீக்ஷிதரை எதிர்கொண்டழைப்பது போல் அவரெதிரில் வந்தது. புலியைக் கண்டது தான் தாமதம். தீக்ஷிதர் நடுநடுங்கிப் போனார்.

புலியோ பிராமணர் மீது பாய்ந்த உடனே தமது சமயோசித யுக்தியை வரவழைத்து புலியின் முன்னங்காலிரண்டையும் கட்டியாக பிடித்துக்கொண்டார் தீக்ஷிதர். புலியின் முன்னங்கால்கள் நடக்க முடியாததால் அதனால் வேறு தீங்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. அக்கம்பக்கத்தில் யாராவது வருகிறார்களாவென்று பார்த்தார். ஒருவரும் தென்படவில்லை. மிகுந்த நேரமாய்விட்டது. கை

கால்களெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. என்ன பண்ணுவார்! பாவம்! புலியின் காலே விட்டால் தான் அதோகதியாய் விடுவோமென்று நினைத்தார்.

கடைசியாக ஒரு தபால் நாயுடு சில மணியார்டர்களை கரிக்குடிக்கு கொண்டுபோவதற்காக தீக்ஷிதர் நின்ற யிடத்தின் வழியாகப் போவதைக்கண்ட பிராம்மணர் நாயுடுவை, கூவி யழைத்தார். நாயுடுவும் வந்து சேர்ந்தான். தீக்ஷிதர்:—"அப்பா! இப்புலி என்னைக் கொல்லவந்தது. உடனே நான் அதன் காலேப் பிடித்துக்கொண்டேன். அதனால் மேல் ஒன்றும் செய்யமுடியவில்லே. நெடுநேரமாகிறது. என் கைகால்களெல்லாம் நடுங்குகிறது. ஆகையால் தயவுசெய்து நீர் கல்களை வீசியெறிந்து இப்புலியைக் கொல்லும்" என்று மனம் குழம்பித் தட்டுத்தடுமாறிச் சொன்னர்.

நாயுடு:—"ஓகோ! அப்படியா! நான் புலிகளைக் கொல்லமாட்டேன்" என்று பதில் கூறினன்.

பிராமணர்:—(பதறிக்கொண்டு) "ஐயா நீர் ஏன் அந்தமாதிரிச் சொல்லுகிறீர். இப்பொழுது நான் புலியின் காலே விட்டால், அது உம்மைக் கொல்வதும் அல்லது என்னைக் கொல்வதும் யாருக்குத் தெரியும். ஆதலால் தாமதிக்காமல் உடனே இப்புலியைக் கொன்றுவிடும்" என்று தேகம்பதறக்கூறினர்.

தபால் நாயுடு:—"ஓ! சுவாமிகளே! உமக்குத்தெரியாதா! என்னுடைய அம்மான் பெயர் புலிக்குட்டி நாயக்கர். ஆதலால்தான் நான் புலிகளைக் கொல்லமாட்டேன்" என்று விஸ்தாரமாக தான் புலியைக் கொல்லாததற்குக் காரணம் சொன்னர்.

தீக்ஷிதர்:—(ஆலோசித்து) அப்படியானல் நீர் ஒரு காரியம் செய்யும். நான் மலஜல பாதைக்குப் போய் வரும் வரை இப்புலியின் கால்களை பிடித்துக்கொள்ளும். ஐந்து நிமிஷம் கழித்துத் திரும்ப நான் பிடித்துக் கொள்கிறேன்.

இதற்கு நாயுடு சம்மதித்து புலியின் கால்களை தீக்ஷிதரிடமிருந்து தான் பிடித்துக்கொண்டான்.

தீக்ஷிதர்மனதுக்குள் சந்தோஷமடைந்து நாயுடுவின் தபால் பையை எடுத்துக்கொண்டு விரைவாக நடக்கலானர்.

நாயுடு:—(திகைத்து) "ஐயா! சுவாமிகளே என் தபால் பையை எடுத்துக்கொண்டு எங்கு செல்கின்றீர்" என்று உரக்க சொன்னர்.

(இதன் தொடர்ச்சி 517-ம் பக்கம் பார்க்க)

சென்சஸ் தமாஷ்கள்

1931-ம் வருஷத்தில் எடுத்த இந்திய ஜன சங்கியைக் கணக்கு புத்தக ரூபமாய் வெளியா யிருக்கிறது. இந்த அறிக்கையை தயாரித்து இந்திய சர்க்காருக்கு சமர்ப்பித்திருக்கும் இந்திய ஜனசங்கியை கமிஷனர் ஸ்ரீ. ஜே ஹெச். ஹட்டன், இதற்கு ஒரு முகவுரையும் எழுதி யிருக்கிறார். முகவுரையிலடங்கிய ரசமான பாகங்களை மாத்திரம் கீழே தருகிறோம்:—

இத்தடவை ஜனக்கணக்கு எடுக்க சர்க்கார் சம்பளம் கொடுத்து நியமித்தவர்களல்லாமல், சம்பளம் பெறுதவர்கள் 20 லக்ஷம் பேர் வேலை செய்திருக்கிறார்க ளென்றும், உண்மையில் கணக்கெடுத்தவர்கள் இவர்களே யென்றும் கூறுகிறார். இவர்களுடைய சேவைக்கு பதிலாக இவர்களுக்கு அச்சடித்த 'சன்னத்' மாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

நகரங்களைவிட கிராமாந்திரங்களில் கணக்கெடுத்தவர்கள் பல மைல் தூரம்போய் கணக்கெடுக்கவேண்டி யிருந்தது. பலுசிஸ்தானத்தில் ஒருவர் 836 மைலில் கணக்கெடுக்க வேண்டி யிருந்தது. மலைவாசிகள் வசிக்கும் பிரதேசத்தில் ஒருவர் 1460 சதுர மைல் விஸ்திரணமுள்ள இடத்தில் கணக்கெடுக்க வேண்டியதாயிற்று.

காங்கிரஸ் பகிஷ்காரம்

இத்தடவை ஜனசங்கியை கணக்கெடுக்க காங்கிரஸால் கஷ்டமிருந்த தென்றும் சென்சஸ் கமிஷனர் கூறுகிறார். மகாத்மா காந்தி, சென்சஸ் பகிஷ்காரஞ் செய்யும்படி எத்தகைய கட்டளையும் பிறப்பிக்காவிட்டாலும், மற்றுஞ்சில காங்கிரஸ் தலைவர்கள் பகிஷ்கார கட்டளை பிறப்பித்தார்களென்றும் கூறுகிறார். சென்செஸ் எடுப்பது கெட்டதென்று அவர்கள் கருதாவிட்டாலும், சர்க்காரை கஷ்டப்படுத்துவதற்கு இதுவும் ஒரு வழியென்று இவர்கள் கொண்டு விட்டார்களாம். 1931 ஜனவரி 11-ந்தேதியை சென்ஸ் பகிஷ்கார தினமாகக் கொண்டாடினார்கள். இந்த பகிஷ்காரம் அதிக உற்சாகமாக நடக்காவிட்டாலும், கூர்ஜரத்தில் ஆமதாபாத், பிரோச், வில்லே பார்லி, சூரத் காத்கோபார் முதலிய விடங்களில் சில கஷ்டங்களிருந்தன வென்றும் சென்சஸ் கமிஷனர் அபிப்பிராயப்படுகிறார். எனினும் இதனால் சென்சஸ் அதிகாரிகளுக்கு அதிக கஷ்டம் ஏற்பட்ட தென்பதே அவருடைய அபிப்பிராயம்.

சமூகப் போட்டி

சில விடங்களில் சென்சஸ் கணக்கில் தங்கள் வகுப்பின் தொகையை அதிகமாகக் காட்டுவதற்காக தீவிர போட்டியும் நடந்திருக்கிறது. சென்சஸ் கணக்கின் பேரில் வாக்காளர் தொகுதி அமைக்கப்படும் என்ற எண்ணமே இந்த போட்டிக்கு முக்கிய காரணமென்று ஸ்ரீ. ஹுட்டன் கருதுகிறார். பாஞ்சாலத்தில் இது நடந்ததாம். சீக்கியர், முஸ்லிம்கள், ஹிந்துக்கள் இவர்களுக்குப் புறம்பான சில ஜாதியினர் பாஞ்சாலத்திலிருக்கிறார்கள். இவர்களை, பல்வேறு மதத்தினரும், தங்கள் மதத்தினராகத்தான் சேர்த்துக் கணக்கெடுக்க வேண்டுமென்று போட்டி போட்டார்கள். அவர்கள் அதர்மிகள் என்று தங்களையே கூறிக்கொண்டார்கள். இதனால் மதங்கள் பெருகின. இவ்விதம் மதத்தைக் குறிப்பிடுவதில் அதிக போட்டி ஏற்பட்டு பல கலகங்களும் ஏற்பட்டன. ஒரிஸா மாகாணத்தைப் பிரிப்பதா இல்லையா என்ற பேச்சுமிருந்ததால், இதற்கு சாதக பாதகமாயுள்ளவர்களும், சென்சஸ் கணக்கை தங்கள் கட்சிக்கு சாதக மானதாக்கிக் கொள்ள முயன்றனர்.

மூட நம்பிக்கைகள்

இந்தியாவில் சென்சஸ் எடுக்கும்போது ஏற்படக்கூடிய மற்ற கஷ்டங்களெல்லாம் மற்ற விடங்களில் இருந்து கொண்டுதானிருந்தன வென்றும் ஸ்ரீ. ஹுட்டன் கூறுகிறார். பில் என்ற சாதியார், தங்கள் வீட்டிற்கு நம்பர் போட்டால் அதனால் தங்களுக்கு பாதகமேற்படுமென்ற மூட நம்பிக்கையை யுடையவர்கள். எனவே இவர்கள் நம்பர் போடுவதை எதிர்த்தார்கள். பர்மாவிலுள்ள வீட்டுக்காரர்கள், வீட்டுக்கு நம்பர் போட்டால் வீடுகள் விகாரமாகி விடுகின்றன வென்று எதிர்த்தார்கள். ஷான் சமஸ்தானங்களில் இன்னும் வேடிக்கையான சம்பவங்கள் நிகழ்ந்தன. இந்த சமஸ்தானங்களை இந்தியாவுடன் சேர்க்கு முன்பு நடந்த படையெடுப்பில் தப்பிப் பிழைத்த கடைசி பேர்வழியும், 13-வது பேர்வழியுமானவர் அகஸ்மாத்தாக 13வது வீட்டில் வசித்துவந்தார். ஜனக் கணக்கெடுத்தவர்கள கணக்கு வழக்கில்லாமல் அவ்வீட்டிற்கு 13-ம் நம்பரையே கொடுக்க மறுத்து விட்டதால், இதை ஆட்சேபித்த அச்சாதியினர் காட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டு விட்டார்கள். முரட்டு ஜாதியினர் வசித்த இடங்களில் கணக்கெடுத்தவர்களுக்கு கணக்கில்லா கஷ்டங்கள் ஏற்பட்டன. அங்குமிங்கும் காட்டு மிருகங்களும் கஷ்டத்தை விளைவித்தன. சென்சஸ் எடுத்த அன்றிரவு பாஸ்டார் ஸ்டேட் நிர்வாகி சென்சஸ் வேலைகளை கவனிக்கச்சென்ற

போது, ஒரு புலி அவர் மோட்டார்மீது பாய்ந்தது. ஆனால் அந்த மோட்டாரின் ரேடியேட்டர் சூட்டைத் தாங்காது குதித்து ஓடி விட்டதால் ஒரு அபாயமும் ஏற்படவில்லை. சென்சஸ் ஆரம்ப வேலை நடந்த போதும் கடைசி வேலைகள் நடந்த சமயத்திலும் பர் மாவில் கலகம் நடந்து வந்தது. மற்றெல்லா ஜில்லாக்களின் கணக் கெடுப்பதில் இதனால் கஷ்டம் ஏற்படாவிட்டாலும் ஒரு ஜில்லா வில் மாத்திரம் இந்த கலகம் இடைஞ்சலை யுண்டாக்கி விட்டது.

பம்பாய் வேடிக்கை

சென்சஸ் கமிஷனரின் முகவுரையில் மற்ரோர் வேடிக்கையான குறிப்பும் காணப்படுகிறது. பம்பாயில் சென்சஸ் சூப்பரின்டென் டாக இருந்தவர்களுக்கெல்லாம் இதுவரையில் சிக்கும் ஆபத்தும் ஏற்பட்டுக் கொண்டுதான் வந்திருக்கிறதாம். 1911ம் வருஷத்தில் சென்சஸ் சூப்பரின்டென்டா யிருந்தவர் கணக்கெடுத்து முடிந்த வுடனேயே நோயுற்று விழுந்து விட்டார். 1921ம் சென்சஸ் சூப்பரின்டெண்டாயிருந்தவா, வேலைமிகுதியால் நோயுற்று மாண்டு விட்டார். இப்பொழுது சென்சஸ் சூப்பரின்டென்டாயிருந்த ஸ்ரீ. புராகூல், எல்லாவேலையும் முடிகிற வரையில் வேலை ..ார்த் தார். ஆனால் தேக அசௌக்கிய முற்றுவிடவே ஸ்ரீ. சோர்லி எனை பவரிடம் தமது உத்தியோகத்தை ஒப்படைத்து விட்டுப் போய் விட்டார்.

(508-ம் பக்கத் தொடர்ச்சி)

தீக்ஷிதர்:—நான் போய் உமக்குப்பதிலாக மணியார்டர்களைச் செலுத்திவிடுகிறேன்.

நாயுடு:— ஓகோ! இப்புலி என்னைக் கொன்றுவிடுமே. ஆத லால் இம்மிருகத்தை கல்லால் எறிந்து கொன்றுவிடும்"—என்று சொல்லி அழத்தொடங்கினன்.

தீக்ஷிதர்:—ஓய் (நாயுடுவே) நீரோ உம்முடைய அம்மான் பெயர் புலிக்குட்டி நாய்கர் என்றும், ஆதலால் இப்புலியைக் கொன் ருல் உம்முடைய அம்மானைக் கொல்வதற்கு சமானம் என்று சொ ன்னீர். ஆகையால் அம்மான் பாடு மருமகன் பாடு; அம்மான் மரு மகனைக் கொல்லுவாரா.! என்று சொல்லி தபால் பையை எடுத் துக்கொண்டு ஓடிவிட்டார்.


தபால் நாயுடுவின் கதி யாதாயிற்று என்பதைப்பற்றி நமக்கு இன்னும் தெரியவில்லை.

கண்டதும் : காதல்

(ராஜீ)

அழகாபுரியில் சுந்தரம்ஸ் மோட்டார்ஸ் லிமிடெட் என்னும் ஒரு மோட்டார் கம்பெனியில் சுந்தரம் தன்முன் நிற்கும் ஓர் இளம் நங்கையுடன் கடுகடுத்து பேசிக்கொண்டிருந்தார்.

பார்வைக்கு மிகவும் சுந்திரவதியாகவும் சுருண்ட முடியும், அகன்ற நெற்றியும், வில்லைப்போல் விளங்தப் புருவமும், ரோஜா புஷ்பத்தைப்போல் சிவந்த உதடுகளும் வாய்ந்த அங்நங்கை, மிகவும் வாடிய முகத்துடன் அவர் முன் நின்று கொண்டிருந்தாள்.



அவள் தன் இளம் பிராயத்திலேயே தன்னுடைய பெற்றோர்களை இழந்து விட்டாள். ஆனால் தன் சிற்றப்பனால் வளர்க்கப்பட்டு பி. ஏ. வரையிலும் படித்தவள். டைப் செய்வதில் மிகவும் தேர்ச்சி அடைந்திருந்தாள். அழகாபுரியி லிருந்தபடியாலும், சிற்றப்பன் இறந்து போனபடியாலும் ஏதாவது ஒரு வேலை செய்து ஜீவிக்கும் படியாயிற்று. சுந்தரம் கம்பெனியில் டைப் அடிக்கும் உத்தியோகத்தில் அமர்ந்தாள்.

சுந்தரம் அம்மாதை நோக்கி, "உனக்கு என்ன மூளை இல்லையா? ஏன் இப்படி வேலையில் கவனமில்லாமல் காரியத்தைக் கெடுக்கிறாய். இதைவிட அதிகமாக உனக்கு ஒரு கம்பெனியிலும் சம்பளம் கொடுக்க மாட்டார்கள்." சகுந்தலா என்னும் அம்மாது, "ஆம் வாஸ்தவம் தான். ஒரு மாதத்திற்கு 40 ரூபாய் மிகவும் பெரியது."

சுந்தரம்:—உனக்கு கொடுக்கும் சம்பளம் உன் மூளையை உபயோகித்து உன் வேலையை கவனமாக செய்வதற்கே யாகும். நீ வேலையில் கவனமில்லாமல் செய்வதினால்தான் என்னை இவ்வளவு

கஷ்டங்களுக்கு ஆளாக்கிவிட்டாய். நீ ஏன் இவ்வளவு கவனமில்லாமல் செய்கிறாய்?

சகுந்தலா:—நான் அப்படி என்ன தவறு செய்துவிட்டேன்? வேலையில் கவனமில்லாமல்?

சுந்தரம்:—நான் நேற்று உன்னிடம் இரண்டு கடிதங்கள் டைப் செய்யக் கொடுத்தேன் அல்லவா? அதில் ஒன்று அந்த தறுதலைப் பயல் தியாகராஜனுக்கும், ஒன்று— —

சகுந்தலா:—ஆம் மற்ருென்று குதிரைப் பந்தய கிளப் மானேஜர் மேனேனுக்கும் டைப் செய்யச் சொன்னீர்கள்.



சுந்தரம்:—அவை இரண்டையும் நீ தப்பான உறையில் போட்டு போஸ்டு செய்து விட்டாயே! ஆகையால் என் சிநேகிதர் மேனேனுக்கு எழுதிய கடிதம் அந்தப் பயல் தியாகராஜனுக்குப் போய்ச் சேரும். நான் குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுகிறது அவனுக்குத் தெரியாதபடி ரகசியமாக இருக்கும் சமயம் அவனுக்கு இக் கடிதம் போய்ச் சேர்ந்தால் அவன் என்னை எவ்வளவு இழிவாக நினைப்பான்? அதுவுமன்றி என்னைப்பற்றி ஊர் சிரிக்கும்படி செய்து விடுவான். என் சிநேகிதனுக்கு இந்தக் கடிதம் போய்ச் சேருவதினால் பரவாயில்லை. அவருக்கு நியாயத்தை சொல்லி விடலாம். இவனுக்கு நான் என்ன பதிலளிப்பது? இனி எப்படி அந்த அவமானத்தைப் பொறுத்துக்கொண்டு இவ்வூரில் இருக்க முடியும்?

சகுந்தலா:—அது என் தவறுதான். நான் நேற்று படுக்கும்பொழுது நினைத்தேன். அதற்கு நான் இப்பொழுது என்ன செய்யட்டும்?

சுந்தரம்:—என்ன செய்வதா? இப்பொழுதே புறப்பட்டு அவர் வீட்டுக்குப் போய் அந்தக் கடிதத்தை எடுத்துவர வேண்டும். இல்லாவிடில் நீ இந்தக் கம்பெனிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு போகவேண்டியதுதான்.

சகுந்தலா:—அவர் பெரிய கோபக்கார மனிதராயிற்றே. நான் எப்படி அந்தக் கடிதத்தை எடுத்துவர முடியும்?

சுந்தரம்:—அவர் பத்து மணிக்குத்தான் எழுந்திருப்பார். ஆகையால் நீ எப்படியாவது அந்தக் கடிதத்தை எடுத்துவர வேண்டும். அப்படி செய்யாவிட்டால் நீ இந்த இடத்துக்கு இனிமேல் வரக்கூடாது. அவர்களுக்கு ஒன்பது மணிக்கே தபால்கள வந்துவிடும். ஆகையால் நீ தியாகராஜன் எழுந்திருப்பதற்குள் அதை எடுத்து வரவேண்டும்.

இவைகளைக் கேட்டதும் சகுந்தலா பதுமைபோல் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

அத்தியாயம் 2

சுந்தரம் என்பவர் ஓர் பெரிய தனவந்தர். அவர் அநேக கோவில்களுக்கும், சத்திரங்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் தர்மகர்த்தா. இவ்விஷயத்தில் டாக்டர் தியாகராஜனுக்கும் இவருக்கும் பெரிய கட்சி. டாக்டருக்கும் ஊரில் செல்வாக்குண்டு. சுந்தரத்துக்கும் செல்வாக்குண்டு. ஆனல் பொது ஸ்தாபனங்களின் தர்ம கர்த்தா பதவியோ, தலைமைப் பதவியோ டாக்டருக்குக் கிடைக்காமலும், தனக்கு கிடைக்கும்படியும் சுந்தரம் செய்து வந்தார். சுந்தரம் பெரிய தெய்வ பக்தர், ஒழுக்கம் மிகுந்தவர் என்ற பெயரெடுத்து வந்தவர். குதிரைப் பந்தயம் என்றால் எறிந்து விழுவார். பலமாய் கண்டிப்பார். டாக்டரின் மருமகன் குதிரைப் பந்தியத்தில் பணம் தோற்பதை அறிந்தும் டாக்டர் அவனுக்கு பணவுதவியைச் செய்து வருவதாக ஊராருக்கு எடுத்துக்காட்டி குறை கூறி வந்தார். டாக்டர் வயதாய் விட்டபடியால் தற்சமயம் வைத்தியத் தொழிலிலிருந்து விலகி ஊருக்கு வெளியே தமது பங்களாவில் சுக ஜீவனம் செய்து வருகிறார். இருந்தாலும் பழைய கட்சியை விடவில்லை. இந்த சுந்தரம் மகா தந்திரக்காரன் என்பது அவர் நினைப்பு. குதிரைப் பந்தயத்தை சுந்தரம் கண்டித்த போதிலும் ரகசியமாக அதை ஆதரிப்பதாக அவர் அபிப்பிராயம். இருவருக்கும் இவ்விஷயமாக சுடசுட கடிதப் போக்கு வரத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. குதிரைப் பந்தயத்தில்தான் பணம் கட்டுவதாக எப்படி சொல்லலாம் என்று சுடச்சுட திட்டி சுந்தரம் டாக்டருக்கு ஒரு கடிதம் எழுதினார். அன்று தான் தனக்காக குதிரைமீது பணம் கட்டு என்று மேனேனுக்கும் ஒரு கடிதம் எழுதினார். இக்கடிதம் டாக்டருக்கு கிடைத்தால் எவ்வளவு ஆனந்தமா யிருக்கும்? ரகுநாதன் டாக்டரின் மருமகன். அவரும் ஒரு சொந்த மோட்டார் கம்பெனி வைத்திருக்கிறார்.

அத்தியாயம் 3.

அன்று காலையில் ரகுநாதன் டாக்டர் பங்களாவுக்குள் இருக்கும் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கும்போது, ஒரு அழுகை சப்தம் கேட்டது. அவன் அந்த சப்தம் எங்கே என்று கவனிக்கும் பொருட்டு தேடினான். தோட்டத்தின் ஓரிடத்தில் ஓர் ஆலமரமிருந்தது. அதனடியில் உட்கார வசதியுள்ள ஒரு பெஞ்சு கட்டப்பட்டிருந்தது. அதில் ஓர் அழகிய மாது உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் ரகுநாதன் திடுக்கிட்டுப்போனான். “இவ்வளவு அழகிய நங்கை எதற்காக அழ வேண்டும்? டாக்டர் பங்களாவுக்குள் இவள் வரவேண்டிய காரணம் என்ன?” இந்த நினைப்புகள் அவனுக்குத் தோன்றின. சகுந்தலாவைக் கண்டவுடன் அவன் உள்ளம் அவளைப்பற்றிக் கவர்ந்தது. அவள் நிலைமை தாங்க முடியாத மனக்கஷ்டத்தைக் கொடுத்தது. அவனை யறியாமல் ஒரு புது அபிமானமும், கவலையும் அவனுக்கு அவளைப்பற்றி ஏற்படவே, தன் சொந்த வேலைகளையும், கவலைகளையும், தான் வந்த காரியத்தையும் மறந்தான். அவளை அணுகி, ‘அம்மா நீரேன் இங்கு தனியாக உட்கார்ந்து கொண்டு கவலைப் படுகிறீர்? உமக்கு என்ன துன்பம் நேரிட்டது’ என்று வினவினான்.



திடீரென்று காதில் விழுந்த சப்தத்தைக்கேட்டு, கண்ணீர் வடிக்கும் சகுந்தலா நிமிர்ந்து பார்த்தாள். எதிரே ஒரு அன்னிய புருஷன் நிற்பதைக் கண்டதும் சட்டென்று குனிந்து கண்ணீரைத் துடைத்தாள். ரகுநாதனின் அன்புமொழிகள் அவள் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தன. வேலையில்லாமல் போனால், போக்கிடமில்லாத அநாதையாக போக நேரிடுமே என்று வருந்திய போதிலும், ஒரு அன்னியனிடம் தன் கஷ்டங்களைச் சொல்லக் கொஞ்சங்கூட விருப்பமில்லாத குணமுள்ளவள் சகுந்தலா.

ஆனல் ரகுநாதனைப் பார்த்தவுடன், அவன் தனக்குப் பழக்கமானவன்போலவும் அவனிடம் தன் உள்ளத்திலிருப்பதை சொல்லலாம் போலவும் அவளுக்கு தோன்றியது. ஆகவே சில நிமிஷங்கள் பதில் பேசாமல் இருந்தாலும் கடைசியில் பேசினள்.

சகுந்தலா:—ஒன்றுமில்லை. எனக்கு ஏதோ வருத்தமாக இருந்தது. ஆகையால் அழுதேன்.

ரகு:—நீ இங்கு வந்த காரணமென்ன? உனக்கு என்ன வேண்டுமென்று உரைப்பாயாகில் யான் உனக்கு வேண்டிய உதவிகளை செய்கிறேன்.

சகுந்தலா:—"தாங்கள் என்மேல் இவ்வளவு இரக்கங்கொண்டு கேட்டதே எனக்கு நீங்கள் செய்த பெரிய உதவி." ரகுநாதன் அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "அப்படி சொல்லாதே அம்மா. நான் உனக்கு எவ்வித உதவி புரியவேண்டுமானலும் சந்தோஷமாக செய்கிறேன். உன் பெயர் என்னவென்பதையும், உனக்கு என்ன வேண்டுமென்பதையும் உரைக்கமாட்டாயா?" என்று அன்புடன் மொழிந்தனன்.

அதைக் கேட்ட கங்கை, "என்னை சகுந்தலாபாய் என்று அழைப்பார்கள். யான் இங்கு தவறுதலாக ஒரு கடிதம் எழுதிவிட்டேன். அதை இப்பொழுது எடுத்துப்போக வந்தேன். ஆனல் எடுத்துப்போக முடியவில்லை. அதை எடுத்துப்போகாவிட்டால் எனது எஜமான் வேலையை விட்டு நீக்கிவிடுவதாக உத்தரவிட்டிருக்கிறார்கள். அதை எடுத்துப்போக வழியின்றி இங்கு உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்," என்றாள்.

ரகு:—நீ என் மாமா டாக்டரைப் பார்க்கவே இல்லையா?

சகுந்:—இல்லை. அவருடைய குமாஸ்தா என்னை உள்ளே விட மறுத்துவிட்டார்.

ரகு:—அது சரி. நீ யாரிடம் வேலையில் இருக்கிறாய்?

சகுந்:—"சுந்தரம்ஸ் மோட்டார்ஸ் லிமிடெ"டில் டைப் வேலையிலிருக்கிறேன்.

ரகு:—ஹா! அந்த அயோக்கியனிடமா நீ வேலையிலிருக்கிறாய்? நீ என்ன அப்படி தவறுதலான காரியம் செய்துவிட்டாய்.

சகுந்:—நான் இரண்டு கடிதங்களை தவறுதலான உறையில் போட்டுவிட்டேன். அதில் ஒன்று இவருக்கு இன்று கிடைத்

திருக்கும். அதை அவர் பார்க்குமுன் எப்படியாவது எடுத்துப் போகவேண்டும்.

ரகு:—இதனுல் என்ன குற்றம்? இது எவரும் செய்யக்கூடியதுதானே! இதற்காகவா நீ இப்படி வருந்துகிருய்?

சகுந்தலா:—"இல்லை" என்று சொல்லி நடந்த விஷயங்களை ஆரம்ப முதல் முடிவுவரை சொன்னுள்.

அத்தியாயம் 4.

ரகுநாதனுக்கு! எவ்வளவோ கவலைகள். அவன் ஒரு சிறிய மோட்டார் கம்பெனி சொந்தக்காரன். இவன் கம்பெனி கஷ்டத்தி லிருப்பதினுல் தன் மாமனிடம் 5000 ரூபாய் வாங்கிப் போகலாமென்று வந்திருக்கிருன். இன்னும் வீட்டிற்குள் நுழையவில்லை. அதற்குள் சகுந்தலாவை கண்டுவிட்டான். இவன் இந் நிலைமையில் இருப்பதையும் பொருட்படுத்தாமல் சகுந்தலாவின் துயரத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

ரகு:—நீ எப்படி இந்தப் பயலிடம் வேலையிலிருக்கிருய்? அவன்தான் என் தொழிலை நாசமாக்கும் எண்ணத்துடனிருக்கிருன். அவன் மிகவும் கெட்டவன் ஆயிற்றே.

சகுந்:—நான் என்ன செய்வது? எங்கேயாவது வேலையிலிருக்கத்தானே வேண்டும்?

ரகு:—நீ சொல்வது சரிதான். உன்மேல் தவறு என்று நான் இப்பொழுது உரைக்கவில்லை. ஆனுல் இந்தக் கடிதம் குதிரைப் பந்தய கிளப் மானேஜருக்கு என்றும், இதில் பணம் கட்டுவதைப் பற்றி எழுதி இருக்கிறது என்றும் சொல்லுகிருயே. இதை மாமா கொடுக்கமாட்டாரே.

சகுந்:—எப்படி இருந்தாலும் சரி. நான் தியாகராஜனிடம் சென்று, எல்லாவற்றையும் சொல்லி வாங்கிவருவேன்.

ரகு:—அதெல்லாம் முடியாத காரியம். இந்த சமாச்சாரம் அந்தக் கடிதத்திலிருப்பது அவருக்கு தெரிந்தால் எமன் வந்து கேட்டாலும் கொடுக்கமாட்டார். ஆகையால் நீ போய் கேட்பதில் பயனில்லை.

சகுந்:—பிறகு என்ன செய்வது ?

ரகு:—கொஞ்ச நேரம் யோசித்தான். "எனக்கு ஒரு தந்திரம் தோன்றுகிறது" என்ருன்.

சகுந்:—என்ன ?

ரகு:—மாமா கடிதங்கள் மேஜைமீதுதான் கிடக்கும். நான் மெதுவாக எடுத்துவந்து விடுகிறேன். ஆனல் நீ எழுதிய கடிதம் எது என்று அடையாளம் காட்ட நீ வரவேண்டும்.

சகுந்:—சரி! இதுவும் ஒரு நல்ல புத்திதான்.

இருவரும் தோட்டத்திலிருந்து புறப்பட்டு போனார்கள். பாதிதூரம் போனதும். சட்டென்று ரகுநாதன் நின்று சகுந்தலாவைப் பார்த்தான்,

சகுந்தலா:—ஏன் தயங்கி நிற்கிறீர்கள் ?

ரகு:—நான் உன்னை அழைத்துக்கொண்டுபோனல் மாமா உன்னைப் பார்த்து நீ யார் என்று கேட்டால் என்ன சொல்வது ? நீ என் ஆபீஸ் மானேஜர் என்ருலோ, "உனக்கு ஒரு மானேஜர் வேறு வைத்துக்கொண்டு நீ வேலை செய்யும்பொழுதும் கடன் வாங்கவந்தாயா ? என்பார். அதற்குத்தான் நிற்கிறேன், வேறு ஒன்றுமில்லை.

சகுந்:—அதற்கு என்ன செய்யலாம் ?

ரகு:—நான் ஒரு தந்திரம் செய்யலாமென்றிருக்கிறேன். அதற்கு நீ இணங்குவாயோ ? என்னவோ ?

சகுந்தலா:—எப்படி இருந்தாலும் பரவாயில்லை. எனக்கு அந்தக் கடிதம்தான் வேண்டியது. அதற்கு நீங்கள் என்ன சொன்னாலும் செய்யத் தயார்.

இதைக் கேட்டதும் ரகுநாதனுக்கு மிகவும் சந்தோஷமுண்டாயிற்று.

ரகு:—சகுந்தலா, நான் சொல்லுகிறபடி நீ செய். உன்னை யார் என்று மாமா கேட்டால், நான் உன்னை கலியாணம் செய்யப் போவதாகச் சொல்லுகிறேன். அது உனக்கு சம்மதம் தானு ?

சகுந்தலா:—சம்மதம் தான். எப்படியாவது—

ரகு:—அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். வா, நாம் போகலாம்.

இருவரும் வீட்டிற்குள் போனார்கள்.

(அடுத்த "காந்தி" மலரில் முடிவுபெறும்.)

பழைய நினைவுகள்

(ஹேமநளினி)

ஒரு சில நாட்களில் வாழ்க்கையில் என்ன மாறுதல்கள், மனோ நிலைமையில் என்ன மாறுபாடுகள்!

ஆச்சு; மணி இறந்துபோய் ஏழு மாதங்களாகி விட்டன. ஆனால் அவன் நினைவும, அவன் உருவமும் என் மனதை விட்டு அகலவே இல்லை.

நீங்கள் அவனைப் பார்த்ததில்லை. உயரமாய், ஒல்லியாய் இருப்பான். நிறம் நல்ல பட்டு வெளுப்பு. முகத்தில் தான் என்ன தெளிவு, கண்களில் தான் என்ன ஒரு ஒளி, என்ன ஒரு காந்தம்! பெண்மை நிறைந்த அவன் இளம் முகத்தைக்கண்டாலே அவனது இனிமையான சுபாவம் உங்களுக்குத் தெரியும். ஒருவர் வழிக்கும் போகமாட்டான். சூது வாது அற்ற அவனுக்குப் பிறரிடம் வேலை என்ன?

அவனும் நானும் எத்தனைமுறை கடற்கரைக்குச் சென்று தனிமையை அனுபவித்திருக்கிறோம். எவ்வளவு தடவை சிறு குழந்தைகள் மாதிரி மணல் வீடுகள் கட்டி விளையாடியிருக்கிறோம். நிலா நாட்களில் காலம் போவது கூடத் தெரியாமல் எவ்வளவு தினங்கள் சந்திரிகையையும், சமுத்திரத்தின் உப்புக்காற்றையும் சேர்ந்து அனுபவித்திருக்கிறோம்! அத்தனை உயரத்திலிருந்துகொண்டே சமுத்திரத்தேவியை தன்னுடைய எல்லையற்ற பேரழகினால் சந்திரன் மோஹிக்கச் செய்வதையும், சந்திரனை எட்டிப்பிடிக்க ஓய்வு ஒழிச்சல் இன்றி இடைவிடாது சமுத்திரம் தாவுவதையும் எத்தனை தடவை கண்டு களித்திருக்கிறோம்! அந்த இன்பம் நிறைந்த நாட்களையெல்லாம் நினைக்கும்பொழுது மனதில் உண்டாகும் ஆசைகளையும், துக்கத்தால் புண்பட்டுப் போய்விட்ட என் ஹிருதயத்தில் தோன்றும் மனோ வெழுச்சிகளையும் சொல்லத்தொலையாது.

ஆனால் அவன் இறந்துபோன பின்தான் நான் அவன் மீது இத்தனை பிரேமையும் வாஞ்சையும் வைத்திருந்தேன் எனத்தெரிந்தது. சற்று முன்னாலேயே தெரிந்திருக்கக் கூடாதா?

அவன் போனபின் எனக்கு வாழ்க்கை கசந்துபோய் விட்டது. எந்த ஒரு நண்பனுடன் வாழ்க்கைக் கடலில் சந்தோஷமாயும் சளைப்பின்றியும் நீந்திவந்தேனோ அவன் சென்றுவிட்ட பின் எனக்கு வாழ்வின்மீது முன் இருந்துவந்த ஆசையும் ஆர்வமும் போய்விட்டது. அவன் நட்பும் துணையும் இல்லாத என் வாழ்க்கை பொருளற்ற, பொலிவு அற்ற, அரைகுறையான வாழ்வாகும்.

வீண் வாழ்வு வாழ்ந்து வெட்டிப் பேச்சுகள் பேசி காலம் போக்குபவர்களுக்கு என் துக்கத்தின் ஆழம் தெரியாது. நட்பின் நோக்கமும், அன்பின் அர்த்தமும் அறியாதவர்களுக்கு என் மனதில் எழும் அழுகைக்குரல் கேட்காது. கடந்த ஏழு மாதங்களாக என் மனம் பட்டிருக்கிற பாட்டையும், துடித்திருக்கிற துடிப்பையும் அவர்கள் தெரிந்துகொண்டிருந்தால், எனக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறக்கூடத் துணிய மாட்டார்கள்.

ஆனால் எல்லாம் வல்ல காலமே ஆற்றமுடியாத துக்கத்துக்கு மனிதர்கள் யாது செய்யமுடியும்? மணியை நினைந்து நினைந்து மனம் பொருமுவதைத் தவிற எனக்கு வேறு வழியில்லை. பலன் தராத என் வருத்தத்தைக்கண்டு நீங்கள் வேதாந்தம் பேசலாம்.

வேறு நட்பு கொள்ளச்சொல்லலாம். ஆனால் மணியின் பேரில் நான் வைத்திருந்த சொல்லொணாத ஒரு அன்பினுக்கும், அவன் என் மீது செலுத்திவந்த ஒரு பரிசுத்தமான பிரியத்துக்கும் அது அழகாகாது. அவன் வாழ்வும், என் வாழ்வும் கடவுளால் எவ்வாறோ இணைபிரியாமல் பிணைக்கப்பட்டும், காலனால் அது கத்தரிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அவன் போய்விட்ட பின்னும் நான் அவன் மீது செலுத்திவரும் எல்லையற்ற அன்பைக் காலன் என்னசெய்ய முடியும்?


Printed at the "Tamil Nadu" Press, Madras. Published by T. S. Chockalingam, Editor & Proprietor, "Gandhi" Office, 29, Sembudoss St., Madras.



ஆசிரியர்: தே. ச. சொக்கலிங்கம்

மாலை 2. { 1933 நவம்பர் 15௳ 29, செம்புதாஸ் தெரு, சென்னை. } மலர் 7.

அட்டவணை.



இந்தியாவில் வர்த்தகத்தில் பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்கும் சம உரிமை வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த சம உரிமையின் பலன் என்ன ஆகும்? நரியுடன் விருந்து சாப்பிடப்போய் ஏமாந்ததுபோலவே முடியும்,

சமபந்தி போஜனம்!

தாம் நினைத்த காரியத்தை சாதித்துக் கொள்ளவும், தாம் உத்தேசிக்கும் முறைகளை கையாளவும், சௌகரியமாக சில நல்ல வார்த்தைகளைக் கண்டு பிடிப்பதில் நமது பிரிட்டிஷார்கள் பெரும் சாமர்த்திய சாலிகள். சர்க்கார் நிர்வாகத்தில் ஜாதி மத பேதமின்றி பக்ஷபாத மில்லால் நடக்க வேண்டும் என்று ஒருவன் சொன்னால் அது தவறு என்று யாராவது சொல்ல முடியுமா? வர்த்தகத் துறையிலும் இதே முறை இருக்க வேண்டும் என்று சொன்னால் உலகத்திலுள்ளவர்கள் அது நியாயமென்றே சொல்லுவார்கள். ஆகையால் வர்த்தகத் துறையில் சம்பந்தி போஜனம் இருக்க வேண்டும்; சாப்பாட்டுப் பந்தியில் வேற்றுமை பாராட்டக் கூடாது என்று இப்பொழுது பிரிட்டிஷார் கூறுகிறார்கள். ஆனால்,

அவர்கள் கோரும் 'சமபந்தி போஜனம்' எப்பேர்ப்பட்டது என்பதை படத்தில் காணலாம். படத்திலுள்ள சமபந்தி போஜனத்தில் இருவருக்கும் வயிறு நிரம்புமென்றாவது அந்த சமபந்தி போஜனம் நியாயம் என்றாவது பிரிட்டிஷார் கூறுவார்களாயின் இப்பொழுது வர்த்தகத் துறையில் அவர்கள் கோரும் சம வசதிகள் நியாயமாக இருக்கும். அப்படி அவர்கள் கூறினால் இதைப் போன்ற இன்னொரு 'சமபந்தி போஜனம்' (கொக்கு நடத்திய விருந்து) இருப்பதை அவர்களுக்கு ஞாபகப் படுத்துவோம். அதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று கேட்போம்.

* * * *

இந்தியவில் சில அரசியல் மாறுதல் செய்வதாய் பிரிட்டிஷார் தீர்மானித்து விட்டார்கள். நாம் வேண்டாமென்றால் அவர்கள் கேட்கப்போவதில்லை. "உங்களுடைய கோபத்தையாவது எங்களால் தாங்கமுடியும்; உங்களுடைய அனுக்ரஹத்தை தாங்கமுடியாது" என்று நாம் சொன்னாலும் அவர்கள் புதிய அரசியல் ஏற்படுத்துவதை கைவிடமாட்டார்கள்! அரசியலில் என்ன மாறுதல்கள் செய்ய உத்தேசிக்கிறார்களென்பதைப்பற்றி ஒரு வெள்ளையறிக்கை வெளியிட்டார்கள். பார்லிமெண்டுக் கமிட்டியில் சர். சாமுவேல் ஹோர் தன்னுடைய இந்த அறிக்கைக்கு வியாக்கியானம் செய்கிறார். புதிய அரசியலில் வைசிராய்க்குச் சில (பல) விசேஷ அதிகாரங்களும், பிரிட்டிஷாருக்குச் 'சில' பாதுகாப்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிரஜைகளுக்கும், பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கும் இந்தியர்களைப்போலவே சம

வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்; எவ்வித வித்தியாசமும் காட்டக்கூடாது; என்பது வெள்ளையறிக்கையில் ஓர் ஷரத்து. அதாவது,

(1) இந்தியர்கள் காணி நிலம்கூட வைத்துக்கொள்ளக்கூடாது, இந்தியர்கள் கடைகள் வைத்து வியாபாரம் செய்யக்கூடாது, என்று சொல்லும் ஆபிரிக்கா வெள்ளையர்கள்; இந்தியர்கள காலடி பட்டால் தமது நாட்டுக்குத் தீட்டு ஏற்பட்டுவிடுமென்று கூறும் ஆஸ்டிரேலியா தேசத்து பிரிட்டிஷ் பிரஜைகள்; இவர்களெல்லாரும் இந்தியாவில் நிலம் வாங்கவோ வர்த்தகம் செய்டவோ சர்க்கர் உத்தியோகம் வகிக்கவோ யாதொரு விதமான தடையும் இருக்கக்கூடாது.

(2) இந்தியாவில் கைத்தொழில்களுக்கு சர்க்காரில் ஏதாவது உதவியோ, விசேஷ வசதியோ, சலுகையோ காட்டப்படுமாயின் அதே உதவி இங்குள்ள பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கும் கிடைக்க வேண்டும். இந்தியக் கரையோரக் கப்பல் வர்த்தகத்தை நடத்தும் இந்தியக் கம்பெனிகளுக்கு ஏதாவது உதவி செய்தால் இதுவரை இந்தியக் கம்பெனிகளை தலையெடுக்க வொட்டாமல் நசுக்கி வந்த பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கும் அதே வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மேலே கூறிய இரண்டு ஷரத்துக்கள் வெள்ளை யறிக்கையில் இருக்கின்றன. ஆனால் அதில் ஒரு சிறிதளவு நமக்கு அனுகூலமான ஒரு ஷரத்தும் இருந்தது. சென்ற 6உ யன்று சர் சாமுவேல் ஹோர் பார்லிமெண்டுக் கமிட்டியில் சாட்சியம் கூறியபோது வெள்ளை யறிக்கைக்கு வியாக்கியானம் செய்து நிலைமையை இன்னும் மோசமாக ஆக்கி விட்டார்.

புதிதாய் இந்தியாவில் ஏற்படும் பிரிட்டிஷ் கம்பெனிக்கு சம வசதிகள் அளிக்கவேண்டுமாயின் அவற்றின் பங்குகளில் ஒரு பாகம் இந்தியர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்றும் டைரெக்டர்களில் சிலராவது இந்தியராக இருக்க வேண்டுமென்றும் நிபந்தனை ஏற்படுத்தலாம்; என்பதாக வெள்ளையறிக்கையில் ஓர் வாக்கியம இருக்கிறது. இதைக் குறிப்பிட்டு இந்திய மந்திரியிடம் சர் ஆஸ்டின் சேம்பர்லேன் ஒரு கேள்வி கேட்டார். "அதைப் பற்றிக் கவலைப் படவேண்டாம். எல்லாம் கவர்னர் ஜெனரல் பார்த்துச் செய்து கொள்வார்" என்று சர் சாமுவேல் அபயம் அளித்து விட்டார்.

"தென்னாப்பிரிக்காவிலிருந்து வரும் வெள்ளையருக்குக் கூட சம வசதியும் சர்க்கார் உத்தியோகமும் கொடுக்கும்படி செய்வது நீதியோ!" என்று ஸ்ரீ ஜபருல்லா என்ற இந்தியப் பிரதிநிதி கேட்டார். உடனே வந்ததய்யா விக்டோரியா ராணியின் அறிக்கை! ஜாதி மத பேதம் காட்டக்கூடாதென்ற அந்த அறிக்கை நமக்கு வேதமல்லவா என்று ஹோர் எடுத்துக்காட்டினாராம்!

இவ்வாறாக, இந்தியாவில் தற்காலம் ஏற்பட்டுள்ள நிலைமை, பிரிட்டிஷாரின் தைரியத்தை எவ்வளவு அதிகப்படுத்தியிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகவே இதை இங்கு குறிப்பிடுகிறோம்.

மற்ற நாட்டாருக்கு இல்லாத ஓர் உரிமையை பிரிட்டன் ஏன் கேட்கிறது என்று யோசிக்கலாம். இந்தியாவின் செல்வத்தை வளர்ப்பதற்கு பிரிட்டிஷார் தமது மூலதனத்தை இங்கு போட்டார்களாம். ஆகையால் அவர்களை இந்தியக் கம்பெனிகளாகவே மதிக்கவேண்டுமாம். இதுதான் பிரிட்டிஷார் கூறுவது. இதற்கு உதாரணமாக இந்தியாவில் ரெயில் போடுவதில் அவர்கள் ஏராளமான மூலதனத்தைப் போட்டு உதவி செய்ததை எடுத்துக் காட்டுகிறார்கள்.

இங்கு ரயில்பாதைகள் போட்டது உண்மைதான். ரயில் பாதைகள் வர்த்தக வளர்ச்சிக்கும் நாகரிக முன்னேற்றத்துக்கும் பெரும் உதவிதான் என்பதை ஒப்புக்கொள்கிறோம். அவர்கள் போட்ட மூலதனத்துக்கு எவ்வளவோ மடங்கு லாபம் எடுத்தாயவிட்டது. ரயிலிலும் வேறு துறைகளிலும் பிரிட்டிஷார் மூலதனம் போட இடங் கொடுத்ததால் நமக்குப் பல கெடுதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த அன்னிய நாட்டு மூலதனத்தைப்பற்றி ஸ்ரீ ரானடே கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

"நாட்டின் வாழ்க்கைக்கு அவசியமான பல முயற்சிகளும் தலையெடுக்கவொட்டாமல் தடுத்தது அன்னியநாட்டு மூலதனமே" என்று அவர் எழுதியிருக்கிறார்.

எது எப்படியிருந்தாலும் சரி, பிரிட்டன் இந்தியாவின் நட்பை இழக்காதிருந்தால் வர்த்தக துறையில் அது சில சௌகரியங்களைப் பெற முடியும். அவ்வாறின்றி சட்டத்தின் பலத்தைக் கொண்டு பிரிட்டிஷ் வர்த்தகத்தை இங்கு நிலைநாட்ட முயற்சித்தால் பலிக்காது.

பிரிட்டிஷாருக்கு ஒரு விஷயம் எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். இந்தியர்கள் தமது வரிப்பணத்திலிருந்து இந்திய தொழில்களுக்கு உதவிசெய்வதை பிரிட்டிஷ் சர்க்கார் சட்டம் போட்டுத் தடுத்தால் என்ன ஆகும்? அந்தச் சட்டம் துருப்பிடிக்க வேண்டியதுதான். பிற்காலத்தில் இந்திய வர்த்தகத்தை நசுக்கும் அன்னிய கம்பெனிகள் மீது பகிஷ்காரம் என்ற ஆயுதம் பிரயோகமானால் எந்த சர்க்காரும் தடுக்கமுடியாது. "வினை விதைத்தவன் வினையறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்". இதன் பயனாக இரண்டு தேசத்துக்கும் வர்த்தக விஷயத்தில் எக்காலமும் ஒத்துழைப்பு ஏற்படாமல் போகும் என்பதே நமது அபிப்பிராயம்.



பிரடல்ல கோஷ், 79மணி நேரம் 24-நிமிஷம் ரங்கூனில் தொடர்ந்தாற்போல நீந்தி, அதிக நேரம் உலகில் நீந்தியவர் என்ற பெயர் பெற்றவர்.



ஹூமரிஸ்ட் லிஸ்டி] [பிரேக்

ஐரோப்பாவில் சமாதான தேவதை படும்பாடு.



படார்சாமி கடிதங்கள்

(படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் படார் படார் என்று பகிரங்க மாகவே எழுதுவார்.)

மகாத்மா காந்தி

அன்புள்ள மகாத்மாஜி,

உமது திக்கு நோக்கி எனது தாழ்மையான வணக்கங்களை முதலில் அனுப்புகிறேன். மகாத்மாஜி, உமது புனிதமான அகில இந்திய ஹரிஜன யாத்திரை சென்ற 7வ. ஆரம்பமானதைக் கேட்டு உள்ளக் கிளர்ச்சி கொள்ளுகிறேன். உமது தரிசனம் கிடைத்து பல வருஷங்கள் ஆயின. உம்மைத் தேடி கண்கள் பூத்துப் போயின. மகாத்மாஜி, உமது வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். சூரியனைக் கண்டவுடன் பனி ஓடுகிறது. அதைப் போல உம்மைப் பார்த்தவுடன் எங்களைப் பிடித்த அதைரியமும், அசட்டு வாதங்களும் ஒழியுமாக. உமது விஜயத்தால் தமிழ் நாட்டிலுள்ள பேச்சுப் பூனைகளின் ஆர்ப்பாட்டமும், வேஷதாரிகளின் கொட்டமும் அடங்குமென்று எதிர்பார்க்கிறேன்.

—படார்சாமி

போப்பிலி ராஜா
ஜஸ்டிஸ் தலைவர்
சென்னை.

ராஜா சாஹேப்,

உமது கட்சியை எவ்வளவு கேவலமான நிலைமைக்கு கொண்டு வரமுடியுமோ அவ்வளவு தூரம் கொண்டு வந்து விட்டீர்! உமது பெருமையே பெருமை. ஸ்ரீ. முனிசாமி நாயுடுவை காலைவாரி விட்டு உமது கட்சியிலிருந்து துரத்தினீர். இப்பொழுது ஸ்ரீ. சர்க்கரைச் செட்டியாரை காலைவாரி விட்டீர். ஜஸ்டிஸ் கட்சியில் அவர் பல வருஷங்களாய் வேலை செய்து வரும்போது, அவருக்கு வோட் கொடுக்காமல் வெள்ளையரான ஸ்ரீ. லேடனுக்கு வோட்

கொடுக்க காரணமென்ன? கிறிஸ்தவ சமூகத்திற்கு உங்கள் ஜஸ்டிஸ் கட்சி செய்யும் நீதி இது தானே? சென்னையிலுள்ள கிறிஸ்தவருக்கு, சீமையில் பிறந்த வெள்ளையர் எப்படி பிரதிநிதியாக முடியும்? எப்படியோ உமது கட்சி சந்தி சிரிக்கும்படி செய்த பெருமையை உமக்குச் சூட்டுகிறேன். சென்னை கார்ப்பரேஷன் தலைவர் பதவி ஒரு ஏழைகளின் நண்பருக்கு கிடைக்காது என்பதை, உமது கட்சி காட்டி விட்டது. இந்த யோக்கியதையுள்ள உமது கட்சிக்கு "ஜஸ்டிஸ்" (நியாயக்) கட்சி என்ற பெயரும் வேண்டுமா?

—படார்சாமி

ஸ்ரீ எ. ராமசாமி முதலியார்
கார்ப்பரேஷன் கவுன்சிலர்
சென்னை.

நண்பரே,

சென்னை கார்ப்பரேஷன் தலைவர் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. சென்னை, பம்பாய், வங்காளம் மூன்று பெரிய மாகாணங்களிலும் முதலில் ஒரு வெள்ளையரை கார்ப்பரேஷன் தலைவராக தேர்ந்தெடுத்த பெருமை சென்னையைச் சேருமென்று, அன்று மேயர் தேர்தலுக்குப் பின் பேசினீர். இது பெருமையா சிறுமையா என்ற விஷயம் நீர் முடிவு செய்யக் கூடியதல்ல. பம்பாயும், வங்காளமும் முடிவு செய்ய வேண்டும். வெள்ளையரைத் தேர்ந்தெடுத்ததால், இந்தியருக்கும் வெள்ளையருக்குமுள்ள பரஸ்பர நம்பிக்கை வெளியாவதாக அன்று பேசினீர். அப்படி எனக்குத் தோன்றவில்லை. இந்தியருக்குள் இருக்கும் பொறாமை, துவேஷம் அவநம்பிக்கை முதலியவை வெளியானதாகவே நான் கருதுகிறேன். எப்படியோ எல்லாரும் சேர்ந்து, சென்னை கிறிஸ்தவர்களுக்கு கிடைக்க வேண்டிய பதவியை கிடைக்க விடாமல் செய்து விட்டார்கள். எந்த நோக்கத்தோடு செய்தாலும், இச்செய்கை சென்னை கிறிஸ்துவர்களுக்கு விழிப்பேற்படும்படி அமைந்ததற்காக நான் சந்தோஷப் படுகிறேன்.

—படார்சாமி.

சர். பிரடரிக் சைக்ஸ்
கவர்னர்
பம்பாய்

அன்புள்ள கவர்னரே,

எங்கள் தலைவர் விட்டல்பாய் பட்டேலின் தகன கிரியைகளை, பம்பாய் சௌபாத்தி கடற்கரையில் செய்யக் கூடாதென்று, உங்கள் சர்க்கார் தடுத்து விட்டது. முன்னாலே "ஒரு இந்து" தலைவரான

திலகருக்கு இடங்கொடுத்ததாகவும், இப்பொழுதும் "ஒரு இந்து" தலைவருக்கு இடங்கொடுத்தால், 'இனியும் இந்துக்கள் கேட்பார்க ளென்றும் உமது சாக்கார் காரணம் சொல்லுகிறார்கள். "இந்து தலைவர்" என்று பிரித்துக்கூறுவது முதல் விஷமம் என்று உமக்கு எடுத்துக் காட்டுகிறேன். லோகமான்ய திலகரை தகனஞ் செய்த விடத்தில் பின்னால் சிலை நாட்டி யிருப்பதால், அம்மாதிரியே பட்டேலுக்கும் சிலைநாட்ட அநுமதி கேட்கலா'மென்று உமது சர்க்கார் சொல்லுகிறது. இந்திய நாட்டில் இந்தியத் தலைவர்களுக்கு சிலை நாட்ட இடங் கிடைப்பதுகூட உமது நாட்டார் சர்க்காரின் தயவு வேண்டி யிருக்கிறது. தெருத் தெருவாய், சந்தி சந்தியாய் எத்தனையோ வெள்ளையர் சிலைகள் இந்தியாவில் நிற்கின்றன. இவற்றை வேண்டுவாருமில்லை, விரும்புவாரு மில்லை என்ற விஷயம் உமக்குத் தெரியுமா?

—படார்சாமி

தோழர் லிட்வினப்
சோவியத் மந்திரி
அமெரிக்கா

மாஸ்கோ தோழரே,

வர்த்தக ஒப்பந்தம் சம்பந்தமாக அமெரிக்காவிற்கு நீர் போயிருப்பதையும், அங்கு ஸ்பெஷல் ரயில், தடபுடல் உபசாரம் முதலியவையெல்லாம் உமக்கு அந்த சர்க்கார் செய்வதையும், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் மிகுந்த அன்போடு உம்மிடம் பேசுவதையும் கேட்டு மிகவும் சந்தோஷப் படுகிறேன். அந்நிய நாட்டு விவகாரங்களில் எந்த நாட்டு மந்திரியின் ராஜ தந்திரத்திற்கும் உமது ராஜ தந்திரம் தோற்றதல்ல என்பதை நீர் நிலைநாட்டிவிட்டீர். அமெரிக்காவிலும் உமக்கு வெற்றிகிடைப்பது உறுதி என்பதை இப்



பொழுதே நான் சொல்லமுடியும். ஆனால் ஒரு விஷயம் இதில் முக்கியமானது. சோவியத் ரஷியா சமதர்மமே உருவாயுள்ளது. முதலாளித்துவமே உருவாயுள்ளது அமெரிக்கா. அந்த அமெரிக்காவே உமது நாட்டுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்ய ஆசை கொண்டால், சோவியத் கொள்கை உலகத்தில் நிலைத்து வேரூன்றி விட்டதென்பதற்கு வேறு ஆதாரமும் வேண்டுமோ? தோழரே, உமக்கு மூன்று "ஜே"க்கள்.

—படார்சாமி

போலீஸ் கமிஷனர்
சென்னை

ஐயா,

சென்னையில் பல இடங்களில் ஆர்ப்பாட்டஞ் செய்யும் "அமியூஸ்மெண்ட் பார்க்ஸ்" என்ற சூதாட்ட இடங்களுக்கு இனி புதிதாக லைசென்ஸ் கொடுக்கப் போவதில்லையென்று முன்னால் கூறினீர். பிராட்வேயில் சில தினங்களுக்கு முன்னால், "கிரீன் லாண்ட்" என்று புதிதாய் ஒரு உருப்படி தோன்றியிருக்கிறதே உமக்குத் தெரியுமா? இனி லைசென்ஸ் கொடுப்பதில்லையென்று முன்னால் நீர் சொல்லிவிட்டு இதற்கு எப்படி கொடுத்தீர்? பல நாட்களுக்கு முன்பே கொடுத்துவிட்டீரா? அப்படியானால் சர்வ சக்தி வாய்ந்த உமக்கு, அதை ரத்துச் செய்வது பெரிய காரியமா? கொஞ்சம் கவனித்துச் செய்யும்.

—படார்சாமி

ஆசிரியர், டைம்ஸ்
லண்டன்

துவேஷக் களஞ்சியமே,

காலஞ்சென்ற வித்தல்பாய் பட்டேலுக்கு உண்மை சிரத்தையோ தியாக புத்தியோ கிடையாதென்றும் எழுதியிருக்கிறீர். பட்டேலின் சட்டசபை தீர்ப்புகளை பார்லிமெண்டின் பிரபல தலைவர் லார்ட் உல்ஸ் வாட்டரின் தீர்ப்புகளோடு ஒப்பிட்டு பால்டுவின் பேசினார். பட்டேல் மரணத்தைப்பற்றி இந்தியாவிலுள்ள ஸ்டேட்ஸ்மன், டைம்ஸ், மிலிட்டரி கெஜட் முதலிய வெள்ளைப் பத்திரிகைகள் எழுதியபோது, அவருடைய தீரத்தையும், நேர்மையையும், தியாகத்தையும் பாராட்டி எழுதியிருக்கின்றன. அப்படியிருக்க உமக்கு மட்டும் இந்த குறும்புத்தனமாக எழுதும் புத்தி வருவானேன்? பட்டேல் நினைத்திருந்தால் வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினர் பதவி அவருக்கு கிடைத்திருக்காதா? அவருக்கு தியாகபுத்தியில்லையென்றால், சட்டசபைத் தலைவர் பதவியை அவர் ராஜிநாமா செய்ய வேண்டிய அவசியம் என்ன? சர்க்கார் சொல்லுகிறபடி கேட்டு, தோப்புக்கர்ணம் போடுகிற தாசர்களே நேர்மையானவர்களென்றும், தீரர்களென்றும் உமது மூளையில் படுகிறதோ? இந்தப் புத்தியுள்ளவர்கள் உங்கள் நாட்டில் இருக்கிறவரை இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் நட்பு ஏற்படுமென்று நினைப்பது முட்டாள்தனமல்லவா?

—படார்சாமி



இர்ரார்:—ஆசாமி ரொம்ப அழுத்தமப்பா—எளிதில் ஒடுக்கமுடியாது.
(A very hard nut to crack)
ஆர்தர் மூர்:—அப்பப்பா! ரொம்ப அழுத்தம்.
(Very)
ஸ—தர். (ஹிந்திப் பத்திரிகை).]

[1930ஷு மேமீ

ஸ்ரீ. விட்டல்பாய் பட்டேல்

(சுவாமி அருணகிரி நாதர்)

அன்னிய ராலே யிட்ட அடிமையாம் விலங்கை வெட்டி
அன்னைபா ரதியார் வாழ அமைத்தமா ளிகையைத் தாங்கும்
பன்னரும் "விட்டல்பாய்" போன்ற பலமிகும் வயிரத் தூண்கள்
இன்னலால் முறிந்து பட்டால் என்செய்வோம் இனைநூரம்மா!

பண்டித மேதிலால் நேரை பறிகொடுத் தழுத கண்ணீர்
தொண்டர்தம் முகத்தி னின்றுந் துடைப்பதற் குள்ளே அந்தோ!
எண்டிசை புகல் விட்டல்பாய் எதிலார் தேசத் தன்னில்
மண்டிய பிணிவாய்ப் பட்டு மாய்ந்திடத் தகுமோ! அம்மா!

இராசியத் தலைமை மன்றில் நாயகப் பதவி பெற்றும்
தாசிபத் தன்மை யோடு தலைவனு யிருப்ப னோ!கொல்?
ஆசியிப் பதவி யென்றே தூ!வென இகழ்ந்து விட்ட
மாசிலா வீஜீ பட்டேல் மடிந்திடத் தகுமோ அம்மா!

இச்சகத் தோர்க ளெல்லாம் எதிர்த்துவா திக்கு மன்றில்
அச்சமோர் சிறிது மின்றி அவைதனை நடத்துந் தீரன்
வச்சிர மலையாம் எங்கள் வல்லபாய்க் கண்ணன்! ஞாலம்
மெச்சிடும் வீஜீ பட்டேல் வியன்புகழ் என்றும் வாழி!

தொண்டர்காள்! வருந்த வேண்டாம் சோதனைக் காலமாகும்
தண்டனைச் சிறையால் நொந்து தன்னுயிர் விட்ட வீரர்
அண்டர்கோன் ஆசி பெற்று அனைவரும் பரத நாட்டில்
திண்டிறல் வீர ராகச் செனித்துடன் வருதல் காண்பீர்.

நெ. **005770**

இந்த நம்பருள்ள அக்டோபர் 18-ந் தேதி காந்தி மலரை அடியிற்கண்ட நண்பர் நமக்கு அனுப்பி 5 ரூபாய் பரிசு பெற்றார்.

ஸ்ரீ. கே. என். எஸ். பிள்ளை

281. 2-வது டிவிஷன், மார்தானை, கொழும்பு.




உங்களுக்குத் தெரியுமா?

"அல்பாயசு" இந்தியன்

10 வருஷத்துக்கு ஒருமுறை சென்ஸஸ் எடுக்கும் போது சராசரி ஆயுள் எவ்வளவு என்பதையும் கணக் கெடுக்கிறார்கள். சராசரி கணக்கு என்றால் எல்லோருக்கும் தெரிந்தது தானே. சாகும்பொழுது ஒவ்வொருவருக்கும் என்ன வயது என்பதைப் பார்ப்பார்கள். அதையெல்லாம் கூட்டிப் பார்த்து இறந்தவர்கள் தொகையைக் கொண்டு வகுப்பார்கள். இப்படிக் கணக்குப் பார்த்தால் இந்தியாவில ஒவ்வொருவனுக்கும் சராசரி 22½ வயது தான். அதாவது 25 வயதுவரை உயிருடன் இருப்பவன் இந்தியாவில் ஜன்மமெடுத்த மக்களில் பெரும்பாலோரைவிட அதிக வயது உயிருடன் இருப்பவன். இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் எதிர் பார்க்கக்கூடிய வயதுதான். மற்ற தேசங்களுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால் நம்மைவிடக் கேவலமான "அல்பாயுசுகள்" உலகத்தில் வேறெங்கும் இல்லையென்பது தெரிகிறது. எதிர் பார்க்கக்கூடிய ஆயுள் (சராசரி)

தேசம்	ஆண்	பெண்	தேசம்	ஆண்	பெண்
ஆஸ்டிரேலியா	55·20.	58·84.	இத்தாலி	44·24.	44·83.
டென்மார்க்	54·90.	57·79.	ஜப்பான்	43·97.	44·85.
இங்கிலாந்து	48·53.	52·38.	நார்வே	54·84.	57·72.
பிரான்ஸ்	45·74.	49·13.	ஸ்வீடன்	54·53.	56·98.
ஜெர்மனி	44·82.	48 33.	சுவிட்ஜர்லந்து	49·25.	52·15.
ஹாலந்து	51·	53.4	அமெரிக்கா	49·32.	52·54.
			இந்தியா	22.59.	23·31.

இந்தியாவைப்போல் அகால மரணம் எந்த நாகரிகமுள்ள தேசத்திலுங்கிடையாது. "ஆகையால் சர்ச்சிலும், அவரது நண்பர்களும் இந்தியாவிலுள்ள ஜனங்கள்மீது கொண்டுள்ள கவலையை சற்றுக் குறைத்துக்கொள்ளட்டும் என்று நாம் பிரார்த்திக்கிறோம். அம்மாதிரி அவர்கள் சிரத்தையைக் குறைத்துக் கொண்டால் அவர்களது பராமரிப்பால் ஏற்பட்ட பலனிலிருந்து மாறுபட்ட பலன் ஏற்படலாம்." என்று மாடர்ன் ரெவ்யூ பத்திரிகை கூறுகிறது.



இனாம் ரயில் பிரயாணம்

டிக்கட்டில்லாமல் இனாமாக பிரயாணம் செய்யக்கூடிய ரயில்கள் ரஷியாவில் இருப்பதாக நாம் கேள்விப்படுவதுண்டு. ஆனால் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்குத்தான் இந்தச் சலுகை இருப்பதாய்த் தோன்றுகிறது. இங்கிலாந்திலும் டிக்கட்டில்லாத ரயில் பாதை ஒன்று இருக்கிறதாம். இதன் மொத்த நீளம் 2 மைல். இது லங்காஷயர் ஜில்லாவில் பிரெஸ்டன் என்ற நகருக்கு சமீபத்தில் ஓடுகிறது. இது முதலில் வைத்தியகார ஆஸ்பத்திரி ஊழியர்களுக்காக ஏற்பட்டது. இது ஏற்பட்டு 50 வருஷமாகிறது. பக்கத்து ஊரிலுள்ள ஜனங்கள் இந்த ரயிலில் டிக்கட்டில்லாமலே இன்றும் போய்வந்து கொண்டிருக்கிறார்களாம்.

கறுப்பு மனிதர் கதி.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெள்ளையர்கள் பல வெளிநாடுகளில் போய்க் குடியேறியிருக்கிறார்கள். அவ்வாறு அவர்கள் குடியேறின இடங்களில் பூர்விகமாக வாழ்ந்து வந்த ஜாதியார் தொகை நாளுக்கு நாள் தேய்பிறைச் சந்திரனைப் போல் குறைந்து வருகிறது. உதாரணமாக அமெரிக்காவில் 400 வருஷ காலத்தில் சிவப்பு இந்தியர் என்ற ஜாதியின் தொகை 10 லக்ஷத்திலிருந்து சுமார் $2\frac{1}{2}$ லக்ஷமாகக் குறைந்து விட்டது. ஆப்பிரிக்காவில் பூர்வ குடிகளான நீக்ரோ முதலிய ஜாதிகளின் தொகை 1882-ல் 2060 லக்ஷமாக இருந்தது. 1901-ல் 1770 லக்ஷமாகவும், 1921-ல் 1320 லக்ஷமாகவும், குறைந்திருக்கிறது. அதாவது 40 வருஷ காலத்தில் சுமார் 650 லக்ஷம் குறைந்திருக்கிறது. ஆஸ்டிரேலியாவிலும் நியூஜிலந்திலும் பூர்விகர்கள் தொகை மிகவும் குறைந்துவிட்டது. டாஸ்மேனியாவில் வெள்ளையர் குடியேறினபின் பூர்விக ஜாதி அநேகமாய் இல்லாமலே போய் விட்டது.

போட்டிப் பரிசு மோசம்

"காந்தி" பத்திரிகையின் ஆசிரியர் தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்:—

அன்புள்ள நண்பருக்கு,

குதிரைப் பந்தயம், லாட்டரி முதலியவைகளைப் போல போட்டிப்பந்தயப் பரிசும் ஜனங்களுக்கு மிகுந்த நஷ்டம் உண்டு பண்ணி வருகிறது என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க கோருகிறேன்.

ஒவ்வொரு வாரமும் 2500 ரூபாய் ஒரு பத்திரிகை பரிசு கொடுப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இதற்காக தமிழர் செலவிடும் பணத்தை கணக்குப் பார்ப்போம். 2500 ரூபாய் பரிசு பெறவேண்டுமானால் குறைந்தது 5 ஆயிரம் பேராவது 8 அணா வீதம் மணியார்டர் அனுப்பவேண்டும். ஒரு ஆளுக்கு 8-அணா வீதம் 5 ஆயிரம் பேருக்கு ரூ. 625 மணியார்டர் கமிஷனுக்கு செலவாகிறது. இந்த 5 ஆயிரம் பேரும் பந்தய விடை அனுப்புவதற்கு $1\frac{1}{4}$ அணா வீதம் செலவிடவேண்டும். இதற்கு ரூ. 390-10-0 ஆகும். இரண்டையும் சேர்த்தால் வாரத்திற்கு ரூ, 1015-10-0 தபாலாபீசுக்கு போகிறது. ஒரு மாதத்தில் ரூ. 4-ஆயிரம் இந்த போட்டி பரிசுக்காக, ஒரு பத்திரிகைக்காக தமிழ்நாட்டார் தபாலாபீசுக்கு கொடுக்கிறார்கள். போட்டிப் பரிசுகள் போடுவது பல தமிழ் பத்திரிகைகளுக்கு வழக்கமாய் விட்டபடியால், எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் இதற்காக தமிழ்நாட்டார் மாதம் 10 ஆயிரம் ரூபாய் வரையில் தபாலாபீசுக்கு கொடுக்கிறார்கள். இந்த 10 ஆயிரம் ரூபாய் வீண் வியர்த்தமாய் போகிறதென்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழர் இழப்பது அது மட்டுமல்ல. நபர் ஒன்றுக்கு 8 அணா வீதம் கொடுப்பதன் மூலம் மாதம் சுமார் 30 ஆயிரம் ரூபாய்வரை தமிழர் இழந்து வருகிறார்கள். இங்ஙனம் பலரிடம் வசூலாகி, சிலருக்கு திரும்பவும் கிடைப்பதாகச் சொல்லலாம். பூராவும் கிடைக்கிற தென்பது என்ன உறுதி? 2 ஆயிரம் ரூபாய் பந்தயத்திற்கு 4 ஆயிரம் ரூபாய் வசூலானால், பரிசு கொடுத்த 2 ஆயிரம் போக பாக்கி 2 ஆயிரம் ரூபாய் யாருக்கு? அதற்கு வழி யென்ன? பரிசுத் தொகைக்குமேல் அதிகப் பணம் பத்திரிகை ஆபீசுக்கு கிடைக்கிற தென்பது உறுதி. இல்லாவிட்டால் பரிசுத் தொகையை கூட்டிக்கொண்டே போக மாட்டார்கள்.

இதற்கும் லாட்டரிக்கும் என்ன வித்தியாசம்? லாட்டரி கூடா தென்றால், குதிரைப் பந்தயம் கூடாதென்றால் இது மட்டும் எப்படி நேர்மையானதாகும்? இவற்றை யெல்லாம் யோசித்தால், தமிழ் நாட்டாரின் நன்மையை உத்தேசித்து, தமிழ் நாட்டில் பரவி வரும் இந்த போட்டிப் பந்தய லாட்டரியை நிறுத்த உடனே முயற்சி எடுக்க வேண்டியது அவசியம் மென்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுவீர்களென்று திட்டமாய் நம்புகிறேன்.

அறிக்கை

"காந்தி" ஆசிரியர் தமிழ் நாட்டுத் தலைவர்களின் கையெழுத்துக்காக அனுப்பியிருக்கும் சுற்றறிக்கை:—

தமிழ் பத்திரிகைகளில் போட்டிப் பந்தயங்கள் மிகவும் அதிகமாய்க் கொண்டு வருவதைக் கண்டு நாங்கள் மிகவும் வருந்துகிறோம். இதற்காக மணியார்டர் கமிஷன், தபால் செலவு இவைகளில் மட்டும் தமிழர் மாதம் 10 ஆயிரம் ரூபாய் இழந்து வருவது முக்கியமான விஷயம். பொருளாதாரக் கஷ்டம் மிருந்துள்ள இக்காலத்தில் ஏழை ஜனங்கள் பணத்தை இம்மாதிரி இழக்கும்படி செய்வது கண்டிக்கத் தக்கது. ஒரு புதிருக்கு பலவிடைகள் இருப்பதாலும், பிரவேசக் கட்டணம் என்ற பெயரால் விடை அனுப்புகிறவர்கள் சந்தா கொடுக்க வேண்டியிருப்பதாலும், லாட்டிரிகளுக்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதாய் நாங்கள் நினைக்கவில்லை. குதிரைப் பந்தயக் கடைகளை ஒழிக்க சட்டம் செய்தது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இதற்கும் இருக்கிறது. ஆகவே இம்மாதிரி போட்டிப் பந்தயங்களைத் தடுக்க உடனே சட்டம் செய்ய வேண்டியது அவசியமென்று நினைக்கிறோம்.

குறிப்பு.

மேலே கண்ட அறிக்கை பிரதிகள் வேண்டுமானால் "காந்தி" ஆபீசுக்கு எழுதினால் அனுப்பப்படும். கையினால் அறிக்கையை எழுதி கையெழுத்து வாங்கி அனுப்பினாலும் போதும். அங்கங்குள்ள நண்பர்கள், இவ்விஷயத்தில் கொஞ்சம் சிரத்தை யெடுத்து கையெழுத்து வாங்கி அனுப்பக் கோருகிறோம்.

பத்திரிகைகளின் ஆதரவு.

பந்தயப் போட்டி மோசடியை ஒழிக்கவேண்டுமென்று சென்ற 7-ந்தேதி "தமிழ் நாடு"ம், 9-ந்தேதி "சுதேசமித்திர"னும், 12-ந் தேதி "மணிக்கொடி"யும் எழுதியதை நாம் பாராட்டுகிறோம். தமிழ்நாடெங்குமுள்ள தலைவர்கள், இந்த போட்டியை கண்டித்து அறிக்கையில் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை அடுத்த "காந்தி" மலரில் வெளியிடுவோம்.

2500 ரூபாய் பரிசு!

(2)



(பரிசு தனக்குக் கிடைக்கவில்லை யென்பதை பார்த்தவுடன், பத்திரிகையை கீழே எறிந்துவிட்டு, நடுத்தெரு நாராயணன், தலையில் அடித்துக் கொள்ளுகிறான்)

சிரஞ்சீவி, நடுத்தெரு நாராயணன்,

தமிழ்நாடு.

அன்புள்ள தம்பீ,


சென்ற கடிதம் உனக்கு, மூளையைப் பொறுத்தவரையில், எவ்வித நன்மையும் செய்ததாகத் தெரியவில்லை. நான் பன்னிப் பன்னி எழுதியும் கவனிக்கவில்லை. நான் கூறிய 32 விடைகளுக்கும் ரூ. 26—8—0ஐ தொலைத்துவிட்டு, மறுபடியும் தெருவில் நிற்பதாய் எழுதுகிருய். நான்தான் அப்பொழுதே சொன்னேனே! "அட தம்பீ, என் மூளைக்கு எட்டாத 'நகாஸ் வேலைகள்' ஆசிரியர் மூளையில் இருக்கலாம்; அதனுல் இவ்வளவுதான் விடைகள் என்று எண்ணிக்கொள்ளாதே" என்றுதான் சொன்னேனே! அதை கவனிக்காமல் எதற்காக பணம் அனுப்பினுய்? பணப்பேய் உன்னை விடவில்லை, அப்படித்தானே? அப்படியானுல் படு, தம்பீ, நன்ருய் படு.

சென்ற தடவை பணம் அனுப்பி நடுத்தெருவில் நிற்பது போதாதென்று மறுபடியும் போட்டி பந்தயத்திற்கு பணம் அனுப்ப விரும்புகிருயா? அட அசடே, உன் புத்தியை யார் புத்திக்கு

ஒப்பிடுவது? ஆனந்த விகடன் நவம்பர் 1-ந் தேதி பத்திரிகையில் 2500 ரூபாய் போட்டிப் பந்தயம் போட்டிருப்பதாகவும், "தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த" யாரும் சுலபமாக அதை தட்டிவிடலா மென்றும் சொல்லுகிறாய். அவ்வளவு சுலபமானதாயிருந்தால் எனக்கு ஏன் எழுதுகிறாய்? சரி, கிடக்கட்டும். நீ தொந்தரவு செய் வதால் ஆனந்தவிகடன் "மாற்றெழுத்துப் போட்டிப் பந்தயம் 8" க்கு விடைகள் எழுதுகிறேன். படத்தைப் பார். 9 வரிசைகள் இருக் கின்றன. இவற்றிற்குரிய விடைகளை கண்டுபிடிக்க பிரசுரித்திருக் கும் குறிப்புகளாவன:—

1. லக்ஷ்மி. 2. நாபி. 3. தசாவதாரங்களில் ஒன்று. 4. கத வடைக்குந்தாள். 5. ஒரு அவயவம். 6. தடாகம். 7. சகோதரியின் புத்திரன். 8. நடுதல். 9. நவமணியிலொன்று.

இவற்றில் முதல் வரிசைக்கு "பூமகள்" என்று ஆனந்தவிக டன் விடை கொடுத்திருக்கிறது. மற்றவைகளுக்கு விடைகள் வேண்டும். ஒவ்வொரு வரிசைக்கும் ஒரே விடைதான் இருக் கிறதென்று நினைக்காதே. சில விடைகளை கீழே குறிப்பிடு கிறேன், கவனி.




1. பூமகள்.
2. தொப்புள், கொப்புள், கொப்பூழ் 3.
3. மச்சாவதாரம், புத்தாவதாரம் 2.
4. தாழ்ப்பாள்.
5. மூக்கு, நாக்கு 2.
6. குளம்.
7. மருகன், மருமான் 2.
8. நட்டல், நாட்டல் 2
9. மரகதம், கோமேதகம் 2.

அட தம்பி, பார்த்தாயா? இத்தனை விதங்களில் விடைகள் எழுதி அனுப்பவேண்டுமானால் மொத்தம் எத்தனை கூப்பன் வேண்டும் தெரியுமா? $3 \times 2 \times 2 \times 2 \times 2 \times 2 = 96$ விடைகள். 96 கூப்பன்கள் அனுப்ப வேண்டும். இந்த 96 விதங்கள் எப்படியாகின்றன என்பதை அறிய வேண்டுமானால் சென்ற கடிதத்தைப் பார். மொத்தம் 96 வித விடைகள்தானா என்று நீ கேட்கலாம். அதுதான் இல்லை. இன்னம் எத்தனையோ விடைகள் உண்டு. எனக்குத் தெரியாத வேறு பல விடைகளும் இருக்கலாம். எனக்குத் தெரிந்த சில விடைகளைக்கூட உனக்கு சொல்லக்கூடாது என்று நிறுத்தி வைத்திருக்கிறேன். உன்னிடம் சொன்னால் மொத்தம் இவ்வளவு விடைகள்தான் என்று நீ நினைத்து, போனதடவை நடந்ததைப்போல, பணத்தை அனுப்பி மறுபடியும் ஏமாந்து தெருவில் நின்றால்? ஆசிரியர் மூளையில் சில "நகாஸ்" வார்த்தைகள் இருக்கலாமல்லவா? அதனால்தான் முழுவதையும் சொல்லவில்லை.

மேலும் இந்த 96 பலவித விடைகளைப் பார்த்த பின்பாவது உன் மூளை ஸ்திரமடையாதா என்று நான் ஏங்குகிறேன். ஆனந்த விகடன் ஆசிரியர், விடைகளை சில்போட்ட கவரில் இந்தியன் பாங்கியில் வைத்திருப்பதைப் பற்றி ஏதோ உற்சாகப்படுகிறாய் என்று தெரிகிறது. இத்தனை மாறு விடைகள் இருக்கும்படி போட்டிப் பந்தயம் போட்டுவிட்டு, ஏதோ ஒரு விடையை எழுதி இந்தியன் பாங்கியில் வைத்துவிட்டதால் உனக்குக் கிடைத்த—அல்லது கிடைக்கப்போகிற—நன்மையென்ன? பாங்கியில் வைத்துவிட்டதால் மாற்று விடைகள்—விதவிதமான விடைகள்—இல்லாமல் போய்விடப் போகிறதா? அட பைத்தியமே, இந்தியன் பாங்கியில்லை, இந்திய சர்க்காரிடமே வேண்டுமானாலும் வைத்திருக்கட்டுமே, இதில் என்ன பிரமாதம்?

உனக்கு நான் இம்மாதிரி புத்தி சொல்லுவதற்காக ஸ்ரீமான் நிகண்டு அகராதியார் என்னைக் கடிந்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதை இத்துடன் அனுப்பியிருக்கிறேன் படித்துப் பார். உனக்கு என்ன உபதேசம் செய்தாலும் என் கட்சி பலிக்கப்போவதில்லையென்று அவர் சொல்லுகிறார். அப்படித்தானா? உன் புத்தி இந்தப் போட்டிப் பந்தய மயக்கத்தை விட்டு திரும்பாதா? எனக்கு தெளிவாய் அடுத்த கடிதத்தில் இதற்கு நீ பதில் எழுதவேண்டும். மற்றப் பத்திரிகைகளில் வெளியான போட்டிப் பந்தயங்களுக்கு விடை கேட்கிறாய். உன் பதில் கிடைத்ததும், உன் புத்தி திரும்பாவிடில், அடுத்த கடிதத்தில் அவைகளுக்குப் பதில்எழுதுகிறேன்.

உன் அன்புள்ள சகோதரன், படார்சாமி.



(நிகண்டு அகராதியார் கோபம்)

படார்சாமி

c/o காந்தி ஆபீஸ், சென்னை.

ஐயா,

நவம்பர்மீ 5வ 'காந்தி மலரி'ல் நீர் நடுத்தெரு நாராயண னுக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தேன்; திடுக்கிட்டேன்.

'மணி வெளுக்கச் சாணையுண்டு எங்கள் முத்து மாரியம்மா, மதி வெளுக்க வகையில்லையே எங்கள் முத்து மாரியம்மா' என்று பாரதியார் பாடியது எந்தக் காலம் என்று உமக்குத் தெரியுமா?

'மாற்றெழுத்து,' 'குறுக்கெழுத்து,' 'தலைகிழ்,' 'நேர்,' 'உரிய வஸ்து,' 'பறிகொடுத்த வஸ்து' இந்த தமிழ் போட்டிகள் யாவும் பாரதியாருக்குப் பிற்காலம் உண்டானவை என்பதைத் தெரிந்து கொள்ளும்.

மூளையைத் தீட்டிக் கூர்மைப் படுத்த இவைகளைவிட கூரிய சாணை என்ன ஐயா உண்டு? யோசித்துப் பாரும்.

இதெல்லாம் கிடக்கட்டும்; ஏதோ பீடிகையாகப் போட்டுக் கொண்டேன். விஷயத்தைக் கேளும் படார்சாமியாரே.

காக்கைக்கும், குருவிக்கும், கடலுக்கும், மலைகட்கும் விமோசனங் கொடுத்தார்; பறையனுக்கும், தியனுக்கும் புலையருசகும், குறவருக்கும் விடுதலை தந்தார். ஆனால், பணத்தை வாரிக்கொட்டித் தமிழ் அகராதிகளும், நிகண்டுகளும் அச்சிட்டு, வருஷக் கணக்காய், வட்டி முடக்கமாய், அலமாரிகளில் அடுக்கி வைத்து, பாச்சா இச்சா வராமல் பவுண்ட் கணக்காய் 'நாப்தலேன்' உருண்டைகளை வாங்கிப் போட்டு, அவைகளைப் பாதுகாத்த தமிழ் புத்தக

வியாபாரிகளுக்கு ஏதாவது கதிமோக்ஷம் உண்டு என்று அந்தப் பாரதியார் பாடினரா?

'பகவானே! அகராதிகளும் நிகண்டுகளும் செல்லரித்துப் போகுமுன் நீ உனது கருணை பொங்கும் கண்ணைத் திறவாயோ' என்று புத்தக வியாபாரிகள் யாவரும் அல்லும் பகலும் பிரார்த்தித்தனர். அவன், என் அப்பன், கருணை வள்ளல் அல்லவா? கண்ணைத் திறந்தான். கனவில் வந்து கூறினன்.

"தமிழ்ப் புத்தக வியாபாரியே, என் சூது வள்ளலை அனுப்பி விட்டேன். அவன் போட்டிப் பந்தய ரகஸ்ய மந்திரத்தை தமிழ் உலகில் பத்திரிகை போடும் பிரபுக்களுக்குள் பரப்பி விடுவான். இனி நீ பயப்பட வேண்டாம்" என்று சொன்னன்.

தமிழ்ப் புத்தக வியாபாரியைச் சூழ்ந்த ஒரு மூடு பனி நீங்க ஆரம்பித்தது.

படார்சாமியாரே, சனிபகவான் அவதாரமே! கேளும் உண்மையை.

தமிழ் நாட்டில் இன்று போட்டிப் பந்தயப் பத்திரிகைகள் நடத்த அநேக தேசபக்த, பாஷைபக்தப் பிரபுக்கள் முன் வந்துளர். பத்திரிகைகள் பலலாயிரக் கணக்காய் செலவழிகின்றன. ரகஸ்யத்தைச் சொல்லுகிறேன். பத்திரிகை வாங்குபவர், சில பைத்தியங்களைத் தவிர, ஒன்றிரண்டு வாங்குவதில்லை. ஒரே ஆசாமி, ஒரே பத்திரிகையில் 10, 20, 30, 40—பரிசுத் தொகைக்குத் தக்கபடி—பிரதிகள் வாங்கிக் கொண்டு நேரே புத்தக வியாபாரிகளிடம் போவார்.

"ஐயா, ஏழாவது நிகண்டு இருக்கா?"

"இப்பத்தான் தீர்ந்து போச்சுங்க. மூணும் நாலுமிருக்குங்க."

"சரி, அதிலொண்ணு, இதிலொண்ணு கொடும்." இப்படி எத்தனை பேர்! நோட் நோட்டாக, நோட் நோட்டாக வாங்கிப்போடுகிற காலம் இது புத்தக வியாபாரிகளுக்கு. இந்தச் சமயத்தில் நீர் எங்கிருந்து வந்து முளைச்சீர்?

"பகவானே! 'கண்ணிழந்தான் பெற்றிழந்தான்' என்று ஆகுமோ எங்கள் கதி!"

அன்று, வாமனனுக்குத் தானம் செய்கிற சமயத்தில் வந்து தடுத்த சுக்ராச்சாரியாரைப் போல, நீரும் இப்போது வந்துளீர் படார் சாமியாரே!

ஆனால், அந்த சுக்கிராச்சாரியார் வார்த்தையைக் கேட்டாரா பலிச்சக்கிரவர்த்தி ?

இந்த பண நெருக்கடி காலத்தில், சுலபமாய் 1000, 2000, தட்டிக் கொண்டு மீபோக உற்சாகத்துடன் முன் வரும் எங்கள் நேசர்களாகிய தமிழ் எழுத்துப் போட்டிப் பந்தயக் காரர்கள், தமிழ் அன்பர்கள், உமது வார்த்தையைக் கேட்பார்களா ?

ஒரு நாளுமில்லை.

இப்படிக்கு
நிகண்டு அகராதியார்.

நமது தபால்



இம்மாதம் முதல் நமது "காந்தி" மலர் மாதம் மூன்றுமுறை வெளிவரும். 5, 15, 25உ களில் பிரசுரமாகும். நண்பர்கள் இதைக்கேட்டு சந்தோஷ மடைவார்களென்று நம்புகிறோம்.

போட்டிப் பந்தய பைத்தியம், குதிரைப்பந்தயப் பைத்தியத்திற்கு மேலாக தமிழ்நாட்டில் ஏறிவிட்டதாகத் தெரிகிறது. மாதம் பதினாயிரக்கணக்காக தமிழர் இதில் இழந்து வருகிறார்கள். படார் சாமி கடிதங்களை படித்துப் பார்த்திருப்பீர்கள். இந்த மோசடியை உடனே நிறுத்தவேண்டும். போட்டிப்பந்தய பிரவேசக் கட்டணத்திற்காக மணியார்டர் கமிஷனிலும், விடைகள் அனுப்ப தபால் செலவிலுமாக தமிழர் மாதம் 10 ஆயிரம் ரூபாயை கரியாக்குகிறார்கள். இதைப்பற்றி தமிழ்நாடெங்கும் விழிப்பேற்படும்படி செய்ய, நாம் தமிழ்நாட்டு தலைவர்களுக்கு சுற்றுக் கடிதம் அனுப்பியிருக்கிறோம். அவற்றிற்கு பதில் கிடைத்ததும், அடுத்த மலரில் அதைப்பற்றிய விஷயங்களை வெளியிடுவோம்.

"காந்தி" யில் கூட போட்டிப்பந்தயம் போடவில்லையா என்று கேட்கலாம். போட்டது உண்மை தான். அதற்கும் தற்காலம் ஆயிரம், இரண்டாயிரம் பரிசு கொடுப்பதாக விளம்பரஞ் செய்யப்படும் பந்தயங்களுக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. காட்டுகிறோம்.

1. ஆயிரம், இரண்டாயிரம் பரிசுகொடுப்பதாக விளம்பரஞ் செய்யும் பத்திரிகைகள், பிரவேசக் கட்டணம் மூலம் பரிசுத் தொகைக்கு அதிகமாக வசூலானால், அதையும் பரிசாக கொடுப்பதில்லை. அதிகமாக வருகிற தென்பதில் சந்தேகமில்லை. இல்லையானால் பரிசுத் தொகையை அதிகரித்துக் கொண்டு போக மாட்டார்கள். "காந்தி" பத்திரிகை பரிசுக் கட்டணமாக வந்த பணம் பூராவையுமே பரிசாகக் கொடுத்து வந்தது.

2. பிரவேசக் கட்டணமாக 8 அணாவை மணியார்டரில் அனுப்பவேண்டுமென்று தற்கால போட்டிப்பந்தய பத்திரிகைகள் விதி ஏற்படுத்தியிருக்கின்றன. இதற்காக ஒவ்வொருவரும் 2 அணா மணியார்டர் கமிஷன் செலவழிக்க வேண்டும். "காந்தி" பத்திரிகை பிரவேச கட்டணத்திற்கே 2 அணா தான் ஏற்படுத்தியது. அதையும் ஸ்டாம்பாகத் தான் அனுப்பவேண்டுமாகையால் மணியார்டர் கமிஷன் கிடையாது.

3. விடைகள் அனுப்ப தற்கால பந்தயப் பத்திரிகைகளுக்கு ஒவ்வொருவரும் 1¼ அணா ஸ்டாம்பு செலவழிக்க வேண்டும். "காந்தி" க்கு தபாலில் விடைகள் அனுப்ப வேண்டியதில்லை. அங்கங்கேயுள்ள ஏஜண்டுகளிடம் கொடுத்துவிட்டால் போதும்.

இரண்டிற்குமுள்ள வித்தியாசங்கள் எவ்வளவு இருக்கின்றன பார்த்தீர்களா? நண்பர்களுக்கு தமாஷ் காலப்போக்கிற்காக "காந்தி" போட்டிப்பந்தயம் போட ஆரம்பித்தது. அதனால் சாதகத்தை விட பாதகமே அதிகமாய் ஏற்படுமென்று தெரிந்தவுடன் நிறுத்திவிட்டது. தற்காலம் நடக்கும் போட்டிப் பந்தயங்கள் ஜனங்கள் மூளையை கலக்கிவிட்டன. குதிரைப்பந்தய "டிப்ஸ்" க்கு விலை கொடுத்து வாங்குவதைப்போல, பத்திரிகைகளை பரிசுக்காக விலை கொடுத்து வாங்கும் நிலைமைக்கு ஜனங்கள் வந்துவிட்டார்கள். இந்த பந்தயப் பத்திரிகைகள் பிற பத்திரிகைகளில் தங்களைப்பற்றி விளம்பரம் செய்யும்போது எதைப்பற்றி சொல்லுகின்றன? பத்திரிகையிலுள்ள விஷயத்தைப்பற்றியல்ல. எத்தனை ஆயிரம் ரூபாய் பரிசு என்பதைப் பற்றித்தான் விளம்பரம்! தமிழ்நாட்டின் பத்திரிகைத் தொழில் இவ்வளவு கேவல நிலைமைக்கு வந்துவிட்டது.

இந்தமாதிரி பத்திரிகைகளில் ஒன்று, காங்கிரஸ் பெயரையும், மகாத்மா பெயரையும், ராஜகோபாலாச்சாரி, தேவதாஸ் காந்தி பெயரையும் சொல்லி ஜனங்களை ஏமாற்றி சுரண்டி வருகிறது. இந்த மோசடிகளை சீக்கிரமாக வெளியிடுவோம். தமிழரே, குதிரைப்பந்தயப் புத்தி சென்னை வாசிகளை மட்டும் பிடித்து நாசமாக்கி வந்தது; இப்பொழுது அந்தச் சனியன் போட்டிப்பந்தய ரூபமாய் கிளம்பி தமிழ்நாட்டாரையே பிடித்துவிட்டதே! உடனே அந்தப் பேயை அடித்துத் துரத்துங்கள். இது சம்பந்தமாக தமிழ்நாட்டில் நடந்த வேலைகள் அடுத்த "காந்தி" மலரில் வெளிவரும்.

ஸ்ரீ. ப. சம்பந்த முதலியார் எழுதிய "பிராமணன்—சூத்திரன்" என்ற நாடகத்திற்கு நண்பர் வ. ரா. அடுத்த மலரில் மதிப்புரை எழுதுவார்.

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்.

(வ. ரா.)

மதன்லால் திங்ரா என்ற பஞ்சாபி இளைஞன், எஞ்சினீயர்பரீட்சைக்காகப் படிப்பதற்கு, இங்கிலாந்துக்குச் சென்றிருந்தான். அவனுக்கு இந்தியாவின் அடிமை நிலை, கொஞ்சங்கூட இனிக்கவில்லை. இந்திய மந்திரியின் சபையில், இரகஸியமாய், அளவற்ற செல்வாக்குடன் விளங்கின ஸர் கர்ஸன் வைலி என்பவர் பெருத்த சூதுகாரர் என்று தீர்மானங்கொண்டு, மதன்லால் திங்ரா, அவரைச சுட்டுக் கொன்றுவிட்டான். அவனை இங்கிலீஷ் போலீசார் லண்டன் நகரில் கைது செய்தார்கள்.

மதன்லால் திங்ராவின் கோழைத்தனத்தை தீவிர தேசபக்தரும் தலைவருமான விபின சந்திர பாலரும் கண்டித்தார். (அப்பொழுது அவர் லண்டனில் இருக்கிறார். வருஷம் 1909) மதன்லாலோடு கூட வசித்தவர் டாக்டர் ராஜன். தன்னைத் தூக்கில் போட்டு விடுவார்கள் என்று திங்ராவுக்குத் தெரியும். சாகுமுன், மதன்லால், ராஜனைப் பார்க்க விரும்பினான். ராஜன் மதன்லாலை, சிறையில் பேட்டி கண்டார். இந்தியாவில் இந்தக் கொலை நடந்திருப்பின், ராஜன் அவர்கள் பேரிலும் உடந்தைக் குற்றம் சாட்டப்பெற்று, அவர் உயிர் துறந்திருக்கவேண்டும். ஆனால் இங்கிலாந்து சுதந்திரநாடு. லண்டன் போலீசாருக்கு, குற்றவாளியை மட்டும் கண்டுபிடிக்கும் சாமர்த்தியமும் பொறுப்பும்தான் உண்டு. இதனாலேதான், ராஜனைப்பற்றி 1933-ம் ஆண்டில், எழுதக்கூடிய பாக்கியம் எனக்கு ஏற்பட்டது.

யாரோ ஒரு இந்தியன், ஏனைய இந்தியர்களைக் கலக்காமல் ஒரு கொலை செய்துவிட்டால், அதற்காக, மற்றைய எல்லோரும் பழியை ஏற்றுக்கொண்டு, பயப்படவேண்டும் என்பதுண்டா? சுதந்திரமுள்ள நாடுகளிலே, இத்தகைய கேவலமான அச்சத்தைக் காணமுடியாது. இந்த அச்சச் சுழலில் அகப்பட்டுக்கொள்ளாமல், ராஜன் எவ்வாறு மதன்லாலை சிறையில் பேட்டி கண்டார்? இது உங்களுக்கு அதிசயமாகத் தோன்றுகிறதா? ராஜன் ராஜனாயிருந்தமையால்தான், பேட்டி காணத் துணிவு ஏற்பட்டது. வேறு எந்தக் காரணமும் சொல்லமுடியாது. நெருக்கடியில், தனது இயற்கைத் துணிவைக் காண்பிப்பவன்தான் வீரன்.

ராஜன் தஞ்சாவூர் ஜில்லா, தில்லைஸ்தானத்தைச் சேர்ந்தவர். அவருடைய தகப்பனார் சேஷய்யங்கார் காலமாகி விட்டார். ராஜ

னுக்கு, சௌந்திர ராஜன் என்பது முழுப்பெயர். ராஜன் குடும்பத்தார், அவரது சிறுபிராயத்தில், சீரங்கத்தில் வசித்துவந்தார்கள். ராஜனுடைய பால்யப் படிப்பு என்னவென்று நினைக்கிறீர்கள்? கழுதை சவாரி என்றால், நம்பமாட்டீர்களோ?

ஸ்ரீரங்கநாதன் கோயில் மதில்களை அண்டி ஒண்டிப் படுத்துக் கொண்டு, அல்லது நின்றுகொண்டிருக்கும் கழுதைகள் சுக்லபட்ச இராக்காலத்தில் (நிலவு இருக்கும் நாட்களில்) பட்டபாட்டைச் சொல்லி முடியாது என்று ராஜன் கதையாக வர்ணிப்பதை, நீங்கள் நேரிலே கேட்டு, ஆனந்தம் அனுபவிக்க வேண்டும். சீரங்கத்திலே பிடித்த சவாரி, திருச்சிக் கோட்டையிலே (சுமார் நான்கு மைல் தூரம்) தான் போய் நிற்குமாம். அவ்வளவு ஜீவதாதுவும் உடல் உற்சாகமும் நிறைந்தவர் ராஜன்.

கழுதை சவாரி செய்த இன்னொருவர் எனக்கு நினைவு வருகிறது. சார்லெஸ் பெரிஸ்போர்டு பிரபு என்று கடற்படைத் தலைவர், இங்கிலாந்திலே இருந்தார். அவருடைய இளம் பிராயத்திலே, அவரோடு ஒருவர் போட்டி போட்டார். லண்டன் வீதிகள் சிலவற்றில், பலர் அறிய, பெரிஸ்போர்டு, கழுதை சவாரி செய்தால் ஒரு பவுன் பந்தயமென்றார் நண்பர். பெரிஸ்போர்டு பந்தயத்தை ஏற்று, அதில் ஜயித்து, பவுனைப் பெற்றதுமல்லாமல், ஆங்கில சாம்ராஜ்யத்தின் கடற் படைகளுக்கும் தலைவரானார். விளையும் பயிர் முளையிலே.

பொய் கௌரவம் பாராட்டாதவர்கள், இறுதியில் உண்மையான கௌரவத்தை அடைகிறார்கள். இதற்கு ராஜன் சிறந்த அத்தாட்சி. பார்வைக்கு, ராஜன் கரடுமுரடு தட்டிய கிராமத்தான் போலக் காணப்படுவார் என்பது உண்மை. அவர் பெருத்த பிடிவாதக்காரர். தாம் எடுத்துக்கொண்ட வேலையைப்பற்றி, உலகமே ஏளனம் செய்தாலும், அதை அவர் ஒரு சிறிதும் பொருள்படுத்த மாட்டார். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சொல்லுபவர் ராஜன் என்று எவரும் தவறாக எண்ணவேண்டாம். பிறர் ஏளனத்துக்குள் அகப்பட்டுக்கொண்டு, மனம் கசிந்தும் உடைந்தும் போகாமல், தனது கடமை என்று தோன்றியதை, தளராமல் செய்யும் ஆற்றல் கொண்டவர் ராஜன்.

1905-ம் ஆண்டில் ராஜன் எல். எம். பி. வைத்தியப் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினார். ஸர்க்காரின் உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்தவர். எனவே, மூன்று வருஷங்களுக்கேனும் ஸர்க்காரில் ஊழியம்செய்யக் கடமைப் பட்டவர். எனவே, பர்மாவிலே, ஸர்க்கார் உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு, அங்குசென்றார். உலகத்தை மதிக்காமல் கழுதை சவாரி செய்த ராஜனுக்கு, ஸர்க்காருக்குக் கீழ்ப்படிந்து, உத்தியோகம் பார்க்கமுடியுமா?

பர்மாவிலே, ஒரு வெள்ளைக்கார டாக்டருக்குக் கீழ், ராஜன் வேலைபார்க்க நேர்ந்தது. பெரிய டாக்டரின் வேலைத்திறமையில், ராஜனுக்கு ரொம்ப அவமதிப்பு. பெரிய டாக்டர் ஆஸ்பத்திரி நோயாளி ஒருவருக்கு இன்புளுவன்ஸா காய்ச்சல் என்று எண்ணி, அதற்கான மருந்தும் ஆகாரமும் கொடுக்கவேண்டும் என்று எழுதி விட்டுப் போனால், ராஜன் அதை அடித்துவிட்டு, மலேரியா சுரத் துக்கு வைத்தியம் செய்யவேண்டும் என்று எழுதிவைப்பார். ராஜன் இப்படி வேலை பார்த்தால், பெரிய டாக்டருக்கு பிடிக்குமா? ராஜன் வேலையை ராஜிநாமா கொடுத்தார், சிறிது காலத்திற்குப் பின்னர். ஸர்க்கார் உபகாரச் சம்பளப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமே! அதற்குப் பணம் கிடைத்ததுதான் ஆச் சரியம் என்று ராஜன் சொல்லும்பொழுது, தரித்திரத்தின் கொடு மையை எவ்வளவு லேசாகவும் நயமாகவும் சொல்ல முடியும் என் பதைத் தெரிந்துகொள்ளலாம்.

தரித்திரத்துக்கும் சுதந்திர தாகத்துக்கும் எப்பொழுதுமே முரண். எப்பொழுதுமே பகை. தரித்திரனுக்குச் சொந்தக்கருத் தும் சுயேச்சை வாழ்வும் இருக்கமுடியுமா? எனவே, தமது வறு மையைக்கொல்ல, ராஜன் வழிதேடத் தலைப்பட்டார். அதற்கு சீமைப்பட்டமும், வெள்ளைக்கார வைத்திய முறையில் உயர்ந்த பயிற்சியும் வேண்டுமென முடிவுகொண்டு, 1908 ம் ஆண்டில், லண் டனுக்குச் சென்றார். அங்கு அவர் பெற்ற பரிசுகளும் நற்சாட்சிப் பத்திரங்களும் பல.

மீண்டும் பர்மாவுக்குத் திரும்பிவந்து, (1910-ம் ஆண்டு) 1914-ம் வருஷம் வரையில் அங்கு இருந்தார். அவரது மனைவி இறந்துபோகவே, அவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்து, சீரங்கத் தில் வைத்தியத்தொழிலை ஆரம்பித்தார். இந்தியா முழுதும் பெயர்பெற்ற ஸர்ஜன்களில், ராஜன் ஒருவர். எனவே, அவரது தொழில் அபிவிருத்தி யடைந்ததைப்பற்றி, தனியாக ஒன்றும் சொல்லத்தேவையில்லை. நாவல் ஆசிரியர்கள் சொல்வதுபோல, அது நாளொருமேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்ந்தது.

சீமையிலிருந்து வந்தது முதல், நாளதுவரைக்கும், போலீ சார், ராஜனிடமிருந்து, தங்கள் கண் பார்வையை மட்டும் எடுத் துக்கொண்டதேயில்லை. அவர் செய்த பாக்கியம்!

எவ்வளவு வருமானம் வந்தாலும், ராஜன் அவர்களால் நாட்டை மறக்க முடியுமா? ஒத்துழையாமைக் காலத்துக்கு முன் னும், அதைத்தொடர்ந்து பின்னும், ராஜன் அரசியலில் கலந்து கொண்ட வகை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். தமிழ்நாடு காங்

கிரஸ் கமிட்டியின் நிர்வாகத்தில், ராமஸ்வாமி நாயக்கரும் ராஜனும் அமர்ந்திருந்த காலங்களில், அவர்கள் செய்த அபார வேலையை, இப்பொழுது எடைபோட்டு, நிறுத்துச் சொல்லமுடியாது. அக்காலத்தில், ஊருக்கு ஒரு காங்கிரஸ் சபை ஏற்பட்டு, தீவிரமாக வேலை செய்தது என்று சொன்னால், போதாதா? வேறு என்ன சொல்லவேண்டும்? அக்காலத்தில் தலைவர்களுக்குள் இருந்த மன ஒற்றுமையும் இலட்சிய ஒற்றுமையும் நிலைத்து இருக்கலாகாதா? இது வேறு சங்கதி.

ஒருவன், தான் செய்துவந்த தொழிலை நிறுத்தினால் போதும்; அவன் தொலைந்துபோவான். மூன்றுதரம் தமது தொழிலை நிறுத்தி, மூன்றுதரம் அதைத் துவக்கியிருக்கிறார் ராஜன். ஒவ்வொரு தடவையும் இரட்டிப்பு மடங்கு வெற்றியுடன், இலாபத்துடன். இதிலிருந்தே, ராஜனுடைய பிடிவாதக்குணமும் சாமர்த்தியமும் ஒருமனப்பட்டு உழைக்கும் தன்மையும் ஒருங்கே விளங்கும். வக்கீல் தொழில் நிறுத்திய தேசபக்தர்கள், எத்தனைபேர்கள் திண்டாடுகிறார்கள்!

முதல் ஒத்துழையாமைக் காலத்தில், கோயம்புத்தூர், பாளையங்கோட்டை சிறைகளில், அவர் அனுபவித்த கஷ்டத்தைச் சொல்லிமுடியாது. (திருநெல்வேலி) பாளையங்கோட்டை சிறையில், "ஹூக் வோம்" (வளையப்புழு) என்பதன் சேஷ்டைகளைப் பற்றி ஆராய்ச்சி சோதனைசெய்து பார்க்கையில், புண் கண்டு, புரையோடிப்போயிற்று. அவருடைய இடது கையோடு, உயிரும் போய்விடுமோ என்ற சந்தேகமும் இருந்தது. தப்பிப் பிழைத்தார். இடது கையிலேயே, இரண்டு மூன்று சத்திரம் வைக்க நேர்ந்தது.

ஒரு கை இல்லாமல் ராஜன் எப்படி ஆபரேஷன் செய்ய முடியும், இனி ஆப்ரேஷன் செய்யமுடியாதோ என்று நண்பர் ஒருவர் ராஜனை, வருத்தத்துடன் கேட்டார். "ஓய்ந்து, ஏக்கங்கொண்டால், எல்லாம் ஓய்ச்சல்தான். பிடிவாதத்துடன் பழக்கத்தைக் கைவிடாமலிருந்தால், பிணத்துக்குக் கூட உயிரையும் ஊக்கத்தையும் ஊட்டலாம்" என்று ராஜன் பதில் சொன்னார். இந்த பதிலைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ராஜன் பிணத்தைப்பற்றிக் குறிப்பிட்டது, அவரது தொழில் வாசனையால். அதைப்பற்றி, நமக்கு என்ன கவலை? மனிதனுடைய பிடிவாதம் 'அற்ப சொற்ப' மல்ல. அவ்வளவுதான் நமக்கு வேண்டும்.

உடல் உழைப்பில், ராஜனைத் தோற்கடிக்கக் கூடியவர்கள், நமது தமிழ்நாட்டில் எவரேனும் இருப்பார்களோ என்பது சந்தேகம். வேலையிலே, ராஜன் "அசுரன்". சோம்பல் என்பவர் தேம்பித்

திரிவர் என்பதை உணர்ச்சி மூலமாய்க் கண்டறிந்தவர். ஓயாத வேலே, சளேக்காத உழைப்பு, சன்மானத்தையும் புகழையும் வேண்டாத தொண்டு. நல்ல துணிவு. கர்ம வீரனுக்கு வேறு என்ன லட்சணங்கள் தேவை?

பிரசங்க மேடையில் ஏறினல், பைத்தியக்காரனைப் போல முதலிலே தோன்றும். உடலிலிருக்கிற இரத்தம் அவ்வளவும் ஒன்று சேர்ந்து, முகத்தில் வந்து குவிந்துகொண்டது போல காணப்படும். இவர் என்ன பேசப்போகிருர் என்று அலட்சியமாய் மட்டும் நாம் இருக்கலாகாது. பேசத் துவக்கிவிட்டால், கிராம்யப் பேச்சு. அழகான உபமானங்கள். தைக்கும் சிறு கதைகள். சுடச்சுட விழும் வார்த்தைகள். முத்து முத்தாகக் கருத்துக்கள். நிறைந்து பரந்து, ஊடுருவிவரும் ஹாஸ்யம். மனதை அள்ளும் கற்பனே. இவ்வளவுமா, சதையை தாட்சண்யமின்றி அறுத்துத்தள்ளும் ராஜனிடத்தில் என்பீர்களோ? ஆம் என்று அழுத்தமாய் முடிக்கிறேன். 1919-ம் ஆண்டில் சென்னே, திருவல்லிக்கேணி கடற்கரையில், காந்தியின் தலைமையின்கீழ், ராஜன், சத்தியாக்கிரகத்தைப்பற்றிச் செய்த பிரசங்கத்தைப்போல, இனியொருமுறை, நான் எப்பொழுது கேட்கப்போகிறேன்?

ஹரிஜன இயக்கத்தின் மூலமாய், ராஜன் வைதிகர்களின் கையில் படுகிற பாட்டை எழுத்தில் எழுத முடியாது. வைஷ்ணவர்களின் உண்மையான பரம்பரையில் பற்றுக் கொண்டிருக்கும் ராஜன், வைதிகர்களேப் பொருள்படுத்துவாரா? வந்ததெல்லாம் வரட்டும் என்றுதான் சொல்லுவார்.

ராஜன் ரொம்ப முரடர். ஆனல் அவரை ஆட்டிவைக்க ஒருவருக்குத்தான் சாமர்த்தியம் உண்டு. அந்த ஆஸாமியின் பெயர் உங்களுக்குத் தேவையா? அவர்தான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். ஆச்சாரியார் சொல்லுக்கு, ராஜன் மாற்ருக எதுவும் சொல்லத் துணிந்ததில்லே.

ராஜன் பணத்தில் ரொம்ப கெட்டி பேர்வழி. இதற்குக்காரணங்கள், காலத்தின் போக்கும் அவரது இளமை வறுமையும் என்று எண்ணுகிறேன். ஆனல் அவர் நண்பர்களுக்கு உள்ளன்புடன் செய்யும் உதவி, கடவுள் ஒருவருக்குத்தான் தெரியலாமோ, என்னவோ, மற்றவர்களுக்குத் தெரியாது. மற்றவர்களுக்குத் தெரியும்படியாக, டம்பமாக உதவி செய்பவர் ராஜன் அல்ல.

(அடுத்த மலரில் நண்பர் வ. ரா. ஸ்ரீ. எம். சி. ராஜாவைப் பற்றி எழுதுவார்.)

அழகைப் பற்றி

(ஹேமமாலினி)



அழகைக் கண்டு மயங்காதவர்கள், அழகுக்குப் பணி செய்ய மறுப்பவர்கள், அழகு விரும்பாதவர்கள், இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்? அழகுக்காக எத்தனை மன்னர்கள் அரசு இழந்திருக்கிறார்கள், எத்தனை பேர்கள் உயிர் விட்டிருக்கிறார்கள், எத்தனை பேர்கள் மன முடைந்திருக்கிறார்கள்!

அழகின் பெயரற்ற சக்தியால் நாமெல்லோரும் ஆட்டப் படுகிறோம். அதன் மாயவலையில் உலகமே கட்டுண்டிருக்கிறது. ஆனால் அழகு என்பது என்ன என்று ஒருவர் கேட்டால், இதுதான் என்று நம்மால் குறிப்பிட்டுக் கூற முடியாது.

அழகு பலதிறப்பட்டது. முகத்தழகும், மேனியழகும் மாத்திரம் அழகு என்று சொல்வது பொருந்தாது. ஒரு பெரிய அறிவாளியினிடத்திலும், ஒழுக்கமாய் வாழ்பவனிடத்திலும், உயர்ந்த குணம் படைத்தவனிடத்திலும் நம்மை இழுப்பதும், அவனிடம் நாம் மதிப்பும் அன்பும் வைக்கும்படித் தூண்டுவதும், அவர்களுடைய குணத்தழகு, மன அழகு, செயலழகு எனப் பல பெயர்கள் பூண்டு இலங்குகின்ற அழகின் சக்தியேயாகும்.

வருஷா வருஷம் ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும்—இந்தியாவிலிருந்தும் என்று சொல்லிக் கொள்வதற்கில்லை. இந்தியாதான் ஒன்றே முக்காலணா தேசமாச்சே—கூட்டம் கூட்டமாக ஈஜிப்துக்கும், இத்தாலிக்கும், கிரீஸ் தேசத்துக்கும் எதற்காக மனிதர் வந்து குவிகின்றார்கள் என்று பார்த்தால், இந்த அழகு என்னும் சக்தியின் சாயலைக் காண்பதற்காகத்தான். கையில் நிறையப் பணமுமிருந்து, வீண் கவலைகளும் இல்லாவிட்டால், ஈஜிப்தில் நூற்றாண்டு நூற்றாண்டுகளாகத் தனியரசு செலுத்திவரும் பிரம்மாண்டமான பிரேத கோபுரங்களையும், இயற்கை யன்னையின் சவிகார தேசமான இத்தாலியையும், உறைந்து போன காவியங்கள் என்று புகழத் தகுந்த சிற்பங்களும் சிலைகளும் நிரம்பிய கிரீஸையும் பார்க்க வேண்டுமென யாருக்குத்தான் நினைவு கொடுக்காது?

எந்த ஓர் உருவமும், குறித்த ஒரு அளவுக்கு அதிகமாகவோ குறைவாகவோ உள்ள பாகங்களைப் பெறுமானல், அதற்கு இயற்கையாய் இருக்க வேண்டிய அழகை இழந்து விடுகிறது. மொண்ணை மூக்கு, கூன் முதுகு, குறுகிய மோவாய்க்கட்டை, சிறிய கண்கள், தடித்த உதடு, இவைகளெல்லாம் ஏன் அழகு இல்லை எனக் கூறுகிறோம் என்று பார்த்தோமாளுலும், இதே உண்மைதான் விளங்குகிறது. பெயர் பெற்ற இத்தாலிய சிற்பியும் சித்திர மெழுதுவோனுமான மைக்கேல் ஆஞ்சலோ என்பவன், "அழகு என்பது அதிகத்தைக் கழித்து விடுதலே," என்கிறான்.

எவ்வாறு கூர்மையான வேல் உடலில் சுலபமாகப் பாய்கிறதோ, எவ்வாறு சாதுர்யமாயும், சூக்ஷமமாயும் சொன்ன சொல் மனதில் நன்றாய்ப் பதிந்து விடுகிறதோ, எவ்வாறு ஒரு சிறு புல்லாங்குழலின் நாதம், கட்டை வண்டியின் கரடு முரடு சத்தத்தை விட வெகுதூரம் கேட்கிறதோ, அவ்வாறே ஒரு அழகிய உருவமும் நம் மனதை ஆழத்தில் சென்று தாக்குகிறது. அழகிய காட்சிகளைப் பார்க்க நாமெல்லோரும் ஏன் ஆசைப்படுகிறோம்? ஏன் ரவிவர்மாவின் படங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கின்றன? என்றால், இந்த அழகின் சக்திக்கு உட்பட நாமெல்லோரும் ஆசைப்படுகிறோம் என்பதே. அழகுமிக்க உருவம் ஒன்று தெருவில் சென்றதானல் நம் கண்கள் ஏன் தானகவே அப்பக்கம் திரும்புகின்றன என்றுகேட்டாலும், இதேதான்காரணம் என்றுசொல்லவேண்டும்.

பிரான்ஸ் தேசத்தில் 15-ம் நூற்றூண்டில் டலௌஸ் என்னுமூரில் இருந்து வந்த பாலேன் டி விகூரி (Pouline de Viguire) என்னும் பேரழகியை இன்னும் அத்தேசமக்கள் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவளது இணையற்ற எழிலில் சொக்கிப்போய் விட்ட அந்த ஊர் ஜனங்கள், அரசாங்க அதிகாரிகளின் உதவியை நாடி, வாரம் இரு முறையாவது அவள் தன் வீட்டு ஜன்னலருகில் வந்து நிற்க வேண்டுமென கட்டாயப் படுத்தி வைத்திருந்தார்கள். அவ்வாறு அவள் ஜன்னலருகில் வந்து நிற்கும் பொழுதெல்லாம் உயிருக்கே அபாயம் நேரிடும்படியாக அத்தனைக் கூட்டம் சேர்ந்து விடுமெனச் சொல்கிறார்கள். அதே மாதிரியாக சென்ற நூற்றூண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த டச்சஸ் ஆப்ஹ ஹாமில்டன் (Duchess of Hamilton) என்பவளும் அழகுக்கு மிகவும் பேர் போனவளாம். அவள் என்றைக்காவது நாடகம் போகப் போவதாகத் தெரிந்து விட்டால், சாயந்திரமிருந்தே நாடகக் கொட்டகையில் கும்பல் சேர ஆரம்பித்து விடுமெனச் சொல்கிறார்கள். ஒரு முறை அவள் ஏதோ ஒரு ஊருக்குச் செல்வதற்காகக் காலையில்

புறப்படப் போகிருள் என அறிந்து, கோச்சு வண்டியில் அவள் ஏறும்போது அவளைப் பார்ப்பதற்காக எழுநூறு, எண்ணூறு பேர்கள் இரவு முழுவதும் தெருவில் காத்துக் கொண்டிருந்தனராம்.

ஆனல் மேலே கூறியபடி அழகின் காலடியில் அடிமையாய்க் கிடக்க மனிதன் சுலபமாக இணங்குகிருனயினும், ஒருவன், மிக அவலக்ஷணமாயிருந்தும், பெரிய வாக்மியாகவோ, கவியாகவோ, வீரனுகவோ, சிரிய ஒழுக்க முள்ளவனுகவோ இருந்து விட்டானுல், அவன் மீது நாம் செலுத்தும் பிரியத்துக்கும் மதிப்புக்கும் அளவேயில்லை. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் ஆதென்ஸ் (Athens) நகரில் வாழ்ந்து வந்த பெயர்பெற்ற சப்பைமூக்குஞானியான சோக்ரதன் (Socrates) இன்னும் நமது மதிப்பையும், அன்பையும் இழந்துவிடவில்லை. ஆகர்ஷண சக்தியை சிந்தாந்தம்செய்து புகழ் அடைந்தவனை நியூட்டன் (Newton) என்னும் பௌதீக சாஸ்திரியைப்பற்றி, "இங்கிலாந்தில் எல்லோரைக் காட்டிலும் பெரியவனும், அறிவாளியாயுமிருக்கின்ற அவனைப் பார்த்தால் ஒன்றும்தெரியாத அப்பாவி போலத் தோன்றும்" என்று ஹூக் (Hooke) சொல்லி யிருக்கிருன். கருணைக்கடல் எனக் கூறத்தகுந்த சர். பிலிப் சிட்னி (Sir Philip Sidney) மிகவும் நீண்டதாயும், சிவந்ததாயும், பருவடுக்கள் நிரம்பியதாயுமுள்ள முகம் கொண்டவன் என்று ஆங்கிலக்கவி பேன் ஜான்ஸன் (Ben Johnson) கூறுகிருன்.



சோக்ரதன்

மனிதர்களின் வாழ்க்கையையும், விதியையும் தங்களுடைய ஆற்றலாலும் அறிவாலும் மாற்றியவர்களும், உருவு கொடுத்தவர்களும் கண்களுக்கு அழகான மனிதர்கள் அல்ல. ஆனல் அவர்கள் ஆன்ம அழகு உடையவர்களாய் இருந்திருக்கிருர்கள்.

விகடக் குறும்பு



✻ நல்ல மாடு! ✻

[இந்திய சட்ட சபையின் அக்கிராசனர் ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் வைஸராய்க்கு விருந்தளித்த போது செவிக்குணவும் சிறிது அளித்தார். அது சமயம் தம்மைத் தலைவராகப் பெற்ற இந்திய சட்டசபை அங்கத்தினர் சாதுக்களாக நடந்து கொள்வதைப் பற்றிப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.]

—ஆனந்தவிகடன், செப்டம்பர், 10உ

(''தேவிதாசன்'' எழுதுகிறார்.)

மேலே பிரசுரித்துள்ள படமும், அதனடியிலுள்ள வியாக்கியானமும் ''ஆனந்த விகடன்'' என்ற விகடப் பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது. இந்தப் படத்தில் காணப்படும் விஷமங்களைக் கண்டு தமிழ் நாட்டார் மிகுந்த மனக்கொதிப் படைந்திருப்பதாக, ''காந்தி'' ஆசிரியருக்கு வரும் கடிதங்களிலிருந்து அறிகிறேன். ஒரு விகடப் பத்திரிகையில் பிரசுரித்துள்ள விஷயத்தை துச்சமாய்

மதித்த தமிழர் தள்ளி யிருக்கலாம். ஆனல் விகடம் என்ற போர்வைக்குள் நுழைந்து விஷமம் செய்வதை ஒழிக்க வேண்டாமா என்று பலர் கேட்கிறார்கள். இது சரியான கேள்வியே. ஒருவர் உணர்ச்சியை பாதிக்காத எல்லை வரையில், விகடம் பேசவோ எழுதவோ செய்யலாம். அந்த எல்லையை மீறிவிட்டால் அது விகடமல்ல, கபட மென்றே சொல்ல வேண்டும்.

ஆனந்த விகடனின் ராஜ்யக் கொள்கையைப் பற்றி எனக்கு கவலையில்லை. அதற்கு ஒரு கொள்கை இருக்கிறதா என்பதே சந்தேகம். மகாத்மாவையோ, ஜவார்லாலையோ மற்ற தலைவர்களையோ கேலியாகவே எழுதிக் கொண்டிருக்கிறது. அவர்கள் கொள்கையை அது ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பது அவரவர் (வாசகர்) முடிவைப் பொறுத்தது. மகாத்மாவைப்பற்றியும், தேவதாஸ் காந்தியைப் பற்றியும், தமிழ் நாட்டு காங்கிரஸ்காரர்களைப் பற்றியும் இடையிடையே, நேரில்பேசியமாதிரி குறிப்புகள் காணப் படுகிறபடியால், ஆனந்த விகடன் காங்கிரஸ் பத்திரிகையா யிருக்கலாமோ என்று சிலர் சந்தேகிக்கிறார்கள். ஆனல் இதே ஆனந்த விகடன் ஆசிரியர், "இனி காங்கிரசை ஆதரிப்பதில்லை, சர்க்காரை எதிர்ப்பதில்லை, முன்னல் செய்ததை மன்னிக்க வேண்டும்" என்று 1930-ல் சர்க்காருக்கு மன்னிப்பு எழுதிக் கொடுத்து, அதற்காக உதகமண்டலத்திற்குப் போய் வந்தவர்தானே என்ற நினைப்பு வரும் போது, இந்த சந்தேகமும் போய்விடுகிறது. ஆகவே ஆனந்த விகடனின் கொள்கையை அறிய நாம் வீண் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

இனி, சர். ஷண்முகம் செட்டியார் இருக்கிறாரே அவருடைய ராஜ்யக்கொள்கை யென்ன? ஆனந்த விகடன் கொள்கையைப்போல அதுவும் ஒரு பரம மர்மமான விஷயம். ஆகவே அவர் கொள்கையைப்பற்றி நாம் ஆராயப் புகுவதும் வீண் வேலை. சர். ஷண்முகம் செட்டியாரின் கொள்கை எதுவா யிருந்தாலும் சரி; ஆனந்தவிகடன் கொள்கை எதுவாயிருந்தாலும் சரி; சர். ஷண்முகத்தைப்பற்றி அந்த விகடப் பத்திரிகை பிரசுரித்த படம் நேர்மையானதா இல்லையா என்பதே இப்பொழுதுள்ள கேள்வி.

சர். ஷண்முகம் செட்டியாரைப்பற்றி மேலே பிரசுரித்துள்ள படம் (1) மிகவும் விஷமத்தனமானது; (2) செட்டியாரை இழிவு செய்யும் நோக்கத்தோடு பிரசுரிக்கப்பட்டது; என்பது ஆட்சேபிப்பவர்களின் கட்சி. இதில் நியாய மிருக்கிறதா? இதை ஆராய்வோம்.

* * *

வைசிராய்க்கு நடத்திய ஒரு விருந்தில், சர். செட்டியார் பேசிய ஒரு விஷயத்தை காட்டுவதற்காகவே பிரஸ்தாப படம் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அச்சமயம் சர். செட்டியார் என்ன சொன்னார்? "இந்தியா சட்டசபை அங்கத்தினர் சாதுக்களாக நடந்து கொள்ளுவதைப்பற்றிப் பெரிதும் பாராட்டிப் பேசினர்" என்று விகடப் பத்திரிகை சொல்லுகிறது. மிகவும் சரி. ஆனல் இதற்காக அது (மேலே) பிரசுரித்திருக்கும் படம் பொருத்தமானதா?

"நல்ல மாடுங்கோ; ஐயாவைக் கேட்டு புண்ணாக்கு வாங்கித் தாரேன்." என்று சர். செட்டியார் சொல்லுவதாக படத்தில் எழுதப்பட்டிருக்கிறது. புண்ணாக்குக் கூடையில் "உத்தியோகம் பட்டம், பதவி" என்று எழுதப் பட்டிருக்கிறது. பக்கத்திலிருக்கும் குடத்தின் மீது "சர்க்கார் மசோதாக்கள்" என்று போடப்பட்டிருக்கிறது. இரண்டையும் சேர்த்துப் படித்தால், சர்க்கார் மசோதாக்களை எதிர்க்காமல் அங்கத்தினர்கள் "சாதுக்களாய்" நடந்து கொண்டால், பட்டம், பதவி, உத்தியோகம், முதலியவை வாங்கித் தருவதாக சர். செட்டியார் சொல்லுகிறமாதிரி தோன்றுகிறது. ஆனல் சர். செட்டியார் அப்படிச் சொன்னரா?

சென்ற ஆகஸ்ட் 28வ வைசிராய்க்கு நடத்திய விருந்தில் அவர் பேசியதை கீழே குறிப்பிடுகிறேன்:—

"நமது சட்ட சபைகள் மிகவும் பால்ய தசையில் இருந்த போதிலும் இவைகளின் நடவடிக்கைகளை கவனித்த பிறநாட்டு பார்லிமெண்ட்காரர்கள், நமது அங்கத்தினர்களை மிகவும் பாராட்டிப் பேசி யிருக்கிறர்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்ட் நடை முறைகளை நான் கவனித்திருக்கிறேன். நமது இந்திய சட்டசபை அதைவிட எவ்விதத்திலும் குறைந்ததல்ல. அந்த சபையில் இருப்பதைவிட நமது சபையில் அதிகமான மரியாதை காணப்படுவது ஒன்று தான் குறைவாயிருக்கலாம். பார்லிமென்ட் அங்கத்தினர்கள் இந்திய சட்டசபையை வந்து பார்த்தால் ஒரு வித்தியாசம் இருப்பதைக் காணலாம். அதாவது பார்லிமென்ட் சபையில், அங்கத்தினர் போடும் மிருகக் கூச்சலை, நமது சட்டசபையில் கேட்க முடியாது. நான் முதலில் பார்லிமென்ட் சபையை பார்க்கப் போயிருக்கும்போது, சில அங்கத்தினர்கள் மிருகங்களைப் போல ஊளையிடுவதைக் கேட்டு திகைத்துப் போனேன். ஒரு விஷயத்தை ஆதரிப்பதையோ எதிர்ப்பதையோ காட்டுவதற்காக இம்மாதிரி கூச்சல் போடுவது வழக்க மென்று பக்கத்தில் இருந்தவர் விளக்கிச் சொன்னர். டார்வின் தனது கொள்கைக்கு முதல்

ஞானத்தை இங்கிருந்து தான் பெற்றுரோ என்று நான் சந்தேகித்தேன். இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகிறேன். சட்ட சபைத் தலைவராயிருப்பதால் கொஞ்சம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இந்த வழியில் நான் பேசிக் கொண்டிருந்தால், இந்தியா சட்ட சபையில் உள்ளவர்களும் இந்த முறைகளை பின்பற்றி விட்டால் என்ன செய்வது? நமது சபை அங்கத்தினர்கள் தேவதைகளைப் போல சாந்தமாக நடந்து கொள்ளுவதால், அதைக் கெடுக்கும் வழியில் நான் எதுவும் சொல்லாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்."

* * *

இது தான் சர். செட்டியார் பேசிய பேச்சு. இதைப் படிக்கும் யாருக்கும், இந்தியா சட்டசபையைப் பற்றியும், அதற்குச் சிறப்புக் கொடுக்கும் அங்கத்தினர்களின் அமைதியான நடவடிக்கைகளைப் பற்றியும் சர். செட்டியார் எவ்வளவு புகழ்ந்து கூறியிருக்கிறுர் என்பது புலப்படும். சட்டசபை நடை முறைகளைப் பற்றியே சர். செட்டியார் பேசினுர் என்பதை சாதாரண அறிவுள்ளவன் கூட அறிந்து கொள்ளுவான். அவ்வளவு தெளிவாய் பேசியிருக்கிறுர். இவ்வளவு தெளிவாயிருந்தும், "பட்டம், பதவி, உத்தியோகம் வாங்கித்தாரேன். சர்க்கார் மசோதாக்களை நிறை வேற்றுங்கள்" என்று சர். செட்டியார் சொல்லியதைப் போல அந்த விகடப் பத்திரிகை எதற்காக படம் போட்டது? அது வெறும் விஷமத் தனத்தைத் தவிர வேறில்லை. செட்டியாரையும், சட்ட சபை அங்கத்தினர்களையும், சர்க்கார் தாசர்கள் என்று காட்டும் பொருட்டு விஷயத்தை திரித்து விஷமத்தனமாக இப்படம் போடப்பட்டிருக்கிறது என்பது தெளிவாய் தெரிகிறது. சர். செட்டியார் எந்தத் துறையில் அங்கத்தினர்களை "சாதுக்கள்" என்று சொன்னுர் என்பதை அறிந்தும, வேறு விதமாக திரித்துக் கூறுவது பரம அயோக்கியத் தனமாகும்.

சர். செட்டியாரின் ராஜீயக் கொள்கை எதுவாயிருந்த போதிலும், சட்டசபையின் கௌரவத்தைப்பற்றி அன்று அவர் பேசியது மிகவும் திரமான பேச்சு என்பதில் சந்தேகமில்லை. "பிரிட்டிஷ் பெருமை"யில் தலை கிறுங்கிய லார்ட் வில்லிங்டன் முன்பு, "பிரிட்டிஷ் பார்லிமென்டை விட இந்திய சட்ட சபையில் கௌரவம் அதிகம். பார்லிமென்டில் கேட்கும் ஊளைகளை இங்கே கேட்க முடியாது" என்று ஒருவர் சொல்ல வேண்டுமானுல், அவர் மிகுந்த தைரியசாலியாகவே இருக்க வேண்டும். அவ்விஷயத்தில் செட்டியாரின் தைரியத்தை நான் பாராட்டுகிறேன். உதகமண்டலத்திற்கு ஓடி மன்னிப்புக் கேட்ட விகடன் ஆசிரியருக்கு அந்த தைரியத்தின்

அளவைப்பற்றி யூகம் செய்துகூட அறிந்து கொள்ள முடியாது. இந்தப் பேர்வழி சர். செட்டியாரைப் பற்றி மேலேகண்ட படம் போடத் துணிந்தது வெட்கக்கேடு. முதலாவது விஷயமாகிய விஷமத்தனத்தை நிரூபித்து விட்டேன். இரண்டாவது விஷயமாகிய "இழிவு செய்தல்" என்பதைப்பற்றி இனி சொல்லுகிறேன்.

* * * *

செட்டியார் பேசியதை விளக்குவதற்காக செக்காடும் படம் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தே மிக இழிவானது. தொழில்களில் எந்தத் தொழிலும் இழிவென்பது எனது கருத்தல்ல. சகல தொழில்களுக்கும் சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்பதே நமது பேரவா. அந்த மனோபாவம் வரும்படி வேலை செய்து கொண்டிருக்கும் போது, எத்தொழிலையும் இழிவென்று சுட்டிக் காட்டும்படி பேசுவதோ, எழுதுவதோ தேசத்தை குட்டிச் சுவராக்கச் செய்யும் நாச வேலையாகும். சர். செட்டியார் குலத்தில் வாணியச் செட்டியார் என்பதற்காக செக்காட்டும் படம் போடுவது, தொழிலை இழிவு படுத்திக் காட்டுவதைத் தவிர வேறில்லை. குலத்தைக் காட்டுவது குற்றமா என்று கேட்கலாம். குலத்தை ஒப்புக் கொள்ள யாருக்கும் பயமிருக்காது. சர். ஷண்முகம் செட்டியார் தைரியமாக தமது குலப்பெயரை சிம்லா உச்சியிலிருந்து கூவுவதற்குக்கூட தைரியமுள்ளவர். ஆனால் குலத்தைக் காட்டுவதற்கும், குலத்தை குத்திக் காட்டுவதற்கும் யானைக்கும் பூனைக்குமுள்ள வித்தியாசமுண்டு. சர். செட்டியார் வேறு குலத்தவராயிருந்தால், செக்காட்டும் படத்திற்கு இவ்வளவு ஆட்சேபனை இருக்காது. படம் போட்டவர் இந்த குலப்பெயரை மனதில் வைத்துப் போடவில்லை என்று ஒரு ஆட்சேபனை சொல்லலாம். இந்த ஆட்சேபனை செல்லாது என்பதை இப்பொழுதே ரூபிக்கிறேன்.

கருத்திற்காக படம் போட்டிருந்தால், கருத்தை தழுவியதாய், கருத்திற்கு விரோதமில்லாததாய் இருக்கவேண்டும். படத்திற்காக கருத்தை தேடுவதாயிருந்தால், அநேக விஷயங்களில் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமலே இருக்கும். செக்காடும் படம் போட நினைத்து, அதற்காக கருத்தை தேடிப் பிடித்திருக்கிறார் விகடன் ஆசிரியர். இதற்குக் காரணங்களை கீழே கூறுகிறேன்.

1. "நல்ல மாடுங்க; ஐயாவைக் கேட்டு புண்ணுக்கு வாங்கித் தாரேன்" என்று செட்டியார் படத்தில் சொல்லுகிறார். சர். செட்டியார் ஆகஸ்ட் 28உ பேசிய பேச்சு இந்தப்பொருள்

உள்ளதல்ல என்பதை மேலே விளக்கிக் காட்டியிருக்கிறேன். வாணியச் செட்டியார்கள் சகஜமாக சொல்லும் வார்த்தைகளை இங்கே காட்டுவதற்காகவும், அதே சமயத்தில் செட்டியாரைப்பற்றி விஷமத்தனமாக ஜனங்களுக்கு எடுத்துக்காட்டுவதற்காகவுமே இந்த வார்த்தைகளை படத்தில் போட்டிருக்கவேண்டும்.

2. குடத்தின் பெயர் "சக்கார் மசோதாக்"களாம். குடத்தில் எண்ணெய்தான் வைப்பது வழக்கம். எண்ணெய் எடுப்பதுதான் செக்கின் வேலை. செக்கின் பெயர் இந்தியா சட்ட சபை. மசோதா என்பது, சட்டசபை முன்பு சட்டமாக்குவதற்காக சமர்ப்பிக்கும் விதிமுறைகள். சட்டசபையில் விவாதம் செய்து நிறைவேற்றிவிட்டால், அப்புறம் அதற்கு மசோதா என்ற பெயர் மாறி, சட்டம் என்ற பெயா ஏற்படுகிறது. குடத்தில் இருப்பது மசோதாக்களானால், அதை செக்கில்விட்டு ஆட்டவேண்டும். எண்ணெயை செக்கில்விட்டு ஆட்டுவதோ, அலலது சட்ட சபையில் நிறைவேறிய சட்டங்களை மசோதாக்கள் என்று சொல்லுவதோ வெறும் புத்தியில்லா பேச்சு. மூளை புரண்டவனைத் தவிர வேறு யாரும் செக்கில் கொண்டுபோய் எண்ணெயை விட நினைக்கமாட்டான். ஆகவே குடத்திற்கு "சர்க்கார் மசோதாக்கள்" என்று பெயரிட்டிருப்பது படத்திற்காக ஒரு பெயரை ஆசிரியர் தேடியிருக்கிறார் என்பதை தெளிவாக்குகிறது.

3. கூடையில் இருக்கும் புண்ணாக்கிற்கு "உத்தியோகம், பட்டம், பதவி" என்று பெயரிட்டிருக்கிறது. உத்தியோகம், பட்டம், பதவிகளை சட்டசபை உற்பத்தி செய்வதில்லை. எண்ணெய் குடத்திற்கு "சர்க்கார் மசோதாக்கள்" என்றபெயர் எவ்வளவு பொருத்தமற்றதோ, அவ்வளவு தூரம் புண்ணாக்கு கூடைக்கு "உத்தியோகம், பட்டம், பதவி" என்ற பெயர் கொடுத்ததும் பொருத்தமற்றது. மேலும் பட்டம் பதவிகள் புண்ணாக்குகளைப்போல இழிவானதல்ல. ஆகவே படத்திற்காக பெயரைத் தேடிப் பிடிக்கப் பட்டிருக்கிறதென்பது இதன் மூலமும் வெளியாகிறது.

* * * *

இவற்றிலிருந்து, பிரஸ்தாப படமும், அதில் காணப்படும் வார்த்தைகளும் விஷமத்தனமான நோக்கத்தோடும், சர். செட்டியாரை இழிவு செய்யும் கருத்தோடும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகிறது. ஜாதி ஒழியவேண்டும், சமதாமம் தோன்றவேண்டும் என்று பல தலைவர்கள் அரும்பாடு படுகிறார்கள். ஆனந்த விகடனே--காங்கிரஸ் பத்திரிகை என்று பிறர் நம்பும்படி

காட்டிக்கொள்ளும் ஆனந்த விகடனே—அந்த பாழாய்ப்போகிற ஜாதிக் குப்பையை கிளப்பிவிட்டுக்கொண்டிருக்கிறது. இம்மாதிரி பத்திரிகைகள் எழுதுகிற வரையில் நமது நாட்டிற்கு விமோசனம் ஏற்படுமா என்ற ஏக்கம் உண்டாகிறது. கள்ளங் கபடமில்லாமல் உண்மையாக உழைக்கும் தேசபக்தர்களுக்கு, இம்மாதிரி விஷமங்கள் மனம் வெடிக்கும்படி செய்கின்றன. துரதிர்ஷ்டம் பிடித்த தமிழ்நாடே, ஜாதிப்பித்து உன்னைவிட்டு எப்பொழுது தொலையப் போகிறது? நீ என்றாவது உருப்படுவாயா என்பதே எனக்கு சந்தேகமா யிருக்கிறது.

நல்லது. "ஆனந்த விகடன்" விகடம் என்ற போர்வைக்குள் புகுந்துகொண்டு, ஷை படத்தை விஷமத்திற்காகவே பிரசுரித்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். தமிழ் நாட்டில் சாதிப்பூசலை வளர்க்கக் காரணமாயிருக்கும் இத்தகைய செயல்களை நான் பலமாய்க் கண்டிக்கிறேன். ஆனால் கொஞ்சம் பொறுமையாயிருக்கும்படி நண்பர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனந்த விகடனுக்கு நாம் சாவகாசம் கொடுக்கவேண்டும். செய்த தவறை உணர்ந்து, ஷை படத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள அதற்கு அவகாசம் அளிப்போம். அப்படி அது செய்ய முன் வராவிட்டால், அப்புறம் நாம் என்ன செய்யவேண்டுமென்பதை பின்னால் தெரிவிக்கிறேன்.

இருவர்! தலைகளையும் இரண்டு பறவைகளையும் கண்டு பிடி.


என். சுப்பிரமணியம்
கும்பகோணம்



கண்டதும் காதல்

(ராஜீ)

அத்தியாயம் 5.



உள்ளே போனதும் டாக்டரின் குமாஸ்தாவான மணியைப் பார்த்தார்கள். அவன், "வா, ரகு. என்ன சமாசாரம்? எங்கே வந்தே?" என்றான். "ஒன்றுமில்லை மணி; சும்மாதான் வந்தேன். மாமா இருக்கிறாரா? அவரைப் பார்த்துவிட்டு போகலாமென்று வந்தேன்."

மணி:—மாமா இருக்கிறார். இப்பொழுது தான் எழுந்து காபி சாப்பிட்டார். பிறகு அவருடைய அறையில் என்னவோ வைத்தியப் பரீட்சை செய்து கொண்டிருக்கிறார். உன்னுடன் வந்திருக்கும் பெண் யார்?

ரகு:—இவள் தான் நான் இப்பொழுது கலியாணம் செய்து கொள்ளப் போகும் மாது. மாமாவுக்குக் காட்ட கூட்டி வந்தேன்.

மணி:—அப்படியா சமாச்சாரம். சற்று முன் தானே இம் மாது இங்கு வந்து உன் மாமாவைத் தேடி விட்டுப் போனாள்?

ரகு:—மணி, நீ சொல்வது சரிதான். நான் தான் அவளை இங்கு அனுப்பினேன்.

"ரகு! இரு, நான் மாமாவிடம் சொல்லிவிட்டு வருகிறேன்," என்று சொல்லிவிட்டு மணி உள்ளே சென்றார்.

இவர்கள் பேசிக் கொண்டு நின்ற அறையில் ஓர் பெரிய வட்ட மேஜை மீது அநேக தபால்கள் பிரிக்கப்பட்டு வைத்திருந்தன. ரகு

சகுந்தலாவைப் பார்த்து, "இதில் உன் கடிதம் எது என்று பார்." என்றான். சகுந்தலாவும் கடிதங்களைப் பார்த்தாள்.



ரகு:—கடிதம் அகப்பட்டதா?

சகுந்:—இல்லையே. அது தான் இவர் நாணுவிடம் கொடுத்துவிட்டு வந்தார் போலிருக்கிறது நாம் வரும் பொழுது.

ரகு:—அகப்படவில்லை என்றால் பயப்பட வேண்டாம். மாமா நான் கலியாணம் செய்து கொள்ளாததினால் என் மேல் கோபமாக இருக்கிறார். ஆகையால் நீ என் காதலி என்று சொல்லி விட்டால் மிகவும் சந்தோஷத்துடன் பேசிக் கொண்டிருப்பார். அப்பொழுது எப்படியாவது நான் கடிதத்தை எடுத்துக் கொண்டு வருகிறேன்.—என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது மணியும் திடீரென்று அங்கு வந்து விட்டார்.

மணி:—ரகு, என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்?

ரகு:—இப்பெண்ணுக்கு எல்லாவற்றையும் காண்பித்துக் கொண்டிருக்கிறேன், நீங்கள் எல்லா தபால்களையும் பார்த்தாய் விட்டதா?

மணி:-ஆம், அநேகமாக எல்லாம் முடித்துவிட்டேன். இன்று ஒரு விசித்திரமான கடிதம் வந்திருக்கிறது.

ரகு:—அதென்ன?

மணி:—சுந்தரமிட மிருந்து ஒரு கடிதம்.

ரகு:—சுந்தரத்திட மிருந்தா?

மணி:—ஆம். யாரோ குதிரைப் பந்தய கிளப் மானேஜருக்கு எழுதிய கடிதத்தை தவறுதலாக எஜமானருக்கு அனுப்பி இருக்கிறார்.

ரகு:—பலே. வெகு முக்கியமானதாயிருக்கு மென்று நினைக்கிறேன்.

மணி:—ஆம்

ரகு:—அதை மாமா பார்த்து விட்டாரா?

மணி:—அவர் மேஜை மீது வைத்திருக்கிறேன், பார்த்தாரோ பார்க்கவில்லையோ தெரியாது. நீங்கள் உள்ளே போகலாம்.

இதைக் கேட்டதும் இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள். டாக்டர் அந்தக் கடிதத்தைப் பார்த்திருந்தால் அது எப்படி திரும்ப கிடைக்கப் போகிறது என்ற நினைப்புடன் சகுந்தலாவும் ரகுநாதனும் பார்த்துக் கொண்டார்கள்.

அத்தியாயம் 6.

ரகுநாதன் சகுந்தலையுடன் டாக்டர் அறைக்குச் சென்றான். அங்கு ஓர் பெரிய அறையில் அநேக விதமான புஸ்தகங்களும், வைத்தியப் பரீட்சை செய்வதற்கு வேண்டிய சாமான்களும் இருந்தன. இவர்கள் போனதும் டாக்டர் ரகுநாதனைப் பார்த்து, "என்னப்பா ரகு, எங்கே வந்தாய்? நீ ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாயாமே? நிஜமாகவா? மணி சொன்னானே?

அதற்குள் சகுந்தலையும் அங்கு வந்தாள். டாக்டர் அவளைப் பார்த்து, "ஓஹோ! நிஜமாகத்தானா, இந்தப் பெண் தான் உனது காதலியோ? நீ கூட இவ்வளவு நாள் கழித்து இந்த புத்திசாலித்தனமான காரியத்தை செய்து விட்டாய்?" (சகுந்தலாவைப் பார்த்து) "உன்பேர் என்னம்மா?". "சகுந்தலாபாய்". "அப்படியா, ரகு, நிச்சயதார்த்தம் செய்து விட்டாயா?"

ரகு:—இல்லை மாமா. இப்பொழுது தான் சிநேகமானோம்.

டாக்டர்:—பலே! இப்பொழுதுதான் சிநேகமானோம் என்கிறாய். அதற்குள் இவளை கலியாணம் செய்து கொள்வதாய சொல்கிறாயே? இதை என்ன விளையாட்டு புத்தியாக இருக்கிறாய். உடனே போய் நிச்சயார்த்தம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டுவா. நான் இப்பொழுது ரொம்ப வேலையாக இருக்கிறேன். நாளைக்குப்

பேசிக்கொள்வோம். இதைக் கண்டதும் ரகு சகுந்தலாவுடன் வெளியில் வந்தான்.

சகுந்:—கடிதத்தை நீங்கள் பார்த்தீர்களா ?

ரகு:—மாமாவின் மேஜையின் மீதுதானிருக்கிறது. ஆனால் அதை எனக்கு எடுக்க முடியவில்லை. வேறு ஒரு வேலை செய்தேன்.

சகுந்:—கடிதத்தைப் பார்க்காம லிருப்பதற்கா ?

ரகு:—ஆம் நான் அவர் கண்ணாடியை எடுத்து ஒளித்து வைத்திருக்கிறேன்.

சகு:—கண்ணாடியையா ஒளித்து வைத்திருக்கிறீர்கள்? அதனால் என்ன பலன் ?

ரகு:—அப்படி வைத்தால்தான் நல்லது. கண்ணாடி இல்லாமல் படிக்க முடியாது. (சகுந்தலாவுக்கு மறுபடியும் கவலை. ஜன்னல் பக்கமாக நின்று கொண்டு வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள்.) சகுந்தலா ஏன் விசனிக்கிறாய் ?

சகுந்:—ஒன்றுமில்லை. உங்கள் மாமாவை நினைத்தால்தான் வருத்தமாக இருக்கிறது.

ரகு:—அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். இப்பொழுது நான் போய் அவரைப் பார்த்து கடிதத்தை எடுத்துவர முயற்சிக்கிறேன்.

சகுந்:—அது மட்டுமல்ல. அவர் நாமிருவரும் நிஜமாகவே விவாகம செய்ய நிச்சயித்திருப்பதாக அல்லவோ நினைத்துக்கொண்டிருக்கிறார்.

ரகு:—அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். இப்பொழுது நான் போய் அவரைப் பார்த்து கடிதத்தை எடுத்துவர முயற்சிக்கிறேன்.

சகுந்:—அது மட்டுமல்ல அவர் நாமிருவரும் நிஜமாகவே விவாகம செய்ய நிச்சயித்திருப்பதாக அல்லவோ நினைத்துக்கொண்டிருக்கிறார்.

ரகு "அதில் என்ன தவறு? நாம் அப்படி இல்லையா" என்று சொல்லி அவள் கையை எடுத்து மெதுவாக முத்த மிட்டான். "சகுந்தலா நான் உன்னை நிஜமாகவே காதலிக்கிறேன், நான் உன்னை நிஜமாகவே காதலிக்கிறேன். நான் உன்னை சற்று முன் தான் பார்த்தேன். இருந்த போதிலும் பல வருடங்கள் பழகிய

வர்கள் போல தோன்றுகிறது, நான் உன்னை மரத்தடியில் கண்டதும் காதல் கொண்டேன். சகுந்தலா நான் சொல்வது சரிதானே," என்றான்.



சகுந்தலா ரகுநாதனை கடைக்கண்ணால் நோக்கி புன்னகை புரிந்தாள். பதில் சொல்லவில்லை. கண்ணோடு கண் நோக்கினால் பேச்சு எதற்கு? ரகுநாதன் திடீரென்று அவளைக் கட்டி ஒரு "டானிக்" கொடுத்து விட்டு, "சகுந்தலா நான் மாமாவைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று சொல்லி அவளை அறையில் விட்டு சென்றான்.

அத்தியாயம் 7.

ரகுநாதன் தன் மாமாவின் அறைக்குச் சென்றான்.

டாக்டர்:—நான் இப்பொழுது வேலையாக இருக்கிறேன் என்று சொன்னேனே அதற்குள் ஏன் வந்தாய்?—என்றார்.

ரகு:—இப்பொழுது அவசரமாக 5000 ரூபாய் வேண்டும். சுந்தரம் என் கம்பெனியை தொலைக்கப் பார்க்கிறான். கொஞ்சம் பணமிருந்தால்தான் கம்பெனி அழியாமல் நிற்கும்.

டாக்டர்:—என்ன கேட்டாய்?

ரகு:—5000 ரூபாய்.

டாக்டர்:—5000 ரூபாயா? நீ ஒரு கலியாணம் செய்யப்போவதாய் முதலில் சொன்னாய். இப்பொழுது பணம் வேண்டுமென்கிறாய்.—அந்த கடிதத்தை என்ன செய்கிறாய்?

ரகு:—ஒன்றுமில்லை. சும்மாதான் பார்த்தேன்.

டாக்டர்:—அது முக்கியமான கடிதமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் அதை தொடமாட்டாய்? இது சுந்தரத்தினிடமிருந்து வந்திருக்கிறதாய் மணி சொன்னான். மணி, என் கண்ணாடி எங்கே? இங்கு காணோமே சீக்கிரம் தேடிப் பார்த்து கொண்டுவா.

மணி:—சார், மிஸ்டர் சுந்தரம் வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமாம்.

டாக்டர்:—சுந்தரமா? என்னைப் பார்க்கவா?

மணி:—ஆம் சுந்தரம்தான் உங்களைப்பார்க்கத்தான் வந்திருக்கிறார்.

டாக்டர்:—சரி, சிக்கிரம் வரச்சொல் கண்ணாடியையும் கொண்டு வா.

ரகு.—நானும் போய் வருகிறேன்.

சுந்தரம் உள்ளே பிரவேசித்து டாக்டரைப் பார்த்து:— என் கடிதம் கிடைத்ததா?

டாக்டர்:—கடிதமா எது?

சுந்தரம்:—நான் எழுதிய கடிதம்.

டாக்டர்:—அது இங்கு தானிருக்கிறது. அதை நான் இன்னம் பார்க்கவில்லை. வேலை சரியாக இருக்கிறது இனிமேல் தான் பார்க்க வேண்டும்.

சுந்தரம்:—என்ன ஆச்சரியமாக இருக்கிறது! நீங்கள் இன்னும் பார்க்க வில்லையா? அதை வாங்கி வருவதற்கு எங்கள் கம்பெனியிலிருந்து ஒரு பெண்ணை அனுப்பினேனே அவள் வரவில்லையா?

டாக்டர்:—மணி, மிஸ்டர் சுந்தரம் கம்பெனியிலிருந்து ஒரு பெண் வந்தாளா?

மணி:—ஆமாம், 9½ மணி இருக்கும். ஒரு பெண் மிஸ்டர் சுந்தரத்தினிடமிருந்து வந்ததாகச் சொன்னாள் அதற்கு நான் நீங்கள் ரொம்ப வேலையாக இருப்பதாக சொன்னேன். அவள் சரி என்று போய்விட்டாள். பிறகு சற்று நேரத்திற்கெல்லாம் அதே பெண் ரகுநாதரோடு வந்தாள். அவள் யார் என்று கேட்டதற்கு, ரகு இவளை தான் கலியாணம் செய்துகொள்ளப்போகும் மாது என்று சொன்னார்.

டாக்டர்:—என்ன வேடிக்கையாக இருக்கிறது. ரகு இப்பொழுது இவள்தான் தனது காதலி என்றும் நிச்சயதார்த்தம் ஆகவில்லை என்றும் சொன்னபொழுதே இதில் ஏதாவது தந்திரமிருக்க வேண்டுமென்று நினைத்தேன். இவ்வளவு வேலைகள் நடந்திருக்கிறதா? சரி. அந்தப்பெண்ணை இங்கு அழைத்துவா. அந்தக் கடிதத்தில் என்ன அவ்வளவு முக்கியமான சமாச்சாரம்?

சுந்தரம்:—அதை நீங்கள் இப்பொழுது படிக்கவேண்டாம். அதை நீங்கள் படிக்குமுன் வாங்கிவிட வேண்டுமென்றே நினைத்தேன். அதற்காகத்தான் அவளை அனுப்பினேன். அது வேறு ஒருவருக்கு எழுதிய கடிதம். அஜாக்கிரதையினால் உங்கள் பேர் இருக்கும் உறையில் போட்டு அனுப்பப்பட்டது

டாக்டர்:—"ஆனால் சரி. இதை நீங்கள் தான் வைத்துக் கொள்ளுங்கள். இனி ஜாக்கிரதையாக உறைகளில் போடுங்கள்

சுந்தரம் அதை வாங்கிக்கொண்டதும், அவர் முகம் கஷ்டங்களெல்லாம் நீங்கி விட்டதுபோல் பிரகாசமாகவிருந்தது.

அத்தியாயம் 8.

இவ்விதமிவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது சகுந்தலா வாடிய முகத்துடனும் பயத்துடன் அங்குவந்து நின்றாள். சுந்தரம் அவளைக்கண்டதும், "இவளைத்தான் நான் கடிதம் வாங்கிவர அனுப்பி யிருந்தேன்" என்றாள். சகுந்தலாவை நோக்கி, "உனக்கு பயமில்லையா? கடிதத்தை வாங்கிவராமல் நீ இங்கு என்ன செய்கிறாய்? உன்னை வேலையை விட்டு நீக்கிவிடுகிறேன்," என்று துடிக்க பேசினார்.

"அப்படி நீங்கள் ஒன்றும் செய்ய முடியாதே," என்று சொல்லிக்கொண்டே ரகுநாதன சகுந்தலாவின் பக்கம் வந்து நின்றான், "அப்படி நீங்கள் செயதால் நீங்களே அவமானத்திற்கு ஆளாவீர்கள்," என்றான் ரகுநாதன் "நீங்கள் பேசுவது என்ன அர்த்தம். உங்களுக்கு இக்கடிதத்தைப்பற்றி ஏதாவது தெரியுமா?" என்று சுந்தரம் சொன்னார்.

ரகு:—நன்றாகத் தெரியும். வேண்டுமானால் கடிதத்தைப் பாருங்கள்.

இதைக்கேட்டதும் சுந்தரம் அவசரமாகத் தன் சட்டைப்பையிலிருக்கும் கடிதத்தைப் பார்த்தார். ஒன்றுமில்லை. வெறும் வெள்ளைக் கடுதாசியாக இருந்தது.

சுந்தரம்:—இது என் கடிதமல்லவே!

ரகு:—நான் தான் சற்றுமுன் மாமாவிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இதைமாற்றி வைத்தேன். நீங்கள் இந்த ஆறுமாத காலமாக என் தொழிலுக்கு முட்டுக்கட்டை போட்டாற்போலிருந்தீர்களே. நான் இப்பொழுது இந்தக்கடிதத்தை மாமாவிடம் கொடுக்கட்டுமா? அவர் அதைப்பார்த்தால் உங்களை சும்மா விடமாட்டார்.

சுந்தரம்:—வேண்டாம். வேண்டாம்.

டாக்டர்:—இக்கடிதத்திலென்ன இவ்வளவு ரகசியம்?

சுந்தரம்:—ஒன்றுமில்லை, நாமெல்லாரும் இனி எவ்வளவு நாட்கள் இப்படி விரோதிகளாக இருப்பது. நான் வேடிக்கைக்காக அல்லவா சகுந்தலாவை கோபித்தேன். இவைகளை எல்லாம் நாம் பொருட்படுத்தக்கூடாது. நம் பழையபடி எல்லாரும் சிநேகிதர்களாக இருக்கவேண்டும். நீயும் என் என்னுடன் என் தொழிலில் சேர்ந்து பங்காளியாய் வேலை செய்யக்கூடாது? எங்களுக்கு உன்னைப்போல் ஒரு கெட்டிக்கார ஆள் வேண்டி இருக்கிறது.

ரகு:—அப்படி வழிக்கு வாருங்கள். நீங்கள் சொல்லுகிறது எல்லாம் சரிதான். நான் உங்களுடன் பங்கு சேருகிறேன். விவரங்களை பிறகு யோஜிக்கலாம்.

டாக்டர்:—மிஸ்டர் சுந்தரம், இனி நாம் எல்லாரும் ஒற்றுமையாக இருப்பது நல்லது. உங்களிடமிருக்கும் சகுந்தலாவும், நமது ரகுநாதனும் காதலித்திருப்பதால் இனி நாம் விரோதமாக இருப்பது அழகல்ல. அவர்களுக்காகவாவது நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். உமது விருப்பம் எப்படி?

சுந்தரம்:—எனக்கு அதில் மிகவும் சந்தோஷம்.

டாக்டர்:—ரகுநாதா! உன் விருப்பப்படி நீ சகுந்தலாவை மணந்துகொள். உங்களிரண்டுபேருக்கும் சம்மதந்தானு?

சுந்தரம்:—சம்மதம்.

டாக்டர்:—நல்லது, அடுத்தவாரத்திற்குள் உங்களிருவருக்கும் மணம் செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

டாக்டர் சொல்லியபடி அடுத்தவாரம் வியாழக்கிழமை யன்று நமது ரகுநாதனுக்கும், சகுந்தலாவுக்கும் கலியாணம் நடந்தது. அவர்கள் இப்பொழுது சந்தோஷமாக இல்லறம் நடத்தி வருவதாக எனக்கு கடிதம் வந்திருக்கிறது.

மனித இயந்திரம்


காலையில் எழுந்திரு

காலையில் 5½ மணிக்கோ 6 மணிக்கோ எழுந்திருப்பது சிலருக்கு மலைபோல தோன்றுகிறது. அதிகாலையில் எழுந்திருப்பவர்களைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். அந்த இனிமையான காலை நித்திரையையோ, தூங்காமல் தூங்கும் அரைகுறை நித்திரையின் சுகத்தையோ விட்டு, எப்படி எழுந்திருப்பது என்று கலங்குகிறார்கள். இதனால் பலர் காலையில் சூரியனைக் கண்ட பின்பே எழுந்திருக்கிறார்கள். இம்மாதிரியான காலைத்தூக்கம் சுருசுருப்பை கெடுத்துவிடுகிறது. ஜாக்கிராவஸ்தையில் ஈடுபட்டு இன்பம் அநுபவிப்பது மன உறுதியை தொலைத்துவிடுகிறது. மனதை அடக்கி ஆளவேண்டுமானால், இந்த அதிகாலை நித்திரையை துறக்கவேண்டும்.

அதிகாலையில் எழுந்திருப்பது பெரிய கஷ்டமாயிற்றே என்று சிலர் சொல்லலாம். அவர்கள் யூகஞ்செய்வதைப்போல அவ்வளவு கஷ்டமல்ல. அநுமார் தன்னுடைய பலத்தை யறியாமல் இலங்கை போகமுடியாமல் திகைத்து நின்றார். அவர் பலத்தை ஞாபகமூட்டியவுடன் ஒரே பாய்ச்சலாக இலங்கைக்குப் பாய்ந்தார். அதைப் போல உங்கள் பலம் உங்களுக்குத் தெரியவில்லை. அதிகாலையில் எழுந்திருக்க வேண்டுமென்று நீங்கள் உறுதிகொண்டால் போதும்

அந்த உறுதி, நீங்கள் மனோராஜ்யம் செய்யும் மற்ற கஷ்டங்களை சூரியனைக்கண்ட பனிபோல ஓடச்செய்யும். இரவு தூங்கும் முன்பு "நான் அதிகாலையில் எழுதிருக்கப் போகிறேன்" என்று திடம் செய்துகொண்டு தூங்குங்கள். உங்கள் உள் அறிவு காலையில் உங்களை எழுப்பிவிடும்.

அறைகுறை உறுதி கொண்டால் பாதிக்கிணறு தாண்டிய கதையாகவே முடியும். பூர்ண உறுதி கொள்ளுங்கள். பூர்ண மனதோடு தீர்மானஞ் செய்யுங்கள். உங்கள் தீர்மானத்தை எதுவும் அசைக்கமுடியாதென்று உறுதியாய் நம்புங்கள். அப்புறம் உங்கள் இஷ்டம் நிறைவேறுவதில் என்ன தடை யிருக்கப்போகிறது? நீங்கள் புதிய மனிதர்களாய் விளங்குவீர்கள்.



[மாமரத்தின் நிழலில் பாடம் நடக்கிறது.]

சாந்திநிகேதனம்

(பி. எஸ். சங்கரன்.)

"வெகு சிக்கிரம் வந்துவிட்டீர்களே!" என்று அமிழ்தினுமினிய தமிழ்மொழியில் வரவேற்றார் 'மிஸ்டர் ஏரியன்'. மிஸ்டர் ஏரியனாவது, அமிழ்தினுமினிய தமிழாவது! என்று ஆச்சரியப்படுகிறீர்களோ? ஆச்சர்யமொன்றுமில்லை. மிஸ்டர் ஏரியன், திரு அரியநாயகம் என்று நாமம் பெற்ற யாழ்ப்பாணத்துத் தமிழர். ஒன்றரை மாதமாக தமிழ்மொழியே காதில் விழாமல், வங்காளியும் ஹிந்தியும் கலந்த ஒரு தமிழ்பாஷையைக் கேட்டுக் கேட்டு, சென்னை கடற்கரை ரேடியோ சங்கீதத்தைக் கேட்டுக் கெட்டுப்போனது போன்ற காதுகளில், எதிர்பாராத வகையில் உலகிலேயே ஒரு புனிதமான இடமாகிய சாந்திநிகேதனத்தில் தமிழ்மொழி விழுமாகில் அது அமிழ்தினுமினியதா, இல்லையா?

ஒருவிதத்தில் மட்டும் ஆச்சர்யமாக இருந்தது. சாந்திநிகேதனத்தில் தங்குவதற்காக அங்குள்ள ஒரு தமிழருக்கு அறிமுகக் கடிதத்துடன் சென்றேன். கடிதம் கொடுத்தவர் 'மிஸ்டர் ஏரியன்' என்று விலாசமெழுதிக் கொடுத்திருந்தார். தென்னாட்டைச் சேர்ந்தவர், அதிலும் ஏரியன் என்று ஆங்கிலபாவமாகப் பெயர் வைத்துக்கொண்டிருப்பவர், தமிழில் பேசுவதை அகௌரவமாகவே நினைப்பார் என்று நான் நினைத்தேன். அதற்கு மாறாக சுத்தத் தமிழில் வரவேற்றது ஆச்சர்யந்தானே!

திரு. அரியநாயகம் சாந்திநிகேதனம் உயர்தரக் கல்லூரிக்குத் தலைமை உபாத்தியாயர். சிறுமைப்பித்து (Inferiority Complex)

பிடித்தலையும் தமிழ்நாட்டைவிட்டு சுயமரியாதை மணம் எங்கும் வீசும் வங்காளத்தில் பல வருஷங்கள் வசித்ததின் பயனாகத் தாய் பாஷையில் பேசுவது அகௌரவமில்லையென்று உணர்ந்தவர். இது மட்டுமல்ல. அவரைப்பற்றி அதிகம் சொல்லவேண்டும். சாந்தி நிகேதனத்தைப் பற்றிச் சிறிது சொல்லிவிட்டுப் பின்னால் சொல்லுகிறேன்.

அயல்நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வரும் யாத்ரீகர்களுக்காகப் பிரசுரிக்கப்படும் 'வழிகாட்டி' புஸ்தகத்தில் குறிப்பிடப் படாத உலகப்பிரசித்திபெற்ற இரண்டு இடங்கள் இந்தியாவிலிருக்கின்றன. ஒன்று சபர்மதி நதிக் கரையிலிருக்கும்-இருந்த-சத்யாக்ரஹ ஆசிரமம்; மற்றொன்று கவி ரவீந்திரநாத் தாகூருடைய சாந்தி நிகேதனம்.

சபர்மதியாசிரமம் பிறந்து, வளர்ந்து பிரக்யாதி பெற்று, ஆக்கியோனாலேயே துறக்கப்பட்டும் விட்டது. ஆசிரமம் இருந்த இடம் ஒரு புனித ஸ்தலமாக ஆகிவிட்டதெனலாம். புத்தர் அருள்பெற்ற போதி விருக்ஷமிருந்த இடத்தை இன்றளவும் போற்றுகின்றனர். ராமன் வதிந்த பஞ்சவடியை ஹிந்துக்கள் யாத்திரை ஸ்தலமாக்கிவிட்டனர். சபர்மதியாசிரமம் இருந்த இடம், ஜாதி மத தேச பேதமின்றி எல்லோராலும் எக்காலும் மறக்கமுடியாத ஒரு இடமாகிவிட்டது.

வாழ்க்கைக்காக ஒருவரையொருவர் கொலை செய்யுமளவு போட்டியிடுகிற பட்டணங்களுக்கு வெகுதூரத்திற் கப்பால், முனிவர் நாடும் மோன நிலையை எளிதில் கொடுக்கவல்ல சாந்திநிறைந்த கானகத்தின் மத்தியில் சாந்திநிகேதனம் அமைக்கப்பட்டிருக்கிறது. வானையளாவும் மரங்கள், இனிய தடாகங்கள், எஙகும் பச்சை நிறம். பச்சை வானில் நட்சத்திரங்கள்போல் வெள்ளைநிறக் குடில்கள். கிச், கிச்சென்னும் பறவையொலி. தாய் நினைப்பும் மறந்து துள்ளிக்குதித்து விளையாடும் பாலகர் மொழி. தன்னிச்சை கொண்டு திரியும் பசுக்கள். இதுதான் சாந்திநிகேதனம்.

"காணி நிலம் வேண்டும்" என்று கேட்டார் பாரதியார். கடுகு நிலம்கொடுக்காமல் சாகடித்தான் தமிழன். ஒரு காணியல்ல, நூறு காணி நிலத்தில் தனது கனவை நினைவாக்கி இன்புறுகிறார் கவி தாகூர். சாந்திநிகேதனமும் தாகூரும் என் மனதில் பாரதியாரை நினைப்பூட்டின. ஆங்கிலப் பயிற்சியைப் பற்றியெழுதிய பாட்டில் பாரதியார்,

"ஏதிலர் தரும் கல்விப் படுகுழி
எறியுய்தற்கரிய கொடும்பவம்,
தீதியன்ற மயக்கமும் ஐயமும்
செய்கையாவினு மேய சிரத்தையும்
வாதும், பொய்மையு மென்ற விலங்கி
வாழும் வெங்குகை" [னம்

என்று நமது கலாசாலைகளை வர்ணிக்கிறார். இந்த வெங்குகையைக் கவிதை சோலையாக மாற்றி, வெங்குகையில் 'பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்களை'



கவி ரவீந்தரர்

"முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கு மிந்நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும்"

தேர்ந்த சிறந்த தேசபக்தர்களாகப் பயிற்சி செய்யவேண்டுமென்று கனவு கண்டார் பாரதியார். தமிழன் மனம், அடிமையையும் முப்பத்தைந்து ரூபாய் 'அரண்மனைச் சேவக'த்தையுமே நாடியது. பாரதியார் தோற்றார்.

"தீய நாச உறக்கத்தில் வீழ்ந்தவரை
வான் ஒளிக்கு மகாஅர் இயாம்"

என்று மருள் நீக்கும் கல்வியைக் கற்பிக்கவேண்டுமென்று கனவு கண்டார் ரவீந்த்ரர். வெற்றியும் பெற்றார்.

பதவி பெறுவதற்காகவன்றிக் கல்வியின்பத்திற்காகவே கல்வி கற்கவேண்டுமென்கிறார் 'ரஸ்கின்' என்ற ஓர் பேரறிஞர். நமது நாட்டில் போதிக்கப்படும் கல்விக்கும் இந்த நோக்கத்திற்கும் எவ்வளவு தூரம் பாருங்கள்! "இவ்வளவு பணத்தைக் கொட்டிவிட்டு வேலையில்லாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறாயே!" என்று கேட்கும் நம்மவருக்குக் கல்வியில் இன்பம் உண்டு என்ற எண்ணம்கூட உண்டாகாது. மேலும் பரீக்ஷை என்ற அரக்கனுக்கு நிவேதனம் பண்ணுவதற்காக தேகப்பயிற்சி சிறிதுமின்றி இராப்பகலாக மூளைக்குமட்டும் சாரமற்ற தன்மையில் வேலை கொடுத்து நம் மாணவர்கள், வலிமையற்ற தோளும், ஒடுங்கிய மார்பும், பொறியிழந்த விழிகளும், வாழ்க்கையை எவ்வாறு கழிப்பதென்று கிலிபிடித்த நெஞ்சமும், கீழ்மைச் சேவகம் தேடும் மோகமும் கொண்டவர்களாய் கலாசாலைகளினின்றும் வெளி வருகிறார்கள். இதை மாற்றி உறுதி

கொண்ட நெஞ்சு, கனிபடைத்தமொழி, தெளிவுபெற்ற மதி, சிறுமையை எள்ளி எளிமையைக் கண்டிரங்கும் ஹிருதயம், ஏறு போன்ற நடை இவற்றினைப் படைத்த மாணவர்களை பாரதமாதாவிற்கு நல்கவேண்டுமென்று நிர்மாணிக்கப்பட்ட ஸ்தாபனம் சாந்திநிகேதனம்.

இலந்தை மரநிழலிலே பெரிய கலாசாலைகள் வளர்ந்தோங்கினவென்று சங்கநூல்கள் அறிவிக்கின்றன. அது உண்மையோ என்னவோ எனக்குத் தெரியாது. சாந்திநிகேதனத்தில் மாமரங்களின் நிழலில் ஒரு கலாசாலை ஓங்கி வளர்கிறதென்பதை நேரில் கண்டேன். ஆசிரியன் வீட்டிலேயே பேதமின்றி வளர்ந்து நம் மாணவர்கள் ஆதிகாலத்தில் கல்வி பயின்றார்களென்று சரித்திரம் கூறுகிறது. அதைப்பற்றியும் எனக்கு உண்மை தெரியாது. சாந்திநிகேதனத்தில் சதாகாலமும் ஆசானின் கண்காணிப்பிலேயே பிள்ளைகள் வளர்கிறார்கள். 'வெர்ட்ஸ்வொர்த்' என்ற ஆங்கிலக்கவி 'லூஸி' என்ற பெண்ணை இயற்கையே வளர்த்ததாக வருணிக்கிறார். இங்கு மாணவர்கள் இயற்கையோடியைந்து வளர்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஸ்தாபனத்தில் கல்விபயின்றால் உலகவாழ்வு நடத்துவதற்கு ஏதுவாக இருக்குமா என்ற சந்தேகம் சிலருக்குண்டாகலாம். சாந்திநிகேதனம் நான்கு தனித்தனி இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று நடுத்தரக் கல்விக்காகப் பாடுபடுகிறது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒரு அளவு வரை கட்டாயம் படித்தால்தான் பகுத்தறிவை நன்கு உபயோகப்படுத்த முடியுமாதலின் இவ்விலாகா ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக இலக்கியக் கலை வளர்ச்சிக்காகக் கல்கத்தா சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்ட கல்லூரி ஒன்றிருக்கிறது. சர்வகலாசாலைப் பட்டங்களில் மோகமுள்ளவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கைத்தொழில் முறைகளைக் கற்பிப்பதற்காகவும், சரித்திர இலக்கிய ஆராய்ச்சிக்காகவும் ஒரு இலாகா. ஓவியம் பயில்வதற்காக 'கலாபவன்' என்ற ஒரு பிரிவு. ஆகவே உலகவாழ்வை எப்படிக் கழிக்கவேண்டுமென்று விரும்புகிறோமோ அதற்குத் தக்கவாறெல்லாம் பலதுறைக் கல்விகளும் பயில்விக்கப்படுகின்றன. துரதிர்ஷ்ட வசமாக நான் சென்றிருந்த காலத்தில் காளிபூஜைக்காக விடுமுறை. கல்வி யளிக்கும் முறையை நேரில் கண்டனுபவிக்கும் பாக்யம் எனக்குக் கிட்டவில்லை. இருந்தாலும் கன்றைக்கொண்டு தாயை அறியலாமல்லவா? தமிழ்நாட்டில் நடந்த வேதாரண்யம் உப்பு சத்யாக்ரஹத்தில் சிறை சென்று பின்னர் தீண்டாமை விலக்கு வேலையில் ஈடுபட்டுழைத்து மறுபடியும்

தற்பொழுது காராக்ரஹம் சென்றிருக்கும் திரு. இராமச்சந்திரன் சாந்திநிகேதனத்தினின்றும் பூத்த மலர். மாதிரிக்கு ஒன்றுமட்டும் குறிப்பிட்டேன்.


இயற்கை வனப்புடன் செயற்கை வனப்பு போட்டிபோட முடியுமா? முடியுமோ முடியாதோ சாந்திநிகேதனத்தில் கலாபவனில் இயற்கைவனப்பை முறியடிக்க ஒரு பெருமுயற்சி நடக்கிறது. 'கலாபவன்' என்பது சாந்திநிகேதனத்தில் ஓவியக் கலைவளர்ச்சிக்காகப் பாடு படும் இலாகா. "ஆர்ட்ஸ் காலெஜ்" என்று சொன்னால் உங்களுக்குச் சட்டென்று புரியும், இல்லையா? நமது தமிழ் நாட்டில் தான் ஒரு சங்கத்திற்கோ ஸ்தாபனத்திற்கோ தமிழில் பெயர் வைத்தால் "பட்டிக்காட்டான் சமாச்சாரம்" என்பீர்கள். வங்காளத்தில் சுதேச ஸ்தாபனத்திற்கு ஆங்கிலத்தில் பெயர் வைத்தால், ஏதோ அடிமைகள் கூடி எஜமானை மூக ஸ்துதி செய்து ஏமாற்றும் இடம் என்பார்கள். இது இடை நழுவல் (digression). விஷயத்திற்குச் செல்வோம்.

'கலாபவன்' கட்டிடச் சுவர்களிலெல்லாம் நந்தலால் போஸால் வரைந்துள்ள, கண்ணைக் கவரும் சித்திரங்கள் நிறைந்திருக்கின்றன. சித்திரங்களின் நுணுக்கமான அழகுகளை வர்ணிக்கும் திறமை எனக்குக் கிடையாது. ஆனால் சாந்திநிகேதனத்தின் இயற்கை வனப்பில் நான் கொண்டிருந்த மோகத்தில் பாதிக்குமேல் நந்தலால் போஸின் படங்கள் கவர்ந்து விட்டன. உயர்ந்த சங்கீதத்தைக் கேட்ட வெகுநேரங்களுக்குப் பின் வரை அச்சங்கீதத்தின் நாதம் செவிகளில் ஊசலாடிக் கொண்டிருக்குமல்லவா? அதே போல் இன்னமும் அப்படங்கள் என் கண்முன் காட்சி தருகின்றன.

ஒன்றரை மைல் தூரத்தில் விவசாய சாலையும் கோகுலமும் இருக்கின்ற ஸ்ரீநிகேதன் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. பக்கத்திலுள்ள கிராமத்தாருக்கு இலவசமாக விவசாயக் கல்வியும் நூதன விவசாய முறைகளும் கற்பிக்கப் படுகின்றன. சுற்றிலுமுள்ள கிராமங்களின் சுகாதாரம் பொருளாதாரம் முதலியவைகள் கவனிக்கப் படுகின்றன.

எனவே, சாந்திநிகேதனம் அனுபவம் அத்வைதம் இரண்டையும் ஒருங்கே போதிக்கும் ஒரு தனிச் சர்வ கலாசாலை. மூளை, ஹிருதயம் என்ற இரண்டு குழந்தைகளையும் பக்ஷபாத மின்றி வளர்க்கும் தாய்.

திரு அரியநாயகத்தைப் பற்றிச் சிறிது கூருமல் இக்கட்டுரை சோபிக்காது. யாழ்ப்பாணத்தில் ஒரு உயர் குடும்பத்தில் பிறந்து B. A. பட்டம் பெற்று இங்கிலாந்து சென்று படித்து B. D. பட்டமும் பெற்று தற்பொழுது இந்தியாவிற்கு விளம்பரமின்றி சேவை செய்கிறவர். சாந்திநிகேதனத்தில் ஆசிரியராக இருந்து தமிழருக்கு ஒரு பெருமை கொடுத்து வருகிருர். வங்காளப் பெண்மணியை மணந்திருக்கிருர். ஜாதிக்கோட்டையைத் தகர்ப்பதற்கு முடியாமல் நாம் தத்தளித்துக் கொண்டிருக்கையில் வேறு மதத்து, வேறு மாகாணத்து மாதை மணந்த ஒரு பெரியாரைக் கண்டதும் என் உள்ளங் குளிர்ந்தது. இதற்காக வெல்லாங்கூட நான் அவரிடம் அதிக மதிப்புக் கொள்ளவில்லை. அவருக்குத் தன் தாய் பாஷை அபிவிருத்தியில் இருக்கும் ஆர்வத்தைப் பார்த்ததுமே என் ஆனந்தம் ஒரு நிலை கொள்ளவில்லை. இதுவரை "மேஞ்சஸ்டர்



[சாந்திநிகேதனத்தில் பெண்கள் தேகப்பயிறசி செய்யும் இடம்.]

கார்டியன்", "வொர்ல்டு டுமாரோ" முதலிய பிரபல ஆங்கில பத்திரிகைகளுக்கு வியாசமெழுதிக் கொண்டிருந்த இவர் இப்பொழுது தமிழில் எழுத முன் வந்திருக்கிருர். வங்காளி பாஷையிலிருந்து அநேகம் அரிய நூல்களை தமிழில் மொழி பெயர்த்து வருகிருர். அவர் மனைவிக்கு ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம், வங்காளம் முதலிய பாஷைகளில் நல்ல பாண்டித்யம். "தமிழில் பாண்டித்ய மில்லாமல் என் கல்வி முற்றுப் பெற்றதாக நான் கருத முடியாது" என்

ருர் அந்த அம்மாள். தமிழ் மொழியின் பெருமையை நமது வக்கில்களும், உத்யோகஸ்தர்களும், மாணவர்களும மற்றும் கொஞ்சம் ஆங்கிலம் படித்தவர்களும் உணராமல் அலக்ஷியமாய் இருக்கும் பொழுது ஒரு வங்காள மாது உணர்ந்து படிக்கிருர் என்றுல்?

நாங்கள் மூவரும் உணவருந்த உட்கார்ந்தோம். பேச்சு. பேச்சென்றுல் எப்படிப்பட்ட பேச்சு? நம்மவர்கள், அதிலும் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள், கல்வி யறிவுள்ளவர்கள் என்று கூறிக்கொள்ளும் பிராமணர்கள், சாப்பிட உட்கார்ந்தால் பேசும் பேச்சு என்ன தெரியுமா? சவண்டிகரணமும் மாஸியமும் ஒரே தினத்தில் வந்தால் எதை முதலில் செய்வது? ஆச்சார்யார் மகளுக்கும் தேவதாஸ் காந்திக்கும் பிறக்கும் குழந்தையின் ஜாதி யென்ன? நாய் இடது காலைத் தூக்கிக்கொண்டு வீட்டு வாசலில் ஜலஸ்பரிசத்திற்குப் போனுல் என்ன பிராயச்சித்தம்? என்பது போன்ற அருமையான விஷயங்கள் விவாதிக்கப்படும். அல்லது உயர்தாக் கல்வி கற்றதற்காக ஒரு பெண்ணைப்பற்றி வீண் வம்பளப்பார்கள். நாங்கள் சாப்பிடும் பொழுதும், சாப்பிட்டபிறகு நான் புறப்படும் வரையிலும் பேசிக்கொண்டிருந்த விஷயங்கள் என்னை ஒருபடி மேலானவனுக ஆக்கிவிட்டன.

"எங்கள் தமிழ்நாட்டில் இங்கிலீஷ் மோகம் போகவில்லை. ஆங்கிலம் படித்தவர்கள் தமிழில் பேசுவதையும் எழுதுவதையும் அகௌரவமாக நினைக்கிருர்கள்" என்றேன்.

"எங்கள் வங்காளத்திலும் இதே நிலைதான் இருபது வருஷங்களுக்குமுன் வரை யிருந்தது. இப்பொழுது மாறிவிட்டது" என்ருர் ஸ்ரீமதி அரியநாயகம்.

"ஆங்கிலம் நன்கு கற்றிருந்தாலும் இரண்டு வங்காளிகள் சந்தித்தால் தங்கள் தாய்பாஷையிலேயே கடிதம் எழுதிக் கொள்கிருர்கள். சென்னைக்குத் தெற்கே ஆங்கிலம் தெரியாதவர்கள்கூட தெரிந்ததாக பாவனை செய்வதில் கௌரவம் கொள்கிருர்கள்" என்றேன். பாரதியாரின் கவிநயம், ரவீந்திரநாதரின் பெருமை, மகாத்மா ஆசிரமத்தைக் கலைத்ததின் தத்துவம் முதலிய பெரிய விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். பசிக்கு இரை யெடுப்பதுபோல் அவசர அவசரமாக கிரஹித்துக்கொண்டேன். ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் சாவகாசமாக அசை போடுவதானுல் "காந்தி" மலருக்கு அனேகம் கட்டுரைகள் எழுதலாம்.

அரசியல் சூழ்ச்சி

மற்றொருவனுடைய ராஜ்யத்தை எவ்வாறு ஆக்கிரமிப்பது: ராஜ்யம் தன் கையைவிட்டுப் போகாமல் எப்படிக் காப்பது என்பதைப்பற்றிய முறைகள் ''சாணக்கிய நீதி''யில் காணப்படுகின்றன.

இதுபோலவே இத்தாலி தேசத்து மாக்கியவெலி என்பவர் தான் எழுதிய ''பிரின்ஸ்'' (இளவரசன்) என்ற புத்தகத்தில் சில சூழ்ச்சிகளை உபதேசித்திருக்கிறார்.

அதிலிருந்து ஒரு சிறிய பாகத்தை இங்கு மொழி பெயர்த்திருக்கிறோம்.

> ''ஒரு அரசன் புதிய நாட்டைப்பிடித்து தன்னிடம் ஏற்கனவே இருந்த நாடுகளுடன் சேர்த்துக்கொண்டால், குடிகளிடமுள்ள ஆயுதங்களை முதலில் பறிமுதல் செய்துவிடவேண்டும். தம்முடன் சேர்ந்து உதவி செய்தவர்களுடைய ஆயுதத்தையும் சமய சந்தர்ப்பம் பார்த்து உபயோகமற்றதாகவும், மழுங்கலாகவும் ஆக்கிவிடவேண்டும். புதிதாய் ஸ்தாபித்த ராஜ்யத்தின் ஆயுதங்கள் தன்னுடைய சொந்த நாட்டு படை வீரரிடமே இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.
>
> ''அடிக்கும்போது சிறிது சிறிதாகத் துன்புறுத்தக் கூடாது; திடீரென்று ஒரே அடியாக அடிக்கவேண்டும். அப்படிச் செய்தால் வெறுப்பு நெடுநாள் நீடித்திருக்காது. அதிகமாக மனதை உறுத்தாது. நன்மை செய்வதாயின் சிறிது சிறிதாகத்தான் கொடுக்கவேண்டும். அப்படியானால்தான் முழுப் பயனையும் எதிர்பார்க்க முடியும்.

''மாக்கியவலியனிஸம்'' என்ற வார்த்தைக்கு அகராதியில் பின் வருமாறு பொருள் கூறப்பட்டிருக்கிறது:—அரசியல் சூழ்ச்சி; நியாயத்தைப் புறக்கணித்து எவ்வுபாயத்தாலும் எண்ணிய பொருளை அடையும் முறை.

:: சங்கீதம் ::

ஸ்ரீமான் நாயனப்பிள்ளை அவர்களின் ஸங்கீதக்கச்சேரி

(இன்னிசைக் கிறுக்கன்.)

சென்ற மாதம் 8-தேதி ஞாயிற்றுக்கிழமை கோகலே ஹாலில் ஸ்ரீமான் காஞ்சீபுரம் சுப்ரமணிய பிள்ளை அவர்கள் ஸங்கீதக்கச்சேரி நடைபெற்றது. அவருக்கு நாயனப்பிள்ளை யென்ற பெயரும் உண்டு என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அவர் கச்சேரி யென்றால் சாதாரணமாய் கூட்டம் சேரும். அன்றைய தினமும் மண்டபம் நிறைந்தே யிருந்தது. அது நாயனப்பிள்ளைக்கு மாத்திரமல்ல. தென்னிந்திய ஸங்கீதக் கச்சேரிகளில் பாடகர் பெயருக்காகவாவது, அவர் பாட்டுக்காகவாவது மாத்திரம் அதிகக் கூட்டம் கூடுவதில்லை. அவருக்கு அமைக்கப்படும் பக்கமேளத்தையும் பொறுத்தது. சில சமயங்களில் வாய்ப்பாட்டுக்காரரை விட பக்க வாத்தியக்காரர்கள் பெயருக்காகவே கூட்டம் அதிகம் வருவது முண்டு. நாயனப்பிள்ளை கச்சேரி யென்றால் பக்கமேளங்கள், அதிலும் தாள வாத்தியக்காரர் சாமர்த்தியமுள்ளவராயும் பெயர் பெற்றவராயும் இல்லாமல் முடியாது. அதற்கு தக்ஷிணாமூர்த்தி யவர்கள் போன்றவர்தான் ஸரி என்பதும் உலகறிந்த விஷயம். ஆனால் கஞ்சிரா என்ற வாலும் அன்று காணப்பட்டது. சில வருஷங்களுக்கு முன்னிருந்ததைப்போல் பல தாள வாத்தியங்கள் அமைந்த ஸர்க்கஸ் கச்சேரிகள் இப்போது குறைவுதான். ஆனாலும் இந்தக் கஞ்சிரா அவைகளை எப்போதும் நினைவுபடுத்தக் கூடியது.

பெரிய மனிதர் என்றால் குறிப்பிட்ட நேரத்துக்குச் சற்று தாமதித்து வருவது கௌரவம்போலும். கச்சேரி ஆரம்பம் குறிப்பிட்ட நேரத்துக்கு 10-நிமிஷத்துக்கு மேலாகவே தாமதித்து வந்தார் பாடகர். எனவே, ஆவலுடன் காத்திருக்கும் ஜனக்கூட்டம் கைதட்டி, உஸ், உஸ், என்று அடிக்கடி ஆரவாரமிட்டது, கச்சேரியின் முதற்பாகம் போலும். வந்து உட்கார்ந்து சுருதி சேர்க்க ஐந்து நிமிஷம். இவ்வேலையை முன்னரே வேறு இடத்தில் செய்துகொண்டால்!—சுருதி சேர்ப்பதை ஸங்கீத மேடையில் காட்டுவதும் கச்சேரியில் இன்னொரு பாகம்போலும்.

ஸ்ரீமான் பிள்ளை யவர்களின் ஸங்கீதத்தில் மற்றவர்களிடம் அதிகம் காணப்படாத விசேஷங்கள் சில எப்போதும் உண்டு.

அதிக கணக்கு சாமர்த்தியம், சிரமத்துடன் வேலை செய்வது இவை அவர் கச்சேரிகளில் தென்படும். பக்க வாத்தியக்காரர்கள் அமைதியான மனதுடன், இலேசான ஒத்துழைப்புக்கு மார்க்கமன்னியில் கொஞ்சம் சாதாரணமான ஜாக்ரதையுடன் உஷாராகவே யிருப்பார். அனுபவிக்க வந்த ஜனங்களுக்கும் அதிக இன்பமும் இராது. இலேசாய் இகழ்ந்துத் தள்ளிவிடவும் இயலாது. ஆனல் தங்கள் அறிவிக்கு எட்டாத ஏதோ ஒரு பெரும் விஷயம் நடப்பதாக மாத்திரம் மனதைத் தேற்றிக்கொள்வார்கள். இடையிடையே ஸ்வரம் தாளம் இவைகள் வேலை நீண்டு அதிகமாயிருக்கும்போது, கை தட்டுவார்கள். இல்லாவிடில் மேடையிலிருக்கும் வித்வான்களில் யார் யார், ஏதோ எங்கோயோ, தப்பிதம் போட்டார்கள் என்பதைப்பற்றி பலமாக வாதாடுவார்கள். எப்படியும் கொடுத்த ரூபாய்க்கு நேரம் போக்கவேண்டும். அன்றையதினம் கச்சேரியிலும் மேற்குறித்த அம்சங்களில் ஒன்றுக்கும் குறைவில்லை. ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்கு, சிலநாளாக தேக அசௌக்கியமாயிருந்து, இப்போதுதான் சொஸ்தமாய் வந்திருப்பதால் சாரீரம் அவ்வளவு உதவுபடியாயில்லை. மேல் ஷட்ஜத்தில் சுருதி நன்ருகச் சேருவதுகூடச் சிறிது கஷ்டமாகயிருந்தது. ஆனல் தன் கூட விருந்த இரண்டு சிஷ்யர்களின் உதவியைக்கொண்டு கச்சேரியை சமாளித்தார். அவர்களில் ஒருவர் அவருடைய மகன் ரத்னசாமி பிள்ளை. மற்றவர் தன்னிடம் படித்துவரும் கிருஷ்ணசாமி அய்யங்கார். இருவர்களும் தேர்ச்சி பெற்றவர்கள். நாயனுப்பிள்ளையவர்களின் வழியையே பின்பற்றும் சாமர்த்திய முள்ளவராய்த் தோன்றினுர்கள். இளம் வயதானதால் சாரீர சௌகரியமும் இனிமையும் இருந்தன. எனவே அவர்கள் மாறிமாறிப் பாடும்போது, அதை மெச்சி ஜனங்கள் கரகோஷம் செய்தனர். குருவான, ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்கும் அது திருப்தியாகவே யிருந்தது. அவரும் மேலும் மேலும் உத்ஸாகப்படுத்தினுர். அம் மனப்பான்மை மிகவும் போற்றத்தக்கது. ஏனெனில் அது அரிது.

"ஸ்ரீ கணபதி" என்ற கீர்த்தனையுடன் ஆரம்பித்து சுமார் 14 கீர்த்தனைகளும், ஒரு ராகம், சுருக்கமான பல்லவி, சில்லறையாக இரண்டு உருப்படி இவைகளுடன் கச்சேரி முடிந்தது. இரண்டு தவிர மற்றெல்லா கீர்த்தனங்களுக்குப் பின்னும் அவர் தன் வழக்கம்போல் விஸ்தாரமாய் ஸ்வரம் பாடினுர். கீர்த்தனைகளின் ஸாஹித்ய பாகம், பின்னல் பாடப்படும் ஸ்வரமாம் விசாலமான வஸ்திரத்தை மாட்டுவதற்கான, முளை ஆணிபோல தான் தென்பட்டது. ஆனல் அபூர்வ ராகங்களில் அமைந்திருக்கும்

கீர்த்தனைகளின் பாணியும், அவைகளில் ஸ்வரம் பாடுவதும், வக்ர, விஷம ஸஞ்சாரங்களும், நடைபேதங்களும், தெரிந்தோருக்கு உத்ஸாகத்தைக் கொடுத்தன. இம்மாதிரி ஸ்வாத்திலும் தாள கணக்கிலும் மிகப் பெருமிதக் கவனம் செலுத்துவதினால் ராக பாவம் குறைந்தே காணப்பட்டது. ராக ஆலாபனைகள் கூட ஸ்வர ஜாதிகளை மனதில் வைத்து அகார ஸாதகத்தில் வெளிக் காட்டுவது போலவே யிருந்தன. ஆயினும், ஆந்தோளிகா, அமிருதவாஹினி, ஜகன்மோஹினி இவ்வாறான அபூர்வ ராகங்களில் ஆலாபனை செய்தது போற்றத்தக்கதே. ராகங்கள் பாடும் போது, அவரது வழக்கமான 'யா' என்ற சப்தம் அன்று காணப் படாததும் கவனிக்கத்தக்கது. அதைப் பற்றி ஒருவர் அவரது நன்மையையே உத்தேசித்து முன் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற பேபரில் எழுதியதின் நற்பயனோ அல்லது அவருக்காகவே தோன்றிய சீர்திருத்தமோ, எதாகிலும் அது ஒரு நற்குறியே யாகும்.

கடைசியாகச் சொன்ன ராகத்தில் பல்லவி யெடுத்துப் பாடியதும் விசேஷ சாமர்த்தியத்தைக் காட்டியது. அதில் திச்ரநடை, சதுரச்ரநடை இவைகளை மாற்றி மாற்றிக் காண்பித்தது அழகாகவே யிருந்தது.

ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்தி பிள்ளை அவர்களை அன்று கேட்டவர்கள், அவரிடம் மிருதங்கத்தில் அவ்வளவு அடங்கிய நாதமும், அழகிய ஜதிகளும், அமைந்ததைப்பற்றி வியப்புறாதாரில்லை. அதிக நெருக்கடியான இடங்களில் கூட முன்னாட்களைப்போல், அதிக சப்தத்துடன் ஆரவாரமில்லாது பாடகனின் சங்கதிகளை ஒட்டியே வாசித்து வந்தது நன்கு கவனிக்கத்தக்கது. மாயா மாளவ கௌளையில் 'மேரு ஸமான' என்ற கீர்த்தனையில் ஸ்வரம் பாடும்போது, காணப்பட்ட அதிக வக்ர நடைகளிலும், ததி-கிண-தோம் களிலும் பாடகருக்கும், மிருதங்க வாத்தியக்காரருக்கும் அதிக ஒற்றுமை காணப்படவில்லை. அது கழித்து மிருதங்கத் தனி ஆவர்தத்தில் திச்ர நடையில் ஆரம்பித்து வாசித்ததுதான் ஞானமுள்ளோருக்கு அளவற்ற சந்தோஷத்தைக்கொடுத்தது. ஸ்ரீமான். வேணுநாயகர் கஞ்சிராவில் கூடுமானவரை பின் தொடர முயன்றார்.

பிடில் ராஜமணிக்கம் பிள்ளையவர்கள் யாவராலும் விரும்பப் பட்ட பக்கவாத்ய உத்தமர். கூடிய இடங்களில் பின் தொடர்வதும், கூடாத இடங்களில் நடுவில் விழுந்து இடைஞ்சல் படுத்தாமல் சும்மாயிருப்பதும், தன்முறை வரும்போது இன்னிசையுடன் தனது வாத்யதைக் கையாள்வதும் அவரது விசேஷ குணங்கள். இவையாவும் அன்றும் அவரிடம் காணப்பட்டன. ராக ஆலாபனைகளில்! அவரது வாசிப்பு அருமையாகவே யிருந்தது.

மகாத்மா வாழ்க்கை.

பூணூல் போட்ட கதை

மகாத்மா காந்தி வைசியர் என்கிறீர்களே. அவர் ஏன் பூணூல் போட்டுக்கொள்வதில்லை? என்று தமிழ் நாட்டில் பலர் ஆச்சரியப்படுவதுண்டு.

இதே கேள்வியை வட இந்தியாவிலும், சிலர் மகாத்மாவிடம் கேட்டார்களாம். ஹரித்வாரத்துக்குப் போயிருந்தபோது ஹிருஷிகேசத்தில் சில சந்நியாசிகளுடன் மகாத்மா பேசிக்கொண்டிருந்தார். ஸ்னனம் செய்யும்போது, அவர்கள் மகாத்மாவின் உடம்பில் பூணூலும், தலையில் சிகையும் இல்லாததைக் கண்டார்கள்.

"ஹிந்து தர்மத்தில் நம்பிக்கையுள்ள நீங்கள் பூணூலும் சிகையும் இல்லாமலிருப்பது சரியல்ல. ஹிந்து தர்மத்துக்கு இவையிரண்டும் வெளிப்படையான சின்னங்கள். இவற்றை ஒவ்வொரு ஹிந்துவும் அணிந்துகொள்ள வேண்டும்" என்று சிரத்தானந்த சாமியார் கூறினராம்.

மகாத்மா தன் பூணூலைப்பற்றின கதையை அவருக்கு இயற்கையான நகைச்சுவையுடன் வர்ணித்திருக்கிறார். கத்தியவார் வைசியர்கள் பூணூல் போடுவது நெடுநாளாக வழக்கமில்லாமலே இருந்ததாம். பிராமண க்ஷத்திரிய வைசியராகிய மூன்று வருணத்தாரும் பூணூல் போடவேண்டுமென்ற ஓர் புதிய இயக்கம் அவர் குழந்தையாயிருந்தபோதுதான் ஏற்பட்டதாம். மகாத்மா 10 வயதுப் பையனக இருந்தபோது பிராமணப் பையன்கள் பூணூல் அணிந்துகொண்டு அதில் சாவிக் கொத்துகளை தொங்கவிட்டு விளையாடுவதை அவர் பார்த்துப் பொருமைப்படுவாராம். தனக்குப் பூணூல் இருந்தால் அவர்களைப்போல் சாவியைத் தொங்கப்போட்டுக் கொள்ளலாமே என்று நினைத்தாராம்.

பிறகு காந்திஜிக்கும் இன்னும் இரண்டுமூன்று சிறுவருக்கும் ராமரட்சை ஜபம் சொல்லிக்கொடுத்த பிராமணர் பூணூல் போட்டு வைத்தாராம். அந்தப் பூணூலில் போட்டுக்கொள்வதற்காக மகாத்மா ஒரு கொத்துச்சாவியும் வாங்கினராம். அந்தப் பூணூல் நாளடைவில் நைந்துபோனதாம்.

வயது முதிர்ந்தபிறகு இந்தியாவிலும், தென்னுப்பிரிக்காவிலும் பலர் மகாத்மாவுக்கு பூணூல் போட்டுவைக்க முயன்ருர்களாம். ஆனல் காந்தி போட்டுக்கொள்ளவில்லை. "சூத்திரர்கள் பூணூல் தரிக்கக்கூடாதென்ருல், மற்ற வருணத்தாருக்கு மட்டும் அந்த உரிமை எவ்வாறு வந்தது என்று கேட்டேன். அனுவசியமான வழக்கமென்று நான் கருதிய ஒன்றைக் கொள்வதற்குப் போதிய காரணம் காணவில்லை. பூணூலே கூடாது என்ற ஆக்ஷேபம் எனக்கில்லை. ஆனலும் அதை அணிவதின் அவசியமும் தெரியவில்லை." என்று மகாத்மாஜீ கூறிவிட்டார்.


"பூணூல் பாரமார்த்திக சாதகத்தின் அறிகுறியாயிருக்க வேண்டும். மனப்பூர்வமாக தூயவாழ்வு பெறுவதற்கு முயல்பவனே அதை அணிந்துகொள்ளவேண்டும். ஹிந்து சமயமும் இந்தியாவும் தற்போதுள்ள நிலைமையில் இத்தகைய ஓர் பெரிய சின்னத்தை அணிந்துகொள்ள ஹிந்துக்களுக்கு உரிமையுண்டா? தீண்டாமையையும், உயர்வு தாழ்வு வேற்றுமையையும், மற்றும் பல தீமைகளையும் வெளி வேஷங்களையும் ஹிந்துமதம் தன்னிடமிருந்து ஒழித்தபின்னரே அந்த உயர்ந்த சின்னத்தை அணிய உரிமை பெற முடியும்" என்பது மகாத்மாவின் அபிப்பிராயம்.

அவரது வியாக்கியானத்தை ஒப்புக்கொண்டால் இன்று பூணூல் போடும் உரிமை அவருக்குப் பூரணமாக உண்டு என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். அந்தணன் என்ற பதத்துக்கு வள்ளுவர் கொடுத்த அர்த்தத்தை மகாத்மாவின் வாழ்க்கையில் உலகம் காண்கிறது. ஆயினும் மகாத்மா இன்னும் பூணூல் போடவில்லை. "நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் என்னத்திற்கு?" என்பது தான் சமாதானம்.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதியவர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக்கப்படும்.

பத்திரிகை வெளியாகி ஒரு வாரத்திற்குள் பரிசுப் பணம் வராவிட்டால், உடனே ஆபீசுக்கு கடிதம் எழுதவும்.



உபாத்தியாயர்:—ஏண்டா! கிட்டு! ஒருவருக்கு திடீரென்று மோட்டார் விபத்தில் மண்டை உடைந்துபோனால் நீ உடனே என்ன செய்வாய்.

பையன்:—அவர் சொத்தை எல்லாம் தருமம் செய்து விடுவேன் சார்!

உபாத்தியாயர்:—ஏண்டா அப்படிச்சொல்லுகிறாய்.

பையன்:—நீங்கள் தான், "தருமம் தலைகாக்கும்" என்று சொன்னீர்களே!

—கே. ராகவேந்திரன் திருப்பூர்.

பெண் தகப்பன்:—ஓய்? என்னங்காணும் உமது மகன் நன்னடத்தை உள்ளவரா?

மாப்பிள்ளை தகப்பன்:—என்னங்காணும் இதைக்கூடவா கேட்க வேண்டும். எத்தனையோ தரம் போலீஸ் மூலமாக நன்னடத்தைக்கு எழுதி வாங்கியிருக்கிறார்களே.

—மா. சாரங்கபாணி நாடார், காத்தான்சாவடி.

நீதிபதி:—கைதியே! நீ ஏன் அந்த வீட்டிற்குள் புகுந்தாய்?

கைதி:—என் வீடென்று நினைத்தேன்.

நீதிபதி:—வீட்டம்மாளைக் கண்டதும் ஏன் ஓடினாய்?

கைதி:—என் மனைவியென்று நினைத்து விட்டேன் வேறொன்றுமில்லை!

—சீ. பாடகலிங்கம் அரிகேசவநல்லூர்.

உபாத்தியாயர்:—(ராமுவைப் பார்த்து) நீ நல்ல பையன், நீ அம்மா சொற்படி நடக்கிறாயல்லவா.

பையன்:—நீங்களும் நல்லவர் தான், நீங்கள் உங்கள் மனைவி சொற்படி நடக்கிறீர்களல்லவா.

—எம். என். வி. ராமநாதன் திருவல்லிக்கேணி.

சென்னையில் திருவனந்தபுரம் வண்டி புறப்பட்டது. அப்பொழுது ஒருவன் வண்டியினருகில் ஓடி வந்தான். 'கார்ட்' அவனை

வேகமாகத் தூக்கி வண்டிக்குள் விட்டான். வண்டி அடுத்த படியாக செங்கல்பட்டில்தான் நின்றது. வண்டி புறப்படும் சமயத்தில், தான் ஏற்றிவிட்டவன் கீழே இறங்குவதைக்கார்ட் பார்த்தான்.

"நான் உனக்கு உதவி செய்யாமலிருந்தால் நீ வண்டியில் ஏறி இருக்கமாட்டாய்" என்றான் கார்ட்.

"நான் ஒரு கடிதத்தை வண்டியில் போடுவதற்கு வந்தேனே யொழிய வண்டியில் ஏறவரவில்லை. நீ இப்பொழுது என்னை இங்குக் கொண்டுவந்திருக்கிறாயே" என்றான் அவன்.

—டி. ராஜம்மாள் ஆலந்தூர்.

ஒரு தனவந்தர் (வக்கீலிடம்):—ஐயா! நான் என் காரில் போய்க் கொண்டிருக்கும்போது ஒரு பையன் கல் ஒன்றை வீசினான். அதற்கு என்ன செய்வது?

வக்கீல்:—அந்தப் பையனின் பெற்றோருக்கு குறைந்தது ஐந்து ரூபாயாவது அபராதம் போடலாம்.

தனவந்தர்:—உங்கள பையன்தான் அப்படிச் செய்தது. ஆகையால் உடனே ஐந்து ரூபா அபராதத்தைக் கொடுத்து விடுங்கள்.

வக்கீல்:—நான் உமக்கு யோசனை கூறியதற்காக பத்து ரூபாய் பீஸ். அபராதம் ஐந்து ரூபாய்போக பாககி ஐந்து ரூபாயை வைத்து விட்டுப் போங்கள்.

—ஆர். வி. சாரி. பட்டுக்கோட்டை.

வீரன் கையில் ஒரு ஆர்மோனியப் பெட்டியுடன் வீட்டில் நுழைந்தான். நண்பர் சுப்பன் அதைப் பார்த்து, "புதிதாக வாங்கினாயா?" என்று கேட்டார்.

வீரன்:—இல்லை அடுத்த வீட்டு ராக்கப்பனிடம் வாங்கி வந்தேன்.

சுப்பன்:—உனக்கு வாசிக்கத் தெரியாதே?

வீரன்:—வாஸ்தவம். ஆனால் அது என்னிட மிருக்கும்போது ராக்கப்பனும் வாசிக்க முடியாதல்லவா?

—ராம. வெ. ராமசாமி, காலின் பர்மா.

ஓர் குளக்கரையில் ஓர் புலவர் தனது கட்டுச்சோற்றை எடுத்து சாப்பிட உட்கார்ந்தார்.

அவரருகில் வேறொரு புலவர்.

விருந்து புறத்ததாத்தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று—என்றுசொல்ல

மற்ற புலவர்:—(ஒரு சோறு எடுத்து கொடுத்து)

நினைத்துணை நன்றிசெய்யினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரிவார்,—என்றார்.
இரண்டும் திருவள்ளுவர் குறள்.

—ந. குமாரசாமி, திருப்பதிசாரம்.

ஒரு தனவான் வீட்டு நாய்க்குட்டியை பக்கத்து வீட்டு கிட்டு அடிக்கடி மூக்கையும் காதையும் பிடித்திழுத்து தொந்திரவு செய்து வந்தான்.

இதைப் பார்த்த தனவான்:—"எலே! கிட்டு! இனிமேல் நீ நாயின் காதைப் பிடித்திழுத்தால் நானும் உன் காதைப்பிடித்து இழுப்பேன். நீ அதன் மூக்கைப்பிடித்து இழுத்தால் நானும் உன் மூக்கைப் பிடித்து இழுப்பேன் தெரியுமா?

கிட்டு:—(சற்று யோசனை செய்து) நான் அதன் வாலைப் பிடித்திழுத்தால்?

—எம். விசுவநாதன் திருச்சினாப்பள்ளி.

ஒரு பெண்:—சாமி எங்கூருக்கு ஒரு டிக்கட் குடுங்க.
புக்கிங்கிளர்க்:—எளவு சனியன் எந்த ஊருக்கு.
பெண்:—எம் புருஸம் பேரு சொல்லமாட்டேங்கே.
புக்கிங்கிளர்க்:—நீ சொல்வது அழகாயிருக்கிறது. ஒன்றும் புரியவில்லையே.
பெண்:—இப்பச் சொன்னீங்களே அதில கூட எங்க ஊர் வந்திரிச்சிங்க.
புக்கிங்கிளர்க்:—நான் என்ன சொன்னேன் 'நீ சொல்வது அழகாயிருக்கிறது ஒன்றும் புரியவில்லையே' என்றேன்.
பெண்;—"நீ சொல்வது இருக்கிறது ஒன்னும் இல்லையே" என்றதை மட்டும் தள்ளிடுங்க.
பு. கி:—ஓ! ஹோ. அழகாபுரியா.
பெண்:—ஆமாங்க.

—நாகுபிள்ளை போடிநாய்க்கனூர்.

புருஷன்:—"முட்டாளுக்கு முழங்காலில் புத்தி" என்பது பழமொழி.
மனைவி:—ஒகோ அப்படியா! நமது பையனுக்குப் புத்தியில்லை யென்று அவனுடைய உபாத்தியாயர் சொன்னாராம். ஆகையால் தங்கள் முழங்காலை அவனுக்குக் கொடுங்கள்.

* —க. கார்மேகம், தோடகேரி.

---

* இரண்டு ரூபாய் பரிசு பெற்றவர்.



✳ என்னைக் காணவில்லையே ! ✳

(பெயர் மறதி)

பயந்துபோக வேண்டாம். தன்னையறியும் வேதாந்த ஆராய்ச்சியில் நான் இறங்கிவிடவில்லை. உலகத்தில் எனக்கு இன்னும் வெறுப்பு ஏற்பட்டுவிடவில்லை. மேல் வேஷ்டி வைத்த இடம் தெரியாமல் தேடிக்கொண்டிருக்கும் பேர்வழிகள் மீது எனக்குச் சிறிது அனுதாபம். காரணம் நீங்களே ஊகித்துக்கொள்ள வேண்டும்.

மறதியுள்ளவர்களை உலகம் மிகவும் இழிவாகக் கருதுவதுண்டு. சிலர் அவர்களைக் கண்டு வெறுப்படைவதும் உண்டு. அவர்களைச் சற்று தாழ்ந்த ஜாதியாக மதிப்பதுமுண்டு. அனுபவத்தின்மீது சொல்கிறேன். வெறும் ஊகமல்ல.

ஒருவனுக்குத் தலைவலியோ, ஜுரமோ வந்தால் அவனை உலகம் பழிப்பதில்லை. அவனை இழிவாகக் கருதுவதுமில்லை. உடம்பு கல் போலிருக்கும்போது கூட "இலேசாய்த் தலை வலிக்கிறது" என்பதைச் சிலர் பெருமையாகக் கொள்கிறார்கள். நாமும் யாரையாவது கண்டால் "உடம்பு மெலிந்தாற்போல் தோன்றுகிறதே" என்று கேட்கிறோம். கேட்கவேண்டுமென்று அவரும் எதிர்பார்க்கிறார். குரங்கு சாகக்கொடுத்த ஆண்டிமாதிரி மூஞ்சியை "உம்" என்று தொங்கவிட்டுக் கொண்டிருப்பவன்கூட இந்தக் கேள்வியைக் கேட்டால் சற்று புன்சிரிப்புச் சிரிக்கிறான்.

இதேவிதமான உணர்ச்சியை ஏன் உலகம் என்னிடம் காட்டக்கூடாது? "பெரிய மனிதர்களுக்கு ஞாபகசக்தி குறைவாகவே இருக்கும்" என்று ஒரு சூத்திரம் சொல்கிறார்களே, அதை நினைத்

துப் பார்த்து என் என்னையும் ஒரு பெரிய மனிதனைக் கருதக் கூடாது? இதென்ன அநியாயமய்யா! என்று நான் பலதடவை யோசித்து வருத்தப்பட்டதுண்டு.

ஏதாவது ஒரு காரணத்தால் தலையிடி, கால் உளைச்சல் முதலி யன ஏற்படுவதுபோலவே, ஏதாவது ஒரு காரணத்தால் ஞாபக சக்தி சமயத்துக்கு உதவாது போவதுண்டு. இதற்கு உதாரண மாக ஒரு சம்பவத்தை இங்கு சொல்லுகிறேன்.

ஒரு இடைப்பையன், (நாசமுற்றுப்போன இந்த நாட்டில் ஒவ்வொரு குணத்தையும் சில ஜாதிகள்மீது ஏற்றியே பேசுவது வழக்கமாய்விட்டது) காட்டில் ஆடுகளை மேய்த்துவிட்டு ஒரு மரத்தின் வேரில் தலையை வைத்து உறங்கிக்கொண்டிருந்தான். ஒரு நாவிதன் ஏதோ அகஸ்மாத்தாக அந்த வழியே போய்க்கொண் டிருந்தான். அந்த சோம்பேறிக்கு வேறு வேலையில்லையோ என் னமோ. அந்த இடைப்பையனைப் பார்த்தான். பக்கத்தில் போய் இரண்டு குரல் கூப்பிட்டான். பையன் விழிக்கவில்லை. ஏதாவது தமாஷ் செய்யலாமே என்று அவனுக்குத் தோன்றியது. கத்திப் பெட்டியிலிருந்து கத்திரியை எடுத்தான். இடைப்பைய னுடைய உச்சிக்குடுமியை நன்றாய் சிறிதும் மிச்சமில்லாமல் கத்த ரித்து தூரத்தில் ஒரு குழியில் எறிந்துவிட்டுப் போய்விட்டான்.

ஒரு மணி நேரம் சென்றது. பையன் மெதுவாக விழித்தான். எழுந்தான். அரைவேஷ்டியை பலமாகக் கட்டிக்கொண்டான். தலையை முடிபோடுவதற்காக கையை தலைக்குக் கொண்டுபோனான். தலைமுடியைக் காணவில்லை. தடவிப் பார்த்தான். தலைமுடி இல் லவே இல்லையென்று நிச்சயமாய்விட்டது.

"அய்யய்போ, என்னைக் காணவில்லையே, எனக்குத் தலைமுடி இருக்குமே! இது வேறு யாரோ தெரியவில்லையே, நான் எங்கே தொலைந்துபோய் விட்டேனோ" என்று அலறிக்கொண்டு தன்னைத் தேடிக்கொண்டு போனான்.

ஓடினான், சாடினான். காடெல்லாம் தேடினான். "நான் எங்கே? நான் எங்கே?" என்றான். காணவில்லை. உடனே ஊருக்குள் ஓடி னான். ஒவ்வொருவர் மூஞ்சியாய்ப் பார்த்தான். ஊரெல்லாம், 'என்னப்பா' என்று கேட்டார்கள். "என்னைக் காணவில்லையே!" என்று அலறினான்.

அவர்கள் இவனுடைய சமாசாரத்தை முழுவதும் கேட்பதற் குள் எங்கோயோ ஓடிவிட்டான். அன்றிரவுக்குள்ளாக சுமார் 8 ஊர் தாண்டியிருப்பான். என்ன செய்வான் பாவம். வேறு

ஏதாவது பொருள் தொலைந்துபோனால் மனது பொறுக்க முடியும். ஒரு ஆளையே காணவில்லை. அதுவும் வேறொருவரல்ல. தன்னையே காணவில்லை, தொலைந்துபோய்விட்டான் என்றால் என்ன செய்வான் பாவம்.

அவன் இப்பொழுது எங்கிருக்கிறானோ தெரியவில்லை. "கிராக்காக" எங்கே யாவது இருப்பான்.

நீங்கள் யாராவது அந்த கிராக்கைக் கண்டால் எனக்கு அறிவிக்க வேண்டுகிறேன்.

எத்தனையோ கிராக்குகள் தெருத்தெருவாய் அலைகிறதே; வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிருக்கிற இந்த நாலைந்து வருஷத்தில் அரைக்கிராக்கும் முக்கால் கிராக்குமாக ஊர்தோறும் நாலைந்து இருக்கிறதே என்று யோசிக்கிறீர்களோ? சரி, இந்த கிராக்குக்கு ஒரு அடையாளம் உண்டு. "என்னைக் காணவில்லையே! நான் எங்கே" என்று இப்பொழுது சொல்கிறானோ என்னமோ சந்தேகம் தான். அப்படிச் சொன்னாலோ சௌகரியமாய்ப் போய்விடும்.

இல்லாவிட்டால் "உன் பெயரென்ன?" என்று அவனிடம் கேளுங்கள். "எனக்குத் தெரியாது" என்று அவன் கூறினால் நம்ம ஆசாமி அவன் தான்.

* * * *

அவனை 'கிராக்கு' என்றாவது அவனுக்கு ஞாபக சக்தி இல்லையென்றாவது நினைக்க வேண்டாம். ஞாபகசக்தி அவனுக்கு இருக்கிறது. அதை உபயோகிக்கும் வகைதான் மறந்திருக்கிறது. ஆகையால் அவனைப் பரிகாசம் செய்யாதீர்கள். அவன் ஓர் வியாதியால் பீடிக்கப் பட்டிருப்பதாகக் கருதி அவனிடம் இரக்கம் காட்டுங்கள்.

இது வியாதிதான் என்பதை நான் பல உதாரணங்கள் மூலம் நிரூபிக்க முடியும். ஆங்கிலத்தில் ஏதாவது வார்த்தையைப் போடாவிட்டால் மூட நம்பிக்கை யென்பீர்கள்! இந்த வியாதிக்கு "ஆம்னீசியா" என்று பெயர். இப்பொழுது தெளிவாய் தெரிந்து விட்டதல்லவா? சமஸ்கிருதமாக இருக்க வேண்டு மானால் "அபஸ்மாரம்" என்று வைத்துக் கொள்ளுங்கள்.

* * * *


இந்த வியாதி மிகவும் கஷ்டமான வியாதி. இதன் கோரங்களை நாம் எளிதில் உணர முடியாது. லக்ஷக்கணக்கான ஜனங்கள் வசிக்கும் நகரங்களில் தான் இந்த "அபஸ்மார"த்தின் கொடுமையை அறியமுடியும். நியூயார்க்கில் ரெய்மண்ட் ராபின்ஸ் என்ற பெயருடன் ஒரு பணக்கார பொதுஜன ஊழியர் இருந்தார். அப்போது

குடியரசுத் தலைவராயிருந்த ஹூவரைப் பார்ப்பதற்காக வீட்டை விட்டு வெளியேறினர். அவ்வளவுதான் தெரியும். ஹூவரைப் போய்ப் பார்க்கவில்லை. ஆள் இருக்கும் இடமே தெரியவில்லை. கண்டு பிடித்துக் கொடுப்பவருக்கு 50,000 டாலர் வெகுமதி கொடுப்பதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இரண்டு மாதத்துக்குப் பிறகு எதோ ஒரு மலைப்பிரதேசத்தில் அவரைக் கண்டு பிடித்தார்களாம். அவருக்கு அப்பொழுது அவர் சொல்லிய பெயர் ரெய்னல்ட் ரோஜர்ஸ். அவருடைய பெயரின் முதலெழுத்து மட்டும் ஞாபக மிருந்ததாம்.

* * * *

ஹாவ்ரி எனும் பெயருள்ள ஒரு செம்படவன் தன் ஓடத்தைப் யோட்டுக்கொண்டு கடலில் போனன். மீன் அகப்படவில்லை. பக்கத்தில் இருந்த ஒருவன் வேறொரு பக்கம் போகும்படி யோசனை கூறினன். அவ்வளவுதான் தெரியும். சிறிது நேரம் சென்ற பிறகு ஓடம் மட்டும் இருந்தது. ஆள் இல்லை. அவனுடைய மேல் உடுப்பு ஓடத்துக் கயிற்றுடன் கட்டப்பட்டிருந்தது.

ஏழு மாதத்திற்குப் பிறகு ஒரு மோட்டாரின் வழியிலிருந்து தப்புவதற்காக ஒரு மனிதன் சடார் என்று பாய்ந்தான். கால்நழுவி கீழே விழுந்து மண்டையில் பலமான காயம் பட்டது. எழுந்திருந்தான். அவனிடம் எத்தனையோ தடவை கேட்டாலும் அவன் இன்னன் என்று சொல்ல அவனல் முடியவில்லை. சட்டைப் பையில் ஒரு சாவி இருந்தது. அதில் ஒரு ஹோட்டல்



சீட்டும் இருந்தது. அந்த ஹோட்டல் பக்கத்தில் அவனைக்கொண்டு

போனார்கள். அதைப் பார்த்தான். சிகாகோவில் இருப்பதாக ஞாபகம் வந்தது. பிறகு ஒன்றின்பின் ஒன்றாக எல்லா விஷயமும் ஞாபகத்துக்கு வந்தது. உடனே தன் அரையிலிருந்த துணியைப் பார்த்தான். அது எப்பொழுது எங்கே வாங்கினது என்று தெரியவில்லை. ஹோட்டலில் போய்க் கேட்டான். அங்கு அவன் கொடுத்திருந்த பெயர் அவனுக்கே புதிதாக இருந்ததைக் கண்டு ஆச்சரிய மடைந்தானாம். ஒரு விபத்தில ஞாபகத்தை இழந்து மற்றொரு விபத்தால் ஞாபகச சக்தியை மறுபடியும் பெற்றதற்கு இது ஓர் உதாரணம்.



“இரண்டு எதிர்மறை ஒரு உடம்பாட்டு வினையாகும்” என்பது ஆங்கில இலக்கணச் சூத்திரம்.

* *

அமெரிக்காவில் பிரிடோர்ட் என்ற ஊரில் ஒரு பெண் நடுரஸ்தாவில் நின்று கொண்டு திருகத்திருக விருகுபோல் விழித்துக் கொண்டிருந்தாள். பேர் ஊர் என்னவென்று கேட்டால் சொல்லத் தெரியவில்லை. ஒரு போலீஸ்காரன் இந்தப் பெண்ணை ஸ்டேஷனுக்குக் கொண்டு போனான். அங்கிருந்த உத்தியோகஸ்தர் சற்று சாதுர்ய முள்ளவர். அந்தப் பெண் “டைப்” அடிக்கும் பெண்ணாக இருக்கலாம என்று ஊகித்து, டைப் அடிக்கும் யந்திரத்தைக் கொடுத்து ஒரு கடிதத்தை “டைப்” அடிக்கச் சொன்னார்.

அவளும் கடிதம் முழுவதையும் டைப் அடித்துவிட்டு அதை அதிகாரியிடம் கொடுத்தாள். வாங்கிப் பார்த்தால் அதில் அடியில் இடதுகை பக்கத்தில் "எம். எம். ஸி." என்று டைப் அடித்திருந்தது.

"ஸி. என்பது யார் அம்மணி?" என்றார் உத்தியோகஸ்தர்.

"என்—மிஸ்டர் கோஹன்" என்று பதிலளித்தாள்.

"ஓ ஹோ! சரிதான்! அப்படியா? சரிதான்!...ஆமாம் எம். எம் யார்?"

"ஆ! எம். எம்மா?...சே, அதுதான் என் பெயர் மேரியன் மிச்சல்" என்றாள்.

பிறகு தன் பெயர் ஊர் விலாசம் எல்லாம் ஞாபகம் வந்தது. போலீசார் அவளை வீடு கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

* * * *

குயூலே கானல்லோ என்ற ஓர் இத்தாலிய ஆசிரியர் சென்ற மகாயுத்த காலத்தில் பட்டாளத்தில் ஒரு உத்தியோகஸ்தராகச் சேர்ந்தார். சேரும்போது அவரது அங்க அடையாளங்கள் பதிவு செய்யத் தவறி விட்டது. யுத்தம் முடிந்த பிறகு அவரைப்பற்றி ஒரு தகவலும் துலங்கவில்லை. இறந்ததாகவும் தெரியவில்லை.

6 வருஷங்களுக்குப் பின் குடிமயக்கத்தில் இருப்பவன் போல ஒருவன் டியூரின் என்ற ஊரில் இடுகாட்டின் பக்கத்தில அலைந்து கொண்டிருந்தான். அவனை போலீசார் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தார்கள். வெகு நாள்களுக்குப்பின் கானெல்லாவின் மனைவி தன் புருஷனைத் தேடி இந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறானா என்று பார்க்க வந்தாள். அங்கு இந்த ஆசாமியை பார்த்து இவன்தான் தன் புருஷன் என்று கண்டுகொண்டாளாம். அவளது வீட்டுக்குக் கொண்டுபோய் சில நாட்களுக்கெல்லாம் அவருக்கு மறுபடியும் தன் பழைய நினைவுகள் வந்ததாம. இவர் தன்னுடைய இடைக்கால வாழ்வைப்பற்றி மிகவும் ரஸமான ஓர் புத்தகம் எழுதியிருக்கிறார்.

இதற்கிடையில் இன்னொரு பெண் இதே ஆசாமியைத் தன்னுடைய கணவனை புருஷனே என்று சொல்ல ஆரம்பித்தாள். சவப்பெட்டியிலிருந்து ஏதோ சில சாமான்கள் களவு போனது சம்மந்தமாக போலீசார் துப்பு விசாரிக்கும்போது, இடுகாட்டில் நின்றுகொண்டிருந்த ஆசாமிமீது சந்தேகப்பட்டு பைத்தியகார ஆஸ்பத்

திரிக்குக் கொண்டுபோனதை யறிந்து, இப்பொழுது புரோபல காணெல்லாவாக "நடிப்பவர்" சவப்பெட்டியைக் கிளறின, புரூனே தான் என்று வழக்கு நடக்கிறது.

இந்த வழக்கு இத்தாலி சுப்ரீம் கோர்ட்டில் இன்னும் மு வாகவில்லையாம்.

உண்மை கடவுளுக்குத்தான் தெரியும். புரோபலருக்கு, தான் கஷ்டகாலம் வந்ததோ, அல்லது புரூனோதான் வேஷ போடுகிறுனே. வாழ்க்கையில் ஏற்படும தமாஷான சம்பவங்களி இதுவுமொன்றல்லவா?

* * * *

முதல் கதைமட்டும் வெறும் கதை. மற்றதெல்லாம் உண்மை யாக நடந்த சம்பவங்கள். அமெரிக்காவில் பிரசுரமாகும் "பாப லர் சயன்ஸ்" என்ற பத்திரிகையிலிருந்து (திருடியவை) பொறுக்கி னவை. இது எழுதி இரண்டு மாதம் ஆய்விட்டது. வைத்த இடம் தெரியாமல் மறந்துபோய்விட்டது. இப்பொழுதுதான் அகப்பட்டது. உடனே உங்கள் "காந்தி" ஆசிரியருக்கு அனுப்பி விட்டேன்.

வேத கதைகள்

(எம். ஆர். ஜம்புநாதன்)

வேதங்களில் பல கதைகள் உண்டு. அக்கதைகள் உண்மையாய் நடந்த சம்பவங்களா? அல்லது கற்பனைக் கட்டுக் கதைகளா?

வேத கதைகள் கட்டுக் கதைகளில்லை. உண்மையாய் நடந்த, நடக்கும், சம்பவங்களே. சில கதைகளை கவனிக்கவும்.

சூரியன் தன் பெண்ணான உஷையுடன் கலந்து ஒரு மகனைப் பெற்றானும். இவ்வேத கதையின் உண்மையாவது—

(1) சூரியோதயத்திற்கு முன் காலமான, பெண் போலுள்ள, உஷை தோன்றுவாள். அவள் தோன்ற சூரியனே காரணமாகையால் சூரியனானவன் தந்தை போலாவான். அவன் கிரணங்கள் தன் பெண்ணான உஷையில் விழுந்து பகல் என்னும் மகன் தோன்றுகிறான். இது இயல்பில் நடக்கும் ஒரு அற்புத வர்ணனை.

(2) பிரஜாபதியான பர்ஜன்யனும் தன் மகளுடன் கலப்பது போல் திருக்தத்தில் ஒரு அலங்கார வர்ணனை யுண்டு. பர்ஜன்யன் மேகத்திற்குப் பெயர். நிலம் ஜலத்தினின்று தோன்றியபடியால் அவள் ஜலமான மேகத்தின் பெண் போலாவாள். அவளுடன் மேகம் கலந்து செடி கொடிகளை யுண்டு பண்ணினான். இவ்வேத அலங்காரமே அசம்பாவித கதையாக பிற்காலத்தி லாயிற்று.

(3) விருத்ராசுரன் என பெரிய ராட்சதன் ஒருவனிருந்த தாகவும் அவனை இந்திரன் கொன்றதாகவும் ஒரு கதை யுண்டு. வேதத்திலே இதுவும் ஒரு உபமாலங்கார கதையாகும் (ரிக், 1. சூ. 32. ம. 2.) இந்திரன் என்றால் சூரியனுக்குப் பெயர். விருத்திராசுரன் என்பது மேகநாமம். இம்மேகங்களை சூரியன் தன் கிரணங்களால் கொல்லுவதே இந்திர விருத்திராசுர யுத்தம். நி. அ. 2. கா. 17.


(ஆசிரியர் வெளியிடப் போகும் வேத சந்திரிகை என்னும் நூலிலிருந்து).

சுப்ரமண்ய பாரதியார்

6

(வ. ரா.)

படிப்புக்கு ஒரு உதை; காசிக்கு ஒரு கும்பிடு; கங்கையிலே கடைசி முழுக்கு. பாரதியார் எட்டையபுரத்துக்கு வந்து சேர்ந்தார். காசியிலிருந்து, எட்டையபுரத்துக்கு வர, வழிப்பிரயாணச் செலவுக்கு, யார் பாரதியாருக்குப் பணம் கொடுத்தார்களோ! அனேகமாய், ஜமீந்தார் அவர்கள் தான் கொடுத்திருக்கவேண்டும். காசிக்கு ஜமீந்தார் கடிதம் எழுதியதின் பேரிலே தான், தாம் எட்டையபுரத்துக்கு வந்ததாக பாரதியார் சொல்லுவதுண்டு.



பாரதியார்

ஜமீந்தாருக்கும் பாரதியாருக்கும் ஒரு வினோதமான நட்பு. இருவரும் சேர்ந்திருந்தால் சண்டை; பிரிந்து இருப்பின், பிரிவு ஆற்றாமை. இந்த விசித்திரக் காட்சியை, தற்போதுள்ள சினிமா நடிகக் காதலர்களுக்குள்ளே தான் காணமுடியும். ஜமீந்தாருக்கு தமது செல்வத்திலும் செல்வாக்கிலும் பெருமை பாரதியாருக்கு தாம் பாரதியார் என்ற உணர்ச்சிப்பெருமை. ஒருவர் மற்றவரைப் பெரியவர் என்று கொண்டாடி, வணங்க முடியுமா?

தனவந்தர்களின் தயவு சுழல்காற்றைப்போல, சுற்றிக்கொண்டேயிருக்கும். ஒரே இடத்தில் ஒரே மனிதனிடம் நீண்டகாலம் தரித்திருக்காது. பாரதியார் வரும் வரையிலேதான், "ராஜா"வுக்கு ஆத்திரமும் அன்பும். நேரில் அவரைப் பார்த்ததும், தாம் "ராஜா" என்ற எண்ணம். இந்தத் தொல்லைக்கு என்ன செய்கிறது? பாரதியார் வந்ததும், அவருக்கு வேலையில்லாத உத்தியோகம்!

ஆனுல் சம்பளம் உண்டு. இவ்வளவு என்று தஸ்தாவேஜியில் குறிப் பிடப்படவில்லை "ராஜா"வின் தயை இருக்கும் வரையில், சம்ப ளத்துக்குப் பயமில்லை. ஆனுல் பெரிய இடத்து தயையைப்பற்றித் தான் சந்தேகம். அதைத் திட்டமாய்ச் சொல்ல முடியாது.

ஜமீந்தாரின் உறுதியற்ற மனதைப்பற்றி, பாரதியார் "சின்னச் சங்கரன் கதை"யில் நன்ருக வர்ணத்திருக்கிருர். "ராக்கப்பிள் ளைக்கு நிலம் கொடுக்கவும்" என்று மொட்டையாக, ஒரு உத்தரவு போடுவாராம் "ராஜா". எந்த ராக்கப்பிள்ளை? எவ்விடத்தில் நிலம் கொடுக்கிறது? எவ்வளவு நிலம் கொடுக்கிறது? நஞ்சையா, புஞ் சையா? வீடுகட்ட நிலமா என்ற விபரம் தெரியாதாம்! உத்தரவின் அர்த்தத்தை விளக்கமாகத் தெரிந்துகொள்ளுவதற்கு, அரண் மனைக் காரியநிர்வாகிகள், ஜமீந்தாரைக் கிட்ட அணுக, அஞ்சுவார் களாம்! எனவே, அவர்கள் தங்கள் இஷ்டப்படி, உத்தரவை நிறை வேற்றி வைப்பார்களாம்! கேள்விமுறை யில்லாத கண்மூடி தர் பார் என்பார் பாரதியார்.

"இந்தக் கண்மூடி ராஜ்யத்தில் நான் எப்படிக் காலங் தள்ள முடியும்" என்று பரிதாபத்துடன் பாரதியார் கேட்கும்பொழுது, மற்றவர்கள் என்ன பதில் சொல்லமுடியும்? தலையை அசைத்துக் கேட்டுக்கொண்டிருக்கிறதைத் தவிர, அவர்களுக்கு வேறு வழி கிடையாது. இக்காலத்து வாழ்வைப்பற்றி, பாரதியார் சிறி தளவு, சமயம் நேர்ந்தபொழுது, சொல்லுவதுண்டு.

கூளப்ப நாயக்கன் காதல் என்ற நூலிலே, ராஜாவுக்கு ரொம்ப பிரியமாம்! அதை அவர் படித்துக்கேட்டு மகிழ்வாராம்! (இந்த சம்பவம் சின்னச் சங்கரன் கதையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.) சிருங்கார ரஸம் ததும்பும் பாட்டுகளிலும், நாட்டியக் கச்சேரிகளி லும் ராஜாவுக்கு அளவு கடந்த மோகமாம்! காதலைப்பற்றி ராஜா புலம்புவாராம், பிரசங்கம் செய்வாராம்! இவற்றை யெல்லாம் பாரதியார் கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமாம்! "ராஜாவின் சிருங் கார ரஸப்பேச்சு என்னை பலவீனப்படுத்தியதும் பரிமுறுத்திய தும் போல, வெள்ளைக்காரர்களின் சட்டங்கூட என்னைச் செய்த தில்லை" என்று பாரதியார் அடிக்கடி சொல்லுவதுண்டு.

ராஜாவின் சிருங்காரம், அவருடைய நிலையில்லாத தயவு, வேலையில்லாத உத்தியோகம், சிப்பந்திகளின் அற்பப் பொருமை, குடும்பம், பாரதியாரின் உள்ளத்தின் தனிப்போக்கு—இவைகள் யாவும் சேர்ந்துகொண்டன. முடிவு என்ன? எட்டையபுரத்தை விட்டு வெளியேற, பாரதியார் தீர்மானங்கொண்டார்.

ராஜாவின் மனம் உறுதியற்றது என்ருல், அதைக் காட்டிலும் அதிகமாக, பாரதியாரின் மனம் நிலையற்றதுபோலத் தோன்று கிறதே என்று சிலர் சந்தேகப்படலாம். பெரியார்களின் வாழ் விலே, இத்தகைய நிகழ்ச்சி மிகச் சாதாரணமாகும். தங்கள் ஆத்ம வேகத்துக்கு உவப்பான வேலை கண்ணில் தோன்றும் வரை யில், அவர்கள் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு திடீர் திடீர் என்று மாறுவார்கள். அதுவரையிலும், அவர்களுக்கு சஞ்சலம் தான்.

சத்தியாக்கிரக உபாயத்தைக் காணும் வரையில், காந்திக்கு சஞ்சலம். ஆத்ம சம்பந்தமான தன்னிலையை அறியும்வரை யில் புத்தன் பட்ட பாட்டைச் சொல்லிமுடியாது. விவேகா னந்தரின் உள்ளம், அமைதி பெறும் வரையில், பட்ட கஷ்டத்தை எழுத்துக்குள் அடைக்க முடியாது. சுவாமி ராமதீர்த்தரின் கதி யும் இதுவே யாகும். ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு, பிடிப்பு ஏற்படும் வரையில், நிலையற்ற மனம் இருப்பதில் ஆச்சரி யம் ஒன்றுமே யில்லை.

சமஸ்தானத்தை விட்டால், குடித்தனத்துக்கு வழி என்ன என்று சிந்தனைசெய்தார் பாரதியார். பிடித்திருக்கும் கொம்பை விட் டாலொழிய, குரங்கு வேறு கொம்புக்குத் தாவி, அதைப் பிடிக்க முடியாது என்று பாரதியார் கேலி செய்வார். "பழைய கொம்பும் கை நழுவி, புதுக் கொம்பும் அகப்படாவிட்டால், குரங்கு என்ன செய்யும்" என்று எவரேனும் கேட்கத் துணிந்தால், "கீழே விழுந்து மண்டை உடைந்து இறக்க வேண்டியதுதான். அதற்குப் பயப் பட்டு பயனில்லை" என்று பாரதியார் படீர் என்று முடித்துவிடுவார். ஆனுல், பாரதியாரின் உபமானக் குரங்கின் கதி அவருக்கு நேர வில்லை.

பாண்டிய நாட்டுக்குத் தலை நகரான மதுரையில், சேதுபதி உயர்தரப் பள்ளிக்கூடத்தில், இந்த சமயத்தில் தமிழ்ப் பண்டிதர் வேலை காலி விழுந்தது. இந்த வேலை பாரதியாருக்குக் கிடைத்தது. பாரதியார் மனுப்பண்ணிக் கொண்டாரா அல்லது எவரேனும் சிபார்சு செய்து, அங்கே பாரதியாரைக் கொண்டு சேர்த்தார்களா என்பதற்கு விவரம் அகப்படவில்லை.

தமிழ்ப் பண்டிதர் வேலையில் பாரதியார் அமருமுன், எட்டை யபுரத்தில் அவருக்கு ஒரே ஒரு நண்பர்தான் நம்பிக்கைக்கும் விசு வாசத்துக்கும் உரியவராய் இருந்தாராம். அந்த இளைஞன் அய்

யங்காராம். சமஸ்தானத்து குமஸ்தா. ஆனல் அந்த இளைஞனைப் பற்றி, பாரதியார் பேசுகையில் கண்ணீர் விடுவார். சொற்ப சம்பளத்தில் குமாஸ்தா வேலை பார்த்துவந்த அந்த இளைஞன், மேதாவி என்றும் அவன் அபூர்வமான தமிழ் நாடகம் ஒன்று எழுதினன் என்றும் அது அச்சுக்கு வராமல் போனது பெரிய நஷ்டம் என்றும் பாரதியார் சொல்லுவார். அந்த இளைஞன் யாரோ, அவர் இப்பொழுது உயிருடனிருக்கிருரோ—இந்த சங்கதிகள் எனக்குத் தெரியாது.

1901 அல்லது 1902-ல், பாரதியார் தமிழ்ப் பண்டிதரின் பதவியை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும் என்பது என் உத்தேசம். 1903-ம் ஆண்டு முடிவுக்குள்ளாகவே, அவர் சென்னைக்குப் போய்விட்டார். ஒரு வருஷமோ, ஒன்றரை வருஷமோ, சேதுபதிப் பள்ளிக்கூடத்தில் பாரதியார் தங்கியிருந்ததாகத் தெரியவருகிறது.

தமிழ்ப் பண்டிதரின் பதவிக்குப் பாரதியாரிடமிருந்த இலட்சணங்கள் விநோதமானவை. எட்டையபுர சமஸ்தான வித்வான்கள் அளித்த பாரதி என்ற பட்டமொன்றே முதல்தரமான இலட்சணம் என்று எண்ணுகிறேன். தமிழ்ப்பண்டிதர்கள் நன்னூல் (இலக்கண) சூத்திரங்களை தலை கீழாய்ச் சொல்லமுடியுமே, அந்த சாமர்த்தியம் பாரதியாருக்குக் கொஞ்சங்கூட கிடையாது. நன்னூலை அவர் பார்த்திருப்பார் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். அதைப் படித்து நெட்டுருப் பண்ணியிருப்பாரோ என்பது சந்தேகம்.

> தோன்றல், திரிதல், கெடுதல் விகாரம்
>
> மூன்றும் மொழி மூவிடத்துமாகும்.

இந்த சூத்திரத்தைப் பாரதியார் எப்படியெல்லாமோ கேலி செய்வார். நன்னூல் தற்போது இருக்கிற நிலையில், பாரதியாருக்குத் துளிக்கூடப் பிடித்தம் இருந்ததில்லை. நன்னூலிலே இவ்வளவு வெறுப்புக்கொண்ட பாரதியார் எவ்வாறு தமிழ்ப் பண்டிதர் உத்தியோகம் பார்த்தார் என்பதைக் குறித்து, ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

வகுப்பிலே படித்த பையன்கள் பெரிய பையன்கள். பாரதியாருக்கு அப்பொழுது வயதும் அதிகமாக ஆகவில்லை. வாட்டசாட்டமான உடலும் அவருக்குக் கிடையாது. உடம்பிலே சக்தியும் அதிகமாகக் கிடையாது. இலக்கண அறிவும் பூஜ்ஜியம் என்றே சொல்லலாம். தமிழ்ப்பண்டிதர் வேலையும் தமக்கு சாசுவதமானதல்ல என்று அவர் ஜபித்துக்கொண்டிருக்க வேண்டும்.

ஊரும் புதிது. இந்தநிலைமையில், பாரதியார் தமிழ்ப் பண்டித ராய், எவ்வாறு காலந் தள்ளினரோ !

இந்த சமயத்தில், சென்னையில் "சுதேசமித்திரன்" பத்திரிகையை நடத்திவந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் சுப்ரமணிய அய்யர் அவர்கள், மதுரைக்குப்போய்ச் சேர்ந்தார். அப்பொழுது, சுப்பிரமணிய அய்யர் அவர்கள் பாரதியாருக்கு அறிமுகமானர். பாரதியாரின் மேதையை, அவர் உடனே தெரிந்துகொண்டார். உள்ளூர அவருக்கு ஆனந்தம். எப்படியாவது, பாரதியாரை சென்னைக்குக் கொண்டுபோய்விடுகிறது என்று அய்யர் அவர்கள் தீர்மானங் கொண்டார்.


தமிழர்களை அரசியல் துறையில் கண்விழிக்கச் செய்த மகான், சுப்பிரமணிய அய்யர். அவரிடம் அற்பத்தனம் சிறிதும் இருந்ததில்லை. பாரதியாரின் மேதையை நேரே கண்ட அய்யர் அவர்கள் சென்னைக்கு வரும்படி பாரதியாரை வேண்டிக்கொண்டார். தற்காலத்து பத்திராதிபர்கள், தவிக்கும் மேதாவி ஆசிரியர்களுக்கு, தக்க பரிவு காண்பிப்பார்களோ என்பது சந்தேகம். அய்யர் அவர்களின் அரசியல் தொண்டையும், அவர் பாரதியாருக்குக் காண்பித்த பரிவையும் அன்பையும் தமிழர்கள் ஒரு நாளும் மறக்க முடியாது.

இந்த இடத்தில் ஒரு சந்தேகம். பாரதியார் பத்திரிகைத் தொழிலை மேற்கொண்டது ஊதியத்தின் பொருட்டா அல்லது அவரது தேசபக்தி ஊக்கம் காரணமா? இதைப்பற்றி, எனக்குச் சிறிதளவு சந்தேகமிருந்தது. பாரதியாருக்கு 1904-ம் வருஷத்திலிருந்து நண்பரா யிருந்து வந்த எஸ். துரைஸாமி அய்யர் அவர்களிடம் சில நாட்களுக்குமுன், கேட்டேன்.

அவர் சொன்னதாவது:—"நமது நாட்டிலே பொதுவாக தேசபக்தி உணர்ச்சி தோன்றியது வங்காளப் பிரிவினையினல். அக்காலத்தில் விபின சந்திர பாலரின் எழுத்தும் பிரசங்கமும் நம்மவர்களைப் பெரிதும் கலக்கி வந்தன. இது 1905-ம் வருஷத்துக்குப் பின்னர். ஆனல் பாரதியோ (பாரதி என்றுதான் துரைசாமி அய்யர் சொல்லுகிறர்) 1904-ம் வருஷத்திலேயே, எனக்கு அரசியலில் தீவிர ஊக்கமும் உற்சாகமும் வரும்படி செய்தான். (நெருங்கிய நண்பர்களாதலால், செய்தான் என்று சொல்ல, அவருக்கு பாத்தியமுண்டு). பாரதியின் தேசபக்தி கடன் வாங்கின சரக்கல்ல. அது அவனுடைய சொந்த சொத்து. தமிழ்நாடுதான் பாரதி. அப்படித்தான் எனக்குச் சொல்லத் தெரியும்"

இதைக்காட்டிலும் அதிகமாக, வேறுயாரால் சொல்லமுடியும்?

மந்திரவாதியின் தந்திரம்



ஒரு பெரிய காளவாய் நெருப்பு. அகோரமாய் எரிகிறது. மந்திரவாதி கையில் கறித்துண்டங்களை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்து கதவை சாத்திக் கொள்ளுகிறான். சில நிமிஷங்கள் கழிந்ததும் கதவு திறக்கிறது. வெந்து போன மாமிசத்துண்டுகளோடு மந்திரவாதி வெளியே வருகிறான். அவனுக்கு எவ்வித சேதமுமில்லை, இது எப்படி நடக்கிறது?

காளவாய்க்குள் நுழைந்து கதவைச் சாத்தியதும், நெருப்புக்கு மேலே மாமிசத்துண்டங்களை தொங்கவிட்டு, பக்கத்திலுள்ள அறையில் பதுங்கிக் கொள்ளுகிறான். அவன் மூச்சு விடுவதற்கு வேண்டிய வசதிகள் அங்குண்டு. இது சபையி லிருப்போருக்கு தெரியாது.

அடுத்த மலரில் மற்றொரு தந்திரம் வெளிவரும்.

சென்சஸ் செலவு

1921-ம் வருஷத்தில் எடுத்த ஜன சங்கியை கணக்கிற்கு ரூ. 40, 13, 000 ஏற்பட்டது. 1931-ம் வருஷ ஜன சங்கியை எடுக்க ரூ. 48, 76, 700 ஏற்பட்டது அச்சு செலவுகள் முதலியன இரட்டிப்பு மடங்கிற்கு மேல் அதிகரித்து விட்டதினால இந்த அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறதென்றும் ஸ்ரீ. ஹுட்டன் கூறுகிறார். 1921-ல் 1000 பேர் கணக்கெடுக்க ரூ. 12—8 யாகியிருக்க. 1931-ல் 1000 பேருக்கு ஜனக் கணக்கெடுக்க 14 ரூபாய் ஆயிற்று. இங்கிலாந்திலும் வேல்ஸிலும் ஜனக் கணக்கெடுக்க 1000 பேருக்கு பவுன் 9—5—6 ஆயிற்று. அதாவது ரூ. 124. அச்சு, படங்கள் முதலியவைகள் இலலாமல ஏற்பட்ட செலவே இதுவாகும். இந்திய சென்சஸ் செலவிலிருந்து இச்செலவைக் குறைத்துவிட்டால் 1000-ம் பேருக்கு ரூ, 13—3—0 வீதந்தானாகிறது. வடக்கு அயர்லாந்தில் ஜனக் கணககு 1926-ல் எடுத்தபோது அச்சுக்கூலி யுள்பட 1000 பேருக்கு பவுன் 15—6—4 வீதமாயிற்று. அதாவது இந்தியாவில் ஆயிரம்பேருக்கு ரூ. 14 வீதம் செலவேற்பட்டிருக்கையில், வடக்கு அயர்லாந்தில ரூ. 202 ஆகியிருக்கிறது. ஆகையால், இந்திய சென்சஸ், உலகில் எடுக்கும் சென்சஸ் எல்லாவறறையும் விட சிறந்ததாக யிருப்பதோடு சீக்கிரமானதாகவும் செலவில் சிக்கனமானதாகவுமிருக்கிறது என்று ஸ்ரீ. ஹுட்டன் கூறுகிறார்.

நிலப் பரப்பு-ஜனத்தொகை

இந்த சென்சஸில் 18,00,000 சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. இதன் மொத்த ஜனத் தொகை 35 கோடி 30 லட்சம். ஆகையால் சராசரி ஒரு சதுர மைலுக்கு 195 பேர் வீதம் வசிக்கிறார்கள். இது சராசரி யெனினும் ஒரு சதுர மைலுக்கு வசிக்கும் ஜனங்களின் தொகை பலவிடங்களில் பலவிதமாக மாறுபடுகிறது. பலுசிஸ்தானம், சாகை ஜில்லா போன்ற குறைந்த ஜனத் தொகையைக் கொண்ட இடங்களில், முந்தியதில் சதுர மைலுக்கு 6. 5 பேரும், பிந்தியதில் சதுர மைலுக்கு ஒருவர் வீதமுமே வசிக்கிறார்கள். தென் மேற்கு கடற்கரை யோரங்களில் சில விடங்களில் சதுர மைலுக்கு 2000 பேர் வீதங்கூட வசிக்கிறார்கள். கொச்சி சமஸ்தானத்தில் அதிக ஜனங்களைக் கொண்ட கடலோரங்களும், ஜன வாசமே யற்ற உயர்ந்த இடங்களுமிருக்கின்றன. எனவே அந்த

சமஸ்தானத்தில் சராசரி 814.2 பேர் வீதம் வசிக்கிறார்கள். ஒரு கிராமத்தில் மாத்திரம் சதுர மைலுக்கு 4000 வீதம் அங்கு வசிப்பது ஆச்சரியப்படத் தக்கதாகும். வங்காளத்தில் இன்னும் அதிக ஜன நெருக்க முடைய பாகங்களு மிருக்கின்றன. டாக்கா டிவிஷனில் தான் ஜன நெருக்கம் அதிக மென்று கூறவேண்டும். அங்கும் சதுர மைலுக்கு 935 பேர் வீத மிருக்கிறார்கள். லோகாஜ் தஸ்தானு பிரதேசத்தில் ஒரு சதுர மைலுக்கு 3,228 பேர் வீதம் வசிக்கிறார்கள். முன்ஷிகஞ்ச் சப் டிவிஷனை 294 சதுர மைல்களைக் கொண்டது. அங்கு சதுர மைலுக்கு 2413 பேர் வசிக்கிறார்கள்.

ஜனத்தொகை

பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த ஜனத்தொகை மாத்திரம் 25.68,59,787. இதன் விஸ்தீரணம் 8,62,679 சதுர மைல். சுதேச சமஸ்தானங்களின் விஸ்தீரணம் 7,12,508. ஜனத் தொகை 8,13, 10, 845. பர்மாவின் ஜனத்தொகையும் சேர்த்தால் பிரிட்டிஷ் இந்தியாவின் ஜனத்தொகை 27.15,26,933. ஆகையால் இந்தியாவின் மொத்த ஜனத் தொகையில் 100க்கு 77 பேர் பிரிட்டிஷ் இந்தியாவிலும், 100க்கு 33 பேர் சமஸ்தானங்களிலு மிருக்கிறார்கள். பர்மாவைத் தனியாகப் பிரித்துவிட்டுப் பார்த்தால், பிரிட்டிஷ் இந்தியாவில் 100க்கு 76 பேர் வீதமும், சமஸ்தானங்களில் 100க்கு 24 பேர் வீதமுந்தான் வசிக்கிறார்கள்.

எங்கெங்கு இடங்களில் அதிக மழை இருக்கிறதோ, அந்த இடங்களில்தான் ஜன நெருக்கம் அதிகமா யிருக்கிறது. கொச்சி, கிழக்கு வங்காளம், ஐக்கிய மண்டலத்தின் வட கிழக்கு பாகம் பீஹாரின் வடகிழக்கு பாகம் இந்த விடங்களில் ஜன நெருக்கம் அதிகமா யிருப்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும். அஸாமிலும் மழை அதிக மெனினும் காடும் மலையும் அங்கு அதிகமாகையால் ஜன நெருக்கமில்லை. தென் பர்மாவில் அதிக ஜனங்களிருப்பதற்கு சௌகரிய மிருந்தும் அங்கு காடும் மலையும் அதிகமா யிருக்கிறது.

Printed at the "Tamil Nadu" Press, Madras. Published by T. S. Chockalingam, Editor & Proprietor, "Gandhi" Office 29, Sembudoss St., Madras



ஆசிரியர்: தெ. ச. சொக்கலிங்கம்

மாலை 2. { 1933 நவம்பர் 25௳ 29 செம்புதாஸ் தெரு, சென்னை } மலர் 8.

அட்டவணை.

நெ.	விஷயங்கள்.	பக்கம்.
1.	சூரபதுமன் போர்	602
2.	படார்சாமி கடிதங்கள்	605
3.	பொய்யும் புளுகும்	607
4.	ஆனந்த விகடன் அட்டகாசம்	612
5.	அமெரிக்க சோவியத் உறவு	614
6.	மகாத்மா வாழ்க்கை	615
7.	பாரதியார்	617
8.	ஸ்டாலின் மனைவி	623
9.	பைரவி ராகம்	629
10.	திருக்குறள் விளக்கப் படங்கள்	630
11.	மந்திரவாதியின் தந்திரம்	633
12.	தனிமை	637
13.	பிராமணனும்—சூத்திரனும்	640
14.	தமிழ் நாட்டில் மகாத்மா	648
15.	சீனா ஜப்பான் பகிஷ்காரம்	649
16.	அரசியல் ரகசியம்	655
17.	பௌர்ணமி	656
18.	செத்தேன் ; பிழைத்தேன்	665
19.	ஜனத்தொகை வீதாசாரம்	671
20.	திரிகால ரேகை சாஸ்திரம்	677

சூரபதுமன் போர்

பரிசுப் போட்டி மோசடி தோல்வியுற்றது. நமது கிளர்ச்சி ஒரு வகையில் ஜெயித்தது. தமிழர் உணர்ச்சியற்றவர்களல்ல என்பது மறுபடியும் வெளியாயிருக்கிறது. 2500 ரூபாய் பரிசு கொடுப்பதாக ஒரு விகடப் பத்திரிகை சந்து பொந்துகளிலெல்லாம் விளம்பரங்கள் ஒட்டியது. இந்தப் பரிசு எவ்வளவு மோசடியானது; இதனால் ஏழைகள் எப்படி ஏமாறுகிறார்கள்; தபாலாபீசுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது என்பதை நாம் "காந்தி" மலரில் தெளிவாய் எடுத்துக்காட்டியிருந்தோம். அதை துண்டுப் பிரசுரம் மூலமாகவும் தமிழ் நாடெங்கும் பரப்பினோம். தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கும், பத்திராசிரியர்களுக்கும் அனுப்பினோம். சகோதரப் பத்திரிகைகளாகிய சுதேசமித்திரன், தமிழ் நாடு, இந்தியா, ஜெயபாரதி, மணிக்கொடி, சைபுல் இஸ்லாம், லோகோபகாரி, தினகரன், தனவணிகன் ஆகிய பத்திரிகைகள் நமது கிளர்ச்சியை ஆதரித்து பலமாய் எழுதின. நாடெங்கும் போட்டிப்பரிசு மோசடி பகிரங்கமாய் விடவே, அங்கங்கே ஜனங்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். "காந்தி" அறிக்கையில் ஆயிரக்கணக்காக கையெழுத்து வாங்கி அனுப்பினர். பிரபலஸ்தர்கள் அனைவரும் தாங்களே கையெழுத்திட்டு நமக்கு நேராக அனுப்பி வருகின்றனர். சில முக்கியமான பெயர்களை கீழே குறிப்பிடுகிறோம்.



பந்தயக்காரர்.

ஸ்ரீமான்கள் "ஹரிஜன்" ஆசிரியர் ஆர். வி. சாஸ்திரி, ஈ. வே. ராமசாமி நாயக்கர், டாக்டர் வரதராஜுலு, ஹரி ஹர சர்மா, சி. என். முத்துரங்க முதலியார், எம். பக்தவச்சலம் பி.ஏ., பி.எல்., ஸ்ரீ பாத சங்கர், குமரன் ஆசிரியர் சொ. முருகப்பா, திருச்சி ஆர். நாராயணன் பி. ஏ., பி. எல்., பாகனேரி ஆர். வி. சாமி நாதன், கோவை டி. எஸ். அவினாசிலிங்கம் பி. ஏ., பி. எல்., சேலம் பி. பி. பவானி சிங், வை. நடேசன், எஸ். என். நரசிம்ம ராஜு, டி. என். நடராஜ பிள்ளை, வி. என். ரங்கசாமி ஐயங்கார், தாருல் இஸ்லாம் ஆசிரியர், கூடலூர் முத்துக்குமாரசாமி பாவலர், சுதந்திரச் சங்கு எஸ். கணேசன், டி. ஜே. ரங்கநாதன், கல்லிடை குறிச்சி பி. யக்ஞேஸ்வர சர்மா, எம்.ஏ., தூத்துக்குடி தேசபக் தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, மதுரை என். எம். ஆர். சுப்பராமன் விருதுநகர், கு. பெ. சங்கரலிங்கம், எல். எம். குலாம் அஹமது (சைபுல் இஸ்லாம்), ராஷனலிஸ்ட் ஆசிரியர் எஸ். ராமநாதன், ராஜபாளையம் பி. எஸ். குமாரசாமி ராஜா, பம்பாய் ஜம்புநாதர், ஸ்ரீ. வில்லிப்புத்தூர் வக்கீல் நல்ல குற்றாலம் பிள்ளை.

இவ்வளவு நண்பர்களும் நமது கிளர்ச்சியை மனப்பூர்வமாக ஆதரித்து கையெழுத்திட்டிருக் கின்றனர். மற்ற நண்பர்களின் பெயர்களை "காந்தி" தினசரியில் கொஞ்சம் கொஞ்சமாக வெளி யிட்டு வருவோம்.

இந்தக் கிளர்ச்சியின் பலனாக நமது கட்சி ஒரு வழியில் ஜெயித் தது. எப்படி என்று கேட்கலாம். இம்மாதம் 1ந்தேதி வெளியான ஆனந்த விகடன் என்ற விகடப் பத்திரிகை ரூ. 2500 பரிசு கொடுப்ப தாக புதிர் பிரசுரித்தது. நமது கிளர்ச்சி ஆரம்பமாய் விடவே, ஜனங்கள் பரிசுப் போட்டி மோசடியை உணர ஆரம்பித்தனர். 12-ந் தேதி வெளியான ஆனந்த விகடன் புதிதாக புதிர் போடாமல் 1-ந் தேதி வெளியிட்ட "மாற்றெழுத்து போட்டிப் பந்தயத்தை"யே மீண்டும் வெளியிட்டது. இது ஒன்றே போட்டிப் பரிசு தலையில் பலமான அடி விழுந்திருப்பதை காட்டப் போதுமானது. தன்னுடைய பத்திரிகை அதிகம் செலவாகிற தென்பதற்காக தபால் இலாகாவிற்கு கொள்ளை கொள்ளையாய் ஜனங்கள் பணம் கொட்டும்படி செய்கிற விகடனின் "தேசாபிமான" த்தை எடுத்துக் காட்டவே, விகடன் போட்டிப் பரிசு விஷயத்தில் தலைகாட்ட வேறுவழியில்லை, புறமுதுகு காட்டி ஓடியே போயிற்று; போட்டிப்பரிசு மோசடியோ வெளியாய்விட்டது; ஜனங்களோ பணம் அனுப்பப்போவதில்லை; இனி என்ன செய்வது? பிரவே சக் கட்டணமில்லாமல் ஆயிரம் ரூபாயை தூக்கிக் கொடுத்துவிட்டு

போவதாக 19வ பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது. 2500 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாய்க்கு அதைத் தாவும்படி செய்ததும் பிரவேசக் கட்டணத்தை ஒழிக்கும்படி செய்ததும் எது? பொது ஜனக் கண்டனம்! பொதுஜனங்கள் இருக்கிறார்களே—அவன்தான் அந்த நடுத்தெரு நாராயணன்—அவர்கள் விழிப்படைந்தால் போதும். எப்பேர்ப்பட்ட மோசடியும் ஒருவிநாடி கூட அப்புறம் நிற்கமுடியாது. ஆனந்தவிகடன் பிரவேசக்கட்டண பரிசை விட்டு விடும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டது, நமது கிளர்ச்சிக்கு ஒரு பலே முதல்தர வெற்றிதான். என்றாலும் நமது கிளர்ச்சி இத்துடன் நின்றுபோகவில்லை. இன்னும் பரிசு போடக்கூடிய வேறு சில பத்திரிகைகள் இருக்கின்றன. காஞ்சி குமார விகடன் போட்டிப் பரிசை விட்டு விட்டதை பாராட்டுகிறோம். பிரசண்ட விகடன் இன்னம் விடவில்லை. வேறு பல பத்திரிகைகளும் இருக்கின்றன. அவைகளும் விடும்படி செய்யவேண்டும். தமிழ்நாட்டை விட்டு இந்த போட்டிப் பரிசு—பிரவேசக் கட்டணம வாங்கியோ வாங்காமலோ எதுவானாலும் சரி—அடியோடு தொலைகிறவரை நமது கிளர்ச்சி நிற்காது.

ருசிகண்ட பூனை விடாது. போட்டிப்பரிசு போட்டு ஜனங்களை ஏமாற்றி பழகியவர்கள் வேறு எங்கே வழி அகப்படுகிறது என்றே எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். சூரபதுமன் எத்தனை உருவங்களில் மாறி யுத்தஞ் செய்தான்? அதைப்போல இவர்களும் பல வேஷங்களில் மாறுவார்கள். மறுபடியும் பழைய முறைக்கு அவர்கள் திரும்பினாலும் திரும்பலாம். ஆகவே அவற்றைக்கண்டு ஏமாறாமல் இருக்கவேண்டும். "பிரவேசக் கட்டணமில்லாத பரிசு" என்ற மோசடியை, படார்சாமி நடுத்தெரு நாராயணனுக்கு எழுதிய கடிதத்தில் பார்க்கவும். இந்த மாறுவேஷ மோசடிகளை உடனுக்குடன் ஜனங்களுக்கு விளக்குவதற்காகவே டிசம்பர் 1வ முதல் "காந்தி" தினசரி வெளிவருகிறது. தேசாபிமானத்தின் பெயராலோ பாஷாபிமானத்தின் பெயராலோ தமிழரிடம் யார் மோசடி செய்ய நினைக்கிறார்களோ, அவர்கள் யோக்கியதையை வெளிப்படுத்தி தமிழரை காப்பாற்றுவதே "காந்தி" தினசரியின் பிரதம லட்சியம்.

படார்சாமி கடிதம்

(3)

சிரஞ்சீவி,

நடுத்தெரு நாராயணன், தமிழ்நாடு.

தம்பி,

2500 ரூபாய் போட்டிப் பந்தயத்தை நீ உதறிவிட்டதாகத் தெரிந்து மிகுந்த சந்தோஷமடைகிறேன். ஆனந்தவிகடன் 19-ந் தேதி பத்திரிகையில் பிரவேச கட்டணமில்லாத பந்தயம் போட்டிருப்பதாய் எழுதுகிறாய். இதில் ஏன் சேரக்கூடாது என்று கேட்கிறாய். விஷம் விஷம்தான். ஒரு துளியானாலென்ன? ஒரு குடமானால் என்ன? நீ புத்திசாலித்தனமாக, போன பந்தயத்திற்கு விடையோ பரிசுக் கட்டணமோ அனுப்பவில்லை. அதனால் உன்னை மயக்க இது மற்றொரு தந்திரமாகும். இனி பிரவேசக் கட்டணம் வசூலாகப்போவதில்லையென்பது ஆனந்தவிகடனுக்குத் தெரிந்து போயிற்று. ஆகவே ஒருவன் ஒன்றுக்குமேல் பல பத்திரிகைகள் வாங்கிவந்ததாவது குறையாமலிருக்கட்டும் என்பதற்காக இந்த தந்திரம் செய்திருக்கிறார்கள். எப்படி என்று சொல்லுகிறேன். 45 ஆயிரம் பிரதிகள் ஒவ்வொரு வாரமும் விற்பதாக விகடன் விளம்பரம் செய்கிறான். அப்படியானால் எச்செலவும்போக வாரம் ரூ 3500 லாபம் கிடைக்கும். இந்த 3500 ரூபாயில் ஆயிரம் ரூபாயைக் கொடுத்தாவது வாங்குகிறவர்களை வலையில் போடவேண்டுமென்பது அவர்கள் நினைப்பு. கிடைக்கிற லாபத்தில் ஒரு பகுதியை அவர்களாக கொடுக்கும்போது ஏன் வாங்கக்கூடாது என்று கேட்கிறாய். இதுதான் உன்னுடைய அசட்டுத்தனம். உனக்கு இந்த அசட்டுத்தனம் இருப்பதை வி. பி. வர்த்தகத்தில் கைதேர்ந்த விகடன் கூட்டத்தார் அறிவார்கள். ஒரு ஆசாமி நூறு பிரதிகள்வரை 'விகடன்' வாங்குவது அவர்களுக்குத் தெரியும். ஆகவே பரிசு இல்லாதவரை அந்த ஆசாமிகள் ஒன்றுக்குமேல் அதிகப் பிரதிகள் வாங்கமாட்டார்கள். இதனால் என்ன ஏற்படுகிறது? பிரவேசக் கட்டணம் இல்லையென்றாலும், ஒன்றுக்குமேல் அதிகப் பிரதிகள் வாங்குவதன்மூலம் வேறு வருவாயாக பிரவேசக்கட்டணம் செலுத்துகிறார்கள். இந்த முட்டாள்தனம் உனக்குத் தெரியவில்லையே! அதிகப் பிரதிகளுக்காக நீ செலவிடும் பணம் வீண் வியர்த்தம்தானே? நீ எத்தனை பிரதிகள் வாங்கி கூப்பன்கள் அனுப்பினாலும், மாற்று விடைகள் நூற்றுக்கணக்காய் இருக்கும்போது உனக்கு பரிசு கிடைக்கும் என்பது என்ன உறுதி? 2500 ரூபாய் கொடுத்தவர்

கள் ஆயிரம் ரூபாய்க்கு தாவியதிலிருந்து மாற்றுவிடை மோசடிகள் ஏராளமாய் இருப்பது உனக்குத் தெரியவில்லையா ?

இனி தாபாலாபீசிற்கு உங்கள் கூட்டத்தார் செலவிடும் பணத்தை பார்ப்போம். சென்ற தீபாவளியில் கதர்பரிசு போட்டார்களல்லவா? அதற்கும் பிரவேசக் கட்டணம் கிடையாது. அதற்காக 25 ஆயிரம் விடைகள் வந்ததாக ஸ்ரீ. என். தண்டபாணிப் பிள்ளை சொல்லுகிறார். 25 ஆயிரம் விடைகளுக்கும் தபால் செலவில் மட்டும் உன் கூட்டத்தார் 2 ஆயிரம் ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். 2 ஆயிரத்தை செலவிட்டுவிட்டு சிலர் 300 ரூபாய்க்கு கதர் பரிசு பெற்றார்களாம். பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்வதற்கும் இதற்கும் வித்தியாசமுண்டா? அட அசடே-கவனி !

இனி கட்டணமில்லாத பரிசைப்பற்றி சொல்லுகிறேன். 45 ஆயிரம் பிரதிகள் செலவாகிறதாக விகடன் சொல்லுகிறான். 45 ஆயிரம் விடைகளை தபாலில் அனுப்ப என்ன செலவாகிறது தெரியுமா? $1\frac{1}{4}$ அணு வீதம் ரூ. 3500 ஆகிறது. 3500 ரூபாயை தபாலாபீசுக்கு தாரை வார்த்துவிட்டு ஆயிரம் ரூபாயை பெறவேண்டுமாம்! இதை விட தேசத்துரோகமான வேலை வேறுண்டா ? தன்னுடைய பிரதிகள் செலவாகவேண்டுமென்பதற்காக, தன்னுடைய லாபத்தில் ஒரு பகுதியாகிய ஆயிரம் ரூபாயை உங்களில் யாருக்கோ கொடுப்பதாக விகடன் சொல்லுகிறான். உடனே ஆடுகள் போல நூறு, ஐம்பது என்று நீங்கள் விகடன் பிரதிகள் வாங்குகிறீர்கள். பரிசு கிடைக்காதா என்று பேராசை கொண்டு 3500 ரூபாயை $1\frac{1}{4}$ அணு வீதம் தபாலாபீசில் கொட்டுகிறீர்கள். இது தான் உங்கள் மனப்பான்மை. இதுதான் உங்கள் சுபாவம். அட தம்பீ, உங்கள் கூட்டத்தாரின் இத்தகைய அசட்டுத்தனத்தையும், அதை தங்களுக்கு அநுகூலமாக உபயோகப்படுத்தும் விகடன் கூட்டத்தாரின் "பாஷா வளர்ச்சி" கைங்கரியத்தையும் நினைக்கும்போது எனக்கு கண்ணீர் வருகிறது. அட தம்பீ, உன் தேசாபிமானம் எங்கே போயிற்று? அவலை நினைத்து உரலை இடிக்கிறமாதிரி, பரிசை நினைத்து பணத்தை கரியாக்குகிற புத்தி உனக்கு எங்கிருந்து வந்தது ?

உனக்கு என்றாவது விமோசனம் உண்டா ? தேசிய இயக்கம் குறைந்ததால் அல்லவா இந்த வழிகளில் உன் புத்தி திரும்பிற்று ? போனது போகட்டும். மகாத்மா தமிழ் நாட்டிற்கு வரப்போகிறார். அவர் வருமுன்பாவது உனது போட்டிப்பந்தய புத்தியை ஒழித்து நல்ல புத்தியடைய முயற்சி செய். —படார்சாமி.

பொய்யும், புளுகும்



(பந்தயப் பாம்புக்கு எதிர்பாராத "இஞ்செக்ஷன்" நடக்கவே, பதறுகிறது.)

ஆனந்தவிகடன் போட்டிப்பந்தயப் பரிசு என்றபெயரால் இதுவரை ஜனங்களை ஏமாற்றிவந்தது. இரண்டேவாரம் நாம் அந்த மோசடியைப் பற்றி பிரசாரம் செய்தோம். உடனே போட்டிப் பந்தயம் குப்புற விழுந்துவிட்டது. முன்பற்கள் உடைந்துபோயின. கோபம் பொங்கி வாயில் வந்ததை உளறுகிறது. அதன் பந்தய மோசடியைப்பற்றி நாம் எழுதியதால், அதன் வியாபகத்தைப்பார்த்து நாம் பொறாமைப்படுவதாகக் கூறுகிறது. என்ன அருமையான வாதம்! ஆனந்தவிகடன் ஒவ்வொரு வாரமும் 45 ஆயிரம் பிரதிகள் செலவாகிறதாகக் கூறுகிறது. 45 ஆயிரம் வாசகர்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்தால் அதைக்கண்டு உண்மையாக நாம் சந்தோஷப்படுவோமே யொழிய பொறாமைப் படமாட்டோம். ஆனால் உண்மையென்ன? 45 ஆயிரம் பிரதிகள்

செலவாகிறதாயிருந்தாலும், 45 ஆயிரம் பேர் வாங்குவதில்லை. பரிசுக்கு ஆசைப்பட்டு ஒவ்வொருவரும் பத்து இருபது ஐம்பது, நூறு பிரதிகள் வரை வாங்குகிறார்கள். இவர்கள் பரிசு கூப்பனை வெட்டி எடுத்துக்கொண்டு மீதத்தை மூலையில் எறிந்துவிடுகிறார்கள். இந்த முறையால் தமிழ்நாட்டில் ஓட்டாண்டிகளானவர்கள் அநேகர். அவற்றிற்கு ஜாப்தா சேகரித்து வருகிறோம். "காந்தி" தினசரியில் பிரசுரித்து வருவோம். ஆகவே 45 ஆயிரம் பிரதிகள்—ஆனந்த விகடன் சொல்லுகிறபடி—செலவானபோதிலும், வாசகர்கள் 45 ஆயிரம் பேர்கள் இல்லையென்பது நிச்சயம். இனி ஆனந்தவிகடன் சென்ற 19உ எழுதிய சில விஷயங்கள் எவ்வளவு மடத்தனமானவை என்பதை நிரூபிக்கிறோம்.

மற்ற தமிழ்ப் பத்திரிகைகள் நடத்துவோர் அர்த்தமாகாத பாஷையில் சுவையற்ற விஷயங்களை எழுதுகிறபடியால் அவர்கள் பத்திரிகைகள் விற்கவில்லையென்று ஆனந்தவிகடன் சொல்லுகிறது. தன்னைத்தவிர மற்றவர்களுக்கு அறிவில்லையென்று யாராவது சொன்னால், அவனுக்கு மூளையில் கோளாறு ஏற்பட்டுவிட்டதென்பது நிச்சயம். பந்தயப் போட்டிக்கு ஆபத்துவந்தவுடன் ஆனந்த விகடன் அந்த நிலைமைக்கு வந்துவிட்டது.

தேசிய இயக்கத்தின் பெயரால் தமிழ் பத்திரிகைகள் வளர்ந்து வந்ததாகவும், தேசிய இயக்கம் குறைந்தவுடன் அவற்றின் செலவும் குறைந்துவிட்டதாகவும் விகடன் கேலிசெய்கிறது. தேசிய இயக்கம் குறைந்து நாட்டில் சோர்வு ஏற்பட்டிருக்கிறதென்பது உண்மையே. இச்சமயத்தை தனக்கு ஆதரவாகக்கொண்டு, காங்கிரசையும் தலைவர்களையும் கேலிசெய்து பரிசாலும், போட்டியாலும் மயக்கி ஜனங்களை ஏமாற்றிவருவது யார்? ஆனந்த விகடன்! ஆனந்த விகடன் விகடம் என்ற போர்வைக்குள் புகுந்துகொண்டு ஜாதிப்பூசலை வளர்த்துவருவதையும், தலைவர்களை மறைமுகமாக தாக்கி வருவதையும் நண்பர்கள் அறிவார்கள். அதன் ஆசிரியர் கதர் கட்டுவதுமில்லை; காங்கிரசில் சேர்ந்ததுமில்லை. ஆனால் பத்திரிகையில் கதர் பரிசு, மகாத்மா நொண்டிச்சிந்து பரிசு முதலிய பரிசுகள் போட்டு ஜனங்களை மயக்குவதில் பின்வாங்குவதில்லை. ஒருபக்கம் காங்கிரஸ்காரரை கேலி செய்வது. மற்றொரு பக்கம் தமிழ் தெரியாத தேவதாஸ் காந்தி ஆனந்த விகடனைப் பற்றி சொல்லியதாக ஒரு விளம்பரம். இதைவிட மோசடி வேறென்ன வேண்டும்?

அயல்நாட்டு சாமான்களின் விளம்பரத்தால் சில தமிழ்நாட்டு பத்திரிகைகள் உயிர் வாழ்வதாக விகடன் கூறுகிறது. அடமானங்

கெட்ட பேச்சே! விகடன் பத்திரிகையில் முன் பக்கம் பின்பக்கத்தை பாருங்கள். நரைமயிர் கருக்கும் "கோமலின்" தைலம், பூவேலை தைக்கும் மெஷின், தையல் இயந்திரம், நாகரிக நங்கையர் கழுத்துச் சங்கிலி, 130 சாமான்களுடன் ஒரு பௌண்டன் பேனு, அலாரம் பிஸ்டல், ஹாண்ட் காமிரா, ரப்பர் பெலாரி, பாரிஸ் படுக்கை யறைப் படங்கள் முதலிய பரதேச சாமான்கள் விளம்பரம். இவற்றை விற்பனை செய்வது யார்? விகடன் கம்பெனியார்தான். இந்தக் கூட்டம், மற்ற பத்திரிகைகள் பரதேச சாமான் விளம்பரம் செய்வதாக சொல்லுவது வெட்கக் கேடல்லவா?

காந்தி, சங்கு காலனு பத்திரிகைகள் மறைந்து போய்விட்டதாக விகடன் ஆர்ப்பரிக்கிறது. தேசிய இயக்கம் வேகமாய் இல்லாததால்தான் அவை மறைந்து போயின என்பதும் உண்மையே. அதனுல்தான் விகடன் வளர்ந்தது என்பதும் உண்மையே. தேசிய இயக்கம் பலமாயிருந்தால் ஜனங்கள் விகடத்திற்கோ, அல்லது மோசடி பந்தயத்திற்கோ திரும்ப மாட்டார்கள். பெரிய திருவிழா கூட்டத்தில் திடீரென்று மின்சார விளக்குகள் நின்று போய் விட்டால் எப்படி யிருக்கும்? யார் ஆர்ப்பாட்டம் பலமா யிருக்கும்? அம்மாதிரி திடீரென்று தேசிய இயக்கம் குறைந்துபோகவே, விகடன் கூட்டத்தார் ஆர்ப்பாட்டஞ் செய்யக் கிளம்பி யிருக்கிறார்கள். "தேசிய இயக்கம் மிக மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது "விகட" னுக்கிருந்த நேயர்களின் தொகையைப்போல் இப்போது மூன்று மடங்கு இருப்பதே அதற்கு அத்தாட்சியாகும்" என்று ஆனந்த விகடன் 19உ எழுதுகிறது. வேறு நாம் அத்தாட்சி கூறவேண்டியதில்லை.

தன்னைப் பார்த்து மற்றவர்கள் "காப்பி" அடிப்பதாக விகடன் கூறுகிறது. நாம் படார்சாமி கடிதங்கள் பிரசுரிக்க ஆரம்பித்தவுடன் விகடன் அந்தாத் தபால் பிரசுரிக்க ஆரம்பித்தது. நாம் மகாத்மா ஜெயிலிலிருந்து விடுபட்டதை படம் மூலமாக பிரசுரிக்க ஆரம்பித்தவுடன், விகடன் மகாத்மா வாழ்க்கையை படம் மூலமாக பிரசுரிக்க "காப்பி" அடித்தது. நாம் திருக்குறள் விளக்கப் படம் பிரசுரித்தவுடன், அதிலும் காப்பி அடிக்க விகடன் பின்வாங்கவில்லை; பாரதியார் பாட்டுகளுக்கு படங்கள் போட ஆரம்பித்திருக்கிறது. இனி உள்ளே பிரசுரித்திருக்கிற படங்களை பார்ப்போம். மேல் நாட்டு பத்திரிகைகளின் கூடார்த்தப் படங்களை அப்படியே விகடன் காப்பி அடித்து வந்தது. இந்த மோசடியை வெளிப்படுத்த எண்ணி, நாம் அவற்றை பிரசுரித்து அவற்றின் கீழே பத்திரிகைகளின் பெயர்களையும் போட்டோம். விகடனுக்கு

சங்கடமாய் போகவே, பத்திரிகைகளின் பெயர்களை ஆங்கிலத்தில் போட்டு வருகிறது. இது தமிழரை ஏமாற்றும் வித்தை யல்லவா?

இனி விஷயங்களை எடுத்துக் கொள்ளுவோம், சீமையில் பிரசுரமாகும் "பஞ்ச்" "ஹுமரிஸ்ட்" முதலிய பத்திரிகைகளில் வெளியாகும் விஷயங்களும், ஹில்லரி பெல்லாக், வோட் ஹவுஸ், ஜெரோம், மார்க் டுவெயின், ஸ்டீபன் லீகாக் முதலிய ஹாஸ்ய ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்களும் விகடனுக்கு அப்படியே "காண்டிராக்ட்". எங்கெந்தக் கதைகள் யார் யாரிடமிருந்து திருடியவை என்பதற்கு நாம் ஜாப்தா வைத்திருக்கிறோம். அவசிய மேற்படில் அவற்றை வெளியிடுவோம்.

இனி விகடன் பிறப்பை பார்ப்போம். விகடன் பிறப்பே "காப்பி"யடித்த பிறப்பு தான். ஆனந்த போதினி பதினாயிரக் கணக்கில் செலவாய் வந்தபோது அதை காப்பியடிப்பதற்காகவும், அதன் சொந்தக்காரர் ஸ்ரீ நா. முனிசாமி முதலியார் நடத்தி வந்த வி. பி. வர்த்தகத்தை காப்பி யடிப்பதற்காகவுமே விகடன் பிறந்தான். இந்தக் கதையை பூர்ணமாய் அறிய வேண்டுமானால் ஸ்ரீ. முனிசாமி முதலியாரிடம் கேட்க வேண்டும். இப்பொழுது யார் யாரைக் காப்பி அடிக்கிறார்கள் என்ற விஷயம் தமிழருக்கு விளங்கியிருக்கும்.

போட்டிப் பந்தயத்தால் விகடன் வளரவில்லை யென்றும், உள்ளேயுள்ள விஷயங்களாலேயே வளர்ந்ததென்றும் விகடன் சொல்லுகிறது. ஒரு உதாரணம் கூறுகிறோம். ஆகஸ்ட் 1வ பிரதிகளில் ராசிபுரத்தில் 25 பிரதிகள் விற்றதாகவும், அதே ஊரில் நவம்பர் 1வ பிரதிகளில் 225 பிரதிகள் விற்றதாகவும் விகடன் கூறுகிறது. இம்மாதிரியே ஒவ்வொரு ஊரிலும் விற்பனை கூடி யிருப்பதாக விகடன் கணக்கு காட்டுகிறது. அந்த கணக்கை வைத்தே நாம் பார்ப்போம். 3 மாதங்களுக்குள் ஒன்பது பங்கு அதிகரிக்க காரணமென்ன? பாஷாபிமானமா அல்லது பரிசு மோகமா? தமிழருக்கு ஆகஸ்ட் மாதத்தில் இல்லாத பாஷாபிமானம் நவம்பரில முளைத்துவிட்டதா? மூன்று மாதங்களுக்குள் விகடனின் "எழுத்துச்சரக்கு"களைப் பார்த்து தமிழர் மோகங்கொண்டுவிட்டார்களென்று சொல்லமுடியாது. வெறும் பரிசு மோகமே அதிகப் பிரதிகள் செலவாகிறதற்குக் காரணம். முன்னால் வாங்கிய அதே ஆசாமிகள் பரிசு மோகங்கொண்டு அதிகப் பிரதிகள் வாங்குகிறார்கள். சில தற்குறிகள்கூட பரிசுக்கு ஆசைப்பட்டு 50, 100 பிரதிகள் வாங்கி, பிறரைக்கொண்டு விடை எழுதி அனுப்பச் சொல்லுவதையும் நாம் அறிவோம். இதுதான் விகடனின்

"சரக்கு முறுக்கு!". போஸ்டர்களை எடுத்துக்கொள்ளுவோம். விகடன் போஸ்டர்களில் காணப்படுவது எது? உள்ளேயுள்ள விஷயமல்ல. ஆயிரம் ரூபாய் பரிசு! 2500 ரூபாய் ரொக்கப் பரிசு! விகடன் மற்றப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது எது? ரொக்கப் பரிசு! ஆகவே போட்டிப் பந்தயத்தாலும், ஜனங்களின் பலவீனமான உணர்ச்சிகளை கிளப்பி விடுவதாலுமே அது உயிர் வாழ்ந்து வருகிறது என்பது உறுதியாகிறது. "மைலாப்பூர் மாதுக்கு ரூ. 300 பரிசு" என்று போஸ்டர் போட்டிருக்கிறது. இதைவிட அயோக்கியத்தனமான போஸ்டரை பார்க்கமுடியுமா என்று தமிழரை கேட்கிறோம்.

"பத்திரிகை வளர்ச்சிக்கு போட்டிப் பந்தயம் அவசியம் என்று நாம் கருதுகிறவரையில் அதை நடத்தி வருவோம்" என்று விகடன் கூறுகிறது. தமிழர் வாழ்வை இந்தப் போட்டிப் பந்தயம் குட்டிச் சுவராக்கி வருவதால், அதைத் தொலைக்கிற வரையில் நாம் கிளர்ச்சியை நிறுத்தப் போவதில்லை என்று மறுபடியும் கூறுகிறோம். தமிழர் ஆதரவு நமக்கு பூர்ணமாயுண்டு. ஆனந்த விகடன் காங்கிரஸ் பெயரால தமிழரை ஏமாற்றி வரும் வித்தையை சீக்கிரம் வெளிப்படுத்துவோம்.

1930-ம் வருஷத்தில் விகடன் அச்சாபீசுக்கு சர்க்கார் ஜாமீன் கேட்டார்கள். இதை ரத்துச செய்யும் பொருட்டு 1930-ம் வருஷம் ஜூலை மாதம் 21-ந் தேதி யன்று விகடன் ஆசிரியர் உதகமண்டலத்தில் சர். ஊஸ்மான் சாயபுவிடம் மனுக்கொடுத்தார். அப்பொழுது என்ன சொன்னார் தெரியுமா? "நான் பரதேச சாக்குகள் வர்த்தகஞ் செய்கிறேன். எனது வி. பி. வர்த்தகத்தால் தபாலாபீசுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபாய்க்கு குறையாமல் கிடைக்கிறது. எனது பத்திரிகை நின்று போய் விட்டதால் வர்த்தகம் நின்று போய் அதனால் தபால் இலாகாவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே என்னிடம் கேட்கும் ஜாமீனை ரத்துச் செய்ய வேண்டும்" என்று சொன்னார்.

இதே ஆனந்த விகடன் தேசாபிமானத்திற்காகவும், பாஷா வளர்ச்சிக்காகவும் பாடுபடுவதாகச் சொல்லுவது எவ்வளவு அபத்தமென்பதை தமிழர் சீர்தூக்கிப் பார்ப்பார்களாக.

ஆனந்த விகடன் அட்டகாசம்

ஆனந்த விகடன் பிரசுரித்து வரும் போட்டிப் பந்தய மோசடியை நாம் வெளிப்படுத்தியது அதற்குப் பொறுக்கவில்லை. "காந்தி" பத்திரிகையை நசுக்கி விடலாமென்று கனவு காண்கிறது. அதற்காக என்னென்னவோ செய்து வருகிறது. சென்னை நகரில் "காந்தி" விற்காதபடி செய்ய ஆனந்த விகடன் பிரகஸ்பதிகள் பணத்தால் என்ன செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்து பார்த்துவிடத் துணிந்திருக்கிறார்கள். இதே மாதிரி வெளியூர்களிலுள்ள ஏஜன்டுகளுக்கும் விகடன் தாக்கீது அனுப்பியிருப்பதாய் தெரிகிறது. தமிழ் நாடெங்குமுள்ள ஆனந்த விகடன் ஏஜன்டுகளைக் கொண்டு "காந்தி"யை நிறுத்தி விடலாமென்பது விகடன் கூட்டத்தாரின் நினைப்பு.

விகடன் கூட்டத்தாருக்கு பயந்து கொண்டு இவ்விஷயங்களை நாம் இங்கே எழுதவில்லை. அல்லது இங்கே எழுதுவதால் விகடன் கூட்டத்திற்கு புத்தி வருமென்று நாம் நம்பவில்லை. விகடன் கோஷ்டியின் முற்கால தற்கால எதிர்கால யோக்கியதையையும், அவர்களுடைய பணம்—விகடப் பணம்—அவர்களுடைய மூளையைக்கொண்டு நமக்கு விரோதமாய் எவ்வளவு தூரம் உபயோகிக்கப்பட முடியுமென்பதையும் நாம்நன்றாய் அறிவோம். ஆகவே "காந்தி"க்கு விரோதமாய் அந்தக் கோஷ்டி செய்யும் வேலைகளைக் கண்டு "காந்தி" நண்பர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்கள் முயற்சி இதுவரை பலிக்கவில்லை. இனி பலிக்கப்போவதுமில்லை. ஏனெனில் அவர்களின் விஷமத்தை நொடிப் பொழுதில் பலிக்க விடாமல் நசுக்கிவிட நம்மால் முடியும். ஜனங்களின் நன்மையை உத்தேசித்து உண்மையை வெளியிட நாம் முன் வந்ததைக் கண்டு, ஆனந்த விகடன் எவ்வளவு வயிற்றெரிச்சல் கொண்டிருக்கிறது எனபதை காட்டுவதற்காகவே இவற்றை இங்கே வெளியிடுகிறோம்.

ஆனந்த விகடன், வாசகர்கள், போட்டிப் பந்தடக்காரர்கள் கருணையால் பணத்தில் புரளுகிறது. ஆகவே பணத்தால் எதையும் செய்து விடலாம்; "காந்தி"யைக்கூட மறையும்படி செய்துவிட

லாமென்று நினைக்கிறது. ஆனல் பணத்தால் எதைச் செய்ய முடியும், எதைச் செய்ய முடியாது என்பதை அது உணரவில்லை. "காந்தி" அதைப் போல பணத்தில் புரளவில்லையென்பது உண்மையே. ஆனல் ஆனந்த விகடனல் பணத்தாலும் செய்யமுடியாத வேலையை "காந்தி" வெறுங்கையால் செய்துவிட முடியும். ஏனெனில் "காந்தி" மீது உண்மை அன்பு கொண்டவர்கள் தமிழ் நாடெங்கு முண்டு. இன்று "காந்தி"க்கு ஏஜன்டுகளாக தமிழ் நாடெங்கும் இருப்பவர்கள் லாபத்திற்காக வேலை செய்பவர்களல்ல. "காந்தி" மீது கொண்டுள்ள அன்பிற்காக உழைக்கும் பரிசுத்த அன்பர்கள். ஒரு ஊரில் ஆனந்த விகடன் ஏஜன்சியால் 50 ரூபாய் லாபம் கிடைக்கிற தென்றும் 'காந்தி" ஏஜன்சியால் 5-ரூபாய் கிடைக்கிற தென்றும் வைத்துக் கொள்ளுவோம். "காந்தி, விற்றல் ஆனந்த விகடன் கொடுக்க மாட்டோம்; இரண்டில் ஒன்றை விடவேண்டும்" என்று அந்த ஏஜன்டிடம் சொன்னல் அவர் என்ன செய்வார் என்று நினைக்கிறீர்கள்? "லாபமில்லாமல் நஷ்டம் ஏற்பட்டாலும் "காந்தி" ஏஜன்சியை விடமுடியா" தென்றுகூறுவார். "காந்தி"யின் பெருமையை அவர் அறிவார்.

இம்மாதிரி அன்பர்கள் தமிழ் நாடெங்கும் இருக்கும் போது, "காந்தி"யை யாரால் அசைத்துவிட முடியும்? சர்க்காரால் கூட அசைக்கமுடியாத "காந்தி"யை. கேவலம், சர்க்காரிடம் மன்னிப்புக்கேட்ட இந்த விகடக் கூத்தாடிகளாலா அசைத்து விட முடியும்?

பரிசுப் போட்டி மோசடியை தொலைப்பதென்று தீர்மானித்து விட்டோம். நமது கிளர்ச்சியை பொது ஜனங்களும் பூர்ணமாய் ஆதரிக்கிறர்கள். சேலத்தில் பரிசுமோசடியை கண்டிக்கவும் நம்மை ஆதரிக்கவும் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவசியமானல் தமிழ் நாடெங்கும் அம்மாதிரி நடைபெறும். இதைப் பார்த்து கோபங்கொண்டு சுயநலக்காரர் நமக்கு இடையூறு செய்ய முயற்சிக்கிறர்கள். பேடித்தனமான முறைகளை— அதாவது ரகசிய முறைகளை—விட்டுவிட்டு நேரடியாக நடந்து கொள்ளும்படி எச்சரிக்கிறேம். இந்த பரிசுப் போட்டி மோசடியை ஒழிப்பதற்காகவே டிசம்பர் 1௳ முதல் "காந்தி" தினசரிப் பதிப்பும் வெளிவருகிறது.

:: அமெரிக்கா-சோவியத் உறவு ::

சோவியத் ஏற்பட்டு இவ்வளவு காலமாக அமெரிக்க சர்க்கார் அதனுடன் யாதொரு ராஜீய வர்த்தக சம்பந்தமும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இரண்டுமாத காலமாகஅதைப்பற்றி பேச்சு நடந்தது.



ரஷிய சர்க்காருக்கு இடங்கொடுத்தால் புரட்சி இயக்கத்தைக் கிளப்பிவிட்டு அமெரிக்காவிலுள்ள தொழில்களையெல்லாம் நாசம் செய்துவிடுமென்று அமெரிக்காவில் சிலர் அபிப்பிராயப் பட்டார்கள்சிக்காகோ



டிரைப்யூன் என்றபத்திரிகையில் ஆர் என்பவர் இந்தக் கருத்தை விளக்கி ஷை படம் எழுதியிருக்கிறார்.

கண்ணிருந்தும் பார்க்காதவர்களே உண்மைக் குருடர்கள். ரஷிய வர்த்தகம் அமெரிக்காவின் பொருள் நிலையை உயர்த்த மிகவும் உதவியாக இருக்கும். இதை கவனிக்காமல் பழய கொள்கையையே அனுஷ்டிப்பது தவறு என்பது வேறு சிலரது அபிப்பிராயமாக இருந்தது. இதை விளக்கி டால்பர்ட் என்பவர் "டெயிலி நியூஸ்"

மகாத்மா வாழ்க்கை

:: ஸிகரெட்டுக்காக தற்கொலை! ::

இளம் வயதில் பலவிதமான சபலங்களும் அவற்றின் பயனாகச் சில கெட்ட பழக்கங்களும் ஏற்படுவதுண்டு. இந்த பழக்கங்கள் நாளடைவில் வலுவடைந்து மனிதனை அடிமையாக்கி விடுகின்றன. ஆனால் அகஸ்மாத்தான சில விஷயங்கள் ஏற்பட்டு இந்தப் பழக்கங்கள் ஆரம்பத்திலேயே நசித்துப் போவதும் உண்டு. சில பாக்கியசாலிகளுக்கே இம்மாதிரி ஏற்படும்.

பெரிய மனிதர்கள் சில கெட்ட பழக்கங்கள் வைத்துக்கொண்டிருப்பார்கள். குழந்தைகள் அவர்களைப் பார்த்து இதில் மோகம் கொள்கிறார்கள். மகாத்மா காந்தி சிறு பையனாக இருந்த காலம். காந்தியின் சிறிய தகப்பனார் சிகரெட் குடிப்பது வழக்கம். "நாமும் இவரைப்போல் சிகரெட் சாப்பிட்டால் நன்றாயிருக்குமே" என்று காந்திஜிக்குத் தோன்றிற்று. சிகரெட்டின் ருசியிலோ காரத்திலோ உள்ள ஆசையல்ல. வாய் வழியாக புகையை விடுவதில் ஒரு உற்சாகம்!

ஆனால் சிகரெட்டு எப்படிக் கிடைக்கும்? அவருடைய சிறிய தகப்பனார் குடித்துவிட்டு தூரே எறிந்த எச்சில் சிகரெட் துண்டுகளைப் பொறுக்கி வைத்துக்கொண்டு அவற்றை பற்ற வைத்துக் குடிப்பது. தோழன் ஒருவன் இல்லாவிட்டால் இந்த விளையாட்டில் குஷி இருக்குமா? ஆகையால் தம் உறவினர் வீட்டுப் பையன் ஒருவனை தனக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டார். ஆனால் இந்த எச்சில் துண்டுகள் தினந்தோறும் கிடைப்பதில்லை. தவிர எத்தனை நாள் இந்த சிறு துண்டுகளை வைத்து "இழுப்பது!" முழு சிகரெட்டாக வைத்து ஜோராக உறிஞ்சினால் அல்லவோ புகை ஏராளமாக இருக்கும்!

முழு சிகரெட்டுக்கு காசு வேண்டுமே! அதற்காக வேலைக்காரன் சேர்த்து வைத்திருந்த சில்லரைக் காசுகளைத் திருடினார்கள். திருட்டுக் காசைக் கொண்டு சில நாட்கள் திருட்டுத் தனமாக

பத்திரிகையில் இந்த கூடார்த்தப் படத்தை எழுதியிருக்கிறார். கடைசியாகக் கூறியதுதான் சர்க்கார் அபிப்பிராயம். அமெரிக்காவுக்கும் ரஷியாவுக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது, இனிமேல் அமெரிக்காவில் சோவியத் பிரதிநிதியொருவர் இருப்பார். ரஷியாவில் அமெரிக்க ஸ்தானீகர் ஒருவர் இருந்து வருவார்.

சிகரெட் குடித்தார்கள். பிறகு வேலைக்காரர்கள் சற்று ஜாக்கிரதையாக இருந்ததால் காசு கிடைக்கவில்லை போலும்.

சில மரக்குச்சிகளில் உள்ளே குழல்போல் இருக்குமென்றும் அவற்றை சிகரெட் மாதிரி உபயோகிக்கலாம் என்றும் தெரிந்தது. அவசியம் வந்தால் அறிவு வளருமல்லவா!

ஆனால் மனது திருப்தியடையவில்லை. சுதந்திரமாக காசு கொடுத்து சிகரெட் வாங்கி பகிரங்கமாக புகை குடிக்க இடமில்லையே என்று மனது மிகவும் கஷ்டமடைந்ததாம். என்ன செய்வது? இந்தக் கஷ்டத்தை எத்தனை நாள் தாங்குவது? இரண்டு நண்பர்களும சேர்ந்து ஆலோசித்தார்கள். கடைசியாக, தற்கொலை செய்து கொள்வதென்று முடிவு கட்டினார்கள்.

காட்டில் ஏதோ ஒரு விதமான விதை இருப்பதாகவும் அதைத் தின்றால் உயிர் போய்விடுமென்றும் கேள்விப் பட்டிருந்தார்கள். இருவரும் காட்டிற்குச் சென்றார்கள். அந்த விதையை எடுத்தார்கள். பிறப்புக்கும் இறப்புக்கும் காரண கர்த்தா கடவுளே என்ற உணர்ச்சி இந்த நாட்டில் குழந்தைகளுக்கும் சகஜமல்லவா? ஆகையால் ஒரு கோயிலில் போய்த்தான் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று நிச்சயித்தார்கள்.

கடவுளைப் பிரார்த்தித்தார்கள். விதையைச் சாப்பிட வேண்டியதுதான் பாக்கி. ஆனால் ஒரு நினைவு வந்தது. உடனே சாகவில்லையானால் என்ன செய்வது? செத்துப்போனால் என்ன லாபம்? சில கட்டுக்களுக்கு அடங்கியாவது உயிரோடிருந்தால் என்ன? என்று யோசித்தார்களாம். அப்படி யிருந்தாலும் இரண்டு மூன்று விதைகளை விழுங்கி விட்டார்கள். பிறகு மேற் செல்லவில்லை!

இனிமேல் சிகரெட் குடிப்பதில்லை யென்றும் வேலைக்காரர்கள் காசைத் திருடுவதில்லை யென்றும் சங்கல்பம் செய்துகொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்களாம்.

சுப்ரமண்ய பாரதியார்

7

(வ. ரா.)

1904-ம் ஆண்டு, ஆரம்பத்தில் பாரதியார் சென்னைக்குப் போய்ச் சேர்ந்தார். பாரதியாரின் வாழ்வை தொகுத்துச் சொல்லுகையில், வருஷப் புள்ளியில், சில சில்லரைத் தவறுகள் இருக்கலாம். நான், இதைப் பற்றித் தெரிந்தவர்களிடம், ரொம்ப விசாரித்துப் பார்த்தேன். என்னைப் போலவே, அவர்களுக்கும் சந்தேகம். அகராதியில், நமக்கு சந்தேகமாயிருக்கும் வார்த்தையே இருப்பதில்லை, பல சமயங்களில் என்பதை, அனுபவ மூலமாய் நீங்கள் அறிந்திருப்பீர்கள். என் கதியும் அப்படித்தான்.



சுதேசமித்திரன் பத்திரிகையில், உதவி ஆசிரியராக அமர்ந்த பாரதியார், கஜானுவைப் பார்த்துப் பெற்று விட்டதாக எண்ண வேண்டாம். சம்பளம் ரொம்பக் குறைவு. வேலையைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. “பாரதி, நீ அருமையான தமிழ் எழுதுகிறாய். உனக்கு அட்சர லட்சம் கொடுக்கலாம். நீ காளிதாஸன் தான். ஆனால் நான் போஜ ராஜனில்லையே. உனக்குத் தகுந்த ஸன்மானம் செய்ய, என்னிடம் பணமில்லையே” என்று சுப்ரமணிய அய்யர் பாரதியாரிடம் சொல்லுவாராம்.

“நயமாய் என்னை ஏய்த்து வேலை வாங்குகிறதில் அய்யர் (சுப்ரமணிய அய்யர்) ரொம்ப “கொம்பன்” என்றாலும், பத்திரிகைத் தொழிலில் எனக்குப் பழக்கமும் தேர்ச்சியும் வரும்படி செய்தது அவர் தான். அவரை நான், ஒருவகையில் பரம குருவாக மதிக்கிறேன்,” என்பார் பாரதியார்.

ஒரே ஒரு நிகழ்ச்சியைப் பற்றி, பாதியார் அடிக்கடி சொல்லு வதுண்டு. இந்த நிகழ்ச்சியை, அனேகமாய் பாரதியார் என்னி டம் சொன்னது போலவே, சொல்லி விடுகிறேன்.

"சாயங்காலம். ஆபீசிலிருந்து வீட்டுக்குப் போகலாம் என்று யோசித்துக் கொண்டு, உட்கார்ந்திருப்பேன். பணமுடையால், அய்யரைப் பணம் கேட்கலாமா, வேண்டாமா என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிற சமயத்தில், "அய்யர்" உங்களுக்குக் கொடுக் கச் சொன்னார் என்று ஒருவன் திடீரென்று ஒரு டபளர் காபி

கொண்டுவந்து கொடுப்பான். அய்யருடைய அன்பைப் பற்றி நினைத்து, பிரம்மானந்தப் பட்டுக் கொண்டிருப்பேன். இந்த சம யத்தில், அய்யர் வந்து தோன்றுவார். அவரைப் பணம் கேட்க வேண்டுமென்று நினைத்த நினைப்பே போய்விடும்.

"பார்தி! ஸர் ஹென்ரி காட்டன் இந்தியாவைப் பற்றி, உருக்கமாக சிமையிலே பேசியிருக்கிறாரே, அதைப் பார்த்தாயோ" என்பார் அய்யர். "ஆமாம் பார்த்தேன்; நன்றாய் பேசியிருக் கிறார்" என்பேன். "அதை நாளைக்கே, நம்ம பத்திரிகையில் பிர சுரிக்க வேண்டாமோ" என்பார். "கட்டாயம் பிரசுரிக்க வேண் டும்" என்பேன்.

"அந்தப் பிரசங்கத்தின் ரஸம் கெடாமல், தமிழில் மொழி பெயர்க்க, உன்னைத் தவிர யாரால் முடியும்" என்பார். தலை குனி ந்து கொண்டு நிற்பேன்.

"அதை, நீ ஆபீசிலே மொழி பெயர்க்க வேண்டு மென்கிற அவசியமில்லை. வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய் தர்ஜமா செய்து, நாளைக்குக் காலமே, நீ வருகிற பொழுது, கொண்டு வந் தால் போதும். வீட்டிலே, விளையாட்டுப் போலே, மொழி பெயர் த்து விடலாம், அரைமணிகூடப் பிடிக்காது உனக்கு" என்பார் அய்யர்.

அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போவேன். எனக்கு ஆபீசிலே மட்டும் வேலையா? தாலுகா கச்சேரி குமாஸ்தாவைப் போல, வீட்டிலேயேயும் வேலை; கூலிக்கு உழைக்கிறவர்களின் கதி இதுதான்."

இவ்வாறு பாரதியார் சொல்லிவிட்டு, "அய்யர் என்னை, அன் பைக்கொண்டு எய்த்தது உண்மை; என்றாலும், இந்த மொழி

பெயர்ப்பு வேலை எனக்கு எவ்வளவு ஒத்தாசைசெய்தது தெரியுமா? இங்கிலீஷ் ரொம்ப நயமான பாஷை யானதால், இங்கிலீஷ் எழுத்தின் கருத்து சிதைந்து போகாமல், தமிழர்களுக்கு அதை ஸ்வாரஸ்மாயச் சொல்லும் பொருட்டு, நேரான தமிழ்ச் சொற்களை நான் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. தமிழ் பாஷையின் கம்பீரமும் ரஸமும் அப்பொழுது எனக்கு இன்னும் தெளிவாய்த் தெரிந்தது'' என்பார்.

தமிழுக்கு புதிய உயிர் கொடுத்து அதைப் புது மொழி யாக்கிய பாரதியார், சுதேசமித்திரன் ஆபீஸில் மொழி பெயர்ப்பு வேலையைச் செய்தது நமக்கு ஆச்சரியமா யிருக்கலாம்.

அய்யர் அவர்கள் பாரதியாரைத் தலையங்கம் எழுதும்படி விட்டதில்லையாம். அரசியலில் பாரதியார் அதி தீவிர வாதி என்றசாக்கினால், தலையங்கம் எழுதாமல் தடுக்கப்பட்டதற்குக் காரணமாயினும் வேறு விஷயங்களைப் பற்றிக்கூட, பாரதியார் சொந்தமாகக் கட்டுரைகள் எழுதும்படியாக விடப்பட்ட தில்லையாம்.

தினசரிப்பத்திரிகைகளுக்குத் தந்தி; வெளியூர் உள்ளூர் வர்த்தமானம், இவைகளின்மேலதான் லட்சியம். மனிதர்களின் பாழடைந்த கருத்துக்களை மாற்றி, அவர்களை வலியோர்களாய்ச் செய்யும் வேலையில், தினசரிகள் பெரும்பாலும் இறங்குவதில்லை. மேலும், அவைகளுக்குப் போதுமான வசதிகளும் நேரமும் இருப்பதில்லை.

இந்தக் குறையை நன்றாகத் தெரிந்து கொண்டே, காலஞ்சென்ற லோகமான்ய திலகர் தமது "கேசரி"ப் பத்திரிகையை, வாரப் பத்திரிகையாகத் தமது ஆயுள்காலம் முடிய, நடத்தி வந்தார். தினசரியாக மாற்றும்படி, எத்தனை ஆயிரம் பேர்களோ, திலகரிடம் மன்றாடிப் பார்த்தார்கள். திலகர், அந்த யோசனையைத் திரும்பிக்கூடப் பார்க்க மறுத்து விட்டார். வாரப் பத்திரிகையான கேசரி (இப்பொழுது அது வாரம் இருமுறையாக வெளிவருகிறது) மகாராஷ்டரர்களின் மனதை அடியோடு மாற்றியது போல, எந்தத் தினசரிப் பத்திரிகை யாவது எந்த மாகாணத்திலேனும், மனதை மாற்றி யிருக்கிறதா? காந்தியின் "நவஜீவன்" விதிவிலக்கு.

குறைந்த சம்பளம் பெற்றுவந்த பாரதியார் குடியிருப்பதற்கு தனிவீடு வாடகைக்கு அமர்த்திக்கொள்ள முடியுமா? பெரிய நகரங்களில், குறைந்த வருமான முள்ளவர்களுக்கு ஒண்டி குடி

யைத் தவிர, வேறு வழி கிடையாது. இந்த நிர்ப்பந்த ஓண்டு குடியின் அவஸ்தைகளை, பாரதியார், ஒப்பிலாக் கற்பனை படைத்த தமது "ஞானரதம்" என்ற நூலில், அருமையாக வர்ணித்திருக்கிறார். ஓண்டு குடிக்காரர்களுக்கோ, ஆபீஸில் ஒரு ரூபாய் சம்பளம் உயர்வதற்குமுன், வீட்டிலே இரண்டு குழந்தைகள் "ப்ரோமஷன்"! என்று பாரதியார் அன்பு ததும்பும் அனுதாபத்துடன் கேலி செய்திருக்கிறார். இதுதான், வாழ்வைக் கெட்டிப்படுத்தி, சக்தி உயர்வைப்பெருக்கும் விகடமாகும்.

இந்தக் காலத்திலே, பாரதியாருக்குப் பலர் நண்பர்களானார்கள். முக்கியமான சிலரின் பெயர்களை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன். இவர்கள் அனைவரும் பாரதியாரின் உயிர்த்தோழர்கள். பாரதியாரின் கவிதை வல்லமையில் மோகங்கொண்டவர்கள். எஸ். துரைசாமி அய்யரைத் தலைமையாகச் சொல்லவேண்டும். இந்தக்காலத்திலும் பாரதியாரின் பிற்காலத்திலும், அவருக்குக் கள்ளம் கபடு இல்லாமல் உதவிசெய்து, இப்பொழுதும் பாரதியாரைப்பற்றிப் பேசினால், நெஞ்சு கசிந்தும் கரைந்தும் கண்ணீர் விடுபவர் துரைசாமி அய்யர். துரைசாமி அய்யரின் அதிசூட்சுமமான புத்தியையும் அளவுக்கு மிஞ்சிய உதார குணத்தையும் அதை வெளியிலே, டம்பமாய்ப் பேசிக்கொள்ளக் கூச்சப்படும் உண்மையான அடக்கத்தையும் தமிழர்களின்மீது அவருக்கு இருக்கும் அபார வாஞ்சையையும் குறிப்பிட இது சந்தர்ப்பமல்ல.

"மீசையிலே பெருமைகொள்ளாதே, மூடா. வரால் மீனுக்கும் நீண்ட மீசையிருக்கிறது. வரால் மீன் எதற்காகும்? மாமிசம் சாப்பிடுவோருக்கு ஆகாரமாகும். அதுபோல, உங்களை அடக்கியாளும் அதிகார வர்க்கத்தினருக்கு, ஆகாரமாகச் சமைவதற்காகவா, உங்களுக்கு மீசை" என்று அந்நாட்களிலே வீரகர்ஜனை செய்த சுரேந்திரநாத் ஆர்யா என்ற சுந்தரத்தெலுங்கர், பாரதியாரின் அரிய நண்பர். இவர் வெல்லச்சைப்போலவே உடல் கெட்டியும் ஜப்பானியனைப்போல குட்டையான உடல் உருவத்தையும் பெற்றவர். ஆறு வருஷம் கடினகாவல் பெற்றவர். டேனிஷ் மிஷன் பாதிரியார்களின் அன்புக்கு மிகுதியும் பாத்திரமான இவர் கிருஸ்தவரானார்! இப்பொழுது, சிறிதுகாலத்துக்கு முன்னர், இவர் சுயமரியாதைக் கட்சியில், ஈடுபட்டு உழைத்தார். எதிலும் உற்சாகமும் ஊக்கமும் நிறைந்தவர். பாரதியாரின் வாழ்க்கை வரலாறில், இவரைப்பற்றி வேறு இடத்தில் சொல்ல நேரும். அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம்.

மூன்றாவது நண்பர் ஸ்ரீமான் வி. சர்க்கரை செட்டியார். இவர் கிருஸ்தவர். ரொம்ப மதபக்தி கொண்டவர். தேசிய இயக்கத்தின் தத்துவத்தை முற்றிலும் அறிந்தவர். நல்ல இலக்கியத்தில், சுவையுள்ள புதுக்கருத்துகளில் அபரிமிதமான மோகம் கொண்டவர். மனத்தில் உறுதி மட்டும், அவ்வளவாகப் போதாது. என்றாலும், பெரு நோக்கிலே, இவருக்கு எப்பொழுதும் திருஷ்டி உண்டு. சமீபத்தில், சென்னை நகர மேயர் பதவிக்கு ஒரு வெள்ளைக் காரரோடு போட்டி போட்டு, தோற்றது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இவர் பி.எ. பி.எல்.

நான்காவது மண்டயம் எஸ். என். திருமலாச்சாரியார். ரொம்பப் பணக்காரர். முப்பத்தைந்து வயதுக் குள்ளாகவே, மாண்டு போனார். உடல் வலிமை கொண்ட, உற்சாக புருஷன். இவர் இறப்பதற்கு முன்னமேயே, தமது செல்வத்தின் பெரும்பகுதியை, "வேட்டு" விட்டு விட்டார். பாரதியார் பின்னால் நடத்திய "இந்தியா" என்ற வாரப்பத்திரிகைககு, மிகுதியும் பொருள் உதவி செய்தவர். இவருக்கு உறவினரான எம். பி. திருமாலாச்சாரி என்ற இன்னொரு திருமாலாச்சாரி பாரதியாரின் நண்பர்களில் ஒருவர். இவர் இப்பொழுது (1933) ஜர்மனியில் இருப்பதாகவும் வெள்ளைக்காரப் பெண் ஒருத்தியை மணந்து கொண்டிருப்பதாகவும் கேள்வி. பலாத்காரப் புரட்சி இயக்கத்தில் கலந்து கொண்டு, இந்தியாவுக்கு வர முடியாத நிலைமைக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டார் என்று சொல்லப் படுகிறது.

மண்டயம் சீனிவாஸாச்சாரியார் இன்னொரு நண்பர், இவர் இப்பொழுது திருவல்லிக்கேணியில் இருக்கிறார். ரொம்ப நல்லவர். இவருடைய குடும்பத்துக்கு, தூத்துக்குடி சுதேசிக் கப்பல்கம்பெனி மூலமாய் ஏற்பட்ட நஷ்டத்தை இலட்சக்கணக்கில் சொல்லலாம். சென்னையிலும் புதுச்சேரியிலும் சுமார் இருபது வருஷங்களுக்கு அதிகமாக, பாரதியாரோடு நெருங்கிய நட்புக் கொண்டவர். "இந்தியா" பத்திரிகையின் சொந்தக்காரர்களில் ஒருவர். உருது, பிரஞ்சு, இங்கிலீஷ், தமிழ், கன்னடம் முதலிய பாஷைகளில நிபுணர்.

டாக்டர் எம். ஸி. நஞ்சுண்டராவ் என்ற பேர்போன டாக்டர் ஒருவர் மைலாப்பூரில் வசித்துவந்தார். வயதிலே, பாரதியாருக்கு ரொம்பப் பெரியவர். ரொம்ப தீரர். உயர்ந்த தேசபக்தர்; பரமதயாளு. தத்தளித்து வாழும் தேசபக்தர்களுக்கு, அவர் சொல்லிய யோசனைகளையும், செய்த உதவியையும், பற்றி, என்னென்று எழுதுவது? பாரதியாரிடம் இவருக்கு உண்டான நட்பு ரொம்ப விசித்திரம்.

பாரதியாரின் சிரிப்பு, சங்கீதத்தில் ரவை புரளுகிறமாதிரி, சிரிப்பு. அதிர் வேட்டைப்போல, படீர் என்று வெடிக்கும் சிரிப்பல்ல. அமர்ந்த சிரிப்புமல்ல; வஞ்சகத்தை உள்ளே வைத்துக் கொண்டு, வாயைமட்டும் திறந்து, பல்லைக்காட்டி, சிரிப்பைப் பழிக்கும் சிரிப்பல்ல. புன்னகையைப் புஸ்தகத்திலே படிக்கலாம்; ஆனால் பாரதியாரிடம் புன்சிரிப்பைப் பார்க்கமுடியாது. சங்கீதச் சிரிப்பைத்தான் காணமுடியும்.

பாரதியாரின் இந்தச் சிரிப்பிலே ஈடுபட்டுப் போனவர் டாக்டர் நஞ்சுண்டராவ். பாரதியாரின் அகத்தின் அழகையும் தூய்மையையும் மேன்மையையும், அவரது முகத்திலும் சிரிப்பிலும் கண்டு மகிழ்ந்தவர் நஞ்சுண்டராவ். பாரதியார் சிறிதுகாலம், சென்னை ஜியார்ஜ் டவுனில் வசித்துவந்தார். அவருடைய மூத்த பெண் தங்கம்மாளுக்கு, உடம்புக்குக் காய்ச்சலும் நோயும் வரவே, டாக்டர் நஞ்சுண்டராவ், பாரதியாரைக் கட்டாயப்படுத்தி, திருவல்லிக்கேணிக்கு வந்து குடியிருக்கும்படியாகச் செய்துவிட்டார். தாம் கிட்டயிருந்து, குழந்தை தங்கம்மாளுக்கு வயித்தியம் செய்யவேண்டும் என்பது நஞ்சுண்டராவின் ஆவல். நஞ்சுண்டராவுக்குப் பாரதியாரிடமிருந்த அன்பை அளவிட்டுச் சொல்ல முடியாது.

இன்னும் ஒரே ஒரு நண்பர். அவர் பாரதியாருக்கு ரொம்பவும் வயதில் மூத்தவர். அவர் பெயரை சொன்னால், போலீஸார் இப்பொழுது திகைத்துத் திடுக்கிடவும் கூடும். அவர் பெயர் கிருஷ்ணசாமி அய்யர். அவர் சென்னையில் போலீஸ் டெபுடி கமிஷனராக இருந்தவர். கனம் நீதிபதி கிருஷ்ணசாமி அய்யருக்கு உயிர்த்தோழன்.

பாரதியாருக்கு, போலீஸ் உத்தியோகஸ்தர் கிருஷ்ணசாமி அய்யரிடம் எப்படி நட்பு உண்டாயிற்று என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. சிறந்த தேசபக்தரான பாரதியாருக்கும் சர்க்கார் மனிதனான கிருஷ்ணசாமி அய்யருக்கும் எவ்வாறு சிநேகிதம் உண்டாயிற்று என்று நம்மில் எவரும் திகைக்க வேண்டாம். காந்திக்கும் தீனபந்து ஆண்ட்ரூஸுக்கும் நட்பு ஏற்பட்ட காரணத்தையே, மேற் கூறியதற்கும் சொல்லலாம், சொல்ல முடியும். பொதுவாக எந்தக் கூட்டத்துக்கும் இழிவோ, பெருமையோ இருக்கலாம். அந்தப் பொதுவான நிலைமை, அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த தனி நபர்களுக்கும் இருக்க வேண்டும் என்று சாதிக்க முன் வருவது தகாத காரியமாகும்.



நண்பர்களே, உங்களுக்கு மற்றொரு செய்தி. டிசம்பரிலிருந்து "காந்தி" மலரை மாதம் மும்முறையாக்குவதாக 5உ மலரில் வெளியிட்டோம். பரிசுப்போட்டி பலமாய்விடவே இம் மாதமே மும்முறையாக்க அவசியம் நேரிட்டுவிட்டது. இதை சென்ற (15-ந்தேதி) மலரில் குறிப்பிட்டிருந்தோம். சூரபத்மன் யுத்தத்தைப்போல போட்டிப் பந்தயக்காரர் கிளம்பிவிட்டார்கள். அவர்களை வழிக்குக் கொண்டுவர மாதம் மும்முறைமட்டும் போதாது. தினசரி இருந்தால்தான் சரியாய் நமது பிரசாரத்தை நடத்தமுடியும். ஆகவே இப்பொழுது என்ன செய்யப்போகிறோம் தெரியுமா?

டிசம்பர் 1-ந்தேதிமுதல் "காந்தி" தினசரியொன்று வெளிவரப்போகிறது. சகல ஜனங்களும் வாங்கிப் படிக்க சாத்தியமாயிருப்பதற்காக விலை காலணாத்தான். தினசரி வெளி வருவதால் "காந்தி" மலர் வழக்கம்போல மாதம் இருமுறையே (5உ, 20உ) டிசம்பரிலிருந்து வெளிவரும்.

பிராமணன்—சூத்திரன் என்ற புத்தகத்திற்கு மதிப்புரை எழுதி யிருக்கிற படியால், ராவ் பகதூர் எம். சி. ராஜாவைப் பற்றி நண்பர் வ. ரா. இந்த மலரில் எழுதவில்லை. மதிப்புரை என்றால் என்ன? நாடகம் எப்படி இருக்க வேண்டும், பிரஸ்தாப பிராமணன்—சூத்திரன் நாடகத்தின் தன்மை முதலியவைகளைப் பற்றி வ. ரா. எழுதியதை நண்பர்கள் கவனமாய் படிப்பார்களாக.


போட்டிப் பந்தைய மோசடியை தொலைப்பதற்கு அங்கங்கே நண்பர்கள் தீவிர முயற்சி எடுத்து வருவதைக் கண்டு மிகவும் சந்தோஷமடைகிறோம். ப்த்திரிகைகளைப் பார்த்து சில தனிப்பட்ட பேர்வழிகள் இந்தத் தொழிலில் இறங்கி யிருக்கிறார்கள். இவர்கள் பல மோசடிகள் செய்திருப்பதாகவும், போலீசார் விசாரணை செய்வதாகவும் அறிகிறோம். சகல போட்டிப் பந்தயங்களும் ஒழிந்தாலொழிய நாம் கிளர்ச்சியை விடக்கூடாது. நமக்கு இதைப்பற்றி எழுதிவரும் அன்பர்களுக்கு தனித்தனியாக பதில் எழுத அவகாசமில்லாமல் இருப்பதற்காக மன்னிக்க வேண்டுகிறோம்.

ஸ்டாலின் மனைவி

(பட்டோலே)

பெண்ணின் பெருமையைப்பற்றி சுப்ரமணிய பாரதியார் எழுதி வைத்திருப்பதைவிட ஆணித்தரமான சொற்கள் அகப்படுவது கஷ்டம். ஒவ்வொரு பெரிய மனிதரது சரித்திரத்திலும், அவர்களது வாழ்க்கையில் நாம் மறக்க முடியாத சில காரியங்கள் ஏற்பட்டதற்கு பெண்களே காரணமாயிருந்திருப்பார்கள் என்று ஊகிப்பது தவருகாது.

அந்தப் பெண் அவன் காதலித்து கைக்கெட்டாது போன பெண்ணுக இருக்கலாம். அல்லது விவாகம் செய்துகொண்டு அவனுடன் இணங்கி வாழ்ந்தவளாக இருக்கலாம். பிணங்கி வாழ்ந்தவளாகவும் இருக்கலாம். பெற்ற தாயாக இருக்கலாம். உடன் பிறந்தவளாக இருக்கலாம். இதற்கு உதாரணம் கூறத் தேவையில்லை.




ரஷிய சர்வாதிகாரியாக விளங்கும் ஸ்டாலினைப்பற்றி முன் ஓர் "காந்தி" மலரில் படித்திருப்பீர்கள். பரிசுப் போட்டிக்கு விடை யனுப்பவேண்டிய கவலை உங்களை பிடிக்காதிருந்தால் அதை படித்திருப்பீர்கள்.

இவருடைய பெருமையில் இவரது மனைவிக்கு எவ்வளவுபாகம் கொடுக்கலாம் என்பதை கவனிக்க வேண்டியது அவசியம். இவர் மனைவியின் பெயர் நாடியா. ஸ்டாலின் ஓர் புரட்சி வாழ்க்கையைக் கடந்து வருவதற்கும் கடைசியில் சர்வாதிகாரியாகுமட்டும் உயிருடனிருந்ததற்கும் காரணம் இந்த நாடியா என்ற ஸ்திரீ தான்.

* * *

ஸ்டாலினின் குடும்ப வாழ்க்கை பெரும் ரகசியமாகவே இருந்து வந்தது. ஸ்டாலினையும் அவரது! மனைவி

நாடியாவையும் சேர்த்துக் காண்பதே சற்று கஷ்டம். ஆனால் ஸ்டாலின் செய்யும் ஒவ்வொரு காரியமும் நாடியாவைக் கலந்த பிறகே செய்ததாக இருக்கும். ஸ்டாலின் மனைவியை போட்டோ எடுத்தது ஒரே ஒரு தடவைதான் என்றால் அவளைப் பற்றின விஷயங்களை உலகம் அறிவது எவ்வளவு கஷ்டமானது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.



ஐயா வேணுமா ஒரு சுசியம்?

நாடியாவின் வாழ்க்கையைப் பற்றி அதிகமான விவரங்கள் கிடைப்பதில்லை. ஆகையால் இரண்டொரு சம்பவங்களை; அதுவும் ஸ்டாலின் வாழ்க்கையோடு சம்மந்தப்பட்ட சம்பவங்களை, மட்டும் இங்கு குறிப்பிட முடியும்.

* * *

பிறப்பு

1901-ம் வருஷம். பின்னால் ஏற்படப் போகிற போல்ஷிவிக் இயக்கத்துக்கு தாயாக இருந்த "ரஷிய தொழிலாளர் மகாநாடு" நடந்து மூன்று வருஷ காலம் ஆய்விட்டது. ரஷியாவில் நாலா பக்கங்களிலும் புரட்சிக்காரர்கள் ரகசியமாக, பரம ரகசியமாக, வேலை செய்து வருகிறார்கள். ரஷியாவின் தெற்கு பாகத்தில் காகஸஸ் பிரதேசத்தில புதிய எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டு முதலாளிகள் மும்முரமாக பணம் சம்பாதிக்கும் இடம். ஆகவே தொழிலாளரும் நாலாபக்கத்திலிருந்து அங்கு வந்து குவிந்து கொண்டிருக்கிறார்கள். புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கு நல்ல வளமுள்ள இடம்.

அந்த பிரதேசத்தில் டிப்லிஸ் என்ற ஊரில் வந்த தொழிலாளிகளில் ஒருவர் ஸர்ஜ் அல்லிலூவ். இவர்தான் ஸ்டாலினின் மாமனார்; ஸ்டாலின் மனைவி இன்னும் பிறந்தாகவில்லை! ஸோஸோவும் (ஸ்டாலின்) அல்லிலூவும் நண்பர்களாயினர்.

ஸ்டாலின் தன்னுடைய புரட்சிப் பிரசாரத்தை நடத்திக் கொண்டு வருகிறார். போலீசாருக்கு ஸ்டாலின்மீது சந்தேகம். கைது செய்ய வாரண்டு பிறந்தாய்விட்டது. அவ்வளவுதான். உடனே அல்லிலூவ் இவரை மெதுவாக அங்கிருந்து மறைத்து பாடும் என்ற இடத்துக்குக் கொண்டு சேர்த்துவிட்டார்.

பிறகு பாடுமில் ஸ்டாலின் வேலை செய்துவந்தார். ரகசிய வேலையில் பரம நிபுணர். ஒரு தடவை போலீசார் சிறிது சந்தேகத்தின்மீது இவரைக் கைதியாக்கினர். ஆனால் இவர்மீது ஒரு புகாரும் ருசு செய்ய முடியாமல் விடுதலை செய்தார்கள்.

1902-ல் ஸ்டாலின் கைதியாய் இரண்டு வருஷம் சிறைச்சாலை. இதற்கிடையே அல்லிலூவ் ஜார்ஜியா தேசத்துப் பெண் ஒருவளை மணந்தார். நடீஜா (Nadejha) என்ற பெண் குழந்தை பிறந்தது. அப்பொழுது ஸ்டாலினுக்கு 23 வயது.

ஸ்டாலின் விடுதலையடைந்து தன் நண்பர் வீட்டுக்குப் போனார். நாடியாவுக்கு அபிமான பிதாவாக இருக்கும்படி அல்லிலூவ் ஸ்டாலினிடம் கேட்டுக்கொண்டாராம். "நீங்கள் தரக்கூடிய இப்பதவியை நான் ஏற்றுக்கொண்டால் நாளை நாடியாவை கலியாணம் செய்துகொள்ள முடியாமல் போய்விடும்!" என்று ஸ்டாலின் கூறினாராம்.

* * * *

அபயம்

நாடியாவுக்கு வயது பதினொன்று. ஸ்டாலின் மறுபடியும் கைதியாய் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டு திருட்டுத்தனமாக தப்பித்துவந்து தலைமறைவாக பீடர்ஸ்பர்கில் இருக்கிறார். போலீசார் வலை போட்டுத் தேடுகிறார்கள். ஆனால் என்ன நல்லதிர்ஷ்டம். அல்லிலூவும் இப்பொழுது அதே பட்டணத்தில் ஒரு மின்சாரத் தொழிற்சாலையில் வேலை. வேறு கேள்வி என்ன? ஸ்டாலின் அல்லிலூவின் வீட்டிலேயே அடைக்கலம். அல்லிலூவின் மனைவியும் ஜார்ஜியா தேசத்துப் பெண். மாமியும், மருமகனும் ஒரே தேசத்தார்.

(ஸ்டாலினை) ஸோஸோவை போலீசார் கண்ணி போடுகிறார்கள் என்பது இவளுக்குத் தெரிந்துவிட்டது. குழந்தை பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறாள். வீட்டிற்கு எதிரேயுள்ள தெருவில் இரண்டு ஆசாமிகள் பத்தி உலாவிக்கொண்டிருக்கிறார்கள். சரி. ஸ்டாலின் வெளியே போயிருக்கும் சமயம். நாடியா அடுத்த தெருவுச் சந்திக்குப்போய் ஸ்டாலினை எதிர்பார்த்து நிற்கிறாள். ஸ்டாலின் வருகிறான். "இப்பொ வீட்டுக்கு வர வேண்டாம். பிறகு வந்தால் போதும்" என்கிறாள்.

என்ன ஆச்சரியம்? இந்தச் சிறு குழந்தை என்னைக் காப்பாற்றும் பணியை சுமக்க முன் வருகிறதே! என்ன, ஆச்சரியம்; என்று நினைக்கிறான். அன்று முதல் ஸ்டாலினுடைய புரட்சிச் செயல்களுக்கு நாடியா ஓர் துணைக்கருவியாக அமைந்தாள். அவர்கள் இருவருக்குமட்டும் விளங்கக்கூடிய சில பரிபாஷைகள் ஏற்பாடு செய்துகொண்டார்கள். ஸ்டாலின் தமது நண்பர்களுடன் சம்மந்தம் வைத்துக்கொள்வதற்கு தூதுத் தொழில் செய்தது நாடியாவே. இவள்மீது யார் சந்தேகம் கொள்வார்கள்! ஆகையால் இந்த முறை நடந்துகொண்டே இருந்தது.

ஒரு நாள் ஸ்டாலின் சில முக்கியமான கடிதங்களை அல்லிலூவ் வீட்டில் ஒளித்துவைத்திருப்பதாக சந்தேகப்பட்டு போலீசார் சோதிக்க வந்தார்கள். ஸ்டாலின் ஒன்றும் வைத்திருக்கவில்லை. நாடியாகையில்மட்டும் ஸ்டாலின் தன் நண்பருக்கு அனுப்பச்சொல்லிய ஓர் கடிதம் இருந்தது.

அல்லிலூவ் தன் வீட்டில் சோதனை செய்வது எவ்விதத்திலும் பொருத்தமற்றதென்றும், அனாவசியமென்றும் போலீசாருடன் தர்க்கம் செய்துகொண்டிருந்தார். அந்த சமயத்தில் நாடியா கடிதத்தை கூந்தலில் வைத்துக் கட்டிக்கொண்டு மெதுவாகப் படுக்கைக்குப்போய் "நன்றாய்" தூங்கிவிட்டாள். போலீசார் அந்த அறையைச் சோதிக்கும்போது குழந்தையின் தூக்கம் கலைந்துவிடக்கூடாதே என்று பயந்து மெதுவாக நடந்தார்களாம்!

பிறகு ஸ்டாலின் வந்து அவளுக்கு நன்றி செலுத்தி உபசார வார்த்தை கூறினாலும். "எனக்கு நீ உபசாரம் சொல்லவேண்டியதில்லை. எனக்கு உன்னிடமுள்ள பிரியத்தில், நான் உன்னைக் காப்பாற்ற இவ்வளவு செய்தது பெரிய காரியமில்லை" என்றாள் நாடியா.

அவ்வளவுதான். இந்த வார்த்தைக்குப் பின், மனிதன் என்ன செய்யமுடியும்? எவ்வளவு கல் நெஞ்சானாலுமென்ன? உடனே நாடி

யாவை இரண்டு கையிலும் வாரி எடுத்தான். ஒரு முத்தம். நாடியா சிறு குழந்தை ஆனாலென்ன? இந்த முத்தம அவர்கள் இருவரது வாழ்க்கையையும் இணைத்துப் பூட்டிவிட்டது.

* * *



ஸ்டாலின் மனைவி

ஸ்டாலின் கைதி செய்யப் பட்ட மூன்றாவது நாள். விசாரணையை எதிர்பார்த்து ஒரு சிறிய சிறையில் இருக்கிறார். கட்டு, காவல் அதிக மில்லை. தனது அறையில் உட்கார்ந்து கொண் டிருக்கிறார்.

கந்தல் துணியைக் கட்டிக் கொண்டு ஒரு தட்டத்தில் சுசியம், வடை, ரொட்டி முதலிய பலகாரங்களுடன ஒரு பெண் குழந்தை வராந்தாவில் போகிறது. காவல்காரனும் வருகிறான். ஸ்டாலின அறைப்பக்கம் வந்ததும் பெண் முதலில் உதட்டில் கையை வைத்துவிட்டு, "அய்யா, வேணுமா, ஒரு சுசியன் வாங்குங்களேன். ஏதேனும் காசு கிடைத்தால் அம்மாவிடம் கொடுப்பேன். கஞ்சிகாய்ச்சிக் குடிக்கலாம்."

திடீரென் றெழுந்திருக்கிறான் ஸ்டாலின். எதிரிலிருப்பது நாடியா! மனதிலுள்ள உணர்ச்சியை மறைக்கவேண்டிய சமயம். சரி, ஒரு சுசியன். தன் நண்பரிட நாடியாவின் கடிதம். "இதே

பிறகு விண்டு பார்த்தால்: எதிர்பார்த்ததுதான். மிருந்து ஒரு கடிதம். மற்றொன்று வேலையாக அடிக்கடி வருவேன்."

ஸ்டாலினை கொலைத் தீர்ப்பிலிருந்து காப்பாற்றிய விவரங்கள் அடுத்த மலரில் காணவாம்.

பைரவி ராகம்

(ராமு)

"ராகத்தில் சிறந்தது பைரவி ராகம்" என்பது உலக வாக்கியம். சாதாரணமாக நாடக மேடைகளிலும், கிராமபோன் பிளேட்டுகளிலும் இந்த ராகத்தை கேட்ட பலருக்கும் இந்த வாக்கியம் மறந்து போயிருப்பது ஓர் ஆச்சரியமல்ல. ஆனாலும் சென்ற 12-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கடற்கரை ரேடியோவிற்குச் சென்ற சங்கீதப் பிரியர்கள் அனைவருக்கும் அன்று பாடிய பைரவியைக் கேட்ட பிறகு மேற்படி வாக்கியம் ஞாபகத்திற்கு வந்திருக்குமென்பதில் ஐயமில்லை.

* * *

என்றுமில்லாத ஜனத்திரளை அன்றைய தினம் ரேடியோவில் கண்டபொழுது எனக்கு ஆச்சர்யமாக விருந்தது. பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளில் திருவல்லிக்கேணி கடற்கரையில் கூட்டமதிகமே. ஆனால் ரேடியோவில் ஏராளமான ஜனங்கள் ஆவலுடன் உட்கார்ந்திருந்ததை பார்த்த நான், அங்கு மாட்டப்பட்டிருந்த விளம்பரத்தைப் பார்த்தேன். சங்கீத வித்வான் மகாராஜபுரம் விசுவநாதய்யர் பாட்டு என்பதை அறிந்தேன். விசுவநாதய்யரை வாசகர்களில் அனேகருக்குத் தெரிந்திருக்கலாம் 1922, 1923-ம் வருஷங்களில் "சீதாபதே நாமனஸுன,!! "எந்தரா, நீதயா" முதலிய கீர்த்தனைகளை குயிலும் வெட்கும்படியான சாரீரத்துடன் பாடிய காட்சிகள் அனேகருடைய மனக்கண் முன் இன்னும் உலாவிக் கொண்டிருக்கும். விசுவநாதய்யரின் சங்கீதத்தில் முக்கியமாக மெச்சப்படுவது, அவரிடம் தெய்வ அம்சமாய் விளங்கும் கல்பனா சக்திதான். இவ்விதமான சக்தி இப்பொழுதிருக்கும் பாடகர்களில் அனேகருக்குக் கிடையாதென்றே சொல்லலாம். ஒரே ராகத்தையோ, அல்லது கீர்த்தனத்தையோ, பல தடவைகள் பாடின போதிலுங்கூட. ஒவ்வொரு தடவையும், அவைகள் புதிதாய் காண்பிக்கக்கூடிய மனோவல்லமை, விசுவநாதய்யரிடம் விசேஷமாக விருப்பது அவருடைய அதிர்ஷ்டமே. இவரும் காலஞ் சென்ற பிடில் கோவிந்தசாமி பிள்ளையவர்களும் சேர்ந்து நடத்திய கச்சேரிகளைக் கேட்கும்படி பாக்கியம் பற்றவர்களுக்கு, விசுவநாதய்யரின் கல்பனா சக்தியைப்பற்றி அதிகமாக தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

(632-ம் பக்கம் பார்க்க)

திருக்குறள் விளக்கம்

யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும் —குறள் (1094)

I gaze on her, she looks on the ground
I turn aside; she steals a glance and smiles

—ஆங்கில மூறள் : கு. சீனிவாசன்.

"நான் அவளைப் பார்க்கும் அவள் என்னை நோக்குவதில்லை. தரையைப் பார்த்து குனிந்து நிற்கிறாள். நான் பார்க்காத போது அவள் என்னைப் பார்த்து புன்னகை செய்கிறாள்."

என்று நாயகன் சொல்லுகிறான். இருவரும் அப்பொழுது தான் சந்தித்தார்கள். கண்டதும் காதல் கொண்டார்கள். ஆனால் நாயகிக்கு நாணம் போகவில்லை. காதல் வெள்ளத்தை நாணம் மறிக்கிறது. ஆகவே நாயகன் பார்க்கும் போது எதிராக பார்க்க முடியவில்லை. ஆனால் நாயகன் உருவத்தைப் பார்த்து அவன் அழகைப் பருக அடக்கமுடியாத ஆசை பொங்குகிறது. அவன் பார்வை சற்று வேறு பக்கம் மாறியவுடன் நாயகனை பார்க்கிறாள். பார்த்து உள்ளங் களிக்கிறாள். புன்னகை புரிகிறாள். அவன் பார்க்கும்போது சட்டென்று பூமியை பார்க்கிறான். இதுவே உள்ளத்தில் இருக்கும் காதலை பார்வையால் வெளிப்படுத்தும் காதலின் இயற்கை முறையாகும்.

அடுத்த மலரில் மற்றொரு படம் வெளிவரும்




(629-ம் பக்கத் தொடர்ச்சி)

ரேடியோ சங்கீதத்திற்காக அளிக்கப்பட்டுள்ள அவகாசம் இரண்டே மணி இதற்குள் 7, 8, கீர்த்தனைகள், கனராகம், பல்லவி ராகமாலிகை, ஜாவளி, தேவாரம், துக்கடாக்கள், முதலியவை அழகாகப் பாடுவது சிரமம்தான். இருந்தாலும் இவைகள் யாவையும் அந்த சொல்பகாலத்திற்குள் பாடியது மிகவும் மெச்சத்தகுந்தது. முதன்முதலில் கமாஸ் ராகத்தைப்பாடி, "ஸீதாபதே" என்ற கீர்த்தனையை ஆரம்பித்தவுடனேயே, அங்கங்கு வேடிக்கையாக அரட்டை யடித்துக்கொண்டிருந்த ஜனங்களில் பலரை சங்கீதம் கவர்ந்து, கடற்கரை மணலில் அமைக்கப் பட்டிருந்த ரேடியோ கம்பத்திற்கருகில் கொண்டுபோய் விட்டது. அன்று பாடிய கீர்த்தனைகளில் ஒவ்வொன்றும் இனிய சங்கீத முறையில் பாடப்பட்டது. முக்கியமாக "குந்தலவராளி" "தர்பார்" "உசேனி" முதலிய இராகங்கள், உன்னதமான உணர்ச்சியையும், பரவசத்தையும் அளிக்கும்படி ஆலாபனை செய்யப்பட்டன. தோடி ராகத்தைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தோடிராகம் விசுவநாதய்யருக்கு "காபிரைட்" என்பது பொது ஜனங்களுக்கும், சங்கீதப் பிரியர்களுக்கும் தெரிந்த விஷயமே. தோடியை விஸ்தாரமாக ஆலாபனம் செய்து "ஏமிஜேஸிநா" என்ற கீர்த்தனை பாடப்பட்டபொழுது அங்கு கூடியிருந்த ஜனங்களில் பலர் மெய் மறந்து "சபாஷ்! பலே!" என்று அங்கிகரித்தது மிகவும் பொருத்தமாயிருந்தது.

* * *

முக்கியமாக அன்று என் மனதை கவர்ந்தது "பைரவி" ராகந்தான். இதுவரையில் சுமார் நூறுதடவை பைரவி ராகத்தை ஆலாபனம் செய்து கேட்டிருந்த போதிலும்கூட அன்றையதினம் பாடிய பைரவி, எனக்கு, புதிதாகவும்; நூதனமான லட்சணங்களோடு கூடியதாகவும் தோன்றிற்று. பல்லவி, ஸ்வரங்கள் முதலியவை தாள அமைப்புகளுடன் நன்றாக பாடப்பட்டன. பல்லவிக்குப் பிறகு "மாண்ட்" ராகத்தில் முருகன்மீது ஒரு பாட்டும் "காபி" ராகத்தில் ஒரு ஜாவளி முதலியவைகளும் பாடப்பட்டன. "அரைப் பணத்திலே கல்யாணம் அதிலே கொஞ்சம் பாண வேடிக்கை" என்பது போல் இந்த சொல்ப நேரதிற்குள் எல்லோரையும் ஆனந்தப்படுத்தும் வகையில் முறையே "ஸசதாரகௌளம். பிலஹரி, ஷண்முகப்பிரியா புன்னாகவராளி" என்ற ராகங்களில் ஒரு ராகமாலிகையும் "ஹரி காம்போஜி" ராகத்தில் "சங்கநிதி பதுமநிதி" என்ற தேவாரமும் பாடப்பட்டவுடன் சங்கீதம் முடிந்தது. ஆரம்ப முதல் கடைசி வரையில் ரேடியோவில் ஜனங்கள் நசராமல் கச்சேரியைக் கேட்டது இதுவே முதல்தடவை என்று நான் நினைக்கிறேன்.

மந்திரவாதியின் தந்திரம்



மேடையில் எல்லா பாகங்களையும் பரத்தி வைத்து ஒவ்வொன்றாய் காட்டுகிறான். பலகைகளை ஒன்று சேர்த்து ஒரு சிறு கூடு கட்டுகிறான். கட்டி முடிந்ததும் மந்திரவாதி சீட்டியடிக்கிறான். கதவைத் திறந்துகொண்டு ஒரு நாய்க்குட்டி உள்ளேயிருந்து வெளியே வந்து குதிக்கிறது. பலகைகளை சபையோருக்கு காட்டிவிட்டு கட்டிய இந்தவீட்டிற்குள் நாய்க்குட்டி எப்படிப் போயிற்று? மேடையில் சமதளத்திற்குக் கீழே முன்னதாகவே ஒரு நாய்க்குட்டியை வைத்திருக்கிறான். அந்த இடத்தின்மீது புதிய கூடு கட்டுகிறான். சபையோர் கூடு கட்டுவதைப் பார்த்தார்களேயொழிய மேடைக்கு அடியில் உள்ளதை பார்க்கவில்லை. பார்க்கவும் முடியாது. கூடு கட்டி முடிந்ததும் காலின் கீழுள்ள ஒரு பொத்தானை அழுத்தியதும், கூட்டுக் கடியிலுள்ள கதவு திறக்கிறது. நாய் கூட்டுக்குள் வந்துவிடுகிறது. வலதுபக்கத்து படத்தைப் பார்க்கவும். இதுவே வெறும் கூட்டிற்குள்ளிருந்து நாய்க்குட்டி வரவழைக்கும் மந்திரவாதியின் தந்திரமாகும்.

அடுத்த "காந்தி" மலரில் மற்றொரு தந்திரம் வெளி வரும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம்

"தேவிதாசன்" எழுதுகிருர்.

கோயம்பத்தூர் தேசபக்தர் ஸ்ரீ. டி. எஸ். அவிஞசிலிங்கம் செட்டியாரைப் (பி. ஏ. பி. எல்.) பற்றி "காந்தி" வாசகர்கள் அறிவார்கள். "கூடலூர் ஜெயில் மணிகள்" வரிசையில் அவரைப்பற்றி 'துறவி அவிஞசிலிங்கம்' என்று எழுதியதை படித்திருப்பார்கள். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் மீது அவருக்குள்ள அபார பக்தியின் காரணமாக, ஸ்ரீராமகிருஷ்ணர் பெயரால் போத்தனூரில் ஒரு குருகுலம் நடத்தி வருகிருர். இது மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதாக அறிந்து சந்தோஷமடைகிறேன். இந்த குருகுலத்திற்கு வரும்படி நண்பர் அவிஞசிலிங்கமும், அவருடைய தோழரும் மற்ெருரு காரியதரிசியுமான மதுரை தேசபக்தர் ஸ்ரீ. என். எம். ஆர். சுப்பராமனும் பல தடவைகளில் அன்புடன் அழைத்திருக்கிருர்கள். அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய பாக்கியம் இன்னம் கிடைக்கவில்லே. தமிழ்நாட்டில் தோன்றி தலே விரித்தாடும் பரிசு பூதத்தை தொலேப்பதே இப்பொழுது பெரிய வேலேயாயிருக்கிறது. அதற்காக "காந்தி" தினசரிப் பதிப்பும் வருகிறது. ஆகவே என்னே மன்னிக்கும்படி ஷ இரண்டு நண்பர்களேயும் கேட்டுக்கொள்ளுகிறேன். உண்மையான பொது நல நோக்கங்கொண்டு இரண்டு தமிழ்நாட்டு வாலிப தேசபக்தர்களால் நடத்தப்படும் இந்த சிறப்புற்ற குருகுலத்தை தரிசிக்கும் காலத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறேன். அந்தக் காலம் வந்த பின்பு அங்கு நான் கண்டவைகளே "காந்தி" வாசகர்களாகிய—நான் நேரில் அறிய பாக்கியம் பெருத—ஆயிரக்கணக்கான நண்பர்களுக்கு கட்டாயம் தெரிவிப்பதாக இப்பொழுதே உறுதி கூறுகிறேன்.

இந்த குருகுலத்தை 1930ம் வருஷம் நண்பர் அவிஞசிலிங்கம் ஆரம்பித்தார். அவர் குடும்பத்திலிருந்து சுமார் 10 ஆயிரம் ரூபாய்க்குமேல் இதற்குக் கொடுத்திருக்கிருர்கள். கோவை காளீஸ்வரர் மில்காரர் 5 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிருர்கள். மற்றும் பலர் கொடுத்த நன் கொடைகளேயும் சேர்த்தால், மொத்தம் குருகுலத்திற்காக வசூல் சுமார் 26 ஆயிரம் ரூபாய்.

இந்த குருகுலத்தின் நிர்வாகிகள் யார் என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமா? பொதுக் காரியதரிசிகள்: ஸ்ரீமான்கள்

டி. எஸ். அவினாசிலிங்கம் பி. ஏ. பி. எல்., என். எம். ஆர். சுப்ப ராமன். தொழிற்பகுதி காரியதரிசிகள் : ஸ்ரீமான்கள் சி. சுப்பிர மணியம் பி. ஏ. பி. எல்., சி. கே. கிருஷ்ணபோயர். வாசகசாலை காரியதரிசி : ஸ்ரீ. சி. எம். ராமச்சந்திர செட்டியார் பி.ஏ.பி.எல். சுரஸ்பான்டென்ட் : ஸ்ரீ. டி. எஸ். கல்யாணசுந்தரம்.

குருகுல அறிக்கை (30—9—33 வரை) ஒன்று வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே குருகுலக் கொள்கைகளையும் நடைமுறைகளையும்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றை நண்பர்கள் அறிவதற்காக சாராம்சத்தை கீழே வெளியிடுகிறேன்.

அறிக்கை.

(1933 செப்டம்பர் 30 வரை.)

வரலாறு:—

ஸ்ரீ ராம் கிருஷ்ண வித்தியாலயம் 1930-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 3-ம் தேதியன்று கோயமுத்தூர் ரௌண்ட் ரோடிலிருக்கும் காலஞ்சென்ற மகா-ள-ள-ஸ்ரீ. திருப்பூர் க. சுப்ரமண்ய செட்டியார் அவர்கள் பங்களாவில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது அது ஒரு மாணவர் விடுதியாக மட்டுமிருந்தது. பிள்ளைகள் அங்கிருந்து கொண்டு வெளிப் பள்ளிக் கூடங்களுக்குப் போய்ப் படித்து வந்தனர். ஆரம்பத்தில் 3 மாணவர்கள் இருந்தனர். பின் ஜூன் மாதத்தில் இன்னும் இரண்டுபேர் சேர்ந்தார்கள்.

1931-32-ம் வருஷத்தில் வெள்ளக்கிணறு கிராமத்தில் மகா-ள-ள-ஸ்ரீ வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களுக்குப் பாத்தியப் பட்ட தோட்டம் ஒன்றுக்கு வித்யாலயம் மாற்றப்பட்டது. இங்கு 4, 5, 6-வது வகுப்புகள் கொண்ட பள்ளிக்கூடம் ஒன்று குருகுல முறையில் ஏற்படுத்தப் பட்டது. பிள்ளைகள் ஆசிரியர்களுடன் ஒருங்கே வசித்துக்கொண்டும் வந்தனர். பிள்ளைகளின் தொகை 22 ஆக உயர்ந்தது. 1933-34-ம் வருஷத்தில் வித்தியாலயம் போத்தனூருக்கு மாற்றப்பட்டது. போக்கு வரத்து சௌகரியத்தையும் மற்ற சௌகரியங்களையும் உத்தேசித்து இவ்விதம் செய்யப்பட்டது. அத்துடன் 8-வது வகுப்பும், வைக்கப்பட்டது. இப்பொழுது பள்ளிக்கூடத்தில் 5 முதல் 4 வகுப்புகளும், அவற்றில் 42 பிள்ளைகளும் 4 உபாத்தியாயர்களும் இருக்கின்றனர். இவர்களைத் தவிர காரியதரிசிகளில் ஒருவராவது வித்யாலயத்திலிருந்து பிள்ளைகளைக் கவனித்து வருகின்றார்.

வித்யாலயத்தின் நோக்கங்கள்:—

இதுவும் மற்ற பள்ளிக்கூடங்கள் போலிருந்தால் இதை ஸ்தாபிக்க வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. இங்கு ஆண்மையும், தன் நம்பிக்கையும், தைரியமும், தேசிய சேவையில் ஊக்கமும் உண்டாக்கத் தக்கதொரு பயிற்சியை பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டுமென்பது எங்கள் நோக்கம்.

வித்யாலய வேலை பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஒரு கேப்டன் வசம் ஒப்புவிக்கப் படுகிறது. ஒவ்வொரு கேப்டன் கீழும் சில பிள்ளைகள் இருப்பார்கள். கேப்டன் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் வேலைக்கு, அவனே ஜவாப்தாரியாக விருப்பான். மற்ற பிள்ளைகளிடம் சரியாக வேலை வாங்க வேண்டியது அவனுடைய பொறுப்பு. இம்முறை பிள்ளைகளுக்கு, மற்றவர்களுடன் சேர்ந்து வேலைசெய்யும் பழக்கத்தைக் கற்பிப்பதுடன், விஷயங்களை நிர்வகிக்கும் சக்தியையும் உண்டாக்குகிறது. இவ்விதம் வித்தியாலய வேலை முழுவதும் ஒரு வேலைக்காரனும் இல்லாமலே நடைபெறுகிறது. சமயலும்கூட ஒரு பெரிய குக்கரில் பிள்ளைகளாலேயே செய்யப்படுகிறது.

வித்யாலயத்தில் ஜாதி வேற்றுமை கிடையாது. வித்யாலயத்தில் இந்து மதத்துக்குச் சேர்ந்த எல்லா வகுப்புப் பிள்ளைகளும், பிராம்மணரிலிருந்து ஹரிஜனங்கள் வரை, இருக்கின்றனர். அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களைப் போல பழகுகின்றனர்.

பணக்காரர் ஏழையென்ற வேற்றுமையும் இங்கு கிடையாது. பணத்தின் காரணமாக பிள்ளைகளுக்குள் யாதொரு வித்தியாசமும் செய்யப்படுவதில்லை. இவ்வித்தியாசத்தை ஒழிப்பதற்காகவே, பணக்கார பிள்ளைகளிடமிருந்தும் மாதக்கட்டணம் ஒன்றும் நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இதற்குப் பதிலாக, மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதுபோல், அவர்களுடைய பெற்றோர்களிடமிருந்தும், அவரவர்கள் சக்திக்கேற்ப, நன்கொடைகள் பெற்றுக்கொள்ளுகிறோம். இதனால் பணக்காரப் பிள்ளைகள் விநயமும், எளிமையான வாழ்க்கையும் சகோதர உணர்ச்சியும் பெருகின்றனர். ஏழைப் பிள்ளைகள் தைரியமும் சுயேச்சைத் தன்மையும் பெறுகின்றனர்.

தனிமை

(ரஸிகன்)



நள்ளிருள் உறக்கம் வரவில்லை

கடற்கரைக் கடுத்த ஓர் உபரிகையில் ஒரு நங்கை—கணவனைப் பிரிந்த காதலி. மஞ்சத்தில் சயனித்திருக்கிருள். உறக்கம் வரவில்லை,—எப்படி வரும்?

கடல் அலை இத்தனைநாள் இவர்களுடைய காதலின் வெற்றி முரசுபோல இடைவிடாது ஒலித்துக்கொண்டிருந்தது. இப்பொழுதோ, காதில் நாராசமாகப் பாய்கிறது. தூக்கம் வராவிட்டால் கடல் அலையா பழி! சிறிய இடையூறுகள் பெரிய முட்டுக்கட்டைகள் மாதிரி தோன்றுவது உணர்ச்சி யுலகின் தத்துவம். கடல் மேல் சீறுவது காதலன் பிரிவின் பேரில்தான். சற்ருவது ஓயாதா! கொஞ்சம் நிம்மதியாய் தூங்க, என்று நினைக்கிருள்.

"ஆழிவாய் சத்தம் அடங்காதோ!"

அக்காலத்தில் கோழியும் கோவில் சங்கும் தான் காலத்தை அறிவிக்கும் கருவிகள். "கோழிகூவ விடியும்". இவள், கோழி கூவினால் விடிந்து விடாதா, மற்ற காரியங்களில் சற்று மறந்திருக்கலாமே என்று எண்ணுகிறாள். ஊரிலுள்ள கோழிகளுக்குத்தான் எனது பிரிவு தெரியாது; தெரிந்தாலும் அவைகளுக்கென்ன? ஆனால் நான் மிகுந்த செல்வமாக வளர்த்த கோழிகூடவா, வாயில் மண்ணை வைத்து அடைத்தது போலிருக்க வேண்டும்!

"...........................யான் வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ!"

இப்படி யோசித்துக்கொண் டிருக்கையிலேயே ஒரு பெரிய சந்தேகம் வந்துவிடுகிறது. ஒரு வேளை கோழியின் உதவியில்லாமலே விடிந்துவிட்டாலோ! மெல்ல நடந்து சென்று சாளரத்தின் வழியாகப் பார்க்கிறாள். இருள்! மில்டன் சொன்னமாதிரி ஸ்பரிசிக்கக்கூடிய இருள். ஆலகால விஷத்தை எடுத்து மேலும் கீழும் பூசியமாதிரி. மண்டித் துயர் கொடுக்கும் தனிமை, பயங்கரமான இருள். அவளுக்கு ஒன்று தோன்றுகிறது. யுகமுடிவில் திரண்ட அந்தகாரம்.

".........ஊழி
திரண்டதோ!"

உலகமே முடிந்துவிட்டதாக கற்பனை கட்டிக்கொண்டுவிட்ட நங்கைக்கு இன்னும் ஆவலைப்பாருங்கள். விடிந்ததும் காதலன் வந்துவிட்டால்? இந்த ஆசை இவளது கற்பனையை வெறும் கற்பனையாக்கி விடுகிறது. மூலைக்கடல் வான வளையத்தை முத்தமிட்டுத் தழுவும் கீழ்த்திசையை நோக்குகிறாள். அடி வானம சற்றாவது வெளுத்துத் தெரியாதா? அங்கு என்ன தெரியப் போகிறது? இருள்தான். பழைய சந்தேகம் மறுபடியும் தலை எடுக்கிறது. நமது பெண், உணர்ச்சியற்ற பூமி சாஸ்திரம் (Geography) படித்தவளல்ல. ஆனால் கவிஞனது உள்ளத்தில் தோன்றும் அற்புத கனவுகளான பழைய கதைகளை மிகவும் ரஸித்து அனுபவித்தவள். சூரியன் தேரின்மேல் வரும்போது ஒருவேளை உருண்டு பாதாளத்தில் விழுந்துவிட்டதோ, என்ற பெரிய சந்தேகம்.

"..........தினகரனும் தேரும்
உருண்டதோ, பாதாளத்துள்!"

இனி வெண்பா உச்சிமுதல் உள்ளங்கால் வரை நிற்கும் கோலத்தைக் கவனிப்போம்.

"ஆழிவாய் சத்தம் அடங்காதோ! யான்வளர்த்த
கோழிவாய் மண்கூறு கொண்டதோ!—ஊழி
திரண்டதோ! தினகரனும் தேரும்
உருண்டதோ பாதாளத் துள்!"

கவிஞன் வெறும் வெள்ளைச் சொற்களை வைத்துக்கொண்டு ஒரு இந்திர ஜால வித்தையல்லவா செய்துவிடுகிறான்! என்ன அற்புதமான சிருஷ்டி! அக இருளுக்குப் பகைப்புலமாக (Background) புற இருள். சோகத்திற்குப் பின் நிலவும் ஓர் உயரிய நகைச் சுவை.

இந்த நங்கையின் பிரிவுத் துன்பம் இலக்கியத்தின் இறவாத இன்பமாக நமக்கு ஒரு புதிய உலகைத் திறந்து காண்பிக்கிறது. மனதில் தோன்றி மறையும் உணர்ச்சிகள் பல. ஒன்றையாவது எடுத்து மிகுந்த கலைத்திறனுடனும் கற்பனை செறிந்த உணர்ச்சியுடனும் சிருஷ்டிப்பதே ஒரு கவிஞனின் மேதா விலாசம்.

இம்மாதிரி செய்ய ஒரு கம்பனால் முடியும்; ஒரு மில்டனால் முடியும்; இந்தப் பேர் ஊர் தெரியாத கவிஞனாலும் முடியும்!

பிராம்மணனும்—சூத்திரனும்

:: ஒரு விமர்சனம் ::

(வ. ரா. எழுதியது)

(பிராம்மணனும்—சூத்திரனும் அல்லது பரிஹாரம்—என்பது ஒரு தமிழ் நாடகத்தின் பெயர். இதை எழுதியவர் ராவ் பகதூர் ப. சம்பந்த முதலியார் அவர்கள். "காந்தி" பத்திரிகையின் ஆசிரியர், மதிப்புரைக்காக, இந்த நாடகத்தை என்னிடம் கொடுத்து, சுமார் இரண்டு மாதங்களுக்கு அதிகமாயிருக்கும். இதற்கு முன், அதை விமர்சனம் செய்ய முடியாமைக்கு மூன்று காரணங்கள்.

சென்ற இரண்டு மாத காலமாக, அடியேனுக்கு எழுத்து வேலை கொஞ்சம் ஜாஸ்தி. இரண்டாவது காரணம், மனிதர்களுக்கு இயற்கையாயுள்ள அலுப்பும் சோம்பலும். மதிப்புரை எழுதுவதில் இருக்கிற சிரமமும் பயமும் மூன்றுவது காரணம். அடுத்த "காந்தி" மலரில், இந்த நாடகத்தைப்பற்றி நண்பர் வ. ரா. மதிப்புரை எழுதுவார் என்று காந்தி பத்திரிகையின் ஆசிரியர் அச்செழுத்தில் அறிவிப்பு செய்தது, காந்தி மலரைப் படிப்பவர்களுக்கு அலெ. அது, அவர் எனக்குக் கொடுத்திருக்கும் நோட்டீசு ஆகும். எந்த நோட்டீசுக்கும் அசையாமல் இருப்பதாகத் தோன்றுபவர் கடவுள் ஒருவர்தான். (ஒரு சில பத்திரிகைகளும் அன்பர்களும் இருக்கலாம்.) அறிவிப்பு நெருக்கடி நிலைக்குக் கொண்டுவந்து என்னை நிறுத்திய "காந்தி" பத்திரிகையின் ஆசிரியரின் நோட்டீசுக்குஅஞ்சி, நான் என் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டாமா? வ. ரா.)

எப்பொழுதுமே, ஒரு புஸ்தகத்துக்கு மதிப்புரை எழுதுவது, ரொம்பத் தொல்லையான காரியம். மதிப்புரையினால்—நூல் ஆசிரியருக்குஞ் சரி, விமர்சனம் செய்தவருக்குஞ் சரி, படிப்பவர்களுக்குஞ்சரி—சரியான, உண்மையான மனச்சமாதானம் ஏற்படுவதில்லை. கஷ்டப்பட்டு, யோசித்து யோசித்து எழுதிய புஸ்தகத்தை மதிப்புரைப் பாவி இப்படிக் கண்ட துண்டமாக வெட்டி வீழ்த்துகிறானே என்று நூலாசிரியர் மனம் புழுங்குவார். இந்த அபத்தமான புஸ்தகத்தை எழுதி, மதிப்புரைக்கும அனுப்பி, நம்மை தர்ம சங்

கடத் தொல்லையில் நூலாசிரியர் மாட்டிவைக்கிறாரே என்று மதிப்புரைக்காரர் மனம் பொங்குவார். மதிப்புரையில் கண்டது உண்மையா அல்லவா என்று மதிப்புரையைப் படிப்பவர்களுக்குத் தெளிவாய்த் தெரிவதில்லை. இந்தக் கஷ்டங்கள் இப்பொழுது தமிழ் நாட்டிலே, ரொம்ப அதிகம்.

பத்திரிகையிலே, விமர்சனம் செய்பவர்களுக்கு, நூலை நன்றாக, முழுதும் படித்து, மதிப்புரை எழுதுவதற்குப் போதுமான சாவகாசம் கிடைப்பதில்லை. அனேகமாய், முகவுரையைப் படித்தே மதிப்புரை எழுத நேரிடும். இதுவும் ஒரு கஷ்டம். மேலும், விமர்சனத்தை அளவில் பெரிதாகத் தோன்றச் செய்வதற்கு பொருத்தமற்ற விஷயங்களை, மதிப்புரையில், உள்ளே செலுத்தி விடுகிறார்கள். நீண்ட மதிப்புரையில் முன்னுக்கு பின் முரணும் காணப்படுகின்றது. இந்த இரண்டு இழுக்குகளுக்கும் ஆளாகாமல், விமர்சனம் செய்வது சிலருக்கு முடியாத காரியமாய்ப் போய்விடுகிறது. ஒரு பத்திரிகையில் மதிப்புரை வந்து, பின்னே அதற்கு இன்னொரு பத்திரிகை மதிப்புரை எழுத நேர்ந்தால், அப்பொழுதும் தொல்லை விட்டபாடில்லை. முன் மதிப்புரைக்கு மாறாக ஏதேனும் எழுதிவிட்டால், பின்னவனுக்கு அசூயை, அறியாமை முதலிய பட்டங்கள் சூட்டப் பெறுகின்றன. இவைகளுக்கு அஞ்சியே, நான் பிரஸ்தாப நாடகத்துக்கு மதிப்புரை எழுதாமல், மயங்கி நின்றது.

ஸ்ரீ சம்பந்த முதலியாரைத் தமிழர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும். ரிஜிஸ்தர் கச்சேரியில், பிரபலஸ்தர் ஒருவரை நிரூபிக்கும்பொருட்டு, பெயர், ஊர், தெரியாத ஒருவன் அத்தாட்சி கொடுத்து, அறிமுகப்படுத்தும் அசட்டுத்தனத்தை, நான் பின்பற்றப் போவதில்லை. முதலியார் அவர்கள மிகச்சிறந்த ஆக்டர் (நடிகர்). பல நாடகங்கள், தமிழில் எழுதியிருக்கிறார். நடிக்கக்கூடிய ஆற்றலும் நடிப்பதில் ருசியும் இருப்பவர்கள் நாடகம் எழுதுவதே மேலாகும். அதனாலேதான், இங்கிலீஷிலே ஷேக்ஸ்பியரின் நாடகங்களும பிரஞ்சு பாஷையில் மொலீரின் நாடகங்களும் சிறந்து விளங்குகின்றன. இவர்களுக்குப் பின் வந்த நாடகாசிரியர்கள் இவர்களுக்கு இணையில்லாதவர்கள் என்று சொல்லும்படியாக, ஷேக்ஸ்பியரும் மோலீரும் ஆச்சரியப்படும்படியாக, நாடகங்களை எழுதியிருக்கிறார்கள்.

முதலியார் அவர்கள் 52 நூல்கள் எழுதியிருப்பதாக, எனது நண்பர் "கல்கி" 1933ஹு ஆகஸ்டுமீ 10வ 'ஆனந்த விகடன்"

பத்திரிகையில், மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டு, கூட்டிப்போட்டு இருக்கிறார். அவர், ஒரு ஸ்தானத்துக் கூட்டலில் கூட தப்பிதம் போட்டிருக்க முடியாது என்ற நம்பிக்கையின் மேரில், அந்த 52 என்ற புள்ளியை, நாம் கூசாமல் எடுத்துக்கொள்ளுவோமே? தப்பிதம் இருந்தால், பிழை அவர் பேரில்.

விமர்சனம் செய்வதிலே, சாதாரணமாய் என்ன ஒழுங்கீனங்கள் நேர முடியும் என்பதற்கு, "கல்கி" எழுத்திலிருந்து சிலவற்றை எடுத்துக்காட்டினால், நான் விமர்சனம் செய்ய பயப்பட்ட காரணங்கள் உங்களுக்கு நன்றாகப் புலப்படும். "இப்புத்தகத்தின் முகப்புப் பக்கத்தில் முக்கால் பக்கத்தை அடைத்துக் கொண்டு, அவர் எழுதிய மற்ற 51 தமிழ் நூல்களின் ஜாப்தா காணப்படுகின்றது" என்று 'கல்கி' எழுதியிருக்கிறார். புஸ்தக விமர்சனத்துக்கும் அட்டையிலிருக்கும் ஜாப்தாவுக்கும் என்ன சம்பந்தம்?

இந்த ஜாப்தாவைப்பற்றி 'கல்கி" ஏன் கேலி செய்யவேண்டும்? தசாவதாரங்களுக்குள் ஒருவரான 'கல்கி"யின் பெயரை, எனது நண்பர் சூட்டிக்கொண்டு உரிமையும் பெருமையும் பெற ஆவல்கொண்டிருக்கையில், தாம் எழுதிய நூல்களை—அவைகள் யாவும் அபத்த நூல்களாயிருக்கலாம்-தம் பெயருக்குப் பின்னே, எழுதிக் கொள்ளுவதற்குக்கூட, முதலியார் அவர்களுக்கு உரிமையில்லையா? தன் வீட்டுப் பணத்தை ஊரார்க்கு வாரி இறைத்து விடுவதைப்போல, "ஆனந்த விகடன்" பரிசுகளும் போட்டிப் பந்தயங்களும் விளம்பரம் செய்கிறானே, அதைக் காட்டிலும் மகத்தான பாபத்தை, முதலியார் அவர்கள் டம்பமாய்ச் 'செய்துவிடவில்லையே!

நூலை, முதலியார் அவர்கள் தமது வணக்கத்துக்கும் அன்பிற்கும் உரியவர்களுக்கு ஸமர்ப்பணம் செய்வதில், "கல்கி"க்கு சிரிப்பு. ஹாஸ்யத்தையே நாடும் விகடகவிக்கும் விமர்சனத்துக்கும்பொருத்தமில்லை என்று சொன்னால், அது மிகையாகாது. அஷ்டோத்திர அர்ச்சனை "கல்கி"க்கு பழக்கமாயிருக்கலாம். அந்த வேலையை முதலியார் அவர்களின் பேரில், ஒழுங்கீனமான மதிப்புரை முறையில், "கல்கி" போட்டால், யாரைப் பார்த்துச் சிரிப்பது என்பது உங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? கல்கி எழுதுகிறார்:—

"இந்தப் புத்தகம் தங்களுக்கு உரிமையாக்கப்படாததினால் சொர்க்கலோகத்தில் உள்ள ஸ்ரீமான். சம்பந்தம் அவர்

களின் பெற்றோர்களும், நண்பரும் பெரிய நஷ்டம் ஒன்றும் அடைந்துவிடப் போவதில்லை"

இது விமர்சன முறையன்று. விகடமுமன்று. உலகில் எது இல்லாவிட்டால் யாருக்குத்தான் என்ன நஷ்டம்? நாடகமில்லாவிட்டால்தான் நஷ்டமா, அல்லது விமர்சனம் இல்லாவிட்டால் தான் நஷ்டமா?

முதலியார் எழுதிய நாடகத்தின் விமர்சனத்துக்கும் "ஸ்ரீமான்கள் டி. ஆர். இராமச்சந்திர அய்யர், டி. எம். கிருஷ்ண சாமி அய்யர் முதலிய கடும் வைதிகத் தலைவர்களுக்கும்" என்ன பாத்யா பாத்தியம்? மதிப்புரை எழுதப் புகுந்த "கல்கி" மேற் கூறிய கனவான்களை பேர் சொல்லி, ஏன் வம்புக்கு இழுத்துக் கேலி செய்ய வேண்டும்? ஸனாதனிகளின், வைதிகர்களின் கொள் கைகளையும் நடத்தையையும் ஒழுங்கு முறையில், "கல்கி" மதிப் புரையல்லாது, பொருத்தமுள்ள சந்தர்ப்பங்களில், தாக்குவது தான் உசிதமாகும். ஒரே குண்டில், பல பட்சிகளை வீழ்த்திவிடும் சாமர்த்தியம் "கல்கி"க்கு உண்டு என்பதை, இந்த மதிப்புரை மூல மாய் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கும் உலகம் அறியவேண் டாமா? சுபமுகூர்த்தத்தில், 'சுபஸ்ய சீக்கிரம்" என்று சொல்லு கிறதுபோல, காரியம் நடந்துவிட வேண்டாமா? "கல்கி"யின் ஆவல், குழந்தைப் பிள்ளைகளுக்குள்ள இயற்கையான குணம். அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் அந்த ஆவலுக்கும் பிரஸ்தாப மதிப்புரைக்கும், "கல்கி" அலுக்காமல் போடுபோடும், "ஸ்னானப்ராப்தி" கூடக் கிடையாது.

மேலே சொல்லப்பட்ட குற்றங்கள் மதிப்புரையில் நுழையலா காது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்!

மதிப்புரை நீண்டால், கருத்துக்கள் முன்னுக்குப் பின் உதை யும் என்பதற்கு 'கல்கியின் எழுத்திலிருந்து, உங்களுக்கு தெளிவாகத் தெரிய வரலாம். இதோபாருங்கள. "பொதுவாக, இந்நாடகத்தில் வரும் பாத்திரங்கள் தற்காலத்துத் தமிழ் மக்களுக் குச் சரியான பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். நமது வாழ்க்கை எவ் வளவு சாரமில்லாததாயும் உற்சாகமும் ஜீவ சக்தியும் அற்றதாயும் இருக்கிறதோ, அது போலவே, இந்நாடக பாத்திரங்களின் பேச் சுக்களும் இருக்கின்றன" என்று "கல்கி" எழுதுகிறார். முதலியார் அவர்கள் எழுதியிருக்கும் "பிராமணனும் சூத்திரனும்" என்ற பிரஸ்தாப நாடகத்தின் மேம்பாட்டைக் குறிப்பதற்கு, "கல்கி"

யின் எழுத்தே சிறந்த அத்தாட்சியாகும். நாடகம் கேவலம் என்று குறிப்பிட்டு எழுதப் புகுந்த "கல்கி" தம்மை யறியாமலே, சிறந்த ஸர்டிபிகேட், கொடுத்து விட்டார். தமிழர்களின் வாழ்க்கை சார மில்லாமற் போன குற்றத்துக்கும் குறைக்கும், ஸ்ரீ சம்பந்த முதலி யாரைத் தண்டிக்க முடியுமா? "கல்கி" தம்மைத் தாமே தவறான விமர்சனம் எழுதாமல், தண்டித்துக் கொண்டிருந்தால், அது அழ காயும் உசிதமாயும் இருந்திருக்குமே!

ஒரு சமூகத்தின் தற்கால வாழ்வைப் படம் பிடித்து எழுது வது ஒருவகை நாடகம். இந்தமாதிரி நாடகங்களைத்தான பெரும் பாலும், கால்ஸ்வர்த்தி என்ற சிறந்த ஆங்கில நாடகாசிரியர் எழுதி யிருக்கிறார். எதிர்கால உன்னத வாழ்வை குறிக்கொண்டும் நாட கம் எழுதலாம் இவ்வகையில், பர்னார்டுஷா அவர்கள் இங்கிலீஷில் சில நாடகங்கள் எழுதி யிருக்கிறார். தமிழர்களின் தற்கால வாழ் வை முதலியார் படம் பிடித்திருக்கும் விந்தையைப் புகழும் "கல்கி" நாடக இலட்சணங்களை நன்றாக எழுதி விட்டார் முன் பகுதியில். பின் பகுதியில் "கல்கி" எழுதினது, அவர் முன் சொன்னதைத் தப்பிதமாய்த் தாக்குகின்றது. இந்த முரணை அவர் முழுதும் தெரிந்து கொள்ளாமல் எழுதிவிட்டார். நீண்ட மதிப்புரையின் கோளாறு என்று முதலில் சொன்னேனே! அது வாக்கும் இது.

பொதுவாக மனிதர்கள் செய்யும் மதிப்புரையிலும், ஹாஸ்யத் துக்காக மட்டும் விகட கவிகள் பொறுப்பில்லாமல் பொருளை மதிப் பிடும் வகையிலும், என்ன கஷ்டங்கள் நேரும் என்பதை, "கல்கி" யின் மதிப்புரையிலிருந்து, நீங்கள் இதற்குள் தெரிந்து கொண் டிருப்பீர்கள். நான் மதிப்புரை எழுதப் பயந்ததன் காரணங்கள் சரியானதென்று, இப்பொழுது உங்களுக்கு விளங்கி யிருக்கும்.

இனி, முதலியார் அவர்களின் நாடகத்தை ஆராய்வோம். நாடகங்களை, பொதுவாக, இரண்டு கூறுகளாகப் பிரிக்கலாம். படிக் கும் நாடகம்; நடிக்கும் நாடகம். நடிப்பதற்கு நன்றாயிருக்கும் நாட கங்கள், அனேகமாய்ப் படிப்பதற்கு நன்றாயிருக்கமாட்டா. அனேக மாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். படிப்ப தற்கு இனிப்பாய் இருக்கும் நாடங்களை பலவற்றை, நடிப்பதற்கு நன்றாயில்லை, நடிப்பதற்கும் முடிவதில்லை என்று நடிகர்கள் சொல் லுகிறார்கள். பர்னார்டு ஷாவின் நாடகங்களுக்கு இந்த இழுக்கு வெகு காலம் இருந்து வந்தது. இப்பொழுதும் இருப்பதாகப் பல நடிக அறிஞர்களின் கருத்து. முதலியாரின் பிரஸ்தாப நாடகம் நடிப் பதற்கு ரொம்ப நன்றாயிருக்கும என்பதில் சந்தேகமேயில்லை. பிர

பல நடிகர்கள் எழுதும் நாடகத்தின் இலட்சணம் இதுவேயாகும். படிப்பதற்கு, "கல்கி"யினால் முடியாமற்போனால், அதனால் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விடாது.

ஆசிரியரின் நோக்கம் என்ன? அது எத்தன்மை கொண்டது? அவர் நோக்கம் சரியா? அவர் காட்டிய பாதை சரியா? அவர் நோக்கம் பலிக்குமா?

ஆசிரியரின் நோக்கம் பலிக்குமா என்ற கடைசிக் கேள்வியை முதலிலே எடுத்துக் கொள்ளுவோம். நல்ல காரியம் என்று மனதில் தோன்றியதைச் செய்வதில், பலனை எதிர்பார்ப்பது வீண்; அதுவும் விரைவில், பலனை எதிர்பார்ப்பது வீணினும் வீண். எனவே, இந்தக் கேள்விக்கு பதில் சொல்லப் பிரயத்தனப்படுவது வீணான வேலை, கூலியில்லாத உத்தியோகம், முடிவு சொல்ல முடியாத கனவு.

ஆசிரியரின் நோக்கம் என்ன? தமிழர்களுக்குள் அர்த்தமில்லாத பிளவுகளும் சாரமற்ற மனக் கசப்புகளும் ஒழிந்துபோய் அவர்கள மன ஒற்றுமையுடனும், ஒற்றுமையால் ஏற்படும் பூரண வலிமையுடனும், உலகத்தாரின் பெருமதிப்புக்குப் பாத்திரர்களாய் வாழவேண்டுமென்ற சிறந்த நோக்கத்துடன், ஆசிரியர் இந்நாடகத்தை எழுதியிருக்கிறார். இந்த நோக்கந்தான் எல்லாத் தமிழர்களின் நோக்கமும் இலட்சியமும் ஆகும். இந்த நோக்கத்தை மறந்தவன், அல்லது ஏளனம் செய்பவன் அல்லது இதற்கான காரியத்தைச் செய்யாதவன் தமிழன் அல்ல; அவன் வேறு எந்த நாட்டானோ? நம்மைப்பற்றி கவலை இல்லாதவனைப்பற்றி, நாம் ஏன் கவலைப்பட வேண்டும? ஆசிரியரின் நோக்கத்தை, நாம் ஏற்பதுமன்றி, அதைப் பூராவும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆசிரியரின் நோக்கமும் சிறை சென்று தேசத்துக்காக உயிரையும் விடும் தேச பக்தர்களின் நோக்கமும் ஒன்றே. இதைப்பற்றி, அபிப்பிராய பேதம் கிடையாது.

ஆசிரியர் காட்டிய பாதை சரியா? இதற்கு, நம் பண்டைச் சரித்திரத்தையும் உலகப் போக்கையும் நமது யோசனைத் திறனையும் கொண்டு, நாம் பதில் சொல்லமுடியும். தமிழர்களின் ஒற்றுமைக்கு, ஆசிரியர் கலப்புமணப் பாதையைக் காண்பிக்கிறார். நடுக் காலப் பழக்கப் பேயின் வாயில் சிக்கிக் கொண்ட வைதிக ஹிந்துக்கள் இதை ஏற்க மாட்டார்கள். காந்திஜியின் குமாரன் திருவளர்ச் செல்வன் தேவதாஸுக்கும், ராஜகோபாலாச்சாரியின் பெண், திரு

வளர்ச்செல்வி லட்சுமிக்கும் நடந்த கலியாணத்தை, வைதிக ஹிந்துக்கள் ஏற்பார்களா? ஆனால் பராசாருக்கும் மத்ஸியகந்திக்கும் நடந்த காந்தர்வ விவாகத்தை ஏற்றுவார்கள் போற்றுவார்கள் வைதிகப் பிராமணர்களும் வைதிக ஹிந்துக்களும். காந்தர்வ விவாகம் செய்துகொண்ட பராசர் மனுஸ்மிருதியைத் திருத்தம் செய்து, சட்டம் செய்பவர் என்ற பெரிய பட்டம் பெறுவதற்கு உரித்தானவராம்! இது என்ன மாய வித்தையோ?

அது மட்டுமா? தாஸியான மேனகையின் பேரனான பரதன் பெயரால், "பரதக்கண்டே" என்று சங்கற்பத்தின் நடுவே, சொல்லுவார்கள் பிராமணர்களும் மற்றும் வைதிக ஹிந்துக்களும். கேட்டால், நதிமூலம், ரிஷிமூலம் விசாரிக்கலாகாது என்று மூடு மந்திரம் செய்வார்கள். ரிஷிமூலம், நதிமூலம், க்ஷத்திரிய ராஜாவின்மூலம், பொதுவாக மனிதர்களின் மூலமே விசாரிக்கலாகாது என்று ஏன் சொல்லக்கூடாது? ஆசிரியர் காட்டும் பாதைக்கு, நமது பண்டைச் சரிதத்தில் ஏராளமான ஆதரவுகள் இருக்கின்றன. எனவே, பாதையும் சரித்தான். அதையும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால், பழக்கந்தான் குறுக்கே படுத்துக் கொண்டு, வழி மறிக்கிறது. "சற்று விலகியிரும் பிள்ளாய்" என்று வழக்க நந்தியைப் பார்த்துச் சொல்லத் தைரிய மில்லாமல், பலர் விழிக்கின்றார்கள். இதற்கான துணிவை, ஆசிரியர் இந்த நாடக மூலமாய்க் காட்டியதை, நான் மிகுதியும் போற்றுகின்றேன்.

இனி நாடக பாத்திரங்களை ஆராய்வோம். ஏறக்குறைய எல்லாப் பாத்திரங்களும் செவ்வையாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. சமூகப் பகையாவது, அற்பத்தனமாவது, மோசமாவது, முக்கியமான பாத்திரங்களின் பேச்சுக்களில் காணப்படவில்லை. கதாநாயகன், கதா நாயகி இவர்களிடம், நவீன நாகரிகத்துக்கு ஏற்ற குணங்கள் பலவும் குறைகள் சிலவும் இருக்கின்றன. நவீன முறையில், நாடகம் எழுதும் எவரும், இந்தக் குற்றங்களில் சிலவற்றிலிருந்து தப்பி மீறி எழுத முடியாது. எழுதினால், நாடகம் நடிக்கும்போது, பார்ப்பவர்களுக்கு, அது ஒரு நாளும் ரஸிக்காது. அரிச்சந்திர நாடகத்தில் ஒரு நட்சத்ரகனும் காலகண்டனும் இல்லாமற் போனால், அரிச்சந்திரன், சந்திரமதி புலம்பலை மட்டும், நாடகம் பார்ப்பவர்கள், கேட்டுச் சகித்திருக்க முடியாது.

இந்த நாடகத்தில் இரட்டையர்கள் என்று சொல்லக்கூடிய சாம்பமூர்த்தி அய்யர், வெங்கடேச முதலியார் என்ற பாத்திரங்கள் ரொம்ப பேஷ். சார்லெஸ் டிகென்ஸ் எழுதிய நிக்கலஸ் நிக்கல்பி

என்ற நாவலில், சியரிபின் சகோதரர்கள் என்று இருவர் இருக்கின்றனர். அந்த சகோதரர்கள் டிக்கென்ஸ் அவர்களுடைய அபூர்வ சிருஷ்டியாகும். ஆனால், அந்த ஆச்சரியமான கற்பனையை முதலியார் அவர்கள் தமது நாடகத்தின் இரட்டையர்களின் மூலமாய் நன்றாகத் தோற்கடித்து விட்டார். இந்த இரட்டையர்கள் பரபரப்பின்றி, மனக் கசிவுடன், மனக் கசப்பில்லாமல், உற்சாகத்துடன், தன்னலம் சிறிதுமின்றி, ஹாஸ்யம் ததும்ப, காரியம் செய்வதை நாடகத்திலே நடிப்பதைப் பார்த்துத்தான் பூரா ஆனந்தத்தையும் அடைய முடியும்.

நாடகத்திலே நாடகத் தன்மை (Dramatic effect) ரொம்ப நன்றாய் அமைந்திருக்கிறது. சிற் சில ஸீன்கள் கொஞ்சம் நீளம் என்று சொல்லலாம். சம்பாஷணையும் சில இடங்களில் நீளந்தான். ஆனால், கட்சிவாதம் முழுமையும் பட்சபாதமில்லாமல் சொல்ல வேண்டும் என்று ஆசிரியர் விருப்பங் கொண்டதே, நீளத்துக்குக் காரணம். ஸீன் காட்சிகள், நாடகத்துக்குத் தற்போது தேவை என்ற எண்ணத்தினால், ஸீன்களை, ஆசிரியர் அதிகப்படுத்தி இருக்கிறார். அந்த தேவைக்கு மீறி, சில சம்பவங்களை (Situations) அதிகப்படுத்தி யிருக்கிறார் என எனக்குப் படுகிறது. ஆனால் ஆக்ட் செய்து பார்த்தால், அந்தக் குறைகூட, ஓடிப் போகக்கூடும் என்றும் எனக்குத் தோன்றுகிறது.

முதலியார் அவர்கள் எழுதிய நாடகங்களில், லீலாவதி சுலோசனா, மனோஹரா, தாசிப்பெண், பிராமணனும் சூத்திரனும் என்ற நான்கு நாடகங்கள் சிறந்தவை என்பது என் எண்ணம். இவைகள் நான்கிலும் தாசிப் பெண் ரொம்ப உயர்ந்த நாடகம். ஆனால் பிராமணனும் சூத்திரனும் என்பதை நான், பிரசார நாடகம் என்று கொண்டு, அதைப் பெரிதும் ஆதரிக்கின்றேன். உண்ணாவிரதம் இருந்து இறந்துபோன, டெரன்ஸ் மாக்ஸ்வினி என்ற ஐரிஷ் தேசபக்தர் எழுதிய நாடகங்களின் நற்பயனை, இந்த நாடகம் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ் நாட்டில் மகாத்மா



ஜனவரி 21உ முதல் பெப்ரவரி 9உ முடிய மகாத்மா காந்தி தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

திருநெல்வேலி	ஜனவரி	21உ
மதுரை		24
காரைக்குடி		25
திருச்சி		27
தஞ்சை	பெப்ரவரி	3
கும்பகோணம்		3
சிதம்பரம்		5
விருத்தாச்சலம்		7
சேலம்		8
கோயம்புத்தூர்		8
காட்பாடி		9
சென்னை		9

சீனா-ஜப்பான் பகிஷ்காரம்

(த. பா. நித்தியானந்தன்)

சீனர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் சமீபத்தில் நடைபெற்ற போராட்டத்தைப் பற்றி அனைவருக்கும் தெரியும். சீனா பரந்த நாடே எனினும் வலிமையற்றது; ஜப்பான் சிறிய நாடே யெனினும், மகா வல்லமையுள்ளது. வல்லரசுகளாக விளங்கும் சர்வதேச சங்கத் தீர்மானத்தையும் உல்லங்கனம் செய்து விட்டது. சர்வதேச சங்கமோ ஜப்பானின் கொட்டத்தை அடக்கும் ஆற்றலற்றிருந்தது. இந்நிலையைச் சமாளிக்க சீனா ஒரு ஆயுதத்தைக் கையாடியது. அந்த ஆயுதம் ஜப்பான் சாமான் பகிஷ்காரம் தான்.



—ஹேக்போஸ்ட்

ஜப்பான் சாமான் பகிஷ்காரத்தின் தத்துவத்தை சீனாவில் தோட்டி முதல் தொண்டமான் வரை நன்கு உணர்ந்திருந்தனர். சிறு குழந்தைகளும் கூட ஜப்பானில் செய்த விளையாட்டுச் சாமான்களை வைத்து விளையாட மறுத்துவிட்டன. ஜப்பானியர் நடத்தும் ஆலைகளில் சீனர்கள் வேலை செய்ய முடியாதென்று மறுத்துவிட்டனர். ஜப்பானியர் நடத்தும் ரயில்வேக்களிலும், மோட்டார்கார்களிலும் சீனர்கள் ஏறிச் செல்ல மறுத்துவிட்டனர். துறைமுகங்களில் ஜப்பான் கப்பல்கள் வந்து சேர்ந்தால் அவைகளிலிருந்து சாமான்களை இறக்க கூலிக்காரர்கள் செல்ல மறுத்து விட்டனர்.

இத்தகைய நிலைமை வெகுநாள் நீடித்திருந்திராது. ஆனால் ஜப்பானியர்கள் முக்தன் என்னும் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்

டனர். மஞ்சூரியாவிலுள்ள நகரங்களின்மீதும் படையெடுத்துச் சென்றனர். சிங்டோ என்னுமூரில் கலகம் செய்தனர்; டீன்ட்ஸினிலும், ஷாங்ஹெயிலும் போராடினார்கள். இவையனைத்தும் சீனர்களுடைய ரத்தத்தைக் கொதிக்கச் செய்தன. அவர்களுடைய வீர உணர்ச்சி வீறுகொண்டெழுந்தது. எனினும் ஆயுதபலங் குன்றியவர்களாகவே, தமது ஜப்பான் சாமான் பகிஷ்காரத்தை மேலும் தீவிரமாகப் பரப்புவதற்கான முயற்சி செய்தனர்.

முக்தன் நகரத்தை ஜப்பானியர் கைப்பற்றிய செய்தி 1932-ம் வருஷம செப்டம்பர் மாதம் 18-ம் தேதி கிடைத்தவுடனே, தேசிய சர்க்கார் ஒரு உத்திரவிட்டனர். அவ் வுத்திரவின்படி சீனர்கள் வீடுதோறும் சூரியன் கொடி பறந்தது. தாம் கோப மூட்டப்பட்டிருப்பதற் கறிகுறியாகவே அக்கொடியை அன்று முழுதும் பறக்கவிட்டனர். மறுநாள் காலையில் அக்கொடிகள் அனைத்தும் இறக்கிவிடப் பட்டன. அவைகளுக்குப் பதிலாக ஜப்பானியர்கள் கட்டிடங்களி லெல்லாம் ஜப்பானின் இளஞ்சூரியக் கொடி பறந்தது. ஜப்பானியர் தாம் மஞ்சூரியாவைக் கைப்பற்றிவிட்ட வெற்றி விழாவை அன்று கொண்டாடினார்கள். ஆயினும், எத்தகைய கலவரமாவது, அடிதடிகளாவது அங்கு நடைபெறவே யில்லை.

இந்தப் போராட்ட சம்பந்தமான முழு விவரங்களும் ஒவ்வொரு சீனருக்கும் தெளிவாகத் தெரிந்திருந்தது. எனவே சீன மக்கள் அனைவரும் திரண்டனர். பல தொழிற்சங்க ஸ்தாபனங்கள், பகிஷ்காரத்தை மேற்கொண்டன. சீனாவின் பகிஷ்கார சங்கத்தை நிரந்தரமான முறையில் மாற்றியமைத்தனர். இந்த மாறுதலின் பயனாக வர்த்தகங்களும், பொருள் ஆக்குவோர் சங்கங்களும் ஜப்பான் பகிஷ்கார சங்கத்தில் சேர்ந்தன. பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. வெளிநாடுகளிலுள்ள சீனர்களின் நன்மைகளைப் பாதுகாப்பதற்கென அமைந்திருந்த சங்கங்கள் ஜப்பானியர்களிடமிருந்து சுதேசிகளை மீட்கும் சங்கங்களாக மாறின. இச்சங்கத்தார் தம் பொதுக்கூட்டமொன்றில் தெளிவான வேலைத்திட்டமொன்றை வகுத்துவிட்டனர். இக்கூட்டங்களில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலோர் வியாபாரிகள். இவர்கள் இதில் சேருவதற்கு முதற்காரணம் ஆயுதத்திற்கு அவர்கள் கொண்ட அச்சமே. இரண்டாவதாக, தம் முன்னனுபவத்தினின்று பகிஷ்காரத்தினால் சிறந்த பலனுண்டு என்று நன்குணர்ந்திருந்தனர். மூன்றாவதாக ஜப்பானியர், தம்முடன் தொழில் துறையில் போட்டி யிடுவதனால், அதைத் தடுக்கவேண்டுமென்று விரும்பினர்.

டீன்ட்ஸின் நகரத்திலுள்ள பகிஷ்காரக் காரியாலயம் வர்த்தக சங்கக் கட்டிடத்திலேயே அமைந்திருந்தது. வர்த்தக குமாஸ்தாக்கள் மறியல் செய்யவும், மறியல் செய்வோரை மேற்பார்ப்போராகவும் தாக்கல் செய்து கொண்டனர்.



மஞ்சூரியாவை ஜப்பான் விழுங்கல். —பிராவ்டா

பகிஷ்கார வரி.

திடீரென பகிஷ்காரத் துறையில் அனைவரும் இறங்கிவிட்டால், இருப்புச் சரக்கு வைத்துள்ள வியாபாரிகளுக்குப் பெரு நஷ்டம் விளையுமன்றே? எனவே ஜூலை மாதம் 29உக்கு முன்னதாக வாங்கிய சாமான்களின் விற்கிரயத்தில் 100-க்கு 1 விகிதம் பகிஷ்கார வரி விதித்தனர். இந்த வரியை வசூலிப்பதற்கென தனி தலைகள் (ஸ்டாம்புகள்) விற்றனர். இந்தத் தலைகள் ஒரு காசுக்குக் கூட விற்கப்பட்டன. விற்கப்பட்ட ஜப்பான் சாமான்மீது இந்த முத்திரை யில்லாவிட்டால் மறியல்காரர்கள் அந்த மூட்டைகளையோ பெட்டிகளையோ தமது காரியாலயத்திற்குக் கொண்டு போய் விடுவார்கள். மேற்குறித்த தேதிக்குப் பிறகு கொள்முதல் செய்யப்பட்ட சரக்குகளைப் பறிமுதல் செய்துவிட்டனர். இது இரு தரத்தார் சம்மதத்தின்பேரிலேயே நடைபெற்றது. இங்ஙனம் பறிமுதல் செய்யப்பட்ட சாமான்களை பகிஷ்காரக் காரியாலயத்தில் வெகுவாகக் குவித்திருந்தனர். ஜப்பானியர்களின் சாமான்களை பகிஷ்கரிப்பது மட்டும் பகிஷ்காரக்காரர்களின் நோக்கமன்று. ஆனால் அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்க மறுத்துவிட வேண்டுமென்பதும் அவர்கள் நோக்கமாகும். ஜப்பான் சாமான்களின் இறக்குமதி தடைப்படவே நாட்டிற்குத் தேவையான சாமான்கள் தயார்செய்யவேண்டிய பொறுப்பு, சீனர்களுக்கு ஏற்பட்டது. ஆகவே பல தொழிற்சாலைகள் ஆங்காங்கே தோன்றின. தம்மால் செய்வதற்கியலாத பொருட்களை ஜப்பான் தவிர ஏனைய

நாடுகளினின்று தருவித்துக்கொண்டனர். ஜப்பானியர்கள் சீனுவில் சீனத்தொழிலாளர்களைக் கொண்டு நடத்தும் ஆலைகளில் செய்யப்பட்ட சாமான்களையும் ஜப்பான் சாமான்களாகவே கருதி பகிஷ்கரித்தனர்.

இத்தனை ஏற்பாடுகள் செய்திருந்துங் கூட, பகிஷ்காரம் பூரண வெற்றியுறும்படி செய்தல் எளிதான காரியமன்று. பொது ஜனங்களின் மனோபாவத்தை யொட்டியே இந்த இயக்கத்திற்கு வெற்றி தோல்வி ஏற்படும். தீவிரமான காரணங்களைக்கொண்டு பொது மக்களின் உணர்ச்சி அவ்வப்போது தூண்டப்படவேண்டும். ஏதாவது ஒரு லக்ஷியத்தை நாம் மனதிற்கொண்டு இடையறாது ஊக்கத்துடன் உழைத்து வந்தால் இறுதியில் வெற்றியடையலாம். ஊக்கங் குன்றினால் நாம் நமது லக்ஷியத்தை இழப்பது மட்டுமன்றி அதை மறந்துவிடவும் செய்கிறோம்.

தடைகள்.

சீனர்கள் தம் ஊக்கத்தில் சிறிதும் தளர்ச்சியுறவில்லையாயினும், அவர்களுக்கும் ஒரு பெருந்தடை ஏற்பட்டது. ஒரு யுத்த உடன்படிக்கை காரணமாக டின்ட்சின் துறைமுகத்தில் ஜப்பானியர்களுக்குச் சில விசேஷ சாதகங்கள் ஏற்பட்டன. இங்கே ஜப்பானியர்கள் தம் கப்பல்களில் சாமான்களைக் கொண்டுவந்து இறக்கலாம். இத்துறைமுகத்தை ஜப்பானியப் படை காவல் புரிந்து வந்தது. எனவே இத்துறைமுகத்தில் ஜப்பானிய சாமான்களைக் கொண்டுவந்திறக்கி திருட்டுத்தனமாக சீனர்களுக்கு அவைகளை விற்க எளிதாயிருந்தது.

முக்தன் நகரத்தை ஜப்பானியர் கைப்பற்றியவுடனே அங்கிருந்த சீனர்கள் தம் சொத்துக்களை யெல்லாம் அங்கேயே விட்டுவிட்டு, உயிர்தப்பி பல திசைகளிலும் ஓடிவிட்டனர். இதுகேட்ட பிபிங் நகரத்தார் பகிஷ்காரத் திட்டத்தை தீவிரமாய்க் கையாடினார்கள்.


அங்குள்ள தேசியக் கட்சியாரான குமிங்டான் காரியாலயத்தில்தான் தேசிய ரக்ஷகர் சங்கத் தலைமை ஸ்தாபனம் நிறுவப்பட்டது. முப்பது ஸ்தாபனங்கள் இத்துடன் இணைந்தன. குமிங்டான் மாகாண மத்திய பகிஷ்காரக் கமிட்டியாக மாறியது. இந் நகரத்தில் பல சர்வகலாசாலைக ளிருக்கின்றன. மத்திய பகிஷ்கார கமிட்டியார் தம் இயக்கத்திற் சேரும்படி மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தனர். மாணவர்கள் ஆயிரக்கணக்காகச் சேர்ந்தனர். அக்டோபர் மாதம் 25-ந்தேதி மாணவர்கள் தம்

மைப் பல கோஷ்டியினராக வகுத்துக்கொண்டு கடைகளுக்குள் சென்று ஜப்பான் சாமான்களிருக்கின்றனவா வென்று சோதித்தனர். இம்மாணவர்கள் அறியாமையினால் பல குற்றங்கள் செய்ததின் நிமித்தம் பல வியாபாரிகள் துன்பத்திற்கு ஆளாக நேர்ந்ததேனும், அவர்கள் பணியினால் தக்க பலன் விளைந்தது. அநேக கடைக்காரர்கள் தம் கடை முகப்புக்களில்,

"ஜப்பான் சாமான்களை நாங்கள் விற்கோம்"

"சுதேசிப் பொருட்களுக்கு ஆதரவளியுங்கள்"

என்று எழுதப்பட்ட விளம்பரப் பலகைகளைத் தொங்கவிட்டிருந்தார்களாம். மாணவர்களடங்கிய இந்த பகிஷ்காரக் கோஷ்டியார் இரு போர்வீரர்கள் துணையுடன் கடைகள்தோறும் சென்று



ஜப்பான் ஏகாதிபத்திய சூரியன்: உதயமா, அஸ்தமானமா?
—டெயிலிமிரர்

சோதித்தபிறகு, அதற்கறிகுறியாக அதன் கதவில் கத்தியினால் கொத்திவிட்டுச் சென்றனர். 25 லக்ஷம் டாலர் (தங்கம்) பெறுமான ஜப்பான்சாமான்கள் கைப்பற்றப்பட்டனவெனத் தெரிகிறது.

அன்றியும் அங்நகரத்திற்கு 13 வாயில்களுண்டு. ஒவ்வொரு வாயிலிலும் 10 பரிசோதகர்கள் வீதம் மாணவர்கள் காவலிருந்தனர். ஜப்பானிய சாமான்கள் திருட்டுத்தனமாக நகரத்திற்குள் புகாவண்ணம் தடுத்தனர். ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷனிலும் இப் பரிசோதகர்கள் நின்று ஒவ்வொரு வண்டியிலும் வந்திறங்கும் ஜப்பான் சாமான்களைப் பறிமுதல் செய்தனர்.

பகிஷ்கார விளம்பரங்கள்

நகர் முழுதும் சுவர்களிலெல்லாம் பகிஷ்கார விளம்பரங்கள் நீல நிறத்திலும், வெள்ளை நிறத்திலும் ஒட்டப்பட்டிருந்தன. அந் நகர வாயில்களிலெல்லாம் 'கூடாதுத் தொகை' ஜப்பான் மொழியிலும் சீனமொழியிலும் பொறிக்கப்பட்டிருந்தது. கூடாதுத் தொகையாவது:—

1. ஜப்பான் சாமான்களை வாங்கக்கூடாது.
2. ஜப்பான் சாமான்களை உபயோகிக்கக்கூடாது.
3. ஜப்பான் சாமான்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யக்கூடாது.
4. ஜப்பானியர் கப்பல்களிலாவது ரயிலிலாவது பிரயாணம் செய்யக்கூடாது.
5. ஜப்பானிய தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடாது.
6. ஜப்பானிய நாணயங்களையாவது பாங்கி நோட்டுக்களையாவது உபயோகிக்கக்கூடாது.
7. ஜப்பானிய பாங்கிகளில் தொகைகளைச் சேமித்து வைக்கக்கூடாது.
8. விளை பொருட்களும் உணவுப் பொருட்களும் ஜப்பானுக்கு வழங்கக்கூடாது.

இந்த விளம்பரத்தின் இறுதியில் "ஜப்பான் சாமான்களை நீங்கள் வாங்கினால், நீங்கள் அதற்காகக் கொடுத்த தொகையைக் கொண்டு, உங்களைச் சுடுவதற்காக துப்பாக்கிகளை ஜப்பானியர்கள் செய்கின்றார்கள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அரசியல் ரகசியம்

லார்ட் ஜியார்ஜ் ஹாமில்டன் என்பவர் 1895 லிருந்து 1803 வரை இந்தியா மந்திரியாக இருந்தவர். 1904 அக்டோபர் 5வ அவர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

ஒருவன் ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்வதாக வைத்துக்கொள்வோம். அவன் எத்தனையோ மதங்களையும் ஜாதிகளையும் பார்க்கிறான். அதை விட அதிகமான மதங்களையும் ஜாதிகளையும் இந்தியாவில் ஒரே பட்டணத்தில் பார்க்கலாம். ஜாதி, மதம் இவற்றால் ஏற்பட்ட பிரிவினால் தான் நமது ஏகாதிபத்தியம் ஏற்பட்டது. அதன் சக்தியின் ரகசியமும் அதுவே.

* * *

சர். ஜான் ஸ்டிராக்கி என்பவர் "இந்தியா" என்று ஓர் புத்தகம் எழுதி யிருக்கிறார்.

"இந்தியாவில் நமக்கு ஏற்பட்டுள்ள அரசியல் பதவிக்கு மிகவும் முக்கியமான விஷயம், இந்தியாவில் பரஸ்பரம் முரண்பட்ட மதங்களும் ஜாதிகளும் ஒன்றின் பக்கத்தில் மற்றொன்றாய் அமைந்திருப்பதுவே யாகும்."

என்பது அவரது அபிப்ராயம். "நமக்கு" என்பது பிரிட்டிஷாரைக் குறிக்கும். இவர் இந்தியாவில் 1874ல் லெப்டினன்ட் கவர்னராக இருந்தவர்.

* * *

லார்ட் எல்பின்ஸ்டன் 1853-1860 ல் பம்பாய் கவர்னராக இருந்தவர். 1859 மேமீ 14வ அவர் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் அவர் கூறுவதாவது:—

"பிரித்தாளுதல்" என்ற முறை ரோம் ஏகாதிபத்தியத்தின் கொள்கையாய் இருந்தது. அதுவே நமது கொள்கையாகவும் இருக்கவேண்டும்.

* * *

லெப்டினன்ட் கர்னல் ஜான்கோக் என்பவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்பின அறிக்கை யொன்றில் குறிப்பிடுகிறார்.

இந்தியாவிலுள்ள பல ஜாதிகளுக்கும் மதத்தினருக்கும் ஏற்பட்டுள்ள பிரிவுகளை பூரணமாக ஆதரித்து நிலை நாட்டுவதே நமது முயற்சியாக இருக்கவேண்டும். அவற்றை ஒன்று சேர்க்க நாம் முயற்சித்தல் கூடாது. "பிரித்தாளுதலே" இந்திய சர்க்காரின் கொள்கையாக இருக்கவேண்டும்.

:: பௌர்ணமி ::

"சுகவனம்" - எழுதியது

கூரும் போர்வை போல் ஆகாயத்தை மூடியிருந்த மேகக கூட்டம் மெதுவாகக் கலைந்தது. அப்பொழுது பௌர்ணமி சந்திரன் தன் கிரணங்களையெல்லாம் நன்கு புலனாக ஒளி வீசினான்.

இரண்டு நாளாக நல்ல மழை பெய்து பவானி ஆற்றில் நல்ல பிரவாகம் போய்க் கொண்டிருந்தது. எவ்வளவு துன்பம் வரினும் சகித்துச் செல்லும் மகாத்மாவின் கம்பீரத்தைப் போல், பவானி நதி சப்தமின்றி போவது தெரியாமல் போய்க் கொண்டிருந்தது.

ஒரு புறத்தில் அவ்வூரின் படித்துறை; அதன் ஒரு பாகம் பாதி இடிந்திருந்தது. அதன் கடைசி படியில், தண்ணீருக்கு அடுத்த படியில் ஒரு பெண்மணி அமர்ந்திருந்தாள். அவளுடைய பாதங்களிரண்டும் குளிர்ந்த பவானி நீரில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தன. அவள் சற்று குனிந்து தனது முழங்கைகளிரண்டையும் முழங்கால்களின்மேல் இருத்தி, உள்ளங்கைகளைக் கன்னத்தில் வைத்தபடி, எதிரிலுள்ள நீர்ப்பரப்பை ஆழ்ந்து நோக்கியபடி



வேறு நிழலைக் கண்டு திடீரென்று

இருந்தாள். மேலே பௌர்ணமி சந்திரன் ஒளி வீசிற்று. கீழே பவானி ஆறு செங்குத்தான பாறைக் கரைகளிடையில் அமைதியாய் சென்று கொண்டிருந்தது. தொலை தூரத்தில் நீல மலைகள் கம்பீரமாக நின்றன. [redacted]


பின் திரும்பினுள்

அப்பெண்மணியின் உருவம் அசைந்தாடி ஓடும் நீரில் பிரதிபிம்பித்தது. திடீரென்று மற்றொரு நீண்ட நிழல் அதற்குப் பக்கத்தில் தோன்றியது. தன்முன் கண்ட வேறு நிழலைக்கண்டு அவள் திடீரென்று பின் திரும்பினுள்; அப்பொழுது கருத்து நீண்டு நாகம்போல் அவள் தோள் வழியாய் முன் தொங்கிய ஜடை விர்ரென்று பின் பாய்ந்தது. சட்டென்று திரும்பிய சாரளா, தன் பின் தனது பர்த்தா ரமணன் நிற்பதைக் கண்டாள்.

“சரி! வந்து விட்டீர்களா! இவ்வளவு நாழிகையா பண்ணுவது? உட்காருங்கள்” என்று சொல்லி சாரளா நகர்ந்தாள்.

ரமணனும் புன்முறுவலுடன் அவளருகில் தானும் பாதங்களை நீரில் தொங்கவிட்டபடி உட்கார்ந்தனன்.

இவர்களிருவரும் புதிதாக மணந்த தம்பதிகள். இருவருக்கும் பெற்றோர்கள் இல்லை. சாரளாவுக்கு வயது பதினறு! ரமணனுக்கோ இருபத்தைந்து, சாரளாவுக்கு ஒரே தமையன். அவன் பெயர் ராஜதாசன். ராஜதாசன் அவ்வூர் மாஜிஸ்ட்ரேட். ரமணன் அதே ஊரில் ஒரு கல்லூரித் தலைமை உபாத்தியாயன். சாரளா

விவாகமான ஆருவது மாதத்தில் தன் கணவனை இழந்தவள். ரம ணனும, ராஜதாசனும் ஒரே காலேஜில் ஒரே வருஷத்தில் பி. ஏ. பட்டம் பெற்ற நண்பர்கள். இருவரும் சமூக சீர்திருத்தத் துறை யில் மிகவும் நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே, ரமணன் கலா சாலையை விட்டு வெளியே வந்து வேலை மேற்கொண்டவுடனே சார ளாவைத் தன் நண்பனகத்தில் கண்டான். அறியா இளம் பருவத் தில் நாதனை இழந்த சாரளாமேல் அவன் மனம் சென்றது. தனக் கேற்ற பெண்மணி அவளேயென அவளை மணந்தான். மணமாகி ஒரு மாதம் கூட ஆகவில்லை.

காதலரிருவர் தனித்திருப்பின் அவர்களுள்ளத்தில் ஆழ்ந் திருப்பவை யெல்லாம் வெளி வருவது சகஜமே; அவ்வாறே ரம ணனும் சாரளாவும் பேசலாயினர்.

"அதெல்லாம் சரிதான். ஒன்றே ஒன்று கேட்கிறேன். இள மையிலேயே விதவையான என்னையேன் பொறுக்கி மணந்தீர்? இது உமது நண்பருக்காகவா? அல்லது இளமையில் அபாக்கிய வதியான ஒரு ஆத்மாவைக் கரையேற்றவா? இதை மாத்திரம் கோபியாமல் சொலலவேண்டும்" என்று கேட்டாள் சாரளா.

ரமணன் இதைக்கேட்டதும் கொல்லென நகைத்தான். சார ளாவின் ஜடையைப் பிடித்துத் தன் விரல்களில் சுற்றிக்கொண்டே, "சாரளா! பார்த்தனையா, பெண்மக்கள் மாத்திரம் ஏதாவது கேட் டுக்கொண்டே யிருப்பார்கள் என்பது சரிதான். ஏன் ஒருவார்த்தை யில் கூறிவிடுகிறேன். நீ ஒரு பெண்மணி. அதனல் உன்னைக் காத லித்தேன்; நீ ஒரு பெண்மணி அதனல் மணந்தேன். சரி, திருப்தி யாயிற்று?" என்றுன்.

மறுபடியும் காதலர்கள் சற்று நேரம் பேசாமல் ஆழ்ந்து கம் பீரமாக ஓடும் ஆற்றைக் கவனித்தனர். இவ்வாறு சில நிமிஷங் கள் கழிந்தன.

"எல்லாம் சரிதான்! சாரளா, நீ பலே கெட்டிக்காரி தான். கதரே கட்டாமல், வெள்ளைக்கார மயமாயிருந்த என்னை எப்படி யோ மயக்கி, கதர் மயமாக்கி விட்டாயே. எல்லாம் உன் தந்திர மே; போதாக் குறைக்கு எனது எண்ணங்களையே வேறு வழியில் திருப்பி விட்டாயே" என்றுன் ரமணன்.

சாரளா ஆற்றில் கிடக்கும் சங்கு போன்ற தன் வெண்மைத் தந்த வரிசை தெரிய நகைத்தபடியே,

"நானென்ன செய்தேன் அப்படி? ஏதாவது தாங்கள் திரும்பியிருந்தால், அது பாவானி அம்மனின் கடாக்ஷ வீக்ஷண்யமே!' என்றாள்.

"எல்லாம் உன் வீக்ஷண்யமே! இனிமேல் வேணுமானால் பார்!'' என்று மறுமொழி கொடுத்தான் ரமணன்.

இம்மொழிகளைக் கேட்டதும் சாரளாவின் மனமென்னமோ ஜில்லென்றது. ஹிருதயத்தில் அம்பு தைத்தாற் போலிருந்தது. இருந்தாலும், தன் மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டனள். தன் மணாளன் மனதை மறுபக்கம் திருப்ப முயன்றாள்.

இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு எதிர்ப்புறத்தில் மறுகரையின் ஓரத்தில், தண்ணீரை நோக்கிச் சாய்ந்தபடி இரண்டு நீண்ட பாறைகள் நின்றன.

"அதோ பார்த்தீர்களா? அப்பாறைகளை! எவ்வளவு சாய்ந்திருக்கின்றன! ஆனால் தண்ணீரிலென்னமோ விழவில்லை. இயற்கையின் வலிமையே வலிமை!'' என்று சாரளா கேட்டனள்.



அதோ பார்த்தீர்களா ? அப் பாறைகளை...

"ஆச்சரியமே! ஆனால் நான் ஒன்று கேட்கிறேன். எந்தப் பாறை முதலில் தண்ணீரில் விழும்? சிறியதா, பெரியதா?'' என்றான் ரமணன்.

"ஏன்! அநேக வெள்ளங்களை அவை கண்டவை. ஆனால் சிறிய பாறைதான் முதலில் விழும்; ஏனென்றால் அது வெள்ளத்தின் வேகத்தைத் தாங்காது'' எனச் சாரளா கூறினாள்.

"ஒருக்காலுமில்லை! நான் வேண்டுமானால் கூறுகிறேன்; அந்தப் பெரிய பாறைதான் அடுத்த பெருவெள்ளத்தில் விழும். இதுவென்னமோ நிச்சயம். பெரும் பாறை விழுந்த பிறகுகூட சிறியது தளராது தன்காலம் வரும்வரை நிற்கும். இது வேண்டுமானால் நடக்கும்; நீயும் பார்க்கப் போகிறாய்'' என்று ஆவேசம் வந்தவன் போல் ரமணன் கூறினான்.

காலசக்கரம் சுழன்று வந்தது; ரமணனும் வாழ்க்கை இலக்ஷிய நோக்கத்தில் மாறு பட்டவனானான். நாடு நலம் பெறும் மார்க்கத்தில் மனது சென்றது. சாரளா பரதேசியாய் இருந்த ரமணனைச் சுதேசி யாக்கினள்; முடிவில் ரமணன் "நாட்டின் பொருட்டு சர்வ பரித்தியாகம் செய்வதே கடமை" என்னும் முடிவைக் கடைப்பிடித்தவனானன்.


ராஜ தாசனோ ராஜதாசன்தான். நண்பர்களாயிருந்து, உறவினர்களான இருவரும் குணத்தில் மேம்பட்டவர்களே. தாங்கள் எடுத்த கருமத்துக்கு உண்மையாய் உழைப்பவர்களே. தான் கொண்ட ராஜ சேவகத்திற்கு உண்மையாய் உழைப்பதே தன் கடனென ராஜதாசன் கொண்டான். ஆனாலோ, ரமணன் தான் மேற்கொண்ட கருமம், "என் பணி தேசப்பணி செய்து கிடப்பதே" எனக் கொண்டான். அடிக்கடி ராஜதாசன், ரமணனைத் திருப்ப முயன்றான். தன் தங்கையால் ரமணன் பித்து பிடித்தவனானனென அவளைக் குறை கூறினான். ஆனால், நடந்த தென்னமோ ராஜதாசன் தன் வேலையில் நற்பெயர் பெற்று சர்க்கார் மதிப்பிற்குரியவன் ஆனான்; ரமணனோ "தேச சேவை, தேச சேவை" என்பதிலேயே கருத்தைச் செலுத்தினான். "அதுவே வாழ்க்கையின் இலக்ஷியம்; அதுவே வாழ்க்கையின் முடிவு" என்பது அவனது விரதமாயிற்று.

* * * *

ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தவர்களுள் நம் ரமணனும் ஒருவன். அதன் பலனாக தன் தொழிலை இழந்தான். ராஜ தாசனோ மீண்டும் மீண்டும் ரமணனுக்கு, "ஐயோ! வீணாக வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளுகிறாய்? என்னைப் போலிருப்பின் நீ பெருமிதத்தோடு சௌக்கியப்படலாமே, ரமணா! வீணாகச் சாரளாவையும் கஷ்டப் படுத்தப் போகிறாய்" என்று உபதேசம் செய்தனன். ஆனால் ரமணனோ இதைக் கேட்டவனே அன்று. "நீ அறியாய்; நான் அறிவேன்; நீ உனது வேலையைக் கடமையெனக் கொண்டாய்; நான் செய்வதே எனக்குக் கடமையாகும்" என இரண்டு வாக்கியங்களில் பதிலளித்து விட்டான். சாரளாவோ தன் கணவன் தேச சேவையில் முற்பட்டதைக் கண்டு பூரித்தனள். தானும் அவனுடன் வர அனுமதி கேட்டனள். "நீ சற்றுப்பொறு. நீ கர்ப்பிணி" என்று பதில் தந்தனன் ரமணன்.

முடிவில் எதிர் பார்த்த நாளும் வந்தது. சர்க்கார் உத்திரவை மீறிய குற்றத்திற்காக ரமணன் கைது செய்யப்பட்டான். அவனை விசாரிக்கப் போகும் நியாயவாதி ராஜதாசனே.

"ஐயோ ரமணா! என் பெயரையும், உன் வாழ்வையும் சாரளாவையும் கெடுக்கிறாயே! குற்றத்தை ஒப்புக்கொள்; உன்னை விடுவித்து விடுகிறேன்" என்று எவ்வளவோ தூரம் ராஜதாசன் சிறைக்குள் வந்து போதித்தனன். ஆனால் 'மறவியையும் எதிர்ப்பேன்' என நின்றவன் முன் இது நடக்குமா? "ராஜூ! இதுவே எனது தர்மம் எனக் கொண்டேன்; இது தவறு என நீ கருதலாம். ஆனால் ஒரு பொழுதும் என் மனதை மாற்ற வென்னமோ முடியாது" எனச் சொல்லி விட்டான் ரமணன். "என் வேலை எனக்குக்கடமை; ஆகவே அதை நான் நன்கு செய்வேன்" எனக்கூறி ராஜதாசன் மறுநாளே ரமணனை ஆறுமாதம் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டான். என்னே 'கடமை முரண்'! சாரளா தன் தமையனை நன்கு அறிவாள்; ஆகவே "இது உன் கடமையோ! ஆயின் சரியே. என் காதலர் செய்தது எனக்குச் சரியெனத் தோன்றுகிறது" என்றாள். சாரளா சற்றேனும் ராஜதாசனைக் கடிந்தவளல்ல.



ராஜூ, இதுவே எனது தர்மம்

நாட்கள் ஓடி மறைந்தன. ஆறு மாதமும் கழிந்தன. 'இம்முறை ரமணன புத்தியுடன் வருவான்' என நீதிபதி ராஜதாசன் நம்பினான். ஆனால் முன்னிலும் பதின்மடங்கு 'தேசப்பணி வெறி' யுடன் வெளிவந்தான் ரமணன்.

அப்பொழுது சாரளா தன் ஐந்து மாதப் பையனுடன் அவனை வரவேற்றனள்.

"அன்பே! இனியாயினும் தங்களை நான் பின்தொடரலாமோ?" என்று கேட்டாள் சாரளா.

"பொறு! பையன் இளங்குழந்தை; நீயோ மெல்லியள்" என்றான் ரமணன்.

"ஐயோ! தலையில் கல்லைப்போட்டானே ரமணன்! வீணாகப் பிடிவாதமாகச் சர்க்காருக்கு எதிராக நின்று அடிபட்டனனே! சாரளா! என்ன செய்வேன்" என்று கூறிக்கொண்டே ராஜதாசன் உள்ளே வந்தான்.

சாரளா திடுக்கிட்டாள்; அவள் கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது; பதுமை போல் நின்றாள். ஆனால் மறுநிமிடம் தன் கதர்ப் புடவையின் முன்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அண்ணா! அவர் தடியடி பட்டுக்கிடக்கிறார்! நீங்கள் இன்னும் அவரை நிந்திக்கிறீர்களே! இதுவே என் மனத்தை அறுக்கிறது!" என்று கூறிக்கொண்டே தன் குழந்தையை இடுப்பில் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். ஆனால், ஆச்சரியம்! அவள் முகத்தில் அதிகமான துக்கக்குறியே இல்லை. முகம் "எல்லாம் ஈசன் செயல்" என்று சொல்லுவது போலிருந்தது.

அவ்வூர் முக்கிய ஆஸ்பத்திரியின் ஒரு படுக்கையில் ரமணன் கிடக்கிறான்; தலை உடலெல்லாம் ஓரே கட்டு. மூர்ச்சை தெளியாது இன்னும் படுத்திருந்தான் ரமணன்.

ஏழைக் கதர்ப்புடவை யணிந்து,கையிலேந்திய குழந்தையுடன் உள் நுழைந்தாள் சாரளா. தன் கணவன் நிலையைககண்டாள்; "ஆ! அன்பே!" எனக்கூறி ஓடிவந்தனள். டாக்டர் 'உஸ்! பேசாதே!" எனக் கைகாட்டினார். அவ்வளவுதான்; சாரளா அழவேயில்லை; கனவில் நடப்பவள் போல் வந்து படுக்கையின் தலைமாட்டருகில் வந்தாள்.


அவள் பின்னால் ராஜதாசன் கண்களில் நீர் உகுத்தபடி நின்றனன். "அன்பே!" என்னும் குரலைக்கேட்டதும் ரமணன் கண் திறந்தனன். சில நிமிடங்கள் வரையில் ஒன்றும் தெரியவில்லை. பிறகு தனது இடது கரத்தால் தலையைத் தொட்டுப்பார்த்துவிட்டு, "அப்படியா! பேஷ்!" எனச்சற்று சிரித்தனன்.

"அன்பே! இப்படியும்———"என்று வாயெடுத்தவள் மேல் பேசாமல் அப்படியே நின்றாள் சாரளா.

"ஐயோ இப்படி ஏன் செய்துகொள்ள வேண்டும்? அப்பொழுதே சொன்னேனே, ரமணா கேட்டாயா? அனியாயமாய்—" என்றழுதான் ராஜதாசன்.

சற்று நேரம் ரமணன் சும்மா இருந்தான்; பிறகு மெதுவாக் "ராஜு! உன்பேரில் தப்பில்லை! அவ்வளவுதான் சொல்லுவேன்"

என்று சொல்லி மேலே சொல்ல நாவெழாமல் துடித்தான். மறு நிமிடம் சாரளாவை அருகில் வரும்படி சைகை செய்தான். உடனே சாரளா பதறியபடி வந்து படுக்கையில் அமர்ந்தாள். குழந்தையை வாங்கி மார்பின்பேரில் அமர்த்திக்கொண்டான். ரமணன் முகம் என்றுமில்லா பொலிவுடன் விளங்கிற்று. திடீரென்று,



என்ன பெயர் வைக்கலாம்?

“சாரளா! பையனுக்கு என்ன பெயர் வைக்கலாம்? சொல்லு பார்ப்போம்!’ என்று கேட்டான்.

சாரளா என்ன கூறுவாள்! சற்று திடம் செய்துகொண்டு, “நாதா! எல்லாம் வீட்டுக்குப் போனவுடன் பார்த்துக்கொள்ளுவோம்’’ என்று தீனமாய்க் கூறினாள்.

ஆனால் ரமணனே மெதுவாய்த் தன் தலையை அசைத்தான். சாரளாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டு அவளையே உற்று நோக்கியபடி சொல்லலானான்.

“சாரதா! நீ என்னமோ தைரியசாலி என்பது எனக்குத் தெரியும். தைரியத்தைக் கைவிடாதே; நீ புத்திசாலி. எனக்குத் தெரியும். நானென்னமோ பிழைக்க மாட்டேன். ஆ! சாரளா! தைரியத்தை இழக்கிறாயே! என் பணி முடிந்தது. வேண்டுமானால், நீ விரும்பினால் மறுமணம் செய்து கொள்ளலாம். என் யோசனைக்கு, நல்ல பெயர் வரவில்லை. நல்ல பெயராய், பையனுக்கு வை; அதற்குத் தக்கபடி வளர்!” என்றான்; அதற்குள் மூச்சு தடுமாறிற்று.

சாரளாவின் கண்களிலிருந்து இரண்டு கண்ணீர்த் துளிகள் ததும்பி கண்ணை மறைத்து நின்றன. அவள் உடல் துடித்தது.

ராஜ தாசனை அழுதே விட்டான். ஆனால் அப்பொழுதும் ரமணனைப் பார்த்து "ரமணா! என்ன வேலை செய்தாய்!" என்றே கூறினான்.

மறு நிமிடம் குழந்தையை அணைத்துக் கொண்டு சாரளாவைப் பார்த்து, "சாரளா! குளிருகிறது. ஏதோ, அந்த கதரைப் போர்த்திவிடு. ஆ! அப்படித்தான்,"

மறு நிமிடம் "எங்கே! கண்ணே! கண்ணீரை எல்லாம் துடைத்துக் கொண்டு, ஒருதரம் என்னைப்பார்." என்றான்.

சாரளா கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். திடீரென்று ஆவேசம் வந்தவள் போல் குனிந்து நன்றாக முத்தமிட்டாள்.

"ஆ! அது நல்ல பெண்ணுக்கு அடையாளம்! இந்தக் கதர் நன்றாகக் குளிர் தாங்குகிறதே. ஆகவே இதையே, ராஜதாசா நீயும் அணி! ராஜூ! பள்ளியிலிருந்தே நாம் நண்பர்களல்லவா; சாரளாவைப் பார்த்துக் கொள். சாரளா! பெரிய பாறை விழுமென்று சொன்னேனல்லவா, விழுந்து விட்டது, சிறியது விழாது விழலாகாது. தெரியுமா அதுவே எனது கட்டளை. தானாக வெள்ளம் வந்தால் தான், தெரியுமா?" என்று மேல் கூறமாட்டாமல் நின்றான்.

*　　　*　　　*　　　*

அதே பௌர்ணமி இரவு; அதே பவானி ஆறு; அதே படிகள்; அதன் மேல் அதே சாரளா. ஆனால் இப்பொழுதோ கணவனை இழந்த விதவை முன்போலவே உட்கார்ந்து பவானியைக் கவனித்தாள். ஆனால் பவானி யென்னமோ முன்போலவே போய்க் கொண்டிருந்தாள். ஒரு சிறு ஆத்மா வந்த வழியே போனது ஒரு பெரிய காரியமென்று பவானி எண்ணவில்லை போலும்! சாரளா தலையைத் தூக்கினாள். எதிரிலிருந்த பெரிய பாறை காணோம். ஏன்? சென்ற வெள்ளத்தில் அது மாத்திரம் விழுந்து விட்டது; சிறிய பாறை மாத்திரம் துக்கப்படுவது போல் சற்று சாய்ந்திருந்தது. முதன் முதல் "பெரிய பாறை விழுந்த பிறகுகூட சிறியது தளராது தன் காலம் வரும் வரையில் நிற்கும்" என்ற வார்த்தைகள் இப்பொழுது தான் சாரளாவுக்கு விளங்கின. தன் கணவன் கட்டளையையும் உணர்ந்தாள்.

"ஆ! சிறிய பாறை விழ இன்னும் காலம் இருக்கிறதோ?" என தன் மனதில் உணர்ந்தாள்.

"செத்தேன்; பிழைத்தேன்"

(வி. சீனிவாஸன்)

"ஆஹா! இதென்ன கொடுமை! சாவதாம்; பின்பு பிழைப்பதாம் எங்காவதுண்டா? அப்படியானால் பிறப்பதும் இறப்பதும் கடைச் சரக்கா என்ன?" என்று நீங்கள் நினைக்கலாம்; அதிசயிக்கலாம்; சந்தேகங் கொள்ளலாம்; என்னென்னவோ செய்யலாம். ஆனால் நான் செத்ததும் பின்பு பிழைத்ததும் மட்டும் உறுதி, உறுதி, உறுதி. நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள்.

ஐயோ! பாவம் அவஸ்தைப்படுகிறீர்களே, சோறுகூட உண்ண மாட்டீர்கள் போலிருக்கிறது, பயப்படாதீர்கள். இதோ விவரமாய்க் கூறுகிறேன்.

செத்தேன்; ஆமாம் செத்தேன்; அதாவது மாண்டேன், அதாவது இறந்தேன, போதுமா? ஆனால் வியாதி என்னவென்று கேட்டால் அதுதான் வைத்திய உலகிலுங்கூட இல்லை. அப்பேர்ப்பட்ட நூதன வியாதி ஐயா அது. எமனறியாத மரணம். வெகு நாள் ஆராய்ச்சிக்குப் பின் அதற்கு நானே ஓர் நாமஞ் சூட்டினேன். "சாம்பிள் மரணம்" என்பது தான் அது. கொஞ்சந் தெளிவாய்த்தான் கூறி விடுகிறேனே.

மனையாள் அவசரச் சட்டப்படி நான் ஹோட்டலுக்குப் போவதில்லை. ஒருநாள் காலையில் வீட்டில் இட்லி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். காபிதான் பாக்கி. பாலோ அடுப்பிலிருக்கிறது. திடீரென்று 'சிவபூஜைவேளையில் கரடி நுழைந்தது' போல் வாயுவேக மனோவேகமாய் ஓடிவந்தாள் எங்கள் அத்தை ராக்காயி. அடுத்த தெருவில் யாரோ ஓர் பேர்வழி ஜுரத்தால் இறந்து விட்டாராம். இவள் யாரோ அவர் யாரோ? இவளுக்கேன் இத்தனை கவலை? "அடியே! கமலம்! கமலம்! போய் விட்டாராமடி, போய் விட்டாராமடி, வஞ்சியண்ணன், வஞ்சியண்ணன், ஐயோ! புறப்படு, புறப்படு" என்று வீட்டையே தூக்கினாற்போல் தலைவிரி கோலத்துடன் கத்தினாள்.

அடடா! என்ன துக்கம்! என்ன பரபரப்பு! உடனே கிளம்பினாள் எனது அருமை நாயகியும். நான் காபி குடியாவிட்டால் இவ

ளுக்கென்ன? வஞ்சி யண்ணனை விடவா இது பெரிய காரியம்? இவ்விடத்தில் ஓர் சங்கதி ஞாபகத்திற்கு வருகிறது. செந்தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் பசுமந்தையில் தனது இனிய புல்லாங்குழலை வாசிக்கத் தொடங்கி விட்டால், அவ்வேணுகானத்தைக் கேட்ட ஆயர்பாடியிலுள்ள ரஞ்சிதங்கள் அந்த க்ஷணமே தத்தம் பணிகளுக்கு—அரைப்பவள், குத்துபவள், உண்பவள், தயிர் கடைபவள், வீடு பெருக்குபவள்—எல்லோரும் அந்தந்த மட்டில் முற்றுப்புள்ளி போட்டு விட்டுக் கோபாலனை நாடி ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு செல்வார்களாம். அதைக்கூட 'பீட்' பண்ணி விட்டார்கள் இப்பெண்ணரசிகள். ஆஹா! 5 நிமிஷத்தில் திரண்டது ஓர் சேலைகளின் கூட்டம்! அம்மம்ம! என்ன வியாகூலம்! என்ன ஆவேசம்! போங்க சார்! அதை என்னென்று சொல்வது? நேரில் பார்த்தவர்களுக்கே அதன் மகிமை விளங்கும். நல்லவேளையாய் எனக்காவது இட்லி கிடைத்தது. அதுவுமின்றி அன்று ஏகாதசி விரதம் எத்தனைபேர் அனுஷ்டித்தார்களோ, யார் கண்டது?

சரி; விஷயத்தைக் கவனிப்போம். செத்துப்போனவரோ அடுத்த தெருவாசி; பந்துவு மல்ல. 60 வயது இருக்குமாம். எங்கள் சந்துப் பக்கம் எப்பொழுதாவது ஒரு சமயம் வந்ததுண்டு; போனதுண்டு. அப்படி யிருக்க இவர்கள் விழுந்தடித்து மோதிக் கொண்டு ஓடுவானேன்? உண்மையிலேயே அனுதாபந்தானா? "சும்மா ஆடுமா ... ... குடுமி?" என்ற எண்ணங்களே என் மனதில் குடி கொண்டன. அதிலிருந்து என் ஆராய்ச்சியும் ஒருவாறு நீண்டது.

எனக்கு வயது 35 தான். உங்கள் கிருபையால் வியாதி, உபத்திரவம் ஒன்றுமே யில்லை. பின் சாவதுதான் எப்படி? ஒரு காரியம் பண்ணினேன். எனக்கு ஏதோ வாயு ரோகம் என்று வீட்டில் அடிக்கடி சொல்லிக் கொண்டே வந்தேன். திடீரென்று ஓர் நள்ளிரவில் செத்துப் போனேன். ஐயோ! அழாதீர்கள். ஆதாயம் இல்லாமல் செட்டி ஆற்றோடு போவானா? அதாவது என்னால் எவ்வளவு தூரம் வாயுஸ்தம்பனம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் சிரமப்பட்டு ஸ்தம்பித்துக்கிடந்தேன். ஆனால் முன்னாடியே அடுத்த வீட்டுச் சீனுவிடம் மாத்திரம் உண்மையைச் சொல்லி வைத்திருந்தேன். பரிசோதனை, வைத்தியம், இதர தடபுடல்கள் யாதொன்றும் நிகழா வண்ணம் சர்வ ஜாக்கிரதையுடன் பார்த்துக் கொள்ளும்படி எச்சரிக்கை செய்திருந்தேன். அவ்வாறே சீனுவும் சால்ஜாப்புச் செய்து கொண்டிருந்தான். ஆயி

னும் நான் இறந்து விட்டதாகவே பெண்களிடத்திலெல்லாம் சொல்லி விட்டான்.

அடடா! அந்தச் சம்பவத்தை என்னென்று கூறுவேன்? இந்த ஜன்மத்தில் அதை மறக்க முடியுமா? பாவம்! என் வயது சென்ற தாயாரும் பக்கத்து வீட்டுக் கிழவிகளுமே தாரை தாரையாய்க் கண்ணீர் விட்டு அலறி, அடித்துக் கொண்டு அழுதார்கள். என்னே அவர்களது துக்க சாகரம்! 'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாள்?' நிற்க,

நான் இறந்து போய் ஒரு மணி நேரம் வரையிலும் என் அருமை மனைவி என் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. "ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தீர்"—என்ற கிழவியின் பாட்டம் அவளுக்கு ஞாபகமோ என்னவோ? இந்த அறைக்கும் அந்த அறைக்கும் மாற்றி மாற்றிப் போய்க் கொண்டும், பெட்டிகளையும், சாவிகளையும் பரிசோதித்துக் கொண்டும், நகைகள், காசு பணங்களைப் பந்தோபஸ்துச் செய்து கொண்டுமிருந்து விட்டுச் சாவகாசமாய் வந்து சேர்ந்தாள்.



இதற்குள் பல ஸ்திரீகள் கூடிவிட்டனர். அவர்களது லீலைகளிற் சிலவற்றைக் கூறுகிறேன். கேளுங்கள். உலக வழக்கப்படி என் மனைவி கண்ணீர் வடித்து அழுது தீரவேண்டுமன்றோ? எனவே அவள் அனுதாபத்துடன் படித்த வாசகங்கள் பின் வருமாறு:—

"என் கணவா! ராஜாவே! என் செய்வேன்? சாமியே! துரையே! (எனக்கோ ஆத்திரம் பொங்குகிறது.) என் மாங்கல்யம் போச்சுதே. இனி யெனக்குப் பூ வேது? கொண்டை யேது? கெடிகாரச் சங்கலியைக்கூடக் கழற்றவேண்டுமே. வளையலுமில்லையே! நான் மூலைக்குள்ளிருக்கும் காலம் வந்ததே. இங்கு நான் வாழமுடியாதே. என் சந்தோஷம் தீர்ந்ததே. சினிமா, நாடகம், பீச் இவைகளுக்கு எப்படி போவேன்? தீபாவளியுமில்லை; திருவிழாவுமில்லை. எல்லோருஞ் சிரிக்கும்படி யாச்சுதே! நலுங்கு பாடவும், கலியாணம், சீமந்தத்தில் விளையாடவும் முடியாதே. ஐயோ! பழிகாரா! இந்தப் பாவம் உன்னைச் சேராதா? என்னை இப்படிச்

செய்யலாமா! உனக்கு நற்கதி கிடைக்குமா? கொடுக்கல் வாங்கல் களையும் என்னிடஞ் சொல்லாமல் மாண்டனையே. இது சதியல்ல வா? என் செய்வேன்?—" திருப்பித் திருப்பி இதுதான். (இதைக் கேட்கக் கேட்க என் ஹிருதயம் படபடவென்று துடிக்கலாயிற்று.)

"அம்மியே ஆகாசம் பறக்கும் போது குழவி எம்மாத்திரம்?" கொண்ட பெண்ஜாதியே இந்த லக்ஷணத்திலிருந்தால் மற்றவர் களைப் பற்றிப் பேசுவானேன்? ஆயினும் இரண்டொருவரைக் கவனிப்போம்.

குறட்டைக்குப்பாயி—ஒப்பாரிக் களஞ்சியம்—எதிர்த்த வீட்டுக்காரி. எது எக்கேடுகெட்டுப்படிப் போயினும் தினம் இரண்டு புதிய ஒப்பாரி மெட்டுகளைப் படியாது போனால் அவளுக்கு வயிறு வெடித்து விடுமோ என்னவோ! சதா அதே ஞானத்திலாழ்ந்து பாடிக் கொண்டிருப்பாள். எங்கள் தெருப் பெண்களுக்கே அவள் தான் ஒப்பாரி உபாத்தியாயினி. யாராவது உடனே இவளது ஒப் பாரி மெட்டுகளைக் கிராம்போன் பிளேட்களில் எடுத்துக் கொள் ளாது போனால் இவளுக்குப் பின் ஒப்பாரி ஞானம் நாஸ்தி யென்பதே அடியேன் கருத்து.

நான் இறந்த செய்தி கேட்டவுடனே ஓரே பாய்ச்சலாய் என் னிடம் வந்து விழுந்தாள். தலையிலும் மார்பிலும் தன் இருகரங் களால் பேரிகை யடித்துக் கொண்டு, பேரிடி முழக்கினாள். மேலும் தன் ஒலிபரப்புந் தொண்டையை—மடவாயை—த்திறந்து கற்ற ஒப்பாரிக் கோவையை காளிங்க நர்த்தனத்துடன் சேவித்தாள். பின்பு படி பாலுக்கு ஆர்டர் செய்தாள். 3 நிமிஷத்தில் அதுவும் வந்து சேர்ந்தது. அப்படியே வாங்கி வாயில் விட்டுக்கொண்டாள்.



மறுபடியும் குஷி கிளம்பவே எழுந்தாள்; தலையை விரித்தாள்; $\frac{1}{2}$ டஜன் ஸ்திரீகளைக் கொண்டு ஓர் 'ரவுண்டு' அமைத்தாள், எல் லோரும் கை கோர்த்தார்கள்; (Round) மத்தியில் என் மனைவி யையும், தாயாரையும், இரண் டொரு கிழட்டு முண்டங்களை யும் உட்கார வைத்தாள். பிறகு 'டான்ஸ்' (Dance) ஆரம் பமாயிற்று. அடடா! என்ன அழகு! என்ன ஒய்யாரம்! என்ன வேடிக்கை! என்னே அவர்கள் கூத்து! நல்ல வேளையாய் பகவான் இவர்களுக்கு இரண்டு கைகள் இரண்டு கால்களோடு நிறுத்தினனே! அவனுக்கு மக்களாகிய

நாமும் எக்காலும் நமஸ்காரம் செய்யவேண்டும். அரை மணி நேரம் வரை அந்த இடம் தூள் கிளம்பிற்று. சுவர்கள் கூட ஆட்டம் போட ஆரம்பித்திருக்கலாமென நினைக்கிறேன். தரையோ புழுதி கிளம்பி விட்டது. "பார்சி சினிமா" நடிகரெல்லாம் இவர்களுக்கு எந்த மூலை?

சரி, இன்னொருத்தியிருக்கிறாளே அந்த முனியம்மா; அவள் சங்கதி கொஞ்சம் விசேஷந்தான். செத்து விறைத்துக் கிடப்பதோ நான். இழவு நிறைந்தது எங்கள் வீடு. அன்று துக்கம் எங்கள் இறப்புரிமை. அப்படியிருக்க முனியம்மாள என்னை அடியோடு மறந்துவிட்டுக் காலஞ்சென்ற தன் நொண்டியப்பனையும், கூனைச்சின்னான் என்ற உதாவாக்கரை அண்ணனையும், காமாலைக் கண்ணியும் பாழும் கிழவியுமான தனது ஆயாளையும் நினைத்து நினைத்துக் கண்ணீர் உகுத்துத் தன் ஒப்பாரிப் புராணத்தைப் பாடத் தொடங்கிவிட்டாள். ஐந்தாம் ஜார்ஜ்க்கும், ஜவஹர்லால் நேருவுக்கும், ராக்பெல்லருக்குங்கூட இவ்வளவு பெருமை யேது? ஆஹா! என்னே அவளுடைய ராகம்! தொனி! தாளம்; கணக்கு! இவ்வளவும் எனக்கென்றிருந்தால் சரி, ஏதேதோ உப்புக்கல்லுக்கும் மண்ணாங்கட்டிக்கும் படிப்பதென்றால் யாருக்குத்தான் சகிக்கும்? பளீரென்று கன்னத்தில் விடலாமா? என்று கூட எண்ணினேன். ஆனால் காரியங் கெட்டுப்போகுமே!

அந்தோ! அங்குவந்த மாதரசிகளில் ஒருத்தியாவது மருந்துக்குங்கூட என்னைப்பற்றிக் கண்ணீர் விடவே யில்லை. அவரவர் குலத்தினரையும் குடும்பத்தினரையும் பற்றியே சண்டமாருதம் போல் கரைந்தார்கள். சுருங்கக்கூறின் ஓர் ஒப்பாரிப் பள்ளியே அது. உண்மையில் மூவேழு தலைமுறைக்கும் நாம் கடுந்தவமிருப்பினுஞ் சரி, அல்லது இன்னும் சூரிய சந்திர மண்டலங்களைப் பிடித்தாலுஞ் சரி, இந்த ஒப்பாரி விஷயத்தில் மட்டும் நமது ஸ்திரீ ரத்தினங்களை ஒரு போதும் நாம் வெல்லமுடியாது என்பதைக் கோபுரத்தின் மீதிருந்துங் கூறுவேன்.

இதற்குள் காலை மணி 4 ஆகிவிட்டது. ஒருவர்பின் ஒருவராகக் கொஞ்சம் ஓய்வு (Rest) எடுக்க ஆரம்பித்தனர். சிலருக்கு ஏற்கனவே அயர்ந்த தூக்கம். ஆனால், பாவம்! என் அம்மாவும் இரண்டொரு கிழவிகளு மட்டுமே தொண்டை வறண்டு போயும் அழுதுகொண்டிருந்தனர். எனக்குச் சகோதரியில்லை. இருந்தால் அவளுடைய குட்டையும் அன்று தெரிந்திருப்பேன். முடிவில் பார்த்தேன்; எனக்கு மகா சங்கடமாயிருந்தது. கொஞ்சம் நாழி

கையானல் கூட்டம் பெருத்துவிடுமே என்ற சந்தேகம். என் தாயார் பரிதாபமோ சகிக்கமுடியவில்லை. அழுதகண்ணுஞ சிந்திய மூக்குமாய் என்னைவிட்டகன்று ஓர் மூலையில் புரண்டுகொண்டிருந்தாள். இதுதான் சமயமென்று.மெதுவாகக் கைகால்களை ஆட்டி முடிவில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழித்தவன் போலவும் பெரிய ஆபத்திலிருந்து தப்பித்தவன போலவும் கண்ணைத்திறந்து பார்த்தேன். நிசப்தமாயிருந்தது. உடனே தந்திரமாய் வெளியே கிளம்பிவிட்டேன அப்புறம் அங்கு என்ன நடந்ததோ நானறியேன். அதைப்பற்றி எனக்குக் கவலையுமில்லை. ஏன்? ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும் என்பது உங்களுக்குத் தெரியாதா?

அன்பர்களே! நான் செத்துப்போனதும் பின்பு பிழைத்ததுமான என் லீலைகளில் இனியும் உங்களுக்கு ஏதேனும் சந்தேகமுண்டோ? தவிரவும் என் ஆராய்ச்சிதானென்ன சாமான்யமா? ஆனல் நோபல பரிசு (Nobel prize) மட்டும் கிடைக்கப் போவதில்லை. சரி, உங்களை ஒரு விஷயங் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து என்னைப்போல் நீங்களும் இந்த மாதிரி 'சாம்பிள்' மரணத்தை ஆரம்பித்துவிடாதீர்கள். பெரும்பாலும் அது ஆபத்தாகவே முடியுமென்பது எனது கருத்து. ஆயினும் என் அரிய ஆராய்ச்சியின் பயனுக ஏற்படும் உண்மைகளையும், பலாபலன்களையும் பற்றி இனி நீங்களே எனக்குப் பதிலாக மேற்கொண்டு ஆராய்ச்சி செய்துகொள்ளுமாறு வேண்டுகிறேன். வந்தனம்.

ஜனத்தொகை விதாசாரம்

இந்தியாவின் பரப்பையும் ஜனத்தொகையையும் இங்கிலாந்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியமாகும். இங்கிலாந்தும் வேல்ஸும் சேர்ந்து மொத்த விஸ்தீரணம் 58,000 சதுரமைல். மொத்த ஜனத்தொகை 4 - கோடி. சதுர மைலுக்கு 685 பேர் வசிக்கிறார்கள். ஐரோப்பா முழுமையும், 37,50,000 சதுர மைல்களைக் கொண்டது. மொத்த ஜனத்தொகை 47,50,00,000 அதாவது சதுர மைலுக்கு 127 பேர் வீதம் வசிக்கிறார்கள். அமெரிக்காவின் விஸ்தீரணம் 30,27,000 சதுர மைல். மொத்த ஜனத்தொகை 12, 30, 00, 000. சதுர மைலுக்கு 41 - பேர் வசிக்கிறார்கள். சீனாவின் விஸ்தீரணம், திபேத், மங்கோலியா, சீன துருக்கிஸ்தானம், மஞ்சூரியா எல்லாம் சேர்த்து 42½ லக்ஷம் சதுர மைல். பண்டித வில்லாக்கின் கணக்குப்படி 34,20,00,000 ஜனங்கள் அங்கே வசிக்கிறார்கள். சதுர மைலுக்கு 80·5 பேர் வீதம் வசிக்கிறார்கள். செழிப்பான இடங்களில் இத்தொகையைவிட அதிகம் பேரும் வசிக்கிறார்கள். சீனா மாத்திரம் 12½ லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணம் கொண்டது. இதில் சராசரி சதுர மைலுக்கு 200 முதல் 220 பேர்கள் வரையில் வசிக்கிறார்கள். உலகத்தின் மொத்த ஜனத்தொகை 185 கோடி என்று இப்பொழுது, கணக்கிட்டிருக்கிறார்கள். இதன்படி பார்த்தால் உலகத்தின் மொத்த ஜனத்தொகையில் 5ல் ஒரு பாகத்தினர் இந்தியாவில் வசிக்கிறார்கள்.

ஜனத்தொகை பெருக்கம்

1921 ல் இருந்ததைவிட 1931 ல் 338,95,298 பேர் இந்தியாவின் ஜனத்தொகையில் அதிகரித்திருக்கிறார்கள். அதாவது போன ஜனத்தொகையைவிட இந்த ஜனத்தொகை 100 க்கு 10·6 வீதம் அதிகரித்திருக்கிறது. 50 வருஷங்களுக்கு முன்பிருந்த ஜனத்தொகையுடன் இப்பொழுதிருக்கும் ஜனத்தொகையை ஒப்பிட்டுப் பார்த்தால் 100 க்கு 39 பேர் வீதம் அதிகரித்திருக்கிறது. சென்ற 50 வருஷங்களில் சதுர மைலுக்கு 12 பேர் வீதம் ஜனங்கள் அதிகரித்திருக்கின்றனர். இந்த 50 வருஷங்களில் குடியிருந்த நிலப்பரப்பும் 4,26,056 சதுர மைல் அதிகரித்திருக்கிறது.

இந்த தொகையை இங்கிலாந்தின் தொகையுடன் ஒத்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும். இங்கிலாந்திலும் வேல்ஸி

லும் சென்ற சென்சஸிற்குப் பிறகு 100-க்கு 5-4, வீதம் ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது. ஆனால் சென்ற 50 வருஷங்களில் 100-க்கு 53·8 வீதம் அதிகரித்திருக்கிறது. சென்ற சென்சஸிற்குப் பிறகு அமெரிக்காவில் 100-க்கு16 அதிகரித்திருக்கிறது. இலங்கையிலும் ஜாவாவிலும் அதிக ஜனத்தொகை 100-க்கு 20 வீதமாகும். நிதர்லாந்து இண்டீஸிற்கு வெளியிலுள்ள தீவுகளில் 100-க்கு 26 வீதம் அதிகரித்திருக்கிறது. மதுரையில் மாத்திரம் இப்பொழுது சதுர மைலுக்கு 817 பேர் வீதம் வசிக்கிறார்களாகையால், இத்துடன் இந்தியாவின் ஜனத்தொகை அதிகரித்திருப்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

பிரிட்டனில் ஜன நெருக்கம் கைத்தொழில் வளர்ச்சியைப் பற்றியது. இந்தியாவில் இது விவசாயத்தைப் பற்றியது. ஆகையால் அதிக செழிப்புள்ள இடங்களில் ஜனத்தொகை அதிகமாகியிருக்கிறது. சமஸ்தானங்களில் முக்கியமாக பிக்கானீரில் 100-க்கு 41.9 வீதம் ஜனத் தொகை நெருக்கம் அதிகரித்திருக்கிறது. புதிதாக ஏற்பட்ட பாசன வசதிகளே இதற்கு முக்கிய காரணமாகும். இந்தியாவிலேயே அதிக நெருக்கமுள்ள இடம் திருவாங்கூர் சமஸ்தானந்தான்.

வெளியில் பிறந்த இந்தியர்

இந்தியா முழுவதையும் பொதுவாக எடுத்துக்கொண்டால் இங்கு வந்து குடியேறியவர் தொகை மிகச் சொற்பமாகும். 1921ல் இந்தியாவிற்கு வெளியில் 6,03,526 பேர் பிறந்திருக்க 1931-ல் 7,30,562 பேர் பிறந்திருக்கிறார்கள். போர்ச்சுகீஸ், பிரஞ்சு இந்தியாவில் பிறந்த இந்தியர் தொகையுடன் இது சேராதது. மற்ற ஆசிய நாடுகளில் பிறந்த இந்தியரின் தொகையே அதிகரித்திருக்கிறது. சென்ற 10 வருஷ காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் மொத்தம் 12,44,249 பேர் குடியேறியிருக்கிறார்கள். இவர்கள் அசாமிலும், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலுமே குடியேறியிருக்கிறார்கள்.

பிறப்பு—இறப்பு

கவனிக்க வேண்டிய மற்றோர் விஷயம் பிறப்பும், இறப்பும். இது பல விடங்களில் பல திறப்பட்டு மாறுதலடைந்திருக்கிறது. இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஐரோப்பாவைவிட பிறப்போர் தொகை அதிகமாயிருக்கிறது. கல்யாணங்கள் சீக்கிரத்தில்

நடப்பதே இதற்குக் காரணமாகும். இந்தியாவில் வயதடைந்து அதிக காலம் சென்ற பின்னர் விவாகம் செய்துகொண்டு சிறு குடும்பத்துடன் வாழும் ஒரே சமூகம் பார்சிகள் சமூகமேயாகும். மேலும் மற்ற சமூகங்களைவிட ஹிந்து சமூகத்தில் பிறப்போர் தொகை அதிகக் குறைவாயிருக்கிறது. விதவைகளை மறுமணம் செய்து கொடுக்கும் வழக்க மில்லாதது இதற்குக் காரணமாகும். இதனால் பிள்ளையைப் பெறும் வயதுடைய பல பெண்கள் பெறமுடியாது போவதோடு, சிறு வயதில் பலர் தாய்மாராகி விடுவதாலும் அதிக குழந்தைகளைப்பெற முடியாதவர்களாகி விடுகிறார்கள். மேலும் இந்தியாவில் சிசுக்கள் ஜனனம் அதிகமாயிருப்பதைப் போலவே சிசுக்கள் மரணமும் அதிகமாயிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் பிறப்போர் தொகை அதிகமாயிருப்பதாகும். சமூக பழக்கங்களும் முக்காடு முறையும் ஹிந்துக்களை விட ஏழை முஸ்லிம்களிடத்திலேயே அதிகமாயிருப்பதும் முக்கிய காரணம். நகரங்களில் இதனால் மரண விகிதங்கள் அதிகமாகின்றன.

பொருளாதாரம்

1921-ல் ஜன சங்கிகை முடித்தபோது இன்புளுயன்ஸா போன்ற ஜுரமிருந்ததால் இறந்தோர் தொகை அதிகரித்திருந்ததென்று கூறப்பட்டது. ஆனால் இதன் பிறகு வைத்திய வசதிகள் அதிகரித்து விட்டதால் இறந்தோர் தொகை அதிகமாயிருப்பதற்கு இதுவே காரணமென்று கூறமுடியாது. பஞ்சமும் காரணமென்று கூறுவதற்கில்லை. 1931-ம் வருஷத்தோடு முடிந்த 10 வருஷங்களும் நல்ல விளைவும், சுபிட்சமுமிருந்த வருஷங்களென்றே கூறவேண்டும். வங்காளம், சென்னை போன்ற இடங்களில் பஞ்சம் ஏற்பட்டபோதிலும் அதனால் வெளியிலும் அதிகக் கஷ்டம் ஏற்பட்டதென்று கூறுவதற்கில்லை. தொத்து நோய்களால் இறந்தவர்கள் தொகையும் குறைவாகும். பொதுவாக இந்த 10 வருஷங்களில் சுபிட்சம் அதிகமாகவே யிருந்ததென்பதை 1931 - லும் 1921-லு மிருந்த சேவிங்க்ஸ் பாங்கி கணக்கே போதுமானதாகும்.

1921-ல் இந்தியாவில் 10,703 சேவிங்க்ஸ் பாங்கிகளிருந்தன. 1931ல் 12846 பாங்கிகள். 1921ல் சேவிங்க்ஸ் பாங்கிகளில் போட்டிருந்த தொகை ரூ. 22,86,33,942 பணம் போட்டவர் தொகை 18,77,613. 1931ல் பணம் போட்டவர் தொகை 24,77,613. போட்டிருந்த பணம் ரூ. 37,02,59,874.



"ஏண்டா அவனை அடித்தாய்?"

"சார்! நீங்கள் பயித்தியக்காரன் இல்லை என்று வைத்துக் கூவோம். அப்போ, உங்களைப் பயித்தியக்காரப் பயலேன்னு" உங்களுக்கு கோபம் வருமா வராதா?

—எஸ். ராமன், ஹரிகேசவ நல்லூர்.

* * *

ஆபீசர்:—தங்களை இவ்வளவு தூரம் வரும்படி செய்தது எதுவோ?

வந்தவர்:—ஒரு சைகில் சார். அதை நான் வெளியே விட்டு வந்தேன்.

—முகம்மதுகான், திண்டிவனம்.

* * *

ஒரு கிராமவாசி சட்டசபைக்கு அனுமதிச் சீட்டின்றிப் போனான்.

வாயில் காப்போன்:—ஐயா! உள்ளே விடமாட்டேன்; தங்களைப் பார்த்தால் யோக்கியர் மாதிரி இருக்கிறது! மரியாதையாய்ப் போய்விடுங்கள்.

கிராமவாசி! :—ஓஹோ! இங்கே யோக்கியர்கள் வரக்கூடாதா? நான் போகிறேன்.

டி. எம். செங்கோடன், திருச்செங்கோடு.

* * *

கணவன்:—"அடி மானங்கெட்டவளே! உன்னை உதைக்கிறேன் பார்" என்று வந்து காலை தூக்கினார்.

மனைவி:—தாங்கள் உதைக்கப்போகிறது நிச்சயம், நான் பட்டுக்கப்போகிறதும் நிச்சயம். தயவுசெய்து இரண்டு கால்களையும் தூக்கி உதைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

—ஜி. ஜெயராமன், கும்பகோணம்.

எஜமானி, புதுவேலைக்காரியை நோக்கி:—இது என்ன? வீடெல்லாம் பெருக்கி 2 மாதம் இருக்கும்போலிருக்கிறதே.
வேலைக்காரி:—அது என் குற்றமல்ல. நான் வந்து பத்துநாள் தானே ஆச்சு.

—G. சுப்பையாராஜு ஸ்கூல்மாஸ்டர், தஞ்சாவூர்.

* * *

தகப்பனார்:—ஏண்டா வேதாசலம், நான் வாங்கிக்கொடுத்த பிஸ்கட் ஒரு வாரம் வருமே! அதற்குள்ளாகவா எல்லாவற்றையும் தின்றுவிட்டாய்?
வேதாசலம்:—நீதானே அப்பா! "இன்றைக்கு செய்யவேண்டிய வேலையை நாளைக்கென்று ஒத்திவைக்க கூடாது" என்றாய்.

—வெங்கிட்டு, திருப்பத்தூர்.

* * *

சிறுவன் மாத்திரையைச் சாப்பிட மறுத்து விட்டதால், அவன் தாயார் அதை ஒரு துண்டு வாழைப் பழத்தினுள் வைத்துக் கொடுத்தாள்.
தாயார்:—"கிட்டு, பழத்தை முழுதும் சாப்பிட்டு விட்டாயா?"
பையன்:—"ஆம்! அம்மா! ஆனால் அதனுள்ளிருந்த விதையை மாத்திரம் கீழே துப்பிவிட்டேன்"

—ஏ. எஸ். சிவராம், புதுச்சேரி.

* * *

சாப்பிடவந்தவர்:—என்னப்பா இது? சர்க்கரை ரொம்ப கம்மியாய் போட்டிருக்கிறாயே!
ஹோட்டல் பையன்:—சாப்பிடாமலே சொல்றாங்களே சார்.
சாப்பிடவந்தவர்:—பார்த்தால் தெரியாதா? டம்ளரில் அடியில் அரை ஸ்பூன் சர்க்கரைகூட இல்லையே.

*—அம்பி, சென்னை.

* * *

ஒருவர்:—இன்று என்ன நக்ஷத்திரம்?
மற்றொருவர்:—(வெளியே சென்று சற்றுநேரத்தில் திரும்பி வந்து) இருட்டாக இருப்பதால் இன்று என்ன நக்ஷத்திரமென்று தெரியவில்லை.
முதல் பேர்வழி:—"இருட்டில் எப்படித்தான் நக்ஷத்திரம் தெரியும்? விளக்கை எடுத்துக்கொண்டுபோய் பார்" என்று விநயமாய் சொன்னார்.

—சிவராஜன், போரையார்.

---

* பரிசு பெற்றவர்.

ஓர் ஊரில் ஓர் ஸர்க்கஸ் கம்பெனி வந்திருந்தது. பள்ளிக்கூட மாணவர்கள் தாங்கள் பள்ளிக்கூட மாணவர்கள் என்பதற்கு ஓர் அடையாளம் கொண்டு வந்தால் அவர்களுக்கு அரைசார்ஜ்.

மணி இரண்டு அடையாளங்களுடன் சர்க்கஸ் கொட்டகைக்கு வந்து டிக்கட் கேட்கிறான்.

டிக்கட் கொடுப்பவன்:—காசு எங்கே?

மணி:—காசு எதற்காக? ஒரு அடையாளம் காண்பித்தால் அரை சார்ஜ். இரண்டு அடையாளங்கள் காண்பித்தால் சார்ஜ் இல்லையல்லவா?

—எம். சீனிவாசன், சிவகங்கை.

* * *

யஜமான்:—இவ்வளவு மறதி உனக்கு முன்னமேயே உண்டோ, இப்பொழுதுதான் ஏற்படுகிறதோ?

குமாஸ்தா:—ஞாபகமில்லை சார்.

—பப்பு, தென்காசி.

* * *

ராமன்:—என்ன எழுதுகிறாய்.

மாணிக்கம்:—பத்திரிகைக்கு வியாசம்.

ராமன்:—ஏன் இவ்வளவு பொடி எழுத்தாக எழுதுகிறாய்.

மாணிக்கம்:—வியாசம் நீளமாயிருந்தால் பிரசுரிக்கமாட்டார்களாம்.

—சாரதா, மதராஸ்.

* * *

மணி:—எனக்குக்கீழ் இருபத்தைந்து வேலைக்காரர்கள் வசித்து வருகிறார்கள்.

நண்பன்:—உண்மையாகவா?

மணி:—ஆம், நான் மேல் மெத்தை வீட்டில் வசித்து வருகிறேன்.

—ராம. வே. ராமசாமி, காலின்-பர்மா

* * *

ஜெயிலர்:—உன்னைத் தூக்கிலிடுவதற்கு இன்னும் ஐந்து நிமிஷங்களே இருக்கின்றன. ஆகையால் உன் கடைசி விருப்பத்தைத் தெரிவிப்பதோடு, புறப்படவும் சித்தமாயிரு.

தூக்கு தண்டனை கைதி:—குளிர்காலத்தில் குல்லாய் இல்லாமல் வெளிக்கிளம்பும் வழக்கம் இல்லை. ஆகையால் பனிக்குல்லாய் இல்லாமல் இந்தக் குளிரிலும், பனியிலும் வெளி வந்து ஜல தோஷத்தினால் நான் கஷ்டப்படத் தயாராயில்லை.


—ந. ராமாநுஜம்.

திரிகால ரேகை சாஸ்திரம்

(காபிரைட்)

("சக்தி தாஸன்" எழுதியது)

"காந்தி" ஆசிரியர் 1928-ல் கொடுத்த புதிய ஊக்கம், என்னை முன்னேற்றத்தில் கொண்டு வந்திருக்கிறது. ரேகையைப் பற்றிய எனது அனுபவமும், ஆராய்ச்சியும் வீண்போகா வண்ணம் பத்திரிகைகளுக்கு எழுதும்படி தெரிவித்தார். அங்ஙனம் செய்து வந்ததில், அதிக அனுபவம் ஏற்பட்டதோடு, எழுதியவைகளை நூலாகக்கொண்டு வெளியிடவும் முடிந்தது. எனது பிரவிர்த்தி அதுவல்லவாயினும் எப்படியோ பலவிதத்தும் விர்த்தியாய்க் கொண்டிருக்கிறது. "அவரவர் கையே அவரவருக் குதவி" என்று பழமொழி யுண்டு. இதன் உண்மை இப்பொழுதுதான் புலப்படுகிறது. இயேசுவானவர் "பைபிள்" என்ற நூலில் அவரவர் வாழ்வின் மர்மம் அவரவர் கைகளில் இருந்து தெரிந்து கொள்ளலாமென்றார். பாரத மக்கள் 'தலையெழுத்து' 'தலைவிதி' என்பர்.



கையில் காணப்படும் பல வகைக் கோடு (ரேகை) களுக்கும் பேரும் பலனு முண்டு. நான் படித்தது கொஞ்சமாயினும் பார்த்த கைகள் அதிகமென்றே சொல்ல வேண்டும். பம்பாயிலும் சென்னையிலும் பாமரர் முதல் பணக்காரர் வரை நூற்றுக் கணக்கானவர் கைகளைப் பார்த்து பலன் சொன்னதுண்டு. சமீபத்தில் சில ஜமீன்தார்கள், மகாராஜாக்கள் முதலியோர் கைகளையும் பார்க்கும்படியான சந்தர்ப்பம் கிடைத்தது. பாமரர்களுக்கும், பெரியோர்களுக்கும் சாதாரணமாய் முகத்திலிருந்தும், பார்வையிலிருந்தும் தெரிந்து கொள்ளக் கூடுமாயினும், அவர்களின் கை ரேகைகள் வாழ்வின் மகா மர்மங்களை யெல்லாம் வெளிப்படுத்துவதா யிருக்

கின்றன. சமீபத்தில் வடஇந்தியாவிலுள்ள பெரியதோர் சமஸ்தானத்து மந்திரியை எனது நண்பர் அறிமுகம் செய்து வைக்கும்போது, முடிவில் சிறிது எனக்கு ரேகை ஞானமுண்டு என்றார். உடனே மந்திரி தனது கையைப் பார்த்து பலன்களை யறிந்து, திருப்தியாயிருக்குமாயின் இராஜ சமுகத்துக்கு அழைத்துப் போய், மகாராஜாவின் கையைக் காட்டச் செய்கிறேன் என்றார். எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன் என்றேன்.

மந்திரி தன் வலது கரத்தை நீட்டி கைரேகையைப் பார்க்கச் சொன்னார். கடவுளைத் தியானித்துக்கொண்டு சப்த ரேகைகளின் அமைப்பைக் கவனித்து, வயது 57 என அறியலானேன். சதா அந்தர்முக நாட்டத்தில் பெரிதும் காலங்கழித்து வந்துகொண்டிருந்தும் தற்சமயம் மிக்க சோதனையாக விருப்பதாய்ச் சொன்னேன். எப்படியென விவரங் கேட்டார். தங்களுக்கும் சோதிட ஞானமுண்டல்லவா வென்றேன். தனக்கு சோதிடம், ரேகை, யாதும் தெரியாதென்றார். உங்கள் மட்டிலாவது அறிந்திருக்கலாம் என்றேன். அதையும் மறுத்தார். இப்போது நாலு கிரகங்கள் ஒரே வீட்டில் கூடிக்கொண்டு சதியாலோசனை செய்கின்றனர் என்றேன். கிரகங்களின் பெயரைக் கேட்டார். நான் சொல்லவில்லை. இப்படியிருக்கும்போது மகாராஜாவும் வந்து சேர்ந்தார். எல்லோரும் எழுந்து வணங்கி நின்றோம். மந்திரி ரேகை பார்க்கும் விஷயத்தைத் தெரிவித்தார். அவரவரிடத்திலமர்ந்தோம். நாலு கிரகங்கள் என்று கேட்டேனே, பெயரென்ன வென மகாராஜா வினவினார். புதன், சூரியன், சனி, செவ்வாய் என்றேன். அவர்களின் அதிகாரம் எவ்வளவு காலம் என்றார். நால்வர் கூடியதால் கடுமையான ஆதிக்கம் ஐந்துமாத மிருக்குமென்றேன். மகாராஜாவே வயதை யறிந்து 57 வருஷம் $2\frac{1}{2}$ மாத மாயிற்றென்றார். மந்திரியின் ஜாதகத்தைக் கொண்டுவரச்சொல்லி, நான்கு கிரகங்கள் ஒரு வீட்டிலிருப்பதைக் காட்டி, மராத்தி பாஷையில் பேசிக்கொண்டனர். சரி, மேற்கொண்டு கையைப்பார்த்துச் சொல்லுங்கள் என்று இருவரும் மிக்க கவனமாய்க் கேட்டார்கள். ஆத்மார்த்தமான பிரவர்த்தியிலீடுபட்டிருப்பதால் அதிகமாய் கஷ்டப்படுத்தமாட்டா என்றேன். இன்னும் அநேக விஷயங்களைக் கேட்டுக்கொண்டார். உடனே மகாராஜாவும் தன் கையைக்காட்டி விசேஷங்களைத் தெரிவிக்கும்படி சொன்னார்.

மகாராஜாவுக்கு வாழ்த்துக் கூறி, அவரது கைரேகைகளைக் கவனித்தேன். ரேகைகளெல்லாம் மிக்க மெல்லிய கோடுகளாய், ஒரே தன்மையில் அமைந்துள்ளன. அவரது வயது 46, எனக்

கேட்டுக்கொண்டேன். திரிகால வர்த்தமானங்களின் நிலைமை எப்படியிருக்கிறதெனக் கவனித்தேன். அதன் பிறகு கிரக நிலைகளையும், முக்கியமான சப்தரேகைகளையும் பார்த்துவரும்போது, சில அபூர்வக் குறிகளுமிருக்கக்கண்டேன். இரண்டு கைகளையும் சேர்த்து ஒத்துப்பார்த்தேன்.

மகாராஜாவுக்கு அபூர்வமான திரிகால ஞானமுண்டு. அவர் தம் வாழ்வின் நுணுக்கங்களை நன்குணர்ந்தவர் என்றேன். மகாராஜா இவைகளைக் கேட்டு சற்று மௌனமாயிருந்தார். வேறு அபூர்வமானதுண்டோ என்றார். உதிக்கும் எண்ணங்களெல்லாம் மகத்தானவை. மிக்க சக்தியோடும் பலனளித்து வருகின்றன என்றேன். தற்கால நிலைமை யெப்படி யிருக்கிறதென்பதை விவரிக்கும்படி கேட்டார். அது சொல்லத்தரமன்று. மிக்க மாறுதலையடைந்துவிட்டது. இவ்வாறு நான்கு வருஷங்கள் செல்லும் என்றேன்.

பூதக்கண்ணாடியிருந்தால் இன்னும் சற்று நன்றாய்ப் பார்க்கலாமென்று சொன்னதும் வலது கரத்தைக் கொஞ்சம் குவித்துக் காட்டி, இப்பொழுது கிரகங்களின் நிலைமையைச் சொல்லுங்களென்றார். "புதன் உச்ச நிலையிலிருக்கிறது. இது சாஸ்திர நிபுணத்துவத்தைக் குறிக்கிறது. இது வற்றாப் பொக்கிஷம். சனியைப்போலன்று. இது எவ்வளவுக்கு உன்னத நிலையைக் கொடுத்ததோ அவ்வளவுக்கு தாழ்த்தி, இடத்தைவிட்டுப் பேர்த்துவிட்டது. குரு மகத்தானது, சொற்ப தோஷமுள்ளது" என்றேன்.

ஒருவரை தனிமையாக அழைத்துப்போய், அவருடைய கையை மகாராஜா பார்த்து, ஆத்மஞானம் 39-ல் ஆரம்பமாகுமென்று சொல்லி என்னிடமும் கேட்கும்படி செய்தார். யானும் அதே வயதைக் குறிப்பிட்டுரைத்தேன்.

என்னை பரீட்சித்தும், தன் அனுபவத்தை ஒத்திட்டுப் பார்த்தும் திருப்தியடைந்தார்.

கணிதத்துக்குட்பட்ட சோதிடம் அவரவர் நிலைமையை விவரிக்கக்கூடியதாயிருந்தும், மேதாவிகள் கடைசியாக ரேகை சாஸ்திரத்தை அனுபவத்தில் வைத்திருக்கிறார்கள். இந்த சாஸ்திரத்துக்கு தற்காலம் இந்தியாவில் மகத்துவம் விசேஷமா யில்லாத போதிலும், அயல்நாடுகளான இங்கிலாந்து, அமெரிக்கா இத்தாலி முதலிய தேசங்களில் பிரபலமா யிருந்து வருகிறது.

அடுத்த 'காந்தி' மலரில் மகாராஜாவின் ரேகைகளைக் குறிப்பிட்டு பலாபலன்களை விளக்கி எழுதப்படும்.

திரிகால ரேகை சாஸ்திரம்:—"சக்திதாஸன்" எழுதியது. விலை அணா 10. இந்நூலால், அவரவர் கையிலுள்ள ரேகைகளால் தாங்களே திரிகால பலன்களைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். நமது வாசகர்கள் கீழ்க்கண்ட கூப்பனில் விலாசத்தை பூர்த்தி செய்து நவம்பர் மாதம் 30-ந் தேதிக்குள், பாதி விலை அதாவது அணா ஐந்தும், தபாற்செலவு அணா இரண்டும் சேர்த்து அணா 7 அனுப்பினால் ஒரு புஸ்தகம் அனுப்பப்படும்.

அமிர்தம் அண்டு கோ, 87, பவழக்காரத் தெரு, மதராஸ்.

ஐயா,

'காந்தி' மலரில் தெரிவித்தபடி, இத்துடன் 7 அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பியிருக்கிறேன். கீழ்க்கண்ட விலாசத்துக்கு, 'திரிகால ரேகை சாஸ்திரம்' ஒரு புஸ்தகம் அனுப்பக்கோருகிறேன்.

கையெழுத்து

....

பெயர்......................................

தெரு.................................

ஊர்...............................


தபாலாபீஸ்.....................

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதியவர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக்கப்படும்.

பத்திரிகை வெளியாகி ஒரு வாரத்திற்குள் பரிசுப் பணம் வராவிட்டால், உடனே ஆபீசுக்கு கடிதம் எழுதவும்.

Printed at the "Tamil Nadu" Press, Madras. Published by T. S. Chockalingam, Editor & Proprietor, "Gandhi" Office 29, Sembudoss St., Madras.



காந்தி

ஆசிரியர்: தே. ச. சொக்கலிங்கம்

மாலை 2. { 1933 டிசம்பர் 10௳ 29 செம்புதாஸ் தெரு, சென்னை. } மலர் 9.

அட்டவணை.

அடிமைச் சங்கிலிகள்.


இந்தியப் பிரதிநிதிகள் xx இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே தங்கச் சங்கிலியின் கணுக்களாக அமைந்துள்ளார்கள் x x x
உதவி இந்தியா மந்திரி
பிரசங்கம். 22-11-33
இந்தியாவைப் பிணைக்கும் அடிமைச் சங்கிலியா !!
ஹோர்
சர்வாதிகாரம்
விசேஷ உரிமை
வகுப்புவாதம்
"காந்தி"
சென்னை

மகாத்மாஜீயின் திக்விஜயம்

ஓர் இயக்கத்தின் வெற்றிக்கு மிகவும் அவசியமான சாதனம் உண்மையான உணர்ச்சியே யாகும். மத சம்மந்தமான காரியங்களில் இது ஒன்றே வெற்றிக்குக் காரணமாக இருக்கும். படிப்பினாலும், தர்க்கம் செய்யும் சக்தியினாலும் சாதிக்க முடியாத ஓர் காரியத்தை உண்மையான உணர்ச்சியினாலும், அதனடியாக ஏற்படும் தியாக புத்தியாலும் சாதித்துவிட முடியும். முகமது நபியின் வெற்றியே இதற்குப் போதிய சான்றாகும்.

மகாத்மாஜி ஓர் பெரிய இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார். இதை ஓர் யுத்தமென்றே சொல்லலாம்.

"வெகு நாள் பட்ட பழக்க வழக்கங்களை அப்படியே நிலைநாட்ட வேண்டும். இம்மாதிரி செய்வதில் இடையூறு ஏற்பட்டால் அதை சர்க்கார் தடுக்க வேண்டும்" என்று கருதும் "சனாதனிகள்" ஒரு பக்கம். "பழக்க வழக்கங்கள் அறிவுக்கும் மனித வர்க்கத்தின் உயர்ந்த லக்ஷியங்களுக்கும் முரண் பட்டால் அவற்றை ஒழித்து விடவேண்டும்; அவற்றை ஒழித்துவிட வேண்டுமென்று பெரும்பான்மையோர் நினைக்கும்போது சட்டம் அதற்கு விரோதமாக இருக்கலாகாது" என்று நினைப்பவர் மற்றொரு கட்சி.

முதலில் கூறிய கட்சியார் தம்மை "சனாதனிகள்" என்று சொல்லிக் கொள்கிறார்கள். பின்னால்கூறிய கட்சியார் தாமே உண்மை சனாதனிகள் என்று நம்புகிறார்கள்; சனாதனி என்ற பெயரை இவர்கள் வைத்துக் கொள்வது முதற் கட்சிக்குப் பிடிக்கவில்லை; ஆகையால் இவர்களை சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லலாம். சனாதனிகளுக்கும் சீர்திருத்தக்காரருக்கும் நடக்கும் இந்த யுத்தத்தில் யார் வெற்றி பெறுவார்கள்? சனாதனிகளுக்கு சீர்திருத்தக்காரர் மீது அளவிட முடியாத துவேஷம் இருக்கிறது. ஆனால் சீர்திருத்தக் காரர்களை தலைமை வகித்து நடத்தும் மகாத்மாவுக்கோ துவேஷமென்பதே கனவிலும் வராத ஓர் விஷயம்.

"தீண்டாமை யென்பது ஹிந்து மதத்தின் சரீரத்தில் புகுந்துள்ள ஓர் விஷம். ஹிந்து மதத்தின் ஜீவசத்தை நிமிஷத்துக்கு நிமிஷம், அரித்துக்கொண்டே இருக்கிறது. இந்தப் புண் பழுத்துப் புழுத்து நாறுவதை நான் காண்கிறேன். அந்தக் கெட்ட வீச்

சம் என் மூக்குக்கு நன்றாய்த் தெரிகிறது. ஹிந்துமதம் சொந்து மடிந்து வருகிறது." என்று மகாத்மாஜீ நம்புகிறார். ஆகையால் அந்த விஷத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று அவர் கருது கிறார்.

"தீண்டாமை நாம் பிறப்பதற்கு முன்னமேயே இருந்து வரும் ஓர் விஷயம். நம் முன்னோர்கள் புத்திசாலிகளென்றே நாம் நம்ப வேண்டும். தீண்டாமை எதற்காக ஏற்பட்டது; அல்லது எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டியதில்லை. யோசிக்க ஆரம்பிப்பதே மதத்துரோகம். ஏதாவது ஒரு காரண மில்லாமல் அவர்கள் செய்திருக்க மாட்டார்கள்" என்று "சனாதனி கள்" கூறுகிறார்கள். நம்புகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் தீண்டாமை ஒன்றைத் தவிர வேறு பல முக்கியமான விஷயங்களில் பழைய ஆசாரங்களை கைவிடுவதற்கு இவர்கள் சிறிதும் தயங்கவே இல்லை.

ஆகையால் இந்தப் போராட்டம் இரண்டு நம்பிக்கை களுக்கிடையே ஏற்பட்ட போராட்டமல்ல. நம்பிக்கைக்கும் பிடிவாதத்துக்கும் இடையே ஏற்பட்ட போராட்டமாகும். நம் பிக்கைதான் வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

* * * *

மகாத்மாஜீ தாம் விரும்பும் சீர்திருத்தத்தில் நம்பிக்கை யுள்ள வர். நம்பிக்கை என்றால் என்ன? "தீண்டாமை யென்னும் இந்த சனியனைத் தொலைப்பதில் என் உயிரை தியாகம் செய்யவேண்டி யிருந்தாலும், காந்திஜீ இந்தப் புனிதமான லக்ஷியத்தோடு ஒப்பிட் டால் அது பிரமாதமான தியாகம் என்று கருதமாட்டேன்" என்று சொல்கிறார். இது தான் நம்பிக்கை. உயிரை விடுவதற்குத் தயார் என்பதை ஏற்கனவே பல தடவை அவர் நிரூபித்திருக்கிறார்.

இவ்விதமான நம்பிக்கை சனாதனிகளுக்குத் தமது கொள்கை யில் இருக்கிறதா? இருப்பதாகச் சொல்ல இடமில்லை. அவர்களெல் லோரும் உண்மை உணர்ச்சியே இல்லாதவர்கள் என்று அர்த்த மில்லை. அவர்களது உண்மையான உணர்ச்சி யாது என்பது அவர் களுக்கே தெரியாதபடி மூட நம்பிக்கை குறுக்கிடுகிறது. தீவிரமாக குணதோஷங்களை ஆராய்வதற்கு அவர்களுக்குக் கூச்சம். காரண காரிய ஆராய்ச்சி செய்வதில் மனதுக்குப் பிடிக்காக முடிவு ஏற் பட்டுவிட்டால் என்ன செய்வது என்று திகைத்து அந்தத் துறையி லேயே இறங்காமல் இருக்கிறார்கள். தபாலில் வந்த கடுதாசியை

உடைத்துப் பார்த்தால் மனதுக்குப் பிடிக்காத செய்தி ஏதாவது இருக்குமோ என்று பயந்து காகிதத்தையே உடைத்துப் பார்க்க மனமில்லாதவர்கள் சிலர் உண்டு. "சனாதனிகள்" மனப்பான்மை இதுதான்.

* * * *

மேலே குறிப்பிட்டது "சனாதனி"த்தலைவர்களுடைய நிலைமை. இருவருக்கும் மத்தியில் பொது ஜனங்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கிறார்கள். ஆகவே சீர்திருத்தக்காரர்களின் லஷியம் யாது என்பதைப் பொது ஜனங்களுக்கு அறிவித்து தம்முடைய உணர்ச்சியை பொது ஜனங்களிடம் புகுத்துவதே மகாத்மாஜியின் வேலைத்திட்டம். "சனாதனிகள்" உபயோகிக்கக் கூடிய, உபயோகிக்கிற, பல ஆயுதங்களை மகாத்மாஜீயும் அவரைப் பின்பற்றுகிறவர்களும் உபயோகிக்கமுடியாது. சனாதனிகள் கையில் பணம் இருக்கிறது; தடித்தனத்தை அவர்கள் விலை கொடுத்து வாங்கிக் கொள்ளமுடியும்; பாமர மக்களின் மூட நம்பிக்கையும், 'ஆசாரத்தின்' பலமும், பழமையின் வலிமையும், அதோடு சட்டத்தின் அனுகூலமும்அவர்களிடம்இருக்கின்றன. சீர்திருத்தக்காரர்களிடம் இவை ஒன்றுமில்லை. தியாகம் ஒன்றுதான் இருக்கிறது.

மகாத்மா எவ்வளவு தியாகத்துக்கும் தயார். இது அவரைப் பின்பற்றும் மற்ற சீர்திருத்தக்காரர்களிடமும் பரவவேண்டும். அப்பொழுது பொது ஜனங்கள் கண் விழித்துப் பார்ப்பார்கள். தீண்டாமையும் ஒழியும்.

இந்தவேலைத் திட்டத்துடன் மகாத்மாஜீ 9 மாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்வதென்று சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறார். நவம்பர் மாதம் 7 தேதி யன்று இந்த யாத்திரை ஆரம்பமாயிருக்கிறது. மகாத்மாவின் சரீர ஸ்திதி திருப்திகரமாயில்லாத சமயத்தில் இந்த யாத்திரையை மேற்கொண்டது லேசான விஷயமல்ல. அவரது பிரயாணத்தைப்பற்றிய விவரங்களைப் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறது.

தினந்தோறும் சராசரி மூன்று பொதுக்கூட்டங்கள்; ஹரிஜனங்கள் இருக்கும் இடங்களைச் சுற்றிப்பார்ப்பது. தினசரி இரண்டு அல்லது மூன்று ஊர்களுக்குக் குறையாமல் போவது; சராசரி 50 அல்லது 60 மைல் மோட்டார் பிரயாணம்; இது தவிர எத்தனையோபேருடன் சம்பாஷணைகள்;"ஹரிஜன" பத்திரிகைக்கு வியாசம்; கடிதங்களுக்குப்பதில் எழுதுவது. நல்ல திடகாத்திரமுள்ளவர்களும் தாங்கமுடியாத சுமை.

மத்தியமாகாணம், ஆந்திர தேசம், மலையாளம், மைசூர் இவற்றை முடித்துக்கொண்டு ஜனவரி 21 தேதி முதல் பிப்ரவரி மீ 10-ந் தேதி வரை தமிழ்நாட்டில் இருப்பதாக வேலைத்திட்டம் தயாராயிருக்கிறது. இதற்கிடையே டிசம்பர் 20-ந் தேதி முதல் 22 தேதி வரை சென்னையில் இருப்பார்.

அதற்குள்ளாகநாம் மகாத்மாஜியை வரவேற்கத் தயாராக ஆய் விடவேண்டும். நமது ஹிருதயத்தை சுத்தம் செய்துகொண்டு மகாத்மா அதினுள் பிரவேசிக்க லாயக்காகச் செய்வது தமிழ் மக்களின் கடமை.

ஆலயப் பிரவேசத்தைப் பற்றி மகாத்மா கூறியுள்ள சில வாக்கியங்களை இங்கு எடுத்தெழுதுகிறோம்.

"கோவிலிலுள்ள விக்கிரஹம் கடவுளல்ல. கடவுள் ஒவ்வொரு அணுவிலும் வசிப்பதால் அந்த விக்கிரஹத்திலும் வசிக்கிறார். ஆனால் அவருடைய பக்தர்களில் ஒரு வகுப்பார் உள்ளே நுழைய முடியாமல் தடுக்கப்பட்டிருக்கும் கோவிலில் அவர் இருப்பதாக கூறுவது கடவுளை தூஷிப்பதாகும்."

சனாதனிகள் பிறருடைய அபிப்பிராயத்துக்கும் உணர்ச்சிக்கும் தாராள புத்தியுடன் இடம் தரவேண்டும் என்று அவர்களை மகாத்மாகேட்டுக்கொள்கிறார். "பிற மதத்தினர்களிடம் துவேஷம் காட்டாமல், தாராளகுணமும் பெருந்தன்மையும் காட்டுவது போலவே தமது மதத்தைச்சேர்ந்த சீர்திருத்தக்காரர்களிடமும் ஏன் தாராள புத்தியுடன் நடந்துகொள்ளக்கூடாது" என்று அவர் சனாதனிகளிடம் கேட்கிறார்.

தீண்டாமையை ஒழிப்பதற்கு சட்டம்செய்வது தப்பு என்று சனாதனிகள் கூறுகிறார்கள். "சர்க்கார் மதவிஷயமான காரியங்களில் வரம்புமீறி தலையிடக்கூடாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஹரிஜனங்களை கோவிலில் விடவேண்டும என்று சட்டம் கட்டாயப் படுத்தினால் அது தவறுதான். ஆனால் கோவில் நிர்வாகிகளோ, அல்லது தரிசனம் செய்து வருகிறவர்களோ பிறரையும் உள்ளே விடவேண்டுமென்று பெரும்பான்மையாகத் தமது விருப்பத்தை அறிவித்தபின் அதை சட்ட சம்மதமாக்குவது சர்க்கார் வரம்பு மீறித் தலையிடுவதாகாது. இவ்வாறு செய்ய மறுத்து பழைய நிலைமையையே நிலைநாட்டுவது தான் சர்க்கார் நிர்ப்பந்தம் என நான் கூறுவேன்." என்று மகாத்மாஜீ கூறுகிறார்.

ஹரிஜன இயக்கத்தின் நோக்கம் சென்ஸஸ் ஜாப்தாவில் "ஹிந்துக்கள்" எனப்படுவோரின் தொகையை அதிகமாக்குவதல்ல. "இந்த இயக்கத்தால் ஏற்படக்கூடியது ஹிந்து ஜாதியின் ஒற்றுமை மட்டுமல்ல. 'உயர் ஜாதி' ஹிந்துக்கள் தீண்டாமை என்ற இந்த களங்கத்தை தம் ஹிருதயத்தினின்று நீக்கி விடுவார்களாயின் ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள் எல்லோரிடையிலும் ஒற்றுமை யுணர்ச்சி ஏற்படும். தீண்டாமை என்ற இடையுறை நீக்கினால் ஒற்றுமை தானாக ஏற்படும். தீண்டாமைக்குப் பல உருவங்கள் உண்டு. அது பல தலைகளுள்ள ஓர் பெரிய பூதம். தீண்டாமை ஒழிந்தால் அதிலிருந்து வேறு பல நன்மைகள் பிறக்கும். நமது புத்தி தெளிவடையும். கண் திறக்கும்" என்று அவர் கூறுகிறார்.

தூங்குவதாகப் பாசாங்கு செய்பவர்களையோ, வெளிச்சத்தைக் கண்டு பயப்படுகிறவர்களையோ பற்றிக் கவலையில்லை. தூங்குகிறவர்களை மகாத்மாவின் சங்கநாதம் எழுப்பியே தீரும் என்று நாம் நம்புகிறோம்.



பாரதியாரும்

நந்தமிழ் நாட்டு கவிஞர் திலகமாகிய பாரதியாரை அறியாதார் யாரே? அவரது வாழ்க்கையின் நுட்பத்தை யறிந்தோர், அவருக்கும் போலீஸாருக்கும் உள்ள நெருங்கிய நட்பை அறியாமலிரார். அவர் போலீஸ்காரர்களின் நட்பைப் போற்றி தனது கற்பனை சக்தியின் கனிந்த பழங்களாகிய கவிதைகளில் ஓர் உன்னத ஸ்தானம் கொடுத்திருக்கிறார் என்றால், நம்மை, வலிந்து பொருள்கூறுவதாகக், கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

கம்பன் சடையப்ப வள்ளலைப் போற்றிக் கெடுத்தான் என்பது எனது முடிவான கொள்கை. மிகவும் புகழ்ந்ததினால் இறந்து போன சடையப்ப வள்ளலுக்கோ, (சந்ததி இருந்தால்) பிறந்து, பிறந்து இறந்துகொண்டிருக்கும் அவர் சந்ததியாருக்கோ, தமிழ் நாட்டாருக்கோ பிரயோஜனம் என்ன? இதை எல்லாம் நன்கு ஆராய்ந்தே, கம்பன் விழுந்த புகழ்ச்சிப் படு குழியில் விழாது, ஓர் அற்புதமான வேலையைச் செய்து தமிழ்க் கவிதைக்கும் அவரது கெழுதகை நண்பர்களாகிய போலீஸாருக்கும் ஓர் அழியாப் புகழைத் தந்திருக்கிறார், நம் பாரதி.

வருங்காலத்திற்கு வேண்டப்படுவது யாது என்பதை யறிந்து அதற்காக அருங்காப்பியங்கள் செய்யுங் கவிஞன் தான் தீர்க்கதரிசி. சட்ட மறுப்புப் போர் நமக்கு ஆறிய பழங் கஞ்சி யாகிவிட்டது. அது பாரதியின் மனோவுலகில் எப்படி எப்படித் தோன்றிற்றோ? அப்பொழுது வேண்டப்படும் சட்டத்தின் சலியாத வைரத் தூண்களாகிய போலீஸாருக்கு ஓர் அரிய அறவுரை எடுத்துரைப்பது மிக, மிக அற்புதமாக அமைந்து மிளிர்கிறது. என்னே அவரது விழுமிய நட்பு!

இச்சிறந்த கைங்கரியத்திற்கு அவர் எடுத்தாளும் கவிதைப் பகுதி அவரது அற்புத கவிதா சாதுரியத்தை நிகழ்விக்கிறது என்றால் உயர்வு நவிற்சி யல்ல. அது எவ்வா? "ஆத்திசூடி"

சாதாரண கல்விக்கே இளமையில் ஆரம்பிக்கவேண்டி யிருக்கிறதே; அதிலும் சட்ட புத்தகங்களின் சலியாத காப்பாளிகளான


போலீஸாரும்

(புதுமைப் பித்தன்)

போலீஸ்காரர்களாக, திடீரென்று இருபதாவது வயதில், மாறி விட முடியுமா? "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" இவற்றை எல்லாம் தமது நுண்ணறிவால் நன்கு ஆராய்ந்து தமது அறிவுரைக்கு (அறவுரை என்றும் கூறலாம்) ஆத்திசூடியை எடுத்தாண்டது உலக வழக்கை எவ்வளவு கூர்ந்து கவனித்திருக்கிறார் என்பதை நன்கு விளக்குகிறது.

சுதந்திரப் போர் எப்படி நடக்குமென்று (மகாத்மா உள்பட) யார் கண்டார்கள்? அக்காலத்திலேயே நமது கவிஞர் திலகம், தமிழ் நாட்டுக்குப் புத்துயிர் தந்த பூமான், இப்பொழுது போலீஸாருடன் இணை பிரியாது உலாவும் லாதி (தடிக்கம்பு), போலீஸாருக்கு வேண்டப்படும் இன்றியமையாத பொருள்களுள் ஒன்றென்பதைக் கண்டு "கோல்கைக் கொண்டு வாழ்" என்று எழுதியிருப்பது வியப்பினும் வியப்பே. இதுதான் அவர் முதலில் எடுத்துச் சொல்லும் வார்த்தை. பிறகு "நையப் புடை" என்று உரைப்பது போலீஸாரின் அத்தியந்த நண்பர் என்பதை பளிங்குபோல் எடுத்துக் காட்டுகிறது.

"நொந்தது சாகும்" என்பதில் பாரதியார் தமது தலை சிறந்த சித்தாந்தத்தை எடுத்து ஓதுகிறார் என்பதில் ஐயமில்லை. உலக அனுபவம் என்னே! என்னே! மேலும் இதில் தான் கர்மயோகிக் குண்டான, அடிப்படையான உண்மைப் பெருங் குணத்தை எடுத்து இசைக்கிறார். கர்மயோகி முக்கியமாக மனதைக் கட்டுப்படுத்தவேண்டும்; சஞ்சலத்துக்கு இடங் கொடுக்கலாகாது. செய்யும் தொழில்களில் மனதை இளகவிடக்கூடாது.



பாரதப் போரில் பார்த்தனுக்குப் பரந்தாமன் உபதேசித்த அருள் மொழி இதுவே. போலீஸார் இம்மொழிகளைப் பொன்னேபோல் போற்றி வருகிறார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமோ.

இனி நமது கவிச் சக்ரவர்த்தியாம் பாரதி, அவர்களுக்கு இயற்கையாக இருக்கவேண்டிய குணங்களைக் கூறுவது மிக்க மாண்புடையனவாக மிளிர்கின்றன.

1. தாழ்ந்து நடவேல் 2. தன்மை இழவேல்
3. ரௌத்திரம் பழகு 4. வெடிப்புறப் பேசு

இவற்றைப்பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தலாம். விரிவஞ்சி விடுத்தேன்.

இதற்கடுத்த பகுதியாக அவர் கூறுவதை ‘‘பொருள் இயல்’’ என்று வகுக்கலாம். உலகத்தில மாந்தருக்கு அதிலும் போலீஸாருக்கு வேண்டப்படுவது யாது? பொருள். ‘‘பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை’’ என்று கற்றுணர்ந்த பெரியார் கூறவில்லையா? ‘கிம்பளம’ வசூலிக் தம் முறையை சூக்ஷ்மமாக தொகுத்த தன்மை ‘‘அர்த்த சாஸ்திரம்’’ எழுதிய விஷ்ணு குப்தனையும் மேல் நாட்டு மாக்கிவல்லியையும் [Machiavelli] தோற்கடித்து விடுகிறது என்று கூறவும் வேண்டுமோ? எழுதிப் பயனில்லை. மூலத்தைப் படித்தே இன்புறவேண்டும்.

1. பணத்தினைப் பெருக்கு. 2. பெரிதினும் பெரிது கேள்
3. கவ்வியதை விடேல்
இவை யாவற்றிற்கும் சிகரமான தத்துவம்,
4. (பிறர்) துன்பம் மறந்திடு

என்று கூறுவதே. இவ்வளவு சூஷ்மார்த்தங்களும் மலிந்து கிடக்க இசைத்துக்கொண்டு போவது பழைய ‘ஆத்திசூடிக்’ கிழவியை வென்று விடுகிறது என்று கூறவும் வேண்டுமோ.

‘‘பாயும் கடிநாய்ப் போலிசு’’ என்று இவர் எழுதுவது முரண் பாடன்றோ என்று சிலர் ஆட்சேபிக்கலாம். முரண்பா டொன்று மில்லை. ஸ்ரீராமபிரானை ‘‘இக்ஷரியன்’’ என்று விசுவாமித்திரர் கூறுவதாக கம்பன் பாடவில்லையா? எல்லாம் அன்பின் மிகுதி.

இவவாராயச்சியை ஊன்றிப்படித்தநண்பர்கள் ‘‘இவ்வறிவுரை யெல்லாம் நீர் கூறியமாதிரி வரவில்லையே’’ என்று வினு எழுப்பலாம். அதைப்பற்றி எனக்கு அக்கரை யில்லை.

அதிர்ஷ்ட நம்பர் ரகசியம்

"ஆனந்த விகடன்" ஆசிரியருக்கு

உபய குசலோபரி.

நானொரு பெரிய சந்தேகப் பேர்வழி என்பதை தங்களுக்கு முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால், காமாலை கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத் தான் தெரியும் என்று இலேசாக நினைத்து விடவேண்டாம். மஞ்சள் நல்ல கண்ணுக்கும் மஞ்சளாகத் தான் தெரியும். எப்படி யெனில்,


12-11-33-ல் வெளியான விகடன் 11-ம் பக்கத்தின் மத்தியில் "அய்யங்காரின் அதிர்ஷ்டம்" என்ற தலைப்பின் கீழ் மேற்கண்ட நேயர் அதிர்ஷ்ட நம்பர் 415724 உள்ள அக்டோபர் மீ 10வ "ஆனந்த விகடன்" பிரதியை "நமது காரியாலயத்தில் 7-11-33 அன்று நேரில் கொண்டு வந்து கொடுத்து ரூ. 100 பெற்றுக்கொண்டார்" என்றும், அதே விகடன் மேல் அட்டை மூன்றும் பக்கத்தின் அடியில் "அக்டோபர் மாதத்து "ஆனந்த விகடன்" அதிர்ஷ்ட பரிசு ரூ 100 பெற்றவருக்கு அளித்த செக்கின் புகைப்படம்" என்றும் விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறது. அந்த செக் 6-11-33 ல் எழுதப்பட்டிருக்கிறது.

கனம் அய்யங்கார் அவர்கள் விகடனை 7-11-33 அன்று நேரில் கொண்டுவருவதற்கு முந்தின தினமான, 6-11-33 ல் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸாச்சாரிக்குத்தான் அதிர்ஷ்டம்கிடைத்திருக்கிறது என்று தெரிந்து செக் எழுத எப்படி முடிந்தது? என்பது தான் என் சந்தேகம்.


காரணங்கள் சொல்ல முடியாத சில விஷயங்களில் அச்சுக் கோர்ப்பவர் செய்த தவறு என்று சொல்லி தப்பிக் கொள்வது சில ஆசிரியர்களுடைய வழக்கம். அவ்வாறே தாங்களும் அய்யங்கார் கொண்டு வந்து நேரில் கொடுத்தது 5-11-33 என்பதற்கு பதிலாக 7-11-33 என்று தவறுதலாக போடப்பட்டு விட்டது என்று மழுப்பி விடாமல், என் சந்தேகம் நிவர்த்தியாக வேண்டி, உண்மை ரகசியத்தை உள்ளவாறு உடனே தெரியப் படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் அன்பன்
ஜீ. சந்தானராம சர்மா.


போலீஸ் வீரன் முனிசாமி




கோழி கூவுகிறது.




சோம்பல் முறிக்கிறன்.



வயிற்றுக்கு எதாவது வேண்டுமே?




தோப்பியை கழற்றுகிறன்.




"ஏதாவது கிடக்கிறதா?"




"பலே பேஷ்! சப்பாத்தி"




'கொஞ்சம் சர்க்கரை இருந்தால்'—




தேனீயை அழைக்கிறன்.



தேனீ வருகிறது.




"இதற்கு கொஞ்சம் தேன்"




தேனீ பயணம்.




தேனீ புஷ்பத்தில் தேன் சேகரிக்கிறது.



தேனேடு திரும்பி வருகிறது.



தேன் பொழிகிறது!



“அருமையான ஆகாரம்!”


—கிங் பீச்சர்ஸ் சிண்டிகேட்.

கூடார்த்தப் படத்தின் பயன்

அமெரிக்கா-சோவியத் உறவு சம்பந்தமாக சென்ற "காந்தி" மலரில் இரண்டு கூடார்த்தப் படங்கள் பிரசுரித்திருந்தோம். ரஷியாவுடன் ஒருவித சம்மந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது ஒரு கட்சி. இந்த அபிப்பிராயத்தை ஆர் என்பவர் "சிக்காகோ டிரைபியூன்" பத்திரிகையில் சித்திரத்தின் மூலம் விளக்கியிருந்தார். ரஷியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில் அமெரிக்காவுக்குப் பல நன்மைகள் உண்டு என்பது மற்றொரு கட்சி. இதை விளக்கி டால்பர்ட் என்பவர் "டெயிலி நியூஸ்" பத்திரிகையில் சித்திரம் போட்டிருந்தார்.

மறுபடியும் இரண்டு பத்திரிகைகளும் தம் கட்சியை விளக்க இரண்டு கூடார்த்தப் படங்கள் பிரசுரித்திருக்கின்றன.

இது ஆர் என்பவர் எழுதியுள்ள படம். "ரஷிய வர்த்தகம் என்ற இரையை தூண்டிலில் வைத்து இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய மீன்களை ரஷியா ஏமாற்றி பிடித்து விட்டது. இதே ஆசையில் அமெரிக்காவும் சிக்கி, தண்ணீரை விட்டகன்ற மீன் போல் பரதவிக்கப் போகிறது." என்று பொருள்படும்படி "சிகாகோ டிரைபியூன்" இந்தப் படத்தைப் பிரசுரித்திருக்கிறது.





பக்கத்தி லிருப்பது "டெயிலி நியூஸ்" கூடார்த்தப் படம். ரஷிய வர்த்தக வசதிகள் என்ற டெலிபோன் மணி வெகு காலமாக அடித்துக்கொண்டே இருக்கிறது. ஆனால் அமெரிக்கா கும்பகர்ண நாடகத்தில் ஆழ்ந்திருந்தது. இப்பொழுதாவது மயக்கம் தெளிந்து விழித்துக்கொள்வது நல்ல காரியம் தான் என்பது இந்தப் படத்தின் கருத்து.

பக்கம் பக்கமாக வியாசம் எழுதி விவாதம் செய்வதற்குப் பதிலாக அதே காரியம் ஒரு சிறு கூடார்த்தப் படத்தின் மூலம் நடந்து விடுகிறது!



அமெரிக்கா ரஷியா வுடன் உறவு கொண்டாடி நெருங்குகிறது. தைரியம வந்துவிட்டதுபோலும்!!

ரேய்] [கான்ஸாஸ் ஸிட்டி ஸ்டார்



"காக்கை இலக்கணம் கற்ற கதை" கவிச் சக்கரவர்த்தி பாரதியார் எழுதியது. பாரதியார் வசன நூலில் இக்கதை சேராமல் விடப்பட்டுப் போயிற்று. பத்தாண்டுகளுக்கு முன்னால் நண்பர் வ. ரா. நடத்திவந்த "சுதந்திரன்" பத்திரிகையில் இது வெளியானது. இச்சமயம் இதை எடுத்துக்கொடுத்து உதவிசெய்து தமிழர் படித்து இன்புறும்படி செய்ததற்காக நண்பர் வ. ரா. வை பாராட்டுகிறோம். அக்கதையை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

ரஷிய சர்வாதிகாரி ஸ்டாலினுடைய மனைவியைப்பற்றிய விஷயம் இந்த மலரில் முடிவாகிறது.

"கண்டதும் காதல்" என்பதைப் பற்றி இந்த மலரில் வெளியாயிருக்கும் கட்டுரையை நண்பர்கள் ஆழ்ந்து படிப்பார்களாக. இவ்விவாதத்திற்கு ஆரம்பம் அன்று ஸ்ரீ. அப்புசாமி அய்யர் வீட்டில் எழுந்த தர்க்கம். அன்று அங்கே பிரசன்னமாயிருந்த மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. வி. வி. சீனிவாச ஐயங்கார், ஸ்ரீ. டி. கே. சிதம்பரநாத முதலியார், தமிழ் அகராதி கமிட்டித் தலைவர் ஸ்ரீ. எஸ். வையாபுரி பிள்ளை, ஸ்ரீ. பெ. நா. அப்புசாமி ஐயர் ஆகிய நண்பர்கள் இவ்விஷயத்தில் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை கட்டுரைகள் மூலமாக எழுதியனுப்புவதாக வாக்களித்திருக்கிறார்கள். இச்செய்தி நண்பர்களுக்கு மிகுந்த சந்தோஷமளிக்குமென்று நம்புகிறோம்.

"தாலி கட்டினால் கலியாணமாச்சா?" என்ற சிறந்த கதையை எழுதிய ஸ்ரீ. தி. சதாசிவம் எழுத்துக்கள் "காந்தி" வாசகர்கள் மனதைக் கவர்ந்தவை. தமிழ்நாட்டாரின் வாழ்க்கையிலுள்ள குற்றங் குறைகளை நயமாகக் கண்டிப்பதில் சமர்த்தர். மிகுந்த கற்பனை

சக்தியுள்ளவர். தமிழர் உயரிய—வீர—வாழ்வைப் பெற வேண்டு மென்று மனக்கோட்டை கட்டும் இளந்தமிழ் தேச பக்தர்களில் அவர் ஒருவர். "மாஜி சுமங்கலியின் உயில்" என்று அவர் எழுதிய ஒரு சிறு கதையின் முற்பகுதி இம்மலரில் வெளியாயிருக்கிறது. பிற்பகுதி அடுத்த மலரில் வெளிவரும்.

போட்டிப் பந்தய சனியனைப்பற்றி "காந்தி" மலரில் எழுதி 'அருமையான இடத்தை கெடுக்க வேண்டா' மென்றும், "போட்டி பந்தய விஷயங்கள் "காந்தி" மலரில் இருக்கவே வேண்டாம். தனியாக அச்சிட்டு கொடுங்கள்" என்றும் நண்பர்கள் எழுதுகிறார்கள். இப்படி எழுதுபவர்கள் "காந்தி"யின் உண்மையான நண்பர்கள். போட்டிப் பந்தயங்களை தூவென்று தள்ளும் அறிஞர்கள். ஆனால் பந்தயத்தால் ஏமாறும் பாமரர்களுக்கு மோசடியை விளக்க வேண்டாமா? நமக்கு இஷ்ட மில்லாவிட்டாலும், பொது ஜன நன்மையைக் கருதி சில கசப்பான விஷயங்களை சொல்லித் தானே தீர்க்க வேண்டி யிருக்கிறது? நண்பர்களின் உணர்ச்சியை நாம் மதிக்கிறோம். ஆனால் நடுத்தெரு நாராயணனுக்காக சில பக்கங்களாவது—பந்தய மோசடிகளை விளக்க—நாம் உபயோகிக்கும்படி நண்பர்கள் நமக்கு அநுமதி கொடுப்பார்களாக. விரிவாய் எழுத வேண்டியவைகளை "காந்தி" தினசரி பார்த்துக் கொள்ளும்.

நண்பர் வ. ரா. இந்த மலருக்கு "ரஜா" எடுத்துக்கொண்டார். அவராகவே எடுத்துக் கொள்ளும்போது நாம் என்ன செய்ய முடியும்? அதன் பலன் இந்த மலரில் அவர் கட்டுரைகள் இல்லை.

"குலாப்ஜான் காதல்" என்ற கட்டுரையையும், சென்ற மலரில் "தனிமை" என்ற கட்டுரையையும் நண்பர்கள் படித்து ஆனந்தித்திருப்பார்கள். அதே நண்பர், "புதுமைப் பித்தன்" என்ற புனைப்பெயர் பூண்டு இம்மலரில் "பாரதியாரும் போலீசாரும்" என்று எழுதியிருக்கும் அழகிய கற்பனையை படித்து இன்புறுவார்களாக.

தமிழ்நாட்டில் நடமாடும் போட்டிப் பந்தயங்களைத் தொலைக்க டிசம்பர் 1-ந்தேதியே "காந்தி" தினசரியை நாம் வெளியிட எண்ணியிருந்தோம். ஆனால் மெதுவாய் நகரும் சுபாவமுள்ள சர்க்கார் டிசம்பர் 6-ந்தேதியே அநுமதி கொடுத்தார்கள். வெறும் அநுமதி யல்ல. "காந்தி" தினசரி நடத்தவேண்டுமானால் அவர்களிடம் 500-ரூபாய் ஜாமீன் கட்டவேண்டுமாம்! நல்ல காரியத்திற்கு நாலாயிரம் இடையூறுகள் எற்படுவது சகஜந்தானே.

சூதன் கதை.

சூதன் என்ற பெயருள்ள ஒருவன் இருந்தான். அவன் பெயரைக் கேட்டவுடனே அவன் தொழில் எது என்பது உங்களுக்குத் தெரிந்துபோயிருக்கும். கண்ணில் தென்படுகிற யாரையும் விடமாட்டான். தன்னுடன் சொக்கட்டான் விளையாடக் கட்டாயப் படுத்துவான். விளையாடுகிறவன் ஒவ்வொருவனும் சூதனிடம் தோல்வி யடைந்து சொத்து சுதந்திரங்களை இழந்து நடுத்தெருவில் நிற்கலானார்கள். சூதன் தொல்லை பொறுக்க முடியவில்லை. ஊரிலுள்ள நல்லார், பெரியார்கள் எல்லாரும் சூதனுக்கு புத்தி சொன்னார்கள். சூதாட்டத்தை விடும்படி வேண்டிக் கொண்டார்கள். ஆனால் சூதன் என்ன செய்தான்? அவர்களை அவமதித்தான். போட்டிப் பந்தயங்களை விடும்படி எழுதும் ராஜீயப் பத்திரிகைகளை "ஆனந்த விகடன்" எப்படி அவமதிக்கிறதோ அம்மாதிரி அவன் அவமதித்தான். "ஆனந்த விகடனை"ப் போல, பந்தயத்தை விட முடியாதென்று பிடிவாதம் செய்தான். ஆகவே ஊரிலுள்ளவர்கள் சூதன் கண்ணுக்கு அகப்படாமல் வீட்டிற்குள் ஒளிந்து கதவுகளை சாத்தி விட்டார்கள். சூதன் தெருத் தெருவாய் சுற்றினான். ஒருவரும் அகப்படவில்லை. பெருமாள் கோவில் திறந்திருந்தது. உள்ளே நுழைந்து சுவாமி முன்பு உட்கார்ந்தான். சொக்கட்டான் கட்டத்தை விரித்து சுவாமியுடன் ஆட்டம் ஆரம்பித்தான். சுவாமிக்காக தான் காய்களை உருட்டினான். முடிவில சூதன் கணக்குப்படி சுவாமி தோல்வியுற்றார். ஆகவே அவர் விக்கிரகத்தை பெயர்த்தெடுத்து வீட்டுக்கு கொண்டுபோக தீர்மானித்



தான். விதி யாரைத்தான் விட்டது? இதுவரை ஊராரை ஏமாற்றி வந்ததோடு திருப்தி யடைந்திருக்கக் கூடாதா? தன்னைப் படைத்த கடவுளிடம் கூடவா கொள்ளை யடிக்க புத்தி வரவேண்டும்?

விக்கிரகத்தை பெயர்த்தானோ இல்லையோ, உடனே விக்கிரகத்தின் பாரம் தாங்கமுடியாமல் தடாலென்று கீழே விழுந்தான். விக்கிரகம் அவன்மேலே விழுந்து, அவன் மண்டையை சுக்கு நூறாக்கிவிட்டது. அன்றோடு சூதன் தொலைந்தான்.

வி. பி. வர்த்தகத்தில் மற்றொரு அப்பாவியிடம் போட்டி போடலாம். அல்லது மற்றொருவருக்கு போட்டியாக "சரீர மர்ம சாஸ்திரமோ," "முத்தத்தின் மர்மமோ" வெளியிடலாம். 2 அணா ரப்பர் பெஸாரியை 2 ரூபாயாக விற்கலாம். தேவதாஸ் காந்தியிடம் தனது சிப்பந்திகளை விட்டு பிரசாரம் செய்யச்சொல்லலாம். மகாத்மா காந்தியிடம் பேச்சோடு பேச்சாக ஒரு வார்த்தையைச் சொல்லி, அவர் தன் பத்திரிகையைப் பற்றி புகழ்ந்தார் என்று எழுதிக்கொள்ளலாம். ஆங்கிலம் படிக்காதவர்கள் பிரமிக்கும்படியாக ஆங்கிலப் பத்திரிகைகளிலிருந்து விஷயங்களையோ, படங்களையோ திருடலாம். பெரிய மனிதர்களுடன் பேசிக்கொண்டிருந்ததாக எழுதிக்கொள்ளலாம். போலீசாரை ஏமாற்ற காங்கிரசை விகடமாய் தூஷிக்கலாம். காங்கிரஸ்காரரை ஏமாற்ற போலீஸ்காரரை விகடமாய் தூஷிக்கலாம். ஆயிரம் இரண்டாயிரம் என்று பரிசு கொடுப்பதாகச் சொல்லி ஒவ்வொருவரையும் நூறு இருநூறு பிரதிகள் வரை வாங்கும்படி செய்யலாம். இவ்வளவும் தமிழ்நாட்டில் சாத்தியமாயிருக்கலாம். ஆனால்—?

ஆனால் என்ன? இவ்வளவு குட்டுகளையும் தெரிந்தவர்களிடம் போய் மோதினால் சும்மா விடுவார்களா? சூதன் பெருமாள் விக்கிரகத்தால் அடைந்த கதியே கிடைக்கும்.

"ஆனந்த விகடன்" வெறும்விகடத்தோடு நின்றவரை அதைப் பற்றி யாருக்கும் கவலை யில்லை. ஆனால் தனக்கு யோக்கியதையில்லாத ராஜீய சமூக விஷயங்களில் தலையிடவும், போட்டிப் பந்தயங்களினால் ஜனங்களை கெடுக்கவும் ஆரம்பித்தால் மற்ற பத்திரிகைகள் விட்டுவிடுமா? தமிழ் நாட்டிலுள்ள சகல ராஜீயப் பத்திரிகைகளிலும் "ஆனந்தவிகடனி"ன் அக்கிரமங்களை கண்டித்து வியாசங்கள் வெளி வருவதை இன்று பார்க்கலாம். சர். ஷண்முகம் செட்டியாரைப்பற்றி குறும்புத்தனமாக அது எழுதியதை "காந்தி" மலரில் எடுத்துக் காட்டியிருந்தோம். நாம் கேட்ட கேள்விகளுக்கு பதில் எழுதவில்லை. சர். செட்டியார் சட்ட சபையைப் பற்றி பேசியது விரமான பேச்சா இல்லையா? எண்ணெய்க் குடத்திற்கு மசோதாக்

கள் என்று பெயரிட்டது பொருத்தமா ? புண்ணாக்குகளுக்குப் பட்டம் பதவி என்று பெயரிட்டது சரியா? என்று கேட்டோம். அதற்கு பதிலில்லை. அவரை ஆடாய் போட்டோம், இவரை மாடாய் போட்டோம் என்று பதில் சொல்லுகிறது. அதன் பதில் அதன் சுபாவப்படி கோமாளித்தனமா யிருக்கிறதே யொழிய அறிவுக்கோ, வாதத்திற்கோ பொருத்தமா யில்லை. இம்மாதிரி கோமாளித்தனம் செய்கிற பத்திரிகைகளிடம் வாதம் செய்வதில் பயனில்லை.

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்த தாம் ஒரு பிராணி. மிருகங்களைக் கடிக்கிற வரையில் மனிதனுக்கு கவலை யில்லை. தன்னிடம் கடிக்க நெருங்கினால் சும்மா விடுவானா? நாடகத்தில் கோமாளி வேஷம் வேண்டியதுதான். எதற்காக? பாயசம் தெவிட்டாமல் இருப்பதற்காக சட்னி வேண்டி யிருப்பதைப்போல, கோமாளி ஒரு நாடகத்திற்கு தேவை தான். கோமாளியே பிரதானமாக நின்று கோமாளித் தனத்தையே ஒரு நாடகமாக நடிப்பதை எங்காவது கேட்டிருக்கிறீர்களா? தமிழர், வாழ்வில் பொறுப்புக்கொள்ளாமல் சிரிப்பில் பொறுப்பற்ற நனமாய் காலங் கழிக்க விகடன் தூண்டிவருகிறது. இத்தனை வருஷங்களாக ராஜீயப் பத்திரிகைகள் கஷ்டப்பட்டு வளர்த்து வந்த "தேசாபிமானம்" என்ற பொக்கிஷத்தை கோமாளித்தனமாக சீரழிக்க விகடன் கிளம்பி யிருக்கிறது. பத்திரிகாபிமானமுள்ள ஜனங்களை வெறும் பந்தயக் "கிராக்கு"களாக்கிவிட்டது. தமிழரின் பணத்தை பதினாயிரக் கணக்காக தபாலாபீஸ்காரருக்குப் பிடுங்கிக் கொடுக்க விகடன் கையாளா யிருக்கிறது. பணம் மட்டுமா பறி போகிறது ? ஸ்ரீ டி. கே. சிதம்பரநாதமுதலியார் சொல்லுகிறபடி, தமிழரின ஒழுக்கத்தையே இந்த போட்டிப் பந்தயம் கெடுத்து விடுகிறது. பெற்றோருக்குத் தெரியாமல் குழந்தைகள் வீட்டில் திருடி போட்டி பந்தயத்திற்கு பணம் அனுப்புகின்றன. மனைவிக்குத் தெரியாமல் புருஷன் கடன் வாங்கி அனுப்பி ஏமாறுகிறான். புருஷனுக்குத் தெரியாமல் மனைவி ஏமாறுகிறாள். இம்மாதிரியான நிலைமையை தமிழர் வீட்டில் விகடன் உண்டாக்கி இருக்கிறது. இந்த மோசமான நிலைமையை ஒழிக்கவேண்டியது ராஜீயப் பத்திரிகைகளின் கடமையாகும்.

நல்ல வேளையாக இப்பொழுதாவது சகல ராஜீயப் பத்திரிகைகளும் பந்தயச் சனியனை ஒழிக்க ஆரம்பித்திருப்பதைக் கண்டு சந்தோஷப்படுகிறோம். இந்தக் காரியத்தில் ராஜீயப் பத்திரிகைகள் தீவிரமாய் இறங்கியிருப்பதைக் கண்டு விகடன் துள்ளுகிறது. ராஜீயப் பத்திரிகைகளிடம் வந்து மோதுகிறது. சூதன் கதையை அதற்கு ஞாபக மூட்டுகிறோம்.

திருக்குறள் விளக்கம்

முறிமேனி முத்த முறுவல் வெறி நாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு

—குறள் (1113)

Silken touch, pearly teeth and perfumed breath
Dart-like eyes, arms sleek and round like a
bamboo shoot.

— ஆங்கில குறள் : கு. சீனிவாசன்.

"என் காதலி எப்படிப்பட்டவள் தெரியுமா?" என்று காதலன் தன் நண்பனிடம் கேட்டுவிட்டு, அவள் அழகை வர்ணிக்கிறான்:—

"அவள் கைகள் மூங்கில் போல உருண்டு திரண்டு நீண்டிருக்கும். அவள் சரீரம் மாந்தளிர் போலிருக்கும். பற்கள் முத்துப்போலிருக்கும். அவள் மூச்சில் வாசங் கமழும். அவளின் மையுண்ட கண்கள் வேல் போலிருக்கும்."

அடுத்த மலரில் மற்றொரு படம் வெளிவரும்.



:: குப்பையின் பதட்டம் ::



புயல் காற்று வீசும்போது குப்பை கூளங்கள் ஆகாயத்தில் பறப்பது இயற்கை தானே! ராஜீய வாழ்வில் மந்தம் ஏற்படவே "மனக் குழப்பம்" என்ற புயல் பலமாய் அடிக்கிறது. இதில் சில விகடப் பத்திரிகைகள் ஆகாயத்தில் பறக்கின்றன. மேலே ஆகாயத்தில் பறப்பதால் தன்னைக் கண்டு ஸ்திரமாயுள்ள மரங்கள் பொறாமைப் படுவதாக ஒரு விகடப் பத்திரிகை ராஜீயப் பத்திரிகைகளைப் பார்த்து உளறுகிறது. என்ன அறியாமை! புயல் நின்றவுடன் இதன் கதி என்ன?



படார்சாமி கடிதங்கள்

[படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் பகிரங்கமாகவே படார் படார் என்று வெளியிடுவார்]

சிரஞ்சீவி,

நடுத்தெரு நாராயணன், தமிழ்நாடு.

தம்பீ,

"சூரபதுமனைப் போல போட்டிப் பந்தயக்காரரும் பல வேஷங்களில் மாறுவார்கள். மறுபடியும் பழைய முறைக்கு அவர்கள் திரும்பினாலும் திரும்பலாம்" என்று "காந்தி" ஆசிரியர் சென்ற மலரில் எழுதியிருந்தார். அது உண்மையாய்விட்டது. ஆனந்த விகடன் நவம்பர் 19உ பத்திரிகையில், பிரவேசக் கட்டணமில்லாமல் ஆயிரம் ரூபாய் பரிசு வெளியிட்டது. நவம்பர் 26உ பத்திரிகையில் மறுபடியும் பிரவேசக் கட்டணத்தோடு ரூ 1750 பரிசு வெளியிட்டது. டிசம்பர் 3உ பத்திரிகையில் ரூ 2000 பரிசு போட்டிருக்கிறது. தம்பீ, உன்னுடைய மூடத்தனத்தில் விகடனுக்கு பூரண நம்பிக்கையிருக்கிறதாக பறைசாற்றுகிறது. இதற்கு நீ எப்படி பதில் சொல்லப் போகிறாய்? விடாமல் விகடன் பரிசு போடுவதால், பலர் இன்னம் விடைகள் அனுப்பிக்கொண்டிருப்பதாக நீ நினைக்கலாம். போட்டிப் பந்தயத்திற்கு ஜனங்களை இழுக்கும் மாய வலைகளில் இது ஒன்று. விடாமல் போட்டால் எதிர் பிரசாரத்தால் பலனில்லை என்று பலர் நினைக்கும்படி செய்யலாம். இதைக்கண்டு நீ ஏமாந்து போகாதே! ஜாக்கிரதை!. உன்னுடைய காசை கெட்டியாக முடிந்து வைத்துக்கொள்.

—படார்சாமி

மகாத்மா காந்தி

மகாத்மாஜீ,

நமஸ்காரம். உங்களையும், உங்கள் திருக் குமாரரையும் பார்த்ததாகவும், பேசியதாகவும், நீங்கள் அபிப்பிராயம் கொடுத்ததாக

வும் ஒரு விகடப்பத்திரிகை விளம்பரம்செய்து வயிறு வளர்க்கிறது. அப் பத்திரிகையின் ஆசிரியர் ரப்பர் பெஸாரி முதல் படுக்கையறை படங்கள் வரை பரதேச சரக்குகள் விற்கும் போவழி. இது உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். போட்டிப் பந்தயங்கள் போட்டுப் ஜனங்களின் ஒழுக்கத்தையும் செல்வத்தையும் கெடுக்கும் பாதகமான தொழிலை அவர் செய்து வருவது உங்களுக்குத் தெரியாது. தமிழ்நாட்டில் ராஜீய உணர்ச்சியைக் குறைத்து பாதய புத்தியை அதிகரித்த புண்ணியம் அதைச் சேர்ந்தது தான. தாங்கள் தமிழ் நாட்டிற்கு வரும்போது மறுபடியும அவர் தங்களைப் பார்க்கலாம. அவர் பத்திரிகையைப்பற்றி தாங்கள் சொல்லியதாக சில விஷயங்களைப் பிரசுரிக்கலாம. இம்மாதிரி போவழிகளை உங்கள சன்னதிக்கு வரவிடாமல் விரட்டவேண்டியது உத்தமராகிய உங்களுடைய கடமை.

—படார்சாமி

டாக்டர் சுப்பராயன், சென்னை.

ஐயா,

கோயம்புத்தூர் ஹரிஜன சேவை மகாநாட்டில் நீர் பேசியதைப் பார்த்தேன். இந்தியா சட்டசபையில் ஸ்ரீரங்கய்யர் கொண்டுவந்திருக்கும் மசோதாவை வைதிகர்கள் எதிர்ப்பது புத்தியற்ற செய்கை. ஒவ்வொரு ஊரிலுமுள்ள கோவிலில் ஹரிஜனங்களை விடவேண்டுமானால், மசோதாப்படி, அந்தந்த ஊரிலுள்ள ஜாதி இந்துக்களில் பெரும் பான்மையோர் வோட் கொடுக்கவேண்டும. பெரும்பான்மையோர் சம்மதியில்லாதவரையில் கோவிலுக்குள் பிரவேசிக்க முடியாது. இதை வைதிகர் ஆட்சேபிப்பது என்ன நியாயம்? ஜாதி இந்துக்களில் மெஜாரிட்டியார் சொல்லும் அபிப்பிராயத்தை, மைனாரிட்டியான வைதிகர் அமுக்திவிடப் பார்ப்பது அக்கிரமமல்லவா? இந்த விஷயத்தை மறுபடியும் கோயம்புதூர் மகாநாட்டில் நீர் தெளிவு படுத்தியதற்காக உம்மை பாராட்டுகிறேன். வைதிகர்கள் யோக்கியர்களா யிருந்தால், பெரும் பான்மை ஜாதி இந்துக்கள் அபிப்பிராயப்படி அவர்கள் நடப்பதா யிருந்தால், ரங்கய்யர் மசோதாவை ஆதரிக்க அவாகள் கட்டுப்பட் டிருக்கிறார்கள்.

—படார்சாமி

ஸ்ரீ. வித்தியாஸாகர பாண்டியா, டெல்லி.

நண்பரே,

இந்தியா சட்ட சபையில் சர். ஷுஸ்டர் லண்டன் கமிட்டி அங்கத்தினர்களை புகழ்வதும், அவர்கள் ஷுஸ்டரைப் புகழ்வதுமாக

ரிசர்வ் பாங்க் மசோதாவை கரையேற்றி வருகிறார்கள். லண்டனுக்கு அழைத்ததற்காக அங்கத்தினர்கள் சர். ஷுஸ்டரை புகழுவதும் அதற்காக ஷுஸ்டர் அவர்களை பதிலுக்கு புகழுவதும் நடைபெறுவதாக எல்லாரும் நினைப்பது இயற்கையே. இதை எடுத்துக்காட்ட நீர் ஒரு கதை சொன்னீரே, அது பலே பேஷான கதை. ஒட்டகை வீட்டு கலியாணத்திற்கு கழுதைகளை அழைத்திருந்தார்கள். போன கழுதைகள் தங்களை விருந்துக்கு அழைத்ததற்காக, ஒட்டகங்களின் அங்க அமைப்பு அழகைப்பற்றி புகழ்ந்தன. ஒட்டகங்கள் சும்மாயிருக்குமா? பதிலுக்குப் புகழவேண்டாமா? "அடடா, கழுதை இனத்தாராகிய உங்களின சாரீர இனிமையும் உயர்வும் வேறு யாருக்கு வரும்?" என்று ஸ்தோத்திரஞ் செய்தன. இந்தக் கதையை இந்தியா சட்டசபையில் சொல்லியதற்காக எனது வந்தனங்கள்.

—படார்சாமி

மாட்சிமை தங்கிய நைஜாம்.

மன்னரே,

பீரார் பிரிவினையைப் பற்றி வைசிராய் வில்லிங்டனும், தாங்களும் வெளியிட்ட அறிக்கைகளைப் பார்த்தேன். எனக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை. முன்னால் பார்த்தால் செட்டியார் குதிரை, பின்னால் பார்த்தால் முதலியார் குதிரை என்று அந்தக்காலத்திலேதான் ஒருவன் சாட்சி சொன்னதாக கேள்விப்பட்டேன். அந்த ஈரடி விளக்கெண்ணெய் விஷயம் பீரார் விஷயத்திலும் புகுந்து கொண்டதைப் பார்த்தால், எப்படி சிரிப்பு வாராமலிருக்கும்? பீரார் மாகாணத்தை உம்மிடம கொடுத்து விடவேண்டுமென்ற நீர் கேட்டீர். பீரார் ஜனங்கள் கொடுக்கக் கூடாதென்று ஆட்சேபித்தார்கள். உமது பொக்கிஷ மந்திரி சா. அகபர் ஹைதரி லண்டனில் எவ்வளவோ செய்தார். இப்பொழுது ஏற்பட்ட முடிவென்ன? அது தான் பெரிய விளக்கெண்ணெயாயிருக்கிறது! 1902ம் வருஷத்திலிருந்தே பீராரில் உமது ஆதிக்கம் இருந்து வந்தாலும், பீராரை மத்ய மாகாணத்தோடு சேர்த்து பிரிட்டிஷாரும் ஆண்டு வருகிறார்களாம. இனியும் அப்படியே நடைபெறுமென்று வைசிராய் சொல்லுகிறார். இந்த முடிவைக் கண்டு திருப்தியடைந்து விட்டதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். முன்னால் இருந்ததுபோலவே இனியும இருப்பதானால், இதில திருப்தி யடையக் கூடியது என்ன இருக்கிறது? பீரார் உங்களுக்குக் கிடைத்து விட்டதா?

—படார்சாமி

ஸ்ரீமான்கள்

டி. கே. சிதம்பரநாத முதலியார் பி. ஏ. பி. எல்,
கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி எம்., ஏ.,
ஆர். வி. சாஸ்திரி பி. ஏ., பி. எல்.,
கே. ஸ்வாமிநாதன், எம். ஏ.,
எஸ். வையாபுரி பிள்ளை பி. ஏ., பி. எல்.,
ஜே. ஆர். ரங்கராஜு


ஐயன்மீர்,

ஆனந்த விகடன் நாவல் பரிசு ஒன்று கொடுக்கப் போவதாகவும், அதற்கு நீங்கள் பஞ்சாயத்துக் காரர்களென்றும் விகடன் சொல்லுகிறது. நாவல் பரிசைப் பற்றியோ, அதற்கு நீங்கள் பஞ்சாயத்துக்காரர்களாய் இருக்கிறதைப் பற்றியோ நான் அபிப்ராயம் சொல்ல வரவில்லை. வேறு ஒரு முக்கியமான விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரவே இக்கடிதம் எழுதுகிறேன். ஆனந்த விகடன் பந்தயப் போட்டி போட்டு வருவதைப் பற்றியும், அதனால் தமிழரிடம் பந்தய புத்தி வளர்ந்து ஒழுக்கம் கெட காரணமாயிருப்பதைப் பற்றியும் நீங்கள் அறிவீர்கள். குதிரைப் பந்தயத்தையும் சூதாட்டத்தையும்விட மோசமான இந்த போட்டிப் பந்தயத்தை விடும்படி தமிழ் நாடெங்கும் கிளர்ச்சி நடந்து வருவதையும் நீங்கள் அறிவீர்கள். ஆனந்த விகடனைத் தவிர மற்றெல்லா தமிழ் பத்திரிகைகளும் இந்த பந்தய மோசடியை கண்டித்து எழுதி வருவதையும் நீங்கள் கவனித்திருப்பீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, பஞ்சாயத்தாராகிய உங்களுக்கே இந்த போட்டிப்பந்தயம் போடுவது மிகவும் வெறுப்பைக் கொடுக்கிறது என்பதை நான் அறிவேன். இவ்வளவு தூரம் தமிழ்நாட்டார் கண்டனஞ் செய்தும், ஆனந்தவிகடன் போட்டிப் பந்தயத்தை விடவில்லை. பொதுஜன நன்மைக்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமாய் போட்டிப் பந்தயம் போடும் அந்த விகடனோடு உங்கள் திருநாமங்கள் சம்பந்தப்படும்படி செய்வது நியாயமா? நீங்கள் தமிழ்நாட்டில் பொறுப்பான பதவிகளை வகிப்பவர்கள். போட்டிப்பந்தயம் போன்ற சூதாட்டங்களை தமிழ்நாட்டைவிட்டு ஓட்ட பாடுபட நீங்கள் கடமைப்பட்டவர்கள். ஆகவே, பெரியோர்களே, எந்தப்பத்திரிகையின் நாவல் பரிசுக்கு பஞ்சாயத்தாராக இருக்க நீங்கள் சம்மதித்திருக்கிறீர்களோ, அந்தப்பத்திரிகை போட்டிப்பந்தயம் என்ற சூதாட்டத்தை விட்டு விடும்படி உடனே முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்ய விகடன் சம்மதிக்காவிட்டால், பஞ்சாயத்திலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளவேண்டியது உங்கள் கடமை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

—படார்சாமி

சங்குப் புலவரின் திகைப்பு

(சங்கு எழுதுவது)



செப்டம்பர் மீ 20உ ஆனந்த விகடன் வெளிவந்ததோ இல்லையோ நமது சங்குப் புலவர், ஓசிப்பொடி போட்டுக்கொண்டு எட்டு நாளாக பொடி போட்டுக்கொள்ளாமல் சேர்த்து வைத்த இரண்டணாவை விகடன் ஏஜண்டிடம் கொடுத்து ஒரு பத்திரிகை வாங்கினார். வாங்கியதும் முதலில் அட்டையைப் பார்த்தார். பிறகு பக்கத்தைப் புரட்டிய வண்ணமாய் இருந்தார்.

இவர்தான் அண்டர் புகழும் அக்காளபட்டி ஆனந்தம் பிள்ளை அருங்குமரன் சங்குப் புலவர். நமது சங்குப் புலவர் மூதாதையர் தமிழ் வளர்த்த பாண்டிய அரசர்கள் உதவியை அதிகமாகப் பெற்றவர்கள். தரித்திரம் என்பது புலவர்களிடத்து இயல்பாயமைந்த குணமாதலின் நமது புலவருக்கும் காணி நிலமில்லை. ஆனால் கலட்பை சாத்த ஒரு சிறிய வீடு உண்டு. இருப்பினும் அவ்வூர் பொது ஜனங்களின் ஆதரவில் தன் காலத்தை எம்பெருமான் திருவருளால் கழித்து வந்தார்.

* * * *

இவருக்குத் தனக்கென்று ஒரு பைசா கடன் கிடையாது இவர் தகப்பனார் அக்காளபட்டி ஆனந்தம் பிள்ளை மாயாண்டிபுரம் சொக்கத் தேவரிடத்து சங்குப் பிள்ளையின் கலியாணத்திற்காக வாங்கிய 200 ரூ. கடன்மட்டும் ஓயாத தொல்லையாய் இருந்தது. இப்பொழுது நேயர்களுக்கு புலவர் அவ்வளவு கஷ்டப்பட்டு எட்டுக் காலணா எதற்காகச் சேர்த்தார் என்பது தெரியவரும்.

புஸ்தகத்தின் முதல் அட்டையைப் பார்த்ததும் நம்பரைப் பாடம் செய்துகொண்டார். 750 ரூ. பரிசு என்று போட்டிருக்கும் பக்கத்தை வெகு ஆவலுடன் திருப்பினர். முதற்பரிசு ரூ. 500 இரண்டாவது பரிசு ரூ. 250 என்பதையும் பார்த்தார் முதற் பரிசு ரூ. 500 விழுந்தால் என்ன செய்வது? என்று திகைத்தார்.

* * * *

மாயாண்டி சொக்கனுக்கு ரூ. 200-ம், மீதி ரூ. 300-க்கு அடுத்த வீட்டு மண்டல மாணிக்கம் முருகப்பசெட்டி ஒத்திபோடு கிறேனென்ற ஒண்ணரைக்காணி நிலத்தையும் வாங்கிவிட்டால் பாதிக் கஞ்சியாவது கஷ்டமில்லாமல் குடிக்கலாம் என்று தீர்மானித்துக்கொண்டார்.

* * * *

பஞ்சாங்கத்தை எடுத்து யோகம், கரணம், நாழிகை, இராகு குளிகை காலங்கள் எல்லாம் பார்த்தார். சந்தோஷம் பொறுக்க முடியாமல் "அமைந்தால் அப்படியல்லவோ அமையவேண்டும்—பரமசிவம்' என்று கிழக்கு முகமாக தன் இருக்கையில் விகடனும் எதிரே பேனு மைக்கூடும் இருக்க, உட்கார்ந்துகொண்டார். ஒரு காரியம் தொடங்குமுன் விக்னமில்லாமல் முடியவேண்டுமென்பதற்காக மஞ்சளில் பிள்ளையார் ஒன்றைப் பிடித்துவைத்து அதற்குத் தூப, தீப, நைவேத்திய முதலியன செய்து "வெற்றி விநாயகரே விக்கினத்தைத் தவிர்" என்று சுய கவியும் பாடிவிட்டு எடுத்தார் புலவர் பேனவைக் கையில்.

* * * *

முதலில் பார்த்த உடன் எல்லாம் அவருக்கு எளிதாகத் தோன்றிற்று. புலவர் சந்தோஷத்தில் "இந்த விகடன் அவ்வளவு கெட்டிக்காரனல்ல. நம்மைப்போல் பெரிய தமிழ்ப் புலவர்களும் போட்டிப் பந்தயம் எழுதுவார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளாமல் இவ்வளவு இலேசாகப் படம் போட்டுவிட்டானே." என்று தனக்குள் ஒரு சிரிப்பு சிரித்துக்கொண்டார்.

* * * *

"அதிர்ஷ்டமே சாமி நல்ல அதிர்ஷ்டமே
பாதி ஆயிரம் சாமி பார்த்திலேன் நானே"

என்று பாடினர். இச் சமயத்தில் மாயாண்டிபுரம் சொக்கத்தேவன் வந்துவிட்டான். என்றுமில்லாத சந்தோஷத்துடன் "வருவாய், வந்தனம், வந்தனம்" என்று கூறிவிட்டு மாயாண்டி சொக்கனை ஆசனத்தமரச் செய்தார். மாயாண்டியும் தனக்குள் "இன்று நாம் காக்கா முகத்திலே முழிச்சிருக்கோம். கட்டாயம் வந்திருச்சு பணம். அதான் சாமி சந்தோஷமாய் இருக்காறு." என்று எண்ணிக்கொண்டான்.

புலவர் மாயாண்டியைப் பார்த்து,

"மாயாண்டிபுரம் சொக்கர்தேவா மாதம் கழித்துவா
ஆயாசமில்லாமல் அடைவாய் லாபம"

என்றார். மாயாண்டித் தேவன் "என்னுங்க சாமி, வர்ற நெரமெல்லாம் சாக்குப் போக்குச் சொல்றங்களே. இன்னக்கி கிடைக்குமின்னிலே நெனெச்சேன்" என்றான்.

புலவர்:—

"அண்டர் புகழும் விகடன் ஆனந்த விகடன்
"அக்டோபர் மாதத்தில் அனுப்புவான் ஐநூறே
"அன்றுன் கடனும் அடையும் அடைவேன் லாபமே,'

என்று வெகு அழகாக தேவனும் ரசிக்கும்படி பாடினார்.



மாயாண்டித் தேவன், "பாட்டு நல்லாருக்கு சாமி! ரூபாய்க்கி என்ன வழி. சரிகோடு இருக்கு, காடு ருக்கு. ஒரு கை பாத்துக் குறேன். மயிலே மயிலே! இறகு போடுன்னு போடுமா?" என்று சொல்லிவிட்டு வெகு முறுக்காக எழுந்து போய்விட்டான்.

புலவரும் "போனால் போகிறான். கடன் கொடுத்தவனுக்கு அப்படித்தா னிருக்கும்" என்று சொல்லிக்கொண்டு பேனாவைக் கையி லெடுத்தார். முதல் படம் "கங்கணம்" என்றார். எதையோ நினைத்துக்கொண்டவர் போல் "விகடனே அதை எழுதிவிட்டான். அடுத்த படத்தைப் பார்ப்போம். பாம்பு போட்டிருக்கிறது. தோழியின் பெயர் வேண்டுமாம். அப்பொழுது எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் 'பாங்கி' என்று ஆகிறது. அகராதியில் பாங்கி என்றால் தோழி என்று இருக்கிறது.' என்று சொல்லிக்கொண்டே 'பாங்கி' என்று எழுதினார். புலவர் இப்பொழுதே தனக்கு ரூ 250 கிடைத்துவிட்டதாக எண்ணினார். இரண்டாவது படம் என்ன என்று பார்த்தார். கிரீடம் என்று இருந்தது. வந்துவிட்டது யோசனை புலவருக்கு. பதினோராவது நிகண்டு ரகரவெதுகையை இரண்டுதரம் ஒரு திருப்புத் திருப்பினார்.

"மகுடம், முகுடமெனவே மற்றும் சொல்வார் கிரீடமே" என்று கர்ஜித்தார். சரி தொலைகிறது. அடுத்ததைப் பார்ப்போம். "கொடுமை" என்றார். வடக்கைக் குறிப்பிட்டிருக்கிறான். தனக்குள் தானே "வக்கிரமா, உக்கிரமா" என்றார். பதில் ஒன்றையும் காணோம். வந்துவிட்டது கோபம், புலவருக்கு. எடுத்து விட்டார் சுபகளி. "வக்கிரமா, உக்கிரமா, வாங்கறே காசு, சிக்கிரம் சொல்லடா விகடா மடையா" என்றார். ஒருவிதமாகத் தன்னைத் தானே சமாதானப்படுத்திக்கொண்டு "சரி அடுத்ததைப்பார்ப்போம்." என்று நோக்கினார். அதிலும் சந்தேகம் வந்துவிட்டது. "குமிழ், குமிழி" என்று சொல்லிக்கொண்டே "கெட்டிக்காரன் விகடன் காசு பறிப்பதில்" என்று ஒரே நீட்டாக நீட்டினார். இருந்தாலும் புலவர் கடைசிவரை பார்ப்போம் என்று அடுத்ததைப் பார்த்தார். வந்துவிட்டது பிரமாதமாக நுனிமூக்கில். "அடே! சிஷ்யா!" என்றார் என்னை. "என்ன" என்று மிகவும் பணிவுடன் கேட்டேன். "பார்த்தாயா உன் ஆனந்த விகடனை" என்றார். "விகடனுக்கு என்ன வந்துவிட்டது!? அச்சுச் சட்டமா?' என்றேன்.

"இல்லடா இல்லை. பகல்கொள்ளை" என்றார். "ரொம்ப நல்லவனாயிற்றே. அவனுக்குமா பகலில் கொள்ளை வந்துவிட்டது. தமிழ்த்தாயிடம் ஜனவரி மாதத்திலேயே தன்னை அர்ப்பணம் செய்துகொண்டானே" என்று படபடப்புடன் கூறினேன்.

"கப். சப். சொல்லுவதைக் கேள். மனிசன், மனிதன், மானிடனடா? ஒரு படத்தில் எத்தனை காம்பிளிகேஷண்டா? எத்தனை அரை ரூபாயடா! விகடன் ஏமாற்ற மடா? அவன் என்னைத் தெரிந்து கொள்ளவில்லையடா! நானோ சிக்குபவனடா! என் பெயர் சங்குப் புலவரடா!" என்று ஒரேநீட்டாக நீட்டிவிட்டார்.

"வேண்டாம் வேண்டாம் ஷண்முகனே—வெறும் ஆசை
பண்டமிலாதே பணத்தையான் பாழாக்கேன்
மாயாண்டி சொக்கனுக்கே வகை தேடுவேனே
ஆயாசமில்லாதே தூங்குவேன் அப்பா ஷண்முகனே."

என்று பரமசிவத்தின் குமாரனிடம் முறையிட்டு "உன் சங்காத்தம் வேண்டாம்" என்று சொல்லியவண்ணம் விகடனைக் கிழித்து எறிந்துவிட்டு எழுந்தார் போஜனத்துக்குப் புலவர்.

2-ஆயிரம் ரூபாய் பரிசு.

டிசம்பர் 3உ ஆனந்த விகடன் 2-ஆயிரம் ரூபாய் போட்டிப் பந்தயத்திற்கு 1344 விடைகள் இருக்கின்றன. மற்ற விவரங்களுக்கு இன்றைய "மணிக்கொடி"யை பார்க்கவும.

கண்டதும் காதல்

:: ‘மறு கக்ஷி’ ::

(அன்று ஸ்ரீ. அப்புசாமி ஐயர் வீட்டில் நடந்த வாதத்தில் “கண்டதும் காதல் உண்டா? அல்லது இது கவிகளின் வெறும் கற்பனையா?” என்ற தர்க்கம் எழுந்தது. கவிகள் வர்ணிப்பவை அவ்வளவும் வாழ்க்கையில் நடந்து தீருமென்று நம்பமுடியாதென்பது எதிர்க்கட்சி. எதிர்க்கட்சியாளர் தமது வாதத்தை மிக நுட்பமாகவும் தெளிவாகவும் எடுத்துக்காட்டி எழுதியிருப்பதை கீழே வெளியிடுகிறோம்—ப-ர்.)

இந்த தர்க்கம் உண்டானதற்குக் காரணம், கம்பராமாயணத்தில் சூர்ப்பநகைப் படலத்தை படிக்கக் கேட்டுக்கொண்டிருந்தபொழுது ஒருவர் கேட்ட கேள்வி.

சூர்ப்பநகை மாதிரி யாராவது வாஸ்தவத்தில் கண்டதும் காதல் கொள்வார்களா? கண்டதும் காதல் என்பது உண்மைதானா? அவள் இராமனை ஒரு கணநாடிப் பொழுதே ஒரு தரம் எதிட்டுப் பார்த்தாள். அவ்வளவு தான். அவளுக்கு இராமனுடைய ஊர் தெரியாது, பேர் தெரியாது. இராமனைப்பற்றி இதற்கு முன்னமேயே அவள கேட்டதிலிருந்து இந்தக் காதல் பிறந்தது என்று சொல்லவும் இடமில்லை. இராமன் குரலைககூட அவள் கேட்டதில்லை.

“ஆகக்கூடி, வியப்பதற்கோ, அதிலும் விரும்புவதற்கோ இராமனிடத்தி லிருந்து, இதுவரை யாதொன்றும் வெளிப்படவில்லை. அப்படியானால் காதலைப் பற்றிகேட்பானேன்? ஒன்றுமே இல்லை. இப்படித் திடீரென்று காதல் கொள்வதற்கு அவளைத் தூண்டியது எது? அவனை ஒரு க்ஷணம் காண நேர்ந்தது தான். இப்படிக் கம்பரால் வர்ணிக்கப் பட்ட காதல் எந்த விதத்திலாவது வாழ்க்கையின் இயல்புக்குப் பொருந்தியது தானா?”

இவ்விஷயத்தைப் பற்றி “காந்தி”யில் சில கட்டுரைகள் வெளியாயிருக்கின்றன. அவைகளில் ஊகிக்கிறமாதிரி, காதல்என்பதே உலகத்தில் இல்லைஎன்று அவர்—அன்று கேள்வி கேட்டவர்—சொல்லவில்லை. அப்படிச் சொல்லுவதானால் இந்த விவகாரமே தலை எடுத்திருக்காது. ஒரு க்ஷணத்திலேயே, கண்ட மாத்திரத்தில் பூர்ணமாய் காதல் உண்டாய் விடுகிறதா என்கிற ஒரு கேள்வி தான். ஆகையால் காதலின் மகிமையைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் எழுத அவசி

யம் ஏற்படக் காணோம். ஒரு கவி ஒரு இடத்தில் வர்ணிப்பது யதார்த்தமா என்று வினவுவதற்கு, அந்தக் கவியே வேறொரு இடத்தில் சொல்லுவதையோ, மற்றக் கவிகள் சொல்லியிருப்பதையோ, தக்க பதிலாக அளிக்க முடியும் என்று தோன்றவில்லை. ஏனென்றால் அவருடைய கூஷி, கவிகள் எல்லாரும், காவ்யத்தின் அழகிற்காக வேண்டி, நாளடைவில் வளரும் காதலையே, ஒரு க்ஷணத்தில் ஜனிப்பதாக வர்ணிப்பார்கள் என்றும், அது அவர்கள் பூர்விகமாகத் திட்டப் படுத்தியுள்ள முறைகளில் ஒன்று என்பதும் தான். ஆகையால் ஒவ்வொரு கலையிலும் முறைகளுண்டா? அம்முறைகள் யதார்த்தத்தினின்று வேறு படுவதுண்டா? இவ்விஷயமும் அம்மாதிரியான ஒரு முறை தானா என்று சற்று விசாரிப்போம்.

ரவிவர்மா, அவனீந்திர தக்கூர் சுகலதா தேவி, இன்னும் இவர்கள் போல் யாராகட்டும், மனுஷ்யருடைய வடிவத்தை ஒரு தட்டையான கடிதத்திலேயோ துணியிலேயோ தான் வெகு அழகாய்ச் சித்திரம் எழுதுகிறார்கள். ஆகையால் மனுஷ்யருடைய முகமெல்லாம் அப்பளாம் மாதிரி, தட்டையாக யிருப்பது தான் மேலான அழகு என்று தர்க்கிக்கலாமா? ஓவியக்கலையின் போக்கு அது என்று தான் ஒத்துக் கொள்ள வேண்டும்.

நாடக மேடையில் தலைவி தன்னுடைய தோழியின் காதில் ஒரு ரகசியம் பேசுவதானால், சபையிலுள்ள அனைவரும் கேட்கும்படியாகச் சப்தமிட்டுக் கூறுகிறாள். ஆகையால் ஒருவன் தனது நண்பனுடன் அந்தரங்கமாய்ச் சொல்ல வேண்டியதைத் தெரு மத்தியில் நின்று கொண்டு கூவுவதா சரி? நடிக்கிற கலையைச் சேர்ந்த துறை அது. உலகத்திற்குப் பயன்படாது.

எந்தக் கோவிலில் கண்டாலும் நந்திகேசுவரர் படுத்துக் கொண்டபடியே தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், நந்திகேசுவரர் எழுந்து நிற்பது கிடையாதா?

நம்முடைய நாடகங்களெல்லாம் முடிவில் சந்தோஷமாகவே தீரவேணுமென்று ஒரு கொள்கை உண்டல்லவா? அதை அநேகமாக அனுசரித்தே நம்முடைய நாட்டின் நாடகாசாரியர்களும் நாடகங்களெல்லாம் எழுதுகிறார்களல்லவா? அந்த முறை மாத்திரம் யதார்த்தமாக யிருந்தால், இவ்வுலகம் விண்ணுலகத்திற்கு மேலாக இருக்குமே.

உலகத்தில் நித்தியப்படி ஏற்படும் அவசியங்களுக்காக நாம் ஏற்படுத்தியிருக்கும் முறைகளே உண்மைக்கு ஒத்துவராவே. எல்லா மனிதர்களும் சமம். யார் யாரை உபத்திரவித்தாலும் ஒரே தண்டனை. ஆகையால்

கம்பனும் வம்பனும் சமமாய் விடுவார்களா?

இங்ஙனம் ஒவ்வொரு விஷயத்திலும், முக்கியமாக ஒவ்வொரு கலைகளிலும் முறையின் போக்கு வாஸ்தவத்தை விட்டுச் சுற்று விலகி இருக்கலாம் என்று சம்மதித்துவிட்டால், இந்த கண்டதும் காதல் விஷயத்தில் ஏன் கவிகள் உண்மையைவிட்டு விலகி இருப்பார்கள் என்பதற்குக் காரணம் விரைவில் புலப்படும்.

காதலை இவ்விதம் வர்ணிப்பது தான் ரஸமுள்ள மார்க்கம். கவிகள் நமக்கு உணர்ச்சியின் விசேஷத்தைத் தூண்டி விடுவதற்காக முயலுகிறவர்கள். சாதாரணமாக ஏற்படுகிற காதலை வர்ணிப்பது எப்படி? அது ஒரு புஷ்பம் மலருவதைப் போன்றது. அதாவது இலையோ, அரும்போ என்று சந்தேகிக்கும் வண்ணமே முதலில் தோன்றி, பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு மொட்டாக வெளிப்பட்டு, சிலதினம் கழித்துப் பூவாக மலருவதை வர்ணிக்க வேணும். இதில் ரஸமுண்டாக்குவது பிரயாசம்.

ஆனால் கண்டதும் காதல் என்றாலோ, திடீரென்று மின்னலைப்போல் தோன்றி இதுவரை இருட்டில் மறைந்திருந்ததை வெளிப்படுத்தி, ஒருவருக்கொருவர் இதுவரை அறியாதவரை, இனி ஆயுசு முழுவதும் காதல் கொடியால் கட்டுப்பட்டிருப்பவர்களாக காண்பிப்பதானால் எவ்வளவு உணர்ச்சி உண்டாகிறது? அதை வாசிப்பவனும் தானும் அம்மாதிரித் தலைவனுடைய எண்ணங்களையெல்லாம் அநுபவித்து ஆனந்திக்கிறான். வேறொன்றும் முடியாது போனால், எந்தக்கவிகளும் இந்த இடத்தில் “இவன் இந்திரனா சந்திரனா?” “இவள் ரம்பையோ ரதியோ” என்று எழுதமுடியும்.

ஆனால் காதலில் இருவிதமுமுண்டு. கவிகள் வர்ணிக்கிற விதம உலகத்தில் இல்லை என்று எங்ஙனம் கூறத் துணிந்தார் என்று கேட்கலாம். அப்படி அவர் கூறவில்லை. ஆனால் இருவிதமும் உண்டானால் நம்முடைய கவிகள் ஏன் இருவிதமும் பாடவில்லை? காளடைவில் மலரும் பூவை வர்ணிப்பதற்கு ஏன் அவர்கள் முயலவில்லை? உலகத்தில் அம்மாதிரி கிடையாதா? என்று மாத்திரம் இந்த சந்தர்ப்பத்தில் ஆலோசிக்க வேணும். இருவர் சந்திக்கிறார்கள். பார்த்த மாத்திரத்தில் ஒருவரைப்பற்றி ஒருவருக்கு மனதில் நல்லெண்ணம் மாத்திரம் உண்டாகிறது. பின்னர் பலமுறை காணுவதில் அந்த எண்ணம் கரைந்துபோகலாம், அல்லது காதலாக முற்றலாம். யதார்த்தம் இத்தனைவிதம் இருக்க, இதுகளை வர்ணிக்காமல், நம்முடைய கவிகள் எல்லாம் எப்பொழுதும் கண்டதும் காதலாகவே ஏன் பாடுகிறார்கள்?—அவர்கட்கு ஒரே முறை

ஏற்பட்டிருப்பதனால் தான். கண்டதும் ஆவேஷத்தை கொஞ்சம் பாடிக் காட்டட்டுமே! காதலும் துவேஷமும் ஒரே ஹிருதயத்தைச் சேர்ந்த பாவங்கள் தானே. ஆனால் கண்டதும் ஆவேஷத்தை வர்ணிப்பதில் ரஸமில்லை. காதம்பரி என்ற கதையில் ஓரிடத்தில் தலைவன் தலைவியைக் காதல் கொண்டதற்குரிய காரணங்களைக் கவி அடுக்கிக் கொண்டே போகிறார்.

"முதலாவதாக மன்மதனுடைய ஆக்ஞையை மீறி நடக்க முடியாது. வசந்த காலத்தின் வனப்பு யாவரையும் மயக்கச் செய்தது. அவர்கள் வசித்து வந்த மலைச்சாரலிலோ இயற்கை அழகு கொட்டி இருந்தது. வாலிபம் சுகத்தையே நாடிற்று. காமத்தையோ கட்டிப்பிடிக்க முடியாது" என்று இப்படி பல காரணங்களைச் சொல்லிவிட்டு, எல்லாம் அறிந்த பாணகவி, எல்லாவற்றிக்கும் மேலாக கடைசியாக ஒரு நியாயத்தைச் சொல்லுகிறார். அதென்னவென்றால்— "அந்தந்த விஷயம் எல்லாம் அந்தந்த மாதிரிதான் முடிந்து தீரவேண்டும்" என்று. அது தான் அவருடைய அபிப்பிராயம். கதையில் தலைவனாக ஒருவனிருப்பவன் தலைவியை காதல் கொள்ளாவிடில் கதை எங்ஙனம் மேல் நடக்கும்? அதனால் காதல் நேர்ந்ததாகச் சொல்லுகிறார். அந்த அப்பிராயத்தை நாம் இன்னும் ஒருபடி வளர்த்துக்கூட்டி கிரகிக்க வேண்டியதுதான். கதையில் தலைவனாக ஒருவனிருப்பவன் தலைவியைக் கண்டதும் காதல்கொள்ளாவிடில், கதை எங்ஙனம் வாசிப்பவரின் மனதைக் கவரும்?

நம்மை ரஸிகர்கள் அல்ல என்று எங்கே மற்றவர்கள் சொல்லிவிடுவார்களோ என்ற கவலையை விட்டுவிட்டு பிறகு ஆலோசித்தால் மட்டுமே, இக்கக்ஷியில் ஏதேனும் உண்மை உண்டெனில் அது புலப்படும்.

இதுவரை துலக்கியபடி கவிகள் ஒரே முறையாக எழுதுகிறார்கள் என்று ஒருவர் சம்மதித்தால், அவர் அடுத்த வாக்கியத்திற்கும் சம்மதிக்கவேணும். அது யாதெனில், இவ்விஷயத்தில் உண்மையை அறிய வேணுமென்றால், கவிகள் வர்ணிப்பதையே பிரமாணமாக அங்கீகரிக்க முடியாதாகையால், உண்மையை கண்டுபிடிக்க வேறே ஒரே மார்க்கம்தானுண்டு. மனுஷியர்களுடைய அநுபவத்திலும் இம்மாதிரி கண்டதும் காதல் சம்பவிக்கிறதுண்டா என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வளவுதான் இந்தத் தர்க்கத்தை ஆரம்பித்தவர் சொன்ன வார்த்தைகள். மனுஷ்யர்களுடைய அநுபவம் பொய் என்று சொல்லவில்லை. காதலின் மகிமையையும் சந்தேகிக்கவில்லை.

மந்திரவாதியின் தந்திரம்



மந்திரவாதி கைத் துப்பாக்கியிலிருந்து ஒரு அம்பு விடுகிறான். அந்த அம்பு எதிரிலுள்ள பெண்ணின் மார்பில் ஊடுருவிப் பாய்ந்து பின்னாலுள்ள பலகையை துளைத்துவிட்டது. ஆனால் பெண் சாகவில்லை. சிரித்துக்கொண்டு நிற்கிறாள். இது எப்படி நடக்கிறது?

மந்திரவாதி விடும் அம்பு வளையும் அம்பு. அது பெண் மார்பிலுள்ள துணி மடிப்பில் சுருண்டு தங்கிக்கொள்ளுகிறது. மந்திரவாதி அம்புவிட்ட அதே சமயத்தில், அந்தப் பெண் கையை ஆட்டுகிறாள். அதனால் முதுகில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிற அம்பு பின்னாலுள்ள பலகையில் பாய்கிறது. முன்னால் மார்பிலிருந்து கொஞ்சம் நாடா வெளியே வந்துவிழுகிறது. பார்க்கிறவர்களுக்கு அம்பு மார்பைத் துளைத்துப் போய் விட்டதாகவும், அதில் கட்டப்பட்டுள்ள நாடா முன்னால் தொங்குவதாகவும் தெரிகிறது.

அடுத்த "காந்தி" மலரில் மற்றொரு தந்திரம் வெளிவரும்.



உங்களுக்குத் தெரியுமா?

முஸ்லிம்கள் முற்போக்கு.

மொத்தமாகப் பார்க்குமிடத்து இந்தியாவில் எழுத்து வாசனையுள்ளவர்கள் மிகவும் குறைவு. 100-க்கு 92 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. இவ்விஷயத்தில் உலகத்தில் நாம்தான் முன்னணியிலிருக்கிறோம். இங்கு படித்தவர்கள் 100-க்கு 8 பேர் தான். 'உழக்கில் கிழக்கு மேற்கு' பார்ப்பது' போல் ஹிந்துக்களில் தான் படித்தவர்கள் அதிகமா அல்லது முஸ்லிம்களிலா என்று சிலர் ஆராய்வதுண்டு. முஸ்லிம்களைவிட ஹிந்துக்களில் தான் எழுத்து வாசனை கண்டவா அதிக மென்றே எல்லோரும் என்னுவார்கள். ஆனால் தவறு. பல மாகாணங்களில் முஸ்லிம்களில் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அதிகமாயிருப்பதாகத் தெரிகிறது. அந்த மாகாணங்களில் ஹிந்துக்களில் ஜனத்தொகை 1000-க்கு எத்தனை பேர் படித்தவர்கள், முஸ்லிம்களில் 1000-க்கு எத்தனை பேர் என்ற விவரம் கீழே தருகிறோம்.

மாகாணம்.	ஹிந்துக்கள் ஆண்.	பெண்.	மொத்தம்.	முஸ்லிம்கள் ஆண்.	பெண்.	மொத்தம்.
ஆஜ்மீர்	164	23	187	196	28	224
ஸி. பி. பிரார்	118	9	127	265	35	300
மதராஸ்	182	26	308	229	21	250
ஐக்கிய மாகாணம்	91	9	100	97	16	113
பரோடா	315	72	387	420	79	499
ஹைதராபாத்	70	8	78	205	35	240
கொசசி, திருவாங்கூர் புதுக்கோட்டை etc.	221	21	242	336	15	351

சென்சஸ் விசேஷம் !


விஸ்தீர்ணத்தில் பெரியது—பர்மா.
(233,429 சதுர மைல்)
ஜனத் தொகையில் பெரியது—வங்காளம்.
(50,144,002)
அதிகமான சாவுகள்—மத்திய மாகாணம்.
(1000-க்கு 33.5)
மிகவும் குறைவான மரணம்—ஆசாம் மாகாணம்.
(1000-க்கு 23.8)
அதிகமான ஸ்திரீகள்—சென்னை மாகாணம்.
(1000 ஆண்களிருந்தால் 1025 பெண்கள்)
பெண்கள் மிகவும் குறைவு—பஞ்சாப்.
(1000 ஆண்களுக்கு 831)
கிழவர்கள் அதிகம்—பர்மா.
(50 வயதுக்கு மேல்பட்டவர்கள்
ஜனத் தொகையில் 100-க்கு 11.3-க்கு மேல்)
சிசு மரணம் குறைவு—பர்மா.
(100-க்கு 23 வீதம்)
விதவைகள் அதிகம்—வங்காளம்.
(1000 பெண்களில் 226 விதவைகள்)
பைத்தியக்காரர்கள் அதிகம்—பர்மாவில்.
(லக்ஷத்துக்கு 88 பேர்)
படித்தவர்கள் அதிகம்—பர்மாவில்.
(1000-க்கு 369 பேர்)
குருடர்கள் அதிகம்—அஜ்மீர் மீவார்.
(லக்ஷத்துக்கு 386 பேர்)

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதியவர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக்கப்படும்.

பத்திரிகை வெளியாகி ஒரு வாரத்திற்குள் பரிசுப் பணம் வராவிட்டால், உடனே ஆபீசுக்கு கடிதம் எழுதவும்.





"அவனைப் பிடித்து உடனே சுட்டுவிடு' —ஸ்டாலின்.

ஸ்டாலின் மனைவி.

(பட்டோலை)

ஸ்டாலின் விடுதலை யடைந்தார். ஆனால் போலீசாரோ முன்னிலும் பன் மடங்கு தீவிரமாக இவரைத் தொடர்ந்து வந்தனர். எப்படியாவது இவரை மறுபடியும் சிறையிலடைத்து விட அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டனர்.

நாடியாவும் சும்மா விருக்கவில்லை. ரகசியப் போலீஸ் இலாகாவில் பெரிய உத்தியோகஸ்தரிடம் சிநேகம் செய்துகொண்டு அவர்களுடைய உத்தேசங்களையும் ரகசியங்களையும் உளவு அறிந்து ஸ்டாலினுக்கு அவ்வப்போது அறிவித்து வந்தாள். இம்மாதிரி நடத்தையில் சகஜமாக ஏற்படக்கூடிய விபரீதம் நாடியா விஷயத்திலும் ஏற்பட்டது.

சந்தேகம் என்ற தீப்பொறி சாசோவின் நெஞ்சில் விழுந்தது. "இவள் எப்படிப் போலீசாரை சிநேகம் செய்துகொண்டாள்? இவள்

போலீசாருடன் நெருங்கக் காரணமென்ன?" என்று யோசித்தான். அவள் போகும் இடங்களிலெல்லாம் ரகசியமாக அவளைத் தொடர்ந்து வந்தான். ஒரு போலீஸ் உத்தியோகஸ்தருடன் மிகவும் நெருக்கமாகப் பழகுவதைக் கண்டான். ஒரு ஹோட்டலில் நாடியாவும் போலீஸ் உத்தியோகஸ்தரும் சரசமாக தமாஷ்கள் பேசிக்கொண்டு சாப்பிடுவதைப் பார்த்தான். அவ்வளவுதான்.

அடுத்த நாள். அந்த போலீஸ் உத்தியோகஸ்தரின் பிரேதம் ஒரு சந்தில் கிடக்கிறது. கொலை செய்தது யார்?

இந்த உத்யோகஸ்தர் ஸ்டாலினை கண்காணித்து வந்தவர்; ஆகையினால் ஸ்டாலின்தான் அவரை கொலை செய்திருக்கவேண்டும் என்று போலீசார் கருதினர். ஸ்டாலின் கைதி செய்யப்பட்டார். ராணுவக் கோர்ட்டில் விசாரணை நடப்பதாக இருந்தது. அந்தக் கோர்ட்டின் தலைவரான ராணுவ அதிகாரி சற்று நியாயபுத்தி யுள்ளவர். ஸ்டாலின்தான் கொலை செய்தார் என்று நிச்சயம் செய்ய ஒரு ருசுவுமில்லை. வெறும் சந்தேகத்தில் ஒருவனை எப்படி தண்டிப்பது?

இவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கிறார் ராணுவ அதிகாரி. சேவகன் வருகிறான். யாரோ ஒரு சிறு பெண் மிகவும் அவசர காரியமாக தளகர்த்தரைப் பார்க்க விரும்புவதாக அறிவிக்கிறான். "சரி. உள்ளே வரட்டுமே."

மகா சுந்தரவதி. சிறு குழந்தை. முகத்தைப் பார்த்தால் மனம் பிரமிக்கிறது. "என்ன அம்மா? நீயா என்னைப் பார்க்க வந்திருக்கிறாய்? என்ன வேணும் அம்மா?" என்று கேட்கிறார் தளகர்த்தர்.

"எனக்கு வேண்டியது ஒரே ஒரு காரியம்தான். ஜோசப் ஜுகாஷ்விலி என்ற ஒருவரை, போலீஸ் உத்தியோகஸ்தரைக் கொலைசெய்ததாக, சந்தேகத்தின் மீது கைதியாக்கி யிருக்கிறார்கள். அவர் நிரபராதி. அந்த உத்தியோகஸ்தரைக் கொன்றது நானே!"

"என்ன! நீயா அந்த உத்யோகஸ்தரைக் கொன்றாய்? நம்பவே முடியாது. நீ எப்படி இவ்வளவு கொடுமையான ஓர் செயலில் இறங்கமுடியும்? நீ அவனைக் கொல்வதற்கு என்ன காரணம் இருக்க முடியும்!"

"நான் போகும் இடமெல்லாம் என்னைத் துரத்திக்கொண்டிருந்தான். ஒரு நாள் அந்தத் தெரு வழியாகப் போகும்போது ஒரு ஹோட்டலுக்கு அழைத்துக்கொண்டு போனான். அங்கிருந்து என்னை வேறு எங்கோ கொண்டுபோக முயன்றான். நான் மறுத்தேன். சத்தமிட்டால் என் குடும்பம் முழுவதையும் கைதுசெய்து விடுவதாய் பயமுறுத்தினான்.! அவ்வளவுதான், எனக்கு என்ன

செய்வதென்று தெரியவில்லை. கையில் ஒரு கத்தி யிருந்தது. ஒரே குத்தாக குத்தினேன்.

"நான் இதை வெளியே சொல்லாமலே தப்பித்துக் கொள்வேன். ஆனால் ஒரு நிரபராதியைக கைது செய்திருப்பதாக அறிந்தேன். தாங்கள் காகஸஸ் பிரதேசத்தி லிருந்தபோது தங்களைத் தெரியும் நியாயம் இன்னதென் றறியாமல் எதுவும் செய்யமாட்டீர்களென்று எனக்குத் தெரியும்."

"உன் வயது என்னமமா ?"

"பதினான்கு" என்று ஒரு வயதைக் கூட்டிச்சொன்னாள். "நான் தான் நிஜமாகச சொல்கிறேன். நானே தான் அவனைக்கொன்றது. ஜுகாஷ்விலியை நீங்கள் விடுதலை செய்யவேண்டும்! என்னைத் தான் தண்டிக்கவேணும்."

தளகர்த்தர் பாடு திண்டாட்டமாய் விட்டது. 14 வயதுக் குழந்தை இந்தக் காரியத்தைச் செய்திருக்குமா? ஆனால் ஜார்ஜியா தேசத்துப் பெண்கள் எவ்வளவு துணிவான காரியத்தையும் செய்திருக்கவும் கூடும்; அப்படியே இந்தக் குழந்தை செய்திருந்தாலும் தான் இதை ஏன் தண்டிக்கவேண்டும்?" என்று ஆலோசித்தார்.

"நீ சொல்வது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. எப்படியானாலும் சரிதான். நீ என்னிடம் கூறியதை ஒருவரிடமும் சொல்லாதே. அந்த விஷயத்தையே மறந்துவிடு. நானும் மறந்துவிடுகிறேன். ஜுகாஷ்விலிமீது ருஜு ஒன்றுமில்லை. அவனை விடுவிக்கத்தான் போகிறேன். உன்னை இரும்புக் கதவுக்குள் அடைத்துப் பார்க்க எனக்கு இஷ்டமில்லை. போய்விடு" என்று கூறினார்.

ஜுகாஷ்விலி (ஸ்டாலின்) விடுதலை யடைந்தார். ஆனால் வேறொரு குற்றத்துக்காக சிறைப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

நாடியா தன்னுடைய உயிரைக் காப்பாற்றினாள் என்பது உண்மையே; ஆனாலும் இந்தச் சிறு பெண் ராணுவ அதிகாரியை வசப்படுத்தியது எப்படி? போலீஸ் அதிகாரிகள் தமது ரகசியத்தை யெல்லாம் இவளிடம் கூறும்படி ஏற்பட்டது எப்படி? என்ற எண்ணம் ஸ்டாலினின் நெஞ்சை அறுத்துக்கொண்டே இருந்தது. தான் ஸைபீரியாவிலிருந்து திரும்பினால் முதலில் நாடியாவைக் கொலை செய்துவிட்டுத்தான் மறுவேலை என்று கூட மனதில் நிச்சயித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு நாள் கைதிகள் இருந்த ஊரில் ஒரு பெரிய பரபரப்பு பீட்ரோகிராடிலிருந்து ஒரு தோழர் வந்திருக்கிறார்; அவரிடமிருந்து ரஷியாவைப்பற்றிய செய்திகளை அறியலாம் என்று எல்லோரும் உற்சாகமாக இருந்தனர்.

கடைசியாக அந்த தோழர் அங்கு வந்து சேர்ந்தார். வந்த அன்று தங்குவதற்கு இடமில்லை. குளிரோ நடுக்குகிறது. சரி, ஸ்டாலினுடைய குடிசையிலேயே தங்கட்டும் என்று ஏற்பாடாயிற்று.

அங்கு போய்ச் சேர்ந்ததும் "தோழர்" தன் உடைகளைக் களைந்தெறிந்தார். யார் அது? ஒரு பெண். ஸ்டாலின், வெகு நாள் யாரைக் காதலித்தானே, இவ்வளவு காலமாக யார்மீது சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தானே அதே நாடியா!

பேச்சுமில்லை. மூச்சுமில்லை. என்ன சொல்லமுடியும்? "நீ உண்மையாக என்னைக் காதலிக்கிறாயா? அல்லது என்னை வஞ்சித்து வேறொருவருடன் உறவு கொண்டாயா?" என்று கேட்க முடியுமா! கேட்டால் உடனே அவள் மனம் கொதித்து மறைந்துவிடுவாளோ? என்று திகைத்தார்.

அவள்தான் முதலில் வாயைத் திறந்தாள். சோசோவின் பக்கத்தில் போனாள். கழுத்தைச் சுற்றித் தன் கையை போட்டாள். அவன் முகத்தை இடைவிடாது சிறிது நேரம் நோக்கினாள். குனிந்தாள். அவளுடைய உதடு அவனது நெற்றியில் பட்டது. இரவு முழுதும் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். யுத்தம் ஆரம்பித்தது, புரட்சி இயக்கம் பரவியது, எந்த நிமிஷமும் புரட்சித் தீ பற்றக்கூடிய நிலைமையில் ரஷியா வந்தது, இந்த இயக்கத்தில் தான் செய்த வேலைகள், எல்லாவற்றையும் உரைத்தாள். சோசோ தன் கேள்வியைப் போடவே இல்லை!

மூன்றுநாள் தங்கினாள். அந்தப் பனிக்கட்டிப் பாலைவனத்திலிருந்து விடை பெற்றுக்கொண்டாள்.

சோசோ வாயைத் திறந்தான். "நல்ல காலம் வரும். நானும் ஒரு நாள் ரஷியாவுக்கு வருவேன். இவ்வளவு காலமாக இருந்ததுபோல் கோழையாக இருக்கமாட்டேன். உன்னை என் உயிராக மதிப்பேன்." என்றான்.

* * * *

கடைசி ஜாரின் முடி வீழ்ந்தது. நெடுநாளாக நாடு கடந்து சைபீரியாவிலும், வெளிநாட்டிலும் இருந்த புரட்சிக்காரர்களெல்லாரும் பிட்ரோகிராட் நகரில் பகிரங்கமாக தலைவர்களாய் விளங்கினர். பிட்ரோகிராடில் யார் முக்கியஸ்தர்கள்? லெனின், ஸ்டாலின், டிராட்ஸ்கி.

தலைநகரம் மாஸ்கோ. நாடியா ஸ்டாலினின் காரியதரிசி. இருவரும் சேர்ந்தே வேலை செய்கிறார்கள்; இருவரும் பல விஷயங்களைப்பற்றி விவாதிக்கிறார்கள். காதலைப்பற்றி ஒரு பேச்சுக்கூட இல்லை.

இரண்டு பேருக்கும் இடையே இருந்த காதலுக்கு அளவு

கிடையாது. ஸ்டாலினுக்கு அதைப்பற்றிப் பேச தைரியம் வரவில்லை. நாடியாவோ பெண். காதலை உரைப்பது கவுரவக் குறைவு.

சோவியத்துக்குத் தலைவர் லெனின். ஸ்டாலினும் டிராட்ஸ்கியும் அவருக்கு முக்கியமான மந்திரிகள். இவர்கள் இருவருக்கும் இடையே ஒத்து வரவில்லை. டிராட்ஸ்கி லெனினுக்கு இறுதியாக ஒரு எச்சரிக்கை செய்தார். "ஸ்டாலின் ஒழியவேண்டும், இல்லாவிட்டால் நான் ஒழியவேண்டும்" என்று டிராட்ஸ்கி கூறினார்.

லெனின் டிராட்ஸ்கியின் விருப்பத்துக்கு ஒருவாறு இணங்கினார் என்றே சொல்லலாம். ராஜ்ய காரியமாக வெளி மாகாணத்துக்குப் போன ஸ்டாலினைத் தலைநகருக்கு அழைத்துவரும்படி ஆள் அனுப்பினார்.

நாடியாவுக்கு எல்லா விஷயமும் தெரிந்தது. உடனே ஸ்டாலினுக்கு எச்சரிக்கை செய்தாள். "டிராட்ஸ்கி உன்னைத் தொலைப்பதற்குமுன் நீ டிராட்ஸ்கியைத் தொலைத்துவிடவேண்டும்" என்று கூறினாள். ஆனால் அவன் கவனிக்கவில்லை. மாஸ்கோவுக்குத் திரும்பினான்.

ஸ்டாலின் முகத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டது. அவன் மனதில் கொண்ட காதலும், அதனுடன் கலந்து அவனது நெஞ்சை அறுத்துக்கொண்டிருந்த சந்தேகமும் யாருக்குத் தெரியும்? எதைக் கண்டாலும் வெறுப்பு. சிறிய விஷயங்களிலும் அளவில்லாத கோபம். இந்த இரண்டும் அவனிடம் புதிதாய்த் தோன்றின.

எத்தனை நாள் மௌனம் சாதிக்க முடியும்? ஒருநாள் நாடியாவை அருகில் அழைத்தான்.

"நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளப்போகிறேன்" என்றான்.

அடுத்த நாள் விவாகமும் நடந்துவிட்டது.

நாடியா ஆபத்தின் மத்தியில் வளர்ந்தவள். பயமே அவளது காலில் செருப்பாயிருந்தது. ஆகையால் இப்பொழுது அவள் நெஞ்சில் பயமென்பதே கிடையாது.

ஸ்டாலின்மீது அவளுக்கிருந்த காதலுக்கு எல்லை கிடையாது. ஸ்டாலினை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதே தனது வாழ்க்கையின் கருத்தாய்க் கொண்டவள்.

சர்க்கார் ஆபீசில் ஓர் அறையில் இருந்தால் நாட்டின் நிலைமை தெரியாது. அதற்காக ஓர் பள்ளிக்கூடத்தில் மாணவியாகச் சேர்ந்தாள்.

ஸ்டாலினிடம் உள்ள குற்றங்கள் நாடியாவுக்கு நன்றாய்த்

தெரியும். சில முக்கியமான சந்தர்ப்பங்களில் பின்னின்று ஊக்கம் கொடுக்கவோ எச்சரிக்கை செய்யவோ ஒருவர் இருக்க வேண்டியது அவசியம் என்று உணர்ந்தாள். சரியான சமயத்தில் அவனது விரோதிகளை ஒழித்துவிடும்படி ஸ்டாலினைத் தூண்டாவிடில் அவனது விரோதிகள் அவனை ஒழித்துவிடுவார்களென்பது அவளுக்குத் தெரியும்.

இதற்கிடையே லெனினுக்கும் ஸ்டாலினிடம் சற்று வெறுப்பு தோன்ற ஆரம்பித்தது.

காலச் சக்கிரம் சுழன்றது. ஒருநாள் திடீரென்று லெனினைக் கொலை செய்ய ஒருவன் யத்தனித்தான். ஆனால் அது பயன்பெறவில்லை. இதற்கிடையே பொதுவுடமைக் கட்சியில் பல பிரமுகர்களுடைய ஆதரவு ஸ்டாலினுக்கு கிடைத்தது.

லெனினுக்கு ஸ்டாலின்மீது நம்பிக்கை குறைந்து வந்தது. உடம்பு சௌக்கியமில்லாதபோது அவர் எழுதிவைத்த "உயிலில்" "மத்தியக் கமிட்டி காரியதரிசிப் பதவியிலிருந்து ஸ்டாலினை நீக்கிவிடுவது நலம்" என்று எழுதிவைத்திருந்தார். அவர் இறந்த பிறகு இந்தக் கடிதத்தை உடைக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

அகஸ்மாத்தாக இந்தக் கடிதத்தில் அடங்கி யிருந்த செய்தி ஸ்டாலினின் மனைவிக்குத் தெரிந்தது.

இதைப்பற்றி ஒருவரிடமும் சொல்லவில்லை. லெனின் இறந்து சில நாள் வரை இந்தக் கடிதம் வெளி வராமல் இருப்பதற்கு சூழ்ச்சி செய்தார். பிறகு ஸ்டாலினின் எதேச்சாதிகாரம் உறுதியான பிறகுதான் இந்தக் கடிதம் உலகத்துக்குத் தெரிந்தது.

* * * *

சர்வாதிகாரியான ஸ்டாலின்மீது நாடியாவுக்கு எவ்வளவு செல்வாக்கு இருந்தது என்பது உலகத்துக்குத் தெரியாது. அவள் சாதாரணமான ஓர் மனைவியா அல்லது அரசியல் தோழியா, மந்திரியா என்பது உலகத்துக்குத் தெரியாது. "உருக்கு மனிதன்" என்று பெயர்பெற்ற இதே ஸ்டாலின் சில சமயங்களில் நாடியா முன் மண்டிபோட்டு "நாடியா! உண்மையிலேயே நீ என்னைக் காதலிக்கிறாயா? எனக்கு உன்மீது எவ்வளவு மோகம் இருக்கிறதோ அதே போன்ற மெய்மறந்த மோகம் உனக்கு என்னிடமிருக்கிறதா?" என்று சொல்வான், என்பது உலகம் அறியாது.

பொது விஷயத்தில், அரசியல் கொள்கையில் இருவருக்கும் அபிப்பிராய பேதங்கள் உண்டு. அனாவசியமாக ரத்தம் சிந்துவதில் நாடியாவுக்கு இஷ்டம் கிடையாது. ரஷியாவில் பல ராஜீயக்

கைதிகளை கொலை தண்டனையிலிருந்து காப்பாற்றிய பெருமை நாடியாவுக்கே உரித்தாகும்.

இது விஷயமாகப் பல வதந்திகள் இருக்கின்றன. ஒரு தடவை லுபியாங்கா சிறைச்சாலைக்குச் சென்று ஜெயில் அதிகாரியிடம் சொல்லி ஒரு கைதியை வெளியே அனுப்பினுள். இந்தச் செய்தி ஸ்டாலினுக்கு எட்டியது. உடனே அவன் தன் மனைவியை மிகவும் கடிந்து பேசினுனும்.

"உன்னை ஜாரின் போலீசார் வேட்டையாடிக் கொண்டிருந்த போது நான் உன்னைக் காப்பாற்றவில்லையா? ஆகையால் உன் போலீசார் கொல்ல நினைக்கும் கைதிகளையும் காப்பாற்ற எனக்கு உரிமையுண்டு" என்று நாடியா கூறினுளாம். ஸ்டாலின் என்ன செய்வான். இயற்கையான தண்டனைதான்; இரண்டு கைகளையும் வாரி முத்தமிடுவது.

* * * *

இப்படியே காலம் போய்க்கொண்டிருந்தது. ஸ்டாலினை ஆட்டி வைப்பது நாடியா தான் என்று எங்கும் பேச்சு ஆரம்பமாயிற்று. பல விதமான வேறு வதந்திகளும் பரவி வந்தன.

* * * *

சர்க்கார் ஆபிசிலிருந்து ஸ்டாலின் வெளியே பார்க்கிருர். நாடியா அவன் பக்கத்திலேயே நிற்கிருள். இரண்டுபேரும் ஏதோ பேசிக்கொண்டிருக்கிருர்கள். முற்றத்தின் வழியாக ஒருவன் போய்க் கொண்டிருக்கிருன்.

"நில் அங்கே! நீயார்? எங்கு வந்தாய்?" என்கிருர் ஸ்டாலின்.

"தோழர் ஸ்டாலின் ஆபீசில் டெலிபோனில் ஏதோ கெட்டுப் போயிருக்கிறதாம். அதை சரிபண்ண வந்தேன்."

"என்ன? என் ஆபீசிலா! டெலிபோன் சரியாய்த்தானே இருக்கிறது" என்கிருர் ஸ்டாலின்.

உடனே பக்கத்திலிருந்த சிப்பாய்களுக்கு உத்தரவு. "அவனைப் பிடித்து உடனே சுட்டுவிடு. ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு இதற்கு முன்னமேயே இரண்டுபேர் வந்திருக்கிருர்கள். இதில் ஏதோ மாயம் இருக்கிறது."

நாடியா தன் கணவனின் கையைப் பிடித்துக்கொண்டு, "சோசோ நீ என்ன இப்பொழுது........."என்கிருள்.

ஸ்டாலின் அப்படியே அவளது கையை உதறித் தள்ளுகிருன். "பேசாதே! நான் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியும். அவன் என்னையோ உன்னையோ கொல்ல வரவில்லை என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"சோசோ".

"பேசாதே தெரிகிறதா"

ஸ்டாலின் அங்கிருந்து உள்ளே போய்விட்டான். சிப்பாய்கள் அந்த அன்னியனைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறார்கள். நாடியா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

தன் அறைக்குள் போனாள். வெகுநாளாக ஏற்பட்ட நம்பிக்கைகளும் மத பக்தியும் அவளைவிட்டுப் போகவில்லை. அறையில் ஓர் சிறு விக்கிரஹம் இருக்கிறது. அதன் முன் விளக்கு எரிகிறது. அதன்முன் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து கிடக்கிறாள். "எவ்வளவு தியாகங்கள் செய்தேன். அவனுடைய நலத்தையே பெரிதாகக் கருதினேன். உலகில் எந்த சுகத்தையும் துச்சமாக மதிக்கிறேன். அப்படியிருந்தும் ஒரு சிறு விஷயத்தில் கூட தன் முடிவை மாற்றிக்கொள்ள அவனுக்கு மனம் வரவில்லையே" என்று நினைக்கிறாள்.

இந்த வாழ்க்கைதான் என்ன? என்ன வாழ்க்கை? எத்தனை துயரங்கள்?

பிறகு—பிறகு என்ன? ஒன்றும் தெரியாது. ஊரிலெல்லாம் ஓர் வதந்தி. நாடியாவுக்கு உடம்பு சௌக்கியமில்லை; சாகும் தருவாயில் இருக்கிறாள்; ஆய்விட்டது, மூச்சும் நின்றுவிட்டது.



மூன்று நாட்களுக்குப் பிறகு மாஸ்கோவில் ஓர் மரண ஊர்வலம். சவப் பெட்டியில் சிகப்புக்கொடி. அதன் பின்னால் ஜார்ஜீயா தேசத்து மனிதன் ஒருவன் மௌனமாய் நடந்து செல்கிறான். தலையில் ஹாட் இல்லை. தலை குனிந்திருக்கிறது. அவனே ஸ்டாலின்.

:: புதிய ஆபத்து ::

(நா. சிவராமன்)

ரூபாயின் நாணயமாற்று விகிதம் 18 பென்சாக இருக்கவேண்டுமா, அல்லது 16 பென்சாகவோ இன்னும் குறைவாகவோ இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி இப்பொழுது ஒரு விவாதம் நடந்துவருகிறது. தினசரி பத்திரிகைகளில் இதைப்பற்றி பத்தி பத்தியாய் வியாசங்கள் வருகின்றன.

நாணயத்தின் மதிப்பைக் குறைத்தால் என்ன நன்மை என்று பலர் ஆலோசிக்கலாம். பக்கத்திலிருப்பது அமெரிக்க டாலரின் படம். இது இந்தியாவில் பிரசுரமான ஓர் அமெரிக்கமோட்டார் விளம்பரம்.



"டாலர் உடைந்துவிட்டது!

செவர்லெட் கார் விலை ரூ. 1200 குறைவு!" என்பது அந்த விளம்பரத்தின் சுருக்கம்.

மேலே உள்ள படத்தைப்பார்த்தால் அமெரிக்காவின் நாணயம் இப்படி உடைந்துபோய் விட்டதே என்று அமெரிக்கரைப் பார்த்து இரக்கம் உண்டாகலாம்! ஆனால் உண்மையில் அவர்கள் இதைப்பற்றி சந்தோஷமாக விளம்பரம் செய்கிறார்கள் என்பதை கவனிக்கவேண்டும்.

"டாலர் உடைந்தது" என்றால் என்ன அர்த்தம்? 1933 ஏப்ரல் மாதம் 100 டாலருக்கு சென்னையில் 380 ரூ விலை இருந்தது. அக்டோபரில் 100 டாலர் (தங்க டாலரல்ல) விலை ரூ 305 ஆய்விட்டது. இதனால் அமெரிக்காவுக்கு என்ன சௌகரியமென்பதைப் பார்ப்போம். ஏப்ரல் மாதத்தில் அமெரிக்க செவர்லட்-செடன்

மோட்டாரின் விலை ரூ. 4971. அக்டோபரில் 3695 ரூபாயாக ஆய் விட்டது. அமெரிக்காவில் பழய விலைதான். ஆனால் இந்தியாவி லிருப்பவர்களுக்கு இப்பொழுது 1276 ரூபாய் விலை குறைவாகத் தோன்றுகிறது. அமெரிக்க கார்கள் இங்கு விற்பனையாவதற்கு இது மிகவும் உதவியாக இருந்தது.

அமெரிக்கா தன் நாணயத்தின் மதிப்பைக் குறைத்துக்கொண்ட தால் அது ஏற்றுமதியை அதிகமாக்கிக்கொள்ள முடிந்தது, என்பதை நாம் இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இப்பொழுது அமெரிக்க டாலர் விலை 100 டாலருக்கு 275 ரூபாயாக இருக்கிறது. அதே மோட்டாரை இன்னும் 300 ரூ குறைத்து விற்கமுடியும். ஆதலால் வெளிநாட்டு நாணயங்களை அனுசரித்து நம் நாணயத்தின் மதிப்பையும் குறைக்காதிருந்தால் யாருக்கு லாபம்? அயல் நாட்டார் தமது பொருள்களை ஏராளமாக விற்கமுடியும்; அவர்களுக்கு லாபம். இங்கும் வெளிநாட்டுச் சாமான் களை வருத்துகிறவர்களுக்கு லாபம்.


இந்திய மில்களுக்கு ஆபத்து

அமெரிக்க டாலரின் மதிப்புக் குறைந்துவிட்டதால் பிரிட்டனி லுள்ளவர்களுக்கும் ஜப்பானிலுள்ளவர்களுக்கும் அமெரிக்க பருத்தி மிகவும் மலிவாய்க் கிடைக்கும்.

பிரிட்டன் அமெரிக்காவில் பருத்தி வாங்கி இந்தியாவில் துணி யை விற்கிறது. இதில் இப்பொழுது பிரிட்டன் அதிகலாபம் சம் பாதிக்கமுடியும். உதாரணமாக அமெரிக்காவில் 1 ராத்தல் 11 சென் டாக பஞ்சு வாங்கி இந்தியாவில் ராத்தல் 10 அணாவாக துணி விற்ப தாக வைத்துக்கொள்வோம். சென்ற ஏப்ரல் மாதத்தில் பிரிட் டிஷ் நாணயக்கணக்கில் பார்த்தால் பஞ்சு $5\frac{3}{4}$ பென்சுக்கு வாங்கி துணியை $11\frac{1}{2}$ பென்சாக விற்று வந்தது எனலாம். வர்த்தகத்தி லும் கைத்தொழிலிலுமாக $5\frac{3}{4}$ பென்ஸ் கிடைத்திருக்கும். இப்பொழுது டாலர் மதிப்பு குறைந்திருப்பதால் 11 ஸென்டுக்கு 5 பென்ஸ் கொடுத்தால் போதும். பிரிட்டனின் கொள்முதல் செலவு $\frac{3}{4}$ பென்ஸ் குறைகிறது. ஆகையால் அதற்கு 1 ராத்தல் துணியின் மீது $\frac{3}{4}$ பென்ஸ் அதிக லாபம் வரும். இந்திய மில் துணி யுடன் போட்டி போடுவதற்காக சற்று விலையைக் குறைத்து விற்க முடியும்.

"18 பென்ஸ் விகிதம் இந்தியரின் நன்மைக்கு மிகவும் தீங்கு விளைவிப்பது. அப்படி யிருந்தும் பொதுஜன அபிப்பிராயத்தைச் சிறிதும் மதியாமல் அந்த விகிதத்தையே இந்தியா மந்திரி ஊர்ஜிதம் செய்கிறார்."

—டிரைப்யூன்; லாஹூர்



பருத்தி விவசாயிக்கு சங்கடம்

அமெரிக்கர்கள் தமது பருத்தியை சவுகரியமாக விற்கும்போது அது நமது பருத்தி விலையையும் பாதிக்கும். நமது பருத்தியில் பெரும்பாகம் ஜப்பானுக்கு ஏற்றுமதியாவது வழக்கம். ஜப்பான் இந்தியப் பருத்தியை வாங்கியது நம் மீதுள்ள தயவினால் அல்ல. எங்கு விலை குறைவாக இருக்கிறதோ அங்குதான் வாங்குவார்கள். அமெரிக்க டாலர் மதிப்பு குறைந்துகொண்டேபோனால் அமெரிக்கப் பருத்தி ஜப்பானில் மலிவாகக் கிடைக்கும். ஜப்பான் நமது பருத்தியை வாங்கும்படி செய்வதற்காக இந்திய சர்க்கார் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால் நம் பருத்தி விலை அதிகமாக இருந்தால் அவர்கள் நமது பருத்தியை எப்படி வாங்க முடியும்.

ஆகவே டாலர் மதிப்பு இன்னும் குறைந்து கொண்டே போனால் இந்தியா ஜப்பான் பருத்தி ஒப்பந்தம் உடைந்து போவது நிச்சயம். இப்பொழுது டாலரின் விலை சுமார் 46 பென்சாக இருக்கிறது. இது இன்னும் குறைந்து 32 பென்ஸ் வரையிலும் வரலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

ஒட்டாவாவின் கதி யென்ன?

ஒட்டாவா ஒப்பந்தம் செய்தபோது இந்திய "லின்ஸீட்" (ஆளி விதையை) விற்பதற்கு மிகவும் நல்ல சவுகரியம் கிடைத்ததாக சர்க்கார் கூறினார்கள். ஆனால் இன்று டாலர் மதிப்புக் குறைந்த பிறகு இந்த ஒரு நன்மையும் நமக்கு இல்லாமல் போகப் போகிறது நிச்சயம். அமெரிக்கா நமது மார்க்கெட் முழுவதையும் கைப்பற்றிவிட முடியும்.

இப்பொழுது நமது ஏற்றுமதிகளைக் காப்பாற்ற வேண்டுமாயின் ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டியது மிகவும் அவசியம். சர்க்கார் உடனே அவ்வாறு செய்யாவிடில் அது அவர்கள் சிறிதும் பொறுப்பற்றவர்கள் என்பதையே தெளிவாகக் காட்டும். ரூபாயின் நாணயமாற்று விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்கு வேறு பல காரணங்கள் உண்டு. இப்பொழுது ஏற்பட்டுள்ள ஒரு விசேஷ நெருக்கடியை மட்டுமே இங்கு குறிப்பிட்டிருக்கிறோம்.

மகாத்மா வாழ்க்கை

:: கேலியைத் தாங்கும் சக்தி ::

பிறர் தன்னைப்பரிகாசம் செய்யும்போது கோபித்துக்கொள்ளாமல் இருப்பவனுக்குத் தான் உண்மையான நகைச்சுவை இருப்பதாகச் சொல்லலாம். அவர்களுக்குத்தான் பிறரைப்பற்றிக் கேலி பேச உரிமையுண்டு. இந்த உண்மையான நகைச்சுவை உணர்வு மகாத்மாவிடம் அதிகமாக உண்டு.

நாம் இங்கு குறிப்பிடுவது அதுவல்ல. ஒரு கொள்கைக்காகவோ, நமது சௌகரியத்தை உத்தேசித்தோ ஒரு காரியம் செய்ய நினைக்கும்போது "பிறர் கேலி செய்வார்களோ" என்ற பயம் சாதாரணமாக எல்லோருக்கும் ஏற்படும். இந்த பயம் சிலரை கெட்ட வழியில் போகவிடாமல் தடுப்பதற்கு உதவியாயிருப்பதும் உண்டு.

ஆனால் இந்த பயம் சிலருக்கு அவர்களுடைய முன்னேற்றத்தில் தடையாக இருப்பதும் உண்டு.

மகாத்மா தென்னாப்பிரிக்காவி லிருந்த காலம். தமது வாழ்க்கையை மிகவும் சிக்கனமாக நடத்தவேண்டுமென்று அவர் நினைத்தார். ஒவ்வொரு இனமாக செலவைக் குறைத்துவந்தார். வண்ணான் செலவு மிகவும் அதிகமாகவிருந்தது. காலாகாலத்தில் துணி வந்து சேருவதுமில்லை. தினசரி சட்டை மாற்றியும் தீரவேண்டும். ஆகையால் குறைந்தது மூன்றுஜதை உடுப்பாவது இருந்தால்தான் சரிப்பட்டுவரும். இது இரட்டிப்பு செலவு.

ஆகையால் இனிமேல் தன் உடைகளைத் தானே வெளுத்துக் கொள்ளுவதென்று தீர்மானித்தார். அதற்குவேண்டிய சாமான்களெல்லாம் வாங்கி தன் மனைவிக்கும் அந்தத் தொழிலைக் கற்றுக் கொடுத்தாராம்.

முதல் நாள் அவர் தான் வெளுத்த கழுத்துப்பட்டையைப் போட்டுக்கொண்டு கோர்ட்டுக்குப்போனார். வெளுப்பு நன்றாயிருந்தது. ஆனால் மாவு அதிகம். சரியாய் இஸ்திரி போடவில்லை. மற்ற வக்கீல்களெல்லாம், இவருடைய கழுத்துப்பட்டையிலிருந்து மாவு உதிர்ந்துகொண்டிருந்ததைப் பார்த்து பரிஹாசம் செய்தார்களாம். பரிஹாசத்தைத் தாங்கும் சக்தி அவருக்கு அதற்கு முன்பே ஏற்பட்டு விட்டதாக மகாத்மா எழுதியிருக்கிறார்.

"இருக்கட்டுமே! அதனாலென்ன? இது தான் முதல் தட்வை சொந்தமாக சவரம் செய்தது. அதிலிருந்து மாவு உதிர்ந்தாலென்ன? அதைப்பற்றி எனக்கு ஒரு கெடுதியும் இல்லை; அது மட்டுமல்ல. உங்களுக்கு சிறிது தமாஷ் பண்ணுவதற்கும் ஒரு சந்தர்ப்பம் தர முடிந்ததைப் பற்றி எனக்கு சந்தோஷம் தான்." என்று மகாத்மாஜி சொன்னாராம். *** பின்னால் கோகலேயின் அங்கவஸ்திரத்தை "அர்ஜன்ட் சலவை"யாக வெளுத்துக் கொடுத்ததை எல்லோரும் படித்திருப்பார்கள்.

அம்பட்டன் வேலை கற்றுக் கொண்ட கதை இதைவிட முக்கியமானது. சிறைக்குப் போனவர்கள் எல்லோருமே முகக்ஷவரம் செய்யக் கற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனால் தனக்குத் தானே "கிராப்"வெட்டிக் கொள்வது சிரமமான வேலை.

மகாத்மா பிரடோரியாவில் ஒரு ஆங்கிலேய க்ஷவரக் கடைக்குப் போனார். இவர் இந்தியர் என்ற காரணத்தால் இவருக்கு முடி வெட்ட கடைக்காரர் மறுத்து விட்டார். இது மகாத்மாவின் மனதில் தைத்தது.

உடனே வீட்டுக்குப் போனார். ஒரு கத்திரிக்கோல் வாங்கினார். கண்ணாடி முன் உட்கார்ந்து முன்பக்கத்து முடியை வெட்டிக் கொண்டார். பின்புறம் சற்று சிரமமாக விருந்தது. ஆகையால் வெட்டு சுத்தமாக இல்லை. இந்த விசித்திரமான "கிராப்புடன்" கோர்ட்டுக்குப் போனார். எல்லா வக்கீல்களும் விழுந்து விழுந்து சிரித்தார்களாம்.

"என்ன? காந்தி! என்ன சமாசாரம்? எலி வந்து முடியெல்லாம் வெட்டி விட்டதா?" என்றார் ஒருவர்.

"இல்லை. உங்கள் வெள்ளை அம்பட்டர் என்னுடைய கறுப்பு முடியைத் தொட மறுத்து விட்டார். ஆகையால் நானே வெட்டிக் கொள்வதென்று தீர்மானித்தேன்" என்றார்.

இது சம்பந்தமாக மகாத்மா எழுதியுள்ள சில வாக்கியங்களை இங்கு தருகிறோம்.

'நம்முடைய நாவிதர்கள் திண்டாச் சகோதரருக்கு க்ஷவரம் செய்யக்கூடாதென்று நாம் தடுத்திருக்கிறோம். இதன் பலனை நான் தென்னாப்பிரிக்காவில் மட்டுமல்ல, வேறு பல இடங்களிலும் வேறு பல துறைகளிலும் அனுபவித்திருக்கிறேன். நான் இதுபோன்ற சம்பவங்களில் கோபமடையாததற்கு முக்கிய காரணம் நாம் செய்த பாவத்திற்கு இது ஓர் தண்டனை என்ற உணர்ச்சியே யாகும்."

மாஜி சுமங்கலியின் உயில்

(தி. ச.)



முத்துலக்ஷ்மி பெரிய பண்ணை சிவராம சுப்பிரமணிய அய்யரின் ஏக புதல்வி. மிகச் செல்வமாக வளர்க்கப்பட்டாள். காலாகாலத்தில் கலியாணமும் செய்து கொடுக்கப்பட்டாள். அவள் பிறந்ததும் சற்று வைதீக கர்நாடக குடும்பம் அவள் புகுந்ததும் ஸ்ரீ, ஸ்ரீ.

இராமஸ்வாமி அய்யர் குடும்பமும் அப்பை சப்பை இல்லை; பத்து லகாரத்துக்கு மோசமில்லை; ஆனால் நாலுபேர் அண்ணந் தம்பி; பாகம் ஆகவேண்டும்.

கரார் கணபதி அய்யர் திடீரென நோய் வாய்ப்பட்டார். அவரும் பெரிய அந்தஸ்துக்காரர். பாவம்! சந்தானமில்லை. உடல் நிலை கவலைக்கிடமாயிற்று. நாலு பேர் நாலு சொன்னார்கள். படுக்கையிலிருந்தபடியே தன் தாயாதியின் கடைக் குமாரர் ஸ்ரீ இராமஸ்வாமி அய்யரை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார்.

'பிறந்த வீட்டிலிருந்தால் நாலத்திலொன்றுதான்; கணபதி அய்யருக்குக் கொள்ளி வைத்தால், 10 லகார ஆஸ்தி' என எண்ணி இராமஸ்வாமி அய்யர் சந்தோஷப்பட்டார். அவர் பாகம் மிச்சமென அவரது மூன்று சகோதரர்களும் சந்தோஷப்பட்டனர்.

என்ன போங்கள், இந்த உலகத்தில் நாம் எண்ணுகிறபடி எது நடக்கிறது? அட, ஜலந்தான் வரவில்லை. பூதமா புறப்பட வேண்டும்? கணபதி அய்யர் சாகவேண்டாமய்யா, இப்படி ஸ்வீகாரப் புதல்வனை அந்தரத்திலா விடவேண்டும்? பாருங்கள், ஸ்வீ

காரம் எடுத்துக்கொண்ட வேளை, கணபதி அய்யர் சுகமடைந்தார். இராமஸ்வாமி அய்யர் முத்துலக்ஷிமியை மணந்தார்; அவரது சகோதரர்கள் 'சட்'டென தங்கள் சொத்தை பாகம் போட்டுக் கொண்டனர்; கணபதி அய்யர் சுகமடைந்ததோடு நிற்கக் கூடாதோ? முன்னைவிடப் பல மடைந்தார்; அவரது பருவமே தலை கீழாக மாறிவிட்டது என்று சொல்லலாம்; சமய சஞ்சீவிகளாக சில மந்திரிகள் வந்தனர்; அவர்களது வார்த்தைக்குச் செவி சாய்த் தார்; மூத்தாள் மகாலக்ஷிமி மாதிரி இருக்கும்போதே, 14 வய துள்ள இன்னொரு இளங்கன்னியை மணந்தார்; அது மட்டுமா? காலக்கிரமத்தில் ஒன்று, இரண்டு,மூன்று, நான்கு. நாலும் பிள்ளை கள்! ஐந்தாவது அச்சிலிருந்தது; அது ஆணோ பெண்ணோ பகவா னுக்குத்தான் வெளிச்சம்.

இராமஸ்வாமி அய்யர் அடிவயிற்றில் நெருப்பு விழுந்தது. அவர் சாக்ஷாத் 'த்ருசங்கு' வைக் கண்ணுற் கண்டார். நாளடை வில் ஸ்வீகாரத் தந்தைக்கும் பிள்ளைக்கும் மூன்றும் பொருத்த மாயிற்று.

"உனக்கு சொத்தில் பங்கே கிடையாது," என்றார் ஸ்ரீ மான் கரார்.

"சொத்து முழுவதும் என்னுடையது," என்றார் இராம ஸ்வாமி அய்யர்.

* * * * *

"விவகாரம் வேண்டாமே. அவர்கள் சொத்து அவர்களுக்கே போகட்டும். என் தகப்பனர் எனக்கு வைத்துவிட்டுப்போன சொத்து நமக்குப் போதுமே. என்னுடையது வேறு, உங்களுடை யது வேறா? வீணாக சண்டை வேண்டாம். வக்கீல்கள் வாயில் போய் விழவேண்டாம். கோர்ட் வாசலை மிதிக்கவேண்டாம்" என் றாள் முத்துலக்ஷிமி.

இராமஸ்வாமி அய்யருக்கு எட்டாமடத்துச் சனியன்போலும்: மனைவியின் வார்த்தை மண்டையில் ஏறவில்லை. நாள் கடந்து பிறந்த பாலனின் மழலை மென்மொழியிலும் அவர் மனம் மகிழ வில்லை. "கணபதியை ப்ரிவி கௌன்சில் வரை போய் ஒரு கை பார்த்தேவிடுகிறது;" இதே தியானம், இதே கவலை.

கதையை வளர்ப்பானேன்?

வருஷங்கள் பல பறந்தன.

முத்துலக்ஷிமியின் சொத்தில் பாதிக்குமேல் கரைந்தது.

மைலாப்பூரில் இரண்டு பெரிய மாளிகைகள் கிளம்பின.

"காரார் கணபதி அய்யரின் சொத்திலும், ஆறி லொருபங்கு, கடனிலும் ஆறிலொருபங்கு; இது ஹைகோர்ட்டின் தீர்ப்பு. இராமஸ்வாமி அய்யர் பங்கிற்கு சீமையில் சக்கிரவர்த்தியார் சன்னிதானத்திலே ப்ரீவி கௌன்சில் இருப்பதை ஒரு சிலர் நினைவு மூட்டினார்கள். ஆனால் விவகாரம் ஆரம்பிக்குமுன் பிறந்த பாலன், ஹைகோர்ட் தீர்ப்பு வருமுன் சட்டப்படி 'மெஜாரிடி' அடைந்துவிட்டான். அவன் தாயுடன் சேர்ந்து தடுத்தான். தவிர, ஒன்றரை மாமாங்கமாய் மூச்சுவிட நேரமின்றி, வக்கில் வீட்டுப் 'பென்சி'யிலும் கோர்ட்டு 'வராண்டா'விலுமாகக் காலத்தைத் தள்ளிய இராமஸ்வாமி அய்யரும், ஆள் துரும்பாய் விட்டார். தலையும் வழுக்கையாய்ப் போச்சு. சாகுமுன் பையனுக்குக் கலியாணம் பண்ணிப் பார்த்தால் போதும் என்றாய்விட்டது.

சுப்பிரமணியன், வீட்டில் மணி என்று அழைக்கப்பட்டான். ஊரில் 'மைனர் மணி' எனப் பெயர்.

என்னதான் வெங்காயம் கரைந்து போனாலும், சாம்பாரின் மணம் போய்விடுமா? மணிக்கு மாயவரத்தில் நல்ல மதிப்பே. ஒரு ஜோடி மயிலை காளை கட்டிய வில் வண்டியில்தான் கூப்பிடு தூரத்திலிருந்த ஹை ஸ்கூலுக்கு அவன் போவது வழக்கம். வெளியில் புறப்பட்டால் பத்துப்பேர் புடைசூழ்ந்திருப்பர்.

முத்துலக்ஷிமியும் இராமஸ்வாமி அய்யரும் பழைய காலத்தவர். மணி இக்காலத்தவன். பெற்றோர்களின் வாழ்க்கை எளியது; நடை, உடை, பாவனை ஆடம்பரமற்றது. பையனோ இவைகட்கு நேர் மாறாக இருந்தான்.

மணிக்கு விவாகம்!

மிராசுதார்களின் பெண்கள் அவன் மனதைக் கவரவில்லை. 'அவர்கள் சுத்த க்ரா' (கிராமாந்தரம்) என்றான். மணி விரும்பியது ஒரு படித்த நாகரிகப் பெண். அவனது ஆசையும் நிறைவேறிற்று. கும்பகோணம் 'டெப்டி'யின் மகளை மணந்தான். அவனது தாய்க்குமட்டும் உள்ளூரத் திகில் தான். முத்துலக்ஷிமி, கன்னங் கபட மற்றப் பழைமைக்காலப் பெண்டிரைச் சேர்ந்தவள். நாட்டுப் பெண் நவ. நாகரிகம். அவளது பெயரே மாமியாளுக்குப் பீதியை உண்டு பண்ணிற்று. "விமலா" என்பது அவள் பெயர். "விலீ" எனப் பெற்றோரால் அருமையாக அழைக்

கப்பட்டாள். இவ் வழகிய பெயரும், பெயருக்கேற்ற புஷ்பம் போன்ற அவளது சரீரமும், காலைக் காப்பியால் மலர்ச்சியுறும் அவளது மாசற்ற முகமும், மாலை 'டென்னிஸா'ல் வாடித் துவளுறும் அவளது மேனியும், சினிமா ஸ்டார்களும் வேண்டி விழையும் அவளது வசிகரச் கள்ளச் சிரிப்பும், கிளியெனக் கொஞ்சும் அவளது குதலைவாய் மொழியும், 'ஸில்க்-ஸ்லிப்பரி'ல் மறைந்து மிளிரும் மெல்லிய பாதத்தை அவள் தூக்கி வைத்து நசரும் ஒரு அழகும், பையனது கண்முன் நின்றன. மணி மையல் கொண்டான்; மணந்தான்.

,எனக்கே வர்த்தமா யிருக்கு; பயன் ? பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிப் பார்த்தார்; அவரது இச்சை நிறைவேறிற்று; அளவிலா ஆனந்தம் அடைந்தார்; அவ்வளவுதான் இராமஸ்வாமி அய்யர் சங்கதி.

நீர் மேற் குமிழி இக்காயம் !

நாட்டுப் பெண் வந்த ஒரு சில தினங்களில் முத்து லக்ஷ்மி மாஜி சுமங்கலி யானாள்.


* * *

மண்ணின் செல்வத்தை யடைய வக்கீல்கள் வலையில் அப்போது இராமஸ்வாமி அய்யர் விழுந்தார். இப்போது விண்ணின் செல்வத்தை யடைய முத்துலக்ஷ்மி வைதிகரின் வலையில் விழுந்தனள்.

காலஞ் சென்ற புருஷனுக்கு நித்திய சிரார்த்தம்! தானங்களின் மேன்மையை எடுத்துரைக்க ஆயிரந் தருப்பைக் கையினர்! அவர்களை ஆதரித்துப் பேச அவர்களது எண்ணிறந்த கக்ஷிக்காரர்கள்; அமங்கலிகள்! முத்துலக்ஷ்மியின் வீடு எப்போதும் நிரம்பியிருந்தது.

மணிக்கு இச்சடங்குகளில் அதிகம் நம்பிக்கையில்லை. தாயின் இஷ்டத்திற்கு மாறாக நிற்க விருப்பமில்லை. நித்திய சிரார்த்தத்தின் நிமித்தம் ஒரு வருஷப் படிப்புப் போச்சு. ஆனால் அடுத்த வருஷம் சென்னையில் காலேஜ் வாழ்க்கைக்கு வேண்டிய ஒரு சில பயிற்சிகளை அடைந்து வந்தான். கண்ணியமுள்ள காலேஜ் பையன் 'டிப்-டாப்' ஆக இருத்தல் வேண்டும்; அதை மணி தெரிந்து கொண்டான். மற்றும், வேலையின்றி வாளா யிருத்தல் கூடுமா? வயசு பையனல்லவா?

ஆடத் தவசம் முடிந்தது. பணம் ஆயிரக் கணக்காய் முடிந்தது. இத்துடன் வைதிகர் விட்டனரா அந்த அம்மாளை? ஸ்வர்க்கத்திற்குப் போவது லேசான காரியமா? ஒரு ‘டீ’ பார்ட்டி கொடுத்து கலெக்டர் துரையை கௌரவிக்க முடியாதவன் ‘ராவ் பகதூருக்கு’ ஆசைப்படலாமோ? வைதிக உலகிலும் அப்படித்தான். கோவில் மண்டகப்படிகள், பிராமணர்கட்கு சமாராதனைகள். ஆசாரிய ஸ்வாமிகட்கு பிக்ஷை—இது லௌகிக உலகில் கவர்னர் ‘டீ பார்டிக்கு’ சமானம்—உமா மஹேச்வர விருதம், ரிஷி பஞ்சமி, சதுர்த்தி, சித்திரா பௌர்ணமி, இத்யாதி, இத்யாதி; பாவம், முத்துலக்ஷ்மி ஒரு வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டாள். அவளது மகன் ஒரு சாக்ஷியாக நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.



மைலாப்பூரில் ஒரு சிறு அழகிய பங்களா. நால்வர் அமரும் ‘பேபி ஆஸ்டின்’ வாசலில் நிற்கிறது. இடுப்பில் தூய சலவை ‘புக் மஸ்லின்’ சுற்றின்மேல் மற்றொரு சுற்று, மேலே ஒரு ‘ஸில்க்-குட்டா’ லூஸாக, விசங்காற்றில் விண்ணிற் பறக்கும் ஒரு துயில் அங்கவஸ்திரம் தோளில். சடற்கரைக் காற்றுவாங்க, நமது மணி புறப்படுகின்றான்.

தாயும் பிள்ளையும் சென்னை வந்து மூன்று வருஷங்களாயின. முத்து லக்ஷிமியின் சொத்து அநேகமாய் 'ஓவர்'. மாமனார் தன் மேல் வரும்படியின் ஒரு பகுதியை மருமகனுக்கு அனுப்பி வந்தார்.

என்னே வாழ்க்கையின் விசித்திரம்! கவலையின்றிக் குதூகலமாய் இன்பக் கனவுகள் கண்டு கொண்டு வாழ்ந்த மணி இன்று கவலையுற்றுத் துயரத்திலாழ்ந்துளான். அவனது கனவுகள் பகற் கனவாயின. தானும் தன் மனைவியும் மற்றவர் கண்டு பொறாமை எய்தும்படி வாழ விரும்பினான். அது கை கூடவில்லை.

மணி ஒரு கோழை நெஞ்சினன். விமலா விழைந்தது ஒரு திண்மை மனத்தினன். அவன் மெல்லிய உடலும் கூனிய நடையுங் கொண்டவன். அவள் வியந்தது விரிந்த மார்பும், உயர்ந்த தோளும் ஏறுபோல் நடையும். மணி பெண்மைக் குணமுடையான். அவனது மனைவியின் கண்ணில் நின்றது வீரிய மிகுந்தவொரு ஆண்மகன். விமலா முன், மணி ஒரு தாஸனாக இருந்தான். ஆனால் விமலா விரும்பியது, தான் போற்றுதற் குரியதோர் இளம் சிம்ஹம்.

அவர்கள் இருவரும் ஸ்திரீ புருஷரே. ஆனால் உண்மையில் அவள் ஒரு ஸ்திரீ இவன் வேறு புருஷன்; இருவரின் மனமும் ஒருப்படவில்லை. இருவரின் இருதயத் தொனிகளும் லயப்படாது வேறு வேறு ஒலித்தன.

அன்று 'ஹோ' வென மழை; 'ஜிலீர்' என்று காற்று; பளிச் என மின்னல்; 'சட்டச் சடசட' என்ற இடி. இவை ஒன்றையும் உணர்ந்திலன் மணி. கடற்கரை மணல் மேடை மிசை வீற்றிருந்தான். வெகு நேரம் அவன் தனிமையில் ஆழ்ந்திருந்தான். அவனது பார்வை மோதும் அலையிடத்திருந்தது. அவன் மனம் ஒரு விநாடி கடலினடியில், ஒரு விநாடி வானத்தின் மேலே, ஒரு விநாடி வெள்ளிடையே. அவன் பித்துக் கொண்டவன்போற் காணப்பட்டான். திடீரென மணி ஒரு பெருமூச் செறிந்தான்; உடல் சிலிர்த்தது; ஒரு நடுக்கம் கொண்டது; கண்கள் இருண்டன. வீடு திரும்பியதும், பஞ்சணையிற் படுத்ததும், பக்கத்தில் தன் அன்னை வீற்றிருந்ததும், வைத்தியர் வந்து போனதும் மணி அறியான்.

(அடுத்த மலரில் முடிவு பெறும்)

அரசியல் ரகசியம்

ஸர் வில்லியம் ஜாய்ஸன் ஹிக்ஸ் என்பவர் 1920ம் வருஷம் பால்டுவின் மந்திரி சபையில் இருந்தவர். அவர் இந்திய அரசியல் நோக்கத்தைப் பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்.

"நாம் இந்தியரின் நன்மைக்காக இந்தியாவை ஜெயித்துக் கைப்பற்றவில்லை. இந்தியர்களை உயர்த்துவதற்காகவே இந்தியாவைக் கைப்பற்றி யிருக்கிறோம் என்று சிலபாதிரிகள் தமது கூட்டத்தில் சொல்லிக் கொள்வார்கள். அது வெறும் வாய்ப் பேச்சு. பிரிட்டனின் சரக்குகளுக்கு ஒரு புகலிடம் வேண்டுமென்பதற்காகவே இந்தியாவை ஜெயித்தோம். நாம் இந்தியாவை கத்தியின் வலிமையால் ஜெயித்தோம்; கத்தியின் வலிமையாலேயே அதை நம் கையில் வைத்துக் கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் சாமான்களைப் புகுத்துவதற்கு அதிலும் முக்கியமாக லங்காஷயர் ஜவுளிகளை விற்பதற்காகவே அந்த தேசத்தைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறோம்."

பம்பாய் ஹைக்கோர்ட்டு நீதிபதி ஸ்ரீ பீமான் 1919-ல் பின் வருமாறு எழுதியிருக்கிறார்.

"நாம் இந்தியாவைப் பிடித்தது இந்தியரின் நன்மையை உத்தேசித்தல்ல; இங்கிலாந்தின் நன்மைக்காகவே. இந்தியாவில் என்ன அரசியல் சீர்திருத்தம் செய்வதா யிருந்தாலும், நிர்வாகத்தில் என்ன மாறுதல் செய்வதா யிருந்தாலும் முக்கியமாக கவனிக்க வேண்டியது ஒன்று. அதாவது பிரிட்டனின் நல உரிமை"

வைகவுண்ட ராதர்மீயர் என்பவர் பிரிட்டனில் ஓர் பெரிய பத்திரிகை முதலாளி. சமீபத்தில் அவர் மனதிலுள்ளதை பகிரங்கமாகக் கூறி யிருக்கிறார்.

"பிரிட்டிஷ் மகுடத்தில் இந்தியா ஒரு உயர்ந்த மாணிக்கம் என்று மட்டும் சொன்னால் போதாது. நம்முடைய பொருளாதார வாழ்க்கை முழுவதுக்கும் இந்தியாவே அடிப்படையான அச்சு. அந்த அச்சின் மீதுதான் நம் வர்த்தக யந்திரம் சுழல்கிறது. இந்தியாவை நாம் இழந்து விட்டால் உலகத்து நாடுகளிடையே நமக்கு இருந்துவரும் ஏகாதிபத்திய செல்வாக்கையும் இழக்க வேண்டியது தான்."

மழையினிலே

(ஹேமநளினி)

அன்று ஞாயிற்றுக்கிழமை. தமிழ்நாட்டுப் பிரசங்கிகள் போல மழையொன்று இடைவிடாமல் பெய்துகொண்டிருந்தது. பொழுதே போகவில்லை. நேரம், பள்ளிக்கூடத்தில் கணக்கு வகுப்பு நடக்கும்போது போவதைவிட ஆமை நடை வேகத்தில் சென்று கொண்டிருந்தது. புஸ்தகத்தையாவது கொஞ்சம் புரட்டலாமென்றாலோ, படித்துப் படித்துத் தலையே கனத்துப்போய் விட்டிருந்தது.

இந்த அழகில், மனது நிம்மதியில்லாமல், பிடித்துவிட்ட மாதிரி, கிளர்ச்சி, குதூகலம் இன்றி, மூச்சுத் திணறுவதுபோன்ற உணர்ச்சிகளை மிகவும் தாராளமாகக் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தது. அன்று வரை வம்புப் பேச்சு பேசுவதை வெறுத்துவந்த நான், யாருடனாவது கொஞ்சம் சிரித்துப் பேச வேண்டும் என ஆசைப்பட்டேன். ஆனால், நான் வேண்டும் போது மாத்திரம் யார் வருவார்கள் ?

நாற்காலியை ஜன்னலருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன். மழை நன்றாய் அடித்துப் பெய்துகொண்டிருந்தது. கூரையிலிருந்து சொட்டுச் சொட்டாய் விழும் மழைத்துளிகள், கீழே தேங்கியிருந்த ஜலத்தில் தாம்பாளம் தாம்பாளமாய் வட்டம் போட்டுக் கொண்டே யிருந்தன. மண் வாசனை மூக்கிற்கு ஒரு தனி இன்பம் தந்துவிட்டுப் போயிற்று. எதிர்த்த வீட்டு ராமசேஷுவும், பாலாமணியும் காகிதக் கப்பல் பண்ணி ரோட்டில் ஓடும் செம்மண் நதியில் விட்டுக் கொண்டிருந்தார்கள்.

மணி 5 தான் ஆயிற்றென்றாலும், வானம் மப்பு போட்டிருந்ததால் வீடு இருட்டா யிருந்தது. விளக்கேற்றலாமென்று எழுந்தேன். வாயிற் கதவு "க்ரீச்" என்று சத்தம் போட்டது. யாரோ ஒருவர் உள்ளே வரும் காலடி சத்தமும் கேட்டது.

வந்தவர் ஒரு அய்யங்கார் சுவாமிகள் என்று அவர் பெரிதாய் பளிச்சென்று இழுத்திருந்த நாமம் சொல்லிற்று. அவரை நான் இதற்கு முன்பின் பார்த்ததில்லை. ஆள் நல்ல வாட்டசாட்

டம். பூசி மெழுகின மாதசிரேதகம். புகையிலை அடக்கி பருத்துப் போன கன்னங்கள். குறும்புத் தனத்தையும் ஒருவரையும் லக்ஷியம் செய்யாத தன்மையையும் தெரிவிக்கும் மூக்கு. நெற்றியின் மேல் இரண்டு ஓரங்களில் கோணலாக விழுந்திருக்கும் சொட்டையைப் பார்த்தால்,குறுக்கு விழியில் வேகமாக யோஜிப்பவர் என்று உடனே சொல்லலாம்.

"நீங்கள் யார்?" என்று நான் கேட்க வாயெடுப்பதற்குள் அவரே ஆரம்பித்தார்:—

"என் பெயர் நரசிம்மன். நான் இருப்பது கண்ட மங்கலம் வேலை வெட்டி ஒண்ணும் கிடையாது, சுகஜீவி; இந்த ஊரைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்: பார்த்தாச்சு. இன்னைக்கு ராத்திரி மெயிலில் திரும்பிப் போரேன். அதுக்கு முன்னே எங்க ஊரிலிருந்து இங்கே ரயிலில் வரும்போது எனக்குத் தெரியாமலே என் பென்ஸல் கிறுக்கினதைக் கொடுத்துவிட்டுப் போகலாமென்றுவந்தேன். அவ்வளவுதான். நான் வரேன்" என்று சொல்லிக்கொண்டே தன் இடுப்பில் சொருகியிருந்த ஒரு காகிதச் சுருளை எடுத்து என்கையில் திணித்துவிட்டு நான் மறுவார்த்தை சொல்வதற்குள் வெளியில்போய், கதவை இழுத்து சாத்திவிட்டுப் போய்விட்டார்.

அவசர அவசரமாய், விளக்கேற்றிவிட்டு, அவர்கொடுத்த காகிதத்தின் கசங்கல் எல்லாம் சரிபடுத்தினபின், கீழ்க்கண்டவாறு படித்தேன்:—

இடக்குப் பாட்டுக்கள்

(நரசிம்மன்)

காப்பு

கழுதை முகத்தானைக் கைகூப்பித் தொழுது
பழுது ஒன்று மின்றிப் படிப்பவர் நகைக்க,
அழுதவர் சிரிக்க, கேட்பவர் இளிக்க,
எழுதுவாம் இடக்குப் பாட்டுகள் தன்னையே.

காபிதேவி துதி

"இதந்தரு மனையி னீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப் பழிமிகுந் திழிவுற்றாலும்
விதந்தரு கோடி யின்னல் விளைந்தெனை யழித்திட்டாலும்"
சுந்தரகாபீ நின்னைக் குடித்திட மறக்கிலேனே.

கிறள்

வாயோடு வாய்ச் சொற்கள் பேச்சொக்கின்,
கண்விழிகள் என்ன பயனுமில.

இன்றை(ய) வேந்தன்

மேனி மினுக்குதல் பெண்டிற் கழகு
உண்டி சுருங்குதல் ஆண்களுக் கழகு.

பய பேரிகை

(பாரதியாரின் "ஜயபேரிகை கொட்டடா" மெட்டு)

பய பேரிகை கொட்டடா — கொட்டடா
பய பேரிகை கொட்டடா.

ஜய மென்னும் தேவனை யடித்தோம்,
உண்மைப் பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்
வியனுல கனைத்தினும் விஷமென நகரும்
வேத வாழ்வினைக் கை விடுத்தோம். (பயபேரிகை)

கழுதை, குதிரை எங்கள் ஜாதி
சிறு குட்டை குன்று எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமல்ல மற்றவர்
நோக்க நோக்க களி ஓட்டம். (பயபேரிகை)

மகன் பாட்டு

(பாரதியாரின் "பாப்பா பாட்டு" மெட்டு)

காலை எழுந்தவுடன் சீட்டுக் கட்டு,
பின் கனிவு கொடுக்கும் நல்ல காபி,
மாலை முழுதும் ஷோக்கு சினிமா,
என்று மனதிலிருத்திக் கொள்ளு மகனே.

இன்னும் இதுமாதிரி சுமார் ஒரு ஐம்பது காவியங்கள் எழுதியிருக்கிறார். "இவ்வளவு வயதாகியும் இத்தனை விஷம எண்ணங்களில் ஊறிக் கிடக்கும் அய்யங்காரை என்ன பண்ணினால் தேவலை?" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஒரு பெரிய காற்று ஒன்று விளக்கை அவித்துவிட்டு, என்னை இருட்டில் விட்டுவிட்டுச் சென்றது.



(சி. சுப்பிரமணிய பாரதியார்.)

ஒருநாள் மாலையில் குற்றாலத்துக்கருகே ஒரு சிறு குன்றின் மீது ஒரு பெரிய விஸ்தாரமான ஆலமரத்தின் கிளைகளில் ஒன்றின்மேல ஒரு காக்கை மிகவும் விசனத்துடன் உட்கார்ந்திருந்தது. அப்போது அதன் மனைவி அதன் சமீபத்தில் வந்து 'நீ எதன் பொருட்டு விசாரப் படுகிறாய்?' என்று கேட்டது.

அப்போது ஆண் காகம் தன் பெண்டாட்டியிடம் சொல்லுகிறது "இன்று காலை எனக்கு மிதமிஞ்சிய தீவனம் கிடைத்து விட்டது. அளவறியாமல் உண்டு தீர்த்து விட்டேன்; எனவே இப்போது வேட்டை மீது செல்லவும் மனங் கொள்ளவில்லை. சும்மா உட்கார்ந்திருப்போமென்றால் பொழுது போகவில்லை. மற்ற சிநேகிதக் காகங்கள் இன்னும் வேட்டையிலிருந்து திரும்பி வரவில்லை. அவர்கள் வந்தால் கூட்டங்கூடி வம்பளப்பதிலே பொழுது போக்கலாம். சும்மா, காற்று வழியாக சுகமாகச் சுற்றிப் பறந்து கொண்டு நாலு பக்கங்களிலும் நடக்கும் வேடிக்கைகளைக் கண்டு திரும்பலாம் என்று உத்தேசம் பண்ணுமிடத்தே, சிறகு, கால், உடம்பு, தலையெல்லாம் ஒருவிதமான உளைச்சலும் கனமும் ஸஹிக்க முடியவில்லை. ஜ்வரம் வந்து விடும் போலிருக்கிறது. தொண்டை ரணகளமாக இருக்கிறது. வலி பொறுக்க முடியவில்லை. பலமான ஜலதோஷம் பிடித்திருக்கிறது. நேற்றும் முந்தின நாளும் பக்கத்துக் காடுகளிலே சரியான தீனி கிடைக்கவில்லை. ஆகையால் கிழக்கே ஜனவசதிகளில் நெடுந்தூரம் வரை சோற்றுக்காகப் போகும்படி நேர்ந்தது. இருந்தும் மாலைவரை அரைவயிற்றுக்குக்கூட உணவு போதவில்லை. மழை இரவும் பகலும் இடைவிடாமல்

பெய்தது. கோடை மழை, அதில் மிதமிஞ்சி நனைந்து போனேன். அதனுலேயே, உடம்புக்கு பலமான ஜாட்டியம் வந்து கொண்டிருந்தது. அதனுடன் இன்று காலே அஜீரணமும் கூடிவிட்டது. இந்த நிலையில் பொழுது போக்குவதற்கு என்ன செய்வேன் என்பதைக் குறித்து விசனப்பட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றது.

இதுகேட்டுப் பெண் காகம் சொல்லுகிறது:—"பல வருஷங்களுக்கு முன்பு நீ என்னை விவாகம் செய்து கொண்ட காலத்தில் உனக்கு இவ்வுலகிலுள்ள எல்லா இன்பங்களைக் காட்டிலும், என்னுடன் கூடி அளவளாவிக் கொண்டிருப்பதே பெரிய இன்பமாகத் தோன்றுகிறதென்றும், எல்லாவிதமான பொழுது போக்குகளைக் காட்டிலும் என்னுடன் விளையாடிக் கொண்டிருப்பதிலேயே பொழுது போக்குவதுதான் அதிகப் பயனுடையதும், சுவை யுடையதுமாக இசைந்திருக்கிறதென்றும், நீ என்னிடம் லக்ஷந்தரம் சொல்லி யிருக்கிருய். இப்போது என்னைப் புறக்கணித்து விட்டு நான் பக்கத்தி லிருக்கும்போது பொழுது போகவில்லை யென்று என்னிடத்திலேயே அழத்தொடங்கி என்னை அவமானப் படுத்துகிருய். நான் பல நீர்ச்சுனைகளில் நாள்தோறும் என் முகத்தைப் பார்த்துக்கொண்டுதான் வருகிறேன். நமக்குள் விவாகம் நடந்த காலத்தைக் காட்டிலும் இப்போது என் முகம் அழகாகத் தெரிகிறதே யல்லாமல் குறைந்த அழகுடையதாகத் தெரியவில்லை. என்னுடைய சிநேகிதர்களிடமும் கேட்டேன். அவர்களும் நான் இப்போது முன்னைக்காட்டிலும் அதிக அழகு வாய்ந்திருப்பதாகவே சொல்லுகிருர்கள். உனக்கு மாத்திரம் என்னிடம் இப்படி வரம்பில்லாத அருவருப்புண்டா யிருப்பதின் காரணம் யாது?'' என்று (பெண்டாட்டி) சொல்லிற்று.

இதைக்கேட்ட காக புருஷன் "நீ முன்னைக் காட்டிலும் இப்போது அழகில் மிகுந்திருப்பதாகச் சொல்லுவோர் உன்னுடைய பெண் மித்திரரோ ஆண் மித்திரர்களோ'' என வினவிற்று "என்னுடைய சகிகளே அவ்விதம் கேட்கிருர்கள். எனக்கு ஆண் சிநேகிதர் கிடையாது'' என்று காகப்பேடு கரைந்தது.

இதைக் கேட்டவுடன் ஆண் காகம் சிறகுகளைப் புடைத்துக் கொண்டு அந்த ஆலமரக் கிளையினின்றும் புறப்பட்டுத் தென் திசையை நோக்கிப் பறந்து சென்றது. பெண் காகமும் கூடவே பறந்து சென்றது. காகா என்று கத்திக்கொண்டு பின்னே வந்த பெண்டாட்டியைக் காத்து நின்று சந்தித்து ஆண்காகம், "நீ ஏன் என்பின்னே வருகிருய்'' என்று கேட்டது. "நீ உடம்பு நோய் மிகுந்திருக்கையில் தனியாகப் போகிருயே; இடை வழியில்

உனக்கு ஒருவேளை தலை கிறுக்கலுண்டாகி நீ கீழே விழுந்து விடக் கூடும். அதினின்றும் உனக்கு யாதாயினும் பேராபத்து விளையக் கூடும். இவ்விதமான சமயங்களில் உன் பக்கத்தில் நான் இருந் தால் அவ்வித விபத்துக்களைத் தடுத்து விடக்கூடு மாதலால் நானும் உன்னுடன் வருகிறேன்'' என்று பெண் காகம் சொல்லிற்று.

“ஓ! ஹோ! என்னைக்காக்கும் பொருட்டாகவா வருகிறாய்?'' என்று ஆண் கேட்டது. “ஆம்'' என்றது பேடு. “அப்படியா னால் நீ வரவேண்டிய அவசியமில்லை. எனக்குச் சிறிது நேரத் துக்கு முன் உடம்பிலே இருந்த கடுப்பும், வலியும், ஆயாசமும் இப்போது முற்றிலும் நீங்கிப்போய் விட்டன. நான் பரிபூரண ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். எனக்கு வழியில் மயக்கமும் தோன்றாது; கீழே விழவுமாட்டேன். என்னை நரி தின்னவும் செய்யாது. நீ என்னைக் காப்பாற்றவும் வேண்டியதில்லை. தயவு செய்து வீட்டிலேயே இரு'' என்று ஆண் சொல்லிற்று.

“நீ எங்கே போகிறாய்'' என்று பேடு கேட்டது. “பக்கத் திலே விக்கிரமசிங்கபுரத்துக்குப் போகிறேன்'' என்று ஆண் சொல்லிற்று.

“ஹோ! விக்கிரமசிங்கபுரம் பாபநாசத்துக்குப் பக்கத்திலன் றோ இருக்கிறது! நெடுந்தூரமாயிற்றே'' என்றது பேடு. “நான் ஒரிமைப் பொழுதில் அங்கு போய் மீண்டும் வந்து விடுவேன். நீ கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. வீட்டுக்குப் போ'' என்று சொல்லி ஆண் வற்புறுத்திற்று. நீ அங்கே இந்த சமயத்தில் எதன் பொருட்டாகப் போகிறாய் என்று பேடு வினவிற்று.

இது கேட்டு ஆண்காகம் சொல்லுகிறது. “விக்கிரம சிங்கபுரத் தில் வீரமாகாளப்புலவர் என்றொரு கவிராயர் இருக்கிறார். அவர் இந்த நேரத்தில் தமது வீட்டுப் பெண் குழந்தைகளுக்கும், ஆண் குழந்தைகளுக்கும் தமிழில் செய்யுள்கட்டும் வழிகள் கற்றுக்கொடுக் கிறார். எனக்கு மனிதபாஷை பேசத்தெரியாதே யொழிய அவர்கள் பேசுவ தெல்லாம் நன்றாக அர்த்தமாகு மென்ற விஷயம் உனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவர் வீட்டுக் கூரைமேலே போய் ஏறி யிருந்துகொண்டு, அந்தக் கவிராயர் சொல்லும் விஷயங்களை யெல் லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு, அப்பால் தமிழ் பாஷையிலிருப் பது போலவே நமது காக பாஷையில் கவிதை அமைப்பதற்குரிய விதிகள் ஏற்படுத்தி, நமது பாஷையைக் காவியங்களும் பாட்டுக்களு முடையதாகச் செய்யப்போகிறேன். ஸ்வதேசாபிமானமும் ஸ்வ பாஷாபிமானமுமில்லாத காகத்தை ஒரு காகமென்று சொல்லுதல் தகுமா? அதைப் பறந்து தீனி தின்று திரியும் கருஞ் சிறு பிண மென்று தான் சொல்லவேண்டும். இந்தக் குற்றாலத்துக் காட்

டைப்போல் பரிசுத்தமும் மேன்மையும் செழிப்பும் எக்காலமு மழியாத் தன்மையுமுடைய காடு இந்த உலகத்தில் வேறு எங்கும் கிடையாது. நமது காக பாஷையைப் போல் மாண்புயர்ந்த பாஷையும் கிடையாது. நான் பிறந்த அளவில் இந்த பாஷைக்கும் இந்தக் காட்டுக்கும் என்னால் இயன்ற உபகாரம் செய்யு முன்பு உயிர் துறப்பேனானால் எனக்கு நெஞ்சு வேகாது. ஆகையால் இந்தக் காக பாஷையைக் கவிதை யுடையதாகச் செய்யும் கடமையை நிர்வகித்திருக்கிறேன்" என்றது. இது கேட்ட பெண் காகம் "ஒரு விநாடிக்கு முன்னே காக பாஷை ஒப்பில்லா பாஷை என்று சொன்னாய். இப்போது தமிழைப் பார்த்துத் தமிழ் மொழியைத் தழுவிச் செய்யுள் சேர்ப்பதாகிய சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்கிறாயே? எனவே தமிழைக் காட்டிலும் குறைந்த தென்று அங்கிகாரம் செய்கிறாயா?" என்றது.

இது கேட்ட ஆண் காகம், "தமிழ் மனுஷ்ய பாஷை. அதற்கு சமானமாக நமது பாஷை ஏற்படுதல் சாத்தியப்படுமா? இதர ஜந்துக்களெல்லாவற்றைக் காட்டிலும் நமது காக பாஷை சிறந்த தென்றன்றோ நான் சொன்னேன்? சரி, நேரமாய் விட்டது. நான் போக வேண்டும். நீ வீட்டுக்குப் போ" என்றது.

அப்போது பெண் காகம் சொல்லுகிறது. "நீ இந்த விஷயத்துக்காக விக்கிரமசிங்க புரத்துக்குப் போகவேண்டாம். என்னுடன் வீட்டுக்கு வா. நான் கற்றுக்கொடுக்கிறேன். எனக்குத் தெரியும்" என்றது. "உனக்கென்ன தெரியும்?" என்று ஆண் காகம் சற்றே சினத்துடன் வினவிற்று. "கவி பாடுவதற்குரிய விதிகள்." என்றது பேடு. "அவற்றை நீ அறிந்துகொண்ட தெங்ஙனம்?" என்று ஆண் காகம் கேட்டது.

பெண் காகம் சொல்லுகிறது. "உனக்குத்தோன்றிய எண்ணம் உனக்குத்தான் முதல் முதலில் தோன்றியதென்று நீ நினைக்கிறாய் போலும்; ஆனால், உண்மை அப்படியில்லை. என்னுடைய பிதாவும் இதே விருப்பமுடையவராக இருந்தார். ஒரு மனுஷ்யக் கவிராயர் தம்முடைய சிடர்களுக்குக் கற்றுக்கொடுக்கையிலே அவர் வீட்டுக்கூரை மேலே போய் என் பிதா தினந்தோறுங் கேட்டுப் படித்துவந்தார். இப்படி ஒருநாள் தவறாமல ஆறுமாதம் சென்றுவந்தார். கடைசியாக இவருக்குத் தமிழ்ச் செய்யுளின் இலக்கணம் பிடிபட்டுப்போய்விட்டது. அப்பால் என்பிதா தமிழ்ச் செய்யுள் முறைகளை யனுசரித்து காகபாஷையிலே ஒரு செய்யுளிலக்கணம் கற்பித்தார். காகபாஷையில் பாட்டுக்கள் ஆயிரம் வகைகளிலே பாடுவதற்குரிய விதிகள் ஏற்படுத்தியிருந்தார். அதையெல்லாம் நமது காகராஜன் சந்நிதியில் அரங்கேற்று முன்னாகவே அவர்


இறந்துபோய்விட்டார். ஆதலால் புதிய சாஸ்திரம் எங்கள் வீட்டுக்குப் புறம்பே வர வழியில்லாமல் போய்விட்டது. என் பிதாவுக்கு நான் ஒருமகள் தான் பிறந்தேன். என்னைத்தவிர வேறு பெண் குழந்தையேனும் ஆண் குழந்தையேனும் ஜனிக்கவேயில்லை. நான் பெண் ஜன்மமாதலால் ராஜ சபையில் இந்தப்புதிய சாஸ்திரத்தைக் கொண்டுபோய், அரங்கேற்றிக் காக பாஷைக்கொரு புதிய ஒளியும் எனக்குத் தீராத கீர்த்தியும் ஏற்படுத்திக்கொள்ள இடமில்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறேன். அதை நான் உனக்குக் கற்றுக் கொடுக்க மிகவும் சம்மதமுடையவளாக இருக்கிறேன். நீ என்னிடம் கற்றுக்கொண்டு ராஜ சபையிலே போய் அரங்கேற்றலாம். அதனால் உனக்கு ராஜசபையில மிகுந்த ஸன்மானமுண்டாகும். உலகத்திலும் பெரிய கீர்த்தியுண்டாகும். என்னுடன் வீட்டுக்கு வா! இன்று முதல் உனக்குத் தினந்தோறும் இரண்டுமணி நேரம் கற்றுக்கொடுக்கிறேன். இரண்டு மாதங்களில் ராஜாவின் சபையில் உனக்கு உயர்ந்த ஸன்மானங்கள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்துவிடுகிறேன்.'' என்றது.

இதுகேட்ட ஆண்காகம், ''நான் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவன். ராஜ ஸபையில் வாங்கும் ஸன்மானங்கள் எனக் கவசமில்லை'' என்றது. ''சரி. அது வேண்டாவிட்டாலும் நீ ஆரம்பத்திலே சொல்லியபடி உன்னாலே காகபாஷைக்கு ஒரு புதிய மகிமையும் உனக்கு என்றுமழியாத கீர்த்தியும் கிடைக்குமன்றோ? அதற்காகவேனும் என்னுடன் வா. நான் உனக்குக் கவிதைத் தொழில் கற்பித்துக்கொடுக்கிறேன்.'' என்றது. ஆண்காகம் சம்மதப்பட்டது.

அவ்விரண்டும் தம் வீட்டுக்கு அதாவது தமது கூட்டுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருக்கையில் அவற்றின் தலைக்குமேலே சிறிது தூரத்தில் மன்மதன் பறந்து சென்றுகொண்டிருந்தான். ஆணும் பெண்ணும் கூடி இருக்க விரும்புமாறு வற்புறுத்த விரும்பும் இயற்கையின் சாட்டையடிகள்போலே மேற்கு மலைச்சாரலில் சாரல் மழை தூற்றும் பருவம் அப்பொழுது நிகழ்ச்சி பெற்றுக்கொண்டிருந்தது.

மன்மத தேவனுக்கு இப்படிப்பட்ட பருவங்களில், இப்படிப்பட்ட பிரதேசங்களில், வேலை மூச்சை முட்டுமாதலால் அன்று மாலை அவன் சிக்கிரமாகவே தன் தூணியிலிருந்த அம்புகளில் பெரும் பகுதியை செலவிட்டுவிட்டு, ஒன்றிரண்டு தவறுதலாக அவன் மேலேயே விழுந்துவிட்ட காரணத்தாலோ, வேறெக் காரணத்தாலோ அன்று மாலை அவன் தன் காதலியாகிய ரதிதேவியின் சல்லாபத்தை வேண்டித் தன் உலகத்துக்குச் சென்றுகொண்டிருந்

தான். இரண்டே இரண்டு கணைகள் மாத்திரமே அவனுடைய கூட்டில் மிஞ்சியிருந்தன. அவற்றை லீலார்த்தமாக, மேலே சொல்லப்பட்ட ஆண் பெண் காகங்களின் மீது தலைக்கொன்றாக அழுத்திவிட்டுப் போனான்.



கூட்டுக்குப் போகு முன்னையே ஆண் காகமும் பெடும் ஒன்றையொன்று முத்தமிட்டுக் கொஞ்சத்தொடங்கிவிட்டன. கூட்டுக்குள் நுழைந்த மாத்திரத்திலே காதல் வெறி வரம்புகடந்து போய்விட்டது. கவிதைத்தொழில் படிக்கவேண்டுமென்ற ஞாபகமே ஆண் காகத்தின் உள்ளத்தினின்றும் எடுபட்டுப்போய்விட்டது. காலை சூரியோதயம் வரை அவை மதனமான லீலா போகங்களிலே பொழுது போக்கிக்கொண்டிருந்தன. காலையில் இரண்டும் கோரமான நித்திரைக்குட்பட்டு மறுநாள் காலையிலே கண் விழித்தன. சற்றே இரை தேடு முன் அன்றைக்கும் மதன் அந்த வழியே போனான். அன்றைய கதையும் முதல் நாள் போலவே ஆயிற்று. இங்ஙனம் நெடுநாள் நடந்து வந்தது. ஆண் காகத்துக்குக் காக பாஷையில் யாப்பிலக்கணம் சேர்க்க வேண்டுமென்பதிலிருந்த ஆவலில்லாமலே ஒரே யடியாக மறந்துபோய்விட்டது. காகம் கவிதைத் தொழில் படிக்கவே இல்லை. மதன சாஸ்திரம் படிக்கத் தொடங்கி விட்டது.



உபாத்தியாயர்:—எல்லாரும், கணக்குப் போட்டு வந்தீர்களா?

பையன்:—சார்! உங்கள் கணக்கே தப்பு சார்.

உபாத்தியாயர்.—எப்படி?

பையன்:—"ராமன், கிருஷ்ணன் இரண்டுபேரும் அண்ணன் தம்பிகள்" என்று கணக்கு இருக்கிறதே, அவர்கள் இரண்டுபேரும் அண்ணன் தம்பி இல்லை. இரண்டுபேரும் ஒரே அவதாரம், சார்.

—வெங்கிட்டு, திருப்பத்தூர்.

* * * *

குப்பன்:—சூதாட்டம் மிகவும் பொல்லாதது; ஒரு நாள் பணத்தை ஜெயிக்கிறார்கள். அடுத்த நாள் எல்லாம் தோற்று விடுகிறார்கள்.

சுப்பன்:—ஆனால் ஒருநாள் விட்டு ஒருநாள் ஆடலாமே.

—ஜி. ஜெயராமன், கும்பகோணம்.

* * * *

நந்தன்:—நண்பா, உனது சைக்கிளில் "பிரேக்" இல்லையே?

கந்தன்:—பிரேக் என்னத்திற்கு? எதிலாவது மோதினால் தானே நின்றுவிடப் போகிறது.

—அரி. சி. பாடகலிங்கம், அரிகேசநல்லூர்

* * * *

சிறுவன்:—"டாக்டர்கள் ஏனப்பா மோர்ட்டார்கார் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்?"

தகப்பன்:—"நோயாளிகள் அபாய நிலைமையிலிருந்தால், அதிவிரைவில் போய் மருந்து கொடுப்பதற்காக."

சிறுவன்:—"அப்பேர்ப்பட்ட வியாதிஸ்தர்களுக்கு மருந்தை கொடுத்ததும், தப்பிக்கொண்டு ஓடிப்போய் விடுவதற் கென்றல்லவா நினைத்துக்கொண் டிருந்தேன்."

—ஏ. எஸ். சிவராம், புதுச்சேரி.

* * * *

மனைவி:—ஐயோ! திருடன் போல் இருக்கே! நீங்கள் விழித்துக் கொண்டிருக்கேளா! இல்லையா?

புருஷன்:—இல்லை.

டி. எம். செங்கோடன், திருச்செங்கோடு.

* * * *

ராமன்:—கோபாலா என்ன எப்பொழுதும் நாம் இருவரும் அவுட் விளையாடும் பொழுது கடைப்பிடியைப் பிடித்துக் கொள்ளுகிறாய்.

கோபாலன்:—ஆமாண்டா "நன்மைக் கடைப்பிடி" என்று ஔவை யார் பாடி இருக்கிறார்கள். அதனால்தான் நான் பிடித்துக் கொள்ளுகிறேன்.

—எம். இசக்கி, நாங்குனேரி.

* * * *

வண்ணான் கிராம பட்டியில் அடைத்து வைத்திருந்த கழுதையை அபராதம் கட்டி ஓட்டிக் கொண்டு வரும்போது;

நண்பர்:—எங்கே போய் வருகிறீர்?

வண்ணான்:—கழுதைக்கு பணம் கட்டி விட்டு வருகிறேன்.

– ஜ. முகுந்தன், போரூர், பறங்கிமலை.

* * * *

குண்டு:—ஓய் இந்த நிறுவையில் ஏறி இரும்.

வந்தவர்:—எதற்காக?

குண்டு:—பாரதியார் எல்லாரும் ஓர் நிறையென்று பாடி இருக்கிறாரே! சரிதானென்று நிறுத்துப் பார்க்க வேண்டும்.

—அ. ச. தேன்காசி

மோட்டார் ஓட்டுபவர்:—(போலீஸ்காரனை நோக்கி) நான் மோட்டாரை 50 மைல் வேகத்தில் ஓட்டியதாகக் கூறுகிறாயே? சற்றாவது நியாயம் வேண்டாமா? நான் கலெக்டராபிஸிற்கு வருமான வரி செலுத்தப் போய்க்கொண்டிருக்கிறேன். வேகமாகப் போகுமாறு எனக்குத் தோன்றுமா?

அ. லெ. சு. கருப்பய்யா, செய்கோன்.

* * * *

திருநீலம்:—நான் இதுவரையிலும் வாங்கின செருப்புக்களிலெல்லாம் இது நல்லது. இதையே நீங்கள் வாங்குங்கள்.

ராசுபிள்ளை:—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்.

திருநீலம்:—ஒருநாள் கலியாணவீட்டில் போட்டு விட்டு வந்து விட்டேன். மறுநாள் அவ்விடத்திலேயே இருந்தது.

கன்னையா, பொறையார்

* * * *

உபாத்தியாயர்:—போனவாரந்தான் பள்ளிக்கூடம் வராமல் ஏதோ சாக்கு சொன்னாய்; இன்றைக்கும் வேறு ஏதோ சொல்லுகிறாயே?

மாணாக்கன்:—நீங்கள்தான், நான் முன் சொன்னதை நம்பவில்லையே.

*—இ. ஆறுமுகம், காரைக்கால்.

* * * *

மனைவி:—நாதா நாம் ஏறி இருக்கிற இக் கப்பல் ஜலத்தில் அமிழும்போலிருக்கிறதே, என்ன செய்கிறது?

புத்திசாலியான கணவன்:—அடி உனக்கென்ன? கப்பல் நமக்குச் சொந்தமல்லவே. முழுகிப்போனால் சொந்தக்காரன் நஷ்டமடைகிறான்.

—டி. ஆர். பதி. கண்டவிராயம் பட்டி.

---

* இரண்டு ரூபாய் பரிசு பெற்றவர்.

'எதிர்கால இந்தியா'



தம்பி!

என்னையும், என்னைப்போல் ஓயாமல் சுயராஜ்யம் என்று ஜபம் பண்ணிக் கொண்டிருக்கிறவர்களையும் நீ காங்கிரஸ் பித்தர்கள் என்று கேலி செய்து வந்திருக்கிறாய். நீ சிரிப்பதற்குத் தகுந்தாற்போல் நாங்கள் தோல்வியுற்றவர்களாய் காண்கிறோம். நீ, வாழ்வாகிய சமுத்திரத்தில் அதின் ஆழம் தெரியாமல் அதற்குள் நிறைந்து, ஆனால் மறைந்திருக்கும் ரத்தினங்கள் இருப்பது தெரியாமல் மிதந்து கொண்டிருக்கிறாய். ஆனால் உன்னைப்போலுள்ளவர்களுக்கு என்றுதான் பொருள்களைவிட, லட்சியந்தான், கொள்கைதான் பெரிது என்று தெரியுமோ?

1930ம் வருஷம் காந்தியடிகள் சத்தியாக்கிரஹம் ஆரம்பித்தபொழுது நாங்கள் அனுபவித்த சந்தோஷம், எங்களுக்கு இருந்த உத்ஸாகம், தியாகம் செய்யும் மனப்பான்மை உனக்குச் சொன்னால் விளங்காது. ஒரு லட்சியத்துக்காக பாடு படுவதில் உள்ள சந்தோஷம் அந்த லட்சியத்தை அடைவதில் கிடையாது. அந்த சில நாட்களில் 1000-வருஷத்தில் நாம் அடையவேண்டிய முன்னேற்றம் ஒரு கணப் பொழுதில் அடைந்தோம். அச்சமயத்தில் படித்தவர்கள் செய்த தியாகம் பெரிதல்ல. ஞானம் அதிகம் படைக்காதவர்கள், பாமரஜனங்கள் என்று நாம் சொல்லக்கூடியவர்கள், என்ன

தைரியம் காட்டினார்கள்? என்ன வீரம் காட்டினார்கள்? என்ன தியாகம் செய்தார்கள் என்று உனக்கு, சொன்னால்கூட தெரியாது.

'சுயராஜ்யம் வந்தால் இந்தியா எப்படி மாறும்? அப்புதிய இந்தியா எப்படி இருக்கும்' என்று நீ கேட்கிறாய். இதற்கு பதில் சொல்வதற்கு முன், நமது தேசத்திலுள்ளவர்களுக்கு வாழ்விற்கு இன்றியமையாதவை எவை என்பதைத் தெரிந்து கொண்டுதான் பதில் சொல்ல வேண்டும். உன்னுடன் சேர்ந்தவர்களுக்கு இன்றியமையாதவை, ஆஸனமா? உணவு, உடுப்பு, புஸ்தகம், விளக்கு, படுக்கையா? ஆனால் உண்மை மனிதனுக்கு, இவைகள் அவசியமானாலும் இவைகளைவிட அத்யாவசியமானவை, அஞ்சாத நெஞ்சமும், "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன்" கொள்கையும, இயற்கையின் அழகை அனுபவித்து மெய் மறந்திருக்கும் மனப்பான்மையுமே யாகும்.

எங்களுடைய புதிய இந்தியாவில் ஒவ்வொரு மனிதனுக்கும் அழகான அநேக அறைகள் அடங்கிய மாளிகையும், எலக்டிரிக் விளக்கும், வெளியில் உல்லாஸமாய்க் காற்று வாங்க மோட்டாரும், ரேடியோவும் கிடைக்கும் என்று உனக்கு ஆசைகாட்ட நான் விரும்பவில்லை. அதுமாதிரி கிடைக்கும் என்று மனப்பால் குடிக்காதே. மூர் என்ற பெரியார் "உடோபியா" என்ற ஓர் கற்பனை உலகத்தை சிருஷ்டித்து எழுதிவிட்டுப் போனார். ஆனால் அவ்வுலகத்தை இது வரையில் ஒருவரும் காணவில்லை.

நமது நாட்டில் இப்மாதிரி புது உலகம் வரப்போகிறது என்று நினைக்கிறவர்கள் ஏமாற்றம் அடைவார்கள் என்பது நிச்சயம். தேக சுகத்தையே பெரிதாகக் கருதி, ஒருவாறு அந்த சுகத்தை அடைந்தவர்கள் இம்மாதிரி கற்பனை உலகத்தைப்பற்றிக் கனவுகண்டு கொண்டிருக்கட்டும். அவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அவர்களிடம் பாரதியார் "காணி நிலம் வேண்டும்" என்று எழுதியிருக்கிறார் என்று சொன்னால் சிரிப்பார்கள். "காணி நிலம் வேண்டும்" என்று எழுதினதினால் நமது நாட்டில் யாவருக்கும் ஒருகாணி நிலந்தான் இருக்கவேண்டும் என்பது பாரதியாரின் கருத்துஅல்ல என்றாலும், அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அந்தப்பாட்டின் கருத்து ஒருகாணி நிலம் இருப்பவர்கள் கூட சந்தோஷமாக வாழலாம் என்று கொள்ளவேண்டும் என்றால், நாம் பாரதியாரை நன்றாகத் தெரிந்துகொள்ளவில்லை என்று நம்மை அவர்கள் ஏளனம் செய்வார்கள்.

நீ கேட்டதற்கு பதில் சொல்லாமல் ஏதேதோ எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்காதே.

புதிய இந்தியாவில் தொழில் செய்து வாழ்பவர்களுக்கெல்லாம் சுகமாக வாழ சிறு குடிசைகளாவது கட்டிக்கொடுக்கப்படும். அக்குடிசைகளை சுத்தமாக வைத்துக்கொண்டிருப்பதற்கு வேண்டிய சுகாதாரஞானம் கற்றுக்கொடுக்கப்படும். பணக்காரன் என்றும் ஏழை என்றும் வித்யாசம் காண்பிக்கப்பட மாட்டாது. பணக்காரன் மேலே மேலே பணம் சேர்த்துக்கொண்டுபோய், தொழிலாளி தொழில் செய்து அதற்குத் தகுந்த லாபம் கிடைக்காமல் வருந்தும் இப்பொழுதிருக்கும் இயற்கைக்கு மாறான நிலைமையும் அடியோடு ஒழிந்துவிடும்.

ஏராளமான பணம் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய இயந்திர சாலைகளும், ரயில் பாதைகளும் தனிப்பட்ட நபர்களுக்கோ, கம்பெனிகளுக்கோ சொந்தமாயிருக்கும் நிலைமை மாறி மேலே கண்ட இயந்திரசாலைகள் சர்க்காரால் நடத்தப்படும். அரசாங்கம் உண்மையாகவே ஜனங்களுடைய அரசாங்கமாய் இருக்கும். படிக்கத் தெரியாதவர்கள் நமது நாட்டில் இருக்கமாட்டார்கள். ஆண்மையும், வீரமும், தேசாபிமானமும் ஊட்டக்கூடிய கல்விதான் கற்பிக்கப்படும். சத்திரங் கட்டுவதைவிட எழுத்தறிவிப்பது உயர்ந்த தர்மம் என்பதை யாவரும் உணர்ந்தவர்களாய் இருப்பார்கள்.

யாரும் நோய் வாய்ப்பட்டு வருந்தாமல் இருக்க வேண்டி பொது ஆஸ்பத்திரிகள் எங்கும் ஏற்படுத்தப்படும். ஜனங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் வேலை செய்ய நேராது. யாவரும் ஓய்வுக்காக வெளியே போகும் பொழுது காதிற்கினிமையாய்க் கேட்க சங்கீதமும், கண்ணிற்குக் குளிர்ச்சியாய் எங்கு பார்த்தாலும் இயற்கை வனப்பும் நிறைந்திருக்கும். சுருங்கச் சொல்லின், நமது நாடே, உலகத்தில் யாவரும் பார்த்துப் புகழும்படியான ஒரு புதிய, ஒரு அழகிய நாடாக விளங்கும்.

சுயராஜ்யம் வந்தவுடனே இம்மாதிரி நமது நாடு தானாக மாறிவிடும் என்று நான் சொல்லவில்லை. நம்முடைய நாட்டுப் பெரியார்கள் புனிதமான நோக்கமுள்ளவர்களானால், தூய்மையான ஹிருதயமுள்ளவர்களானால், தியாக புத்தியுடையவர்களானால், சுயராஜ்யம் வந்த சில நாட்களில் இம்மாதிரி நமது நாட்டை மாற்றுவது நிச்சயம்; அது அசாத்தியமல்ல.

ஆனால் உங்கள் சுயராஜ்யம் தான் எப்பொழுது வரப்போகிறது என்று நீ சிரிக்கிறாய்! கடைசியில் சிரிக்கிறவன் தான் நன்

[760-ம் பக்கம் பார்க்க]


திரிகால் ரேகை சாஸ்திரம்

ஒரு மகாராஜாவின் கை ரேகையும் பலன்களும்

(சக்தி தாஸன் எழுதியது)

ரேகைப் பலன்களைத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளோருக்கு உதவியாயிருக்கும் பொருட்டு, கை ரேகைகளின் அமைப்பையும், பலா பலன்களையும் விவரிக்கிறேன்.

முதலாவது சாமுத்ரிகா லக்ஷணத்துக்குரிய அங்க அமைப்புகள் பார்த்த மாத்திரத்தில் பலன்களை அறிவிக்கக் கூடியதென்பது எவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே. இதற்கு ஆழ்ந்த ஞானம் வேண்டுவதில்லை. ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் பணக்காரன் அல்லது சாமானியன், தர்மிஷ்டன் அல்லது கஞ்சன் யோக்கியன் அல்லது அயோக்கியன் இவ்வாறு தோற்றத்திலிருந்து தெரிந்துகொள்ள முடியும் ஒரு மனிதருடைய சிநேகிதர் பெயரைக் கொண்டும், ஒருவர் தம் கையில் வைத்திருக்கும் நூலைக் கொண்டும் யோக்கிய தாம்சங்களை விளக்கிவிடலாமென்று சொல்வதுண்டு. இன்னும் நடையுடை பாவனைகளிலிருந்தும் யோக்கியதையைத் தெரிந்து கொள்ளலாம்.



எதிர்பாராதபடி ராஜ தரிசனம் கிடைக்க கூடியதாயிருந்த போது, 'அதை ரேகை பார்ப்பதில் உபயோகித்துக் கொண்டேன்.

சப்த ரேகைகள் உள்பட சகல ரேகைகளும், ஒரே கூட்டமாய் கையில் குவிந்திருந்தன. முதலாவது ரேகைகளுக்குரிய தாரதம்மியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியதாயிருந்தது.

இப்பொழுது படத்தைக் கவனியுங்கள். 1. சுக்கிர மேடு. இதில் தங்கு தடையற்ற செல்வாக்கு ரேகைகள் அமைந்திருக்கின்றன. 2 ஆயுள் ரேகைக்கு அடுத்துள்ள ரேகைக்கு செவ்வாய் ரேகை என்று பெயர். அதைப் போலுள்ள மற்ற ரேகைகளுக்கு செல்வாக்கு ரேகைகள் என்று பெயர். சுக்கிர மேட்டிலுள்ள இந்த ரேகைகள், எண்ணிய எண்ணங்களெல்லாம் இஷ்ட சித்தியான பலன்களைக் கொடுக்கத் தக்கவை என்பதைக் குறிக்கும். இன்னும் ரேகைகள் மிக்க மெல்லியதாய் நிறைந்திருப்பதால், எண்ணம் உதித்ததும், ஆக்ஞையின்றியே, நோக்கமறிந்தே, சமயோசிதமாய் காரியத்தில் நடைபெற்று வருமென்பதை யறிவிக்கின்றன. சித்த சயல மில்லை யென்பதும் அனுவசியமான சங்கல்பமில்லை யென்பதும் இதனால் விளங்கும்.

இவ்வித செல்வாக்கு ரேகைகள் துறவிகளுக்கு அல்லது உள்ளத் துறவுடையோர்களுக் கிருக்குமாயின் சத்திய சங்கல்பமுள்ளவர்கள் என்பதைத் தெரிவிப்பதாகும்.

2. இது ஆயுள் ரேகை. இது தொடர்ந்து, குறுக்கிட்ட ரேகை, புள்ளி, தடை இவைகளின்றி யிருப்பதால் நோயற்ற வாழ்வையும் தீர்க்காயுளையும் குறிக்கின்றது.

3. இது விதி ரேகை. இது பிராரப்த பலாபலமாயினும் சனியின் ஆதிக்கத்துக் குட்பட்டது. இதில் நெருங்கிய மெல்லிய ரேகைகள் தொடர்ந்திருப்பதைப் படத்தில் பார்க்கவும். இந்த விதி ரேகை லாப நஷ்டத்தை நன்கு தெளிவு படுத்தக் கூடியது. படத்தில் குறிப்பிட்ட ரேகைகள் வெகு சிலாக்கியமானவை. அதிக லாபத்தை, அபரிமிதமான செல்வத்தைக் குறிப்பதாகும். மகாராஜா குபேர சம்பத் துடையவரன்றோ!

5. இது விதிரேகைகள் நின்றவிடம். அது நாற்பத்தி யாறுவது வயதைக் குறிக்கிறது. அதே வயதில் தனரேகை யாகிய (5) சூரிய ரேகையும் துண்டு பட்டு நிற்கிறது. ஆகையால் செல்வ நெருக்கடி என்பதாகும். விதிரேகைகள் நின்று வேறு உற்பத்தியாகி மேல் நோக்கி யிருப்பதால், சனியின் உச்சநிலை கவிழ்ந்து விட்டது. ஆகையால் சுமார் இரண்டாயிரம் மைலுக்கப்பால் அனுப்பி விட்டது. என்றாலும் பழைய நிலைமைக்கு இடமுண்டு. எப்படியெனில் இம்மாதிரி அமைப்புள்ள ஒருவர் நூற்றுக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருந்தார். அவர் தன் கையை பலபேர் முன்

னிலையில் என்னிடம் காட்டி பலன் சொல்லும்படி கேட்டார். இது சோதிடமல்ல வாதலால் தனிமையில் வந்து தெரிந்து கொள்ளும் படி தெரிவித்தேன். இரண்டு வாரம் சென்றதும், முன் சொன்னதை மறந்து அவ்விதமே கேட்டார். தன்னுடைய அதிர்ஷ்டத்தில் ரகசிய மில்லையென்றும், பகிரங்கமாய் சொல்வதில் ஆட்சேபனை யில்லை யென்றும் சொன்னார். அவருடைய நாற்பதாவது வயதில் ஒற்றை விதிரேகை அவ்விதமே அமைந்திருந்தது. அப்பொழுது நாற்பதாவது வயதாகையால் கீழ்க்கண்டவாறு பலன் சொன்னேன்.

"இப்பொழுது உங்கள் கால்கள் கீழே பாவவில்லை. இரக்கைகள் இருந்தால் பறந்து விடுவீர்கள். அவ்வளவு கஷ்ட நஷ்ட மிருக்கிறது. சமீபத்தில் வெளியூர் போகவும் நேரிடலா மென்றேன்"

இது திடுக்கிடும் செய்தியா யிருந்ததால் மௌனம் சாதித்தார். மேற் கண்டவாறு சொல்லிய ஒரு வாரத்துக்குள் நான் சொன்ன யாவும் நிகழ்ந்தன. வரும்படி குறைந்திருந்தாலும் அதே யிடத்தி லிருந்து வருகிறார்.

இதைக் கவனிக்கும்போது மகாராஜா தன் யதாஸ்தானத்தை அடைய சந்தர்ப்ப முண்டு. மேற்கொண்டு விதிரேகைகள் அமைந்திருப்பதையும் கவனிக்கவும். சுமார் ஐந்து அல்லது ஆறு மாத காலத்தில் திருத்தம் பெறலாம். இதற்கு மத்தியில் கவலை, கஷ்டம், பிணி முதலியன ஏற்படலாம். உயிருக்கு ஆபத்தில்லை. மனம் சாந்த நிலைக்கே முயன்றிடும்.

7. இது புதன்மேடு. ரேகை யின்றி உப்பலா யிருக்கிறது. இது சகல சாஸ்திர சம்பன்னன் என்பதைக் குறிக்கும். வித்வத் சன்னியாசத்தையும் அறிவிக்கிறது.

8. குருமேடு. இதில் ஒரு மெல்லிய ரேகை குறுக்கிட்டிருக்கிறது. குரு கம்பீர ஸ்தானத்திலிருந்தும் சொற்ப தோஷமுடையது. இதிலும் ரேகையில்லாதிருந்தால் மிகவும் நல்லதாயிருக்கும், ரேகை பலனை அளந்து காட்டுவதாகும்.

6. இது இருதய ரேகையிலுள்ள புள்ளி. இருதய சம்பந்தமான நோயுண்டாகும் என்பதைக் குறிக்கும். இருதய ரேகையில் வயதைக் கணக்கிடுங்கால் தற்கால வயதாகிய நாற்பத்தாறுகும்.

9. சந்திரமேடு. இது நல்ல நிலைமையைக்குறிக்கிறது. நிதான புத்தியையும் ஆழ்ந்த சிந்தனையையும் தெரிவிக்கிறது.

10. இது புத்திரேகை. இது விட்டுப்பிரிந்திருப்பதால் பிற்காலத்தில் உலக சிந்தனைபற்று, ஆத்மஞானத்திலிருப்பாரென்பதைக் குறிக்கிறது.

11. இருதய ரேகைக்கும் புத்திரேகைக்கும் மத்தியில் விதி ரேகையை துண்டுபடுத்தி நிற்கும் விரோத ரேகை. இது அதிகரித்த விரோதத்தைக் காட்டும். இதன் கடூரத்தன்மை ஐந்து மாத காலமிருக்கும்.

12. இந்த .ஆரோக்கியரேகை ஞானரேகையில் குறுக்கிட்டுச் சென்றிருப்பதால், திரிகால ஞானத்தை சாஸ்திரோக்தமாய்த் தெரிவிக்கும் தத்துவ சாஸ்திரம், சோதிடம், ரேகை சாஸ்திரம், கணித சாஸ்திர முதலியவைகளில் தேர்ச்சியை விளக்கும்.

13. ஞானரேகை—இது ஸ்வயம் பிரக்ஞையைக் குறிக்கிறது. இதுவே தீர்க்க தரிசனம் தரும்.

14. இது சாஸ்திர நிபுணத்துவத்தை விளக்குகிறது.

விரல்களின் கணுக்கள் கெட்டியாய் கனத்தும், கணுவுக்கு கணு மத்தியில் ஒடுங்கியு மிருப்பதால பெருந்தன்மை, கௌரவமான புத்தி, அரசுரிமை, பராமரிப்பு இவைகளை பொதுவி லறிப்பதாகும்.

விரல்கள் கூராயமைந்திருப்பதால், கலங்காத மனத்தையும், தெளிந்த புத்தி நிலைமையையும் வெளிப்படுத்துகின்றன.

மனித ஜென்மம் அரசுரிமையிலிருந்தாலும், கிரகங்களின் ஆதிக்கத்துக்குட்பட்டு பிராரத்த கர்மங்களை அனுபவிப்பர். பொதுவாய் அரசனாய் பிறப்போர் பூர்வ ஜென்மங்களில் அபார தர்மங்களைச் செய்து, ஆத்ம ஞானத்தை யடைந்திருப்ப ரென்னும் சொல்லப்படுகிறது.

(756-ம் பக்கத் தொடர்ச்சி)

றாய் சிரிப்பான் என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நீ இப்பொழுது சிரித்துக் கொண்டிருக்கிறாய். நீ சிறியவன்! உனக்கு ஈசன் நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டும். அப்பொழுது நாங்கள் சிரிக்கும் காலம் வரும். அப்பொழுது உன்னைத் தள்ளி விடமாட்டோம். இப்பொழுது மேலாக மிதக்கும் கோழைத்தனம், சோர்வு எல்லாம் எரிந்து போய்விடும். அப்புறம் சுதந்திர சூரியன் பிரகாசமாய் உதிப்பான். அப்போது, தம்பீ, அதன் ஒளியிடை நானும் நீயும் ஆனந்தமாய்க் குளிப்போம். அதற்குள் உன் கண்ணை மறைத்திருக்கும் சுயநலம், சுகத்தில் பிரியம், பயம், எல்லாவற்றையும், துடைத்து விட்டு நமது பாரதத்தாய் இதர நாட்டுத் தாய்களுடன் சமமாய் அழகுடனும், புது உயிருடனும் தலை தூக்கி உறவாடும் காட்சியைப் பார்க்கத்தயாரா யிரு.

உன் அன்புள்ள, ரா. நா. (பி.ஏ., பி.எல்., திருச்சி.)

Printed at the "Tamil Nadu" Press, Madras. Published by T. S. Chockalingam, Editor & Proprietor, "Gandhi" Office, 29, Sembudoss St., Madras.

காந்தி

ஆசிரியர்: தே. ச. சொக்கலிங்கம்

மாலை 2. { 1933 டிசம்பர் 27உ
29 செம்புதாஸ் தெரு, சென்னை } மலர் 10.

அட்டவணை.

மகாத்மாவின் மகத்துவம்

சென்னைக்கு காந்தி வந்தார்; இரண்டு இலட்சம் ஜனங்கள் மகாத்மாவின் தரிசனத்துக்காக, திருவல்லிக்கேணி கடற்கரையில் காத்துக் கொண்டிருந்தார்கள் என்று நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். இந்த "ஆண்டிப்பண்டாரத்தை" ஒத்த காந்தியின் மகத்துவம் எங்கிருந்து விளைகிறது?

அவருடைய "மகாத்மா" என்ற பட்டத்தினலா? ஏழைகளைப் போல உடைதரித்துக் கொள்ளும் வகையினலா? ரயிலில் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்யும் பெருந்தன்மையினலா? கண்டவர்களிடமிருந்து, பணத்தைப் பறிமுதல் செய்யும் அவரது நாகரிக, நய ஆற்றலினலா?

அவரது ஓயாத உழைப்பினலா? சலிக்காத அன்பினலா? தளராத ஊக்கத்தினலா? மாசற்ற நெஞ்சத்தினலா? உயிரைத் துரும்பாக மதிக்கும் தைரியத்தினலா? பகைவன் என்று யாரையும் மதிக்காத தன்மையினலா? எதனலே, அவருக்கு மகத்துவம் ஏற்பட்டிருக்கிறது?

உலக சரித்திரத்திலே, தலைவர்கள் தலைவர்களாகவே வாழ்ந்து, மறைந்தார்கள். தலைமைப் பதவியை இழந்த தலைவர்கள் தவித்து, உள்ளம் உடைந்து போவார்கள். ஆனல் காந்தியின் மனோபாவம் அந்த சுருதியில் இணைக்கப்பட்டதல்ல. அவருடைய மனோபாவம் ஒரு அற்புத மனோபாவம்.

சென்னை நகர சபையில், காந்தி சொன்னது நாட்டில் எங்கும் 'கணீர்' என்று கேட்டிருக்கும். காந்தி என்ன சொன்னர்? தாம் தோட்டி என்று சொன்னர். குப்பைவாரித் தோட்டி என்று பகிரங்கமாக, வினயத்துடன், மனக்கசப்பில்லாமல், பெருமையுடன் சொல்லிக் கொள்ள, காந்தியைத் தவிர வேறு யாரால் முடியும்?

டம்பத்துக்காக, பாவனை அடக்கம் காண்பிப்பவர் காந்தியல்ல. தாம் கேவலத்திலும் கேவலம் என்று உண்மையாகச் சொல்லும் ஒருவரை, உலகம் உயர்த்தாமலிருக்குமா? கேவலத்தைப் பெருமை

யாகக் கொள்ளும் மனப்பான்மை மனிதனுக்கு இருக்கவேண்டும் என்று செயல், மூலமாக, பகிரங்கப் படுத்தும் காந்தியின் மகத்துவம் எங்கிருந்து விளைகின்றது என்று இனியும் நாம் தேட வேண்டியதில்லை. இது ஒரு காரணம்.

ஓடிக்கொண்டே யிருந்தால் ஆறு. நீர் தேங்கி நின்றால் குட்டை குளம், ஏரி. மகான்களுடைய வாழ்வு ஆற்றைப்போல. அது ஓடிக் கொண்டே யிருக்கும். பலவகைப்பட்ட நிலங்களை செழிக்கச் செய்யும். சிறிய மனிதர்களுடைய வாழ்வு குட்டையைப்போல தேங்கி பாசி பிடித்துப் போகும்.

மரண பயமில்லாத காந்திக்கு பூர்வ ஜன்மமும், இந்த ஜன்மமும், அடுத்த ஜன்மமும், ஆற்று நீரைப்போல ஓடிக்கொண்டிருக்கின்றன. ஜனனத்தையும் மரணத்தையும் ஒன்றாய்ப் பார்ப்பவர், பாவிப்பவர் காந்தி. எனவே, இயற்கையின் ரகஸியத்தை, படைப்பின் மர்மத்தை அறிந்தவர், உணர்ந்தவர். குட்டையில் தேங்கிய சிறிய நீர்த்துளிகள் தான் தேங்கித் தவிக்கும். அதுபோலவே, சாவுக்கு அஞ்சும் சிறிய மனிதர்கள், மண்பாண்டங்களை யொத்த தேகங்கள்!

ஆனால் காந்தியோ, உடலை ஆட்டிவைக்கிற சக்தியை கைப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டது போல பேசுகிறார்; காரியமும் செய்கிறார். அவர் சலித்துக் கொள்ளுவதில்லை. திரும்பிப் பார்ப்பதுமில்லை, நேர் முகமாக, முன்னே, முன்னே, நோக்கி, வாழ்க்கையை நடத்துகிறார். செத்தால் என்ன நேருமோ என்று நாம் எல்லோரும் பயப்படுகிறோம். செத்தால் என்ன என்று அவர் சிரிக்கிறார். மகாத்மாவின் மகத்துவத்துக்கு இதுதான் முடிவான காரணம்.

எனக்கு மலையாளத்தி லிருக்கும் பெண்மணிகளின் பேரில் காதல் என்று காந்தி ஒருவர் தான், அவ்வாறு சொல்ல முடியும். தொண்டு கிழமானாலும், இம்மாதிரி, யாருமே, பேச மாட்டார்கள், பேச முடியாது. காந்தியின் நிர்மலமான இதயம் எந்த உணர்ச்சியை மேற் கொண்டாலும், அதிலே யாருக்குமே சந்தேகம் எற்படுவதே யில்லை. காந்தி வெறும் சத்தியவசனன் அல்ல; அவா சத்தியசீலன். வாழ்க்கையின் அடிப்படையான உண்மையைக் கண்டு தெளிந்து, அந்த உண்மையை, அனுபவத்தில் மயிரிழை கூடப் பிசகாமல், காட்டும் ஒழுக்க முடையவர். மனிதனுக்கு வேறு, என்ன மகத்துவம் வேண்டும்?


SARMA

திருக்குறள் விளக்கம்

மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்

—குறள் (1116)

Stars stray away from their paths on high
Knowing not which is the moon and which her face.

—ஆங்கில குறள் : கு. சீனிவாசன்.

தன் காதலியின் அழகைப்பற்றி வர்ணிக்கிறான். அவள் முகம் சந்திரனைப் போலிருக்கிறதாம். சந்திரன் எவ்வளவு குளிர்ச்சியைத் தருகிறதோ அவ்வளவு குளிர்ச்சியை அவள் முகம் கொடுக்கிறது. இதோடு அவன் விட்டுவிடவில்லை. ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள், இவள் முகத்தையும் சந்திரன் முகத்தையும பார்த்து எது சந்திரன் எது இவள் முகம் என்று தெரியாமல் கலங்கி ஓடுகின்றன என்று சொல்லுகிறான். சந்திரனுக்கு தேய்தல் வளர்தல் இரண்டுமுண்டு. அதோடு கொஞ்சம் களங்கமுமுண்டு. காதலியின் முகத்திற்கு அவை கிடையா. அப்படியிருந்தும் இந்த நட்சத்திரங்களுக்கு ஏன் வித்தியாசம் தெரியவில்லை என்று கேட்கிறான்.

அடுத்த மலரில் மற்றொரு படம் வெளிவரும்.

எஸ். ஸத்தியமூர்த்தி

(வ. ரா.)

எல்லா ஜீவராசிகளும் ஒன்றுபோல இல்லாததுதான் சிருஷ்டியின் விசித்திரம். தோற்றத்திலும் குண அமைப்பிலும் மாறுபட்ட விசித்திரங்களினூடே, ஒருவகை ஒற்றுமைச் சரடு ஓடுவது, சிருஷ்டியின் விசித்திரத்திலும் விசித்திரம். தர்க்க சாஸ்திரத்தைக் கொண்டு, சிருஷ்டியின் விசித்திரத்தின் தன்மையை அளவு எடுக்க முடியாது, ஆழங் காண முடியாது; ஸத்தியமூர்த்தி ஒரு விசித்திர சிருஷ்டி.

ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரம், லட்சம், கோடி என்று முழு எண்களை எண்ணி விடலாம்; சரியாக உச்சரித்து விடலாம்; அல்லது கற்பனை செய்து கொள்ளலாம். முக்காலே அரைக்காலே அரை வீசம்......என்று நீட்டிக்கொண்டே போனால், அதை சரியாக மனதில் இருத்தி, உச்சரிப்பதும் கஷ்டம்; அந்தப் பொருளின் மூளியை நீக்கி, முழுப் பொருளாகக் கற்பனை செய்வதும் அனேகமாய் முடியாத காரியம். இதுபோலவே, மகத்தையும் (பிரம்மாண்டம் என்று சாதாரணமாய்ச் சொல்லப் படுவது) கற்பனைக்குள் படம் பிடிப்பது கடினமான வேலை.

ஸத்தியமூர்த்தி என்ற படைப்பிலே, ஏதோ ஒரு பக்கத்தில் மூளியிருக்கிறது. அது எந்தப் பக்கத்திலிருக்கிறது, அந்த குறை இன்னதுதான் என்று திட்டமாய்க் கை வைத்துத் தொட்டுச் சொல்ல முடியாது. நம் நாட்டுத் தலைவர்களில், இன்ன தலைவருக்கு, இன்னதுதான் குறை என்று "பிறந்த மேனிக்கு"ச் சொல்லிவிடலாம். காந்தியின் சக்தி இன்னதுதான் என்று சொல்ல முடியாது. ஸத்தியமூர்த்தியின் குறை இன்னதுதான் என்று நெஞ்சுத் துணிச்சலுடன் யாருமே சொல்ல முடியாது.

தர்க்க வாதத்தின் மூலமாய் ஆளை மடக்குகிற வேலையில், ராஜகோபாலாச்சாரியாருக்கு, ஸத்திய மூர்த்தி சளைத்தவரல்ல. பிரசங்க மழை பொழிவதில், ராமஸ்வாமி நாய்க்கருக்கு ஸத்தியமூர்த்தி சரியான ஜோடி. நுட்பமான அனுபவ யுக்தியில் ஸத்தியமூர்த்தி வரத

ராஜுலு நாயுடுவுக்கு இளைத்தவரல்ல. கவிரஸம் அனுபவிப்பதில் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யரை, குப்புற வீழ்த்தி, "பீட்" காண்பித்து விடுவார் ஸத்தியமூர்த்தி. சட்டை சபையில் ஸம்ஸ்கிருத சுலோகம் சொல்லுவதில், ஸத்தியமூர்த்தியும் பனகால் ராஜாவும் அற்புதமான இரட்டையர்கள்.

அரசியல் அறிவில், ஜவஹர்லாலுக்கு, சரிசமமாக நிற்கக்கூடிய ஆற்றல் ஸத்தியமூர்த்திக்கு உண்டு. இடைச் செருகலாக, ஆளைக் குத்தி குடலைப்பிடுங்கும் சொல்லம்பு வேலையில், திவான் பகதூர் ராமஸ்வாமி முதலியாரையும் ஸத்தியமூர்த்தியையும் முன் ஏரில் பூட்டலாம். சாஸ்திரம், ஸ்மிருதி முதலிய சங்கதிகளில், சத்தம் போட்டு "லவுட்ஸ்பீகர்" போல் பேசும் பூரி சங்கராச்சாரியாரை, ஒரே அடியில் ஸத்தியமூர்த்தி வீழ்த்திவிடுவார்.

சில்லரை ரஸிகத் தனமைகளான குங்குமப் பொட்டு, வீர சங்கிலி, சந்தனப்பூச்சு முதலியவைகளில், பழுத்த மைனர்களைக்கூட ஸத்தியமூர்த்தியின் காலில் கட்டி அடிக்கவேண்டும். நாடகத்திலே, "பார்ட்டு" போட்டுக்கொண்டு நடிப்பதில், ஸத்தியமூர்த்திக்கு ரொம்ப ஆசை. "உலகம் பாழ்; வாழ்வு சூன்யம்" என்ற அபத்த வேதாந்தமும் அவரிடம் கிடையாது. தேசபக்தி குறைவும் அவரிடம் இல்லை. அவருடைய வாய்த் துடுக்கிலே, ஒளியும் விசடமும் பிரகாசித்து, மின்னும்.

என்றாலும், ஜனங்கள், முழுவதும் அவரை நம்புவது மில்லை; அவரை, அலட்சியத்துடன் தள்ளிவிடவும், ஜனங்களால் முடிவது மில்லை. இதன் காரணத்தைத் தான், அவருடைய குறையென்று தலைப்பில் குறிப்பிட்டது. காந்தி, தாம் எத்தனையோ ஹிமாலயத்தை யொத்த தப்பிதங்கள் செய்வதாக, அடிக்கடி சொல்லுகிறார். எனினும், இந்தியாவுக்கு விடுதலை அவர் மூலமாய்த்தான் வர முடியும் என்று நம்பி, ஜனங்கள் இன்றும் நெருக்கமாக, அவருடன் ஒட்டிக்கொள்ளுகிறார்கள். தீர்க்க தரிசனத்துடன், ஸத்தியமூர்த்தி யோசனை சொன்னாலும், ஜனங்கள் அதை எளிதிலே ஏற்பதில்லை.

இதை, ஜனனகால விசேஷம் என்பார்கள் சிலர். வேறு என்னவெல்லாமோ, காரணங்கள் சொல்லுவார்கள். காரணங்களுக்கா, உலகத்தில் குறைவு? ஆனால், ஏறக்குறைய உண்மையான காரணம் தான் கண்ணில் படுவதில்லை.

ஸத்தியமூர்த்தி பிறந்த வருஷம் 1887. அதே வருஷத்தில் தான் ஜோஸப் பிறந்தார். வரதராஜுலு நாயுடுவும் பிறந்தார். இந்த வருஷத்தில் பிறந்தவர்கள் பெரிய மனிதர்களாவார்கள் என்பது

அந்த ஆண்டின் பலனே என்னவோ? வருஷாதி நூலைப் பார்த்தால் தெரியும்.

ஸத்தியமூர்த்தி புதுக்கோட்டை சமஸ்தானத்தில் திருமயம் என்ற, க்ஷேத்திரத்தில் பிறந்தவர். ஸத்தியமூர்த்தி என்ற அழகிய பெயர் அவருக்குக் கிடைத்தது திருமயத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளின் கிருபையால்; க்ஷேத்திர அதிபதியான பெருமாளுக்கும் இதே பெயர்.

நம்முடைய தேசத்தில், குழந்தைகளுக்கு அழகான பெயர் அமைவது அருமை. சினிவாஸய்யங்கார், ராஜகோபாலாச்சாரியார் என்ற நீண்ட பெயர்களை, வடநாட்டாரும் அன்னியர்களும் உடைக்காமல் உச்சரிக்கமுடியாது. ஸத்தியமூர்த்தி என்ற பெயருக்கு அந்த பயம் கிடையாது. ஸத்தியமூர்த்திக்கு இந்தப் பெயர் வாய்த்தது அதிருஷ்டமென்றே சொல்லவேண்டும்.

அன்னியர்கள் இந்தியப் பெயர்களை எவ்வாறு கெடுக்கிறார்கள் என்பதற்கு, பொருத்தமாயுள்ள ஒரு சிறு சம்பவத்தை சேலம் பாரிஸ்டர் ஆதிநாராயண செட்டியார் என்னிடம் சொன்னது எனக்கு இந்த சமயம் நினைவு வருகிறது. பாரிஸ்டர் பரீட்சையில் தேறியவர்களின் பெயர்களைக் கூப்பிடும்பொழுது, செட்டியார் அவர்களை "மிஸ்டர் அவர்கள்" என்று கூப்பிட்டார்கள். நகைக்கத்தக்க அளவு, அன்னியர்கள் இந்தியர்களின் பெயர்களை சித்திரவதை செய்கிறார்களாம்! எனவே, ஸத்தியமூர்த்தி பாக்கியசாலி என்று சொல்லுவதில் தடையென்ன இருக்கிறது?

புதுக்கோட்டையில் படிப்பைத் துவக்கி, சென்னை கிருஸ்தவன் காலேஜ், சட்டகாலேஜ், இவைகளில் படித்து, ஸத்தியமூர்த்தி பீ. ஏ. பி. எல். ஆனார். படிக்கும்பொழுதே, அவர் "வாயாடி" என்ற பட்டமும் புகழும் பெற்றுவிட்டாராம்! இயற்கையாகவே, ஒருவகைத் துடுக்கும் துடிதுடிப்பும் இல்லாதவர்களுக்கு, பேச்சு சாமர்த்தியம் உண்டாக முடியாது.

தேச பக்தி என்பது நடுவயதிலே ஏற்படக்கூடிய ஒரு உணர்ச்சியல்ல. தன் மதிப்புள்ளவர்கள் தேச பக்தர்களாகத்தான் இருக்க முடியும். அநீதியைப் பொறுத்துக் கொண்டிருக்க, அவர்களால் முடியாது. தேசபக்தி பித்துப் பிடித்தவனுக்கு, எந்தத் தொழிலிலும்—சிறப்பாக பணம் சம்பாதிக்கும் தொழிலில்—மனம் செல்லாது. அதுவும் அடிமை நாட்டு தேச பக்தர்களுக்கு விடுதலையொன்றே, குறியாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எந்தத் துறையில்

சென்றாலும், சுற்றிச்சுற்றி, தேச பக்தி குறுக்கே வந்து நிற்கும். இந்த தொல்லேயே, ஸத்திய மூர்த்தியை இப்பொழுதும் சூழ்ந்து கொண்டு நிற்கிறது.

சுதந்திர மிருக்கும் நாட்டில் பிறந்த பர்க்கென்ஹெட் பிரபு ஆங்கில நாட்டு அரசியலில் பெரும் பதவியை அடைந்தார். ஸத்திய மூர்த்தியின் குணங் குறைகளுக்கு நேராயுள்ளவர் காலஞ்சென்ற இந்தியா மந்திரி பர்க்கென்ஹெட் பிரபுதான். இருவரும் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்கள். பேச்சு சாமர்த்தியம் இருவருக்கும் ரொம்ப ஜாஸ்தி. வாய்த்துடுக்கிலே வளர்ந்து, அதனாலேயே மேலேறியவர் பாக்கென்ஹெட் பிரபு. அவரைத் தான் ஸத்தியமூர்த்திக்கு உவமையாகச் சொல்லலாம்.

ஸத்தியமூர்த்தி தேச பந்து தாஸின் சிஷ்யன்; சட்ட சபை நிபுணர். சட்ட சபைக்குரிய சாஸ்திரத்திலே முழுகி எழுந்திருக்கிறவர் ஸத்திய மூர்த்தி. சட்ட சபையின் மர்மங்கள், அவருக்குத் தலைகீழாய்த் தெரியும்; எந்தப் பேச்சை வளர்க்கிறது, எப்படி முட்டுக்கட்டை போடுகிறது, எதிரியை எவ்வாறு படீர் என்று அடிக்கிறது, எந்த இடத்தில் ஹாஸ்யத்தைப் புகவிடுவது, தடுக்கி விழுந்தாலும் வஸ்தாத் வேலை என்று தைரியமாய் அடித்துப் பேசுவது, எந்த சந்தர்ப்பத்தில் மௌனம் சாதிப்பது—இவைகள் யாவும் அவருக்கு குருட்டுப் பாடம்.

சென்னை சட்ட சபைக்கு ஸர். பி. ராஜகோபாலாச்சாரியார் தலைமை வகித்த காலத்தில், ஸத்தியமூர்த்தி, பனகால் ராஜா, ராமஸ்வாமி முதலியார், ஸி. பி ராமஸ்வாமி அய்யர்—இவர்கள் நான்கு பேர்களும் சட்டசபையைப் படுத்தி வைத்த பாடு, "கங்குகரை" இல்லை. சட்டசபை நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வரையிலும், இந்த நான்கு பேர்களும் மகா சமர்த்தர்கள். ஒருவர் மற்றவரை மிஞ்சி விடமாட்டார்கள். இவர்களுக்குள், தனிமதிப்பு ஸத்திய மூர்த்தியைத்தான் சேர்ந்ததாகும். ஏனெனின், இவருடைய யுத்தம் மற்ற மூன்று பேர்களுடன்.

ஸத்திய மூர்த்தி இங்கிலாந்துக்குப் போனது எல்லாருக்கும் தெரியும். "சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல"—இது ஸத்தியமூர்த்தியின் அருமைத் தொடர்மொழி; இதை அவர் ஸ்வீகாரம் பண்ணிக்கொண்டு விட்டார் என்று தோன்றுகிறது.—இங்கிலாந்திலே, அவர் பிரஸங்கங்கள் செய்தார். ஒரு மகாநாட்டில், "இந்தியாவை விட்டு இங்கிலீஷ்காரர்கள் விலகி வந்துவிட்டால், கொள்ளை மிதமிஞ்சிப் போய், இந்தியா பாழாய்ப் போகாதா" என்று ஒருவர் கேட்டாராம். "இங்கிலீஷ்காரன் உலகத்துக்கு போலீஸ்

காரண!" என்று ஸத்தியமூர்த்தி பதில் சொன்னாராம்! "ஒண்ணுந் தா" வாய்த் துடுக்கு!

ஸத்தியமூர்த்தி ஏனைய தேச பக்தர்களைப்போல, சிறைசென்ற தைப்பற்றி, எதற்காக தனித்துப்பேசவேண்டும்? அதிலே விசேஷம் ஒன்றுமே இருப்பதாக, எனக்குத் தெரிய வில்லை.

ஸத்திய மூர்த்தி, காந்தியின் சிஷ்ய வர்க்கத்தைச் சேர்ந்தவர் அல்ல. பொது ஜனங்களின் மகத்தான எழுச்சிக்குக் காரணமா யிருந்தவர் காந்தி, என்ற பெருமதிப்பு ஒன்றுதான் மகாத்மாவுக்குச் சேரும் என்பது ஸத்தியமூர்த்தியின் முடிவான கருத்து. அரசிய வில் காந்தி அவ்வளவாக நிபுணர் அல்ல என்று கூக்குரலிடும் வங் காள, மகாராஷ்டிர கோஷ்டியைச் சேர்ந்தவர் ஸத்தியமூர்த்தி. வாழ்க் கையில் அரசியலை மட்டும் தனியாய்ப் பிரித்துப் பார்ப்பவர்களின் மனப்பான்மையை, சாமான்ய ஜனங்கள் அறியவே முடியாது. இவ் வாறு செய்பவர்கள் ஒரு கண் பார்வை யுள்ளவர்கள் என்று எனக் குத் தோன்றுகிறது.

காந்தியின் செல்வாக்கு அவரது புரட்சி மனப்பான்மையின லே; இந்த மனப்பான்மை ஸத்தியமூர்த்தியிடம் அதிகமாகக் கிடை யாது. அதனலேதான் அடிக்கடி, சட்டசபை முதலிய ராஜி சாத னங்களை நாடுகிருர். கொஞ்சம் கொஞ்சமாய் மெள்ளச் செல்லும் மிதவாதி கோஷ்டியைச் சேர்ந்தவரு மல்ல ஸத்தியமூர்த்தி. அதன லே தான், ஆற்றிலே ஒருகாலும், சேற்றிலே ஒருகாலும் வைக்கும் ஆவல் ஸத்தியமூர்த்தியிடம் குடிகொண்டிருக்கிறது. நாட்டாரின் எதிர்ப்பு சக்தியை வளர்க்கும் வழியை ஸத்தியமூர்த்தி காண முடிய வில்லை. ஆனல் இணையற்ற அரசியல் வாதி. சுதந்திர நாட்டிலே பிறந்திருந்தால், ஸத்தியமூர்த்தி பெரிய பதவிக்கு விரைவில் ஏறி யிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அரசியல் கிளர்ச்சி என்பது பெரும்பான்மையில் கூலி யில்லாத சேவகம், மதிப்பில்லாத வேலையாக முடிந்து விடுகிறது. இந்த தமிழ் நாட்டிலே, ஸத்தியமூர்த்தியைப்போல, வேறு எவரும் இதுவரை யும் தாக்கப்பட்டதே யில்லை. யார்வேண்டுமானலும், ஸத்தியமூர்த்தி யை எளிதிலே திட்டுவதற்கு, கூசுவதில்லை. இவ்வளவு கடுமையாக வேறு எவரும் திட்டுப் பட்டிருப்பார்களானல், அவர்கள் நெஞ்சு உடைந்து போயிருப்பார்கள் என்பது நிச்சயம். அவரிடத்தில் என க்குப் பூரண அன்பும் அனுதாபமும். ஆனல், அவருடைய தலை மையை நான் ஏற்றுக்கொள்ளுவேன? அது வேறு சங்கதி. உள்ளம் தளராத ஸத்தியமூர்த்திக்கு, ஜே போடவேண்டும் என்று எனக்கு கூடத் தோன்றுகிறது.

சீனா-ஜப்பான் பகிஷ்காரம்

(த. ப. நித்தியானந்தன்)

(2)

சமீபத்தில் சீனாவிற்கும் ஜப்பானுக்கும் நடைபெற்ற யுத்தத்தைப் பற்றி வாசகர்கள் அறிவார்கள். அதுபோது மிருகபலமிக்க ஜப்பானியர்களுடன் போர் வலிமையற்ற சீனர்கள் போராடுதற்கு மேற்கொண்ட ஆயுதம் பகிஷ்காரமே. இதுபற்றி இங்கே சிறிது எடுத்துக் கூறுவோம்.

ஜப்பானியர்களைப்போல் சீனர்கள் கைத்தொழிலில் முன்னேற்ற மடையவில்லை. எனினும், அவர்களும் சிறந்த கைத்தொழிலாளர்களே! சீனர்கள் உபயோகித்து வந்த காகிதம் ஜப்பானில் செய்தது. ஜப்பானியப் பொருள்கள் அனைத்தும் பகிஷ்கரிக்கப்பட்டன; ஜப்பானில் செய்யப்பட்ட காகிதத்தை மட்டும் பகிஷ்கரிக்கக் கூடவில்லை. தம் பிரசாரத் துண்டுப் பிரசுரங்களையும், பத்திரிகைகளையும் ஜப்பான் காகிதத்திலேயே அச்சிட்டது பற்றி பிறர் ஏளனம் செய்ய இடமேற்பட்டது. இது கண்ட இளம் மாணவர்கள் ஏனைய நாட்டுக் காகிதங்களை வாங்குவதென முடிவு கட்டினர். ஆனால் விலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஜப்பான் காகிதத்தின் விலை மிகக் குறைவாயிருந்தது. சீனக் காடுகளில் விளையும் பொருள்களைக்கொண்டு காகிதம் செய்வதற்கில்லை. எனவே பழைய கந்தல் காகிதங்களைக்கொண்டு சீன தேசத்தில் தயார் செய்த ஒருவித பழுப்பு நிறமுள்ள காகிதத்தில் பத்திரிகைகளில் சில அச்சிடப்பட்டு வெளிவந்தன.

பீபிங் நகரத்திலுள்ள வியாபாரிகளுக்கும் அங்கிருந்த தீவிர பகிஷ்காரக்காரர்களுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. தம்மிடம் இருப்புள்ள ஜப்பான் சாமான்களை விற்றுவிட இரண்டுமாத தவணை தங்களுக் களிக்க வேண்டுமென வியாபாரிகள் கோரினர். பகிஷ்காரப் பிரச்சினை ஏற்படு முன்னதாகவே ஜப்பான் சரக்குகள் கொள்முதலாகி ரொக்கக் கிரயம் கொடுக்கப்பட்டிருந்துங்கூட, உடனே அந்த சாமான்களை முத்திரை வைத்து விடவேண்டுமென பகிஷ்காரக் கோஷ்டியார் வற்புறுத்தினர். இங்ஙனம் செய்வதனால் நஷ்டம் சீன வியாபாரிகளுக்கேயொழிய ஜப்பானிய வியாபாரிகளுக் கன்று. வியாபாரிகளுக்கு இரண்டுமாத தவணைகள் ஜப்பான் சாமான்களை விற்கும்படி அனுமதித்தாலோ, நாட்டிலுள்ள சமூகமே மேற்கொண்டுள்ள ஒரு மகத்தான இயக்கத்திற்குப் பெருங்கேடு ஆகும். இந்த மனத்தாங்கலைக் காரணமாகக் கொண்டு, பகிஷ்கார

இயக்கம் பொதுஜன இயக்கமன்று என்றும், ஒரு சாரார் நடத்தும் தன்னல இயக்கமென்றும் ஜப்பானியர் குறை கூறினார்கள்.

எந்தப் பொதுஜன இயக்கத்திலும் ஜனங்கள் எல்லோரும் சேர்ந்துவிடுவதில்லை. இந்த இயக்கத்தில் சேரும்படி சில வியாபாரிகளைத் தூண்டவேண்டி சமூதாயக் கட்டுப் பாடுகளை நிறுவ வேண்டி வந்தது. அக் கட்டுப்பாடுகளை மீறியவர்களின் சாமான்கள் பறிமுதலாயின. தேச பக்தியற்ற வியாபாரிகளைப் போல் உருவங்கள் செய்து கூண்டுகளிலடைத்து அக் கூண்டுகளைத் தெருத் தோரும் ஊர்வலமாக இழுத்து வந்தனர். இவர்களது கடைகளின் ஜாபிதா தயாரிக்கப்பட்டுப் பிரசுரமாயின; இத்தகைய பகிஷ்காரத்திற்கு சர்க்கார் அனுமதி கொடுக்கவில்லை யாகவே, இச் செயல்கள் சட்ட வரம்பு கடந்தனவே யாம். ஆங்காங்கே தேசீயக் கைத் தொழில் கண்காட்சி சாலைகள் அமைக்கப்பட்டன. ஜப்பான் சாமான்கள் மீது போடப்பட்டிருக்கும் வியாபாரக் குறியும் அதற்கெதிரே சீனவில் செய்யப்பட்ட அதே சாமானில் போடப்பட்டிருக்கும் வியாபாரக் குறியும் புத்தக ரூபமாகப் பிரசுரிக்கட்டன.

ஹோனன் மாகாணத்தைச் சேர்ந்த செங்செள என்னும் ஊரில் சாதாரணமாக நடத்தி வந்த வியாபாரத்தை நடத்த இயலாமல் ஜப்பானியர் ஊரைவிட்டு ஓடிவிட்டனர். ஹோனன் மாகாணத்தின் தலை நகரமான கைபிங் நகரத்தில் வியாபாரிகள் தம் கடைகளுக்கு முன்

"எங்கள் கடையில் ஜப்பான் சாமான்களை விற்கோம். விற்றால் சுட்டுவிடுங்கள். சம்மதம்."

என்று எழுதிய பலகைகளைத் தொங்கவிட்டிருந்தனர். தமது உண்மை உணர்ச்சியை மெய்ப்பிக்க 47 பெட்டி ஜப்பான் சாமான்களைத் தீக்கிரையாக்கினர். சாமான்களைக் கொள்முதல் செய்வோரும் தாம் இனி ஜப்பான் சாமான்களை வாங்குவதில்லையென உறுதிகொண்டனர். தாம் அவைகளை வாங்கினால் தேசத்துரோகியென்றும் அடிமையென்றும் கேவலமாகக் கருதப்படுகிறார்களென்று அவர்களுக்கு நன்கு தெரியும்.

ஹாங்கோவில் ஜப்பானிய வியாபாரிகள் அதிகம். இங்கே ஜப்பானியர்களுக்குச் சொந்தமான துறைமுகங்களிருக்கின்றன. பல யுத்தக் கப்பல்களும் இங்கேயிருக்கின்றன. ஆயினும் சீன இளைஞர்கள், பகிஷ்கார வீரர்கள், இறக்குமதியாகும் சாமான்களைச் சோதித்தனர். வியாபாரிகள் கையிருப்புக் கணக்குடன் பாக்கி தஸ்தாவேஜிகளை ஒப்பிட்டுச் சோதித்துக் களவுகளிருந்தால் கண்டுபிடித்தனர்.

ஆயினும் ஜப்பானியர்கள் தாம் இவ்வளவு தூரம் ஒரு போதும் கஷ்டத்திற்குள்ளானதில்லையென உணர்ந்தனர். இத்தகைய பகிஷ்காரத்தின் பயனாய், ஜப்பானிய தொழிற்சாலைகள் மூடப்பட்டன. ஜப்பானியர் வாசஸ்தானங்கள் சுடுகாடுபோலிருந்தன. ஜப்பானிய பாங்கிகள் நாள்தோறும் திறக்கப்பட்டனவேனும், ஒரு சீனராவது அவைகளில் வரவு செலவு செய்யவில்லை. யாங்டிஸீ கப்பல் வியாபாரம் நசித்துப்போய்விட்டது. 25 கப்பல்களை வைத்துக்கொண்டிருந்த ஒரு ஜப்பான் கம்பெனி தம் 21 கப்பல்களைக் கட்டிப்போட்டுவிட்டு 4 கப்பல்களைக் கொண்டு கம்பெனியை நடத்திவந்தது. ஜப்பானுக்குச் சொந்தமான துறைமுகங்களிலே இறக்குமதி இல்லாதுபோகவே அத்துறைமுகங்களில் வேலை



சீனாவில் ஒட்டப்பட்டிருக்கும் ஒரு சுவரொட்டி படம். கட்டை - சீனா. கத்தி - பொருளாதார பகிஷ்காரம். கைகள் - சீனர் உணர்ச்சி. அகப்பட்டவர்கள் - ஜப்பானியர்.

செய்துவந்த தொழிலாளர்களுக்கு வேலையின்றி திண்டாட நேர்ந்தது. எனினும் இதர துறைமுகங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தமது தொழிற் சங்கங்கள் மூலமாகத் தமது வருவாயில் பங்கிட்டுக் கொடுத்து உதவினர்.

இந்த பகிஷ்காரங் காரணமாகச் சில சுயாலமிகள் கொழுத்தார்களென்பது உண்மையே, யெனினும், பகிஷ்காரத்தினால் தக்க பலன் விளைந்ததென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது. சீனாவில்,

பல தொழில்கள் சிறந்து செழித்தன. பகிஷ்கார இயக்கத்திற்கு முன் மிகக் கேவலமாக மூடிக்கொண்டிருந்த பருத்திச்சாலை வெகு மும்முரமாக ஓடத் தலைப்பட்டுவிட்டது. மறந்தொழிந்த கைத் தறிகள் மீண்டும் நாடெங்கும் தோன்றிவிட்டன.

மஞ்சூரியாவை ஜப்பானியர்கள் கைப்பற்றிக் கொண்டவுடன் சீன ஜப்பான் பகைமை முதிர்ந்தது. மறுமாதத்தில் 100 க்கு 60 பங்கு வியாபாரம் குறைந்து விட்டது. நவம்பர் டிசம்பர் மாதங்களிலோ 100 க்கு 68 பங்கு குறைந்துவிட்டது. 1930 ம் வருஷத்தில் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை நடைபெற்ற வியாபாரத்துடன் இந்த வருஷத்தில் அதே மாதங்களின் வியாபாரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் 41,000,000 தங்க டாலர்கள் பெறுமான வியாபாரம் குறைந்திருக்கிறது தெளிவாகத் தெரியவரும். கப்பல் வர்த்தகத்தில் 28,106,000 தங்க டாலர் பெறுமான வர்த்தக நஷ்டம் ஜப்பானுக்கு ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஏற்கெனவே பெரும் வியாபார மந்தத்தினால் வருந்தும் ஜப்பான் வியாபாரம் சீன பகிஷ்காரத்தினால் பெரும் நஷ்டமடைந்தது.


ஜனவரி மாதத்தில் ஷாங்ஹேயிலிருந்த ஜப்பான் பாங்கிகளில் சீனர்கள் சேமித்து வைத்திருந்த பணத்தையெல்லாம் சீனர்கள் திரும்ப வாங்கிக்கொண்டனர். சீன பாங்கிகள் ஜப்பான் நாணய வரவு செலவை நிறுத்திவிட்டன. போதாக் குறைக்கு பெண்கள் ஸ்தாபனங்களும் பகிஷ்கார இயக்கத்தில் சேர்ந்துகொண்டன. பெரிய ஜப்பான் நெசவாலைகள் திறந்துவைக்கப்பட்டன வேனும், அவைகளில் தயாரிக்கப்படும் துணிகளை வாங்குவோர் யாருமில்லை. ஹாங்கியூவிலுள்ள சீன அரிசி வியாபாரிகள் ஜப்பானியர்களுக்கு அரிசி விற்கப்படாதென கட்டுப்படுத்திவிட்டனர். இக்கட்டுப்பாட்டை மீறிய வியாபாரிகளைப் பிடித்து கோவில்களில் காவலில் வைத்தனர். அபராதமும் விதித்தனர்.

பகிஷ்காரம் சட்டவிரோத மானதுதான். ஆயினும் பகிஷ்காரக்காரர்கள் கருத்துப்படி, அவர்களை கோப மூட்டப்பட்ட அளவைக் கருதும்போது பகிஷ்காரம் சட்டவிரோதமான தல்லவாம். சர்வதேச உடன்படிக்கைப்படி யெழுந்துள்ள அந்நியர் ஒதுக்கிடத்தை சீனர்கள் சோதிக்கக்கூடாது. இதை ஆதாரமாகக்கொண்டு ஜப்பானியர் தம் சரக்குகளைக்கொண்டு வந்திறங்கிக்கொண்டனர்.

இதுகண்ட சீன இளைஞர்கள் இந்த ஒதுக்கிடங்களையும் சோதித்து ஜப்பான் சாமான்களைக் கைப்பற்றினர். இது சம்மந்தமாக இருதரப்பாருக்கும் பெரும் கலகங்கள் நேர்ந்தன. சீன இளைஞர்களை ஆயுதந் தாங்கிய வீரர்கள் சூழ்ந்துள்ள மோட்டார் லாரிகளில் ஏற்றி தெருக்களில் வலம் கொண்டுவந்தனர் ஜப்பானியர்.

இதைக் கண்ட சீன மேயர் ஆட்சேபித்தார். இத்தகைய காட்சியைக் கண்ட சீனர் மனம் மேலும் உறுதியாயிற்று.

ஜப்பானியர் கோரிக்கைக்கிணங்கி சீன சர்க்கார், பல பத்திரிகைகளை நிறுத்திவிடும்படி உத்திரவிட்டனர். ஷாங்கை தொழிலாளிகள் 5 ஜப்பானிய பிக்ஷுக்களைத் தாக்கியடித்தனர். அவர்களுள் ஒருவர் இறந்துபோனார். இது காரணமாக விரோதம் மேலும் ஓங்கியது.



மற்றொரு விளம்பரம் துஷ்ட மிருகம் சீன மாகாணங்களை விழுங்கப் போகிறது. அதைத் தடுக்கும் பொருட்டு மிருகத்தைக் கொல்ல சீனர் முயற்சிக்கிறார்கள். மிருகம் - ஜப்பான்.

சில தினங்களுக்குப் பிறகு கமெர்ஷியல் அச்சுக்கூடத்தை ஜப்பானியர் வெடிகுண்டைக் கொண்டு சாம்பலாக்கினர். பள்ளிக்கூடப் பாட புத்தகங்கள் இந்த அச்சுக்கூடத்தில்தான் அச்சிடப்படுகின்றனவென்றும், அப்புத்தகங்களில் தேச உணர்ச்சியை வெகுவாக வளர்க்கும் பாடங்களே காணப்படுவதால் அந்த அச்சுக்கூடத்தை அவர்கள் சாம்பலாக்கினார்களென்றும் தெரிகிறது.

பறிமுதல் செய்யப்பட்ட சாமான்களை எப்படி செலவு செய்வது என்பதுபற்றி பகிஷ்காரக்காரர்களுக்கு யோசனை கிளம்பியது. இந்தியாவிற்காவது தெற்கேயுள்ள தீவுகளுக்காவது அனுப்பி அங்கே சொற்ப விலைக்கு விற்கும்படி செய்யலாமாவென முதலில் யோசித்தனர். இதனால் ஜப்பான் சாமான்களை வாங்கிக்கொள்ளும்

சந்தையொன்றை ஜப்பானியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததாகுமாகவே, பகிஷ்காரத்தின் நோக்கம் இதனால் சிதைவடையும். ஆகவே இம்முறை கைவிடப்பட்டது. அவைகளை சுட்டுச் சாம்பராக்கிவிடலாமென்றாலோ, சீன வியாபாரிகளுக்குப் பெரும் நஷ்டம் விளையும். மேலும் ஜப்பானுக்கு ஆர்டர்கள் போகவுங் கூடும்.

இந்நிலையிலே, சீன சர்க்கார் பகிஷ்கார ஸ்தாபனங்களை சட்ட விரோதமானதென்றும், பகிஷ்காரக்காரர்கள் தண்டனைக்குள்ளாக நேருமென்றும் பிரகடனம் செய்தனர். எனவே, பகிஷ்காரக்காரர்கள், தேசோத்தாரண சங்கங்களாக மாறி தொண்டர் படைகளை யமைத்துக்கொண்டனர். யுத்த அரங்கங்களை யடுத்த பர தேசங்களில் சமாதானத்தைக் காப்பாற்றுவதைத் தம் வேலையாகக் கொண்டனர். பகிஷ்கார இயக்கம் மங்கத் தலைப்பட்டது. ஜப்பான் சாமான்கள் மீண்டும் வந்திறங்கத் தலைப்பட்டன. மஞ்சூரியாவிலிருந்து ஜப்பானிய அதிகாரிகள் சீனாவின் இதர பாகங்களையும் கைப்பற்ற முயற்சி செய்து கொண்டிருக்கிறார்களென்னும் வதந்தியைக் கேட்ட சீனர்கள் மீண்டும் ஆத்திரங் கொண்டனர். ஜூலை மாதத்திலே மீண்டும் பகிஷ்காரம் ஆரம்பமானது. ஜப்பான் வியாபாரம் 100-க்கு 56 பங்கு குறைந்துவிட்டது. சீனாவிலிருந்த சர்க்கார் சக்தியற்றிருந்தது. மஞ்சூரியாவில் ஜப்பானியர்களின் ஆக்ரமிப்பைக் கண்டிக்க சர்வதேச சங்கமும் தவறிவிட்டது. எனவே, தேசோத்தாரண சங்கங்கள், இரும்பு ரத்தச் சங்கங்களாகவும், தேசத் துரோகிகளான வியாபாரிகளை நாசமாக்கும் படைகளாகவும், இரத்தச் சோதர சங்கங்களாகவும் மாறின. சாத்வீக பகிஷ்கார முறைகள் மாறி, பலாத்கார பகிஷ்கார முறைகள் தோன்றின. சாத்விக முறைப்படி ஜப்பான் சாமான்களை வியாபாரஞ் செய்த வியாரிகள் கூண்டுகளில் தெருத்தோறும் வலங்கொண்டு வரப்பட்டனர். ஆனால், இப்போதோ, வெடி குண்டுகள் அனுப்பப்பட்டன.

தேச பக்தியற்ற சில சீன வியாபாரிகளிருந்தும் பகிஷ்காரம் சட்ட விரோதமானதென சீன சர்க்கார் பிரகடனம் விடுத்திருந்தும், ஜப்பான் சரக்குகள் மஞ்சூரியாவில் ஏராளமாக வந்திறங்கிக் கொண்டிருந்துங்கூட பகிஷ்காரத்தினால் ஜப்பான் வெகுவாக நஷ்டமடைந்தது. 1931-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் முதல் 1932 ஜூலை மாதம் முடிய 80,000,000 தங்க டாலர் வியாபாரம் அதற்கு முந்திய வருஷத்தைவிட குறைந்துவிட்டது. சீனாவிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதியான வியாபாரத்தில் மூன்றி லொருபங்கு குறைந்துவிட்டது. வியாபார சம்மந்தமாக ஜப்பான் சீனாவை எதிர்பார்த்திருக்குமளவு சீனா ஜப்பானை எதிர்பார்த்திருக்கவில்லை.

சுப்ரமணிய பாரதியார்

7

(வ. ரா.)

பாரதியார் சுதேசமித்திரன் பத்திரிகையில் நீண்ட காலம் இருக்க முடியவில்லை. பாரதியார் தமது "புதிய ஆத்தி சூடி"யில், 'பெரிதினும் பெரிது கேள்' என்று எழுதியிருக்கிறார். இதையே பாரதியாரின் வாழ்க்கைத் தத்துவமாகவும் வைத்துக் கொள்ளலாம். பெரிதினும் பெரிதை விரும்பும் பாரதியாருக்கு, "சுதேசமித்திரன்' பத்திரிகையில் இடம் இல்லாமற் போனது ஆச்சரியமல்ல.

சுதேசமித்திரன் புரட்சியை நாடும் பத்திரிகையாக அக்காலத்தில் நடத்தப்படவில்லை. அக்காலத்து காங்கிரஸ் கொள்கையையும், முறையையும் ஆதரித்து வந்தது. அக்காலத்து காங்கிரஸ் மிதவாத காங்கிரஸ். திலகர் நாளிலே, காங்கிரஸுக்கு, புதிய உணர்ச்சி உண்டாயிற்று. அந்த புதிய உணர்ச்சி, சிறுபகுதி கல்கத்தா காங்கிரஸிலும், பெரும் பகுதி சூரத்து காங்கிரஸிலும் வெளித் தோன்றிற்று.

1905-ம் ஆண்டில், அப்பொழுது வைஸிராயாக இருந்த கர்ஸன் பிரபு, வங்காளத்தை, மேல் வங்காளம், கீழ் வங்காளம் என்று இரண்டு கூறுகளாகப் பிரித்தார். வங்காளிகள் இந்த ஏற்பாட்டை ஆத்திரத்துடன் எதிர்த்தார்கள். இந்தக் கிளர்ச்சியினின்றும் பிறந்தது தான் சுயராஜ்யக்கிளர்ச்சி.

வங்காளப் பிரிவினைக் காலத்துக்குச் சிறிது முன்னும் அதை ஒட்டியும், பாரதியார் தமது தேசபக்தி துடிதுடிப்பைத் தாங்க முடியவில்லை. அந்தத் துடிதுடிப்பின் முடிவு சிறைதான் என்று ஜி. சுப்ரமணிய அய்யருக்கு நன்றாய்த் தெரியும். எனவே, இரண்டு பேரும் மனம் ஒப்பியே, பாரதியார் "சுதேசமித்திரன்" பத்திரிகையை விட்டு விலகிக்கொண்டார். பாரதியாரிடம் சுப்ரமணிய அய்யருக்கு இருந்த ப்ரேமை, அய்யர் அவர்கள் சாகும்வரையில் இருந்து வந்தது.

பாரதியார் மனக் கசப்பால், சுதேசமித்திரனை விட்டார் என்ற வதந்திக்கு ஆதாரம் இல்லை. ஜி. சுப்ரமணிய அய்யர் கோக

ளேயைப்போல, மிதவாதி அல்ல; காந்தியைப் போல புரட்சிக் காரருமல்ல. எனவே, அரசியலில் அதி தீவர புரட்சி மனப் பான்மை கொண்ட பாரதியார், அய்யரின் காரியாலயத்தினின்றும் வெளியேறியது ரொம்ப பொருந்த முள்ளதாகும்.

பாரதியார் சும்மாயிருக்கவில்லை. பல நண்பர்களின் உதவி யைக்கொண்டு, "இந்தியா" என்ற தமிழ் வாரப்பத்திரிகையைத் துவக்கினர். சிவப்பு நிறம், அபாயத்துக்கு குறி என்று சொல் லுவதுண்டு. இந்தியா பத்திரிகை, சிவப்புத் தாளில் அச்சிடப்பெற் றது. வாரத்துக்கு ஒரு முறையானலும், அந்த நாளில், "இந் தியா", மிகவும் ஆவலுடன் படிக்கப்பெற்றது. நாலாயிரம் பிரதி களுக்குமேல் செலவழிந்ததாம்.

இந்தியா பத்திரிகையில், நூதனங்கள் என்னவெனில், (1) உள்ளதை உள்ளபடியே, அஞ்சாமல், அழகாக, வலிமையுடன் எடுத்து உரைக்கும் எழுத்து (2) பாட்டு (3) கேலி செய்யும் கூடார் த்த படங்கள் (4) பெரியார்களின் ஜீவிய வரலாறு. அவ்வப்போது, சிற்சில ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வந்துகொண்டிருந்தன. இந் தியா பத்திரிகை ஆரம்பித்து, சிறிது காலத்துக்குள், பாரதியாரின் பெயர் பரவலாயிற்று.

வங்காளப் பிரிவினை கூடாது என்று வங்காளிகள் கிளர்ச்சி செய்தார்கள் என்றேனே, அதன் பயன்கள் என்னவெனில், 'நவ சக்தி', 'யுகாந்தரம்', வந்தேமாதரம், நியூ இந்தியா, முதலிய புரட் சிப் பத்திரிகைகள் வங்காளத்தில் தோன்றின. வங்காளத்தில் எழுந்த, சுயராஜ்ப உணர்ச்சியும், கூச்சலும் இந்திய தேச முழு தும் சூழ்ந்து பரவிற்று.

1906-ல் கல்கத்தா காங்கிரஸ். தாதாபாய் நவரோஜி தலைவர். வயதான கிழவர். என்றாலும், அவர் கல்கத்தா காங்கிரசில், "ஸ்வராஜ்பம்" என்ற மூல மந்திரத்தை, துணிவுடன் ஜபித்தார். முக்கியமான நான்கு தீர்மானங்கள் காங்கிரஸில் நிறைவேறின. சுதேசி, அன்னியநாட்டுச் சாமான் பகிஷ்காரம், நாட்டுக்கல்வி, ஸ்வராஜ்யம்—இவைகளைப்பற்றி ஆணித்தரமான தீர்மானங்கள் நிறைவேறின. மிதவாதிகளும் அரசாங்கத்தாரும் ஏக காலத்தில் பயப்பட்டுப் போனர்கள்.

காளிதுவரையில் ஒழுங்காக, தடையின்றி, நடைபெற்று வரும் தேசபக்தர்களின் சிறைவாஸத்துக்கு கல்கத்தா காங்கிரஸே

காரணமாகும். மிதவாதிகள் அரசாங்கத்தாருக்கு துணை. மித வாதிகளுடன் சேராத் தேசபக்தர்களுக்கு சிறை. இது மாமூல்.

கல்கத்தா காங்கிரஸில் நிறைவேறிய, ஆணிவேர்த் தீர்மானங் களை மாற்றவேண்டும் என்பது மிதவாதிகளின் முயற்சி. இதற்கு சர்க்கார் தூண்டுதலும் உண்டு. அதுவரையிலும் ஸர்க்காருக்கு மனுப்பண்ணிக் கொண்டிருந்த காங்கிரஸ், தன் சொந்த சக்தியுடன் தலை நிமிர்ந்து நிற்கலாயா என்பது சர்க்காரின் மூளையைக் கலக் கின பிரச்னையாகும்.

காங்கிரஸ் புதுக்கொள்கையைத் தாங்கி, பாரதியார் "இந் தியா" பத்திரிகையில் எழுதிவந்தார். வாராவாரம், புது கட்சி உற்சாகமே. நாடெங்கும் உற்சாகம். இந்த சமயத்தில் வங்காளத் திலிருந்து, விபின சந்திரபாலர் சென்னைக்கு விஜயம் செய்தார். சென்னையில் அவர் செய்த ஐந்து பிரசங்கங்கள் தான் தமிழர் களின் அரசியல் பொக்கிஷமாகும்.

விபின் பாபுவின் சென்னை விஜயத்துக்குப் பாரதியாரும் அவ ரது நண்பர்களுமே மூல காரணங்கள். வங்காளத் தலைவரை வர வேற்க, பழைய சென்னைத்தலைவர்கள், மிகுதியும் அஞ்சி னார்கள். பாரதியாரின் கோஷ்டியார் சிரமம் எடுத்துக் கொண்டு வேலை செய்திராவிடில், விபின் பாபுவின் சென்னை பிரசங்கங்கள் நடந்திருக்க முடியாது. பாபுவின் முதல் பிர சங்கத்துக்கு, தலைமை வகிக்க, எந்தப் பெரிய மனிதரும் சம்ம திக்கவில்லை. அவ்வளவு பயம். சிமான் ஜி. சுப்ரமணிய அய்யர் மட்டும் இசைந்தார்; சமயத்தில் தமிழர்களின் மானத்தைக் காப் பாற்றினார். சுப்ரமண்ய அய்யர் சம்மதித்ததற்கும் பாரதியார் காரணம் என்று வைத்துக் கொள்ளலாம்.

அன்னிய நாட்டுத் துணிகளுக்கு முதன் முதல் தீ வைத்தவர் காந்தியல்ல. சென்னை, திருவல்லிக்கேணி கடற்கரையில், விபின் பாபுவின் பிரசங்கக் காலத்தில், முதல் தீ தோன்றிற்று. நல்ல நல்ல ஆல்பாக்கா சட்டைகள், உயர்ந்த குல்லாக்கள், நூற்றுக் கணக்கில் விழுந்தன. சென்னை நகரத்தினரின் அரசியல் மனப் பான்மையில், திடீரென்று புரட்சி ஏற்பட்டது.

சென்னையில் மகாஜன சபை என்று ஒன்று இருக்கிறது. அக் காலத்தில் அதன் அங்கத்தினர்கள் ஸர்க்கார் தாஸர்கள். உருப் படியான எந்த வேலையையும் செய்யத் துணிந்ததில்லை. எனவே,

பாரதியார் "சென்னை ஜன சங்கம்" என்று ஒன்றை ஸ்தாபிக்க முயன்றார். சங்கமும் ஸ்தாபிக்கப் பட்டது. அது தோன்றி அழியும் வரையில், போலீசார் அதன்பேரில் கடைக்கண் பார்வை செலுத்துவதை நிறுத்தவில்லை.

1907-ல், சூரத்து காங்கிரஸ். இதற்குள் வங்காளத்தில் வெடிகுண்டு, உதயமாயிற்று. துப்பாக்கிச் சத்தமும் கேட்கும் என்றும் தோன்றிற்று. நாடு முழுதும் பரபரப்பு. கல்கத்தாவிற்குப் பின், காங்கிரஸ் நாகபுரியிலே கூடவேண்டும். ஆனால், கல்கத்தா காங்கிரஸின் மூல தீர்மானங்களின் வார்த்தைகளை மாற்றி, சாரமில்லாமல் அடித்துவிடவேண்டும் என்பது மிதவாதிகளின் தீர்மானம். இந்த ஆவலுக்கு, நாகபுரி காங்கிரஸ் வாதிகளில் பெரும்பான்மையோர் இடங்கொடுக்கவில்லை.

மிதவாதக் கோட்டையென்று அப்பொழுது கருதப்பட்ட சூரத்து நகரத்துக்கு (இந்த நகரம் குஜராத்திலிருக்கிறது) காங்கிரஸை, மிதவாதிகள் மாற்றிவிட்டார்கள். தேசபக்தர்களுக்கு ஆத்திரம். தியாகம் செய்யத் துணிந்த தேச பக்தர்களுக்கு, லோகமான்ய திலகர் தலைவரானார். சூரத்து காங்கிரஸில், கல்கத்தா தீர்மானங்கள் எள்ளளவும் மாற்றக்கூடாது என்பது திலகர் கோஷ்டியாரின் பிடிவாதம். திலகருக்கு சாதகமாக பாரதியார் வ. உ. சிதம்பரம் பிள்ளை உள்ளிட்ட நூறு தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் சூரத்துக்குச் சென்றார்கள்.

சூரத்து காங்கிரஸிலே, மிதவாதிகளின் தலைவரான சுரேந்திரநாத் பானர்ஜிக்கு செருப்படி விழுந்ததும், நாற்காலிகள் முறிந்ததும், கைக் குத்துச்சண்டைக் கலவரம் எழுந்து பொங்கியதும், காங்கிரஸ் நடைபெறாமல் போனதும் பழங் கதை. சூரத்து காங்கிரஸ் உடைந்தது, தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளின் முரட்டுத்தனத்தால் என்று அக்காலத்தில் கூறப்பட்டது. சூரத்து காங்கிரஸ் உடைபட்டது நாட்டு நன்மைக்காயின், அந்தப் பெரிய புண்ணியத்தை, தமிழர்கள் ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது? ஆனால் அவ்வாறு நேர்ந்தது தமிழர்களால் அல்ல என்று ஸ்ரீமான் எஸ். துரைசாமி அய்யர் அவர்கள் சொல்லுகிறார். துரைசாமி அய்யர், பாரதியாரோடு சூரத்துக்குச் சென்றிருந்தவர். சென்னையிலிருந்து சூரத்து வரையிலும், தமிழ்ப் பிரதிநிதிகளின் வழிப்பிரயாண உற்சாகத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது என்கிறார் அய்யர் அவர்கள். பாரதியார் இருக்கிற கூட்டத்தில், உற்சாகக் குறைவு இருக்க முடியுமா?

ஒரே ஒரு சம்பவம். அதைக்குறிப்பிட்டுவிட்டு, இந்த அத்தியாயத்தை முடித்துவிடுவோம். பாரதியார் திலகரை, சூரத்து காங்கிரசுக்கு முன் பார்த்ததில்லை. பார்க்க ஆவல். காங்கிரஸ் 'சமயத்தில், சூரத்தில் கனத்த மழை. காங்கிரஸ் கொட்டகைக்கும், பிரதிநிதிகள் தங்கியிருந்த இடத்துக்கும் இடையே நல்ல பாதையில்லை. செப்பனிடப்பட்ட பாதையும் மழையால் சீர்குலைந்து போய்விட்டது. அந்தப் பாதையை, ஆட்களைக் கொண்டு, செப்பனிட்டுக் கொண்டிருந்தார் திலகர் அந்த மகானுக்கு எந்த வேலை சிறியது, எந்த வேலை பெரியது?

திலகரைக் காணவேண்டுமென்ற ஆவலினால், பாரதியார் தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து, வெளியே போய் விசாரித்தார். திலகர் எங்கே யிருக்கிறார் என்று ஒருவருக்கும் சொல்லத் தெரியவில்லை. கசந்த மனத்துடன், பாரதியார் குறியில்லாமல், காங்கிரஸ் பாதையில் நடந்துகொண்டார். நூறு ஆட்கள் வரையிலும் பாதையை செப்பனிடுவதைக் கண்டார். கிட்ட நெருங்கினார். குடை பிடித்துக்கொண்டு, தலைமை மேஸ்திரியாக, ஒருவர் பாரதியாரின் பார்வைக்குப் பட்டார். பின்னர் நடந்ததை, பாரதியார் பின் வருமாறு என்னிடம் சொன்னார். "நான் போய்க்கொண்டிருக்கையில், குடையின் பின் பக்கத்தைக் கண்டேன். எதிரே போனேன். அந்த மனிதனுடைய கண்களைப் பார்த்தேன். அவைகள் உயிர்த்தணலைக் கக்கும் குண்டுகளைப்போல விழுந்தன. ஒன்றும் பேசாமல், அவர் பாதத்தைத் தொட்டு, சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தேன் !!"

லோகமான்யரின் தீ விழிகளைக் கண்டவர், பயபக்தி கொள்ளாமலிருக்கமுடியாது. இந்தியாவின் சுயராஜ்ய தாகமும் சக்தியும், லோகமான்யரின் அக்கினிஜ்வாலைக் கண்களினின்றும் பிரகாசித்ததில், ஆச்சரியம் உண்டா ?

19200 மாற்று விடைகள் !

சென்ற 3உ, 10உகளில் வெளிவந்த "ஆனந்த விகடன்" பிரதிகளில் விலங்குச் சித்திரப் போட்டிப் பரிசு வெளியாயிருக்கிறது. இதற்கு 2 ஆயிரம் ரூபாய் பரிசாம். ஆனால் அதற்கு எத்தனை மாற்று விடைகள் இருக்கின்றன தெரியுமா? இதைப் பற்றி நமக்கு பல நண்பர்கள் கடிதங்கள் எழுதி யிருக்கிறார்கள். அவற்றை வெளியிட இடமில்லாமைக்கு அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுகொள்ளுகிறோம். அவர்கள் கண்டு பிடித்துள்ள விடைகளை மட்டும் தொகுத்து கீழே வெளியிடுகிறோம். போட்டிப்பரிசு படத்தையும் பிரசுரிக்கிறோம்.

(1) கலைமான்—1. (2) அரி, கரி, நரி, வரி, பரி,—5. (3) சிவிங்கி, குரங்கு—2. (4) ஓநாய், தகர், முசல்—3. (5) சிம்மம், சிங்கம், 2. (6) ஆடு, மாடு, பசு, சோகு, ஆகு—5. (7) எருது, கழுதை, எருவை, புருவை,—4. (8) ஓரி, காலி, நரி யாளி, கரி, அரி, புலி, ஆளி 8. (9) சிறுத்தை, உறுத்தை—2.

இவ்வளவு விடைகளையும் மாற்றி மாற்றி எழுதியனுப்ப வேண்டுமானால் மொத்தம் எத்தனை கூப்பன்கள் வேண்டும்?

1×5×2×3×2×5×4×8×2—19200

19200 விடைகள் வருகின்றன. ஆகவே 19200 கூப்பன்கள் வேண்டும். அதற்கு 19200 "விகடன்" பிரதிகள் வாங்கவேண்டும். அவற்றின் விலை ரூ 2400 ஆகிறது. அப்புறம் பிரவேசக் கட்டணத்திற்கு ரூ. 9600 செலுத்த வேண்டும். ஆக 12 ஆயிரம் ரூபாயை ஆனந்தவிகடன் ஆபீசுக்கு ஒருவர் அனுப்பினால் ஒரு வேளை முதல் பரிசாக ஆயிரம் ரூபாய கிடைக்கலாம. ஒருவருக்கு மேல் இம்மாதிரி அனுப்பினார்களானால் அத்தனைபேரும், இந்த ஆயிரம் ரூபாயை பங்கிட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

தமிழரே. இப்பொழுதாவது உங்களுக்கு விழிப்பேற்படப் போகிறதா? அல்லது மறுபடியும் பரிசு மோகம் என்ற படுகுழியில்தான் விழப்போகிறீர்களா?



படார்சாமி கடிதங்கள்

[படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் பகிரங்கமாகவே படார் படார் என்று வெளியிடுவோர்]

ஸ்ரீ. எம். கே. ஆச்சாரியார்
சென்னை.

வைதிகரே,

வைதிகம் பேசுகிறீர். வைதிகத்திற்கு விரோதமாக சீமைக்கு ஓடினீர். கடல் கடந்த பாபத்தைத் தொலைக்க ராமேஸ்வரம் சென்றீர். ஆஸ்திகம் பேசுகிறீர். நாஸ்திகம் பேசும் ஸ்ரீ. ராமநாதன் தலைமையில் மகாத்மாவை பகிஷ்கரிக்கவேண்டுமென்று பிரசங்கம் செய்கிறீர். இந்தப் பாபத்தை தொலைக்க எங்கே போகப்போகிறீர்? உமது நெஞ்சில் அன்பிருப்பதாக கூறுகிறீர். ஹரிஜன முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் போய் விழுகிறீர். சாஸ்திரம் பேசுகிறீர். ஆனால் உமது குரு ராமாநுஜாச்சாரியாருக்கு விரோதமாய் நடந்து குருத்துரோகம் செய்கிறீர். இதற்கு என்ன பிராயச்சித்தம்? இவற்றிற்கெல்லாம் உமக்கு பிராயச்சித்தங்கள் அகப்படுமானால், உமது மதம் அதாவது நீர் சொல்லும் மதம் ஒரு மதமல்ல. வெறும் உன்மத்தமே.

—படார்சாமி.

சுயமரியாதை வீரர்கள்
தமிழ் நாடு.

வீரர்களே,

மகாத்மா காந்தியை பகிஷ்கரிக்க வேண்டுமென்று நீங்கள் பிரசாரம் செய்யப்போவதாக ஒரு வதந்தி உலாவுகிறது. ராமநாதபுரம் சுயமரியாதை மகாநாட்டில் இம்மாதிரி தீர்மானம் நிறைவேறியிருக்கிறதாம். இருந்தாலும் இந்த புத்தியற்ற வேலையில் நீங்

கள் இறங்குவீர்களென்று நான் நம்பவில்லை. நீங்கள் யார்? உங்கள் தலைவர் யார்? உங்கள் கட்சியின் கொள்கை யென்ன, உங்கள் வேலைத் திட்டம் என்ன? நீங்கள் இந்து சமூகத்தில் இருக்கிறீர்களா அல்லது பிரிந்துவிட்டீர்களா முதலிய விஷயங்களை உங்களுக்குள்ளேயே முடிவு செய்துகொண்டு அப்புறம் வெளியே வாருங்கள். மகாத்மாவைப்பற்றிப் பேசவோ, அவர் செய்யும் ஹரிஜன வேலையை எதிர்க்கவோ உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறதென்று தெரியவேண்டும். மகாத்மாவை எதிர்க்கும் நீங்கள், ஹரிஜன முன்னேற்றத்திற்காக இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள் என்பதை பகிரங்கமாய்ச் சொல்லுங்கள். ஒன்றுமில்லாமல் சும்மா ஏதோ கூச்சல் போட்டு பிரபலமாக உங்களுக்கு ஆசையிருந்தால், அது பலிக்கப்போவதில்லையென்று இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். இருக்கிற சுயமரியாதையை உங்களுக்கு காப்பாற்றிக்கொள்ள பிரியமிருந்தால், மகாத்மா வழிக்கே வராமல் விலகிப்போங்கள்.

—படார்சாமி.

ஸ்ரீ. தாமஸ்
குடியேற்ற மந்திரி
லண்டன்.

விளக்கெண்ணெய் மந்திரியே,

அயர்லாந்து விஷயமாய் உமது விளக்கெண்ணெய் வெண்டைக்காய் பேச்சுக்களைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை. ஸ்ரீ. ஹெண்டர்சனைப் போல் நீரும் கண்டிப்பான கொள்கையுடையவராயிருந்தால், அவர் எகிப்தில் செய்ததைப் போல நீரும் அயர்லாந்தில் செய்திருப்பீர். அப்பேர்ப்பட்டவராயிருந்தால், ஹெண்டர்சனைப்போல நீரும் மந்திரி வேலையை ராஜீநாமாச் செய்திருக்கும்படி யல்லவா நேரிட்டிருக்கும்? உமது விளக்கெண்ணெய் கொள்கையால் இன்னம் குடியேற்ற நாட்டு மந்திரி பதவியில் இருந்து வருவதை நான் அறிவேன். "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியததில் தன்னிஷ்டமாய் அயர்லாந்து சேர்ந்திருக்கவில்லை. பலவந்தமாய் சேர்க்கப்பட்டிருக்கிறது. அயர்லாந்துக்கு பூர்ண சுதந்திரம் வேண்டும். தனியாய் பிரிந்துபோனால் பிரிட்டன் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்?" என்று டிவாலரா கேட்கிறார். அதற்கு நேரடியாக பதில் சொல்லுவதல்லவா நேர்மைக்கு அழகு? "அயர்லாந்து தன்னிஷ்டமாகத் தான் சேர்ந்திருக்கிறது. அது பிரிந்து போகாது. பிரிந்துபோகப் போவதாக யூகம் செய்துகொண்டு கேட்கும் கேள்விகளுக்கு பதில் வேண்டாம்" என்று அசட்டுத்தனமாக நீர் பதில் சொல்லியிருக்கிறீர்.

இது எவ்வளவு பலவீனமான பதில் என்பதைஇப்பொழுதாவது அறிந்தீரா?

—படார்சாமி.

ஸ்ரீ. டிவாலரா
ஐரிஷ் குடியரசுத் தலைவர்
டப்ளின்

கலங்கா தீரரே,

பிரிட்டிஷ் சிங்கத்தை திணறவைக்கும் உமது தீரத்தைக் கண்டு மெச்சுகிறேன். வீரமும் தீரமும் பேசுகிறவர்களில் பெரும்பாலோர் வயதாக ஆக சாதுக்களாய் மாறுவது உலக வழக்கம். அல்லது பட்டம் பதவி பெற்றவுடன் திருப்தியடைந்து விடுவார்கள். எந்தப் பதவி கிடைத்தாலும், அதை துச்சமாய் நினைத்து லட்சியமே பெரிதென நினைக்கும் உத்தமர்கள் வெகு சொற்பம். இந்த உத்தமர்களாலே தான் ஜனங்கள் க்ஷேமமடைய முடியும். இவர்களை வயதோ, பட்டமோ, பதவியோ அசைக்கமுடியாது. இந்த திருக்கோஷ்டிக்கு மகாத்மா தலைமை வகிக்கிறார். எகிப்தில் ஜக்லுல் பாஷா இருந்தார். அவர் வழியை நஹாஸ் பாஷா பின்பற்றி வருகிறார். அயர்லாந்தில் நீர் இருக்கிறீர். உமக்கு விரோதமாக காஸ்கிரேவ் கோஷ்டி இருப்பதைப்போல, ஒவ்வொரு நாட்டிலும் கோடாரிக்காம்புகள் இருக்கின்றன. இருந்தாலும் எதுவரினும் சுதந்திரப்போரை விடமாட்டேன் என்று கர்ஜித்து வரும் உம்மை திக்கு நோக்கி தண்டனிட்டு வாழ்த்துகிறேன்.

—படார்சாமி.

ஸ்ரீ. ஜே. பி. டேய்லர்
நோட் இலாகா
டேல்லி

ஐயா,

சென்ற அக்டோபர் 18வ "காந்தி"யில் உமக்கு ஒரு கடிதம் எழுதினேன். வெங்காய சருகுபோன்ற காகிதத்தில் புதிதாய் வெளியிட்டிருக்கும் 5 ரூபாய்,10 ரூபாய் நோட்டுகளை உடனே வாபஸ் வாங்கி நல்ல காகிதத்தில் வெளியிடும்படி உமக்குக் கூறியிருந்தேன். அமெரிக்காவில் நோட் காகிதத்தின் பலத்தை பரீட்சிக்கும் இயந்திரத்தின் படமொன்றையும் உமக்காக வெளியிட்டிருந்தேன். உமது பார்வைக்கு 18வ "காந்தி"மலர் ஒன்றையும் அனுப்பினேன். சென்ற 14வ இந்தியா சட்டசபையில் பொக்கிஷ மந்திரி சர். ஜார்ஜ் ஷூஸ்டர் பேசியபோது, இனி இந்த வெங்காய

கடுதாசி நோட்டுகளை வெளியிடக் கூடாதென்று உத்தரவிட்டு விட்டதாய்ச் சொன்னார். இவ்வளவு சிக்கிரமாக இவ்விஷயத்தில் உமது இலாகா நடவடிக்கை எடுத்துக் கொண்டதைக் கண்டு மிகவும் சந்தோஷமடைகிறேன். ஆனால் ஒரு விஷயம். இனி கெட்டியான காகிதத்தில் போடுவதாகவும், மெல்லிய கடுதாசியில் முன்பு நோட்டு போட்டதற்கு காகிதம் சப்ளை செய்தவர்களை ஜவாப்தாரியென்றும் பொக்கிஷ மந்திரி சொன்னார். நோட் அச்சிடப்படும் காகிதம் எப்படி இருக்கிறது என்று பார்க்கக்கூட இல்லாமலா பொக்கிஷ இலாகா ஆர்டர் கொடுத்துவிடுகிறார்கள்? அவ்வளவு பொறுப்பற்ற தன்மையிலா நோட் இலாகா நடைபெறுகிறது? காகிதம் சப்ளை செய்தவர்கள் ஜவாப்தாரியென்றால், மெல்லிய காகிதத்தில் அச்சிட்டு வீணாய் போன நோட்டுகளின் செலவுக்கு யார் ஜவாப்தாரி? காகிதம் சப்ளை செய்தவரிடம் வாங்கப் போகிறார்களா அல்லது இளித்தவாய் இந்தியர் தலையில் சுமத்தப் போகிறார்களா?

—படார்சாமி

பிரசார இலாகா தலைவர்
டெல்லி

அன்பரே,

"1931-32 வது வருஷத்தில் இந்தியா" என்ற உமது வருஷாந்தர உபதேசத்தை பார்வையிட்டேன். பார்த்தவுடன் 'மீசைக்கும் ஆசை; கூழுக்கும் ஆசை' என்ற புலவரின் ஞாபகம் வந்தது. அடக்குமுறைக்கு நியாயம் காட்டவும் அதே சமயத்தில் காங்கிரசுக்கு பலமில்லை என்பதைக் காட்டவும் நீர் மிகுந்த சிரமம் எடுத்திருக்கிறீர். ஏதாவது ஒரு நிலையில் நின்று வாதித்திருந்தால் உமது நிலைமை நன்றாயிருந்திருக்கும். பாவம், விழிக்கிறீர். காங்கிரசை நசுக்கிவிட சர்க்கார் சகல ஏற்பாடுகளும் செய்துவைத்து திடீரென்று அமுக்கிவிட்டபடியால், காங்கிரஸ் திணறிப்போய் விட்டதென்று சொல்லுகிறீர். இதனால் காந்தி—இர்வின் ஒப்பந்தத்தை உடைத்தெறிய வில்லிங்டன் சர்க்கார் முன்பே தீர்மானித்துவிட்டதென்பதை நீர் காட்டுகிறீர். சாதாரணச் சட்டங்களால் இயக்கத்தை அடக்கமுடியாதாகையால், அவசரச் சட்டங்கள் அவசியமென்று கூறுகிறீர். ஆனால் 1930-ம் வருஷத்தைப் போல 1932-ல் இயக்கத்தை அடக்க சிரமம் ஏற்படவில்லையென்று கூறுகிறீர். காங்கிரஸ் இயக்கத்தை அடியோடு அடக்கிவிட்டதாகவும் சொல்லுகிறீர். இவையெல்லாம் உண்மையானால் அவசரச் சட்டங்களை நிரந்தரச் சட்டமாக்க வேண்டிய அவசியமென்ன? இப்பொழுதும் அவசரச் சட்ட ஆட்சி நடக்கக் காரணமென்ன? உமது வாதங்கள் முன்னுக்

குப் பின் முரணுக இருக்கின்றன. உமது அறிக்கையால் வில்லிங் டன் சர்க்காரின் மதிப்பு உயர்ந்துவிட வில்லே. —படார்சாமி

லார்ட் வில்லீங்டன்
வைசிராய்.

பிரபுவே,

நீர் சென்னைக்கு விஜயமானபோது வருணபகவானும், வாயு பகவானும் உம்மை லட்சியஞ் செய்யாமல் ராஜ்யம் நடத்தினர்கள். இந்தியா முழுவதிலும் உமது அவசரச் சட்ட ஆட்சிக்குள் அடங்கிக் கிடப்பதை அறிந்தும் இந்த இரண்டு பேர்வழிகளும் உம்மை மதியாமல் போனது வெறும் அகம்பாவ மாகும். சென்டிரல் ஸ்டேஷனில் நீர் இறங்கியதும் வருண பகவான் தன்னுடைய ஆட்சியை தொடங்கியபடியால் தடபுடலாக உமக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊர்வலங்களை நிறுத்தவேண்டியதாயிற்று. அப்புறம் வாயுபகவான் செய்த ஆர்ப்பாட்டங்கள் கொஞ்சமல்ல. சென்னை துறைமுகத்தில் அபாயக்குறி போடும்படியான நிலைமையை உண்டுபண்ணிவிட்டான். தெருக்களில் நடமாடவோ, மோட்டார்களில் செல்லவோ முடியாமல் அட்டகாசம் செய்தான். இந்தத் தொந்தரவுகளால் உமது அருமையான பழைய சென்னையில் நீர் உல்லாசமாய் காலங்கழிக்க முடியாமல் போய்விட்டது. இருக்கட்டும். இந்த இரண்டு பேர்களும் திடீரென்று இப்படி புரட்சி செய்ய கிளம்பியதேன்? உமது அதிகாரம் அவர்களிடம் பலிக்காதென்பது அவர்கள் நினைப்பா? அப்படி அவர்கள் நினைப்பதாயிருந்தால், அவர்கள் அகம்பாவத்தை அடக்கவேண்டியது வைசிராய் என்ற முறையில் உமது கடமையாகும். சூரியனே அஸ்தமிக்க இடமில்லாத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சக்ரவர்த்தியினுடைய பிரதிநிதியாக நீர் வரும்போது, நிலையில்லாமல், தங்க இடமில்லாமல் சுற்றியலையும் இந்த வருணனுக்கும், வாயுவுக்கும் உம்மை எதிர்க்க அவ்வளவு தைரியமா? இவர்களை நீர் இலேசில் விட்டுவிடக் கூடாது. கல்கத்தாவில் கூடப்போகும் உமது மந்திரி சபையில் இதைப்பற்றி யோசித்து தகுந்த நடவடிக்கை எடுப்பீரென்று நம்புகிறேன். —படார்சாமி.



பிராமணனும், சூத்திரனும்

ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியாரவர்கள் நமக்கு எழுதுகிறார்:—

அன்புடைய ஐயா,

தங்களுடைய பத்திரிகையில் எனது "பிராம்மணனும்—சூத்திரனும்" என்னும் நாடகத்தைப்பற்றி எழுதிய விமர்சனத்தைப் பார்த்து சந்தோஷிக்கலானேன். அதன் பொருட்டு நான் உங்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தவேண்டியவனா யிருக்கிறேன். அவ்வணம் செய்வது எதோ என் புஸ்தகத்தைப்பற்றி புகழ்ந்திருக்கிறீர் என்னும் காரணத்தாலன்று. ஒரு புஸ்தகத்தைப் பற்றி விமர்சனம் எழுதுவ தென்றால் இப்படி யிருக்க வேண்டு மென்று நீங்கள் மற்றவர்களுக்கு புத்தி புகட்டியுள்ளதே எனக்கு மிகுந்த சந்துஷ்டியைத் தருகிறது. சாதாரணமாக தற்காலம் விமர்சனம் எழுதப் புகுவோர், குறையினை மாத்திரம் எடுத்துக் காட்டுகின்றனர். அல்லது அதிகமாகப் புகழ்ந்துவிடுகின்றனர்; இவ்விரண்டுமின்றி, நூல்களின் விமர்சனங்கள் இப்படி வரையவேண்டு மென்று நீங்கள் உதாரணமாகக் காட்டியுள்ளது, என்னைப் போன்ற நூலாசிரியர்களால் மிகவும் மெச்சத் தக்கதேயாம். ஆகவே என் பொருட்டும், என்னைப்போன்ற இதர நூலாசிரியர்கள் பொருட்டும், உங்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்த கடமைப்பட் டிருக்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் நண்பன்,

(கையெழுத்து) ப. சம்பந்தம்.



தமிழருக்கு

(கவிச்சக்கரவர்த்தி சி. சுப்ரமணிய பாரதியார் எழுதியது)

தமிழா, தெய்வத்தை நம்பு, பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வந்து விட்டது.

உனக்கு ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள்; தெய்வங் கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கை தேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றி யிருக்கின்றார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரிக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலக் கண்ணாடியிலே போய்ப் பார்.

உனது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சாருகின்றன.

1. தமிழா, பயப்படாதே, ஊர் தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு சாஸ்திரங்களை யெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

2. ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே "ஜாதி யிரண்டொழிய வேறில்லை' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

3. பெண்ணை அடிமையென்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை "வாழ்க்கைத்துணை" என்றனர். ஆத்மாவும் சக்தியும் ஒன்று; ஆணும் பெண்ணும் சமம்.

4. வேதங்களை நம்பு. அவற்றின் பொருள் தெரிந்துகொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல நடந்துகொள்ளாதே.

5. தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக்கொள்கைகள், லௌகிகக் கொள்கைகள், வைதிக நடை, லௌகிக நடை, எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடங் கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும், கூட்டத்திலும் எதிலும் எப்போதும், நேர்மை யிருக்கவேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக் கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக் கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும் படி செய்.

6. தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. "முந்திய சாஸ்திரந்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய்" என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? "தகப்பன் வெட்டிய கிணறென்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்." என்று பஞ்ச தந்திரம் நகைக்கிறது.

7. இவ் உலகத்தில் நான்கு புருஷார்த்தங்கள் என்று நமது பெரியோர்கள் காட்டி அருள் புரிந்திருக்கிறார்கள்.

அவை:—அறம். பொருள், இன்பம், வீடு என்பன.

(1) இவற்றுள் அறமாவது, கடமை. அது உனக்கும், உனது சுற்றத்தாருக்கும், பிறர்க்கும் நீ செலுத்தவேண்டிய கடமை. 'பிறர்' என்பதனுள் வையக முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

(2) பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும், புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல்—இவை யெல்லாம் செல்வம். இச் செல்வத்தைச் சேர்தல் மனித உயிர்க்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாங் கட்டளை.

(இதன் தொடர்ச்சி 792-ம் பக்கம் பார்க்க)

மௌனம் அல்லது பேசாமை

(ஹேமநளினி)

பலபேர்கள், பேசாதிருப்பது மிகவும் சுலபமென்று நினைக்கிறார்கள். ஆனால் அதன் கஷ்டம் ஊமைகளையும், புது மாட்டுப் பெண்களையும் கேட்டுப் பாருங்கள்—அவர்கள் செல்வார்கள் அதன் கஷ்டங்களை.

கோபித்துக்கொண்டு பேசாமலிருந்து விடுவது சுலபம். ஆழ்ந்த எண்ணங்கள் நம் மனதில் சுழன்றுகொண்டிருக்கும் போதோ, மகத்தான துக்கம் நம்மைத் தாக்கிவிட்டபோதோ, நாம் பேச விரும்புவதில்லை. எண்ணங்களின் வேகமும், சூடும் தணியும்வரை நாம் வாய்திறப்பதில்லை. ஆனால் தலையில் மாத்திரம் போதுமான அளவு சரக்கு ஒன்றுமில்லாமலிருக்கட்டும். வாய், வண்டி வண்டியாய் வம்பு அளக்கத் தயாராய் இருக்கிறது: யார் என்ன சொன்னாலும் எதிர் வழக்காடுகிறேன் என்கிறது. இடக்காய்ப் பேசுகிறேன் என்கிறது. ஒருவரும் நிகரில்லை என்கிறது. அது மனித சுவபாவம்.

"மௌனத்திலிருந்து சக்தி நிரம்பிய வார்த்தை உண்டாகிறது" என்று உபநிஷத்துகள் கூறுகின்றன. அது உண்மை என்று எனக்குப் படுகிறது. அனாவசியமாய்ப் பேசாதவன் தன் எண்ணங்களுக்குத் தன் தலைக்குள்ளேயே கடசல் சொடுத்து, அவைகளைக் கூர்மையாக்கிக் கொண்டிருக்கிறான். அவன் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுத்துக்கும் முழு அர்த்தம் மாத்திரமல்ல, பல அர்த்தங்கள் இருக்கின்றன. அவன் சொல்லுக்கு ஒரு தனி மதிப்பு இருக்கின்றது. அவன் ஒரு விஷயத்தில் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறான் என்று தெரிந்து மற்றவர்கள் ஆவலாய்க் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவன் இரண்டே வார்த்தைகள் சொன்னாலும், அவை ஆணித்தாமா யிருக்கின்றன. அவன் சொல்வதை மறுத்துப் பேச நாம் துணிவதில்லை. நாம் வார்த்தையைக் கொட்டி விடுகிறோம்; அவன் ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்துப் பார்த்துப் பேசுகிறான்.

அதே மாதிரி மனதுடையவனா யிருந்தா லொழிய, இன்னொருவன் அப்படிப்பட்ட ஒருவனுடன் பழகுவது கொஞ்சம் கஷ்டமான காரியம். ஏனெனில் அவர்கள் பிறருடன் கலகலப்பாய் இருப்பதில்லை.

மனிதர்களைப் பற்றியும் மிகவும் தாழ்வாக நினைப்பது அவர்களுக்கு சாஜமாயிருக்கிறது. அவர்கள் காதல் முதல், கல்வி வரை எல்லா விதமான விஷயத்தைப் பற்றியும் தனக்குள்ளேயே தர்க்கித்து, ஒரு தனி முடிவுக்கு வந்து விடுகிறார்கள். அம்முடிவிலிருந்து அவர்களைத் திருப்புவது, இலங்கைக் கோட்டையைக் கடிப்பதைவிட சிரமமான காரியம். அவர்கள் அன்பு, பாசம் ஒன்றுமின்றி, காய்ந்துபோன தேக்குமரம் போல, உணர்ச்சியற்ற, யந்திரம் போன்ற வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுடன் அதிகம் பழகினால், நமக்கும் வாழ்க்கையின் மீதுள்ள ஆசை சிறிது சிறிதாய்ப் பட்டுப் போய் விடுகிறது.

ஆயினும், அப்படிப்பட்டவர்கள் தான், மனிதர்களின் வாழ்க்கையையும், உணர்ச்சியையும் திருப்பி அமைக்கிறார்கள். அவர்கள் பேச்சு, மந்திரம் போட்டாற்போல மனிதர்களைக் கட்டிவிடுகிறது. அவர்கள் பேச்சுக்கு ஒரு தனி அழகும், சக்தியும் இருக்கிறது; அதைக் கொண்டு அவர்கள், மனிதர்களை ஒரு நிமிஷத்தில் ஆட்டிவைத்து விடுகிறார்கள்.

அவர்கள் போல, நீங்களும், மனிதர்களிடம் செல்வாக்குள்ளவர்களாக வேண்டுமானால், மௌனம் பழகலாம்—ஆனால் வீண் வெட்டி வேஷம் போட்டீர்களானால், இரட்டிப்பு நஷ்டம் தான் ஏற்படும். ஜாக்கிரதை!

(790-ம் பக்கத் தொடர்ச்சி)

(3) இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர்கலந்து நிற்பது. சித்திரம், சௌந்தரியம், பாட்டு, கூத்து, முதலிய வஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்களெல்லாம் தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள்புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்ப மெய்துக.

(4) வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. "வீடு" என்ற சொல்லுக்கு "விடுதலை" என்பது பொருள். மேற்கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களிலும் ஈடேறிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலை அருள் செய்வான். தமிழா உனக்குப் புருஷார்த்தங்கள் கைகூடுக.

ராதா ராமன்

(எஸ். லக்ஷ்மி அம்மாள்)



மதுரைக்கு அருகாமையில் உள்ள சிறுகுளம் என்னும் கிராமம் எங்கு பார்த்தாலும் மலைகளையும் சோலைகளையும் உடையது. அவ்வூரில் பிராமணர் அக்கிரஹாரத்திலிருந்து மிகவும் தூரத்தில் தான், நான்காம் வர்ணத்தவர் என்று பிராமணரால் சொல்லப்படும் உழைப்பாளிகள் அடங்கிய சமூகத்தினர் வசிக்கின்றார்கள். சுப்பன் தன் மனைவியுடன் பிராமணர்களின் வீடுகளில் கிடைக்கும் வெளுப்பு கூலியால் ஜீவனம் செய்துவந்தான். பிராமணர்களுக்குள் மிகவும் தனவந்தரான ஸ்ரீனிவாஸய்யர் வீட்டிலும் அவனே சலவை செய்துவந்தான்.

ஸ்ரீனிவாஸய்யரின் மனைவி காலமாய்விட்டாள். அவருடைய குமாரன் ராமச்சந்திரனுக்கு 13 வயது இருக்கலாம். அவன் ஸ்ரீனிவாஸய்யர் என்ன சொல்லியும் கேளாமல், பள்ளிக்கூடம் விட்டதும் சுப்பன் வீட்டிற்கு போய்விடுவான். அங்கே 6, 7 வயதுள்ள சுப்பன் மகள் ராதையுடன் விளையாடிக்கொண்டிருந்து விட்டுத் தான் வீட்டிற்கு வருவான். கையில் காலணா இருந்தால் கடையில் போய் ஒரு முறுக்கு வாங்கி ராதாவுக்கும் கொடுத்து தானும் தின்பான். ஸ்ரீனிவாஸய்யரும், செல்வப்பிள்ளையானதினால் ராமச்சந்திரனைத் திட்ட மனமில்லாமல், அவனுக்கு கொஞ்சம் வயது வந்த பிறகு பிராயச்சித்தம் பண்ணிக்கொள்ளலாம் என்றிருந்து விட்டார்.

4

இப்படியிருக்கும் நாட்களில் ஒரு சமயம் சுப்பன் வெளுப் கொஞ்சம் நாள் சென்றுகொண்டு வந்தானென்று, ஸ்ரீனிவாஸய்யர் சுப்பனை நன்றாய் அடித்துவிட்டார். அடிபட்ட வேதனையில் சுப்பனும் ஏதோ இரண்டு வார்த்தை படபடவென்று சொல்லிவிட்டான். ஸ்ரீனிவாசய்யர் ஊருக்கு பெரியவர். லேசாய் விட்டுவிடுவாரா? அவருக்கு கீழ்படிந்து நடக்கும் அவ்வூர் காரர்களிடமெல்லாம் அந்த அயோக்கியப் பயலை பற்றிச் சொல்லி அவனிடம் வெளுக்க போடுவதை நிறுத்திவிட்டார். சுப்பன் 2 மாதம் மிகவும் கஷ்டப்பட்டான். பிறகு சகிக்க முடியாமல் மதுரைக்குப் போய்விட்டான். அங்கு நகரில் நல்ல வேலையும் கூலியும் கிடைத்தது. தன் மனைவி, குழந்தையுடன் சுகமாய் காலங்கழித்து வந்தான்.

இங்ஙனம் பல வருஷங்கள் சென்றன. ஸ்ரீனிவாஸய்யர் பிள்ளை ராமச்சந்திரனுக்கு 24 வயது ஆகிறது. மதுரையில் ஒரு பிரசித்திபெற்ற நியாயவாதியாய் தொழில் நடத்தி வருகிறான். ஸ்ரீனிவாஸய்யர் பண்ணையைப் பார்த்துக்கொண்டு சிறுகுளத்திலேயே இருக்கிறார். சுப்பன்தான் எஸ். ராமச்சந்திரன் வீட்டில் வெளுக்கிறான். ராமச்சந்திரன் ஹரிஜனஸேவையும் செய்கிறான்.

சுப்பன் மகளிடம் ராமச்சந்திரனுக்கு அபார ப்ரேமை. ராதை சிகப்பில்லாவிட்டாலும் பொது நிறம். மருண்டதும் மை போன்றதும் உள்ள விழிகள். கடைந்து எடுத்ததுபோன்ற தேகம். தீர்க்கமான மூக்கு. அன்பு நிறைந்த சொல். கருணை விழிகள். இவைகளினால் ராதை இன்னும் அதிகப் பிரியத்தை ராமச்சந்திரனிடம் உண்டாக்கினாள்.

ராதைக்கு 1, 2, லக்கங்கள் எழுதப் பழக்கிவிட்டார். வெளுக்கப்போடும் துணிகளுக்கு கணக்கு எழுதுவதும் ராதையின் வேலைதான். ராமச்சந்திரன் தன்னுடைய நோட்புக்கில் ஷர்ட், பனியன், வேஷ்டி அங்கவஸ்திரம், கைக்குட்டை, தலைக்குட்டை என்று எழுதி வைத்து ராதையிடம் கொடுத்து விடுவார். ஒவ்வொன்றிலும் எத்தனை உருப்படி என்று ராதை எழுதிவிடுவாள். இந்த வரிசையை மாற்றி அங்கவஸ்திரம், ஷர்ட், என்று எழுதிவிட்டாலும் ராதை எழுத்தின் நீளத்தைக் கண்டு இன்னதுதான் என்று தெரிந்துகொண்டு அதற்கு நேரே லக்கத்தை எழுதிவிடுவாள்.

வக்கில் ராமச்சந்திரன் ஷோக்கியல்ல. இருந்தாலும் தினசரி மூன்றுதடவை புதுச்சலவை வேஷ்டிதான் கட்டுவார். இரண்டு

நாளுக்கொருதடவையாவது ராதை தன் வீட்டுக்கு வந்தால்தான் ராமச்சந்திரன் முகம் சற்று வெளிச்சமாக இருக்கும். ராதைக்கு கொஞ்சம் தமிழ் எழுத்து வாசிப்பதற்கும் சொல்லிக் கொடுத்து விட்டார்.

சில நாட்கள் சென்றன. அவர்களைக் கேட்டால் பல நாட்கள் என்பார்கள். இருவரும் காதல் தெய்வத்தைப் பணிந்தார்கள். காதல் தெய்வம் இருவரையும் பணிய வைத்தது என்றும் சொல்லலாம். தெய்வம் இருவரையும் ஒற்றுமைப் படுத்தி ஒரே காட்சியில் இருவரையும் பிணைத்துவிட்டது. ராதைக்குள்ள சுபாவ கூச்சத்தினலும் அதிக பிரியத்தாலும், ராமச்சந்திரனை பார்க்கும் சமயமெல்லாம் மின்சார சக்தி சிறிதளவு ஓடும் கம்பியை தொட்டது போலிருக்கும். சுப்பனுக்கு இச் சமாசாரம் தெரியாது.

* * * *

ஸ்ரீனிவாஸய்யர் தன் வயல்களைப் பார்க்கப் புறப்பட்டவர், தன் மகனையும் பார்த்து வரலாமென்று நினைத்தார். குளத்திலிருந்து கால் நடையாய் மதுரைக்குக் கிளம்பினர். வரும் வழியில் வைகையாற்றில் இறங்கினர். வெள்ளம் ஜாஸ்தி. ஜலம் ஜாஸ்தி இல்லை என்று இறங்கின இடத்தில் ஜாஸ்தி தண்ணீர் வந்து அவரைக்கொண்டு போயிற்று. இதைக் கரையில் தற்செயலாய் நின்று கொண்டிருந்த சுப்பன் பார்த்துவிட்டு இரக்கத்தினல் தூண்டப்பெற்று, உயிரை லக்ஷ்யம் செய்யாமல் நீரில் குதித்து, நீந்தி அவரை எடுத்து கரைகொண்டு வந்து சேர்த்தான். சற்று நேரம் சென்றுதான் ஸ்ரீனிவாஸய்யருக்கு மூச்சுவந்தது. சற்றுப் பேச முடிந்தவுடன் சுப்பனைப் பார்த்து "நீ யாரப்பா? நான் எங்கே இருக்கிறேன்" என்று கேட்டார்.

சுப்பன்:—"இது மதுரை. நான் வண்ணானுங்க. தாங்கள் ஆற்றிலே விழுந்ததைப் பார்த்துவிட்டு தங்களைக் கரையேற்றினேனுங்க" என்றான்.

ஸ்ரீனி:—"ஏண்டா, இந்த ஊரில் எஸ். ராமச்சந்திரன் என்று ஒரு வக்கில் இருக்கிறரோ, தெரியுமா" என்றார்.

சுப்பன்:—"தெரியுங்க. அவுங்க வீட்டுக்குக் கூட நம்பதான் வெளுக்கிறதுங்க".

சுப்பன்:—"மகாத்மாகாந்தி சொல்லியிருக்காங்களாமே. அதனலே மனசு திருந்தித்தாம். அதன்படி ராமச்சந்திரசாமி எங்க

வீடுகளிலெல்லாம் கூட வந்து படிப்புச் சொல்லிதருகிறாங்க" என்றான்.

ஸ்ரீனிவாஸய்யர் இதைக்கேட்டுத் திடுக்கிட்டுவிட்டார். ' என்றாலும் சுப்பன் செய்த உதவியினால் மனம் சிறிது திருந்திவிட்டது.

ஸ்ரீனி:—உன் பேரென்ன ?

சுப்:—"சுப்பன்"

ஸ்ரீனி:—"சொந்த ஊர் எது''

சுப்:—"சிறு குளம்"

பழைய ஞாபகம் வந்தது. சுப்பன் தன்னுடைய கொடுமையினால் தான் இவ்விடம் வந்தவன் என்று அறிந்தார்.

ஸ்ரீனி:—"என்னைத் தெரிகிறதா ?',

சுப்:—"சிறுகுளம் பெரிய பண்ணையாரை ஜன்மத்திலேயும் மறப்பேனா சாமி !" என்றான்.

அப்பொழுதே ஸ்ரீனிவாஸய்யர் மனதில் ஈஸ்வரன் உதயமானார். உழைப்பாளிகள் குலமே மேல் என்று எண்ணினார். "தாழ்மையுள்ளவனிடமே நான் இருப்பேன்" என்ற தெய்வ வாக்கு நினைவிற்கு வந்தது. ஹரிஜனஸேவை செய்யத் தீர்மானித்தார். சுப்பனிடம் மன்னிப்பு கேட்டார். இருவரும் ராமச்சந்திரன் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.

* * * *

இது சமயம் ராதை வெளுப்பு எடுக்க ராமச்சந்திரன் வீடு சென்றிருந்தாள். மாலை நேரம் ராமச்சந்திரன் மாடியிலிருந்தான். ராதை வெளுக்க வேண்டிய துணிகளை மூட்டை கட்டிக்கொண்ட பிறகு, ராமச்சந்திரனிடம் 'போய் வருகிறேன்' என்று சொன்னாள். ராதையின் சொல்கேட்ட ராமச்சந்திரன் "ராதா, நான் ஒன்று வேண்டுகிறேன். தருவாயா ?" என்றான். "என்னிடம் என்ன இருக்கிறது" என்று குறும்பாய் கேட்டாள் ராதை.

ராம:—"நீ எனக்கு மனைவியாக வேண்டும். இதே நான் வேண்டுவது !" என்றான்.

ராதையின் பிரேமை ராமச்சந்திரன் இவ்வாறு கேட்டவுடன் உச்ச ஸ்தானத்தை அடைந்தது. அவளால் பேச முடியவில்லை

கண்கள் சுழன்றன. என்ன சொல்வதென்று தெரியாமலிருந்தாள். சற்று தைரிய மடைந்த ராதை—"தங்கள் பிதா அனுமதிப்பாரா? நீங்கள் மனைவியாய் அங்கிகரியாவிட்டாலும் கூட, நான் உங்கள் ஆதீனத்திலேயே இருப்பேன். இந்த உடம்பும், மனதும் தங்களுடையது" என்றாள். அவள் வாக்கு சாதுர்யத்தைக்கேட்ட ராமச்சந்திரன் பிரமித்துவிட்டான்.

இவர்கள் இந்நிலைமையில் இருக்கும் சமயம் சுப்பனும் ஸ்ரீனிவாஸய்யரும் வந்தார்கள். ராமச்சந்திரன் தகப்பனாரைக் கண்டவுடன் நமஸ்கரித்தான். சுப்பன் மகளை அந்நிலைமையில் பார்த்தவுடன் கோபம் கொண்டான்.

"ராதை! என்ன காரியம் செய்தாயடி" என்றான் சுப்பன். ராதை தலை குனிந்தாள். ராமச்சந்திரனிடம் அவனுக்கு உண்டான கோபத்தை அளவிட முடியாது. அகாரணமாக அன்று ஸ்ரீனிவாசய்யர் அடித்தது அவனுக்குப் பெரிதாய்த் தோன்றவில்லை. ராமச்சந்திரனை ஒரு பெரிய துரோகி என்று நினைத்தான். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை.

ஸ்ரீனிவாஸய்யர் :—ராமு, இப்பெண் யார் என்றார்.

ராமு :—"சுப்பன் மகள் ராதை" என்றான்.



ஸ்ரீனிவாஸய்யர் சந்தோஷித்தவராய் "சுப்பா! உன் மகளை ராமுவிற்கு கல்யாணம் செய்து தருகிறாயா?" என்றார்.

சுப்பன் :—"சாமி தங்கள் குலமென்ன, நாங்கள் அடிமைகளன்றோ?" என்றான்.

ஸ்ரீனிவாஸய்யர் :—"அதெல்லாம் பழங்கதை……"



* ரொட்டிக் கணக்கு *

இது குழந்தைகளுக்காக எழுதியது. பெரியவர்கள் படிக்கக் கூடாது.

இரண்டு அராபியர்கள் பாக்தாத் நகரத்தை நோக்கி யாத்திரை செய்துகொண்டிருந்தார்கள். ஒரு கிராமத்திற்குப் பக்கத்தில் போனவுடன் ஓர் இடத்தில் உட்கார்ந்து கட்டுச் சோற்றை அவிழ்த்தார்கள். அங்கு அநேகமாக நம்மைப்போல அரிசிச்சோறு சாப்பிடுகிறவர்களல்ல. ஆகையால் சோற்று மூட்டையை அவிழ்த்ததாகக் கூறியது தவறு. மன்னிக்கவேண்டும். ரொட்டிப் பொட்டலத்தை அவிழ்த்தார்கள். ஒருவரிடம் 3 ரொட்டி இருந்தது. மற்றவரிடம் 5 ரொட்டி இருந்தது.

அவர்கள் சாப்பிட ஆரம்பிக்கும்போது வேறொருவன் அந்தப் பாதை வழியாய் வந்தான். பசி அதிகமா யிருந்தது. அதிலும் வேறொருவர் சாப்பிடுவதைப் பார்த்துவிட்டால் உடனே பசி தாங்க முடியாமல் போவது இயற்கைதானே. நாவில் தண்ணீர் ஊறியது. உடனே அந்த அராபியர்களிடம் போனான்.

“ஐயா, எனக்குப் பசி அதிகம். கையில் ஆகாரம் கொண்டுவரவில்லை. என்னிடம் காசு இருக்கிறது. இருக்கிறரொட்டியை மூன்று பேருமாகச் சாப்பிடுவோம். கையிலுள்ள காசைத் தருகிறேன். நீங்கள் இருவரும் பங்கிட்டுக்கொள்ளுங்கள்” என்றான்.

இரண்டு யாத்திரிகர்களும் இதற்கு இணங்கினார்கள். சாப்பாடு முடிந்தது. உடனே புதிதாக வந்த ஆசாமி தன்னிடமிருந்து 8 அஷர்பிகளை (ஒரு நாணயம்) கொடுத்துவிட்டுப் போனான்.

5 ரொட்டி கொண்டுவந்தவன் 5 அஷர்பி எடுத்துக்கொண்டான். மீதத்தை மற்றவனுக்குக் கொடுத்தான். அவனோ இதற்கு இணங்கவில்லை. சரி பாதியாகப் பங்கிட வேண்டுமென்றான்.

இரண்டுபேருக்கும் பெரிய சண்டையாய்விட்டது. ஆகையால் பக்கத்து ஊரிலுள்ள நியாயாதிபதியிடம் சென்றார்கள்.

இரண்டு பேருடைய கதையையும் நியாயாதிபதி கவனமாய்க் கேட்டார். பிறகு பின்வருமாறு தீர்ப்புக் கூறினார்:—"5 ரொட்டி கொண்டுவந்தவன் 7 அஷர்பிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். 3 ரொட்டி கொண்டுவந்தவன் ஒரு அஷர்பி எடுத்துக்கொள்ள வேண்டும். அதுதான் நியாயமான பாகப் பிரிவாக இருக்கும்."

இதைக் கேட்ட இரண்டுபேரும் திடுக்கிட்டுப்போனார்கள். கச்சேரிக்கு வந்திருந்த மற்றவர்களும் திடுக்கிட்டுப் போனார்களாம். இது சிறிதும் நியாய மில்லாத தீர்ப்பு என்று சிலர் கூறினார்கள். அவசரக் குடுக்கைகள் !


உங்கள் அபிப்பிராய மென்ன ?

தன்னுடைய தீர்ப்பைப்பற்றிப் பலர் பலவாறு கூறுவது நியாயாதிபதிக்குத் தெரிந்தது. உடனே அவர் தமது தீர்ப்பு நியாயமான தென்பதை விளக்கிக் கூறினார்.


"ஒருவனிடம் 3 ரொட்டி இருந்தது. மற்றவனிடம் 5 ரொட்டி. ஒவ்வொரு ரொட்டியையும் மூன்று துண்டாக நறுக்கினால் ஒருவனுடையது 9 துண்டாக இருக்கும். மற்றவனுடையது 15 துண்டு; ஆகமொத்தம் 24 துண்டாயிற்று. மூன்று பேரும் ஆளுக்கு 8 துண்டு வீதம் சாப்பிட்டார்கள். மூன்று ரொட்டி கொண்டுவந்தவனிடம் 9 துண்டுகள். அதில் 8 அவனே தின்றிருக்கிறான். ஆகையால் புதிதாய் வந்தவனுக்கு அவன் கொடுத்தது ஒரு துண்டுதான். மற்றவனோ தன்னுடைய 15 துண்டில் 8 துண்டுமட்டும் சாப்பிட்டுவிட்டு 7 துண்டு விருந்தாளிக்குக் கொடுத்திருக்கிறான். ஆகையால் முதல்வனுக்கு 1 அஷர்பியும், இரண்டாவது மனிதனுக்கு 7 அஷர்பியும் கொடுக்கச் சொன்னேன்" என்றாராம். சரிதானே !

தப்பும் வழி

ஸ்ரீ அப்டன் சின்கிளேர் என்பவர் பட்சபாதமில்லாமல் உள்ளதை உள்ளபடி எழுதும் அமெரிக்க சமதர்மவாதி. உள்ளபடி கூறுவது மட்டுமல்ல; எப்பேர்ப்பட்ட விஷயங்களையும் பாமரரும் அறியும்படியான வழியில், மனதிலேபோய் தைக்கும்படியான விதத்தில் எழுதும் சாமர்த்தியமுள்ளவர். உலகிலுள்ள மிகத் திறமைவாய்ந்த ஆசிரியர்களில் அவர் ஒருவர். முதலாளித்துவத்தால் உலகில் ஏற்படும் அனர்த்தங்களை விளக்க அவர் பல புத்தகங்களும், நாவல்களும் எழுதியிருக்கிறார். உலகிலே எங்கு பார்த்தாலும் தற்சமயம் வர்த்தக மந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கம் வாங்கு



வாரில்லாமல் சரக்குகள் தேங்கிக்கிடக்கின்றன. மற்றொரு பக்கத்தில் கொடுப்பாரில்லாமல் பலர் வாடி வதங்கி நிற்கின்றனர். இம்மாதிரி நிலைமை ஏற்படக் காரணமென்ன? இந்த நெருக்கடியை எப்படித் தீர்ப்பது?



இதற்காக "தப்பிக்கும் வழி" என்று சமீபத்தில் ஸ்ரீ. சின்கிளேர் ஒரு அரியநூல எழுதியிருக்கிறார். அதிலே ஒரு கதை சொல்லுகிறார். அக்கதையில் மிகத்தெளிவாக தற்கால நிலைமை விளங்குவதால், பெயர்களை மாற்றி அதை கீழே பிரசுரிக்கிறோம். (ப-ர்)

நடுக்கடலில் போகும்போது கப்பல் உடைந்து பிரயாணிகள் மூழ்கிவிட்டனர். மூவர் மட்டும் எப்படியோ தப்பி பக்கத்திலுள்ள ஒரு தீவில் வந்து சேருகின்றனர். கருப்பணன், முனிசாமி, வெள்ளையப்பன் என்பது அவர்கள் பெயர். அத்தீவு மிகவும் செழிப்பானது. உணவுப் பொருள்களுக்கு குறைவில்லை. கருப்பணன் மீன பிடிக்கின்றான். முனுசாமி தேங்காய்களை சேகரிக்கின்றான். வெள்ளையப்பன் படகு கட்டுதல், வீடு கட்டுதல் முதலிய தொழில்கள் செய்கிறான். மூன்று தொழில்களும் மூவருக்கும் தெரியுமாகையால், ஒருவருக்கொருவர் நியாயமாக நடந்து பரஸ்பர உதவியாய் இருக்கிறார்கள். சரக்குகள் அதிகமாய்ச் சேர்ந்துவிட்டால், கொஞ்சநாட்களுக்கு ஓய்வு எடுத்துக்கொண்டு உல்லாசமாய் காலங்கழிப்பார்கள். மூவரும் அதிக ஓய்வுடனும், குறைந்த வேலையுடனும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். இதுவரை அவர்களிடம் சொந்த சொத்து என்று நினைக்கக்கூடியது ஒன்றுமில்லை. இச்சமயம் சுயநன்மை பிசாசு மெதுவாய் தலைகாட்ட ஆரம்பித்தது. வெள்ளையப்பன் ஆணிகள் பதித்த ஒரு தடி செய்தான். அத்தடியைக் காட்டி மற்ற இருவரையும் தனக்கு அடிமையாக்கினான்.

இப்பொழுதுதான் அத்தீவில் சனியன் ஆரம்பித்தது.



சமஉரிமை போய், கருப்பணனும் முனிசாமியும் வெள்ளையப்பனுக்கு அடிமைகளானார்கள். தங்

கள் இஷ்டப்படி தங்களுக்கு வேண்டியதை தேடிக்கொள்ளும் காலம் போயிற்று. வெள்ளை யப்பன் இட்ட வேலைகளைச் செய்துவந்தார்கள். அவற்ருல் விளையும் முழு பலனையும் அநுப விக்க அவர்களுக்கு உரிமை கிடையாது. பலனில் ஒரு பகு தியே அவர்களுக்கு சம்பளமாய கிடைத்தது. மீதத்தை வெள் ளையப்பன் குவித்து வைத்தான்.

இப்படி குவிப்பது ஏராள மாய் போகவே வெள்ளையன் பெரிய முதலாளியானுன். வெள் ளையனிடம் ஏராளமாக சரக்கு கள் இருக்கின்றன. ஆனல் கருப்பணனும், முனிசாமியும் போதிய உணவுப்பொருள்கள் கிடைக்காமல் கஷ்டப்படுகிருர் கள். வெள்ளையன் கையில் சரக்குகள் ஏராளமாய் போகவே', கொஞ்ச நாட்களுக்கு உங்கள் வேலை வேண்டியதில்லையென்று இருவரையும் வேலையிலிருந்து நீக்குகிருன்.

இப்பொழுது கருப்பணன், முனிசாமியின் கதி யென்ன? தேங்காயும், மீனும் உபயோ கிப்பாரில்லாமல் கிடக்கின்றன. ஆனல் கருப்பணனும், முனி சாமியும் பட்டினி கிடக்கிருர்கள். அவர்களுக்கு வேலையில்லாதபடி யால் ஒன்றும் கொடுக்க முடி யாதென்று வெள்ளையப்பன் சொ ல்லிவிடுகிருன். தீவில் அகப் படும் பொருள்களை சேகரித்து உண்ண அவர்களுக்கு உரிமை யில்லை. ஏனெனில் தீவு வெள்ளை யப்பனுக்கு சொந்தமாய்விட் டது. வெள்ளையப்பன் கையில் தடி இருக்கிறபடியால் அவனே சர்க்கார். அவன் இஷ்டப்படி சட்டங்கள் செய்து கருப்பண னையும், முனிசாமியையும் அவற் றின் கீழ் ஆண்டுவந்தான். தானே கடவுளின் பிரதிநிதி என்று சொன்னுன். தன் அபிப் பிராயப்படியே பத்திரிகைகள் எழுதவேண்டும் என்று செய் தான். அவன் நாகரிகமுள்ளவ னும். ஆகவே பெரியபெரிய கட்டிடங்கள் கட்டினுன். புதிது புதிதான இயந்திரங்கள் செய்து அதிகமாக சரக்குகளை சேக ரித்தான். ஆனல் சரக்குகள் அதிகமாக ஆக கருப்பணன், முனிசாமி நிலைமை மோசமாகு மென்பதை அவன் அறிய வில்லை. சரக்குகள் தேங்கி அழுக ஆரம்பித்தன. கருப் பணன், முனிசாமி பட்டினி கொடுமை தாங்க முடியாத தாயிற்று. ஆகவே புதிதாக மரங்கள் நடும்படி இருவருக்கும் வேலைகொடுத்தான். பழைய மரங்களின் பலன்களையே உப யோகிக்க வழியில்லை யென்பதை கவனிக்கவேண்டும். இந்த புதிய முறையும் வெகுநாள் நீடிக்க வில்லை.

கருப்பணனும், முனுசாமியும் தன்னிட மிருக்கும் சரக்குகளை வாங்குவதற்காக கடன் கொடுத் தான். கடனுக்குமேல் கடனு யிற்று. கடன் திரும்பிவர வழி யில்லை. வேலையில்லாவிட்டால்

எப்படி கடனை திருப்பி அடைக்க முடியும்? மற்ற தீவுகளிலும் இதே நிலைமைதான். மற்ற தீவி லுள்ளவர்களுக்கு கொடுத்த கட னும் திரும்பி வருவதாயில்லை. பணமாய் திரும்பக் கெடுக்க வழியில்லை யென்றும், சாக்கு களாய் தருவதாகவும் சொன்னார் கள். தன்னிடமுள்ள சரக்கு களை விற்காமல் குவிந்து கிடக் கும்போது, வெளிநாடுகளி லிரு ந்து சரக்குகள் வந்தால் அவன் கதி என்னவது? ஆகவே இறக் குமதி யாகாமல் ஏராளமாய் வரி விதித்தான்.

வெள்ளையப்பன் என்னென்ன யுக்திகளெல்லாம் செய்தாலும், கருப்பனனுக்கும், முனிசாமிக் கும் வேலை கிடைக்கவில்லை. முதலில் சம்மதித்தான். ஆகவே தனக்கு முதல் உதவிசெய்ய கட மைப்பட் டிருப்பதாக கருப்ப னன் வெள்ளையப்பனை அதட்டி னன். வெள்ளையப்பன் முனி சாமியை கைக்குள் போட்டுக் கொண்டு கருப்பணனை அடித் துத் துரத்தச் சொன்னன். முனிசாமியும், கருப்பணனும் ஒற்றுமையா யில்லாதவரையில் தன்னுடைய நிலைமைக்கு ஆபத் தில்லை என்பதை வெள்ளையப் பன் அறிவான். இருவரையும் பிரித்துவிட்டு தன் காரியத்தை நடத்திக்கொண்டுவந்தான். கருப் பணனும், முனிசாமியும் ஒரு வருக்கொருவர் அடித்துக்கொண் டிருந்தார்கள். ஆனல் எத்தனை நாளைக்குத்தான் பட்டினி கிடக்க முடியும்?



குவிந்து அழுகிப்போகும் உண வில் ஏதாவது கொஞ்சம் கொடு என்று கேட்டார்கள். வெள்ளை யப்பன் அந்தத் தீவுக்கு எஜமா னவதற்கு, கருப்பணன் தான் அபேதவாதப் பேச்சு கிளம் பிற்று. "விளை பொருள்களை அநுபவிக்க எல்லாருக்கும் சம உரிமை உண்டு. நாடு எல்லா ருக்கும் சமம்" என்று பழைய

ஞாபகத்தில் பேச ஆரம்பித்தனர். பார்த்தான் வெள்ளையப்பன். இதை வளரவிட்டால் ஆபத்தல்லவா? "சமதர்மம், பொது வுடமை என்று பேசுவது ராஜாங்க விரோதம்; தெய்வ தூஷணை. யாராவது அப்படிப் பேசினால் 10 வருஷ கடுங்காவல்'' என்று சட்டம் செய்தான். இந்தகடுங்காவலுக்கு பயந்து பொது உடமைப்பேச்சு அமுங்கிக் கிடந்தது. ஆனால் பசியின் கொடுமை மறுபடியும் அப்பேச்சை வெளியே கிளப்பி விட்டது. வெள்ளையப்பன் பாடு திண்டாட்டமாய் போயிற்று. கையிலோ பணமில்லை. தன் சரக்குகளுக்கோ விற்பனையில்லை. குடிகளோ புரட்சி செய்கிறார்கள். என்ன செய்வது?



முனிசாமிக்குச் சம்பளம் கொடுக்கமுடியவில்லை. சம்பளம் இல்லையென்றால் வெள்ளையப்பனிடம் அவனுக்கு என்ன உறவு? கருப்பணனும் முனிசாமியும் ஒன்று சேர்ந்தார்கள். வெள்ளையப்பன் எவ்வளவோ பயமுறுத்தியும் பலிக்கவில்லை. அவனிடமிருந்த தடியை (அரசுரிமையை) பிடுங்கிக் கொண்டு அவனை அடித்துத் துரத்திவிட்டார்கள். இரண்டுகட்சியாருக்கும் நடந்த சண்டையில், நாட்டில் எல்லா தொழில்களும் சீரழிந்தன. கருப்பணனும், முனிசாமியும் சேர்ந்து புதிதாக எல்லா தொழில்களையும் ஏற்படுத்தி மும்முரமாய் வேலை செய்கிறார்கள். வெள்ளையப்பன் காட்டில் ஒளிந்துகொண்டிருக்கிறான். அடிக்கடி இருவரையும் பற்றி பொய் வதந்திகளை கிளப்பிவிடுவான். இருவருக்கும் புத்தியோ, நாகரிகமோ கிடையாதென்பான். அவர்கள் முயற்சி பலிக்காதென்பான். என்ன தான் அவன் பொய்ப்பிரசாரம் செய்தாலும் கருப்பணனும் முனிசாமியும் வெற்றிமேல் வெற்றியடைந்து வருகிறார்கள்.

அசட்டு வாதங்கள்

(ஒரு ஆசிரியர்)

நம் நாட்டில் அறிவை விருத்திசெய்வதற்குத் தாய்பாஷை பத்திரிகைகள் முக்கியமான கருவிகளாக இருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் விஞ்ஞானம், கணிதம், ராஜரீக சாஸ்திரம், பொருளாதாரம் முதலியன ஆங்கிலத்திலேயே கற்றுக்கொடுக்கிறார்கள். ஆங்கிலம் படிக்காதவர்கள் இவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ள இடமில்லாமல் போய்விடுகிறது. இந்த பெருங்குறையை நிவர்த்திப்பது தாய்ப்பாஷைப் பத்திரிகைகளின் பொறுப்பாகும். பல பத்திரிகைகள் இவ்விஷயத்தில் தமது பொறுப்பை சரிவர நிறைவேற்றி வருகின்றன என்பது உண்மையே யாகும்.

ஆனால் சில பத்திரிகைகள் விபரீதமாக நடப்பது வருந்தத்தக்கது. இந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சில விஷயங்களில் போதிய அளவு பயிற்சி பெற்றிருப்பதில்லை. அந்த நிலைமையில் அவர்கள் தமக்குத் தெரியாத விஷயங்களைப்பற்றி எழுதாமலிருப்பது தான் நியாயம். சில விஷயங்கள் பத்திரிகாசிரியர்களுக்கு அரைகுறையாகத் தெரிந்திருக்கும். ஆனால் அவற்றை எடுத்துச் சொல்லி விளங்கவைக்கும் சக்தி அவர்களுக்கு இருப்பதில்லை. அவர்கள் தமது முடிவை மட்டிலும் கூறி அதற்குப் பிறர் கூறும் காரணங்களை எடுத்துக்காட்டினால் தமது கடமையைப் பூர்த்தி செய்தவர்களாவார்கள். ஆனால் அதோடு அவர்கள் திருப்தியடைவதில்லை. நடையழகையும் வர்ணனை ரசத்தையுமே பெரிதாக நினைத்து தர்க்கத்துக்குப் பொருத்தமில்லாமல் ஏதாவது எழுதிவிடுகிறார்கள். படிப்பவர்கள் 'அழகாக' இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு படிக்கிறார்கள். "இவ்வளவு சிக்கலான விஷயத்தை எவ்வளவு சுலபமாக விளக்கிவிட்டார்!" என்று அசட்டுத்தனமாக ஆச்சரியப்பட்டு மகிழ்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அவ்விஷயத்தில் அறிவு விரிவாகிறதோ என்று பார்த்தால் இல்லவே இல்லை. அதோடு நின்றுவிட்டாலும் குற்றமில்லை. ஏற்கனவே உள்ள மூட நம்பிக்கையும் குருட்டு வாதமும் பலமடைகிறது. அதுதான் பெரிய ஆபத்து.

அதற்கு இங்கு ஒரு உதாரணம் கூறுகிறோம். இம்மாதம் ஒரு விகடப்பத்திரிகை நாணயமாற்று விஷயத்தைப்பற்றி ஒரு வியாசம் எழுதியிருக்கிறது.

"இந்தியாவின் ரூபாய் மட்டும் செயற்கையாக அதிக மதிப்புக் கொடுத்து வைக்கப்பட்டிருக்கிறது" என்று அந்த ஆசிரியர் தமது வியாசத்தில் சித்தாந்தம் செய்கிறார். இந்த அபிப்பிராயத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இதை "நிரூபிப்பதற்காக" அது பின்வரும் "சுலபமான வழி' ஒன்று சொல்லியிருக்கிறது.

> "வெள்ளிக்கடையில் நூறு ரூபாய்க்கு சுமார் 200 தோலா எடை வெள்ளி கிடைக்கிறதல்லவா? இதற்கு மாறாக 100 ஸ்டர்லிங் பவுன் நோட்டைக்கொடுத்தால் 90 தங்கப்பவுன் தான் கிடைக்கும். எனவே ரூபாயின் மதிப்பு செயற்கை மதிப்பு என்று ஏற்படவில்லையா?"

என்று அந்த வியாசத்தில் கூறப்படுகிறது.

இது ஒரு அசட்டுத்தனமான நிரூபணம் என்பதை "சுலபமாக நிரூபிக்க" முடியும்.

1. இந்த நிரூபணத்தை ஏற்றுக்கொண்டால் ஸ்டர்லிங்குக்குத்தான் செயற்கை மதிப்பு மிகவும் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்படும். எப்படியென்கிறீர்களோ? கவனியுங்கள்.

ரூபாய் வெள்ளியால் செய்த நாணயம். அதை உருக்கினாலும் 8 அணா வெள்ளி அகப்படும். தீயில் போட்டாலும் நாணயமாக மதிக்காவிட்டாலும் காசுக்கடையில் எடைபோட்டுக் கொடுத்தாலும் அதற்கு இயற்கையான ஒரு மதிப்பு உண்டு. உபயோகம் உண்டு. இப்படிப்பட்ட ஒரு நாணயத்துக்கு சர்க்கார் ஒரு விசேஷ மதிப்புக்கொடுத்து 16 அணா மதிப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள். சர்க்கார் அதற்கு இயற்கையாக அமைந்துள்ள மதிப்பைப்போல் இரண்டு பங்கு அதிக மதிப்பு ஏற்படுத்தியிருக்கிறது உண்மையே. ஆனால் ஸ்டர்லிங்கை கவனியுங்கள். அது வெறுங் கடிதாசு. கடிதம் எழுதுவதற்கும் உபயோகமில்லாமல் அதன்மீது என்னென்னமோ எழுதியிருக்கிறது. சர்க்கரை மடித்துக்கொடுக்கவும் உதவாத கடிதாசு. செலாவணி மதிப்பைத் தவிர வேறு சுயமதிப்பு போட்டிப் பரிசில்லாத விகடப் பத்திரிகைக்கு உள்ள மதிப்புதான். இப்படிப்பட்ட ஒரு கடிதாசிக்கு சுமார் ⁹⁄₁₀ பவுன் எடை தங்கம் கிடைக்கிறது! கடிதாசிக் கிரயத்துடன் ஒப்பிட்டால் 10 லக்ஷம் மடங்கு அதிகமதிப்பு செயற்கையாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆகவே ஸ்டர்லிங்கின் மதிப்புத்தான் மிக, மிக, மிக, மிக, அதிக

மான செயற்கை மதிப்பு என்று ஏற்படவில்லையா? இதோடு ஒப்பிட்டால் ரூபாய்க்குக் கொடுத்துள்ள செயற்கை (அதிக) மதிப்பு மிகவும் குறைவு என்றே சொல்லலாம். ஒன்றுக்கும் உதவாத கடிதாசுக்கு 1¼ பவுன் தங்கமதிப்பிருந்தால் 8 அணு வெள்ளி ரூபாய்க்கு 16 அணு மதிப்பு ஏற்படுத்தக்கூடாதா?

ஆகையால் ரூபாயின் மதிப்பை இன்னும் உயர்த்தவேண்டுமென்று நான் சொல்லவில்லை. விகடனை ஏற்றுக் கொண்டால் அந்த அசட்டுத்தனமான முடிவுதான் ஏற்படுமென்பதே எனது கட்சி. ரூபாய்க்கு—பணத்துக்கு, பிணமும் வாயைத்திறக்கும் என்பார்களே அந்த பணத்திற்கு—இந்த ஆசிரியர் அளவு கடந்த மதிப்புக் கொடுத்திருப்பது உலகம் அறிந்த விஷயம். அதைப்பற்றி நான் ஒன்றும் குறிப்பிடப்போவதில்லை. இது அதற்கு இடமுமல்ல.

2. உவமானம் சரியாக இருக்க வேண்டுமாயின் ரூபாயையும், வெள்ளி விலையையும் ஒப்பிட்டதுபோல ஸ்டர்லிங்கையும் காகித விலையையும் ஒப்பிடவேண்டும். ஏனென்றால், விகடன் வியாச ஆசிரியர் நூறு ஸ்டர்லிங் பவுன் நோட்டு தங்கக் கடிதாசியில் அச்சிட்டதாகக் கருதமாட்டார் என்று நினைக்கிறேன்.

ரூபாய் என்பது என்னது? வெள்ளியில் அச்சடித்த ஒரு நோட்டு. ஸ்டர்லிங் என்பது காகிதத்தில் அச்சடித்த ஒரு நோட்டு. ரூபாயை சர்க்கார் கஜானாவில் கொடுத்தால் அதற்குப் பதிலாக தங்கம் கொடுக்க சர்க்கார் கட்டுப்பட்டிருக்கவில்லை. ஸ்டர்லிங்குக்கும் அப்படியே. இப்படிப்பட்ட ஓர் செலாவணிக் கருவியின் மதிப்பை அது செய்யப்பட்டிருக்கும் பொருளின் மதிப்புடன் ஒப்பிடுவது சிறிதும் பொருத்தமில்லாத விஷயம். அப்படியே ஒப்பிடுவதா யிருந்தாலும், 100 ரூபாய்க்கு எத்தனை ரூபா எடை வெள்ளி அகப்படுகிறது என்று கவனிப்பதாயின், 100ரூபா ஸ்டர்லிங்குக்கு எத்தனை பவுன் எடை கடிதாசி கிடைக்கிறது என்றல்லவோ பார்க்கவேண்டும்? அப்படிப் பார்த்தால் 100 ரூபாய்க்கு 200 ரூபாய் எடை வெள்ளி அகப்படுகிறது. நூறு ஸ்டர்லிங்குக்கோ சுமார் 6-டன் அதாவது சுமார் 15,000 ராத்தல், அதாவது சுமார் 10 லக்ஷம் பவுன் எடை கடிதாசி கிடைக்கும். "எனவே" ஸ்டர்லிங்கின் மதிப்பு செயற்கை மதிப்பு என்று ஏற்படவில்லையா? இதைப்பார்க்கும் போது, ஸ்டர்லிங்குக்குக் கொடுத்ததுபோல் ரூபாய்க்கு அவ்வளவு அதிகமான செயற்கை மதிப்புக் கொடுக்கவில்லையென்று தெளிவாக ஏற்படவில்லையா?

வேண்டிய தென்ன?

ஆனந்த விகடன் வியாசம் எழுதியவர் பெயரில்லாமலே வெளிவருகிறது. ஆகையால் அது பத்திரிகாசிரியரே எழுதியதாகக் கொள்ள வேண்டும். எழுதினவர் பெயருடன் வெளிவரும் வியாசத்தைவிட தலையங்கமாக வெளிவரும் அபிப்பிராயத்துக்கு அதன் வாசகர்கள் அதிக கவுரவம் கொடுப்பார்கள். பொது ஜனங்களும் அதிகமான கவனத்தைச் செலுத்துவார்கள். ஆகையால் தான் அந்த வியாசம் சற்று ஜாக்கிரதையாக எழுதப்பட வேண்டுமென்பதை இங்கு வற்புறுத்திக் கூறினேன். இதை எழுதினவர் தமது பெயருடன் பிரசுரித்திருந்தால் இழுக்கில் ஒரு பாகம் மட்டும்தான் பத்திரிகையைச் சாரும்.


ஆனந்த விகடன் வியாசத்தின் கருத்தென்ன? நாணய மாற்று விகிதம் எப்படி இருக்க வேண்டுமென்று அது கருதுகிறது? நூறு ரூபாய்க்கு 90 தோலா வெள்ளி தான் கிடைக்க வேண்டுமென்பது ஆசிரியரின் கட்சியா? அப்படியானல் என்ன நடக்கும். 100 ரூபாயையும் உருக்கினல் சுமார் 93 தோலா சுத்த வெள்ளி கிடைக்கும்; இதை விற்ருல் 103 ரூ. கிடைக்கலாம்; அதை மறுபடியும் உருக்கி விற்ருல் 106 ரூபாய் கிடைக்கும். இப்படியே எள்ளுக்கணக்குப் பார்த்து குபேரனுய்விடலாம்!

இதெல்லாம் விகடன் ஆசிரியருக்குத் ஒரு வேளை தெரிந்திருக்கும். ஆனல் ஏன் எழுதவில்லை? "வழ வழ கொழ கொழ" வென்று அவர் எழுதமாட்டார். வாசிப்பவர்களுக்கு ருசியாக "ஒரு போடு போட வேண்டாமா?" அதற்காக சண்டப் பிரசண்டமாக அடித்து விடுகிருர். ஏற்கனவே உள்ள மூட நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்துகிருர். இதுதான் இதில் ஏற்படக்கூடிய பலன்.

தமிழ்ப் பத்திரிகாசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள். அசட்டு வாதங்களை சண்டப் பிரசண்டமாக அடுக்கி பாமர ஜனங்களை அசடாக்க வேண்டாம். இது அழகல்ல. உபகாரம் செய்ய முடியா விட்டால் அபகாரமாவது செய்யாமலிருங்கள். பொறுப்பற்ற பத்திரிகைகளிலிருந்தும், ஆசிரியர்களிட மிருந்தும் தமிழ் மக்களை கடவுள் காப்பாற்றுவாராக!

புதிய நட்பு

("தேவி தாசன்" எழுதுகிறார்.)



அமெரிக்கா முதலாளித்துவத்திற்கு உலகில் தலைமை வகிப்பது. ரஷியா பொதுவுடமைக்கு உலகில் குருவாய் விளங்குவது. தனி யொருவனுக் குணவில்லை யெனில் ஜகத்தினை அழிப்போம் என்று கர்ஜிப்பது ரஷியா. பெரிய பெரிய தொழில்களை ஸ்தாபித்து, லட்சக்கணக்கானவர்களை வைத்து வேலை வாங்கி, கோடிக்கணக்காக பணம் திரட்டி, எவன் பட்டினியையும் கவனிக்காமல் தான் குபேர வாழ்வு வாழ ஆசை கொள்ளும் பணக்கார முதலாளிகள் தேசம் அமெரிக்கா. இந்த இரண்டு நாடுகளுக்குள்ளும் என்றாவது ஒப்பந்தம் ஏற்படுமென்று யாராவது கனவு கண்டதுண்டா? ஒருக்காலு மில்லை.

ரஷியாவில் சோவியத் சர்க்கார் ஏற்பட்ட பின்பு பல வருஷங்கள் வரையில் ஒரு நாடும் அதன் கிட்டத்தில்கூட போகவில்லை. பின்னால் தீராத அவசியம் ஏற்பட்டதால் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள சில நாடுகள் முன்வந்தன. வர்த்தக ஒப்பந்தத்தால் நல்ல லாபம் கிடைப்பதாக தெரியவே, ஒவ்வொன்றாக ரஷியாவுடன் நட்புகொள்ள (வர்த்தகத்தில் மட்டும்) ஆசைகொண்டது. ஆனால் அமெரிக்கா மட்டும் பிடிவாதமாக இதுவரை ரஷியாவுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள மறுத்து வந்தது. தனித்து வாழ யாரால் எத்தனை நாளைக்கு முடியும்?



அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி பலமாயிற்று. பழைய முதலாளி கொள்கைகள் ஒவ்வொன்றாய் காற்று வாக்கில் போகின்றன. "ரஷியாவோடு முறைத்துக் கொள்ளுவதும்" இனி நடக்கிற காரியமாய் தோன்றவில்லை. பணம் பஞ்சக் காலமாகிய இக் காலத்தில், மற்ற நாடுகள் ரஷியாவுடன் வர்த்தகஞ் செய்து பலனடையும்போது தான் மட்டும் ஏன் சும்மா யிருக்க வேண்டும்? மற்ற குடியரசுத் தலைவர்கள் காலத்தில் நடக்காதவைகளை எப்படி ரூஸ்வெல்ட் செய்கிறாரோ, அம்மாதிரியே இதுவரை "தீண்டாதவராக" ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ரஷியாவுடன் அவரே ஒப்பந்தம் செய்ய துணிவு கொண்டார். அமெரிக்கா சரித்திரத்தில் ரூஸ்வெல்ட் பெயரும், சோவியத் ரஷியா சரித்திரத்தில் லிட்வினுப் பெயரும் மிக ஒளிவுடன் பிரகாசிக்கும்.

எதிர்பாராத காரியம் நடந்துவிட்டது. ரஷியாவும் அமெரிக்காவும் சென்ற மாதத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டன. சென்ற 16 வருஷங்களாக இருந்த தடை சென்ற மாதம் நீக்கப்பட்டுப்,

போயிற்று. உலகிலேயே பெரிய முதலாளித்துவம் படைத்த அமெரிக்கா, சமதர்மக் கொள்கைக்கு குருவான சோவியத் சர்க்காருடன் நட்புரிமை கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை காலச் சக்கரம் செய்துவிட்டது.

20 வருஷங்களுக்கு முன்னால் கனவில்கூட நினைக்க முடியாத காரியங்கள் இன்று கண்முன்னால் நடக்கும்படி காலச்சக்கரம் செய்கிறது. காலச்சக்கரத்தின் வலிமை அவ்வளவு இருக்கிறதென்பதை அறிந்தும், தப்புவழியில் செல்லுகிறவர்கள் திரும்புவதில்லை. வைதிகரும், சர்க்காருமே இதற்குச் சாட்சிகள்.

சோவியத் சர்க்காரின் அன்னியநாட்டு மந்திரி பெயர் லிட்வினுப். அன்னியநாட்டு மந்திரிகளில் லிட்வினுபைவிட அதிக சாமர்த்தியமுள்ளவர்கள் வேறு கிடையாது என்ற பெயரை அவர் ஸ்தாபித்துவிட்டார். உலகிலேயே ஒரு புதிய கொள்கையை ஸ்தாபித்து, பழைய சமூக அமைப்பை தகர்த்தெறிய ஒருநாடு கிளம்பினால் அதன் நிலைமை எப்படியிருக்கும்? உலகமே அதற்கு விரோதம். இந்த நெருக்கடியான நிலைமையை சமாளித்து யுத்தம் ஏற்படவிடாமல் நாட்டை காப்பாற்றுகிற சாமர்த்தியம் அயல் நாட்டு மந்திரிக்கு வேண்டும். இந்த வேலையில் மற்ற மந்திரிகளை விட லிட்வினுப் சிறப்பாய் நடந்திருக்கிறார்.

ஜப்பான் ஒரு பக்கம் ரஷியாவை பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. கீழ்நாட்டில் தன் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று மனக்கோட்டை கட்டும் ஜப்பான், ரஷியாவின் பொதுவுடமைக் கொள்கையை எப்படி பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? ரஷியாவை எப்படியாவது நசுக்கிவிட சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. பல சில்லரை விஷமங்கள் செய்தது. ஜப்பான் சண்டைக் கிழுத்தால் அதற்கு தயாராயிருக்கவேண்டியது அவசியமல்லவா?

சுற்றியுள்ள எல்லா நாடுகளுடனும் ரஷியா சண்டைபோட முடியாது. மற்ற நாடுகளுடன் சமரசம் செய்துகொண்டால், ஜப்பானை ஒரு கை பார்த்துவிடலாம் என்று தீர்மானித்தது. உடனே லிட்வினுப் அயல்நாட்டு மந்திரியாய் வந்தார். ஒருவருஷம் பிரயாணத்திலேயே காலங் கழித்தார். முடிவு என்ன தெரியுமா? சோவியத்தை சுற்றியுள்ள 8 தேசங்களுடன் நட்புரிமை ஒப்பந்தங்கள் செய்துமுடித்தார். இன்று ரஷியா எதற்கும் தயார்.

ஐரோப்பாவில் இவ்வளவு அதிகமாக ஒப்பந்தங்கள் செய்து சமாதானம் ஏற்பட காரணமாயிருந்த பெருமை லிட்வினுவைச் சேர்ந்தது. ஆயுதப்பரிகரண மகாநாட்டில், 1917ல், யுத்தம் ஒழிய வேண்டுமானால் சகல படைகளையும் கலைக்கவேண்டுமென்று யோசனை கூறி ராஜதந்திரிகளை திடுக்கிடச் செய்தவர் இதே லிட்வினுப் தான். மற்ற நாடுகள் படைகளை ஒழித்தால், ரஷியாவும் அப்படிச் செய்யத் தயார் என்று சொன்னவரும் இதே லிட்வினுப் தான்.


லிட்வினுப்

சில பிரிட்டிஷார்மீது ரஷியாவில் சதியாலோசனை குற்றம் சாட்டி வழக்கு நடந்ததை நண்பர்கள் அறிவார்கள். அச்சமயம் பிரிட்டிஷார் அதிர் வேட்டு போட்டு ரஷியாவை பயமுறுத்தப் பார்த்தார்கள். இந்தப் பூச்சாண்டி யெல்லாம் இங்கே பலிக்காது என்று பதில்வேட்டு போட்டு கூச்சலை அடக்கியவர் இதே லிட்வினுப்தான். பின்னால் லண்டனில் கூடிய பொருளாதார மகாநாட்டிற்கு வந்திருக்கும்போது மற்றநாடுகள் ஏமாந்து வெறுங்கையோடு திரும்பியபோது, பிரிட்டன் நட்பும், அமெரிக்க வர்த்தகமும் பெற்று லிட்வினுப் நாடு திரும்பினர்.

லிட்வினுபின் இத்தகைய வேலைகளை உத்தேசித்து, இவ்வருஷம் அவருக்கு நோபல் சமாதான பரிசு கொடுக்க ஆலோசனை நடப்பதாய் தெரிகிறது.

1918 ம் வருஷத்தில் சோவியத் சர்க்கார் தங்கள் ஸ்தானுதிபதியாக லிட்வினுவை அமெரிக்காவிற்கு அனுப்பினர்கள். அமெரிக்க சர்க்கார் என்ன செய்தார்கள்? "சோவியத்தாவது, சர்க்காராவது, ஸ்தானுதிபதியாவது? உள்ளே நுழையக்கூடாது" என்று உத்தரவு போட்டார்கள். இப்பொழுது அதே லிட்வினுப் 1933 ம் வருஷம் அமெரிக்காவில ராஜோபசாரம் பெற்று வரவேற்கப் பட்டார். பிரசிடென்ட் ரூஸ்வெல்ட் மோட்டாரில் சென்று ரூஸ்வெல்ட் மாளிகையில் தங்கினர். லிட்வினுவை பார்க்க ஏராளமான கூட்டம். அமெரிக்கா வெங்கும் இதே பேச்சு. லிட்வினுப் வெற்றி வீரராய் அமெரிக்காவிலிருந்து திரும்பினர்.

லிட்வினுப் குட்டையானவர். பூசணிப் பழம்போல பருத்தவர். நாஸுக்கான பேச்சோ, செயற்கையான நடிப்போ, படா

டோபமான வாழ்க்கையோ இல்லாதவர். ஜினிவாவில் மற்ற நாட்டு ராஜதந்திரிகள் தடபடலாக பெரிய ஹோட்டல்களில் உல்லாசமாக காலங் கழிப்பார்கள். ஆனால் லிட்வினுப் ஆடம்பரமில்லாமல் ஒரு சாதாரண ஹோட்டலில் இறங்கியிருப்பார். மற்ற ராஜதந்திரிகளின் கேளிக்கை கூட்டங்களில் இவரை பார்க்கமுடியாது. ஆனால் இன்று சர்வதேச ராஜீய விஷயங்களில் லிட்வினுவைப்போல பூர்ண ஞானமுள்ள வேறு மந்திரிகள் இல்லை. எந்த நாட்டின் நிலைமையைப் பற்றியும், எந்த இயக்கத்தைப்பற்றியும் ஆரம்பமுதல் நாளதுவரையிலுள்ள நிலைமை அவருக்குத் தெரியும். எதிர்காலத்தில் எப்படி முடியும் என்பதையும் அவர் சொல்லுவார். ஆகவே அவருடைய நேரடியான பேச்சுக்கு எதிராக எந்த ராஜ தந்திரமும் பலிப்பதில்லை. இதுவே அவர் வெற்றியின் ரகசியம்.

அமெரிக்காவிற்கும், ரஷியாவிற்கும் கொள்கையைப்பொறுத்த வரையில் அஜகஜ வித்தியாச முண்டு. இருந்தாலும் பொருளாதார நெருக்கடி ரஷியாவுடன் ஒப்பந்தம் செய்யும்படியான நிலைமையை அமெரிக்காவிற்கு உண்டுபண்ணிவிட்டது. கொஞ்ச காலத்தில் பல சோவியத் முறைகளை அமெரிக்கா கைக்கொள்ளுமானல், அதில் ஆச்சரியப் படக்கூடியது எதுவுமில்லை.

ரஷியாவும் அமெரிக்காவும் மற்ற விஷயங்களில் வித்தியாசப் பட்டபோதிலும், அன்னிய நாட்டு கொள்கையைப் பொறுத்த வரையில் இரண்டும் ஒரேவழியில் போவது குறிப்பிடத் தக்கது.

ஜெர்மனியுடன் ரஷியாவும் அமெரிக்காவும் தனியாக ஒப்பந்தம் செய்துகொண்டன. யுத்த முடிவிற்குப் பின்னல் நடந்த வெர்சேல்ஸ் உடன் படிக்கையில் இரண்டும் சேரவில்லை. சர்வ தேச சங்கத்தில் இரண்டு நாடுகளும் சேரவில்லை. சர்வ தேச சங்கத்தின் சக்தியில் இரண்டு நாடுகளுக்கும் நம்பிக்கை கிடையாது. ஆனால் ஆயுதப்பரிகரண விஷயத்தில் இரண்டும் சங்கத்தோடு எப்பொழுதும் ஒத்துழைக்கத் தயார். சர்வதேச கோர்ட்டில் இரண்டு நாடுகளும் சேரவில்லை. ஜப்பான் சிருஷ்டித்த மஞ்சூரியாவை இரண்டு நாடுகளும் ஒப்புக்கொள்ளவில்லை. ஜப்பான் அக்கிரமங்களை இரண்டு நாடுகளும் கண்டிக்கின்றன.

அக்யானியார் கடிதம்

படார்சாமியார் அவர்களுக்கு,

ஐயா,

தாங்கள் நடுத்தெரு நாராயணனுக்கு எழுதிய கடிதங்களைப் பார்த்தேன். மெச்சினேன் உமது பரோபகார சிந்தனையை.

எனக்கு இப் போட்டிப் பந்தயங்கள் எல்லை மீறின பொழுதிலிருந்து கண்டித்து எழுத ஆவல் இருந்தது. ஆனால் தாங்கள் எனக்கு முந்திவிட்டீர்கள். என் மனதிலிருந்தவை யாவையும் தாங்களே வெளிப்படுத்திவிட்டீர்கள. இருந்தாலும், எனக்கு இப் போட்டி பந்தயத்தைக் குறித்து கொஞ்சமேனும் எழுத வேண்டுமென்று ஆவல் இருக்கிறபடியால் என் அறை குறை தமிழினால் என் மனதிலுள்ளவற்றை தங்களுக்கு தெரியப்படுத்துகிறேன். தாங்கள் என் ஆவலை தீர்த்து வைப்பீரென்று நம்புகிறேன்.

தற்காலம் நமது நாட்டில் விகடங்களுக்கு குறைவு இல்லை. இவ் விகடங்கள் எதற்காக ஏற்பட்டதோ?

இவைகள் ஜனங்களுக்கு இன்பத்தைக் கொடுக்கவும் அவர்களுடைய ஊழல்களை சீர்திருத்திக் கொள்ளவும் ஏற்பட்டதென்று எனக்கு தோன்றுகிறது.

ஆனால், இவ்விகடங்களால் ஏற்பட்டது யாது? ஜனங்களுக்கு ஆசை, பொய் பேசுதல், ஏமாற்றல், களவு இவைகளை கற்பித்ததாகக் காணப்படுகிறது.

இப் போட்டி பந்தயங்கள் மனிதர்களை பித்தர்களாக்கிவிடுகிறது. எவ்வளவு புத்தி கூறினாலும் பயனற்றதாகிறது.

இப் போட்டிப் பந்தயம் தமிழ் நாட்டு மாணவர்களையும் கிருஹஸ்தர்களையும் பாழாக்கிவிட்டது. ஆனால் முழுவதும் பாழாகிவிடவில்லை.

இப் போட்டிப் பந்தயத்தி லீடுபட்டவர்களுக்கும் கட் குடியர்கட்க்கும் வித்தியாச மிருப்பதாகக் காணப்படவில்லை.

மது உண்பவனுக்கு பண மில்லாவிட்டால் யாசிக்கிறான். கொடுப்பவர்க ளில்லாவிட்டால் திருட உத்தேசிக்கிறான்.

இப் பந்தயப் பித்து பிடித்தவனுக்கு பண மில்லாவிட்டால், மேலே சொன்னபிரகாரம் செய்தே தீரவேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

பெற்றோர்கள் மாதா மாதம் பணத்தைக் கொட்டி பிள்ளைகளை பாடசாலைகளில் படிக்க விடுகிறார்கள். அப்பிள்ளைகள் இப்பந்தயங் களில் ஈடுபட்டால் படிப்பின் கதி யென்ன ?

அதுவுமல்லாமல், இப்பிள்ளைகளுக்கு போட்டிப் பந்தயத்தின் மேல் செலவு செய்ய பணம் எவ்விட மிருந்து வருகிறது ? சற்று யோசனை செய்தால் புலப்படுமல்லவா ?

கிருஹஸ்தனுடைய கதி யென்ன ? வீட்டுச் செலவுக்காக ஏற் பட்டுள்ள பணத்தை இப்பந்தயங்களில் செலவு செய்யவேண்டும். லாபம் கிடைக்காவிட்டால்...........பெண்டு பிள்ளைகளுடன் நடுத் தெருவே கதியென்று எனக்குத் தோன்றுகிறது.

ஆகையால், இப்பந்தயங்களை அறவே யொழித்து, தமிழ் நாட் டை இந்நிலையிலிருந்து தப்புவிக்க வழிதேட வேண்டியது பெரி யோர்களின் கடமையாகும்.

சாமியார்வாள், அதற்கு தாங்களே முன்வந்தீர்கள், உங்க ளுக்கு ஜெய முண்டாகவேண்டு மென்று நான் எப்பொழுதும் கட வுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருப்பேன்.

இப்படிக்கு தங்களிடம் நன்றியுள்ள,

அக்யாணி.




உங்களுக்குத் தெரியுமா ?

மதுவிலக்கு குற்றமா ?

மதுவிலக்கு செய்யும்படி பேசுவது குற்றமா ? ஆம், இந்தியாவில் குற்றந்தான். மதுக்கடை முன்னால் குடிக்கக் கூடாதென்று மறியல செய்யப் போவது குற்றம். இதற்காக லார்ட் வில்லிங்டன் சட்டம் செய்திருக்கிறார். மறியல் செய்யப்போனால் ஒன்று தடியடி கிடைக்கும், அல்லது ஜெயிலுக்குப் போக நேரிடும். இந்தியா இருக்கட்டும். வேறு எந்த நாட்டிலாவது மது விலக்கு பேசுவது சட்ட விரோதம் என்று இருக்கிறதா? ஆம், இருக்கிறது. இந்தியாவை ஆளும் இங்கிலாந்து இருக்கிறதே, அந்நாட்டில் ஒரு சட்டம் இருக்கிறது. அச்சட்டப்படி மதுவிலக்கு பேசுகிறவர்களை தண்டிக்கலாம். அச்சட்டம் ஆறாவது எட்வர்ட் மன்னர் காலத்தில் செய்யப்பட்டது. இன்னம் ரத்தாகவில்லை. ஆனால் மாஜிஸ்திரேட்டுகள்கூட அச் சட்டத்திற்கு விரோதமாக நடக்கிறார்கள். குடிவெறிக்காக குற்றஞ் சாட்டப்பட்டவனை இனி குடிக்கவேண்டாமென்று மாஜிஸ்திரேட் எச்சரிக்கை செய்கிறார். பல பெரிய மனிதர்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்கிறார்கள். அப்படி யிருந்தும், சட்ட விரோதமாக நடக்கும் இந்த மாஜிஸ்திரேட்டுகளையும் பெரிய மனிதர்களையும் அச்சட்டப்படி தண்டிப்பதில்லை. ஏன்? சட்டம் ரத்தாகாமல் போனாலும் அமுலிலில்லை!

டீசல் என்றால் என்ன ?

இறக்குமதியாகும் டீசல் எண்ணெய்க்குப் புதிதாக அதிகவரி விதிக்க இந்தியா சட்ட சபையில் தீர்மானம் நிறைவேறி யிருக்கிறது. இந்த டீசல் எண்ணெய் என்பது என்ன? ஒரு வகை மண் எண்ணெய். இதற்கு எப்படி பெயர் வந்தது? டீசல் எண்ணெய் என்பது இயந்திரங்களை ஓட்டுவதற்காக உபயோகிக்கப்படுவது. வடிகட்டப்படாத கசடு மண் எண்ணெயைக் கொண்டு ஓட்டும்படியான இயந்திரத்தை முதலில் டாக்டர் ரூடால்ப் டீசல் என்பவர் 41 வருஷங்களுக்கு முன்னால் கண்டுபிடித்தார். அந்த வகையான என்ஜின்களுக்கு டீசல் என்ஜினென்றும், அவற்றிற்கு உபயோகப்படும் எண்ணெய்க்கு டீசல் எண்ணெ யென்றும் பெயர்.



புதிய கோபுரம்


(இடது பக்கத்துப் படம்)

2300 அடி உயரம்.

ஈபல் கோபுரம்

(கீழே யுள்ள படம்)


985 அடி உயரம். இரண்டிற்கும் உயரத்தில் உள்ள வித்தியாசத்தை படங்களில் பார்க்கவும்.



ஈபெல் கோபுரம்

இது பாரிஸ் நகரிலுள்ள ஓர் பெரிய உருக்கு கோபுரம். இது சென்ற நூற்றாண்டில் (1887-89) ம் வருஷத்தில் கட்டப்பட்டது. இதன் உயரம் 985 அடி. பாரிஸில் 1889 ல் பாரிஸ் நகரில் நடந்த பொருட்காட்சியில் இது உலகத்திலுள்ள ஜனங்களின் மனதைக் கவர்ச்சி செய்தது. இவ்வளவு உயரமான ஒரு ஸ்தூபி உலகில் எங்கும் காணக்கிடையாத காட்சியாக இருந்தது. ரஷியா தேசத்து ஞானியும் சில விஷயங்களில் மகாத்மா காந்தியின் குருவுமான டால்ஸ்டாய் இதைப்பற்றித் தமது அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறார். இது உயர்ந்த லக்ஷியம் எதையும் உருவகப்படுத்தவில்லையாதலால் இதை கலையின் சிருஷ்டியாக அவர் கொள்ளவில்லை. மனிதனது உணர்ச்சிகளை உயர்த்தி மேலான லக்ஷியங்களைத் தூண்டுவதுதான் கலையின் உபயோகம். வெறும் பிரமிப்பை மட்டும் உண்டாக்குவது கலையாகாது. மனிதனது அகம்பாவத்தைத் தவிர வேறெவ்வித உணர்ச்சியையும அது தூண்டவில்லையென்பதும் அவரது அபிப்பிராயமாகும். உலகத்தில் எல்லா நாடுகளையும் விட உயரமான கோபுரம் பாரிஸ் நகரில் இருக்கிறது என்று பிரமிப்படைவதைத் தவிர வேறு எவ்விதப் பலனும் இதனால் ஏற்படவில்லை.

உணர்ச்சி என்ற அம்சத்தை விடுத்து வேறு உபயோகங்கள் சில அந்த உருக்கு ஸ்தூபியினால் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அப்படி கவனிக்கும்போது வேறு பல கெடுதிகளும் அதில் ஏற்பட்டிருக்கின்றன. எம். ஈபல் என்ற விஞ்ஞான ஆசிரியர் சில காலம் அந்த கோபுர உச்சியிலுள்ள அறையிலிருந்து சில ஆராய்ச்சிகள் நடத்தினாராம். பிறகு அதில் ஒரு காவல்காரனைத் தவிர வேறுயாரும் இல்லை. ஆகாயவிமானங்கள் தோன்றியபிறகு உயரமான இடத்திலிருந்து பாரச்சூட் என்ற கருவியால் கீழே இறங்க முடியுமா என்று சோதனைபார்க்க இந்த சிகரம் உபயோகப்பட்டது. பலர் தற்கொலை செய்து கொள்ளவும் இந்த கோபுரம் உதவியாயிருந்தது.



மோட்டார் வண்டிகள்போக கோபுரத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கும் பாதை

இதன் உயரம் 985 அடி இதைக்கட்டுவதற்கு 20000 பவுன் செலவாயிற்றும்.

புதிய கோபுரம்

ஈபல்டவர் என்ற கோபுரத்தின் கதை இவ்வாறிருக்க பாரிஸில் 1937ம் வருடம் பொருட்காட்சி சாலை கூடும்போது மற்றொரு பெரிய கோபுரம் கட்டித் தயாராக இருக்கும்.

இது "ஈபல் டவரை"ப் போல் $2\frac{1}{2}$ மடங்கு உயரம் சுமார் 2300 அடி. அதற்கு "உலக கோபுரம்" என்று பெயரிடப் போகிறார்கள். "ஈபல்டவரின்" படத்தையும் இதையும் ஒப்பிட்டுப்பார்த்தால் இது எவ்வளவு பெரிய கோபுரம் என்பது தெரிய வரும். கீழேயிருந்து 1600 அடி உயரம் வரையில் மோட்டாரிலேயே போவதற்குத் தக்கவாறு கோபுரத்தைச் சுற்றிச்சுற்றி வளைவான ஒரு பாதை மேலே போகிறது. அதில் இரண்டு வளைவுகளை முன் பக்கத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அதில் சிறிதாகக் காணப்படுவது மோட்டார் வண்டியின் படம்.

1600 அடி உயரம் வரை மோட்டார் போனபிறகு 400 மோட்டார் தங்குவதற்கு அங்கு இடம் அமைக்கப்பட்டிருக்கிறது. (படத்தில் 5 என்று லக்கமிட்ட இடம்)

அதற்கும் மேலே ஏறுவதற்கு எலெக்டிரிக் லிப்ட் என்று சொல்லும் மின்சார ஏணிகள் இருக்கின்றன. அதன்வழியாக மேலே போனால் ஹோட்டல்கள் இருக்கின்றன. ("4" லக்கமிட்ட இடம்) அதற்கும் மேலே('3'லக்கமிட்ட இடம்) விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடத்துவதற்கான இடம்.

அதற்குமேலே (நிர் '2) "லைட் ஹவுஸ்" பெரிய விளக்கு ஒன்று இருக்கிறது. இது மிகவும் உயரத்தில் இருப்பதால் 120 மைலுக்கப்பாலும் இதன் வெளிச்சம் தெரியும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்குமேலே 1 லக்கமிட்ட இடத்தில் சீதோஷ்ண ஸ்திதியையும் மழை காற்று புயல் இவற்றையும் அறியக்கூடிய கருவிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கீழே 8 லக்கமிட்ட இடத்தில் தந்தி தபால், ரேடியோ முதலிய ஆபீஸ்கள் இருக்கும்.

அதற்குமேலே 7 என்ற லக்கமிட்ட இடம் ஒரு பெரிய மண்டபமாகும். அதன் குறுக்களவு 430 அடி. கிட்டதட்ட $\frac{3}{4}$ பர்லாங். 1937 ல் நடைபெறும் பாரிஸ் உலகப் பொருட்காட்சியின் போது உலக மகாநாடுகள் பல இதில் நடைபெறும்.

வெளிநாட்டினர் பலர் பாரிஸுக்கு வருவதன் மூலம் பிரான்சின் வர்த்தகத்திற்கு தற்காலிகமாக பெரிய முன்னேற்றம் ஏற்படும். இந்த கோபுரத்தில் பல பாகங்களை வாடகைக்கு விடுவதாலும் அதைப்பார்ப்பதற்கு ஏற்படுத்தும் டிக்கட் விற்பனையிலிருந்தும் 40 வருஷ காலத்தில் இதில் செலவிடப்பட்ட பணத்தை மீட்டிவிடமுடியுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

வேண்டாம் — போட்டிப்பந்தயம் வேண்டாம்

(ரேட் கோஸ்)

“யாரது கதவைத் தட்டுகிறது?” என்றாள் அடுப்பண்டை வேலையாக விருந்த, மதுராம்பாள்.

“நான்தானம்மா, நெக்குப்பை கருப்பண்ண பிள்ளை மகன் நல்லண்ணன்” என்றான் பதினொரு வயதுள்ள சிறுவன் வாசலுக்கு வெளியே நின்றுகொண்டே.

“ஏன்? என்ன சமாசாரம்” என்றாள் தனது குழந்தையை மடியில் வைத்துக்கொண்டே.

“அம்மா, ஒரு அவசரமான அலுவல், போஸ்ட் மாஸ்டர் இருக்கிறாங்களா? சற்று கதவைத் தொறங்க” என்றான்.

கைக்குழந்தையை இடுப்பில் வைத்தவாறு முப்பது வயதுள்ள நங்கையொருவள் வெளிக்கதவைத் திறந்து யாரென்று பார்த்தாள்.

ஒரு சிறுவன் கையில் ஒரு இன்ஷியூர் கவரையும் சிறு அச்சடித்த காகிதத்தையும் அந்த அம்மாளிடம் கொடுத்து,

“எங்கய்யாவுக்கு இது வந்ததாம். தபால்கார வெங்கடாசலம் கொணர்ந்து கொடுத்தான். அதை திரும்ப உங்ககிட்டேயே திருப்பிக் கொடுத்துவிட்டு வரச்சொன்னாங்க எங்கய்யா” என்றான். சரியென்று மதுராம்பாள் அதை கையில் வாங்கிக்கொண்டு பையனை அனுப்பினாள்.

* * * *

இரவு பத்து மணி இருக்கும் போஸ்ட் மாஸ்டர் விசுவனாதய்யரும் அவரது தம்பியும் திருச்சிக்குச் சென்றுவிட்டு தங்களது வேலைகளைப் பார்த்துக்கொண்டு சாமான்களுடன் வீட்டிற்கு திரும்பி வந்தனர். வந்ததும் மதுராம்பாள் அந்த சில் வைத்த இன்ஷியூர் கவரைக் கொடுத்து நடந்த சமாச்சாரத்தைச் சொன்னாள். கவரின் மேல் புறத்தில்,

ரூபாய் இருநூற்றைம்பதுக்கு இன்ஷியூர்.

என். பெரியண்ண பிள்ளை,

விகடன் ஆபீஸ், நெக்குப்பை போஸ்ட்,

சென்னை. பெரியபுரம் தாலூகா.

என்று விலாசமிட்டு சிகப்பு அரக்கு சில்கள் வைத்திருந்தன. அதில் மொத்தம் நான்கு சீல்கள் வைத்திருந்தன. மூன்று சீல்கள் வைத்த மாதிரியே புதியதாக விருந்தது. மற்றொரு சீல்மட்டும் சற்று சந்தேகத்திற் கிடங்கொடுத்தது. இதன் மர்மம் என்ன வென்று புலப்படவில்லையே என்று தயங்கினர்.

இத்தருணம் நெக்குப்பை பெரியண்ண பிள்ளை போஸ்ட் மாஸ்டர் வீட்டுக்கு இரண்டு நண்பர்களோடு வந்து சேர்ந்தார்.

"நமஸ்காரம், போஸ்ட்மாஸ்டர்வாள், எனக்கு விகடன் தலை கீழ் போட்டிப்பந்தயத்தில் முதல் பரிசாகிய ரூ. 250 கிடைத்ததாகச் சென்றவாரம் விகடனில் பார்த்தேன். அதற்காக ரூபா 250 இன்ஷியூர் செய்திருக்கிறார்கள். இன்று நான் பகல் 1 மணிக்கு சாப்பிட்டுக்கொண் டிருக்கும்பொழுது வெங்கடாசலம் இதை கூடத்திலுள்ள கட்டிலில் வைத்துவிட்டுத் தன் வழியே சென்று விட்டான். நான் எழுந்து அதை கவனித்தபொழுது சந்தேகமா யிருந்தது. உடனே திருப்பியனுப்பிவிட்டேன்" என்று ஒரு கதையாகச்சொன்னர்.

அங்குள்ள எல்லோருக்கும் மிக்க ஆச்சரியமாயிருந்தது. விசுவநாதய்யர் தலையில் இடி விழுந்தமாதிரி அப்படியே கீழே சாய்ந்து மூர்ச்சையானர். அவரது தம்பி சீனுவாசய்யர், தன் மடியில் அவரைத்தூக்கி சாய்த்துக்கொண்டார். பத்து நிமிஷத்திற்குள், கிராமத்திலுள்ளோர் அனைவரும் அங்குவந்து கூடினர். எல்லோரும் சுற்றிலும் சூழ்ந்துகொண்டு என்ன என்னவென்று திகைத்து நின்றார்கள்;

விசுவநாதய்யருக்கு பிரக்ஞை தெளிந்து எழுந்திருக்க அரை மணி நேரமாயிற்று. பின்னுமொருமுறை கவரைப்பிரட்டி பிரட்டிப்பார்த்தார். அவர் சந்தேகம் தெளியவேயில்லை. பணம் போவதில் அவருக்குவருத்தமில்லை. தனது கௌரவமான உத்யோகமும், மானமும் எங்கு வானத்திற்கேகிவிடுமோவென ஏங்கித் தவித்தார். சாப்பாடுகூட அவருக்குப் பிடிக்கவில்லை. எல்லோரும் இருக்கும் பொழுதே அந்த இன்ஷியூர் கவரை உடைத்துப் பிரித்துப் பார்த்

தார். அதில் ஐந்து ரூபாய் கரன்ஸீ நோட்டுகள் 5 இருக்கக் கண்டு சற்று மனம் திருப்தியடைந்தது. அந்தோ அதில் உள் ளது ஐந்து ஐந்துரூபாய் நோட்டுக்களே. எத்தனைமுறை அதைத் திருப்பித்திருப்பி எண்ணியும் மொத்தம் இருபத்தைந்து ரூபாய் தானிருந்தது. ஆஹா! திருடன் சற்று தரும சிந்தனையுள்ளவன் போலும். நல்ல வேளையாக அடிமடியில் கைவிடாமல், 25 ரூபா யாவது வைத்திருந்தானே, யோக்கியன்தான்.

ஐயருக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. ஒருக்கால் தபால்காரன் சூதாயிருக்குமோவென்று எண்ணலாமென்றாலோ, அவன் மஹா யோக்கியன். இருபத்தைந்து வருஷ காலமாக வெகு நாணயத்துடன் இவ்வேலையை நடத்திவருபவன். அவ்வூர் மிராசுதாருக்கு கிண்டிரேஸ், கோவா லாட்டரி முதலியவைகளில் ஆயிரக்கணக்கில் வரும் இன்ஷ்யூர் கடிதங்களை யாதொரு பிசகும் இல்லாமல் ஜாக்கிரதையாக தாகல் செய்திருக்கிறான். விசுவனா தய்யருக்கு போஸ்ட்மாஸ்டர் வேலை வருவதற்கு முன்னமேயே அவன் தபால்காரன் வேலை பார்த்துவருகிறான்.

இருந்தாலும் அவனுக்கு ஏதாவது தகவல் தெரியுமோ வென்று கேட்கலாமென்று, இரவு, மணி பன்னிரெண்டாகிறது என்பதையும் கவனியாமல், ஒரு மைலுக்கப்பாலுள்ள "கிராங்கி மோடு" என்னும் தோப்பில் குடியிருக்கும் தபால்கார வெங்கடா சலம் பிள்ளை வீட்டின் கதவை "தடபுட தடபுட" வென்று அவ சரத்துடன் இருகைகளினாலும் தட்டினார்.

நாள்முழுவதும் எழெட்டு கிராமங்களைச்சுற்றி தன்வேலை நிமித்தம் அலைந்து திரிந்து வீட்டிற்கு வந்து சொஸ்தமாகத் தூங் கும் வெங்கடாசலம், தூக்கம் கலைப்பட்டு அரையுடையுடன் 'யார் அது? நடுச்சாமத்தில் வந்து கொஞ்சமும் பயமில்லாமல், எழுப்பு வது' என்று கடுகடுத்துக்கொண்டே கதவைத்திறந்தான்.

"அப்பா வெங்கடாசலம் உனக்கு ரொம்ப புண்ணியமுண்டு. நடந்த சமாச்சாரத்தை பிசகாமல் சொல்லிவிடு" என்று கெஞ்சி னார் ஐயர்.

"என்ன ஐயா, உளருகிறீர்" என்றான் உளரிக் கொண்டே.

"அதுதானப்பா! பெரியண்ண பிள்ளை இன்ஷியூர். இருநூற் றைம்பதுக்கு வந்ததே அது"

"நான் அப்பொழுதே அதை அவரிடம் தாக்கல் செய்தாய் விட்டதே" என்றான்.

பிறகு நடந்த விபரத்தை எல்லாம் சாவகாசமாய்ச் சொன்னார். வெங்கடாசலம் இதைக் கேட்டவுன் "என்ன சாமி, எனக்கே வெடி வைக்கிறீங்களா" என்று பயந்துகொண்டே கேட்டான்.

எவ்வளவோ அவனை, நயந்தும், கெஞ்சியும், உருட்டியும், மிரட்டியும் பரிசைக்ஷ பண்ணிப்பார்த்தும் துப்பு ஒன்றும் தெரிய வில்லை. அன்றிரவு முழுமையும் விசுவநாதய்யர் தூங்கவே யில்லை. கிராமத்திலுள்ளோர் பலர் பலவிதமாக எண்ணுகிறார்கள். விசுவ நாதய்யருக்கு வேண்டாதவர்களெல்லாம் அவரையே சந்தேகப்படு கிறார்கள். வேறு சிலர் வெங்கடாசலம் அயோக்யன் என்கிறார்கள்.

மறுநாட் காலை, விகடன் ஆபீஸ் மானேஜருக்கு தந்தி யடிக்கப் பட்டது; இன்ஷியூரில் கணக்காக, இரண்டு பசசை நோட்டுக்க ளும், இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களும் ஆறு ஐந்து ரூபாய் நோட்டுகளும் வைத்து சீல் வைத்ததாகவும், அந்த கரன்ஸீ நோட் டுக்களின் நம்பரைக்கூடக் குறித்து வைத்துக்கொண் டிருப்பதாக வும் செய்தி கிடைத்தது.

என்ன செய்வார் பாவம் மாதம் ஒன்பது ரூபாய் சப்பளம் வாங்கிக்கொண்டு, ஏதோ கையிலுள்ளதையும் வைத்துக்கொண்டு, விசுவநாதய்யர் வெகு நாணயத்தோடு இவ்வளவு நாட்களாக நடந்து வந்தவர், தன்னை யறியாமலே,

என்னையே நோவேனோ, பிறரையே நோவேனோ,

தற்காலமதை நோவேனோ, தபால்காரனை நோவேனோ

பெரியண்ணனை நோவேனோ, தென்னை விகடனை நோவேனோ, எனப் புலம்பலானார்.

"பழியோரிடம் பாவமோரிடம்" என்றவாறு, வேலையாவது தக்கவேண்டுமே யென்று ஒருவருக்கும் தெரியாமல், தன் மனைவி யின் கழுத்திலுள்ள சங்கிலியை அடகு வைத்து, பாக்கியுள்ள ரூபாய் இருநூற்றிருபத்தைந்தையும். கண்களினின்றும் இரத்தத் தைப் பெருகியவாறு, பெரியண்ண பிள்ளையிடம் சேர்த்தார்.

வாசகர்களே! பாபம் பொல்லாது. ஏழைகள் அழுத கண்ணீர் கூறிய வாளை யொக்கும்.

குறிப்பு:—இதில் வரும் எல்லாப் பெயர்களும் கற்பனைகளே. ஒரு வரையும் குறிப்பதல்ல என்பதை யறியவும்.

பத்திரிகைகள் தொண்டு

(ரா. நாராயணன் பி. ஏ., பி. எல்.,)

சென்ற சில தினங்களாக நமது தமிழ் பத்திரிகைகளின் போக்கைப் பற்றி நினைத்துச் சிந்திக்கலானேன். பத்திரிகை படிப்பவர்களின் மனப்பான்மை சீர்கேடாய்க் கொண்டுவருவது வெளிப்படை. அதுவும் சென்ற இரண்டு வருஷமாகத் தான் இம்மாதிரி நிலைக்கு வந்துவிட்டது. பத்திரிகை படிப்பவர்கள் மனப் பக்குவத்திற்குத் தகுந்தாற்போல் பத்திரிகைகள் பிரசுரம் செய்யப்படுகின்றன.

முதலில் பத்திரிகைகளைப் பற்றிய விளம்பரங்களை ஜனங்கள் பார்க்கிறார்கள். அதில் ஏதாவது ஒரு கோர சம்பவம், ரயில் மோட்டார் விபத்து, விவாகரத்து சம்மந்தமான விவகாரங்கள், மந்திரி சபைகளின் வீழ்ச்சி, யாராவது ஒரு பிரபலஸ்தரின் மரணம், விளையாட்டு......இவைகளில் ஏதாவது ஒரு விஷயம் விளம்பரத்தில் இல்லாவிட்டால் பத்திரிகை வாங்குவதில்லை. பத்திரிகை வாங்கினாலும் அவர்கள் மனதிற்குப் பிரியமான விஷயங் தவிர மற்றவைகளில் கண் போவதில்லை. மகத்தான இயக்கங்களைப் பற்றியோ, அவைகளை நடத்தும் பெரியார்களைப் பற்றியோ அவர்களுக்குக் கவலை யில்லை.

எனக்குத் தெரிந்த அநேக நண்பர்கள் பத்திரிகைகளில் விளையாட்டு சம்மந்தமான பக்கங்களை எடுத்துக் கொண்டு பாக்கி பக்கங்களை எறிந்துவிட்டுப் போகிறார்கள். சிலர் குதிரைப் பந்தயத்தைப் பற்றி மாத்திரம் பார்க்கிறார்கள். உத்தியோகத்தில் இருக்கிறவர்கள் அநேகமாய் "கெஜட்" வருகிற அன்றைக்குத் தான் பத்திரிகையை பார்ப்பார்கள். போட்டிப் பந்தயம் பிரசுரமாக ஆரம்பித்ததி லிருந்து, பந்தயங்கள் இல்லாத பத்திரிகைகளை அநேகர் பார்ப்பதே கிடையாது.

இம்மாதிரி நிலைமைக்கு நமது நாடு வருவதற்குக் காரணம் என்ன? சில பத்திரிகைகள் தவிர மற்ற பத்திரிகைகளுக்கு திடமான கொள்கையே கிடையாது. பத்திரிகைத் தொழிலை பணம் சம்பாதிப்பதற்கு ஒரு சாதனமாகக் கருதுகிறார்களே ஒழிய, பத்திரிகைகள் மூலம் நாட்டுக்குத் தொண்டு புரிய வேண்டுமென்னும் எண்ணம் அவர்களுக்கு ஒரு சிறிதும் கிடையாது. பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் தான் நாட்டின் சுதந்திரத்திற்கு ஜீவாதாரம்.

ஒரு நாடு முன்னேற்ற மடைய வேண்டுமானால், ஒரு நாடு தன் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், ஒரு நாட்டு ஜனங்கள் எவ்விதத்திலும் மேன்மையான நிலைக்கு வரவேண்டுமானால், அந்த நாட்டு ஜனங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்ற, ஜனங்கள் சோர்ந்திருக்கும் பொழுது, உத்ஸாக மூட்டத் திறமை வாய்ந்த பத்திரிகாசிரியர்கள் வேண்டும். சாதாரண ஜனங்களுக்குத் தங்களுடைய வாழ்வுக்கு அத்தியாவசியமாய் வேண்டியவைகளைப் பற்றித் தான் கவலை இருக்கும். கொள்கைகளைப் பற்றியும், இலட்சியங்களைப் பற்றியும பத்திரிகைகள் தான் சொல்ல வேண்டும்.

இந்தக் கடமையை பொதுவாக பத்திரிகாசிரியர்கள் சரிவர செலுத்தவில்லை யென்று வருத்தத்துடன் சொல்ல வேண்டி யிருக்கிறது. எந்தப் பத்திரிகையும் பணமில்லாமல் வாழமுடியாது. ஆனால் நாம் சம்பாதிக்கும் பணம் நம்முடைய உழைப்பின் பலனாக இருக்க வேண்டும். பத்திரிகைத் தொழிலுக்கு சமமந்தமில்லாததும், மக்கள் முன்னேற்றத்தை பாதிக்கக் கூடியதுமான விஷயங்களைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்வதினால் பணம் சம்பாதித்தால், அது நாட்டை துரோகம் செய்து சம்பாதித்ததாகும்.

நமது தமிழ்நாட்டிற்குப் பத்திரிகைகள் செய்யவேண்டிய கடன் என்ன? 'பணிசெய்து கிடப்பதே' என்று யாரும் சொல்வார்கள். எவ்விதத்தில் அப்பணியைச் செய்யலாம் என்று வெளிப்படையாய்ச் சொல்லவேண்டியது அவசியமா யிருக்கிறது.

(1) நமது நாட்டிற்கு வேண்டியது முதலில் ஒற்றுமை. ஜாதிக்கு ஜாதி ஏற்றத்தாழ்வு என்பது ஒழிய வேண்டும். இத்துறையில் பத்திரிகைகளில் ஜாதிச் சண்டைகள் உண்டாகும்படியான வார்த்தைகளை பிரசுரிக்கக்கூடாது. சமூகப் பிணக்குகளைப் பற்றி எழுதும்பொழுது, எது உண்மையோ எது நியாயமோ அதை அன்பு ததும்பும் முறையில், நாம் யாருக்கு விரோதமாய் எழுதுகிறோமோ அவர்கள் கூட நம்பேரில் கோபம் கொள்ளாத வாறு எழுத வேண்டும்.

(2) எச்சமயத்திலும் பொய் என்பது பிரசுரம் செய்யக் கூடாது. உதாரணமாக, நம் கொள்கையைத் தழுவாத சில ராஜீய வாதிகளுள் பிளவு ஏற்பட்டது என்று நமக்குத் தெரிந்தவுடன் "...கட்சியில் பிளவு" என்று தலைப்புப் போட்டு உடனே பிரசுரம் செய்யக்கூடாது. அப்படிப் பிரசுரம் செய்தால் மற்றவர்கள் வீழ்வதில் நமக்கு உற்சாகம் இருக்கிறது என்று ஏற்படும். இந்தக் குணம் மிக அற்பத்தனமானது.

(3) எந்த சம்பவத்தைப் பற்றியும் நாட்டுக்கு நன்மையைப் பிரதானமாய்க் கருதி எழுதவேண்டும். பத்திரிகைத் தொழிலி லிருப்பவர்கள் கூடியமட்டில் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்களா யில்லாமலிருப்பது நலம்.

(4) ஒழுக்கத்துக்கும், நமது பயிற்சிக்கும் ஒப்பில்லாத விஷ யங்களையும் படங்களையும் பிரசுரிக்கக் கூடாது. நமது சகோதரிகள் படிப்பதற்கு லஜ்ஜைபடக்கூடிய விஷயங்களைப் பிரசுரிக்கக் கூடாது.

(5) யாரையும்பற்றி இழிவுபடுத்தி எழுதக் கூடாது.

(6) நடை உடை பாவனைகளில் நமது நாட்டு நாகரிகத்தின் பெருமையை நிலைநிறுத்தப் பாடுபடவேண்டும்.

(7) சமூக சீர்திருத்தத்திற்குப் பாடுபடுவதில் பழைய காலத் தைப் பின்பற்றுபவர்களையும் நம்முடன் சேரும்படியான முறையில் எழுதவேண்டும்.

(8) வெளிநாட்டுச் சரித்திரங்களில் நம்மவர்கள் தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்களை மொழி பெயர்த்துப் பிரசுரம் செய்ய வேண்டும்.

(9) ஜனங்கள் ரஸிக்கக் கூடிய முறையிலும் நமது பாஷை வளரக்கூடிய வழியிலும் எழுதவேண்டும்.

(10) ஒரு பத்திரிகைக்கும், இன்னொரு பத்திரிகைக்கும் ஏதாவ தொரு விஷயத்தைப்பற்றி விவாதம் ஏற்பட்டால், விவாதத்தை நேர்மையாக நடத்தவேண்டும். தாக்கும் பத்திரிகாசிரியருக்கும் தாக்கப்படும் பத்திரிகாசிரியருக்கும் சொந்தச் சண்டைபோல் மாற்றிவிடக் கூடாது. கொள்கையும் கொள்கையும் மோதிக்கொள் ளும்பொழுது, கொள்கைகளைத் தாங்கி நிற்கிறவர்கள் யார் என் பதைப்பற்றிக் கவலை யில்லை. பத்திரிகை விவாதத்தைச் சொந்தச் சண்டையாய் மாற்றிவிட்டால், ஜனங்கள் சண்டையை வேடிக்கை பார்ப்பதில், கொள்கையை மறந்துவிடுவார்கள். பத்திரிகை நடத் துபவர்கள் உயர்ந்த நோக்கம் கொண்டவர்களாயிருக்கவேண்டும். நான் ஏதோ வாய்வேதாந்தம் பேசுவதாய் ஒருவரும் நினைக்கவேண் டாம். இப்பொழுது தமிழ்நாட்டில் நடந்துவரும் ஒரு முக்கியமான போரை ஞாபகத்தில் வைத்துத் தான் சொல்லுகின்றேன்.

"போட்டிப் பந்தயத்தால் தமிழ்நாட்டில் அநேக ஜனங்கள் நஷ்டப்படுகிறார்கள். அது குதிரைப் பந்தயம் மாதிரி தீங்கு விளைவிக்கக்கூடியது; அதனால் நன்மையே இல்லை" என்று வாதித்தது ,காந்தி'. இதற்கு 'ஆனந்த விகடன்' பதில் சொல்வதில், போட்டிப் பந்தயத்தினால் நாட்டுக்கு என்ன நன்மை, அதனால் தமிழர்களுக்கு என்ன லாபம், குதிரைப் பந்தயத்திற்கும் இதற்கும் உண்மையில் என்ன வித்தியாசம்? மனிதன் சுலபமாய், உழைக்காமல், பணம் சம்பாதிக்கலாம் என்னும் துர் ஆசையைப் போட்டிப் பந்தயங்கள் வளர்க்கின்றனவா? இல்லையா? என்பவைகளைப்பற்றி மாத்திரம் எழுதிவிட்டு நிறுத்திக் கொண்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும். இவைகளைப் பற்றி எழுதாமல் விட்டுவிட்டு, 'காந்தி'க்கு 'விகடன்' பேரில் பொறாமை என்று ஏன் எழுதவேண்டும்? 'காந்தி' பத்திராதிபரையும் 'விகடன்' நடத்துபவர்களையும் தமிழர்களுக்கு நன்றாய்த் தெரியும். இப்படிக்கிருக்க கொள்கையை விட்டு மனிதர் மேல் தாவுவது நேர்மை அல்ல. பிரஸ்தாப சம்பவம் மாதிரி நேருகிற காலங்களில், மனச்சாட்சியாகிய விளக்கை நமக்குள்ளே திருப்பிப் பார்த்துக்கொண்டால், நாம் எடுத்துக்கொண்ட காரியம் விரைவில் சித்தியாகும். பத்திரிகாசிரியர்களுக்கு எல்லாரையும் விட பொறுமை ஜாஸ்தி வேண்டும்.

வளர்ப்பதில் பிரயோஜனமென்ன? பத்திரிகைகள் நாட்டுக்கு நலன் செய்யவேண்டுமானால், பத்திரிகைத் தொழிலில் காந்தீயம் கலக்க வேண்டும். காந்தியடிகள் புத்திரிகை நடத்தும் முறையில் நடத்தவேண்டும். அந்த முறையை யாவரும் கையாளலாம்.

அடுத்தபடியாகக் காலஞ்சென்ற ஸ்ரீமான் கஸ்தூரி ரங்கய்யங்கார் மாதிரி இருக்கவேண்டும் பத்திரிகாசிரியர்கள். ஸ்ரீமான் அய்யங்கார் இருக்கும்பொழுது, 'ஹிந்து' வில் அவர் எங்கு போகிறார்? அவர் யாருடன் காபி சாப்பிட்டார்? அவர் பத்திரிகை எத்தனை பிரதி அச்சாயிற்று? என்னும் தற்புகழ்ச்சி சமாச்சாரங்கள் பிரசுரமாகாது.

உலகத்தை ஆளுகிறவர்கள், அரசாங்கங்களை சிருஷ்டிக்கிறவர்கள், வீழ்த்துகிறவர்கள், ஜாதிகளை உண்டாக்குகிறவர்கள் அவைகளை அழிப்பவர்கள் பத்திரிகாசிரியர்கள். ஆனால் உலகத்தில் ஜனங்கள் கண்களில் படாமல் மறைமுகமாக இருந்து தொண்டாற்றுபவர்களும் பத்திரிகாசிரியர்கள் தான். ஏ. ஜி. ஜி. யின் கட்டுரைகள் அளவில்லாமல் படித்திருக்கிறேன். அவருடைய படம் ஒன்று வேண்டுமென்று பார்த்தால் கிடைக்கவில்லை. அம்மாதிரி பத்திரிகாசிரியர்கள் தமிழ்நாட்டில் தோன்றவேண்டும்.

மாஜி சுமங்கலியின் உயில்

(தி. ச.)



(10-12-33 தொடர்ச்சி)

"அம்மா!"

"தூங்கப்பா மணி, நேரமாச்சு."

"நேரமானால் பரவாயில்லை யம்மா. எனக்குத் தூங்க இனி அதிக நாள் இல்லை...விமலா எங்கே? அவள் தன் தம்பியின் ஆண்டு நிறைவுக்கு போகவில்லையோ? ஒரே அருமைத் தம்பி. நாள் கடந்து பிறந்துளான். அவள் போவதானால் போகட்டுமே."

"நன்னாயிருக்கு! உன்னை விட்டு அவள் போவளா? அதுவும் இப்பவா?"

படுத்திருந்த மணி எழுந்து உட்கார்ந்தான். அவன் ஹிருதயம் 'பட பட' வென அடித்தது. நெற்றியில் ஒரு சில வியர்வைத் துளிகள் தோன்றின.

"அம்மா! அந்த ஜன்னலைத் திற. காற்று வரட்டும். இந்த விளக்கை இன்னம் சிறியதாகத் தூண்டு. கண்ணுக்குப் படாமல் வை...நிஜமாக...விமலா..."

"பொய்யா சொல்லுகிறேன்? 'பிறந்தகம் போக வேண்டாமா' என்று கேட்டதும், கதறிவிட்டாள். உன்னை இப்படி விட்டுப் போக சகிப்பாளா?"

உண்மை வேறு. தன் தம்பியின் ஆண்டு விழாவிற்குப் போக, விமலா ஒரு காலில் நின்றாள். மகன் மனதை தேற்ற முத்து லக்ஷ்மி பொய் புகன்றாள்.

"விமலா கதறிவிட்டாள்!" மணியின் மனக்கண் முன் அவள் அப்படியே தென்பட்டாள். ஜன்னலின் வெளியே அவளது விழியின் கருமை எங்குமே பரவியிருந்ததைக் கண்டான். அவளது கண்களில் நின்றே துடிக்கும் நீர் முத்துக்களை வானில் நின்ற நக்ஷத்திரங்களின் நினைவை மூட்டின.

"அம்மா! விமலாவின் மனம் எப்படி மாறிவருகிறது பார்த்தயா?"

வைத்தியர் அவன் தூங்குவதாக எண்ணி அவனது தாயிடம் காதோடு சொன்னது நினைவுக்கு வருகிறது. அவன் கண்கள் கலங்குகின்றன. இன்னம், பல வருஷங்கட்கு முன் மாயவரத்தில் பகல் வேஷக்காரன் ஒருவன் பாடியதும், நினைவுக்கு வருகிறது.

"வாயிலண்டை வந்தபோது
விழித்திலாத சிந்தையே—உன் அன்பன்
வாயில் தாண்டி போன சத்தம்
காதில் வீழ்ந்து எழுந்தனை—நீ
காரிருளில் எழுந்தனை."

மணியின் கண்ணினின்றும் ஒரு நீர்த்துளி தெறித்து மறைந்தது.

"அம்மா! நாளைக்கு தான் நான் விமலாவை மணந்த தினம். அவளுக்கு நினைவு இருக்கோ? ....விமலாவிற்கு இது இருபதாம் வயது நடக்கிறது."

"நேர மாச்சு, தூங்கு"

"என்ன மணி?"

"பத்து"

"அவ்வளவு தானே. நான் நடுநிசிக்கு மேலாய் விட்டதென்று நினைத்தேன். வியாதியஸ்தருக்கு மாலையிலேயே நடு நிசி ஆரம்பம்......அம்மா! நான் விமலாவைப் பார்க்க விரும்புகிறேன். மூன்று நாளாய் அவளைப் பார்க்க வில்லையே. அவள் தூங்கியாச்சா?"

"நேற்று இரவெல்லாம் உன் தலை மாட்டில் உட்கார்ந்து விசிறிக் கொண்டிருந்தாள். உனக்கு நல்ல தூக்கம். இதோ அவளை அழைத்து வருகிறேன்."

மணியின் மனத்தில் திடீரென ஒரு சாந்தி பிறந்தது. சாகு முன்பாவது தன் மனையாளின் ஹிருதயம் தன்பால் திரும்பியதை எண்ணி மகிழ்ந்தான். ஜன்னல் வழியே வெளியே பார்த்தான். வானத்தில் ஒளியுடன் கூடிய நக்ஷத்திரங்களைக் கண்டான். அங்கங்கு இடையிடையே இருளையும் கண்டான். 'சுகதுக்கமும் இப்படித்தான் போலும்' என எண்ணினான்.

கதவு திறந்தது.

"விமலா! விமீ!"

"அப்பா மணி! இதுவரை உன்னையே எண்ணிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாளாம். இப்போது தான் நமது வேலைக்காரி ரங்கம் சமாதானப் படுத்தி அவளைத் தூங்கச் செய்தாளாம். காலையில் காப்பியை எடுத்துக் கொண்டு வருவள். உனக்குத் தினம் கஞ்சி, காபி போடுவது அவள் தானே. சமையற்காரன் செய்யக் கூடாது என்கிறாள். தன் கையால் போட்டுத் தன் கணவனுக்குக் கொடுக்க வேண்டுமாம். அவள் மனம் எப்படி மாறி விட்டது!"



உண்மை வேறு. முத்துலக்ஷ்மி உள்ளே சென்றதும் அவளிடம் சொல்லி விட்டு விமலா, காரில் ஏறி ரயிலுக்குப் போய் விட்டாள்.

"என்னால் வேஷம் போட முடியாது. என் தம்பியின் பாசம் என்னை இழுக்கிறது. இங்கு என் மனம் இல்லை" என்று கூறிப் போனாள்.

"எப்போது விடியும் அம்மா? தவிர, அதுவரை...நான்...."

"கண்ணே! தூங்கு. இந்தக் கம்பளி சவுக்கம் விமலா போட்டது. இதைத் தலைக்குக் கட்டிக்கொள். படுத்துகொண்டு சற்று தூங்கு."

"விமலா போட்டதா? அவள் கையினாலேயா?...."

அதை அன்புடன் வாங்கி தன் கையில் மிருதுவாக இருத்திக் கொண்டான்; ஹிருதயத்தின் மேல் வைத்தான். அது கேவலம் கம்பளி நூலால் போடப்பட்டதாக அவன் கருதவில்லை. அவளது அன்பும் அந்நூலுடன் கலந்து சவுக்கமாகப் போடப்பட்டதாக எண்ணினன். அவளது இனிய ஸ்பரிசத்தை அதில் தொட்டு அநுபவித்தான்.

"அம்மா, நேற்று ஒரு கனவு கண்டேன். விமலா என்னைக் காண வருகிருள். கதவு திறக்க முடியவில்லை. வெளியே நின்று விடுகிருள்.........அம்மா! கதவை சற்றுத் திறந்து வை..."

கோழி கூவும் தருவாய். திடீரென மணி விழிக்கிருன். பக்கத்தில் கண்கொட்டாது வீற்றிருந்த தன் அன்னையைக் காண்கிருன்.

"அம்மா! தாகம் மேலிடுகிறது. கொஞ்சம் ஆரன்ஜ் ரஸம் கொண்டு வா..."

வாயில் விடுகிற ரஸத்தை முழுதும் குடித்து விடுகிருன். கண் மயங்குகிறது. மீண்டும் வாயைத் திறக்கிருன். நா பேசவில்லை.

"கண்ணே மணி! என் அப்பனே!' எனக் கதறிக்கொண்டு இன்னெரு பழம் கொண்டுவர உள்ளே முத்துலக்ஷ்மி ஓடுகிருள்.

கதவு திறந்த சத்தம்.

"யார்?" மணி கேட்கிருன்.

"நான் தான் ரங்கம்"

"சின்னம்மா எங்கே?"

"நேற்றிரவே கடலூருக்குப் போய்விட்டார்கள்"

"எங்கே?.......யார்?......விமலாவா......விலீயா?..."

பழ ரஸத்துடன் தாய் வருகிருள்.

"அம்மா!......இந்த சவுக்கத்தைத் தூர எறி. தூர எறியம்மா......அந்த ஜன்னலுக்கு வெளியே எறி.......அவளுக்கு அது மூடின கதவுதான்......அம்மா!

"கண்ணே"

"என் தலையை உன் மடியில் வைத்துக் கொள்கிறேன். என் கிட்ட நகர்ந்து வா."

வாயைத் திறக்கிறான்.

ஆரன்ஜ் ரஸத்துடன் அன்னையின் ஒரு கண்ணீர்த் துளியும் மைந்தனின் வாயில் விழுகிறது.

"அம்மா! இந்தப் பழம் வெகு ருசியாயிருக்கு......அம்மா! நான்...போனால்...உனக்கு...."

"என் அப்பா! அப்படிச் சொல்லாதே."

வைத்தியர் வருகிறார்.

"இப்படிப் பேசக்கூடாது. அதிர்ச்சி ஏற்படும்."

"அம்மா! அவரைப் போகச் சொல்லு. இனி அவருக்கு வேலையில்லை......" மணி மயங்குகிறான்.

வைத்தியர் நாடியைப் பிடித்துப் பார்க்கிறார்.

வைத்தியர் வாய் திறவாது போகிறார்.

"ரங்கம், என் சிறிய சிவப்பு நோட்டுப் புத்தகத்தைக் கொண்டு வா." என்று முத்துலக்ஷ்மி சொன்னாள்.

புத்தகம் வருகிறது.

"ரங்கம், நீ வாசற்படியண்டை நில்லு."

கண்ணைத் துடைத்துக்கொண்டு, மடியில் மயக்கத்தில் இருந்த மகன் முகத்தில் ஒரு முத்தம் கொடுத்து, முத்துலக்ஷ்மி கண்ணை மூடிக் கடவுளை எண்ணினாள். ஒரு விநாடியில், தான் பிறந்தது, வளர்ந்தது, மணந்தது, தன் கணவன் கோர்ட்டு வாசலில் கிடந்து சொத்தை யழித்துப் பின் மாண்டது, மணியின் விவாகம், தான் வைதீகர்களின் கையில் சிக்கி மனச்சாந்தியின்றி பணக்குவியலைப் பறி கொடுத்தது, மனப்பொருத்தமின்றி மணந்த "மணி-விமலா" வின் இன்பமற்ற வாழ்க்கை, யாவும் அவள் மனக்கண் முன் வந்து மறைந்தன. மடியில் மகனது முகத்தைக் கண்டாள்.

சிவப்பு புத்தகத்தில் ஏதோ எழுதினாள்.

"அம்...மா...."

"கண்ணே! ம...ணி..."

மகன் அண்டை தாய் படுத்துளாள். அனாதிகாலம் தொட்டு எண்ணற்ற வாழ்க்கையின் இறுதிக் காட்சிகளைக் கண்டுள்ள 'சுக்கிரன்' இந்தக் காட்சியையும் கண்டு மறைந்தான்.

சிவப்புப் புத்தகத்தில் எழுதியிருந்தது:—

பெண்ணே விமலா!

இதோ மணி இறந்துகொண்டு இருக்கிறான்.

பிறந்ததும் நான் என் அன்னையை இழந்தேன்; மணந்ததும் எனதருமைத் தந்தையை இழந்தேன்; எனது மணவாழ்க்கையில் நான் சுகத்தை இழந்தேன்; பூமி ஆசையால் விவகாரத்தில் ஈடு பட்டு கோர்ட்டு வாசலில் கிடந்து வக்கீல்கள் வாயில் வீழ்ந்து பாதிக்குமேல் ஆஸ்தியைப் பறிகொடுத்த என் கணவனைப் பின் இழந்தேன்; மோக்ஷத்தை அடைய அகத் தூய்மையும் அமைதி யுமே சாதனமென் றறியாது மூட வைதீகத்தி லிறங்கி, அமங்கலி களுக்கு வக்கீல்களான வைதீகரின் வலையில் சிக்கி, மனச்சாந்தியை யும், மிகுந்த ஆஸ்தியையும் இழந்தேன்; மனப் பொருத்தமின்றி, வெளித் தோற்றத்தைக் கண்டு மையல்கொண்டு மணம் புரிந்து இல்லற இன்பத்தை அறியாத என் பாலனை இதோ இழக்கின் றேன்; இல்லை; அவனுடன் நானும் இறக்கின்றேன்.

விமலா, இதுவே எனது உயில். எனக்கு வேறு ஆஸ்தி யொன்று மில்லை உனக்கு எழுதி வைக்க. எனது கதையால் நீ பயன் பெறலாம். இதோ என் அன்பும் ஆசியும்.

பெண்ணே, உன் மனப்போக்கை நான் உணர்ந்துகொண் டேன்; மணி அறியவில்லை. 'தாலி வேறு, காதல் வேறு,' என் பதை நான் அறிந்து கொண்டேன்; மணி உணரவில்லை.

இளமை தவழும் இனியவளே, இனியேனும் ஈசன் உனக்கு இன்பத்தை அளிப்பானாக.

—முத்துலக்ஷ்மி.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதிய வர்களின் பெயர்களுடன் அவை "சாந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக் கப்படும்.

பத்திரிகை வெளியாகி ஒரு வாரத்திற்குள் பரிசுப் பணம் வராவிட்டால், உடனே ஆபீசுக்கு கடிதம் எழுதவும்.



வேலைக்காரன்:—தங்களை தூக்கத்தினின்று எப்பொழுது எழுப்பச் சொல்கிறீர்கள்?

எஜமான்:—நான் மணி அடிக்கிறேன். அப்பொழுது வந்து எழுப்பு!

—சீ. பாடகலிங்கம், ஹரிகேசவநல்லூர்.

*　　*　　*　　*

தாய்:—ஏண்டா! சுவாமியைக் கும்பிடும்போது கண்களை மூடிக்கொள்ள வேண்டும் என்று சொன்னேனே! அப்படிச் செய்தாயா?

மகன்:—நான் அப்படியே செய்தேன். ஆனால் தம்பி சோமுதான் கண்களைத் திறந்துகொண்டிருந்தான்.

டி. எம். செங்கோடன், திருச்செங்கோடு.

*　　*　　*　　*

ஹெட்மாஸ்டர்:—மாணவர்களே! மூடர்களையும் புத்திமான்களையும் பற்றிச் சொன்னேனல்லவா! சில சமயம் மூடர் கேட்கும் கேள்விகளுக்குக்கூட புத்திமான்கள் பதில் கூற முடியாது. சேஷா! இதற்கு ஒரு உதாரணம் கூறு.

சேஷன்:—தாங்கள் போனதடவை கேட்ட கேள்விக்கு தவறுதலாய்க் கூறியதற்குக் காரணம் இதுதான ஸார்.

—எஸ். பீ. மீருமைதீன், திண்டுக்கல்.

*　　*　　*　　*

பீச் ரஸ்தாவிலுள்ள, அக்குவேரியம் மீன்காட்சி சாலையின் மானேஜா, வேலைக்காரனை பார்த்து;—முனிச்சா மீன்களுக்கு, தண்ணீர் வேறெ போட்டாயா!

முனிச்சன்:—என் சாமி, அந்த தண்ணீரையே மீன்கள் குடிக்கலையே, இன்னும் ஏன் தண்ணி ஊத்தணும்!

—சஞ்சீவி, மைலாப்பூர்.

என்ன கூட்டமானாலும் சரி, ஒரு ஆள்கூட இல்லாவிட்டாலும் சரி, ரயில் புறப்படும் சமயத்தில்தான் 'டிக்கட்' வாங்குவார் செட்டியார்.

"எனப்படி பண்ணரேள் செட்டியார்?"

"அட எத்தனை நேரம் பணத்தை வச்சிண்டிருக்க முடியுமோ அத்தனை நேரம் நம்ம பையிலே இருக்கட்டுமே.

—தி. சதாசிவம், கோவை.

*　　*　　*　　*

ஒரு வக்கில் கோர்ட்டில் வாதம் செய்துகொண்டு இருந்தார். அப்பொழுது வெளியில் ஒரு கழுதை கத்தியது.

ஜட்ஜ்:—(வக்கிலைப்பார்த்து) என்ன ஸார் ஒரு சமயத்தில் ஒருவர் பேசுங்கோ.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஜட்ஜ் தீர்ப்பு சொல்லும்பொழுது கழுதை வெளியில் கூக்குரலிட்டது.

வக்கில்:—(ஜட்ஜைப் பார்த்து) எதிரொலி அதிகமாகக் கேட்பதால் உங்கள் தீர்ப்பு காதில் விழவில்லை.

*—மூர்த்தி, சாத்தனூர்.

*　　*　　*　　*

முதல்வன்:—ஓய் நாகர்கோயிலில் இடிவிழுந்து ஒருவர் இறந்து போனாராமே.

இரண்டாமவன்:—ஆம்.

முதல்:—உமக்கு எப்படித் தெரியும்?

இரண்:—என் மேல்தான் விழுந்தது.

முதல்:—பின் எப்படி பிழைத்தீர்?

இரண்டா:—பிழைத்ததினாலே தான் உம்மிடம் ஒப்புக்கொள்கிறேன்.

—கே. எஸ். சுப்பிரமணியம், நாகர்கோயில்.

*　　*　　*　　*

கரீம்:—அமெரிக்காவிலே இறந்தவர்களை பிழைக்கவைக்க டாக்டர்கள் முயற்சி செய்கிறார்களாமே!

கோபால்:—இதென்ன பிரமாதம். நமது நாட்டிலேதான் முன்னமேயே கண்டுபிடித்து விட்டார்களே.

கரீம்:—யார் கண்டுபிடித்தவர்கள்?

கோபால்:—ஒருவருஷம் ஆறுமாதங்கட்கு முன்பு இறந்தவர்களையுங்கூட எலக்ஷன்காலல் பிழைக்க வைக்கிறார்களே, இது தெரியாதா?

—எம். ஏ. சத்தார், வலங்கிமான்.

பைத்தியக்கார ஆஸ்பத்திரி சூப்பரிண்டடண்டு பைத்தியக்காரர்களில் ஒருவனைப் பார்த்து,

"அடேடே நீ எந்த ஊர்?"

"நான்தாங்க இதுக்கடுத்த பொன்னேரி"

"ஏண்டா இங்கே வந்தே?"

"பைத்தியக்கார பசங்க இங்கே தள்ளிவிட்டு போயிட்டாங்க"

"அது யார்டா அது?"

"நீங்க தாங்க."

—ஆ. சிதம்பர நாதம், சென்னை.

* * * *

எஜமானன்:—ஏண்டாப்பா இருக்கமாட்டேன் என்கிறாய்? நான் உன்னை வேறாக நினைக்கவில்லையே! குடும்பத்தில ஒருவனாக அல்லவோ நினைத்துக்கொண்டிருக்கிறேன். இதை விட்டு நீ ஏன் போறேன் போறேன் என்கிறாய்.

வேலைக்காரன்:—உண்மைதான் எஜமானன். நீங்கள் சொன்னதில் கொஞ்சம்கூட பிசகு இல்லை. குடும்பத்தாருக்கும் சம்பளம் இல்லை. எனக்கும் சம்பளம் இல்லை. அதனாலதான் நான் போகிறேன்.

—ஆர். ராமஸாமி, பட்டுக்கோட்டை.

* * * *

மனைவி:—நம்ப குழந்தை என்ன பிடிவாதம் செய்கிறது! அந்தக் குணம் என்னிடமிருந்து வந்திராது.

கணவன்:—இராது, உன் பிடிவாதம்தான் குறையாமல் உன்னிடமே இருக்கிறதே.

—ஜி. சுப்பையா ராஜு, ஸ்கூல்மாஸ்டர், தஞ்சாவூர்.

* * * *

கலகக் கேஸில் சாட்சி சொல்லவந்த நாச்சி முத்துப் பிள்ளையைப் பார்த்து, மாஜிஸ்ட்ரேட்:—உனக்கு என்ன தொழில்?

சாட்சி:—நான் சிறிதுகாலம் அரசாங்க உத்தியோகத்திலிருந்தேன்.

மாஜிஸ்ட்ரேட்:—எப்பொழுது? எந்த உத்தியோகத்திலிருந்தாய்?


சாட்சி:—சென்ற வருஷம் கடலூர் சிறையில் கான்விக்ட் வார்டாகயிருந்தேன்.

—எம். பி. விமலன், விருதுநகர்.

---

* பரிசு பெற்றவர்:—மூர்த்தி, சாத்தனூர்.

மந்திரவாதியின் தந்திரம்



மேடையில் ஒரு பெரிய சிப்பி இருக்கிறது. அதை முதலில் மந்திரவாதி திறந்து காட்டுகிறான். உள்ளே ஒன்றுமில்லை. மூடிவிட்டு மறுபடியும் திறந்து காட்டுகிறான். உள்ளிருந்து ஒரு இள நங்கை தோன்றுகிறாள். இது எப்படி நடக்கிறது?

(1) சிப்பிக்குள்ளே பெண் படுத்திருக்கிறாள். சிப்பிக்கு அடிப் பாகம் கிடையாது. பெண்ணுக்கு மேலே துணி படுதா இருக்கிறது. (2) சிப்பியை திறந்து காட்டும்போது பெண் சிப்பிக்குக் கீழே படுத்திருக்கிறாள். சிப்பியின் அடிப்பாகம் துணியால் மூடப் பட்டிருப்பதால் கீழே பெண் இருப்பது தெரியவில்லை. (3) சிப்பி மறுபடியும் பழைய ஸ்தானத்துக்குப் போனவுடன் பெண் மறுபடியும் அதற்குள்ளே வந்துவிடுகிறாள். இச்சமயம் மேலேயுள்ள துணிப் படுதாவை சுருட்டிவிடுகிறாள். (4) சிப்பி திறந்தவுடன் உள்ளே யிருக்கும் நங்கை வெளித் தோன்றுகிறாள். இதுவே வெறும் சிப்பியிலிருந்து பெண் தோன்றும்படி செய்யும் மந்திரவாதியின் தந்திர மாகும்.

அடுத்த மலரில் மற்றொரு தந்திரம் வெளியிடப்படும்.

: சென்சஸ் விகிதம் ::

சென்னை மாகாணத்தின் விஸ்தீரணம், 1,42,277 சதுரமைல். அதன் ஜனத்தொகை 4,67,40,107. பெரிய மாகாணங்களில் அதிக விஸ்தீரணங்கொண்ட 2-வது மாகாணம் சென்னையாகும். ஜனத்தொகையில் 3-வதாக உடையது. சதுர மைலுக்கு இதில் சராசரி 329 பேர் வசிப்பதால் ஜனநெருக்கத்தில் அதிகமாகவுடைய மாகாணங்களில் 5-வது மாகாணம். இதன் ஜனத்தொகை சென்ற 10 வருஷங்களில் 100-க்கு 10.4 வீதம் அதிகரித்திருக்கிறது. நீர்ப்பாசன நிலங்கள் 66,000 ஏக்கர்கள் அதிகரித்திருக்கின்றன. இந்த அதிகரிப்பு 100-க்கு 0.90 வீதமேயாகும். விளைபொருள்களின் விலை சென்னை மாகாணத்தில் 100-க்கு 46-வீதம் குறைந்தது. ஆனால் இக்குறைவு விலையிலேயே ஒழிய விளைவிலல்ல. தற்கால முறையில் விவசாயத்தை அதிகரிப்பது ஒரு முடிவான நிலைமைக்கு வந்து விட்டதால், இது இன்னும் சாத்தியமில்லை. தொத்து வியாதிகளும் அதிகமில்லை. 6-வருஷங்கள் தான் காலரா கடுமையாயிருந்தது. இந்த மாகாண மொன்றில் தான் பிறப்பு, இறப்புக் கணக்கு திருப்திகரமாயிருக்கிறது. ஆயினும் 1930 ல் ரிஜிஸ்டர் செய்யப்படாமல், 62,000 பிறப்பும், 25,000 பேர் இறப்பும் இருந்ததென்பதை பரிசோதனை அதிகாரிகள் கண்டு பிடித்தார்கள்.

சென்னை மாகாணத்தில் சில இடங்களிலிருந்து அசாம், இலங்கை, பர்மா, மலாய் முதலிய இடங்களுக்குப் போயிருக்கிறார்கள். இதனால் சென்னை மாகாணம் வருஷந்தோறும் 13,000 பேரை இழந்திருக்கிறது. இங்கேயே தோட்டத் தொழில் விருத்தியடைந்தபோதிலும் அதனால் எத்தகைய நன்மையும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கர்ப்பத்தடை விஷயத்திலும் சென்னை மாகாணந்தான் முதல்தரமாயிருக்கிறது. வயது அதிகமான பிறகு தான் விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டு வருவதோடு, பல பிரபலஸ்தர்களும் பத்திரிகைகளும் கர்ப்பத்தடை முறைகளைப் பிரசாரஞ் செய்து வருகின்றனரென்று சென்னை சென்சஸ் சூப்பரின்டென்டு கூறி யிருக்கிறார்.

சேலம் ஜில்லாவிலுள்ள கவுண்டர்களும், குடும்பங்கள் பெரியதாகிவிடாதபடித் தடுப்பதற்காகவும் கூட்டுக் குடும்ப முறை கெட்டு

விடாதபடித் தடுப்பதற்காகவும் ஒரு விநோதமான கர்ப்பத்தடை முறையை அனுஷ்டித்து வருகிறார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

நகரவாழ்க்கையில் மோகம்

மற்ற பெரிய மாகாணங்களி லிருப்பவர்களை விட சென்னை மாகாண வாசிகளுக்குத் தான் நகர வாழ்க்கையில் அதிக மோக மேற்பட்டிருக்கிறது. இந்த மோகத்தில் பம்பாய்க்கு அடுத்தது சென்னைதான். ஆனால் பம்பாய் மாகாண பட்டணங்களைவிட சென்னை மாகாண பட்டணங்களில் கைத்தொழில் வளர்ச்சி மிகக் குறைவு. எனினும் கைத்தொழில் சில விடங்களில் வளர ஆரம்பித்திருப்பதோடு, பருத்தி சாகுபடியாகும் இடங்களை யடுத்த பாகங்களில் பஞ்சாலைகளும் நூற்கும் மில்களும் ஏற்பட்டிருக்கின்றன. பொள்ளாச்சியில் 1921-ல் 5-மில்களிருக்க, 1931-ல் 30 மில்களிருக்கின்றன, ஜலத்திலிருந்து மின்சார சக்தி எடுக்கும் வசதியிருப்பதோடு மின்சாரத்தின் உபயோகமும் அதிகரித்துவருகிறது.

சென்ற 10 வருஷத்தில் இம்மாகாண வாசிகளுக்கு வாழ்க்கையின் நிலை உயர்ந்துவிட்டது. பத்து வருஷங்களுக்கு முன்பு திரும்பியும் பார்க்காதிருந்த ஆடம்பரங்களை இப்பொழுது கிராமவாசிகளும் வாழ்க்கைக்கு அவசியமானவைகளாக்கிக்கொண்டு விட்டனர். மோட்டார் பஸ், மோட்டார்களின் போக்குவரத்து அதிகரித்து வெளிப் பழக்கம் அதிகமாகிவிட்டதே வாழ்க்கையின் தேவைகளும் உயர்ந்துவிட்டதற்குக் காரணமாகும்.

1921-ம் வருஷம் கணக்கெடுத்தபோது இருந்த இந்தியாவின் ஜனத்தொகை 31,89 42,480. 1931-ல் கணக்கெடுத்ததில் 35 28 37,778 பேர்களிருக்கிறார்கள். அதாவது 3,38,95,298 பேர்கள் 10 வருஷத்தில் அதிகரித்திருக்கின்றனர்.

இந்தியா முழுதிற்கும் தொகை

மொத்தம்	ஆண்கள்	பெண்கள்
35,38,37,778	18,18,28,923	17,10,08,885
	பிரிட்டிஷ் இந்தியா	
27,15,26,933	13,99,31,556	13,15,95,377
	சமஸ்தானங்கள்	
8,13,10,845	4,18,97,367	3,94,13,478

Printed at the "Tamil Nadu" Press, Madras. Published by T. S. Chockalingam, Editor & Proprietor, "Gandhi" Office, 29, Sembudoss St., Madras.

கறீம் பீடி பரிசுகள்
1933ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து
1190 - பேர் ரூ. 7265
பரிசு பெற்றிருக்கிறார்கள்.
பரிசு பெற்றவர்களின் 16-வது ஜாப்தா
24—12—33 முதல் 13—1—34 வரை.

	முன் ஜாப்தாக்களின்படி	ரூ. 6760
1108	A. K. ஷெரீப் சாகிபு, புது மாம்பலம்	10
1109	ஷேக் அப்துல்கனி சாகிபு, பீடி வியாபாரி, பெல்காம்	10
1110	வாராசி சத்ய நாராயண பிரதர்ஸ், பார்வதிபுரம்	10
1111	K. பிச்சுப் பிள்ளை, மதுரை	5
1112	கோவிந்தபிள்ளை s/o தக்ஷிணாமூர்த்தி பிள்ளை, புவனகிரி	10
1113	சாந்தலூரு பாபண்ணையா, பெஜவாடா	10
1114	அப்பி கந்த சூர்ய நாராயண, பொப்பிலி	5
1115	கே. ஜி. சாமி அண்டு கம்பெனி, திருவண்ணாமலை	5
1116	கட்டிப்பள்ளி குருமூர்த்தி, ராயகாடா, பி. என். ரெயில்வே (வைசாக் ஏஜன்ஸி)	5
1117	எம். தெய்வநாயக முதலியார், கோரிபாளையம், மதுரை	5
1118	என். அப்பாளா நரசிம்ம, வியாபாரி, விசாகபட்டணம்	5
1119	அர்ஜிபாபாராவ், ஜெனரல் மர்ச்செண்டு, விஜயநகரம்	5
1120	வரநாசி அப்பாராவ், பிஸ்ஸம் கட்டாக், விசாகப்பட்டணம் ஜில்லா	5
1121	கோதண்டராம பிள்ளை, திருவல்லிக்கேணி, மதராஸ்	10
1122	ஆர். என். பக்கிர் அஹமத் சாஹிபு ஷாப்கிபர், பந்தர் தெரு, மதராஸ்	5
1123	ஜியாசுத்தின் முகம்மது யூசுப், ரேய்ஷம்வாலா மார்கெட், தார்வார்	5
1124	முகம்மது குலாம் தஸ்தகீர் சாஹிபு, ஆஸ்பத்திரி ரோட், பி. டி. மதராஸ்	5
1125	அப்துல் கபூர் சாஹிபு, பி. பி. ஹாலுக்கு எதிர், பி. டி. மதராஸ்	5
1126	எம். மாயண்ணா, ஹல்லடக்கேரி, தொட்டபெட், மைசூர்	5
1127	ஷம்சுத்தின் சாஹிபு, பெல்லாரி	10
1128	எஸ். வி. கோதாவரி செட்டியார், பெங்களூர் தண்டு	5

1129 கக்கா வீரபத்தையா, மிளகாய் வியாபாரி, தெனுலி 5
1130 எ. பி. ஷேக் அப்துல்காதர், கூத்தானல்லூர் போஸ்டு 5
1131 பி. அப்துல்காதர் சாஹிபு, தங்கச்சிமடம் போஸ்டு, 5
1132 டி. எ. சுலைமான் ராவுத்தர், மங்கநல்லூர், 5
1132 அப்துல் ரஹீம் சாஹிபு, பெங்களூர் தண்டு 5
1134 டெஹியால்லா C/o நாசிங்கலல்லா, ஹோஸ்பெட் 10
1135 எ. இ. பாச்சாமெயின் சாஹிபு அண்டு கம்பெனி, வியாபாரிகள், லப்பைகுடிக்காடு, பெரம்பலூர் தாலுக்கா 5
1136 பி.ஆர்.கே. வேணுகோபால் இரும்புவியாபாரி நெல்லிகுப்பம் 5
1137 குசப்பா சங்கன்பாசப்பா, ராஜனல்குரோசர், பாகல்கோட் 5
1138 அப்துல் சாஹிபு, மத்திகேரா, பெட்டிகொண்டா தாலூகா 5
1139 வுபபாதாராமுலு செட்டி, மெயின்ரோட், ராஜமகேந்திரம் 5
1140 ஸி. கே. கனகசபாபதி பிள்ளை, பியூஸ்ரோட், கூடலூர் 5
1141 வி. ராமய்யர் அண்டு பிரதர்ஸ், மைசூர் 5
1142 என். பி. துரைசாமிகிராமணி, நத்தவெளி, திருப்பாபுலியூர் 5
1143 தாதவர்த்தி வீரராகவலு S/o வெங்கிடரத்னம், பீமாவாம் 10
1144 ஐ. ராஜு, சிப் கார்டு, M. S. M. Ry. பிட்ரகுண்டா 5
1145 எம். மொஹிதின் பாஷா, காகிநாடா 5
1146 வி. ஸ்ரீநிவாஸலுநாயுடு, 2-வது பயர்மென், காலனி, மதுரை 5
1147 தக்ஷிணாமூர்த்தி தஞ்சி நாயர், கிளாக்டவர், தஞ்சாவூர் 5
1148 மகாலிங்க முதலியார், நெ. 60, சாமிபிள்ளைத் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ் 10
1149 அப்துல்லா சாகிபு, தாங்கல் மதராஸ் 5
1150 அப்துல் அஸீஸ் சாகிபு, டீ ஷாப், 1-40, ஆயிரம் விளக்குகள், சென்னை 5
1151 ஷண்முகவேலு கிராமணி, புவனகிரி 5
1152 வெருதல் அம்மாள், கயத்தூர் முனிய கவுண்டர் குமாரி குட்டேரிபட்டு போஸ்ட் திண்டிவனம் 5
1153 மீரான் முகம்மது ஹுசேன், கரியர் தெரு, புலிகட் 5
1154 அப்பண்ணு, சொபோதி, பிஸ்ஸம் கட்டாக் 5
1155 குவாஜா பீரான், புதியரோட், திருப்பட்டியூர் 10
1156 எஸ். எஸ். கே. ராஜா நாடார், தூணி 5
1157 ஆர். குமாரசாமி நாடார், புதுப்பாளையம் கடலூர். N. T. 5
1158 ஏஜண்டு, இண்டியன் நேஷனல் மில்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட், நாசாபூர் 5
1159 கே. துரைசாமி நாயுடு அன் சன்ஸ், திருப்பாபுலியூர் 5
1160 வேணு முதலியார், ராபர்ட்ஸன்பெட், K.G.F. 5
1161 டி. ஆர். ராவ் அன் பிரதர்ஸ், ராஜமகேந்திரபுரம் 5
1162 எ. என். ஷேக் ஹுசேன், வண்ணாரப்பேட்டை, கதிரி 5


1163	P. A. அஹ்மத் ஹுசேன், தோல் வியாபாரி, தார்வார்	5
1164	யு. நரசிம்ம ரெட்டி, மேல் நாயக்கன்பாளையம்	5
1165	டி. ஆர். ராஜமாணிக்கம் பிள்ளை, திருப்பாபுலியூர்	5
1166	எ. முகம்மதுகான், டீ கிளப், அமீர்பீர் தர்கா, வேலூர்	5
1167	திருவேங்கட முதலியார், வண்ணாரப்பேட்டை, மதராஸ்	5
1168	செங்கல்ராஜு, கொத்தவால் பஜார், மதராஸ்	5
1169	கே. எல். ராமப்பா, போஸ்டாபீசு ரோட், சிக்பல்லபூர்	5
1170	காஞ்சர்லா நாராயண மூர்த்தி, பீமாவரம்	5
1171	ஷேக் ரஹ்மதுல்லா சாஹிபு, நாயுடுப்பேட்டை	10
1172	இ. நரசிம்மாசார்யார், கச்சேரி தெரு, கள்ளக்குறிச்சி	5
1173	பொல்லா மங்கம்மா, டெய்லர் பெட், நரசாப்பூர்	10
1174	பங்காரு மேஸ்திரி, கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி ரோட், கடலூர் N. T.	5
1175	வெங்கடாசல கவுண்டர் s/o பரசுராம கவுண்டர், எளங்காடு கிராமம், வளவனூர் போஸ்டு,	5
1176	அப்துல் கரீம் சாஹிபு, பெல்லாரி	5
1177	பி. சத்தியானந்தம், குமதவல்லி, பாலக்கொடுரு போஸ்டு,	5
1178	கே. குமாரசாமி குமண்டன் அன் பிரதர்ஸ் விசாகப்பட்டணம் ஜில்லா	10
1179	எஸ். அப்துல்கரிம்சாஹிபு, ரோஷன் அன் கம்பெனி, குத்தி	5
1180	பாலசுந்தர செட்டியார், சிருமதுரை	10
1181	டி. வாதி அப்துல்கனி சாஹிபு, பெரியஷாப்பு, பல்லாவரம்	5
1182	மதார்கான் சாஹிபு, தில்லநாயகன் பிள்ளை தெரு, பெரம்பூர்	5
1183	எம். அப்பாசாமி சேர்வை, பஜார், ராமநாதபுரம்	10
1184	திமிரி அப்துல்காதர் சாஹிபு, மேல்விஷாரம்	5
1185	என். சிவானந்தம், நேப்பியர் ரோட், மஞ்சக்குப்பம், கடலூர்	5
1186	Rm.PI.T. ராஜகோபால் பிள்ளை அண்டு கம்பெனி, மதுரை	5
1187	எம். கே. திம்மாரெட்டி, கம்பவுண்டர், சினப்பள்ளி	10
1188	டி. ரங்கராவ், ஏஜண்டு பெர்ஹாம்பூர்	10
1189	பி. கிருஷ்ணம்மா நாயுடு, ரெயில்வே ஸ்டேஷன், தெனாலி	5
1190	டோலா ரெங்கநாயகலு, சந்திரமணிபேட்டை	5

கூடுதல் தொகை 7265

கு. 25 பீடிகள் கொண்ட கட்டுகளில் நூற்றுக்கணக்கான நோட்டுகளின் பாதிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கிடைத்தவர்கள் நோட்டு நெம்பரையும் தொகையையும் சென்னை சுதேசீ பீடி பாக்டரிக்கு தெரிவித்து பாக்கி பாதி நோட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

17 - வது ஜாபிதாவை எதிர்பாருங்கள்

Printed at the "Tamil Nadu" Press, Madras. Published by T. S. Chockalingam, Editor & Proprietor, "Gandhi" Office, 29, Sembudoss St., Madras.



ஆசிரியர்: தெ. ச. சொக்கலிங்கம்

மாலை 2. { 1934 ஜனவரி 20உ
29, செம்புதாஸ் தெரு, சென்னை. } மலர் 11.

அட்டவணை.

அறுவடை காலம்

அறுவடை காலம் வந்துவிட்டது. அறுவடையை எதிர்பார்த்து ஜீவிப்பவர்கள் மூன்று வகுப்பார். 1. உழுது பயிரிடும் விவசாயி. 2. பிறரைக் கொண்டு வேலை செய்யச் சொல்லி மேல்வாரம் வாங்கி ஜீவிக்கும் நிலசுவான். 3. நிலசுவானிடம் வரி வசூலிக்கும் சர்க்கார். இவர்களில் உண்மையான அறுவடையும் லாபமும் சர்க்காருக்குத்தான்.

தானியங்களின் விலைவாசி பாதாளத்தில் விழுந்துவிட்டது. மகசூல் முழுவதையும் விற்றாலும், நிலத்தீர்வைக்கே போதாது. என்ன செய்வார்கள் நிலசுவான்கள்.

மகஜர் தயாரித்தார்கள். கூட்டம் கூடி காகிதத்தில் தீர்மானங்கள் எழுதினார்கள். பத்திரிகைகளுக்கு எழுதினார்கள். சட்டசபைப் பிரதிநிதிகளைக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதிகாரிகளை பேட்டி கண்டார்கள். சுற்றுப்பிரயாணம் செய்யும் ரெவின்யூ அதிகாரிகளுக்கு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். ஒன்றும் பயன்படவில்லை.

* * * *

எல்லா விஷயத்தையும் ஆலோசித்து "ஏதோ, பார்த்துச் செய்கிறோம்" என்றது சர்க்கார். இப்பொழுது சர்க்கார் முடிவும் வெளியாய்விட்டது.

"1918-க்குப் பிறகு நிலவரி நிர்ணயம் (செட்டில்மென்ட்) நடந்த நஞ்சைகளுக்கு நிலத்தீர்வையில் ரூபாய்க்கு 2 அணா வஜா; மற்ற ஜில்லாக்களில் $1\frac{1}{2}$ அணா." இதுதான் சர்க்கார் முடிவின் சாராம்சம்.

இவ்வளவு வஜா கொடுத்தது போதாது என்பதற்கு ஓர் உதாரணம் தருகிறோம். திருநெல்வேலி ஜில்லாவில் செட்டில்மென்டுக் கணக்கையும் தற்காலமுள்ள விலைவாசி, விவசாயச் செலவுகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

செட்டில்மென்டு கணக்கில் நெல் விலை 3200 படிக்கு 183 ரூபா விதம் போட்டிருக்கிறார்கள். (வண்டி வாடகை, வியாபாரி லாபம்

இவற்றிற்காக 100-க்கு 16-வீதம் குறைவு உண்டு.) தற்காலம் நெல்விலை 173 ரூபா. இது சர்க்காரின் ஜில்லா கெஜட்டி லுள்ள நடப்பு விலை. விவசாயச் செலவு 21-5-4 வீதம் செட்டில்மென்ட் கணக்கு. தற்காலம் ரூ. 32-15-0 ஆவது விவசாயச் செலவு ஏற்படுகிறது. இதைத் தவிர மற்ற இனங்களில் செட்டில்மென்டுக் கணக்கை ஒப்புக்கொண்டால்:—

1 ஏக்கர் நிலம்

	செட்டில்மென்ட் கணக்கு	தற்கால நிலைமையில்
மகசூல்	1200 படி	1200 படி
விலை	57-10-4	53-13-8
புல்தரிசு தண்ணீர் சேதம் 100க்கு 10வீதம்	5-12-3	5-6-2
விவசாயச் செலவு	21-15-4	32-15-0
நிலசுவானுக்குக் கிடைப்பது	29-14-9	15-8-6
அதில் சர்க்காருக்கு பாதி	14-15-4½	7-12-3
இரண்டாம் போகத்துக்கு	7-7-8¼	3-14-1½
மொத்த தீர்வை	22-8-0	11-10-4

மேலே காட்டிய கணக்குப்படி சர்க்கார் தீர்வை ரூ 22-8-0. இப்பொழுது ரூ. 0-1-6 வீதம் வஜா செய்து ரூ. 20-6-3 மட்டும் வாங்குவதாக சர்க்கார் சொல்கிறார்கள்.

விவசாயிக்கு கிடைப்பது ஒரு போகமானல் 7-12-3; இரு போக நஞ்சையானல் 15-8-6. இதிலிருந்து ரூ. 20-6-3 நில வரி செலுத்த வேண்டும்!

நிலசுவான்கள் தமது குறையை மிகைபடுத்திக் கூறுவதாக சர்க்கார் சொல்கிறார்கள். எந்த இனமய்யா அது? விவ்சாயச் செலவா? ஏக்கருக்கு ரூ. 32-15-0 விவசாயச் செலவு என்பது அதிகமா? உரமும் குழையும் வைக்காமல் திருநெல்வேலி ஜில்லாவில் நெல் விளையாது. உழவன் சம்பளத்தில்தான் மண் வைக்கவேண்டும்! இதுதான் நிலைமை.

இதை சர்க்கார் சரிவர உணர்ந்து போதிய அளவு பரிகாரம் அளிக்காதது முட்டாள்தனமே என்பதில் சந்தேகமில்லை.

* * * *

சர்க்காரின் நிலவரி முறையில் அஸ்திவாரத்திலே பெரிய தவறு இருக்கிறது. ரொக்க வருமானத்தின் மீது வருமான வரி விதிக்கி

(850-ம் பக்கம் பார்க்க)



படார்சாமி கடிதங்கள்

[படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் பகிரங்கமாகவே படார் படார் என்று வெளியிடுவார்]

சென்னை கவர்னர்
சென்னை

அன்புள்ள ஐயா,

விடிய விடிய சங்கு ஊதியும் பயனில்லை. நீர் பிடித்ததையே சாதித்து விட்டீர். விவசாயிகள் 100-க்கு 50 நிலவரியை குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். நீர் சில ஜில்லாக்களுக்கு ரூபாய்க்கு 2 அணாவும் சில ஜில்லாக்களுக்கு $1\frac{1}{2}$ அணாவும் நிறுத்திவைக்கப் போவதாக முடிவு செய்து விட்டீர். இதனால் யாருக்கு பயன்? ஏதோ நானும் கொஞ்சம் உதவி செய்தேன் என்று உமது ஆத்மாவை திருப்தி செய்வதற்காகச் செய்தீரா?

நடுத்தெரு நாராயணன்
தமிழ் நாடு

தம்பீ,

உனது நன்மைக்காகவே "காந்தி" தினசரி டிசம்பர் 20உ முதல் வெளிவருகிறது. இதுவரை உனக்கு எவ்வளவோ சொல்லியாய் விட்டது. நீ இன்னம் பூராவாக புத்தி திரும்பவில்லை. இருந்தாலும் உன் கோஷ்டியாரில் 100-க்கு 75 பேருக்கு நல்ல புத்தி வந்திருப்பதைக் கண்டு திருப்தியடைகிறேன். போட்டிப் பந்தய மோசடியிலிருந்து 75% தப்பி விட்டாலும் 25% இன்னம் அகப்பட்டிருக்கிறார்களே! அவர்களையும் திருப்பினாலல்லவா நமக்கு வெற்றி என்று சொல்லி முடியும். தேவதாஸ் காந்தி தமிழ் நாட்டிற்கு வந்திருக்கிறார். மகாத்மா காந்தி வரப்போகிறார். இவர்களிடம தந்திரமாய் பேச்சுப் பராக்கில் பேசி, அவர்கள் சொல்லுவதை தங்களுக்கு சாதகமாக போட்டிப் பத்திரிகைகள் பிரசுரிக்கலாம்.

இந்த வித்தையில் போட்டிப் பந்தயக்காரர்கள் கைதேர்ந்தவர்கள் ஆகவே, தம்பீ, அப்படி ஏதாவது நடந்தால் அதைப்பார்த்து ஏமாந்து போகாதே. எச்சரிக்கை.

—படார்சாமி.

ஸ்ரீமத் கிழவிகள்
தமிழ் நாடு,
தாய்மாரே,

கிராம வேலைகள் என்ற அபாயமில்லாத வேலைகளை உங்களிடம் ஒப்புவிப்பதாக பண்டித ஜவஹர்லால் சொல்லுகிறார். மிகவும் சரியான யோசனை. இன்றே புறப்படுங்கள். புறப்படும் போது, சில விகடப் பத்திரிகாலயங்களில் நுழைந்திருக்கும் "தேசிய" வீரர்களையும் அழைத்துக்கொண்டு போங்கள். அவர்களுக்கும் ஆபத்தில்லை, தமிழ் நாட்டைப் பிடித்த போட்டிப் பந்தயமும் தொலையும்.

—படார்சாமி.

மகாஜனங்கள்
திருநெல்வேலி
நண்பர்களே,

குருகுலம் நடைபெறவில்லை. அதன் சொத்துக்களை பொது நன்மைக்காக உபயோகிக்கவுமில்லை. ஒரு பொதுச் சொத்து இம் மாதிரி கேள்வி கேட்பாரில்லாமல் கிடக்கிறதென்றால், அது உங்கள் ஜில்லாவிற்கே அவமானம். மகாத்மா திருநெல்வேலி வரும்போது, அவரிடம் குருகுலச் சொத்துக்கள் சேரும்படி பார்க்கவேண்டியது உங்கள் கடமை.

—படார்சாமி.

ஸ்ரீ. ஜெயக்கர்
பம்பாய்
மிதவாத நண்பரே,

மகாத்மா சம்மதமில்லாமல் எந்த அரசியல் வேலையும் உருப்படாது என்று நீர் சீமையிலிருந்து வந்ததும் சொன்னீர். சீமையில் உமது சாமர்த்தியங்களை யெல்லாம் காட்டிய பின்பே நீர் இந்த முடிவிற்கு வந்திருக்கிறீர். ஐயோ, இத்தனை வருஷங்களும் உமது வாழ்நாளில் வீண் நாட்களாக போய்விட்டனவே இந்த உண்மை உமக்கு முன்பே தெரிந்திருக்கக்கூடாதா? போனது போகட்டும். இனியுள்ள உமது வாழ்நாட்களையாவது வீணாக்காமல் செய்ய உமக்கு கண் திறந்திருக்கிறதா? மகாத்மா ஒப்புக்

கொள்ளாத எந்த ராஜீய வேலையிலும் பிரவேசிப்பதில்லை யென்று இப்பொழுதாவது திடமாய் முடிவு செய்திருக்கிறீரா?

பட்டார்சாமி—

ஜீயர் சுவாமிகள்
அஹோபில மடம்
சுவாமிகளே,

மதத்தில் சர்க்கார் தலையிடக் கூடாதென்றும், ஆலயப் பிரவேச மசோதாவை சட்டமாக்கினால் மதத்தில் தலை யிடுவதாகுமென்றும் நீர் வைசிராய்க்கு எழுதி யிருக்கிறீர். சபாஷ். உமது மதத்தைக் காப்பதற்கு அன்னிய மதத்தினராகிய வெள்ளையரிடம்போய் அடைக்கலம் புகவேண்டிய நிலைமையிலிருக்கிறீர். இந்த மானக்கேடான நிலைமை உமக்கு ஏன் தெரியவில்லை? மற்ற "மதஸ்தர்கள் அடங்கிய சட்ட சபைக்கு அதிகார மில்லையென்றால், வைசிராய்க்கு மட்டும் எப்படி அதிகாரம் வந்துவிடும்? இந்துக்களில் மெஜாரிட்டியார் ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவா யிருந்தால், அதைத் தடுக்க உமக்கு என்ன அதிகாரமிருக்கிறது?

—பட்டார்சாமி

(847-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களே அதே முறைதான் இதிலும் கையாளவேண்டும். 1000-ரூபாய்க்கு குறைந்த வருமானத்தின்மீது தீர்வை கிடையாது; 1000-ரூபாய் வருமானமிருந்தால் ரூபாய்க்கு 5 தம்பிடி; 8000 ரூபாய் இருந்தால் ரூபாய்க்கு $11\frac{1}{4}$ தம்பிடி.


இதே முறை நிலத்தீர்வை விஷயத்திலும் கொண்டுவரவேண்டும். மிகவும் குறைந்த நிலம் வைத்துக்கொண்டு அதில் பாடுபட்டு அரை வயிறு வளர்ப்பவன்மீது தீர்வை இருக்கக்கூடாது. பட்டாதாரின் நிலம் அதிகமா யிருப்பதற்குத் தக்கபடி வரி விகிதம் உயர வேண்டும். 5 ஏக்கர் நிலசுவானுக்கும் ஏக்கருக்கு 10 ரூ. வீதம், 500-ஏக்கர் நிலசுவானுக்கும் ஏக்கருக்கு 10 ரூ. வீதம் என்ற முறையை சீக்கிரமாக மாற்றவேண்டும்.

நிலத்தில் இறங்கி வேர்வை சிந்திப் பாடுபடுகிற விவசாயிக்கும், பாடுபடாமல் வீட்டில் இருக்கும் வெள்ளை வேட்டிக்கார நிலசுவானுக்கும் வரி விகிதத்தில் வித்தியாசம் இருக்கவேண்டும்.

நிலசுவான் நிலத்தின் பட்டாவை வைத்து ஜீவிக்கிறவன், தன் நிலத்தைப் பயிரிடுகிறவனுக்கு எவ்வளவு பாகம் கொடுக்கவேண்டுமென்பதை நிர்ணயிக்க சில ஏற்பாடுகள் செய்ய வேண்டியதும் அவசியம்.



உங்களுக்குத் தெரியுமா?



ஜெயங்கொண்ட பசு!

1931-ம் வருஷத்தில் அமெரிக்காவில் காட்வெல் என்ற இடத்தில் விவசாயக் காட்சி நடைபெற்றது. அச்சமயம் நடந்த பசுக்காட்சியில் முதல் பரிசு எதற்குக் கொடுக்கலாம் என்று பார்வையிட்டார்கள். வரிசையாக எல்லா பசுக்களும் நின்றன. அவற்றிலே ஒரு ஜெர்ஸி பசு மிக அழகாயும், புஷ்டியாயுமிருந்தது. ஜட்ஜ் அதற்கே முதல் பரிசு வழங்கினார். அந்தப் பசு யாருடையது என்று விசாரிக்கப் போனால், சொந்தக்காரனையே காணவில்லை. காட்சி சாலைக்கு பக்கத்திலுள்ள வயலில் மேய்ந்துகொண்டிருந்தது. காட்சிசாலையில் ஏராளமாய் தன் கூட்டத்தார் இருப்பதைப் பார்த்ததும் யாரிடமும் கேட்காமல் உள்ளே நுழைந்துவிட்டது. "வந்தது, பார்த்தது, ஜெயித்தது". முதல் பரிசு அதற்குக் கிடைத்ததும், காட்சி சாலைக்கு அநுமதி பெற்று அதை யாரும் அழைத்

வாவில்லையென்று சிலர் ஆட்சேபனை செய்தார்கள். ஜட்ஜ் தமது தீர்ப்பை மாற்றமுடியாதென்று கூறிவிட்டார். பசுவின் சொந்தக்காரன் பசுவோடு பரிசுப் பணமும் பெற்று வீடு சென்றான்.

திருட்டு தர்மவான் தெரியுமா?

ஜெர்மனியில் 1402-ல் நிக்கலஸ் ஸ்டோர்டி பெக்கர் என்றொரு பலே கொள்ளைக்காரன் இருந்தான். அவனை வெகு காலம் பிடிக்க முடியவில்லை. கடைசியாக சர்க்கார் அவனைப்பிடித்து மரண தண்டனை விதித்தார்கள். அச்சமயம் அவனிடம் ஏராளமாக பணமிருந்தது. சாகு முன்பு தன்னுடைய செல்வம் இருக்குமிடத்தைச் சொல்லி அதை எப்படிச் செலவிடவேண்டுமென்று கூறினான். அதாவது வெர்டன் என்ற பட்டணத்திலுள்ள சகல ஏழைகளுக்கும், வருஷத்திற்கு ஒரு முறை ஒவ்வொருவருக்கும் ஒரு ரொட்டியும் 6 மீன்களும் கொடுக்கவேண்டுமென்று சொன்னான். அந்த தர்மம் இன்றும் நடந்து வருகிறது.



நாவிதச் சிலந்தி!

ஆப்பிரிக்கா தேசத்திலே ஒரு சிலந்தி யிருக்கிறது. ஒருவன் தூங்கிக்கொண்டிருக்கும்போது அந்த சிலந்தி வந்தால், அவன் கொஞ்சங்கூட உணர முடியாத விதத்தில் தலையிலும் முகத்திலுமுள்ள ரோமங்களை பூராவாக அகற்றிவிடும்.



ஜப்பானியர் சமத்து

"எங்கள் துணிகள் மீது வரியை உயர்த்தி இறக்குமதியைத் தடுக்கிறீர்களா? அப்படியானல் உங்கள் நாட்டுப் பருத்தி நிலசுவான்களை நான் பகிஷ்கரித்து விடுகிறேன். இப்பொழுது உங்கள் பஞ்சு உற்பத்தியில் கால்வாசியை நான் வாங்குவதை இனிமேல் நிறுத்திவிடுகிறேன்." என்று பயமுறுத்தியது ஜப்பான்.

சுதேசியத்தை ஆதரிக்கும் ஓர் அரசாங்கம், தைரியமாக நடக்கக்கூடிய ஓர் அரசாங்கம், ஜனங்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் சந்தேகமில்லாமல் எதிர்பார்க்கக்கூடிய அரசாங்கம், இங்கு இருந்தால் என்ன செய்திருக்கும்?

"உன் துணி ஒரு கஜம்கூட இங்கு வரவேண்டியதில்லை. எங்கள் பருத்தி உனக்கு மிகவும் அவசியம் என்பது எங்களுக்குத் தெரியும்; ஆனல் எங்கள் பஞ்சு நீ வேண்டுமென்று கேட்டாலும் தரமாட்டோம். வெளி நாட்டிலிருந்து இங்கு இறக்குமதியாகும் பருத்தியையும் துணியையும் நிறுத்திவிட்டால் பஞ்சு விற்கவில்லையே என்று நாங்கள் கவலைப்பட வேண்டியதே இல்லை" என்று சொல்லியிருக்கும்.

அவ்வாறு சொல்வதற்கு இந்த பிரிட்டிஷ் இந்திய சர்க்காரால் முடியாது. அவ்வளவு மனத் துணிவும் கிடையாது; பிரிட்டிஷ் நலமும் குறுக்கிடும்.

ஆகையால் இந்திய சர்க்காரும், ஜப்பானிய சர்க்காரும் சமரசப் பேச்சு நடத்தினர்கள். அதன் முடிவு:—(1) இந்தியாவிலிருந்து 1-ராத்தல் பருத்திகூட வாங்காமல் ஜப்பான் 1250 லக்ஷம் கஜம் துணி இங்கு இறக்குமதி செய்யலாம். (2) 10 லக்ஷம் பேல் பஞ்சு வாங்கிக்கொண்டு 3250 லக்ஷம் கஜம் இறக்குமதி செய்யலாம். (3) 15 லக்ஷம் பேல் பஞ்சு வாங்கினல் 4000 லக்ஷம் கஜம் இறக்குமதி செய்யலாம்.

இந்திய நிலசுவானைக் காப்பாற்றுவதற்காகவே இவ்வொப்பந்தப் பேச்சு ஏற்பட்டது. ஆனல் ஒரு மூட்டைப் பருத்தியும் வாங்காமலே ஜப்பான் 1250-லக்ஷம் கஜம் துணி இறக்குமதி செய்யலாம் என்று ஒப்புக்கொண்டிருப்பதால் நிலசுவான்களை சர்க்கார் ஓரளவு மறந்து விட்டதாகவே கொள்ளலாம். ஒரு நிர்ப்பந்தமுமில்லாமல் 1250 லக்ஷம் கஜம் துணி இறக்குமதி செய்ய சௌகரிய மேற்படுத்திக்கொண்ட ஜப்பானியரின் சாமர்த்தியமே சாமர்த்தியம்!

மில் முதலாளிகள் சம்பந்தப்பட்ட மட்டிலும ஜப்பானியப் போட்டியை நீக்குவதற்கு எவ்வித சவுகரியமும் ஏற்படவில்லை. ஜப்பான் நாணயமாற்று சாதாரணமாக இருந்த காலத்தில் ஜப்பான் 3250 லக்ஷம் கஜம் இறக்குமதி செய்தது. இனிமேலும் 4000 கஜம் வரை இறக்குமதி செய்யலாம். ஆகையால் மில்காரருக்கு லாப மில்லை.

பழுப்பு, வெள்ளை, சாயம் என்ற மூன்று முக்கியமான ரகங்களில் பிரிட்டன் அதிகமாக இறக்குமதி செய்வது, வெள்ளை ரகம். இதில் பிரிட்டன் 1931-32ல் 2070 லக்ஷம் கஜமும் ஜப்பான் 600-லக்ஷம் கஜமும் இறக்குமதி செய்தது. இந்த இனத்தில் இனிமேல் ஜப்பான் சாதாரணமாக 325 லக்ஷம் கஜம்தான் இறக்குமதி செய்யலாம். ஆகவே பிரிட்டிஷாரின் நன்மையை ஒப்பந்தம் மறந்து விட வில்லையென்று தெரிகிறது.

லங்காஷயர் மாஞ்சஸ்டர் மில்காரர்கள் இந்திய மில்காரர்களுடன் சில ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்திய மில் காரர்களின் பேச்சுக்கு கவுரவம் கொடுப்பதாகச் சொல்லி சர்க்கார் அந்த ஒப்பந்தத்தையும் உறுதிசெய்துவிட்டால் பிரிட்டிஷ் இறக்குமதியும் அப்படியே இருக்கும். ஆகவே இந்திய மக்களின் சுதேசியக் கொள்கைக்கு சர்க்கார் ஆதரவு இல்லை.

கைத் தறிக்காரர்கள் நிலைமையையும் கவனிக்கப் போவதாக சர்க்கார் கூறினார்கள். அவர்களுக்கு நன்மை யளிக்கும்படியான ஷரத்து இவ் வொப்பந்தத்தில் என்ன இருக்கிறதோ. பூதக் கண்ணாடி வைத்துத்தான் பார்க்கவேண்டும்.

இந்த நெருக்கடியை வைத்துக்கொண்டாவது பம்பாய் மில் நிர்வாகத்தை சீர்திருத்த ஏதாவது முயற்சி நடத்தியிருக்கலாம். பம்பாய் மில்களில் மானேஜிங் ஏஜெண்டு கமிஷனும் மற்ற நிர்வாகச் செலவும் அதிகமாக இருப்பது தான் அவர்கள் துணி விலை அதிகமாயிருப்பதற்கு முக்கியமான காரணம் இந்த ஊழலை நிவர்த்தி செய்வதற்கு ஏற்பட்ட ஓர் நல்ல சந்தர்ப்பம் வீணாய்ப் போய்விட்டது.

இவையே ஜப்பானிய ஜவுளி ஒப்பந்தத்தின் முக்கியமான அம்சங்கள். சென்ற நவம்பர் மாதத்தில் வெளியான "காந்தி மலரில்" "காட்டன் பீல்ட்" என்ற ஓர் வியாசம் இருக்கிறது. அதிலுள்ள சில விஷயங்களை நண்பர்கள் ஞாபகப் படுத்திக் கொள்ளலாம்.

காதல் குற்றமா ?

[காந்தி மலர் வாசகர்களுக்கு "பாரதி தாஸன்" அவர்களைத் தெரியாமலிருக்கலாம். பாரதி தாஸன் புதுச்சேரி வாஸி. அவர் சுப்ரமணிய பாரதியாருடன் பல ஆண்டுகள் பழகியவர். பாரதியாரின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் மதிப்பையும் மிகுதியும் பெற்றவர். பாரதி தாஸன் இயற்கை ஆவேசத்தைக் கொண்ட அரிய கவி. காந்தி மலரில் அவரது இனிமையும் வலிமையும் கூடிய கவிதையை, இனிக் காணலாம். ப—ர்.]

(பாரதி தாஸன்)

தோட்டத்து வாசல் திறந்திருக்கும்—தினம்
சொர்ணம் வந்தால் கொஞ்ச நேரமட்டும்
வீட்டுக்கதைகளைப் பேசிடுவாள்—பின்பு
வீடு செல்வாள். இது வாடிக்கையாம்.
சேட்டுக் கடையினிற் பட்டுத்துணி—வாங்கச்
சென்றனள் சுந்தரன் தாய் ஒருநாள்
பாட்டுச் சுவைமொழிச் சொர்ணம்வந்தாள்—வீட்டிற்
பாடம் படித்திருந்தான் இளையோன்.

கூடத்திலே மனப் பாடத்திலே—விழி
கூடிக்கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினல்—அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்த விழி—தனிற்
பட்டுத் தெறித்தது மானின்விழி !
ஆடைதிருத்தி நின்ருள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்ருன்.

தன்னந்தனிப்பட என்னை விட்டே—பெற்ற
தாயும் கடைக்கு நடந்து விட்டாள்.
இன்னும் உண்டோ அங்கு வேலை என்ருன்—சொர்ணம்
ஏறிட்டுப் பார்த்தாள். கூறுகின்ருள்:
தன்னந் தனிப்பட நீ யிருந்தாய்—எந்தத்
தையல் உன் பொன்உடல் அள்ளிவிட்டாள்
என்றனள். சுந்தரன் என்னுள்ளத்தைக்—கள்ளி!
எட்டிப் பறித்தவள் நீ என்றனன்.

உள்ளம் பறித்தது கண் என்பதும்—என்றன்
உயிர் பறித்தது நீ என்பதும்
இள்ளி உறிஞ்சிடும் மாமலர்த்தேன்—இன்பக்
கேணியிற் கண்டிட வேணுமென்றாள்
துள்ளி எழுந்தனன் சுந்தரன்தான்—பசுந்
தோகை பறந்தனள் காதலன்மேல்
வெள்ளத்தினோடொரு வெள்ளமுமாய்—நல்ல
வீணையும் நாதமும் ஆகிவிட்டார்.

சாதலும் வாழ்தலும் அற்ற இடம்—அணுச்
சஞ்சல மேனும் இல்லாத இடம்
மோதலும் மேவலும் அற்ற இடம்—உளம்
மொய்த்தலும் நீங்கலும் அற்ற இடம்
காதல் உணர்வெனும் லோகத்திலே—அவர்
காணல் நினைத்தல் தவிர்ந்திருந்தார்.
சூதற்ற சுந்தரன் தாயும் வந்தாள்—அங்குச்
சொர்ணத்தின் தாயும் புகுந்துவிட்டாள்.

பெற்ற இளந்தலைக் கைம்பெண்ணடி!—என்ன
பேதமை? என்றனள் மங்கையின் தாய்.
சிற்சில ஆண்டுகள் முற்படவே—ஒரு
சின்ன குழந்தையை நீ மணந்தாய்
குற்றம் புரிந்தனை இவ்விடத்தே—அலங்
கோலமென்றாள் அந்தச் சுந்தரன் தாய்;
புற்றரவொத்தது தாயார் உள்ளம்! அங்குப்
புன்னகை கொண்டது மூடத்தனம்!

குற்றமறுத்திடக் காரணங்கள்—ஒரு
கோடியிருக்கையில் காதலர்கள்
கற்றவை யாவையும் உள்ளத்திலே—வைத்துக்
கண்ணிற் பெருக்கினர் நீரருவி!
சற்றிது கேளுங்கள் நாட்டினரே!—பரி
தாபச் சரித்திரம் மானிடரே!
ஒற்றைப் பெரும்புகழ்த் தாயகமே!—இந்த
ஊமைகள் செய்ததில் தீமையுண்டோ?

வோட்டர்கள் உறங்கினால்

(தத்தன்)

அராஜகம் என்ற வார்த்தைக்கு இப்பொழுது "குழப்பம்" என்பதே அர்த்தமாக இருக்கிறது. அரசன், அரசாட்சி ஒன்றுமே இல்லாமல் சமூக வளர்ச்சி ஏற்படக்கூடிய உயர்ந்த நிலைமைக்கு இன்னும் மனித வர்க்கம் தயாராகவில்லை. ஆகையால் அரசுரிமை என்ற ஓர் அம்சம் இருந்தே ஆகவேண்டியிருக்கிறது,

தனி மனிதன் ஒருவனிடமும், அவனது பரம்பரையினும் இருந்துவந்த அரசுரிமையை பொது ஜனங்களிடையே பாகம் செய்து கொடுப்பதே ஜனநாயக ஆட்சியாகும். இவ்வாறு அரசுரிமையில் ஒவ்வொருவனுக்கும் அளிக்கப்படும் பாகமே "வோட்" எனப்படுகிறது. "வோட்" ராஜலட்சுமியின் அம்சம்.

இந்த லக்ஷ்மியை அவமானம் செய்வதும் (காசுக்குகோ வேறு எதற்கோ விற்பது) அலக்ஷியம் செய்வதும் (உபயோகிக்காமல் அசிரத்தை காட்டுவதும்) ராஜலக்ஷ்மியை தம்மிடமிருந்து துரத்துவதாகும். அப்பொழுது சில தனி மனிதர்களிடமோ, சில கூட்டங்களின் கையிலோ அரசுரிமை சிக்கிவிடும்.

வோட்டர்கள் தமது உரிமையையும் கடமையையும் மறக்கும் போது என்ன நிலைமை ஏற்படக்கூடும் என்பதற்கு அமெரிக்காவிலுள்ள ஒரு உதாரணத்தை இங்கு தருகிறோம்.

முடியரசர் ஆதிக்கத்தில் அதிக காலம் இருக்காத ஒரு பெரிய நாடு அமெரிக்கா. "வோட்டில்லையானால் வரி செலுத்தும் கடமையுமில்லை" யென்ற கொள்கையுடன் அமெரிக்கா தன் சுதந்தர யுத்தத்தை ஆரம்பித்தது. "பொது ஜனங்களால் பொது ஜனங்களின் நன்மைக்காக நடத்தப்படும் ஆட்சியே" உத்தமமான ஆட்சியென்ற கொள்கையை அமெரிக்காவின் பிரதிநிதியாக அப்ரஹாம் லிங்கன் உலகத்துக்குக் கொடுத்து உதவினான். இதே அமெரிக்காவில் ஜனநாயக முறை இன்று எப்படியிருக்கிறது ?


ஒரு சில தனி மனிதர்கள் தமது சொந்த லாபத்துக்காக பல அரசியல் ஸ்தாபனங்களைக் கைப்பற்றி பொது ஜனங்களின் வரிப் பணத்தைச் சூறையாடுகிறார்கள்.

தற்காலம் நம் நாட்டில் ஸ்தல ஸ்தாபனங்களில் மட்டுமே ஓரளவு ஜனநாயக முறையும் பொறுப்பும் இருக்கிறது. ஆகவே அமெ

ரிக்கக் குடியரசு ராஜ்ஜியத்திலுள்ள ஓர் நகர சபையின் நிர்வாகத்தைப் பற்றி மட்டிலும் இங்கு பிரஸ்தாபிக்கலாம்.

சில காலமாக ஆங்கில அகராதியில் ஒரு புதிய வார்த்தையொன்று சேர்ந்திருக்கிறது. அது தான் "டாம்மனி" என்ற வார்த்தை. "டாம்மனியிஸம்" (டாம்மனீயம்) என்றால் லஞ்சம், மோசடி, சலுகை, பொதுப் பணத்தைச் சூறையாடுவது, தவறான வழியில் தவறான உத்தேசங்களுக்காக பொது ஸ்தாபனங்களைக் கைப்பற்றுவது என்றெல்லாம் அர்த்தம்.

தர்ம ஸ்தாபனம்



டாம்மனி சங்கம் என்பது நியூயார்க் நகரத்தில் உள்ள ஒரு சங்கம். அமெரிக்க சுதந்தரப் போர் நடந்த காலத்தில் இது ஏற்பட்டது. இந்தச் சங்கம் ஆரம்பித்தபோது அதற்கும் அரசியலுக்கும் விசேஷ சம்பந்தம் கிடையாது. பரஸ்பர சகாயம், ஒத்துழைப்பு, சகோதரத்துவம், பரோபகாரம் முதலிய உயர்ந்த நோக்கத்துடன் இந்தச் சங்கம் ஆரம்பமாயிற்று. அயல் நாட்டிலிருந்து அமெரிக்காவில் வந்து குடியேறுகிறவர்களுக்கும், வேறு அனாதைகளுக்கும் உதவி செய்யும் ஓர் தர்ம ஸ்தாபனமாக இது 1789-ம் வருஷம் முதல் நன்றாக வேலை செய்து வந்தது. இந்த ஸ்தாபனத்தின் காரியாலயத்துக்கு டாம்மனி மண்டபம் என்று பெயர்.

அரசியல் வேலை

1800-ம் வருஷத்தில் தான் இது அரசியலில் கலந்து கொண்டது. அப்பொழுது நடந்த தேர்தலில் இந்தச் சங்கத்தினர் மும்மரமாக வேலை செய்தனர். "இன்னார் சரியான பிரதிநிதி, அவருக்கு வோட்டுக் கொடுங்கள்" என்று இந்த சங்கம் யோசனை சொல்லும். இவர்கள் பல ஏழைகளுக்கு ஆபத்துக் காலத்தில்

உதவி செய்து வந்ததால் இவர்களுடைய சொல்லுக்கு பொது ஜனங்கள் மதிப்புக் கொடுத்து வந்தார்கள். வெளி நாடுகளிலிருந்து குடியேறினவர்களும் இந்த சங்கத்தினிடம் அதிக மதிப்பு வைத்திருந்தார்கள். இது காரணமாக நியூயார்க் நகர சபையில் டாம்மனியின் செல்வாக்கு வளர்ந்து கொண்டே வந்தது. டாம்மனி யாரை ஆதரிக்கிறதோ அவரே நியூயார்க் நகர சபையில் ஸ்தானம் பெற முடியும் என்ற நிலைமை ஏற்பட்டது.

சுய நலக்காரர் வேட்டை

டாம்மனிக்காரர் தயவில்லாமல் ஒருவனும் நியூயார்க் நகரசபையில் ஸ்தானம் பெற முடியாது. ஆகையால் நியூயார்க் முனிசிபல் சபையின் பணமும் அதிகாரமும் டாம்மனியின் கையில் சிக்கியது. டாம்மனி கும்பலில் உண்மையாகத் திறமையுள்ளவர்கள் சிலர் இருப்பார்கள். அவர்களை யெல்லாம் சேர்த்து கூட்டுக் கொள்ளைக்குத் தயார் செய்யக்கூடியவன் ஒருவன் இருப்பான். அவன்தான் எல்லோருக்கும் ராஜா. நகரசபைக்கும் இவனே ராஜா. அவனிட்டது சட்டம் என்றாயிற்று.

நியூயார்க் நகரசபையின் கையில் வசூலாகும் பணம் கிட்டத்திட்ட நம் தேசத்தில் ஒரு மாகாணச் சர்க்காரின் வரி வசூலுக்கு சமமாக இருக்கும். லக்ஷக்கணக்கான டாலர்கள் ரஸ்தாக்களிலும், கட்டிடங்களிலும், தண்ணீர் குழாயிலும் ஜலதாரைகளிலும் செலவிடவேண்டி யிருக்கும்.

பெரிய வர்த்தகர்கள் தமக்கு இந்தக் காண்டிராக்டுகள் கிடைக்க வேண்டுமென்று நினைப்பது சகஜம். காண்டிராக்ட் கிடைக்க வேண்டுமென்றால் நகரசபையில் ஆதிக்கம் பெற்றவர்களைப் பிடிக்க வேண்டும். இவர்களைப் பிடிக்கவேண்டுமாயின் இவர்களை ஆட்டி வைக்கும் "யந்திரம்" இருக்கிறதே அதைப் பிடிக்கவேண்டும். அவ்வளவுதான்; 100 டாலர் செலவாகக்கூடிய வேலையை 500 டாலர் என்று கண்டிராக்ட் பேசுவது. நகரசபையில் 500 டாலரை வாங்கி 100 டாலருக்கு வேலை செய்துவிட்டு, 300 டாலரை கட்சியந்திரத்துக்குக் கொடுப்பது. இதுவே நியூயார்க் நகரசபையின் போக்காக ஆய்விட்டது. நியூயார்க் நகரத்துக்கு டாம்மனி மண்டபமே "முதலாளி". நகரசபைக்கு மட்டுமல்ல, நியூயார்க் மாகாண சர்க்காருக்கும், பின்னர் அகில அமெரிக்க சர்க்காருக்குங்கூட பிரதிநிதிகள் டாம்மனியின் தயவையே எதிர்பார்க்கும்படி ஏற்பட்டது.

கொள்ளை!

டாம்மனியின் ஆபாசங்கள் முதல்முதலாக வெளித்தோன்றி

யது 1869-ல் தான். நியூயார்க் மாகாணத்துக்கு ஒரு டாம்மனி ஆசாமியே கவர்னராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது டாம்மனி யந்திரத்தின் தலைவர் "யஜமான்" வில்லியம் டுவீட் என்பவர்.

இவர் காலத்தில் நியூயார்க் நகரசபையின் பணம் ஏகமாகக் கொள்ளையடிக்கப்பட்டது. நகரசபைக்கு ஒரு மண்டபம் கட்ட வேண்டுமென்று 1868-ல் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. 250,000 டாலர் அதற்குச் செலவாகுமென்று மதிப்பிட்டிருந்தது.

1869-ல் டுவீட் டாம்மனி "யஜமானு"ன பின்பு அது கட்டப் பட்டது. கட்டிடம் வேலை முடிந்தபின் கணக்குப் பார்த்தால் 15,000,000 டாலர் செலவாயிருந்தது. திட்டம் போட்டதற்குமேல் 60 மடங்கு!!

நாற்காலி மேஜை 1¾ லக்ஷம் டாலர்

150 லக்ஷம் டாலர் எப்படிச் செலவாயிற்று? கட்டிடம் முடிவதற்குள்ளாகவே அதைப் பழுது பார்ப்பதற்காக 1,149,874 டாலருக்கு ஒரு பில் அனுமதிக்கப்பட்டது. நாற்பது நாற்காலிக்கும், 3 மேஜைக்குமாக 179,729 டாலர் செலவு. ஒரு நாற்காலிக்கு 470 டாலர் செலவிடப்பட்டதாக ஒரு கணக்கு. உஷ்ணம் காட்டும் கருவி (தெர்மாமிட்டர்)களுக்காக 7500 டாலர். ஒரு தச்சாசாரிக்கு மட்டும் 360,747 டாலர் இந்த வேலையில் கிடைத்ததாம். சுவர்கள் சுண்ணம்பு பூசுவதற்கு 2,870,464 டாலர். தரையில் ஜமக்காளம் விரிக்க 300,000 டாலர் இந்த சாமான்களில் பல நியூயார்க்கில் புதிதாக ஏற்பட்ட ஒரு ஹோட்டலில் இருந்ததாம். அந்த ஹோட்டல் சொந்தக்காரர் டுவீடின் மகன்!!

100-க்கு 20 கமிஷன்

இந்த 150 லக்ஷம் டாலரில் சுமார் 5-ல் ஒரு பாகம் கண்டிராக்டரிடமிருந்து டுவீடுக்குக் கமிஷனுகக் கிடைத்தது. கண்டிராக்டர்களைக் கொண்டு பொய் பில்களும், ஒரு சாமானுக்கு இரண்டு மூன்று பில்களும் அனுப்பும்படி செய்வது. அவற்றையெல்லாம் நகரசபையில் அனுமதிப்பது. கண்டிராக்டர்களுக்கு நியாயமாகக் கொடுக்கவேண்டிய லாபத்தைக் கொடுத்துவிட்டு மீதத்தை டுவீடுக்குக் கொடுத்துவிடுவது. அவர் தன்னுடைய கூட்டுக்கொள்ளை நண்பர்களுக்கு சிறிது பங்கிட்டுக் கொடுத்து மீதத்தை தனக்கு வைத்துக்கொள்வது.

செனேட் மெம்பருக்கு லஞ்சம்

இந்த வருமானத்திலிருந்து அமெரிக்க குடியரசு நிர்வாக சபையில் 4 பேர்களுக்கு தலா 40,000 டாலர் லஞ்சம் கொடுத்ததாக டுவிடே பின்னுல் ஒப்புக்கொண்டார். டாம்மனி கோஷ்டியார் தமக்கு வேண்டியவர்களை சட்டசபைக்கு அனுப்புவதற்காக தேர்தலிலும் இதில் ஒரு பாகம் செலவிடப்பட்டது.

யாராவது இதைப் பற்றியெல்லாம் டுவீடம் கேட்டால் "ஆமாம் அப்படித்தான் செய்வேன், நீ என்ன செய்துவிடமுடியும்?" என்று பதில் சொல்லுவார். கடைசியாக நியூயார்க் "டைம்ஸ்" என்ற பத்திரிகை இதைப்பற்றி பகிரங்கமாக சில உண்மைகளை எழுதிற்று. தாமஸ் நாஸ்ட் என்பவர் "ஹார்ப்பர்" என்ற பத்திரிகையில் இந்த ஊழல்களைப்பற்றி கூடார்த்தப்படங்கள் எழுதினுர். அவற்றில் டாம்மனியை ஒரு புலியாக அவர் வரைவது வழக்கம். இன்றும் "டாம்மனிப்புலி" என்ற பெயர் இருந்து வருகிறது.

"பத்திரிகைகளில் நீங்கள் எழுதும் வியாசங்களைப்பற்றி எனக்கு பயமில்லை. என் வோட்டர்கள் அவற்றைப் படிக்கப்போவதில்லை. ஆனுல் இந்தப்படங்களை அவர்கள் பார்க்காமல் போவார்களா?" என்று டுவிட் கூறினுராம். டாம்மனிப்புலி நடுக்கமுற்றது.

கடைசியாக சர்க்கார் டுவீடை 1872 ல் கைதி செய்து தண்டித்தனர். 1876 ல் அவர் கைதியாகவே இறந்ததாகத் தெரிகிறது.

டாம்மனி சாகவில்லை

1872 ல் டாம்மனி மடிந்து போனதாகச் சிலர் நினைத்தார்கள். ஆனுல் அது சாகவில்லை. 1874 ல் மறுபடியும் நியூயார்க் நகரில் அது ஆதிக்கமடைந்தது.

1886 ல் ரிச்சர்ட் கிரோக்கர் என்பவர் டாம்மனி "யஜமானு"ஞர். அவர் சூதாட்டக்கடை வைத்திருந்தவர். இவர் நியூயார்க் நகரத்துக்குத் தலைவரானுர். நியூயார்க்கில் சூதாட்டக்கடைகள் 600 இருந்தன. ஒவ்வொன்றிலிருந்தும் குரோக்கருக்கு மாதம் 1500 டாலர் கப்பம். விபசார விடுதிகள் அங்குள்ள விலைமாது ஒவ்வொருத்திக்கும் 25 முதல் 50 டாலர் வீதம் குரோக்கருக்கு லஞ்சம் கொடுக்கவேண்டும். போலீஸ் உத்தியோகஸ்தருக்கு உத்தியோக உயர்வு வேண்டுமானுல் 15,000 டாலர் இவருக்குச் செலுத்த வேண்டும். முனிசிபாலிட்டியில் ஏதாவது வேண்டுமானுல் மனு

வுடன் 25 டாலர் இவரிடம் கொடுக்கவேண்டும். டாம்மனிக்கு வோட்டுக் கொடுத்தவர்களுக்குத் தான் வேலை கிடைக்கும்.

இதுதான் இவருடைய தர்பார். சுமார் 15 வருஷ காலம் இவர் டாம்மனி "யஜமான்" பதவியில் இருந்தார்.

அதன் பிறகும் டாம்மனியின் ஆதிக்கமே இருந்துவந்தது. இப்பொழுது 15 வருஷ காலமாக டாம்மனியின் கையிலேயே நியூயார்க் இருந்துவந்தது.

டாம்மனியும் ரூஸ்வெல்டும்

டாம்மனிஹால் என்ற கட்டிடம் நியூயார்க் நகரில் மட்டும்தான் இருக்கிறது. ஆனால் அதன் ஆதிக்கம் அமெரிக்கா முழுவதும் இருக்கிறதென்றே சொல்லலாம். தற்காலம் அமெரிக்காவில் குடியரசுத் தலைவராக விளங்கும் "ரூஸ்வெல்ட்" ஜனநாயகக் கட்சி (டிமோக்ராடிக்)யைச் சேர்ந்தவர்.

ஆனால் டிமோக்ராடிக் கட்சியின் "யந்திரம்" எது? டாம்மனி தான். நியூயார்க் மாகாணத்தில் ஜனநாயகக் கட்சிக்குப் பிரதிநிதியாக வோட்டுக் கிடைக்கவேண்டுமானால் டாம்மனியின் தயவு தான் வேண்டும். குடியரசுத்தலைவராக வருவதற்கு முன் ரூஸ்வெல்ட் நியூயார்க் மாகாணத்தில் கவர்னராக இருந்தார். அப்பொழுது அவர் டாம்மனியின் தயவில் உத்தியோகம் பெற்றவர்தான்.

டாம்மனியின் தவறான முறைகளில் அவருக்கு மிகுந்த வெறுப்பு உண்டு. ஆனால் அதை எதிர்த்து அவர் ஒன்றும் அப்பொழுது செய்யமுடியவில்லை. குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு அவர் ஜனநாயகக்கட்சிப் பிரதிநிதியாகவே நின்றார். நியூயார்க் மாகாணத்தில் டாம்மனி இவரை ஆதரித்தது. "இவர் டாம்மனியைச் சேர்ந்தவர்" என்று இவருக்கு மற்ற மாகாணங்களில் எதிர்ப்பிரசாரமும் நடந்தது. இவர் குடியரசுத் தலைவராக வந்ததற்கு "டாம்மனி"யும் ஒருவாறு காரணமாக இருந்ததாயினும் இப்பொழுது டாம்மனியை நசுக்குவதில் இவர் சிரத்தை காட்டுவதாகத் தெரிகிறது.

1900க்குப் பின் டாம்மனியை சுத்தப்படுத்தி நியூயார்க் நகரசபை நிர்வாகத்தை சீர்ப்படுத்தப் பல முயற்சிகள் நடந்தன. டாம்மனியின் தலைமையை வகித்த சிலரும் இந்தத் துறையில் பாடு பட்டார்கள். ஆனாலும் டாம்மனியின் ஊழல்களும் அதனால் ஏற்

பட்ட அபக்கியாதியும் நீங்கவில்லை. அதன் ஆதிக்கமும் குறைய வில்லை.



டாம்மனிப் புலிக்கு அபஜயம்

இந்த வருஷம் டாம்மனிக்கு ஒரு தோல்வி ஏற்பட்டிருக்கிறது. ஜன நாயகக் கட்சியிலேயே பலர் டாம்மனிக்கு விரோதமாகக் கிளம்பினார்கள். டாம்மனி நியூயார்க் மேயர்பதவிக்கு நிறுத்தியவர் தேர்தலில் தோல்வியடைந்தார். ஏற்கனவே டாம்மனியின் கையிலேயே நிர்வாகம் இருந்துவந்ததால் நகரத்தில் பலர் அதற்கு கட்டுப்பட்டவர்களா யிருந்தார்கள்.

அப்படியிருந்தும் சென்ற நவம்பர் மாதத்தில் நடந்த நகர சபைத் தேர்தலில் டாம்மனிப் பிரதிநிதி தோற்றுப் போனார். இவருக்குப் போட்டியாக நின்றவர் ஒருவருக்கு ரூஸ்வெல்டின் நண்பர்கள் பக்கபலமாக நின்று வோட் சம்பாதித்துக்கொடுத்தார்கள்.

வோட்டர்களை தமது கடமையை உணரும்படி செய்து நகர சபை நிர்வாகத்தைத் திருத்த வேண்டுமென்ற வேலைத்திட்டத்துடன் ஒரு புதிய கட்சி ஏற்பட்டது. அதன் பிரதிநிதி வெற்றியடைந்தார்.

டாம்மனிக்கு இது ஒரு பெரிய தோல்விதான். ஆனால் அது அடியோடு போய் விடுமா? மறுபடி முளைக்குமா? என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

அமெரிக்கக் குடியரசு நிர்வாகம் ஏன் இப்படிச் சில சுயநலக் கூட்டத்தினிடம் சிக்குகிறது என்பதற்குப் பல காரணங்

கள் உண்டு. ஆனால் முக்கியமான காரணம் என்ன என்பதைப் பற்றி அபிப்ராய பேதமே கிடையாது. நியூயார்க் வோட்டர்களில் பலர் நகர சபை நிர்வாக விஷயத்தில் தமது வோட்டுரிமையை தெய்விக சம்பத்தாக நினைக்காதது தான் இந்த நிலைமைக்கு காரணம்.

"ராஜீய யந்திரங்கள்"

அமெரிக்காவில் ஜன நாயக ஆட்சி சாதாரண காலத்தில் எவ்வாறிருக்கிறது என்பதை இந்த "டாம்மனி"யின் கதையிலிருந்து ஒருவாறு அறியலாம்.

ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஒவ்வொரு யந்திரமும், யந்திரத்தின் எஞ்சினீயர்களும், அவர்களுக்கு தலைவனும் உண்டு. இவற்றிற்கு முறையே யந்திரம் (Party machine). வளையம் (ring) தலைவன் அல்லது யஜமான் (Boss) என்று பெயர். நியூயார்க்கில் ஜன நாயகக் கட்சிக்கு "டாம்மனி" யந்திரம் இருப்பது போலவே பிலடல்பியா மாகாணத்தில் குடியரசுக் கட்சிக்கு 'Gas ring' என்ற பெயருடன் ஒரு சூழ்ச்சி கோஷ்டி யிருக்கிறது. இதுபோலவே பற்பல மாகாணங்களிலும் இருக்கின்றன. அமெரிக்காவின் அரசியல் அதிகாரம் இந்தச் சிறு கோஷ்டிகளின் கையிலே இருக்கிறது. இவர்கள் அநேகமாகப் பெரிய முதலாளிகள், பாங்கர்கள், வர்த்தகர்கள்.

ஆகவே சட்ட பூர்வமாக அரசியல் உரிமையை வோட்டு மூலம் எவ்வளவுதான் சமமாகப் பங்குபோட்டுக்கொடுத்து ஜன நாயக ஆட்சியை ஏற்படுத்தினாலும் சரியே. வோட்டர்கள் தமது உரிமையை கடவுளுக்குப் பொதுவாக உபயோகிக்காவிடில், யாருக்கு வந்த விருந்தோ என்றிருந்தால், என்ன நடக்கும்? நியூயார்க வரிப் பணத்திலிருந்து ஒன்றுக்கு நூறு விலை கொடுத்து வாங்கின ஜமக்காளம், டுவீடின் மகனுடைய ஹோட்டலில் இருக்கவில்லையா? அதுதான் பலன்.

போர் வெறி

[ரஸிகன்]

பண்டைத் தமிழருக்கு—ஏன், ஒவ்வொரு சமுதாயத்தின் ஆதிமக்களுக்கும்—சண்டை, முரட்டு உணர்ச்சிகளின் போக்கு வீடாக இருந்தது. மனித இரத்தத்தில் மூழ்கித் திளைப்பது நமக்கு இப்பொழுது சுத்த காட்டு மிருண்டித்தனமாகத் தெரியலாம். ஆனால் இம்மாதிரி சுபாவங்களிலிருந்து தான், வீரம், தியாகம், தேசாபிமானம் என்று நாம் போற்றும் சிறந்த குணங்கள் உதித்தது என்பார்கள் பரிணாம வாதிகள் (Evolutionists)

பழைய தமிழ் மக்கள் சிறப்பாக மூன்று குணங்களை அருங் கலையாகவே வளர்த்தார்கள் என்று கூறிவிடலாம். அவைகள் வெறி, காதல் வெறி, போர் வெறி. கள்ளுக்கும் காதலுக்கும் போக மீதி காலத்தை போரில் செலவழித்தார்கள் என்றால் வெறும் கற்பனையல்ல.

"நானிலம் அதனில் போர் என நவிலின் அச்சொல் தேனிலும் களிக்கும் சிந்தையர்,' என்ற தனிப்பெரும் பெருமை நமது தமிழருக்குத்தான் உண்டு. மேலும் "சான்றோர்" என்றபதம் முதல் முதல், போரில் அழியாப் புகழ்படைத்த வீரனையே குறித்தது. பிற் காலத்தில் தான், அது தெய்வ ஒளி கண்ட பெரியரைக் குறித்தது. இந்த "சான்றோர்" என்ற பதம், நாகரிக ஏணியின் இரண்டு படிகளான இவ்விரண்டு அர்த்தங்களையும் பெற, சமுதாயம் எவ்வளவு காலம் வளர்ச்சியுற வேண்டியிருந்தது என்று நாம் கணித்துக் கூறமுடியாது.

வெவ்வேறு காலத்தில் பிறந்த இரண்டு புலவர்கள் ஒருவாறு தங்கள் கால நாகரீகத்தின் மைல்கல்களாக விளங்குகிறார்கள். ஒருவர் முத்தொள்ளாயிரச் செய்யுள் ஒன்றின் ஆசிரியர்; மற்றவர் சற்றேறக்குறைய கி. பி. ஏழு அல்லது எட்டாவது நூற்றாண்டுக்குள் பிறந்த ஆழ்வார். இவர்களுக்கிடையில் எவ்வளவு நூற்றாண்டுகள் கழிந்தன என்பதை சரித்திரக்காரர் கணித்துக் கூறட்டும். பல நூற்றாண்டுகள் சென்றிருக்கவேண்டும் என்பது நிச்சயம்.

முத்தொள்ளாயிரக் காரரைச் சற்று கவனிப்போம்.

போர்க்களம். நெஞ்சு நடுங்காமல் நோக்கமுடியாத கோலக் களம். அற்ற உடற் குறைகள், சிதறிய மூளைகள், உடைந்த மண்டைகள், நசுங்கிய, முறிந்த, நெறிந்த, நெளிந்த படைக்கலங்கள், மகுடங்கள். ஒசிந்த மாலைகள். இறந்த பின்னும் உறவாடிக்கொண்டிருக்கும் குதிரைகள், யானைகள், இவற்றின் உயிரற்ற உடலங்கள், உடற் குறைகள்.

கவிஞன் இரத்தத்தைக் கண்டு அஞ்சுபவனல்ல, அதில் திளைத்து ரஸிப்பவன். அவனுக்கு ஒரு எண்ணம் உதிக்கிறது. இது பேய்களுக்கு ஏற்ற இடம் என்பதுதான். அதிலும் பேய்களின் களியாட்ட மாளிகை! கவிஞன் ஒரு கற்பனை கட்டி மற்றவைகளை ரஸிகர்களின் மனோபாவத்திற்கு விட்டுவிடுகிறான்? அது பேய்கள் விளக்கேற்றும் வினோதம் தான். மண்டை யோடுகளில் —அல்ல கிரீடம் தாங்கிய மண்டை யோடுகளில், மூளையை



நெய்யாகப் பெய்து, நல்ல தடித்த குடல்களை திரியாக மாட்டி, பேய்கள் விளக்கேற்றின. கார்த்திகை தீபம் மாதிரி—ஆக, என்பது தான் கற்பனை; அகல் விளக்குக் கற்பனை. இதைத்தவிர வேறு பயங்கர வர்ணனை கிடையாது. ஆனல் கவிஞன் சொல்லும்மாதிரி.

அதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். மன விகற்பங்கள் சற்றேனும் இல்லாமல் ஏதோ சாதாரணமான விஷயம்போல் எடுத்துச் சொல்வதுதான் நமக்கு பயங்கரத்தை யதிகப்படுத்துகிறது, சமுதாயத்தின் மனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறது.

"முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—எடுத்தெடுத்து
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்'

இது ஒரு அரசன், செம்பியன்—அவன் யாராயிருந்தாலென்ன?—வெற்றிபெற்ற போர்க் களத்தின் புகழாகப் பாடப் பட்டிருக்கிறது. நாம் கவனிக்கவேண்டியது கவிஞனின் மனப்பான்மையையே.

இனி ஆழ்வாரைச் சற்று பார்ப்போம். அந்த அகல் விளக்குக் கற்பனைதான். தியாக உணர்ச்சி பிரதானம், அன்பு அடிப்படையான கொள்கை. பாட்டு நாம் எல்லோரும் அறிந்ததே.


"அன்பே தகழியாம் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய்—நன்புருக
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன், நாரணர்க்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.'

ஆழ்வார் தான் பிறந்து வளர்ந்த சமுதாயத்தின் மனோபாவத்தை எப்படிப் பிரதி பலிக்கிறார் என்பதுதான், இங்கு நாம் கவனிக்கவேண்டியது.

தமிழ் நாட்டில் வீரக்கல் நடுதல், முருக வேள் வழிபாடு, என்பன எவ்வாறு சமூகம் வளர்ந்தன என்பதைக் காட்டும் மைல் கற்களாக விருக்கின்றன. பிறகு வெளியிலிருந்து வந்த சமண, புத்த மதங்களோடு அளவளாவி, கொல்லாமை, அன்பு, தியாகம், முதலிய அரிய கொள்கைகளைப் பெற்று மேலோங்கி வளர்ந்தன், சைவ வைணவ சமயங்களின் வளர்ச்சிக்குக் காரணமான நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமண புத்த மதங்களின் உயர்ந்த கொள்கைகளை எடுத்தாண்டு தம்மதங்களைப் பலப்படுத்தியதே அக்கொள்கைகள் இங்கு வீழ்ச்சி யுற்றதற்குக் காரணம்.

இப்படிப்பட்ட காலத்தில் தோன்றியவர் நமது ஆழ்வார். அவரது அன்பு கசியும் சிந்தை, சமூகத்தின் மனப்பான்மை.

மந்திரவாதியின் தந்திரம்



முதலில் ஒரு பெண் நிற்பது தெரிகிறது. அப்புறம் அவளைச் சுற்றி ஒரு படுதா விடுகிறான். பின்னால் படுதா எரிந்து போகிறது. பெண்ணைக் காணவில்லை. பெண் எரிந்து போனாளா அல்லது தப்பினாளா? தப்பினால், எப்படித் தப்பினாள்?

(1-2) பின் சுவரும், பக்கச் சுவர்களும் ஒரே நிறமுள்ளவை. (3) பெண் நிற்கும் ஆசனத்தின் கீழே இரு புறங்களிலும் முக்கோணமாக கண்ணாடிகள் வைப்பப்பட்டிருக்கின்றன. எல்லா சுவர்களும் ஒரே நிறமா யிருப்பதால் கண்ணாடி யிருப்பது தெரியாது. (4) ஆசனத்திற்கு முன்னால் இரண்டு கால்களும் கீழே இரண்டு மெழுகு வத்திகளும் தான் உண்டு. கண்ணாடியில் பிரதிபலிப்பதா நான்காய்த் தோன்றுகின்றன. (5) நெருப்பு வைத்தவுடன் ஆசனத்தில் பின் பக்கமுள்ள வாயில் வழியாக அவள் தப்பிப் போகிறாள். முன்னால் படுதா இருப்பதால் அவள் போவதை பார்க்க முடியாது.

சைத்தானோடு ஒப்பந்தம்



[கு. சீனிவாசன்—"மணிக்கொடி" ஆசிரியர்]

மேல் நாட்டு இலக்கியத்தில் டாக்டர் பாஸ்டஸ் பிரபலம். டாக்டர் பாஸ்டஸ் ஒரு ரஸவாதி. இதை அதில் ஊற்றி, அதை இதில் கரைத்து முடிவில் எல்லாவற்றையும் தங்கமாக்க ஒரு வழி கண்டு பிடிக்கவேண்டும் என்பது அவர் அவா. நினைத்ததைச் செய்யவேண்டிய ஆற்றலும் இச்சித்த பொருள்களை அநுபவிக்கத் திறமையும் வேண்டும் என்று பாடுபட்டார். அவர் எண்ணம் ஒரே வழியில் கைகூடிற்று. அவருக்கு அத்தகைய ஆற்றலும் சக்தியும் கிடைத்தது. ஆனால் எப்படி? தனது ஆத்மாவை விலை கூறி அந்தத் திறமையை அடைந்தார்.

டாக்டர் தமது குகையில் ரஸப் பரிக்ஷைகள் செய்துகொண்டிருந்தபொழுது அவர் முன் சைத்தான் தோன்றினான். "ஏன் இப்படிப் பாடுபடுகிறீர்?" என்று சைத்தான் கேட்டான். "பொன் வேண்டும், புகழ் வேண்டும், பொருந் திறல் வேண்டும், கூடி இன்பந் துய்க்கப் பூவையர் வேண்டும்......" என்று பாஸ்டஸ் அடுக்கிக்கொண்டே போனார். சைத்தான் அமர்ந்து கேட்டான். ஒரு கணம் சிந்தித்தான். "இவையெல்லாம் கிடைத்தால் நீ என்ன கொடுப்பாய்" என்று கேட்டான். "எதைக் கேட்டாலும் கொடுப்பேன்" என்று ஆத்திரத்துடன் பதில் உரைத்தார் டாக்டர் பாஸ்டஸ். "எதையும் உம்மிடமிருந்து அபகரித்துக்கொண்டு போக நான் விரும்பவில்லை.

எனக்கு வேண்டியது இப்பொழுது ஒன்றுமில்லை. நீ இறந்தபின் உன் ஆத்மாவைக் கொடுத்தால் போதும்" என்று பொதுவாகச் சொன்னான். "இறந்த பின்னர் எனக்கு எதற்கு ஆத்மா? ஆகா கொடுக்கிறேன்" என்று ஆத்திரத்துடன் பதிலளித்தார் டாக்டர் பாஸ்டஸ். இருவருக்கும் ஒப்பந்தம். டாக்டர் பாஸ்டஸின் வாழ்வில் இச்சையெல்லாம் பூர்த்தி செய்து வைக்கவேண்டியது சைத்தான் கடமை. முடிவில் பாஸ்டஸ் ஆத்மாவை சைத்தானிடம் ஒப்படைத்துவிட வேண்டியது. ஒப்பந்தத்திற்கு தனது ரத்தத்தில் கையெழுத்திட்டார் பாஸ்டஸ். அன்றுமுதல் பாஸ்டஸுக்கு பணம் பதவி போகம் எதுவும் குறைவில்லை. நினைத்ததெல்லாம் அவருக்கு கைகூடி வந்தது,

சைத்தான் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தான். முடிவு வந்தது. பாஸ்டஸ் அலற அலற அவர் ஆத்மாவை நரகத்திற்கு இழுத்துச் சென்றான் என்று கதை முடிகிறது.

சைத்தானோடு ஒப்பந்தம் செய்துகொண்டு சுகம் பெறுவது என்பது வெகுகாலத்திற்கு முன்னிருந்தே வழக்கத்திலிருந்து வந்திருக்கிறது. இன்று அதற்கு ஒரு உதாரணம் இங்கிலாந்தின் பிரதம மந்திரி ராம்சே மாக்டொனல்ட்.

இந்த நாளில் சைத்தான் நேரே வந்து கேட்பதில்லை. ஒப்பந்தத்திற்கு ரத்தக் கையொப்பம் வேண்டுவதுமில்லை. மனசில் ஒப்பந்தம் செய்துகொடுத்தால் போதும். கொள்கையை விட்டுக் கொடுத்தால் போதும். பொறுப்பைக் காட்டிக் கொடுத்தால் போதும். பதவி, பட்டம், பணம், உத்தியோகம் இவைகள் கைமேல் கிடைக்கும்.



[எப்பொழுதும் யாத்திரை!]

சைத்தான் அநுக்கிரஹம் ஒன்றையே பெற்று ராம்ஸே மாக்டொனல்டு உத்தியோகத்தில் இருந்து வருகிறார். 1929-ம் வருஷம் தொழிற் கட்சிக்கு தேர்தலில் கிடைத்த வெற்றியின் பயனாக இவர்பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு முதல் மந்திரியானார். கொஞ்சநாட்களில் இவர் உத்தியோகம் வகிப்பது என்பது போய் உத்தியோகம் இவரை வஹிப்பது என்று ஆய்விட்டது. உத்தியோக ஆரம்ப காலத்தில் இவர் செய்த அட்டஹாஸம் கொஞ்சநஞ்சமன்று. பாரிஸுக்குப் போவது, ஜினிவாவுக்குப் போவது, அமெரிக்காவுக்குப் போவது, பறப்பது, மூன்றும் வகுப்பில் ரயிலில் போவது இந்த ஆடம்பரங்களெல்லாம் செய்

தார். பின்னர் இந்த மகாநாடு, அந்த மகாநாடுஎன்று ஐந்தாறு மகாநாடுகளைக் கூட்டினர். இந்த மகா நாடுகளைக் கூட்டுவதைப்பற்றி மார்னிங் போஸ்ட் பத்திரிகை எழுதிற்று.

> "மாக்டொனுல்டு மிக்க தந்திரசாலி. கர்ப்பிணியைத் தூக்கில் போடுவது என்றால் ஒருவருக்கும் இஷ்டமிராது. குழந்தை பிறக்கட்டுமே என்று காத்திருப்பார்கள். அதுபோல கான்பரன்ஸில் இருக்கும் கவர்மென்டை வேலையை விட்டு விரட்ட பார்லிமெண்டுக்கு மனம் வராது. மகாநாட்டில் என்ன முடிகிறதோ பார்ப்போம் என்று இருக்கச் சொல்லும். மாக்டொனுல்டு இதை நன்கு அறிந்தவர்."

இந்த கான்பரன்சு திட்டத்தைச் சேர்ந்தவைதான் முதலாவது, இரண்டாவது வட்டமேஜை மகாநாடுகள். கான்பரன்சுகள் போதாது என்று ஆனதும் கட்சிக்கே துரோகம் செய்து தமது உத்தியோகத்தைக் காத்துக்கொண்டார். தாம் கொண்டிருந்த சமதர்மக் கொள்கைகளை அடியோடு மறந்தார். கன்ஸர்வேடிவ் கட்சிக்காரர்களை விழுந்து கட்டிக்கொண்டார். பொருளாதாரம், அரசியல், சமூக அமைப்பு, ராஜதந்திரம் ஒவ்வொன்றிலும் தாம் கொண்டிருந்த கொள்கைகளை விற்று வயிற்றுக்கூலி பெற்றார்.



[இது சீமையிலுள்ள "ரெவ்யூ ஆப் ரெவ்யூஸ்" பத்திரிகை பிரசுரித்த கார்ட்டூன். பிரதம மந்திரி ஆசனத்தில் ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கிறார். ரெவ்யூ ஆப் ரெவ்யூஸ் இதே மாக்டொனுல்டின் பூர்வ சரித்திரத்தையும் உருவத்தையும் பிரியால் கட்டி அவர்முன் நிறுத்துகிறது. "அய்யோ, அதையெல்லாம் என் ஞாபகப் படுத்துகிறீர்கள்." என்று கலக்கத்துடன் சொல்கிறார் மாக்டோனுல்ட்.]

இப்படி துரோகம் செய்து, மானத்தைக் கைவிட்டு, கொள்கைகளை விற்று சம்பாதித்த உத்தியோகமும் இன்று தத்தளிப்பில் நிற்கிறது. தொழிற்கட்சியின் ஆட்சியை முடித்துக் கொடுத்த மாக்டொனல்டை கன்ஸர்வேடிவ்கள் முதலில் ஆசையோடு வரவேற்றார்கள். துரோகியின் உபயோகம் போய்விட்டது. ஆகவே மாக்டொனல்டை ஒழித்துவிடவேண்டும் என்று இன்று கன்சர்வேடிவ்களும் கூச்சல் போடுகிறார்கள். இப்படி எல்லார்க்கும் பொல்லனாய் வாழ்வதும் ஒரு வாழ்வு. "பத்து வருஷங்களுக்கு முன்னால் செத்திருந்தால் ஸ்ரீ. மாக்டொனல்டு கண்ணியமுள்ள புருஷன் என்ற பெயரோடு போயிருப்பார். இன்றோ இரத அபகீர்த்திக்காளாயிருக்கிறார்" என்று வருந்துகிறார் ஆசிரியர் ரஸ்ஸல். 60 வருஷத்திய உயர்ந்த வாழ்வு இரண்டு வருஷ உத்தியோகத்திற்காக பலியிடப்பட்டுவிட்டது.

சைத்தான் கூப்பிடுகிறான், "மாக்டொனல்டே ஒப்பந்தத்தை நிறைவேற்றி வையும்."




யுத்த தேவதை அல்லது யுத்த அசுரன் 1914-18-ல் தீவிரமாக வேலை செய்ததால் சற்று களைப்பாற உறங்கலாம் என்று நினைக்கிறான். யுத்தத்தை ஒழிப்பதற்காக ஆயுத பலத்தைக் குறைக்க வேண்டுமென்று ஜினிவாவில் போடும் கூச்சல்தான் யுத்த அசுரனை உறங்க விடாமல் தடுக்கிறது. "என்னப்பா, இது பெரிய தொந்தரவாக இருக்கிறது. சற்று நேரம் உறங்கலாமென்றால்கூட இவர்கள் போடும் கூச்சலில் என் உறக்கம் கலைகிறதே" என்கிறானாம் யுத்த அசுரன்.

ஸிட்னி புலட்டின்] [நார்மன் லின்ஸே.

ஐரோப்பாவின் புதிய குடியரசு

(கணக்கன்)

இந்தக் கிழவர் யார்?



பிரொபஸர் டி. ஜி. மெஸாரிக்.

இவர் தான் சென்ற 15 வருஷமாக செக்கோ ஸ்லோவேகியா நாட்டின் குடியரசுத் தலைவர்; மேஸாரிக்.

என்ன நாடு அது? எவ்வளவு நீளமய்யா அந்தப் பெயர்? நான் இதுவரைக் கேள்விப் பட்டதே இல்லையே!

கேள்விப்படாததற்கு இரண்டு காரணம். 15 வருஷத்துக்கு முன் இந்தப் பேருள்ள ஒரு ராஜ்ஜியமே இருக்கவில்லை. ஆனால் இன்று இது ஐரோப்பாவிலுள்ள ஒரு தனிக் குடியரசு. அப்படி யிருந்தும் அதன் பெயர் அதிகமாகக் காதில் விழாம லிருப்பதற்குக் காரணம் அது மிக நீளமான பெயராக இருப்பதும் அதை எப்படி உச்சரிப்பது என்று தெரியாமலிருப்பதும் தான்.

1914-19 ல் நடந்த ஐரோப்பிய யுத்தத்தின் பயனாக பூர்ண சுயேச்சை பெற்ற நாடுகளில் இதுவும் ஒன்று.

அப்படியா சமாச்சாரம்! யுத்தத்தினாலும் அடிமை நாடுகளுக்கு நன்மை ஏற்படுவதுண்டோ! சரி, அப்பா, விடுதலையடைந்து விட்டாலென்ன; இவ்வளவு நீளமாக ஒரு பெயர் வைத்துக் கொள்ள வேண்டுமா! பெயரைப் பார்த்தால் ஏதோ இரண்டு மூன்று நாடுகளின் பெயரை அடுக்கினது போலல்லவோ தோன்றுகிறது?

நீர் யூகிப்பது ஒரு விதத்தில் சரிதான். 1914-ம் வருஷத்து க்கு முன் ஆஸ்டிரியாவும் ஹங்கேரியும் சேர்ந்து ஓர் ஏகாதிபத்திய மாக இருந்தது. அந்த ஏகாதிபத்தியத்தில் பொஹிமியா, மொரேவியா, ஸ்லொவேகியா, ருதீனியா என்ற நான்கு ராஜ்ஜியங்கள் இருந்தன. இந்த நான்கும் சேர்ந்து தான் இப்பொழுது ஸெக்கோஸ்லொவேகியா என்னும் தனிக் குடியரசு ராஜ்ஜியமாக இருக்கிறது. இந்த நான்கு பிரதேசங்களும் ஒரே ஏகாதிபத்தியத்தி லிருந்தன வாயினும், ஒரே விதமான ஆளுகையின் கீழ் இருக்கவில்லை. சில மாகாணங்கள் ஆஸ்டிரியாவின் கீழ் இருந்தன. சில ஹங்கேரியின் ஆதிக்கத்தில்.

ஏதய்யா, பெரிய தொந்தரவாக இருக்கிறதே! இத்தனை களே பாரத்திலிருந்த பிரதேசங்களை ஒன்று சேர்த்து ஒரு தனிக்குடியரசாக எப்படிச் செய்யமுடிந்தது? அதிலும் ஆஸ்டிரியா—ஹங்கேரி யுத்தத்தில் முறியடிக்கப்பட்ட நாடுகளாயிற்றே. அதுவும் ஜர்மனியும் ஒரே கட்சியாகவன்றோ இருந்தன? தோற்றுப்போன ஏகாதிபத்தியத்திலுள்ள மாகாணங்களுக்கு இவ்வளவு உயர்பதவி எப்படிக் கிடைத்தது?

உண்மை. ஆஸ்டிரியா ஹங்கேரி தோற்றுப்போனது வாஸ்தவம். ஆனால் இந்ததோல்வி செக்கோஸ்லொவேக்கியாவை பாதிக்கவில்லை. இந்தத் தோல்விக்கு காரணமாக இருந்ததே செக்கோஸ்லவேகியாதான். செக்கோஸ்லொவேகியாவும் சேர்ந்துதான் ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரியா முதலிய தேசங்களை எதிர்த்து யுத்தம் செய்து பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகளுக்கு உதவிசெய்தது. அவ்வாறு யுத்தத்தில் ஏகாதிபத்தியத்துக்குத் "துரோகம்" செய்து சுய ஆட்சியை அடைந்தது. இவ்வளவு பெரிய காரியத்தை சாதித்தவர் பிரோபஸர் மெஸாரிக் என்பவர். அவர்தான் இன்று இந்த புதிய குடியரசுக்குத் தலைவராக இருப்பவர். அவருக்கு வயது 83.

இவரது நாடு தன் சுவாதீனத்தை இழந்து சுமார் 300 வருஷ காலம் ஆஸ்டிரியாவின் ஆதீனத்தில் இருந்தது. இழந்த சுதந்தரத்தைப் பெறுவதற்காக 1914-ம் வருஷம் வரையில் அது செய்த முயற்சிகள் எதுவும் பயன் தரவில்லை. யுத்தம் ஆரம்பித்ததும் அதற்கு ஒரு பெரிய சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த சந்தர்ப்பத்தை பக்குவமாக உபயோகித்து பிரோபசர் மெஸாரிக் தன் நாட்டின் சுதந்தரத்தைப் பெற்றார்.

யுத்தத்தில் ஏகாதிபத்தியத்துடன் அது ஒத்துழைக்கவில்லை. ஆஸ்டிரியாவுக்கு வெளியே இருந்த ஸெக் ஜாதியாரை

ஒன்று திரட்டி பிரான்சுடன் சேர்ந்து யுத்தம் செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். பிரஞ்சுக்காரர்களும் மற்ற நேச தேசத்தாரும் கைதிசெய்திருந்த ஆஸ்திரிய படைகளின் பல செக்கோஸ்லாவ் ஜாதியாரும் இருந்தனர். அவர்களை யெல்லாம் ஒன்று திரட்டி ஆஸ்டிரியாவுக்கு விரோதமாக சண்டையிடும்படிசெய்தனர். நேச தேசங்களிடையே தமது நிலைமையை எடுத்துக் கூறி அவர்களெல்லோரும் செக்கொஸ்லொவேகியாவின் சுதந்திர உரிமையைப் பாதுகாக்க ஒப்புக்கொள்ளும்படி செய்தார்கள். இவ்வளவையும் செய்வதற்காக 1914 டிசம்பர் மாதத்திலேயே மெஸாரிக் தமது நாட்டை விட்டு வெளியேறினர். உள்நாட்டில் சரியான சமயம் பார்த்து புரட்சிக் கொடியை உயர்த்துவதற்காக "மாபிபா" என்ற ஓர் ரகசியச் சங்கம் ஸ்தாபித்து வேலை செய்தார்கள். பிரோபஸர் மெஸாரிக் கலாசாலை ஆசிரியராக வேலை பார்த்தபோது அவரிடம் படித்த மாணவரான டாக்டர் பினேஷ் என்பவர் சில காலம் உள் நாட்டிலேயே தங்கி இந்த ரகசிய சங்கத்தை ஸ்திரப்படுத்திவிட்டு நாட்டைவிட்டு வெளியேறினர். பிறகு 4 வருஷ காலம் பாரிஸிலும், இங்கிலாந்திலும் வேலை செய்தார்கள். அமெரிக்காவின் நட்பையும் பெற்றார்கள்.



டாக்டர் பினேஷ்

பிரான்சிலும், வேறு ஐரோப்பிய நாடுகளிலும் "செக்கோஸ்லாவ் தேசிய சங்கம்" என்ற ஓர் ஸ்தாபனத்தை அமைத்தார்கள். அதற்கு மெஸாரிக் தலைவராகவும், டாக்டர் பினேஷ் காரியதரிசியாகவும் அமர்ந்தார்கள்.

நாளடைவில் இந்த சங்கமே செக்கோஸ்லேவியாவின் பிரதிநிதி என்று வெளிநாட்டார் ஒப்புக்கொண்டார்கள். இவர்களை பிற்கால செக்கோஸ்லேவிய சர்க்காராகவே எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டன.

கடைசியாக 1918 அக்டோபர் மாதம் 14ந்தேதி டாக்டர் பினெஷ் பாரிஸிலிருந்து நேசதேச சங்கத்துக்கு ஓர் அறிக்கை வெளியிட்டார். செக்கோஸ்லொவேகியாவுக்கு தற்காலிகமான ஒரு சர்க்காரை ஏற்படுத்தியதாக அவர் அறிவித்தார். அக்டோபர் 15-ந் தேதியன்று பிரான்ஸ் இந்த தற்காலிக சர்க்காரை ஏற்றுக்கொண்டது. பிறகு எல்லா நாடுகளும் ஒப்புக்கொண்டன. இந்த சமயத்தில் பிரொபஸர் மெஸாரிக் அமெரிக்காவில் இருந்தார்.

அங்கு குடியரசுத் தலைவர் வில்சனுடன் நெருங்கிய சம்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார். ஐரோப்பிய விஷயங்களில் பிரொபசர் மெஸாரிக்கின் யோசனைகளுக்கு வில்சன் மிகுந்த கவுரவம் கொடுக்கும்படியான நிலைமை ஏற்பட்டது. செக்கோஸ்லொவேகியா பூர்ண சுயேச்சையுள்ள ஓர் குடியரசாக ஆய்விட்டது என்று பிரொபசர் மெஸாரிக் அமெரிக்காவில் அறிவித்தார்.

பின்னல் யுத்த சமாதானப் பேச்சுக்கள் நடந்தபோது, பிரொபஸர் மெஸாரிக்கும், டாக்டர் பினேஷும் அதில் செக்கோஸ்லொவேகிய குடியரசின் பிரதிநிதிகள் என்ற நிலையில் கலந்துகொண்டார்கள்.

இந்த முயற்சியில் பிரொபஸர் மெஸாரிக் அனுபவித்த கஷ்டநஷ்டங்களும், அவருக்கு ஏற்பட்ட இடையூறுகளும் கணக்கிலடங்காது. எத்தனையோ சிக்கலான பிரச்சினைகளை நாளுக்கு நாளாக சமாளிக்கவேண்டியிருந்தது. எத்தனையோ செக்கேஸ்லாவ் மக்களை பலியிடவேண்டியிருந்தது. அதையெல்லாம் இங்கு விவரமாக கூற இடமில்லை.

யுத்தம் முடிந்த பிறகு குடியரசை ஸ்திரப்படுத்தி அரசியலமைப்பை பலப்படுத்த வேண்டிய வேலையிலேயே மெசாரிக் தனது முழு கவனத்தையும் செலுத்தி வந்தார். செக்கோஸ்லொவேகியாவின் விஸ்திரணமும் ஜனத்தொகையும் நம் மாகாணத்தில் பாதி கூட இல்லை. ஆனல் அங்கு சுமார் 7 பாஷைகள். 7 விதமான நாகரிகங்கள். இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு அரசாங்கமாகச் செய்வது எளிதான காரியமல்ல. அப்படியிருந்தும்

எல்லோருக்கும் திருப்திகரமான ஓர் அரசியலமைப்பு அந்த நாட்டில் இருந்து வருகிறது. சிறுபான்மை வகுப்புக்களுக்கு அங்கு பாதுகாப்பு ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டிலேபோல் தேசியத்துக்கு முரணான விதத்திலல்ல. தனித் தொகுதிகள், தனிப் பிரதிநிதித்துவம், விசேஷப் பிரதிநிதித்துவம், சர்க்கார் உத்தியோகத்தில் வீதாசாரம் இவற்றின் மூலமல்ல. சிறுபான்மையோரின் பாஷை, நாகரீகம், இவற்றைக் காப்பாற்றுவதற்கு மட்டுமே சில பாதுகாப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இன்று நம் நாடு இருக்கும் நிலைமையும், 1914-ல் செக்கோஸ்லோவேகியா இருந்த நிலைமையும் கிட்டத்திட்ட ஒன்றுதான். இப்பொழுதும் ஒரு யுத்தம் வரப்போகிறதாக பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் யுத்தம் வந்தால் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை குறிப்பிடுவதற்காக இதை எழுதவில்லை. இதுவிஷயமாக பண்டித ஜவார்லால் நேரு வெளியிட்ட எச்சரிக்கையை வற்புறுத்த விரும்புகிறோம்.

"சமீபத்தில் யுத்தம் ஏற்படலாம் என்பதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. பிரிட்டனின் பலமும் குறைந்துகொண்டுதான் வருகிறது. ஆனால் இவற்றை எதிர்பார்த்துக்கொண்டு நாம் உறங்கிக்கொண்டிருக்கக் கூடாது" என்று அவர் சமீபத்தில் கூறியிருக்கிறார். இந்த எச்சரிக்கையை ஒருவரும் மறந்துவிட வேண்டாம்.

[யுத்தம் ஆரம்பித்த பிறகு பிரொபஸர் மேஸாரிக் ஆஸ்டிரியாவின் பிரதம மந்திரியை நேரில் போய் சந்தித்துப் பேசினார். "ஆஸ்டிரியா ஜேர்மனி முதலியவர்கள் கட்சி இந்த யுத்தத்தில் வெற்றியடைந்ததால் ஆஸ்திரியாவிலுள்ள ஸ்லாவ் ஜாதியார் விஷயத்தில் சர்க்கார் என்ன கொள்கையை கையாளப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"இதற்கு முன் அனுஷ்டித்த கொள்கைதான்; அதை இன்னும் சற்றுத் தீவிரமாக கையாளுவோம், அவ்வளவுதான்" என்றாராம். பிரொபசர் மேசாரிக் ஆஸ்டிரியாவைக் கைவிட்டதற்கு இதுவே போதிய காரண மல்லவா?]



:: ஏழையின் பொக்கிஷம் ::

(நா. சி.)


இது பிரான்ஸ் தேசத்துக் குழந்தைகள் படிக்கிற கதை. இதன் ஆரம்பம் எல்லாக் கதையையும் போல ஒரே ஒரு ஊரில்.... தான்.

ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா அல்ல; ஒரு கிழவனும் கிழவியும் இருந்தார்கள். பரம ஏழைகள். ஏழைகள் என்றால் என்ன அர்த்தம் என்று உங்களுக்குத் தெரியாது. காந்தி மலர் வாங்கிப் படிக்கக் கூடியவர்கள் அந்த இரண்டு கிழங்களைப் போல் அவ்வளவு ஏழையாய் இருக்க முடியாது.

அவர்கள் எவ்வளவு ஏழை தெரியுமா? சாப்பிடுகிற ரொட்டியைப் போட ஒரு தட்டுக் கிடையாது. ஒரு தட்டு இருந்தாலும் அதை வைக்க ஒரு வீடு கிடையாது. வீடு கட்டுவதற்கு ஒரு நிலம் வேணுமே. அவர்களுடையது என்று சொல்லிக் கொள்ள அவர்களுக்கு ஒரு சாண் மண்கூட இல்லை. சிறிது இடம் இருந்தால் அதில் ஒரு சிறு வீடு கட்டிக் கொள்ளலாம். வீடு கட்டிக்கொண்டால் அதில் ஒரு சட்டியோ, தட்டோ வைத்துக் கொள்ளலாம். ஒரு சட்டி இருந்தால் அதில் போடுவதற்கு ஒரு ரொட்டித் துண்டு இடையிடையே யாவது எப்பொழுதாவது ஒரு நாள் கிடைக்காமல் போய் விடுமா?

இடமுமில்லை, வீடுமில்லை, தட்டும் இல்லை; ரொட்டியும் இல்லை ஆகையால் அவர்கள் பரம ஏழைகளா யிருந்தார்கள்—ரொம்ப ரொம்ப ஏழை.

மழைகாலத்தில் ஒரு சின்ன விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு, நாலு கள்ளியை அதில் கொளுத்தி எரியவிட்டு, அந்த நெருப்



பண்டை சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டு எதாவது பேசிக் கொண்டிருக்க வேணும், என்று இரண்டு கிழட்டுக்கும் ஆசை; ஆனால் விடிவில்லை. அதுதான் பெரிய கஷ்டமாக இருந்தது.

ஒருநாள் இரவு நல்ல இருட்டு. சரியான பனி. இரண்டு பேரும் தடியை ஊன்றிக்கொண்டு ரஸ்தா வழியாய்ப் போய்க்கொண்டே இருந்தார்கள். "மியா மியா" என்று ஒரு சப்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தார்கள். ஒரு எழைப் பூனை. இவர்களைவிட எழை அது. பாவம், அதன் உடம்பில் எலும்பும் தோலும்தான் மிச்சம். அந்தத் தோல்மேல் ரோமமே இல்லை.

ரோமம் இருந்தால் அதன் தோலில் கொஞ்சம் பசை இருக்கும். தோல் நன்று யிருந்தால் அது கொஞ்சம் ஓடி எதாவது ஒரு எலியைப் பிடிக்க சாமர்த்தியம் இருக்கும். இவ்வளவு மெலிந்திருக்காது.

உடம்பில் ஒரு ரோமம்கூட இல்லாமல், எலும்பை மூடின தோலும் இவ்வளவு மோசமாக இருந்தால், இதைவிட எழையான பூனை இருக்க முடியுமா?

ஆனால் எழைகள் மீது எழைகளுக்கு இரக்கம் இருக்கும். ஆகையினாலே இந்த இரண்டு எழைகளும் அந்த எழைப் பூனையைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். பகலில் பிச்சை யெடுத்த ஒரு ரொட்டித் துண்டு கையில் இருந்தது. அதை அவர்கள் தின்னாமல் அந்தப் பூனைக்குக் கொடுத்தார்கள். வயிற்றுக்குள்ளே கொஞ்சம் போனவுடனே அது கீழே குதித்து இவர்களுக்கு முன்னாலேயே நடந்து கொண்டு போயிற்று. அதன் பின்னாலேயே இந்த இரண்டு கிழவர்களும் போனார்கள். எல்லாரும் ஒரு பாழடைந்த வீட்டை யடைந்தார்கள்.

அந்தப் பாழ்வீட்டில் ஒரு ஒடிந்த நாற்காலி இருந்தது. கிழவன் தட்டுத் தடுமாறி அதன்மீது உட்கார்ந்தான். கிழவியும் பக்கத்திலே உட்கார்ந்தாள். கொஞ்சம் சந்திர வெளிச்சம் விழுவது போல இரண்டு பேருக்கும் தோன்றிற்று. உண்மையாகச் சந்திர வெளிச்சம் வந்தால்கூட அந்த அறையில் இருந்த புகையடைந்த ஓட்டடை அதை சாப்பிட்டு விடும்.

கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தார்கள். ரொம்ப இருட்டு, பூனையைக் காணவில்லை. குளிர் நடுக்குகிறது. எங்கேயாவது

இரண்டு சுள்ளி யிருந்தால் அதைப் பொறுக்கி நெருப்பு மூட்டலாம். ஆனால் நெருப்புப் பெட்டி இருக்கிறதா!

என்ன செய்வது? இரண்டு கிழமும் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. ஆனால் சிறிது நேரம் சென்ற பிறகு ஏதோ இரண்டு நெருப்புப் பொறி தெரிந்தது. பக்கத்தில் கையைக் கொண்டுபோய்ப் பார்த்தாள் கிழவி. சற்று வெது வெதுப்பு இருப்பதாகத் தோன்றியது. உடனே கிழவனிடம் சொன்னாள்.

"அப்படியானால் அதைச் சற்று ஊதி பிரகாசமாக்கு" என்றான் கிழவன்.

"ஊதினால் ஒரு வேளை சீக்கிரமாக எரிந்து சாம்பலாய் விடும் அது மிகச் சிறிய நெருப்பு" என்றாள் கிழவி. சரி யென்று கிழவனும் ஏற்றுக்கொண்டான்.

இருவரும் இரவு முழுதும் அந்த நெருப்பைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். இரவு முழுதும் அது அப்படியே இருந்தது. அவிந்துபோகவே இல்லை. அந்த நெருப்பினால் குளிர் சற்றுக் குறைந்ததாகவும் அவர்கள் எண்ணிக் கொண்டார்கள்.

இரவு முழுவதும் மனதுக்கு சுகமாக இருந்தது. பொழுது புலர்ந்தது. நெருப்புத் துண்டைக் காணவில்லை. அந்த இடத்தில் ஏழைப் பூனை உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள்.

அதனுடைய கண்கள் அவர்களுக்கு மனத்திருப்தியையும் "வெது வெதுப்பையும்" கொடுத்துக்கொண்டிருந்தது. மனக்கோட்டையே ஏழைகளுக்குப் பெரும் செல்வம்.

விகடத் துணுக்குகள்.

ஒவ்வொரு துணுக்கையும் தனித்தனி காகிதத்தில் எழுதி, ஒவ்வொன்றின் அடியிலும் விலாசம் எழுதவேண்டும். எழுதியவர்களின் பெயர்களுடன் அவை "காந்தி" மலரில் பிரசுரமாகும். ஒரு மலரில் பிரசுரமானவைகளில் சிறந்ததற்கு ரூ. 2 பரிசளிக்கப்படும்.

பத்திரிகை வெளியாகி ஒரு வாரத்திற்குள் பரிசுப் பணம் வராவிட்டால், உடனே ஆபீசுக்கு கடிதம் எழுதவும்.

மதுவிலக்கிற்கு "கல்த்தா"

அமெரிக்காவில் மது விலக்கிற்கு "அரோகரா" நேர்ந்துவிட்டது. டிசம்பர் மாதம் 5உ யோடு "அமெரிக்காவில் மது உற்பத்தி செய்வதோ, விற்பதோ, இறக்குமதி செய்வதோ கூடாது" என்ற சட்டம் ரத்தாய்விட்டது. மறுபடியும் அமெரிக்கா குடி வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறது.

அமெரிக்கா என்று தமிழ் பத்திரிகைகள் அழைக்கும் தேசத்திற்கு, ஆங்கிலத்தில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் என்று பெயர். இந்த தேசம் வட அமெரிக்காவில் கானடாவிற்கு தெற்கே மெக்சிகோவிற்கு வடக்கேயுள்ள பகுதியாகும். பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து சண்டைபோட்டு விடுதலையடைந்த தேசம். இந் நாட்டில் 48 மாகாணங்கள் உண்டு. ஒவ்வொரு மாகாணமும் பூர்ண சுதந்திரமுள்ளது. அதனுல்தான் ஐக்கிய மாகாணங்கள் என்று பெயர். எல்லா மாகாணங்களையும் சேர்ந்த தேசத்தையே அமெரிக்கா என்று சாதாரணமாக தமிழில் சொல்லுகிறோம். இந்த ஐக்கிய நாட்டிற்கு குடியரசுத் தலைவராய் தற்சமயம் இருப்பவர் பெயர் ரூஸ்வெல்ட்.

மாகாணங்கள் பூர்ண சுதந்திரமடைந்தவை என்று சொன்னோம். ஆகவே சகல நாடுகளையும் சட்டுப்படுத்தக்கூடிய சட்டம் ஒன்று செய்ய வேண்டுமானல், 48 மாகாணங்களில் 36 மாகாணங்களின் சம்மதமாவது வேண்டும். 36 மாகாணங்கள் சம்மதிக்காத வரையில் ராஜாங்க அமைப்புச் சட்டத்தை திருத்தமுடியாது. அமெரிக்காவில் மது உற்பத்தி செய்யவோ, விற்கவோ, இறக்குமதி, ஏற்றுமதி செய்யவோ கூடாதென்ற சட்டம் அமெரிக்க பார்லிமென்ட் சபையாகிய காங்கிரசில் நிறைவேறியது. 1920-ம் வருஷம் ஜனவரி மாதம் 16உக்குள் 46 மாகாணங்கள் அதை ஆதரித்தபடியால் அன்று முதல் மதுவிலக்குச் சட்டம் அமெரிக்காவில் அமுலுக்கு வந்தது. இந்த மது விலக்குச் சட்டம் ஏற்பட காரணமாயிருந்த பல சம்பவங்களை கிழே குறிப்பிடுகிறோம்.

1808-ம் வருஷத்தில் பில்லி கிளார்க் என்பவர் மிதக்குடி பிரசார சபை ஏற்படுத்தினர். 27 வருஷங்களுக்குப் பின்னல், அதற்கு 8-ஆயிரம் கிளைச் சபைகளும் 15-லட்சம் அங்கத்தினர்களும் சேர்ந்தார்கள். 1837 ம் வருஷத்தில் மெயின் மாகாணம் மது விலக்குச் சட்டம் செய்தது. இது தான் சட்டம் ஏற்படுவதற்கு ஆரம்பம். 1851 முதல் 1855 வரை மற்றும் 12 மாகாணங்கள் மது விலக்குச்

சட்டம் செய்தன. ஆனால் இந்தச் சட்டங்கள் நீடிக்கவில்லை. 13 மாகாணங்களும் சட்டத்தை ரத்துச் செய்யும்படி ஏற்பட்டது.

ஆப்ரஹாம் லின்கன் காலத்தில், 1862-ல், மது செய்வதற்கும், விற்பதற்கும் லைசென்ஸ் வேண்டுமென்று சர்க்கார் சட்டம் செய்தார்கள். 1869-ல் மதுவிலக்கு கட்சி ஏற்பட்டது. இவ்விஷயத்தில் . அமெரிக்க பெண்கள் மிகுந்த சிரத்தையெடுத்துக் கொண்டார்கள். 1873லிருந்து 1902 - க்குள்ளாக அமெரிக்காவிலுள்ள சகல மாகாணங்களும் மதுவால் ஏற்படும் கெடுதல்களைப் பற்றி அமெரிக்க பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தன. இவ்வளவு செய்தும், 1903-ல் மெயின், கான்ஸாஸ், தென் டாக்கட்டோ ஆகிய மூன்று மாகாணங்கள் தான் மதுவிலக்குச் சட்டம் செய்தன. ஆனால் மதுவிலக்கு பிரசாரம் பலமாய் நடந்தது. ராஜாங்க சட்ட அமைப்பில் மதுவிலக்கே சர்க்கார் கொள்கை என்ற மாறுதல் செய்ய வேண்டுமென்று முதலில் தீர்மானித்தது ஜார்ஜியா என்ற மாகாணமே. பின்னால் ஓகலாஹோமா செய்தது. 1908-ல் இரண்டு மாகாணங்களும், 1909-ல் இரண்டும், 1914-ல் 5-ம், 1915-ல் 5-ம், 1916-ல் 4-ம், 1917-ல் 4-ம், 1919-ல் 5-ம் தீர்மானஞ்செய்தன.



ஆடம்ஸ் சர்விஸ்] [அமெரிக்கா


மதுவிலக்கு சட்டத்தை ரத்துச் செய்யும் பொறுப்பை, காங்கிரஸ் மாகாணங்கள் தலையில் போட்டுவிட்டது.

1917-ல் காங்கிரஸில் மதுவிலக்குச் சட்டம் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியாரால் நிறைவேற்றப்பட்டது. 13 மாதங்களில் 46 மாகாணங்கள் இதை ஆதரித்தபடியால், 1920 ஜனவரி 16உயில் மதுவிலக்குச் சட்டத்தை காங்கிரஸ் ஒப்புக்கொண்டது.

அந்தச் சட்டமே சென்ற 5உ யோடு மாண்டு போயிற்று. மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்ட படியால், திருட்டுத்தனமாக மது

செய்வதையோ, இறக்குமதி செய்வதையோ, விற்பதையோ தடுக்க வேண்டியது சர்க்கார் வேலையாயிற்று. இதற்காக செலவிட்ட பணம் கொஞ்சமல்ல. அமெரிக்கர் சுதந்திரப் பிரியர்கள். தனிப்பட்டவர்கள் உரிமையில் சர்க்கார் எதற்காக தலையிட வேண்டும் என்று கூச்சல் கிளம்பிற்று. திருட்டுத் தனமாக சாராய விற்பனை செய்தவர்களுக்கு நல்ல லாபம் கிடைத்தது. அந்த லாபத்திலிருந்து போலீஸ்காரன் முதல் ஹைக்கோர்ட் ஜட்ஜ் வரையுள்ள சர்க்கார் சிப்பந்திகளுக்கு லஞ்சம் கொடுத்தார்கள். திருட்டுச் சாராயம் விற்பவர்களுக்குள் சண்டை வரும்போதெல்லாம் கொலைகள் நடப்பது கொஞ்சமல்ல. மதுவிலக்கு வேண்டுமென்று சொல்லுகிறவர்களுக்கு உயிருக்கு நித்திய கண்டம். மொத்தத்தில் அமெரிக்கா சர்க்காரில் பெரிய ஊழல் ஏற்பட்டதோடு, கொலைகளும், கொள்ளைகளும் அதிகரித்து விட்டன. இவற்றை குறைப்பதற்கு வழியென்ன? மதுவிலக்குச் சட்டத்தை ஒழிப்பதே என்று ஜனங்கள் நினைத்தனர். பழைய சட்டத்தை ரத்துச் செய்யும்படி ஒரு பிரேரணை காங்கிரஸில் வந்தது. இதை 36 மாகாணங்கள் ஆதரித்தபடியால், அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் பரலோக பிராப்தி அடைந்து விட்டது.

மதுவிலக்கு மரணப் படுக்கை.




டெயிலி எக்ஸ்பிரஸ்] [லண்டன்

மதுவிலக்கு அமெரிக்காவில் மரணப் படுக்கையில் இருக்கும் போது, அதன் பந்துக்கள் வந்து கண்ணீர் வடித்த காட்சி.

"கலியின் கோலம்"

(டி. வி. இராமானுஜம் பி. ஏ. ஆனர்ஸ் எழுதியது)



"லாயர் கண்ணுசாமிப் பிள்ளைதானே"......

எனக்கு ரொம்ப நாளாய்த் தமிழில் கட்டுரைகள் எழுதவேணு மென்ற ஆவல் இருந்தது. ஆனல் நான் எழுதும் கட்டுரைகளை ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற சந்தேகம் என்னைப் பல நாட்கள் வருத்தியது. பிறகு அநேக பத்திரிகைகளை வாங்கி வாசித்தேன். அவற்றில் அநேக சாமான்ய மனிதர்கள் கட்டுரைகள் எழுதி யிருப்பதைக் கண்டேன். உடனே எனக்குத் தைரியம் பிறந்தது. என் படிப்பெங்கே? என் அநுபவ மெங்கே? இவர்களுடைய கட்டுரைகளைப் பிரசுரிக்கக் கூடுமானல் நான் எழுதுவதை மாத்திரம் என் பத்திராதிபர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்! உடனே எழுத ஆரம்பித்தேன்.

"அன்பு", "இரண்டு சிநேகிதர்கள்", "காதல் வல்லமை", என்ற தலைப்புகளுடன், நகைச் சுவையுடன் கூடிய கட்டுரைகளை

எழுதிப் பல தடவைகள் திருத்தியும், கிழித்தெறிந்தும், மீண்டும் எழுதியும், ஆசிரியர்களுக்கு அனுப்பினேன். எனது நண்பர்களுக்கெல்லாம் வாசித்துக் காண்பிப்பேன். வாசிக்கும்பொழுது, எனது கட்டுரைகளின் சிறப்பைக் கேட்டுக் கேட்டு உள்ளம் பூரிப்பேன். ஒருமாதம் கழிந்தது. தபால்காரனையே இதுவரை கண்டறியாத எனக்கு அந்த ஆளின் தரிசனம் தினம் கிடைக்கலாயிற்று. என் கட்டுரைகள் ஒவ்வொன்ருகத் திரும்பி வரலாயின.

ஒவ்வோர் ஆசிரியரும் என் கட்டுரையைப் பிரசுரிக்க முடியாததற்காக மிகவும் வருந்துவதாக எழுதினர்கள். காரணத்தை யாரும் சொல்லவில்லை. நான் மிகவும் ஏமாற்றமடைந்தேன். இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் இந்த ஆசிரியர்களுக்கு, "என் கட்டுரைகளை ஏன் திருப்பி அனுப்பினீர்கள்" என்று காரணம் சொல்லும்படி ரிப்ளை கார்டுகள் எழுதினேன்.

"உம்முடைய கட்டுரைகளி லடங்கிய விஷயம் உலக இயல்புக்கு மாறுபட்டதாக விருக்கிறது" என்று ஒருவர் எழுதினர். "உமக்கு உலக வழக்கம் தெரியாது" என்ருர் மற்ருெருவர். மூன்ருவது ஆசாமி "......கதை ரொம்ப நன்ருய்த்தா னிருக்கிறது. இருந்தாலும் உலகத்தில் நடக்காத விஷயமாய் இருக்கிறது. மனிதர்கள் எல்லாரும் தேவர்களாய் மாறிவிட்டால், உமது கட்டுரைகளில் எழுதிய சம்பவங்கள் சாதாரணமாய் நடைமுறையில் நிகழலாம்" என்று பதில் எழுதினர். மற்ருெருவர் "......நீங்கள் பரம சாது போலிருக்கிறது. கலிகாலத்திற்குத் தகுதியற்றவர்....." என்று ஒரு வீச்சு வீசியிருந்தார்.

சரிதான்; நாம் இந்த முறையில் இனி எழுதக்கூடாது. உலக வாழ்க்கையை ஒட்டி நமது கட்டுரைகளை அமைக்க வேண்டும் என்று தீர்மானித்து, ஒரு கதையை முதலில் எழுதத் தீர்மானித்தேன். சகோதர வாஞ்சையை விளக்க வேண்டுமென்பது எனது கருத்து. கதாநாயகனை "சாண்டில்யன்", தனது தம்பியாகிய "சரிணிபுரேஸ்வரனை" உயிரினும் மேலாகக் கருதி நேசிக்கிருன். 'சரிணிக்கும் சாண்டில்யனிடம் அளவிட முடியாத அன்புண்டு; இருவரும் ராம லக்ஷ்மணர்கள் போலிருந்தனர்; என்றெல்லாம் எழுதிக் கொண்டே போனேன். ஒருநாள் தம்பி வெளியில் போய்விட்டுத் திரும்பி வந்த போது ஒரு கோரமான சம்பவத்தைக் காண்கிருன். அண்ணன் நடு அறையில் ரத்தகளத்தில் கொல்லப்பட்டுக் கிடக்கிருன். அவன் கையில் ஒரு கைத்துப்பாக்கி இருக்கிறது. மண்டையிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருக்கிறது. அறையின் கதவைத் திறந்த

வுடன் தம்பி தன் அண்ணனை இந்த பரிதாபகாமான நிலைமையில் காண்கிறான். இந்த நிலைமையை எப்படி வருணிப்பதென்று யோசித் தேன். உலக வாழ்க்கையை யொட்டி எழுதவேணுமல்லவா? தம்பி என்ன செய்தான் என்று எழுதுவதென்று மிகவும் யோசனை செய்தேன்.

"அண்ணா!" என்று கத்திக்கொண்டு பிரேதத்தின் மேல் விழுந்து அழுவானா? ஒன்றும் தோன்றாமல் திகைத்து அப்படியே நின்று விடுவானா? விசனத்தால் மூர்ச்சையாய்ப் போய் விழுந்து விடுவானா?

பத்து நிமிஷங்கள் பேனா முனையினால் தலையைச் சொறிந்து கொண்டு உட்கார்ந்திருந்தேன். ஒரு யோசனை பளிச்சென்று தோன் றியது. ஆனந்த பரவசமானேன். போதிமாத்தடியில் புத்தருக்கு ஞானோதயமானபோது அவருக்குக்கூட இவ்வளவு சந்தோஷம் உண்டாயிற்றா என்பது சந்தேகந்தான்.

என்னுடைய சாக்ஷாத் தம்பி வேங்கடம் வெளியில் போயிருந் தான். துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டு பிரேதம்போல் கீழே கிடந்து நான் பாசாங்கு செய்தால் என்ன? அந்த நிலைமையில் என் தம்பி என்னைப் பார்த்து என்ன செய்கிறான், எப்படிக் கதறுகிறான், என்று கவனித்து அதே மாதிரி கதையில் எழுதி விடலா மல்லவா?

ஆனால் அன்புடன் என்னை நேசித்துவரும் தம்பியை இப்படிப் பட்ட வஞ்சனைக்கு உள்ளாக்கலாமா? ஐயோ! அவன் மனம் என்ன பதை பதைக்கும்! ஒரு நிமிஷமானாலும் அவன் படாதபாடு படு வானே! நமது கதைக்காக அவனை இப்படி துன்புறுத்தலாமா என்று யோசனை செய்தேன். அவன் வரும் நேரமோ நெருங்கிக் கொண்டிருந்தது—சரிதான். அதனால் என்ன? அரை நிமிஷத்திற் குள் நான் எழுந்திருந்து என் தம்பியைக் கட்டியணைத்து நான் இறக்கவில்லை என்பதாகச் சொல்லுவேன். அவனை ஏமாற்றியதன் காரணத்தையும் சொல்லுவேன். அவனும் திருப்தி யடைவான். என்பதாக ஒருவாறு முடிவு கட்டிக்கொண்டு தம்பி வருவதற்குள் வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தொடங்கினேன்.

மேஜைமேல் புஸ்தகங்கள், காகிதங்கள் இவைகளைப் பரப்பி னேன். சிகப்பு இங்கியை நடு அறையில் தாராளமாய்க் கொட்டி னேன். என் நெற்றியிலும், புருவத்திலும் பூசிக் கொண்டேன்.

துப்பாக்கியை வலது கையில் பிடித்தேன். திடீரென்று விழுந்தேன். தம்பி வரும் வரையில் அப்படியே கிடந்தேன். நான் அதிக நேரம் காத்திருக்கவில்லை. யாரோ மாடிப்படியில் ஏறிவரும் சப்தம்கேட்டது. அவன் தான், என் மனது படபட வென்று



—திடீரேன்று விழுந்தேன்

அடித்துக் கொண்டது. எங்கே நான் உயிருடன் இருப்பது தெரிந்துவிடுமோ என்று பயந்தேன். அறையின் கதவு திறக்கப் படும் சப்தம் என் காதில் விழுந்தது. ஐயோ! அருமைத் தம்பி வேங்கடம் என்னபாடு படுகிருனே! "அண்ணு!" என்று கதறுவா னென்று எதிர்பார்த்தேன். திடுக்கென்று முன்வைத்த காலைப் பின் வாங்குவது போலுள்ள சப்தத்தைக் கேட்டேன். தம்பி மூர்ச்சை யாய் விழுகிருனே என்று ஏங்கினேன். ஒரு செகண்டில் என்னைத் தாண்டி அவன் நடப்பதாக அறிந்தேன். என்ன செய்கிருன் என்ப தைப் பார்க்க கண்ணைக் கொஞ்சமாகத் திறந்துகொண்டு ஜாக்கிரதை யாகப் பார்த்தேன். டெலிபோ னிருக்குமிடம் சென்று அதை எடுத் தான். பிறகு பின்வரும் வார்த்தைகள் என் காதுகளைத் துளைத் தன. "லாயர் சாமிக்கண்ணு தானே பேசுவது—உம்....என் தகப்ப ஞர் எழுதியதுபோல் ஒரு உயில் நேற்று தயார் செய்தோமே— அதை உடனே கிழித்து விடுங்கள்—இனி சொத்தில் பாகமே ஏற்ப டாது—உயில் என்னத்துக்கு?—உம். என் தமையனே தன்னைச் சுட்டுக்கொண்டு இறந்து விட்டார்."

கலிகால கோலத்தைக் கண்டேன். இதைத் தழுவி கட்டுரை களை எழுதவேணு மென்பதை நன்குணர்ந்தேன்.

ரஷிய-ஜப்பான் யுத்தம்

இன்றைய உலக சரித்திரத்தைக் கூர்மையாக கவனித்து வருபவர்கள், சமீபகாலமாக, ஒரு ரஷிய-ஜப்பான் யுத்தத்தைப் பற்றிப் பலமான வதந்திகள் உலாவி வருவதைக் கவனித்திருப்பார்கள். அதன் சம்பந்தமாக "அப்டன் க்ளோஸ்" என்ற அமெரிக்கப் பத்திரிகா நிருபர் ஒருவர் எழுதியுள்ள பின்வரும் கட்டுரை உண்மையான நிலைமையை விளக்குகிறது.

1903-4-ம் வருஷங்களில் உலவிய ரஷ்ய-ஜப்பானிய யுத்த வதந்தியை, இப்பொழுதுள்ள ரஷிய அரசாங்கம் நன்ருய் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறது. அப்பொழுது ரஷியச் சக்கிரவர்த்தியாகவிருந்த "ஜார்" அவசரம் அவசரமாக சைபீரியாவில் ரயில் பாதை போட்டுவிட அபாரமாக முயற்சித்தார். பெய்கால் ஏரிக்கும் பசிபிக் மகா சமுத்திரத்திற்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் ஆட்களையும் உணவுப் பொருள்களையும் கொண்டுவந்து ஏராளமாகக் குவித்தார். அந்த சமயத்தில் ரஷியாவினிடம் ஒரு உயர்ந்த கப்பல் படையு மிருந்தது. ப்ளாடிவாஸ்டாக் என்ற துறைமுகத்தில் அமெரிக்கா சைன பிரிட்டன் முதலிய நாடுகளிலிருந்து ஏராளமான பொருள்கள் வந்து இறக்குமதியாகிக் கொண்டே யிருந்தன.

அந்த வதந்தி திடீரென்று செத்து விட்டது. பத்திரிகாசிரியர்கள் கேலி செய்து நகைத்தனர். "அபத்தமான யுத்த வதந்திகள். ஜப்பான் ரஷியாவை எதிர்க்கவே எதிர்க்காது!" என்று பத்திரிகைகள் எழுதின. ரஷிய சேனை கொஞ்சம் முறுக்கைத் தளர்த்தியது. ரஷியத் தலைநகரான செயின்ட் பீடர்ஸ்பர்கில் கவர்ன்மெண்டும் பொதுஜனங்களும் யுத்தப் பேச்சை மறந்து உள்நாட்டு விவகாரங்களில் கவனம் செலுத்தினர்கள்.

வசந்தகாலம் வந்தது. ரஷியக் கப்பல் படை ஜப்பானியக் கடலில் யுக்தத்திற்கு மீறிய எல்லைகளில் பிரயாணம் செய்யத் தொடங்கியது.

ஒரு நாள் பிராதக் காலத்தில் ஜப்பானியக் கப்பல் படைத் தலைவரான டோகா கொரியாவுக் கருகாமையில் ரஷியக் கப்பல்களை மடக்கினர். டார்ப்பிடோ என்னும் குண்டுகளால் அவற்றைத்

தாக்கினர். பின்னல் 'இருதேசங்களுக்கு மிடையில் யுத்த'மென்று விளம்பரம் செய்யப்பட்டது.

ஜப்பானைப்பற்றி நம்மைக் காட்டிலும் ரஷியாவுக்கு அதிகமாக நன்ருகத் தெரியும். இப்பொழுதைய ஜப்பானின் மனப்பான்மையில் அதே பழைய தந்திரம் மறைந்திருப்பதை ரஷியா காண்கிறது.

புதிய ரஷியா சில காலம் வரை ஜப்பானுக்கு விட்டுக் கொடுக்கும் கொள்கையை யனுஷ்டித்தது. ஆனல் அது தற்காலிகமாக அனுஷ்டிக்கப்பட்ட கொள்கை தான். 1931-ம் வருஷம் செப்டம்பர் முதல் ரஷியா அந்தக் கொள்கையைக் கைவிட்டு விட்டது. அதன் பலனுகக் கூடிய சீக்கிரம் ஜப்பான் முன்போல "ஆச்சரியத் தாக்குதல்" முறையைக் கையாளுமென்று ரஷியா கருதுகிறது.

ஆனல் இன்றைய ரஷிய சர்க்காரை அப்படி திடுக்கிடச் செய்து மடக்கிவிட முடியாது. அது எப்பொழுதும் மகா மோசமான நிலைமையை எதிர்பார்த்து அந்த நிலைமைக்குத் தயாராக விருக்கிறது. எனவே ரஷியா கூடிய விரைவில் ஜப்பானுடன் யுத்தம் செய்ய நேரலாமென்று எதிர்பார்ப்பதற்கு, அதன் பழைய அனுபவமே அஸ்திவாரம்.

ஒப்பந்தங்கள் உடைகின்றன.

இந்த ஸோவியத்-ஜப்பானிய முறுக்கு தர்க்கவாத நியாயத்துடனேயே வளர்ந்து வந்திருக்கிறது.

1929-ம் வருஷத்தில் மஞ்சூரியாவைச் சேர்ந்த சீனத் தலைவனை சாங்-ஸ்யூஷ்-லியாங் என்பவன், கிழ்ச் சைன ரயில்வேயிலிருந்த ரஷிய நிர்வாக அதிகாரத்தைக் குலைத்துத் துரத்தி விட்டான். ரஷியா அவனைத் தண்டித்தது. அப்பொழுது மஞ்சூரியாவிலிருந்த ஜப்பானிய ராணுவத்துடன் ரஷியா ஒரு கௌரவமான உடன்படிக்கை செய்து கொண்டது. அந்த ஒப்பந்தப்படி, சைனவுடன் இரண்டு நாடுகளில் யாராவது ஒருவருக்குத் தகராறு ஏற்பட்டால், அந்தத் தகராறைத் தீர்க்கும் விஷயத்தில், சம்பந்தப்படாத நாடு ஒதுங்கி நிற்கவேண்டியது. ஆனல் 1931-ம் வருஷத்தில் ஜப்பானியர்கள், ரஷியர்களை அவர்களது சொந்தப் பிரதேசத்திலிருந்தே துரத்த முயன்று அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்தனர். "மஞ்சுகோ"வை ஆயுதமாக உபயோகித்து, 'ராணுவத் தேவைகள்' என்று பொய்ச் சாக்குகள் சொல்லி ஜப்பான் ரயில் பாதைகளை உரிமையாக்கிக் கொண்டு விட்டது.

ஸோவியத் சர்க்கார் அந்த ரயில் பாதையை விற்க முன் வந்தனர். உண்மை யாகவே அவர்கள் அதை விற்கத் தயாரா யிருந்தார்களா, அல்லது சாவகாசம் கிடைப்பதற்காக சூழ்ச்சி செய்தார்களா என்பது யாருக்கும் தெரியாது. ஜப்பானியர்கள் அதைப் பற்றிக்கொண்ட அபிப்பிராயம், "வெற்றி யடைந்த ஜப்பான் தயாதாக்ஷணியமாக என்ன கொடுத்தாலும் அதை வாங்கிக்கொண்டு விலகிக்கொள்ள ரஷியர்கள் சம்மதிக்கிருர்கள்." என்பதுதான். எனவே ஜப்பானியர் ஐந்துகோடி யென்கள் கொடுப்பதாக முன்வந்தனர், ஸோவியத் முடிவாக 25 கோடி ரூபிள் கேட்டது. அப்பொழுது ஜப்பான் ரொம்பத் துடுக்குடன் ரஷியாவை நையாண்டி செய்தது. "நாங்கள் சொல்லுகிறபடி ஐந்துகோடி யென்னின் மதிப்புக்கு, 25 கோடி ரூபிள் விலை சரியாகப் போய் விடும்படி ரூபிளின் மதிப்பை நிர்ணயித்துவிடுங்கள். இப்பொழுது உங்கள் ரூபிளின் மதிப்பு வெறும் கற்பனைதானே!" என்று ஜப்பான் அப்பொழுது யோசனை சொல்லியது. அந்த விஷயம் அப்படியே நிற்கிறது.

இடைக்காலத்தில் இரண்டு நாடுகளினுடைய எல்லைப்புறத்தில் பல முட்டுதல்கள் ஏற்பட்டன. ஜப்பானிய அதிகாரிகளும், மஞ்சூகோ அதிகாரிகளும் பல ரஷிய உத்தியோகஸ்தர்களைக் கைது செய்தனர். இருதரப்பிலும் ஒருவர்மீதொருவர் பல குற்றங்கள் சாட்டினர்.

"ரஷியர்கள் சீனக்கொள்ளைக்காரர்களுக்கு உதவி செய்தார்கள். ஜப்பான் ரயில்பாதையைப் பிடிக்கு முன் ரஷியா கடத்திக்கொண்டுபோன ரயில்வே தளவாடங்களைத் திருப்பிக்கொடுத்து விடவேண்டும்" என்று ஜப்பான் சொன்னது.


"ஜப்பான் ஸோவியத்துக்கு விரோதமாக "வெள்ளை ரஷிய" சதிக்காரர்களை ஆதரிக்கிறது. அதற்கு உதவுகிறது. ஜப்பானிலுள்ள ரஷியர்கள் தாக்கப்பட்டார்கள்." என்று ரஷியா குற்றம் சாட்டியது.

கரையோரக் கடலில் மீன் பிடிக்குமிடங்களில் பல தகராறுகளும் பலாத்காரங்களும் நடந்தன.

ஜப்பானின் அபிலாஷைகள்.

ஜப்பானிய யுத்த மந்திரியான ஜனரல் அராக்கியும் அவரது தோழர்களும் ஜப்பானில் ஒரு புதிய அபிலாஷையைக் கிளப்பிவிட்டார்கள். ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் முழுப் பலத்தையும் மனப்பான்மையையும், மேற்குப் பசிபிக் ஏகாதிபத்திய மொன்று

கட்டுவதில் திருப்பிவிட்டார்கள். (இதை யவர்கள் ஒரு பெரும் வீர லட்சியமாகக் கருதுகின்றனர்.) அந்த ஏகாதிபத்தியத்தையும் இந்தத் தலைமுறையின் காலத்திலேயே கட்டி முடிக்க வேண்டுமென்பது அவர்களது அபிலாஷை.



டல்லாஸ் "கியூஸ்"] [நாட்

பெரிய ஏகாதிபத்தியத் திட்டத்துடன் ஜப்பான் வெளிக்கிளம்புகிறது. ஆனல் அய்யோ, அடுத்த முக்கில் கரடி (ரஷியா) முறித்துப் பார்க்கிறதே!

அவர்கள் கற்பனைசெய்யும் அந்த ஏகாதிபத்தியத்திற்கு, நான்னி, ஸுங்கேரி, ஆமூர் என்ற மூன்று சமவெளிகளும் அவசியமாக விருக்கின்றன. அந்த ஏகாதிபத்தியத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்ய இந்த மூன்று பிரதேசங்களும் அத்தியா வசியமாக விருக்கின்றன.

இந்த பிரதேசங்கள் திறந்த சமவெளிகள். ஏரையும், டிராக்டர் மோட்டார்களையும் சுலபமாக உபயோகித்து மொத்த ஜப்பானியரில் மூன்றில் ஒருபங்கினருக்கு உணவளிக்கமுடியும். இப்பொழுது ஜப்பானியர்கள் ரொட்டி உண்ணப் பழக்கப்பட்டு வருகின்றனர். அதுபோலவே "காம் சட்கா" மாகாணமும், அதன

ருகிலுள்ள மீன் பிடிக்கும் பிரதேசங்களும் ஜப்பானியர்களுக்கு ரொம்ப அவசியமானவை.

ஜப்பானின் மீன் பிடிக்கும் தொழில் உலகத்திலுள்ள ஒரு பெரிய தொழிலல்ல. ஆயினும் அது ஜப்பானிலுள்ள தொழில்கள் எல்லாவற்றிலும் பெரியது. இந்த அடிப்படையான ஒரு தொழிலைக் காப்பாற்றுவதற்காக ஜப்பான் அடிக்கடி ரஷியாவுடன் உடன்படிக்கை ஷரத்துகளைப்பற்றிச் சச்சரவுகள் செய்துகொண்டிருக்க முடியாது. அது ஜப்பானின் ஜனங்களுக்கு வேலையளிக்கவும் உணவளிக்கவும் அத்தியாவசியமான ஒரு தொழில். அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள கப்பல்களும், அவற்றின் அதிகாரிகளும் ஜப்பானிய ஏகாதிபத்திய கப்பல் படையின் அதி முக்கியமான ஒரு அங்கம். ரஷியக் கடல்களில் மீன் பிடிக்கச் செல்லும் ஜப்பானியர்களை "கேபேயூ"க்கள் துரத்திவிடுகிறார்கள். அவர்களுக்கு 'பூச்சாண்டி" காட்டுவதற்காக ஜப்பான் அடிக்கடி பீரங்கிப் படகுகளை அனுப்பிக்கொண்டேயிருப்பது சாத்தியமில்லை.

ரஷியா தனது மீன் பிடிக்கும் தொழிலுக்கு ஒரு ஐந்து வருஷத் திட்டம் போட்டது. ஸியாட்டில், அலாஸ்கா நாடுகளிலிருந்து நிபுணர்களைத் தருவித்து ரஷியா மீன் பிடிக்கும் ஸ்தாபனங்கள் கட்டியது. அது முதல் ரஷியா ஜப்பானுக்கு அந்தக் கடலின் மீன் பிடிக்கும் பாத்தியதையை குத்தகை கொடுப்பதில்லை. அத்துடன் ஜப்பான் அந்தப் பிரதேசங்களில் நுழைய இடம் கொடுப்பதுமில்லை. இருந்தாலும் ஜப்பானிய பீரங்கிப் படகுகள் அடிக்கடி குறுக்கிட்டு அந்தப் பிரதேசங்களில் மீன் பிடிக்கும் தொழிலை நடத்தி வருகின்றன. இந்தத் தொல்லையை ஒரேயடியாக ஒழித்துவிட்டாலென்னவென்று ஜப்பான் கருதுகிறது.

"பேய்கால்" எல்லை

"பெய்கால்" ஏரியையடுத்துள்ள ஒரு எல்லைப் பிரதேசமிருக்கிறது. இந்த ஏரிக்கும் கோபி பாலைவனத்திற்கும் இடையில் 200 மைல் தூரமுள்ள ஒரு பிரதேசமிருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் பல கோட்டைகளிருக்கின்றன. இரண்டொரு ஆகாயவிமானத் தளங்களிருக்கின்றன. இந்த இடைப் பிரதேசம் ஜப்பானுக்கு மிக மிக அத்தியாவசியமான ஒரு தேவை. ராணுவக் காரணங்களாலும், ஜப்பானின் பலத்தை உறுதி செய்யக்கூடிய காரணங்களாலும் இந்தப் பிரதேசம் ஜப்பானுக்கு ஒரு முக்கிய எல்லைப்புறமாகவிருக்கிறது.

பெய்கால் ஏரி உலகத்திலுள்ள குடி தண்ணீர் நிலைகள் எல்லாவற்றிலும் பெரியது. (இந்தப் பிரதேசத்தைச் சுற்றி ஒரு நவீன

காலத்துப் படை வடக்கேயோ தெற்கேயோ போவது சாத்தியமேயில்லை) ஜப்பான் இப்பொழுது ரஷியாவிற்கு எதிராக 2000 மைல்கள் விஸ்தீரணமுள்ள எல்லைப்புறத்தைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. இப்பொழுதுள்ள நிலைமையில் மஞ்சூரியாவும் கொரியாவும் ரொம்ப பலஹீனமான ஸ்தானங்கள். இந்தப் பெய்கால்—சைபிரியா ப்ரதேசம் கிடைத்துவிட்டால் நிலைமை முற்றிலும் மாறிவிடும். அப்பொழுது ஜப்பான் அசைக்கமுடியாத பலமுள்ளதாகிவிடும்.



''பக்கு''] [ஒஸாகா

ஜப்பானிய ஜெனரல் அராக்கி ராணுவத்துக்கு நிதி திரட்டும் வித்தை.

யுத்த மந்திரி ஜனரல் அராக்கியின் சொந்தமான "உதிர சகோதரத்துவ" சங்கம் ஒன்றிருக்கிறது. கூடிய சீக்கிரம் இந்த முக்கியமான எல்லைப்புற விஷயத்தை "சரிப்படுத்த" வேண்டுமென்று அந்த சங்கம் அராக்கியை வற்புறுத்துகிறது. அவ்வாறு சரிப்படுத்தி, ஜப்பானியர்கள் சீனாவுக்கும் பசிபிக் எல்லைக்கும் தாராளமாய் போய்வர வழியுண்டாக்கிக் கொடாவிட்டால் ஜெனரல் அராக்கியைக் கொன்றுவிடுவதாக அந்தச் சங்கம் பயமுறுத்துகிறது. (ஜப்பானில் இத்தகைய கொலைகளுக்கு "தேசபக்திக்கொலைகள்" என்று பெயர்.)

நான்காவது ஜப்பானின் முக்கியமான இராஜீயக் கொள்கையாகிய "சீனாவைக் கைப்பற்றுதலு"க்கு இன்னொரு காரியம் நடந்தேறவேண்டியது அவசியம். இதற்கு ஜப்பான் "அகில ஆசிய ஐக்கியம்' அல்லது "ஆசிய மன்ரோ தத்துவம்" என்று பெயரிட்டிருக்கிறது. இந்தக் கொள்கை நிறைவேற வேண்டுமானால் ஜப்பான் ரஷியாவை பசிபிக் தீரத்திலிருந்து அப்புறப்படுத்தவேண்டும். ரஷியாவை சீனாவினிடமும் தென்கடல் பிரதேசத்தினிடமும் நெருங்கவிடாமல் தடுக்கவேண்டும். ஆசிய ஜாதியினரிடையே ரஷியாவிற்குள்ள மதிப்பைச் சிதைக்கவேண்டும். ஜப்பான் அல்-

லது ரஷியா இரண்டில் ஒன்றுதான் ஆசியாவில் தலைமை வகிக்க வேண்டும். ஜப்பான் அல்லது ரஷியா இருவரில் ஒருவர் சீனவி லுள்ள "எண்ணெ வியாபாரத்தை" அனுபவிக்கவேண்டும்—(இது ஒரு உதாரணம்.)

ஐந்தாவதாக, ஜப்பானியக் கலாசாலைகளிலும், தொழிலாளர் பிரதேசங்களிலும் பொது உடைமை வாதம் தலையெடுத்துக்கொண் டிருக்கிறது. இது ஜப்பானின் கொள்கைக்கு முற்றிலும் விரோத மானது. அதை நசுக்குவது ரஷியாவை ஆசியாவிலிருந்து மூன்றி லொருபங்குதூரம் மேற்கே துரத்தினால்தான் சாத்தியமாகும். இப்பொழுது ஜப்பானிய சிறைகளில் மூவாயிரம் பொதுவுடைமை வாதிகள் கைதிகளாக விருக்கிறார்கள். ஜப்பானிய வரவு செலவுத் திட்டத்தில் "பயங்கரக் கொள்கைகளை" அடக்குவதற்காக அநேக லட்சம் யென்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன.

என்னுடைய நண்பரொருவரிடம் ஜனரல் அராக்கி சிறிது காலத்திற்குமுன் சொன்னார். "ஸோவியத் எங்களைத் தொந்திரவு செய்வதை நிறுத்தாவிட்டால், நான் சைபீரியாவைத் துடைத்து விட நேரும்!" என்று. தவிர ஜப்பான் தனது அபிலாஷைகளை எதிர்க்கும் இரண்டு பெரிய தேசங்களுக்கிடையில் எப்பொழுதும் கவலையுடனிருந்துகொண்டேயிருப்பதும் சாத்தியமில்லை.

எனவே ஜப்பானுடன் யுத்தம் நேராமல் தடுப்பது, பெய்கால் எல்லைப்புறப் பிரதேசத்தை, யுத்தமின்றி ஜப்பானுக்கு விட்டுக் கொடுப்பதால்தான் சாத்தியம் என்று ரஷியா கருதுகிறது. இது தான் தர்க்கவாதமான முடிவு என்று நினைக்கிறது.

ஸோவியத் ரஷியா இந்தப் பிரதேசத்தைத் தனது வசமிருத் திக்கொள்வதற்காக யுத்தம் செய்யுமென்று ஜப்பான் கருதவேயில்லை. இப்பொழுது தான் அது நிச்சயமாகத் தெரிந்துகொண்டிருக்கிறது ரஷியா யுத்தம் செய்யுமென்று. ரஷியா தன்னைத் தயார் செய்துகொ ண்டிருந்தது. அதனால் அது ஜப்பான் மஞ்சூரியாவில் ஸோவியத் துக்குச் சொந்தமான ரயில்வேக்களைப் பிடுங்கிக்கொண்டபொழுது பேசாமலிருந்துவிட்டது. அதன் சம்பந்தமாக வியாபாரம் பேசக் கூட ரஷியா தயாராகவிருந்தது. ரஷியாவின் இந்த விட்டுக்கொடுக் கும் முறை ஜப்பானை ஏமாற்றிவிட்டது. இப்பொழுது ஜப்பானி யர் விழித்துக்கொண்டுவிட்டனர். இவ்வாறு ஏமாற்றப்பட்டதைக் கண்டு அவர்கள் தங்கள் தலைவர்களிடம் கோபமடைந்திருக் கின்றனர்.

பேரப் பேச்சு

1931 ம் வருஷம் செப்டம்பரில் நான் ஹார்பினில் ஜப்பானிய ஸ்தானிகத் தலைவராகவிருந்த குய்ச்சி ஓஹாசி என்பவரைச் சந்தித்துப் பேசினேன். அப்பொழுது தான் ஜப்பான் மஞ்சூரியாவிற்குள் குதித்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தது. இப்பொழுது ஓஹாசி மஞ்சூரியாவில் வெளிநாட்டு இலாகாவின் தலைவராக, ரஷிய ரயில் பாதை பேரத்தை நடத்தி வருகிறார்.

மிஸ்டர் ஓஹாசி ஸியாட்டிலில் ஒரு ஸ்தானிகராகவிருக்கையில் அவரை எனக்குத் தெரியும். அவர் என்னிடம் சில அழகிய போட்டோப்படங்களைக் காண்பித்து "நான் இப்பொழுதுதான் ஆமூர் நதிப் பிரதேசத்திற்குச் சென்று திரும்பிவந்தேன். நான் அந்தப் பிரதேசத்தை ஜப்பான் சார்பாக விலைக்கு வாங்க உத்தேசித்து ஸ்தலத்திலுள்ள ஸோவியத் அதிகாரிகளுடன் பேரம் பேசினேன். அவர்கள் என்னைத் திருப்பி யனுப்பி விட்டார்கள்" என்று என்னிடம் சொன்னார்.

"அவர்கள் விற்பார்களென்று எதிர்பார்த்தீர்களா?" என்று கேட்டேன்.

"அவர்கள் உங்களுக்கு (அமெரிக்காவிற்கு) அலாஸ்காவை விற்றுவிடவில்லையா? அவர்கள் ஆமூர் வெளியை 50 கோடி டாலருக்கு எங்களுக்கு ஏன் விற்கக்கூடாது? அவர்களுக்கு அந்தப் பணம் கட்டாயம் தேவையே" என்று அவர் சொன்னார்.

இது உத்தியோக முறையில் நடந்த பேரமல்ல. "ரஷியா எப்படியானாலும் அந்தப் பிரதேசத்தை இழக்கவேண்டியது தான்" என்பதை ஸோவியத் எதிர்பார்க்கிறதா என்று உளவு அறியச் செய்த ஒரு தந்திரமேயாகும்.

ஆனால் பெய்கால் எல்லைப்பிரதேசத்தின் பலமின்றி ரஷியா அமெரிக்க ஐக்கிய மகாநாடுளின் ஒத்துழைப்பைப் பெறுவது சாத்தியமில்லை. அதுதான் ரஷியாவின் கையிலுள்ள முக்கிய விசை. பஸிபிக் தீரத்திலுள்ள ஆசியாவில் ரஷியா தன் தத்துவத்தையும் தலைமையையும் பரப்புவதற்கும் இந்த எல்லைப்பிரதேசம் அத்தியாவசியமாகும்.

எனவே இரண்டு நாடுகளும் யுத்தத்தை எதிர்பார்க்கின்றன. ஆனால் அமெரிக்கா தனக்குவேண்டிய பொருள்களை திரட்டிக்கொடுக்கவேண்டும். அதை (அமெரிக்காவை)அதற்குக் கட்டுப்படுத்தும் நிலைமை யேற்படும் வரை ரஷியா யுத்தத்தை ஆரம்பிக்காது நம்

முடைய (அமெரிக்கப்) பொருள்கள் ஜப்பானிய கப்பல் படையைத் தாண்டிச்செல்ல முடியுமானால் போதும். ரஷியா அரண்கட்டிக் கொண்டு விட்ட தென்னலாம். இல்லாவிட்டால் நாமும் (அமெரிக்கா) அந்த யுத்தத்தைப்பற்றிக் கவலையடைய வேண்டியவர்களே.



டிட்ராயிட் நியூஸ்''.] [தாமஸ்

ஒரு பக்கம் ரஷியாவும் மற்றொரு பக்கம் அமெரிக்காவும் கை குலுக்குவது தமது தலையை உடைப்பதாக ஜப்பானியர் கருதுகின்றனர்.

ஜப்பானோவென்றால் ரஷிய ஆகாயப்படையைக் கருதியே யுத்தத்தை ஆரம்பிக்கப் பயப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜப்பானின் முக்கிய நகரங்களான, சென்டேம், டோக்கியோ, கியோடோ, நாகோயா, ஒஸாகா, யோகோஸுகா, ஸாஸாபோ, முதலிய பட்டணங்களிலிருந்து ஆறு மணி நேரப் பிரயாண தூரத்தில் சுமார் இருநூறு ரஷிய விமானங்கள் காத்திருக்கின்றன. இந்த நகரங்கள் வியாபார ஸ்தலங்களாக விருப்பதைத் தவிர அவற்றிற்கு வேறு பலமில்லை. இந்த நகரங்கள் வெறும் தீப்பெட்டி பலகைகளாலும் காகித தட்டிகளாலும் கட்டப்பட்டவை. 1923ம் வருஷத்திய பூகம்பத்தையும் தீயையும் இன்னும் ஜப்பானியர் மறந்துவிடவில்லை. சில வெடிகுண்டுகளே ஜப்பானிய பொது ஜனங்களுக்கு எவ்வளவு சேதம் விளைவித்து விடக்கூடுமென்பதை ஜப்பான் உணர்ந்திருக்கிறது.

ஜப்பானிய யுத்த நிபுணர்கள் ''இந்தத் தொல்லையை ஏற்கனவே நீண்டகாலம் வளர விட்டாய் விட்டது. சீக்கிரமாகவோ தாமதித்தோ இந்த ஆபத்தை எதிர்த்துத்தான் தீரவேண்டும்'' என்கிறார்கள். ஆயினும் அடுத்த வசந்தகாலம் வரை ஜப்பானின் ஆகாயப் பாதுகாப்பு முஸ்தீபுகள் முடிவடையா. சென்ற கோடை காலத்தில்

ஓஸாகாவிலும் டோகியோவிலும் நடந்தது போன்ற "பொது ஜன அபாயகாலப் பயிற்சிகள்" ஏற்பாடு செய்யப் படுகின்றன.

ரஷியாவின் நிலைமை இன்னும் அபாயகரமாக விருக்கிறது. அதன் மத்தியஸ்தானத்தைத் தொட முடியாதென்பதுதான் இதில் விலக்கு. இப்பொழுது மங்கோலியாவில் வைக்கப்பட்டுள்ள ஜப்பானிய சைனியம் மோட்டார்கள் மூலம் ஆயிரம் மைல் தூரம் வரை சைபீரியாவைத் தாக்க முடியும். ஒரு "வெள்ளை ரஷிய" உளவாளி ஒருபாலத்தையோ அல்லது ரயில் பாதையையோ இலகுவாக உடைத்தெறிந்து விடக்கூடும். பெய்கால் எல்லைப் பிரதேசத்திலுள்ள பனிரண்டரை லட்சம் படைகளும் கடல் புறத்திலும் நிலப் புறத்திலும் வெளிச் சம்பந்தமின்றி விடப்படக்கூடும். ஏற்கனவே அந்தப் பிரதேசம் பஞ்சகால நிலைமையி லிருக்கிறது. இது தான் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தோன்றும் நிலைமை.

ஆனால், இரண்டே மாத காலத்திற்குள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் ஜப்பான் தகராறு செய்து கொள்ளும் நிலைமை வந்து விடுமென்று ரஷியர்கள் நம்புகின்றனர்.

நான் மாஸ்கோவில் வெளிநாட்டிலாகா உதவி கமிஷனரைக் கண்டு பேசினேன். ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றி யிருந்த சமயம். "இதைப்பற்றி ரஷியா என்ன செய்ய உத்தேசம்?" என்று அவரைக் கேட்டேன்.

"ஜப்பான் அமெரிக்காவைத்தான் அதிக அவமானத்திற்குள்ளாக்கி யிருக்கிறது. 1922ம் வருஷம் வாஷிங்டனில் நடந்த உடன் படிக்கையின் ஷரத்துகளை உடைத்தெறிந்திருக்கிறது. அமெரிக்கத் தலைவர் வுட்ரோ வில்ஸன் ஸ்தாபித்த சர்வதேச சங்கத்தை அவமதித் திருக்கிறது.

"அமெரிக்காவின் "சீனக் கொள்கை"யை அது தூளடித்து விட்டது. பாரிஸில் கெல்லாக் சிருஷ்டித்த உடன் படிக்கையை மீறி யிருக்கிறது. "இதைப்பற்றி அமெரிக்க என்ன செய்யப் போகிறது?" என்ற கேள்விக்கு அமெரிக்கா வெகு சீக்கிரத்தில் பதில் சொல்ல வேண்டி வரும். அதுவரை ஸோவியத் பொதுவுடைமை சர்க்கார் காத்திருக்கலாம்" என்பதுதான் அவர் அளித்த பதில்.

மகாத்மா வாழ்க்கை

:: உண்மை பேசும் வக்கீல் ::

மகாத்மாவின் வாழ்க்கை எந்தத் துறையிலும் மனித வர்க்கத்துக்கு ஓர் ஆதாரமாக, வழி காட்டியாக, லக்ஷியமாக இருக்கத்தக்க தொன்றாகும் என்பதில் சந்தேகமில்லை.

மகாத்மா காந்தி இன்று தம்மை ஓர் விவசாயி யென்றும், நெசவுக்காரன் என்றும் சொல்லிக் கொள்கிறார். இந்த வாழ்க்கைக்காக, இந்தத் தொழிலாளிகளில் ஒருவராகத் தம்மைச்சொல்லிக் கொள்ள, அவர் பல பெரிய பயிற்சிகளையும் சோதனைகளையும் தாண்டியிருக்கிறார் என்பது உண்மையே.

ஆனால் அவர் இளமையில் பள்ளிக்கூடத்தில் தம்மை தயார் செய்து கொண்டது இந்த வேலைக்கல்ல. அவர் ஓர் பிரபல வக்கீலாக இருந்து தொழில் நடத்தி ஜீவனம் செய்வதற்காக ஆயிரக் கணக்கான ரூபாய் செலவிட்டுப் படித்தவர். அவர் தென்னாப்பிரிக்கா சென்றதும் இந்தத் தொழில் காரணமாகத்தான்.

ஆப்பிரிக்காவிலும்இந்தியாவிலும் அவர் வக்கீல் தொழில் நடத்தியுமிருக்கிறார். தனக்குத் தெரிந்த உண்மைகளை மறைத்து கட்சிக்காரரையும் சாட்சிகளையும் தன் கட்சிக்கு அநுகூலமாகப் பொய் சொல்லவைப்பது தான் சாதாரணமான வக்கீல்களின் வேலையாக இருக்கிறது. ஆனால் மகாத்மா தாம் வக்கில் தொழில் செய்த போது பொய்யும் கூறியதில்லை. உண்மையையும் மறைத்ததில்லை.

வழக்கு ஜெயித்தால் இவ்வளவு பீஸ், தோற்றால் இவ்வளவு பீஸ் என்று அவர் பேரம் செய்துகொண்டதே கிடையாது. தன் கட்சிக்காரனிடம் தான் நியாயம் இருக்கிறது என்று நம்பினால் மட்டுமே அவன் பக்கம் ஆஜராவார். வழக்குப் பாதி நடக்கும்போது கூட தனக்கு உண்மை ஏதாவது புலப்பட்டால் அதை நீதிபதிகளிடம் சொல்லிவிடுவார். அவர் வக்கில் தொழில் நடத்திய விதத்தை விளக்க சில உதாரணங்கள் இங்கு தருகிறோம்.

பம்பாயில் ஒரு பெரிய வழக்கு நடந்தது. கணக்கு விஷயமான தகராறு. இதில் மத்தியஸ்தர்கள் காந்திஜியின் கட்சியாருக்கு அநுகூலமாக ஒரு முடிவு செய்தார்கள். எதிரி கட்சியார் இதன் மீது அப்பீல் நடத்தினார்கள். அப்பொழுது மகாத்மா தன் கட்சிக்காரனுடைய கணக்கு புஸ்தகத்தைப் பார்த்தார். அதில்

வரவு கலத்தில் இருக்க வேண்டிய ஒரு தொகை பற்றுக் கலத்தில் இருந்தது.

"இந்தத் தவறை நான் கோர்ட்டில் போய் ஒப்புக்கொள்ளப் போகிறேன்" என்றார் காந்திஜி. அவருடன் இந்த வழக்கில் ஆஜரான பெரிய வக்கீல் அவ்வாறு செய்தால் கணக்கு முழுவதும் பொய்யாய் விடும் என்று கூறினார். மகாத்மா வற்புறுத்தினார். அப்படியானால் நான் இந்த வழக்கில் ஆஜராக முடியாது என்றார் பெரிய வக்கீல்.


கடைசியாக கட்சிக்காரன்பாடு தர்ம சங்கடமாய் விட்டது. தவறை ஒப்புக்கொண்டால் கணக்கு முழுவதும் பொய் என்று ஏற்பட்டுவிடும். இந்தத் தவறை இது வரை எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இனிமேலும் கண்டுபிடிக்க முடியாது. என்ன செய்வது? எதிரிகள் இந்தத் தவறை எடுத்துக்காட்டினால் அதன் பிறகு நாம் ஒப்புக்கொண்டால் போதாதா என்றான் கட்சிக்காரன். அது முடியாது என்றார் காந்தி. என்ன செய்வது? பேய்க்கு வாழ்க்கைப்பட்டால்—!

வழக்கு நடந்தது. காந்திஜி தான் சொல்லியபடியே செய்தார். உடனே எதிரி வக்கீல் அதையே தம்முடைய பலமாகக் கருதி வாதாடினார். இருந்தாலும் கடைசியில் நீதிபதிகள் காந்திஜி பக்கமே தீர்ப்புக்கூறினார்கள்.

ஜோன்ஸ் பர்க்கில் காந்திஜி ஒரு வழக்கு நடத்திக் கொண்டிருந்தார். ஆனால் தன் கட்சிக்காரனை குறுக்கு விசாரணை செய்த போது அவன் சொல்லிய பதில்கள் சந்தேகத்துக்கிடமாக இருந்தது. உண்மையைச் சொல்லும்படி காந்திஜி வற்புறுத்தினார். கட்சிக்காரன் உண்மையை ஒப்புக்கொண்டான். தன் கட்சிக்காரனுக்கு விரோதமாக தீர்ப்பளிக்கும்படி காந்திஜி மாஜிஸ்டிரேட்டைக் கேட்டுக்கொண்டார். "அதற்காக கட்சிக்காரன் என்மீது கோபங்கொள்ளவில்லை யென்று எனக்கு ஞாபகம்" என்று காந்திஜி எழுதியிருக்கிறார்.

இந்த சம்பவம் ஆபிரிக்காவிலுள்ள வெள்ளைக்கார வக்கீல்களிடையே மகாத்மாவுக்கு அதிகமான மதிப்பை ஏற்படுத்தியது.

வக்கீல்களெல்லோரும் அல்லது பெரும்பான்மையோராவது இப்படியிருந்தால் தற்காலம் கோர்ட்டுகளில் உள்ள கூட்டத்தில் பாதிக்குமேல் குறைந்து விடாதா?



—காரில் இருவருமாய் செல்கிருர்கள்.

பெண்மை: பழையதும் புதியதும்

(ஒரே அங்கத்தில் முடியும் நாடகம்)

[எழுதியவர்:—திரு. வி. வா.]

முகவுரை

ருஷியாவில் புரட்சி முடிந்தபின் ஓர் புத்துயிர் உண்டாகி இலக்கியங்கள் தோன்றின. மிகச் சாதாரணமானவர்கள் கூட ஆச்சரியகரமான கதைகளும், நாடகங்களும், கற்பனு நூல்களும் இயற்றினர்.

சோவியத் காலத்தில் ருஷியா விருக்கிற நிலைமையைச் சரித்திரக்காரரை விடத் தெளிவாயும் உண்மையாகவும் இந்நூல்கள் விளக்குகின்றன.

இக்கதை ருஷிய பாஷையில் "எபிம் ஸோஸுல்யா" என்பவர் எழுதிய "தாய்" என்ற சிறு கதையைத் தழுவி எழுதப் பட்டது.

I

தாயும், மகளும்

தாய்:—கோகிலம், இந்தக் கோணவகிடும், நுனியில் முடியாத பின்னலும், முகத்துக் கோலப் பொடியும் வேண்டாமடி. எவ்வளவு நான் சொன்னாலும் கேட்கமாட்டேனென்கிறாயே?

கோகிலம்:—உம்—ஆரம்பித்து விட்டாயா உன் பழங் கதையை!

தாய்:—அதுதான் போகட்டுமென்றாலோ இந்தக் கையில்லாத ரவிக்கையும், அரை மார் தெரியும் ரவிக்கையும், அங்கம் தெரியும், கொசுவானில்லாத புடவையும் எதுக்கடி. இது நம்முடைய குலங் கோத்திரத்திற்கு அழகா? உனக்கோ வயது 16 ஆகி விட்டது. உன் வயதில் நான் இரண்டு பிள்ளை பெற்றாகி விட்டது. நீயோ வருகிற வரன்களை யெல்லாம் கேலி பண்ணித் தள்ளிவிடுகிறாய். உன் விசாரமே எனக்குப் பெரிதாயிருக்கிறது.

கோகிலம்:—போதும். நிறுத்து இந்த இழவையெல்லாம்.

தாய்:—அதென்னடி கலியாணப் பேச்செடுத்தால் இழவு என்கிறாய். அவளொருத்தி பவானி-தலையில் இடிவிழ-தையல் வேலை செய்கிறேன், பூநூல் வேலை செய்கிறேன், கதர் விற்கிறேன், என்றெல்லாம் ஊரில் ஒரு கண் காட்சியில்லாமல் போய்க் கொண்டு தடிதடியாய் ஆண் பிள்ளைகள் கூடி யிருக்கிற இடத்திலெல்லாம் இடித்துப் புகுந்து கொண்டு பேச முன்வருவது போராதா? வெட்கக் கேடாயிருக்கிறது. அவளைத்தான் தண்ணீர் தெளித்து விட்டாயிற்று என்றால், நீ கலியாணமாவதற்கு முன்னமேயே புறப்படுவாய் போலிருக்கிறதே-ஏதடி காலம்! உன்னோடு வார்த்தை சொல்லவே பயமாயிருக்கிறது.

கோகிலம்:—வாயை யடைத்துக் கொண்டு கிட. ஏதேனும் பொங்கிப் போட்டால் தின்று விட்டுப் பள்ளிக்கூடம் போகிறேன். இல்லாவிட்டால் சோமா விலாஸில் மேஜை போட்டு, நல்ல கட்டித் தயிர் போட்டுக்கொண்டு சாப்பிட்டுவிட்டுத் தொலைகிறேன். என்ன, சமையல் ஆயிற்றா இல்லையா?

தாய்:—சரி இதற்காக நீ கிளப்புக்கு வேறே 8 அணா கொடுப்பதுடன் அங்கே தின்று விட்டு நாளைக்கு ஜுரத்துடன் படுத்துக் கொள்ள வேண்டும். டாக்டருக்கு வேறே கொடுக்கவேணும்.

பணந்தான் போகிறது என்றாலும், இந்தத் தள்ளாத வயதில் என்னால் தேகத்தால் படமுடியவில்லை.

கோகிலம்:— நீ கண் மூடிவிட்டால் உலகம் அஸ்தமித்துப் போய் விடுமோனே; எவ்வளவோ ஆஸ்பத்திரிகள் கிடக்கின்றன. போனால் ராஜ வைத்தியஞ் செய்கிறார்கள். இல்லா விட்டால் தானென்ன; டாக்டர் பாலுவுக்குச் சொல்லியனுப்பினால் அன்பிற் காகவே வந்து பார்த்துவிட்டு மருந்து அனுப்புகிறார். வண்டிச் செலவுகூட செலவில்லை. அவர் மோட்டாரையே உபயோகிக்க லாம்.

தாய்:—சரி; சரி; அவனை வேறே சந்தியிலே யிழுக்கப் போகிறாயோ? சிநேகம் நல்லதிற்கு ஏற்படவில்லை; ஏதோ அனர்த்தம் வரப்போகிறது.

கோகிலம்:—சரி! நான் புறப்பட்டாய் விட்டது. இன்றைக்கு கால் மணியாவது நேரங்கழித்துத்தான் போய்ச் சேருவேன் போலிருக்கிறது.

தாய்:—பிளேட் அலம்பிப்போட்டு பரிமாறி அரைநாழி யாகிறது. உனக்குப் பௌடர் ஒத்திக்கொண்டு, யிச்சோடோ போட்டுண்டு, பூவைக் கண்ணாடியில் பார்த்து அலங்கரித்துக்கொள்ள நாழியாச்சுனால் நானா பாத்தியம்?

கோகிலம்:—சாப்பிடுகிறேன்.

[சாப்பிட்டுக் கை அலம்பும்போது மோட்டார் சப்தம் கேட்கிறது.]

தாய்:—டாக்டரை வரச்சொல்லி யிருந்தாயா? என்ன அவர் "கார்" வருகிறதே.

கோகிலம்:—நிறுத்தச்சொல்லு, நல்ல வேளையாய்ப்போச்சு; போகிற வழியில் காலேஜில் கொண்டுபோய் விடச்சொல்லுகிறேன்.

[காரில் இருவருமாய்ச் செல்லுகிறார்கள்.]

தாய்:—மூற்றிப்போய்விட்டது. உம்—

(II)

மக்களின் போக்கு.

[கோகிலத்தின் கிழத்தாய்க்கு மற்றொரு மகளுண்டு. அவள்தான் முன்னர் கூறப்பட்ட பவானி.]

பவானி:—வா, அம்மா, இந்தக் கொட்டுகிற மழையில், ஒரு தாழங்குடை கூட இல்லாமல், வெறும் துப்பட்டியைப் போர்த்திக் கொண்டு எதற்காக வந்தாய் ?

தாய்:—வரும்பொழுதே எதற்காக வந்தாயென்கிறாயா ? வேண்டாமெனில் திரும்பிப்போய் விடுகிறேன். ஆனால் எனக்குப் போக்கிடமேது? ஒன்று அவள் வீட்டில் விழுந்து கிடக்கவேணும், இல்லாவிட்டால் உன் வீட்டில் வந்து மறியவேண்டும்.



"உன் விவகாரத்தை யெல்லாம் ஆரம்பிக்க வேண்டாம். அயல் மனிதர்......"

பவானி:—சரி, அவளிடம் சண்டை போட்டுக்கொண்டாய் விட்டதா ? வெளியில் மழையில் நிற்காதே; உள்ளே வா பேசிக் கொள்ளலாம்.

[இருவருமாய் உள்ளே செல்கிறார்கள்.]

பவானி:—'மிஸ்டர் கோபால்! என் தாயாரை உங்களுக்குத் தெரியாதே. மூன்று மாதமாய் என்னிடம் கோபித்துக்கொண்டு

போய் என் தங்கை கோகிலத்துடன் போய் இருந்தாள். அவளிடம் இப்பொழுது கோபம், இங்கே வந்துவிட்டாள். (சிரிக்கிறாள்)

தாய்:—[மனதிற்குள்] ["இங்கேயும் ஒரு தடியன் இருக்கிறான். சரி நாம் இதெல்லாம் பார்க்காமல் கண்ணடைக்கக்கூடாதா. இன்னும் பொறிபோட்டு வைத்திருக்கிறானே சிருஷ்டித்த அந்தக் கோயில் இல்லாதவன்"]—"ஏண்டியம்மா என்னைக் கண்டால் உங்களுக்கு எல்லாம் ஏகதாளந்தான் உங்கள் இரண்டு பேரையும் பெற்ற வயிற்றில் பெரண்டையை வைத்துக் கட்டிக்கொள்ளலாம். என் வயிற்றில் பிறந்த நீங்களே இப்படிப் பேசினால் ஊராருக்கு இன்னும் எளிசுதானே ?

பவானி:—சரி; உன் விவகாரத்தை யெல்லாம் இங்கே ஆரம்பிக்கவேண்டாம். அயல் மனிதர் இருக்கிறாரே என்றுகூட உனக்குக் கண் தெரிகிறதில்லே.

தாய்:—ஆமாம்; அதுதான் கண்ணவிந்து போய்விட்டதே. நீங்கள் இரண்டு பேரும் செயயும் அகிருத்தியங்கள் தான் என் கண்ணை அவித்துவிட்டது. நல்லவேளையாய்த் தெரியவில்லையே என்றிருக்கிறேன்; உங்களழகைப் பார்க்கக் கண் வேறே வேண்டுமா ?

பவானி:—காதும் அடைத்துவிட்டால் தேவலே. ஒருவர் பேசுவதும் காதில் விழாமல் இருக்கும். சண்டை போடாமல் சோத்தைத் தின்றுவிட்டு "சிவா" "ராமா" என்று விழுந்து கிடப்பாய்.

தாய்.—சோத்துக்கும் துணிக்கும் விதி யிருந்தால் ஏதோ கால்படி அரிசி பொங்கித் தின்றுவிட்டு கோயில் குளம், க்ஷேத்திரங்களுக்குப் போய், எடுத்த ஜன்மத்தையாவது தொலேக்கலாமே. உங்கப்பா எல்லாத்தையும் உங்க இரண்டுபேர் பேரிலும் எழுதி வைத்துவிட்டு, என்னே யாராவது ஒருவரிடம் இருக்க உயில் எழுதி வெச்சதினால் தான் இப்படி என்னே விரட்டுகிறீர்கள். எனக்கு நாலு காசு இருந்தால் இப்படி ஏசுவீர்களா ?

பவானி:—சரி, சரி கதையை நிறுத்து.

தாய்:—ஆமாண்டி. அவள் மாட்டுக்கும் காலேஜில் படிச்சு பெரிய "பெப்பே," "பி. ஏ." "எம். ஏ." பாஸ் பண்ணிய பின் தான் கலியாணஞ் செய்துகொள்ளுவேன் என்று திரியட்டும். தினம் பந்தாட்டம், பீச்சுக்கு அந்தத் தடிக்கட்டாலே போறவன் பாலு டாக்டர் மோட்டாரில் இழுத்துண்டு போறான். ஊர் சிரிக்கிறது. மானம் போறதுன்னு உன்கிட்டவந்தால் நீயும் விரட்டியடி,

பவானி:—ஐயோ அம்மா சும்மாயிரேன்.

தாய்:—இனிமேல் சும்மாயிருக்க என் வாயும் அடைத்து, அரைகுறையாய்த் தெரியும் கண்ணும் மூடி சுடுகாட்டில் என்னை வெச்சுப் பொசுக்கினால் அப்புறம் தெரியும் உங்க திண்டாட்டம்.

பவானி:—ஆமாம் கொள்ளை நரி கண் மூடிவிட்டால், உலகமே மாய்ந்துவிடும்.

தாய்:—உனக்கென்ன. உம்—இப்பொழுதாவது இந்தக் கிழடு இருக்கேன்னு பார்க்கணும். அப்புறம் தாராளமாய் எங்கேயானு னும் காங்கிரசு, கண்காட்சி, மீட்டிங்கு, பறைச்சேரி எங்கேயும் தொலைபலாம். கேள்வி, முறை, கட்டுப்பாடு, ஜாதி, ஆசாரம் ஒன் றும் பார்க்கவேண்டாம். ஏதோ உன் தலைவிதி இச்சன்மத்தில் தான் இப்படியாச்சுனால் ஏதேனும் நாலு எழுத்து படித்ததற்கு, ஆத்திலேயே ராமாயணம், பாகவதம், கீதை படித்தால் நானும் கேட்டுண்டு இரண்டுபேருமாய் காலந்தள்ளலாமோனே. அந்தக் கழுதை யெந்தக் குட்டிச்சுவருக்காவது போகட்டுமே?

பவானி:—இந்த கந்தபுராணத்தை யெல்லாம் கட்டிவைத்து விட்டு, சமையலறைத் தாழ்வாரத்தில் இந்தக் கம்பளியைப் போர்த் திக்கொண்டு படு. மிஸ்டர் கோபால் வந்திருக்கிறார். நாளைய தினம் வேலூர் கண்காட்சிப் பரிசளிப்புக்கு என்னையே தலைமை வகிக்க வேண்டுமென்று விரும்புகிறார். நான் வேலூர் ஜெயிலிலிருந்து இப்பொழுதுதான் விடுதலையானபடியால் வேலூர் ஜனங்களும் நானே வரவேண்டுமென்று கோருகிறார்களாம்.

கோபால்:—ஆமாம். நீங்கள் மறுக்கவே கூடாது. உள்ளூர் தீபாவளி கத்தர் விற்பனையை மற்றவர்கள் பார்த்துக்கொள்வார்கள் நான் நோட்டீஸ்கூட அச்சடிக்கக் கொடுத்துவிட்டேன். மத்தியா னம் எக்ஸ்பிரஸிலேயே போகவேண்டும்.

தாய்:—சரி நீ போ. "வேலையற்ற நாயே பாழும் வீட்டை காத்துக்கிட" என்று என்னைக் காவல் வைத்துவிட்டு நீ போக வேண்டும். என்ன இருந்தாலும் அவளே எனக்கு கதி. அங்கே திரும்பிப் போகிறேன்.

பவானி:—சரி மழையும் நின்றிருக்கிறது, போ.

[தாய் மறைகிறாள்.]

நாமிருவரும் தனித்திருப்பது இந்தக் கிழத்துக்குச் சகிக்க வில்லை. எனக்குத்தான் என்ன வயதாகிவிட்டது; இவளுடைய வயதென்ன.

கோபால்:—நாணலுடன் மறைந்திருந்தாலும் கரும்பு நாண லாகிவிடுமா? நாணலெனறு அதைக் களைந்தெறிந்துவிடுகிறதா? அதன் சுவையை யனுபவிக்க எவ்வளவோ பேர் இருப்பார்கள்.

பவானி:—ஏது! பெரிய கவியாகி வருகிறாப்போலிருக்கிறதே.

கோபால்:—இல்லை ஏதோ என் மூளையில் தோன்றிய கற்பனை.

பவானி:—சரி, ஒரு ரிக்ஷா தருவியுங்கள். ரயிலுக்கு நேரமாகி றது. நீங்கள் வருவதற்குள் நான் முகங்கழுவி, புறப்பட ஆயத் தஞ் செய்துகொள்கிறேன்.

[கோபால் சென்று ரிக்ஷாவுடன் வருகிறார்.]

கோபால்:—என்ன நாடகத்தில் உடை மாற்றுவதுபோ லிருக்கிறதே?

பவானி:—எப்பொழுதும் உங்களுக்குப் பரிகாசந்தான்.

கோபால்:—இந்தப் பட்டுச் சேலை எப்பொழுது வாங்கப் பட்டதோ.

பவானி:—தசராவின்போது மைசூர் எக்ஸிபிஷனில் வந் திருந்த பிஷ்ணுப்பூர் சில்க். அந்தப்பூ சித்திர வேலைகளெல் லாம் எவ்வளவு சிங்காரமாயிருக்கிறது பார்த்தீர்களா?

கோபால்:—இவையெல்லாம் அவ்வூரில் ஸ்திரீகளே தான் செய்கிறார்களாமே? பெண்கள் கைபட்டாலே அது ஒரு அழகு தான். இதை நீங்கள் உடுத்தியிருப்பதைப்பார்த்தால், "பாரே அழகுக்கு அழகு செய்வார்." என்பது நினைவு வருகிறது.

பவானி:—திரும்பவும் சேலியா?

கோபால்:—இல்லை அந்தப்பட்டுச்சேலையே அழகானது, அதி லும் பூவேலை இன்னும் அழகு, அதற்குமேல்...

பவானி:—போதும்! மேலே போகவேண்டாம்-ஏறுங்கள் வண்டியில். ரயிலுக்கு நேரமாகிவிட்டது.

[இருவரும் சென்டிரல் ஸ்டேஷன் போகிறார்கள்]

III

தாய் கோகிலத்தின் வீட்டிற்குச் சென்று பார்த்தபோது வீடு பூட்டிக்கிடந்தது. அடுத்த வீட்டு சேஷி,

"ஏண்டி சரஸ்வதி-உன் பெண் வந்தாள், உடனே அவசர மாய்க் கையிலே தோல் பெட்டியை எடுத்துண்டு அந்த டாக்டர்

பானுவோடேயே காரில் ஏறினுள். நான் வாசலிலே வந்து எட்டிப்பார்த்தேன். போகிற போக்கிலே எங்கம்மாவிடம், நான் மஹாபலிபுரம் பார்க்கப் போயிருக்கிறேன். இன்னிலேயிருந்து நாலு நாளைக்கு தீபாவளிக்கு லீவு. அம்மா வந்தாக்கே பார்த்துக்குங்கோன்னு சொல்லிவிட்டுப் போருள்."

தாய்:—போய்ட்டாளா?

சேவி:—என்டி சிறுசுதானே வேடிக்கையாய் போய்ட்டுத்தான் வரட்டுமே. காசு பணம் செலவா? அவன்தான் தெரிஞ்சவனுயிருக்கான்; காரிலேயே அழைத்துக்கொண்டுபோருன்; கொண்டு வந்து விட்டுடருன் இன்னிக்கு ஏகாதசி இங்கேயே பலகாரம் பண்ணு, வா உள்ளே.

தாய்:—"இருக்கட்டும் வரேன்," என்று சொல்லிவிட்டு சாயங்கால வேளையில் இருட்டுகிற சமயத்தில் மறைந்துவிட்டாள்.

IV

மறு நாள்

தினசரிப் பத்திரிகையில் மூன்று விஷயங்கள் ஏககாலத்தில் பிரசுரமாயிருந்தன.

(1)

சமுத்திரக்கரையில் அநாதை விதவையின் சவம்.

(2)

வேலூர் கண்காட்சி வைபவம்
ஸ்ரீ கோபால் பவானி விவாஹம்
தலைவர்கள் விஜயம்

(3)

நாகரிக விவாகம்
டாக்டர் பானு-காலேஜ்
மாணவி கோகுலத்தை மணக்கிறார்
பல பிரமுகர்களும், நண்பர்களும் விஜயஞ் செய்தார்கள்

V முடிவுரை

பிரேத விசாரணையில் குடும்பக் கவலையினுல் இறந்ததாக குறிப்பிடப்பட்டு சர்க்கார் செலவிலேயே சரஸ்வதிப்பாட்டிக்கு ஹரிஜன வீரபாகுவால் தகனம் நடந்தது.

டாக்டர் பானுவும், கோகிலமும் சென்னைக்குத் திரும்பினர். கோகிலம் (Intermediate) இன்டர் மீடியேட் பரீக்ஷை பாஸ் செய்துவிட்டு மெடிகல் காலேஜில் சேர்ந்துவிட்டாள்.

ஸ்ரீ கோபாலும், ஸ்ரீமதி பவானியும் மதுரையில் நடக்கும் தமிழ்நாட்டுத் தலைவர்கள் மகாநாட்டிற்குச் சென்றுவிட்டனர்.

பழையது கழிந்து, புதியது தோன்றிற்று.



வழிப்போக்கன் :—என்னை தயவு செய்து விட்டுவிடு. என்னிடத்தில் ஒன்றுமில்லை.

திருடன் :—மடியிலிருக்கும் மூட்டை என்ன ?

வழிப்போக்கன் :—அது சாத மூட்டை. பையில்தான் 100 ரூபாய் ரொக்கம் இருக்கிறது.

—டி. கிருஷ்ணமூர்த்தி, ஆலந்தூர்.

* * * *

சடையன் :—பில் கலெக்டர் வேலையிலா இருக்கிறாய்? அந்த வேலையிலிருப்பவரைக் கண்டாலே ஜனங்களுக்கு பிடிக்கிறதில்லையே.

பில்கலெக்டர் :—அதென்ன அப்படி சொல்லுகிறாய்? என்னைப் பிடிக்காமலா பிறகு வா என்று வேண்டிக்கொள்கிறார்கள்.

—எம். கந்தசாமி, சீயாழி.

* * * *

ராமன் :—(பால்காரனைப் பார்த்து) உனக்கும் இந்தப் பசுவுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறதப்பா. பசு சுத்தமான பால் தருகிறது. நீ தண்ணிப் பால் தருகிறாய்!

பால்காரன் :—இல்லை யஜமான், இன்னொரு வித்தியாசம் இருக்கிறது. பசு கடன் தராது. நான் கடன் கொடுக்கிறேன்.

—"இரவல்"

* * * *

யானைக்காரன் :—பய்யா, யானை பக்கத்தில் வராதே !

பய்யன் :—அடே அப்பா, நான் என்ன உன் யானையைக் கொன்றுவிடமாட்டேன். பயப்படாதே!

—"துபாஷ்"

* * * *

வம்பன் :—இந்த நண்பர் இருக்கிறாரே பார்த்தால் எவ்வளவு அசடு என்று தோன்றுகிறதோ அவ்வளவு அசடில்லை.

நண்பர் :—அதுதான் எனக்கும் இவருக்கும் உள்ள வித்தியாசம்.

—"துபாஷ்"

பய்யன்:—எனக்கு கலியாணம் செய்து வையுங்கள்.
தகப்பன்:—உனக்கு இன்னும் அநுபவம் வரவில்லை.
பய்யன்:—எனக்குப் போதிய அநுபவம் வந்துவிட்டதாக எப்பொழுது சொல்வீர்கள்.
தகப்பன்:—கலியாணம் வேண்டாம் என்று நீ உணர்ந்த பிறகு
—ராமையா, சைதாப்பேட்டை,

* * * *

வாத்தியார்:—(பையன்களைப் பார்த்து) இன்று எனக்கு பிறந்தநாள். என் வயது என்னவென்று யாருக்காவது தெரியுமா?
இராமன்:—தெரியும் சார்.
வாத்தியார்:—சந்தோஷம். சொல் பார்க்கலாம்?
இராமன்:—சார், எனக்கு இருபது வயதுள்ள தமையன் இருக்கிறான், அவனை எல்லோரும் 'ஸெமி கிராக்' என்று சொல்கிறார்கள்.

* * * *

ராமன்:—கிருஷ்ணா, நான் உன்னுடைய பிடிலை எடுத்து வாசிக்கிறேண்டா.
கிருஷ்ணன்:—ராமா நீ என்னுடைய பிடிலை வாசித்தால் நான் உன் கன்னத்தில் மிருதங்கம் வாசிப்பேண்டா.
—கே. ஆர். பழனியப்பா, புஞ்சைப் புளியம்பட்டி.

* * * *

கிட்டு:—ஏண்டா சுந்தரம் நேற்று இந்தியன் ஷோவில் எவ்வளவு லாபம் கிடைத்தது.
சுந்தரம்:—இரண்டணா லாபம்.
கிட்டு:—எப்படிடா உனக்குமட்டும் லாபம் கிடைத்தது.
சுந்தரம்:—எங்கள் வீட்டில் இந்தியன் ஷோவிற்கு போக இரண்டணா கொடுத்தார்கள், நான் போகாமலே இருந்ததால் லாபம்.
—எம். ஆர். எல். ஸ்வராஜ் குப்தா, கரூர்.

* * * *

ஐயர்:—பாருங்கள், நான் பாலில் தண்ணீர் கலப்பில்லாது டிக்ரி போட்டுப் பார்த்து வாங்குகிறேன்.
சாப்பிடுகிறவர்:—ரொம்பசரி, எங்களுக்கு திருப்பி கொடுக்கும் போதும் டிக்ரி போட்டு கொடுங்கள், *—எம்டன், கடலூர்.

* * * *

ஜட்ஜ்:—நான் எதற்காக இந்த ஸ்தானத்தில் யிருக்கிறேன் என்று நினைக்கிறாய்.

---

* 2 ரூபாய் பரிசு பெற்றவர்.

குற்றவாளி:—ஆயிரம் ரூபாய்க்காக.

—எஸ். கே. முத்து சத்தியமங்கலம்.

* * * *

உபாத்தியாயர்:—எவ்வகையான உயிர்களுக்கு முன் ஆகாரம் வரும்.

ஹோட்டல் முதலாளியின் புதல்வர்:—மேஜைக்கு முன் உட்கார்ந்துகொண்டு ஆர்டர் செய்யும் உயிர்களுக்கு ஆகாரம் கொண்டு வந்து வைக்கப்படும்.

—சே. விசுவநாதன், திருவாதி.

* * * *

கடை எஜமானர் தமது வேலையாள் ஒருவனைக் கூப்பிட்டு இதோ இந்த முக்காலணாவை எடுத்துக் கொண்டுபோய் ஸ்டாம்பு வாங்கி இக்கடிதத்தின் தலைப்பில் ஒட்டி தபால்பெட்டியில் போட்டு விட்டு வா என்று உத்தரவிட்டார்.

வேலைக்காரன் தபாலாபீசுக்குச் சென்று அதிக சந்தோஷத்துடன் திரும்பி வந்து எஜமானரிடம் முக்காலணாவைக் கொடுத்தான்.

கடை எஜமானர்:—ஏன், ஸ்டாம்பு ஒட்டவில்லையா ?

வேலைக்காரன்:—பலர் கூட்டமாக சந்தடியுடன் தபால் பெட்டியில் கடிதங்களைப் போட்டுக்கொண்டிருந்தனர். நான் அக்கூட்டத்தில் மெல்ல நுழைந்து ஒருவரும் அறியாதபடி ஸ்டாம்பு ஒட்டாமலே கடிதத்தைப் போட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்துவிட்டேன்.

—கே. எஸ். சிவப்பிரகாசம், திருக்குற்றாலம்.

* * * *

வாத்தியார்:—(மாணவனைப் பார்த்து) ஏண்டா, கலியாணஞ் செய்துகொள்ள முடியாதென்கிறாயாமே ? என்ன காரணம் ?

மாணவன்:—கலியாணம் செய்துகொண்டால் குடும்பபாரத்தைச் சுமக்கவேண்டுமோம். ஏட்டு மூட்டை கூட சுமக்கமுடியாத நான் குடும்பபாரத்தை எப்படிச் சுமப்பது !

—என். கே. நாதன், அளகாபுரி.

* * * *

உபாத்தியாயர்:—அடே கிட்டு! நேற்று நீ ஏன் பள்ளிக்கூடம் வராது கழுதை மேய்த்தனை ?

கிட்டு:—அதெல்லாமில்லை; நான் மரத்தின்மேல் ஏறியன்றோ குதிச்சுண்டிருந்தேன். தாங்கள் இவ்விதம் பொய் குற்றம் சாட்டுவது தகுமா ?

—சீ. பாடகலிங்கம், அரிகேசவநல்லூர்.



விளம்பரம்

(1)

கிருஷ்ணமூர்த்தி கலாசாலையில மாணவனாக விருந்த பொழுது நிகழ்ந்த ஒரு சிறு சம்பவமே அவனை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது. அப்பொழுது அவன் பி. ஏக்குப் படித்துக் கொண்டிருந்தான். கலாசாலையில் அவன் வகுப்பிற்கு இங்கிலீஷ் பாடத்தில் பிரசங்கம் செய்யும் ஆசிரியர் வகுப்பு மாணவர்களை ஏதோ ஒரு விஷயமாக ஒரு கட்டுரை எழுதிக் கொண்டு வரச்சொல்லியிருந்தார். எல்லா மாணவர்களுடைய கட்டுரைகளையும் ஆசிரியர் பரிசோதித்தாகிவிட்டது. அவனவன் எழுதியிருந்ததற்குத் தகுந்தபடி ஒவ்வொரு மாணவனுடைய கட்டுரையின் மீதும்ஆசிரியரது குறிப்பும் எழுதப்பட்டிருந்தது.

ஆசிரியர் வகுப்பில் கட்டுரைகளை அந்தந்த மாணவனிடம் திருப்பிக்கொடுத்துவிட்டார். பிறகு கிருஷ்ணமூர்த்தி எழுதிய கட்டுரையைப் பற்றி வகுப்பிலேயே அபாரமாகப் புகழ்ந்து பேசினார். அவனது எழுத்தில் ஒரு தனிமை இருப்பதாகவும், அவனுடைய கற்பனை ரொம்பத் தெளிவாக விருப்பதாகவும், அதையவன் வெளியிடும் முறையிலும் ஒருதனிச் சிறப்பிருப்பதாகவும், அவர் பகிரங்கமாகச் சொன்னார்.

அந்த ஒரு சிறிய விஷயம் கிருஷ்ணமூர்த்தி சம்பந்தப்பட்ட மட்டில் அத்துடன் நின்றுவிடவில்லை. அவன் தன்னையொரு பெரிய எழுத்தாளனாகக் கருதச் செய்துவிட்டது. வருங்காலத்தில், தானும் ஒரு டால்ஸ்டாய் அல்லது ஒரு தாகூர் போன்ற நிலைமையை அடையக்கூடுமென்றும் நம்பச் செய்துவிட்டது.

கலாசாலைப் படிப்பு முடிந்து வெளியில் வந்தவுடன் கிருஷ்ணமூர்த்தி ஒரு இன்ஷியூரன்ஸ் ஸ்தாபனத்தில் பயிற்சிபெறச் சேர்ந்தான். குறித்த கால அளவு பயிற்சி பெற்றவுடன் அவன், அதே

ஸ்தாபனத்தின் சென்னைக் கிளைக்கு நிர்வாக அதிகாரியாக (மானேஜர்) நியமிக்கப்பட்டான்.

கிருஷ்ணமூர்த்தி தான் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த காலத்திலும், பின்னால் வேலையில் சேர்ந்த பிறகும் தனது எழுதும் திறமையையும், தனது "தாகூர் பதவி" அடையும் நம்பிக்கையையும் மறக்கவேயில்லை. சாவகாசம் கிடைத்த பொழுதெல்லாம் ஏதாவது எழுதிக் கொண்டேயிருப்பான்.

(2)

அவ்வாறு எழுதிய கட்டுரைகள், சிறு கதைகள், ஒவ்வொன்றையும் அவன் ஏதாவதொரு பத்திரிகைக்கு அனுப்பிக் கொண்டேயிருந்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஒரு பத்திரிகாசிரியராவது அவனது திறமையை அறிந்தவராக விருக்கவில்லை. ஒரு தடவை அவனே நேரில் சென்று ஒரு பத்திரிகாசிரியரிடம் தனது சிறு கதையொன்றைக் கொடுத்தான். அப்பொழுது, தான் பிற்காலத்தில் அடையவிருக்கும் அந்தஸ்தைப் பற்றி ஒருவார்த்தையையும் பேச்சினிடையில் நுழைத்து வைத்தான். அந்தப் பத்திரிகாசிரியருக்கு அந்த விஷயத்தில் அபிப்பிராய பேதமிருந்ததென்பது, அவனுடைய கட்டுரை திரும்பிவந்த பிறகுதான் அவனுக்குத் தெரிய வந்தது!



வேறு வகையின்றி ருக்மணி அந்த தண்டனையை அனுபவித்தாள்.

தன்னுடைய யோக்கியதையை அறியச் சக்தியற்றவர்களெல்லாம் பத்திரிகாசிரியர்களாக விருப்பதைக் குறித்து அவன் அளவு கடந்த ஆத்திரமடைந்தான். ஆனால் அந்த ஆத்திரத்தை வெளிக் காட்டவும் அவனுக்கு வகை தெரியவில்லை. எப்படியாவது தன்னுடைய ஒரு சிறு கதையையாவது

ஏதாவது ஒரு பத்திரிகையில் வெளிவரச் செய்து விடவேண்டு மென்று விரும்பினான்.

அந்த சந்தர்ப்பத்தில்தான் அவன் ஸ்ரீமதி ருக்மணியை முதல் முதலாகச் சந்தித்தான். அப்பொழுது ருக்மணி சென்னை குவீன் மேரிக் காலேஜில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் கிருஷ்ண மூர்த்திக்கு ஏதோ தூரத்து பந்துகூட; சிறிது காலத்திற்குள் இரு வருக்குமிடையில் பரஸ்பர நட்பு ஏற்பட்டு விட்டது. பெரும பான்மைப் புருஷர்களின் சுபாவப்படியே கிருஷ்ணமூர்த்தியும் அவ ளிடம் தன்னுடைய எழுதும் திறமையைப்பற்றியும், அதன் தற் கால நிலைமையைப்பற்றியும் சொன்னான். அவன் எழுதிய இரண் டொரு சிறு கதைகளை அவள் படிக்கத்தான் வேணடுமென்றும் கட்டாயப் படுத்தினான். வேறு வகையின்றி ருக்மணி அந்தத் தண்டனையை அனுபவித்தாள். கடைசியாக அவைகளைப்பற்றிய அவளது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டிய நாளும் வந்தது.

"நீங்கள் சிறு கதை எழுதுவதை நிறுத்திவிடவேண்டுமென்று தோன்றுகிறதெனக்கு. உங்களுடைய கற்பனு சக்திக்கும், நடை யழகுக்கும் சிறு கதையில் தாராளமாக உலாவ இடமில்லை. ஆகை யால் நீங்கள் இனிமேல் நீண்ட நாவல்கள் எழுத ஆரம்பியுங்கள். அப்பொழுது, தானே உங்களைத் தேடி வருவார்கள் இந்தப் பத் திரிகாசிரியர்களும், பிரசுரிப்பவர்களும்" என்று ருக்மணி தன் னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்து வைத்தாள்.

அவளுடைய வார்த்தைகள் கிருஷ்ணமூர்த்தியின் கண்களைத் திறந்துவிட்டன. "ஆஹா! என்னுடைய திறமையை நான் சிறு கதைகளுக்குள் மூடசக மூடனல்லவா காலத்தை வீணுக்கிவிட் டேன்! அடடா! ருக்மணி ஒரு பெரிய அறிவாளி" யென்று தனக்குள் சொல்லிக்கொண்டான். மறுநாளே ஒரு நாவல் எழுத வும் ஆரம்பித்துவிட்டான்.

(3)

மூன்று மாதங்களில் அந்த நாவலை எழுதி முடித்தான். முற் றிற்று என்று எழுதி முடித்த கையோடு கையெழுத்துப் பிரதியை யெடுத்துக்கொண்டு ருக்மணியைத் தேடி ஓடினான். அவளிடம் அதைக் கொடுத்துப் படிக்கும்படி கட்டாயப்படுத்தினான்.

ருக்மணி அப்படியே யாகட்டுமென்று வாக்களித்தாள். வாக் களித்தபடியே அதைப் படித்தும் முடித்தாள். மறுபடி

கிருஷ்ணமூர்த்தி வந்தவுடன் "நான் முன்னமேயே சொல்லவில்லையா? எனக்கு அப்பொழுதே தெரிந்துபோய்விட்டது. உங்கள் கற்பனை சக்தி, தாராளமாகத் திரும்பிக் கைவீசி நடக்க இடமிருந்தால்தான் பிரகாசிக்கும் என்று. உடனே இதைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்று உற்சாகத்துடன் கூறினார்.

கிருஷ்ணமூர்த்தி கையெழுத்துப் பிரதியுடன் புறப்பட்டான். நாவல்கள் பிரசுரிக்கும் ஸ்தாபனங்கள் இரண்டொன்றிற்குச் சென்றான். ஒரே ஒருவர் மாத்திரம் அதைப் பிரசுரிக்க முன்வந்தார். ஆனால் அதைப் பிரசுரிப்பதற்காகும் செலவையெல்லாம் கிருஷ்ணமூர்த்தியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர் நிபந்தனை விதித்தார். கிருஷ்ணமூர்த்தி தனது செல்வ நிலையைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு அந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டான்.

ஒரு மாதத்திற்கெல்லாம் புஸ்தகம் வெளியாகிவிட்டது. கிருஷ்ணமூர்த்தி அவசர அவசரமாக அதில் இருபத்திமூன்று பிரதிகள் வாங்கித் தனது நண்பர்களுக்கு அனுப்பிவைத்தான். ஆறு பிரதிகள் பத்திரிகைகளில் விமர்சனம் செய்யப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டன.

ஒன்றன்பின்னொன்றாகப் பத்திரிகைகளில் விமர்சனங்கள் வெளியாயின. நண்பர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்களும் வந்தன. கிருஷ்ணமூர்த்தியின் சந்தோஷத்தை அளவிடமுடியாது. அவன் ஆகாயத்தில் மிதப்பவன்போல நடந்தான்.

இரண்டு மாதங்கள் சென்றன. கிருஷ்ணமூர்த்தி தன்னுடைய உத்தியோக அறையில் உட்கார்ந்து தனது புஸ்தகத்தை பிரசுரித்தவருடன் டெலிபோனில் பேசினான். "எவ்வளவு பிரதிகள் விற்றிருக்கின்றன'' என்பதுதான் அவன் கேட்ட முதல் கேள்வி. அதற்குப் பதில் கிடைப்பதற்குள்ளாகவே "இரண்டாம் பதிப்பு ஒன்று போட ஏற்பாடு செய்யலாமா?'' என்று கேட்டான்.

டெலிபோனின் மறுகோடியிலிருந்து வந்த பதிலைக் கேட்டவுடன் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "இதுவரை எண்பத்தாறு பிரதிகளே செலவாகியிருக்கின்றன.'' என்றார் கடைக்காரர்.

கிருஷ்ணமூர்த்தியின் வருத்தத்தை அளவிட முடியாது. மொத்தம் செலவாயிருப்பது எண்பத்தாறு பிரதிகள். அதிலும்

இருபத்தொம்பது பிரதிகள் தனது சொந்தச் செலவு. "என்ன தேசமிது! என்னுடைய உண்மையான யோக்கியதையை யறிய சக்தியற்ற மூடர்கள் நிறைந்த தேசம்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

(4)

அவ்வளவு முக்கியமான சமயத்தில் தான் ஸ்ரீமான் ராமநாதன் அவனைக் காணவந்தது. ராமநாதன் கிருஷ்ணமூர்த்தியின் கலாசாலைத் தோழன். அவன் சுபாவத்தில் ஒரு நாடோடி. தனது சுபாவத்திற்குப் பிடித்தமான ஒரு தொழிலில் பிரவேசித்தான். சென்னையில் சொந்தமாக ஒரு விளம்பர ஸ்தாபனம் ஆரம்பித்து நடத்தி வந்தான். விளம்பரத்தின் மூலம் "வழுக்கைத் தலையனுக்கும் ஒரு சீப்பை விற்று விடலா" மென்பது அவனுடைய மந்திரம். அதைப் பலருக்கு நிதர்சனம் செய்து காட்டிக் கொண்டிருந்தான்.

ராமநாதன் வந்தபொழுது கிருஷ்ணமூர்த்தியின் முகம் எவ்விதமான காட்சி யளித்திருக்கு மென்று நேயர்களே யூகித்துக் கொள்ளலாம். ராமநாதனுக்கு விஷயமின்னதென்று பிரியாவிட்டாலும், தனது நண்பனின் மனோநிலை யென்னதென்று ஒருவாறு விளங்கி விட்டது.

இருவரும் சிறிது நேரம் வரை பேசிக் கொண்டிருந்தனர். கிருஷ்ணமூர்த்தி தன்னுடைய மனவருத்தத்தை வெளியிட்டான். அதைக் கேட்டு ராமநாதன் சிரித்தான். "கிருஷ்ணமூர்த்தி! இந்தக் காலத்தில் விளம்பரமில்லாவிட்டால் ஏதும் பலிக்காது. நீ நல்ல தங்கத்தையே விற்பதாயிருந்தாலும், அந்தத் தங்கத்தைப் பற்றி அப்படியிப்படி யென்று புகழ்ந்து விளம்பரம் செய்ய வேண்டும். விளம்பரமப்பா. விளம்பரம். "விளம்பரமின்றேல் விற்பனையில்லை" என்று பதில் சொன்னான்.

கிருஷ்ணமூர்த்தி ரொம்ப ஆவலுடன் "நான் எப்படி விளம்பரம் செய்ய வேண்டும்? எப்படியாவது என்னுடைய புஸ்தகத்தைப் பொது ஜனங்கள் படிக்கும்படி செய்ய வேண்டும்" என்றான்.

"நீ கவலைப்படாதே. விளம்பரம் செய்யும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு. என்னுடைய "பில்" உன்னிடம் வந்து சேருவதற்குள் உன்னுடைய முதல் பதிப்பும் தீர்ந்து இரண்டாம் பதிப்பிலும் சில பிரதிகள் விற்காவிட்டால் என்பேர் ராமநாதனில்லை" என்று பந்தயம் பேசினான்.

(6)

கிருஷ்ணமூர்த்தி பதில் பேசாமல் அவனிடம் அந்தப் பொறுப்பை விட்டு விட்டான்.

ஒரு வாரத்திற்கு பிறகு இருவரும் மறுபடி சந்தித்தனர். ராமனாதன் கிருஷ்ணமூர்த்தியின் ஆபீஸ் அறைக்குள் நுழைந்த சமயம் தான் கிருஷ்ணமூர்த்தி டெலிபோனைக் கையிலெடுத்து புஸ்தகத்தைப் பிரசுரித்தவரைக் கூப்பிட்டான்.

அவர் டெலிபோனில் சொல்லியதைக் கிருஷ்ணமூர்த்தியால் நம்பவே முடியவில்லை!" முதல் பதிப்பு முழுவதும் செலவாகிவிட்டது. உங்கள் நாவலுக்கு இப்பொழுது ரொம்பக் கிராக்கி. நாள் தவருமல் ஆர்டர்கள் நூற்றுக் கணக்கில் வந்து குவிகின்றன" என்று தெரிவித்தார்.

"ஆனால் இரண்டாம் பதிப்புப் போடுங்களேன்" என்றான் கிருஷ்ணமூர்த்தி.

பிரசுரிப்பவர் "இரண்டாம் பதிப்பு ஆயிரம் பிரதிகள் போட்டால் போதாது." என்று பதிலளித்தார்.

டெலிபோனை வைத்துவிட்டுக் கிருஷ்ணமூர்த்தி ராமனாதன் பக்கமாகத் திரும்பினான். "ராமு! என்ன செய்தாய்! ஏதாவது ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவு செய்துவிட்டாயா? அல்லது புஸ்தகத்தில் ஏதாவது போட்டிப் பரிசு அல்லது அதிர்ஷ்ட நம்பர் பரிசு ஏற்படுத்தி விளம்பரம் செய்தாயா? இது எப்படி சாத்தியமாயிற்று"! என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

ராமனாதன் ரொம்ப அர்த்தத்துடன் புன்னகை செய்தான். "செலவைப் பற்றிப் பயப்படாதே. மொத்தம் ஒரே ரூபாய்தான் செலவு செய்தேன். அதிலே உனக்கும் பலன் கிடைத்துவிட்டது. எனக்கும் பலன் கிடைத்துவிட்டது. அந்த ஒரு ருபாயை நீ கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை" யென்றான்.

"நீ என்ன சொல்லுகிறாய்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. கொஞ்சம் விவரமாகச் சொல்லேன்" என்று கேட்டான் கிருஷ்ணமூர்த்தி.

ராமநாதன் சாவகாசமாகத் தனது கையிலிருந்த ஒரு பத்திரிகையை விரித்து அதிலிருந்த ஒரு விளம்பரத்தைக் காட்டினன். கிருஷ்ணமூர்த்தி ஆவலுடன் அதைப் படித்தான்.

விவாஹ விளம்பரங்கள்.

மணமகள் தேவை'

ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி எழுதியுள்ள "ருக்மணி யின் காதல்" என்ற நாவலின் கதாநாயகியை எல்லா விஷயங்களிலும் ஒத்திருக்கும் பெண் தேவை. தயவுசெய்து கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரா.

தபால் பெட்டி 118.

C/o.........பத்திரிகை.

என்றிருந்த அந்த விளம்பரத்தைப் படித்து அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான்.

மேலும் அரை நாழிகைக்குப்பிறகே கிருஷ்ணமூர்த்தி தனது சுயப்ரக்ஞையடைந்தான். அவன் ராமநாதனைப் பார்த்த பார்வையில் எவ்வளவோ அர்த்தமிருந்தது.

ராமநாதன் புன்னகையுடன் "நீ அந்த விளம்பரச் செலவைக் கூடக் கொடுக்கவேண்டாம். என்னுடைய விளம்பரத்திற்கு ஆயிரக்கணக்கான பதில்கள் வந்திருக்கின்றன. அதில் இதுவும் ஒன்று" என்று பல கடிதங்களை எடுத்து நீட்டினன்.

அவன் குறித்த அந்த உறையைக் கண்டவுடன் கிருஷ்ணமூர்த்தி திடுக்கிட்டு "இது ருக்மணியின் கையெழுத்தல்லவா? என்ன எழுதியிருக்கிறாள்? அவளை மனத்தில் வைத்துக்கொண்டு தான் அந்த நாவலை எழுதினேன்" என்று கூவினன்.


ராமநாதன் முன்னிலுமதிக நிதானத்துடன் "என்னைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதித்திருக்கிறாள்" என்று பதிலளித்தான்.

(ஒரு ஆங்கிலச் சிறுகதையைத் தழுவி ஸ்ரீமான். பி. எஸ். ராமையா எழுதியது.)

தோற்றமும் உண்மையும்

"வெளுத்த தெல்லாம் பால் என்று எண்ணாதே!" "உருவத்தைக் கண்டு மயங்காதே" என்று பெரியவர்கள் எச்சரிக்கை செய்வதுண்டு.

ஒரே குணமும் திறமையும் உள்ளவர்கள், அவர்கள் இருக்கும் இடமும் சந்தர்ப்பமும் வித்தியாசப்படுவதால், ஒருவர் பெரியவராகவும் மற்றொருவர் சிறியவராகவும் தோன்றுவார்கள். பார்க்கிறவன் இடம் மாறி நின்று பார்த்தால் ஒரே பொருள் வெவ்வேறு மாதிரி தோன்றும்.




இதெல்லாம் நீங்கள் கவனித்திருப்பீர்கள். "கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய்" என்று பல விஷயங்கள் ஏற்படுவதுண்டு. நம்முடைய கண் நம்மை எவ்வளவு ஏமாற்றுகிறது என்பதை பல வழிகளில் காணலாம். பக்கத்திலிருக்கும் இரண்டு படத்தில் எது பெரியது என்று உங்கள் நண்பர்களிடம் காட்டுங்கள். 10 பேரிடம் கேட்டால் அனேகமாக 9 பேர் இடதுபக்க முள்ளது தான் பெரிது என்று சொல்லுவார்கள். அப்படியானால் அது மற்றதை


விட எத்தனை மடங்கு பெரியது என்று கேட்கவேண்டும். சுமார் 1¼ பங்கு பெரிது என்பார்கள் பல நண்பர்கள். சிலர் ஒன்று அகலம் அதிகம், மற்றொன்று நீளம் அதிகம் என்பார்கள்.

ஆனால் உண்மை யென்ன? இரண்டு படமும் ஒரே அளவு. எலுமிச்சம்பழமும் புளியம்பழமும் ஒன்று என்று சொன்னாராம் ஒரு கவிராயர். "உருட்டுக்கு நீளம் சரி, புளிப்புக்கு ளொப்பன்" என்று காரணமும் கூறினாராம். அதைப்போல் சொல்லவில்லை. இரண்டும் அகலம், நீளம், உருவம் எல்லாவற்றிலும் ஒன்று தான். இரண்டுக்குள்ளும் போட்டிருக்கும் கோடுகள் தான் வித்தியாசம். இதே இரண்டு படத்தையும் ஒன்றுக்கொன்று இடம் மாற்றி வைத்துப் பார்த்தால் அபிப்பிராயம் வேறுவிதமாக மாறிவிடும்.

நமது கண்கள் நம்மை ஏமாற்றுவதற்கு இது ஓர் உதாரணம். ஆகையால் எந்த விஷயத்தைப் பற்றியும் தோற்றத்தைக் கொண்டு திடீரென்று ஒரு அபிப்ராயம் கொள்வது தவறு.



மோட்டார் பின்னாலே போகிறது. குதிரை பார்க்கிறது.



தானும் அப்படிச்செய்ய நினைக்கிறது. 'டாப்பி'' அடித்ததால் வந்த வினை.

கறீம் பீடி பரிசுகள்

1933ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து
1273 - பேர் ரூ. 7765
பரிசு பெற்றிருக்கிறார்கள்.

14—1—34 முதல் 27—1—34 வரை.

பரிசு பெற்றவர்களின் 17-வது ஜாப்தா

நெ.	வெகுமதி வாங்கினவர்களின் பெயரும், விலாசமும்	பரிசுத்தொகை
	முன் ஜாப்தாக்களின்படி	ரூ. 7265
1191	தேவரகொண்டா வெங்கடேஸ்வர ராவ், அரவாளி, தனுகு தாலூகா	5
1192	கேளு நாயர் 89 சூரியநாராயண செட்டி தெரு ராயபுரம்	5
1193	கே. எம். ஜனார்த்தன பிள்ளை 55 கிலரி ரோடு பெங்களூர்	5
1194	ஜி. சி. வெங்கட் ராவ் ரைஸ் மில் நாயுடுபேட்டை	5
1195	நீடல்ல வெங்கன்னா தல்லபுடி மேற்கு கோதாவரி	5
1196	மொங்க சுப்பா ராவ் மும்மிடிவாரம் அனலாபுரம் தாலுகா	5
1197	ராதா கிருஷ்ணன் கிலார்க் கஸ்டமஸ் அவுஸ் சென்னை	10
1198	பாசலூரி ஸ்ரீராமமூர்த்தி மாதவரம் போஸ்ட்	5
1199	பாலா ராமமூர்த்தி c/o ரெவின்யு இன்ஸ்பெக்டர் பாலகொண்டா போஸ்ட்	5
1200	டி. எ. அய்யாவு பிள்ளை அரிசி மண்டி கடலூர் O T	10
1201	மகூப் சாயபு பீடி மண்டி ஸ்டேஷன் ரோட் கடக்	5
1202	வைத்தியநாத முதலியார் டி ஐ போலீஸ் ஸ்டேஷன் திருவல்லிக்கேணி	5
1203	தோட்டா தாதிய அலியஸ் மசர்ஷயா பெத்தாபுரம்	5
1204	அலபத்தி வெங்கடரத்தினம் தாட பள்ளிக்கூடம்	5
1205	அன்ஜி ரெட்டி பொடட்டூர் கிருஷ்ணா ஜில்லா	5
1206	அப்துல் குதூஸ் சாயப் பீடி கடை மான்ஜிகுப்பம்	5
1207	ஆர் எல் சத்தியநாராயண சிங் கவுல் பஜார் பெல்லாரி	5
1208	விஸ்வநாதன் தட்டான் சாவடி பண்ருட்டி	5
1209	எம் ராமகிருஷ்ண ரெட்டி மேல் வீதி சிதம்பரம்	5
1210	கெ துரைசாமி நாயுடு அண்டு பிரதர்ஸ் திருப்பாபுலியூர்	5
1211	வி ஆயுதப்பா ஜெனரல் மர்ச்சன்ட் டிம்மாச்சர்வா	5

1212 ஐ சீனுவாசன் 12 படு ராஜப்ப முதலி தெரு சென்னை 10
1213 ஒடுத்து வீரண்ணா மெயின் ரோட் ராஜமந்திரி 5
1214 வி என் ரங்கனாத முதலி தெர்னுவரம் 5
1215 எம் சையட்வெஸ் சாயபு பஜார் டலன்டாபட் 5
1216 கெ கைங்கா ரத்தின பிள்ளை வித்தவாசலம்மன்
சன்னதி லதுரை 5
1217 கார்குந்தலாபதனு ஐடாபடு மர்தூர் பி சிலகலூர்பட் 5
1218 சாக குண்ணையா வியாபாரம் ராஜம் போஸ்ட் 5
1219 சலிகிராம் ஒபியம் அண்டு கஞ்சா கான்ராக்டர் பிசம்குடக் 5
1220 பாதம்புச்சய்யா கொத்தபல்லி பித்தாபுரம் 5
1221 சி. எம். நடேசபிள்ளை கூடலூர் ஒ. டி. 5
1222 கோமாலே செட்டி ரைடாலோலி 5
1223 மகமத் அப்துல் கரிம் சாயபு குண்டூர் 5
1224 வி நடராஜ சிகாமணி முதலியார் வேப்பேரி 5
1225 டி. ராமனு ஜனரல் மெர்ச்சண்ட் குண்டூர் 5
1226 சையத் அமீர்தின் சாயபு, பி டபிள்பு இன்ஸ்பெக்டர் ஆபீஸ்
எம். எஸ். எம். ஆர். பெல்லாரி 10
1227 வி. எ. காப்பமுதலி பிளாட்பாரம் கண்டெக்டர் எம். எஸ்.
எம். ஆர். ஸ்டேஷன் ரேம்பியன் ரீவ் எ ஜி எப் 5
1228 எல். எல் அனந்தராமாச்சாரி பிளாட்பாரம் கண்டெக்டர்
நன்ஜென்கூட் மைசூர் ஸ்டேட் 5
1229 ஆர். பொன்னுசாமி உடையார்,
காமாக்ஷியம்மன் கோவில் தெரு, கூடலூர் ஒ. டி. 5
1230 கரகோனி ரெட்டி மாத்தூர் போஸ்ட் வ. கோதாவரி 5
1231 நியூ பாம்பே ஸ்டோர்ஸ் அம்மாடலாவாச கஞ்சம் ஜில்லா 10
1232 டி. சிவராமய்யா காடியாட தெப்பகுளம் தாலுக்கா 5
1233 எ. எம். அப்துல்லா பெத்து பூனமல்லி போஸ்ட் 5
1234 எஸ். தேவராஜ பிள்ளை, பாச்சேரி பஜார் மதராஸ் 10
1235 சி. தக்ஷணாமூர்த்தி செட்டி, ராயபுரம் மதராஸ் 5
1236 டி. ஜி. நரசிம்மலு ஜனரல் மர்ச்சண்ட் திருப்பத்தூர் 5
1237 பி. மாணிக்கம் தேவர் 102, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி. மதராஸ் 5
1238 சி. பிரகாசம்காரு டிரைன் எக்சாமினர் தர்மாவரம் 5
1239 எம். டி. அப்துல் குதூஸ் சாயபு மார்க்கட் நீலகிரி 5
1240 என். கோமது சாயபு டோல்கேட் பாபூர் பொர்ஹாம்பூர் 5
1241 பொக்கா வெங்கண்ணு s/o மஹாதேவபட்டணம்
வண்டுபோஸ்டு 10
1242 போலூர் கிருஷ்ணய்யகாரு நிடாவோல் வ. கோதாவரி 5
1243 சச்சிமனகு சேஷண்ணு செட்டிகாரு கர்நூல் 5

1244	வாஞ்சி சத்திய நாராயணு அண்டு பிரதர்ஸ் பார்வதிபுரம்	10
1245	எ சமரபுரி செட்டி 1 வீராசாமி பிள்ளை தெரு பெரியமெட்டு	5
1246	மகமத் உமர் சாயபு 17 பெரம்பூர் பேரக்ஸ் ரோட்	5
1247	தொரசானி சாம்பட் ரீயர் ராமலிங்கசாமி குடி ராஜமந்திரி	5
1448	ஆர் பொன்னுசாமி உடையார் கூடலூர் ஓ டி	10
1249	துலசின்ன வெங்கட்ட செட்டி பெனு போஸ்ட்	5
1250	பி அப்துல் சுக்கூர் சாயபு c/o அப்துல் முவைப் சாயபு கம்பெனி கேடக்	10
1251	புசகல்லா ராஜி மெயின் ரோட் சாலூர்	10
1252	சி குலாம் மகமத் சாயபு கோவிலாங் பேரஸ்ட்	5
1253	பி மாமத் மாலகி 218 அங்கப்ப நாயக்கன் தெரு மதராஸ்	5
1254	ஜி நாராயணசாமி தேவர் அம்மையப்பன் போஸ்ட்	10
1255	சித்தாரி அலராவதி சேஷன்ன பெட்டா கர்நூல்	5
1256	சோமனத் அப்பலசாமி வியாபாரம் ராஜமந்திரி	5
1257	அரிசாஹூ தொலுகா தெரு பெர்ஹாம்பூர்	5
1258	வி ராஜமன்னர் செட்டி 82 அண்ணு பிள்ளை தெரு சென்னை	5
1259	டி எஸ் குலாம் தஸ்தகிரி சாயபு மவுன்ட்ரோட் மதராஸ்	5
1260	கே வீ மாசிலாமணி பிள்ளை திருகோவிலூர்	10
1261	சையத் காதர் சாயபு குளத்தெரு பெங்களூர் சிடி	5
1262	என் பெருமாள் படையாச்சி திருப்பாபுலியூர்	10
1263	வி எஸ் அப்துல் வகாப் சாயபு நெல்லிகுப்பம்	5
1064	சன்னபதி அப்பாராவ் ஓமாரவல்லி கிராமம் (கஞ்சம்)	5
1265	வெம்மு ஸ்ரீராமமூர்த்தி முவ்வா போஸ்ட்	5
1266	எம் கிருஷ்ண நாயர் வேபேரி சென்னை	5
1267	பி டி குருநாதன் 27 நைனியப்பன் தெரு சென்னை	5
1368	ராபர்ட பிஷப்ஸ் அவுஸ் பெங்களூர் கண்டோன்மென்ட்	5
1269	கி நாராபணாமி நாயுடு திருவண்ணமலை	10
1270	எ வி நடேச முதலி கவலை வட ஆற்காடு	5
1271	பின்ஜெ லாபெட் பாபன்ன வேதபள்ளி	5
1272	தேச கோடீசன் நரகாம்பேட்டை	10
1273	அடப்பா சுப்பாராவ் கோடீஸ்வரம் போஸ்ட் ரகுதேவபுரம்	10
	மொத்தத் தொகை ரூ.	**7765**

25 பீடிகள் கொண்ட கட்டுகளில் நூறறுக்கணக்கான நோட்டுகளின் பாதிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கிடைத்தவர்கள் நோட்டு நெம்பரையும் தொகையையும் சென்னை கரீம்பீடி பாக்டரிக்கு தெரிவித்து பாக்கி பாதி நோட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

18- வது ஜாபிதாவை எதிர்பாருங்கள்

தீர்மானம் நிறைவேறியது!!




நண்பர்களது கூட்டம். முக்கியமான விஷயம் விவாதிக்கப்பட்டது. புகையிலையின் உபயோகங்களில் எந்தமுறை சிறந்தது? ஒருவர் சொன்னார் "சிகரெட்டு" என்று. இன்னொருவர் வெற்றிலைபாக்குடன் உபயோகிப்பது என்று சொன்னார். மற்றொருவர் சொன்னார் பொடி போடுவதுதானென்று. அங்கத்தினர்கள் எல்லாரும் மூன்றையும் உபயோகித்துப் பார்த்தார்கள். பொடியே உயர்ந்ததென்று தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஒருவர் எழுந்து "ராஜ ராஜேஸ்வரி" பட்டணம் பொடி தான் உயர்ந்ததென்று திருத்தம் கொண்டுவந்தார். தலைவர் ஒரு சிமிட்டா "ராஜ ராஜேஸ்வரி" பொடி வாங்கிப் போட்டுப் பார்த்தார். அவ்வளவுதான். "ராஜ ராஜேஸ்வரி" பட்டணம் பொடியே பட்டணம் பொடிகளில் சிறந்ததென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது!!

உங்களூர் வியாபாரியிடம் சொல்லி எங்களுக்கு எழுதச் சொல்லுங்கள். அவருக்கு நல்ல கமிஷன் கிடைக்கும். உங்களுக்கும் உயர்ந்த பொடி கிடைக்கும்.

ராஜ ராஜேஸ்வரி கம்பெனி,

பட்டணம் பொடி வியாபாரிகள்

ராயபுரம், :: :: மதராஸ்.



ஆசிரியர்: தெ. ச. சொக்கலிங்கம்

மாலை 3. { 1934 பிப்ரவரி 12உ. 29, செம்புதாஸ் தெரு, சென்னை. } மலர் 12.

அட்டவணை.

‘காந்தி’

(மாதம் இரு முறை வெளிவரும்)

சந்தா விவரம்.

	உள்நாடு	வெளிநாடு
1 வருஷம்	2—4—0	4—0—0
6 மாதம்	1—4—0	2—2—0

ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் இரண்டு “காந்தி” மலர் வெளிவரும். சந்தாப்பணம் முன்னதாக கிடைக்கவேண்டும். வி. பி. கிடையாது. சந்தாப் பணம் கிடைக்கிற மாதத்திலிருந்து கணக்கு வைத்துக் கொள்ளப்படும்.

விளம்பர விகிதம்.

பக்கம் 1-க்கு தடவை 1-க்கு ரூ. 20—0—0.

———:0:———

கட்டுரைகள்.

“காந்தி”யில் பிரசுரிக்க நல்ல கட்டுரைகளையும், கதைகளையும் அனுப்பலாம். ஆசிரியருக்கு பிரியமானவை பிரசுரமாகும். பிரசுரமாகாத கட்டுரைகளை திரும்பப்பெற விரும்புகிறவர்கள் அதற்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். கட்டுரைகளுக்கோ, கதைகளுக்கோ சன்மானம் விரும்புவோர் தங்கள் அபிப்பிராயத்தை கட்டுரையுடன் எழுதியனுப்ப வேண்டும். அப்படி எழுதியனுப்பப் படுகிறவை பிரசுரமானல், ஆசிரியர் இஷ்டப்படி சன்மானம் அனுப்பப்படும். விஷயங்களை தெளிவாக காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதியனுப்ப வேண்டும்.

“காந்தி”யில் பிரசுரமாகும் கற்பனை கட்டுரைகளில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப்பெயர்கள். யாரையும் குறிப்பிடுவன வல்ல.

“காந்தி” ஆபீஸ்,

29, செம்புதாஸ் தெரு, சென்னை.

விகடன் தோல்வி

சென்ற ஜனவரி மாதத்தில் "காந்தி" மலர் ஒன்றுதான் வெளி வர சாத்தியமாயிற்று. இரண்டு மலர்கள் பிரசுரிக்க முடியாமல் போனதற்காக நண்பர்கள் மன்னிப்பார்களாக! இந்த இடையூறுக்குக் காரணம் "காந்தி" தினசரி ஆரம்பிக்கப்பட்டதேயாகும். உள்நாட்டிலுள்ளவர்களுக்கு "காந்தி" தினசரி ஆரம்பமானதும், போட்டிப்பந்தயப் பிசாசைத் தொலைக்க தீவிரமாக எழுதி வந்ததும் தெரிந்த விஷயங்கள். கடல் கடந்து அயல்நாடுகளில் வாழும் தமிழருக்கு இவ்விஷயம் எதுவுமே தெரியாது. சென்ற "காந்தி" மலரிலும் இதைப்பற்றி எதுவும் எழுதவுமில்லை. அதற்காக இதை எழுத ஆரம்பித்தோம்.

போட்டிப்பரிசு மோசடியை தமிழ்நாட்டை விட்டு விரட்டுவதற்காக, "காந்தி" தினசரி ஆரம்பமாகப் போகிறதென்று நவம்பர் மாதத்தில் அறிவித்தோம். நவம்பரில் நாம் முயற்சி செய்ய ஆரம்பித்தும் டிசம்பர் 6வ தான் சர்க்கார் அநுமதி கிடைத்தது. அநுமதியும் வெறும் அநுமதியல்ல. 500 ரூபாய் ஜாமீனோடு அநுமதி. போட்டிப்பரிசை ஒழிக்க தினசரி ஆரம்பித்தாலும் 500 ரூபாய் ஜாமீன் கட்டவேண்டுமென்று சர்க்கார் சொல்லிவிட்டார்கள். ஆகவே 5(0 ரூபாய் ஜாமீன் கட்டினோம். மகாத்மா டிசம்பர் மாதம் 20வ சென்னைக்கு விஜயமானார். அன்று "காந்தி" தினசரி வெளிவர ஆரம்பித்தது. அன்று முதல் தினசரி, போட்டிப்பந்தய மோசடிகளைப் பற்றிய பற்பல விவரங்களையும் வெளியிட்டுவந்தது. விகடன் ஆசாமிகள் தங்களால் இயன்றமட்டும் இடையூறு செய்ய முயற்சி செய்தார்கள். பலிக்கவில்லை. இடைவிடாமல் போட்டிப் பந்தய மோசடிகளை வெளியிட ஆரம்பிக்கவே, தமிழரும் கண் திறந்து பார்த்தனர். பரிசு மோசம் ஒழிய ஆரம்பித்தது. பரிசுக்காக 100, 200 பிரதிகள் வாங்குகிறவர்கள் அந்த வேலையை விட்டனர். விகடக் கூத்தாடிகள் மீது ஜனங்களுக்கு வெறுப்பு அதிகமாயிற்று. ஒவ்வொரு ஊரிலும் கண்டனம் கிளம்பியது.

விகடக் கூத்தாடிகள் பத்மாசூரன் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை முன்பே தெரிவித்திருக்கிறோம். தங்கள் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டதைக் கண்டவுடன், அதிலிருந்து தப்பிக்கொள்ள ஒரு சூழ்ச்சி செய்தனர். மகாத்மா தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது, அவர்கூட ஒரு விகடக்கூத்தாடியை அனுப்பி, மகாத்மா பிரசங்கத்தை அவர் தமிழில் மொழி பெயர்ப்பதென்று


ஏற்பாடு செய்தார்கள். இப்மாதிரி மகாத்மாவுடன் ஒட்டிக்கொண்டு சுற்றினால், தங்கள் மீதுள்ள கெட்ட பெயரை மாற்றிவிடலாமென்பது அவர்கள் நினைப்பு. இந்த சூழ்ச்சியை உணராமல், ஹரிஜன சேவா சங்கத்தார் முதலில் அநுமதி கொடுத்துவிட்டனர். இச்சூழ்ச்சி நமக்குத் தெரியவந்ததும் நாம் ஷடி சங்கத்திற்கு கடிதம் எழுதினோம். முதலில் அவர்கள் கவனிக்கவில்லை. உடனே "காந்தி" தினசரி இவ்விஷயமாக கிளர்ச்சி ஆரம்பித்தது. முன்னால் மகாத்மா பெபரையும், தேவதாஸ் காந்தி பெயரையும் விகடக் கூத்தாடிகள் எம்மாதிரி பயன்படுத்தினார்கள் என்பதை எடுத்துக் காட்டியது. மகாத்மாவுக்கு நேராக இவ்விஷயத்தைப்பற்றி கடிதம் எழுதினோம். விகடக் கூத்தாடியை மகாத்மாவுடன் அனுப்புவதை நிறுத்தாவிட்டால் அங்கங்கே கூட்டம் ஆரம்பமானவுடன், இவ்விஷயத்தை மகாத்மா கவனத்திற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்திருந்தோம். நல்லவேளையாக கடைசி நேரத்தில் ஹரிஜன சேவா சங்கத்தார் விழித்தனர். விகடக் கூத்தாடியை வரவேண்டாமென்று தந்தி கொடுத்து நிறுத்திவிட்டனர். இதைக்கேட்டு தமிழர் பூர்ண திருப்தியடைந்தனர். "காந்தி" தினசரி நடந்திருக்காவிட்டால், இவ்விஷயத்தில் விகடக் கூத்தாடிகளை தோற்கடித்திருக்க முடியுமா என்பது சந்தேகந்தான். ஆகவே "காந்தி" தினசரி இவ்விஷயத்தில் ஒரு பெரிய வெற்றியடைந்ததென்பது மறுக்க முடியாத விஷயம். விகடக்கூத்தாடிகளின் மகாப் பெரிய சூழ்ச்சியாகிய இதில் அவர்களை தோற்கடித்துவிடவே, இப்பெலும்பு முறிந்த மாதிரி அந்தக்கூட்டம் குப்புற விழுந்துவிட்டது. தமிழருக்கு சொல்லமுடியாத உற்சாகம் ஏற்பட்டது. போட்டிப் பந்தயம இன்னம் அதிகமாய் குறைந்தது. தமிழ்நாடெங்கும் விகடக்கூத்தாடிகள் பேரில் வெறுப்பு அதிகரித்தது.

இப்பொழுதுள்ள நிலைமை யென்ன? போட்டிப்பந்தய மோசடிகள் எவ்வளவு தூரம் செல்லுமென்பதை தமிழர் நன்றாய் அறிந்துகொண்டார்கள். போட்டிப் பந்தயங்களால் தமிழர் வாழ்வு எவ்வளவு கெட்டுப்போயிற்று என்பதை உணர்ந்துகொண்டனர். தமிழரின அடக்கத்தையும், ஒழுக்கத்தையும் போட்டிப்பந்தயம் எவ்வளவு தூரம் கெடுத்துவிட்டதென்பதையும், விகடத்தால் தமிழரின் தீவிர புத்தியும், ஊக்கமும் எவ்வாறு நாசமாயின என்பதையும் தமிழர் அறிந்துகொண்டனர். காங்கிரஸ் பெயரையும், மகாத்மா பெயரையும், இதர பெரிய மனிதர்கள் பெயரையும் விகடக்கூத்தாடிகள் உபயோகிக்க கடுகளவும் அஞ்சமாட்டார்களென்பதையும் அறிந்துகொண்டார்கள். ஆகவே நூற்றுக்கு 75 பேர் விதம் போட்டிப் பந்தய மோசடியிலிருந்து விலகிவிட்டனர். இது

நமக்கு ஒரு பெரிய வெற்றி. மீதமுள்ள நண்பர்களும் சீக்கிரமா விலகி விடுவார்களென்பது நிச்சயம்.

ஆகவே "காந்தி" தினசரியை எதற்காக ஆரம்பிக்க தீர்மானித்தோமோ அவ்வேலை பூர்த்தியாயிற்று. அதற்கு உதவி செய்த நண்பர்கள் அனைவரையுமே இவ்வெற்றி சேரும். ஜனங்களின் அபிப்பிராயத்தை வளர்த்து, செய்கையில் காட்ட நாம் ஒரு ஆயுதமாய் நின்றோமேயொழிய, அதற்குமேல் எதுவுமில்லை. தினசரியின் வேலை முடிந்துவிட்டபடியால பெப்ரவரி 1௳ முதல் தினசரியை நிறுத்திவிட்டோம். விகடக்கூத்தாடிகள் ஆர்ப்பாட்டம் இனி தலைக்காட்டாதென்று நம்புகிறோம். மறுபடியும் அவர்கள் வால் நீட்ட நினைத்தால், உடனே மறுபடியும் "காந்தி" தினசரி வெளிவரும் என்பதை நண்பர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறோம். எனவே அடுத்த மலர் முன்போல பெரிய உருவில் வெளிவரும்.

பிரஞ்சுப் பளிங்குக் கண்ணாடியில் ஹிட்லர் முகத்தைப் பார்த்தால் இப்படியிருக்கிறது என்று "பின்டர்" கற்பனை செய்கிறார். ஹிட்லர் முக அமைப்பும் அவயவங்களும் ஈட்டி, துப்பாக்கி, ரவை, குண்டு, பீரங்கி இவற்றினாலேயே செய்யப்பட்டிருப்பதாக பிரஞ்சுக்காரர் கருதுகின்றனர். ஹிட்லர் உண்மையிலேயே யுத்த அவதாரமா அல்லது பிரான்ஸுக்குத் தான் அப்படித் தோன்றுகிறதா?



ஹிட்லர் - பிரஞ்சுக் கண்ணாடியில்

புதாபெஸ்த். "மகியார்ஸாக்"]   [பின்டர்.



படார்சாமி கடிதங்கள்

[படார்சாமிக்கு ரகசியமே கிடையாது. எவ்விஷயத்தையும் பகிரங்கமாகவே படார் படார் என்று வெளியிடுவார்]

ஸ்ரீ. ஏ. ரங்கசாமி ஐயங்கார்

பரலோகம்

அன்புள்ள ஐயா,

இவ்வளவு சீக்கிரமாக நீர் இவ்வுலகம் துறந்ததைக் கேட்டு அளவற்ற துக்கமடைகிறேன். இந்தியா சுயராஜ்யமுள்ள நாடாக விருந்தால், இங்கிலாந்து பாங்கிக்கு தலைவரா யிருக்கும் ஸ்ரீ. மான்டேகு நார்மனைப்போல, நீர் இந்திய ரிசர்வ் பாங்குக்கு தலைவரா யிருப்பீர். இந்தியா ஏகாதிபத்தியத்தை ஆண்டு வரும் நாடாயிருந்தால், அடிமைப்பட்ட நாடுகளுக்கு சீர்திருத்தம் வழங்க திட்டம் தயாரிக்கும் முக்கியமான பொறுப்பு உமக்குக் கிடைத்திருக்கும். அவ்வளவு ஆற்றல் வாய்ந்த நீர், ஒரு தமிழர் என்பதை நினைக்கும் போதெல்லாம் எனக்கேற்படும் பூரிப்புக்கு அளவே கிடையாது. வட இந்தியாவில்தான் தலைவர்களோ, பத்திராசிரியர்களோ தோன்றுகிறார்கள் என்ற தப்பபிப்பிராயம் வெகுகாலம்வரை யிருந்தது. பண்டித மோதிலால் நேருவின் வலது கையாக நீர் விளங்கி, சுயராஜ்யக் கட்சியை நடத்திவைக்கும் மூளையாக நீர் ஜொலித்து அந்த தப்பபிப்பிராயத்தை அடித்து வீழ்த்தினீர். வெள்ளையரை விட் திறமையாக ஒரு ஆங்கிலப் பத்திரிகையை நடத்தமுடியுமென்பதை "இந்து" மூலம் காட்டினீர். சர்க்கார் சட்ட நிபுணர்களும், பொக்கிஷ நிபுணர்களும் திணறும்படி உமது கேள்விகளைப் போட்டு ஆட்டிவைத்தீர். தமிழ் பத்திரிகைத் தொழிலுக்கு மதிப்புக் கொடுக்குமாறு ஆங்கில ஆசிரியப் பதவியிலிருந்து தமிழ் பத்திரா

சிரியப் பதவிக்கு வந்தீர். என்றும் உம்மை மறக்கமுடியாத விதத்தில் உமது மூளையின் வன்மையால் பல வேலைகளை இந்நாட்டில் செய்திருக்கிறீர். ஆகவே தமிழருக்கு பெருமை கொடுத்த உமது வாழ்வு இவ்வளவு சீக்கிரம் முடிந்துபோனதற்காக நான் வருந்துகிறேன்.

—படார்சாமி.

ஸ்ரீ. டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி

மைலாப்பூர்

அன்பரே,

உமக்கு சஷ்டியப்த பூர்த்திவிழா நடைபெற்றதைக் கேட்டு சந்தோஷமடைகிறேன். தீவிரமான ராஜீயவாதிகள் கோஷ்டியில் நீர் சேராவிட்டாலும், பின்னால் சறுக்கி விழும் மிதவாதக் கோஷ்டியில் நீர் சேராமல் இருப்பது பெரிய விசேஷம். பட்டத்திற்காகவோ, பதவிக்காகவோ இந்தியரின் சுய மதிப்பை விட்டுவிட முடியாது என்று நடத்தையில் காட்டிய வீரர்களில் நீர் ஒருவர். சட்ட மந்திரி பதவி உமக்கு அளிக்கப்பட்டது. நீர் ஒப்புக்கொண்டீர். ஆனால் முன்னால் சட்ட மந்திரியாக வேலை பார்த்தவர் நிர்வகித்து வந்த போலீஸ் இலாகாவை உமது நிர்வாகத்திலிருந்து மாற்றினர். இச்செய்கை சுயமதிப்பிற்கு விரோதமாகத் தோன்றியதால் உடனே—ஒருமணி நேரத்தில்—உமது பதவியை ராஜீநாமாச் செய்தீர். சட்டமந்திரி பதவி கிடைக்குமுன்பு, அதை பகிஷ்கரிக்கக் கூடிய வீரர்கள் எத்தனையோ பேர் இருக்கலாம். ஆனால் பதவி கிடைத்தபின்பு அதை—சுயமதிப்பை காப்பாற்றுவதற்காக—உதறித் தள்ளக் கூடியவர்கள் வெகு சிலரே இருப்பார்கள். அந்த மிகச் சில தன்னலமறுத்த கர்மவீரர்களில் நீர் ஒருவர். இதை தமிழர் மறந்துவிடவில்லை. ராஜீய விஷயங்களில்கூட உமது முன்னேற்றமான கொள்கைகளைக் கண்டு நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். ஆகவே உமது சஷ்டியப்த பூர்த்தி விழாவிற்கு எனது வந்தனங்கள். நீர் இன்னம் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழ்நாட்டிற்கு பல நன்மை புரிய கடவுளை பிரார்த்திக்கிறேன்.

—படார்சாமி.

ஸ்ரீ. பண்டித சென்

அங்கத்தினர்,

இந்தியா சட்டசபை

டெல்லி.

வைதிகரே,

வைதிகத் தொழிலைவிட்டு சட்டசபைக்குள் நீர் புகுந்தது உமது தர்மத்திற்கு முதல் விரோதம். சட்டசபைக்குள் தான் புகுந்தீர், பேசுகிற விஷயங்களையாவது தெரிந்து பேச கற்றுக் கொண்டீரா? சந்தியாவந்தனம் செய்யும்போது இடையிடையே "காபி தயாரா? இட்டலி வந்துவிட்டதா?" என்று பொருத்தமில்லாத கேள்வி கேட்பது சகஜம். இது சந்தியாவந்தனத்திற்கு விரோதமில்லாமலிருக்கலாம். ஆனால் அம்மாதிரி ராஜீய விஷயத்தில் அர்த்தமில்லாமல் பேசினால் மற்றவர்கள் சும்மா விடுவார்களா? மகாத்மாவை ஐக்கிய மாகாணத்திலும், வங்காளத்திலும் பகிஷ்கரித்துவிட்டதாக சட்டசபையில் சொன்னீர். மகாத்மா அந்த மாகாணங்களுக்கு இன்னம் போகவில்லையே என்று ஒருவர் கூறியவுடன் உமது வாயை மூடவேண்டியதாயிற்று. அத்துடனாவது நின்றுவிடக் கூடாதா? தீண்டாமை ஒழித்தல் மசோதா நிறைவேறினால் இந்துமதத்தில் தலையிடுவதாகுமென்றும், அப்படி தலையிட்டால் மறுபடியும் சிப்பாய் கலகம் நடக்குமென்றும் பயமுறுத்தினீர்! பாவம், சிப்பாய் கலகமென்றால் எப்படியிருக்குமென்பதாவது உமக்குத் தெரியுமா? ஸ்ரீ ராமர் வெறும் புல்லை மந்தரித்து காகாசுரனை விரட்ட ஏவியது போல, தர்ப்பைப் புற்களை மந்தரித்து துப்பாக்கிகளாக்கி விடலாமென்பது உமது நினைப்பா? அல்லது ஆகாயக் கப்பல்களின் சப்தத்திற்கு ஈடாக மந்திரங்களை கத்துவதால், யுத்த விமானங்களை தோற்கடித்து விடலாமென்பது உமது நினைப்பா? 1857 ல் நடந்த சிப்பாய் கலகம் யாரால் அடக்கப்பட்டது என்பது உமக்குத் தெரியுமா? தீண்டாதார் என்று வைதிகர் தள்ளிவைத்த ஹரிஜனங்களே அதை அடக்க உதவியாய் நின்றார்கள். காரணம் என்ன? தீண்டாமையே! ஆகவே வீணாக விஷயம் தெரியாமல் பேசவேண்டாமென்று எச்சரிக்கிறேன்.

—பட்டர்சாமி

சர். ஜான் ஆண்டர்சன்
கவர்னர்
கல்கத்தா

கவர்னரே,

உமது மாகாணத்தில் புதிதுபுதிதாக அடக்குமுறைகள் புறப்படுவதை கவனித்து வருகிறேன். அயர்லாந்தில் நீர் பெற்ற அநுபவத்தையெல்லாம் வங்காளத்தில் உபயோகித்துப் பார்ப்பது என்று தீர்மானித்து விட்டீர் போலிருக்கிறது. புதிதாய் உமது சர்க்கார் கொண்டுவந்திருக்கும் "மசோதாவில், அளவுக்கு மீறி ராஜீயக் கைதிகளிடம் அநுதாபம் காட்டக்கூடாது" என்று காணப்படுகிறது. கொஞ்சம் நிதானமாக உட்கார்ந்து யோசித்துப்பாரும். இது ஒரு ஆச்சரியமான ஷரத்தல்லவா? சரி, இதை எப்படி அமுலுக்குக் கொண்டு வருவது? சீதோஷ்ணத்தை அளந்து பார்க்கும் கருவியைப்போல, உண்மையா பொய்யா என்ற விஷயத்தை கண்டுபிடிக்க ஒரு கருவி செய்யப்பட்டிருப்பதாய் கேள்விப்படுகிறேன். அந்தக் கம்பெனிக்கு எழுதி, பத்திராசிரியர் நெஞ்சை சோதிக்கும் கருவிகளில் ஒரு லட்சம் அனுப்பும்படி உத்தரவு போடும். எல்லாம் புகாரில்லாமல் சரியாய் நடைபெறும்.

—படார்சாமி

சர். ஜான் சைமன்
அன்னிய நாட்டு மந்திரி
லண்டன்

பழைய நண்பரே,

உம்மைப்பற்றி இந்தியாவில் அறியாதவர்கள் மிகச்சொற்பம். உமது கீர்த்தி அவ்வளவு தூரம் பரவியிருந்தது. கீர்த்தி என்றால் ஏதோ நல்ல காரியம் செய்ததால் ஏற்படும் புகழ் என்று நீர் மனோராஜ்யம் செய்யவேண்டாம். இந்தியா வெறுத்து பகிஷ்கரித்த ஒரு கமிட்டிக்கு நீர் தலைவராய் வந்தீரே! அதனால் கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரையில் "சைமனே திரும்பிப்போ" என்ற வரவேற்பு உமக்குக் கிடைத்ததை நீர் மறக்கமாட்டீர். அதனால் தான் உமது பெயர் இந்தியாவெங்கும் பரவிற்று. இப்பொழுது இதேவழியில் உமது "கீர்த்தி"யை ஐரோப்பாவெங்கும் பரப்பி வருவதாய் அறிகிறேன். உமது கமிட்டியால் இந்தியாவில் நெருக்கடி உண்டுபண்ணினீரே, அதேமாதிரி உமது அன்னிய நாட்டு மந்திரி பதவியால் ஐரோப்பாவில் நெருக்கடி உண்டுபண்ணி வருவதாய் அறிகிறேன். முதலில் சீனாவுடன் சேர்ந்து ஜப்

பானுக்கு விரோதமாக பேசினீர். அப்புறம் ஜப்பானுடன் சேர்ந்து சீனுவிற்கு விரோதமாக பேசினீர்! ஆயுதப்பரிகாரண மகாநாட்டிலிருந்து ஜெர்மனி வெளியேறுவதற்கு நீர்தான் காரணமாயிருந்தீர்! இப்பொழுது ஜெர்மனிக்கு சாதகமாகப்பேசி, பிரான்ஸை விரட்ட முயற்சி செய்வதாய் அறிகிறேன். ஏதோ ஒரே மாதிரி கல் பிள்ளையார்போல இல்லாமல், ஆட்டைத்தூக்கி மாட்டு மேலேயும், மாட்டைத்தூக்கி மனிதன் மேலேயும் போட்டு "கலாட்டா" செய்து வருவதற்காக உம்மை பாராட்டுகிறேன். உமது நாரதர் வேலை வெற்றியடையுமாக.

—படார்சாமி

ஸ்ரீ. பூரி சங்கராச்சாரியார்

தமிழ்நாடு

சுவாமிகளே,

தமிழ்நாட்டில் பிறந்த பாவத்திற்காக தமிழ்நாட்டில் நீர் சுற்றுப்பிரயாணம் செய்து வருவதாய் அறிகிறேன். சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானும் ஆண்டி என்பதைப்போல, "சிவ சிவா" என்று தூங்கிக் கிடக்கும் வைதிகருக்கு வர்ணாசிரம இஞ்சக்ஷன் கொடுக்க நீர் புறப்பட்டிருக்கிறீர். இந்த இழவு "இஞ்சக்ஷன்கள்" திடீரென்று பெரிய ஆபத்துக்களை கொண்டுவந்து விடுவதாக டாக்டர்கள் சொல்லுகிறார்கள். மண்டையிலோ இருதயத்திலோ நேராகப்போய் தாக்குவதால் பலர் இறந்துபோகிறார்கள். இருதயத்தை தாக்கினால் உடனே உயிர் போகும். மண்டையில் தாக்கினால் புத்திமயங்கி பட்சவாதத்தில் கொண்டுவந்துவிடும். வைதிகரைப் பொறுத்தவரையில் இருதயம் என்ற வஸ்துவே அவர்களிடம் கிடையாதாகையால், அதைப்பற்றி பேச்சில்லை. உமது இஞ்சக்ஷன் தாக்குவதாயிருந்தால் மண்டையைத்தான் தாக்க வேண்டும். பலன் என்ன? பூர்ண ஸ்தம்பிப்பு! தமிழ்நாட்டு வைதிகருக்கு உம்மால் நேரப்போகும் தொல்லையை நினைத்தால் வருத்தமாய்த் தான் இருக்கிறது. என்ன செய்வது? விதி யாரைத்தான் விட்டது? ஏதோ உமது கைங்கரியத்தை ஒழுங்காகச் செய்யும். இரண்டில் ஒன்றை பார்த்துவிடவேண்டியது டாக்டர்களின் முக்கியமான கடமை. நீர் ஒரு தமிழர் என்பது பலருக்கு தெரியாமலிருக்கலாம். உமது பூர்வாசிரமத்தைப்பற்றியும், சேலம் மாநகரில் நீர் தவஞ்செய்து வந்த நாட்களில் நிகழ்ந்த அற்புதங்களைப்பற்றியும், மற்றொரு தடவை தமிழருக்கு தெரிவிக்கலாமென்றிருக்கிறேன்.

—படார்சாமி

யுத்தத்தில் பிறந்த குடியரசு

(கணக்கன்)

செக்கோஸ்லோவேகியா என்ற குடியரசு ஸ்தாபனமானதைப் பற்றிச் சென்ற "காந்தி" மலரில் ஓர் வியாசம் பிரசுரமாயிருந்தது.

அந்த நாடு ஒரே ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்தது. உள்நாட்டில் கட்சிப் பிரதிகக்ஷிகள் கிடையாது. ஆகையால் அவர்கள் எளிதில் நேச தேசங்களுடன் சேர்ந்துகொண்டு தம்மீது ஆதிக்கம் செலுத்திய ஏகாதிபத்தியத்தை ஒடுக்க முடிந்தது.

இப்போது நாம் படிக்கப்போவது போலந்து தேசத்தைப்பற்றிய கதை. இந்த நாடு சுதந்தரமடைந்தது மிகவும் விசித்திரமான காரியம்.

போலந்துக்கு இப்பொழுது தலை நகரமாக இருப்பது வார்சா என்ற பட்டணம். 1914-ம் வருஷத்திற்கு முன் உலகப்படத்தில் இந்த ஊரைத் தேடிப் பிடிக்க வேண்டுமானால் ரஷியா தேசப் படத்தைத்தான் பார்க்கவேண்டும். கிராகோ என்பது இப்பொழுது போலந்திலுள்ள ஒரு பெரிய பட்டணம். அதைப் பார்க்கவேண்டுமானால் ஆஸ்டிரியாவின் படத்தைப் புரட்டிப் பார்க்கவேண்டும். ஆனால் இப்பொழுது பள்ளிக்கூட மாணவர்கள் படிக்கும் பூகோளப் படத்தில் "போலந்து" என்று தனிப் பக்கம் இருக்கும்.

நூறு வருஷகாலமாக போலந்து தேசத்தை ஐரோப்பாவிலுள்ள மூன்று முக்கியமான ஏகாதிபத்தியங்கள் தமக்கிடையே பங்குபோட்டுக்கொண்டன. ஒரு பாகம் ரஷியாவின் கீழ்; மற்றொரு பாகம் ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்துக்கு; மீதமுள்ளது ஜர்மனியின் ஆதிக்கத்தில்.

போலந்து என்ற தனி நாடு ஒன்று இல்லாமலே போய்விட்டது. இந்த நிலைமையிலிருந்து போலந்தை மீட்டுவதற்குப் பல முயற்சிகள் நடந்தும் பலிக்கவில்லை.


கடைசியாக 1914-ம் வருஷம் யுத்தம் ஆரம்பித்தது. அப்பொழுது போலந்து ஜனங்கள் யாருடன் சேர்வது? போலந்து முழுவதையும் ஒரு நாடாக ஒன்று சேர்த்து ரஷிய ஏகாதிபத்தியத்துக்குட்பட்ட ஒரு தனிநாடாகச் செய்யலாம் என்று சிலர் விரும்பினார்கள். எப்படியானாலும் ரஷியாவின் கீழிருக்கக் கூடாது; ஆஸ்டிரிய ஏகாதிபத்தியத்துக்குட்பட்ட ஒரு நாடா

கச் செய்யலாம் என்பது ஒரு கட்சி. ஜெர்மனியின் மேல்பார்வையில் ஒரு பொறுப்பாட்சியுள்ள நாடாகச்செய்யலாமென்பது ஒரு கட்சி. ஒவ்வொரு பாகத்தில் அபிப்பிராயம்ஒவ்வொரு மாதிரியாக இருந்தது. இந்த மூன்று நாட்டுக்கும் உட்படாமல் போலந்தை பரிபூர்ணமான, யாருக்கும் அடிமைப் படாத, ஒரு தனிக் குடியரசு நாடாகச் செய்யவேண்டுமென்ற உன்னதமான லக்ஷியத்தை வணங்கியவர் ஒரு சிலரே. இவர்களுள் ஜோசப் பில்ஸ்டுஸ்கி ஒருவர். இந்த லக்ஷியம் கடைசியில் கைகூடியது. இன்று போலந்து ஐரோப்பாவில் நன் மதிப்பும் பெருமையும் அடைந்துள்ள ஒரு குடியரசாக விளங்குகிறது. இது எப்படி நடந்தது? என்ன முறைகள் கையாளப்பட்டன?

ஜோஸப் பில்ஸ்டுஸ்கியின் சரித்திரத்தைப் படித்தால் போலந்தின் சரித்திரத்தை நாம் அறிந்துகொள்ள முடியும்.

பில்ஸ்டுஸ்கியின் பூர்வ சரித்திரம்

இன்று சுதந்தரப் போலந்துக்கு மார்ஷல் பில்ஸ் டுஸ்கி எதேச்சாதிகாரியாக இருக்கிறார். ஆனால் அவர் உண்மையில் தனக்கு பெரிய அதிகாரம் வேண்டுமென்று ஆசைப்படுகிறவரல்ல.



போலந்தின் க்ஷேமமே அவரது லக்ஷியம். இதற்காக அவர் செய்திருக்கும் தியாகம்கொஞ்ச நஞ்சமல்ல. ரஷிய ஏகாதிபத்தில் ஜார் மன்னர்கள் ஆட்சி செய்தபோது அவர் அபேதவாதக் கட்சியை ஸ்தாபித்தார். ஏன், அபேதவாதக் கொள்கையிலுள்ள நம்பிக்கை காரணமல்ல.

ஜார் ஆட்சியை ஒழிய வைப்பதற்காக 1914ல் ஐரோப்பிய யுத்தம் ஆரம்பிக்கு முன்பு அவர் அனுபவித்த பல அவதிகளை சற்று பார்க்கலாம்.

ஜார் கொலை முயற்சி

மார்ஷல் பில்ஸ்டுஸ்கிக்கு இப்பொழுது வயது 67. அவருக்கு 20 வயதாக இருந்தபோது ரஷிய சக்கிரவர்த்தியைக் கொலைசெய்ய

சூழ்ச்சி செய்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. 5-வருஷ காலம் நாடு கடத்தப்பட்டுச் சிறை தண்டனை அனுபவித்தார். 1892ல் விடுதலை யடைந்ததும் 'போலந்து அபேதவாதக் கட்சி' என்ற ஓர் சங்கத்தை ஸ்தாபித்து அதன் மூலம் பிரசாரம் செய்து வந்தார்.

ரகசியப் பத்திரிகையும் சிறையும்

1894-ல் "ரபாத்னிக்" (தொழிலாளன்) என்ற பெயருடன் ஒரு ரகசியப் பத்திரிகையை ஆரம்பித்தார். அச்சிடுபவர், ஆசிரியர், பிரசுரிப்பவர் எல்லாம் பில்ஸ்டுஸ்கியே. வாங்குவது மட்டும் தான் வேறு! பிறகு ரஷியாவை எதிர்த்து ஆயுதப் புரட்சி செய்வதும் அவரது கட்சியின் வேலைத் திட்டமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஜாரின் ரகசியப் போலீசார் விட்டு விடுவார்களா? 1900ல் பில்ஸ்டுஸ்கியும் அவரது மனைவியும் வீட்டிலிருக்கும் போதே கைதியாயினர். வார்ஸாவில் இவர் ஒரு தனிச் சிறையில் வைக்கப்பட்டார்.

பைத்திய வேஷம்

சிறையிலேயே இருந்து கொண்டிருந்தால் தேச விடுதலைக் காரியம் எப்படி நடக்கும். ஆகையால் எப்படியாவது சிறையிலிருந்து தப்பவேண்டும். பைத்தியம் பிடித்ததுபோல் வேஷம் போட்டுக்கொண்டார். உண்மையாகவே பைத்தியம் பிடித்ததாக அதிகாரிகள் நம்பினார்கள். 1901-ல் பீடர்ஸ்பர்க் பைத்தியக்காரர் சிறைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து தப்பி ஓடினார். விடுதலையடைந்ததும் லண்டனுக்கு ஓடிப்போய் ஒரு வருஷகாலம் அங்கு தங்கினார். அங்கு வேறு சில போலிஷ் (போலந்து தேசத்தைச் சேர்ந்த) தேசபக்தர்களுடன் நாட்டு விடுதலையைப்பற்றி ஆலோசித்தார். அவர்களில் ஒருவரான மோஸிக்கி என்பவர் தான் இன்று போலந்துக் குடியரசின் அக்கிராசனாதிபதி.

லண்டனிலிருந்து திரும்பி வந்தபின் ஆஸ்டிரியாவிலுள்ள போலந்து பாகத்திலேயே இருந்தார். ரஷியாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் வந்தபோது போலந்தை விடுதலை செய்வதற்கு ஜப்பானின் உதவியைப் பெற முயற்சித்தார். ஆனால் அது பயன் தரவில்லை.

1905-க்குப்பின் ஆஸ்டிரியாவிலுள்ள கிராக்கோவிலேயே தங்கினார். அதன் பின் அவரது அரசியல் வேலைகளை அங்கிருந்தே நடத்திவந்தார்.

போலந்து சைன்னியம்

போலந்துக்கு ஒரு தனி சைனியம் திரட்டும் யோசனை அப்பொழுதுதான் தோன்றியது. எந்த சர்க்காரையும் சேராத ஒரு தனி சைனியம் ஏற்படுத்தி ரஷியாவை எதிர்க்க அதை உபயோகிக்கவேண்டுமென்பது அவர் மனதில் போட்டுக்கொண்ட திட்டம். லாவ் என்ற இடத்தில் ஓர் ராணுவப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினார்.

ஆஸ்டிரியா, ஜெர்மனி முதலிய நாடுகளுக்கும், ரஷியாவுக்குமிடையே யுத்தம் வருமென்பதை அவர் வெகுநாளுக்கு முன்னதாகவே எதிர்பார்த்தார். பிரான்ஸ் இங்கிலாந்து ரஷியா எல்லாம் ஒரு கட்சியில் இருக்குமென்பது அவருக்குத் தெரியும். இந்த சைனியமும் யுத்தத்தில் உதவியாக இருக்கும். இதை முதலில் ஆஸ்டிரியாவுக்குச் சாதகமாக உபயோகித்து ரஷியாவைத் தோற்கடிக்க வேண்டியது. பிறகு ஆஸ்டிரியாவுக்கு விரோதமாக பிரான்சுடன் சேர்ந்து ஆஸ்டிரியாவையும் ஜெர்மனியையும் அடிக்க வேண்டியது. இதற்காக யுத்த காலத்தில் உதவும்படி ஒரு பெரிய நிதியைச் சேர்த்ததோடு ரஷியாவுக்குட்பட்ட போலந்தில் தேசபக்தி உணர்ச்சி வலுவடைவதற்கு வேண்டிய பிரசாரத்தையும் இடைவிடாமல் செய்துவந்தார். இவர் எதிர்பார்த்தபடியே யுத்தமும் வந்தது.

ஐரோப்பிய யுத்தம்

1914-ஆகஸ்ட் மாதம் யுத்த முழக்கத்துடன் ஆரம்பமாயிற்று. ரஷியா, பிரான்ஸ், பிரிட்டன் மூன்று முக்கியமான நாடுகள் ஒரு கட்சி. ஜெர்மனியும், ஆஸ்டிரியாவும் ஒரு கட்சி. போலந்து எந்தக் கட்சி? இரண்டு கட்சி ராஜ்ஜியங்களிலும் போல் ஜாதியார் இருக்கிறார்கள்.

ரஷியாவின் ஆசை வார்த்தை

நெடுநாளாகத் தன் கீழுள்ள போல் ஜாதியாரை நசுக்கி, அவர்களது பாஷையையும் நாகரிகத்தையும் ஒருங்கே நாசம் செய்த ரஷிய ஜார், போலந்து மக்களுக்கு 1914 ஆகஸ்ட் 14உ ஓர் அறிக்கை வெளியிட்டார்.

"உங்களுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது! உங்கள் மூதாதைகளின் தவம் பலித்துவிட்டது!! 150 வருஷ காலமாக போலந்தின் சரீரம் துண்டுதுண்டாக நறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஜாதியின் ஆத்மாவை நசுக்கமுடியுமா. அது சாகுமா? மஹிமை பொருந்திய

ரஷிய சாம்ராஜ்யத்துடன், அடிமையாக அல்ல, சுதந்தரமுள்ள சஹோதரனுக போலந்து புத்துயிர் பெறுங் காலம் வந்துவிட்டது. ரஷியா வேறு போலந்து வேறு என்ற மனப்பான்மை ஒழிந்துபோய்விடும். உங்கள் வீர வாள் இன்னும் துருப்பிடிக்க வில்லை. இப்பொழுது ரஷியா வுடன் சேர்ந்து யுத்தம் செய்து நாட்டின் உயர்வை நாடுங்கள்." இதுதான் அவ்வறிக்கையின் சாராம்சம்.

பில்ஸ்டுஸ்கியின் திறமை

இந்தப் பசப்பு வார்த்தைகளில் ரஷியாவின் பாகத்திலுள்ள போலந்து மக்கள் ஏமார்ந்து போயிருக்கக்கூடும். ஆனல் பில்ஸ்டுஸ்கி அதற்கு சந்தர்ப்பமும் சாவகாசமும் கொடுக்கவில்லை. அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று முடிவு செய்வதற் குள்ளாகவே பில்ஸ்டுஸ்கி தான் சேர்த்துவைத்த 3000 வீரர்களுடன் "ரஷியப் போலந்தை" எதிர்த்து வந்தார். தமது மக்களை எதிர்த்து யுத்தம் செய்ய போலந்து வாசிகளுக்கு மனம் வருமா? அவர்களும் இந்த சைனியத்துடன் சேர்ந்து கொண்டு தமது ஏகாதிபத்தியத்துக்குத் "துரோகம் செய்தார்கள்." ஆஸ்டிரிய ஜர்மன் சைனியம் ரஷியப் போலந்தை முற்றிலும் கைப்பற்றிவிட்டது. ரஷியாவிலும் புரட்சி ஏற்பட்டுவிட்டது. இனிமேல் ரஷியாவை எதிர்த்து யுத்தம் செய்யவேண்டிய அவசியமில்லை.

அப்பொழுது இந்த போலிஷ் சைனியங்கள் பிரான்ஸ், பிரிட்டன் முதலிய நேசதேசங்களை எதிர்த்து யுத்தம் செய்யவேண்டுமென்று ஆஸ்டிரியா விரும்பிற்று. ஆனல் போலந்து எல்லைகளுக்கு வெளியே தமது சைனியத்தை அனுப்பக்கூடாதென்று பில்ஸ்டுஸ்கி முன்னதாகவே சொல்லியிருந்தார். பில்ஸ்டுஸ்கி திட்டத்தின் முதல்பாகம் நிறைவேறி விட்டது. இனிமேல் அவர் விரும்புவது ஆஸ்டிரியாவின் வெற்றியல்ல. ஆஸ்டிரியா தோல்வியடைய வேண்டுமென்பதே அவரது விருப்பம். இதற்காக அவர் பிரான்ஸுடனும் பிரிட்டனுடனும் சிநேகப் பேச்சு நடத்த ஏற்பாடு செய்தார். 1916 ஜூலை மாதத்தில் பில்ஸ்டுஸ்கி தம்முடைய சைனியத்துடன் ஆஸ்டிரியப்படையிலிருந்து விலகினர். ஜெர்மனிக்கும் ஆஸ்டிரியாவுக்கும் பயம் உண்டாயிற்று. உடனே போல் ஜாதிக்கு சுதந்திரமளிப்பதாக ஆஸ்டிரிய சக்கிரவர்த்தியும் ஜெர்மன் சக்கிரவர்த்தியும் அறிக்கை வெளியிட்டார்கள்.

ஜெர்மன் ராஜ தந்திரம்

1916 நவம்பர் 4-ந் தேதியன்று ஆஸ்டிரிய சக்கிரவர்த்தி ஓர் அறிக்கை வெளியிட்டார். "(1) இதுவரையில் ரஷியாவின் ஆதிக்கத்திலிருந்த போலந்து மாகாணங்களை ஓர் தனி முடியா

சாக, பூர்ண சுயராஜ்யமுள்ள நாடாகச் செய்கிறோம். அதற்கு ஓர் அரசியல் திட்டமும் வகுக்கப்படும். (2) ஆஸ்டிரியாவின் கீழ் இருந்த 'கலிசியா' என்னும் போலிஷ் மாகாணத்துக்கு, ஏகாதிபத்தியத்துக் குட்பட்ட மாகாண சுய ஆட்சி கொடுக்கப்படும். அவர்களுடைய நாகரிகம், பாஷை, பொருளாதார முன்னேற்றம் இவற்றை பாதுகாக்க ஏற்பாடு செய்கிறோம்." இதுதான் அந்த அறிக்கை. இதேபோல் ஒரு அறிக்கையை ஜெர்மன் சர்க்காரும் வெளியிட்டது.

வந்ததை வரப்பற்று

பில்ஸ்டுஸ்கி யோசித்தார். இப்பொழுது வருகிற சிறு சுதந்தரத்தைக் கைப்பற்றிக்கொண்டு கள்ளனுக்குள் குள்ளன் பாய்வதுபோல் ஆஸ்டிரியாவை போலந்திலிருந்து வெருட்டிவிடலாம் என்று யோசித்தார். அப்பொழுது ஸ்தாபிக்கப்பட்ட நிர்வாக சபையில் 20 பேரில் பில்ஸ்டுஸ்கியும் ஒருவராக ஸ்தானம் பெற்றார்.

ஆனால் லக்ஷியத்தை மட்டும் விடவில்லை. தமது வேலைத் திட்டத்தையும் மறக்கவில்லை. ரஷியா, பிரஷியா, ஆஸ்திரியா மூன்றிலும் பங்கிடப்பட்டுக் கிடக்கும் போலந்தை ஒரே ராஜ்ஜியமாகச் சேர்ப்பது அவருடைய லக்ஷியம். பிரான்ஸ், பிரிட்டன் இரண்டையும் விரோதித்துக் கொள்ளாமல் இந்த லக்ஷியத்துக்கு உதவி தேடவேண்டியது தான் அவரது வேலைத் திட்டம்.

ஆகவே அவர் தற்கால நிர்வாக சபையில் ஸ்தானம் வகித்த போதிலும் அவசரத்துக்குத் தக்கவாறு பயன்படுவதற்காக ரகசியமாக ஒரு ராணுவ அமைப்பையும் சிருஷ்டித்துக் கொண்டார்.

போலந்தின் சுதந்தரத்தை ஆதரித்து அமெரிக்கத் தலைவர் வில்சனுடைய அறிக்கையும் வெளிவந்தது.

மீண்டும் கைதி

பில்ஸ்டுஸ்கி தமது சைனியத்துடன் பிரான்சை எதிர்த்துப் போராடுவார் என்று ஆஸ்டிரியாவும் ஜெர்மனியும் எதிர்பார்த்தது. ஆனால் போலந்து சைனியம் ஜெர்மனிக்கு ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து கொடுக்க முடியாதென்று பில்ஸ்டுஸ்கி கண்டிப்பாய் சொல்லிவிட்டார். ஆகவே 1917 ஜூலையில் அவர் கைதி செய்யப்பட்டு மாக்டிபர்க் கோட்டையில் அடைக்கப்பட்டார்.

போலந்துக்கு இன்னும் அதிகமான உரிமைகள் கொடுப்பதாக ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் ஆசை காட்டியது. ஆனால் அதே சமயத்தில் ரஷியாவுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையில் போலந்து ஜனங்களின் உரிமைகளைப் புறக்கணித்தனர். அமெரிக்காவும் யுத்

தத்தில் கலந்துகொண்டு விட்டதால் ஜர்மனிக்கு தோல்விமேல் தோல்வியாக ஏற்பட்டது. 1918ல் ஜெர்மனியில் புரட்சி தலையெடுத்தது. பில்ஸ்டுஸ்கியும் விடுதலை செய்யப்பட்டார்.

குடியரசு ஸ்தாபனம்

பில்ஸ்டுஸ்கி விடுதலையாய் 1918 நவம்பர் 4-ந் தேதி வார்ஸா வந்து சேர்ந்தார். அவர் அதற்கு முன்பே அமைத்து வைத்திருந்த ரகசிய ராணுவத்தின் உதவியால் ஆங்கிருந்த ஆஸ்டிரிய ஜர்மன் படைகளின் ஆயுதங்களை யெல்லாம் பறிமுதல் செய்தார். அப்பொழுதிருந்த தற்கால சர்க்காரும் பில்ஸ்டுஸ்கியை வரவேற்றது. அவர் கையில் ராஜ்ஜியத்தின் நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டு ராஜீநாமாச் செய்தது. அவரையே சர்வாதிகாரியாகவும் நியமித்து சர்க்காரை நிர்மாணம் செய்யும் வேலையையும் அவரிடமே ஒப்படைத்தது.

சமாதான மகாநாடு

பிறகு யுத்தம் முடிந்து சமாதான மகாநாடு ஆரம்பமான போது அதில் போலந்துப் பிரதிநிதிகளுக்கு சம அந்தஸ்துக் கொடுக்கப்பட்டது. வில்சன் அறிக்கைப்படி போலிஷ் ஜாதியார் இருக்கு மிடங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு தனி சுதந்தர ராஜ்ஜியமாகச் சேர்க்க வேண்டுமென்று போலந்துப் பிரதிநிதிகள் கோரினார்கள். இவர்களுடைய கோரிக்கையால் நஷ்டம் ஏற்படுவது ரஷியா, ஆஸ்டிரியா, ஜெர்மனி மூன்றுக்கும் தான். ஆகையால் பிரான்ஸ் இவற்றை பலமாக ஆதரித்தது. போலந்துக்குக் கடற்கரையும் இருக்க வேண்டுமென்பதற்காக பிரஷ்யாவின் மத்தியில் கிழக்கு பிரஷியாவுக்கும் மேற்கு பிரஷியாவுக்கும் மத்தியில் ஒரு பாகத்தைப் போலந்து ராஜ்ஜியமாக ஆக்கினார்கள். இதுதான் போலந்துக் குடியரசின் ஆரம்பம்.

குடியரசு ஏற்பட்ட பின்பு சில காலம் பில்ஸ்டுஸ்கி ராஜ்யத் துறையிலிருந்தே விலகியிருந்தார். ஆனால் சர்க்கார் நிர்வாகிகள் பொறுப்பை உணராமல், வீண் வாத விவாதங்களில் பார்லிமெண்டு காலம் கழித்துவந்தது. ஆகவே பில்ஸ்டுஸ்கி மறுபடியும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினர். 1926 மேமீ 12-ந் தேதி அவர் தன்னிடம் மிகவும் பக்தியுடன் நடந்துவந்த ராணுவங்களைச் சேர்த்துக்கொண்டு அரசியலைக் கைப்பற்றினர். குடியரசுத் தலைவர் ராஜிநாமாச் செய்தார். மறுபடியும் பார்லிமெண்டு இவரையே தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அந்தப்பதவியை அவர் ஏற்றுக்கொள்ளாமல் ஸ்ரீ மொசிகி என்ற தனது நண்பருக்கு அதைக் கொடுத்துவிட்டு யுத்த மந்திரிப்பதவியைத் தன் கையில் வைத்துக் கொண்டார்.

இப்பொழுது இருக்கும் நிலைமையில் பார்லிமென்டுக்கு அதிகமான அதிகாரம் இருக்கக்கூடாதென்றும் தலைவருக்கு அதிகமான ஆதிக்கம் இருக்கவேண்டுமென்றும் பில்ஸ்டுஸ்கி எண்ணுகிறார். அதற்காக ஒரு புதிய அரசியல் திட்டமும் தயாராயிருக்கிறது. இன்னும் இரண்டு மாதத்தில் அது அமுலுக்கு வரும் அப்பொழுது ஒருவேளை பில்ஸ்டுஸ்கியே தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளக்கூடும். இப்பொழுது அவர் உத்தியோக முறையில் தலைவராக இல்லாவிட்டாலும் அவரே ஓர் ஏகதேச்சாதிகாரி போல் அரசு செலுத்துகிறார். ஆனால் அவரது ஏகாதேச்சாதிகாரம் போலந்துக்கு நன்மை பயக்கிறதென்பதே பலருடைய அபிப்பிராயம்.

அடிமைப்பட்டுக்கிடந்த ஒரு நாடு தன் யஜமானுக்கு விரோதமாக 'சதி' செய்து எதிரியுடன் சேர்ந்துகொண்டு சுதந்தரத்தைப் பெற்றதற்கு செக்கோஸ்லேவியா ஓர் உதாரணம். பரஸ்பர விரோதமுள்ள பல நாடுகளுக்கு அடிமைப்பட்டு சிதறிக்கிடந்து முதலில் ஒன்றை எதிர்த்துச் 'சதி' செய்து, பின்னர் மற்ற யஜமான்களுக்கும் துரோகம் செய்து சுதந்திரத்தையும் தேசீய ஐக்கியத்தையும் பெற்றது போலந்து இதே யுத்தத்தில் இந்தியா என்ன செய்தது என்ன பயன் பெற்றது என்பதை நாம் சொல்லத்தேவையில்லை.



போல்ஷிவிக் கழுகு, அமெரிக்கப் புலி, பிரிட்டிஷ் சிங்கம், சீனக்கரடி, எல்லாம் சேர்ந்து மஞ்சுகோ என்ற இளங் குழந்தையைக் கொல்ல வருகிறதாம். குழந்தையைக் காப்பாற்றும் புண்ணிய கைங்கரியம் ஜப்பான் தலையில் விழுந்திருக்கிறதாம். (இது ஒரு ஜப்பானிய கூடார்த்தப் படம்)



உங்களுக்குத் தெரியுமா?

மீன் பிடிக்கும் மீன்

பெரிய மீன் சிறு மீனைத் தின்னும் என்பது சாதாரணமாக எல்லோரும் அறிந்ததேயாகும். அவை மீன்களை துரத்திச்சென்று வாயால் பிடித்துத் தின்பதாகவே நாம் எண்ணி வருகிறோம். ஆனால் பசிபிக் சமுத்திரத்தில் ஒரு தினுசான மீன் இருக்கிறது. அது பெரிய மீன் அல்ல. அதன் நீளம் 4 அங்குலம்தான். இருந்தாலும் அது தன்னை விடப் பெரிய மீன்களைத் தின்றுவிடுகிறது. மீன் பிடிப்பதற்கு தூண்டி போன்ற ஒருகொக்கி, அதன் உடலில் அமைந்திருக்கிறதாம். மனிதர்கள் மீன்பிடிப்பதற்காக தூண்டிமுள்ளில் ஏதாவது புழுவோ அல்லது மீன் கடிக்கும்படி ஏதாவது உணவோ வைப்பது போலவே இந்த மீன் ஒரு வகையான இரையை தன் தூண்டியின் நுனிக்கு அனுப்பி விடுகிறது. இதைத் தின்ன ஆசை கொண்டு கடிக்கும் மீன்களை இது பிடித்துக் கொஞ்சங் கொஞ்சமாகத் தின்று விடுகிறதாம்.

பருத்தி விதை மனித உணவா?

இந்தியாவில் சில சிறைகளில் கட்டாயப் படுத்தி க்ஷவரம் செய்கிறார்கள். எதற்காக 15 நாளுக் கொருமுறை க்ஷவரம் செய்ய வேண்டுமென்கிறார்கள் என்று சிலர் கேட்பார்கள். ஒரு அறிவாளி பின் வருமாறு காரணம் கூறினாராம். "சிறையில் கைதிகளுக்குக் கொடுக்கும் காய்கறியுடன் ஏராளமாக புல்லும் தழையும் கலந்திருப்பதால் தலையில் கொம்பு முளைத்துவிடும். இது முளைக்கும் போது வெட்டிவிடவேண்டுமாகையால் அடிக்கடி க்ஷவரம் செய்துகொள்வது நலம்" என்று அவர் கூறினாராம். மாடுகளுக்குக் கொடுக்கும் பருத்தி விதையையே மனிதன் தின்றுவிட்டால் கொம்பு முளைக்கும் என்பதில் என்ன சந்தேகம். இப்பொழுது ஜெர்மனியில் சில விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்கள் பருத்தி விதையின்சத்தை மனிதனுக்கு

உணவாகக் கொடுக்கலாமா என்று ஆராய்ச்சி செய்கிறார்களாம். அதில் ஏ. பி. ஸி. டி. இ. முதலிய வைட்டமின்கள் (ஜீவசத்துக்கள்) இருக்கின்றனவாம். யுத்த காலத்தில் போர்வீரர்கள் தம் கையிலேயே கொண்டுபோவதற்குத் தகுந்தபடி இது கனமில்லாத உணவாக இருக்கலாமென்று நியூயார்க் பத்திரிகை ஒன்று கூறுகிறது.

சர்க்கார் பதவியில் வாரிஸ் பாத்தியம்

முடியரசு என்பது அரசுரிமையில் பரம்பரை பாத்தியதை கருதுவதாகும். ஆனால் முடியரசு ஆட்சி இல்லாவிட்டாலும் இந்த முறை எப்படியாவது நுழைந்துவிடுகிறது.

அமெரிக்காவில் பெண்களுக்கு வோட்டுரிமை ஏற்பட்ட பின் ஒரு புதுமையான வழக்கம் தலையெடுத்திருக்கிறது. 1923 ஜனவரியில் காலிபோர்னியா மாகாணத்திலிருந்து ஜான் நோலன் என்பவர் அமெரிக்கச் சட்டசபைப் பிரதிநிதியாக இருந்தார். அவர் பதவியிலிருக்கும்போதே இறந்துவிட்டார். வோட்டர்கள் அவரது மனைவியையே அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தார்கள். 1924-ல் ஜூலியஸ் கான் என்பவர் இறந்தவுடன் அவரது மனைவியைத் தேர்ந்தெடுத்தார்கள்.

மெஸாச்சஸட்ஸ் என்ற மாகாணத்தில் வின்கன்ஸன் என்பவர் அமெரிக்கச் சட்ட சபையில் மெம்பராக இருந்தார். 1925ல் அவர் இறந்தவுடன் குடியரசுக் கட்சியின் நிர்வாகிகள் அவரது மனைவியை அந்த ஸ்தானத்துக்கு அனுப்பலாமென்று எண்ணினார்கள். அவர் மறுத்ததால் அவரது மகனை தேர்ந்தெடுத்தார்கள்.

கவர்னர் பதவி விஷயத்திலும் இதே முறை இரண்டு தடவை அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. வியோமிங் மாகாணத்தில் கவர்னராக உத்தியோகத்திலிருக்கும்போது கவர்னர் ராஸ் இறந்துபோனார். அந்தப் பதவி அவருடைய மனைவிக்குக் கொடுக்கப்பட்டது.

பரம்பரை பாத்தியதைக்கு வோட்டர்களிடம் இன்னும் ஆதரவு இருக்கிறதென்பதற்கு இதெல்லாம் ஓர் அறிகுறியோ என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

தங்க டாலர் புனர்ஜன்மம்

(நா. சிவராமன்)

பூர்வாசிரமம்

1933 மார்ச்சு மாதம் வரையில் அமெரிக்கா தங்க நாணய முறையில் இருந்துவந்தது. நூறு அமெரிக்க டாலரில் 2322 கிரெயின் சுத்தத்தங்கம் இருக்கும். (100 டாலரின் நிறை 2580 கிரெயின்; அதில் 2322 கிரெயின் சுத்தத் தங்கம்)

யார் வேண்டுமானாலும் 2322 கிரெயின் சுத்தத்தங்கத்தை சர்க்கார் பாங்கில் கொடுத்து 100 டாலர் வாங்கிக்கொள்ளலாம். 100 டாலர் நாணயத்தையோ, 100 டாலர் என்றெழுதிய நோட்டையோ கொடுத்து 2322 கிரெயின் தங்கம் வாங்கிக்கொள்ளலாம். 2322 கிரெயின் தங்கத்துக்கு 100 டாலர் விலை. (1 அவுன்ஸ் 480 கிரெயின்) 1 அவுன்ஸ் தங்கத்தின் விலை 20. 672 டாலர்.

இந்த முறைக்குத் தங்க நாணய முறை என்று பெயர்.

ஜுன்னி பிறக்கிறது

1933 மார்ச்சு மீ த்தில் அமெரிக்க டாலர் தங்க நாணய முறையென்ற பீடத்திலிருந்து மெதுவாக எழுந்தது. சுப்பிரமணிய சுவாமி மயில் வாகனத்தில் இருப்பதுபோல ஆசனத்தில் பட்டும் படாமலும் இருந்தது. தங்கத்தை ஏற்றுமதி செய்யவோ தனிப்பட்டவர்கள் இறக்குமதி செய்யவோ கூடாதென்று சர்க்கார் கட்டளையிட்டது. டாலர் நோட்டின் தங்க மதிப்பு வெகுவாகக் குறையாதபடி சர்க்கார் சிறிதளவு காப்பாற்றிவந்தார்கள். டாலர் தங்க முறையை விட்டு அகன்றதாகவு மில்லை; அதிலேயே அமர்ந்த தாகவு மில்லை.

நோய் முற்றுகிறது

1933 ஏப்ரல் பிறந்தது. ரூஸ்வெல்ட் தலைவர் பதவியிலமர்ந்து வர்த்தகர்கள், கைத்தொழில் முதலாளிகள், விவசாயிகள், பாங்கர்கள் எல்லாரோடும் கலந்து ஆலோசித்தார். செல்வ நிலை சீர்பட்டு வேலையில்லாக் கஷ்டம ஒழியவேண்டுமானால் செலாவணியைப் பெருக்கவேண்டும் என்று நிச்சயமாயிற்று. தங்க நாணய முறையிலிருந்து கொண்டு செலாவணியைப் பெருக்கி நோட்டுகளை அதிகமாக அச்சிட முடியாது. (ஆயிரம்கோடி டாலர் நோட் இருந்த இடத்தில் 2000 கோடி டாலர் ஜனங்களிடையே பழக்கத்தில்

இருக்கவேண்டுமானல் அதற்கு தகுந்தபடி தங்க இருப்பும் அதிகமாக வேண்டுமல்லவா?)

மரணம்

ஆகவே ஏப்ரில் மாதம் 19-க் தேதியன்று ஒரு சர்க்கார் உத்தரவு பிறந்தது. 100 டாலர் நோட்டுக்குப் பதிலாக சர்க்கார் 2322 கிரெயின் சுத்தத் தங்கம் அல்லது 2580 கிரெயின் தங்கடாலர் கொடுக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஒழிந்தது. டாலர் நோட்டின் மதிப்பு குறைந்தது. 2322 கிரெயின் தங்கத்துக்கு 100 டாலர் நோட் கொடுத்தால் போதாது. 105 அல்லது 110 டாலர் 120 டாலர் என்று விலை இருக்கும்.

தங்கத்தின் விலை எவ்வளவு என்று சர்க்கார் அவ்வப்போது சொல்வார்கள். டாலர் நோட்டின் மதிப்பைக் குறைக்க வேண்டுமானல் தங்கத்தின் விலையை உயர்த்துவார்கள். டாலரின் மதிப்பை உயர்த்த வேண்டின் தங்கத்தின் விலையைக் குறைப்பார்கள். ஆகவே நாணய மதிப்பு நிர்ணயம் தங்க நாணய முறையை விட்டு நீங்கியது.



வியவஸ்தை யற்ற காகிதம்.

டாலர் நோட்டின் தங்கமதிப்பு இவ்வளவு தான் என்று நிச்சயம் கிடையாது. இப்படியே 9 மாத காலமாக டாலர் மதிப்பு விவஸ்தை யில்லாமல் இருந்தது. டாலர் பூர்ணமான தங்க நாணய முறையில் இருந்த போது, 1933 - மார்ச்சு வரையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 20·672 டாலர் அது நாளுக்கு நாள் உயர்ந்து

1934 ஜனவரியில் 34 டாலர் வரை உயர்ந்தது. அதாவது டாலரின் தங்க மதிப்பு 23·22 கிரெயினிலிருந்து 14 கிரெயின் எடைக்கும் கீழே போயிற்று.

புனர்ஜன்மம்

டாலர் நோட்டின் மதிப்பை எதாவது ஒரு விதம் நிச்சயப் படுத்த வேண்டுமென்று அமெரிக்கக் குடியரசு முடிவு செய்தது. அதற்கிணங்க இப்பொழுது ஒரு புதிய டாலர் சிருஷ்டியாயிருக்கிறது. டாலர் நோட்டின் தங்க மதிப்பு இவ்வளவுதான் என்று நிச்சயமாகிவிட்டது; 1 அவுன்ஸ் தங்கத்துக்கு இத்தனை டாலர் விலையென்பது உறுதியாயிற்று. வெளி நாட்டார் டாலர் நோட்டுக்கு அந்த மதிப்புக் கொடுக்காவிட்டால் டாலருக்குப் பதில் தங்கத்தைக் கொடுப்பதற்கும் சர்க்கார் தயாராகி யிருக்கிறது. இது ஒருவிதத்தில் தங்கநாணய முறைதான்.

இப்போது புதியதாய்ப் பிறந்த டாலரின் தங்க மதிப்பு 13·71 கிரெயின் (பூர்வ ஜன்மத்தில் 23·22 கிரெயின்.) இந்த மதிப்பின்படி தங்கடாலர் அச்சிட்டால் முன்னிருந்ததைப் போல அரையே அரைக்கால் பாகத்துக்கும் குறைவான தங்கம்தான் அதில் இருக்கும். ப்ரவரிமாதம் 1வயிலிருந்து தங்கத்தின் விலை அவுன்ஸுக்கு 35-டாலர்.

அதாவது இந்த டாலர் முன்னிருந்த டாலரைப்போல்100க்கு 59 பாகம் சக்தியுள்ளதாக இருக்கும்- உள்நாட்டுப் பழக்கத்தில் நோட்டுக்களே இருந்தாலும் அவற்றைக் கொண்டு வெளிநாட்டு வர்த்தகத்துக்கு அவசியமான தங்கத்தைப் பெறமுடியும். அதுவும் நிச்சயமான ஒரு விலையில்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக 23·22 கிரெயின் தங்கமதிப்பைத் தாங்கிய அமெரிக்க டாலர் நோட்டு இறந்து போய் சிறிது காலம் ஆவி உலகத்தில் (விவஸ்தை யில்லாத மதிப்புடன்) உலாவி கடைசியாக 13·71 கிரெயின் தங்க மதிப்புடன் புனர் ஜன்மம் அடைந்திருக்கிறது.

ஸ்டார்லிங்கின் சதி ?

அமெரிக்க டாலரின் மதிப்புக் குறைந்ததால் பிற நாடுகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதைப்பற்றி முன்னொரு மலரில் சில விஷயங்கள் எழுதப்பட்டது. இப்பொழுது டாலரின் மதிப்பு ஏதோ ஒருவிதமாக நிர்ணயமாய்விட்டது. இதன் பயனாக பிரிட்டனும் தனது ஸ்டர்லிங் செலாவணியின் மதிப்பை ஸ்திரமான நிலைமைக்கு கொண்டு வரலாம்.

அநேகமாக இப் பொழுது டாலருக்கும் ஸ்டர்லிங்குக்கும் உள்ள சம்மந்தத்தை சாசுவத

(951-ம் பக்கம் பார்க்க)

உலக விநோதங்கள்

துரதிஷ்ட நம்பர்!

"நான்கு" என்ற எண் மிகவும் துரதிஷ்டத்தைக் குறிப்பதாக ஜப்பானியர் எண்ணுகிறார்கள். ஏன்? நான்கு என்பதற்குள்ள ஜப்பானிய வார்த்தையும் 'மரணம்' என்பதற்குள்ள ஜப்பானிய வார்த்தையும் ஒன்று போலிருக்கிறதாம்.

* * * *

ஸ்பெயின் தேசத்தில் முஸ்லீம்கள்

ஸ்பெயின் தேசத்திலுள்ள ஒரு பெரிய மாளிகையின் வாசலில் ஒரு கல் இருக்கிறது. அதில் ஒரு சாவியின் உருவமும் ஒரு கையின் உருவமும் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டும் ஒன்றையொன்று தொட்டுவிட்டால் மறுபடியும் ஸ்பெயின் தேசத்தில் மூர் ஜாதியார் ஆதிக்கம் ஏற்படுமென்று மகமதியர்கள் நம்புகிறார்களாம்!

* * * *

மோட்டாருக்கு ரக்ஷை கவசம்

தென்னமெரிக்காவிலுள்ள வெனிஜூலா என்ற மாகாணத்தில் மோட்டார் பஸ்களுக்கு விபத்து ஏற்படாமல் காப்பாற்றுவதற்காக பைபில் கதைகளை விளக்கும் பல படங்களை மோட்டாரில் ஒட்டிக் கொள்கிறார்கள்.

* * * *

கோபக் குழம்பு

ஜப்பானிய சக்கிரவர்த்திக்கு அவருடைய பரிவாரத்தில் யார் மீதாவது கோபம் ஏற்பட்டால், உடனே ஒரு பிளேட் கொழம்பு (ஸூப்) அனுப்புவாராம். இந்தப் பிரசாதத்தை வாங்கிக்கொள்வதைவிட தற்கொலை செய்து கொள்வதே மேல் என்பது பல ஜப்பானியரது கருத்து.

* * * *

பிசாசை ஏமாற்றும் வழி

ஹெய்டி யென்பது அமெரிக்கா பக்கத்திலுள்ள ஒரு தீவு. அங்கு இறந்தவர்களது பிரேதத்தை இடுகாட்டுக்குக் கொண்டுபோ

கும்போது ரஸ்தாவில் வளைந்து வளைந்து செல்வார்களாம். அப்படிச் செய்தால் பிரேதத்தைத் தொடர்ந்து வரும் துஷ்ட தேவதைகள் எங்கு செல்வதென்று தெரியாமல் ஏமாந்து போய்விடுமாம்! இது அவர்களது நம்பிக்கை.

* * * *

வாதத்துக்கு மருந்து

கோழிக்குஞ்சின் எலும்புகளையும், குண்டுசிகளையும் சரியானபடி பிரார்த்தித்தால் வாதநோய் தீர்ந்துவிடுமென்பதும் அவர்களது நம்பிக்கை.

* * * *

காக்கையின் அந்தஸ்து

பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள பூர்வீக குடிகள் காக்கையிலிருந்து வெளிச்சமும் ஆயுளும் மக்களுக்குக் கிடைப்பதாக எண்ணுகிறார்கள். காக்கை கறுப்பாயிருந்தாலும் அது அவர்களுக்கு வெளிச்சம் தருகிறது போலும்.

(949 பக்கத் தொடர்ச்சி)

மாக்கும்படி பிரிட்டன் தனது செலாவணியின் மதிப்பை நிர்ணயமாக்கலாம். அல்லது டாலரை அரையே அரைக்கால் உயிராக ஆக்கியதைப்போல ஸ்டர்லிங்கையும் செய்து 1931-ல் (பிரிட்டனில் தங்கநாணய முறை ஒழியு முன்) இருந்து வந்த நாணய மாற்று விகிதத்தை மறுபடியும் கொண்டுவரலாம். அதாவது 1 பவுன் ஸ்டர்லிங்குக்கு 4·86-2/3 டாலர் என்று ஏற்படும். (அப்பொழுது அமெரிக்கா தன் டாலரை இன்னும் மலிவாக்குமா என்பது இப்பொழுது நிச்சயிக்க முடியாது.) இங்கிலாந்தும் அமெரிக்காவும் தமது செலாவணியின் தங்க மதிப்பை ஸ்திரப்படுத்தினால் மற்ற நாடுகளும் வழிக்கு வரும்படி செய்யலாம். செலாவணிக்குழப்பம் ஒருவாறு முடிவடையும்.

இங்கிலாந்தின் செலாவணி ஸ்திரமானால் ரூபாயின் தங்க மதிப்பும் நிச்சயமாகும். வெளிநாட்டிலுள்ள விலைவாசிகளுக்கும் உள்நாட்டு விலைவாசிகளுக்கும் தக்கபடி அப்பொழுதாவது ஜாக்கிரதையாக நமது நாணயத்தின் மதிப்பை நிர்ணயம் செய்ய வேண்டும்.

மனித யந்திரம்

ஓய்வும் சோம்பலும்

ஓய்வெடுத்துக் கொள்வது எல்லோர்க்கும் அவசியம். நாள் முழுதும் புஜபலத்தை உபயோகித்து பாடு படுகிறவனாயினும் சரி, மூளையை உபயோகித்து உழைப்பவனானாலும் சரி, வீட்டுக் காரியங்களைப் பார்க்கும் பெண்ணானாலும் சரியே, எல்லோருக்கும் ஓய்வு நேரம் மிகவும் அவசியம். ஆனால் ஓய்வெடுத்துக் கொள்வதற்கும் சோம்பலாய் இருப்பதற்கும் வித்தியாசம் உண்டு.

பொழுது என்பது விலை மதிக்க முடியாத தொன்றாகும். ஆகையால் ஒரு நிமிஷம் கூட விண்விரயம் செய்யக்கூடாது. சும்மா சோம்பலாய் இருப்பதைவிட ஓய்வு அல்லது சிரம பரிகாரத்துக்கு வேறு வழி யுண்டு. வழக்கமாய்ச் செய்யும் வேலையிலிருந்து வேறொரு வேலையைச் செய்வதில் அதிகமான ஆறுதல் கிடைக்கும்.

சிலபேர் தமது சோம்பலுக்கு "இளைப்பாறுதல்" என்ற கண்ணியமான பெயர் கொடுக்கிறார்கள். சிலர் ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டு எதையாவது யோசித்துக்கொண்டிருப்பார்கள். சிலர் உட்கார்ந்துகொண்டு—இருப்பார்கள், அவ்வளவுதான். பின்னால் சொன்ன பேர்வழியைப்போல பரிதாபமான ஆசாமி வேறு கிடையாது. அப்படி உட்கார்ந்துகொண்டே இருந்தால மனது மாசடைந்து போகும். சில்லறை விஷயங்களை பெரும் துர்பாக்கியமாக பெரிதாக நினைப்பார்கள். தன் விருப்பத்துக்கு சற்று மாறாக இருப்பவர்கள் எல்லாரும் விரோதிகளாய் மனதில் தோன்றும். உலகமே தனக்கு விரோதி யென்ற எண்ணம் உண்டாகும்.

இந்த மனித யந்திரத்தில் ஒவ்வொரு கணமும் சக்தி உற்பத்தியாய்க்கொண்டே இருக்கிறது. இதை உபயோகிக்காமல இருந்தால் யந்திரத்தில் பழுது ஏற்படும்.

சரீரப் பிரயாசைப்பட்டு வேலை செய்கிறவர்கள் ஓய்வெடுப்பதற்கு நல்ல வழி—சிறிது நேரம் மூளையை உபயோகிக்கக்கூடிய வேலை எதாவது செய்யலாம்; எதாவது புத்தகத்தைப் படிக்கலாம்.

நாள்முழுதும் மூளையை உபயோகித்து வேலை செய்கிறவர்கள் சிறிது நேரம் சரீர பலத்தை உபயோகிக்கக்கூடிய வேலைசெய்யலாம்; தோட்ட வேலை, தச்சு வேலை எதாவது செய்யலாம்.

இந்த இரண்டும் செய்யாமல் சில நிமிஷங்கள் "நல்ல சோம்பேறியாக" ஒன்றுமே செய்யாமல் இருப்பதும் நல்ல பலன் தரும். ஆனால் இதில் ஒரு ஆபத்திருக்கிறது. மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஒருவேளை இந்த சோம்பேறித்தனம் அந்த மனிதன்மீது பலமாக சவாரி செய்ய ஆரம்பித்துவிடும்.

சுப்ரமணிய பாரதியார்

(வ. ரா.)

1905-ம் வருஷம் இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு எல்லை. அந்த வருஷம் வரையில் ஸ்மரணையற்று தூங்கிக் கொண்டிருந்த இந்தியர்கள், கண் விழித்துக் கொண்டார்கள். 1907-ம் வருஷம் முதல், நாட்டாரின் தேச பக்தியின் போக்கு மாறிற்று. இவ்விரண்டுக்கும், வங்காளப் பிரிவினையும் லோகமான்ய திலகரும் காரணங்கள்.

1905-ம் ஆண்டுக்கு முன், இந்தியர்கள் ரொம்பக் கஷ்டங்களை அனுபவித்தாலும், அவைகள் சுயமதிப்பை வளர்க்கும் கஷ்டங்கள் அல்ல. நமக்கு நேரும் கஷ்டங்கள் இருவகை. நம்மை அறியாமலே வரும் கஷ்டங்கள். நாம் வருவித்துக் கொள்ளும் கஷ்டங்கள்.

வண்டியிலே பூட்டின மாடு, கஷ்டத்தை அனுபவிக்கிறது; எதிரிமாட்டை எதிர்த்துச்சண்டை போட்டாலும் கஷ்ட மனுபவிக்கிறது. மாட்டின் முதல் கஷ்டம் அதன் சுயமதிப்புக்கும் சுதந்திர வாழ்வுக்கும் பாதகமான கஷ்டம். பிந்திய கஷ்டம் அதன் சுயமதிப்பையும் சந்தோஷத்தையும் வளர்க்கும் கஷ்டம்.

கஷ்டத்தைக் கண்டோ, காணாமலோ, அஞ்சுகிற மனிதன் எந்த வேலையையும் உருவாகச் செய்து முடிக்க முடியாது. கீர்த்திக்கு நிலைத்த வழி, கஷ்டத்தை அனுபவிக்கக்கூடிய சக்திதான். விருப்புடன் வரவழைத்துக் கொண்ட கஷ்டம் மனிதனுக்கு பொறுப்பையும் கீர்த்தியையும் வளர்ச்சியையும் கொடுக்கும். மனிதன் கஷ்டப்படும் பொழுது, அனுபவிக்கும் ஆனந்தம் தான் சிறந்தது.

சூரத்து காங்கிரஸ் உடைபட்டுப் போனது மட்டும் விசேஷமல்ல. இன்னொரு விநோத சம்பவம் நேர்ந்தது.

1906-ம் வருஷம் லாலா லஜபதிராயும் ஸர்தார் அஜித் சிங்கும், பஞ்சாபிலிருந்து, பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். "லஜபதியின் பிரலாபம்" என்று பாரதியார் பாடியிருக்கிறாரே, அந்தப் பாட்டு, லஜபதியின் தேசப்பிரஷ்ட வாழ்வைக் குறித்துத் தான்.

1907-ம் வருஷ காங்கிரசுக்கு, லஜபதியைத் தலைவராக்க வேண்டும் என்பது திலகர் கோஷ்டியாரின் கருத்து. அரசாங்கத்தாரின் கோபத்துக்கு அஞ்சி, மிதவாதிகள் இந்த யோசனைக்கு இடங் கொடுக்கவில்லை. பின்னர் லஜபதி விடுதலையடைந்து, நேரே சூரத்து காங்கிரசுக்குப் போய்ச் சேர்ந்தார்.

கொள்கையில், லஜபதிக்கு திலகரிடம் பக்தி. மிதவாத சிரேஷ்டரான கோகலே அவர்களிடம் லஜபதிக்கு பிரியம். இவர்களையும் இவர்களுடைய கூட்டத்தார்களையும் ஒன்று சேர்க்க வேண்டும் என்று லஜபதி அரும்பாடுபட்டார். பயன்படவில்லை.

இந்தக் காலத்தில் இந்தியா மந்திரியாக விருந்தவர் ஜான் மார்லி என்ற பெரியார். மிண்டோ பிரபு இந்தியாவுக்கு வைஸிராய். "மிதவாதிகளை அணைத்துக்கொள்ளுங்கள்" என்று இந்தியா மந்திரி மார்லி, வைஸிராய்க்கு, சீமையிலிருந்து தந்தியனுப்பினர். இது கோகலே உள்ளிட்டார்க்குத் தெரியும்.

மிதவாதிகளை எதிர்த்து நிற்கும் கோஷ்டியாரை ஸர்க்கார் மடக்கிச் சிறை புகுத்துவது நிச்சயம் என்று கோகலே, லஜபதியின் மூலமாய், திலகருக்குச் செய்தி அனுப்பிவைத்தார். லஜபதி இந்தச் செய்தியை திலகருக்குச் சொல்லியதும் திலகர் அரவிந்தர் முதலியவர்களைக் கலந்து, பதில் கொடுத்ததும்—இந்த ஸீனை அரவிந்தர் வாயால் வர்ணிக்கக்கேட்டால், மயிர்க்கூச்செறியும்.

மிதவாத வழியைப் பின்பற்ற திலகர் உடன் படவில்லை என்பது சரித்திரம். திலகரின் இந்தத் தீர்மானம், மனமறிந்து கஷ்டங்களை வருவித்துக்கொண்ட தீர்மானமாகும். இந்தத் தீர்மானமே, நமது நாட்டாரின் மனோபாவத்தை அடியோடு மாற்றிய தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்துக்கு மனம் உவந்து ஆதரவு அளித்த பெரியார்களில் பாரதியார் ஒருவர்.

பாரதியாரின் வாழ்வின் போக்குக்கு, இந்த சம்பவங்கள் சிறப்பான காரணங்கள். பாரதியார் ஒப்பற்ற கவி என்ற முறையிலே, கவி ரவீந்திரரைப் போல, அரசியல் கிளர்ச்சியில் கலந்து கொள்ளாமல், ஒதுங்கி நின்றிருக்கலாம். இவ்வாறு செய்யாமல், அவர் அரசியலில் தீவிரமாகக் கலந்து கொண்டதற்கு, திலகர், அரவிந்தர், பிபின்பாபு—இவர்கள், காரணம் என்றும் சொல்லலாம்.

சூரத்திலிருந்து, சென்னைக்கு பாரதியார் திரும்பி வந்ததும், திலகரின் கொள்கையையும் வழியையும் ஆதரித்து, "இந்தியா" பத்

திரிகையில், சண்டப் பிரசண்டமாய் எழுத ஆரம்பித்தார். 1908-ம் வருஷம், திலகருக்கு ஆறு வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது. திலகர் கோஷ்டியைச் சேர்ந்த "பெரிய மரங்களை" ஒவ் வொருவராய், அரசாங்கத்தார் சாய்க்கத் துவக்கினர்கள்.

ஸர்க்காரின் முதல் அடி, தேசீயக்கூட்டத்தாரை கலகலக்கும் படி செய்துவிட்டது. அடுத்தது யார் என்று ஜனங்கள் பேச ஆரம் பித்தார்கள். பாரதியார் நடத்தி வந்த "இந்தியா" பத்திரிகையின் எழுத்து, சென்னை ஸர்க்காருக்குப் பிடிக்கவில்லை. முதல் பாணம், "இந்தியா"ப் பத்திரிகையைப் பிரசுரிப்பவர் பேரில் விழுந்தது. அடுத்த பாணம் பாரதியாரின் பேரில் விழும் என்று அவரது நண் பர்களுக்குத் தெரியும்.

பாரதியாரின் வாழ்விலே இது ரொம்ப நெருக்கடியான சந்தர்ப் பம். நண்பர்கள் ஒன்று கூடி யோசித்தார்கள். இந்த சமயத்தில் பாரதியார் சிறை செல்லுவது உசிதமல்ல என்பது சில நண்பர்க ளின் யோசனை. பாரதியாருக்கு, "தேசபக்தர், கவி" என்ற இரண்டு வகையிலும் பெருமை.

பாரதியாரின் சிறைச் சேவையைக்காட்டிலும் கவிதைத் தொண்டு உயர்ந்தது என்பது இலக்கிய சுவைகொண்ட நண்பர்களின் கட்சி. சிறை செல்லவேண்டும் என்பது ஒரு சிலரின் வாதம்.

இந்தப் பகுதியை நான் ஏன் விஸ்தாரமாகப் பேசவேண்டும் என்பதற்குக் காரணம் உண்டு. உள்ளே நடந்த சம்பவங்களைக் கவ னிக்காமல், பாரதியார் கோழை, பயங்கொள்ளி என்று சிலர் தவறாக எண்ணிக்கொண்டிருந்தார்கள். சிலர் வாய்விட்டும் சொல்லுகிறார்கள்.

பாரதியார் பயங்கொள்ளி அல்ல. ஒரு மனிதனுடைய உள்ளத் தின் உண்மையான நிலைமையை, அவன் பேசுகிற பேச்சு தெளிவா கக் காண்பித்துவிடும். பாரதியாரின் எழுத்திலே, அச்சத்தை, தாட் சிண்யத்தை லவலேசமும் காணமுடியாது. நெருக்கடியில் பயப்படு கிறவர் அவர் அல்ல என்பதற்கு, ஒரு சம்பவத்தைப் பின்னல், சொல்லுகிறேன்.

பாரதியார் புதுச்சேரிக்குப் போனதற்குக் காரணம் அவரது நண்பர்கள். இதை விவரமாக, இப்பொழுது சொல்லத் தேவை யில்லை. நண்பர்களின் யோசனைத் திறனில், பாரதியாருக்கு எல்லை யற்ற நம்பிக்கை. பாரதியாரின் கவிதைத் தொண்டு, நாட்டுக்குத் தேவை என்று நண்பர்கள் தீர்ப்புச் சொல்லிவிட்டார்கள்.

மனிதனுக்கு தரும சங்கட நிலைமை ஏற்படுவதென்றால், இப்படித்தான் ஏற்படும். கடமை, இரண்டு அம்சங்களாகக் கண்ணில் தோன்றும். அவைகள் ஒன்றுக்கொன்று, சம்பந்த மில்லாதவை போலவும் தோன்றும். எதைத் தள்ளுவது, எதைக் கொள்ளுவது என்பதிலே தான் தரும சங்கடம்.

பாரதியார், நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்து, அவர் பட்ட கஷ்டங்கள், சிறைக் கஷ்டங்களைக் காட்டிலும் ரொம்ப ஜாஸ்தி என்று தான் சொல்ல வேண்டும். "எண்ணெய் காய்கிற இரும்புச் சட்டியிலிருந்து, எரிகிற நெருப்பில் வீழ்கிற" கதையைப்போல ஆயிற்று, பாரதியாரின் புதுச்சேரி வாசம்.

1908-ம் வருஷத்தில் பாரதியார் புதுச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தார். புதுச்சேரி ஒரு ஆபத்தான ஊர். பிரஞ்சுக்காரர்களுக்கு இந்தியாவிலே மிச்சப்பட்டு இருக்கும் துளித்துளி யிடங்களில் புதுச்சேரி ஒன்று. 1870-ம் வருஷத்து "பிராங்கோ-ஜர்மன்" யுத்தத்திற்குப் பிறகு, பிரஞ்சுக்காரர்கள், இங்கிலீஷ்காரர்களின் தயவை நாடும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள். எனவே, இந்திய ராஜாங்கத்துக்கு, (தயவை எதிர்பார்த்து) கட்டுப்பட்டவர்கள் புதுச்சேரி துரைத்தனத்தார்.

அந்தக் காலத்தில், புதுச்சேரியில், தக்க ஜனத்தலைவர்கள் இல்லை. ஜனங்களும் பிரஞ்சு சுகவாசி நாகரிகத்தில் மூழ்கியவர்கள். ஜனங்களுக்குள் கட்டுப்பாடு அதிகமில்லை. இந்த நிலைமையில், பாரதியாரின் கவித்திறன் அவர்களுக்கு எவ்வாறு அர்த்தமாகும்?

அரசாங்கத்துக்கு பயந்து, பாரதியார் ஓடிவந்து விட்டார் என்று புதுச்சேரி வாசிகளிற் சிலர், யோசனையின்றி ஏளனம் செய்தார்கள். பாரதியாருக்கு ஒத்தாசை செய்யாததற்கு, இந்தக் காரணமே போதாதா? ரொம்ப சக்திபடைத்த ஸர்க்காரை எதிர்த்த கலகக்காரர் பாரதியார் என்று நினைத்து, மற்றும் பெரும்பான்மையோர் பயந்து போனார்கள். இவர்கள் பாரதியாரிடம் கிட்ட அணுகுவார்களா? இவர்களிடமிருந்து, பாரதியார் எவ்வித ஒத்தாசையை எதிர்பார்க்க முடியும்?

ஊர் புதிது; கையில் மிதமிஞ்சின பணமில்லை; ஸர்க்கார் பகைமையும் கூடவே இருக்கிறது. இப்படி நிலைமை இருக்குமாகில், பாரதியாரின் வாழ்வு மெத்தைமேல் படுத்துறங்கும் வாழ்வாக

இருக்க முடியுமா? முதல் முதலாக, ஈசுவரன்-தர்மராஜா-கோயிலைச் சுற்றியிருக்கிற வீதியொன்றில், ஒரு அய்யங்கார் வீட்டில் பாரதியார் குடிபுகுந்தார்.

தனித்துப் புதுச்சேரிக்கு வந்த பாரதியார், சம்பாஷணை நட்புக்குத் திண்டாடிப் போனார். கடன் கொடுக்க நிர்வாகமில்லாதவர்கள், புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்தால், அவர்களை யாருமே கவனிக்க மாட்டார்கள். நூறோடு ஒன்றை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுவார்கள். அதற்கு மேலே, உள்ளத்தில், ஒன்றுமே பாபரப்பு ஏற்படாது.

பாரதியார் புதுச்சேரிக்குச் சென்றதும், அவரை ஜனங்கள் கொஞ்சங் கொஞ்சமாய்த் தெரிந்து கொள்ளவே, ஏற இறங்கப் பார்த்தார்கள். கடற்கரையில் அமைக்கப் பெற்றிருந்த இரும்புப் பாலத்தில், பாரதியார் ஒரு பெஞ்சின்பேரில் உட்காரப்போய், வேறு எவரேனும் உட்கார்ந்திருந்தால், அவர்கள் பெஞ்சியைக் காலி செய்துவிட்டு, சொல்லிக்கொள்ளாமல் அப்பால், நகர்ந்து போய்விடுவார்கள். இது மரியாதையால் அல்ல. மிதமிஞ்சின பயத்தால்.

இந்த வாழ்வு, சிறையிலே தனிக்காவலில் இருப்பதைக் காட்டிலும் கேவலமானதாகும். பசிக்கிற ஒருவனுக்கு நாலாபக்கங்களிலும் பக்குவமான ஆகாரங்கள் நிறைந்திருந்தாலும், உண்ண வகையில்லாமல் போனால், அவன் நிலைமை எப்படியிருக்கும்? இத்தனை ஜனங்களுக்கும், முதலில், பாரதியாரை அனுபவிக்க முடியாமற் போனதைப்பற்றி என்ன சொல்லுவது?

எல்லாரும் வீரர்களாயிருக்கவேண்டும் என்பதில்லை. வீரர்களாயிருக்க முடியாமற் போனால், எல்லோரும் கோழைகளாயிருக்க வேண்டுமென்பதுண்டா? பயப்படுவதற்கும் ஒரு எல்லை இல்லையா? அதுவும் புதுச்சேரி வாசிகள் பயப்படுவதற்கு எல்லை நிச்சயமாய் இருக்கலாம், இருக்க முடியும். புதுச்சேரி பிரஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்தால், அதில் வசிப்பவர்கள் இந்தியர்கள் தானே, தமிழர்கள் தானே? அச்சத்தை இலட்சணமாய்ப் பழக்கிக் கொண்டிருக்கிறவர்களுக்கு, அதற்கு எல்லை போட்டால், இலட்சணம் அவலட்சணமாய்ப் போய் விடாதா?

திருக்குறள் விளக்கம்

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை

—குறள் (1151)


Tell me only of thy stay but of thy quick return
Tell it to them that would still be living then

—ஆங்கில குறள் : கு. சீனிவாசன்.

பிரிவாற்ருமை என்ற அதிகாரத்திலுள்ள முதல் பாட்டு, இணையற்றது என்று சொல்லலாம். இளங் காதலர் உள்ளத்தில் ஓடும் அன்பையும் வேகத்தையும் அப்படியே படம் பிடித்ததுபோல இந்தப் பாட்டில் கருத்தை அமைத்திருக்கிருர். காதலன் ஒரு வேலையாக வேறு ஊர் சென்று வர காதலியிடம் விடை கேட்கிருன். தன்னை விட்டுப் பிரியப் போகிருன் என்பதைக் கேட்டதும் காதலியால் பேசமுடியவில்லை. காதலியின் உள்ளத்தை அறிந்த பாங்கி அவளுக்காக தலைவனிடம் பேசுகிருள். "நீ எவ்வளவு சீக்கிரமாய் வந்தாலும் சரி. அதைப்பற்றி பேச்சில்லை. இதைவிட்டு புறப்படாமல் இருக்கப் போகிருயா இல்லையா? போகாமல் இருப்பதானுல் சொல்லு. போவதானுல் நீ எப்பொழுது திரும்புவாய் என்பதைச் சொல்லவே வேண்டாம். அதை அச்சமயம் உயிரோடிருப்பவர்களிடம் சொன்னுல் போதும்" என்று தோழி தலைவியின் அன்புள்ளத்தை விளக்குகிருள். தலைவன் பிரிந்தால், தலைவியின் உயிர் தரிக்காது என்பதே அவள் அபிப்பிராயம்.

அடுத்த மலரில் மற்றொரு படம் வெளிவரும்.


SARMA



* முதலாளித்துவத்தின் கோரம் *

(தத்தன்)

"பசு என்பது யாது?"—"ஒரு நாலு கால் பிராணி." "குதிரையும் அப்படித்தானே?" "ஆனால் பசுவுக்கு கொம்பு உண்டு; குளம்பு பிளந்திருக்கும். மனிதர் உணவாக உபயோகிக்கக்கூடிய பால் அதனிடமிருந்து கிடைக்கும்." "கொம்பு உண்டு என்று சொன்னாலே குளம்பு பிளந்திருக்கிறதென்று ஏற்படுகிறது. சரி, இருக்கட்டும். அப்படியானால் ஆடும் அப்படித் தானே!" "பசுவுக்கு கிட்டத்தட்ட குதிக்கால் வரையில் எட்டக்கூடிய வால் உண்டு." "எருமைக்கும் அப்படியே!" "பசு வெள்ளை நிறமாக இருக்கும்." "வேறு நிறத்திலும் பசு இல்லையா?" "ஏனப்பா மூச்சைப்பறிக்கிறாய். பசு என்றால் பசு தான். அது எப்படி எருமையாகும்! என்ன தர்க்கம் பண்ணினாலும் பசு எருமையாகாது." "அப்படியானால் மற்ற எதனிடமும் இல்லாத ஒரு விசேஷ குணம் பசுவினிடம் என்ன இருக்கிறது?"

இதற்கு பதில் சொல்கிறவரையில் 'பசு'வுக்கு பூர்ண இலக்கணம் கூறினதாக ஆகாது.

ஒரு பொருளுக்கு, நாம் தினசரி பல தடவை பார்த்துப் பழகும் ஓர் ஸ்தூலமான பொருளுக்கு, குறிப்பிலக்கணம் கூறுவது இவ்வளவு சிரமமாக இருக்கிறது. அப்படியிருக்க சமூக அமைப்பைப் பற்றிய ஓர் முறைக்கு, ஒரு கொள்கைக்கு குறிப்பிலக்கணம் (Definition) கூறுவது மிகவும் சிரமமான காரியம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆகவே "முதலாளித்துவம்" என்ற சமூக முறைக்கு பலர் பலவிதமாக இலக்ஷணம் கூறுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

"முதலாளித்துவம்" என்பது யாது?

"முதலாளித்துவம்" எப்படி ஏற்பட்டது என்பது டிசம்பர் 30ந் தேதி காந்தி மலரில் "தப்பும் வழி" என்ற வியாசத்தில் ஒருவாறு விளக்கப்பட்டிருக்கிறது. சுமார் 100-அல்லது 150-வருஷ காலமாக மேல் நாட்டிலும், சமீபகாலத்தில், யந்திர நாகரீகம் தலைப்பட்டபின் கீழ் நாட்டிலும் இருந்து வரும் ஓர் சமூக அமைப்புக்கு, பொருளாதார முறைக்கு, முதலாளித்துவம் என்று பெயர் வழங்குகிறது.

இந்த முறையில் முக்கியமாக இரண்டு அம்சங்கள் காணப்படுகின்றன.

1. சமூகம் இரண்டு முக்கியமான வகுப்பாகப் பிரிந்திருக்கும். ஒன்றில் ஆள்கள் எண்ணிக்கை குறைவு; மற்றொன்றில் அதிகம். அரசியல் ஆதிக்கம் இந்தச் சிறுபான்மையோரின் கையிலேயே இருக்கும். நாட்டின் முக்கியமான உற்பத்தி சாதனங்களும், இயற்கை வளமும், இவர்களிடமே இருக்கும். இவர்களே முதலாளிகள். இவர்கள் வேலை கொடுத்தால் மற்றவர்களுக்கு அரை வயிற்று கஞ்சி கிடைக்கும். வேலை கொடுக்காவிட்டால் தொழிலாளிகள் பட்டினி கிடக்கவேண்டியது தான். ஆகையால் இவர்கள் முதலாளிகள் கூறும் நிபந்தனைகளுக் குள்பட்டு, அவர்களிடம் வேலை செய்ய வேண்டும். இவர்களது உழைப்பை முதலாளிகள் தம்முடைய நன்மைக்கும் லாபத்துக்கும் உபயோகித்துக் கொள்வார்கள்.

இந்த இரண்டு முக்கியமான வகுப்புகளுக்கு மிடையே தரகு வேலை பார்க்க உதவும் ஒரு வகுப்பும் இருக்கும்.

2. பொருள் உற்பத்தியின் முக்கியமான நோக்கம் முதலாளிகளது லாபமே. உற்பத்தி செய்யும் பொருள் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதா; அவசியமானதா? என்பதைப் பற்றிக்கூட முதலாளிகளுக்குக் கவலையில்லை. எந்தப் பொருள் உற்பத்தி செய்தால் 'லாபம்' கிடைக்கும் என்பதே முதலாளியின் முக்கியமான கவனம்.

இவ் விஷயத்தை விளக்குவதற்காக அமெரிக்காவின் பொருளாதார முறையை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். முதலாளித்துவத்தில் ஏற்படும் சில காட்சிகளைப் பார்ப்போம்.

லக்ஷத்தை $1\frac{1}{4}$-லக்ஷமாக்க

மிஸ்டர் பால் என்பவருக்கு 1-லக்ஷம் டாலர் சொத்துக் கிடைக்கிறது. பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டுவதில் என்ன

பயன்? பத்திரிகைகளை வாங்கிப் படிக்கிறார். இந்த ஒரு லக்ஷம் டாலரை $1\frac{1}{4}$-லக்ஷமாக ஆக்குவதற்கு என்ன செய்யலாம் என்பது அவருடைய கவலை. சில சிநேகிதர்களுடன் ஆலோசிக்கிறார். சில தாகர்களைப் பிடிக்கிறார். நகரம் முழுவதையும் சுற்றிப் பார்க்கிறார். விசாரிக்கிறார். 1-லக்ஷம் டாலரை எப்படி விருத்தி செய்வது? என்ன செய்தால் லாபம் கிடைக்கும்???


ஹாட் தொழிற் சாலை

திடீரென்று ஒரு யோசனை தோன்றுகிறது. "ஹாட்" இருக்கிறதே, 'துரைமார்' தலையில் வைத்துக் கொள்ளும் கூடை, அது தான் சரி! ஹாட் உற்பத்தி செய்ய வேண்டும். ஹாட்! ஹாட் நன்றாய் விற்கிறது. அதை விற்றுப் பலர் பணக்காரராயிருக்கிறார்கள். அது தான் செய்யவேண்டும்.

சரி, ஹாட் தொழிற்சாலை ஏற்படுத்தியாய் விட்டது.

இதே சமயத்தில் மிஸ்டர் கால், மிஸ்டர் டால், மிஸ்டர் சால் மூன்று பேர் தலையிலும் இதே யோசனை உதயமாகிறது. அவர்களும் ஹாட் தொழிற்சாலை ஆரம்பிக்கிறார்கள்.

ஆறு மாதம் போவதற்குள்ளாக எத்தனையோ ஹாட் தொழிற்சாலைகள். கடைகளிலுள்ள அலமாரிகள் முழுவதும் ஹாட் மயம்.



வேறு சாமான்களை வைக்க இடம் கிடையாது. எந்தப் பத்திரிகையைத் திருப்பினாலும் ஹாட் விளம்பரம். சுவர்களெல்லாம் பெரியபெரிய ஹாட்பொம்மை. 8-அடி உயரம் 12-அடி சுற்றளவில் ஒருஹாட், வண்டியில் சவாரி செய்துகொண்டு ஊர்வலம் வருகிறது. ஹாட்ஸ், ஹாட்ஸ்.

தேவைக்கு மேல் எவ்வளவோ ஹாட் செய்தாய் விட்டது. இன்னும் உற்பத்தி நடந்துகொண்டே இருக்கிறது.

அதிக உர்பத்தி

திடீரென்று என்ன ஆபத்து வந்துவிட்டதோ தெரியவில்லை. மிஸ்டர் பால் எதிர்பார்க்கவேயில்லை. மிஸ்டர் கால், டால், சால் முதலியோரும் எதிர்பார்க்கவில்லை. ஜனங்கள் ஹாட் வாங்குவதையே நிறுத்திவிட்டார்களா! ஹாட்கள் செலவாகிறதே இல்லை.

மிஸ்டர் பாலுக்கு விஷயம் தெரிந்தது. உடனே 20-சென்டு விலையைக் குறைத்தான். மிஸ்டர் சால் 40 சென்ட் குறைத்தான். எப்படியாவது தொழிற்சாலையிலுள்ள ஹாட் வெளியேறினால் போதும். ஆகையால் உற்பத்திச் செலவிலும் குறைத்து விற்கிறான். ஆனாலும் ஹாட் இருப்புக் குறையவில்லை. அடுத்த நாள் பத்திரிகையில் விளம்பரம்.



நீ அமெரிக்கனா?

உங்களுக்குத் தலை ஒன்று தான்.. அதற்காக ஹாட் ஒன்றுதான் இருக்க வேண்டும் என்பதில்லை.. ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் 3 ஹாட்டாவது இருக்க வேண்டும்.

ஆனால் அவை

மிஸ்டர் பால் தொழிற்சாலை ஹாட்டாக இருக்கவேண்டும்!

மிஸ்டர் கால் யோசிக்கிறார். ஹாட் வாங்கும் போதே ரொக்கம் கொடுக்க வேண்டியதில்லை; மூன்று வாய்தாவாகக் கொடுக்கலாம் என்கிறார்.

மிஸ்டர் டால் தனது டிப்போ முன்னால் பெரிய மின்சார விளக்கு விளம்பரம் போடுகிறார்.


"இன்று மட்டும்தான்! விலை குறைக்கப்பட்டிருக்கிறது!! சந்தர்ப்பத்தை இழக்கவேண்டாம்!!!"

என்ன செய்தும் பலிக்கவில்லை. மிஸ்டர் பால் தொழிற்சாலையில் தொழிலாளர் சம்பளம் வாரத்துக்கு 2-டாலர் குறைக்கிறார். அப்படியும் நஷ்டம்தான் வருகிறது.

வேலையில்லை

இனிமேல் என்ன வழி. மிஸ்டர் பால் தொழிற்சாலை மூடியாய் விட்டது. 2000 தொழிலாளருக்கு வேலையில்லை. போலீசார் கையில் அகப்படும் வரையில் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்!

"மிஸ்டர் பாலின் தொழிற்சாலை மூடிவிட்டது. ஹாட் தொழிலில் நஷ்டம் ஏற்படுகிறது போலும். அப்படியானால் டால், சால் முதலியவர்களுக்குக் கொடுத்த கடனை இன்றே வசூலித்துவிடவேண்டும்" என்று நினைக்கிறது கைத்தொழில் பாங்க். அடுத்த நாள் மிஸ்டர் கால், டால், சால் எல்லாருடைய தொழிற்சாலையும் மூடியாய் விட்டது. பதினாயிரக் கணக்கான தொழிலாளருக்கு வேலையில்லை. யந்திரம் துருப்பிடிக்கிறது.



இரண்டு வருஷ மாயிற்று. கடைகளில் ஹாட் கிடையாது. ஜனங்கள் ஹாட் வாங்க ஆரம்பித்து விட்டார்கள். ஹாட் விலை உயர்கிறது.

இப்பொழுது மிஸ்டர் பால், கால், டால் எங்கே இருக்கிறார்களோ தெரியாது. பீட்டில், சீட்டில், கீட்டில் தலைப்படுகிறார்கள். பழய கதைதான் திரும்பியும் நடக்கிறது.

ஹாட்ஸ் வர்த்தகத்தைப் போலதான் பூட்ஸ், சர்க்கரை, பன்றி, இரும்பு, மண்ணெண்ணெய் எல்லாம் இப்படியே.


* * *

தர்பூசனியின் உபயோகம்!

1920 செப்டெம்பர் 1வ ஒரு ரயில் வாஷிங்டன் நகரத்திலிருந்து புறப்பட்டது. ஒரு எஞ்சினும், 30 டிராக்கும். டிராக்கு நிரம்ப தர்பூசனிக்காய். நல்ல காய்கள். சரியான பக்குவம். ஒவ்வொன்றுக்கு 25 செண்ட் கொடுக்கலாம். ரயில் வடக்கு நோக்கிப் போய்க்கொண்டே இருக்கிறது.

ஒரு பெரிய ஆற்றின் கரையோரம். இறங்குவதற்கு வழி கிடையாது. கால் தவறினால் உயிர் போய்விடும். அந்த இடத்தில் ரயில் நிற்கிறது. நாலைந்து தொழிலாளிகள் கீழே இறங்கினார்கள். குளக்! என்ன சப்தம். ஒரு பூசனிக்காய் தண்ணீரில் வீழ்ந்தது. மற்

ளென்று. இதோ இன்னும் இரண்டு; வரிசையாக ஒன்றுக்கொன்று மோதி மண்டையை உடைத்துக்கொண்டு தர்பூசனிப் பழங்கள் ஆற்றில் விழுந்து மிதக்கிறது. பிறகு அடுத்த டிரக். எல்லா டிரக்கும் காலி. ஆற்றில் தர்பூசினிக்காயும் பழமுமாக ஒரு பெரிய தீவுபோல் இருக்கிறது. 2 நிமிஷத்துக்கு ஒருடிரக். 1மணி நேரம். 30 டிரக்கும் காலி. என்சின் ஊதுகிறது. ரயில்மறுபடியும் தெற்கே போகிறது.



இது கற்பனையல்ல. "ஸ்டுவர்ட் சேஸ்" என்பவர் எழுதியுள்ள "வீண் விரயத்தின் கொடுமை" யென்ற புத்தகத்தில் இதுபோன்ற பல விஷயங்கள் காணலாம்.

பித்துக்கொள்ளி வேலை.

"1920-ம் வருஷத்தில் லக்ஷக் கணக்கான குடம் பால்கள் ஆற்றில் ஊற்றப்பட்டது."

"1921 அக்டோபரில் மேற்கு அமெரிக்க ரஸ்தாக்களில் 'என் நிலக்கரியை எரிக்கிறீர்கள். தானியத்தை அடுப்பெரிக்க உபயோகியுங்கள்' என்ற விளம்பரங்கள் காணப்பட்டன."

"1924 ஜூன்மாதம் 24உ "நியூயார்க் வர்ல்ட்" என்ற பத்திரிகையில்—'ஆயிரக் கணக்கான மூடை வெள்ளிரிக்காய்களும்; வேறு பல பச்சைக் காய்கறிகளும் இன்று கடலில் எறியப்பட்டன' என்ற விஷயம் பிரசுரமாயிற்று."

"இவ்வருஷ உருளைக் கிழங்கில் பெரும்பாகம் நிலத்திலிருந்து எடுக்காமலே மண்ணோடு மண்ணாயிற்று."

"பருத்திக் காடுகளில் பருத்தியை நாசம் செய்யக்கூடிய ஒரு பூச்சியை வளர்க்கிறார்கள்."

"மோட்டார் தொழிற்சாலை முதலாளிகள் வருஷந்தோறும் பல பழைய மோட்டார்களை விலைக்கு வாங்கி அவற்றை உடைத்தெறிகிறார்கள்."

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்! எல்லோருக்கும் பைத்தியம் பிடித்து விட்டதா. கோதுமையை அடுப்பிலிட்டு எரிப்பது, பாலை ஆற்றில் ஊற்றுவது, மோட்டார்களை உடைப்பது,—ஏன் இந்த வேலை? இதில் யாருக்கு என்ன லாபம்?

விலையை உயர்த்தும் வழி

மிஸ்டர் பால், மிஸ்டர் பீட்டில் முதலியவர்களுடைய லாபத்துக்காக இந்த நாசவேலை நடக்கிறது. கோதுமையின் விலையை



உயர்த்துவதற்காக மிஸ்டர் பால் சில ஆயிரம் மூட்டை கோதுமையை எரிக்கிறார். நல்ல பாலை ஆற்றில் ஊற்றுகிறார். அதே சமயத்தில் நியூயார்க் கல்வி யிலாக்கா அறிக்கை என்ன கூறுகிறது. "பள்ளிக்கூடத்து மாணவர்கள் பலர் நல்ல ஆகாரம் சாப்பிடாமல் உடம்பு கெட்டுப் போயிருக்கிறார்கள்."

ஒவ்வொரு அமெரிக்க தொழிலாளிக்கும் அவனது வேலையைச் செய்ய 230 அடிமை யந்திரங்கள் இருக்கின்றன என்று அவர்கள் பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள்.

லக்ஷக்கணக்கான யந்திரங்கள். களஞ்சியமெல்லாம் தானியம். பால் ஆற்று நீருடன் ஓடுகிறது. அதேசமயத்தில் பலர் பட்டினி கிடக்கிறார்கள்.

ரகசியம் என்ன?

இந்த யந்திரங்களெல்லாம் அமெரிக்கர் எல்லோருக்கும் சொந்தமில்லை. ஒரு சிலருடைய சொத்து. ஒரே ஒரு பணக்காரர் போர்ட் என்பவர் கையில் 60 தொழிற்சாலை இருக்கிறது. அவருக்கு சொந்தமான ரயில் பாதைகள், அவருக்குச் சொந்தமான கப்பல்கள், அவற்றிற்கு வேண்டிய இரும்புக்குச் சுரங்கங்கள், காடுகள், மலைகள், அவருக்குச் சொந்தமான ஆறுகள். அவருடைய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் குடியேற்றினால் 30 லக்ஷம் ஜனத்தொகையுள்ள ஒரு நகரம் ஏற்படும். மதராஸைப்போல் 6 பங்கு ஜனத்தொகை.

யந்திரங்கள் அவர் கையில் இருப்பதால் இந்த முப்பது லக்ஷம் பேரும் அவருக்கு வேலை செய்ய வேண்டும்.

இந்த மோட்டார் அரசன் தன்னுடைய கையால் வேலைசெய்து உற்பத்தி செய்த ஒரு மோட்டாரை உடைக்க மனது வருமா? தான் உழுது பயிரிட்டு வியர்வையைச் சிந்தி விளைவித்த ஒரு பழத்தை வீணாக ஆற்றில் எறிய ஒருவனுக்கு மனது வருமா?

தொழிலாளி கையில் யந்திரம் இருந்தால் வீணாக்குவதற்கென்று ஒரு சாமான் செய்வானா? உபயோகமில்லாத சாமானை உற்பத்தி செய்வானா?

உபயோகமில்லாத சாமான்களை உற்பத்தி செய்வதும், அவற்றை விற்பதற்காக விளம்பரம் செய்வதும், இதுதான் முதலாளியின் வேலை. லாபம், லாபம், லாபம்தான் குறி. அமெரிக்காவில் விளம்பரத்தில் எவ்வளவு பணம், எவ்வளவு முயற்சி எவ்வளவு நேரம் செலவிடப்படுகிறது!

அமெரிக்கப் பத்திரிகையில் ஒருநாளில் வெளியாகும் விளம்பரம் முழுவதையும் ஒருவன் படிக்க வேண்டுமானால் 500 வருஷம் பிடிக்கும்!

மனோகரமான ரஸ்தாக்களில் எங்கு பார்த்தாலும் விளம்பரங்கள். இயற்கையின் வனப்பைப் பார்க்கலாமென்று ஒரு காட்டுக்குப் போனால் நுழைந்தவுடன் "ஸ்மித்தின் பல்பசையை உபயோகிக்கும்" படி உத்தரவு கிடைக்கிறது.

மனிதன் உழைப்புக்கு கவுரவமே இல்லை. பிரயோசனம் சிறிதுமின்றி அவனுடைய வியர்வை சிந்துகிறது.

லாபமே லக்ஷியம்

மிஸ்டர் பால் எதற்காக தொழிற்சாலை ஆரம்பித்தார்? ஹாட் உற்பத்தி செய்யவா? இல்லை. பணம் உற்பத்தி செய்ய. முதலாளித்துவ முறையில் ஒவ்வொரு தொழிற்சாலையும், பொருள் உற்பத்தி செய்யும் இடமல்ல. லாபம் உற்பத்தி செய்யுமிடம்; பணம் உற்பத்தி செய்யுமிடம்.

மிஸ்டர் பால் கண்ணுக்கு தொழிலாளி ஓர் மனிதனைகப் படுவதில்லை. தொழிலாளியும் அவன் கண்ணுக்கு மெஷினாகவே படும். இரும்பினால் செய்த ஓர் யந்திரத்தின் விஷயத்தில் அவன் எவ்வளவு சிரத்தையெடுத்து பாதுகாக்கிறானே அதே சிரத்தையை மனிதனிடம் அவன் செலுத்துவதில்லை. யந்திரத்துக்கு மிகவும் அதிகமான பணம் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. தொழிலாளி என்ற யந்திரத்தை விலைக்கு வாங்குவதில்லை. அது தேய்ந்துபோனால் அதனால் முதலாளிக்கு நஷ்டமில்லை.

40-வயது சென்று விட்டால் அமெரிக்கத் தொழிலாளியை ஒரு முதலாளியும் விரும்புவதில்லை. அவன் கிழவனுப் விடுகிறான்.

அமெரிக்காவில் யந்திரம் தொழிலாளிக்கு உதவிசெய்ய ஏற்படவில்லை. அது தொழிலாளியின் விரோதி. ஒவ்வொரு புதிய யந்திரமும், விஞ்ஞான ஆராய்ச்சியின் ஒவ்வொரு புது சிருஷ்டியும் ஆயிரக் கணக்கானவர்களை தெருச்சந்தியில் துரத்தியடிக்கிறது.

* * *

முதலாளி முறை ஒழிந்தால் யந்திரங்களும், இயற்கை வளமும், நிலமும், உற்பத்தி சாதனமும் சமூகத்துக்கு, எல்லோருக்கும் சொந்தமாக இருக்கும். யந்திரம் அதிகமானால், யந்திரத்தின் திறமை அதிகமானால், தொழிலாளி வேலைசெய்ய வேண்டிய நேரம் குறையும்; அதிகமான ஓய்வு கிடைக்கும்; என்கிறார்கள் பொதுவுடமைக்காரர்கள். அவர்களுடைய பார்வையில் முதலாளித்துவம் எப்படித் தோன்றுகிறது என்பதையே இங்கு எழுதப்பட்டிருக்கிறது.

புதுமைக் கோயில்

(பி.எஸ். ராமையா)

வீட்டு வாசலில் உள்ள இரண்டு வாதாமரங்களுக்கு மிடையில் ஒரு வண்டி கட்டை விறகு போடப்பட்டிருக்கிறது. எல்லாம் பெரிய பெரிய கட்டைகள். பலவகையான அளவுகள்.

நேற்று, வாசலில் விறகு வண்டி வந்திருந்தது. அப்பா விலை பேசி வாங்கினார். வண்டிக்காரன் வாசலில் போட்டுவிட்டுப் போய் விட்டான். அவற்றை வெட்டிச் சிறு துண்டுகளாக்கி விட்டினுள் கொண்டுபோய் அடுக்கவேண்டும்.

அன்று காலையிலேயே முனியன் வந்தான். அவனிடம் சோமசுந்தரம் அந்தக் கட்டைகளை வெட்டும்படி உத்திரவிட்டார். அவர் சொல்லுவதைக் குழந்தை ரோஹிணி பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பா எவ்வளவு அதிகாரத்துடன் பேசுகிறார் அவனிடத்தில்! உடனே முனியன் கோடாலி கொண்டுவருவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

முனியன் எப்படிக் கட்டை வெட்டுகிறானென்று பார்க்க வேண்டுமென்ற ஆசை குழந்தை ரோஹிணிக்கு. சிறிது நேரத்தில் முனியன் திரும்பி வந்தான். அவன் கையில் ஒரு கோடாலியைக் கொண்டுவந்தான். அந்தக் கோடாலி எவ்வளவு பளபள வென்றிருக்கிறது!


முனியன் கட்டைகளைக் கண்டு பயப்படவில்லை. அலட்சியமாக ஒரு கட்டையைக் காலால் உதைத்துத் தள்ளுகிறான். இன்னொரு கட்டை முன்னால் வருகிற போகிற வழியை மறித்துக் கொண்டு கிடக்கிறது. பெரிய கட்டை. அதையப்பா நேற்று சாயங்காலம் ஒரு புறமாக ஒதுக்கித் தள்ள முயன்றார். அவரால் முடியவில்லை. அதே முனியன் சிரம மில்லாமல் அதை ஒரு பக்கமாக ஒதுக்கிவிட்டான்!

முனியன் ரொம்ப பலசாலி; கைகளும் தோள்களும் அழகாக விருக்கின்றன. அவன் கட்டையைப் புரட்டும்பொழுது அவனுடைய கரங்கள் விம்முகின்றன. தோள்கள் புடைக்கின்றன. அதைப் பார்ப்பது சந்தோஷமாக விருக்கிறது குழந்தைக்கு.

முனியன் கட்டையை வெட்ட ஆரம்பித்தான். முதலில் ஒரு பெரிய கட்டையை இழுத்துக் கீழே படுக்கவைத்தான், அதன்

மேல் குறுக்கு வாட்டத்தில் இன்னொரு கட்டையைச் சாய்த்து வைத்தான். அந்தக் கட்டை கொஞ்சம் சின்னது. ஆனாலும் அதை ரோஹிணியினால் தூக்க முடியாது. அப்பா தூக்கிவிடுவார்.

இப்பொழுது முனியன் கோடாலியை மேலே தூக்குகிறான். வெட்டப் போகிறானா? இல்லை. குறி பார்க்கிறான். அதோ தூக்கி



விட்டான் கோடாலியை! மேலே—மேலே—இன்னும் மேலே போகிறது கோடாலி; அவனுடைய பலம் முழுவதையும் கொண்டு ஓங்கி—ஓங்கி ஒரு வெட்டுப் போடுகிறான்!

அடேயப்பா! எவ்வளவு வேகமாக வந்தது கோடாலி! ஹெச் என்று சப்தம் கேட்கிறது. கோடாலி கட்டைக்குள் போய்விட்டது. வெளியே இழுக்கிறான், வரமாட்டேன் என்கிறது. அப்படியும் இப்படியும் ஆட்டுகிறான். குறுக்குக் கட்டையை ஒரு காலால் மிதித்துக்கொண்டு கோடாலிக் காம்பைப் பிடித்துப் பலமாக இழுக்கிறான். அந்தக் கட்டைக்கு அவ்வளவு பலமா? கோடாலி வந்து விட்டது.

குழந்தை கைகளைக் கொட்டுகிறாள். வாய் மலருகிறது. முனியனுக்கு எவ்வளவு பலமிருக்கிறது! அவன் எவ்வளவு அலட்சியமாக வேலை செய்கிறான்!

அப்பா அன்றைக்குச் சொன்னாரே பரசுராமனுடைய கோடாலியைப்பற்றி, அது முனியனுடைய கோடாலியைப் போலத்தானிருக்கும். இரண்டே வெட்டில் கட்டை இரண்டாகப் பிளந்துபோய் விட்டதே!

அந்தக் கோடாலியைத் தொட்டுப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எழுந்தது குழந்தையின் உள்ளத்தில். கிட்டப்போனாள்.

அதற்குள் அம்மா வாசலுக்கு வந்துவிட்டாள். "ரோஹிணிக்குஞ்சு! அவன் கிட்டப் போகாதே"!

ஏன் போகக்கூடாது? குழந்தை நின்றுவிட்டாள். "ஏனம்மா போகக்கூடாது? முனியன் நல்லவன்தானே யம்மா. அவன் என்னை ஒன்றும் செய்யமாட்டான். கோடாலியும் நல்லதுதான் அது கட்டையைத்தான் வெட்டும். என்னை வெட்டாது"!

"இல்லை. நீ போகக்கூடாது. இப்படிவா தூரத்தில். செராய் தெறித்து மேலே விழப்போகிறது" என்றாள் அம்மா.

குழந்தையின் ஏமாற்றத்தை அளவிடமுடியாது. தூரத்திலேயே நின்றாள். முனியன் அவர்களைக் கவனிக்கவேயில்லை. அவன் பாட்டில் வெட்டிக்கொண்டேயிருந்தான்.

நேரம் ஆகிக்கொண்டேயிருந்தது. அவன் நிறுத்தவேயில்லை. இந்தக் கட்டையை அந்தப் பக்கம் தள்ளுகிறான். அந்தக் கட்டையை இழுத்து அருகில் போட்டுக்கொள்ளுகிறான். வெட்டின கட்டையை எடுத்து வீசியெறிகிறான். அது தூரத்தில் ஓரிடத்தில் போய் விழுகிறது. அங்கே வெட்டிய விறகுத் துண்டுகள் வந்து விழுந்து விழுந்து ஒரு குன்றுபோலக் குவிந்துவிட்டன.

சாப்பாட்டு நேரம் ஆகிவிட்டது. அம்மா சாப்பிடக் கூப்பிட்டாள். "ரோஹிணிக் குஞ்சு! சாப்பிடவாம்மா! அப்பா காத்துக்கொண்டிருக்கிறார்" என்று அழைத்தாள்.

* * *

வீட்டினுள் அப்பா சாப்பிடத்தயாராக உட்கார்ந்திருந்தார். முன்னால் இலை போட்டிருந்தது.

"அப்பா! முனியன் எப்பொழுது சாப்பிடுவான்?"

"கட்டைகளையெல்லாம் வெட்டிவிட்டுப் போய்"

"ஏன் அப்பா?"

"அவன் அந்தக் கட்டைகளையெல்லாம் வெட்டினால் தான் அவனுக்குக் கூலி கிடைக்கும். கூலி கிடைத்தால் தானே சாப்பிடலாம்"

"அவன் தினம் வெட்ட வேண்டுமோ?"

"ஆமாம் அம்மா"

"அவனுக்கு வேலை யார் கொடுக்கிறா?"

"நம்மைப் போல இருப்பவர்கள் தான். ஸ்வாமி அவனுக்கு நித்தியம் படியளக்கிறார். அவனுக்கு நித்தியம ஏதாவது வேலை கிடைக்கும்படி செய்கிறார். அந்த வேலையைச் செய்து அவன் கூலி வாங்கிக் கொள்ளுகிறான்"

"அப்பா, உனக்கு கட்டை வெட்டத் தெரியுமோ ?"

"இதென்ன கேள்வியம்மா ? எனக்குத் தெரியாது. என்னால் முடியாது.

"நீ மாத்திரம் வேலை செய்கிறதில்லையே. உனக்கு யார் அப்பா கூலி கொடுக்கிறார்கள் ?

"நான் வேலை செய்யவேண்டியதில்லை"

"என்?"

"நாம் பணக்காரர்கள். நமக்கு சொத்து இருக்கிறது. நம்முடைய நிலத்தில் நெல் விளைகிறது. அதை வைத்துக்கொண்டு சாப்பிடுகிறோம்"

அந்தவிடத்தில் அவர்களுடைய சம்பாஷணைக்கு முற்றுப் புள்ளி போடப்பட்டது. அம்மா பரிமாறிவிட்டு "அப்புறம் பேசலாம். சாப்பிடு" என்று சொல்லிவிட்டாள்.


குழந்தை சாப்பாட்டின் ருசியை அனுபவிக்கவேயில்லை. முனியனையும் அவனுடைய வேலையையும் கூலியையும் பற்றிய சிந்தனையில் அவள் ஆழ்ந்துபோய்விட்டாள். சாப்பாடு முடிந்தவுடன் அவள் மறுபடி வாசலுக்குச் சென்றாள். 'வெளியிலே போகாதே அம்மா" என்று உள்ளேயிருந்தே அம்மா உரக்கச் சொன்னாள். குழந்தை வாசலில் திண்ணையோரமாக நின்றாள். வெயில் கடுமையாகக் காய்ந்துகொண்டிருந்தது. இன்னும் முனியன் கட்டை வெட்டிக்கொண்டேயிருந்தான்.

* * *

சிறிது நேரத்தில் முனியனின் பெண்சாதி அவனுக்குச் சோறு கொண்டுவந்தாள். அவளுடைய இடுப்பில் ஒரு சிறு குழந்தையிருந்தது. முனியன் வெட்டுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தான். இருவருடைய முகங்களும் மலர்ந்தன.

முனியன் நெற்றி வியர்வையை வழித்துவிட்ட பின் தூரத்தில் பந்துபோல சுருட்டி வைத்திருந்த ஒரு துணியை எடுத்து அதனால் உடம்பைத் துடைத்துக் கொண்டான். இருவரும் கொஞ்ச தூரத்திலிருந்த பூவரச மரத்தடிக்குச் சென்றனர்.

முனியன் கையை நீட்டி அவன் பெண்சாதி போட்ட சோற்றை வாங்கி உண்டான். முதல் கவளத்தை வாயில் போட்டுக் கொள்ளு



முன் கண்ணை மூடிச் சோற்றை உயரத் தூக்கிக் காட்டினான். பிறகு தான் அவன் சாப்பிட ஆரம்பித்தான். சாப்பாடு முடிந்த பிறகு அவன் பெண்சாதி கொண்டு வந்திருந்த ஒரு கலயத்திலிருந்த ஜலத்தைக் குடித்தான். கையை அலம்பக்கூட ஜலமில்லை. துணியில் துடைத்துக்கொண்டு விட்டான்.

“அப்பா சொன்னாரே, சாப்பிடுவதற்கு முன் கை கால்களை சுத்தம் செய்து கொள்ள வேண்டும். சாப்பிட்ட பிறகு எச்சில் போக கையையும் வாயையும் அலம்பவேண்டும் என்று. ஆனால் முனியன் அப்படிச் செய்யவில்லையே” என்று யோசித்தாள் குழந்தை.

அவன் சாப்பிடும் பொழுதே பெண்சாதியிடம் ஏதோ சொன்னான். இருவரும் சிரித்தனர். அதற்குள் கீழே விடப்பட்டிருந்த குழந்தை அழத் தொடங்கிவிட்டது. முனியனின் பெண்சாதி அதைக் கையிலெடுத்துச் சமாதானப் படுத்தினாள். முனியன் கையைத் துடைத்துக்கொண்டு குழந்தையை கையில் வாங்கினான். குழந்தை கருப்பா யிருக்கிறது. ஆனாலும் அழகா யிருக்கிறது. முனியன் அதை முத்தமிடுகிறான். அந்தக் குழந்தை எவ்வளவு அழகாகச் சிரிக்கிறது!

முனியன் குழந்தையைப் பெண்சாதியிடம் திருப்பிக் கொடுத்துவிட்டான். அவள் சோற்றுக் கலயங்களைக் கையிலெடுத்துக் கொண்டு ஏதோ சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். முனியன் தலையை ஆட்டிவிட்டுத் திரும்பினான்.

அவன் திரும்பவும் கோடாலியைக் கையிலெடுத்தான். இன்னும் அவ்வளவு கட்டை கிடக்கிறதே. அவன் கொஞ்சம்கூட பயப்படக் காணோமே. அலட்சியமாக அல்லவா வெட்ட ஆரம்பித்துவிட்டான்!

* * * *

மாலை நேரம் வந்தது; குழந்தை ரோகிணி குளித்துவிட்டுப் புதிய ஆடைகளணிந்து அம்மாவுடன் கோவிலுக்குச் சென்றாள். அன்று வெள்ளிக்கிழமையாகையால் ஏராளமான கூட்டம் வந்திருந்தது. ஆண்களும் பெண்களும் இரண்டு வரிசைகளாக நின்றிருந்தனர் சன்னதியில்.

வந்திருந்தவர்கள் யாவரும் நன்றாக அலங்கரித்துக் கொண்டிருந்தனர். குழந்தையின் பக்கத்தில் தடித்த உருவமுடைய ஒரு ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். அவள் புத்தம் புதிய புடவையொன்றைக் கட்டியிருந்தாள். அதிலிருந்து வந்த கஞ்சி நாற்றம் குழந்தையினால் சகிக்க முடியாததாக விருந்தது. அம்மாவை அந்தப்பக்கமாக நிற்க விட்டுவிட்டு இந்தப்புறத்தில் வந்து நின்றாள்.

ஸந்தியாகால பூஜை ஆரம்பமாகியது. ஸ்வாமிக்கு நிறைய நகைகள் போட்டு அலங்காரம் செய்திருந்தனர். மணிகள் கணீரென்று ஓசையை யெழுப்பின. கொட்டும் மேளமும் காதை யடைப்பதுபோல ஒலித்தன. தீப ஆராதனை; எல்லோரும் "அரஹரா அப்பனே" யென்று ஏககாலத்தில் கோஷம் செய்தனர்.


ஆனால் குழந்தை ரோஹிணியின் மனம் வேறெங்கோ சென்றிருந்தது. அவளுடைய கண்கள் ஆண்பிள்ளைகளின் வரிசையை ஆராய்ந்தது. இதென்னவிது! அப்பாவையும் முனியனையும் அங்கே காணவில்லையே!

அர்ச்சகர் தீபத்தட்டை நீட்டிக்கொண்டே வந்தார். எல்லோரும் அதற்கு நேர் கைகளை நீட்டிக் கண்களில் ஒத்திக்கொண்டனர். குழந்தையும் ஒரு இயந்திரம்போல அப்படியே செய்தாள். பின்னர் அவர் கொடுத்த பிரசாதத்தையும் பெற்றுக்கொண்ட பின்னர் அம்மாவுடன் வீடு திரும்பினாள்.

வீட்டிற்கு வரும் வழியில் ரோஹிணி சிந்தனையில் மூழ்கியிருந்தாள். அம்மாவுடன் வழக்கம்போலப் பேசவில்லை. வீட்டிற்கு வந்தவுடன் வாசல் அறையிலிருந்த சோமசுந்தரத்தினிடம் சென்றாள். அவர் விளக்கடியில் உட்கார்ந்து ஏதோ கணக்கெழுதிக் கொண்டிருந்தார்.

அவரைக் கண்டவுடன் குழந்தை "அப்பா! நீயேன் கோவிலுக்கு வரவில்லை" யென்று கேட்டாள்.

"எனக்கு வேலையிருந்தது. வெளியே போய்வந்தேன். வந்தவுடன் கணக்கெழுத உட்கார்ந்துவிட்டேன்."



"ஏனப்பா கணக்கெழுத வேண்டும்!"

"இப்படி எழுதினால்தான் நாம் நம்முடைய சொத்துகளை சரியானநிலைமையில் வைத்துக்கொள்வது சாத்திய மாகும். இது நம்முடையவரவு செலவு கணக்கு. எவ்வளவு பணம் வந்தது, எவ்வளவு செலவாயிற்று என்று தெரியவேண்டாமா அம்மா?"

"இதை எழுதித்தான் தீரவேண்டுமா அப்பா?"

"ஆமாம் அம்மா"

"முனியன்கூடக் கோவிலுக்கு வரவில்லையே. அவன் கூடக் கணக்கெழுதுவானா?"

"அவன் கணக்கெழுத மாட்டான். அவன் கோவிலுக்குள் வரக்கூடாது."

"ஏன் அப்பா?"

"அவன் பள்ளன்; அவன் நம்முடைய வீட்டிற்குள்ளே கூட வரக்கூடாது. கோவிலுக்குள்ளேயும் வரக்கூடாது"

"பள்ளன் என்றால் என்ன அப்பா?"

"தீண்டாதவன்"

"என்ன தீண்டாதவன்?"

அந்தக் கேள்விக்கு எப்படி பதில் சொல்லுவதென்று தெரிய வில்லை சோமசுந்தரத்திற்கு. சாஸ்திரங்களையும் ஜாதி யமைப்பு களையும் பற்றிச் சொன்னால் அவளுக்கு விளங்காது. பதில் சொல் லாமல் தப்பித்துக் கொள்ளவும் முடியாது. அவர் திணறிப் போய் விட்டார்.

'அதென்னமோ. பெரியவர்கள் அவனுக்குத் திண்டாதவன் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்' என்று மழுப்பி விட்டார்.

குழந்தைக்கு அந்தப் பதிலில் திருப்தியுண்டாகவில்லை. அப்பா எதையோ மறைத்துப் பேசுகிறார் என்று மாத்திரம் அவளுக் குத் தெரிந்துபோய்விட்டது, ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்று விட்டாள். அவளுடைய சிறிய மனத்தில் அசாந்தி நிறைந்தது.

அன்றிரவு அவள் உறங்குவதற்கு நெடு நேரம் பிடித்தது. "முனியன் நல்லவன். ரொம்ப பலசாலி. நன்றாகக் கட்டை வெட்டுகிறான். வியர்வை கொட்டக் கொட்ட வேலை செய்கிறான். அவனுடைய பெண்சாதி கூட நல்லவள். அவனுக்குச் சாப்பாடு கொண்டு வந்து போடுகிறாள். அவனுடைய குழந்தை எவ்வளவு அழகாகச் சிரிக்கிறது. முனியன் கோவிலுக்கு வரக்கூடாதாமே ஏன்? ஏன் வரக்கூடாது? சாப்பிடுவதற்கு முன்னால்கூட அவன் ஸ்வாமியை நினைத்துக் கண்ணை மூடிக்கொண்டானே. ஏன் கோவி லுக்கு வரக்கூடாது" என்று யோசனை செய்து கொண்டே உறங் விட்டாள். தூக்கத்திலும் நிலையின்றிப் புரண்டாள். தூக் கத்தினிடையே ஸ்வப்பனங்கள் பல தோன்றின. ஒன்றிற் கொன்று சம்பந்த மற்றவை. ஆயினும் அந்த இளநெஞ்சை யன்று ஆகர்ஷித்திருந்த பல சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவ ளுடைய மனக்கண்ணின் முன் தோன்றித் தோன்றி மறைந்தன. முனியன் கோடாலியுடன் வருகிறான். கட்டையை வெட்டுகிறான் அவனுடைய கோடாலி கட்டையை வெட்டிவிட்டு அதைப் பார்த்து கேலியாகச் சிரிக்கிறது. அப்பா அவனை அதட்டுகிறார். முனியன் குழந்தை சிரிக்கிறது. கோவிலில் பூஜை நடக்கிறது. குழந்தை "ஹரா ஹரா" வென்று கன்னத்தி லடித்துக் கொள்ளுகிறாள். பக்கத் தில் நிற்கும் தடித்த ஸ்திரியின் புடவை நாற்றமடிக்கிறது. கோவில் வாசலில் அவர்களுக் கெதிரில் முனியன் வருகிறான். அம்மா அவன் கிட்டப் போகக்கூடா தென்கிறாள். வீட்டிற்குள் போவதற்குமுன் குழந்தை வாதா மரத்தடியிலிருந்து வானத்தை நிமிர்ந்து பார்க்கி றாள். அடாடா! எத்தனை நக்ஷத்திரங்கள்! ஒண்ணு, ரெண்டு, மூணு..........."

(தொடரும்)

காணமற் போன பாக்கு வெட்டி !

(ரஸிகன்)

இனிய துப்பறியும் கதையல்ல. ஒரு ஏழைக் கவிராயரின் பிர லாபம் தான்! கேவலம் பாக்கு வெட்டி என்று நினைத்து விடாதீர்கள். ஓர் அரசனிடம் நாலாறு காரியாதிகளை—அடைப்பத் தொழில் முதல் விறகு வெட்டும் தொழில் வரை—பார்த்துவரும் பணியாட்கள் எல்லாம் திரண்டு ஓர் பாக்குவெட்டியாக உருவெடுத்து நமது கவிராயருக்கு பணி செய்து நின்றது. தமது பாக்கு வெட்டியே பரிவாரமாக தமது தரித்திர ராஜயத்தில் செங்கோல் நடாத்திவருகிறார். இந்தப் பாக்கு வெட்டி பரிவாரமாக மட்டுமல்ல, இவ்வுலகத்தில் அவருக்கு மூலதனமாகவும் உயிர்த் தோழனாகவும் இருந்தது.

ஒரு நாள் இவரது பாக்கு வெட்டியும் இவருமாக ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். பசியின் கொடுமை மிஞ்சி சற்று அயர்ந்தார். 'பிறகு விழி திறந்து பார்க்கையிலே'—காணோம்! எது? பாக்கு வெட்டி! தனது பல வேலை செய்யும் பணியாளனும், மூலதனமும், உயிர்த் தோழனுமான பாக்கு வெட்டி! துக்கம் பீறிட்டுக்கொண்டு வருகிறது. சர்வ வல்லமையுடைய கடவுள் போல், 'அலகிலா விளையாட்டுடைன' பல தொழிலியற்றிய பாக்கு வெட்டியின் ஒவ்வொரு அன்பு மிகுந்த செயலையும் 'உன்னி மயங்கினார்'! விறகு தறித்துக் கொடுத்தது; சமையலுக்கு கறி நறுக்கிக் கொடுத்தது; சாப்பிடும்பொழுது உப்பு வைக்கும் தாலமாகத் திகழ்ந்தது; இந்த சம்பிரமமான பிறகு, தாம்பூலம் கிடைத்தால், ஒரு பாக்கை நாலு அல்லது ஆறு துண்டாகப் பிளந்து கொடுத்தது; பிறகு "ஹாய்" என்று தனது தரித்திர மாளிகையில் சாய்ந்திருக்கும் பொழுது உடம்பிற்கு இதமாக பறகு பறகென்று உடலை வருடிற்று; திடீரென்று இறகு முளைத்தா பறந்து விடும்! யாராவது எடுத்திருந்தால் கொடுத்து விடுங்கள் என்று ஏங்குகிறார். சோகங் கலந்த நகைச்சுவை.

"விறகுதறிக்கக் கறிநறுக்க வெண்சோற்றுப்புக் கடகு வைக்க
பிறகு பிளவு கிடைத்ததென்றால் நாலாறாகப் பிளந்து கொள்ள
பறகு பறகென்றேசொறிய பதமாயிருந்த பாக்குவெட்டி
இறகுமுளைத்தும் போவதுண்டோ, எடுத்தீராயிற் கொடுப்பீரே!"

இந்தப் பாட்டில் எதிர் எதிரான இரண்டு உணர்ச்சிகள் பொருந்தியிருக்கிறது. புலவரைப் பார்த்தால் கண்ணீரும் கம

பலேயும். காரணம்? காணுமற்போன பாக்கு வெட்டி. மேனுட்டுப் புலவர் செஸ்டர்டன் (Ches terton) சொல்லும் ஒரு (Tremendous Trifle) ஓர் 'பெரிய...சின்னது'! பார்த்தால் ஒரு சிறு விஷயம், பாக்கு வெட்டி! அது புலவரின் மனதில் ஓர் பெரிய சோகத்தை உண்டுபண்ணி விடுகிறது.

பாட்டின் ஓசை யின்பத்தையும் வார்த்தைகள் அமைந்திருக்கிற மாதிரியையும் பார்த்தால், புலவர் லேசானவர் அல்ல என்று தெரியும். முதலில் பாக்கு வெட்டியின் இன்றி யமையாமையை உணர்த்த அது செய்யும் தொழில்களை வெகு வேகமாக வருணிக்கிறார். அதன் ஓசையே பாக்கு வெட்டி ஓயாது உழலும் விந்தையை காண்பிக்கிறது.

"பிறகு பிளவு கிடைத்ததென்றால் நாலாருகப் பிளந்துகொள்ள."

இவ்வளவு சம்பிரமங்களுக்கும் மேல், அற்புதமாக ஒரு பாக்கு கிடைத்தால், அதை 'நாலாருகப் பிளக்கு'மாம். 'பிறகு' என்ற ஒரே வார்த்தையில், தரித்திரத்தின் கொடுமையை கூறி நிறுத்தி விட்டு, வெற்றிலே போட்டு அசை போடும் இன்பத்தை யறிவிக்க நீண்ட ஓசையில் 'நாலாருகப் பிளந்துகொள்ள' என்பது நன்ருக அமைந்திருக்கிறது.

"பறகு பறகென்றே சொறிய பதமாயிருந்த" என்று சொல்லிக்கொண்டு வருவதுவரை புலவர் நம்மை ஓர் ஆவலில் நிறுத்தி வைத்துக்கொண்டே வருகிருர். இவ்வளவு தூரம் விக்கிரமாதித்தியனின் வேதாளம்போல் பணி செய்யும் பொருள் என்னதென்ற ஆத்திரம் அதிகரிக்கிறது. மூன்ருமடியின் கடைசியில் அது ஒரு பாக்குவெட்டி என்று அறிவிக்கையில் நகைச்சுவை மிஞ்சி நிற்கிறது. உடனே அது மறைந்த விதத்தை "இறகு முளைத்துப் போவதுண்டோ............" என்று அசம்பாவிதமாகவும் நடக்கக் கூடுமோ என்பதுபோல் சந்தேகத்தில் காண்பித்துவிட்டு............ ....எடுத்தீராயிற் கொடுப்பீரே!" என்று ஏங்கி நிற்கும் சோகம் நகைப்பை நமக்கு இன்னும் அதிகமாக்குகிறது. திருட்டுப்போய் விட்டதென்று சொல்லி, பக்கத்திலிருப்பவருக்குத் திருட்டுப் பட்டம் கொடுக்கப் பயம்; காணுமற் போயிற்றென்ற நிச்சயம், கிடைக்கவேண்டுமென்ற ஆசை, எல்லாம் சேர்ந்து இவரை மிகுந்த ஜாக்கிரதை யாக்கிவிடுகிறது.

விருத்தத்தை படிக்கும்பொழுது ஒரு பரபரப்பு, ஒரு ஆவல், திடீரென்று பாக்குவெட்டி தோன்றி மறையும் விநோதம், பிறகு ஒரு சோகம், இவை யெல்லாம் நமது மனதில் ஒரு கொழுத்த சிரிப்பை தருகிறது.

மகாராஜ்!

(டாக்டர். திரு. வா. சுவாமிநாத சாஸ்திரி, திருச்சி.)

"வாருங்கள் மகராஜ்! உட்காருங்கள்" என்றான் சுந்தரம்.

நாங்கள் இருவரும் உடனே திரும்பிப் பார்த்தோம். எங்கள் தோழர் பாலசுப்பிரமணியம் தான் வந்துகொண்டிருந்தார்.

"இரவில் தானே அவர் மகாராஜா! இப்போது பகலில்கூட ஏன் அவரை 'மகராஜ்' என நழைக்கிறாய்" என்றேன் நான்.

"இரவிலுங்கூட வாரத்தில் மூன்று நாள் தான் அவர் ராஜாவாக விளங்குவார். எந்த நாடகக் கம்பெனியிலும், தினம் ஆடுவதில்லையே' என்றான் ராமு.

உள்ளே நுழைந்த பாலசுப்பிரமணியம் உட்காரு முன்னும், எங்கள் புன்னகை மாறுவதற்கு முன்னும், எங்களை உங்களுக்கு; படத்தில் காண்பிப்பதுபோல் சிறுது அறிமுகம் செய்து வைக்கிறேன்—புகைப்படத்திற் கென்று பிரத்தியேகமான புன்னகை வேண்டு மல்லவா? நானே கிருஷ்ணசாமி—சிநேகிதர்கள் 'கிட்டு' என்றழைப்பார்கள். நானும் என் தோழர்கள் சுந்தரம், ராமமூர்த்தி மூவருமாய், ஒரே அறையில் வசித்து வருகிறோம். பகல் போஜனத்திற்கு பின், இரவில் ஒரு நாடகத்திற்குப் போய் வந்தால், அறையில போய் தூங்கலாமென்று போனோம். கொஞ்ச நேரம் முந்தினநாள் நாடகத்தைப்பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அப்போதே பாலசுப்பிரமணியம் நுழைந்தார்.

"நம் தமிழ் நாடகங்களில், ராஜாக்கள், இராணிகள், தெய்வங்கள், தேவிகள் இல்லாமல் ஏதாவது சாதாரண ஜனங்களைகொண்டு நடக்கும் நாடகமே யில்லையோ' என்றான் சந்தரம்.

"ஏன், என்னுடைய ராஜபார்ட்டு நேற்று நன்றாக யில்லையோ" என்று கேட்டார் பாலசுப்பிரமணி.

"நன்றாயிருந்தது அதைப்பற்றி குறைகூறவில்லை. உன் உடையும், ஜிகினாவும், ஜரிகையும், நடையும், சாதாரண ராஜாக்களுக்கு கூட வராது. ஒருவேளை யாராவது சிற்றரசனுக்கு கம்பீர ஜென்னி வந்தால் உன்போல் நடிக்கலாம்" என்றான் ராமு.

"பரிகாசம் இருக்கட்டும், உண்மையாக என் பார்ட்டு எப்படி இருந்தது எனக் கேட்டேன்" என்றான் பாலன்.

"நன்றாயில்லை யென்று யார் சொன்னது. மேடையில் 'வந்தனம் தந்தே'னென்று பாடிக்கொண்டு நுழைந்ததும், ஸிம்மாஸனத்தில் அமர்ந்த ஒரு காட்சியும், உட்கார்ந்தவுடன் மந்திரியிடம் நாட்டின் நிலவளம் நீர்வளம், அன்னசத்திரங்கள் முதலியவற்றை தீர விசாரித்ததும், அந்தந்த வர்ணத்தில் உள்ளவர்கள் அவரவர்கள் ஜாதிக்கேற்ற தொழிலையே சரிவர செய்கிறார்களாவென்று கேட்டதும் எவ்வளவு புதுமையாக இருந்தது. தலைமுறை தலைமுறையாய் ராஜாக்களாக இருந்தவர்களுக்கும் கூட இவ்வளவு விசாரணைத் திறம் அமைவது கடினம்" என்றான் ராமு.

"நிஜராஜாக்களின் நடவடிக்கைகளைக் கண்டு உலகம் வெறுத்து, அனேகரை ஸம்கரித்தும், பூண்டோடு அழித்தும், பலரை நாடுகடத்தியும், இச் சோம்பேறி வர்க்கத்தினரை பழிப்பதற்கென்றே சீட்டுக் கட்டுகளிலும் நான்கு ராஜாக்களை வைத்து வீடுதோறும் அவர்கள் அற்ப ஜனங்களின் பாதங்களில் இறைபடும்படி வைத்திருக்கும் இந்த நாளிலும், நம் தேசத்திலும், நம் நாடக மேடைகளிலும், அவர்கள் நகைக் கடை விளம்பர பதுமைகள் போல் உலாவாவிடின், சாத்தியப் படாதோ" என்று நான் கேட்டேன்.

"ஜனங்களின் மனப்பாங்கு மாறினாலல்லவோ! இதோ நம்முடைய பாலனையே பார்த்துக் கொள்ளுங்கள். சிறுபிராய முதற்கொண்டே அவனுக்கு, ஜிகினா சட்டையும், ஜரிகை சடாவும், தலையில் இறகு சொருகிய டளபளப்பு தலைப்பாகையும் அணிந்து, வர்ணாசிரம தர்மங்களையும், அன்ன சத்திரங்களையும் பற்றி விசாரிக்க வேண்டுமெனும் பேரவா எவ்வளவு இருந்தது தெரியுமா" என்றான் சுந்தரம்.

"சரி போதுமே!" என்றான் பாலன் பரிதாபமாய்.

"என்ன போதும் என்கிறாயே! இந்த ஆவலினால் நீ நாடகத்திற்கு சென்று, அங்கு முதல் முதலில் கேவலம் நம்பிராஜனின் எழு குமாரர்களில் ஒருவனாய்த்தான் உன்னை நியமிக்கப்படும் என்பதற்கு வருத்தப்படவில்லையா? பிறகு நம்பிராஜனாக நெடுநாளிருந்து அது அலுத்துப்போய், அயன் ராஜபார்ட்டு என்பது வேண்டுமென்றே நீயே சொந்த நாடகக் கம்பெனி சேர்த்து விட்டாயே" என்றான் ராமு.


"மகாராஜ்! என்றழைக்கப்பட வேண்டுமென்று, எல்லாருக்கும் ஆசை இருக்காதா! நான்கூட, அன்று ஒருநாள் வெகுநேரம் பிச்சை கேட்டுக்கொண்டிருந்த ஒருவன் கடைசியாய் "மகாராஜா! நீங்கள் எல்லாம் இல்லை என்றால் நாங்கள் யாரிடம் பிச்சை கேட்பது மகாராஜா! என்று இரண்டு முறை என்னை அழைத்தவுடன், கையிலிருந்த இரண்டு அணவை அவனிடம் கொடுத்துவிட்டு, பஸ்ஸுக்கு காசில்லாததால் நடந்து வீட்டுக்கு வந்தேனே" என்றேன் நான்.

"நம்முடைய சில்லறை ஜமீந்தார்களை யெல்லாம் கூட 'மகாராஜா' வென்று தான் அழைக்க வேண்டும். முன் ஒரு முறை எங்கள் ஜில்லா ஜமீந்தார் ஒருவர், கவர்னர்களுக்கு தேக்கச்சேரிகள் வைத்தும், கலெக்டர்களுக்கு கூழைக் கும்பிடுகள் போட்டும், பல நாட்களுக்குப் பிறகு ஒரு 'ராஜா பட்டம்' வாங்கியபோது, அவரிடம் மானேஜராக இருந்து, அன்று முதல் 'திவான்' என பட்டந் தரிக்கலாமென் றெண்ணியவர், சென்னையிலிருந்து ஊருக்கு, "நம் மகராஜா, ராஜாவாக ஆகிவிட்டார்" எனக் குதூகலத்துடன் தந்தி கொடுத்தார்" என்றான் சுந்தரம்.

"நானும் எவ்வளவோ ராஜியமில்லாத ராஜாக்களையும், அவர்களின் சம்பளமில்லாத திவான்களையும் பார்த்திருக்கிறேன். நான் மட்டுமே அப்படி என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். இதைப்பற்றி பேசுங்கால் எனக்கு திருச்சியில் நான் கேள்வியுற்ற ஒரு விஷயமும் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு ஏழை பிராமணன் வீட்டிற் பிறந்த ஆண் குழந்தையின் ஜாதகத்தை பார்த்த ஒரு ஜோஸியர், 'பையனுக்கு பதினெட்டாவது வயதில் யானையேறும் அதிகாரம் வருகிறது' என்றார். ஏழை பிராமணன் வீட்டில் எல்லாரும் திருப்தி அடைந்தனர். வருஷங்களாயின. பையனுக்கு தானாகவே அதிர்ஷ்டம் வரும், படிக்கக்கூட வைக்க வேண்டாம் என்றே இருந்துவிட்டார்கள். யானை ஏறும் பதவி என்றால் ராஜாவாக ஆவானென்றே திண்ணமாய் இருந்தார்கள்.

பையனுக்கு வயது பதினாறு ஆகியும், ராஜ்ஜியமில்லை; அரண்மனையில்லை; கூடவரும் ஊழியர்களில்லை. வீட்டில் அவனை 'ராஜா' என்று செல்லப் பெயரால் அழைப்பதைத் தவிர வேறு ராஜ சின்னங்களையே காணோம். உடல், உடம்பு பரங்கிப்பழம் போல்பெருக்கவுமில்லை. முகம் அசடுதட்டவு மில்லை. ஸ்திரீகள் சம்பந்தமான, ஐந்து மனைவி, எட்டு இதர மாதர்கள்போன்ற சாமானிய ராஜ சின்னங்களைக்கூடக் காணோம். இருந்தபோதிலும் ஜோஸியர் கெட்டது

சொன்னால்தான் நிச்சயமாய் பலிக்குமே யொழிய, நல்லவை பலிக்கிறதில்லை. "க்ஷவரத்திற்கு அதிகாரம் வரும் என்று யாராவது பெண்ணைப் பார்த்து சொன்னாரானால், இரும்பு குண்டு போல் இருக்கும் புருஷனாயினும், ஏதாவது மோட்டாரில் அடிபட்டாவது, மாப்பிள்ளை உருண்டு போவது வழக்கமே ஒழிய வேறு அதிகாரங்கள் வருமென்றால், அவை நிறைவேறுவது கடினம்" என அண்டை வீட்டுக்காரர்கள் சொல்ல ஆரம்பித்தனர். பெற்றோர்கள் மட்டும் ஒரே உறுதியான நம்பிக்கையுடன், ராஜ பதவிக்கென பிறக்காத, நெபோலியன், ஸிவாஜி, ஹைதர் ஆலி, நாதர் ஷா, போன்றவர்களை ஞாபகப் படுத்திக்கொண்டு மனதைத் தேற்றிக் கொண்டனர். ஜோஸியர் சொன்னபடியே பதினெட்டாவது வயது ஆன தினம் பையன், முன்னே விருதுகளும், சட்டியக்காரர்களும்,



வாத்தியங்களும் செல்ல, பட்டாடை உடுத்தி, யானை மேல் ஊர்வலமாய் வந்தான் — மலைக்கோவில் மடைப்பள்ளியில் வேலைக்கு அமர்ந்ததால், காவேரியிலிருந்து அபிஷேகத்திற்கு திருமஞ்சனம் அவனே எடுத்துவர நேர்ந்தது" என்றான் பால சுப்பிரமணியும்.

"எனக்கும், ஒரு மகாராஜின் ஞியாபகம் வருகிறது'' என்று ராமு ஆரம்பித்தான். அனைவரும் அருகில் நெருங்கி உட்கார்ந் தோம்.

"அவர் ஒரு ஜாகிர்தார் வமிசத்தில் பிறந்தவர். சில தலை முறைகளுக்கு முன், அவர்களுக்கு, நாயக அரசர்கள் காலத்தில் ஒரு ஜமீன் அளிக்கப்பட்டதாம். தென் நாட்டிலுள்ள அபூர்வமான பிராமண ஜமீன்களில் அது ஒன்று. குலம் பிராமண குலமாயி னும், அந்தஸ்து ஜமீன் அந்தஸ்தாக இருந்ததால், நாளடைவில் அந்த சிறிய ஜமீன் பேரில் கடன் வளர்ந்துகொண்டே வந்தது. நிலங்கள் பிறர் கைவசம் சென்றன. ஆயினும், கிராமத்தில் அவர் வீட்டை அரண்மனை யென்றே குறிப்பிடவேண்டும். அவருடன் பேசும்போது 'மகராஜா' என்றே அழைக்கவேண்டும், என ஒரு விதி அனுஷ்டித்து வரப்பட்டது. நிலமெல்லாம் போனபின், கடைசியாய் மிகுந்திருந்த அரண்மனையும் ஏலத்திற்கு வந்த காலத் தில் பட்டத்திற்கு வந்திருந்தவர், நமது செஞ்ஜி, வீரண்ண, கோதண்ண, ரணவீர, கம்பீர சேரசூர, கிண்ணர மணியார...... ரகுகுல ராமபத்திர ஹனுமந்த ராவ். (இடவசதிக்காக நடுவில் கொஞ்ச பேர்களை நீக்கிவிட்டேன்) பேரில் என்ன இருக்கிறது என்றாலும், பெரிய பேர் வாங்கினவர்கள் என்று சொல்லப்படுவ தற்காகவோ, என்னவோ, நம் ஜமீந்தார்கள், இரண்டு வண்டிப் பேர்கள் வைத்துக் கொள்ளுகிறார்கள். பேரை தூக்குவது கடின மாயிருப்பதால், மற்ற எல்லாவற்றையும் கை நழுவவிடவேண்டி யதாகிறது.

மகாராஜா என்றழைக்கப்பட்டவர், ஜாகிர்தார், ராயர்வாள், ராவ்ஜீ, ராயர், ராயன், இந்த ராயன்பயல் என்று, காலக்கிரமப் படி அழைக்கப்படலாயினர். கடைசியாய் பட்டத்திற்கு வந்த,... ஹனுமந்த ராவுக்கு வயது பதினெட்டு ஆகும்போது வீடு முதலிய வையும் ஏலத்திற்கு வந்தன. அவர் தாயாரும் இறந்தாள். அரண் மனையில் பல நாட்கள் உண்டு வளர்ந்த சில பல்லில்லாத பெருச்சா ளிகள் தவிர வேறு யாரும் அவரிடம் மரியாதை கொஞ்சமேனும் செலுத்தவே யில்லை. அரண்மனையி லிருந்த பல தஸ்தாவேஜு களையும், அரண்மனை கவிராயர்கள் மகராஜர்கள் மீது பாடிய பாடல் களின் ஏடுகளையும் ஒருவர் வீட்டு பரணில் போட்டுவிட்டு, ஊரைவிட்டு போய் விடுவதாக தீர்மானிக்கலாயிற்று. ஏனெனில், 'இந்த ராயன் பயலே' என்பதைக்கூட சகித்துக் கொண்டிருந்த ராயர், ஒரு நாள் ஒரு சிறுவன் தன்னை 'இந்த மர்க்கடராயன்' என்று ஏளனம் செய்ததை பொறுக்க முடியவில்லை!

வெளிதேசம் போய் பல நாட்களுக்கு, பத்து வருடங்களுக் கப்பால் திரவியத்துடன் தன் ஊருக்கு திரும்பவந்தார். அவரிடம் ஏராளமான பொருள் இருந்ததாக வதந்தி கிளம்பிற்று. திரும்ப வும் ஜனங்கள் சூழ ஆரம்பித்தனர். தன்னை முன்னர் திரும்பிப் பாராதவர்கள் திரும்பவும் உறவு கொண்டாடத் துடங்கினர். நல்ல இடத்திலிருந்து ஒரு பெண்ணையும் விவாகத்திற்கு ஏற்பாடு செய் தார்கள். கலியாணமும் பழைய அரண்மனையிலேயே ஆயிற்று. "திரும்பவும் ஜமீன் நிலங்களை மீட்டிக்கொண்டு இங்கேயே வசிப்ப தாக உத்தேசமோ" என்று கிராமத்தார் வணக்கமாய் கேட்டனர்.

"இல்லை! இது மரியாதை கெட்ட தேசம். குலத்தை மதி யாது, கையில் பொருளில்லை என்றவுடன் கேவலமாய் பேச ஆரம் பித்துவிட்டனர். வடக்கே நான் போன இடத்தில், என் கையில் ஒரு தம்பிடி கூட இல்லாதபோதும் என்னை மகாராஜ்! மகாராஜ்! என்றே அழைத்தனர் யாவரும். இன்று நான் போனாலும் அப்ப டியே! நான் ஒருவரிடம் உத்தியோகம் பார்த்தாலும் என் எஜமானும் என்னை மகாராஜ் என்றே அழைப்பார். பெரிய பெரிய மனிதர்களெல்லாம், மகாராஜ்! மகாராஜ்! என்று என்னை சூழ்ந்து கொண்டு, என்னிடம் கை நீட்டி வாங்கி உண்பார்கள்" என்றார். தடையென்ன இருக்கிறது! வடக்கே நல்ல மரியாதைக் காரர்களே! அங்குதான் உங்களுக்கு செல்வாக்குபோலும் என்றார்கள்.

'செல்வாக்கிற்கு குறைவே யில்லை. தவிர உத்தியோகமும் அப்படிப்பட்டதே" என்றார் ராயர். ஊரை விட்டு மனைவியுடன் கிளம்பும் நாள் வந்தது. கிராமத்தார் வழியனுப்ப ஒரு கூட்டங் கூடினார்கள். பழைய கவிராயரும் ஒருவர் வந்து சேர்ந்தார்.

"முச்சக்கரமும் அளப்பதற்கு எட்டியகக்கால்,
இச்சக்கரமே அளர்ந்ததால்"—என

கரிகாலச் சோழன் மீது பாடியதுபோல், ராயர்மீதும், வாழ்த்துக்கவி பாடினர்,

"நாடும் நகரமும் யாவுமிழந்தும் மனந்தளரா
காடுங் கரையும் மீண்டுவென்ற மன்னன்—தேடுங் கொடியை
கங்கைக் கரையண்டை காணுவீ ரன்றோ
அங்கை வலிமையை புகழவே"

எனப் பாடி பரிசு பெற்றுச் சென்றார்.

ராயரும் மனைவியை யழைத்து, சென்னை சென்று அங்கே ஒரு சிறு இடத்தில் அவளை அமர்த்தி தான் கொஞ்சநாள் பிறகு வந்து அழைத்துச் செல்வதாகச் சொல்லிப் புறப்பட்டார்.

மனைவி மெதுவாய் "மகாராஜ்! தங்களை மகாராஜ! என்றே அனைவரும் அழைப்பார்கள் என்றும், செல்வாக்கான உத்தியோகம் என்றும் சொன்னீர்களே ஒழிய தங்கள் ஜாகிர் எந்த தேசத்திலிருக்கிறதென்றும், ஊரின் பெயர் எதுவென்றும் தெரிவிக்கவில்லையே" என்று கேட்டாள்.

"ஊரா! எல்லா ஊரும் நம் ஊர்தான்! எந்த தேசத்தவராயினும் மகாராஜ் என்றேதான் நம்மை அழைக்கவேண்டும்." என்று சொல்லி போகும்போதே ரகஸியமாய் தற்போது பம்பாய்க்கு போகிறேன். அங்கு ஒரு பெரிய குஜராத் ஸேட் வீட்டில், உத்தியோகம் பார்த்து வருகிறேன் — "கரண்டி ஆபீஸ் உத்தியோகம்" என்று ஓடினார்.



பிரசங்க மேடை ஹாண்டிகாப்

[ஒவ்வொரு தடவையும் சர்வகலாசாலை பிரசங்கப் போட்டியில் ஸ்ரீமதி ஷாநவாஸே வெற்றியடைந்து முதல்பரிசு பெற்று வருகிறார். இவ்வருஷமும் லேடி இர்வின் சாலையில் அவரே சமீபத்தில் நடந்த போட்டியில் வெற்றி பெற்றார்.]

—பத்திரிகைச் செய்தி.

ஸ்ரீமதி ஷாநவாஸுக்கு எப்பொழுதும் வெற்றி கிடைக்கிறது. ஆனாலும் அவரால் பிறருக்கு ரொம்ப அசௌகரியம் ஏற்படுகிறது. ஒவ்வொரு சர்வகலாசாலைப் போட்டியிலும் அவர் வந்து வெகுமதியைத் 'தட்டிக்'கொண்டு போய்விடுவதால் அவருக்குக் கீழுள்ளோரின் திறமையை அளவிட முடியாமல் போய்விடுகிறது. அவர் மெழுகு வர்த்திகளுக்கு நடுவே பிரகாசிக்கும் மின்சார விளக்கைப் போன்றிருக்கிறார்; அதனால் மெழுகுவர்த்திகளுக்குள் எவை பிரகாசமானது என்று ஒப்பிட்டுப் பார்க்க முடிவதில்லை.

*　　　*　　　*　　　*

இன்னொரு உதாரணம். ஒரு குதிரைப்பந்தயம்; இரண்டுமைல் போட்டிப்பந்தயம். அதில் ஜட்காவண்டிக் குதிரைகள், நாட்டுப்புறக் குதிரைகள், அராபியக்குதிரைகள் ஆஸ்திரேலிய மட்டக்குதிரைகள், இந்தியாவுக்கு வந்திருக்கும் ஆங்கிலேயக் குதிரைகள். இவைகளின் நடுவே ஒரு "இதாலிய நட்சத்திரமாக" விளங்குகிறார் ஸ்ரீமதி ஷாநவாஸ். பல சண்டிகளும் ஒரு பர்லாங்குக்குள் விழுந்து விடுகின்றன. அவருடன் விவாதத்தில் கொஞ்சதூரம் வருபவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். முடிவில் ஸ்ரீமதி நவாஸ் தனிமையாக கரகோஷங்களுக்கிடையே "வின்னிங்போஸ்டை" அடைகிறார்.

*　　　*　　　*　　　*

குதிரைப்பந்தயத்தில் அதிகப்படி சக்தியுள்ளவைகளுக்கு (ஹாண்டிகாப்) தடையேற்படுத்துகிறார்கள். சிலவற்றிற்கு பாரத்தைக் கட்டிவிடுகிறார்கள்; சிலவற்றை எட்டித் தூரமாக நிறுத்துகிறார்கள். அதேபோல் ஒரு பிரசங்கப்போட்டியில், பிரசங்கம் ஸ்வாரஸ்யமாக இருக்கவேண்டுமானால் முக்யமான பிரசங்கிகளுக்கு ஒரு விதமான முட்டுக்கட்டை ஏற்படுத்தவேண்டும்.

1. ஸ்ரீ ஜின்ன



இவருடைய முக்ய சௌகரியம் சட்டையில் உயரமான 'காலர்'; அவருடைய ஒற்றைக் கண்ணாடி, அவர் தூக்கும் ஆள்காட்டி விரல் இவைகளே. பிரசங்கப் போட்டியில் அவரை ஒரு "டென்னிஸ் ஷார்ட்டையும்' கறுப்புக் கண்ணாடியையும் போட்டுக்கொள்ளும்படி செய்யவேண்டும். அவருடைய ஆள்காட்டி விரலுக்கு காயக் கட்டு (பாண்டேஜ்) கட்டிவிடவேண்டும்.

* * *

2. ஸ்ரீமதி சரோஜினி தேவி



இவருடைய முக்கிய சாதனம் இனிமையான குரலும், ஆவேச மான வார்த்தைகளுமே. பிரசங்கப் போட்டி நடத்த வேண்டு மானல், ஜல தோஷத்தாலும், தும்மலாலும் அவதிப்படும்போது தான் அவரைப் போட்டியில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவ்விதம் செய்தால் அவருடைய பேச்சு சாதாரணமாக இருக்கும்.

* * *

3. ஸ்ரீ சீனிவாச சாஸ்திரி



இந்த மாகாணப் பிரமுகரின் வெற்றிக்கு முக்ய காரணம் கணக்கின்றி வார்த்தைகளை அள்ளிப்போடுவதும், ஞானம் நிறைந்த, தர்மசிந்தனையான தோற்றமுமே யாகும். இவருக்கு முட்டுக்கட்டை தலையில் இரண்டு கொம்புகளும், பின்புறம் வாலுமுள்ள "சைத்தான்" உடையை அவர் அணிந்துகொள்ளும்படி செய்ய வேண்டியது. இதனல் இவருடைய உயர்ந்த தோற்றம் மறைந்துவிடும்.

4. ஸ்ரீமான் சி. எஸ். ரங்கய்யர்

இவருடைய குறை யென்னவெனில் இவருடைய பேச்சு இடி முழக்கம்போல் கர்ஜிக்கிறது. "என்னைப்போன்றவர்களை விரோதித்துக்கொண்டால் நண்பர்களை யிழந்துவிடுவீர்கள்" என்று அவர் பிரிட்டனை நோக்கிக் கூறுகையில் அது ரொம்ப செயற்கையாகத் தோன்றுகிறது. ஆதலால் பிரசங்கப்போட்டியில் ஸ்ரீமான் அய்யரைத் திரைக்குப்பின் நிறுத்திப் பேசச் சொல்லவேண்டும்.

*   *   *   *

5. ஸ்ரீ எம். ஆர். ஜயகர்,

இவர் பேசுகையில் கொஞ்சம் கணக்கு வேலை செய்யவேண்டும். 'நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.'' "என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயத்தில்" "எங்களால் முடிந்தவரையில்" என்ற இவ்வார்த்தைகளை அவர் உபயோகிக்கும்பொழுது ஒவ்வொரு தடவையும் அவருடைய கணக்கில் (பிரசங்கப்போட்டியின் போது) 5 மார்க் குறைத்துவிடவேண்டும். இவ்விதம் செய்துவந்தால் முடிவில் அவருடைய கணக்கில் "பத்து"க் கலத்தில் தான் மார்க் நிற்கும்.

*   *   *   *



6. சர் ஹாரி ஹேயிக்

இவர் போட்டியின்போது பேச எழுந்ததும், (போட்டி) பரிசோதகர்களில் ஒருவர் இவருடைய தலையை சபையை நோக்கி வைத்து அசையாமல் பிடித்துக்கொண்டிருக்கவேண்டும். இல்லாவிடில் அவர் அங்குமிங்கும் ஆட்டி வேறுபக்கம் திரும்பிக்கொள்வார். மேலும் அவர் வெயிஸ்டுகோட்டு ஜேபியில் கட்டை விரலை நுழைக்கும்போதெல்லாம், ஒரு தடவைக்கு 2 மார்க் வீதம் குறைத்துவிடவேண்டும்.

*   *   *   *

7. டாக்டர் ஜியாவுதீன் அஹமத்

இவருடைய தலையை சரியாக வாரி விடவேண்டும். அவருடைய குறிப்பு புத்தகங்களையும், நோட் புத்தகங்களையும் பிடுங்கி

விடவேண்டும். மேலும் அவருடைய மூக்குக்கண்ணாடியை 5 மைல் தூரத்தில் வைத்துவிடவேண்டும்.

*   *   *   *

8. ஸ்ரீமதி ஷா நவாஸ்

ஸ்ரீமதி ஷா நவாஸ் பேசும்போது அவருடைய தேகம் முழுவதுமே உதபசங்கைப் போல் ரம்யமாக நடனம் செய்கிறது. அவருடைய முகமே ஒரு கவர்ச்சியுடன் பிரகாசிக்கிறது. ஆதலால் அகில இந்தியப் போட்டிப் பந்தயத்தில் அவருடைய காலையும், கையையும் கட்டிவிடவேண்டும். அவருடைய முகத்தையும் கருப்பு முக மூடியால் மூடிவிடவேண்டும். அப்பொழுதுதான் மற்ற பிரசங்கிகளுக்கு ஏதாவது இடமுண்டு.

—“இந்துஸ்தான் டைம்ஸ்”



:: காந்திஜியின் பாஷாபிமானம் ::

இந்நாட்டில் செய்த பொருள்களைத் தவிர வேறெதையும் வாங்காமல் இருப்பவன் சுதேசியம் அனுஷ்டிப்பதாக நாம் கருதுகிறோம். உண்மையான சுதேசியம் அதோடு நிற்காது.

இந்நாட்டின் நாகரிகம், கெடுதியில்லாத பழக்க வழக்கங்கள் இவற்றினிடம் பற்று இருக்கவேண்டும். இவற்றைப்பற்றி நாம் பிற நாட்டார் முன் லஜ்ஜை காட்டக் கூடாது. தாய்பாஷையிடத்திலும், தேச பாஷையினிடத்திலும் பற்று இல்லாதவன் சுதேசி தர்மத்தை அனுஷ்டிப்பவனாகமாட்டான். இன்னாட்டில் சர்க்கார் ஊழியர்களில் 100-க்கு 99-பேர் இந்தியர்களாக இருந்தும் அன்னிய பாஷையிலேயே சர்க்கார் கடிதப் போக்கு வரத்தும் தஸ்தாவேஜிகளும் இருப்பது மிகவும் மானக்கேடான ஓர் விஷயம்.

யாராவது ஒருவர் சட்டசபையில் தமிழில் பிரசங்கம் செய்தால் நாம், அதை சாதாரணமான ஒரு விஷயமாக நினைத்து விடுவதில்லை. அதுமட்டு மல்ல, பரிகாசம் செய்கிறோம். ஆங்கிலம் தெரியாதவர் தமிழில் பேசினால் பரிகாசம். ஆங்கிலம் தெரிந்தவர்கள் தமிழில் பேசினால் ஆச்சரியப்படுகிறோம். இது நமது மனப்பான்மையைக் காட்டுகிறது.

1917-ம் வருஷத்தில் ஐரோப்பிய யுத்தத்தில் மிகவும் நெருக்கடியான நிலைமை. மெசபடோமியா யுத்தகளத்தில் பலியிடுவதற்குப் போதுமான ஆள்கள் பிரிட்டிஷாரிடம் இல்லை. இந்தியாவிலிருந்து ஆள்சேர்த்து அனுப்பவேண்டும். ஒரே உத்தரவுபோட்டு ஒவ்வொரு ஊரிலிருந்தும் இத்தனை பேர் சைனியத்தில் சேரவேண்டுமென்று செய்துவிட சர்க்காருக்கு சக்தியில்லை. ஆகையால் நாட்டிலுள்ள பிரமுகர்களெல்லோருடைய ஒத்துழைப்பையும் பெறுவதற்காக அப்பொழுது வைசிராயாக இருந்த செம்ஸ்போர்ட் பிரபு டில்லியில் ஓர் மகாநாடு கூட்டினார்.

அந்த மகாநாட்டுக்கு மகாத்மா காந்தியும் போயிருந்தார். வைசிராய் அழைப்புக்கிணங்கி எந்த இடத்துக்கும் எந்த அசவுகரியங்களையும் பொருட்படுத்தாமல் போகிறவர்கள் நம் நாட்டில் ஏராளமாக உண்டு. அந்த கோஷ்டியைச் சேர்ந்தவரல்ல.

மகாத்மா காந்தி டில்லிக்குப் போனது வெறும் தமாஷ் யாத்திரையல்ல, அவர் மனதில் அப்பொழுதிருந்த பிரச்சினைகள் மிகவும் கம்பீரமானவை. வைசிராயைக் கண்டுபேசினர். அந்த விவரங்கள் இங்கு பிரஸ்தாபிக்க வேண்டாம்.

யுத்தத்திற்கு ஆள் திரட்டுவதைப் பற்றிய ஓர் தீர்மானத்தை மகாத்மாஜீ ஆதரித்துப் பேசவேண்டுமென்று வைசிராய் கூறினர். மகாத்மா அதற்கு இசைந்தார். ஆனல் தான் ஹிந்துஸ்தானி பாஷையிலேயே பேசப்போவதாக அறிவித்தார். எந்த பாஷையில் பேசினுலென்ன. மகாத்மா காந்தியின் ஆதரவிருந்தால்தான் யுத்தத்துக்கு ஆள் சேர்க்கும் வேலை சரிவர நடக்கும். இது வைசிராய்க்குத் தெரியும். ஆகையால் அவர் இந்த யோசனையை ஆக்ஷேபிக்கவில்லை.

தீர்மானம் பிரேரேபிக்கப்பட்டது. மகாத்மா காந்தி அந்த பிரேரணையை ஆதரித்து ஒரு பிரசங்கம் செய்தார். ஹிந்துஸ்தானியில் ஒரே ஒரு வாக்கியத்துடன் பிரசங்கம் முடிந்தது. 'என்னுடைய பொறுப்பை பூரணமாய் உணர்ந்து நான் இத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.'' என்று ஹிந்தியில் கூறினர்.

இதைவிடத் திறமையாக ஒரு தீர்மானத்தை ஆதரித்திருக்க முடியுமா? கூட்டம் முடிந்தது. ஹிந்துஸ்தானியில் பேசியதற்காக பலர் மகாத்மாவுக்கு வாழ்த்துக்கூறினர்கள்:— ஆனல் மகாத்மாவுக்கு இந்த வாழ்த்துச் சொற்கள் எல்லாம் உண்மையில் மிகவும் துன்பமளித்ததாக மகாத்மா கூறியிருக்கிறார். "அவமானத்தினல் என் மனங் குன்றிப்போயிற்று. இந்த தேசத்தைக் குறித்த காரியங்களுக்காக இங்கு நடத்தப்படும் கூட்டங்களில் இந்த நாட்டு பாஷை புறக்கணிக்கப்படுகிறது. என்னைப் போன்ற ஓர் தனி மனிதன் ஹிந்துஸ்தானியில் பேசினல் அதை ஓர் பெரிய விஷயமாக மதித்து வாழ்த்துக் கூறுகிருர்கள். இது என்ன வெட்கக்கேடு. நாம் எவ்வளவு இழி நிலையை அடைந்திருக்கிறேம். என்பது இதிலிருந்து புலனுகிறது'' என்று மகாத்மா காந்தி எழுதியிருக்கிருர்.

அந்த மகா நாட்டில் மகாத்மா காந்திக்கு நடந்தாக வேண்டிய காரியம் ஒன்றுமில்லை. அதனல் அப்படி தன்னிஷ்டம் போல் பேச முடிந்தது என்று சிலர் நினைக்கலாம். இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்கு இது ஓர் உதவியாக இருக்குமென்று நினைத்தே அவர் அங்கு சென்றுர் என்பதில் சந்தேகமில்லை.

(அவ்வாறு அவர் நினைத்தது சரியா தப்பா? அதை ஏன் இப்பொழுது விவாதிக்க வேண்டும்!)



:: சேணமும் கடிவாளமும் ::

[நா. சி.]

ஒரு குதிரை. உடம்பில் நல்ல பலம். நல்ல அழகு. பணக்காரர் வீட்டிலேயே இருந்ததால் ஆகாரத்துக்கோ பராமரிப்புக்கோ ஒரு குறைவுமில்லை. ஆனால் சவாரிக் குதிரையென்றால் சேணமும், கடிவாளமும் மாட்டித்தானே வெளியே போக வேண்டியிருக்கும். அதுவும் யஜமானுக்கடங்கி! நினைத்த வேளையில் நினைத்த இடத்துக்குப் போகவேண்டுமென்பது அதனுடைய அவா. ஆகையால் எப்படியாவது லாயத்திலிருந்து திருட்டுத்தனமாக வெளியே ஓடிவிட வேண்டுமென்று நினைத்தது.

அதனுடைய நெஞ்சில் இருந்த துடி துடிப்பு சொல்லத்தரமல்ல. ஒருவருக்கு அடிமையாக இராமல், தான் நினைத்த இடத்துக்குத் தன்னிஷ்டம்போல் மெதுவாகவோ, வேகமாகவோ, ஒய்யாரமாகவோ போக சுதந்தரம் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டது.

ஆனால் அதனுடைய சொந்தக்காரனுக்கு ஞாபகப் பிசகு என்பது ஏற்படுவதில்லை. ஒருநாளாவது லாயத்தின் கதவை திறந்து போட்டுவிடுவதில்லை. என்ன செய்யும் அந்தக் குதிரை?

ஒருநாள் அதற்கு ஆத்திரம் பொறுக்கமுடியவில்லை. உடம்பில் காயம்பட்டாலும் படட்டும். ஒருநாளாவது சுதந்தரமாக சுற்றிவிட்டுத்தான் சாகவேண்டும் என்று நினைத்து லாயத்துக் கதவின்மேலாக ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே வந்தது. வெளியே குதித்தவுடன் அதற்கு ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அளவு கிடையாது. மிகுந்த திருப்தி. அப்பாடா, இவ்வளவாவது நற்காலம் பிறந்ததே!

சேணமுமில்லை கடிவாளமுமில்லை. ஓட்டுவாருமில்லை அடக்கு வாருமில்லை. ரஸ்தாவண்டை போய் நின்றது. பேந்த பேந்த விழித்தது. எங்கே போவதென்று நிச்சயமாகவில்லை. ஏதோ ஒரு பக்கத்தைப் பார்த்து உல்லாசமாக நடந்தது. கடிவாளமுமில்லை, சேணமுமில்லை. தன்னுடைய இனிய குரலில் ஒரு கனை கனைத்தது.

போய்க்கொண்டேயிருந்தது. பகல் பொழுது போய்விட்டது. இருட்டு வர ஆரம்பித்தது. எங்காவது போய்ச் சற்று நேரம் படுக்கலாம். ஆனால் திறந்த வெளியில் படுப்பது முடியாத காரியம். அப்படியெல்லாம் படுத்து வாடிக்கையில்லை.

புல்லின்மீது படுத்தால் உடம்பெல்லாம் குத்துகிறது. ஜிலுஜிலுப்புத் தாங்க முடியவில்லை. ஆனால் வேறு என்ன வழி? அந்த புல் மைதானத்திலேயே படுத்துக்கொண்டது. அய்யோ பாவம். கண்ணிலிருந்து தண்ணீர் வருகிறது.

நல்ல இருட்டு. குளிர் நடுக்குகிறது. லாயத்திலேயே இருந்தால் இந்த ஆபத்து இல்லையே! அய்யோ பாவம்.

பொழுதுதான் விடியுமா, சூரியனையும் பார்ப்போமா என்று இரவெல்லாம் உறக்கமில்லாமல் தவித்துக்கொண்டிருந்தது. ஒரு மட்டும் பொழுது விடிந்தது. உடம்பெல்லாம் நோவு. மனதிலோ ஒரே சோர்வு.

“இந்த தான்தோணி வாழ்க்கையில் கிடைக்கக்கூடியது இந்தப் படுக்கைதானு! போகிறதற்கு எவ்வளவோ இடமிருந்தும் எங்கே போவது என்ன செய்வது என்றும் தெரியவில்லையே! மறுபடியும் வெட்கங் கெட்ட மூளியாகிரி அந்த லாயத்துக் கதவு திறக்குமா என்று அங்கு போய் காத்து நிற்பதா! என்ன வெட்கக்கேடு. என் வாழ்வு இதோடு முடிந்தாலும் போதுமே. யமனுக்குக் கண் தெரியவில்லையா.” என்று யோசித்தது.

கடைசியாக, புழுக்கிய காணமும், விளங்காட்டுப் புல்லும் நினைவுக்கு வந்தது. கர்வமும் ஒடுங்கிப் போகாதா?

தன் லாயத்தை நோக்கிப் புறப்பட்டது. இப்பொழுது திகைத்து நிற்கவேண்டிய அவசியமில்லை. எந்த இடத்துக்குப் போக


வேண்டுமென்பது தெளிவாகத் தெரிகிறது. மறுபடியும் லாயத்திற்குள் போய் அடைபட்டது.

அதற்கப்புறம் அது தன் யஜமானனை ஏமாற்றவேயில்லை. சொந்தமாக உலகத்தில் சுற்றியலைவதைவிட யஜமானனை முதுகில் ஏற்றிக்கொண்டு கடிவாளத்துடன் உலக யாத்திரையை முடிப்பது தான் சிறந்தது என்று அது தெரிந்துகொண்டது.

* * * *

இது நான் சிறு வயதில் படித்த ஒரு பாடம். கனவு ரூபமாக நேற்று என்முன் நடந்தது. இந்தக் கனவின் பலனென்ன என்று ஒரு பெரியவரிடம் கேட்டேன்.

"இந்தக் கனவுக்குப் பஞ்சாங்கக்காரர்கள் என்ன பலன் சொல்லுகிறார்களோ எனக்குத் தெரியாது. குதிரையென்பது நீதான். உன் யஜமானன் ஒரு தெய்வீகமான கொள்கை. உண்மையென்பது உன் வாயிலிடப்படும் கடிவாளம். இந்த யஜமானனுடைய சேணமும் கடிவாளமும் உனக்கிடப்பட்ட விலங்கல்ல. இவற்றிலிருந்து விடுதலை பெற நினைப்பது சரியல்ல. இந்தக் கனவுக்கு இந்த அர்த்தம் கொடுத்தால் இந்தக் கனவு உன் நல்லதிர்ஷ்டத்தைக் குறிக்கிறது. வேறு அர்த்தம் கொடுத்தால் விபரீதப் பலன் நிச்சயம்" என்றார் பெரியவர். சரிதானே என்னமோ—



:: சிறிதுநேரம் யோசியுங்கள் ::

பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் இரண்டு மூன்று குழந்தைகள் கூடி தமாஷாக் இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்கலாம்.

கேள்விகளில் இடக்குக் கிடையாது. ஏமாற்று கிடையாது. ஆபாசம் கிடையாது. மனதுக்கு நல்ல பயிற்சி. நேரப் போக்குக்கு நல்ல வழி!

(1)

ஒரு செட்டியாருக்கு ஒரு கணக்கப்பிள்ளை தேவையாக இருந்தது. சரியான ஆசாமியாக இருக்கவேண்டுமென்பது அவர் விருப்பம். இது தெரிந்து இரண்டு பேர் அந்த வேலைக்காகச் செட்டியாரைப் போய்ப் பார்த்தார்கள். செட்டியார் அவர்களிடம்,

"வருஷத்துக்கு 1000 ரூபாய் சம்பளம். ஒவ்வொரு வருஷமும் 200 ரூபாயாக சம்பளம் உயர்த்தப்படும். அது வேண்டுமா;— இல்லாவிட்டால் அரை வருஷத்துக்கு 500 ரூபாய் சம்பளம், 6 மாதத்துக்கு ஒரு தடவையாக 50 ரூபாய் சம்பள உயர்வு. இரண்டில் எதுவேண்டும்" என்று கேட்டார்.

கிருஷ்ணன்:—"முதலில் சொன்னது."

ராமசாமி:—"பின்னால் சொன்னது."

இந்த இரண்டு பேரில் யார் கணக்கில் கெட்டிக்காரன்?

(2)

கிருஷ்ணன்:—இந்தப்பய்யன் என்னுடைய மருமகன்.

கிருஷ்ணன் தங்கை சுபத்திரை:—இவன் என்னுடைய மருமகனல்ல.

இதிலென்ன ரகசியம்?

(3)

கோபுவும் ராமனும் ஒரு பாழடைந்த மடத்தில் போய் விளையாடிவிட்டு வெளியே வந்தார்கள். ராமனுடைய தலையில் ஒட்டடை பட்டிருந்தது. கோபுவின் தலையில் ஒன்றும் படவில்லை. ஆனால் முதலில் தன் தலையைத் துடைத்துக்கொண்டது கோபுதான்.

இதற்கென்ன காரணம்?

:: கர்மம் :

[ஸ்ரீ. ஜே. விஜயதுங்கா எழுதியது.]

ஸந்தோஷ் பாபு ஒரு சாத்விகி. அவர் ஒரு மாதிரியான தேசியவாதி யெனலாம். கடைகளின் வாசலில் நின்று மறியல் செய்பவர்கள், மேடைகள் மீதேறிக் கூச்சலிடுகிறவர்கள் முதலிய சிலரைவிட அவர் அதிக ஹ்ருதய சுத்தி வாய்ந்தவர் என்றால் அது தவறாகாது. பல வருஷங்களாக அவர் தமது வீட்டிலேயே நூற்கப்பட்ட நூலைக் கொண்டு நெய்வித்த உடைகளையே அணிந்து வந்தார். அவருடைய உடைகளும் எளிமையையே காட்டின. நெகிழ்விருக்கும் ஒரு வேஷ்டி. அதை வங்காளிகள் மாதிரி பஞ்சகச்சம் வைத்துக் கட்டியிருப்பார். முழங்கால்வரை தொங்கும் நீண்ட ஷர்ட்டு. இந்திய சருமத்தால் இந்திய சக்கிலிகள் செய்த செருப்புகளையே அணிவார். அவர் இந்த தேசீய அம்சங்களைப்பற்றி வாய்விட்டு பெருமை அடித்துக்கொள்ளும் வழக்கமில்லை. ஆனாலும் அவர் அவைகளைப்பற்றி மனசிலேயே பெருமையடைவார்.

அவருடைய பிள்ளைப் பிராயம் முழுவதும் துக்ககரமானதாகவே யிருந்துவிட்டது. அவருடைய வாலிபப் பருவம் முழுவதும் வாழ்க்கைப் போராட்டம். இப்பொழுது தமது நாற்பத்தைந்தாவது வயதில் அவர் கொஞ்சம் அமைதியுடன் வாழ்வது, தமது சொந்த முயற்சியின் நியாயமான பலனேயென்று அவர் நம்பினார். அவர் இப்பொழுது இரண்டு பெண்குழந்தைகளுக்கும் மூன்று ஆண்களுக்கும் தந்தை. கல்கத்தாவில் கப்பல் வியாபாரிகளான டேள அண்டு டேள கம்பெனியில் அவர்தான் பெரிய கணக்கர்.

அவர் அப்படி நம்பியதாலும், இதர விவகாரங்களில் தலையிட்டுக்கொள்ளாமலிருந்ததாலும் அவர் சுய நலம் படைத்தவரென்றாவது அல்லது தேசபக்தி யில்லாதவரென்றாவது சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு சமயங்களில் அவரே தமது நிலைமையைப் பற்றி விளக்கும்பொழுது "என்னுடைய தாய்நாட்டிற்கு நான் செய்யத் தவறிவிட்ட சேவையை, எனது குழந்தைகள் செய்துவிட

லாம். அவர்களுக்கு எனது சக்திக்கெட்டியவரை ஏதோ செய்திருக்கிறேன்" என்று சொல்லுவார்.

அதுவும் வாஸ்தவம்தான். அவர் தமது குழந்தைகள் விஷயத்தில் தம்மால் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவும் செய்திருந்தார். அவருடைய மூத்த பெண் ஸீதாதேவிக்கு இருபத்திரண்டு வயதிருக்கும். அவள் ஒரு மிஷனரி கலாசாலையில் சேர்ந்து பி. ஏ.க்குப் படித்துக்கொண்டிருந்தாள். அதுதான் கடைசி வருஷம். மூத்த குழந்தை என்ற காரணத்திற்காக அவளுக்கு வீட்டில் செல்லமதிகம். அதனால் அவள் தன் மனம்போனபடி கேள்வி கேட்பாரற்று நடந்துவந்தாள். ஆகையால் அவள் பயங்கரப் புரட்சி இயக்கத்தில் அதிக மும்முரமாகக் கலந்துகொண்டு காரியம் செய்தாள் என்ற விஷயம் ஸந்தோஷ்பாபுவுக்காவது அல்லது அவரது மனைவிக்காவது தெரியாது.

ஸீதாவுக்கடுத்த பார்வதிக்கு வயது பத்தொன்பது. அவளும் ஒரு தேசீய வாதிதான். ஆனால் அவளுக்குச் சங்கீதத்தில் அபாரமான பிரியம். ஆதலால் அவள் தனது காலத்தில் பெரும் பாகத்தும் தனது ஸங்கீதப் பாடத்திலேயே செலவிடுவாள். அவர்களது சகோதரன் நந்தனுக்கு வயது பதினேழுதான். உதடுகளை இறுக்கி மூடிக்கொண்டு மனக்கசப்புடன் வேலை செய்துகொண்டு இந்தியாவில் இப்பொழுது பெருகி வரும் யுவர்களில் அவனும் ஒருவன். கணேசனும், பிமலாவும் முறையே பதினைந்தும் பதின்மூன்றும் வயதடைந்தவர்கள். அவர்கள் இன்னும் "இளங்குழந்தைகள்"தான். ஆனாலும் கூட அவர்களுக்கு நந்தன்தான் "ஆரியன்."

சந்தோஷ்பாபு தமது காரியாலயத்தில் சாயங்காலம் விளக்கு வைத்த பிறகுவரைகூட இருந்து வேலை செய்வது சர்வ சகஜம். அதன்பிறகு அவர் தமது "கிளப்"புக்குப் போவார். அது கல்கத்தாவில் "குமாஸ்தா' வர்க்கத்தார் ஒன்றுகூடும் ஒரு சாதாரணமான தோற்றமுடைய கிளப்புத்தான்.

ஒருநாள் மாலையில் ஸந்தோஷ்பாபு கிளப்பில் மனம் நிலை கொள்ளாது தத்தளித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அதன் காரணம் அவருக்கே விளங்கவில்லை. அவர் தமது நண்பர் மோஹன் பாபுவை அன்று சந்திப்பதாக ஏற்பாடு. இன்னும் மோஹன்பாபு வரவில்லை. கடைசியாக அவர் வரவேயில்லை. அவருக்கு பதிலாக இருவருக்கும் பரஸ்பர நண்பரான ஒருவர் வந்து சேர்ந்தார்.

"நிர்மலாதேவியைத் தெரியுமல்லவா உங்களுக்கு? அவள் தான் மோஹன்பாபுவின் பெண்" என்று ஆரம்பித்தார் அந்த நண்பர். "அவளையும் கைது செய்துவிட்டார்கள். வாஸ்தவமாக அவளை ஆஸ்பத்திரிக்காக்கும் கொண்டுபோயிருக்கவேண்டியது. ஜனக்கூட்டத்தில் அகப்பட்டு அவள் நசுங்கிப் போய்விட்டாள். ஆனால் அவளைக் கைதிகளிருந்த மோட்டார் லாரிக்குள் தள்ளினார்கள். லாரி பூர்த்தியே இடமின்றி நிறைந்து போயிருந்தது. அவளை விடுவித்துக் கொண்டுவரக் கருதி மோஹன்பாபு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கிறார். ஆனால் அது நடவாதென்று தான் தோன்றுகிறதெனக்கு. அவர் இன்ஸ்பெக்டர் வொயிட்டிடம் கண்ணீருடன் சென்று கெஞ்சினார். ஆனால் இன்ஸ்பெக்டர் அவரைக் கையால் தள்ளிவிட்டார். அவரை சமாதானப்படுத்தி அவருடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போக முயன்றேன். அவர் "என்னைத் தனியே விட்டுவிடுங்கள்' என்று சொல்லிவிட்டார்" என்று அந்த நண்பர் சொன்னார்.

அவர் இன்னும் என்னவெல்லாமோ சொன்னார். அதைக் கேட்டு சந்தோஷ் பாபு அவ்வளவு மனக்கலக்கமடைந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும் மனதுக்குள்ளாக ஒரு எரிமலையிருந்தது. "கொடூரம் கொடூரம். தெய்வம் இதையெல்லாம் கண் கொண்டு பார்க்கவேண்டும்" என்று மாத்திரம் சொல்லி மௌனமாகிவிட்டார். ஆனால் அவருடைய மனசுக்குள் அகப்பிரக்ஞையில் ஒரு எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. "நல்லவேளையாக நானும் என் குழந்தைகளும் இந்தக்களேபாரத்தில் சம்பந்தப்படவில்லை. என்னுடைய ஸீதா இதிலெல்லாம் கலக்காமலிருப்பது க்ஷேமம்தான்" என்ற எண்ணம் அங்கு தோன்றித்தோன்றி மறைந்துகொண்டிருந்தது.

* * * *

மிஸ்டர் டேவிட் ராவ்பாதம் டிபுடி கலெக்டர் ஐ. ஸி. எஸ். பாலிகஞ்சு சுற்று ரோட்டில் ஒரு பெரிய பங்களாவில் வசித்தார். அந்தச் சாலையில் தான் அநேகமாக "படாசாப்"களினுடையவும், பணக்கார "பத்ராலோக்" வகுப்பாருடையவும் பங்களாக்கள் இருக்கின்றன. அவருடைய வாசஸ்தலம் கூடியவரையில் பெரியதாயிருக்கவேண்டியதுதான். ஆனாலும் அவர் அவ்வளவு பெரிய பங்களா எடுத்துக்கொண்டதற்கு முக்கியமான காரணம் இதுதான். அவர் மூன்று வருஷங்களுக்கு முன் ரஜாவில் சீமைக்குப் போய் வந்தார். திரும்பி வரும்பொழுது அவர் தமது மனைவி ஹில்டா

வையும் கூடக் கூட்டிக்கொண்டுவந்தார். தவிரவும்சென்றசிலமாதங்களாக அவருடைய வேலைப்பாரம் அந்த மாதிரியான ஒரு வாசஸ்தலத்தை அத்தியாவசியமாக்கிவிட்டது. தினே தினே உற்பத்தியாகும் அவசர சட்டங்களுடன் அவர் தமது அதிகாரத்தை ரொம்ப ஜாக்கிரதையுடன் உபயோகிக்கவேண்டிய அவசியம் நேர்ந்தது. அதன் பலனாக அவருடைய வேலை அவருடைய மனத்தையழுத்தும் ஒரு பெரும்பாரமாக வளர்ந்துகொண்டே போயிற்று. ஒவ்வொரு நாளும் வேலை முடிந்தவுடன் அவர் உற்சாகத்துடன் ஹில்டாவைச் சந்திக்க வீட்டுக்கு ஓடுவார்.

ஸந்தோஷ் பாபு, "கொடூரம் கொடூரம்" என்று கூவிக்கொண்டிருந்த அதே சமயத்தில் மிஸ்டர் டேவிட்ராவ் பாதம் ஹில்டாவுடன் டீ அருந்திக்கொண்டிருந்தார். டீ குடிக்கையிலேயே அவர் தமது உத்தியோகத்தைப்பற்றிப் பேசினார். "எனக்கு அப்படிச் செய்ய இஷ்டமேயில்லை. வெறுப்போடுதான் செய்தேன். ஆனால் அவன்-அவன் தான் இன்ஸ்பெக்டர் வொயிட் என்னமோ தலை போகிற மாதிரிப் பேசினான். இன்று சாயந்திரம் அந்தப் பொதுக் கூட்டத்தை நாம் தடுக்காவிட்டால், முந்தி ஸிராஜுத் தௌலா காலத்திலே நடந்த மாதிரி இன்னுமொரு "பிளாக்ஹோல்" நடந்துவிடுமென்றான். என்ன செய்வது? நான் அந்த உத்திரவை எழுதிக் கையெழுத்துப்போடத்தான் வேண்டியிருந்தது. ஆனால் கொஞ்சம் விவேகத்தோடு தாரதரம் பார்த்துக் காரியம் செய்யும்படி நான் அவனிடம் திருப்பித்திருப்பிச் சொன்னேன். அவன் அப்படித்தான் செய்திருப்பானென்று நம்புகிறேன்" என்றார்.

ஹில்டா பதிலே பேசவில்லை. தன்னுடைய கணவர் இந்த மாதிரிப் பேசும்பொழுதெல்லாம் அவர் தமது மனசிலுள்ள பாரத்தை நீக்கிக்கொளவதற்காகவே அப்படிப் பேசுகிறாரென்பது அவளுக்குத் தெரியும். ஆதலால் அவள் அந்தமாதிரிச் சந்தர்ப்பங்களில் புத்திசாலித் தனமாக மௌனம் சாதித்து விடுவது வழக்கம்.

* * * *

மிஸ்ட்ரஸ் ஹில்டா ராவ்பாதம் கடைத்தெருவில் சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்தாள். ஆகையால் அவளுக்கு டெலிபோனில் வந்த செய்தியைப்பற்றி எதும் தெரியாது. கடைசியாக அவள் ஒரு டின் "பீச்" பழங்களுக்கு "ஆர்டர்" கொடுத்துவிட்டுப் புறப்பட்டாள். டேவிடுக்கு "பீச்" பழம் என்றால் ரொம்பப்பிரியம்.

அவள் கடையிலிருந்து வெளியில் வந்தபொழுது "பேப்பர்வாலா" "கலெக்டர் சுடப்பட்டார்" என்று கூவினது காதில் விழுந்தது. அந்தக் கலெக்டர் யாரென்று யாரும் சொல்லாமலே அவளுக்குத் தெரிந்துவிட்டது.

ஸந்தோஷ் பாபுவை உத்தியோக நேரங்களில் யாரும் டெலிபோனில் கூப்பிட்டுப்பேசினதே கிடையாது. அவருடைய உத்தியோக காரியாலயத்தில் இருந்தவர்கள் அவரிடம் சொன்னார்கள். பிறகு அவரே நேரில் டெலிபோனில் அதைக் கேட்டார். ஆனாலும் கூட அதன் அர்த்தம் முழுவதும் அவருடைய மனசில் உடனே பதியவில்லை. "ஸீதாவா! என் ஐயோ ஸீதா? இருக்காது!" என்று கூவினர். அவருக்குப் பிரமைபடித்துவிட்டது.

* * * *

கல்கத்தாவில் அன்றுசாயங்காலம் பெரும்பாலானஜனங்களின் கவனத்தைக் கவர்ந்தவன் பேப்பர்வாலாதான். எல்லா செய்திகளை விட ஒரேஒரு செய்திதான் அன்றைய பத்திரிகையில் அதிகப் பிரகாசமாகவிருந்தது. பெரிய எழுத்துகளில் தலைப்புடன் இருந்த அந்தச் செய்தி இதுதான்.

டிபுடி கலெக்டர் சுடப்பட்டார். கொலை செய்த பெண்ணின் தற்கொலை.

—"ரெவ்யூ ஆப் ரெவ்யூஸ்"

Printed at the "Tamil Nadu" Press, Madras. Published by T. S. Chockalingam, Editor & Proprietor, "Gandhi" Office, 29, Sembudoss St., Madras.